ஓம்

பரப்ரஹ்மணேநம:

5-6

2083

ஸ்ரீ

பக்தலீலாம்ருத வசநம்.

இது

தஞ்சைமாநகரம்

ஸ்ரீ பகவத்பக்த சிரோமணியாகிய

ராஜாராம் கோவிந்தராவ் அவர்களால்

இயற்றப்பட்ட செய்யுளையநுசரித்து,

மகாவித்வான் காஞ்சி

ஸ்ரீமத் இராமாநந்தயோகிகள் அவர்களால்

வசநரூபமாக இயற்றப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1912

[இரண்டாவது பதிப்பு]

விலை ரூபா 3.

முதற்பதிப்பின் முகவுரை.

மஹாராஷ்ட்ர தேசத்தில், பூர்வகாலத்தில் அவதரித்து, பகவத் பக்திசெய்து முக்தியடைந்த பரமபாகவதர்கள் அநேகராயினும், அவர்களுள் மிகச் சிறந்துவிளங்குகிற துக்காராம் சுவாமிகள் முதலான இரண்டு மூன்று பக்தர்களுடைய சரித்திரங்கள் மாத்திரம் தமிழில் வசநரூபமாகவும், ஐம்பத்திரண்டு பக்தர்களுடைய சரித்திரங்கள் மாத்திரம் தெலுங்கில் வசநரூபமாகவும் எழுதி அச்சிடப்பட்டு வழங்கிவருகின்றது யாவருமறிந்த விஷயமே. இப்படியிருக்க, சற்றேறக்குறைய இருபது வருடத்துக்குமுன், தஞ்சைமாநகரத்திலிருந்த புலவர் திலகரும், ஸ்ரீமானும் ஸ்ரீபகவத் பக்தசிரோமணியுமாகிய ராஜாராம் கோவிந்தராவ் சூரியவம்ஸியவர்கள், மஹாராஷ்ட்ர தேசத்தில் ப்ராக்ருத பாஷையிலிருந்த மேற்படி பக்தருடைய சரித்திரப் புத்தகங்களெல்லாவற்றையும் வருவித்து ஆராய்ந்து, பெருமை வாய்ந்த புண்டலீகர் முதலாகத் துக்காராம் ஸ்வாமிகளீறாகவுள்ள எண்பத்திரண்டு பக்தர்களுடைய சரித்திரங்களைச் செந்தமிழ் விருத்தப்பாக்கள் ஐயாயிரத்து நானூற்றி லடக்கிப் பாடியருளினர். அந்தக் கிரந்தம் "பக்தலீலாம்ருதம்" என்னும் பெயர்பூண்டு விளங்குகின்றது. இது மேற்குறிக்கப்பட்ட தமிழ் தெலுங்கு வசநங்கள்போலாது, மஹாராஷ்ட்ர தேசத்திலிருந்து வருவித்த மூல கிரந்தங்களைத் தழுவிச் செய்யப்பட்டதாகையாலும், அதிக சரித்திரங்களைக் கொண்டிருத்தலாலும், இதைத் தழுவி ஒரு வசநரூபமான கிரந்தம் எழுதி யச்சிட்டால் லோகோபகாரமா யிருக்குமென்று, சென்னையிலுள்ள பல பக்திமான்கள் தமது கருத்தை வெளியிட, அதுவே பற்றுக்கோடாகக் கொண்டு, மேற்படி பக்தலீலாம்ருதாதிகளை யநுசரித்து இந்த **"பக்தலீலாம்ருதவசநம்"** என்னும் கிரந்தம் எழுதி முடித்தேன். இது ஸ்ரீய:பதியாய், அவாப்த ஸமஸ்தகாமனாய், அகில ஹேயப்ரத்யநீகனாய், ஸ்ரீவைகுண்ட நிகேதநனாய், நித்ய முக்தாநுபாவ்யனாய், நிரதிசயாநந்த யுக்தனாய், நிரங்குஸ ஸ்வதந்த்ரனாயிருக்கிற ஸர்வேஸ்வரனைத் தமது பக்திவலையாற் பிணித்துத் தமக்குக் கையாளாய்ப் பரிமாறுவித்துக்கொண்ட பரமபாகவத சரித்ராலய மாதலாலும், இலக்கிய விலக்கணங்கள் குடியிருந்தவூரிலு மிருந்தறியாத சிற்றறிவினேனா லெழுதப்பட்ட தாதலாலும் இதிற் குற்றங்க ளுளவேனும் அவற்றைக் குணமாகக் கொண்டாதரிப்பது, முத்தமிழ்த் துறையின் முறைபோகிய வுத்தமரும், சாந்தசீலரும் ஆகிய பெரியோர்களுக்குக் கடமையாகும்.

இங்ஙனம்:

விகாரிஸு
ஐப்பசிமீ

☞ காஞ்சி-இராமாநந்தயோகி.

இந்நூலில் சொல்லப்பட்டுள்ள பக்தர்களின் சரித்திர அட்டவணை.

இந்நூலில் சொல்லப்பட்டுள்ள பக்தர்களின் சரித்திர அட்டவணை.

ஓம்.

பரப்ரஹ்மணேநமः.

ஸ்ரீ பக்தலீலாம்ருத வசநம்.

கடவுள் வாழ்த்து.

உலகம்பூத்தவொருமலருந்தியான்
திலகமேற்றநுதற்றிருச்சேர்ந்தெழில்
மலரமாலைவனந்திகழ்மார்பினன்
சலசமாமலர்த்தாளுளஞ்சார்த்துவாம். (௧)

பத்தர்காதைப்பரப்பினைப்பாடுதற்
கொத்தஞானமுதவியருளுமே
நித்தன்பூவைநிறத்திருமாலடி
கைத்தலங்கொளநமன்கழல்களே. (௨.)

மாணியாய்நிலம்வாங்கினவன்றொண்டர்
கோணிலாக்கதைகூறக்குழலிருள்
நீணிலாவினிலாநிறத்தொண்கலை
வாணிதன்னைவணங்கிவழுத்துவாம். (௩)

மருத்துமாமகனாருள்வாய்ந்துசீர்
திருத்தவர்க்கருள்செய்யுஞ்சமர்த்தராம்
ஒருத்தருத்தமவாரியரோண்கழல்
கருத்துங்கண்ணுங்கொண்டிக்கதைகூறுவாம். (௪)

வணக்கம்.

இல்லாதவர்க்குத்தமரில்லைமற்றேதுநாளும்
செல்லாதவர்க்கத்திறம்போல்வணக்கஞ்சிறக்கச்
சொல்லாதவர்க்கத்தொகைநூனகைதோற்றுவிக்கும்
கல்லாதவர்க்குக்கரையில்லையென்கற்றுளோர்க்கே. (௫)

நன்னூவலர்க்குநகைதோன்றுதற்கோயங்கிங்
கென்னூலியற்றப்படுநூலிதிலேதகுற்றம்
சொன்னூலமையாதரிபேர்சொலுந்தூய்மையொன்று
தன்னூலலவோநமனுங்கடைசாரவஞ்சும். (கூ)

வருபொருளுரைத்தல்.

எனப்பண்டரியின்வரலாறமங்கேய்ந்தகண்ணன்
தனக்கன்புறுதாசர்கடம்வரலாறும்ராமன்
மனத்தின்புறவாழ்த்துநர்தம்வரலாறுமற்றும்
தூனத்தண்டமிழ்ச்செஞ்சொலினுங்கவிசொல்லலுற்றேன். (எ)

நூற்பயன்.

அரிநாமமகிமையைச்சற்றேனுந்தேரா
அஜாமீளனொருவிதஞ்சொல்லியதனாலே
விரிசோதிப்பரமபதமேவலானன்
விமலநாமந்தெரிந்துவிடாமலோதித்
தெரிசிதான்றனைத்தம்வசஞ்செய்துற்ற
தேசிகர்தஞ்சரித்திரத்தைப்படிப்போர்கேட்போர்
பெரிதாசவவர்களிடத்தன்புசெய்வோர்
பெறும்பலனையினைத்தெனயாம்பேசலாமோ. (அ)

நூல்.

முதலாவது

புண்டலீகர் சரித்திரம்.

உலகத்தாரெல்லாரும் புகழ்கின்ற பெருமைபெற்ற பதுமபுரா ணத்தில் உமாதேவியின் அறிவு பிரகாசிக்கும் பொருட்டுத் திரிபுர நாசகனாகிய சிவபெருமான் சொல்லியருளினதை, கல்வியறிவொழுக் கங்களிற் சிறந்த ஸ்ரீதரர் விஸ்தரித்த இக்கதையைச் சிரத்தையோடு யாவரும் கேட்டு உஜ்ஜீவிக்கவேண்டும். கதையின் வரலாறு யாதெ னின், மலைகளெல்லாவற்றுள்ளும் மேன்மைபெற்று விளங்குகின்ற ஸ்ரீ கைலாசபர்வதத்தில் நிலைபெற்று விளங்குகின்ற மாணிக்க மணி மண்டபத்தில் ஸ்ரீ சிவபெருமான் திருவோலக்கமா யெழுந்தருளி யிருந்த வோர்காலத்தில், உமாதேவியார் தமது பிராணநாயகராகிய சிவபெருமானை நோக்கி, "நிலவுலகத்தில் நிலைபெற்றுப் பிரகாசிக்கிற பண்டரிபுரத்தில், ஸ்ரீ லக்ஷ்மீநாதனாகிய திருமால் நித்தியவாசம்செய்

வது யாது காரணத்தால்? அதை யெனக்கு விவரமாய்ச் சொல்லி யருள வேண்டும்" என்று பிரார்த்திக்க, அந்தக் கைலாசபதியாகிய சிவபெருமான், உமாதேவியாரைநோக்கி, "அலங்கரிக்கப்பட்டபொற் கொடிபோல்பவளே! திருத்துழாய்மாலையை யணிந்த திருமாலான வர், ஸ்ரீ வைகுந்தத்தில் வீற்றிருந்த திருக்கோலமா யெழுந்தருளி யிருக்குங்காலத்தில், யாவரும் வியந்து துதிசெய்தற்குரிய கட்டழகி யாகிய இந்திராணி, அவ்விடத்திற்கு வந்தாள். வந்தவள், ஸ்ரீமந் நாரா யணனைக் கண்களிகூரக் கண்டு, சேவித்து மிகுதியாகிய அன்போடு பலவகையான தோத்திரங்களைச் சொல்லிக்கொண்டு நின்று, அந்தத் திருமாலின் பேரழகாகிய கடலில் மூழ்கி, அவனது திருவடிகளை வணங்கி நின்று ஒருவார்த்தையைச் சொல்லலுற்றாள். அதென் னென்றால், "இறைவனாகிய உனது மடியின்மே லிருக்கவேண்டுமெ ன்று அபேக்ஷித்தேன்; ஆதலால் அப்படியே எனக்குத் தயைசெய்ய வேண்டும்; பெருங் கருணைக்கடலே!" என்று தோத்திரம்பண்ணிக் கொண்டு நின்றாள். இவ்வாறு தோத்திரம்பண்ணுகிற இந்திராணி யின் பிரார்த்தனையின்படியே திருமாலானவர் அவளிடத்தில் மிகவும் இரக்கமடைந்தவராய்ச் சிறுநகை செய்து, அவ்விந்திராணியை நோக்கி, "வாராய், சசீ தேவியே! நீ பூலோகத்திற்போய், அறுபதினா யிரவருஷம் அரியதவம் செய்தாயானால், நான் ஸ்ரீ துவாரகாபுரியில் க்ருஷ்ணாவதாரம் செய்து உன் விருப்பத்தின்படியே உன்னை என் மடியின்மேல் வைத்துக்கொள்வேன்" என்றருளிச்செய்தார். அதைக் கேட்ட இந்திராணியானவள், இறைவன் திருவடியைவணங்கி, "தேவ ரீர் ஆஜ்ஞாபித்தபடியே செய்கிறேன்" என்று சொல்லி விடைபெற் றுக்கொண்டுபோய், நிலவுலகத்தில் ஒரு பரிசுத்தமான இடத்தில் சேர் ந்து, மனம் முதலாகிய திரிகரணங்களையும் அசையாமலிருத்தி, அறு பதினாயிரவருஷம் அருந்தவம் செய்யவே, அந்தத்தவத்தின் பலன் அவளைக் கோகுலத்தில் ராதையாய்ப் பிறக்கச் செய்தது. அவ்வாறு அவள் பிறந்து இளமைப்பருவமா யிருக்குங்காலத்தில், ஸ்ரீ கண்ண பிரானோடு கூடி விளையாடிக்கொண்டிருக்கையில், ஸ்ரீ கண்ணபிரான் அந்தக்கோகுலத்தைப் பிரிந்தபிறகு இந்த ராதையானவள் அவனது பிரிவினால் மனமயங்கி உடலும் மெலிந்தாள். இப்படி அநேக காலங் கழிந்த பிறகு, ஸ்ரீ கண்ணபிரானை நினைத்துப் பூர்வகாலத்தில் தன க்கு அவர் கொடுத்திருந்த வரமானது தன்னை விரைவாய் நடத்த நடந்துபோய்த் துவாரகாபுரியை அடைந்து வேற்றுருக்கொண்டு அந்த மேகவண்ணனாகிய ஸ்ரீ கண்ணபிரான் எழுந்தருளியிருக்கும்

கோயிலிற் பிரவேசித்து, அவனது பேரழகின் பொலிவை நோக்கி, சந்நிதிக்கெதிரே நின்று வணங்கின மாத்திரத்தில், அந்த மேகவண்ணனாகிய பகவான் அந்தக்ஷணமே அவளைத் தன் கிருபைநிறைந்த திருக்கண்களால் குளிரக் கடாக்ஷித்துப் பூர்வரூபம் மாறியிருக்கிற ராதையை வாரியெடுத்துத் தன் மடியின்மேல் நிலைபெற்றிருக்கும்படி வைத்துக்கொண்டான். அதைக்கண்ட ஸ்ரீ ருக்மிணீ பிராட்டியானவள், தன் மனம் பொறுக்காதவளாகி, ஸ்ரீ கண்ணபிரான்மேல் மிகவும் கோபங்கொண்டு, நிஷ்டுர வார்த்தைகள் சொல்லி, இறைவன் எவ்வளவு தாழ்ந்து சமாதானம் செய்தும் கோபம் நீங்காதவளாயிருக்க, இதைக்கண்ட ராதையானவள் ஸ்ரீ கண்ணபிரானை விட்டு நீங்கி, லோகதண்டம் என்று சொல்லப்படுகிற திண்டீரவனத்தில், ஒப்பற்றவனாகிய ஸ்ரீ கண்ணபிரானைத் தன் மனத்திலிருத்தி, எல்லாத் துன்பங்களும் நீங்குதற்கேதுவாகிய அருந்தவம் செய்துகொண்டிருக்கையில், துவாரகா நகரத்திலிருந்த ஸ்ரீ கண்ணபிரான் ஸ்ரீ ருக்மிணீ பிராட்டியைவிட்டு நீங்கி, ராதையின் பிரிவைப்பொறுக்காதவனாய், அவள் எவ்விடத்தில் இருக்கிறாளோவென்று, மரங்கள் நெருங்கின காடுகளிலெல்லாந் தேடிக்காணாமல், மறுபடியும் கோகுலத்தையடைந்து, பசுவர்க்கத்தை யோட்டுகிற கோலே தண்டமாகவும், சங்கமே கமண்டலமாகவும் கையிற்கொண்டு, திருத்துழாய் மாலையைக் கழுத்திலணிந்து, குண்டலத்தைக் காதில் தரித்து ஒரு துறவிபோல வெளிப்பட்டு, எவ்விடத்திலும்தேடி, திண்டீரவனத்தையடைந்து, அந்த வனத்தில் மலர்களின் அழகையும், இனிய கனி காய்களின் கூட்டம் தழைத்திருப்பதையும், மயில், குயில், கிளி, நாகணவாய்ப்புள் முதலான பறவைக்கூட்டங்களின் அழகையும், தடாகங்களின் அழகையும், அந்தத் தடாகங்களிலுள்ள தாமரைமலர்களின்மீது அன்னங்கள் அழகா யமர்ந்திருப்பதையும் நோக்கி, அதிசயித்து, இவ்விடத்தில் கமலாசனை யானவள் தங்கியிருந்தாலும் இருக்கலாம் என்று நினைத்து, “என்பிராண நாயகியே!” என்று பலகாற் கூவிக்கொண்டே சண்பகம், புன்னை, அசோகு முதலான மரங்கள் நெருங்கின சோலையை யடைந்து, அவ்விடத்தில் தவஞ் செய்துகொண்டிருந்த ராதையைக் கண்டு, அவளுக்கெதிரில் வந்துநின்று, “கமலாலயத்திலுள்ள பொன்னே! என் அரியவுயிரே! என் மார்பைவிட்டு நீங்கி என்னை வெற்றுடம்பாக்கி, இவ்விடத்தில் வந்து வீற்றிருந்ததற்குக் காரணமென்னை? மநுஷ்ய சஞ்சாரமில்லாததாய், துஷ்டமிருக சமூகங்களுக்கிடமாயிருக்கிற இந்தக் கானகத்தில் எவ்வாறு பிரவேசித்தாய்? இப்

படிப்பட்ட வனத்தில் பிரவேசிப்பதற்கு உன்மனம் எவ்வாறு துணிந்தது? நீ தனியே தைரியங்கொண்டு எவ்வாறுவந்தனை?" எனவினவ, அந்த ராதையானவள், ஸ்ரீ கண்ணபிரானை நோக்கி, "நீ யாவன்? கோலைக் கைக்கொண்டு இவ்விடத்தில் யாது செய்ய வந்தாய்?" என்று வினவக்கேட்ட ஸ்ரீ கண்ணபிரான், அவளை நோக்கி, "சேல்போன்ற கண்களையுடையாளே! நான் உன்னைத் தேடிக்கொண்டே இங்கே வந்தேனன்றி வேறொரு காரணமுமில்லை. நீ யாவன் என்று என்னை வினவினையல்லவா? நான் உனக்குக் கணவன்" என்று சொல்லியருளினன். அதைக் கேட்ட ராதையானவள், ஸ்ரீ கண்ணபிரானை நோக்கி, "என் கணவனுக்கு அநேகம் தேவியர் உளர்; அவர்களை விட்டு என்னிடத்துக்கு வரமாட்டாரென்று துணிந்து நான் தனியே வந்து அருமையாகிய தவஞ்செய்யாநின்றேன்; இவ்விடத்தில் நீ உன் உருமாறி என்கணவனென்று சொல்லிக்கொண்டுவந்தாய்; உன்னை மதித்துப் பார்க்குங்காலத்தில் வஞ்சகனென்றுதோன்றுகின்றது; அதன்றியும் மாதர் தனியே யிருக்கிறவிடத்து அச்சமில்லாமல் நீ வந்தது தகாத காரியமாகும்; ஆதலால் சற்றாயினும் இங்கு நில்லாமல் உன்னிடத்திற்குப்போ" என்று சொல்ல, மேகவண்ணனான ஸ்ரீ கண்ணபிரான் மதிமயங்கிக் கண்களை யிமைக்காமல் தன் கையிலிருந்த தடியைத் தன் முழங்கால்களினால் இடுக்கிக்கொண்டு, இடுப்பில் கையை வைத்து, நாசிமுனையில் தன் பார்வையை வைத்து, விருப்பத்தோடு இக்காலத்தளவும் ராதையின்முன் நிற்கின்றான். அப்படி நின்றகாலத்தின் அளவு எவ்வளவென்றால், இருபத்தெட்டு துவாபரயுகமாகும்" என்று சொல்லக்கேட்ட பார்வதி தேவியானவள், தன் கணவனாகிய சிவபெருமானை நோக்கி, "என் பிராணநாதா! அதன்பின் நடந்தசெய்தியை அன்போடு எனக்குச் சொல்லியருளவேண்டும்" என்று திருவடியை வணங்கிப் பிரார்த்திக்கச் சிவபெருமான் சொல்லத்தொடங்கினார்.

"ஓ என் பிராணநாயகி! அசுரனாகிய திண்டீரனென்று சொல்லப்படுவோன் மிகுந்த அந்தகாரத்தை நீக்கி உலகத்தை ரக்ஷிக்கின்ற சூரியன் தன்தேர்மீது ஏறிச்செல்லவொட்டாமல் அவனைக்கட்டி உலகத்திலுள்ள பிராணிகளெல்லாவற்றையும் பீடித்துக்கொண்டிருந்தான். அப்படியிருந்தகாலத்தில், அரியதபோதனர்களும் தேவர்களும் ஒன்றாகக்கூடித் திருமாலின் திருவடியை யடைந்து, இந்தச் செய்தியை விண்ணப்பஞ்செய்ய, அந்தக் கண்ணபிரான், திருவருள் சுர

ந்து, அவர்களைநோக்கி, "நான் மல்லிகார்ஜுநன் என்னும் பேருடைய வனாக அவதரித்து உங்களுக்குள்ள துன்பத்தை நீக்குவேன்" என்று வரந்தந்தருளினன். இது பூர்வகாலத்தில் நடந்த செய்தி. இப்படியிருக்கையில், ஸ்ரீ சந்த்ரன் என்னும் பெயருள்ள ஓரரசன் என்னை நோக்கிப் பெருந்தவம் செய்தான்; நான் அவனுக்கு ப்ரத்யக்ஷமாகி, "உன்விருப்பம்என்ன?" என்றுகேட்டேன்; அவன் "திருமாலைநிகர்த்த ஓர் புத்திரன்வேண்டும்" என்றான். அதற்குநான், "ஸ்ரீகண்ணபிரானே உனக்குச் சிறந்த புதல்வனாய்ப் பிறப்பான்" என்று விருப்பத்தோடு வரம் தந்தேன். அவ்வாறாகவே ஸ்ரீ லக்ஷ்மீபதியானவன் ஸ்ரீ சந்த்ரன் என்னும் அரசனிடத்தில் அவதரித்தான். மேலும் அப் புதல்வன் மல்லிகார்ஜுநன் என்னும் பெயரைப் பெற்றான். அவன் ஒருகாலத்தில் வேட்டையாடும்பொருட்டுத் திண்டீரவனஞ் சேர்ந்தான். அந்த ராஜகுமாரனை அந்த அசுரவேந்தனாகிய திண்டீரன் பார்த்து, "நான் இருக்கிறவனத்தில் நீ வேட்டையாடும்பொருட்டு வரலாமோ? நான் உன்னும் உனவுக்குச் சமானமானவனே" என்று கடுஞ்சொற் கூறி வந்து போர்செய்யத் தொடங்கி ஆயிரவருஷத்தளவும் தமது சரீரத்திலுள்ள தசைகள் சிந்தும்படி போர்செய்தார்கள். அப்படி போர் செய்தகாலத்தில், ஒருவருக்கொருவர் தோற்காமலிருக்க, மல்லிகார்ஜுநன் என்பவன், "இவன் பலநாள் யுத்தம் செய்தும் தோற்காமலிருக்கிறான்; இவன் உயிர்நீக்குவது எப்படி? நாம் என் செய்வோம்?" என்று ஆலோசித்து, லோகதண்டமென்று சொல்லப்படுகிற கதாயுதத்தைக் கைக்கொண்டு அந்த அசுரனை யடித்து, அவனுடைய உயிரைவாங்கி, அவனுடம்பைப் பூமியில் வீழ்த்தினான். அந்த அசுரன் உயிர்விடும்போது "ஸ்ரீஹரீ" என்று உச்சரிக்க, அதனைக் குற்றமற்ற நெறியில் ஒழுகாநின்ற மல்லிகார்ஜுநன் தெரிந்து பிரகாசம் பொருந்திய தன்திருமேனியோடு அவனுக்கெதிரே தோன்றி "அசுர வேந்தனே! உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்டுக்கொள்" என்று நியமிக்க, அந்த அசுரன், "உன் கையிலுள்ள கதாயுதத்தால் யான் உயிர்விட்டேன்; ஆகையாலே, நீ கைக்கொண்ட கதையின் பேர் கொண்டு இந்த வனமானது லோகதண்டமென்று விளங்கும்படி செய்து, அழகிய நகரொன்றையு முண்டாக்கி, அந்த நகரத்தில் நீயும் நித்தியவாசம் செய்துகொண்டிருக்கவும், உன்னை அவ்விடத்தில்வந்து தரிசித்தோர்களுடைய சகலபாபங்களையும் போக்கி விளங்காநின்ற பாநுதீர்த்தத்தையடைந்து, இவ்வுலகத்தில் பெருமைபெற்றுவிளங்குகிறதாய், நானிறந்த இடத்தில் என்பேரால் ஒரு தீர்த்த முண்டாக்கி,

அதனிடத்தில் கதாயுதத்தை நிறுத்தவும்வேண்டும்; அந்தத் தீர்த்தத்தில் முழுகிவந்து இந்தக் கதாயுதத்தை ஆலிங்கனம் செய்வோர்களுடைய சகல பாபங்களும் நிவர்த்தியாகக் கிருபைசெய்யவேண்டும்'' என்று பிரார்த்திக்க, திருமாலானவர் அந்த வரத்தை அன்போடு கொடுத்து, தனது வைகுண்ட லோகத்தை அந்த அசுரனுக்கு அருள் செய்ய, அன்று தொடங்கி அந்த வநமானது எல்லா வளங்களுமமைந்து பொலிவுற்று விளங்கிக்கொண்டிருந்தது. பிறகு லோகதண்டமென்னும் பெயர்பூண்ட அந்த வனத்தில் அன்பு அருள் முதலிய சற்குணத்தினால் நிறைந்தவரும், பாபரஹிதரும், பிறவித் துன்பங்கள் ஒருங்கே நசித்தற்குக்காரணமான ஸ்ரீமந் நாராயணத்தியானம்செய்துகொண்டிருப்பவரும், சற்கருமங்களிலேயே காலங் கழிப்பவரும், சத்திய விரதரும் ஆகிய ஜந்ஹு என்பவர் ஒருவர் இருந்தார். அவர் தமது வேதிய குலத்துக்கேற்ற ஸாத்யகி யென்னும் பெயருள்ள ஒரு கன்னிகையை மணஞ்செய்துகொண்டு இல்லறம் வழுவாது நடத்தி வருங்காலத்தில், தமக்குப் புத்திர ரில்லாமையால் அந்தப் புத்திரப் பேற்றைக் குறித்து நெடுங்காலம் தவஞ்செய்து, அத்தவப் பயனால் ஒரு மைந்தனைப் பெற்று, அந்த மைந்தனது சௌந்தரியத்தைக் கண்டு மனமகிழ்ந்து அவனுக்குப் புண்டலீகர் என்று நாமகரணஞ் செய்து அன்போடு வளர்த்துவருங் காலத்தில், அந்தப் புத்திருக்குப் பதினாறுவயது நிரம்பினமையால் அவருக்கு மணம் புரிவித்து மகிழ்ந்திருந்தனர். பின்பு அந்த மைந்தர் துஷ்டராய்த் தாய் தந்தையரை வருத்திப் பலவிதமாக நிந்தித்துத் துன்பப்படுத்தி நாள்தோறும் விலைமகள் வசப்பட்டவராய் அவள் விரும்பும் வேலைகளைச் செய்துகொண்டு திரியும்போது, அவரது தீநெறி யொழுக்கத்தைத் தந்தை தாயர்கள் அறிந்து, அவரை நோக்கி, "நீ நமது குலாசாரத்தையும் லௌகிக தருமத்தையும் நோக்காது இவ்வாறாக ஒழுகுதல் உனக்கு நீதியல்ல'' என்று அன்போடு பிரிய வசநங்களால் போதிக்க, அப்புத்திரர், அந்தப் பிரிய வசநங்களைச் சற்றுஞ் செவிகொடுத்து ஏற்றுக்கொள்ளாமல் அவர்களைநோக்கி, "நீங்களிருவரும் இன்னமும் இறவாமல் இருக்கிறீர்களே'' என்று பலவிதமான வன்சொற்களை வழங்கி, மிகவுங் கோபங்கொண்டு, அவர்களைக் கைசலிக்க அடித்து, அவர்களை விட்டுப்பிரிந்து தானும் தன் மனைவியுமாகத் தனியே வாழ்ந்திருந்தனர்.

அப்படி யிருக்குங் காலத்தில் தந்தை தாயர் அவரது துர்மார்க்க ஒழுக்கத்துக்கு மனம் பொறுக்காமல், "இவனைவிட்டுப் பிரிந்துபோய்

இறந்துபோவதே உத்தமம்'' என்று நினைத்துக்கவலைகொண்டிருக்கும் போது, காசி யாத்திரை போவோர் சிலர் அவ்விடத்தில் வந்து இறங்கினார்கள். அவர்களைக் கண்டவுடன் அவர்களோடு காசியாத்திரை போவதாகத் துணிந்து அவர்களைத் தொடர்ந்து சென்று முன்சொன்ன லோகதண்டமென்னும் நகரத்தை யடைந்தார்கள். பின்னும் யாத்திரை போவோர்களைக் கண்டு புண்டலீகரும் அவர்களோடுபோக எண்ணித் தம் மனைவியை நோக்கி, "நீயும் வருவாயாக; அந்தக் காசிக்ஷேத்திரத்திலுள்ள அநேக அதிசயங்களையும் பார்க்கலாம்'' என்று சொல்லி, அதற்கவள் இசைந்தவுடனே பிரயாணப்பட்டு, இருவரும் இரண்டு குதிரைகள்மேல் ஏறிப்போயினர். அப்படிப் போகும் வழியில் தமக்கு முன்னேபோன தமது தந்தை தாயர் முதுமைப் பருவத்தினால் நடக்கமாட்டாமல் தள்ளாடிக்கொண்டு வருவதைப் பார்த்தும் மனதில் சற்றும் இரக்கமின்றி அயலார்போலப் பார்த்துக்கொண்டே போய்க் காசிக்ஷேத்திரத்தின் சமீபத்திலுள்ள ஓர் சோலையில் தவஞ்செய்துகொண்டிருந்த குக்குடர் என்னும் பெயரையுடைய முனிவரது ஆசிரமத்தின் அருகில் இறங்கினார்கள். அந்தக் குக்குடர் என்னும் முனிவரது மகிமையை எடுத்துப் புகழ்ந்து சொல்வதற்கு இரண்டாயிரம் நாவையுடைய ஆதிசேஷனுக்கும் முடியாது. அன்றியும் பிரமன்முதலிய சுத்தாத்மாக்கள் யாவரும் பரமஸாதுவாகிய அவரைத் துதித்துத் தமது துன்பங்களையெல்லாம் நீக்கிக்கொள்வார்களென்றால் அவரது பெருந் தவத்தை யாவர் புகழ்ந்துரைக்க வல்லவர்கள்? அந்தக் குக்குட யோகீசுவரர், தம்மைப்பெற்ற தந்தை தாயாருடைய சேவையை நாள்தோறும் செய்துகொண்டு அவர்களுக் கெதிரிலிருந்து பிறவித்தளையை யறுத்தற்குரிய புராணபடநம் செய்துகொண் டிருப்பார். மேலும் அவர்களை ஒரு க்ஷணப்பொழுதாயினும் பிரியாமலும் ஆகார நித்திரைகளில் விருப்பமில்லாமலும் இருந்துகொண்டு, கங்கை முதலிய புண்ணிய தீர்த்த ஸ்நாநபலத்தைப் பார்க்கிலும் அவர்களுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தை லபித்துக்கொள்வதே மிகப் பெரும் புண்ணியமென்று மனத்தில் உறுதியாக எண்ணியிருப்பர். அன்றியும், தாய் தந்தையரைப் பார்க்கிலும் பெரிதாகிய தெய்வம் ஒன்றில்லையென மனவுறுதி கொண்டவர். அவரிடத்திற்கு கங்கை யமுனை சரஸ்வதி என்னும் நதியுருவான மாதர்கள், அர்த்தராத்திரியில் வந்து ஒரு க்ஷணகாலம் அவரது ஊழியஞ்செய்து தம்மிடத்தில் உலகத்தார் மூழ்குவதனால் தம்மிடத்தடைந்த பாவங்களைப் போக்கிக்கொ

ண்டு தமது ஒளியுருவோடு செல்லுவார்கள். ஆதலால் அப்படிப் பட்ட தபோமகிமையுள்ள குக்குட யோகீசுவரரது புகழை யெடுத்துச் சொல்வதற்கு எனக்குச் சாத்தியப்படாது'' என்று சிவபெருமான் உமாதேவியாருக்குச் சொல்லிப் பின்னும் சொல்லுகின்றார்.

அந்தக் குக்குடமுனிவரது ஆசிரமத்திற்கு எதிரிலுள்ள தரும சாலையில் மனைவியுடன் வந்திறங்கின புண்டலீகர், அந்தப் பரிசுத்தாத்மாவான குக்குடரை நோக்கி, "மிகவும் புகழ்பெற்ற காசிக்ஷேத்திரமானது இன்னம் எத்தனை தூரத்திலிருக்கின்றது?'' என்று வினவ, அம்முனிவர், "காசியென்பதையும் அது இத்தனை தூரத்திலிருக்கின்றதென்பதையும் யானறியேன்'' என்று மறுமொழி கூறினர். அதற்குப் புண்டலீகர் அத்தவசியை நோக்கி "இவ்வளவு சமீபத்திலிருந்தும் காசி க்ஷேத்திரத்தைத் தரிசனஞ் செய்யாத உமது பிறப்பும் ஒரு பிறப்பாகுமா'' என்று அவமதித்துப்பேசி நகைத்துத் திரும்பிவந்து அந்தச் சத்திரத்தில் தங்கியிருந்தார். அப்படி யிருக்கையில் அன்றிரவில் பதினைந்து நாழிகைக்குமேல் முன்சொன்ன நதியுருவாகிய கங்கை யமுனை சரஸ்வதி என்னும் மாதர்கள் மூவரும் கோரமாகிய நீசரூபத்தை யடைந்து, குக்குடயோகீசுவரருடைய ஆசிரமத்தில் பிரவேசித்தபோது, கண்ணுறங்காமல் விழித்துக்கொண்டிருந்த புண்டலீகர், அவர்களைக் கண்டு பேய்களென்று நினைத்து மனத்தில் அச்சங்கொண்டனர். அப்படியிருக்க, வந்தமூவரும் அந்த ஆசிரமத்திலுள்ள குப்பைகளைச் சீத்து நீக்கி, தரையை மெழுகி, கோலமிட்டு, அலங்கரித்து, ஒரு க்ஷணகாலத்தில் தாம் அடைந்துவந்த கோரரூபம் நீங்கி, சௌந்தரியவதிகளாயும் ஒளியுருக்கொண்டும் ஆசிரமத்தினின்றும் வெளியே வரக்கண்ட புண்டலீகர், பயந்து, ஆச்சரிய மடைந்து, அம்மாதர்களிடத்து வந்து, மலிரூபமாய் ஆசிரமத்தில் நுழைந்த நீங்கள் ஒளியுருவாய்ப் புறப்பட்டீர்கள்; இப்படிப்பட்ட இருள் மிகுந்த இராக்காலத்தில் இங்குவந்த நீங்கள் யாவர்? சொல்லுங்கள்'' என்று கேட்க, அவர்களுள் கங்கையானவள் மறுமொழி சொல்லலுற்றாள்:—"எக்காலத்திலும் தொலைக்கக்கூடாத பாவத்தைச்செய்த பதிதனாகிய துராத்மாவே! நீ, குற்றமற்ற எங்கள் முன்னே வரவுந் தகுமோ? இவ்விடம் விட்டு விலகிப்போடா'' என்று கோபித்துக் கொண்டாள். கங்கையானவள் இப்படி கோபித்துக்கொண்டதைப் பார்த்த புண்டலீகர், அந்தக் கங்காதேவியின் பாதத்தைக் கெட்டி, தமது இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு, "என் தாயே! என் பாவங்களை நீயே நீக்கியருளவேண்டும்'' என்று பிரார்த்திக்க, அவ்வரை

நோக்கி கங்கையானவள் சொல்லுவாள்:—“அடா பாவி! என் காலை விட்டு எழுந்திரு; நீ இப்பிறப்பிலே மிகவும் தீவினைகளையே செய்திருக்கிறாய்; ஆனாலும் முற்பிறவிகளில் நீ செய்த நல்வினைப் பயனே உன்னை இந்தக் குக்குடமுனிவரிடத்துக்குக் கொண்டுவந்துவிட்டது; அவரைக் கண்ட புண்ணியத்தால் எங்களையும் கண்டாய்; ஆகையால் இனி நீ எந்தப்பாவமும் தொடரப் பெறாதவனாய்ப் பரிசுத்தனாகக் கடவை; நான் கங்கை, இவள் காளிந்தி, அவள் சரசுவதி; எங்களை விரும்பிப் பரிசித்தும் எம்மிடத்தில் மூழ்கியும் மூவுலகத்தாரும் பிறவி நீங்கிப் பேரின்ப வாழ்வைப் பெறுகின்றார்கள்; அப்படி வந்து மூழ்குவோருடைய பாவங்களை யெல்லாம் நாங்கள் ஏற்று, அதனால் மலிநரூபங்கொண்டு, அந்த ரூபத்தை, இந்தப் பரிசுத்தாத்மாவாகிய குக்குடமுனிவருக்கு ஊழியம் செய்து மாற்றி, நல்ல புதுமையான ரூபங்கொண்டு போகிறோம்; இப்படியே தினந்தோறும் செய்து வருகிறோம்; எதிர்ப்பட்ட நம்முடைய பாவங்களை ஒரு நிமிஷகாலத்தில் போக்கத்தகுந்த சிறப்பையுடைய இந்த முனிவருடைய பெருமையைச் சொல்ல வல்லவர் யாருளர்'' என்று சொல்லுதலும், புண்டலீகர் எழுந்துநின்று, கங்கை முதலானவர்களை நோக்கி, “உங்களுடைய பாவங்கள் யாவையும் நசிக்கச் செய்கிற புண்ணியத்தை இவர் எப்படி செய்தார்'' என்று வினவ, கங்கையானவள் புண்டலீகரை நோக்கி, “இவர், தமது தந்தை தாயரை வழிபடுகிற புண்ணியமே யன்றி வேறில்லை. கோடி யாகங்களைச் செய்த பலனும், பூவலஞ் செய்தும் புண்ணிய நதிகளில் மூழ்கியும் பெறுகின்ற பலனும், ஒப்பற்ற காசி க்ஷேத்ரத்தை இரண்டுலக்ஷம் தரம் வலம் வந்து பெறும் பலனும், தாயை நமஸ்கரித்தலாகிய ஒன்றினாலே சித்திக்கும். தந்தையை ஒருதரம் வணங்கினால், மேன்மையாகிய ஞான முண்டாகும். இந்தத் தாய் தந்தையரது வழிபாட்டினாலே ஸ்ரீமந் நாராயணனும் ப்ரத்யக்ஷமாவார் என்று பெரியோர் சொல்லுவர். இந்தக் கருத்தை இந்த முனிவர் தமது மனத்திற்கொண்டு, தந்தை தாயரையன்றி வேறு தெய்வமில்லை யென்று துணிந்து, இரவும் பகலும் அவர்கள் சேவையைச் செய்கிறார். நாள்தோறும் தன் தாய் தந்தையரை நிந்திப்பவன் தீயொழுக்கத்திற் சேரும் புலையனாவான்; கற்ப முடிவிலும் மீளவொண்ணாத கோர நரகத்தில் அழுந்தி வருந்துவான்; எத்தனை ஜன்மங்கள் எடுத்தாலும் பெரிய வியாதிகளால் பிடிக்கப்படுவான். அவனைக் கண்டவர்களும் மிக்க பாவிகளாவார்கள்'' என்று சொன்னமாத்திரத்தில், புண்டலீகர் பயந்து, “ஆ ஐயோ'' என்றிரங்கி, மிகவும் துன்ப

மடைந்து, எல்லாப் பாவங்களையும் ஒழித்து ஈடேறத் தகுந்த இந்த நர ஜன்மமாய்த் தோன்றியும் இதை வீணுக்கிப் புண்ணியத்தைக் கைக்கொள்ளாமல் பாவத்தைக் கைக்கொண்டேன்; இதற்கு நான் என்ன வுபாயம் செய்வேன்" என்றேங்கி யிருந்தார். மேலும், தாய் தந்தையருடைய பணிவிடை செய்வதையும் நீங்கி, அவர்களை மனம் வருந்தவும் செய்தே னல்லவா ? இந்தப் பெரும் பாவத்தை எப்படி நீக்கிக்கொள்வேன்'' என்று பலவாருகப் புலம்பிக்கொண்டு, அந்த மாதர்களுடைய பாதங்களில் விழுந்து அழுதார், இப்படி இவர் அழு வதைக் கங்கையானவள் நோக்கி, மனமிரங்கிப் "பாவி ! இனியாகி லும் மனந்தெளிந்து, உன் தந்தையும் தாயுமே பெருந்தெய்வங்க ளென்று நம்பி, அவர்களுக்கு ஊழியம் செய்வாயானல், உன்னைச் சேர்ந்த பழிபாவங்களும் கழியும்; மூவுலகத்திலும் உள்ளவர் வந்து நிறைந்து சூழ்ந்திருப்பார்; விளங்குகின்ற பெருங் கீர்த்தியும் உண்டா கும்; சக்ரபாணியாகிய திருமாலின் இனிய அருளும் உன்னிடத்துண் டாகும்" என்று தாய் தந்தையரை வழிபடுதலால் உண்டாகிற பயனை விஸ்தரித்துச் சொல்லிக் காளிந்தி, வாணி என்னும் இருவரோடும் கூடிச்சென்றுள். பின்பு, புண்டலீகர், இந்தக் கங்கை சொன்ன புத்தி மிகவும் நன்றேயாமென்று அன்புடன் போய், குக்குடர் பாதத்தைச் சேவித்து, பிறகு தமது தாய் தந்தையரைத் தேடினர். தேடிக்கண்டு அவர்களைக் குதிரைமேலேற்றிக்கொண்டு காசிக்குப் போய்க் கயை பிரயாகை முதலான புண்ணிய தீர்த்தங்களில் மூழ்குவித்து, அவர் கள் செய்யுங் கர்மங்களெல்லாவற்றையும் செய்வித்து, தமது மனைவி யும் தாமுமாகச் சிறிதும் சோர்வில்லாமல் அவர்களுடைய பணி விடைகளைச் செய்துகொண்டு தம் ஊர்க்கு வந்து, அந்தத் தாய் தந் தையரைத் தமது வீட்டிலிருத்திக்கொண்டு, நாள்தோறும் அவர்களு க்கு எந்தச் சமயத்தில் எந்தப் பொருள் வேண்டுமோ, அந்தச் சம யத்தில் அந்தப் பொருளைத் தருவித்துக் கொடுத்து, பரிசுத்தாத்மா வாகிய குக்குடர்போலப் பணிவிடை செய்துகொண்டிருந்தார். இப் படியிருக்க,

பூர்வயுகத்தில், விருத்திரன் என்பவன் தேவராஜனுகிய இந்திர னைப்பகைத்து அவனைக்கொல்லநினைத்து, பாதாளலோகத்தை யடை ந்து,ஓரிடத்திலிருந்துகொண்டு அருமையாகிய தவத்தைச்செய்தான்; அந்தச் செய்தியை இந்திரன் கேட்டறிந்து அவ்விருத்திரன் இருக்கு மிடத்திற்போய் அவன் தலையைத் தன் வச்சிராயுதத்தால் சேதித்து வீழ்த்தினன். அப்பொழுது அந்த விருத்திரன் இந்திரனை நோக்கி,

"நான் தவஞ்செய்யுங் காலத்தில் என் தலையை அறுத்த பாவத்தால், நீ செங்கல்லாய்ப் பூமியில் விழக்கடவை" என்றான். அவன் தந்த சாபத்தினால் இந்திரன் செங்கல்லாகி விழுமுன்னே, லக்ஷ்மீநாதனாகிய திருமால் திருவுள்ளம் மகிழும்படி பற்பல தோத்திரம்செய்ய, ஸ்ரீமந் நாராயணன் அவனெதிரே யெழுந்தருளி, "வாராய் தேவராஜனே! நான் புண்டலீகாசிரமத்தில் வந்து செங்கல்லுருவாய்க் கிடக்கிற உன்மேல் அடிவைத்து, உன்னைப் பூர்வ ரூபமாகச் செய்து, என் பாதத்தின் கீழே கிடக்கும்படி செய்கிறேன்; நீ அஞ்சவேண்டாம்" என்றனன். அப்படியே அன்றுமுதல் இந்திரன் செங்கல்லுருவாய்த் திண்டீரவனத்தில் கிடக்கிறான். கிடத்தலால் அந்த வனம் திண்டீர நகராக, அதில் புண்டலீகர்க்கும் ஒரு திருமாளிகை அமைந்தது. அதில் புண்டலீகர் இனிதாக வாழுங்காலத்தில், அவரிடத்திற்கு எழுந்தருளவேண்டுமென்று எண்ணி, தன் தேவியைத் திருத்துதற் பொருட்டு அவளுக்கெதிரே நிற்கிற ஸ்ரீமந் நாராயணன் எழுந்தருளும் விதத்தைச் சொல்லுவோம். திருவடியில் நூபுரம் தழைத் தொலிக்கவும், சிற்றிடையில் கிண்கிணிகள் கலகலவென்று சத்திக்கவும், இரண்டு தோள்களிலும் கங்கணங்கள் விளங்கவும், இரண்டு கைகளிலும் சங்க சக்ரங்கள் மிகவும் ஜொலிக்கவும், திருமார்பில் நவரத்நஹாரம் பிரகாசிக்கவும், திருச்செவியில் குண்டலங்கள் மின்னவும், நெற்றியில் நெறிகுழல் அசைந்து தோன்றவும், ரத்நச் சுட்டியும் பட்டமும் விளங்கவும், சிங்கம், இடபம், யானைக்கன்று, இம்மூன்றின் நடைபோலநடந்து, நீலரத்நகிரி வருவதுபோலவழியில் பூமியெல்லாம் ஸ்ரீ பாதத்திலுள்ள சங்க சக்ர ரேகைகள் அழுந்தித் தோன்றவும் எழுந்தருளி, புண்டலீகர், தமது தந்தை தாயரை வழிபடுஞ் சமயத்தில், அவர் பார்க்கும்படி அவர்க்குப் பின்புறத்தேவந்துநின்றார். அப்படி வந்துநின்றபோது ஸ்ரீ கண்ணபிரானது பசுமையாகிய ஒளியை, தந்தையின் பாதங்களைத் தீண்டி நமஸ்கரித்துக்கொண்டிருந்த புண்டலீகர்கண்டு, இந்த ஒளியாதென்றுமுகத்தைத்திருப்பி, ஸ்ரீகண்ணபிரான் அருகில் நிற்பதைப் பார்த்து, "கங்காதேவி நமக்குக் கொடுத்தவரம் இன்றுதானே வாய்த்தது" என்று மிகவும் மனமகிழ்ந்து, தலைவணங்கி, தமக்கு அருகில் கிடக்கிற செங்கல்லை எடுத்தெறிந்து, "இதன்மீது சற்றுநேரம் நிற்பாயானால், என்வேலையை முடித்துவருகிறேன்" என்று சொல்லிவிட்டுத் தமது தாய் தந்தையரது பணிவிடையைச் செய்துகொண்டிருக்க, ஸ்ரீ கண்ணபிரானவர், இந்திரனாகிய செங்கல்லின்மீது ஏறி, இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்துக்கொண்டு

புண்டலீகர் தாய் தந்தையருடைய சேவை செய்துகொண்டிருப்பதை நோக்கிக்கொண்டே நின்றருளினர். புண்டலீகர், தமது தாய் தந்தையர் சேவைசெய்து முடிந்தபிறகு, பீதாம்பரம் மிகவும் ஒளியை வீசும்படி, பசுக்களை யோட்டுங் கோலைத் தோளினிடையில் வைத்துக்கொண்டு நிற்பவனாகிய ஸ்ரீ க்ருஷ்ண பகவானிடத்திற்கு வந்து, செங்கல்லின்மேல் சமசரணமாய் நிற்கிற அழகைக்கண்டு சாஷ்டாங்கமாகப் பணிந்து பேரானந்தக்கடலில் மூழ்கினர். சற்றுநேரங் கழிந்த பிறகு எழுந்துநின்று பலவகையாய்த் தோத்திரம் செய்துகொண்டு நிற்கிறதை, கருணைக் கடலாகிய பகவான் நோக்கி, "புண்டலீகனே! உன்னைப்போன்ற பத்திமான்கள் இவ்வுலகத்திற் கண்டதில்லை; நீ வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்ளக்கடவாய்" என்று நியமிக்க, புண்டலீகர், பகவானைநோக்கி, "தாமரைக் கண்ணனாகிய சுவாமீ! மும்மூர்த்தி யுருவங்களும் நீயேயாகி விளங்குவதனாலும், மூடர்களைக் கடைத்தேற்றுகிற ஸௌலப்ய குணத்தாலும், தேவரீர் விட்டலன் என்னுந் திருநாமம் பூண்டு, எக்காலத்திலும் இவ்வண்ணமாகவே எழுந்தருளியிருந்து, உன்னை வந்தடைந்து வணங்குவோர் யாவரும் சர்வ பாப விமோசனராகச்செய்து, என் பெயர்ச்சார்பினால் இந்த க்ஷேத்ரம் பண்டரிபுரமென்னும் பெயரையுடையதாகச் செய்து, இந்தத் தலச்சார்பினால் தேவரீரும் பாண்டுரங்கன் என்னுந் திருநாமத்தையேற்று நித்யவாசம் பண்ணவேண்டும். மேலும் இந்தத் தலத்தில், எல்லாத் தீர்த்தங்களிலும் சிறந்த தீர்த்தமொன்றை உண்டாக்கி அதில் மூழ்கினோர் யாவரும் பரிசுத்த ராகும்படி அமைத்தருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, பகவானும், புண்டலீகரை நோக்கி, "உத்தமனாகிய புண்டலீகா! நீ விரும்பினபடியே எல்லாம் அமையும்; த்ரிலோகங்களிலுள்ள தீர்த்தங்கள் எல்லாம் இன்று நடுப்பகலிலே வரும்" என்றருளிச்செய்தார். அப்படியே எல்லாத் தீர்த்தங்களும் அன்று மத்தியானத்திலே வந்து அந்தத்தலத்தில் புதிதாயுண்டாக்கப்பட்ட தீர்த்தத்திற் சேர்ந்தன. மேலும் "ஹே பார்வதி! நான் பூர்வ காலத்தில் திரிபுரதகனஞ் செய்ததனால் மிகவும் வருந்தின வருத்தம் நீங்கும்பொருட்டுப் பீமாசங்கரித்தலத்தில் தவஞ்செய்துகொண்டிருந்தபோது, என் உடம்பில் வேர்வையுண்டாகிப் பெருகி, பீமா என்னும் பேர் பூண்டு விளங்கிக்கொண்டிருந்தது. அது என் ஞான சக்தியைக்கொண்டு, பேரொலியுடையதாய், புண்டலீகர் மனைவரையும் வந்து அலைபெறிவதாயிருந்ததை அத்தலத்தில் வாசம்பண்ணிக் கொண்டிருந்த பீமசேன பைரவன் இந்தப் பேரொலியைக் கேட்டு

மனம் பொறுக்காதவனாய் "ஸ்ரீகண்ணபிரான் இங்கு எழுந்தருளியிருக்கக்கண்டும், இந்த நதியானது சற்றும் அஞ்சாமல் இத்தனை வேகங்கொண்டு வருதல் தகுதியாகுமோ" என்று, தன் கையிலுள்ள கதாயுதத்தையெறிந்து, "ஓ நதியே! இந்தத்தலத்தில் உன்வேகத்தை யடக்கிக்கொண்டு வரவேண்டும்" என்று சொல்ல, அந்த நதியானது அப்படியே தன் வேகத்தை யடக்கி ஊமைபோல இரைச்சலில்லாமல் தன்னைக் கண்டவர்களுடைய பாவங்களையெல்லாம் நீக்கிக் கங்காநதிபோல வந்து, ஸ்ரீ கண்ணபிரானைக் கிட்டி இடதுபக்கமாகச் சூழ்ந்து பிறைபோலத் தென்றிசையிற் பொருந்திக் கீழ்த்திசையை யடைந்து செல்லுதலால், சந்திரபாகையென்னும் பெயரை யுடையதாகி, முற்காலத்தில் சந்திரனானவன், தனக்கு வியாழபகவானால் கொடுக்கப்பட்ட சாபம் நீங்கும்பொருட்டு மூழ்கிச் சாபவிமோசநத்தை யடைந்ததாகிய பாநுதீர்த்தத்துக்கெதிரில், புண்டலீகர் இட்ட செங்கல்லின்மேல் நின்றருளின ஸ்ரீ கண்ணபிரானது திருவடித்தாமரையைத் தரிசித்து வணங்கிப் பரிசுத்த மடையலாமென்று மனத்திற்கொண்டு, இப்போதும் பிரவாகிக்கின்றது. அந்த நதியில் எவர்களாகிலும் ஸ்நாநம் செய்து, பகவானாகிய விட்டலனைத் தரிசித்த மாத்திரத்தில், அவர்கள் பூர்வ ஜந்மங்களில் செய்த அநேக பாவங்களினின்று நீங்கி, அந்த ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு அடிமையாகப் பெறுவார்கள். இந்தச்செய்தி நிற்க;

கமலாசநத்தை யுடையவளாகிய திருமகள், தனக்கெதிரே நின்றிருந்த கண்ணபிரான், உன் கண்ணுக்கெதிரே, புண்டரீகர் முன் சேர்வேன் என்று சொல்லிப்பிரிய, அதற் குடம்படாதவளாய்த் தன்னியற்கையாகிய அவயவ சௌந்தரியத்தோடும், சர்வாபரண தாரணத்தா லுண்டாகிய செயற்கை யழகோடும் கூடி, ஒரு களிற்றியானையைப் பிடியானை தொடர்ந்து வருவதுபோல, விட்டலனைப் பின்தொடர்ந்து வந்து, கற்பக மரத்தின்மீது படர்ந்த ஒப்பற்ற காமர்வல்லிக் கொடிபோல அவனைப்பற்றி, முல்லையரும்புபோன்ற நகையரும்பும்படி அவனது இடதுபக்கத்தில் நின்றனள். அப்போது நற்பதவியடைந்துயர்ந்த இந்திரனானவன், தெய்வத்தச்சனை நோக்கி, "குவலயாபீடம் என்னும் யானையின்கொம்பை முறித்தவனாகிய ஸ்ரீ கண்ணபிரானுடைய அருளினால், ஒளி நிறைந்த சக்ரத்தின்மேல் பண்டரியின் அழகையும், அதனிடையில் பிந்துதீர்த்தம் என்று பெயருள்ள தீர்த்தத்தின் நடுவில் முந்துகின்றதாகிய திரிகுட ரூபமாய்ச் சொல்லப்பட்டதில், அர்த்தமாத்திராவென்று சொல்லுதற்

குரிய,வலிமைபெற்ற ஒப்பில்லாத பீடத்தின்மேலிட்ட செங்கல்லின் மீது விளங்குகிற விட்டலனை மகிழ்விக்கத் தகுந்த ஒரு விமானத்தை யும், விளங்கும்படி அமைத்து, பொற்கோபுரம் மதில் முதலாகிய பிற வற்றையும் அழகுபெறச்செய்து, ஒரு பட்டணம் உண்டாக்கக் கட வாய்" என்று கட்டளையிட, அந்தப்பிரகாரமாகவே அந்தத் தெய்வத் தச்சன் மதில், கோபுரம், விமானம் முதலிய யாவும் பொன்னினாலும் நவமணிகளாலும் அழகுபெறச்செய்து, இப்படி எங்கும் இல்லையென் னும்படி ஒருபட்டணமும் நியமித்து ஸ்ரீ கண்ணபிரான் திருவுள முவக்குமாறுசெய்தான். அந்தப்பட்டணம் தேவலோகத்தினுஞ்சிற ந்து விளங்கிற்று. அந்தப் பண்டரிநகரமானது க்ருஷ்ணா நதிக்கும் கோதவரி நதிக்கும் மத்தியில் இருக்கின்றது. அதின் நடுவில், ஜய விஜயர்கள் காக்கும்படிகோயில் விளங்கிக்கொண்டிருக்கும்.அதில் முனி வர், தேவர் முதலியோர் பகவானுடைய சேவைக்கு முற்பட்டுவந்து நன்றாகச் சேவிக்கத்தகுந்த சமயம் பார்த்துக்கொண்டிருப்பார்கள். தும்புரு நாரதர்கள் வீணாகானம் செய்துகொண்டிருப்பார்கள். யக்ஷ காந்தருவர்கள் பலவகையாகிய வாத்தியங்களை முழக்கிக்கொண்டிருப் பார்கள். அரம்பை, மேநகை, திலோத்தமை முதலிய தெய்வப்பெண் கள் வகை வகையாய் நாட்டியம் செய்துகொண் டிருப்பார்கள். பரம பாகவதர்கள் நெடிதாகிய கருட ஸ்தம்பத்தினருகிலிருந்து அன் போடு ஹரிபஜனை செய்வார்கள்" என்று கைலாசபதியாகிய சிவபெரு மான் உமாதேவியாருக்குச் சொல்லியருளினர். இதனைப் பரிசுத்தாத் மாக்கள் அறிவதன்றி, மற்றையோருடைய மனோவாக்குகளால் அறி யப்படாது. திருமகளே இந்தப்பண்டரிபுரத்தில் ரகுமாயியாய்வந்து ஸ்ரீ கண்ணபிரானோடு அமர்ந்து களித்துக்கொண்டிருக்கிறாள்.

கேசியென்னும் அசுரனைக் கொன்றவனும், பதின்மராழ்வார்க ளும் மங்களாசாசனம் செய்யப்பெற்றவனும், தேவர்களெல்லாரும் நாள்தோறும் வந்து சேவிக்கும்படியான பெருமையுள்ளவனும், பாண்டுரங்கன் என்னுந் திருநாமத்தை யுடையவனும், பழமையாகிய வேதங்களாலும் அறியவொண்ணாதவனும், முற்காலத்தில் வேய்ங் குழலை ஊதினவனும், செங்கல்லின்மேல் நில்லென்றவுடனே நின்றவ னும் ஆகிய ஸ்ரீ கண்ணபிரானுக்கு நித்யவாஸஸ்தானமாயிருக்கிற இந்தப் பண்டரிபுரத்துக்கு நிகராகிய பட்டணம்வேறொன்றுமில்லை. இந்த நகரத்தின் ஒருபக்கத்தில் சந்திரபாகையென்னும் நதி, தன் னிடத்தில் வந்து மூழ்குவோருடைய பாவங்களையெல்லாம் நிவர்த்தி செய்துகொண்டு விளங்காநிற்கும். இத்தலத்தில் திருமகளாகிய ரகு

மாயிக்கும் பொன்மயமான ஒரு கோயிலுண்டு. இதிலுள்ள பாண்டு ரங்கப் பெருமானுடைய கோயிலின் சிறப்பை வருணித்துச்சொல்வ தற்கு ஆதிசேஷனாலும் முடியாது. இதில் எழுந்தருளியிருக்கிற விட்டலப்பெருமான், தம்மைச் சேவிக்க வருவோரெல்லாரும் தம் மைத் தழுவிக்கொண்டு, சகல பாவங்களேயும் நிவர்த்தித்து மோக்ஷ லாபத்தை யடையும்படி கோயிலின் முகப்பில் எழுந்தருளியிருப்பார். இந்த நகரத்திலுள்ளோ ரெல்லாரும், தத்தம் வர்ணாசிரம தருமங் களில் வழுவாமல் பகவத்ஸேவையில் நிரந்தரமான விருப்பமுள்ள வர்களாய், விட்டலனுடைய திவ்ய விக்ரஹத்தின் திவ்ய ஸௌந்தர் யத்தைப் பாதாதிகேசமாக அநுபவித்துக்கொண்டிருப்பார்கள். இதில் வேத ப்ரதிபாத்யனான பகவான் திருமகள் கண்டுகளிக்கும்படி இடையிற்சேர்த்த இரண்டு திருக்கரங்களோடு, ஒரு மரகதமலைபோல, உலகத்துயிர்களெல்லாம் உஜ்ஜீவிக்கும்பொருட்டு எழுந்தருளியிருக்கி ருர். இந்த நகரத்தின் பெருமையும், இதில் எழுந்தருளியிருக்கிற விட்டலப்பெருமானுடைய ப்ரபாவத்தையும் இன்னும் விஸ்தரித்துச் சொல்ல என்னுல் முடியாது" என்று ஸ்ரீ பார்வதி தேவியாருக்குக் கைலாசபதியாகிய சிவபெருமான் சொல்லி, மேலே ஜயதேவர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

புண்டலீகர் சரித்திரம் முற்றிற்று.

இரண்டாவது

ஜயதேவர் சரித்திரம்.

ஸ்ரீ வேதநாயகராகிய பிரமதேவரானவர், ஸ்ரீ வேதவியாசமுநி வரை நோக்கி, "ஓ முநிசிரேஷ்டரே! நீர் பூலோகத்தில் பிறந்து அங் குள்ளாரெல்லார்க்கும் ஸ்ரீ ஹரிபக்தி யுண்டாகும்படி போதிக்கவேண் டும்" என்று நியமிக்க, வியாசமுநிவரும் "அவ்வாறே செய்கிறேன்" என்று அவரை வணங்கி விடைபெற்று வந்து ஆகாயத்தையளா விய சோலைசூழ்ந்த ஜகந்நாத க்ஷேத்திரத்திற்குப் பக்கத்திலுள்ள திந்துபில்வவூர் என்னும் நகரத்தில் குற்றமற்ற வேதியர் குலத்தில் அவதரித்து ஜயதேவர் என்னும் பெயர் சூட்டப்பெற்று விளங்கினர். இவர்க்குத் தாய்தந்தையர், அன்போடு உபநயநமுடித்து வைத்த லும் வேதசாஸ்திர புராணாதிகளைத் தாமாகவே கற்று, அந்தக் கல்விக் குப் பயனாகிய ஹரிபக்தியைப் பெற்று, உடுக்கூட்டத்தில் சந்திர

னும், படைத்தொழிலில் பீஷ்மாசாரியும், முனிவர்களில் சிவனும், ஆகாயத்தில் சூரியனும் சிறந்து விளங்குதல்போல, வேதியர் குலத்தில் சிறந்து விளங்கினர். இப்படியிருக்குங்காலத்தில், பதுமபுராணத்திலும் பாரதமாகிய இதிஹாசத்திலும் சொல்லப்பட்ட மேன்மை பொருந்திய, ராதாவிலாசம் என்கிற பழைபகதையைக் கோவிந்த கீதம் என்னும் பெயர்பூண்டு விளங்கும்படி செய்து போதிக்க, எல்லாரும் இதுமிகவும் புதுமையாகிய நூலென்று கற்றுப்புகழ்ந்து கொண்டாடிக்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்கையில் ஸ்ரீ க்ருஷ்ணபகவான் நித்யவாசம் பண்ணிக்கொண்டிருந்த ஸ்ரீ ஜகந்நாதம் என்னும் நகரத்தை ஆண்டு, நான்கு வேதங்களையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த ஸாத்விகராஜன் என்பவன், ஒரு அலங்கார சாஸ்திரத்தைச் செய்து, அந்த நாட்டிலுள்ளவர் யாவர்க்கும் அதைப் போதிக்கவேண்டுமென்று எண்ணி, அறிஞரை அழைத்து, "நான்செய்த நூலும், ஜயதேவர் பாடின இனிதாகிய கீதமும் சமானமாகும் ஆகலால், என்னால் செய்யப்பட்ட நூலை நீங்கள் எல்லோரும் படிப்பீர்களா" என்று சொல்ல, அந்தச் சொல்லைக் கேட்டமாத்திரத்தில் அறிஞர்கள், "யானென்கிற அகங்காரத்தோடு நீர்செய்த நூல் பரமசாத்விகராகிய ஜயதேவர் நூலோடிணையாகுமென்று சொல்லுதல் அன்றியும் என் நூலை எல்லாரும் ஓதக்கடவீர் என்று நீர் சொல்லுவதை ஆலோசிக்கும்போது, எக்காலத்திலும் எப்பொருளையாயினும் வலாத்காரமாய்க் கொடுத்தால் கொடுக்கப்படுகிற அந்தப்பொருளின் பெருமை குறையு மென்று பெரியோர் சொல்லுவார்; உன் கவியும், உன் சொல்லும் உனக்கு எதிரே எழுந்தருளியிருக்கிற ஸ்ரீகண்ணபிரானுக்கு ஏற்குமா" என்று சொன்னமாத்திரத்தில், அரசன் "இரண்டு நூல்களில் திருமால் ஏற்றுக்கொள்வது எதுவோ, அதுவே சிறந்த நூல்" என்று சொல்லி, அந்த அறிஞர் கூட்டத்துடனே அரசனானவன் ஸ்ரீ கண்ணபிரானது ஆலயத்தில் பிரவேசித்து, "பகவான் இந்த இரண்டு நூல்களுள் முக்கியமான நூலை யேற்றுக்கொண்டு, மற்றதைப் பக்கத்தில் ஒதுக்கிவிடக்கடவர்" என்றுசொல்லிக் கோயிலைமூடினார்கள். மறுநாள் காலையில் கோயிலுக்குரிய அர்ச்சகர் முதலியோர் வந்து கோயிலைத் திறந்து பார்த்து, ஜயதேவர் செய்தகீதம் உள்ளிலும் அரசன்செய்த அணிநூல் புறத்திலு மிருக்கக்கண்டு அரசனிடத்துக்குச் சென்று, "அந்தப் பரமபாகவதராகிய ஜயதேவர் நூலுக்கு உமது நூல் இணையாகுமா? அவர் நூலுக்கு எதிரே உமது நூல் சூரியனுக்கெதிரே மின்மினி போன்றதே யன்றி வேறன்று; ஆகையாலேயே உமது

நூலைக் கைக்கொள்ளாமல் பகவானுனவர் புறத்தேதள்ளிவிட்டனர்" என்றுசொன்னார்கள். அதைக்கேட்ட அரசனானவன் பகவானுடைய சந்நிதியை யடைந்து, "ஓ கருணாநிதியே! புலியும், பசுவும் ஒருதுறையில் நீருண்ணும்படி செய்யத்தகுந்த சர்வ சக்தனாகிய நீ, இப்போது ஜயதேவர் நூலை யேற்றுக்கொண்டு அடியேனது நூலை இகழ்ந்தது உன்னுடைய பேரருளுக்குத் தகுதியாகுமோ! இப்படி நீயே செய்தால் யான் என்செய்வேன்! இவ்வாறு வருந்துதலைப் பார்க்கிலும் உயிரைவிட்டு எனது அகங்காரத்தை விடுவதே நன்மையாம்" என்று துணிந்து சொன்னமாத்திரத்தில், பிரமதேவன் தலையிலும் எழுதத்தகுந்த திருக்கையையுடைய ஸ்ரீமந்நாராயணன், அரசனது நூலினில், ஜயதேவர் கீதங்களின் தாத்பர்யமும் அடைந்திருக்க எழுதினார். இதைக்கண்ட அரசன் ஸ்ரீ ஜகந்நாதனைப் புகழ்ந்து வாழ்ந்திருந்தான். இப்படியிருக்குங் காலத்தில், அந்த ஜகந்நாத க்ஷேத்ரத்தில் அக்நி கார்யங்களைச் செய்கிற ஒரு வேதியனிடத்தில் ஒரு கன்னிகை அவதரித்தாள். அவளுடைய சவுந்தரியத்தைக் கண்டு அவளுக்குப் பத்மாவதி யென்று பெயரிட்டு அதிக பிரீதியோடு வளர்க்க, அவளுக்குத் தகுதியாகிய பருவம் நேர்ந்தமையால் முன்னிலும் அதிக சௌந்தரியவதியாய்ப் பிரகாசிப்பதை நோக்கி, அவளை ஸ்ரீஜகந்நாதப் பெருமானுக்கே மணமுடித்துக்கொடுக்க வேண்டுமென்று நிச்சயித்திருக்குங்காலத்தில், சுற்றத்தா ரெல்லாரும் அப்பெண்ணின் அழகு, குணம், ஒழுக்கம் முதலியவற்றையறிந்து, அவளைத்தமக்கு மணமுடித்துக் கொடுக்கவேண்டுமென்று வினவ, அவளது தகப்பனாகிய அந்த வேதியன், "என்பெண்ணை ஸ்ரீ ஜகந்நாதப் பெருமானுக்கன்றி அயலாருக்கு மணமுடித்துக் கொடுக்கமாட்டேன்" என்று மறுத்துச் சொல்லி, பெண்ணை மிகுந்த அன்போடு பாதுகாத்து வருநாளில், ஸ்ரீ ஜகந்நாதப்பெருமான் அவ்வேதியனுடைய கனவில் வந்து "உன் பெண்ணுக்குத் தகுந்த கணவன் ஜயதேவனே யாவன்; ஆதலால் உன் அருமைத்திருமகளை அவனுக்கே மணமுடித்துக்கொடுத்தால் நன்மையாம்" என்று அருளிச்செய்ய, வேதியன் விழித்தெழுந்து மிகுமகிழ்ச்சியோடு ஜயதேவரை நாடிப்போய் அழைத்துவந்து அவருக்கே மணமுடித்துக்கொடுத்தான். ஸ்ரீ ஜகந்நாதப்பெருமானது திருவுருவாகிய ஜயதேவர், பத்மாவதியுடனே கூடி அந்த ஜகந்நாதக்ஷேத்திரத்திலே ஹரிநாம சங்கீர்த்தனம் செய்துகொண்டு சுகமாக வாழ்ந்திருந்தார். அக்காலத்தில், சூரியனையே விரும்பும் தாமரைமலர்போல இறைவனது திருவடியையே விரும்பும் கருத்தையுடைய சுகநாரவிந்தன்

என்னும் வணிகனொருவன் வந்து, ஜயதேவரை மிக்க அன்போடு வழிபடக்கண்டு, ஜயதேவர் இவன் பரிசுத்தமான மனத்தையுடைய வன் என்று அறிந்து, அவனுக்கு நன்மையாகிய ஹிதோபதேசங் களைச்செய்து, தவஞ்செய்வோரைப் பார்க்கிலும் மேலான சிறப் படைந்திருந்தார். குருசேவையில் திரிகரணங்களையும் உபயோகப்படு த்தி நாளுக்குநாள் அன்பு மிகுதியாகச் செய்கின்ற அவ்வணிகனான வன், ஒருநாள் ஜயதேவரை வணங்கி, “எனது வீட்டிற்குத் தேவரீர் எழுந்தருளவேண்டும்” என்று பிரார்த்திக்க, ஜயதேவரும் “அப்படியே வருகிறேன்” என்றுசொல்ல, இவரை வணிகனானவன் தேர்மேலேற் றிக்கொண்டுபோய்த் தன்னூரை யடைந்து, தன் வீட்டில் பிரவேசி த்து, இவரைப் பரிசுத்தமான ஆசனத்தின்மேலிருத்தி, ஷோடசோப சாரங்களையுஞ் செய்து ஆதரித்து, அவரது அருளினால் சமதமாதி ஆத்மகுணங்களைப் பெற்று, நாள்தோறும் ஹரிநாம சங்கீர்த்தனஞ் செய்துகொண்டு இருக்க, ஒருமாதமளவும் ஜயதேவரானவர் அவ்வூ ரில் அவ்வணிகன் பணிவிடையை யேற்று, அவ்விடத்தில் வாசஞ் செய்து, அவனை நோக்கி, “அன்புருவமாகிய ககனாரவிந்தனே! யாம் இனி இங்கிருக்கவொண்ணாது; ஸ்ரீ ஜகந்நாதப்பெருமானைச் சேவிக்க வேண்டுமென்னும் ஆசை அதிகரித்திருக்கிறது; ஆதலால், நீ இவ்வி டத்திலேயே யிருக்கக்கடவாய்” என்று பிரயாணசித்தமாக, அவ்வணி கன் இவரை நோக்கி, “ஜ்ஞாநப்ரதாநம்பண்ணுகிற சிறந்த கற்பகத் தருவே! தேவரீருடைய திருவடிகளை மறவாமையாகிய பெருமை யை அடியேனுக்குப் பிரசாதிக்கவேண்டும்” என்று பிரார்த்திக்க, ஜய தேவரானவர் தமது தாமரைமலர்போன்ற திருக்கரத்தை அவன் தலைமேல் வைத்தருள, அவ்வணிகனானவன் இவர் விரக்தராதலால் நாம் சமர்ப்பிக்கும் தக்ஷிணையை யேற்றுக்கொள்ள மாட்டாரென்று அறிந்து, அவர் காணாதபடி ஆடையாபரணாதிகளை விசேஷமாக ஒருவ னிடத்திற் கொடுத்துத் தேரிலேற்றி, “இவைகளைக் கொண்டுபோய் எனது குருவின் மனைவியினிடத்திற்கொடுத்து, எனது நமஸ்காரமும் சொல்லுவாயாக” என்று சொல்லி, அத்திசையைநோக்கிப் பணிந்து விடுக்க, அவனும் அப்படியே இவரைத் தொடர்ந்துவர, இருவரு மாக வரும்போது, அந்த வணிகனிவருக்கு வழித்துணையா யனுப் பப்பட்டவன், இவரை வணங்கி, “ஸ்வாமீ! அடியேன் வீட்டில் சில முக்கியமான காரியங்கள் நேர்ந்திருக்கின்றன; ஆதலால் அடியேனு க்கு விடைகொடுத்தருளவேண்டும்” என்று பிரார்த்திக்க, ஜயதேவ ரானவர், அவனது பிரார்த்தனைக்கிரங்கி “அப்படியே போய்வா”

என்று அனுப்பி, தாம் தனியாகச் சென்றனர். அப்போது கங்காநதியைத் தரிசிக்கச்சென்ற கொக்குப்போலக் கொடிய துஷ்டராகிய இருவர், விசுவாஸ முடையவர்கள்போலத் தேரின் இருபுறத்திலும் தொடர்ந்து வருவதை ஜயதேவரானவர் கண்டு சந்தேகித்து "இவர்கள் வருவதை நோக்குமிடத்து நமக்கு ஏதாகிலும் துன்பஞ்செய்வார்களென்று தோன்றுகிறது; ஆகையால் இவர்களுக்கு இந்தத் திரவியத்தைக் கொடுத்துவிடுவதே நலம்" என்று நிச்சயித்து, அந்தச் சோரர்களைப்பார்த்து, "தேரிலுள்ள பொருள்களை யெல்லாம் நீங்கள் கைக்கொள்ளலாம்" என்று சொல்லி, தேரைவிட்டிறங்கி, பூமியிலே தனியாய் நடந்து போவதைப் பார்த்து, அந்தத் திருடர்கள் சற்றும் இரக்கமில்லாமல், "இவரைப் போகவிட்டால் இவர்போய் அவ்வணிகனிடத்துச் சொல்லுவர், அதனால் பெரிய கலகமுண்டாகும்" என்று ஆலோசித்து, இவரைத் தொடர்ந்து வந்து கொலைசெய்ய மனந்துணியாமல் கால் கைகளை மாத்திரம் சேதித்து, அங்கு படர்ந்திருந்த ஓர்புதரில் கிடத்திவிட்டுத் தேரைக் கொண்டுபோனார்கள். பிறகு, ஜயதேவரானவர் பூமி நடுங்கும்படி வீழ்ந்து இடைவிடாமல் ஹரிநாம சங்கீர்த்தநம் செய்துகொண்டு சரீரத்தை வெறுத்து ஸ்ரீ கண்ணபிரானது திருவுருவத்தைத் தமது மனதிற்கொண்டு ஞானாநந்தாநுபவத்தில் அசைவறஇருந்தனர். அந்தத்தினத்தில், கிரௌஞ்சனென்னு மரசன் அந்த வனத்தில் வேட்டையாட வந்து, சூரியன் அஸ்தமித்து இருள் மூடிக்கொள்ளவே, தன் ஊருக்குப்போகக் கூடாமல் அன்றிரவில் அவ்வனத்திலேயே தங்கியிருக்கும்படி நேர்ந்ததினால் அவ்விடத்திற் றங்கி, புதரில் ஒளியுருவாய்க் காணப்படுகிற ஜயதேவரைக் கண்டு அவ்விடத்திற் போய், "இப்புதரில் இவ்வொளி யுண்டாயிருக்கக் காரணமென்ன" என்று ஆச்சரியப்பட்டு உற்று நோக்கி, ஜயதேவர் ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தநம் செய்துகொண்டிருப்பதைக் கண்டு, இவரைப் பேரன்போடு வணங்கித் துதித்து, இவரது கால் கைகள் சேதிக்கப்பட்டிருப்பதையும், அதனால் அவர் ஒரு துன்பமில்லாமலிருப்பதையும் அறிந்து, "ஓ ஸ்வாமீ! தேவரீரை இவ்வாறு வருந்தஞ்செய்தவர் யாவர்" என்று வினவ, "ஜயதேவர் எனக்கு வருத்தத்தை ஒருவருஞ் செய்யவில்லை; என் தீவினையே செய்தது" என்று மறுமொழி சொல்லக்கேட்ட அரசன், மனமிரங்கி, இவரைத் தன் சிவிகைமேல் ஏற்றிக்கொண்டு தன் ஊருக்குப்போய், நவமணிகள் பதித்த பொன்னாசனத்தினால் இருத்தித் திரிகரணங்களாலும் வழிபட்டு, அன்போடு, "ஓ ஞானசூரியனே!" என்று துதித்து வலம்வந்து,

அவரது அருள் பெற்று, ஆதிசேஷன்மீது அறிதுயிலமர்ந்த பரஞ்சோதியாகிய எம்பெருமானைத் தோத்திரஞ்செய்து, தன் பரிஜனங்களைப் பார்த்து, "நீங்கள் இவரது திருவடித்தொண்டு சற்றும் வழுவாது செய்துகொண்டிருங்கள்" என்று நியமிக்க, அவர்களும் அரசனது கட்டளையின்படியே "நாம் பெரும்பாக்கியத்தையடைந்தோம்" என்று மனமகிழ்ச்சியோடு இவரது திருத்தொண்டினைச் செய்துகொண்டு வருநாளில், அந்த அரசன் வந்து, ஜயதேவருடைய திருவடியை வணங்கி, "தேவரீரது திருவடியைப் பூசிப்பதிலும் சிறந்த பொருள் வேறொன்றில்லையெனத் தெளிந்தறிந்தேனாயினும் தேவரீரது திருவுள்ளத்துக்கு ஏற்பதாகிய வேறொரு கைங்கரியத்தைச் செய்யவேண்டுமென்று விரும்பினேன். ஆதலால், அப்படியே தேவரீர் கிருபை செய்யவேண்டும்" என்று இனியசொற்களால் பிரார்த்திக்க, ஜயதேவரானவர், அவ்வரசனை நோக்கி, "அன்பனே! நீ திருமாலடியாரது திருவடியை வணங்கிப் பூசிப்பதே எனக்கு விருப்பம்" என்று அருளிச்செய்ய, அவ்வரசன் எழுந்து அவரது திருவடியை வணங்கி, "அவ்வாறே செய்கிறேன்; ஆனால் திருமாலடியாரை அடியேன் அறிந்துகொள்ளுதற்குரிய அடையாளங்களைத் தேவரீர் சொல்லியருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, ஜயதேவரானவர் அருளிச்செய்வாராயினர்.

எப்படியென்றால், "துளவமணி மாலையையும், தாமரைமணி மாலையையும் கழுத்திற் பூண்டு, நன்மையைத் தருவதாகிய கோபீசந்தனத்தோடு துவாதச நாமங்களையும் நெற்றி முதலாகிய இடங்களில் தரித்து, அல்லும் பகலும் ஸ்ரீ ஹரியின் திருநாமங்களையே உச்சரித்துக்கொண்டிருப்பவர்கள் எவர்களோ, அவர்களே திருமால் அடியாரென்று சொல்லப்படுவார்கள். அவர்களைக்கண்டு அவர்கள் திருவடிகளை ஆசிரயித்துப் பரிசுத்தமாகிய பூசனையைச்செய்வாயானால் வேதநாயகனாகிய திருமாலுக்கு ஸ்ரீ பெரிய பிராட்டியின்மீதுள்ள விருப்பத்தினும் அதிகமான விரும்பம் உன்மீது உண்டாகும்" என்று அருளிச்செய்ய, அரசனும் அதற்கிசைந்து, ஜயதேவருடைய கட்டளையைச் சிரசாவஹித்து, திருமாலடியார்களாகிய சாதுஜனங்களை எப்பொழுதும் தரிசிப்பதும் பூசிப்பதுமே நமக்கு உறுதிப்பொருளென்று நிச்சயித்து அவ்வாறே நடத்திவருங்காலத்தில், அரசனானவன், திருமாலடியாரைப் பூசிக்கின்ற அற்புதத்தைக் காணவேண்டுமென்று ஜயதேவர் எழுந்தருள, அவரது ஆத்மகுண பூர்த்தியைப் புகழ்ந்து, பூஜித்துப் பலவகையாக அவ்வரசன் வழிபட்டு அவரு

க்கு விசேஷமான திரவியங்களைச் சமர்ப்பிக்க, ஜயதேவர் அத்திரவிய யத்தைக்கொண்டு தமது வறுமைதீர்ந்து சுகமாக வாழ்ந்திருந்தனர். இவ்விடத்தில் இவ்வாறு நடவாநிற்க; முன்னே ஜயதேவரிடத்தில் திரவியத்தைக் களவு செய்துகொண்டுபோன இரண்டு திருடர்களும் இந்தச்செய்தியையறிந்து, "அரசனனவன்நமக்கும் மிகுதியாகியதிரவியத்தைக் கொடுக்கும்படி நாமும்அவனிடத்திற்குப்போவோம்" எனத் துணிந்து, கபட வைஷ்ணவ வேஷம் பூண்டு, தம்மால் கைகால்கள் அறுபட்ட ஜயதேவரானவர் திருமால் அருள்பெற்று அவ்வரசனது நகரத்தில் வாசம்பண்ணிக்கொண்டிருப்பதை யறியாமல், மீனைக் கருதிக்கொண்டு அசையாநிலையாய் நிற்கிற கொக்குப்போலத் தம் கையில் ஜபமாலையைத்தரித்துக்கொண்டு விரைந்து நடந்து தம்மனத்தில் உள்ள ஜ்ஞாநக்கருத்தை வெளியிட்டுக்கொண்டு, அரசனது அரண்மனையில் பிரவேசித்து, அறுபட்ட கை கால்களோடு சிம்மாசநத்தின்மீது இருப்பவராகிய ஜயதேவரைக் கண்டு, பசுவானது புல்லுள்ள இடத்தில்போக, அதன்மீது பாய்கின்ற புலிபோலக் கொலை செய்ய எண்ணித் தமக்குள்ளே ஒருவர்க்கொருவர் செய்யத் தகாத ஜாடைகளைச் செய்துகொண்டார்கள். அப்பொழுது அந்த நீசர்களை ஜயதேவரானவர் அறிந்து, குற்றமற்ற உபசாரங்களைச் செய்யும் பொருட்டு, சிம்மாசநத்தை விட்டு நிலத்தில் இழிந்துவந்து, அவர்களை வணங்கி, முன்னேவந்து, அன்போடு தழுவிக்கொண்டு, அருகே நின்று சொன்னதைத்தடுக்காமல் செய்கின்றநற்குணமுடைய சிலரை நோக்கி, "இவர்களை அரசனிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோய், அவர்கள் விரும்பிக் கேட்கின்ற பொருளைத் தரும்படியாக யான் சொன்னேனென்று அரசனுக்குச் சொல்லுவீராக" என்று அனுப்பினர். அந்த ஏவலாளர்கள் ஜயதேவர் சொன்னபடியே அந்தத் திருடர்களை அரசனிடத்திற்கு அழைத்துக்கொண்டு போய், அவர்கள் வந்தகாரியத்தைச்சொல்ல, அரசன் அவர்களை வணங்கி அநேக வகையாகத் துதித்து, அர்க்யமுதலாகிய பல உபசாரங்களையுஞ் செய்து, அத்திருடர்களை நோக்கி, "நீங்கள் இருக்க மனமுள்ளளவும் என்னிடத்திலிருக்கலாம்" என்று சொல்ல, அந்தக்கொடியோர்கள் அப்படியே செய்யச் சம்மதித்து, அவ்வரசன் தமக்குச் செய்யும் பெருமை முழுதையும் விரும்பாதவர்களாய், "இவன் அப்படிச்செய்ய நாம் இங்கிருப்பது வதைசெய்பவன் வீட்டில் அறியாமையுள்ள ஆடுகள் சேர்ந்து வாழ்வதுபோன்றிருக்கின்றது" என்று நினைத்தார்கள். அப்படி நினைத்தது மல்லாமல் "அரசன் அறியும்படி ஜயதேவர் நமது

உண்மையைச் சொன்னால் அவரது சொல்லை ஏற்றுக்கொண்டு, நம் முயிரை நீக்கிவிடுவன்; அதனை நம்மால் தடுக்க முடியாது" என்று ஆலோசித்து, அஞ்சி, மிகுந்த துன்பங்கொண்டு, மனஞ் சோர்ந்திருந்தார்கள். பிறகு உண்பதும் உறங்குவதும் மனத்தெளிவும் இல்லாமல் தினந்தோறும் இவர்கள் வருந்துகின்ற நிலைமையை அங்குள்ளவர்கள் அறிந்து அரசனாற் பூஜிக்கப்பட்டு அங்கு வாசஞ்செய்கிற ஜயதேவரிடத்து விண்ணப்பஞ்செய்ய, அவர் அவர்களை நோக்கி, "இச்செய்தியை அரசனுக்கு அறிவித்து, அவர்களுக்கு வேண்டும் பொருளுதவி செய்து, அவர்கள் விருப்பத்தின்படி போக விடைகொடுத்தனுப்பினால் நன்மையாமென்று சொல்லுங்கள்" என்று நியமிக்க, அவர்க ளவ்வாறே சென்று அரசனுக்குச் சொல்ல, அதைக்கேட்ட அரசன் அந்தச் சோரர்களிடத்துக்குப்போய், "நீங்கள் சுகமாய் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களோ" என்று வினவ, அவர்கள் "அரசனே! நீ எங்களை மிகவும் உபசரித்து வைத்திருந்தாலும் எங்களுடைய மனமானது பல புண்ணியதீர்த்தங்களின்மேலே செல்லாநின்றது; ஆதலால் நீ எமக்கு விடைதருவாயானால் யாம் போவோம்" என்றுசொல்லுதலும், அரசன், அவர்களை நோக்கி, "நீங்கள் அவ்வாறு தீர்த்தயாத்திரைசெய்வதற்குவேண்டியது யாதோ அதனைச்சொல்லுங்கள்" என, அவர்கள் "இரண்டு தேர்கள் நிரம்பும்படியான திரவியம் தந்து எங்களை யனுப்பவேண்டும்" என்று சொல்லுதலும், அவ்வாறே அரசனும் அவ்விருவருக்கும் ஆடையாபரணாதிகள் வேண்டியவளவுந் தந்து இரண்டு தேரிலும் பொருளை நிரப்பி, அவர்களையும் ஏற்றி, தேர் நடத்தும் பாகர்களையும் அமைத்து அனுப்பினான். அவர்கள் அரசனிடத்தில் விடை பெற்றுக்கொண்டு ஜயதேவரிடத்திற்குப் போய் அவரை வணங்கி விடைகேட்க, அவரும் "போய் வாருங்கள்" என்று சொல்லியருளத் திருடர்கள் சென்றார்கள். செல்லும்போது பாகர்கள் அவர்களை நோக்கி, "எங்கள் அரசனிடத்தில் வந்த பேர் அநேகருள் ஜயதேவர் உங்களைப்புகழ்ந்து மிகுந்த உபசாரஞ் செய்ததற்குக் காரணம் யாது?" என்று வினவ, அத்திருடரும் அந்தப்பாகருக்குச் சொல்லலுற்றார்கள்:—"துஷ்டகர்மா என்று சொல்லப்படுகிற ஓரரசன் இருந்தான்; அவனிடத்தில் இந்த ஜயதேவன் பிரதானியாயும் இஷ்டனாயும் இருந்தான்; இந்த ஜயதேவன் அரசனுக்கு அதிக நஷ்டத்தை யுண்டாக்கினதனால், இவனைச் சிரச்சேதம் பண்ணும்படி அரசன் எமக்குக் கட்டளையிட, நாங்கள் அப்படி செய்யாமல் கால் கைகளை மாத்திரம் சேதித்துக்காட்டில் ஒரு புதலினிடையிலே கிட,

த்திவிட்டு, அந்த அரசனது ஏவற்றொழிலுக்கு உடம்படாமல் மன வெறுப்போடு வந்தோம்; இப்பொழுது உங்களூரில் வர, தன் உயிருக்கு உதவிசெய்த நல்லவர்களென்று எங்களை உபசரித்து மிகுதியாகிய ராஜசந்மாநமும் செய்வித்தான்'' என்று சொன்னவுடனே, அசத்தியமல்லாமல் கொடிதாகிய பாவம் வேறொன்றுளதோ? இல்லையாதலால் இவர்கள் சொன்ன பொய்வார்த்தையைப் பூமிதேவியானவள் பொறுக்காமல் படீலென்று வெடிக்க, அந்த வெடிப்பில் இந்தத் திருட்டு வஞ்சகர்கள் ஏறியிருந்த தேரோடு வீழ்ந்து அழுந்திவிடக் கண்ட தேர்ப்பாகர்கள், தாமும் அவர்களோடு வீழ்ந்து இறக்காமல் மெல்லத் தேரினின்றுங் குதித்து, உயிர்பிழைத்து, "இனி யாதுசெய்வோம்" என்றுமனமயங்கி, "இந்தத்தீமை சம்பவித்ததுதெய்வச்செயலல்லவா? இந்தச் செய்தியை அரசனுக்குச் சொல்லுவோம்'' என்று எண்ணி மீண்டுவந்தவர்கள் அரசனிடத்துள்ள பெரியோர்களை வணங்கிச் சொல்லினர். இதனைக் கேட்ட சாந்தமூர்த்தியாகிய ஜயதேவர், தமது கண்களில் நீர் ததும்பும்படி துக்கித்து, "மாயனே! பாண்டவ சகாயனே! சத்தியபாமைக்கு நேயனே! உலகமுண்ட செவ்வாயனே!'' என்று தோத்திரஞ்செய்து, "உனக்குப் பகைவராகிய கஞ்சன் முதலான அநேகதுஷ்டர்கள் மேற்கதியடையச்செய்து எனக்குப்பகைவரான திருடர்களை கீழ்க்கதி யடையச்செய்தது உன்னுடைய கிருபைக்குத் தகுதியோ! ஆதிமூலமேயென்று அழைத்த கஜேந்திராழ்வானுக்கு முன்னே அபயங்கொடுத்து நற்கதியடையச் செய்தது போல அவருக்குப் பகையாகிய கொடிய முதலைக்கும் அந்த நற்கதியைக் கொடுத்தாய்; அவ்வாறு யான், அன்பனென்றிருக்க, என்பகைவர், நற்கதியை யடையும்படி செய்யாமல் இப்படி கவிழ்த்துவிட்டது உனக்கு நீதியாமோ? என் ஐயனே'' என்று நைந்து வருந்தும்போது, திருமாலானவர் திருவுளமிரங்கித் தமது சகுண ரூபங்கொண்டு இவருக்கெதிரே யெழுந்தருளினர். அப்படி எழுந்தருளின மாத்திரத்தில், அவரது கடாக்ஷவீக்ஷணத்தால் இவரது அறுபட்ட கை கால்கள் பருத்து நீண்டுவளர்ந்தன. கஞ்சுபோன்ற கொடியவரான அந்த திருடரும் சொர்ண விமாநத்தின் மேலேறி விண்ணாட்டை யடைந்தனர். அப்பொழுது உலகமுண்ட பெருவாயனாகிய இறைவன், ஜயதேவரைத் தழுவிக்கொண்டு "உன்னுடைய அன்புக்கு அளவில்லை; என் மனம் மிகுதியும் களிப்படைந்தது'' என்று அருளிச்செய்து பரமபதத்துக்கெழுந்தருளினன். பிறகுபெருந்தகைமையுள்ள அந்த அரசன், அந்த ஜயதேவரை வணங்கித் "தேவரீருடைய கால் கைகள்

வளர்ந்ததெப்படி, சொல்லவேண்டும்'' என்று கேட்க, ஜயதேவரும் தமது வரலாற்றையெல்லாம் தவறாமல் சொல்ல, அரசன் கேட்டுச் சந்தோஷித்து, "பத்மாவதியாரை நம்மூருக்கு அழைத்துக்கொண்டு வாருங்கள்'' என்று சிலர்க்குச்சொல்லி, சிவிகையையும் அனுப்பினான். அரசனது ஏவலால் வந்த சிவிகைமேல் பத்மாவதியார் ஏறி, நம்முடைய பிராணநாதனை வணங்குவதற்குரிய நல்லநாள் இதுவேயாமென்று விரைந்து சென்று, ஜயதேவருடைய திருவடியை வணங்கும்போது, அந்த அரசன் அவ்விடத்துக்குத் தன் மனைவியோடு வந்து தன் மனைவியை நோக்கி, "உத்தமியாகிய பத்மாவதிக்குத் தினந்தோறும் ஏவல் செய்வாயாக'' என்று கட்டளையிட்டான். அவ்வாறே ராஜபத்தினியானவள், பத்மாவதியாரை அழைத்துக் கொண்டுபோய், சொர்ணமயமான அரண்மனையிற் பிரவேசித்துப் பொற்பீடத்திலிருத்தி, அவரது மலரடியை வணங்கினாள். அப்படி ராஜபத்தினியால் வணங்கப்பெற்ற பத்மாவதியார், நதிகளில் கங்காநதிபோலவும், கற்பில் சாவித்திரிதேவிபோலவும், வேதத்தில் காயத்திரி மந்திரம்போலவும், ஆபரணங்களில் மங்கலசூத்திரம்போலவும், மாதர்களுக்குள் சிறந்து விளங்கினாள். இப்படி ராஜபத்தினி ஏவற் பணிவிடைசெய்ய, பத்மாவதியார் சுகமாக வாழ்ந்திருக்கு நாளில், ஒரு தூதன் வந்து, ராஜபத்தினியை நோக்கி, "உன் தம்பியாகிய சுஜாணன் என்பவன் மரணமடைந்தான்'' என்று சொன்னான். அந்தச் சொல்லானது ராஜகிருகத்திலிருந்த சுஜாணன் மனைவிகேட்டு, அவனோடு உடன்கட்டையேறத் துணிந்து, புறப்பட்டதை அறிந்தவர்கள் இது மிகுந்த ஆச்சரியமென்று மனம் வருந்தினார்கள். பத்மாவதியார் மாத்திரம் சொர்ணாசனத்தின்மேல் வருத்தமின்றி வீற்றிருக்க, துன்பக்கடலிலழுந்தினவர்கள், "இது என்ன?'' என்று பணிவாய்க் கேட்க, ராஜபத்தினியானவள், பத்மாவதியாருக்கெதிரில் நின்று இந்தச் செய்தியைச் சொல்லக்கேட்ட பத்மாவதியார், ராஜபத்தினியை நோக்கி "சுஜாணன் மனைவி இப்படிப்பட்ட அற்புதமான செய்கைக்கு உடன்பட்டது எழு பிறவியிலும் தன் பிராணநாதனை இடையறாமல் தழுவிக்கொண்டிருப்பதற்கே யாகும். ஆயினும் சூரியனிடத்தில் கிரணங்கள் அடங்குவதுபோல, கணவனது மரணத்தைக் கேட்டபொழுதே உயிர் விடாமல் இவள் இங்கு வாழ்ந்திருக்கின்றனள்; கற்புக்கழகு இது தானோ'' என்று பத்மாவதியார் சொன்னமாத்திரத்தில், கேட்ட சுஜாணன் மனைவியானவள் விரைந்துசென்று, கணவனோடு உடன்கட்டையேறினபிறகு, ராஜபத்தினி, "இதனைப் பத்மாவதியாரிடத்தில் பரி

4

சோதனை செய்வோம்" என்றெண்ணி, மந்திரியை யழைத்து, ஒரு பொய்சொல்லும்படி கற்பித்தாள். மந்திரியும் ஜயதேவர், அரசனோடு கூடி வனத்திற் பிரவேசிக்கச் செய்து அங்கிருந்து வந்து "ஜயதேவர் மரணமடைந்தார்" என்று சொன்னான். அதைக்கேட்ட பத்மாவதியார் அவர் "புலியினால் மரணமடைந்தாரென்பது உண்மைதானோ" என்று கேட்க, இந்தப் பொய்யை மந்திரி சொல்லும்படி கற்பித்த ராஜபத்தினியானவள், "மெய்தான்" என்றுசொன்னாள். இப்படிசொல்லுவதற்கு முன்பே, பத்மாவதியார், தன் உயிர் நீங்கினள். இதைக் கண்ட வேந்தன் மனைவி, தனக்கெதிரில் வணங்கி நிற்பவரை நோக்கி, நான் "பொய்யாய் விளையாட அவ்விளையாட்டு மரணவிளையாட்டாயிற்றே" என்று துக்கக்கடலில் அழுந்தினள். அதைக்கண்டு அவ்விடத்துள்ள யாவரும் இரக்கமுற்றார்கள். இப்படியிருக்க, வேட்டையாடச்சென்ற அரசனும் கூடப்போனவர்களும் மீண்டு வந்தார்கள். அப்பொழுது அரசன் "இந்தத் துன்பத்தின் காரணம் யாது?" என்று விசாரித்துத் தன்தேவியால் நிகழ்ந்த வரலாற்றை மந்திரி சொல்லக் கேட்டு"இதற்கு நான் என்னசெய்வேன்" என்று, கூக்குரலிட்டு நடுநடுங்கி அழுதான். இப்படியழுது "இவள் என்ன காரியஞ் செய்தாள்? இவளை உயிர் வாங்குவேனாகின் பெண்கொலைப்பாவம் நேரிடும்; ஆதலால், விரைவில், என்னுயிர் நீங்கும்படி செய்துகொள்வேன்" என்று துணிந்து, தன்னகரின் பக்கத்தில் அக்கினிகுண்டமொன்று ஏற்படுத்தும்படி மந்திரிக்கு நியமித்துப் பத்மாவதியார் மரணமானதையறிந்த ஜயதேவர்க்கெதிரில் வந்து அவரை வணங்கி, "தேவரீரது மனைவியார் என்னால் உயிர் நீங்கினார்" என்று அறிவித்தனன். அதைக்கேட்ட ஜயதேவர் மிக்க அன்போடு அரசனைத் தழுவிக்கொண்டு "என்மனைவி இறந்தது உம்மாலன்று, நீர்போம்" என்று சொல்லித் தம்முடைய தேவியாராகிய பத்மாவதியா ரிடத்துக்குப் போய் அவரைக்கண்டு, தாளத்தையும் வீணையையும் கைகளிற்பற்றி, பூர்வத்தில் ஸாத்விக ராஜன் சொன்ன அறுபத்து நான்கு பாடலாகிய அஷ்டபதியைக் கொண்டு வாழ்த்தி, ராதா விலாசத்தை ஸ்ரீ ஹரி கீர்த்தநத்தோடு சேர்த்துப் பாடுதலும், அந்தப் பாட்டினோசை எம்பெருமானாகிய ஸ்ரீ ஹரியின் திருச்செவிகளில் சென்று நுழைந்தவுடன், அன்பராகியஜயதேவருக்கெதிரில் எழுந்தருளி, அவரைத்தழுவி, "இந்த அஷ்டபதியைப் பாராயணம் பண்ணுவோரும், நல்லதென்று சொல்லிக் கேட்போரும் எல்லாத் துன்பங்களினின்றும் நீங்கும்படி அவரிடத்தில் அல்லும் பகலும் போய்த் தங்கியிருப்பேன்" என்று அருளிச்

செய்து, பத்மாவதியார் உயிர்பெற்று எழுந்திருக்கும்படி தம்முடைய கிருபா திருஷ்டியை அவர்மீது செலுத்தினமாத்திரத்தில், அந்தப் பத்மாவதியார், தேவர்கள் பூமழைசொரிய எழுந்து, தமது பிராண நாதராகிய ஜயதேவரை யெதிரே யிருக்கக்கண்டார். இந்த அதிசயத் தைக்கண்ட வைஷ்ணவர்கள் யாவரும் வாழிகூறி, சக்ரபாணியாகிய ஸ்ரீ ஹரியின் திருவடியை வணங்கித் துதித்தார்கள். வேந்தனும் தன் பரிஜனங்களோடு கூடி, ஜயதேவரது திருவடியின்கீழ் நின்று வணங் கிப் புகழ்பெற்று விளங்கினன்" என்று சொல்லிமுடித்து, மேலே துளசிதாசர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

ஜயதேவர் சரித்திரம் முற்றிற்று.

மூன்றுவது

துளசிதாசர் சரித்திரம்.

ஸ்ரீ லக்ஷ்மீநாதனுகிய பகவான், பரிசுத்தராகிய வால்மீகிமுனி வரை நோக்கி, "உலகத்தில் பாவமாகிய நெருப்பு மூண்டெரியாநின் றது; ஆகையால் அந்த நெருப்பை, நீர் அந்த உலகத்தில் அவதரி த்து, ஸ்ரீஹரி பக்தியாகிய நீரினுலே தணிவிப்பீராக" என்று அருளிச் செய்தலும், அம்முனிவர், இறைவனது திருவடித்தாமரைமலரைத் தமது சிரமானது நிலத்திற் படும்படி சாஷ்டாங்க தெண்டனிட்டுப் பூலோகத்துக்குப் போனுர்; போய் அத்திநாபுரத்தில் வாசம் பண் ணுகிற கனேஜா என்னும் பெயர் பூண்ட உத்தம குலத்தினராகிய ஆத்மாராமர் என்பவருக்குப் புதல்வராய் அவதரிக்க, தந்தையாராகிய ஆத்மாராமரும் அவர் மனைவியாரும் மிகவும் களிப்பை யடைந்து, தமது புதல்வருக்குத் துளசிதாசர் என்று பெயரிட்டு அன்போடு வளர்த்து, ஏழாம் வயதில் உபநயநம் செய்து, பன்னிரண்டு வயதுக் குள்ளே, லௌகிக வைதிக கர்மங்களையும் தமக்குரிய வேத சாகை யையும் கற்பித்த பிறகு, மமதா என்னும் கந்நிகையை மணம்புணர் வித்தார்கள். பிறகு துளசிதாசர் தமது மனைவியாராகிய மமதை யோடு கூடி இல்லறம் நடத்தி, அந்த நகரத்துக்கு அரசனுகிய அக பரன் கட்டளையி லமைந்து, பெருஞ் செல்வராகி, சகல போகங்களை யும் அநுபவித்துக்கொண்டிருக்கும் நாளில், மேகம்போல முழங்கு கின்ற பெருஞ் சேனையையுடைய அரசனுடனே காட்டுக்குப் போகும்படி நேரிட்டது. அப்போது ஒரு தூதன் வந்து மமதையை

நோக்கி, "அம்மா! உமது தாயார் உம்மைப்பார்க்கவேண்டுமென்னும் விருப்பத்தால் உம்மை யழைத்து வரும்படி என்னை யனுப்பினார்" என்று சொல்ல, மமதையும் தமது மாமியாரிடத்திற் போய், "நான் என் தாய்வீட்டுக்குப் போய்வருகிறேன்" என்று சொல்லி வணங்கி விடைபெற்றுப் போய், க்ஷேம லாபங்களை விசாரித்து அங்கே யிருக்க, அரசனுடனே சென்ற துளசிதாசர் மீண்டும் வீட்டுக்கு வந்து, தமது மனைவியைக் காணாதவராய், தமது தாயாரை வினவித் தெரிந்துகொண்டு, மனம்வாடி, அஞ்சாமல் இராக்காலத்தில் போய், மாமியார் இருக்கிற ஊரையடைந்து, அவர் வீட்டுக்கதவு அடைத்திருப்பதைக் கண்டு, வீட்டின் மேல்முகட்டிலிருந்து இழிந்துவருகிற பாம்பைப்பற்றி, அதையே கயிறாகக்கொண்டு வீட்டின்மேல் ஏறி, வீட்டு முற்றத்தில் விரைந்து பாய்ந்தவுடனே, இவர் பாய்ந்த வொலியினால் யாவரும் பயந்து, விழித்து வெளியே வர, மமதையும் வெளியில் வந்து, மதிமயங்கித் தெளிவடைந்து, இவரைக் கண்டு, "என் பிராணநாதரே! நீர் இந்த இருள் செறிந்த இரவில் எவ்வாறு வந்தீர்? வீட்டின்மேல் எப்படி யேறினீர்?" என்று வினவ, "நான் வருவதற்கு நீ விட்ட கயிற்றைப் பிடித்துக்கொண்டு ஏறினேன்" என்று தாசர் சொல்ல, மனைவி "அந்தக் கயிற்றைக்காட்டும்" என்றுகூடவந்து, அவர் சொன்ன கயிறு பாம்பாயிருக்கக் கண்டு, "ஐயோ, இதைக் கையாற் பிடித்த காலத்திலும் உமது காமமயக்கத்தால் பாம்பென் றறியவில்லையே; இந்திரனும் இராவணனும் காமக்கடலில் அழுந்தி வருந்தினதை அறிந்திலீர்போலும்; இப்படிச் செய்யலாமா" என்று கையைப்பற்றி, "வாரும்" என்றழைத்துப்போய், தமது வீடுதியிலுள்ள ஆசநத்திலிருத்தி, மமதையானவள் இன்சொற்கள்கூறி "மாதராசையாகிய கடலில் முழுகினவர்கள் மிகவும் கலங்குவார்கள்; ஆகையால் ஸ்ரீராமபிரானுடைய திருவடியின்மேல் அன்புசெய்து, பேரின்பக் கடலில் இறங்கி, அவரது நாமசங்கீர்த்தநம் என்னும் அமிர்தத்தை யுண்ணக்கடவீர்" என்று இவ்வாறு சொன்ன மமதையின் வார்த்தையைக்கேட்ட துளசிதாசர், "இவள்சொல்லுவது உண்மைதான்" என்று மதித்து, பரிசுத்தராகிய இறைவனது திருவடியை மனத்திற் பதித்து, சந்த்ரபிம்பம் போன்ற முகத்தையுடைய மமதையை நோக்கி, "நெருப்பில் விழுகின்ற குழந்தையைத் தாயானவள் பார்த்து அதின் ஆபத்தைத் தீர்ப்பதுபோல, நீ என் காமத்துன்பத்தை நீக்கினையாகையால், நீ எனக்கு மனைவியல்லை; எனக்குத் தாயேயாவாய்" என்று சொல்லி, அந்த மமதையின் பாதங்களில் விழுந்தெழு

ந்து, "நன்று சொன்னாய்" என்று கொண்டாடி, "நீ செய்த நன்றிக்கு ஒப்பாகிய பொருளானது இவ்வுலகத்தில் ஒன்றுமில்லை" என்று சொல்லி, இல்வாழ்க்கையை யொழித்துக் காட்டிற்போய், திவ்ய மான கங்காநதியின் நீரில் மூழ்கி, கொடிய குணம் நீங்கப் பெற்று, "நான் வால்மீகன் அல்லவா, நான்யாதுகாரணமாகஇவ்வாறாயினேன்" என்று தெளிவடைந்து, "சர்வேசுவரன் இவ்வுலகிலுள்ள பத்தாத் மாக்களைத் திருத்தும்பொருட்டு நம்மை நியமித்தனுப்ப, அதை விட்டு, பாசக்கடலில் அழுந்திப் பரிதபிக்கிறேன், இனியாயினும் இது தீரும் வகைசெய்வேன்" என்றெண்ணி, நல்லவுணவுகளை யொழித்து, உதயகாலத்திலே யெழுந்து, புண்ய நதிகளில் மூழ்கி, நாள்தோறும் செய்யவேண்டிய கர்மங்களை விரைவாய் முடித்து, உதிர்ந்த காட்டுச்சருகை யுண்டு, அளவுபடாத அரியதவஞ் செய்துகொண்டிருந்தார். இப்படி அருந்தவம் செய்வோராகிய துளசிதாசர், தினந்தோறும் தமது கையிலுள்ள கமண்டல நீரைக்கொண்டு, கைகால் முதலியவற்றைச் சுத்திசெய்து, மிச்சமான நீரை அங்குள்ள மரத் தடியில் கவிழ்ந்துவிடுவார். இப்படி ஸ்ரீராமநாமஸ்மரணையை ஒரு போதும் மறவாத துளசிதாசர் பன்னிரண்டு வருடம் வரையில் நடத்தி வருகையில், ஒருநாள், அந்த மரத்தில் வாழ்ந்திருந்த பேயானது இவருக்கெதிரில் வந்து நின்று, தனது கோரரூபத்துடனே கைகுவித்து வணங்கி, "தாசரே! நீர் பரமபாகவதராகையால் உம்மைக் காணவேண்டுமென்று வந்தேன்; உமக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்ளலாம்" என்று சொல்ல, துளசிதாசரானவர் அந்தப் பேயை நோக்கி, "நீ யார்? உன் பேர் என்ன? எனக்கெதிரில் வந்தகாரணம் யாது? சொல்" என்று கேட்க, பேயானது "நான் அலகை; இந்த மரத்தில் நெடுநாளாயிருந்தேன்; நான் ஆறு, ஓடை, ஏரி முதலியவற்றில் நீருண்ணும் வழக்கமில்லாமையால், மிகுதியாகிய தாகத்தினால் வருத்தமடைந்திருந்தேன்; அப்படியிருந்த எனக்குப் பன்னிரண்டு வருடகாலமாய் நீர்வார்த்துக்காப்பாற்றி வருகிறீர்; ஆதலால்எனக்கு உம்மீதுகருணை உண்டாயிற்று; நீர் விரும்பின வரத்தைக்கேட்கலாம்" என்றுசொல்லக்கேட்ட துளசிதாசர், அப்படிவரங் கேட்க விருப்பமில்லாதவராய், "இது என்ன, கருடனைத் தேடும் போது காகம் எதிர்ப்பட்டது போலவும், கற்பக மரத்தை விரும்பக் கள்ளிமரம் எதிர்ப்பட்டது போலவும், புண்ணியத்தை விரும்பி யொரு காரியத்தைச் செய்ய, அது பாவமாய் முடிந்தது போலவும், யான் அழிவற்றவனாகிய பகவானை நினைந்தபோது ஒரு அலகை

யெதிர்ப்பட்டது, இனி என்செய்வேன்" என்று மனந்தளருங் காலத்தில், பேயானது "இவர் நம்மை வெறுத்தது யாதுக்கோ" என்று, மறுபடியும் இவரை நோக்கி, "நீர் சிறந்த புத்திமானென்று நினைத்தேன்; இனி என் தகுதிக்கேற்ற வரமொன்றை உமக்குத் தர விரும்பினேன்" என்று சொல்ல, தாசரானவர், பேயை நோக்கி, "அப்படி உனக்கு விருப்பமிருந்தால், திருத்துழாய் மாலையை அணிந்த ஸ்ரீராமமூர்த்தியானவர் எனக்கெதிரே யெழுந்தருளும்படியான வரம் தரக்கூடுமானால் தரலாம்; அந்த வரத்திலல்லாமல் வேறொன்றிலும் எனக்கு விருப்பமில்லை" என்று சொல்ல, பேயானது பயந்து, தான் நின்ற நிலைவிட்டுத் தூரமாய்விலகி, "தாசரே! நீர் விரும்பும் சுவாமியைக் காட்ட எனக்குச் சக்தியில்லை; ஆயினும் காட்டவல்ல பரிசுத்தாத்மாவை உமக்கு அறிவிக்கிறேன்; அவரால் உமது மனோரதம் நிறைவேறும்" என்று சொல்ல, தாசர் அவரைக் காட்டவேண்டும்" என்ன, பேய், "அவர் வாயுபுத்ரராகிய அநுமான்" என்று சொல்ல, "அவர் எங்கேயிருப்பார்?" என்று தாசர் கேட்க, "நீர் தினந்தோறும் வினவும் பெருங் கதையைச் சிரவணஞ் செய்ய வந்து சேர்பவர்களுக்கு முந்திவந்து சிரவணஞ் செய்வதும், அவர்கள் போகும்போது அவர்களுக்குப் பின்தொடர்ந்து போவதும் ஆகிய தொழிலை யுடையவராய், தலையில் அணிந்த குல்லாவோடு, கிழிந்த வஸ்திரத்தையும், கையில் ஒரு தடியையும், அழகாகிய கோவணத்தையும் கொண்டு விளங்குவார்; அன்றியும் வேதியரில் மூப்படைந்தவர்போலத் தோன்றுவார்; அவர்தான் மாருதி" என்று பேயானது சொல்லி நீங்கினவுடனே, ஸ்ரீஹரி பக்தியிற் சிறந்த தாசர், மறுநாள் வழக்கம்போலவே ஸ்ரீ விஷ்ணுபுராண காலக்ஷேபத்தைத் தொடங்கு முன்னமே, மாருதியானவர் காலக்ஷேபங் கேட்கவருகிற மற்றையரைப் பார்க்கிலும் முந்திவந்து காலக்ஷேப கோஷ்டியில் எழுந்தருளியிருந்தார். அங்குப் புராண காலக்ஷேபம் முடிந்தவுடனே, மெய்த்தவத்தை யுடையோராகிய தாசர்கள் தமது இருப்பிடம் போகாநிற்க, மாருதியும் அவரைப் பின்தொடர்ந்து போவதைக் கண்ட துளசிதாசர், "சுவாமீ! எனக்கு அருள்புரிய வேண்டும்" என்று மாருதியாகிய வயோதிக வேதியரை வணங்க, முதியராயிருக்கிற மாருதியானவர் "நீர் என்பாதத்தைத் தீண்டுதல்தகுதியல்லவே" என, "ராமதூதராகிய உமதுபாதங்களை வணங்குதல்தகுதியேயாம்" என்று துளசிதாசர் வணங்குதலும், மாருதியானவர், இவர் சதாகாலமும் ஸ்ரீராமநாமஸ்மரணையை விடாத பரமபாகவதர்; அன்றி

யும், இவர் வால்மீகிமுநிவரேயாம்'' என்று நினைத்து, உள்ளன்போடு துதித்து, அவரைத் தழுவி, தாசரை நோக்கி, "உமக்கு வேண்டிய தைச்சொல்லும்''என்று கேட்க, ஸ்ரீதுளசிதாசர், "நீர் சதாகாலமும் சேவை செய்கிற ஸ்ரீராமபிரான் எனக்குச் சேவை தந்தருளும்படி செய்யவேண்டும்''என்றுசொல்ல,மாருதியானவர் "அப்படியே செய் கிறேன்'' என்று சொல்லி, மறைந்திருந்த ஸ்ரீராமபிரானை நோக்கி, வந்தனை வழிபாடுகள் செய்து, "சுவாமீ! உன் திருவடிக் கன்பனான வால்மீகியானவன் உன்னைச் சேவிக்க, மிகு விருப்பங்கொண் டிருக் கிறான்; ஆகையால் அவனுக்கு அருள்செய்வது உனக்குக் கடமை யாகும்'' என்று மாருதி சொல்ல, ஸ்ரீராமபிரான் அந்தச் சொல்லைக் கேட்டு, "நல்லது அப்படியேயாகட்டும்''என்று,வாநரங்கள் தம்மைத் தொடர்ந்துவர, தமது கோதண்டம் என்னும் வில்லுடனே, துளசி தாசருடைய ஆசிரமத்தின் வழியாய்ச் செல்ல, தாசர் பார்த்து, "இவன் யாரோ துலுக்கன்''என்றுநினைத்து, அவருக்கு வந்தனைவழி பாடுகள் செய்யாமலிருக்க, மாருதியானவர் தாசரிடத்திற்கு வந்து, "ஸ்ரீராமபிரானைத் தரிசநம் செய்தீரோ'' என்ன, தாசரானவர், இவ் வழியாக ஒரு துலுக்கன் சில வாநரங்களோடு போனான், அவனை யன்றி வேறொருவரையும் நான் கண்டிலேன்'' என்று சொல்ல, அநு மானானவர் ஆச்சரியப்பட்டு, "இவர் சொல்லுவதை யோசித்தால், வலியவந்த காமதேனுவை ஒரு சாதாரண ஆடென்று நினைத்தாற் போலவே யாயிற்று''என்று சொல்லுதலும், "அயோத்யாநகரத்தை யாளுகின்ற சக்ரவர்த்தித் திருமகனார், முனிவர் சொன்னபடி, கோத ண்டத்தை யேந்திவாராமைக்கும், இலக்குவரோடு கூடிவாராமைக்கும் காரணம் யாதோ அறிகிலேன்; அதுநிற்க, என் சந்தேஹம் தீரும் படி இப்பொழுது சீதாபிராட்டியோடு எழுந்தருளப் பண்ணினால் உனக்குப் பெரும் புகழுண்டாகும்''என்று சொன்ன தாசரது சொல் லைக் கேட்டு, மாருதியானவர், "உன் மநோரதத்தை ஸ்ரீராமபிரான் முடிப்பார்'' என்று சொல்லித் தேற்றி, மறைவாய் ஆசிரமத்துள்ளே போய், ஸ்ரீராமபிரானை அன்போடு தோத்திரஞ் செய்ய,பகவானாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர், ப்ரத்யக்ஷமாகி, "நீ என்னை நினைத்துப் பல வகையாய்த் தோத்திரம் பண்ணினதற்கு மிகவும் சந்தோஷமடைந் தேன்; உன் கருத்தென்ன சொல்'' என்று கேட்க, மாருதியானவர், "சுவாமீ! தேவரீரைத் தரிசிக்க விரும்புகிற துளசிதாசருக் கெதிரே, ஸ்ரீஜாநகீபிராட்டியோடுகூடிச் சேவைசாதிக்கவேண்டும்'' என்று பிரா ர்த்திக்க, பகவானானவர், அநுமானை நோக்கி, "அநும்மனே! இது கலி

கால மாகையால் அப்படி எனது நிஜரூபத்தோடு காணப்படுதல் கூடாது என்று சொல்ல, அநுமானனவர், "உன் தொண்டராகிய துளசிதாசருக் கெதிரே சேவை சாதிப்பதனல் உமக்கு என்ன குறை யுண்டாகும்" என்று கேட்க, பகவானனவர், "அநுமானே! உன் விருப்பத்தின்படியே செய்கிறேன்'' என்றருளிச்செய்ய,மாருதி யானவர் இந்தச் செய்தியைத் துளசிதாசருக் கறிவித்தார். உடனே பகவானும் சீதாசமேதராய் எழுந்தருளக்கண்ட துளசிதாசர், சுவாமி யைப் பலவகையாய்த் தோத்திரஞ் செய்து வணங்கினவுடனே, ஸ்ரீராமபிரான், அந்தத் துளசிதாசரை நன்ருய்த் தழுவிக்கொள்ள, மாருதி, தாசரைநோக்கி, "பகவானுடைய குணநுபவத்தை இடை விடாமல் செய்துகொண்டிருந்ததனல் உனக்கெதிரில் பகவான் ப்ரத் யக்ஷமானர்; இனி இந்தப் பூலோகத்தில் ஸ்ரீ ராமசரிதாம்ருதமே உமக்குத் தாரகம்'' என்றுசொல்லி, பிறகு ஸ்ரீராமமூர்த்தியை நோக்கி, "தாசரதி! இந்தமெய்யன்பராகிய துளசிதாசருக்குத் தேவரீர் பூர்ண க்ருபை செய்யவேண்டும்'' என்று வேண்ட, அந்த வேண்டுகோளுக் குப் பகவானனவர் இரங்கி,துளசிதாசருடைய தலையின்மேல் தமது திருக்கரம் வைத்து உண்மைப்பொருளை உபதேசித்து மறைந்தார். பிறகு பகவானுடைய நியமகப்படியே அநுமான் சொன்னதையே நிர்மலரான துளசிதாசர் மேற்கொண்டு, பரிசுத்த க்ஷேத்ரமாகிய காசிக்குப்போய், ஸ்ரீ விஷ்ணுகதாப்ரவசநம் செய்துகொண்டு, அநே கம் பாகவத கோஷ்டியோடு அவ்விடத்திலேயே எழுந்தருளியிருந் தார். இப்படியிருக்கும் நாளில், காசி க்ஷேத்ரத்திலுள்ளவர் இவர் மீது மிகவும் அன்பு பாராட்டி, ஒருமடம் கட்டுவித்து, அதில் இவர் வசிக்கும்படியான ஏற்பாடுசெய்து, யாவரும் அங்கு வந்து பிக்ஷை செய்யும்படியாகவும் அமைத்தார்கள். பொன்னினலும் வெள்ளியின லும் பாத்திரங்கள் அமைத்து, அங்கு வருவோரெல்லாருக்கும் சகலமான இனிய உணவுகளுண்பிக்கத் தகுந்த பரிசாரகர் முதலியோரையும் அமைக்க, தாசரும் தினந்தோறும் அநேக பாக வதரோடு கூடி உண்டு சுகமாய் வாழ்ந்திருந்தார். இப்படி இவரிருக் குங்காலத்தில், இவரது கீர்த்தியானது உலகமெல்லாம் பரவுதலால், யாவரும், தத்தமக்கிசைந்த பண்டங்களை அந்த மடத்துக்கு அனு ப்ப, ததீயாராதநம் குறைவுபடாமல் நாளுக்குநாள் அபிவ்ருத்தி யடைந்து வந்தது. இந்த மடத்தில் வேதியர் இடையருமல் வருவ தும் போவதுமா யிருக்கையால், இந்த மடத்தின் வாயில்கள் இரவி னும் பகலினும் மூடாமலிருப்பது வழக்கம். இதில் நுழைந்து திரு

டிக்கொண்டு போகிறவர்கள் இல்லாத குறையேயன்றி வேறொன்று மில்லை. இப்படியிருக்கையில் ஒருநாளிரவில் இரண்டு திருடர்கள் உள்ளே நுழைந்து எல்லாரும் உறங்குவதைக் கண்டு, தமக்கு விருப்பமுள்ளளவும் அங்குள்ள பொருள்களை வாரிக் கட்டிக்கொண்டு போகும்போது, வாயிலில் இரண்டு காவற் சேவகர்கள் காணப்பட்டார்கள். அவர்களைக் கண்டவுடனே திருடர்கள், "இங்கே காவற்சேவகர்கள் இருக்கிறார்கள்'' என்று வேறொரு வாயிலின் வழியாய்ப் போக, அங்கு இரண்டு வில்வீரர்கள் தோன்றினார்கள். "இங்கும் காவலிருக்கிறது'' என்று வேறொரு வாயிலின் வழியாய்ப் போய் அங்கும் காவல் வீரரைக்கண்டு திரும்பி அந்த ராத்திரி முழுதும் மடத்தினுள்ளே மறைந்திருந்து காவல் வீரருக்கு அஞ்சி, தாம் எடுத்த பொருள்களையெல்லாம் மடத்திலே வைத்துவிட்டு வெளியே வர, அப்பொழுதும் காவல்வீரர் அதட்டக் கண்டு, திரும்பி உள்ளேயிருந்து, "எந்த வழியாற்போகலாமென்றாலும் சரிப்படவில்லையே, என்ன செய்வோம்'' என்று மனந்தளர்ந்திருக்கையில், இரவும் விடிந்தது. விடிந்தவுடனே, பாகவதரெல்லாரும் ராமநாம சங்கீர்த்தனம் செய்து கொண்டே யெழுந்திருந்தார்கள். துளசிதாசரும் எழுந்திருந்து பாகவதரிடையிலே வர, திருடர்கள் கண்டு அவர் திருவடியில் வீழ்ந்து வணங்க, தாசர் "நீங்கள் யார்?'' என்று வினவ, திருடர்கள், "சுவாமீ! வாயில்கள் கதவடையாமலிருந்ததனால் உள்ளே நுழைந்து வேண்டுமளவும் பொருள்களைக் கவர்ந்துபோகப் பார்த்தபோது, நாங்கள் வருங்காலத்தில் இல்லாத காவல் வீரர்களும் வில்வீரர்களும் வாயில்கள்தோறும் இருக்கக்கண்டு திரும்பிவந்து மடத்துக்குள்ளேயிருந்தோம்; பொழுதும் விடிந்தது; இதுதான் நடந்த செய்தி'' என்று சொல்லி வணங்கினார்கள். இவர்களைக் கண்டு உண்மையான செய்தியைத் தெரிந்துகொண்ட தாசரானவர், தமது சீடர் எல்லாரையும் அழைத்து, "இதுவரையில் நமது மடத்தின் வாயிலில் போவதும் வருவதுமாகிய செய்கைக்கு யாருந் தடைசெய்வாரில்லையே; இப்போது தடைசெய்த காவல்வீரர் யார்?'' என்று வினவ, சீடர்கள், "சுவாமீ! நமது வாயில் காவற்காரரை யாம் நியமிக்கவில்லை'' என்று சொல்ல, தாசர் "அந்தத் திருடர் ஒவ்வொரு வாயிலிலும் காவல் வீரரும், வில்வீரரும் இருந்ததாகச் சொல்லுகிறார்களே; நான்கு வாயில்களிலும் போய் விசாரியுங்கள்'' என்றுசொல்ல, சீடர்கள்போய் விசாரித்து வந்து, "அப்படிப்பட்ட சங்கதி ஒன்றுமில்லை'' என்று சொல்ல, தாசரும் சீடரும் ஏங்கியிருந்தார்கள். அப்போது, தாசரானவர், பக

வாலைக் குறித்து, "சுவாமீ! திருடர்வந்து களவு செய்தார்களென்று தேவரீர் திருத்தம்பியாரோடும் எழுந்தருளினால், தேவரீர் முற்காலத்தில் திருவாய்ப்பாடியில் வெண்ணெய் திருடினீர் என்று நினைக்கவுங் கூடுமோ? வேதமும் தீண்டுதற்கு நாணுகின்ற உம்முடைய பாதாரவிந்தத்தை இத்தலைவாயில் தீண்டப்பெற்றதோ? தலைவாயிலில் எழுந்தருளின தேவரீருடைய திருவடிக்கு யான் என்ன கைம்மாறு செய்வேன்" என்றுசொல்லி அவ்விடத்திலிருந்த திருடர்மேல் சிறிதும் கோபங்கொள்ளாமல் அந்தத் திருடர்களை நோக்கி, "உம்முடைய மனம் விரும்பின அளவு திரவியம் எடுத்துக்கொண்டு நாணமில்லாமல் போகலாம்" என்று சொல்லினார். அதைக்கேட்ட திருடர்கள் தாசரை நோக்கி, "சாதுக்களுக்குத் தலைவராயிருப்பவரே! உம்மால் பகவானுடைய திருவடியை யாம் காணப்பெற்றோம்; பரிசவேதியானது படுமிடந்தோறும் பொன்னாக்குதல்போலவும், சூரியன் தோன்றுமுன்னே இருள் விலகுவதுபோலவும், உமது திருவடியையடைதலால், எங்களுடைய தீவினையும் அஜ்ஞாநமும் நீங்கப்பெற்றோம்; இனி உமது திருவடித்தாமரையை வணங்கும்படி செய்வதே எமது வேண்டுகோள்" என்று சொன்னார்கள். சொல்லிப் பணிதலைக் கண்டு, "நீங்கள் பகவானைச் சேவிக்கும்படியான பாக்கியம் பெற்றிருக்கிறீர்கள்; ஆதலால் எப்போதும் உங்களோடு கூடியிருப்பதே என் துணிவு" என்று சொல்லி, அந்தத் திருடர்களை அவ்விடத்திலேயிருக்கச்செய்தார். இப்படி இவர் பாகவதகோஷ்டியோடுகூடி ஸ்ரீ ஹரிநாமசங்கீர்த்தநத்தாலே காலங்கழிக்கையில், ஒருநாள் ஒருவேதியன் இவரது படத்தின் வாயிலில் உட்கார்ந்து, "ஸ்ரீ ஜாநகீராமா" என்று உச்சரித்து, அங்குள்ளாரை நோக்கி, "நான் ப்ரஹ்மஹத்யை செய்தவன்; எனக்குக் கொஞ்சம் பிரசாதம் தரவேண்டும்" என்று கேட்க, அந்தச் சமயம் வேதியர் யாவரும் ஔபாசநம் முடித்து, க்ருஷ்ணார்ப்பணஞ் செய்து, போஜநஞ் செய்யப்போகிற சமயமா யிருந்ததனால் இவரது சத்தத்தைக் கேட்டவுடனே தாசரானவர் வெளியே வந்து, அங்கிருந்த வேதியனை அன்போடு தழுவிக் கைப்பற்றி, அழைத்துவந்து, தாம் உண்ணும் பந்தியில் உட்காரவைத்து, "வேதியரே! நீர் ஜாநகிராமா என்று உச்சரித்ததனால், நீர் செய்த ப்ரஹ்மஹத்யை முதலான பாவங்கள் வெந்து நீறாய்விட்டன; இந்த வேதியரோடிருந்து அமுது செய்வீராக" என்று சொல்ல, அந்தப் பந்தியிலிருந்த வேதியர் தாசரை நோக்கி, "இவரது வினைகள் தீர்ந்தது எப்படி?" என்று வினாவ, தாசர் பூர்வம் நடந்த

வேடன் கதை முதலானவைகளைச் சொல்ல, அவ்வேதியர், "எங்களுக்குக் கதைகள் அவசியமில்லை; இந்த க்ஷேத்ரத்தில் விசுவநாதஸ்வாமி சந்நிதியிலிருக்கிற கல்நந்தியானது இந்த வேதியன் முன்வைத்த அன்னத்தைப் புசிக்குமானால் நாங்கள் இவனோடிருந்து புசிப்போம்" என்றார்கள். அவர்கள் சொன்ன சொல்லைத் தாசர் கேட்டு, அவ்வேதியனுக்குப்படைத்த அன்னத்தைக்கல்நந்திக்கெதிரில்வைத்து, "விசுவநாதா! தேவரீர் ஆதியில் தேவர்களைக் காக்கும்பொருட்டு நஞ்சுண்ட வேகத்தை, ஸ்ரீராமநாமாம்ருதத்தால் தணிவித்தீர் என்பது உண்மையானால், ஸ்ரீராமநாமத்தை உச்சரித்த இந்த வேதியனது ப்ரஹ்மஹத்தையையா லுண்டான பாவம் நீங்கின தென்பதற்குச் சாக்ஷியாக இந்தக் கல்நந்தியானது இந்த அன்னத்தைப் புசிக்கச் செய்தருளவேண்டும்" என்று துதிக்க, அந்தக் கல்நந்தியானது, வாலையசைத்தெழுந்து, காதாட்டி, எதிரே நிற்போருடைய முகங்களைப் பார்த்து, சுவாசம் விட்டுக்கொண்டே, தாசர் தந்த அன்னத்தைப் புசித்துவிட்டு, முன்போலவே கல்நந்தியாகி நின்றது. இந்த அற்புதத்தைக்கண்ட வேதியர்யாவருங்களித்து, "ஸ்ரீஹரிதாசர்கொண்ட பக்தியின் பெருமை எம்மால் அளவிடப்படாது" என்று, துளசிதாசருடைய திருவடியை வணங்கி, ஜயஜயவென்று ஆநந்தக் கூத்தாடி, ஸ்ரீஹரியின் திருநாமத்தை நினைந்து, நக்ஷத்ர சமூஹத்தினிடையே பிரகாசிக்கிற பூர்ணசந்திரன்போலத் துளசிதாசர் விளங்கும்படி அவரைச் சூழ்ந்து துதித்து, அவரைப் பின்தொடர்ந்து மடத்துக்கு வந்து, முன்னே தம்மால் மறுக்கப்பட்ட வேதியனோடிருந்து அமுதுண்டு, சலநமில்லாமல் ஸ்ரீராமருடைய கல்யாண குணங்களாகிய அகாதமான கடலில் ஆடினார்கள். இப்படி இவர்கள் ஸ்ரீராமநாமாம்ருத பானஞ்செய்து பரமதிருப்தர்களாய் வாழ்ந்திருக்கையில், ஜயத்துபாலன் என்னும் பெயரையுடைய ஒரு வணிகனானவன், தனது ஆயுள் நிரம்பி மரணத்தை யடைந்தான். அவன் மனைவியானவள் அருந்ததிபோன்ற கற்புடையவளாதலால், தன் கணவனோடு உடன்கட்டையேற நினைந்து கங்காநதிக் கரையில் தீயைமூட்டி, அதிலிறங்கவேண்டுமென்று போகிறவள், அந்த வழியிலுள்ள துளசிதாசருடைய மடத்தைக்கண்டு, "இதில் வசிப்பவராகிய பெரியோரை வணங்கிச் செல்லுவோம்" என்று உள்ளே நுழைந்து, அங்குள்ள தாசரைச் சாஷ்டாங்கமாக வணங்க, துளசிதாசரும், அந்தக் கந்நிகையை நோக்கி, "உனக்கு அஷ்ட புத்ரர்கள் உண்டாவார்கள்; அந்தப் புத்ரபாக்கியத்தால், இவ்வுலகத்தில் சிரஞ்ஜீவியாய் மகிழ்ச்சியோடு

கூடி வாழக்கடவாய்" என்று ஆசீர்வதிக்க, அவள், தாசரை நோக்கி, "என் கணவரானவர் பரமபத மடைந்தார்; அவருடைய பிரிவுக்கு ஆற்றாதவளாய், அவரோடு உடன்கட்டை யேறப்போகிற நான், இந்த மடத்தைப் பார்த்து, இதில் வாசம் செய்வோர்களாகிய பெரியோர்களைக் கண்டு வணங்கிச் செல்லுவோமென்று நினைந்து உட்புகுந்து தேவரீருடைய திருவடியை வணங்கினேன்; எனக்குப் புதல்வருண்டாகும்படி ஆசீர்வதித்தருளினீர்; அது பொய்யாகுமா; இந்த ஆசீர்வாதத்தின் பயன் எப்படியாகுமோ அறிகிலேன்" என்று சொல்ல, தாசரானவர், "பெண்ணே! உன் கணவன் மரணமடைந்த செய்தி எனக்குத் தெரியாமல் இப்படி ஆசீர்வதித்தேன்; ஆனாலும் ஸ்ரீஹரியானவர் இந்த ஆசீர்வாதத்தைப் பலிக்கச் செய்தருளுவார்" என்று சொல்லக் கேட்ட கந்நிகையானவள், பின்னும் சாஷ்டாங்கமாய்ப் பணிந்து, தீ மூண்டெரியுமிடத்தில் பிரேதத்தைக் கண்டு அதனருகே வந்து நின்றவுடனே, பிரேதமாயிருந்த தன்கணவன் பிழைத்து எழுந்துநிற்கக் கண்டு மகிழ்ந்தாள். கூட வந்தவர்களும் பார்த்து அதிசயித்தார்கள். பிறகு கந்நிகையானவள், கணவன் கையைப் பிடித்தழைத்துக்கொண்டு மடத்திற்குப் போய்த் துளசிதாசருடைய திருவடியை வணங்க, அவரும், "ஸ்ரீஹரியானவர் க்ருபைசெய்தார்" என்று மிகவும் சந்தோஷித்து, இருவரையும் வாழ்த்தினர். அவ்வாழ்த்துதலைப் பெற்றுத் தம்பதிகள் தமது வீட்டுக்கு வந்து சுகமாய் வாழ்ந்திருக்குங் காலத்தில், துளசிதாசருடைய ஆசிர்வாதம் வீணாகாமல் அஷ்ட புத்ரரைப் பெற்றுச் சுகித்திருக்க, இந்தச் செய்தியை அவ்வூரிலுள்ளோர் யாவரும் அறிந்து, திருடவந்த கள்ளர் அகப்பட்டுக் கொண்டதும், கல் நந்தி சோறுண்டதும், பிணம் உயிர்பெற்றெழுந்ததும், இந்த விஷ்ணுபக்தருடைய ஆணையினாலேயன்றோ?" என்று புகழ்ந்திருந்தார்கள். இந்தச் செய்திகளையெல்லாம் சிலர் சொல்லக்கேட்ட ஹஸ்திநாபுரத்தை யாளுகின்ற அரசனாகிய அக்பர் என்பவன், தன் மந்திரியை நோக்கி, "அந்தப் பரமபாகவதராகிய துளசிதாசரை வரவழைக்கவேண்டும்" என்று நியமிக்க, மந்திரியும் அப்படியே சிவிகை, தேர், யானை முதலியவைகளோடு காசியைக் குறித்துப்போய்த் துளசிதாசருடைய மடத்தை யடைந்து, தாசரை வணங்கி, "சுவாமீ! எங்கள் அரசன் தேவரீருடைய பெருமையைக் கேட்டு, தேவரீரைத் தேர்மேலேற்றிக்கொண்டு வரும்படி எனக்குக் கட்டளையிட்டான்; ஆதலால், தேவரீர் எழுந்தருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, துளசிதாசர், "எமக்கு அரசனிடத்

னுக்குப்போகவேண்டியகாரியமொன்றுமில்லையாயினும், அவனை வைஷ்ணவனுக்கலாமென்று நினைத்து, அந்த மந்திரியோடு தேர்மேலேரி, ஹஸ்திநாபுரத்தை யடைந்து, அரசன் எதிர்கொண்டு வந்து அழைத்துப்போகப் போய், அவனிட்ட சிங்காசநத்தில் எழுந்தருளினர். இவருக்கு ஷோடசோபசாரங்களும் செய்து கைகூப்பி வணங்கித் தோத்திரஞ்செய்து, "ஐயரே! நீர் செய்த அற்புதங்களைக் கேட்டு இவ்வுலக முழுதும் புகழ்கின்றது; ஆகையால் நான் உம்மையன்றி வேறொரு தெய்வமிருப்பதாக மதித்திலேன்; ஆனால், இந்த அற்புதங்களை எனக்கெதிரே செய்யவேண்டும்" என்று சொல்ல, தாசரானவர், "எனக்கொரு சக்தியுமில்லை; ஸ்ரீராமநாமமே பல அற்புதங்களையும் செய்யும்" என்றருளிச்செய்ய, அரசனானவன், "ஸ்ரீராமமூர்த்தியைக் காட்டாமற்போனீரானல் உம்மை விடமாட்டேன்" என்று சொல்லி, அருகிலிருப்பவராகிய சிலரை யழைத்து, "இந்தத்தாசரை விடாதேயுங்கள்" என்று கட்டளையிட்டு, மேல் மாளிகையை யடைந்தான். பிறகு தாசரை அரசன் ஆணையின்படி காவல் வைத்தார்கள். அப்போது தாசரானவர் ஸ்ரீ ஹரிபக்தியிற் சிறந்தவராகிய ஸ்ரீ ஆஞ்சநேயரை நினைத்துத் தோத்திரம்பண்ண, மாருதியானவர் இவருக்கு ப்ரத்யக்ஷமாகி நின்றார். அவரைத் தாசர் நோக்கி, "ஐயனே! உன்னிடத்தில் அன்பில்லாதவனாகிய அரசன், ஸ்ரீராமபிரானைக் காட்டுவாயாக" என்று என்னைக் காவற்படுத்தி மிகவும் துன்பம் விளைத்தான்; ஆகையால், இப்பொழுதே என் துன்பத்தை யொழித்தருள வேண்டும்" என்று பிரார்த்திக்க, மாருதியானவர் தமதிடத்துக்கு வந்து, தமது சேனையை நினைத்த மாத்திரத்தில், பதினாயிரம் வாநரவீரர் அந்தக்ஷணமேவந்துநிற்க, மாருதியானவர் அவர்களை நோக்கி, "இந்த வூரைச் சற்றுநேரத்தில் அதம் பண்ணுங்கள்" என்று கட்டளையிட, உடனே அவர்களும் கட்டளையிட்டதே போதுமென்று மரங்களாலும் கற்களாலும் அடித்தும் எறிந்தும் வீடுகளைப் பொடிசெய்து, அரசன் மாளிகையைப் பேர்த்துக் கடலிலெறிந்து, வீதிகளில் நகரஜநங்கள் சஞ்சரிக்க இடமில்லாமல் கல்லாலும், மரத்தாலும் வழியடைத்து, ஊராரையும் பலவகையாய்க் கொல்ல, ஊர்முழுதும் கோவென்றலறியழுங் கூக்குரல் அதிகரிக்க, ஸ்திரீ புருஷர்கள் யாவரும் அரசனிடத்திற்போய் நிகழ்ந்த செய்தியைச் சொல்லிப் புலம்பினர்கள். அங்கும் வாநரர்கள் வந்து அநர்த்தம் செய்வதைக் கண்டு, அரசன் முதலான யாவரும் கலங்குங் காலத்தில், தாசரை அழைத்துக்கொண்டு வந்தவன் முதலான ராஜபரிசாரகர்கள் அரசனைநோக்கி,

"ஐயனே! இங்கே வந்து தங்கியிருக்கிற சாதுவான தாசருக்குத் தேவரீர் செய்த துன்பத்தினால் இவ்வாறு நேரிட்டதுபோலும்" என்று சொல்ல, அரசனும் "அப்படியிருக்கலாம்" என்று ஆலோசித்து, "இன்னும் சிறிது நேரத்தில், இந்த வானரப்படைகள் இவ்வூரைத் தலைகீழாகச்செய்வதற்குச்சந்தேகமில்லை!" என்றுசொல்லி, "காசியில் வாழ்வோராகிய தாசரை இங்கே வரவழைத்தது நமக்கு அடாதகாரியம்" என்று தன்னை நொந்துகொண்டு, மனந்தளர்ந்து, உடல்நடுங்கி, அச்சத்தால் நாவுலர்ந்து, மெய்த்தவத்தை யுடையவராகிய துளசிதாசரைப் பிரார்த்திக்கும்பொருட்டு வந்தான்; வந்து "ஆதிகாலத்தில் துரியோதநன் துரௌபதிக்குச் செய்த தீமையும், துர்வாசரிஷி அம்பரீஷராஜனுக்குச் செய்த தீமையும், ஸ்ரீஹரி பஜநத்தாலல்லவோ நீங்கினது" என்ன அவர்களுடைய புகழையெடுத்துப் பேசி, "அத்தன்மைபோலவே அடியேன் செய்ததீமையையும்பொறுத்தருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, அவர் மாருதியைப் பிரார்த்திக்க, அவர் வானரவீரர்களை நியமிக்க, வானரவீரர்கள் மறைந்தார்கள். மறைந்ததைப் பார்த்து வேந்தனனவன் பயபக்தியோடு வணங்கி, அந்த நகரில் வாழ்வோராகிய ஜடமூடர் என்பவரைத் தொண்டராக்கி, ஒரு வருஷகாலம் அவ்விடத்தில் தங்கியிருந்தார். பிறகு உச்சயினிபுரத்தில் போய்த் தங்கியிருக்குங்காலத்தில், அங்கே ஒரு தநவானாகிய சௌதாகிரியென்னும் வணிகன் இருந்தான். அவனுக்கு ஒரு மகளிருந்தாள். அவள் அதிரூபவதியாய் வளரும் நாளில், தாய் தந்தையர் அவளுக்குத் தகுந்த கணவனைத் தேடி மணம்புரியத் தம் உறவினரோடு உசாவி, அந்தப் பெண்ணினுருவத்தை ஒரு படத்திலெழுதி, அதைத் தகுதியானவரிடத்திற் கொடுத்து, "நமது குலத்துக்கேற்ற புருஷன் எந்தத்தேசத்தி லிருந்தாலும், உமது மனதுக்குச் சம்மதியானால் கொண்டுவாருங்கள்" என்று சொல்லியனுப்பினான். அனுப்பப்பட்டவர்கள் ஆறுமாசகாலம் அநேகதேசங்களில் தேடியும் தகுதியாகிய கணவன் கிடைக்காமல், "எமது வணிகனுக்குச் சௌந்தர்யவதியாகிய ஒரு பெண் பிறந்ததனால் எமக்கு இந்தத்துன்பம் நேரிட்டது" என்று மனஞ்சலித்து, பரணபூரில் வாசம் செய்வோனாகிய ஒரு சௌதாகிரிக்கு மக்களாகப் பிறந்தவர்களுள்ளே, ஒரு கண்ணில்லாத ஒரு மகனும் ஒரு மகளும் பிறந்திருந்தார்கள். அப்போது மணமகனைத் தேடிவந்தவர்கள் அந்த வணிகன் வீட்டையடைந்து, அவன் மக்களுடைய குணமும் நல்லஅழகும் பார்த்து, அவன் பார்க்கத் தான் கொண்டுவந்த படத்தை அவன் கையில் கொடுக்க, அழகு

மிருந்த அந்தப் படத்தை நோக்கி, அதில் எழுதப்பட்டிருந்த பெண்ணினது அழகைப் பார்த்து மதித்து, "மணமகனைத் தேடி வந்த பெரியோர்களே! என்மகனுக் கொருகண்ணில்லை; அவனுக்குப் பெண் கொடுக்க உங்கள் வணிகனுக்குச் சம்மதியாகுமா; விசாரித்து அபிப்பிராயம் சொல்லுங்கள்" என்று சொல்ல, அவர்கள் வணிகனை நோக்கி, "உமது பெண்ணுக்கு ஆணுடை யுடுத்து அவ் வூருக்கு அழைத்துக்கொண்டுபோய் அங்குள்ளவர்களுக்குக் காட்டி அவர்கள் சம்மதித்து மணஞ்செய்கிற காலத்தில் ஆணும் பெண்ணுமாக நெருங்கிக் கூடுங்கூட்டத்தில், ஒருவர்க்கும் தெரியாமல் உமது புதல்வனைக்கொண்டு மங்கலியம் பூட்டுவிக்கிறோம்" என்று சொல்ல, அப்படியே சௌதாமிநி சம்மதித்துத் தன்மகளை ஆணுடை யுடுக்கச் செய்து, சுற்றத்தாருடன் உச்சயிநிபுரத்துக்குப் போய் பெண்ணினுடைய சுற்றத்தாரால் அமைக்கப்பட்டிருந்த விடுதியில் இறங்கியிருக்க, பெண்ணின் தாய் தந்தையரும் சுற்றத்தாரும் அங்கு வந்து மணமகனது அழகைப் பார்த்து மனமகிழ்ந்து, "நமது பெண்ணுக்குத் தகுந்த கணவன் கிடைத்தான்" என்று மணத்துக்கு வேண்டும் பொருள்கள் யாவும் சேகரித்து, சுப முகூர்த்தம் பார்த்து, மங்கலியம் பூட்டுதற்குரிய மங்கல ஹோரை வந்தவுடனே, பலவகையாகிய வாத்தியங்கள் முழங்கவும், சுமங்கலிகள் மங்கலவாழ்த்துப் பாடவும், நன்மையாகிய வேதியரும், சுற்றத்தாரும், அவ்வூரிலுள்ள மற்றையோரும் அந்த மணப்பந்தலில் வந்து நெருங்கியிருக்க, மாப்பிள்ளையின் தந்தையானவன் அந்தக்கூட்டத்தில் தன் புத்திரனால் தாலிகட்டுவிக்கக்கூடாமல் "என் செய்வோம்" என்று சும்மாவிருந்தான். அப்படியிருக்க, முன்வந்த மாப்பிள்ளையை யழைத்துப் போனவர்கள் வேடங்கொண்ட மாப்பிள்ளையைக்கொண்டு மங்கலநாண் தரிப்பித்தார்கள். அதன் பிறகு செய்யவேண்டிய சடங்குகள் யாவும் குறைவறச்செய்து மணமுடிவு பெற்றபின்பு மங்கலஸ்நாநம் செய்விக்கும்போது, வேஷமாப்பிள்ளையைப் பெற்றவன், "தனது வஞ்சக வியாபாரம் வெளிப்படும்" என்று பயந்து பெண் வீட்டாரை நோக்கி, "என் புதல்வனுக்குச் சரீர சௌக்யமில்லை யாகையால் இன்று நிறுத்தி நாளையத்தினம் மங்களஸ்நாநம் செய்விக்கலாம்" என்று சொல்ல, பெண்வீட்டா ரெல்லாரும் "அப்படியே யாகட்டும்" என்று இசைந்திருந்தார்கள். இதையறிந்து, மாப்பிள்ளைவீட்டா ரெல்லாரும் ஒருவருக்கும் தெரியாமல் ஒளித்துப் போய்விட்டவுடனே, பெண்வீட்டார், வந்த மாப்பிள்ளை வீட்டாரைக் காணாதவர்களாய், "மாப்

பிள்ளைவீட்டார் ஒளித்துக்கொண்டு போவதற்குக் காரணம் யாது?" என்று ஆலோசித்து, ஒன்றும் தோன்றாமல், வேஷம் பூண்பித்து அழைத்துக்கொண்டு வந்த மாப்பிள்ளைக்கு ஸ்நாநம் செய்விப்பதற்காக, பூண்டிருந்த ஆடை யாபரணங்களைக் கழற்றிப் பெண்ணென்றறிந்து நாணமடைந்து மிகவும் துக்கித்து, "நீ யவ்வநப் பெண்ணாயிருக்க, உன்னை மணமகனாக அலங்கரித்து அழைத்துக்கொண்டுவர நீயும் சம்மதித்து இங்கு வந்து, எம்மை யெல்லாரும் பரிஹஸித்து நகைக்கும்படி அவமாநம் செய்யலாமா" என்று கேட்க, அவள் பேசாமல் மௌநமாயிருக்கக்கண்டு, எல்லாரும் அவளை யடித்துத் துன்பப்படுத்தி, பஹிரங்கமாகக் கொண்டுவந்து கழுதைமேலேற்றி ராஜக்ருஹத்தைப் பிரதக்ஷிணம் செய்வித்து, நெடிய முனையையுடைய கழுவிலேற்றத் துணிந்து, அரசனது கட்டளையை மேற்கொண்டு விரைந்து வரும்போது, அந்தப் பெண்ணானவள், "என் தந்தை யிப்படிச் செய்தானே" என்றும், "நடுவுநிலைமையையுடைய தெய்வமே" என்றும் அழுதுகொண்டு வரும்போது, அந்த வழியில் துளசிதாசர் வரக் கண்டு, அவர் சிறந்த பாகவதர் என்று தெரிந்து, "இவர் திருவடியை வணங்கினால் நமது துன்பமுழுதும் நீங்குவார்" என்று, விரைந்து ஆவ்விடத்தில் இறங்கி அந்தத் தாசருடைய திருவடியை வணங்க, அவர் இவளை மாப்பிள்ளையென்றெண்ணி, "நீயும் உன் மனைவியுமாக நெடுநாள் வாழ்ந்திருக்கக்கடவீர்கள்" என்று வாழ்த்த, அவளோடு கூடி வந்தவரெல்லாரும் மிகவும் நகைக்க, "இவர்கள் நகைப்பதற்குக் காரணம் என்ன" என்று தாசர் வினவ, அந்தப் பெண்ணானவள் தன் வரலாற்றை யெல்லாம் சொல்லி, தான் பெண்ணென்பதை வெளிப்படுத்தினாள். வெளிப்படுத்தித் தாசரை வணங்கின மாத்திரத்தில், மெய்த்தவத்தினராகிய தாசரானவர் "இது என்ன புதுமையாயிருக்கிறது" என்று ஆலோசித்து, "பெண்ணே! நீ அஞ்சவேண்டியதில்லை; நான் சொன்னபடியே விட்டலன் உன்னை ஆண்மகனாகவே செய்வான்" என்று சொல்ல, தக்ஷணமே அந்தப் பெண்ணானவள் ஆணுருவம்கொண்டு விளங்கக் கண்டோரெல்லோரும் அதிசயித்தார்கள். இந்தப் புதுமையை அந்த நகர்க்கு அரசனானவன் கேள்விப்பட்டு, "தாசர் சரித்திரம் மிகவும் நன்றாயிருக்கிறது" என்று வந்து அவர் திருவடியை வணங்கிப் புகழ்ந்து, அவ்விதமாகப் பெண்ணாயிருந்து பிறகு ஆண்மகனாகிய மாப்பிள்ளையை அழைத்துப் போய், தன் அரண்மனையில் கலியாணப் பெண்ணை முன்போலவே மணமுடித்த பிறகு, நல்லோர் யாவரும்,

அவ்வேந்தன் செய்த பூஜையை யேற்று, அன்போடு கோகுலத்தை யடைந்து, யமுநாநதியில் மூழ்கி, ஸ்ரீ கண்ணபிரானைச் சேவித்து, பிருந்தாவனத்துக்கு வந்து, சார்ங்கபாணி ஸ்வாமியைத் தரிசித்து, ஒருமாதம் அங்கு வாசம்செய்து, மதுராபுரிக்கு வந்து, யமுனையில் மூழ்கி, அங்குள்ள ஸ்ரீ கண்ணபிரானை வணங்கி அவ்விடத்தில் தங்கியிருந்தார். இருந்தவர், நான்கு யுகங்களிலும் அடியார் புகழையே பேசுகின்ற புண்ணியத்தால், புண்யாத்மாவாயிருக்கிற "பிரியர்" என்னுந் தாசர் வாழ்கிற வீட்டில் வந்து, "நீர் விரும்பிச்செய்யும் புத்தகம் வேண்டும்" என்று கேட்க, இவர் வைபவம் அதில் இல்லாமையால் துளசிமாலையைத் தரித்த ஸ்ரீ கண்ணபிரான், ஒருவருக்குந் தெரியாமல் வந்து, அதுவும் செய்திருப்பதாக அமைத்துவைத்தார். புதிதாய்ப் புனைந்துவைத்த புத்தகத்தைக் கொண்டுபோய், ஆலயத்தில் ஓதி முடித்து, "நான் அறிந்து எழுதாததை ஆலோசித்து, ஸ்ரீ ராமபிரான் இன்று தானே யெழுதினதைப் பாருங்கள்" என்று சொல்ல, பெரியோர்கள் அதை ஆராய்ந்து பார்த்து, "மேல், நாம் சொல்லத் தகுந்ததுண்டோ" என்று மெச்சுகின்றவர்களானார்கள், ஸ்ரீராமபிரான் எழுதத் தகுந்த சிறப்புப்பெற்ற நாதரைத் தரிசிப்போரும், இவரது வைபவத்தை அலங்கரித்துத் தோத்திரஞ் செய்வோரும், இவ்வுலகத்தில் சகல பாக்யங்களையும் பெற்று வாழ்ந்து, பிறகு ஸ்ரீ ஹரிபக்தியைப்பெற்றுப் பகவத்குணாநுபவமாகிய இன்பத்தை அநுபவித்து, சரீர நீக்கத்தில் எக்காலத்தும் அழியாததாகிய பரம பதத்தையும் அடைவார்கள்" என்று சொல்லி, மேலே நாமதேவர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினார்.

துளசிதாசர் சரித்திரம் முற்றிற்று.

நான்காவது

நாமதேவர் சரித்திரம்.

ஸ்ரீ லக்ஷ்மீநாதராகிய பகவான் உத்தவரையும், சுகரையும் நோக்கி, "நீங்கள் இருவரும் பூலோகத்தில், மாநுஷ புத்ரர்களாகப் பிறக்கக்கடவீர்கள்" என்று நியமிக்க, அவர்கள் பகவானை நோக்கி, "க்ஷீராப்திநாதனே! உமது திருவுளப்படியே செய்கிறோம்; எங்களை அயோநிஜர்களாய்ப் பிறக்கும்படி அருள்செய்ய வேண்டும்" என்று பிரார்த்திக்க, கருணைக்கடலாகிய பகவானும் அவர்களைப் பாலகர்க

ளாக்கி, கிளிஞ்சிலினுள்ளே யமைத்து, மேகமானது கங்காநதியி லும் பீமாநதியிலும் விளங்குவதாக மழைத்துளிகளுடன் விழுவிக்க நியமித்தார். அப்போது பீமாநதியில் தோன்றி, மேன்மேலும் வளர் கின்ற பெருக்கிலே மிதந்து கிளிஞ்சில்கள் வர, அவற்றினுள்ளே வாழ்கின்ற மெய்யன்பர், விட்டலனுடைய நாமஸ்மரணை செய்து கொண்டு சந்தோஷ மிகுந்திருந்தார்கள். இப்படியிருக்கையில், ஞான த்தினால் உயர்ந்து, பண்டரிபுரத்தில் குணாயி என்கிற மனைவியொடு கூடி வாழ்கின்ற தாமாஜிச் செட்டியானவன் தினந்தோறும் பீமா நதியில் மூழ்கி, ஸ்ரீ ஹரியாகிய விட்டலனைச் சேவித்துவருகிற நியதி யில் மாறுபடாமல், இல்லற நடத்தி வருநாளில், ஒருநாள் அவன் மனைவி, கணவனைநோக்கி ஒரு வார்த்தை சொல்லுகிறாள்; என்னென் றால், "உயிர்த்துணைவரே! நமக்குப் புத்திரலாபம் உண்டாகவேண்டு மென்று விட்டலனை வணங்கி வரம் பெறக்கடவீர்" என்று சொல்ல, செட்டியானவன் மனைவியை நோக்கி, "வயதுமுதிர்ந்த வுன் கர்ப்பத் தில் இனிப்பிள்ளை பிறக்குமோ; உனக்குச் சற்றாயினும் அறிவில்லை" என்று சொல்ல, மனைவியானவள் கணவனைநோக்கி, "சிருஷ்டிகர்த்தா வாகிய ப்ரஹ்மதேவனும் ஒருகாலத்தில் கன்றொடு காளையரை மறை க்கும்பொருட்டுச் சேயாகவும் கன்றாகவும் தோன்றினான்; இந்தச் செய்தியை நீர் அறியாமல் பேசுகின்றீர்" என்று சொன்னபிறகு, தாமாஜியானவன், "திருமாலின் கோயிலுக்குப்போய், உன் வேண்டு கோளைப் பகவானுக்கு விண்ணப்பஞ் செய்கிறேன்; அவர் அருள் செய்வாராயின் பெற்றுக்கொள்வாயாக" என்று கோயிலுக்குப் போய், பகவானை வணங்கித் தன் மனைவியின் கருத்தை நிறைவேற்ற வேண்டும் என்று பிரார்த்திக்க, பகவானானவர் அந்தக்ஷணமே நித் திரை வரும்படி பண்ணி, அவர் கனவிலெழுந்தருளி, "பீமாநதியில் கிளிஞ்சில் வயிற்றில் அமைந்திருக்கிற குழந்தையை நாளைக்காலையில் போய் எடுத்துக்கொள்ளலாம்" என்று அருளிச்செய்ய, செட்டியார் தமது மனைவியிடத்தில் வந்து இந்தச் செய்தியைச் சொல்லி, மறு நாள் உதயத்தில் நதிக்குச்சென்று மூழ்கும்போது, கிளிஞ்சில் மிதக் கக்கண்டு, அதை யெடுத்துவந்து திறந்து, அதற்குள்ளே குழந்தை யிருப்பதைப் பார்த்து, அந்தக் குழந்தையை அன்போடு கொண்டு வந்து மனைவியிடத்தில் கொடுக்க, அவள் விருப்பத்துடன் வாங்கின வுடனே, ஸ்தனங்களில் பால்மிகுதியாகச் சுரக்கவே, அந்தக் குழந்தை க்கு மனமகிழ்ச்சியோடு ஊட்டினாள். குழந்தைகள் இல்லாத காலத் திலே புதல்வனைத் தந்து, ஊட்டப்பாலும் தந்தருள்செய்த பகவா

னுடைய கருணையை மிகவும் கொண்டாடி, அந்தக்குழந்தைக்கு விட்டலனுடைய பெயர் விளங்கும்படி நாமதேவர் என்று பெயரிட்டு, நாளொருவண்ணம் பொழுதொருமேனியாய் வளர்த்துவரும் நாளில் ஒருநாள் தந்தையாகிய செட்டியார் சந்தைக்குப் போயிருந்ததனால் தாயானவள் இந்தப் புதல்வரை நோக்கி, "இந்தப் பிரசாதத்தைக் கோயிலுக்குக் கொண்டுபோய்ப் பகவானாகிய விட்டலனுக்கு நிவேதித்துக் கொண்டுவா" என்றனுப்ப, நாமதேவரானவர் அப்படியே கோயிலுக்குப்போய்ப் பகவானுக்குத் திருமஞ்சனம் சமர்ப்பித்து, பீதாம்பரம் உடுத்தி, புஷ்பமாலை சூட்டி, திருவாபரணங்கள் சமர்ப்பித்து, தூபதீபாராதனம் செய்து, மற்றுமுள்ள உபசாரங்கள் யாவும் செய்து, வணங்கிநின்று, "இந்தப் பிரசாதத்தை அமுது செய்தருளவேண்டும்" என்று விட்டலபகவானைப் பிரார்த்தித்து, அர்ச்சாரூபமாயெழுந்தருளியிருக்கிற பகவானானவர் அமுது செய்தருளாதிருக்கக்கண்டு, "என் தந்தையானவர் தினந்தோறும் கொண்டுவந்து நிவேதிக்கிற பிரசாதத்தை அமுதுசெய்கிற தேவரீர், இன்று அவர் சந்தைக்குப் போனதனால் அடியேன் கொண்டுவந்த பிரசாதத்தை, அமுது செய்யாமலிருப்பதை நோக்கினால் என்னிடத்தில் ஏதாயினும் குற்றமிருக்கலாமென்று தோன்றுகின்றது; அடியேன் என் செய்வேன்" என்று மனம் வருந்தி, அர்ச்சாவிக்ரஹங்கள் அமுது செய்யுமென்கிற எண்ணமுள்ளவராதலால், மறுபடியும், "சுவாமீ! அடியேன் இப்படி பிரார்த்தித்தும் தேவரீர் அமுது செய்யாதிருக்கிறீர்; இந்தச் செய்தியை என் தாயினிடத்தில் சொல்லுவேனானால், "நீயென்ன குற்றஞ் செய்தாய்" என்று என்னை அடிப்பாளே; இதற்கு அடியேன் என்செய்வேன்; என்னபிழை செய்திருந்தாலும் பொறுத்துக்கொண்டு இந்தப் பிரசாதத்தை அமுது செய்தருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, விட்டலப்பெருமான் திருவுளம் இரங்கி, நிஜரூபமாய் எதிரே எழுந்தருளி, இவர் அழுதகண்ணீரைத் தமது திருக்கரத்தால் துடைத்து, முகவாட்டத்தை நீக்கி, இவரைத் தழுவிக்கொள்ள, இவர் பிரசாதத்தையெதிரே வைக்க, பெருமானும் திருவுளமகிழ்ச்சியோடு அமுதுசெய்து, "இந்தச்செய்தியை ஒருவரிடத்திலும் சொல்லவேண்டாம்" என்று நியமிக்க, நாமதேவரும் பெருமானை வணங்கி விடைபெற்று வீட்டுக்கு வந்தவுடனே, தாயானவள் இவர் வெறுங்கையோடு வந்ததை நோக்கி, "அப்பா! பிரசாதத்தை யாருக்குக் கொடுத்துவிட்டு வந்தாய்" என்று கேட்க, "ஒருவருக்கும் கொடுக்கவில்லை; விட்டலப்பெருமானே அமுது செய்தார்" என்ற

னர். இதைக்கேட்ட தாயானவள் அதிசயித்து, "செட்டியார் வந்த பிறகு உண்மையை யறியலாம்" என்றிருந்து, வந்தவுடனே அறிவிக்க, அவரும் ஆச்சரியமடைந்து, "இதன் உண்மையை அறிய வேண்டும்" என்று மனத்தில் யோசித்து, நாமதேவரை நோக்கி, "நமது பிரசாதத்தை நேற்று அமுதுசெய்த விட்டலப்பெருமான் இன்றும் அப்படி செய்யக்காட்டு" என்று, பிரசாதத்தை யேந்திக் கொண்டு கோயிலில்போய், தாம் பக்கத்திலே நின்று, நாமதேவரை நோக்கி, "நீ போ யிந்தப்பிரசாதத்தை நிவேதிக்கவேண்டும்" என்று கையிற்கொடுக்க, இவர் பகவானுக்குச் செய்யவேண்டிய உபசாரங்கள் யாவும் செய்து முடிந்தவுடனே, "அமுது செய்தருளவேண்டும்" என்று பிரசாதத்தைக் காட்ட, விட்டலப்பெருமான் சந்தோஷித்து, "உன் தந்தைக்குத் தெரியும்படி நான் வெளியாகமாட்டேன்" என்றருளிச்செய்ய, நாமதேவர், பின்னும் கைகூப்பி, "நீ யோ கபடன், என் தந்தைக்கு உன்னுருவை விளங்கக்காட்டி இந்தப் பிரசாதத்தையும் அமுது செய்யாவிடில், உன்னை விடமாட்டேன்" என்றார். இதைக் கேட்ட பகவானனவர் மகிழ்ந்து நகைத்து, அன்போடு பிரசாதத்தை அமுதுசெய்து, விடைகொடுக்க, தாமாஜிச் செட்டியார் அதிசயித்து, இவரிடத்தில் அன்பை பெருகச்செய்து, "நீ எனக்குப் புதல்வனாக வந்தமையால் பகவானை ப்ரத்யக்ஷமாகக் கண்டேன், போவோம் வா" என்றழைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்து, நடந்த சங்கதிகள் எல்லாம் மனைவிக்குச் சொல்ல, மனைவியானவள் கணவனை நோக்கி, "இந்தச் சிறுவனை நாம் தேவனென்று நினைக்கவேண்டுமே யன்றிப் புதல்வனென்று நினைக்கலாகாது; இவன் அயோநிஜன்; ஆகையால் பகவானுக்கு மெய்யன்பனாவான்" என்று தினந்தோறும் பூஜித்து வந்து தகுந்த பருவம் வாய்த்தவுடனே மணஞ் செய்வித்துச் சிலநாளின் பின்னே இவர்க்கு ஒரு புதல்வன் மிகுந்த அழகுள்ளவனாய்த் தோன்ற, அச்சிறுவனைப் பார்த்து மகிழ்ந்து, சௌளஞ் செய்யவேண்டிய காலத்தில் செய்ய, அப்பொழுது நரசிங்கப்பெருமான் வரிசைகொண்டுவரக் கண்டு, பேரனுக்குச் சிறந்த பெயரிட வேண்டுமென்று சொல்ல, நாராயணன் என்று பெயரிட்டான். பின்பு, மருமகளை மகனோடு சேர்த்து, செய்யவேண்டியவற்றை விதிப்படியே செய்து, பகவான் அருள்செய்த ஆடை ஆபரணாதிகளையும் தரிப்பித்து, நரசிங்கன் போய்விட, குணையியானவள், மகனை நோக்கி, "ஐயனே! உன் தாய்தந்தையராகிய நாங்கள் இருவரும் மூப்புப்பருவத்தை

யடைந்தோம்; நீயோ சதாகாலமும் ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தநம் செய்துகொண்டு விட்டலப்பெருமானையேஆசிரயித்திருக்கிறாய்; நாங்கள் உன் மனைவி மகன் என்பவர்களுடன் வறுமையால் வருந்துவதைப் பார்த்து, அயலாரெல்லாரும் நகைக்கிறார்களே; என் செய்வோம்; சொல்" என்று கேட்க, நாவதேவருக்கு அநுதாப முண்டாகி, கோயிலுக்குப்போய் அங்கே எழுந்தருளியிருக்கிற பகவானை நோக்கி, "பாண்டுரங்கா! ஏன் என்னைக் குடும்பத்தி லிருத்தினாய்; உனக்கு இரக்கமில்லையா; எங்கள் துயரத்தை அறிந்திலையோ" என்று சொல்லி, மனம் கலங்கிக் கண்ணீர் வடித்துக்கொண்டு நின்றார். இவரை ஸ்ரீ லக்ஷ்மீநாதன் நோக்கி, "இன்று உனக்குத் துன்ப முண்டாக்கினவர் யார்?" என்று கேட்டு, கண்ணீர் துடைத்து மார்போடு அணைத்துக்கொள்ள, நாமதேவர் சொல்லுகின்றார்:—"வேத ப்ரதிபாத்யனே! உன் திருவடியை என் மனமானது மறவாதிருப்பதைக் குறித்து, என் தாயானவள் குறைகூறுகின்றாள்; அந்தக்குறையைஉன் திருவருளைக்கொண்டு களைந்தருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, பகவானனவர் கேட்டு, "நாமதேவா! நீ என் பக்கத்தில் அமர்ந்திரு; இருப்பாயானால், பவ வினையானது இனி உன்னைத் தொடராது" என்றருள்செய்ய, "பகவானுடைய திருவடியைத் தொழுதுகொண்டு இங்கே யிருப்பது நன்மை" என்று நினைத்திருப்பவராகிய நாமதேவர், கருணாநிதியாகிய பகவானுடைய கிருபை பெருகும்படி வணங்கி, "நிர்மலனே! உனது அருள்வடிவம் என் மனத்தில் விளங்கும்படி செய்வதுமல்லாமல், நான் எந்தப் பிறவி பிறந்தாலும் உன் பெயரை மறவாமல் உச்சரிக்கும்படி எனக்குக் கிருபை செய்ய வேண்டும்" என்று சொன்னவுடனே, அன்பர்க்கு அருள் செய்பவனாகிய விட்டலப்பெருமான், திருமகளை நோக்கி, "நீ இவனது நிலைமையை நன்றாயறிந்துகொள்வாயாக" என்றருள் செய்தவுடனே, பிராட்டியானவள் நாமதேவரை நோக்கி, "உன் வீட்டின் நிலைமையைச் சொல்" என்று கேட்க, இவர், "எம்பிராட்டி! என் வீட்டினது நிலைமையை, எல்லாம் அறிந்த நீ அறிந்திலையோ; என்னைக் கேட்க வேண்டுமோ" என்று சொல்ல, இவர் சொன்ன சொல்லை எம்பிராட்டி கேட்டு, பின்னும் நகைத்து, "நீ இவ்விடத்தே தங்கியிருப்பாயானால், மனைவி மக்கள் தாய் தந்தையர் ஆகிய எல்லாரும் வெறுப்படைந்து பலவகையாய் நிந்திப்பார்கள்" என்று சொல்ல, பண்டரிபுரத்திறைவனாகிய விட்டலப்பெருமான் நகைத்து, கருடவாஹநாரூடராய் நாமதேவர் மனைக்கு எழுந்தருளத்திருவுளங்கொண்

டும் அவர்மனை முழுதும் பொன்மணி முதலியவை நிறைந்திருக்கத் திருவுளங் கொண்டும், வருகிற பகவானனவர், "நாமதேவர் வீடு எங்கே?" என்று வினவ, எதிர் வருவோர், அடையாளஞ் சொல்ல, வாஹநத்தை விரைவாய்ச் செலுத்தி, இவர் மனைக்கு எழுந்தருளி, அங்குள்ள நாமதேவர் மனைவியை நோக்கி, "நீர் யார்? நான் புதியவன்; ஆசநம் கொடும்" என்று கேட்க, மனைவியானவள், "இங்கே பெரியோர்களில்லை, நீர் திரும்பிப் போய்விடும்" என்று சொல்ல, பின்னும் பகவானனவர், அவளை நோக்கி, "நான், நாமதேவனுக்கு உறவினன்; அந்தநாமதேவனுக்குவேண்டிய பொருள்களைக் கொண்டு வந்தேன்" என்று சொன்னவுடனே, முன்னே "போ" என்று சொன்னவள் ஆசநமிட்டு "இதில் எழுந்தருளும்" என்று சொன்னாள். அப்போது பகவானனவர் அவளை நோக்கி, "நான் புதியனென்று சொன்னவுடனே போவென்று சொன்ன நீ, இப்போது பொருள் கொண்டு வந்தேனென்று சொன்னவுடனே, ஆசநம் கொடுத்து உபசரித்தனை; இதுநிற்க; நாமதேவன், என்னிடத்தில் அன்புள்ளவன்; பொருளின்மேல் விருப்ப மில்லாதவன்; ஹரிபஜனையில் விருப்பமுள்ளவன்; ஆகையால் அவனை நீ வருத்தவேண்டாம்; இது அவன் செல்வமாகும்" என்று பொருட் பொதியைக் கொடுத்து இது செலவாகிவிட்டால் இன்னமும் கொடுப்பேன்" என்று சொல்லுதலும், அவள் சொல்லுகிறாள்:—"ஐயனே! உன் மனதில் கோபமுண்டாகும்படி முன்னே சொன்ன கடுஞ்சொற்களைப் பொறுக்கவேண்டும்; கோபிக்க வொண்ணாது; இங்கே யெழுந்தருளினையாதலால், அமுதுசெய்து போ" என்று பிரார்த்திக்க, "அந்த நாமதேவனில்லாத காலமாதலால் அமுதுசெய்ய மாட்டேன்" என்று சொல்லி, பகவான் அவ்விடத்திலிருந்து எழுந்தருளி, குன்றுகள் போலே யுயர்ந்து தோன்றுகின்ற கோபுரநிலை, மதில் இவைகளையுடைய கோயிலிற்போய், திருமகளோடு நடந்த செய்தியைச் சொல்லி, அவ்விடத்தே இனிதாகத் தங்கியிருக்க, நாமதேவருடைய மனைவியானவள், இங்கே, பெரு மகிழ்ச்சியோடு, "என் கணவரானவர், திருமாலிடத்தில் செலுத்துகின்ற பக்தி அதிகரிக்க, அந்தப்பத்தியின் பயன் இப்பொழுது கிடைத்தது" என்று, அஞ்சலிசெய்து அந்தப் பொதியை அவிழ்த்து, அதிலே சில பொன்னை மாத்திரம் கைக்கொண்டு, மனிதர் நிறைந்திருக்கிற கடைத்தெருவில் சென்று, தனக்கு வேண்டிய பல பொருள்களை வணிகனிடத்தில் பெற்றுத் தன் வீட்டுக்குச் சுகமாய் வந்து, அறுசுவையோடு கூடிய போஜந

த்தை அமைத்து வெளிப்பட்டவளாகிய குணாயி, தன் மைந்தனது அன்புக்கு, லக்ஷ்மீநாதன் மகிழ்ந்து இந்த அற்புதங்களைச் செய்ததை யறியாமல் விரைந்து, அந்த நாளின் உணவுக்காக வேண்டியவற்றை ஆராய்ந்து வரும்போதே தன் மகனை நினைத்தாள்; நினைத்து, மைந்தனை நோக்கி, "பொருள் சம்பாதிக்காமல் இருக்கிறாயே" என்று கோபித்துக்கொண்டதை நினைத்து, மனம் வாடிப் போனவர் கோயிலில் தங்கி யிருப்பதைக் கேள்விப்பட்டு, கோயில் வாயிலிலுள்ள கோபுரத்தருகில் வந்து, சேவித்துக் கைகூப்பி, கோயில் வாயிலிற் போகும்போது, அவள் வருவதை யறிந்த பகவான், அன்புள்ள புதல்வனைத் தமக்குப் பின்புறத்தில் நிறுத்தி யிருந்தபோது, வந்த தாயானவள், "பகவானே! என் மகன் உன்னிடத்தில் எந்நாளும் அன்பு மிகுந்தவனாய், குடும்ப வாழ்க்கையை வெறுத்து, உன் கோயிலிலே வந்து, துன்பம் என்பது இன்னதென் றறியாமல், நெடுங்காலமாக உன்னையே ஆசிரயமாய்ப்பற்றிநின்றால், வறுமையால் உண்டாகிற துன்பத்தால் மெலிந்து யாம் ஆற்றாதவர்களாய் வருந்துகிறோம்; யாம் தளர்வடையும்படி இப்படிச் செய்வது தகுதியாகுமோ; இவனை அன்புமிகுதியோடு வளர்த்தது இப்படியிவன் செய்வதற்கல்லவே; எம்மைக் காப்பாற்றுவானென்று நினைத்துத்தானே வளர்த்தோம்; உன்னால் எங்கள் குடி கெடலாகுமோ; உன்னை நம்பின அன்பரிடத்தில் நீ பெறவேண்டுமென்ற எண்ணமே உனக்குள்ளது; பருக்கை, நொய், அவல் முதலான பொருள்களை யேற்றுக்கொண்டு அதற்குப் பதிலாகப் பேரின்ப வாழ்வைத் தருகிறாய்; அப்படிச் செய்வதற்கும் எமக்குச் சக்தி யில்லையே; எம்மிடத்தில் வறுமையே யன்றி வேறு பொருளில்லையே; மாவலியினிடத்திலே மண்ணை யாசித்தாய்; நீ யெப்பொழுதும் ஒன்றைப் பெறுவதற்கே இசைந்திருக்கிறாய்; உன்னிடத்தில் கொடைத்தன்மை எப்படி யுண்டாகும்? ஆதிசேஷனாலும் உன்செய்கையைச் சொல்ல முடியாது; நான் உன்னைத் தெய்வமென் றெண்ணி நிற்பதனால், உனக்குத் தெய்வத்தன்மை யுண்டாயிருக்கின்றது; இல்லாவிட்டால் உன் ஒளிகுறையும்; என்னைக் கண்டமாத்திரத்தில் என்மகனை உன் பின்புறத்தில் ஒளித்து வைத்தாய்; இது உனக்கு இஷ்டமோ; பகவானே சொல்லுவாயாக" என்று கேட்க, பகவான் அவளை நோக்கி, "உன் மகனை நான் கெடுக்க விரும்பமாட்டேன்; மரத்திலிருக்கிற கனியானது மிகுதியாய்க் கனிந்தால் விழுவது ஒரு புதுமையோ! அதுபோலவே உலகமென்னும் மரமாயமைந்த என் பாதங்களில் விழுந்து வணங்கு

கின்ற இவனை உன் மகனென்று சொல்லுகிறாய்; அவன் பொருட்டே நானும் நாமரூபங்களோடு விளங்கி, நாமதேவன் என்னிடத்துக்கு வரும்படி இங்கு வாழ்கிறேன்; அவன் என்னிடத்திற்கு வருவதை விலக்குவது உனக்குத் தகாதகாரியம்; மகனை அழைத்துக்கொண்டே போகவேண்டும் என்கிற நினைப்பு உனக்கு உண்டாயிருந்தால் என் மனம் மிகவும் வருந்தும்'' என்று சொல்ல, குணாபி சொல்லுவாள்:—''நிலத்தை உழுது பயிர்செய்த உழவனை வருத்தி, அரசன் கப்பம் வாங்குவதுபோல, நான் வளர்த்த மைந்தனை நீ உன் பொருளென்று எழுதுவது உனக்கு நீதியாகுமோ'' என்று சொன்னபோது பரமகாருணிகனாகிய சர்வேசுரன் அவள்மீது இரக்கங்கொண்டு, "பெண்ணே! உனக்குச் சமானமானவர்கள் உலகத்தில் ஒருவருமில்லை; நீசெய்த தவத்தின்பெருமையைச் சொல்லுதற்கு ஒருவருக்கும் முடியாது; ப்ரஹ்மதேவனிடத்தில் நாரதமுனிவரும், அஞ்சநாதேவியினிடத்தில் அநுமானும், உத்தாநபாதனிடத்தில் துருவனும், அத்திரிமுனிவரிடத்தில் தத்தாத்திரேயரும் அவதரித்ததுபோல, உன்னிடத்தில் இந்த நாமதேவன் தோன்றினான்'' என் றருளிச்செய்ய, குணாயியானவள் பகவானை நோக்கி, "மாயனே! என் மகனாகிய நாமதேவன் உன் திருவடியை விடானாயினும், தாயாகிய என்னையும் என் குடும்பத்தையும் காப்பாற்றும்படியாய்ப் போதித்து என்னிடத்துக்கு வரும்படி செய்யவேண்டும்'' என்று சொல்ல, எம்பெருமானுக்கு அப்படி செய்யத் திருவுள மில்லாமையால் திருமகள் முதலானோராகிய தமது மனைவியரை நோக்கி, "நீங்களாயினும் இந்தக் குணாயியைத் தேற்றி வீட்டுக்குப் போகும்படி செய்யுங்கள்'' என்று நியமிக்க, அவர்களும் அப்படியே குணாயிக்கு அநேக விதமாகச் சொல்லியும் கேளாமல் அந்தத் திருமகள் முதலானோரை நோக்கிச் சொல்லுகிறாள்: "உமக்குத் தலைவராகிய பகவானை வேதங்களும் தீநதயாளன் என்று சொல்லாநின்றன; அந்தத் தீநதயாளத்வம் தீனராகிய எம்மிடத்தில் இல்லாமற் போகுமா; வறுமையால் வருந்துகிற நாங்கள் இந்த மைந்தனால் சௌக்கியத்தை அடையலாமென்று அன்போடு வளர்க்க வளர்ந்து பிரயோஜனப்படப்போகிற சமயத்தில் எங்களுக்கு உதவவொட்டாமல் அவன் மனதைத் தன்னிடத்தில் பதியச்செய்த இந்த விட்டலனுடைய செய்கையை நீங்களும் கண்ணால் பார்க்கிறீர்களல்லவா? உங்களுக்கும் இரக்கமில்லையா? உலக முழுவதும் தெய்வங்கள் உண்டு; அந்தத் தெய்வங்கள் தம்மை வழிபடுவோர்க்குச் சுகங் கொடுப்பதுண்டு; இந்த விட்டலன்போல

நிவேதநமுங் கொண்டு, என் மகனைத் தனக்குப் பின்புறத்தில் ஒளிப்பதும் இல்லறத்துக்கு உதவாமற் செய்வதும் ஆகிய செயல்கள் ஒரு தெய்வத்தினிடத்தும் கண்டதில்லை; ஆதலால், விட்டலன் திருத்தேவிமாரே! நீங்கள் அருள்செய்து உமது ஆசைநாயகனுக்குத் திருவுள மிரங்கும்படி சொல்லி என் புதல்வனை என்னிடத்துக்கு வரச்செய்யுங்கள்; நான் போகிறேன்" என்று சொல்லி, புதல்வனை நோக்கி, "உலகத்தை யெல்லாம் மோஹிக்கச் செய்பவனுய்ச் சம்ஸாரத்தை யொழித்தற்காகவே எழுந்தருளி யிருப்பவனிடத்தில் நீ எந்நேரமும் இருத்தற்குக் காரணம் என்ன? நமது குடும்பம் வறுமையால் படுகிற துன்பத்தையும் பாராதிருக்கிறாய்; இனி நான் பலவார்த்தைகள் சொல்லமாட்டேன்; நீ என்னோடு வராமற் போனால் இவர்கள் எல்லாரும் பார்த்திருக்க, உன்னை வலிந்திழுத்துக்கொண்டு போவேன்; அப்படி நான் உன்னை வருத்தப்படுத்து முன்னே நீ யெழுந்து வா" என்று சொல்லி, விட்டலனை நோக்கி, "ஐயா! நான் சொல்லுஞ் சொற்களுக்குச் சிறிதும் மறுமொழி சொல்லாதிருக்கிறாய்; நீ எமது குடியைக் கெடுத்தற்பொருட்டே தோன்றி யிருக்கிறாய்" என்று சொன்னதைக் கேட்ட பாண்டுரங்கன், குணயியை நோக்கி, "உன் மகனை யழைத்துக்கொண்டு போ; என்னை வெறுக்கவேண்டாம்" என்று சொல்லி, நாமதேவரை நோக்கி, "நீ உன் தாயுடன் வீட்டுக்குப் போ" என்று சொல்லி, அவள் கையிற் கொடுத்தார். அவளும் புதல்வனை யழைத்துக்கொண்டு போகிற போது அவனை நோக்கிச் சொல்லுகிறாள்:—"நாமதேவா! இந்தப் பண்டரிநாதரை விரும்பி மனைவாழ்வை வெறுத்தாய்; நீ யிப்படிச் செய்தற்காகவோ நாங்கள் உன்னை வளர்த்தது" என்று கடிந்து பேச, நாமதேவர் மறுமொழி சொல்லாமல், விட்டலனைப் பிரிந்ததற்காக மனந்தளர்ந்து அழுதுகொண்டே வர, அழைத்துக்கொண்டு வீட்டுக்குப்போய்ச் சேர்ந்தாள். அப்போது, நாமதேவர் தன் மனைவியால் அமைக்கப்பட்ட போஜந வகைகளையும், பாத்திர வகைகளையும், செல்வத்தையும் பார்த்து, பிரமித்து, "தாயே! இவ்வகையான பல வளங்களும் நமது வீட்டில் எப்படி அமைந்தன?" என்றுகேட்க, தாயானவள், "அமைந்தவிதம் எனக்குத் தெரியாது" என்று சொல்ல, நாமதேவர் மனைவியாகிய ராஜாயி, தன் கணவனை நோக்கி, "நீ போய் நீராடிவாரும்" என்று சொல்ல, "இவன் நம்மிடத்தில் வெறுப்பில்லாமற் பேசுகிறது ஆச்சரியமா யிருக்கின்றது" என்றெண்ணி, மனைவியை நோக்கி, "இந்தச் செல்வம் நமது வீட்டில் நிறைந்ததெப்படி?"

என்று கேட்க, மனைவியானவள் இவர் செல்வத்தை விரும்பமாட்டா ரென்று நினைத்து, மறுமொழி சொல்லாமலிருக்க, அதைக் கண்ட ஜநாயி, "ஐயனே! கேசவசெட்டியார் உன்னிடத் தன்புகொண்டு ஒரு பொதி நிறைந்த செல்வத்தைக் கொண்டுவந்து நமது வீட்டில் நிறைத்தார்; அவரை உன் மனைவியானவள் நோக்கி, "செட்டியாரே, இந்தப் பொதியேது?" என்று கேட்க, அவர் "பெண்ணே! உன் கணவன் எனக்கு மனங்கலந்த நண்பன் ஆகையால் அவனுடைய வறுமை நீங்கும் பொருட்டுப் பொதி நிறையப் பொருள் கொண்டு வந்தேன்; இந்தப் பொருள் செலவான பிறகு வேண்டுமானால் இன்னமும் கொடுப்பேன்; இனி உன் கணவனை வருத்தவேண்டாம்; அவனை அன்போடு உபசரித்து வா" என்று சொல்லி இப்பொழுதுதான் போனார்" என்று சொல்லித் தனக்கு ஊழியஞ் செய்துகொண்டிருப்பவள் சொல்லுவதைக் கேட்டு, பரிசுத்தமான மனத்தையுடையவராகிய நாமதேவர், "நன்று நன்று; இது செய்தவன் விட்டலப்பெருமானேயாவன்" என்று துணிந்து, அருவிநீர்போலக் கண்ணீர் ஒழுக மனம் வருந்தி, "ஓ மாயவனே! இந்தப் பொருளால் என்னை மயக்கி இந்த உலகவாழ்க்கையில் அழுத்தத் திருவுளங்கொண்டோ இச்செல்வத்தைத் தந்தாய்; ஓ சுவாமி! பல யாகங்கள் செய்தும், தவங்கள் செய்தும், யோகஞ்செய்தும் உன்னைப் பெறமாட்டாமல் அநேகர் அலைந்துகொண்டிருக்க, அடியேனுக்குப் பொருள் தரும்பொருட்டு நீ வந்தருளினை; இதற்கு அடியேன் என்ன தவஞ்செய்திருந்தேனோ ஸ்ரீ வைகுண்டநாதனே! உன்னை யன்றி வேறொரு பொருளையும் மதிக்கமாட்டேன்; இப்படி நீ செய்தது தகுதியல்ல" என்று பகவானை வெறுத்துக்கொண்டு, திரவியம் எல்லாம் வைதிகருக்குக் கொடுத்து, துன்பஞ்செய்கிற பிணியை நீங்கப்பெற்றவர்போல மகிழ்ந்து, வீட்டுக்குள்ளே போய், அமுதுசெய்து சுகமாயிருந்தார். இந்தப்பிரகாரமாகச்செய்த நாமதேவர் முன்போலவே, விட்டலப்பெருமான் எழுந்தருளியிருக்கிறகோயிலில்போய் அந்தப்பகவானை பஜனைசெய்துகொண்டிருந்தார். இப்படியிருக்குங்காலத்தில், பெருமான் ஒருநாள் அவரைக் கிட்ட அழைத்து, "நாமதேவா! எல்லாப் பொருள்களுள்ளும் நான் நிறைந்திருக்கிறேன் என்பதை அறிந்திருக்கிறாயல்லவா? ஆகையால் என்னிடத்தில் அன்பு செய்வதுபோல, எல்லா வுயிர்களின்மேலும் நீ அன்புசெய்யவேண்டும்" என்று நியமித்தவுடனே, நாமதேவர், "தேவரீர் சொல்லவேண்டியதில்லை; உயிர்களின்மேல் மிகுதியாகிய அருளுடையேன்" என்றார். அவரது கருத்தை உலகத்

தார் அறியும்படி செய்யவேண்டுமென்னும் திருவுள்ளமுடைய பகவான், அப்பொழுது, நேரிட்ட துவாதசியில் யாத்திரையாய் வந்தவர் போஜனம் செய்யும்போது அங்கே ஒரு நாய்போலத் தோன்றி, சோற்றை விரும்பி உலாவும்காலத்தில், அந்த யாத்திரைக்காரர் மாறுகொண்டு அடித்துவெருட்ட, மற்றொருவருடையகட்டமுதையெடுத்துக்கொண்டு ஓட, அவன் அடித்து மறுபடியும் அதை பறித்துக்கொண்டான். உடனே அங்கே நீராடுவோருடைய மடியைத் தீண்டின மாத்திரத்தில் அவர்கள் அதட்ட அஞ்சி ஒரு பக்கத்தில் சோர்ந்துநிற்க, யாத்திரை செய்வோர் இதைக்கண்டு "நாம் இதற்குச் சோறிட்டால் நம்மோடு தொடர்ந்துவரும்" என்று கோபித்து அதட்ட, இங்கேயுள்ளவர்களில் ஒருவர்க்காயினும் கருணையில்லையென்று, தன்னிடத்தில் அன்புள்ளோர் தங்கியிருக்கும் இடத்தில் வந்து, அவர்கள் உண்ணுகின்ற அப்பத்தை வாயிற் கவ்விக்கொண்டு எல்லாரும் காணும்படி வெளியே வர, நாமதேவர் அதைத் தொடர்ந்து, "ஓ சுணங்கனே! நெய்யில்லாத அப்பத்தை நீயுண்ணவேண்டாம்; நான் பாத்திரத்திலே கொண்டுவருகிற நெய்யில் துவைத்துத் தருகிறேன்; கண்டத்தில் விக்கிக்கொள்ளாமல் உண்பாயாக" என்று சொல்லி, நாயின் சமீபத்தில் போக, அதுவும் நின்றது; இவர் விரைந்துபோய் அப்பத்தை நெய்யில் தோய்த்து வயிறுநிறைய வூட்ட, அந்நாய் மென்று உண்ணக்கண்ட மற்றையோர், நாமதேவருக்குப் பித்துப் பிடித்தது என்று பேசிக்கொண்டார்கள். அன்றியும் "இவர் ஜீவகாருண்யத்தில் தவறாதவராயிருக்கிறார்; இவர் சிறந்தஞானவான்" என்று சிலர் பேசுந் தருணத்தில், நாயுருவங் கொண்டுவந்த ஸ்ரீமந் நாராயணன் நகைக்க, நாமதேவர், "நீ நாயுருவங்கொண்டோ வந்தாய், பகவானே" என்று சொல்ல, பகவான் நாமதேவரை நோக்கி, "என்னை யெப்படி கண்டு கொண்டாய்" என்றவுடனே, "கோபாலா! உன்னை யறிந்த விசோபாகேசரர் சொல்லத் தெரிந்துகொண்டேன்" என்று சொல்ல, ஸ்ரீ ஹரியானவர் மனமகிழ்ந்து சென்றனர். அதன்பிறகு சிலநாள்கழிய, திருமகள் நாயகனாகிய பகவான், "ஏகாதசியில் அமுதுசெய்ய வரவேண்டும்" என்று சொல்ல, நாமதேவர், "ஏகாதசி ஹரிதினமாகையா லுண்ணத்தகாது" என்று சொல்ல, பகவான், "நீ ஹரிதினத்தைத் தகாதநாளென்றாய்; முற்காலத்தில், ருக்மாங்கதன் அம்பரீடன் முதலியோர் விரதங் காத்த நாளாதலால் இது சிறந்தநாள்" என்றருளிச்செய்ய, நாமதேவர் சொல்லுகிறார்: "தெய்வநாயகனே! உன்னருளுக்கு விரோதமான காரியத்தை என்றுஞ் செய்யமாட்டேன்" என்றார்.

இதைக் கேட்ட பகவானனவர், இவரைச் சோதனைசெய்ய நினைத்து, முதுமைப் பருவமுள்ள ஒரு வேதியனாகப் போய், நாமதேவரைச் "சோறிடவேண்டும்" என்று கேட்க, "இது ஹரிதினமாகையால் சோறுண்ணவொண்ணாது" என்று சொல்லி, "கந்தமூலாதிகள் வேண்டுமானால் உன் பசிதீரத் தருவேன்" என்றார். அதைக்கேட்ட வேதியர் "அன்னமில்லாவிடில் என் உயிர் நீங்கும்" என்றார்; "அதுவன்றியும் "நாமதேவா! நீ பூலோகத்திலுள்ள ஜீவராசிகளுக்கெல்லாம் அவ்வவைகளுக்கேற்றபடி அன்புசெய்கிற அன்பனென்று உலகத்தார் சொல்லக் கேட்டு, உன்னிடத்துக்கு வந்தேன்; நீ விரோதமாகச் சொல்லுதல் நியாயமாகுமோ" என்று சொல்ல, இவர் "இதனால் எனக்குப் பாவம் நேரிடாது" என்ன, மறையோன் தரைமீது விழுந்து, "நான் இறப்பது மெய்" என்று சொல்ல, "நீ செத்தால் உன்னோடு நானும் சாவது நிச்சயம்" என்றவுடனே, வேதியன் உயிர் நீங்கினான். அங்குள்ள பெரியோர்கள் இறந்த வேதியனைச் சந்திரபாகை நதியின் கரையில் சேர்த்தார்கள். அவ்விடத்தில் பலருங்கூடி, "நாமதேவா! நீ நல்லவனென்று பேரெடுத்து, இப்போது சோறிடாதவன் என்கிற கெட்ட பெயரெடுத்தாய்" என்று நிந்தித்துப் பேசவும், தாம் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்து, அவ்வேதியச் சவத்தை சுடத்தகுந்த விறகு அமைத்து தாமும் அதனோடு படுத்து நெருப்பையும் தாமே மூட்டினார். ஊரிலுள்ளோர் பார்த்து "யாவரும் இப்படிச் செய்யமாட்டார்" என்று வியப்படைய, பகவான் மூண்டெரிகின்ற நெருப்பில் கிடந்த வேதியன் முன்னே எழுந்தருளி, அன்பரைத் தீண்டியெடுத்து, "உன்னை நிகர்த்தவர் மூன்றுலகத்திலும் இல்லை" என்று நாமதேவரைப் புகழ்ந்து சென்றனர். பிறகு, ஒரு நாள் தன்னிடத்தில் அன்புள்ள ருக்மிணியைப் பாண்டுரங்கன் பார்த்துச் சொல்லுகிறார்: "எலும்போடு கூடிய சரீர முழுதும் நோவாநின்றது; ஆகையாலே, உன் கையினால் நீ பிடிக்கவேண்டும்" என்று சொல்லக் கேட்ட ருக்மிணிப் பிராட்டி "லக்ஷ்மீநாதனே! உனக்கு உடம்பு நோவதற்கு நீயென்ன கஷ்டமான வேலை செய்தாய், சொல்" என்றுகேட்ச, பகவானனவர், "பெண்ணே! நாமதேவர் வீட்டுக்குச் சில சாதுக்கள் வந்தார்கள்; அவர்களெல்லார்க்கும் வஸ்திரம் தோய்த்துத் தந்தும், அவர் தாகத்துக்கு உண்ண நீர் மொண்டுகொடுத்தும், வேறு பல வூழியங்கள் செய்தும், தாசிக்கு மாவரைத்துத்தந்தும் என்னுடம்பு அயர்வடைந்தது" என்று சொல்லக்கேட்ட இந்திரை நகைத்து, தன் நாயகனை மெல்லிய சயநத்தின்மேல் சாயப்படுக்க

வைத்துத் தன்மலர்க்கையால் பிடித்து, பகவானுக்குச் சந்தோஷம் உண்டாக்கினாள். அதன்பிறகு மற்றொருநாள் மாதவனுக்கு அன்பரானவர் பஜனை செய்பவராய்த் தனியே யாடக்கண்ட பகவான், அவர்பின்னே நின்று, தாளங்கொட்டுவதைத் தொண்டரெல்லாரும் பார்த்து, ஆநந்தக்கடலில் மூழ்கினார்கள். தேவரெல்லாரும் பூ மழை பொழிந்தார்கள். பின்னும், பாண்டுரங்கன் மிகவும் மனமகிழ்ந்து, தனது அரைக்கிசைந்த பீதாம்பரம் அவிழ்ந்து தொங்குவதையும் அறியாமல் கூத்தாடத்தொடங்கினார். இப்படிப் பகவான் கூத்தாடுவதை ஞானதேவர் கண்டு, தோத்திரம்பண்ணிக் கையைப்பிடித்துக் கொண்டு, "சர்வஜ்ஞனபரந்தாமனே! தாமரைக்கண்ணனே! தேகப்பற்றும் அபிமானமு மில்லாமல் இப்படிக் கூத்தாடுவதற்குக் காரணமென்ன?" என்று வினவ, பகவான் அவரைநோக்கி, அருள்செய்கிறார்: "பற்றொன்று மில்லாதவனானாலும், நாமதேவனுடைய பஜனையால் அவசமடைந்தேன்" என்று அருளிச்செய்ய, ஞானதேவர், பீதாம்பரத்தை யெடுத்து இடையிற் சுற்றினார். அப்போது கபீர்தாசர் அங்கேவர, எல்லாரும் அவரைத் தழுவிக்கொண்டு மனமகிழ்ந்தார்கள். அந்தச் சமயத்தில் திருமகள் ஆலாத்தியேந்திவர, அதை நாமதேவர் வாங்கி, பகவானுடைய திருமுகத்தைச் சுற்ற, பாண்டுரங்கன் அன்போடு ஒன்றைச் சொல்லுகிறார்:—"ஞானதேவா! இன்று இங்கே நடந்த பஜனை நன்றாயிருந்தது" என்று சொன்னபோது, ஞானதேவர், சுவாமியை நோக்கி, "தேவரீர் தாளங்கொட்டி யாடினால் அந்தப் பஜனை நன்றாயிருக்காதா; நான் சொல்லவேண்டியதென்ன" என்றார். பகவானும் மகிழ்ந்து, அங்கே வந்திருந்தவர்களுக்கெல்லாம் தன் பிரசாதம் தர, எல்லாரும் பெற்றுச் சந்தோஷித்துப் பகவானைப் பலவகையாய்த் தோத்திரம்பண்ணித் தத்தம் இடங்களுக்குப் போனார்கள். நாமதேவர் ஒரு தொழிலுமில்லாமல் ஸ்ரீ ஹரிநாம ஸ்மரணை செய்துகொண்டிருந்தபோது, குணாயி அதைத் தெரிந்துகொண்டு, "மகனே! நமக்குச் சுகமுண்டாகும்பொருட்டுப் பொருள் சம்பாதிக்காமலிருந்தால், எப்படி இல்லறம் இனிதாய் நடக்கும்?" என்று சொல்ல, நாமதேவர், பொருளில்லாமல் தொழில் செய்வது எப்படி?" என்று கேட்க, குணாயியானவள், உடனே பண்டரிபுரத்துக்குப் போய், சற்றும் இரக்கமில்லாதவனும், மலிந்ததானியத்தை வாங்கிச் சமைத்து, ஒரேவேளை அரைவயிற்றுப் போஜனம்பண்ணிப், பொருள் சேர்த்து, அதிக வட்டிக்குக்கொடுத்து அளவற்றபொருள் சேர்த்து வைத்துக்கொண் டிருக்கிறவனுமாகிய தாதா என்னும் பெயரையுடை

யவனிடத்திற் போய், "என் புதல்வன் ஒரு ப்ரயோஜநமும் இல்லாமல் திரிகிருன்; தொழில்செய்யப் பொருளுமில்லை; ஈடுமில்லை; ஆகையால் இந்தத்தருணத்தில் ஆயிரம் விராகன் உதவிசெய்தால் நன்மையாம்" என்று வேண்டிக்கொள்ள, விட்டலப்பெருமான், அவன் மனத்திற் பிரவேசித்திருந்து பொருள் தருவதற்குச் சம்மதிக்கும்படி செய்தார். அவனும் ஆறுமாசகாலத்துக்குள் பொருள் சேர்ப்பதாக இவர்கள் கைப்படக் கடன்பத்திரம் எழுதிவாங்கிக்கொண்டு கொடுத்தான்; அந்த ஆயிரம் விராகனை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்து, புதல்வனுகிய நாமதேவரிடத்தில், நடந்த செய்தியைச் சொல்லிப் பொருளைக் கொடுத்து, இந்தப் பொருளைக்கொண்டு வியாபாரம் செய்து அதிக லாபம்பெற்று இல்லறத்தை நடத்தக்கடவாய்" என்றுள். அந்தப்பொருளைப் பெற்றுக்கொண்ட நாமதேவர்,சில வேதியரோடுகூடி ஆலோசித்து, "எந்த வியாபாரம் செய்தாலும் குற்றமேயுண்டாகின்றது; ஆதலால், பகவத் பாகவத சமாராதநத்தொழிலே உத்தமமானது; இது இகபர பலன்களைத் தரும்" என்று துணிந்து, காசிப்பட்டணத்துக்குப் போய், கங்காநதிக்கரையிலுள்ள ஒருமடத்தில் தங்கி, சூரியோதயமுதல் அஸ்தமநம்வரைக்கும் அந்நதாநம் செய்வதும், இராக்காலமுழுதும் ஹரிநாமபஜனை செய்துகொண்டிருப்பதுமாகிய தொழிலை மேற்கொண்டு நடத்திவருவதைக் கேள்விப்பட்டு, அநேகம் வேதியர்கள் தங்கள் மனைவி மக்களோடு இவரிடத்துக்கு வந்தார்கள். நாமதேவருடைய புகழ் எங்கும் பரவினதனுல் பண்டரிபுரத்திலுள்ள வேதியர்கள் பலரும் கூட்டமாய் வந்து இவர் கொடுக்கும் உணவை யுண்டு, தக்ஷிணை வாங்கிக் கொண்டுபோவதைக் கண்ட தாதா என்னும் சாவகார் அவ்வேதியரை வினவி அறிந்து கொண்டு, துன்பமடைந்து, "ஏழையாகிய நாமதேவருக்கு இந்த அந்நதாநம் முதலாகிய ஆடம்பரம் செய்வதற்கு என்னுடைய பொருள் காரணமாயிருந்தது" என்று அதிக ஆத்திரத்துடன் விரைந்து போய்க் காசியை யடைந்து, இவர் செய்யும் அந்நதாந முதலியவற்றைக் கண்டு, மனம் நொந்து, "உண்மையாக இவர் வர்த்தகத் தொழில் செய்வாரென்று நம்பிக்கொடுக்க, அந்தப் பொருளை யெல்லாம் இப்படிச் செலவுசெய்கிருரே, இனி நமக்குப் பொருள் சேர்வது அருமை" என்று மனம்வருந்தி, கடனுக்கீடான காணி பூமிகளுமில்லை, வீடில்லை, கடனை யேற்றுக்கொள்ளத் தகுந்த சுற்றத்தாருமில்லை, இத்தோடே என்குடி முழுகிப்போயிற்று" என்று எண்ணி அயர்வதை நாமதேவர் பார்த்து, துன்பங்கொண்டு வந்து, சாவ்காரு

டைய பாதத்தில் விழுந்து தோத்திரம் செய்தார். அப்போது இவரை வந்து சூழ்ந்துகொண்ட வேதியரை நோக்கி, "இவர் பெருமை பொருந்தியவள்ளல்; நீங்கள் உண்ணுங்காலத்தில் இவருடைய திருக்கரத்தால் க்ருஷ்ணார்ப்பணமென்று விடுகிற நீரையேற்று உண்ணுங்கள், நல்லசமயத்தில் இவர்வந்தார்" என்றும், "இவர் பெருமையைச் சொல்லுவதற்கு நமக்குமுடியாது" என்றும் புகழ்ந்துசொல்லி, சங்கற்பம் கூறி, "நீர் வார்த்தருள்வீர்" என்று சொன்ன சொல், வர்த்தகருடைய காதில் நுழைந்தவுடனே, மிகவுங் கோபித்து, நாமதேவரை நோக்கி, "வர்த்தகம் செய்வதற்கென்று என்னை மயக்கி வாங்கிவந்த பொருளை இப்படிச் செலவுசெய்யலாமா; படுபாவி! உன்மனம் கல்லா, மரமா; இப்படிச்செய்ததன்றி என்னைத் தத்தநீரும் வார்த்துக்கொடுக்கச் சொல்லுகிறாயே; உன்னைப்போன்ற திருடரை நான் எங்கும் கண்டிலேன்; நான் உனக்குக் கொடுத்த பொருளை மறுபடியும் கேட்காதிருக்கவேண்டி என்னை நீர்வார்த்துக் கொடுக்கச்சொன்ன சூதை நான் அறிந்துகொண்டேன்; பட்டுப்போன மரம் மறுபடியும் தளிர்க்கக்கண்டாலும் நான் தத்தநீர் வார்த்துக்கொடுக்கக் காணமாட்டாய்" என்று வணிகன் சொன்னபோது, நாமதேவர் வேதியரை நோக்கி, "நீர் வார்ப்பதற்கு இவ் வணிகருக்கேயன்றி எனக்கு அதிகாரமில்லை; ஆகையால், அவரைப் பிரார்த்தித்து நீர் வார்ப்பித்து உண்ணுங்கள்; என்னுலொரு தடையுமில்லை" என்று சொல்ல, வேதியரெல்லாரும் சாவகாராகிய வணிகரைச் சூழ்ந்துகொண்டு, "ஐயா! தாங்கள் நீர்வார்த்தால் நாங்கள் உண்டு பசியாறுவோம்; நெடுந்தூரத்திலிருந்து இந்த அன்னத்தின் பொருட்டாகவும் தக்ஷிணையின் பொருட்டாகவும் வந்தோம்; எங்கள் பசியை நீக்காமற் போவீரானால் உமக்கு நரகலோக ப்ராப்தியுண்டாகும்" என்று பலவகையாய் நிந்திக்கக்கேட்ட வணிகன் துக்கித்து, "நான் தானதர்மம் செய்யாமலும் நல்லவுணவை யுண்ணாமலும், தெய்வவிஷயத்தில் உபயோகிக்காமலும், தாய் தந்தையருக்குச் சிரார்த்தம் முதலியவற்றைச் செய்யாமலும் சேகரித்த பொருளை இவனுக்குக் கொடுத்ததுமல்லாமல் இந்த வேதியரெல்லாரும் நிந்திக்கவும் உடம்படுத்தேனே; தென்னமரத்தின் அடியில் நீர்வார்த்தால், அது அந்த நீரைத் தலையிற்சுமந்து தருவதுபோல, இவர்க்குப் பொருளுதவி செய்தால் இவர் நன்றியறிதலோடு செலுத்திவிடுவார்; அதனால் என் பொக்கசக்குறை தீருமென்றெண்ணிப் பொருள் கொடுத்தேன்; அது பாலை நிலத்திற்பெய்த மழைபோலாயிற்றே; வேதியர்கூட்டமோ நம்மைவிட்டு நீங்குவதில்லை; நிந்தனை

யோ ஒழிவதில்லை; அவர்கள் உணவையோ உண்பதில்லை; நீர் வார்க்காமற்போனால் அவர்கள் நம்மை விடுவதில்லை'' என்று பலவகையாய் ஆலோசித்து, "இவர்கள் புசித்தால் என்னைச்சேர்வது என்னகுறை'' என்று தனக்குள்ளே ஒரு ஆலோசனை செய்துகொண்டு, வணிகன் சொல்லுகிறான்: "வாரும் வேதியரே! என்மேல் பழிசொல்லுதல் நீங்கும்படி நீர்வார்க்கிறேன்; ஏற்றுக்கொள்ளுங்கள்'' என்றுசொன்னவுடனே, வேதியர் "அப்படியே செய்யவேண்டும்'' என, வணிகன் "இதனால் உண்டாகும் லாபநஷ்டங்களெல்லாம் நாமதேவரைச் சேருமேயன்றி எனக்கு ஒன்றுமில்லை'' என்று தத்தநீர் வார்க்க, வேதியர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஏற்றுக்கொண்டு நகைத்து, வேதியர் கூட்டம் உண்டபிறகு, புஷ்ப சந்தந தாம்பூலாதிகளும் தக்ஷிணையும் பெற்று ஆசீர்வதித்துப் போனபிறகு, வணிகன்செய்த செய்தியென்னவென்றால், "நான் கடன்கொடுத்த பொருளை இப்பொழுதே தரவேண்டும்; கொடுக்குமளவும் உன்னை வேறொரு காரியத்தில் பிரவேசிக்கவொட்டேன்; இல்லையென்பாயானால் உயிர் விடுவேன்'' என்று சொல்ல, நாமதேவர் காளியமர்த்தனனாகிய க்ருஷ்ணபகவானை நினைத்துப் பலவகையாகத் தோத்திரஞ் செய்து, "வணிகன் செய்யுந் துன்பத்தை நீக்கியருளவேண்டும்'' என்று பிரார்த்திக்க, பகவானனவர் இவர்க்கெதிரே யெழுந்தருளி, "அந்த வணிகன் இங்குள்ள தீர்த்தத்தில் மூழ்கினால், அந்தக்ஷணமே அவன் கடன் தீரும்படி செய்கிறேன்'' என்று கருணையுடனே சொல்ல, நாமதேவர் ஜ்ஞாநத்ருஷ்டியால் நோக்கி, மாநஸத் தொண்டுசெய்ய, பகவான் உடனே மறைந்தருளினர். உடனே நாமதேவர் வணிகனை நோக்கி, "இங்குள்ள இத்தீர்த்தத்தில் மூழ்கி வந்தீரானால் உமது கடன் முழுதும் கொடுத்துவிடுகிறேன்'' என்று சொல்ல, வணிகன், "நீரில் அமிழ்த்திக்கொல்லவோ இந்தவுபாய மெடுத்தாய்; நான் மூழ்கமாட்டேன்'' என்று வாதுசெய்ய, அவ்வணிகனை நாமதேவர் மறுபடியும் தோத்திரம் பண்ணி, "ஐயனே! உன்னைப்போலப் புகழடைந்தவர் இவ்வுலகத்தில் யாவர்? என்னாலே செய்யப்படுகிற இந்த அந்நதாநபலன் உன்னதேயாம்; தவப்பயன் முழுதும் இதனால் கிடைக்கும்; இதைப் பார்க்கிலும் சிறந்த வர்த்தகம் வேறொன்றுமில்லை; யுகாந்தகாலம் வரைக்கும் செலவு செய்தாலும் பொருள் குறைவுபடாது; நற்குணமுள்ளவனே! துன்பத்தை யொழிப்பாயாக'' என்று நாமதேவர் சொல்லக்கேட்ட வணிகன், "நீயென்ன தந்திரஞ்செய்தாலும் உன்னைவிடமாட்டேன்; நான் கொடுத்த பொருளைக் கொடுத்தே தீரவேண்டும்'' என்று சொல்ல,

நாமதேவர் "அப்படி நீர் பிடிவாதம் செய்தால் கங்கா ஸ்நாநம் செய்து வாரும்; உடனே உமது பொருளைக் கொடுத்துவிடுகிறேன்" என்று சொல்ல, வணிகன், "நாமதேவா! என்னைக் கைங்கையிலமிழ்த்திக் கொல்வதற்கோ இந்த ஏற்பாடு செய்தாய்; நான் மூழ்கமாட்டேன்; பொருளைக் கொடுத்துவிடு" என்று சொல்ல, நாமதேவர் மறுபடியும் அப்படியே சொல்ல, வணிகன் சம்மதித்து, அரையளவு நீரில் மூழ்கினவுடனே, துளசிமாலையை யணிந்த ஸ்ரீமந் நாராயணனுடைய மாயையினால் பாதாளலோகத்தை யடைந்தான். அவ்விடத்தில் நவரத்நமயமான மண்டபத்தில், சிம்ஹாஸநத்தின்மேல் கருடக்கொடியையுடைய விஷ்ணுமூர்த்தியானவர் துருக்க வேஷந்தன்போல எழுந்தருளியிருந்தார்; அவரை நாரதாதிமுனிவர் யாவரும் மிலேச்சவுருவமாய்ச் சூழ்ந்திருந்தார்கள். அவ்விடத்தில் பலா, மா, தெங்கு முதலான மரங்களும், மல்லிகை முல்லை முதலான கொடிகளும் நெருங்கி மிகவுஞ் சிறப்புப்பெற்றிருந்தன. கிளி, மயில், சாதகம், புறு முதலியவைகள் பாடுதலும் ஆடுதலும் குறையாதிருக்கும் எக்காலத்திலும் காணாத காட்சியை இன்று கண்டோமே யென்று, வணிகன் மனமகிழ்ந்து உடல் புளகித்து நிற்கையில், அந்த மண்டபத்திலிருந்தவர்கள் இவனை யழைத்து, "நீ இங்கு வந்த வரலாறென்ன?" என்று கேட்க, இவனும் தன் வரலாறு முழுதுஞ் சொல்ல, "எங்கள் அரசன் உன்னைப் போஜநத்துக் கழைத்தார்" என்று சொல்லி, "கொழுத்த மாமிசத்தைச் சமமாகக்கூட்டிய முல்லையரும்புபோன்ற சோறும், நெய்யில் தோய்த்தெடுத்த முக்கனி முதலியவும், பாலும் இருக்கின்றன, வருவாயாக" என்று அழைக்கவே, வணிகன் திகைத்து, நமது பொருளும் போயிற்று; சாதியும் ப்ரஷ்டமாவதற்குரிய காலமும்நேரிட்டது; துருக்கரோடிருந்துண்ணப்பிடித்திழுக்கிறார்கள்; உண்ணமாட்டேனென்றால் என்ன தீங்கு செய்வார்களோ" என்று மனங்கலங்கி, நாமதேவரை மனத்தில் நினைத்து, "இவ்விடத்தில் என்னைக் காப்பதற்கு ஒருவருமில்லை; அங்கே உமக்குக் கடன் கொடுத்து, லாப மடையும்பொருட்டு இங்கே வந்து துருக்கரோடுண்ணவும் நேர்ந்திருக்கின்றது; இந்தச் சமயத்தில் என்னைக் காப்பதற்கு உம்மையன்றி வேறொருவரு மில்லை" என்று சொல்ல, நாமதேவர் இதையறிந்து, தாய்போல் அங்கே வந்து, "விசநமடைவது தகுதியன்று; எல்லார்க்கும் பிறவா முத்தி தருவோன் இந்தப் பாண்டுரங்கனே யன்றி வேறொருவரு மல்லர்; இவரோ பரமபாகவதர்; இவர்களோடு கூடியிருந்து உண்பதைப் பார்க்கிலும் வேறு ப்ரயோஜநம்

வேண்டுவதில்லை; பிரமன் முதலிய தேவர்களுக்கும் கிடைத்தற்கரிய ப்ரஸாதம், ப்ரபலமாகிய இந்தச் சமாராதனைச் செய்கையால் உமக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் கிடைத்தது; அதை விலக்குவீரானல் இதற்கு மேற்பட்ட பொருள் ஒன்றுமில்லையென்று மதித்து உண்ணக்கடவீர்'' என்று சொன்னார். அதைக்கேட்ட வணிகன் வேதியரை நோக்கி, ''யாவரையும் மயக்கத்தகுந்த மோஹநமந்திரத்தால் என்னை வசியம் பண்ணிக்கொண்டீர்; கடனென்று பெரும் பொருள் வாங்கிக்கொண்டு வெள்ளோலை யொன்றெழுதி என்னிடத்திற் கொடுத்து, அன்னதானஞ்செய்து பொருள் முழுதும் பாழாக்கினீர்; அன்றியும் மிலேச்சரோடுகூடி உண்ணச்சொல்லி என் குலமுழுதும் தாழ்வடையும்படி செய்யத்துணிந்தீர்; இது உமக்குத் தகுமோ, என் சொல்லைத் தடுக்காமல் இக்க்ஷணமே இந்த எல்லையைத் தாண்டுவித்து என்னை என் ஊரில் கொண்டுபோய் விட்டுவிடும்; இனி உம்மைப் பொருள் கேட்கமாட்டேன்; இது உண்மையாகும்'' என்று நாமதேவரை நோக்கிச்சொல்ல, நாமதேவர் வணிகனை நோக்கி, ''ஐயா! இந்த வேதியரோடிருந் துண்ணுதற்கு நீர் மயங்க வேண்டியதில்லை; தடுக்காமல் உண்பீரானல், பகவான் அருள்செய்வார்; பொறுக்க வேண்டும்'' என்று பிரார்த்திக்க, வணிகன், நாமதேவரை நோக்கி, ''நீர் அடம்செய்ய வேண்டாம்; அரிசியும் பருப்பும் என்னிடத்திற் கொடுத்தால், நானே சமையல்செய்து உண்டு செல்லுவேன்'' என்று சொல்ல, நாமதேவர் சந்தோஷித்து, அப்படியே கொடுத்துச் சமையல்செய்வதற்கு நான்கு எருமுட்டையும் கொடுத்தார். இவற்றைப் பெற்றுக்கொண்ட வணிகன், ''நாமதேவரே! இந்தயவனரை வெளிப்படுத்த வேண்டும்'' என்று சொல்ல, நாமதேவர் வணிகனை நோக்கி, ''ஐயா, நீர் சற்றுநேரம் கண் மூடிக்கொண்டிரும்'' என்றவுடனே, வணிகன் அப்படியே மூடிக்கொண்டிருந்தான். அப்போது, பண்டரிபுரத்திலுள்ள பெரியதாகிய சந்திரபாகை நதியில் மூழ்கியெழுந்தவன்போல ஈரவஸ்திரத்தோடும் எழுந்தனன். அங்கே வேதியர் கூட்டமும், அன்போடு பகவானை பஜனம்செய்வோருங்கூடி விட்டலப் பெருமானைத் துதிப்பதை வணிகன் கண்டு சொல்லுகிறான்: ''காசியில் கங்கைக்கரையிலிருந்த நான் சந்திரபாகையை அடைவதற்குச் சொப்பநங்கண்டேனே; அப்படிச் சொப்பநங் கண்டிருப்பேனானல், நாமதேவர் கொடுத்த பதார்த்தங்கள் இருக்கின்றனவே; இது என்ன அதிசயம்'' என்று நாமதேவரைப் புகழ்ந்து, அந்த நதிக்கரையில் வரும்போது, வஸ்திரத்தில் முடிந்த எருமுட்டையை மாத்திரம்

அவிழ்த்து அந்த நதியில் விழும்படி உதறிவிட்டு, நனைந்த வஸ்திரத்துடன் வீட்டுக்கு வர, மனைவி கண்டு, "நாமதேவருக்குக் கொடுத்த பணமுழுதும் வாங்கிக்கொண்டு வந்தீரோ" என்று கேட்க, வணிகன், தன் மனைவியை நோக்கி, "என் உயிர் பிழைத்து வந்ததே பெரிதாயிற்று" என்று சொல்லி, ஈரவஸ்திரத்தைப் பிழியும்போது ஒரு முட்டை அந்த வஸ்திரத்தில் ஒட்டிக்கொண்டிருக்கக் கண்டு, அதை உற்றுப்பார்க்கும்போது, அது உயர்ந்த தங்கமாயிருக்கக் கண்டு, சரீரம் புளகித்து, நாமதேவர் இந்த லோகத்திலுள்ள நரர் அல்லர் என்றும், தேவரேயென்றும் மதித்து, விட்டலப்பெருமான், நாமதேவர் பொருட்டு எனக்குக் கொடுத்த மிகுந்த திரவியத்தை யெல்லாம் நதியில்போட்டுவிட்டேன்; அதுவும் என் அத்ருஷ்டமே யாகும்" என்று மனம் வருந்தி, "நாமதேவரை நான் வீணாய் நிந்தித்தேன், பாகவதரை நிந்தித்த அபராதத்தை க்ஷமித்தருளவேண்டும்" என்று பகவானைப் பிரார்த்தித்து, அதுமுதல் இரவும் பகலும் விட்டலபகவானைத் தோத்திரம்செய்வதும் ஏழைகளுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பதும் ஆகிய செயல்களை மேற்கொண்டு சுகமாய் வாழ்ந்திருந்தான். நாமதேவரும் பகவானை வணங்கிக்கொண்டும், தோத்திரஞ் செய்துகொண்டும் நிற்க, விட்டலப்பெருமான், நாமதேவரை இரு கரத்தாலும் எடுத்து மார்போடு தழுவி, உச்சிமோந்து பல இன்சொற்களைச்சொல்லி, பண்டராபுரத்தில் நாமதேவரோடு எழுந்தருளியிருந்தார். இந்த நாமதேதர் சரித்திரத்தைச் சொல்லுவோரும், கேட்பவரும், நியமமாய்ப் புத்தகம் வைத்துப் பூசிப்போரும், இம்மையில் தர்மார்த்தகாமங்களை யடைந்து புகழையும் பெற்று, மறுமையில் ஸ்ரீ வைகுண்டநாதனது திருவடியை யடைந்து நித்தியராய் வாழ்வார்கள்" என்று சொல்லி, மேலே கபீர்தாசர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

நாமதேவர் சரித்திரம் முற்றிற்று.

ஐந்தாவது

கபீர்தாசர் சரித்திரம்.

புண்ணியநதிகளிற் சிறந்ததென்று எல்லாராலும் புகழப்பெற்ற கங்காநதியில், மேகம் நீரைப்பொழிய, ஒருமஹான் அதின் வழியாயிறங்கிவந்த ஒரு கிளிஞ்சிலில், பகவானது அநுக்ரஹத்தினால் அமைக்கப்பட்டு அயோநிஜராய் கிளிஞ்சிலோடு மிதந்துகொண்டு,

நன்மையைத் தருவதாகிய ஸ்ரீ ராமஜபத்தை விடாதவராய்த் தியாநஞ் செய்துகொண்டிருந்தார். அப்போது அங்கே, துணிகளை நெய்பவனாகிய தமாலமோமி யென்பவன், கையிலே நூலை யேந்திவந்து அந்த நதியில் தூவைத்துக்கொண்டிருக்கையில், இந்தக் கிளிஞ்சில் மிதந்து வருவதைக்கண்டு, நீரி லிறங்கி அதை யெடுத்துக்கொண்டு கரையில் வந்து வகிர்ந்து அதனுள்ளேயிருந்த குழந்தையை மிக்க அன்போடு தன் கையிலேந்தி, வறுமையால் வருந்தினவனுக்குப் பெருந்தநங்கிடைத்தாற்போலமகிழ்ந்து, தன்வீட்டுக்குவந்து மனைவியைத் கொடுத்துக் குழந்தை கிடைத்த வரலாற்றையுஞ் சொல்ல, அவள் ஆசையோடு வாங்கித் தன் இரண்டு தநங்களிலுஞ் சுரக்கிற பாலையூட்டி, பகவானைத் தியாநம்பண்ணி, அந்தக்குழந்தைக்குக் கபீர்தாசர் என்று பெயரிட்டு வளர்த்தாள். அது நன்றாய் வளர்ந்து, ஸ்ரீ ராமநாமத்தை இடைவிடாமல் உச்சரிப்பதைக்கண்டு, காசியிலுள்ளோர், "துருக்கனுக்கு இப்படிப்பட்ட நன்மகன் பிறந்தானே, இந்தத் துருக்கன்செய்த புண்ணியமே புண்ணியம்" என்று புகழ்ந்து கொண்டாடினார்கள். பிறகு, தாசருக்கு வயது வந்தவுடனே, தாய் தந்தையர் இவர்க்குத் தகுதியாகிய பெண்ணை மணஞ்செய்வித்தார்கள். மணஞ்செய்துகொண்ட கபீர்தாசரானவர், இந்தப் பிரபஞ்ச வாழ்க்கையில் சிறிதும் மனம் பற்றாதவராய், ஸ்ரீராமநாம ஸங்கீர்த்தநத்திலேயே மனஞ் செலுத்துகிறவா யிருப்பதைக் கண்ட தந்தையானவர் துன்பமடைந்து, வாழைத்தோட்டத்தில் ஒரு இலந்தை மரம் நின்று தழைப்பதுபோல, நீரில் மிதந்தவன் நமது குலத்தில் வந்துசேர்ந்து பிரகாசித்துக்கொண் டிருக்கிறானென்று சிந்தித்திருக்க, தாயானவள் இவரை நோக்கி, "அப்பா! நீ இவ்வாறு ராம பஜனை செய்துகொண்டே திரிந்தால் நமது இல்லறம் எப்படி நடக்கும்? தறியைத்தொட்டுத் துணிகளை நெய்" என்று சொல்ல, அச்சொல்லைக் கேளாதவராய்ப் பகவானைத் தியாநித்துக்கொண்டிருந்தார். தன்னை மறந்து தியாநத்திலிருப்பவரைத் தாயானவள் அதட்டி, "என்னடா, மரம்போலிருக்கிறாய்" என்று கோவித்து, இனி அடிக்க வருவாள் போலிருப்பதைத் தாசர் தெரிந்துகொண்டு மனமஞ்சி எழுந்து, ஒரு முழத்துணியை நெய்து முன்போலவே தியாநத்திலிருக்க, இவருடைய மனத்தில் அமர்ந்திருக்கிற பகவான், இவர் நெய்யாமலிருந்தால் தாய் கோவிப்பாளென்று தறியினிடத்தில்வந்து, இவர் நெய்வதுபோல நெய்துகொண்டும், இவர் விழித்து நெய்யும்போது தாம் சும்மா இருந்தும் இப்படி ஒருபுடவை நெய்து முடிந்தவுடனே, தாசர்

அதை மடித்தெடுத்துவந்து தாயினிடத்திற் கொடுக்க, அவள், "அப்பா! நீ இதைக் கடையிற்கொண்டுபோய் விற்றுப் பணங்கொண்டுவா" என்றாள். இவர் அவ்வாறே கடை வீதியிற்போய்த் தியானத்தில் அழுந்தின மனத்துடன் ஓரிடத்தில் அசைவற்று நின்றார். வஸ்திரம் வாங்கவந்தவர்கள் இவர் கையிலிருப்பது அதிக விலையுள்ளது என்று விலகிப்போக, சூரியன் அஸ்தமித்தபிறகு எல்லாரும் நீங்கினார்கள். தாசரும் விழித்து, அங்குள்ளாரைக்கேட்டு ஒருவரும் அந்த வஸ்திரத்தைக்கொள்ளாமையைக்கண்டு, "இதை விற்காமல்நாம்போனால் தாய்கோபிப்பாள்"என்று துன்பமடைந்து,சற்றுநேரம் அங்கே நின்று மனஞ்சலித்து, ஒரு பாழ்வீட்டைக் கண்டு அதில் தங்கினார். அப்போது பகவான் அவர் மனத்தை யறியவேண்டுமென்று ஒரு முதுவேதியனாகி வந்து, தாசரை நோக்கி, 'அப்பா! எனக்கு அதிக குளிராயிருக்கின்றது; எனக்குக் குளிர் தீருப்படி ஒரு வஸ்திரம் கொடு" என்று கேட்க, தாசர் தமது கையிலிருந்த வஸ்திரத்தை இரண்டு துண்டாக்கி, ஒரு துண்டத்தைக் கொடுக்க வாங்கிக்கொண்டு போய், மறுபடியும் ஒரு பக்கிரி வேடங்கொண்டுவந்து இவரைக் கிட்டி நின்று, "இது என்ன, நீ குதாவின்மீது நினைவில்லாமல், ராமாவென்று சொல்லிக்கொண்டிருக்கிறாய்; உனக்கு நான் சொல்லவேண்டிய தொன்றுமில்லை; எனக்கொரு வஸ்திரம் கொடு" என்று கேட்க, "நீர் சொல்லுகிற குதாவே இந்த ஸ்ரீ ஹரி" என்று சொல்லி, மற்றொரு துண்டு வஸ்திரத்தைக் கொடுக்க, வாங்கிக்கொண்டு போன பகவானானவர், பக்கிரி வேஷத்தை விட்டு, வேதிய வேஷம்பூண்டு தாயினிடத்தில் வந்து, "உன் மகன் ஆடையை விற்காமல், ஒரு பாழ் வீட்டுக்குள்ளே இருந்துகொண்டு ஸ்ரீராமநாம பஜனைசெய்துகொண்டிருக்கிறான்; நீ விற்கச்சொல்லியனுப்பின ஆடையை விற்காமல், வேதியனுக்கும் பக்கிரிக்கும் பாகித்துக் கொடுத்துவிட்டான்" என்று சொல்லக்கேட்ட தாயானவள், "அவன் வரட்டும் தண்டிக்கிறேன்" என்று சொல்ல, வேதிய வேஷம்பூண்ட பகவானானவர், "உனக்கு அவன் அகப்படமாட்டான்; துன்பஞ்செய்கிற தேள் வெளிப்படுமா; நான் அவனைக் காட்டுகிறேன்; என்பின்னே வா" என்றழைத்துப் போய்த் தாசிருக்கும் வீட்டைக் காட்டித் தாம் வெளியே நிற்கத் தாயானவள் உள்ளே போய்த் தன் மகனைக் கண்டு, "சேலை எங்கே காட்டு? இந்த இருட்டில் ஏன் வந்து நிற்கிறாய்?"என்று கேட்க, தாசர் மறுமொழி சொல்லாமலிருக்க, தாய், "என்னடா நான் கேட்டதற்கு மாறுத்தரம் சொல்லாமலிருக்கிறாய்" என்றாள். அப்போது

வெளியேநின்ற வேதியன், "ஓ அம்மே! இப்படிக் கேட்டால் அவன் வழிக்கு வரமாட்டான்; நன்றாய்த் தண்டித்தால் உண்மை சொல்லுவான்" என்று சொல்லக் கேட்டு, அடிக்கக் கோல் தேடுகையில், வேதியன் ஒருகோலைக் கையிற்கொடுத்து "அடி" என, அவள் அடிக்க, அந்த அடி தனது முதுகிற்பட்டு வேதனையுண்டாக, அவளை நோக்கி, "நீ அவனை அடித்த அடி என் முதுகிற்பட்டு வேதனையுண்டாயிற்று; அவனை யடிக்கவேண்டாம்; விட்டுவிடு" என்று சொல்லக் கேட்டும் அவள் விடாமல் மோதிமோதி யடிக்க, பகவானானவர் ஸ்ரீ ஜாநகி பிராட்டியாரோடுகூடி, கையிற் கோதண்டம் தாங்கிவந்து எதிரே நின்றருளினார். ஸ்ரீ பகவான் எழுந்தருளினதைக் கபீர்தாசர் அறிந்து, அன்போடும் அவருடைய திருவடியில் விழ்ந்து வணங்க, இறைவன், "அன்பனே! உன்னை விடேன்" என்றார். இதைக் கண்ட தாயும் பகவானை வணங்க, அவளை நோக்கி "நீ இந்தப் புதல்வனைப் பெற்றதனால், உன்புண்ணியத்துக்கு நிகரான புண்ணியம் வேறொன்றில்லை" என்று சொல்லி மறைந்தவுடனே தாயானவள், தன் மகனை மார்போடணைத்துக்கொண்டு, "என் அருமை மகனே! உன்னால் ஸ்ரீ ராமபிரானைத் தரிசிக்க நேர்ந்தது" என்று மிகு மகிழ்ச்சியோடு அழைத்துக்கொண்டு போனாள். போனபிறகு முன்போலப் புதல்வனைக் கோபிக்காமல் ஹரிபஜனையை விரும்பித் தானும் இனிதாயிருக்குங்காலத்தில், கபீர்தாசர் மனைவிக்குக் கர்ப்பமுண்டாகி, ஒரு புதல்வனைப் பெற்றாள். அவனுக்குக் கமால்தாசர் என்று பெயரிட்டு வளர்த்துவர, அவனுக்கு ஏழாவது வயது நிரம்பினவுடனே, அவர், தந்தையை நோக்கி "ஐயனே! அடியேனுக்குத் துவாரகையைக் காணவேண்டுமென்கிற ஆசை மிகுதியா யிருப்பதனால், எனக்கு விடை கொடுக்கவேண்டும்" என்று கேட்க, கபீர்தாசர் குமாரரை நோக்கி, "இந்த வயதில் உனக்குக் கோபால ஸ்வாமி திருவடியில் விருப்பமுண்டானதற்குக் காரணம் யாதோ அறிகிலேன்" என்று சொல்லி, மைந்தனுக்கு உத்திரவு கொடுத்தார். விடை பெற்றுக் கொண்ட கமால்தாசர், தந்தையின் இரண்டு திருவடிகளையும் வணங்கி, தாம் செல்லும் வழிகளெல்லாம் ராமநாமத்தை மிகவும் கொண்டாடுதலை நோக்கி, வழியிலுள்ள ஊர்களில் இருப்பவர்கள் இவர் செய்யும் ராமநாம சங்கீர்த்தனத்தைக் கேட்டு மகிழ்ந்திருக்க, விரைந்து போய்த் திருத்துழாய் மாலையை யணிந்த ஸ்ரீகண்ணபிரான் வாழ்கின்ற திருத்துவாரகையை அடைந்து கோமதி நதியைக்கண்டு வணங்கி அதில் மூழ்கி ஸ்ரீ கோபி சந்தனத்தை நெற்றியில் தரித்து ராம

நாமத்தை உச்சரித்துக்கொண்டு, கையில் ஜபமாலையைத் தரித்துப் பத்மநாபனுகிய பகவானைத் தமது மனத்தில் நிறுத்தி, ஆலயத்தினுள்ளே பிரவேசித்து அர்ச்சா விக்ரஹத்தைச் சேவித்து, பலவகையாய்த் தோத்திரஞ்செய்து, நான்குமாசகாலம் அவ்வூரில் தங்கியிருந்தார். பின்பு ஒருநாள் ஸ்ரீ கண்ணபிரானுடைய ஆலயத்திற்போய் வணங்கி, "ஓ பகவானே! என் மனமானது என்றும் உன்னுடைய திவ்ய செளந்தரிய விக்ரஹத்தை மறவாதிருக்கும்படி அமைத்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்துப் புறப்பட்டுச் சித்ரகூடத்தைச் சேர்ந்தார். இவர் அவ்விடத்தில் வந்திருப்பதைக் கேட்ட விஷ்ணுதாசர் எதிர்கொண்டுவந்து தோத்திரம்செய்து வணங்கி, இவரைத் தமது வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய், பாத பூஜைசெய்து, உபசார வார்த்தைகளைப்பேசி, போஜனம் செய்வித்து, அன்றிரவில் இவர் ஹரிபஜனை செய்யக்கேட்டு விஷ்ணுதாசர் முதலிய எல்லோரும் அன்போடு "இந்தக் குழந்தையின் செய்கை மிகவும் புதுமையாயிருக்கின்றது" என்று சொல்லிக் களிக்க, விஷ்ணுதாசரானவர் "இவருக்கு எவ்வளவுபொருள் கொடுத்தாலும் சிறந்துவிளங்காது" என்று நினைத்து ஒரு மாணிக்கத்தைக் கொண்டுவந்து இவர் சந்நிதியில் வைத்து "இந்தமாணிக்கம் இராக்காலத்தில் இருளை நீக்கும் ஆகையால் இதனைக்கொண்டுபோம்" என்று சொல்ல, கமால்தாசரானவர் "இதை என் தந்தையானவர் விரும்பமாட்டார்" என்று சொல்லிப் பின்னும் சொல்லுகின்றுர்: "நீர் தந்த மாணிக்கமும் கல்லும் எங்களுக்குச் சரிதான். வேதியர்க்குத் தனமும், வேந்தனுக்கு மாணிக்கமும், வறியோர்க்கு அன்னமும், வித்வான்களுக்கு வஸ்திரமும், யாத்திரை செய்பவர்க்கு உணவும் கொடுக்கவேண்டும். சுத்த வைஷ்ணவர்கள் எதனையும் விரும்பமாட்டார்கள்" என்று சொல்ல, விஷ்ணுதாசரானவர் எழுந்து இவரை வணங்கி, இவர் அறியாமல் இவரது வஸ்திரத்தில் அந்த மாணிக்கத்தை முடிந்துவைத்தார். பிறகு கமால்தாசர் அங்கே இருந்து புறப்பட்டுத் தம்மூர்க்கு வந்து தந்தையாருடைய பாதத்தை வணங்கி நிற்க, தந்தையாராகிய கபீர்தாசர் இவரது வஸ்திரத்தில் உள்ள முடியைநோக்கி அவிழ்த்து, மாணிக்கத்தைப் பார்த்து, "இதைக் கொடுத்தவர் யார்?" என்றுகேட்க, "இவர் என்னையறியாமல் விஷ்ணுதாசர் முடிந்துவைத்தார்" என்று சொன்னர். அது கேட்டு கபீர்தாசர் மிகவும் துன்பமடைந்து அழத்தொடங்கினர். அவர் அழுமோசையை மனைவிகேட்டு, வந்து "நீர் அழுதற்குக் காரணம் யாது?" என்று வினவ, மனைவியை நோக்கி, "நமது சிறுவன்

கமால்செய்த காரியத்தை என்னவென்று சொல்லுவேன்; நமது குடிக்குப் பழியுண்டாகும்படி. ஹரிநாமத்தை விற்று மாணிக்கத்தைக் கொண்டுவந்தான்" என்று சொல்ல, அதைக் கேட்ட கமால்தாசர், அவ்விடம் விட்டுநீங்கி, சித்ரக்கூடத்தையடைந்து மாணிக்கத்தைக் கொடுத்தவர்கையில் தாம் கொண்டுவந்து கொடுத்துத் தம்மிடத்துக்கு வந்து, தாய்தந்தையரை வணங்கி, தாம் முன்போய்ச் சஞ்சரித்த இடங்களில் நிகழ்ந்த செய்தியெல்லாம் சொல்லக்கேட்டுத் தந்தையானவன் பெருமகிழ்ச்சி யடைந்தான். மகிழ்ச்சியடைந்ததே யன்றிக் கமால்தாசரைத் தழுவிக்கொண்டு அன்பு பாராட்ட, இவரும் தம் பிதாவின் பாதங்களைச் சேவித்துத் தோத்திரஞ்செய்து ஹரிபஜனை செய்திருந்தகாலத்தில், ஒருநாள் அஸ்தமன காலத்தில், தீர்த்த யாத்திரையாய் வந்த மூவர், இவருடைய வீட்டுக்குவர, கபீர்தாசரும்சந்தோஷத்துடன் அவர்களைக்கண்டு,ஆதரித்து ஆசநம்கொடுத்து உபசரிக்க, தீர்த்தவாசிகளும் மகிழ்ந்திருந்தார்கள். சநகாதிகளைப் பார்த்து ஸ்ரீராமபிரான் சந்தோஷித்ததுபோல,கபீர்தாசர் அன்புமிகுந்து,தமது மனைவியை யழைத்து,"மூவர்வந்து நமது வீட்டிலுண்ணாதிருப்பது கூடாது; ஆகையால் அவர்களுக்கு அமுதூட்டி மகிழ்விக்கக்கடவை" என்று சொல்ல, மனைவியானவள் "இப்போது அந்நமில்லை; அயல் வீட்டில் கேட்டாலும் இல்லையென்பார்களே; விலைகொடுத்து வாங்குவதற்கும் ஒருகாசும் கையில் இல்லையே" என்று சொல்லி, தன் மகனை யழைத்து, வருத்தப்படுத்திக் களவு செய்யும் பொருட்டு, ஒரு கடையின் சுவரைத் தொளைத்து அதனுள்ளே போகவிட, கமால்தாசரானவர் தமக்கு வேண்டுவனவாகிய அரிசி முதலிய பொருள்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு, வேறுபொருள்களைத் தொடாமல், கீழ்மக்கள் போலத் திருடுதல் குற்றமென்றெண்ணி வணிகனுக்குச் சொல்லிப் பின்தொடர்ந்துவரச்செய்து, விரைந்து வெளியில்வர, வணிகன் இவர்காலைப் பிடிக்க, தொளைக்கு வெளியில் வருந்திநிற்கும் தந்தையை நோக்கி, கொண்டு வந்த பொருள்களைக் கொடுத்து, செட்டியின் பொருள்களை வலிமையாய்க் கவர்ந்ததனால், "அடையாளந் தெரியாமல் என் தலையை அறுத்துக் கொண்டு வீட்டுக்குப்போ" என்று சொல்ல, கபீர்தாசர் கொஞ்சமும் இரக்கமில்லாமல், தலையை யறுத்துக்கொண்டு வந்து,இந்தச் செய்தியை மனைவிக்குச் சொல்ல, மனைவியானவள், மகனை யிழந்ததற்கும் மனமிரங்கி, வந்தவர்களுக்கும் உணவை யுண்பித்துத் தூங்குவிக்கத் தூங்கி, மறுநாள் காலையில் நீராடப்போனார்கள். அப்போது செட்டி

யானவன் இங்கும் அங்குமாக வோடிக் கூக்குரலிடக் கேட்டு வந்து கூடினவரெல்லாரும் "அடையாளம் தெரியாமல் தலையை அறுத்துக்கொண்டுபோன திருடர் அருகிலிருந்த வுன்னைத் தலையை யறுக்காமலும், மற்றப் பொருள்களை யெடுத்துக்கொண்டு போகாமலும்போனது உன்தவமே" என்று சொல்ல, நன்றாய் விடிந்தவுடனே வணிகன் வேந்தனிடம் போய் இந்தச் செய்தியைச்சொல்ல, அரசனானவன், அருகில் நிற்பவரை நோக்கி, "அந்தத் திருடரைத் தேடிக் கண்டுபிடித்துக் கழுவேற்றுங்கள்" என்றான். அப்படியே அந்தக் கொலையாளிகள் விசாரித்துத் திருடினவன் தலையில்லாதிருக்கக்கண்டு,உடலைமாத்திரம் கழுவேற்றினார்கள்.இந்த அநர்த்தத்துக்கு ஹேதுவாக வந்த மூவரும் நீராடிவந்து, விடைபெற்றுப் போகும்போது சலனமில்லாத மனத்தையுடைய கபீர்தாசரானவர்,மனைவியும் தானுமாக அவர்களை உபசரித்து, பெரியோராகிய அவர்களுடனே நகர்ப்புறத்தேவந்து, கழுமரத்தில் முண்டம் நிற்கக்கண்டு, தீர்த்தவாசிகள் "தலையற்ற முண்டத்தைக் கழுவில் ஏற்றுவார்களோ" என்று வியந்துநிற்க, அவர்களைக் கண்டு சவமானது கைகுவித்து வணங்கக்கண்டு "சவம் வணங்குகிற அதிசயம் என்ன?" என்று தீர்த்தவாசிகள் கேட்க, கபீர்தாசர், அவர்களை நோக்கி "பகவத்தாசர்களே! சவம் உம்மைக்கண்டு வணங்குதலாலே, இவன் ஹரிதாசனாக வேண்டும் என்று தோற்றுகின்றது" என்று சொல்ல, அவர்களும் "பகவானுடைய தாசனாகிய இவன் யார்?"என்று கேட்க, கபீர்தாசர் நடந்த செய்தியெல்லாம்சொன்னார். அவர்கள் கபீர்தாசரைப்பிரார்த்தித்து, "எமக்கு அமுதூட்டும்பொருட்டு மகனை உயிரிழக்கும்படி செய்தாயே" என்று இரங்கிநிற்க, கபீர்தாசர் அவர்களைப் பார்த்து "ஐயரே! எவராகிலும் ஹரிதாசர் பொருட்டு உயிரிழந்தால் அது நன்றேயாகும்" என்றார். அதைக்கேட்ட மூவரும் கபீர்தாசருடைய மனைவியைநோக்கி, "உன் மகன் தலையைக் கொண்டுவந்து எமக்கெதிரே வை" என்று சொல்ல, அப்படியே அவள் கொண்டுவந்து வைத்தவுடனே, அந்தத் தலைமேல் தமது தண்டத்தை வைத்து, உடம்பின்மேல் படும்படி பரிசித்து, "எழுந்திரு" என்று சொன்னவுடனே, கமால்தாசர் தூங்கி விழித்தவர்போல் எழுந்து எதிரே நின்ற மூவரையும் வணங்கி நிற்கக்கண்டு, அவ்வூரிலுள்ளோர் யாவரும் ஆச்சரியமடைந்து, பகவத் பக்தர்களாகிய மூவரையும் வணங்கித்தோத்திரம்செய்ய, அவர்கள் விடைபெற்றுக்கொண்டு போனபிறகு, கபீர்தாசர் தமது வீட்டையடைந்து சுகமாக வாழ்ந்திருந்தார்.

அப்படியிருக்கையில் ஓர்நாள் ஹரிபஜனைசெய்துகொண்டு கடைத் தெருவின் வழியாகப் போகும்போது, அவ்விடத்தில் ஒரு மாதானவள் திரிகையில் அரிசியைப்பெய்து மாவாக அரைத்துக்கொண்டு இருக்கப்பார்த்து, தமது பிறவித்துன்பத்தை நினைந்து அழத்தொடங்கினர். அப்போது எதிரில் உள்ள ஜனங்கள் "நீர் அழுதற்குக் காரணம் யாது?" என்று வினவ, அவர்களுக்கு மறுமொழி சொல்லாதிருந்த தாசரிடத்தில் சில தபோதநர்கள் வந்து வினவ, பரிசுத்த மனத்தினையுடைய தாசரானவர் அவர்களை நோக்கி, "திரிகையினால் அரைபட்டு அரிசி சிந்துவதுபோல் பிறவித்துன்பமாகிய திரிகையில் அகப்பட்டு இந்த உயிர் வருந்துகின்றதே என்பதை நினைத்து அழத் தொடங்கினேன்" என்று சொல்ல, அத்தபோதனர்கள் தாசரைநோக்கி "ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநம் பண்ணுகிற வைஷ்ணவர்கள் திரிகையின் மூலையை அடுத்துச் சிந்துகிற அரிசிக்கு நிகராக துன்பத்தில் நின்று நீங்குவார்கள்" என்று சொல்லக்கேட்ட தாசரானவர் மன மகிழ்ந்து அவர்களைத் தழுவிக்கொண்டு தமதுவீட்டுக்கு அழைத்து வந்து சகலமான உபசாரங்களையும் செய்து வாழ்ந்தனர். அப்படி வாழுங்காலத்தில் ஸ்ரீ ஹரிநாமசங்கீர்த்தனம் செய்வதிலேயே மிகவும் விருப்பமுள்ளவராய்ப் பகவத்விஷயமாகிய பிரபந்தங்கள் பலவற்றைச்செய்து, கருணாநிதியாகிய சர்வேசுவரனது நாமஸ்மரணையே நமது பிறவித்துன்பங்களை நீக்குமென்னும் ஞாநம் பெருகப்பெற்றவராய், உத்தமராகிய ஆசாரியரிடத்தில்போய் ஞானோபதேசம் பெற வேண்டுமென்று எண்ணி, பரிசுத்தராகிய ராமாநந்தர் என்னும் பரம பாகவதருடைய திருமாளிகையிற்போய், அவரைச் சேவித்து, "அறிவிகளெல்லாருக்கும் தெய்வம்போல் விளங்குகின்றவரே! அடியேனுக்கு ஞானநிலையை உபதேசித்து அடியேனைக் காத்தருளவேண்டும்" என்று அவரது திருவடியை வணங்கிநிற்க, அந்த ராமாநந்தர் கபீர் தாசரை நோக்கி, "இழிந்தத் துருக்கருக்கு வேதியர் ஞானோபதேசம் செய்வது தகுதியல்ல" என்று சொல்லக்கேட்ட தாசரானவர், "திரிகரண சுத்தியையடைந்து உம்மாலே ஞானத்தைப்பெற விரும்பிவந்தேன், அருள்சுரக்கவேண்டும்" என்றுசொல்ல, அதைக்கேட்ட ராமாநந்தர், "நான் உனக்கு ஞானோபதேசம் செய்யவேமாட்டேன்" என்றார். பிறகு தாசர் "நாம் என்செய்வோம்" என்று மனம் வருந்தி விட்டிற்குவந்து ராமாநந்தருடைய திருவடிகளுக்கு அடிமையாவதற்கும், அவர் திருவாயால் ஸ்ரீ ராமநாம மந்திரோபதேசத்தைப் பெறுவதற்கும் தகுந்த உபாயத்தை ஆலோசித்து, ராமாநந்தர் தீர்த்தமா

டப்போகும் வழியில் ஒரு குழிதோண்டி அதில் இறங்கி இருக்க,
அந்த ராமாநந்தர், சூர்யோதயத்திற்கு முன்னே எழுந்து அந்த வழி
யாய்ப் போகும்போது, தமது பாதம் குழியில் இருக்கிற கபீர்தாச
ருடைய சிரத்தில்படவே, "ஐயோ, நமது பாதம் யார்தலையின்மீதோ
பட்டது" என்றுபயந்து "ராமா" என்று உச்சரித்தார். உடனே கபீர்
தாசரானவர் "ஐயா! ஸதாசாரியரே! தேவரீருடைய திருவடி என்
தலைமீது படப்பெற்றேன்; ஸ்ரீ ராம மந்திரத்தையும் உமது திருவாக்
கால் உபதேசிக்கப்பெற்றேன்; அடியேனுக்கு ஈடேறுங்காலம் நேர்
ந்தது" என்று சொல்லி ஆனந்த பரவசராய்ப் பள்ளத்தில்நின்றும்
எழுந்துநின்று பலவகையாய்த் தோத்திரம்செய்ய ராமாநந்தர் இந்
தத் துருக்கனுக்கு இன்னும் சிலநாள் தாமதித்து, வருத்தம் மிகச்
செய்து, பிறகு உண்மை நிலையை உபதேசிக்கவேண்டும்" என்று
எண்ணி, ஒன்றும் சொல்லாமல் நீராடப்போய்விட்டார். கபீர்தாச
ரும் தமது வீட்டிற்குவந்து ஹரிபஜனைக்குரிய கீர்த்தனங்கள் பல
வற்றைச்செய்து ஒவ்வொரு கீர்த்தனத்தின் முடிவிலும் ராமாநந்த
ருடைய தாசன் என்று அங்கிதம் அமைத்து அவற்றை எவ்விடத்தி
லும் பாடிக்கொண்டு திரிகிற நிலையைக்கண்ட ராமாநந்தர் எழுந்
தருளி, தாசருடைய சிரத்தின்மீது தமது பாதுகையினால் மோதி,
"நான் உனக்கு உபதேசம் செய்யாமலிருக்க, நீ பாடின பாடல்களில்
என் தாசனென்று அமைத்துப் பாடத்தகுமோ" என்று கேட்க,
கபீர்தாசரும் அவரை நோக்கி, "ஸ்வாமி! தேவரீருடைய திருவடி
என் தலையில் பட்டதுண்டு; அதன்மேல் ராமா என்னும் மொழியை
தேவரீர் உச்சரிக்க என்செவியில் பட்டதுமுண்டு; அதுவுமன்றி
உமது ஸ்ரீபாதத்தைத் தாங்குகிற மரவடியை எல்லாரும் காணும்படி
மோதுதல்போல என் சிரத்தில் ஏற்றினீர்; அப்படியிருக்க, என்
பாடலில் உமது தாசனென்று அமைத்துக்கொள்வதற்கு எனக்கு
என்ன பயம்" என்று சொல்லி தலையில்நின்றும் உதிரம் ஒழுகிக்
கொண்டிருக்க வீழ்ந்து வணங்கினார். அப்படி வணங்குவதைக்
கண்ட ராமாநந்தர், தாசருடைய சிரசின்மேல் தமது திருக்கையை
வைத்து, "உன்னைப்போல் ஞானபக்திகளை யுடையவர் இவ்வுலகத்தில்
ஒருவருமில்லை" என்று சொல்லி, இவர் செவியில் ஸ்ரீ க்ருஷ்ண நாமத்
தைப் பொருந்தச் சொல்லி, ராமாநந்தர் தமது வீட்டுக்குப் போனார்;
தாசரும் தாம் வாழ்கின்ற இடத்துக்குப் போனார். இவரைச் சில
நல்லோர் மாத்திரம் துதிக்க, மற்றைத் தீயோரெல்லாரும் சேர்ந்து
"பிள்ளையைக் கொன்ற பாவியாகிய இவன், நல்லவன்போல ஸ்ரீ ஹரி

நாமஜபம் பண்ணுகிறுன்; இவன் இப்படி வேஷம்பூண்டு வாழ்வது வஞ்சகமேயாகும்'' என்று, பலவகையான நிந்தனை வார்த்தைகள் சொல்லிப் பழித்து அவமானஞ்செய்ய, பகவானுனவர் ஆலோசித்து "நான்கு திக்கிலும் நிறைந்திருக்கிற சாதுக்களெல்லாரும் வந்து கூடி, என்வீட்டில் ஒருபந்தியாயிருந்து புசிக்கவேண்டும்'' என்று கபீர்தாசரே எழுதினதாக, எவ்விடத்திலும் ஓலை எழுதிவிட்டார். அந்த ஓலைகளைப் பார்த்த சாதுக்களெல்லாரும், அவர் நியமித்த தினத்திலே வந்துசேர்ந்தார்கள். அவர்களைக் கபீர்தாசர் கண்டு, "இப்படிச் சாதுக்கள் யாவரும் நமது வீட்டில் ஒருமிக்க வந்துசேரும்படி நாம் செய்த புண்ணியம் யாதோ'' என்று மிகவும் மனமகிழ்ந்து, ஒவ்வொருவரையும் தனித்தனியே சேவித்துத் தோத்திரஞ் செய்ய, திருமகள் கொழுநனுகிய பகவான், "இங்கே உண்மையாய் விருந்தென்று நம்பி வந்தவர்களுக்கு விருந்திடாதிருந்தால் நிந்தை யுண்டாகும்'' என்று கபீர்தாசருடைய உருவங்கொண்டு வந்து, ஒவ்வொரு சாதுவுக்கும் ஒவ்வொரு கபீர்தாசர்போலத் தோன்றி அவர்களுக்கு வேண்டிய ஊழியங்கள் எல்லாவற்றையும் செய்து, அவர்களுக்கு அமுது ஊட்டும்போது அங்கே கூடியிருந்த தீயோர்கள் கண்டு, "அநேக கபீர்தாசர்கள் காணப்படுகிறுர்களே! இது என்ன அதிசயம்'' என்று களிப்படைந்துநிற்க, தாசரூபங்கொண்ட பகவான் மூன்று நாளளவும், வந்த சாதுக்களுக்கு நல்ல வுபசாரஞ்செய்து அவர்களைக் களிப்படையப்பண்ணி, பொன், ஆபரணம், ஆடை முதலானவற்றைக் கொடுத்துத் தோத்திரம்செய்ய, சாதுக்கள் யாவரும் பெற்றுக்கொண்டு விடைபெற்றுத் தமது இருப்பிடங்கள் போய்ச்சேர்ந்தார்கள். பகவானும்போனுர். பலவகையா யிகழ்ந்த தீயோரெல்லாரும் அஞ்சி வந்து, மெய்யன்பராகிய கபீர்தாசர் ஸ்ரீ பாதங்களைத்தாழ்ந்து வணங்கிச் சொல்லுகின்றுர்கள்: எப்படியென்றுல், "ஐயா கபீர்தாசரே! தேவரீருடைய பரிசுத்தமான மனத்தை நாங்கள் அறியாமல் செய்த பிழையைப் பொறுக்கவேண்டும்'' என்று பிரார்த்தித்துப் பலவிதமாகத் தோத்திரம்பண்ணித் தமது இருப்பிடம் போனுர்கள். கபீர்தாசரும் மேகவண்ணனுகிய ஸ்ரீ கண்ணபிரானை நினைத்து, "ஓ பகவானே! என்னை அவமானஞ் செய்யவேண்டுமென்றெண்ணி வந்த துஷ்டர்கள் நாணும்படியாக, வந்த சாதுக்களெல்லாருக்கும் எல்லாப் பொருள்களையும் அமைத்து அவர்களை மகிழ்வித்தாய்; உன் பெருங் கருணையை என்னென்று புகழ்வேன்'' என்று வாழ்த்திச் சிலநாள் கழிந்தபிறகு, ஸ்ரீ பண்டரிபுரத்தை யடைந்து அந்தத் திவ்யதேசத்

தெய்பெருமானைப் புகழ்ந்து வாழ்த்தி, சேதுவுக்குப்போக நினைத்து விட்டலனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, வழிநடந்து போகும் போது, வழியிலுள்ள ஒரூரில் ஒரு ராத்திரி ஹரிபஜனை செய்ததைத எல்லாரும் அறிந்து, மிகவும் மனமகிழ்ந்தார்கள். அவ்விடத்தில் ஜிவா, தத்துவா என்னும் இரண்டு பக்தர்கள் வந்து இவர் ஸ்ரீ பாதத் தைவணங்கி, தோத்திரம்செய்து "எங்களுக்கு ஞானோபதேசம் செய் தருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, கபீர்தாசர் அவர்கள் மனக் கருத்தை யறிந்துகொண்டு, அவர்கள் சிரத்தில் தமது கையைவை த்து உபதேசமும்செய்து, சேதுமுதலாகிய ஸ்தலங்களைச்சேவித்து, காசிக்ஷேத்ரத்தை யடைந்தார். இவர் உபதேசிக்கப்பெற்ற இருவரு டைய ஊரிலுள்ள வேதியர் பலரும், "இவர் மனைவி மக்கள் தமை யன் தம்பிமார் முதலாகிய எல்லாரையு மிகழ்ந்து, ஒரு துருக்கனை யடைந்தார்" என்று நிந்தித்துப் பேசிச்செய்யும் நிந்தையையெண்ணு மல், இவ்விருவரும்பெற்ற மக்களுக்குத் தகுந்த பெண்ணும் பிள்ளை யும் வாய்க்காமல், மிகவும் மனம் வருந்திக் காசியை யடைந்து, கபீர் தாசரை வணங்கி, "ஐயனே! எம்மூரிலுள்ள அந்தணர்கள் யாவரும் பரிசுத்தராகிய உம்மை யாம் அடிதொழுதற்கு மனமிசையாமல்எமது மனம் நையும்படி நிந்தித்தார்கள்" என்று சொல்ல, உண்மைநிலையை யறிந்த கபீர்தாசர், அவர்களைநோக்கி, மறுமொழிசொல்லுகிறார்:"உன் மகளை உன்மகனுக்கு மணஞ்செய்வித்துக்கொள்ளும்" என்றுசொல்ல, அப்படியே செய்யத்துணிந்து, தமது ஊருக்குவந்து மணமுகூர்த்த மிட, அதை அறிந்த அவ்வூர் வேதியர் யாவரும்வந்து, "நீங்கள் மிருக சாதியின்முறைபோலச் செய்கிற மணம் நன்றாயிருக்கவில்லை" என்று சொல்லி, அவர்களுக்குப் பிராயச்சித்தம்செய்வித்து, உறவாக்கிக்கொ ண்டு,"துருக்கனைக்குருவென்றுஆசிரயித்ததற்கு ஸ்ரீலக்ஷ்மீநாதன்திரு வுள்ள முவப்படையமாட்டார்" என்று சொல்லி, மகனுக்குத் தகுந்த மகளையும், மகளுக்குத்தகுந்தமகனையும் தமக்குள்ளேயமைத்து மண ப்பித்தார்கள். பிறகு இந்த இருவரும்போய்க் கபீர்தாசரை வணங்கி, மணச்செய்தியையுஞ் சொல்ல, கபீர்தாசரும் மகிழ்ந்தார். இவ்விரு வரும்அவரைவணங்கிச்சென்று தமது ஊரையடைந்தார்கள். இப்படி யிருக்க, ஒருநாள் துளசிமணிமாலையையும் துவாதசநாமங்களையும் உடையவர்களாகிய வைஷ்ணவர்கள் பதினுபிரம்பேர் ஒருமிக்கக் காசி க்ஷேத்ரத்தை யடைந்து, "இங்கு வந்தவர்களுக்கு உணவாதிகளைக் கொடுத்து உபசரிப்பவர்களாகிய உத்தமர்கள் இருக்கிறார்களோ" என்று விசாரிக்க, அங்குள்ளவர்கள் "கபீர்தாசர் என்ற ஒரு துருக்க

வைஷ்ணவர் இருக்கிறார். அவர் அந்நதாநஞ் செய்கிறார்" என்று சொல்ல, அவரிடத்திற்போய், "ஸீதா ராமா" என்று உச்சரிக்க வீட்டுக்குள்ளேயிருந்த தாசர் வெளியேவந்து, இந்தப் பெருங்கூட்டமாகிய பாகவதரைக் கண்டு அடி வணங்கினார். வந்தவர்கள் இவரை நோக்கி, "எமக்கு உணவமைக்க வேண்டும்" என்று சொல்ல, கபீர்தாசரும் "அப்படியே யாகட்டும்" என்று, அவர்களை யழைத்துக்கொண்டு துளசிநாசன் என்னும் ஓர் வணிகனிடத்திற் போய், "ஐயா வணிகசிரேஷ்டரே! என்னை நாடிவந்த இந்தப் பதினாயிரம் பேருக்கும் மனமகிழும்படி உணவாதிகளைக் கொடுத்து உபசரிப்பீரானால் உமக்குப் பெரும் புண்ணிய முண்டாகும்" என்று சொல்ல, மேல் விளைவதை யறியாத அவ்வணிகன், தாசரை நோக்கி, "நீ கேட்டுக்கொண்டபடியே நான் நடத்தினால், "உன் மனைவியை ஒருநாளிராமுழுதும் என்னைக் கூடி யநுபவிக்கும்படி அனுப்புவாயோ" என்று கேட்க, தாசரும் "அப்படியே செய்கிறேன்" என்று உறுதி கூறினார். இவ்வுறுதி மொழியைக் கேட்டு வணிகன், இவர் வேண்டுகோளின்படி பதினாயிரம் பேருக்கும் வேண்டிய உணவு முதலியவற்றைக் கொடுத்து மகிழ்வித்த பிறகு, தாசரானவர் தமது மனைவியை நோக்கி, "வணிகனுக்குத் தாம் சொன்ன வுறுதிமொழியைச் சொல்லி, அவ்வாறு நடந்து கொண்டால் நன்மையாம்" என்று சொல்ல, அதற்கு மனைவியும் சம்மதித்ததின்பேரில், அவளை யழைத்துக்கொண்டு போய், வணிகன் வீட்டின் வாசற்படியில் விடுக்க, வணிகனும் செய்தியை யறிந்துகொண்டு, வெளியே வந்து பார்த்து மனமகிழ்ந்து நெருங்கும்போது, ஸ்ரீ பகவானானவர் அந்த நகர்க்கு அதிகாரியின் உருவங்கொண்டுவந்து வில்வளைத்துக்கொண்டு, வணிகனுக்கெதிரில் நின்று, "தந மதம் மிகுந்த புலையனே! என் தங்கையானவள் உன்னை யணைய விரும்பினாளாதலால் உன்னை ஒரு அம்பைக்கொண்டு தலையை யறுப்பேன்" என்று அதட்டிச் சொல்ல, வணிகன் பயந்து அடி வணங்கி, "சுவாமீ! என் குற்றத்தைப் பொறுத்து என் உயிருக்கு அபயங் கொடுத்தால் என் பொருள் எல்லாம் தருவேன்" என்றுசொல்ல, அதிகாரி வேஷம் பூண்ட பகவான் வணிகனை நோக்கி, "இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வாயானால், உன் தலையைத் தப்பாமல் அறுப்பேன்" என்று சொல்லி, "வணிகனே! இந்தக் கற்புடையாளையும் வணங்கு" என்று சொல்ல, அப்படியே வணங்கின பிறகு, அவளை யழைத்து வந்து, தாசர் மனையில் விடுத்து மறைந்து போனார். பிறகு கபீர்தாசரானவர் தமது மனைவியை நோக்கி, "பெண்ணே! என் பேச்சைக் கடந்து

இவ்விரவில் அங்கே யிருக்காமல் வந்து விட்டாயே, இது உனக்கு நன்மையோ'' என்று கேட்க, மனைவியானவள் தாசரை நோக்கி, "உம்முடைய வார்த்தையின்படியே நான் அந்த வணிகன் வாசற்படியில் நிற்கும்போது, வணிகன் வெளியேவந்து என்னை நெருங்கினான்; அப்போது, இவ்வூர்க்கு அதிகாரியென்பவன் கையில் வில்லும் அம்புமாக வந்து, வணிகனைத் "தலையறுப்பேன்'' என்று பயமுறுத்தி என்னை யழைத்து வந்து இவ்விடத்தில் விட்டுப் போனான்'' என்று சொல்ல, தாசரானவர் ஊர்க்கதிகாரியா யிருப்பவன் வீட்டிற்குப்போய்க் கதவைத் தட்டி, தூங்குகிறவனை யெழுப்பி, "ஏன் இப்படிச் செய்தாய்?'' என்று வினவ, "அவன் எனக்கு இந்தச் செய்தியாதொன்றுந் தெரியாது'' என்றான். அவன் சொன்ன சொல்வன்மையால், இப்படிச் செய்தவன் ஸ்ரீமந் நாராயணனேயென்று துணிந்து, வணிகனிடத்திற் போய், "வணிகோத்தமனே! வேதங்கள், வேதியர்கள், முனிவர்கள் ஆகிய எல்லாராலும் அறிய வொண்ணாத ஸ்ரீமந் நாராயணனே ஊரதிகாரிபோலவேஷம் பூண்டு உனக்கு ப்ரத்யக்ஷமானார்'' என்று சொல்ல, வணிகன் தாசரை வணங்கி, "பாகவதோத்தமரே! உம்முடைய பெருங்கருணையாலல்லவோ எனக்குப் பகவானுடைய சேவை கிடைத்தது'' என்று சொல்லி, அன்றுமுதல் ஹரிநாமசங்கீர்த்தநம் பண்ணிக்கொண்டிருந்தான். தாசரும் தாம் இருக்குமிடத்தையடைந்து ஸ்ரீஹரிபஜநம் செய்துகொண் டிருந்தார்'' என்று சொல்லி மேலே ஞாநதேவர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினார்.

கபீர்தாசர் சரித்திரம் முற்றிற்று.

ஆறுவது

ஞானதேவர் சரித்திரம்.

கங்காநதிக்கரையில் ஆப்கா என்னும் ஊரில் கருணிககுலத்தில் விஷ்ணுபக்தராகிய கோவிந்த பண்டிதர் என்பவர் ஒருவர் வாழ்ந்திருந்தார். அவருடைய பத்நியாகிய நிருபாயி என்பவள் கற்பிற் சிறந்தவளாயிருந்தாள். இவ்விருவருக்கும் நெடுநாளாய்ப் புதல்வர் இல்லாமலிருந்து, பிறகு பகவானுடைய பேரருளால் ஒரு புதல்வர் அவதரித்தார்; அந்தப் புதல்வருக்கு விடோபா என்று பெயரிட்டு அன்போடு வளர்த்துவந்தார்கள். அப்படி அந்தப் புதல்வர் வளர்ந்து வரும்போது, பருவங்கண்டு உபநயநஞ்செய்து கல்வி கற்பிக்க, அந்தப்புதல்

வர் சகலகலைகளையும் கற்று அறிவிற் சிறந்தவராயிருந்தார். அப்படியிருக்கும்போது, ஒருநாள் பகவதநுக்ரஹத்தால் அவருக்குத் தீர்த்தயாத்திரை செய்யவேண்டுமென்கிற விருப்பமுண்டாக, தாய்தந்தையரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, அவ்வூரைவிட்டு, ஸ்ரீ ஹரிநாமசங்கீர்த்தநம் செய்துகொண்டே போய்த் துவாரகாபுரியை யடைந்து, கோமதி நதியில் முழுகி, ஸ்ரீ கண்ணபிரான் எழுந்தருளியிருக்கிற கோயிலுக்குப் போய், அவரை வணங்கி, அவ்வூரைவிட்டு, முற்காலத்தில் மச்சரூபியாய்ச் சங்காசுரனுக்கு மோக்ஷத்தைக் கொடுத்த எம்பெருமானிடத்திற்போய், அவரை வணங்கி, தர்மபுரியைக்கண்டு, மூலமாதவமடைந்து, அப்பால் பாலுகாதீர்த்தம், சோமநாதம், தவளபுரி என்னும் க்ஷேத்ரங்களெல்லாம் சேவித்து, அவ்வழியிலுள்ள தீர்த்தங்களிலெல்லாம் நீராடி, அளகாவதியென்னும் ஊரைச்சேர்ந்து சக்கரதீர்த்தத்தில் மூழ்கி, அந்தத் தீர்த்தக்கரையி லெழுந்தருளியிருக்கிறபகவானை வணங்கி அங்கே வாசம் பண்ணுங்காலத்தில், அவ்வூரில் வாழ்வோராகிய சித்தோபண்டிதர் என்னும் வேதியர், இந்த விடோபாவைக்கண்டு, “உமது பேர் யாது? எங்கேயிருந்து வந்தீர்?” என்று வினவ, இவர், “எம்மூர் ஆப்காமூர், என்பெயர், விருத்தாசாரிகளுக்குப் பிறந்த விடோபா, நான் இந்தத்திசையிலுள்ள நதிகளில்மூழ்கவேண்டுமென்கிற விருப்பமுடையவனாய் வந்தேன்” என்று சொல்ல, சித்தோபண்டிதர் கேட்டு மனமகிழ்ந்து, இது சுதினமென்று இவரைக் கொண்டாடித் தமது மனைக்கு அழைத்துக்கொண்டு போய், அறுசுவைப் பதார்த்தங்களோடு கூடின உணவை யுண்பித்து, பிறகு, இருவரும் கண்ணுறங்கும்போது, சித்தோபண்டிதர் கனவில், பாண்டுரங்கன் எழுந்தருளி, “பண்டிதரே! உமது புதல்வியை இந்தப்ரஹ்மசாரிக்கு மணம் புணர்வித்தால் உமக்கு நன்மையுண்டாகும்” என்று சொல்ல, சித்தோபண்டிதர் உடனே விழித்தெழுந்து விடோபாவுக்கு இந்தச் செய்தியைச் சொல்ல, விடோபாவானவர், “உமக்குக் கனவில் வந்து சொன்ன பாண்டுரங்கன் என் கனவில் வந்து சொல்லலாகாதோ” என்ன, பண்டிதர் விடோபாவை நோக்கி, “இன்றிரவும் இவ்விடத்தில் தங்குவீரானால் அப்படியே பகவான் க்ருபைசெய்வார்” என்று சொல்ல, அப்படியே தங்கியிருந்து உறங்கும்போது, பண்டரிநாதன் இவர் கனவிலெழுந்தருளி “நீர் இந்தப் பண்டிதருடைய புதல்வியை மணம்புரிந்துகொண்டால், அவள்வயிற்றில் நன்மக்கள் நால்வர் பிறப்பார்” என்று சொன்னதுகேட்டு, விழித்தெழுந்து பண்டிதருக்குத் தமது கனவின் செய்தியைச் சொல்ல, பண்டி

தர் புரோகிதரை யழைப்பித்து, சுபமுஹூர்த்தத்தை ஆராய்ந் தமைத்து, அந்தச் சுபமுஹூர்த்தத்தில் தமது புதல்வியை மணம் புணர்வித்து, நான்கு நாள் கழிந்தபிறகு, விடோபாவானவர் பண்டித ரைநோக்கி, "இது கடகமாச மாதலால், பண்டரிபுரத்துக்குப்போய், பகவானைச் சேவிக்கவேண்டும்" என்று சொல்ல, பண்டிதரும் அப் படியே செய்யலாம்; உமது மனைவியையும் அழைத்துக்கொண்டு போம்" என்று சொல்ல,அழைத்துக்கொண்டு பண்டரிபுரத்தையடை ந்து, அங்குள்ள சந்திரபாகைநதியில் நீராடிப் பண்டரிநாதன் கோயி லிற்போய் வணங்கி ப்ரதக்ஷிணம்செய்து, கருடஸ்தம்பத்தையடை ந்து சேவித்து, எம்பெருமானாகிய ஸ்ரீ கண்ணபிரானை நின்றும் விழு ந்தும் தொழுதுநிற்க, சித்தோபண்டிதரும் அவ்விடத்துக்கு வந்தார். வந்தவரை வணங்கி, "நான் சேதுவுக்குப் போய்வரவேண்டும்" என்று சொல்ல,இவருடைய மனநிலையைக்கண்டு "அப்படியேபோய் வாரும்" என்றுசொல்லி பண்டிதர் அளகாபுரியைச்சேர்ந்தார். விடோ பாவானவர் பண்டரிநாதனிடத்தில் விடைபெற்றுப்போய், ஸ்ரீ சை லம், மல்லிகார்ஜுநம் முதலாகிய ஊர்களைக்கண்டு சேவித்து, சேது ஸ்நாநமும்செய்து, பிறகு அளகாபதியையடைந்து மாமனாரை வண ங்கி, நான்குநாள் கழிந்தபிறகு மாமனாரை நோக்கி, "என் தந்தை தாயரைக்கண்டு வணங்கிவரவேண்டும், ஆகையால் விடைதரவேண் டும்" என்று கேட்க, பண்டிதர் "நானும் உமது தந்தை தாயரைக் காணவேண்டும்" என்று சொல்லிப் பிரயாணமாகித் தம்பதிகளோடு வந்து, தந்தை தாயாருக்குத் தண்டம் சமர்ப்பித்து,"எம்பெருமான் நியமித்தபடியே மணமுடிந்தது" என்று விண்ணப்பஞ்செய்ய, அவர் களும் மகிழ்ந்தார்கள். பிறகு தம்மகளையும் மருமகனையும் அங்கே விட்டுப் பண்டிதர், தம்மூருக்குப் போய்விட்டார். பிறகு விடோபா வின் தாய் தந்தையர்க்கு மரணம் சம்பவிக்க, அவர்களுக்குச் செய்ய வேண்டிய க்ரியைகளெல்லாவற்றையும் செய்து, சற்றும் மனம்வரு ந்தாமலும் குடும்பத்தில் பற்றில்லாமலும் இருப்பதைப் பண்டிதர் கேள்விப்பட்டுப் புறப்பட்டுவந்து, மருமகனுக்கு ப்ரியவசநங்கள் சொல்லி, "குடும்பத்தில் மனமில்லாமலும் பொருள் தேடாமலும் இருப்பீரானால் இல்வாழ்க்கை நடவாது, ஆகையால் எம்மூர்க்கு வா ரும" என்று அழைத்துக்கொண்டுபோய், எல்லாரும் ஒருமித்துவாழ்ந் திருந்தார்கள்.

இப்படியிருக்கும் நாளில், அவ்வூரில் பஜநம் செய்துகொண்டும், ஆடிமாச ஏகாதசியில் தவறாமல் விட்டலனைச் சேவித்துக்கொண்டும

தங்கியிருந்து, சிலநாள் கழிந்தபிறகு, ஒருநாள் மனைவியை நோக்கி, "பெண்ணே! இந்தஇல்வாழ்க்கையில் எனக்குமிகவும் வெறுப்புண்டாயிருக்கின்றது, ஆகையால் நான் காசிக்குப்போய்ச் சந்நியாசம் பெற்றுக்கொள்ளுகிறேன்" என்று சொல்லி, "நீ விடைகொடுத்தனுப்ப வேண்டும்" என்று கேட்க, மனைவியானவள் மறுமொழி கொடாமல் சென்று இந்தச் செய்தியைத் தாய் தந்தையருக்குச்சொல்ல, சித்தோ பண்டிதர், தம்மகளைப் பார்த்து, "புத்திரனில்லாதவர் சந்நியாசம் பெறுதல் விதியல்ல" என்று சொல்ல, மனைவியானவள் விடைகொடுக்காதிருக்க, தாசரானவர் "யாம் கங்கா ஸ்நாநத்துக்குப் போய்வருவோம்" என்று சொல்லிப்போனார். வலையில் நின்றும் விடுபட்ட மான் போலத் திரிவேணி சங்கமம்போய், பிரயாகையில் நீராடி, விஷ்ணு பத்தர்சொல்லும் புராணங்கேட்டு, நிலையில்லாத சம்சாரமானது ஜநந மரணங்களைக் கொடுக்குமென்றறிந்து, ஸ்ரீ பாதர் என்னும் தபோதநரைச் சத்பாவத்துடன் வணங்கி, "உன்னை நாடிவந்த எனக்குத் துறவில் விருப்பமுள்ளது, அதனை அடியேனுக்கு க்ருபைசெய்யவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, அந்த ஸ்ரீ பாதர் இவரைநோக்கி "உனக்கு மனைவி மக்கள் உளரோ" என்று வினவ, "இல்லை, நானொருவனாகவேயிருக்கிறேன்" என்று சொல்ல, ஸ்ரீ பாதர் இவர்க்கு, தீக்ஷைசெய்து ஸந்யாஸ ஆசிரமத்தையும் கொடுத்தார். பிறகு விடோபாவானவர் காசிக்ஷேத்ரத்தில் நான்காம் ஆசிரமத்தை யடைந்திருப்பதை அறிந்து, சித்தோ பண்டிதரானவர், "பிள்ளை பெறாதவர்க்குத் துறவு கொடுப்பது நன்மையல்ல" என்று சொல்லி, அதனாலே துயரத்தை யடைய, மனைவியுங்கேட்டுத் துன்பமடைந்து, தெளிந்து, அரசமரத்தை நாள்தோறும் வலம் வருதலையே விரதமாகக்கொண்டு, நடத்திவருங்காலத்தில், ஒருநாள் தன் கணவனுக்குத் துறவுகொடுத்த ஸ்ரீ பாதர் அந்த அரசமரத்தடியில் வந்திருப்பதை விடோபாவின் மனைவி பார்த்து, அவரை வணங்க, ஸ்ரீ பாதர் அவளை நோக்கி, "நீ நான்கு மக்களைப் பெறுவாய்" என்று ஆசீர்வதிக்க, அந்தப் பெண்ணானவள் நகைத்தாள்; நகைத்தலும் ஸ்ரீபாதர் அவளை நோக்கி, "ஏன் சிரிக்கிறாய்?" என்ன, அவள் "சுவாமீ! என் கணவன் காசியிற்போய்த் துறவு பெற்றுக்கொண்டார்; அப்படியிருக்கக் கணவனில்லாமல் புத்திரப் பேறுண்டோ" என்று கேட்க, அந்தக் குருவும், "பிள்ளையில்லாதவர்கள் துறவுபெறுதல் பாவம்; அவர்களுக்குத் துறவுகொடுக்கும் குருவுக்கும் பாவமே" என்று அடையாளங்கேட்டுத் தெரிந்துகொண்டு,

"பெண்ணே! உன் தந்தையை யழைத்து வரவேண்டும்" என, விரைந்துபோய்த் தந்தைக்குச்சொல்ல, உடனே அவர் வந்து ஸ்ரீபாதரை வணங்க, ஸ்ரீபாதர் சொல்லுகின்றார்: "உன்மகளை ஒரு வாஹநத்திலேற்றிக்கொண்டு நீ காசிக்கு வா" என்று துறவினரை யழைத்துக் கொண்டு மகிழ்ச்சியுடனே விரைந்துபோனார். போனபின்பு, ஸ்ரீபாதர், சைதந்யர் என்னும் பெயர்பூண்ட சீடருடைய முகத்தை நோக்கி "உனக்கு மனைவியுண்டோ இல்லையோ?" என்று வினவ, ஞான குருவின் அடியை வணங்கி, விடோபா, உள்ள சங்கதியைச்சொல்ல, நல்லதென்று "நீ மனைவியோடுபோய் ஊரில் வாழக்கடவாய்" என்றுசொல்ல, அப்படியே அவரும்போய் மனைவியோடு சேர்ந்தபிறகு, ஊரிலுள்ளோர், "துறவுபூண்டவன் மறுபடியும் இல்வாழ்க்கைக்கு வரலாமோ" என்று பழித்துக்கூற, விடோபாவானவர், திருமாலின் திருநாமங்களை உச்சரித்துக்கொண்டிருக்க, அவ்வூரிலுள்ள வேதியரெல்லாரும் தம் குலத்தினின்றும் விலக்கிவிட, ஊரைவிட்டு நீங்கி, காட்டிற்போய் ஒரு குடிசை யேற்படுத்திக்கொண்டு அதில் தமது பத்நியோடு வாழ்ந்திருந்தார். இப்படிப் பன்னிரண்டு வருஷகாலம், யாசித்துக் காலங்கழித்துக்கொண்டிருக்கையில், இவர்க்கு மூன்று ஆண் குழந்தையும், ஒரு பெண்குழந்தையும் பிறக்க, அவர்களுள் முதற் குழந்தைக்கு நிவர்த்தி என்றும், இரண்டாங் குழந்தைக்கு ஞானதேவென்றும், மூன்றாங்குழந்தைக்குச் சோபாநர் என்றும், பெண்ணாகிய நான்காங் குழந்தைக்கு முத்தாயி என்றும் பெயரிட்டு வளர்க்க, "அவ குலத்திற் பிறந்த மக்களாகையால் இவர்கள் முகத்தையும் பார்க்கலாகாது" என்று யாரும்பழித்துச்சொல்லக் குழந்தைகள்வளர்ந்துவரும் நாளில் உபநயநம் செய்யத்தகுந்த பருவம் வந்தவுடனே மனைவியானவள் கணவனை நோக்கி, "நமது புதல்வருக்கு உபநயநம் நடத்தவேண்டும்" என்று சொல்ல, அதைக் கேட்ட ஞானவானாகிய விடோபாவானவர், வேதியரை வரவழைத்து, "நான்செய்த பிழைகளைப் பொறுத்து, ப்ராயச்சித்த நூல்களில் விதித்தபடி ப்ராயச்சித்தம்செய்து, உபநயநச்சடங்கு செய்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்கும் போது, மூத்த பிள்ளையானவன் வந்து, "பெரியோர்களே! உங்களுடைய முகங்களைக் கண்டபோதே நாங்கள் பரிசுத்தராய்விட்டோம்; ஆகையால் நாங்கள் ஆறுபேருக்கும் ப்ராயச்சித்தம் செய்தருள்வீர்" என்று ப்ரார்த்தித்து நிற்க, வேதியர், "உங்களுடைய உடம்பை நீருக்குதலேயன்றி வேறு ப்ராயச்சித்தமும் உபாயமுமில்லை" என்று

சொல்ல, ஞானதேவர் அவ்வேதியரை வணங்கித் திரும்பிப்பாராமல் காட்டுக்குப்போய்த் தனியேயிருந்தார். இப்படிப்போனவரைக்கண்டு அநுதாபமிருந்த வேதியர்கள், "நீங்கள் எங்கள் அநுதாபமாகிய நெருப்பினால் சுடப்பட்டீர்கள்; இதுவே போதும், வேறு நெருப்பி னால் சுடவேண்டுவதில்லை" என்றார்கள். அப்போது நிவர்த்தியென் கிற பெரியபிள்ளை வந்து, "வேதியரே! எங்களுக்கு எப்படி விதிக் கிறீர்களோ, அப்படிச்செய்வோம்" என்றுசொல்ல, அந்தவேதியர்கள் இவர்களை நோக்கி, "நீங்கள் உங்களுடைய ஊருக்குப்போய், உங்களு டைய சுற்றத்தாரைக்கொண்டு உங்கள் குலமுறைமையைத்தெரிந்தெழு திக்கொண்டு வாருங்கள்" என்று சொல்ல, நிவர்த்திதேவரானவர், நமது குலம் நமக்கு நன்றாய்த் தோன்றும்போது நாம் ஒருவரைக் கேட்கவேண்டியதென்ன?" என்றார். ஞானதேவரானவர், "ஜீவந் முக்தபதம் தோன்றினாலும் ஸ்வதர்மத்தை விடலாகாது" என்று சொன்னார். இப்படி இவர் சொன்னபோது, சோபானர் வந்து, "சாதி யினால் ஒரு ப்ரயோஜநமுமில்லை; யாராயிருந்தாலும் பக்தியில்லாமல் ஸ்ரீ ஹரிபாதத்தை அடையமாட்டார்கள்; வசிஷ்டர் முதலானவ ருடைய பிறப்பின் வகையென்ன; ஆலோசிக்குமிடத்தில் தாழ் ந்த குலத்தினனா யிருந்தபோதிலும் கடவுளிடத்தில் அன்புடையனா யிருந்தால், அவனுடைய தீமைகள் யாவும் நசித்துப்போகும் என்று சாஸ்திரங்களில் சொல்லப்படவில்லையா?" என்று சொல்லி நின்றார். அப்போது அந்த வேதியர் இவர்களுடைய குலமுறைமையை எழு தித் தந்தாரேயன்றிப் பிராயச்சித்தம் நியமிக்கவில்லை. அதைக் கண்டு, இவர்கள் கோதாவரி நதியில் நீராடி, அப்பாற்போய்ப் பிரம புரத்தையடைந்து, அங்கிருக்கும் வேதியரைச் சேர்ந்து, "பொ றுமையுடையவர்களே!" என்று வணங்கிப் பத்திரத்தையுங் கொடு த்து, உள்ளசங்கதியையும் சொல்லி நின்றார்கள். அவர்களும் "ப்ரா யச்சித்தமில்லை" என்று சொல்ல, அவர்களிற் சிலர் "உங்களுக்குத் திருமாலிடத்தில் அன்புண்டானால் அதுவே போதும், வேறொன் றும் வேண்டியதில்லை" என்று சொல்ல, இவர்களும் "ஐயரே! நாங்கள் நினைத்தபடியே சொன்னீர்கள்" என்ன, அவ் வேதியர் ஞாநதேவரை நோக்கி, "உமக்குத்தெரியாதது என்ன இருக்கின்றது; நீர் ஞாநதேவர் என்கிற பெயரையும் படைத்திருக்கிறீர்" என்று சிலர் சொல்லும் போது, அங்கேயிருந்த ஒருவன், "இந்தப் பொதி யெருதுக்கும் ஞாந தேவென்னும் பெயருண்டு; இதனால் என்ன ப்ரயோஜநம்" என்று

சொல்ல, ஞானதேவர் அறிந்து, "நல்ல வார்த்தை சொன்னாய்; நானும் அதுவும் சரியே" என்று சொல்ல, அவன் "நீயும் அதுவும் சமமானால், அதற்கு நேரிட்டதெல்லாம் உனக்கும் நேரிடுமோ?" என்ன, "அப்படியே நேரிடும்" என்றார். அவன் "அதைப் பார்க்கிறேன்" என்று அந்தக் கடாவைத் தடியா லடித்தான். அந்த அடி ஞானதேவர் முதுகிற்பட்டுத் தடித்ததை வேதியர் பார்த்து, "இந்தக்கடா உன்னைப்போல நான்கு வேதங்களையும் ஓதுமோ?" என்ன, ஞானதேவர் எழுந்து "இந்த க்ஷணமே பாருங்கள்" என்று கடாவின் தலைமேல் கையைவைத்து, "வேதத்தை ஓதுவாயாக!" என்று சொல்ல, அந்தக் கடாவானது வேத வ்யாஸரைப்போல நான்கு வேதங்களையும் ஓத, வேதியரெல்லாருங் கண்டு, அதிசயித்து, "ப்ரஹ்மதேவன் முதலானோர் செய்தற்கரிதான செயலை இவர் செய்தலால், இவர் நரர் அல்லர்; அவதார புருஷரே யாவர்; இவர்க்கு எவர்களை இணையாகச்சொல்லலாம்; பொருளாசை யுடையோமா யிருக்கிற நாம் வேதியராய்ப் பிறந்ததன்றி, நல்லொழுக்கம், பக்தி, பரிசுத்தமனம் என்கிற இவற்றுள் ஒன்றையாயினும் உடையோ மல்லோம்; ஆகையால் இவரைப் போல்வாராகிய வேதியர் இவ்வுலகி லில்லை; இவரை ஈன்றவர்கள் என்னதவம் செய்தார்களோ" என்று சொல்லிப் புகழ, இவர்களும் அவ்வேதியரைப் புகழ்ந்துதோத்திரம்பண்ணி, "எல்லாம்உம்முடைய பெருமையே யாகும்" என்று சொல்ல, அவ்வூரிலுள்ளவ ரெல்லாரும் "இவர்கள் மிகவும் நல்லோர்களும் ஹரிபக்தர்களுமா யிருக்கிறார்கள்" என்று பேசிக்கொள்ள, நால்வரும் போய் ஒரு வேதியன் வீட்டி லிறங்கி, புராண சிரவணஞ்செய்துகொண்டும், ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டும், தங்கியிருக்குங்காலத்தில், இவர் தங்கியிருந்த வீட்டுக்குடையவனாகிய வேதியன், "தன் பித்ருசிரார்த்தம் வந்தது" என்று, சூழ்ந்திருக்கிற வேதியரை போஜனத்துக் கழைக்க, அவர்கள், இவ்வேதியனை நோக்கி, "நீ துறவின் மக்களை உன் வீட்டில் சேர்த்து வைத்திருக்கிறாயாதலால் உன் வீட்டில் நாங்கள் போஜனம் செய்யமாட்டோம்" என்றார்கள். அதைக்கேட்ட ப்ராஹ்மணன், "இதற்கென்ன செய்வோம்" என்று எண்ணமிட்டுக்கொண் டிருக்கையில், அவனை ஞானதேவர் பார்த்து, "நீ மனம் வாடி யிருப்பதற்குக் காரணம் என்ன?" என்று கேட்க, அவ்வேதியன், "இன்று என் பிதருக்குச் சிரார்த்ததின மாதலால் சில ப்ராஹ்மணரை போஜனத்துக்கழைத்தேன்; அவர்கள் "உன்வீட்டில் துறவி மக்களை வைத்துக்கொண் டிரு

ப்பதனுல் நாங்கள் உன் வீட்டில் போஜநம் செய்யமாட்டோம்'' என்ருர்கள்; இதுதான்என் வாட்டத்துக்குக் காரணம்''என்ருன். ஞாநதேவர் அவனை நோக்கி, ''நீ அஞ்சவேண்டாம், அறுசுவைப் பதார்த்தங்களோடு கூடிய போஜநம் அமைத்து வை; உன் பிதுர்க்கள் நேரே வந்து உண்ணும்படி செய்கிறேன்'' என்று சொல்லக்கேட்ட வேதியன் அதிசயங்கொண்டு, நீராடி வந்து எல்லா உணவுகளையும் சித்தப்படுத்தி, வாழை இலையிற் பரிமாறி, ''உண்பதற்குப் பிதிரரை அழையும்'' என்று சொல்ல, ஞானதேவர் அக்ஷதையை இலை மேல் பெய்தமாத்திரத்தில் பிதிரரெல்லாரும் வர, அவர்களுக்கு அர்க்கிய பாத்யாதி உபசாரங்கள் செய்து, ஆசநம் தந்து, ஆடை ஆபரணங்களோடு தக்ஷிணையும் தந்தான். பிறகு தூபதீபங்களோடு, ''பித்ருரூப ஜநார்த்தந வாசுதேவ மூர்த்திக்கே ப்ரீதியாகக் கடவது'' என்று சொன்னவுடனே பிதிரரெல்லாரும் அமுது செய்தார்கள. அவ்வேதியன் இந்த அதிசயத்தைப் பார்த்து, மஹதாநந்தத்தை அடைந்தான். இந்த அற்புதத்தை அவ்வூரிலுள்ள வேதியரெல்லாரும் சாளரங்களிலும் இறப்புக்களிலும் பதுங்கிப் பார்த்தார்கள். பிதிரரெல்லாரும் போஜநம் செய்தானவுடனே, ஞாநதேவர் அவர்களை நோக்கி, ''பாபராசியைக்கடந்தவர்களே! நீங்கள் போகலாம்'' என்று சொல்லவே மறைந்துவிட்டார்கள். அதைக்கண்ட மறையோரெல்லாரும் ''இது என்ன புதுமை; பிதிரரை வரவழைத்ததை நோக்கினுல் இவர்கள் நரர்களேயல்லர் என்றும், த்ரிமூர்த்தி ஸ்வரூபிகளென்றும் தோன்றுகின்றது; இவர்களுடைய மகிமையை அறியாமல் நாம் இவர்களை வீணுக இகழ்ந்தோம்; அப்படி நமது குலமதத்தால் இகழ்ந்தது நமக்கு நன்மை யல்ல'' என்று சொல்லிக்கொண்டு போனுர்கள். பிறகு, பகடானது வேதாபிப்ராயத்தை யாவரும் அறியும்படி சொல்லுவதை ஞாநதேவர் அறிந்து, ''வியாசமுனிவர் சொன்னமுறை தவருகும்'' என்று பகட்டைப்பார்க்க, அதுமுன்போலப் பிரகாசித்தது. தமக்கு ஹிதஞ்செய்துநின்ற வேதியனைப் பார்த்து வணங்கி, ''எமக்கு இனி விடைதர வேண்டும்'' என்று கேட்டு விடைபெற்றுக் கொண்டு, அவ்வூரைவிட்டு மஹாலயம் என்னும் ஊரை நால்வரும் வந்தடைந்து, பிரவரா என்னுந் தீர்த்தத்தில் மூழ்கி, அங்கே தங்கியிருக்க, ஞானதேவர் த்ரூடதர ப்ரமாணமாகிய கீதைக்கு, யாவரும் எளிதில் உணரும்படி வியாக்கியாநம் செய்ய, அதனைச் சோபாநதேவர் எல்லாருக்கும் போதித்துக்கொண்டிருக்குங் காலத்தில், இவர்

கள் செய்தியைக் கைனியர் வேந்தன் கேட்டு வந்து, "நீங்கள் சுவா நுபவத்தை யடையவேண்டும்" என்று சொன்னவுடனே, கேட்ட நால்வரும் திருவடியில் விழுந்து, "நாதனே! எமக்கு நீரே ஞானத்தை உபதேசிக்கத் தகுந்த சற்குருவாயிருக்கிறீர். இப்போது எங்களுக்கு உபதேசஞ் செய்யவேண்டும்" என்று ப்ரார்த்தித்தவுடனே, கைனியர் வேந்தனும் உபதேசஞ் செய்ய, இவர்கள் பெற்றுக்கொண்ட பிறகு, சாதுவாகிய சற்குருவே சொல்ல, ஞானதேவர் அம்ருதாநுபவம் என்னும் நூலைச் செய்தனர். பிறகு, மாளசாதேவியின் ஆலயத்தில் "நமஸ்காரம்" என்று சொல்லி, ஸ்ரீ ஹரிநாமத்தை உச்சரித்துக்கொண்டே போய், ஓர் ஆலயத்தினருகே இறந்துகிடந்த கரும் பகட்டைச் சமாதி செய்ய, அந்த இடம் மைசோபா என்னும் பெயர்கொண்டு விளங்குகின்றது. முத்தாயி சொன்ன சொல்லின் படி முன்னே இவர் வாழ்ந்திருந்த இடமாகிய அளகாபுரியை அன்போடு சேர்ந்து ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்தார். அந்த வூரிலுள்ளார் யாவரும் அவருடைய சத்திய வசநத்தையும், செய்கிற அற்புதச் செயல்களையும் நன்றாகக் கேள்விப்பட்டு வந்து இவரைத் தழுவிக்கொண்டார்கள். தழுவி "இவரால் நமக்குண்டாயிருக்கிற பாவங்களெல்லாந் தீரும்" என்றெண்ணி வசிக்கும்போது, விசோபன் என்னும் ஒரு ப்ராஹ்மணன்மாத்திரம் வராமல் வேறுபட்டிருந்து, துறவடைந்தவனுக்கு இவர்கள் மக்களாகி முறைதப்பியிருக்கிறார்கள்; இவர்கள் முகத்தையும் பார்க்கலாகாது; பார்த்தால் மஹா பாபம் நேரிடும்" என்று அநேகமான பழிமொழிகள் சொல்லி நிந்தித்தான். இப்படி யிருக்கையில் ஒருநாள் நிவிர்த்தியென்பவர் தனக்கிளையவளை நோக்கி, "தங்கையே! எனக்கு மதுரமாகிய அப்பமுண்ண வேண்டுமென்கிற ஆசையுண்டாயிருக்கின்றது; ஆகையால் எனக்கு அப்பஞ் சுட்டுத் தரவேண்டும்" என்று கேட்க, அவள் அதற்கிசைந்து, "அப்படியே சுட்டுத் தருகிறேன்" என்று சொல்லி, மா முதலிய யாவும் சேகரித்து வைத்துக்கொண்டு, அப்பம் சுடுதற்குத் தகுந்த ஓடு வாங்கிவரும் பொருட்டுக் குயவன் வீட்டுக்குப் போகும்போது, அந்த வழியில் விசோபன் எதிர்ப்பட்டான். இவள் அவனைக் காண விருப்பமில்லாதவளாய், ஒருபக்கத்தி லொதுங்கக் கண்ட விசோபன் இவளை நோக்கி, "எதிரே வராமல் ஒருபக்கமாக என் விலகினாய், நீ எங்கேபோகிறாய், சொல்" என்று கேட்க, "அடைசுடுதற்குத் தகுதியான ஒரு ஓடு வாங்கிவரும்பொருட்டுக் குயவன் வீட்டுக்குப் போகி

றேன்'' என்றாள். அதைக்கேட்ட விசோபன், "நீயெனக்கெதிரே வந்த தனால் நான் நீராடாமல் ஒருகாரியத்தையும்செய்யமாட்டேன்'' என்று கோபத்தோடு சொன்னான். அன்றியும், "இனி யெனக்கெதிரே வர வேண்டாம்'' என்றுசொல்லி இவளை யெற்றிவிட்டு, விரைவாகக் குயவ னிடத்திற்போய், "இவளுக்கு என் உத்திரவில்லாமல் ஓடு கொடுப்பா யானால், உன்னை நன்றாய்ச் சிக்ஷிப்பேன்'' என்று சொல்ல, குயவன் மனம் வருந்தியிருக்க, இவளும்போய் "ஓடு வேண்டும்'' என்றுகேட்க, அவன் "கொடுக்கமாட்டேன்'' என்று சொல்லிவிட்டான். பிறகு இந் தப்பெண் தன்வீட்டுக்கு வந்து அழுதுகொண்டிருந்தாள். அப்போது நீராடிவந்த ஞானதேவர், இவளை நோக்கி, "நீ அழுதற்குக் காரணம் யாதென்று வினவ, இவளும் நடந்தசெய்தியைச் சொல்ல, இவையா வும் சாளரவாயில் வழியாய்ப் பதுங்கியிருந்து விசோபன் கேட்டுக் கொண்டிருந்தான். ஞானதேவர், "விசோபன் இப்படிச் செய்வது அவனுக்கு இயற்கை'' என்று சொல்லி, தமதுமுதுகை அப்பஞ்சுடுஞ் சட்டியாகவும், உதராக்நியைப் புறத்தே வரும்படிசெய்து அதை நெருப்பாகவும் அமைத்து, அந்தப் பெண்ணைப் பார்த்து, "இதில் அப்பம்சுட்டுக்கொள்'' என்றுசொன்னார். அவளும் அப்படியே ஞான தேவர் முதுகிலே அப்பம் சுட்டுத் தன்தமையனோடிருந்து உண்ணும் போது பார்த்திருந்த விசோபன், "இவர் மனிதர் அல்லர், தேவரே யாவர்'' என்று அதிசயப்பட்டு, இப்படிப்பட்டவர்களை அறியாமல் நாம் வீணாகவே தூஷித்தோம்; அந்தப் பாவத்தை எப்படித் தொலை க்கப்போகிறோம்'' என்று எண்ணி, "இவரையே சரணமடைவோம்'' என்று போகும்போது இவன் வருவதையறிந்த ஞானதேவர், தாம் அமுதுசெய்த இலைக்கலத்தை வீட்டின்புறத்தேயெறிய, விசோபன் அதைப்பற்றிப் பிடிசோறு அதிலிருந்தெடுத்துண்டான். அதைப் பார்த்த ஞானதேவர், "அடா விசோபா! நீ பருந்துபோல் இச்சோற் றை யுண்டாயாதலால் நீ கழுதையை நிகர்த்திருக்கிறாய்'' என்று கடி ந்து சொல்ல, விசோபன் பயந்து "அவர் பாதத்தில் விழுந்து வண ங்கி, எனது அஜ்ஞானம் நீங்கும்படி அருள் செய்யவேண்டும்'' என்று பிரார்த்திக்க, ஞானதேவரும் இவனுடைய பரிபக்குவத்தை யறிந்து, இவனுக்கு ஞானோபதேசம் செய்தார். இப்படியிருக்குங் காலத்தில், ஞானதேவர் பண்டரிபுரத்துக்குப் போய், பாண்டுரங் கனைச் சேவித்து வணங்கின பிறகு, நாமதேவர் வீட்டுக்கு வரும்வழி யில் நாமதேவர் எதிர்ப்பட்டு, கைகுவித்து வணங்கி, எல்லாரையும்

உய்விக்கும்பொருட்டு அவதரித்த தேவரீரைத் தரிசநம் செய்வதற்கு நான் என்ன தவம் செய்தேனோ?" என்று புகழ, ஞானதேவர், நாமதேவரை நோக்கி, "நன்று சொன்னீர், உம்மை நிகர்ப்பவர் இவ்வுலகத்தில் யாரிருக்கிறார்? ஒருவருமில்லை; ஞானத்தால் சீவன்முக்தி பதம் கிடைத்திருந்தாலும் உலகத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களிலெல்லாம் நீராடிப் புண்யக்ஷேத்ரங்களெல்லாவற்றையும் தரிசிக்க வேண்டும்; ஆதலால் உம்மோடுகூடித் தீர்த்தயாத்ரை க்ஷேத்ரயாத்ரைகளைச் செய்யவேண்டுமென்கிற ஆசையால் வந்தேன்; நீர் இதற்கிசையவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, நாமதேவர் "நான் என் அதீநத்திலிருக்கவில்லை, பாண்டுரங்கனுடைய அதீநத்திலிருக்கிறேன்", என்றார். அதைக்கேட்ட ஞானதேவர், "பாண்டுரங்கனைக் கேட்டே அவர் தர உம்மைப் பெற்றுக்கொள்ளுகிறேன்" என்று நாமதேவரையும் அழைத்துக்கொண்டு, பகவானுடைய சந்நிதியையடைந்து, திருவடியை வணங்கிநின்று "சுவாமீ! அடியேன் இந்த நாமதேவரோடு கூடிச்சென்று தீர்த்தயாத்ரை செய்து வரவேண்டும், ஆதலால் இவர் என்னோடு வரும்படி இவர்க்கு விடை தரவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, பாண்டுரங்கன், "ஞானதேவா! நாமதேவன் எல்லாத் தீர்த்தங்களும் நானேயென்று றுதிகொண்டிருக்கிறான்; நான் சொன்னாலும் அவன் உன்னோடு வரமாட்டான்; ஆனாலும் உனக்குத் தீர்த்தமாடவேண்டுமென்கிற அவசரமென்ன?" என்று கேட்க, ஞானதேவர், "இவர் நிர்மலராயிருத்தலால் இவரோடுகூடிச் சஞ்சரிக்கவேண்டுமென்றும், அவசியம் தீர்த்தயாத்திரை செய்யவேண்டுமென்றும் மிகுந்த ஆசையுண்டாயிருக்கையால் இவரைத் தந்தருளவேண்டும்" என்றார். பாண்டுரங்கபகவானனவர் "ஞானதேவா! என் ப்ராண நாயகியாகிய திருமகளை விட்டாலும் நாமதேவனை விடமாட்டேன்; உன் மநோரதத்தையும் பூர்த்திசெய்யவேண்டியிருப்பதனால் என்னைவிட வேறொரு திக்கில்லாத நாமதேவனை யழைத்துக்கொண்டு போய் மறுபடியும் விரைந்து கொண்டுவந்து என்னிடத்தில் சேர்க்கவேண்டும்" என்று சொல்லி, நாமதேவனை நோக்கி "நீர் என்னை மறவாமல் மனத்தில் நினைத்துக்கொண்டேபோய்த் தீர்த்தயாத்ரை செய்துவாரும்" என்று சொல்லி, நாமதேவரைத் தமது திருக்கையாலே பிடித்து ஞானதேவர் கையிற்கொடுத்து நாமதேவருடைய பிரிவுக்குச் சகியாதவராய்த் தமது திருக்கண்களில் நீர் ததும்பஇரங்கி, திருவுள்ளம் நைந்து புலம்பினார். பிறகு ஞானதேவர்

பகவானை வணங்கி, சந்த்ரபாகாநதியில் ஸ்நாநம் செய்து வந்து தாமும் நாமதேவருமாக இருவரும் பகவானை வணங்க, பகவானும் இவர்களை வழிவிடப்போய், விடுத்தபிறகு மீண்டு வந்து கோயிலை யடைந்தார். அடைந்த பகவானுடைய திருவடி முழுதும் செந்தூள் படிந்து, திருமேனிவாடி, கண்களில் நீர்ததும்ப, தாமரை மலர்போன்ற திருமுகம்வாட்டமடைந்திருப்பதைக் கமலாஸனையாகிய பெரிய பிராட்டி நோக்கி, "ஸ்வாமீ! தேவரீர் இவ்வாறிருத்தற்குக் காரணம் யாது?" என்று வினவ, பகவானாகிய பாண்டுரங்கர் சொல்லுகிறார்: "பெண்ணே! என் உயிர்போல என்னைச் சேர்ந்திருந்த நாமதேவனுடைய பிரிவென்கிற பாணம் தாக்குதலால் இப்படி வருந்தலாயிற்று" என்று சொல்லி, திருமகள் முதலானோர் காணும்படி நிலத்தில் மூர்ச்சித்து விழக்கண்டு, "இதென்ன ஆச்சர்யம்" என்று எல்லாரும் கூடிப் பகவானுக்குச் செய்யவேண்டிய வுபசாரங்கள் யாவும் செய்து தேற்ற, ஒருவாறு தேறிவரும்போது பக்தரெல்லாரும் இறைவனை நோக்கி, "தேவரீருக்கு இவ்வளவு வருத்தம் வந்ததற்குக் காரணம் யாது?" என்று கேட்க, பகவான் "ஓ அன்பர்களே! நாமதேவன் பிறந்த நாள்முதல் என்னிடத்தில் மிகுந்த அன்புள்ளவனாயிருந்து பிரிந்ததினால், அவனது பிரிவு எனக்கு இவ்வளவு வருத்தத்துக்கு ஹேதுவாயிற்று; அன்றியும் பசிதாகங்கள் உண்டாகிறபோது அவன் என்ன செய்வான் என்றும், என் மனம் பதைக்கிறது" என்றுஞ் சொல்லி, அடியார்கள் தேற்றிக்கொண்டிருக்க எழுந்தருளியிருந்தார். இப்படியிருக்க, ஞானதேவருடன் போன நாமதேவர், பின்னே திரும்பிப் பார்த்துப்பார்த்து, தாயைப் பிரிந்த குழந்தைபோல மனங் கரைந்துருகி வணங்கி, "என் குலதெய்வமே! என் உயிர்த்துணையே! ஆநந்த ரூபமே! என்னைப்பிரிந்து எழுந்தருளியிருக்கிறாயோ" என்று மனத்தளர்ச்சியோடு ஞானதேவரை நோக்கி, "பாண்டுரங்க பகவானுடைய பிரிவைச் சகிக்கமுடியவில்லை; ஆதலால் இப்பொழுது அடியேன் பாண்டுரங்கனைச் சேவிக்கும்படி செய்யவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, ஞாநதேவர் "பகவானை நாம் மனத்தினால் நினைக்கலாமேயன்றிச் சேவித்தல் கூடாதே; இவ்விடத்தில் எழுந்தருளி யிருக்கவில்லையே; ஆதலால் மனத்தினால் நினைத்துக்கொண்டே வாரும்" என்றார். அதைக் கேட்ட நாமதேவர் இறைவனைச் சகுணமாக நாடுதலையன்றி வேறுவிதமாக நாடுவதற்கு என்மன மிசையவில்லை' என்று சொல்ல, ஞானதேவர் "அப்படியானால் பாண்டுரங்கனை நீர்

வசியஞ்செய்து வைத்திருப்பதுபோலச் செய்யுமுபாயத்தை எனக்கும் உபதேசித் தருளவேண்டும்'' என்ன, நாமதேவர், ஞானதேவரை நோக்கி, "ஸ்வாமீ! தேவரீர் என்னைக் கேட்பது, கற்பக மரமானது ஒரு லோபியை ப்ரார்த்திப்பதுபோ லிருக்கின்றது. ஆனாலும் தேவரீர் கேட்க அடியேன் சொல்லாதிருத்தல் தகுதியன்று; ஆகையால் அறிந்தமட்டும் சொல்லுகிறேன் கேளும்: உலகத்தில் மானுடப் பிறவியாய்ப் பிறந்தவன், தன்சரீரத்தில் வெறுப்பும் அந்ய சரீரங்களில் விருப்பமும் உள்ளவனாய், நான் என்னும் அஹங்காரத்தை முழுதும் நீக்கி, ப்ரபஞ்சத்திலிருந்தும் ப்ரபஞ்ச வாசனை சிறிதும் தாக்காமல், திருமாலினிடத்தில் அன்பு செய்தலே பரிசுத்தமான பஜனையாகும்; அந்தப் பகவான் விஷயமாகிய பாடலைக் கேட்பதே சிரவணமாகும்; அவனை நெஞ்சில் உறுதியா யிருத்திக்கொள்வதே மநநமாகும்; அவனன்றி வேறு தெய்வமில்லையென்று விரும்புவதே தெளிவாகும்; அவனது திருநாமத்தை உச்சரிப்பதோடு அவனது திருவடியை யடைவதே பேரானந்தமாகும்; இந்தச் செய்கைகளையன்றி வேறு செய்கைகளைச் செய்வதெல்லாம் பந்த ஹேதுவாகும்'' என்று இவ்வாறு சொல்லி, ஞானதேவர் திருவடியில் வீழ்ந்து வணங்கினர். அம்ருதவர்ஷம்போல நாமதேவர் சொன்னவற்றையெல்லாம் ஞானதேவர் கேட்டு, "மூன்று லோகத்திலும் இந்த நாமதேவரைப்போன்ற ஹரிபக்தியுள்ளோர் ஒருவருமில்லை. இவருடைய பக்தியின் ப்ரபாவத்தைப் பகவானே யறியவேண்டுமல்லது எம்போல்வார் அறியவொண்ணாது'' என்று பலவாறாகப் புகழ்ந்து பேசின பிறகு, இருவரும் சேர்ந்து, தீர்த்தங்கள்தோறும், அன்போடு மூழ்கி, அஸ்திநாபுரியில் வந்து தங்கின பிறகு நாமதேவர் ஹரிபஜனை செய்யத்தொடங்கினர். இவரை அவ்வூரிலுள்ள பக்தரெல்லாரும் வந்து மொய்த்துக்கொண்டார்கள். இந்தச் செய்தியை அவ்வூரை யாளுகின்ற துருக்க அரசன் கேள்விப்பட்டு இவரிடத்துக்கு வந்து, "என்ன பாட்டுப் பாடுகிறாய்?'' என்று கேட்க, நாமதேவர், "நான் திருமகள் நாயகனாகிய பகவானைப் பஜனை செய்கிறேன்'' என்று சொல்ல, அவ்வரசன், "இறந்துபோன பசுவுக்கு உயிர் வரும்படி செய்வாயானால் நீ ஹரிபஜனை செய்தல் உண்மை; அதைப் பிழைப்பிக்காத பக்ஷத்தில் உன்னை உயிர் வாங்குவேன்; நீ அந்தப் பசுவைப் பிழைப்பிப்பதற்கு எத்தனை நாள் செல்லும்; ஆராய்ந்து சொல்'' என்று கேட்க, நாமதேவர் "நாலுநாள் செல்லும்'' என்று

சொல்ல, அரசன் கேட்டுத் தன் அரண்மனையிற் புகுதலும், நாம தேவரானவர், ஸ்ரீஹரியை த்யானித்துப் பலபடியாகத் தோத்திரஞ் செய்துகொண்டிருந்தார். இவர் இப்படி நாலுநாளாகப் பசுவின் தலையைத் தமது தொடையின்மேல் வைத்துக்கொண்டு துன்பப்படுவதைப் பாண்டுரங்கன் அறிந்து, நாமதேவர் மனத்தில் தோன்றி, "நீ பசுவுக்காக வருந்தவேண்டாம், பசுவானது உயிர்பெற்றெழுந்து நிற்கின்றது, பார்க்கக்கடவாய்" என்று சொல்ல, நாமதேவர், பிழைத்துநிற்கும் பசுவைப் பார்த்து வியந்து, பகவானை நோக்கி, "இந்த நாலுநாளாய் நான் துன்பப்படுவதைப் பார்த்திருந்தும் சற்றும் இரக்கமில்லாமல் என்னை மறந்தே யிருந்துவிட்டீரே" என்று சொல்ல, பகவானுனவர், "நாமதேவா! நான் மறந்திருக்கவில்லை; இந்தப் பசுவை அந்தக்ஷணமே பிழைக்கச்செய்வேன்; நீ நாலுநாள் செல்லுமென்று அரசனுக்குச் சொன்னதனல், உன் வார்த்தை பொய்யாகாமல் நாலுநாளும் கழிந்தபிறகு பிழைக்கச்செய்தேன்" என்று சொல்லி, "இதுபற்றி என்னை நிந்திக்கவொண்ணுது" என்றும், "நீ சந்தோஷத்துடன் இருப்பாயாக" என்றும் கூறி, மறைந்தவுடனே, நாமதேவர் தமக்கெதிரே நிற்கிற பசுவைப் பார்த்தார். இவர் பார்த்துச் சந்தோஷித்ததுபோலவே அவ்வூராரும் பார்த்துச் சந்தோஷித்து, அரசனிடத்தில் இந்த அற்புதத்தைச் சொல்ல, அரசனும், "அறுபட்டுத் துண்டாய்க்கிடந்த பசுவின் தலை உயிர்பெறுவது உலகத்திலுண்டோ, இது என்ன அதிசயமாயிருக்கிறது" என்று புகழ்ந்து, "இதைப் போய்ப் பார்ப்போம்" என்று விரைந்து வந்து, உயிர்பெற்று நிற்கிற பசுவைக் கண்டு, "இவர் தெய்வமே" என்று நிச்சயித்து, இவருடைய திருவடியில் தாழ்ந்து வணங்கி வாழ்த்துதலும், அவ்வூரிலுள்ளா ரெல்லாரும் நாமதேவருடைய ப்ரபாவத்தைக் குறித்து மிகவும் கொண்டாடினர்கள். பிறகு நாமதேவரும் சிலநாள் ஹரிபஜனை செய்துகொண்டிருந்து, அவ்வூரைவிட்டு, அங்கங்கே ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டும், அவ்வவ்வூர்களின் பாஷைகளில் கீர்த்தநங்கள் பாடிக்கொண்டும், வழியில் உள்ள தீர்த்தங்களிலெல்லாம் மூழ்கியும், காசீக்ஷேத்திரத்தை யடைந்து, கங்கா ஸ்நாநம்செய்து, ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் விஷயமாய்க் கீர்த்தநங்கள் பாடிக்கொண்டிருக்கிற விசுவநாத ஸ்வாமியையும் ப்ரார்த்தித்து, நாலுமாசகாலம் அங்கே தங்கியிருந்தார். அப்போது, அவ்வூரில் தங்கியிருக்கிற கபீர்தாசர் வீட்டில் ஒருநாளிரவில், ஹரி

தாசர்கள் மிகுதியாய்வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கு அன்னமிட வேண்டுமென்கிற அன்புடையவளான கபீர்தாசர் மனைவியானவள், கடைத்தெருவெல்லாம் திரிந்தும் எல்லாக் கடைகளும் மூடப்பட்டிருந்ததைக் கண்டு, மனவருத்தத்துடன் வருகையில், ஒரு வணிகன் கடைமாத்திரம் மூடாமலிருப்பதைக் கண்டு, அந்த வணிகனிடத்திற் போய், "எங்கள் வீட்டுக்குச் சில ஹரிதாசர்கள் வந்திருக்கிறார்கள்; அவர்களுக்கு அன்னமிடவேண்டியிருக்கிறது; அதற்கு வேண்டிய அரிசி பருப்பு முதலிய பொருள்களைத் தடையில்லாமல் கொடுப்பாயானால் அந்தப்பொருள்களின் கிரயத்தை நாளையுதயத்தில் தருகிறேன்" என்று சொல்ல, அந்த வணிகன், "பெண்ணே! நீ என் இஷ்டத்தை நிறைவேற்றினால் நீ விரும்பும் பொருள்களெல்லாம் தருகிறேன்" என்றான். அதைக் கேட்ட தாசர் மனைவியானவள், "பகவானிருக்கிறார்" என்று தன் மனத்தில் நினைத்துக்கொண்டு, "அப்படியே செய்கிறேன்" என்று வணிகனுக்கு உறுதிமொழி சொல்லி, அவனால் தரப்பட்ட பொருள்களைப்பெற்றுத் தன் வீட்டுக்குவந்து, சமையல் செய்வோரிடத்தில் கொடுத்து, தன்கணவரிடத்தில் வந்து, வணிகனிடத்திற்குப் போனபோது நடந்த செய்திகளைச் சொல்லி, "அவனிடத்திற்கு நான் போகவேண்டும், எனக்கு விடை தருவீராக" என்று கேட்க, தாசர் மனைவியை நோக்கி, 'ஹரிதாசர்பொருட்டு நீ யிவ்வாறுசெய்ததைக்குறித்து மிகவும் சந்தோஷமடைந்தேன்" என்று சொல்லி, "இந்த இருள்மிகுந்த ராத்திரிகாலத்தில் நீ தனியே போகமாட்டாய்; நான் உன்னைக் கொண்டுபோய் அந்த வணிகனிடத்தில் விடுகிறேன்" என்று தமது தோளின்மேலேற்றிக்கொண்டு, மனைவியை நோக்கி, "பெண்ணே! நமக்கு இப்படிப்பட்ட சமயத்தில் உதவிசெய்த அந்த வணிகனிஷ்டம்போல நீ நடந்துகொள்வதே தர்மம்; ஆகையால் அவனைச் சந்தோஷப்படுத்திவா" என்று சொல்லிக்கொண்டேபோய் வணிகன் கடையில் நிறுத்தி மீண்டார். வணிகன், எப்போது காண்போமென்னும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தவனாதலால், தாசர்விட்டு மீண்டவுடனே வந்து தன் கடையில் நிற்கிற தாசர் மனைவியைக்கண்டு, "பெண்ணே! நீ சொன்ன சொல் தவறாமல் வந்தாய்; ஆனால் இந்த மழைத்தூறலில் காலில் சேறுபடாமல் எப்படிவந்தாய்?" என்று மகிழ்ச்சியோடு வினவ, "ஐயா! நீர்செய்த உதவிக்காக என் நாயகர் மகிழ்ந்து தமது தோளின்மேல் என்னையேற்றிக்கொண்டு வந்து இவ்விடத்தில் விட்

டுப்போனர்" என்று தாசர் மனைவிசொல்ல, "இது மிகவும் அழகா யிருக்கிறது" என்று அதிசயித்து, பயந்து, அநுதபித்து, வருந்தி, "ஐயோ, அளவற்ற பிறவிகளாய்ப்பிறந்து வீணாகக் காலங்கழித்தது மல்லாமல், கிடைத்தற்கரிதாகிய இந்த மநுஷ்ய ஜன்மமெடுத்தும் உஜ்ஜீவிக்க வழிதேடாமல் இப்படிப்பட்ட கொடுமையாகிய பாவஞ் செய்ய மனந்துணிந்தேனே; இந்த வுலகமுழுவதும் தேடினாலும் என்னைப்போன்ற பாவிகளும் கிடைப்பார்களா; இப்படிப்பட்ட பரம சாந்த மூர்த்தியாகிய தாசருக்கு நான்செய்த அபராதத்தால் நேரிட்ட பாவத்தை எவ்வாறு நீக்கிக்கொள்வேன்" என்றுமிகவும் மனம் பதைத்து, "அம்மா! நீ தெய்வமென்றே நினைக்கிறேன்; நீ எனக்குத் தாய்; உன் நாயகராகிய தாசரது திருவடியில் என்னை வீழ்த்தி, அவர் என்னைக் கடாக்ஷித்து எனக்கு அபயங்கொடுக்கும்படி செய்ய வேண்டும்" என்று மிகவும் ப்ரார்த்தித்து வணங்க, தாசர் மனைவி வணிகனைநோக்கி, "ஐயா! நீ செய்த பிழையை நீயேயறிந்து அநுதாபப்பட்டபோதே உன் பாவமெல்லாம் தொலைந்தன; ஆயினும், தாசரும் உன்மீது அன்புசெய்யும்படி செய்கிறேன்" என்று அழைத்துக்கொண்டுபோய்த் தாசருக் கெதிரேவிட, வணிகனும் தாசரை அடி வணங்கி, "ஸ்வாமீ! அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று பலவகையாய்த் தோத்திரம் பண்ண, தாசரும், வணிகன் மனத்தைத் தெரிந்துகொண்டு, அவனை அன்போடு தழுவி, தாமரை மலர்போன்ற தமது திருக்கையை அவன் தலைமேல் வைத்துக் கருணையோடு உபதேசம் செய்தருளினர். வணிகனும் அன்றுமுதலாக ஹரிபஜனை செய்வதில் மிகவும் ஆவலுள்ளவனாய்ச் செய்துவந்தான். இச்செய்திக ளெல்லாவற்றையும் நாமதேவர் கேட்டு, ஞானதேவரிடத்திற்குப் போய், கபீர்தாசருடைய பரமபக்தியையும் வைபவத்தையும் சொல்லி, தாமும் ஞானதேவருமாகக் கபீர்தாசர் இருக்குமிடத்திற்கு வந்து அவரைக் கண்டவுடனே, கபீர்தாசர் அவ்விருவரையும்வணங்கித் தோத்திரம்பண்ணி, ஆசநத்திலிருத்தினர். அப்போது, ஞானதேவர், கபீர்தாசரை நோக்கி, "இவ்வுலகத்தில் நிறைந்திருக்கிற பாவ முழுதும் நீங்கும்படி சுகரும், உத்தவரும் ஆகிய இருவருடைய அம்சமாக நீங்களிருவரும் அவதரித்தீர்களல்லவா?" என்று புகழ்ந்து சொல்லக் கேட்டு மனமகிழ்ந்த கபீர்தாசரும் நாமதேவரும் ஞானதேவரை வணங்கி நிற்க, ஞானதேவர் கபீர்தாசருடைய திருமுகத்தை நோ

க்கி, "பண்டரிபுரத்தில் பாண்டுரங்கப் பெருமான், புண்டலீகரிடத்தில் அன்பு வைத்து, அவர் சொன்னபடியே செங்கல்லின்மேல் திருவடியைப் பதித்து நிற்பதை ஒருதரம்போய்க் கண்டு வணங்கி வாரும்" என்று சொல்ல, கபீர்தாசரும் "அப்படியே கார்த்திகை மாசம் ஏகாதசி தினத்தில் போய்ச்சேவித்து வருகிறேன்" என்றார். பிறகு கபீர்தாசரை வணங்கி விடை பெற்றுக்கொண்டு நாமதேவரும் ஞானதேவரும் ஆகிய இருவரும் போய்க் கயை பிரயாகை என்னும் புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, ஸ்ரீராமபிரான் எழுந்தருளியிருக்கிற திருவயோத்யை, வடமதுரை, கோகுலம் என்னும் திவ்ய க்ஷேத்திரங்களை யடைந்து அவ்விடங்களிலுள்ள எம்பெருமான்களையும் சேவித்துத், திருத்துவாரகையை யடைந்து ஸ்ரீகண்ண பிரானைச் சேவித்து மீண்டுவரும்போது, மிக்க செல்வம் நிறைந்து விளங்குகின்ற மார்வாடர் வசிக்கிற தேசத்தையடைந்தபோது, இருவரும் அதிக தாகத்தால் ஒரு கிணற்றினருகே சென்று, இறங்கி நீருண்பதற்கு வழிகிடைக்காமல் மனம் வாடிக் களைத்திருக்குங் காலத்தில், ஞானதேவர், நாமதேவரை நோக்கி, "லகிமாவென்னும் சித்தியை நான் பெற்றிருக்கிறேனாகையால் இக்கிணற்றில் இலேசாக இறங்கி நீருண்பேன், நீர் அறிகின்றிலீராதலால், இதற்கு என்செய்வேன்" என்று பரிதபித்தபோது, நாமதேவர் பண்டரி நாதனுடைய திருவடிகளைத் தமது கருத்தி லிருத்தி, "ஹே மதுசூதனா! ஹே ராமா! ஹே தீநதயாநிதி! எனக்கு அருள்செய்யும் சர்வேசுவரா! தேவரீர் விரைந்து எழுந்தருளி எனது தாஹத்தைத் தீர்த்தருளவேண்டும்" என்று பலவாறு தோத்திரம்பண்ணி நிற்க, எல்லாச் சீவராசிகளிலும் அந்தர்யாமியாய் வியாபித்து நின்று எல்லாவற்றையும் அறியவல்ல பண்டரிநாதன், தமது திருத்தேவியாராகிய பெரிய பிராட்டியார்மேல் திருநோக்கம் வைத்து, "பெண்ணே! ஒப்பற்ற பரமபாகவதனாகிய நாமதேவனைக் காணாமையால் இன்று எனது இடத்தோளானது துடிக்கின்றது; ஆகையால் அவனுக்கு அவ்விடத்தில் என்ன துன்பம் நேரிட்டதோ?" என்று வினவ, பிராட்டியார் அந்நாமதேவன், "தாகத்தால் வருந்துகிறான்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவருக்கு எதிரில் பெருவெள்ளமான நீர் உண்டாகிப் பொங்கி வழிந்தோடக் கண்ட நாமதேவர், தமது தாஹம் முழுதும் நீங்கும்படி அப்பெருக்கில் நீருண்டு மகிழ்ந்திருந்தார். இதைக் கண்ட ஞானதேவர், நாமதேவர் முகத்தை

நோக்கி "உம்மை விட்டலப் பெருமான், ஒரு சிறிதும் நீங்காதிருக்கிறார்; ஆதலால் உமது மகிமைக்கு உலகமுழுதும் புகழ்ந்தாலும் ஒரு முடிவுண்டாகாது" என்று புகழ்ந்தார். அந்த நீர்ப்பெருக்கு அன்று முதல் இன்றளவும் அப்படியே பெருகி வழிந்தோடாநின்றது. அதில் தநுர் மாசத்தில் போய் நீராடுவோர் தாம் விரும்பின மனோரதங்களெல்லாம் சித்திக்கப் பெறுவார்கள். அந்தத் தீர்த்தத்தை விட்டு ஞானதேவரும் நாமதேவரும் அவ்விடங்களிலுள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நாநஞ்செய்து பதரிகாசிரமத்தை யடைந்து, அதன் பிறகு ஜகந்நாத க்ஷேத்திரத்தை யடைந்து, அங்கெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீகண்ணபிரானைச் சேவித்து இனிதாகிய பேராநந்தக்கடலில் மூழ்கினவராய், அங்கு நின்றும் புறப்பட்டுப் பூர்வகாலத்தில் ஸ்ரீராமபிரானால் சிறை செய்யப்பட்ட சேது தீர்த்தத்தில் மூழ்கி, பிறகு சிவராத்திரி காலத்தில் நாகேசுவரத்தில் வந்தடைந்து ஹரிபஜநம் செய்துகொண்டிருக்க, எல்லாரும் வந்து ஹரிபஜநத்தைக் கேட்டுப் பேராநந்த மடையுங் காலத்தில், அங்கே சிவபூசை செய்கிற வேதியர்கள் வந்து போக வழியில்லாமல் பாகவதர் நிறைந்திருக்கிறதைக் கண்டு, மனம் வருந்தி, அந்தப் பாகவதர் எல்லாரும் பக்கத்தில் விலகிப்போகும்படி அதட்டினார்கள். அப்படி அதட்டின சொல்லைச் செவியேற்காமல் ஸ்ரீஹரிபஜநஞ் செய்துகொண்டிருக்க, அவ்வேதியர்கள், மறுபடியும் வந்து "சூத்திராகிய நீங்கள், இவ்வாறு மிகப் பலராகி வந்து இவ்விடத்தில் கூக்குரலிடுவது தகாதகாரியம்" என்றும், "பிராமணராகிய எங்களைத் தீண்டாதீர்கள்" என்றும், "இவ்விடம்விட்டு இப்பொழுதே போய்விடுங்கள்" என்றும், பல கடுஞ்சொற்களைச் சொல்ல, வாயில் காப்பாளர் "ஐயரே! ஆலயத்துள்ளே தீண்டுதலால் ஒரு தீங்குமில்லை" என்று சொல்ல, வேதியர் நாமதேவருக்கெதிரில் வந்து "நீங்கள் பின்னே போங்கள்" என்று சொல்ல, அப்படியே இவர்களும் போய் ஸ்ரீ ஹரிநாமஸ்மரணம் செய்துகொண்டிருக்க, அவ்விடத்தில் நிறைந்திருக்கிற பாகவதரெல்லாரும் காணும்படி அவ்வாலயத்தில் ஒன்பது லக்ஷம் கருடக்கொடிகள் காணப்பட்டு பூமியில் அழுந்திவிட்டன. இந்த அற்புதத்தைக் கண்டு நாமதேவர் முதலாயினோர் ஸ்ரீலக்ஷ்மீநாதனான ஸர்வேசுவரனை ஸ்தோத்திரஞ் செய்யக்கண்ட தேவர்கள் யாவரும் புஷ்பமாரி பொழிந்தார்கள். நாமதேவரும், "எனக்கு ஒப்பற்ற பகவான் இருக்கிறபோது, ஒரு தீங்கும் என்னை யணுகமாட்டாது", என்று சொல்லிச் "சடலையே

தமக்கு நடந ஸ்தாநமாகக் கொண்டிருக்கிற சிவபிரான் சந்நிதியில் நின்று பின்னே போம்படி சொல்லி நம்மை ஸ்ரீஹரிபஜநம்செய்ய நிய மித்தனர், இதுவும் பகவானுக்குத் திருவுள்ளம்போலும்'' என்று பிரஸ்தாபித்துக்கொண்டிருக்க, அப்போது நாகேசன்பெருமையமை ந்த தமது கோயிலில் எழுந்தருளியிருக்கிற திசையைவிட்டு, நாம தேவருக்கு எதிராகத் திரும்பி, மேற்குத் திசையில் முகம்மாறி, ஸ்ரீஹரிபஜந சந்தோஷத்தால் நர்த்தநஞ் செய்துகொண்டிருக்கிற நாமதேவரை மிகவும் புகழ்ந்துநிற்பதை அவ்வூரிலுள்ள சாதுஜநங்க ளெல்லாருங் கண்டு நாமதேவரைச் சூழ்ந்து புகழ்கின்றவராயினர். அப்போது நாமதேவர், "அடியேன் விரும்புவன எல்லாவற்றையும் விட்டலப் பெருமான் அருள்செய்கிறார், இதற்கு யான் செய்யும் கைம்மாறு யாதுளது'' என்று மிகவும் மனமகிழ்ந்து, பொழுதுவிடியு மளவும், மனோதிடத்துடனிருந்து ஸ்ரீஹரியை ஸ்தோத்திரம் பண் ணிக்கொண்டிருந்தனர். விடிந்த பிறகு, சிவபிரானை வழிபட்டுக்கொண் டிருந்த வேதியர்கள் வெளியே வந்தார்கள். அப்படி வந்தவர்கள், "சூரியன் மேற்றிசையிலும் உதிப்பானோ, அன்றி இராத்திரி முழு தும் நாம் கண் விழித்திருந்ததனால் உண்டாகிய மயக்கம் நமது அறி வை மயக்குகின்றதோ, அன்றி நாம் ஓதின மந்திரங்களெல்லாம் நாம தேவன்பொருட்டு மாறுபட்டனவோ'' என்று மயங்கி, நான்கு திசை களிலும் கண் வைத்து நோக்கிக்கொண் டிருந்தார்கள். அப்படியிருக் கும்போது தேஜோமயமான ஒன்பது லக்ஷம் கொடிகள் மேலே காணப்பட்டுப் பிறகு மறைந்தன. இதைக்கண்டு வேதியர் முதலான எல்லோரும் அதிசயித்து, "இந்த நாமதேவரைப் புகழ்ந்து ஸ்தோத் திரம் பண்ணுவதற்குப் பிரமதேவனுக்கும் முடியாது'' என்று பய ந்து, இவரது திருவடியை வணங்கி, "நாங்கள் செய்த பிழைகளெல் லாவற்றையும் க்ஷமித்தருளவேண்டும்'' என்று பிரார்த்திக்க, நாமதே வர் அவர்களுக்குத் தக்க உபசாரங்கள் செய்து நமஸ்கரித்து அவர்க ளிடத்தில் விடைபெற்று, நாகநாதனைப் பிரார்த்தித்து, அவ்விடம் விட்டுப் போகின்றவர்களாகிய இருவரும் தாயை நினைத்துச்செல்லு கின்ற கன்றுபோல அதிக விரைவோடு சென்று பண்டரிநாதனுடைய திருக்கோயிற் கோபுரத்தின் சிகரம் தோன்றக் கண்டு நமஸ்கரித்து வாழ்த்தி, அதன்பிறகு திருக்கோயில் முன்னே சென்று நின்று, பண்டரிநாதனைப் புகழ்ந்து நிற்கும்போது, நாமதேவர், தமது மெய் மறந்து பூமியில் விழக்கண்ட ஞானதேவர், உபசரித்து அவருக்குத்

தெளிவு வரப்பண்ணித் தழுவிக்கொண்டு பகவானுடைய சந்நிதிக்குக் கொண்டுவந்தார். வருதலும் நாமதேவரானவர் பண்டரிநாதனை அன்போடு வணங்க, பண்டரிநாதர், எழுந்து எதிர்கொண்டுவந்து மிருந்த அன்போடு நாமதேவரை இறுகக்கட்டித் தழுவிக்கொண்டார். அப்போது நாமதேவர் வணங்குந்தோறும் பகவானுடைய தாமரைமலர் போன்ற திருவடியின்மீது தமது கண்ணீர் மழையைச் சொரிந்து, "ஸ்வாமீ! இனிமேல் அடியேன் தேவரீரைப் பிரியும்படியான காலம் நேரிடச் செய்யாதேயும்" என்று பிரார்த்திக்க, விட்டலப்பெருமான் இவரை நோக்கி, "நாமதேவா! உன்னைப் பிரிந்த நாள்முதல் இது வரைக்கும் எனக்கு அதிக மனவருத்தமாகவே யிருந்தது; அந்த வருத்தம் இப்பொழுது உன்னைக் கண்டபிறகு தொலைந்தது; ஆகையால் இனி எக்காலத்தும் என்னைப் பிரியாமல் இவ்விடத்திற்றானே தங்கியிரு" என்று அருள்செய்து, தமதுதிருத்தோளில்விளங்குகின்ற குளிர்ச்சிபொருந்திய திருத்துழாய் மாலையைக்கழற்றி, அவர்தோளில் அலிந்து, அவரது கண்ணீரைத் துடைத்து, தமது திருக்கைகளால் அவரது மேனியைத் தடவி, அவர்மீது மிகுந்த க்ருபாதிருஷ்டிவைத்தருளினர். இப்படியிருக்க, மேன்மைபொருந்திய நிவர்த்தி யென்பரோடு விசோபாவும், பண்டரிநாதர் தமது திருக்கோயிலினுள்ளே நாமதேவரிடத்தில் செய்த அற்புதமான காரியங்களை யெல்லாம் தெரிந்து, அந்தப் பகவானைத் துதித்து நாமதேவரையும் ஸ்தோத்திரம் பண்ணினர்கள். அப்போது ஸ்ரீ ருக்மிணிபிராட்டி திருவாலாத்தியேந்திக்கொண்டு வந்து நாமதேவருக்குச் சுற்றினாள். தேவர்கள் பூமழை பொழிந்து ஆசிர்வதித்தார்கள். பிறகு நீலமேகவண்ணனாகிய பகவான் நாமதேவரை நோக்கிச் சொல்லலுற்றனர்:-"நீ தீர்த்தயாத்திரை செய்து வந்தாய்; அந்தத் தீர்த்தயாத்திரைக்கு முடிவான காரியம் யாதோ அதனைச் செய்ய முயலுவாயாக" என்று நியமிக்க, நாமதேவரும் "அப்படியே செய்கிறேன்" என, விட்டல பகவானனவர், இவரை யழைத்துக்கொண்டு பிராட்டியிடஞ் சேர்ந்து இச்செய்தியைச் சொல்லலுற்றார்: அதாவது, "நாமதேவன் செய்த தீர்த்தயாத்திரையாகிய நல்ல விரதத்தை முடிவுசெய்தல் நன்றாகும்" என்று சொல்ல, பிராட்டியானவள், "எனது பிராணநாதா! பரிசுத்த மனத்தையுடையவனாகிய ஸர்வசங்க பரித்தியாகஞ் செய்து உம்மையே ஆசிரயித்து இருப்பவனாகிய நாமதேவன் யாது செய்வன்; நீரே அதனை முடித்தருளவேண்டும்; ஆதலால், பெருமை பொருந்திய

வேதாத்தியயாகஞ் செய்த மறையோர்கள் வந்து உண்ணும்படி ததி யாராதநத்துக்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் அமைத் தருள் வீராக'' என்று பிரார்த்திக்க, விட்டலப்பெருமானானவர், நாமதேவ ருடைய திருவடியை யாசிரயித்த சில பாகவதர்களுக்குப் பின்னே ஒரு வேதிய ரூபங்கொண்டுபோய், சந்திரபாகா நதியின் கரைமேல் விளங்குகின்ற வேதியரிடத்தில் வந்து, அவர்களை வணங்கிநிற்க, அந்த வேதியர்கள், "நீ வந்த காரியம் யாது?" என்று வினவ, நான் "நாம தேவரிடத்தில் அன்புள்ளவன்; அவன் செய்விக்கிற போஜனத்தை நீங்களெல்லோரும் வந்து புசிக்கவேண்டும்'' என்று சொல்ல, அந்த வேதிய ரெல்லாரும் "நாம் மூந்திச் செல்வோம்'' என்று மறுமொழி சொல்ல, அம் மொழியைக்கேட்ட பகவானனவர், தமது திருக்கோ யிலை யடைந்தனர். இப்படி பகவான் போய் வேதியர்களைப் போஜ நத்துக்கு வரும்படி சொல்லிவந்த செய்தியைப் பிராட்டியார் கண்டு, அஷ்டமா சித்திகளையும் வரும்படிநியமிக்க, அவைகள், எட்டும்ஒன்று பட்டு வந்து ததியாராதநத்துக்கு வேண்டிய பொருள்களை யெல் லாம் அமைத்த பின்பு, அஷ்ட லக்ஷ்மிகளும் நாமதேவருக்கு முந்திச் செய்யவேண்டியதாகிய மங்களஸ்நாகம் செய்வித்து, வேத சாகைக ளால் சொல்லப்பட்டமந்திரங்களையோதி, மற்றவரிசைகளையும் செய் தார்கள். அதன்பிறகு, பகவானனவர் பூஷணம், ஆடை, சுகந்தம், புஷ்பம் ஆகிய இவைகளைக்கொண்டு அலங்கரித்தார். பிராட்டியார் இந்த அலங்காரத்தைக் கண்டு நாமதேவருக்கு எல்லாராலும் நேரி ட்ட திருஷ்டிதோஷம் கழியும்படி ஆலாத்தி சுற்றினள். பிறகு, பக வான், நாமதேவரைத் தழுவிக்கொண்டு நின்றார். இப்படி யிருக்கை யில் ஞானதேவரோடு நிவர்த்திமுதலிய நால்வரும் மற்றுமுள்ள நல் லோர்களும் கருணாநிதியாகிய பகவான்செய்யும் செய்கைகளைக்கண்டு மகாமகிமையுள்ள நாமதேவரை நோக்கி, "உம்மைப்போன்ற ஹரிதா சர்கள் இவ்வுலகத்தில் யாருளர்? ஒருவருமில்லை'' என மிகவும் புக ழ்ந்துரைத்தார். பிறகு வேதிய வுருவங்கொண்ட திருமாலானவர், மறையோ ரெல்லாரையும் ஒரு மிக்க அழைத்து, ஒளி மிகுந்த ஆச நங்களில் இருத்தி, அவர்களுடைய பாதங்களை விளக்கிப் பூஜை செய்து, ஸ்ரீபாத தீர்த்தங்கொண்டு, அழகு மிகுந்து விளங்கு கின்ற பட்டாடையால் நன்றாகத் துடைத்து, நல்ல ஆசநங்களில் ஏற்றி, அதிக மதுரம்பொருந்திய முக்கனி, சர்க்கரை, அப்பம், மிகுசுவை யமைந்த கறிவகைகள், நெய், தயிர், பால் இவைக

ளால் நிறைந்த அன்னம் ஆகிய எல்லாவற்றையும் முறைதவறுமற் படைத்து, அவ்வேதியர் உண்பதை நோக்கி, ஆசையோடு நாமதேவர் சங்கல்ப ஜலத்தைத் தெளிக்கும்படி நியமித்து, அவர்கள் யாவரும் அமுதுசெய்யும்படி பிரார்த்தித்து, அவ்வேதியர் யாவரும் அமுது செய்து திருப்தியடைந்தபிறகு, அவர்களுக்குச் சந்தந புஷ்ப தாம் பூலங்களைக் கொடுத்துபசரித்து, அவர் யாவரும் முன்னேயிருக்கச் செய்து, "உங்களுக்கு முன்னே நான் அமுதுசெய்து உங்களுக்குத் தக்ஷிணை கொடுக்கிறேன்" என்று சொல்லி, திருமகள் கொண்டுவந்து கொடுத்த ப்ரஸாதத்தை விருந்தோடிருந்து உண்ணும்பொருட்டு விருந்தினனைத் தேடிவந்து, வாசற்படியில் வந்திருக்கிற வசந்தன் என் பவனைக் கண்டு அழைத்துவந்து ஆசநத்தில் இருத்தி, அவருடைய இளைப்பை நீக்கினவுடனே, அதைக் கண்டு அவர் அழும்போது பக வானும் "குற்றமற்ற பகவத்தாசரே! அமுதுசெய்தருள்க" என்று ப்ரார்த்தித்து, அறுசுவையோடு கூடின அந்நத்தைவாயிலூட்டி, "நாம தேவா! நீ என் அழுகிறாய்?" என்று கேட்க, அவர், "ஸ்வாமீ! அடி யேன் எந்தப் பிறவியாய்ப் பிறந்தாலும், உன் திருவடிக் கன்புசெய்த வில் வழுவாமலிருக்கும்படி எனக்கு அருள்புரியவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, திருமாலானவர் மகிழ்ந்து, "உன்னை யெக்காலத்திலும் மறவேன்" என்று சொல்லி அமுதுண்பிக்க உண்டு, நாமதேவர் மகி ழ்ந்த பிறகு, பகவானும் நாமதேவருக்கு அமுதுண்பித்த கலத்திலே அமுது செய்தருளினார். இதைக் கண்ட வேதியர்கள், "சூத்திரன் உண்டகலத்தில் வேதியனும் அந்நம் உண்பது தகுதியோ? இவன் வேதியனோ? இவன் தந்த அந்நத்தையுண்டு நாமும் இழிவடைந் தோம்; இந்தத்தோஷத்தை என்ன ப்ராயச்சித்தஞ்செய்து தொலைப் போம்" என்று ஆலோசித்திருந்தார்கள். அப்போது நாமதேவரது பரிகலசேஷத்தை அமுதுசெய்தருளின பகவானானவர், நாமதேவ ரை யழைத்துக்கொண்டு, பகவந்நாம ஸ்மரணை செய்துகொண்டிருக் கிற வேதியர்க்கருகேவந்து, அவர்களுக்குத்தக்ஷிணை கொடுக்கும்போ து, அவர்களுடைய முகவாட்டத்தைக் கண்டு, "இதற்குக் காரணம் யாது?" என்று வினவ, அந்த மறையோர்கள், "வேதியனாகிய நீ, ஒரு சூத்திர னுண்ட சேஷத்தை யுண்டாய்; ஆதலால், இழிந்த வன்னால் தரப்பட்ட அந்நத்தையுண்ட எங்களுக்கு நேரிட்ட தோஷத்தை எப் படி நீக்கிக்கொள்வோமென்று விசநப்படுகிறோம்" என்றார்கள். அதைக் கேட்ட பகவான், "பொய், களவு, கள்ளுண்டல், காமம், கொலை

என்பவையாகிய பஞ்சமஹாபாதகங்களை ஒருவன் செய்தாலும் அவன் பகவந்நாம ஸ்மரணை செய்வானானால் அவன் புனிதனென்று சொல்லப்படுவான்; அவனுண்ட சேஷம் கிடைப்பது அருமையல்லவா? ஆகையால், சூத்திரன் உண்டசேஷத்தை நான் அன்போடு உண்டேன்" என்றார். அதற்கு வேதியர், பகவானை நோக்கி, "நீ என்ன சமாதானம் சொன்னாலும் நாங்கள் கேட்கமாட்டோம்; ப்ராஹ்மண க்ருத்யங்களெல்லாவற்றையும் விட்டு, ஹரிநாம ஸ்மரணைசெய்பவனாகிய ஒரு சூத்திரனுடைய எச்சிலைப்புசித்த உன்தோஷம் நிவர்த்தியாகும்படி சந்த்ரபாகா நதிக்குப்போய் ஸ்நானம் செய்துவா" என்றார்கள். அதுகேட்ட எம்பெருமான், "வேதியரே! எவர்களாயினும் பரிசுத்தமான ஹ்ருதயத்தையுடையவர்களாகி, வைராக்யம், சாதுசங்கம் என்பவற்றோடுகூடி, பக்தியுடனே ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்தால் அவர்களுடைய ஜந்மாந்தர பாபங்களெல்லாம் ஒருமிக்க நசிக்கும்; ஆகையால், அது முதன்மையாகிய ஸ்நாநம் என்று பெரியோர் சொல்லக்கேட்டிருக்கிறேன்; ஆனாலும் நீங்கள் சொன்ன சொல்லையும் தடுக்கமாட்டேன்" என்று சொல்லி, நாமதேவர் கையைப் பிடித்துக்கொண்டுபோய்ச் சந்திரபாகாநதியில் மூழ்கிச் செய்யவேண்டிய க்ரியைகளெல்லாவற்றையும் செய்து, பிறகு அரையிலே பீதாம்பரத்தையுடுத்து, மிகுந்த அன்போடு அவ்வேதியர்க்குத் தானம் செய்யவேண்டியவற்றைத் தானம்செய்து, "ஐயரே! என்னைப் பரிசுத்தனாகச் செய்துவிட்டீர்கள்" என்று புகழ்ந்து வணங்கி, விடைபெற்றுத் தமதன்பரோடு கோயிலிலே ப்ரவேசித்து, அமுது செய்த பிறகு, அன்பர்க்கு விடைதந்தனுப்பினர். அப்போது நாரதமுனிவர் வீணையைக் கையிலேந்திக்கொண்டு, அவ்விடம் வந்து பகவானுடைய திருவடியைக் கும்பிட்டுப் புகழ்ந்து நிற்க, இறைவர் திருவுளமகிழ்ந்து தமது திருத்தோளிலணிந்திருந்த மாலையைக்கழற்றி முனிவருக்குக்கொடுத்து, தமது திருமார்பிலுள்ள கௌஸ்துபமணி முதலானவை முனிவர் மார்பில் அழுந்தும்படியாகத் தழுவிக்கொண்டார். பிறகு முனிவர் விடைபெற்றுப்போய்ச் சத்தியபாமையைக் கண்டபோது, சத்தியபாமையார் முனிவரை வணங்கி ஆசநங் கொடுத்து, அவர் இருந்த பிறகு, அவரை நோக்கி, "இந்த விட்டலப்பெருமான் தனக்கன்பரா யிருப்பவர்கள் எந்தச்சாதியா யிருந்தாலும் அவர்களுடைய எச்சிலுக்குத் திரிகிறார், இது நன்றா?" என்று கேட்க, முனிவர், சத்தியபாமையை நோக்கி, "உன் ப்ராணநாயகர் நிர்நாமராயும்

அருபியாயும் இருப்பவராயினும், இவ்வுலகத்தார் உஜ்ஜீவிக்கும் பொருட்டு நாமரூபங்களோடு எழுந்தருளி இப்படி நடிக்கின்றார். ஆதலால் அவருக்கு ஒரு தோஷமும் அணுகாது, நீ ஆலோசித்துப்பார்" என்று சொல்லிப் போனபிறகு, சத்தியபாமையார் இறைவனை நோக்கி, "நீர் இப்படி எச்சிலை அருந்துதல் உனக்குத் தகுதியாகுமோ?" என்று கேட்க, "பெண்ணே! என்னிடத்து அன்புள்ளவர்கள், தந்தை தாய் மனைவி மக்கள் முதலானோரைவிட்டு எல்லாம் நானேயென்று என்னைப்பற்றிக்கொண்டு இகலோக பரலோக சுகங்களையும் வெறுத்திருப்பவர்களாகையால், நான் மனமகிழ்ந்து அவர் பெயரைச் சொல்லுதல், அவர் உருவத்தைச் சிந்தித்தல், அவர் இட்ட வேலைகளைச் செய்தல், இவை யாவும் எனக்கு மிகவும் இஷ்டமான தொழில்களாயிருக்கின்றன; இதுவே யென்துணிவு" என்று பகவான் அருளிச்செய்த காலத்தில், சூரியோதயமாகவே, தொண்டரெல்லாரும் வந்து கோயிற்குள்ளே புகுந்து, ஹரிபஜனை செய்து, விட்டலப் பெருமானுடைய திருவடியை வணங்க, பகவான் அவர்களைத் தம் பக்கத்தில் இருத்திக்கொண்டு பிராட்டியாரை நோக்கி, "பெண்ணே! நேற்று நான் தோஷ நிவர்த்தியின்பொருட்டு ஸ்நாநத்துக்குப் போனபோது, இன்று வேதியருக்கெல்லாம் அமுது படைப்பேனென்று நேர்ந்துகொண்டேன்; ஆகையால் அந்தக் காரியத்தை நடத்தவேண்டும்" என்று சொல்ல, அது கேட்ட பிராட்டியும் இசையவே, பகவான் வேதியரிடத்திற் போய், "ஐயரே! "நீங்கள் இன்றும் அமுது செய்ய வாருங்கள்" என்று ப்ரார்த்திக்க, வேதியரும் "அப்படியே வருவோம்" என்ன, பெருமானும் கோயிலைச் சேர்ந்தார். உடனே வேதியர் யாவரும் தீர்த்தமாடி வந்து கோயிலிற் பிரவேசிக்க, பகவானனவர் ஒரு ப்ராஹ்மண வுருவங்கொண்டுவந்து அவ்வேதியரை வணங்கி, அழைத்துவந்து பொற்பீடத்தி லேற்றி, "அடியேன் உய்ந்தேன்" என்று உபசார வசநங்கள் கூறி, அறுசுவை யுண்டி படைத்து, அவர்கள் உண்ணும்போது, ஒவ்வொரு பிடிசோற்றை யுண்ணுந்தோறும் ஸ்ரீ ஹரிநாமத்தை யுச்சரித்துக்கொண்டே "உண்ணுங்கள்" என்று சொல்லி, அவர்களும் அப்படியே யுண்ட பிறகு, சுத்தஞ்செய்து, சுகந்த புஷ்ப தாம்பூலங்கள் கொடுக்கப்பெற்று அவர்களிருக்க, பெருமானனவர் வேதியரை நோக்கி, "ஐயரே! உங்களைக் கண்டதனால் இது சுபதினமாகும்; உங்களைச் சேவித்து நான் உஜ்ஜீவித்தேன்" என்று பேரானந்தக்கடலில் மூழ்கி, "அடியாரோடிருந்து

யான் உண்ணுமளவும் நீங்கள் இவ்விடத்தில் எழுந்தருளி யிருக்கவேண்டும்'' என்று சொல்லி, அடியார்களுக்குப் பாதபூஜை செய்யத் தொடங்குதலும், நாமதேவர், "ஸ்வாமீ! தேவரீர் எங்களைப் பூசித்தல் நன்றோ?'' என்ன, பகவான் நகைத்து "அன்பர்களே! எனக்கு உங்களை யன்றி வேறொரு பெருமையுண்டோ?'' என்று சொல்ல, தொண்டர்கள் கேட்டு மகிழ்ந்து உண்ணும்போது, தமது திருக்கையால் ஊட்டி, எச்சில் தமதுமடியின்மேல்தெறிக்க, அவ்வெச்சிலையுதறிவிட்டு, மறுபடியும் ஊட்டித் தெறித்த எச்சிலைத் துடைத்து, உபசரிப்பதைக் கண்ட சில வேதியர், "இவர் நைஷ்டிகரு மல்லர், தபோநிஷ்டரு மல்லர், வேதியரு மல்லர்'' என்றும், வேறு சில வேதியர் "சர்வாந்தர்யாமியாய் எங்கும் நிறைந்திருக்கிற விடோபாவாகிய பரம்பொருளே இவ்வாறு அடியார் பொருட்டு மாநுஷவேஷம் பூண்டு பலவகையாய் நடிக்கின்றதன்றி வேறல்ல'' என்றும் பேசிக்கொள்வதைக் கேட்ட பண்டரிநாதர், மிகவும் நகைத்து, ஒளிவீசுகின்ற கிரீடமும், குண்டலங்களும், நான்கு திருத்தோள்களும், பஞ்சாயுதங்களும், பெரிய பிராட்டியும் கௌஸ்துபமணியும் பொலிந்து விளங்குகின்ற திருமார்பும், திருமுகமண்டலமும், பீதாம்பரமும் தேஜோமயமாய் விளங்கும்படி எழுந்தருளிநிற்க, அந்தத் திவ்யரூபத்தைக் கண்ட வேதியரும் அன்பரும் பெருமகிழ்ச்சியடைந்து, வணங்கி, ஆநந்தக் கூத்தாடத் தொடங்கினார்கள். அவர்களைப் பகவான் பார்த்து, "ஓ பாகவதர்களே! இந்த உலகமாயையை வென்று, தேஹாபிமாநத்தைவிட்டு, என்னையே பற்றாக அடைந்தவர்கள், தமது அன்பாகிய கயிற்றினால் கட்ட, அந்தக் கட்டி லகப்பட்டு நான் அவர்கள் வசப்பட்டவனாய் இருக்கிறேன். எனக்கு ஸ்வாதீநம் ஒன்றுமில்லை'' என்றருளிச் செய்ய, வேதியர், "ஸ்வாமீ! வேதங்களெல்லாம், உன்னைப் பதிதபாவநன் என்று முறையிடுவதை இன்று கண்டோம்'' என்றார்கள். மேலும், "பரமபாவநனே! உன்னை இன்று கண்டு சேவித்ததுபோல என்றும் கண்டு சேவிக்கவும், தேவரீருடைய திருநாமத்தை உச்சரிக்கவும் எங்களுக்கு வரம் கொடுத்தருளவேண்டும்'' என்றும் ப்ரார்த்தித்தார்கள். அவர்களை விட்டலரானவர் நோக்கி நகைத்து, மார்பழுந்தத் தழுவிக்கொண்டு, "ஞானதேவருடையதிருவடியை ஆஸ்ரயித்து நீங்கள் உஜ்ஜீவிக்கக்கடவீர்கள்'' என்றருளிச்செய்ய, "அப்படியே செய்கிறோம்'' என்று, வேதியர்மேலுமேலும் வணங்கினார்கள். அப்போது ஸ்ரீ ஹரியானவர் ஞானதே

வரை நோக்கி, "நீர் இந்த மறையவர் எல்லாருக்கும் ஞானோபதேசம் செய்தருள்வீராக" என்று நியமிக்க, அப்படியே ஞானதேவரும் பகவானை வணங்கி, அவர் கட்டளையின்படியே வேதியரெல்லாருக்கும் ஸ்வரூப ஸாக்ஷாத்காரத்தை உபதேசரூபமாக அருளிச்செய்து, "நீங்கள் நாள்தோறும் ஹரிபஜனை செய்து, நிர்மலராகிய பகவானைச் சேவித்து, உங்கள் மனோரதங்களெல்லாம் நிறைவேறப் பெறுவீர்களாக" என்று சொல்லி, ஆசிர்வதித்தருளினர். சிலநாள் கழிந்தபிறகு, ஞானதேவர் விட்டலபகவானிடத்திற் போய் வணங்கி "ஸ்வாமீ! எனக்குச் சமாதியை யருள்செய்யவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, பகவானும் "அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி, நல்ல சுபதிநத்தில் தமது அன்பரை யெல்லாம் வரவழைத்து, அநேக கீர்த்தநங்களைப் பாடும்படி பெரிய திருவிழா வுண்டாக்கி, ததீயாராதநமுதலியவும் செய்து, சாதுக்களெல்லாரும் வந்து ஞானதேவரைச் சூழ்ந்திருக்கும்படி நியமித்து, அவர்களோடு தாமும் எழுந்தருளி, இந்திராயணி நதிக்கரையில் அளிந்தியென்கிற வூரில் வந்து சேர்ந்து, சித்தேசுவரர் எழுந்தருளியிருக்குங்கோயிலின் பக்கத்தில்அஜாநவ்ருக்ஷத்தினடியில்நின்று, ஸ்ரீலக்ஷ்மிநாதராகிய பகவான் எல்லாரும் அறியும்படி சொல்லுகிறார்: "கார்த்திகைமாசம் க்ருஷ்ணபக்ஷத்தில் என் திநமாகிய திருவோணநாளில் வருஷந்தோறும் இவ்விடத்தில் நான் வருவேன்; அன்று இவ்விடத்தில் பெரிய தீர்த்தோத்ஸவ முண்டாகும்" என்றருளிச்செய்ய, ஸநகாதி முனிவரோடு ஹரிபக்தரும் சூழ்ந்து, ஹரிநாமசங்கீர்த்தநம் செய்யவும், பலவகையாகிய வாத்யங்கள் முழங்கவும், தேவர்கள் பூமழை பொழியவும் ஸ்ரீக்ருஷ்ணபகவானனவர் ஞானதேவர்க்குச் சமாதிதந்து, நாலுநாள் அங்கே தங்கியிருந்து, பிறகு பண்டரிபுரத்தை யடைந்தார். சிலநாள் சென்றபின்பு நாமதேவர் ஞானதேவரது பிரிவினல் அல்லும் பகலும் துக்கித்துக்கொண்டிருப்பதை ஞானதேவ ரறிந்து, ஒப்பற்ற விமாநத்தில் ஏறி வந்து, விட்டலனை நேரேவணங்கி, நாமதேவரைக் கண்டு, அவர் மனவருத்தத்தை நீக்கி, ஆறுமாசகாலம் அங்கே தங்கி, அளவில்லாத பக்தருக்கு ஞானோபதேசஞ் செய்துகொண்டிருந்து மறைந்தார். இவ்விதமாகவே நிவர்த்திதேவர்க்கு த்ரியம்பகம் என்னும் ஊரிலும், சோபானதேவருக்கு ஸம்வத்ஸரம் என்னும் ஊரிலும் பாண்டுரங்கபகவான் சமாதிதந்தருளினர்" என்று சொல்லி, மேலே கூர்மதாசர் வைபவத்தைச் சிவபெருமானனவர் பார்வதிதேவியார்க்குச் சொல்லத் தொடங்கினர்.

ஞானதேவர் சரித்திரம் முற்றிற்று.

ஏழாவது

கூர்மதாசர் சரித்திரம்.

சூரியரதத்தைச் செலுத்துகிற அருணவமிசத்தரும், நிகரற்ற ஸ்ரீ ஹரிநாமத்யாநத்தில் விருப்பமுள்ளவரும், ப்ரதிஷ்டாநம் என்கிற வூரில் வேதியர்குலத்தில் அவதாரகாலத்திலேயே கால்களில்லாமல் அவதரித்தவரும் ஆகிய கூர்மதாசர், தாய்தந்தையர் அன்போடு வளர்க்க வளர்ந்து வருங்காலத்தில், அந்தவூரில் ஹரிநாம சங்கீர்த்தநம் செய்வோரிடத்துக்குத் தவழ்ந்து சென்று, உத்தமமாகிய ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநத்தில் மிகவும் அன்புள்ளவராய்க் கேட்டுவந்தார். அப்படி கேட்குங்காலத்தில் பண்டரிபுரத்தின் மாஹாத்ம்யத்தைச் சொல்லுவோர்களால் கேள்விப்பட்டு, ஆநந்தக்கடலி லழுந்தி, அந்தப் பண்டரிபுரமிருக்குந் திசைநோக்கிக் கைகூப்பிச் சொல்லுகின்றூர்: "ஹரிபஜனைசெய்கின்ற தாசர்களே! முடவனுகிய நான் பண்டரிபுரத்துக்குப் போகமுடியுமோ? முடியாதே; இதற்கென்செய்வேன்" என்று கேட்க, ஸ்ரீ ஹரிதாசர்கள், இவரை நோக்கிச் "சரீரத்ருடம் உள்ள நாங்கள் போவதே அருமை. நீ போவது எப்படி சாத்தியப்படும்?" என்று நகைத்தார்கள். அதைக் கண்ட கூர்மதாசர் பண்டரிநாதனைத் தொழவேண்டுமென்கிற ஆசை மிகுதியால் மெல்ல நகர்ந்து போய், ஆஞ்சநேயர் சந்நிதியை யடைந்து, பசி தாஹங்களால் மனம்வருந்தி விழுந்தார். விழுந்து, பண்டரிநாதனைக் குறித்து, "ஸ்வாமீ! என்னைக் காப்பாற்றுவோர் உன்னையன்றி வேறொருவரும் இல்லை; ஆகையால் என்னை யன்போடு காப்பாற்றி யருளவேண்டும்" என்று தோத்திரம் பண்ணி வணங்குதலும், பண்டரிநாதன் மகிழ்ந்து, ஒரு ப்ராஹ்மண வேஷங்கொண்டு எழுந்தருளி, கூர்மதாசரை நோக்கி, "நீர் எங்கே போகிறீர்?" என்று வினவ, கூர்மதாசர் "அடியேன் பண்டரிபுரத்துக்குப் போகவேண்டுமென்னுங் கருத்துடையவன்; ஆதலால் பண்டரிபுரம் போகாநின்றேன்" என்று சொன்னவுடனே, மேகவண்ணனுகிய பகவானும் "நல்ல வழித்துணை நேரிட்டது" என்று மகிழ்ந்து, "காலில்லாத என் வழித்துணைவனே! உனக்குக் கிடைக்காத பொருள் ஒன்றுமில்லை" என்று சொல்ல, கூர்மதாசர் வேதியரைநோக்கி "உமதுபெயர் என்ன?" என்றுகேட்க, என் பெயர் "விட்டலன்" என்று பகவான் சொல்லியருளினூர், மேலும் இன்னமும் "பண்டரிபுரத்தில் கடைவைத்திருக்கிறேன்;

நான் மெல்ல நடப்பவன்; ஆகையால் பண்டரிபுரம் போய்ச் சேருமளவும் போஜநம் சமைத்து உமக்கு ஊட்டிப் பிறகு நானுண்டு என்னிடம் சேர்கிறேன்" என்று சொல்லி, அன்றிரவில் கூர்மதாசரோடு தங்கியிருந்து, மறுநாள் சூர்யோதயத்தில், "தாசரே! இதுதான் பண்டரிபுரத்துக்குப் போகும்வழி" என்று சொல்லி, விட்டலப்பெருமான் மறைந்தார். தாசரும் தவழ்ந்துகொண்டே போய் ஓரிடத்தில் தங்கினர். அது அஸ்தமந காலமாதலால் பகவான்வந்து தாசருக்கு இனிய உணவை யுண்பித்தார். இந்தப்படியே பகவான் இரவும் பகலும் தாசருக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்துகொண்டும், பகவானும் நான்குமாத காலத்தளவும் அவரோடு கூடவேயிருந்து தொண்டு செய்தும், லகுளையை யடைந்தார். அடைந்த அந்த நாள் கார்த்திகை நக்ஷத்ரத்தோடு கூடிய தசமிதிதி யாகையால் "இந்த வழிச்செல்வோரெல்லோரும் நாளை ஏகாதசிக்குப் பண்டரிபுரத்தை யடைவார்களே, நான் போய்ச் சேர்வதெப்படி?" என்று மனங்கலங்கி, "பண்டரிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் விட்டலப்பெருமானே! நாளைக்கும் உன்சேவை கிடையாது என்று தோன்றுகின்றதே, என்செய்வேன்?" என்று இரண்டு கைகளையும் குவித்து வணங்கி, தமக்கெதிரே போகிறவர்களைப் பார்த்து, "புண்யாத்மாக்களே! நீங்கள் முன்னே போகிறவர்களாகையால் என்னுடைய நிலைமையை எம்பெருமானுக்கு விண்ணப்பஞ் செய்து இங்கே யெழுந்தருளியாகிலும் அடியேனுக்குச் சேவைதந்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்து என் மநோரதத்தை நிறைவேற்றுவீர்களாக" என்று மிகவும் ப்ரார்த்திக்க, அவர்களும் "அப்படியே யாகட்டும்" என்று போனார்கள். ஞானதேவர் முதலிய நால்வரோடு நாமதேவரும், விசோபரும், சங்கீதத்தோடு ஹரிபஜனை செய்தார்கள். அப்போது பாண்டுரங்கன் அவர்களை நோக்கி, "எனக்கு மிகுந்த அன்புள்ள பக்தர்கள் இந்த ஞானதேவர் முதலானோர்களே" என்று அருள்செய்தார். "எனது நாமத்தைப் படநம் பண்ணுகிறவர்களுக்குள்ளே, நாமதேவர் சிறந்தவர்" என்றும் அருள்செய்தார். அப்போது அன்பரெல்லாரும் அவரைத் தழுவிக்கொண்டு, லகுளையிற்றங்கி, அங்கிருந்து ஸ்ரீ ஹரிநாமசங்கீர்த்தநம் செய்துகொண்டே கோயிலுக்குப் போனார்கள். போய்ப் பகவானுடைய திருவடியைவணங்கி, அன்போடுதுதித்து, கூர்மதாசர் முன்னேசொன்னதைப் பெருமானுக்கு விண்ணப்பஞ் செய்தார்கள். அதைக்கேட்ட பகவான், தமதிடத்தில்நின்ற நாமதேவரையும் அன்போடு கடாக்ஷித்து அருள்செய்கிறார்: "கூர்மதாசன் என்னைக் காண

வேண்டும் என்று மிகுந்த ஆசையுள்ளவனாயிருக்கிறான், ஆகையால் நீங்களும் வாருங்கள்'' என்று சொல்லிக் கூடவேயழைத்துக்கொண்டு நாமதேவரைச் சேர்ந்து ஒரு விளையாடலைச் செய்ய நினைத்து, அந்த இருவரையும் நோக்கி, "எனக்கு அதிக தாகமா யிருக்கின்றது, நான் போய் நீருண்டு வருமளவும் நீங்கள் இங்கே நில்லுங்கள்'' என்று சொல்லி, ஒரு கொடிவழியாகப் போய், சாவந்தியாமேளதாசர் ஸ்ரீ ஹரிநாம ஸ்மரணையோடு கண்களை மூடிக்கொண்டு, மெய்மறந் திருக்கிற அவ்விடத்திற்குப் போய், அவரை யெழுப்ப, அவர் விழித்து நோக்கி, பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தைச் சேவித்து, "ஸ்வாமீ! தேவரீர் அடியேனிடத்துக்கு எழுந்தருளுதற்கு அடியேன் என்னதவம் செய்தேனோ'' என்று சொல்லித் தழுவிக்கொண்டு திருவடியை வணங்கி, மெய்யன்பாகிய கடலில் அழுந்திநிற்பவராகிய அந்தத் தாசருடைய முகத்தை நோக்கிப் பகவான் சொல்லுகின்றார்: "தாசரே! நான்வரும் வழியில் இரண்டு திருடர்கள் என்னைத் தொடர்ந்தார்கள்; அவர்களுக்கஞ்சி உன்னிடம் வந்தடைந்தேன்; நீ என்னை அவர்களுக்குக் காட்டாமல் மறைத்து வைக்கவேண்டும்'' என்று சொல்ல, தாசரானவர் சிறிது நேரம ஆலோசித்து, "ஸ்வாமீ! சூரியனை எங்கே யொளித்து வைக்கிறது? ஒளித்துவைக்க முடியாதே; அதுபோல அண்டகோடிகளெல்லாவற்றையும் திருவயிற்றிலடக்கியிருக்கிற தேவரீரை அடியேன் எங்கே மறைத்து வைப்பேன்?'' என்றார். அப்போது பகவானானவர் தாசரை நோக்கி, "தாசரே! இப்படிப்பட்ட ஆபத் காலத்திலேதானோ ஞானம் பேசுகிறது? அதை நிறுத்தி, விரைவாக என்னை மறைக்கவேண்டும்'' என்றார். அதைக்கேட்ட தாசரானவர், இவரை மறைக்கத்தகுந்த இடமில்லையென்று தமது மார்பையே பிளந்தார்; பிளந்தவுடனே பகவானானவர், அந்தப் பிளப்பில் நுழைந்து மறைந்திருந்தார். உடனே தாசரானவர் சில கொடிகளைக்கொண்டு மார்பைச் சுற்றி வரிந்துகட்டினார். உள்ளே மறைந்திருக்கும் பகவானானவர், "தாசரே! இந்த ஆபத்காலத்திலே நீர்செய்த இந்த வுதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்?''என்றார். அதற்குத் தாசர் "எங்கும் நிறைந்திருக்கிற தயாநிதியே! என் உயிருக்கு ஆதாரமாயிருக்கும் பரம்பொருளே! என்மார்பை யிடமாகக்கொண்டு எழுந்தருளினதற்கு அடியேன் என்ன கைம்மாறு செய்வேன்'' என்று தியானித்துக் கொண்டிருந்தார். இப்படி யிருக்கும்போது, அங்கேயிருந்த நாமதேவர், "எம்பெருமான் எங்கே போயினரோ! போய் நெடுநேரமாயி

த்றே" என்று அவர் நடந்த அடிச்சுவட்டைப் பற்றிக்கொண்டே போய், சாவந்தியாமேளதாசர் இருக்குமிடத்தை யடைந்து, "பகவான் இங்குவரக் கண்டீரோ?" என்று கேட்க, தாசர் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருக்க, "வந்த பகவானை இவர் விழுங்கிவிட்டார் போலத் தோன்றுகின்றது; ஆனாலும் நீரை விரும்பி வந்தவரை இவர் எப்படி விழுங்கினாரோ அறியேன்" என்று, "எம்பெருமானே! எனக்குத் தோன்றாமல் மறைந்திருப்பீரானால், என்னுயிரை இப்பொழுதே விட்டுவிடுவேன்" என்று சொல்லுதலும், பகவானானவர், "நான் இந்தத் தாசருடைய மார்பினுள்ளே யிருக்கிறேன்; எப்படி வெளியே வருவேன்?" என்றார். அது கேட்ட நாமதேவர், மனம் புழுங்கிக் கதறியழுதார். அப்போது பகவானானவர் தம்மை மார்பினுள்ளே மறைத்து வைத்திருக்கிற தாசரை நோக்கி, "நாமதேவன் என்னைக் காணாமல் துன்பப்படுகிறான், ஆதலால் என்னை அவனுக்குக் காட்டினால் அவன் துன்பம் நீங்கும்" என்று சொல்ல, தாசரானவர் நாமதேவரை நோக்கி, "நீர் வருந்தவேண்டாம்" என்று சொல்லி, தமது மார்பிற் சுற்றிக் கட்டியிருந்த கொடிகளை அவிழ்த்தார். அவிழ்த்தவுடனே, பகவானானவர் வெளியே வந்தார். அவரை நாமதேவர் கண்டு, மனக் கனிவோடு அவர் திருவடியைப் பற்றிக்கொண்டு நிற்க, பகவான் அவரைத் தழுவிக்கொண்டு, கண்ணீர் துடைத்து அருகில் இருத்திக்கொண்டார். அப்போது சாவந்தியாமேளதாசரோடு, ஞானதேவரும், நாமதேவரும்கூட லகுளையில் எழுந்தருளி யிருக்கும் பகவானானவர் இவர்கள் எல்லாரையும் கொண்டு கூர்மதாசர் திருமாளிகைக்குப் போக, அவர் எதிர்கொண்டு வந்துபணிந்து, அன்பு மிகுந்த தோத்திரங்கள பலவும் செய்து கொண்டாடினார். அப்போது பகவானானவர் அவரைத் தமது நான்கு திருக்கைகளாலும் அணைத்துக்கொண்டு "உமக்கு வேண்டிய வரங்களைக் கேளும்" என்று சொல்ல, தாசர் மகிழ்ந்து, "ஸ்வாமீ! தேவரீர் எந்நாளும் இவ்விடத்தில் எழுந்தருளி யிருக்கவேண்டும், அதுதான் எனக்குத் தேவரீர் கொடுக்கவேண்டிய நல்லவரம்" என்றார். அதற்குப் பகவானானவர் இசைந்து, "தாசரே! அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி, அன்றுமுதல் பண்டரிபுரத்தில் எழுந்தருளி யிருப்பதுபோலவே இந்த க்ஷேத்ரத்திலும் எழுந்தருளியிருந்தார். வருஷந்தோறும் கார்த்திகை மாதம் ஏகாதசியில் இந்த லகுளையிலும் அன்பரெல்லாரும் கூடிப் பாண்டரெங்கப் பெருமானை வணங்கித் தோத்திரம் பண்ணி, ஆநந்தக் கூத்தாடிக்கொண் டிருப்பார்கள்.

இதுதான் கூர்மதாசர் வைபவமென்று சொல்லி மேலே ராகாகும்பார் வைபவத்தைச் சிவபெருமானனவர் பார்வதி தேவியார்க்குச் சொல்லத் தொடங்கினர்.

கூர்மதாசர் சரித்திரம் முற்றிற்று.

எட்டாவது

ராகாகும்பார் சரித்திரம்.

வைராக்கியத்திற் சிறந்தவராகிய ராகாகும்பார் என்பவர், கூர்ஜர தேசத்தில், குயவர் குலத்தில் அவதரித்து, தமது குலத்தில், பாங்கா பாய் என்பவளை மணம் புணர்ந்து இல்லறம் வழுவாமல் நடத்திவருங் காலத்தில், இவர் மனைவி வயிற்றில் வங்கா என்றொரு புதல்வி அவதரித்தாள். இம் மூவருமாக பண்டரிபுரத்தில், மட்கலங்கள் செய்து விற்று ஜீவனம் செய்துகொண்டு, ஸ்ரீஹரிநாம சங்கீர்த்தநத்தை மறவாமல் நெடுநாள் வாழ்ந்திருந்தார்கள். இப்படியிருக்குங் காலத்தில் ஒருநாள் இந்த ராகாகும்பார் செய்து காயவைத்த மண்பாண்டத்தில் ஒரு பூனையானது மூன்று குட்டிகளை யீன்று, இரவும் பகலுமாக அந்தக் குட்டிகளை அதிக ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வந்தது. ஒருநாள் அது, குட்டிகளுக்கு இரை கொண்டுவரும் பொருட்டுப் பிரிந்த காலத்தில், அந்த மண்பாண்டத்தோடு மற்றைய மண்பாண்டங்களையும் சேர்த்து ஒருமிக்கச் சூளையிலிட்டுச் சுடும்படி நேர்ந்தது. அப்படி நெருப்பிட்டு வேகும்போது, தாய்ப்பூனை வந்து, தன் குட்டிகளிருந்த பாண்டம் காணாமையால் மிகவும் துன்பமடைந்து, உரத்த சத்தத்தோடு அழத்தொடங்கினது. இது அழுகின்ற சப்தமானது சூளையில் பாண்டத்துக்குள்ளே யகப்பட்டிருக்கிற குட்டிகளின் காதுகளில் பிரவேசிக்க, அவைகளும் கதறியழத் தொடங்கின. இப்படி தாய்ப்பூனையும் குட்டிப்பூனைகளும் அழுது கூக்குரலிடுவதைச் சூளைக்கு தீமூட்டின ராகாகும்பார் அறிந்து, வயிற்றிலும் முகத்திலும் அறைந்துகொண்டு, மனைவியின் முகத்தைப்பார்த்து, "பாண்டத்தில் குட்டிகளிருப்பதை அறியாமல் நான் தீமூட்டினேன். தாய்ப்பூனையும் குட்டிப் பூனைகளும் படுந்துயரத்தைப் பாண்டுரங்கப் பெருமான்தான் நீக்கி ரக்ஷிக்கவேண்டும்" என்று சொல்லித் துதிக்கவே, எரிகிற சூளையைச் சுற்றிசுற்றி அழுகின்ற தாய்ப்பூனையின் சத்தத்தையும், சூளையினுள்ளே பாண்டத்திலிருந்து அழுகிற குட்டிப் பூனை

களின் சப்தத்தையும் கேட்டும், தன் கணவன் படுகிற துயரத்தை நோக்கியும், பாங்காபாயியானவள் நெருப்பில் விழுந்து கரிந்துபோன பூங்கொடிபோலக் கதறியழுதுகொண்டே நிலத்தின்மேல் விழுந்து, பாண்டுரங்கன் திருவடியை நினைந்து அழுதாள். அப்போது ராகாகும்பாரும், “பண்டரிநாதா! பக்தபாலகா! ருக்மிணீரமணா! அக்காலத்தில் பாண்டவர்கள் அரக்குமாளிகையில் அகப்பட்டு இறவாமலும், ப்ரஹ்லாதாழ்வான் தன் தந்தையாகிய ஹிரண்யகசிபு மூட்டின தீயிலகப்பட்டு இறவாதிருக்கவும் அருள்செய்த செந்தாமரைக் கண்ணனாகிய பகவானே! இங்கே இந்தத் தீயில் அகப்பட்டு வருந்துகிற பூனைக் குட்டிகளையும் காத்தருளவேண்டும். அப்படிக் காத்தருள்வாயானால், இனி இந்தக் கடுந்தொழிலாகிய சுடுந்தொழிலை விட்டுவிடுகிறேன்” என்று தோத்திரம்பண்ணி, மனைவியும் தாமுமாகத் துக்கசாகரத்தில் மூழ்கியிருந்தார்கள். இந்தப்ரகாரம் துக்கிக்கிற காலத்திலும் ஸ்ரீ ஹரி நாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்ததனால், மூன்றுவது நாள் நெருப்பாறிக் குளிர்ந்தபிறகு குட்டிகள் கண்ணுக்குத் தெரியாமலிருந்து கத்துவதையும், தாய்ப்பூனை சூளையைச் சுற்றிச்சுற்றிக் கத்துவதையும் நோக்கி, ராகாகும்பாரும் மனைவியும் ஓடி, விரைவாகச் சூளையைக் கலைத்துப் பார்க்க, அதில் ஒரு பாண்டம்மாத்திரம் வேகாமல் பச்சையாயிருக்கக் கண்டு, அதை யெடுக்கும்போது, அதற்குள்ளே குட்டிகள் இறவாமலிருக்கக்கண்டு, மிகவும் மனமகிழ்ந்து மூன்று நாளாகப் பாலுண்ணக் கிடையாமல் வருந்தின குட்டிகளை நோக்கிப் பரிதபித்து, பாண்டுரங்கப்பெருமான் விசேஷ க்ருபை செய்ததையும் நினைந்து, தமது அன்ப மொழிந்தார்கள். இந்த அதிசயத்தை அந்த வூரிலுள்ளாரெல்லாரும் கண்டு, இவர்களுடைய பரமபக்தியைப் புகழ்ந்துகொண்டாடினார்கள். பிறகு ராகாகும்பார், “நாம், பாண்டுரங்கப்பெருமானறிய இந்தத் தொழிலை விட்டுவிடுவதாகச் சொன்னபடியே, விட்டுவிடுவதே நலம்” என்று, குயத்தொழிலை விட்டு, காட்டுக்குப் போய், உலர்ந்துகிடக்கிற விறகுகளைக் கட்டிக்கொண்டுவந்து ஊரில் விற்று, அதனால் கிடைக்கும் பொருளைக்கொண்டு ஜீவநம்செய்துகொண்டும், தம்மை நாடிவருகிற அதிதிகளை ஆதரித்தும், பண்டரிநாதனது திருநாமத்தை மறவாமல் உச்சரித்துக்கொண்டும், கிழிந்து குப்பையிற் கிடக்கிற துணிகளால் தமது மானத்தைக் காப்பாற்றிக்கொண்டும் வருவதை உலகத்தார் பார்த்து, “இவர்கள் ஒரு உயிரின்பொருட்டுத் தமது குலத்தொழிலை விடுத்து வேறு தொழில்செய்து ஜீவிக்கிறார்கள். இவர்களுடைய ஜீவகாருண்ய

மூம் பக்திவைராக்யங்களும் ஆலோசிக்குமிடத்து, மிகவும் ஆச்சர்ய மேறுநக்களாயிருக்கின்றன" என்று மிகவும் புகழ்ந்து கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். இப்படியிருக்க, ஒருநாள் இந்த ராகாகும்பார் புதல்வியாகிய வங்கா, வீமநதிக்கரையை யடைந்து, அந்த நதியில் ஸ்நாநம்செய்து பூஜை செய்துகொண்டிருக்குப்போது, அந்த நதியில் வஸ்திரம் தோய்த்துக்கொண்டு போகவந்த நாமதேவர் மகள் அவசரமாய்த் தப்பும்போது தெறித்த நீர்த்துளிகளிற் சில, இந்த வங்கா மேல் தெறிக்க, இவள், நாமதேவர் மகளை நோக்கி, "இப்படி நீ துணி தப்புவது உனக்குத் தகுதியோ" என்று கேட்க, அவள் வங்காவை நோக்கி, "பாண்டுரங்கனை ப்ரார்த்தித்துக் காமியத்தில் மனம் வைத்து, குலத்தொழிலை விட்டு, நெறிதப்பி, அலைகிற குயச்சாதியார்க்கும் பூசைசெய்யுந் தொழில் தகுதியாமோ" என்று கடுஞ் சொற்களைக் கூற, வங்கா அந்த நாமதேவர் மகளை நோக்கி, "உன் தந்தை அழுது விட்டலப்பெருமானைப் பிரார்த்தித்து, இறந்த பசுவைப் பிழைக்கச்செய்தது காமியமல்லவோ? ஆலோசித்துச் சொல்" என்று கூற, இப்படி ஒருவரோடொருவர் வாதுசெய்து மிகவுங் கோபங் கொண்டு, தமது வீட்டுக்குப் போய்விட்டார்கள். பிறகு நாமதேவர் பகவத் ஸந்நிதியிலிருந்து தமது திருமாளிகைக்கு வந்தவுடனே, அவர் மகள் அவரை நோக்கி, "ராகாகும்பார் புதல்வியாகிய வங்கா என்பவள், உம்மை மிகவும் தூஷித்தாள்" என்று சொல்ல, நாமதேவர் சற்றுநேரம் யோசித்து, மேகவண்ணனாகிய பகவான் சந்நிதிக்கு மீண்டும் வந்து, "ஸ்வாமீ, உன் அடியவராகிய ராகாகும்பார் உன்னிடத்தில் காம்யரோ, நிஷ்காம்யரோ, அவர் கருத்தை எனக்குத் தெரியச்சொல்லவேண்டும்" என்று கேட்க, பாண்டுரங்கபகவான், "அவன் நிஷ்காம்யனே" என்று நகைத்துகொண்டே சொல்லியருள, தாசர், "அவர் பெருமையை அடியேனுக்குக் காட்டவேண்டும்" என்று கேட்க, பகவான் ருக்மிணி தேவியோடு இவரை யழைத்துக் கொண்டு, ராகாகும்பார் விறகொடிக்குங் காட்டிற்கு வந்து, அவரும் அவர் தேவியும் விறகொடிப்பதையும் கட்டுவதையும் காட்ட, "தேவரும், இவரைச் சோதனை செய்யவேண்டும்" என்று சொல்ல, "அப்படியே சோதனை செய்கிறேன்" என்று, பிராட்டியாருடைய கையிலுள்ள கங்கணத்தைக் கழற்றி ஒருபக்கத்தில் போட்டு, அதன் மேல் உலர்ந்த விறகை வைத்து மூடி, தூரத்தில் மறைந்திருந்து பார்க்க, ராகாகும்பாரும், விறகு தேடி வரும்போது இந்தக் கங்கணத்

தைக் கண்டு அஞ்சி விலகிநின்று, கங்கணத்தையும் அதனை மறைத் திருந்த விறகையும் தமது மனைவிக்குக் காட்ட, அவளும் "ஏதோ தீமை யுண்டாயிற்று" என்று மிகவும் அஞ்சி நெடுந்தூரம் விலகிப் போக, அதைக் கண்ட நாமதேவர், பகவானைப் பணிந்து, "கருணை நிறைந்து வழிந்தொழுகும் திருக்கண்களை யுடையவனே! காருத் தனே! ராகாகும்பார், உண்மையாகிய பக்தியுள்ளவரே; சந்தேகமு மில்லை. அதுநிற்க, தேவரீருடைய சகுண ரூபத்தைக் காட்டியருள வேண்டும்" என்று ப்ரார்த்திக்க, ஸ்ரீ லக்ஷ்மீநாதன், நகைத்து, "இந்த ராகாகும்பார் நடத்தையை இன்னமும் காணவிரும்புகிறாயோ! இப் போது காட்டின சோதனையே போதுமோ" என்று கேட்க, தாசர், "இனி யொருசோதனையும் செய்யவேண்டியதில்லை; இவருக்கு நிக ரான பக்திமான்கள் உலகத்தில் ஒருவருமில்லை" என்று சொல்லவே, பாண்டுரங்கப்பெருமானனவர், ருக்மிணி பிராட்டியோடும் நாமதேவ ரோடும் கூடி, மூவருமாக, ராகாகும்பாருக்கு எதிரே வந்து அருள் செய்து நிற்க, ராகாகும்பார் தமது மனைவியோடும் வந்து அன்போடு இவர்களை அடிவணங்கித் தோத்திரஞ் செய்தார்.

ராகாகும்பார் சரித்திரம் முற்றிற்று.

ஒன்பதாவது

கோராகும்பார் சரித்திரம்.

எல்லாவூர்களிலும் சிறந்துவிளங்குகின்ற தேரடோகி யென் னும் ஊரில் கோராகும்பார் என்பவர் ஒருவரிருந்தார். அவர் இல் வாழ்க்கை பூண்டு இனிதாய் நடத்திவருங் காலத்தில், அவருக்குப் பகவத்பக்தி அதிகரித்தலால், உண்ணும்போதும், நடக்கும்போ தும், இருக்கும்போதும், எழுந்திருக்கும்போதும், லோகவிவகாரங் களை நடத்தும்போதும், மட்கலங்கள் வனையும்போதும், ஆயாசந் திரும்போதும், பாண்டுரங்கப்பெருமானை மறவாமல் மனத்திலிருத்தி பஜனையுஞ் செய்து வாழ்ந்திருந்தார். இப்படியிருக்கும்போது ஒரு நாள், இவர் மனைவியானவள், தவழ்கின்ற தனது இளங்குழந்தையை, இவர்க்கெதிரேவிட்டுத் தாகநீர் கொண்டுவரப் போனாள். அந்தக் குழந்தையானது இவர் மண் மிதித்துக்கொண்டிருந்த இடத்திற்குத் தவழ்ந்துகொண்டு வந்தது. இவர் ஸ்ரீ ஹரிபாதத்தில் மனம் பதிந்திரு ப்பவராதலால் இந்தக் குழந்தை வந்ததை யறியாதவராய் மண் மிதித்

துக்கொண்டேயிருந்தார். இந்தக்குழந்தை யையத் தவழ்ந்துபோய், மண் மிதித்துக்கொண்டிருக்கிற இவருடைய காலின்கீழ் அகப்பட்டது; இவர் மண்ணோடு சேர்த்து மிதித்துக் குழைத்துவிட்டார். தண்ணீர்க்குப்போன இவர் மனைவிவந்து நீர்க்குடத்தை யிறக்கிவிட்டு "குழந்தை எங்கே?" என்று கேட்டு, இவர் வாய்பேசாமலிருப்பதைக் கண்டு, "இங்கே நமது குழந்தைக்கு ஏதோ தீங்கு நேரிட்டதாய்த் தோன்றுகின்றது" என்று சற்றுநிதானித்து, இவர் மிதிக்கிற மண்ணை பார்த்து, அது உதிரத்தோடுகூடிச் சிவந்திருப்பதையும், குழந்தையின் சரீரத்துண்டையும் கண்டு, பயந்து, மார்பில் அறைந்துகொண்டு, பூமியின்மேல் விழுந்து, புரண்டு அழுது, "ஐயோ, குழந்தாய்! மண்ணிற் சிக்கி மடிந்தாயோ! கொஞ்சமேனும் இரக்கமில்லாமல் உன் தந்தை உன்னைக்கொன்றாரே" என்றுசொல்லிப் புலம்பிப் பின்பு, கணவனைநோக்கி, "கொஞ்சமும்நினைப்பில்லாமல்குழந்தையைமண்ணோடு சேர்த்து மிதித்துக்கொன்றீர்! நீர் இவ்விடம் விட்டு எங்கேயாகிலும் போய் இறந்தொழிவீராக" என்று கடுஞ்சொற்களைச் சொல்ல, இவர்க்குச் சற்றே நினைவுவந்து விழித்துக்கொண்டு, எதிரேநிற்கிற மனைவியை நோக்கி, "என் மனத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வைகுண்டநாதனை நீ விலகும்படி செய்தாயே! என்னடி பேதாய்" என்று கோபங்கொண்டு, தம்கையிலிருந்த தடியாலடிக்கக் கிட்டிவரும்போது மனைவியார், இவரை நோக்கி, "விட்டலப்பெருமான் ஆணை என்னை நீர் தீண்டாதிருக்கக்கடவீர்" என்ற வார்த்தையைக்கேட்டு, அவசரப்படாமல் பொறுத்திருந்தார். இந்தச் செய்தியை ஊராரெல்லாரும் கேட்டுத் திரண்டுவந்து, இங்கே நடந்த விருத்தாந்த முழுதும் தெரிந்துகொண்டு, "இவருக்கு இப்படிப்பட்ட வெறித்தனம் எப்படி உண்டாயிற்று?" என்று சிலர் பேசிக்கொண்டார்கள். மனைவியை நோக்கி "உனக்கு நல்ல கணவன் வாய்த்தான்" என்று சிலர் சொன்னார்கள். "ஸ்ரீ ஹரிபக்தி ஒருவனுக்குண்டானல் அந்த பக்தி ஒன்றையும் அறியாதிருக்கச்செய்யுமோ" என்று சிலர் சொன்னார்கள். இப்படிப் பல பல வகையாய்ப் பேசுவதை இவர் செவியிலேற்காமல், ஸ்ரீ பாண்டுரங்கப்பெருமானைச் சிந்தித்துப் பஜனைசெய்துகொண்டிருந்தார். மறுநாள் அந்த மனைவியாரே, தாம்பேசின கடுஞ்சொற்களை நினைத்து, மனமிரங்கிக் கணவனைத் திருவடிவிளக்க நீர் கொண்டுவந்தாள். கோராகும்பார்அதைநோக்கி, "பெண்ணே! நீ பண்டரிநாதன்மேல் ஆணையிட்டு நேற்றுச் சொன்ன வார்த்தையை மறந்து, இப்பொழுது ஏன் என்னைத் தீண்டவருகிறாய்?" என்று கோபித்துக்கொண்டார். கிட்டி

வந்த மனைவியாரும் குழந்தைமீதுள்ள ஆசையாலே, "நமது கணவ
னுக்கு மற்றொரு விவாஹமாகிலும் செய்து அந்த மனைவி வயிற்றி
லே ஒரு குழந்தை யுண்டாகப்பெறுவோம்" என்று நினைத்து, தமது
தந்தைதாயர் வாழ்கின்ற வீட்டுக்குப்போய் அவர்களை வணங்கி,
"என்னை என் கணவன் மறுத்ததனால் அவருக்கு என் தங்கையை
மணமுடித்துக் கொடுக்கவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, அந்தத் தாய்
தந்தையரும் அதற்கிசைந்து நல்ல சுபமுஹூர்த்தத்தில் பெண்ணை
விவாஹஞ்செய்து கொடுக்கும்போது எதிரேநின்ற கோராகும்பா
ரை நோக்கி, "நீர் மூத்தபாரியாளைக் காப்பாற்றினதுபோல இந்த
இளையபாரியாளையும் காப்பாற்றவேண்டும்" என்று மணப்பந்தலிலிரு
ந்த தாய்தந்தையர்முதலானோர் சொல்லிவிடுக்க, இவர் தம்வீட்டிற்கு
அழைத்துவந்து அவரைத் தீண்டாமல் முன்போல விரதம் பூண்
டிருக்க, அந்த இளைய பாரியையானவர், மூத்தாளைநோக்கி, "உனக்கு
எப்படியோ அப்படியே எனக்கும் முடிந்தது" என்றார். பிறகு, பெ
ரிய மனைவியார் இளைய மனைவியாரைத் தேற்றி, இருவருஞ் சென்று
கணவன் தூங்குகிறபடுக்கையில் தாமும் இருபுறத்தும் படுத்து, கண
வனது இரண்டு கைகளையுந்தூக்கித் தங்கள் மார்பின்மேல் வைத்துக்
கொண்டு உறங்கினார்கள். அப்போது கோராகும்பார் விழித்துப்பார்
த்து, "நமது விரதத்துக்குக் கெடுதி நேரிட்டதே" என்று அருவரு
த்து வாளால் ஒரு மனைவி கையை அறுத்து, பிறகு மற்றொரு மனைவி
கையையும் அறுத்தபோது, மனைவியர் இருவரும் மனம் வருந்தி,
"நாம் இவரை மணஞ் செய்துகொண்டது குழந்தையின் பொருட்
டோ! அதற்கு விரோதமாய்க் கையை யிழந்துபோதற்கோ! இனி
யாம் செய்யத்தகுந்தது யாதோ?" என்று அலறியழுதுகொண்டிருப்
பதை, "அன்பரை யாதரிப்பவனாகிய பாண்டுரங்கன் இனிமையாய்
உதவிசெய்வோனாயிருக்க நீங்கள் துன்பப்படுவது யாதுக்கு?" என்று
கோராகும்பார் சொல்லி, மேலும் "விட்டலன் திருநாமத்தை யுச்சரி
த்தால் எவ்வகையாகிய நோய்களும் நீங்கும்" என்று அவரைத் தே
ற்றி, ஹரிபஜனை செய்துகொண்டிருந்தகாலத்தில் ஆடிமாசம் ஏகாதசி
நேர்ந்தது. அப்போது கோராகும்பார் தம் மனைவியரோடு வந்து பா
ண்டுரங்கனைத் தரிசித்து, பேரானந்தங்கொண்டு, சந்திரபாகா நதியில்
மூழ்கி, முன்னே புண்டலீகரைத்தொழுது வாழ்த்தி, பண்டரிநாதன்
எழுந்தருளியிருக்கிற கோயிலை வலம்வந்து, பெருமானையுஞ் சேவித்
துத் தோத்திரம்பண்ணித் தழுவிநிற்க, நாமதேவர் தமது கோஷ்டி
யோடு தாளம், தம்புரு, மிருதங்கம் முதலிய வாத்யங்கள் முழங்க,

கையில் கருடக்கொடியை யேந்தி, பாண்டுரங்கனுடைய நாமஸங்கீர்த்தனம் பாடி ஆநந்தக்கூத்தாடினார்; அவர்களோடு கோராகும்பாரும் கூடியாடினார். அப்போது மனைவியர் இருவரும் கைத்தாளம் போட விருப்பமுள்ளவராயிருந்தும் முன் கைகளில்லாமையால் மனம் வாடி ஸ்ரீ ஹரிநாமத்தை யுச்சரித்துக் கைகளை மூடிக்கொண்டு நாணி நின்றார்கள். அப்போது இவர்களுடைய எண்ணத்தைப் பாண்டுரங்கன் அறிந்து கைகள் முன்போலவே வளரச்செய்ய, அவர்களும் அன்போடு கைகள் கொட்டிப் பாடித்தொழுது ஆடிமகிழ்வதை எல்லாரும் அறிந்து அதிசயித்து நோக்கி, பரவசமடைந்து, "இந்தக் கோராகும்பார் தொண்டர்களிற் சிறந்தவர்" என்று பலவகையாய்த் தோத்திரஞ்செய்து, நெருங்கியிருக்கக்கண்டு, மூத்த மனைவியார், கை கூப்பிநின்று, "பண்டரிநாதனே! பக்தபாலனே! பத்மநாபனே! திருத்துழாய்மாலையை யணிந்த தாமோதரனே" என்று வாழ்த்தித் தொழுது, "அன்பருக்குக் கைகள் வளரும்படி அருள் செய்த கமலக்கண்ணனே! நீலமேகவண்ணனே! மாயவனே! குழந்தையில்லாமல் வருந்துகின்றோம்! நாங்கள் வருந்துவது தேவரீர் திருவுளம் அறியாதோ! எங்கள்மீது கருணை யில்லையோ! ஸ்ரீ லக்ஷ்மீநாதனே" என்று இவ்வாறு தோத்திரம் செய்ததற்குப் பகவான் திருவுளமிரங்கி அருள்செய்ய, உடனே முன்னே இறந்த குழந்தையானது தவழ்ந்துகொண்டு எதிரே வருவதைக்கண்ட மூத்தமனைவியார், விரைந்துபோய்க் குழந்தையை எடுத்து மார்பிலணைத்துக்கொண்டு உச்சி மோந்து முத்தமிட்டு மனமகிழ்ந்திருக்கும்போது, பகவானானவர் ப்ரத்யக்ஷமாகி,கோராகும்பாரை நோக்கி, "இன்றுமுதல் உம்முடைய மனைவியர் இருவரோடுங்கூடி இனிதாக வாழ்ந்துகொண்டிருக்கக்கடவீர்" என்றருளிச்செய்தனர்; இந்த அதிசயங்களைக்கண்ட அன்பரெல்லாரும் பலவிதமாய்த் தோத்திரம்பண்ணி வணங்கிப் பாடியாடி மங்கள ஆலாத்திசுழற்றி, மகிழ்ந்திருக்க, கோராகும்பார், அந்தத் தொண்டர்களை நோக்கி, "நீங்களெல்லீரும் அடியேனுடைய குடிலுக்கு எழுந்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, அவர்களும் அப்படியே இவரைத் தொடர்ந்துபோய் இவருடைய வீட்டையடைந்துநிற்க, கோராகும்பார் அந்த அன்பர்கள் யாவர்க்கும் பாதபூஜைசெய்து, ஆசநங்கொடுத்து, எல்லாரும், அமைந்திருந்த பிறகு, அவர்களுக்கு அறுசுவையோடு கூடின உணவை யுண்பித்து, மற்றும் செய்யவேண்டிய வுபசாரங்களெல்லாம் செய்து முடிந்தபிறகு, ஞானதேவர், கோராகும்பாரை நோக்கி, "நீர் இங்கே யழைத்துக்கொண்டுவந்த அன்ப

ராகிய பாண்டங்களில், சுட்டபாண்டம் இதுவென்றும், சுடாதபா ண்டம் இதுவென்றும் பிரித்தறியவேண்டுமென்கிற விருப்பம் எனக் கிருக்கின்றது" என்று சொல்லுதலும், கோராகும்பார் எழுந்து தமதுகையிலிருந்த தடியினால் ஒவ்வொருவரையும் தட்டினார். அவர்க ளெல்லாரும் மௌனமாயிருந்தார்கள்; பிறகு நாமதேவர் தலையில் தட்டவரும்போது அவர் தடுத்தார். அப்போது "இவர் பச்சைப்பா ண்டம்" என்று சொல்லவே, முக்தாபாயியும் "உமக்கு எவ்வாறு உண்மை தோன்றிற்று?" என்றும், "நீர் மிகவும் சமர்த்தர்" என் றும் சொல்லக் கேட்டவர் எல்லாரும் நகைக்க, நாமதேவர் நாணத் தோடும் எழுந்து, பகவான் சந்நிதியிற்போய்ச் சேவித்துக் கண்களில் நீரொழுக நின்று, "எனக்கு இன்று அவமானம் நேரிட்டதனால் மிக வும் மனம் வருந்தினேன்" என்று விண்ணப்பஞ் செய்யக்கேட்ட எம்பெருமான் இவரைத் தழுவிக்கொண்டு, "உனக்கு யார் என்ன செய்தார்? நடந்த செய்தியைச் சொல்லும்" என்று வினவ, "இன்று கோராகும்பார் தமது வீட்டுக்கு எங்களை யழைத்துக்கொண்டுபோய் நல்லவுணவை யுண்பித்து, நாங்கள் மகிழ்ந்திருக்கும்போது, தமது கைத்தண்டத்தால் ஒவ்வொருவரையும் தட்டிக்கொண்டேவர, அவர் கள் சும்மாவிருந்தார்கள்; என் தலையில் தட்டவரும்போது நான் கையினால் தண்டத்தைத் தடுத்தேன்; அப்போது இது பச்சைப்பா ண்டமென்றார்; எல்லாரும் சிரித்தார்கள், முக்தாபாயியும் அதிகமா ய்ப் பரிகஸித்தாள்; இந்தச் செய்தியைத் தேவரீருக்கு விண்ணப்பஞ் செய்ய வந்தேன்" என்றார். இதை ஸ்ரீ லக்ஷ்மீநாதனாகிய பகவான் கேட்டுச் சிரித்து, "நீ குருமுகமாக உபதேசம்பெறாமையால் உனக்கு இப்படிப்பட்ட அவமானம் உண்டாயிற்று. கோராகும்பார் சொன் னது உண்மையாம்" என்று சொல்ல, நாமதேவர் சொல்லுகிறார்: "பண்டரிநாதனே! என் துயரமெல்லாம் உன்னிடத்தில் விண்ணப் பஞ்செய்தால் அதைத் தீர்த்தருளாமல், நீயும் உன் அன்பர் சொன் னதுபோலவே சொல்வது தகுதியாகுமோ" என்றுசொல்லிக் கண் ணீர் ததும்ப நின்றார். அதைக்கண்ட பண்டரிநாதர் "நாமதேவா! உன்னை என் உயிர்க்குயிரா யெண்ணியிருக்க நீ யிப்படி வன்சொல் வழங்குவது தகுதியல்ல; உன்னுடைய துவிதபாவம் நீங்கும்படி குருவின் அருளைப்பெற்று, அதன்பிறகு என்னை யடையவேண்டும்" என்று சொன்னவுடனே, நாமதேவர், "குருக்களுக்கெல்லாம் பரம குருவாயிருக்கிற தேவரீரை யாசிரயித்த நான் வேறு குருவைத்தேடு வது உசிதமல்லவே" என்றார்; அதற்குப் பகவான், "நாமதேவா!

நான் ஸ்ரீராமாவதாரத்தில் வசிஷ்டரிடத்திலும், க்ருஷ்ணுவதாரத்தில் சாந்தீபரிடத்திலும் உபதேசம்பெற்றே ஆத்மஞானத்தை யடைந்தேன்; ஆகையால், நீ இப்போதே உபதேசம்பெற்று வருவாயானல், சாது ஜனங்களால் மதிக்கப்பெறுவாய்; தத்துவ ஞானமார்க்கமும் தோன்றும்; போ" என்று நியமிக்க, நாமதேவர் பகவானுடைய திருவடியை வணங்கி, "நான் எங்கேபோய் எந்தக் குருவைத்தேடி அடைவேன்" என்று கேட்க, மேகவண்ணராகிய பண்டரிநாதர், "குளிர்ந்த கங்கையைச் சடையில் தரித்திருக்கிற ஸ்ரீ நாகைநாதர் எழுந்தருளியிருக்குங் கோயிலில், அறிவுருவாகிய விசோபாகேசரர் என்பவர் கண்வளர்ந்துகொண்டிருக்கிறார், அவரை யடைவாயாக" என்று அருளிச்செய்தார். அப்படியே நாமதேவர் பகவானுடைய பிரிவை நினைத்து நினைத்து, மனத்தளர்ச்சியோடு நடந்துபோய்க் கோயிலை யடைந்து உள்ளே பிரவேசித்தவுடனே விசோபாகேசரர் தமது செருப்புக்காலைச் சிவலிங்கத்தின்மேல் நீட்டிக்கொண்டு உறங்கக்கண்டு, திகைத்து, "பகவானுனவர் எனக்கென்று தெரிந்தெடுத்துச் சொன்ன ஆசான் இவர்தானே ? இப்படிப்பட்ட பித்தரைக் கனவிலும் கண்டறியேனே" என்று நினைத்துக்கொண்டே, அந்த விசோபாகேசரருக்கெதிரே போய் நின்று, "ஐயரே! உமது ப்ரபாவத்தைக் கேட்டு உம்மை யாசிரயித்து உஜ்ஜீவிக்கலாமென்றெண்ணி வந்தேன்; நீர் செய்த செய்கையை நோக்கினுல் தகாத செய்கையாயிருக்கின்றது; இதனுலேயே உம்முடைய பரிசுத்த ஞானமும் வெளியாகின்றது" என்று சொல்லக்கேட்ட விசோபாகேசரர், "அடடா, என்னையறியாமல் தூக்கத்தில் கால் தவறிச் சிவலிங்கத்தின்மேல் விழுந்ததுபோலிருக்கிறது; என்னுடம்பு மிகவும் அயர்ந்திருப்பதனுல், அவயவங்களைப்பேர்த்து வேறொரு இடத்தில் வைப்பதற்கும் சக்தியில்லாதவனுயிருக்கிறேன்; ஆதலால் சிவலிங்கத்தின்மேலிருக்கிற காலைத்தூக்கி வேறிடத்தில் வைப்பாயானுல் மிகுந்தவுபகாரமாகும்" என்றூர்; அதைக்கேட்ட நாமதேவர் விசோபாகேசரர் என்னும் அந்த மெய்ஞ்ஞானியின் திருவடியைத் தமது கையால் தூக்கிப் பக்கத்தில் வைக்க, அங்கும் ஒரு சிவலிங்கம் இருக்கப்பார்த்து, வேறோரிடத்தில் வைக்கப்போய் அங்கும் சிவலிங்கம் இருக்கப்பார்த்தார். இப்படி எங்கே வைக்கப்போனுலும் அங்கே சிவலிங்க மிருப்பதைப் பார்த்து, "இது என்ன புதுமை! எங்கும் சிவலிங்கமாகவிருக்கிறதே" என்று ஆச்சரியப்பட்டுத் தளர்ந்திருப்பவரை, விசோபாகேசரர் நோக்கி, "நாமதேவரே! நீர் நெடுநேரம் என் காலைத் தாங்கி

நின்றதனால் எனக்கு மிகவும் விசநமாயிருக்கின்றது! ஆகையால் என் காலை வெற்றிடத்தில் வைத்துவிட்டு, நீர் கையாறுவீர்'' என்று சொல்ல, நாமதேவர், ஞானியாரை வணங்கி, "ஐயரே! பார்க்கிற இடங்களெல்லாம் சிவலிங்கமயமா யிருப்பதனால் அடியேன் தேவரீருடைய திருவடியை எந்த வெற்றிடத்தில் வைப்பேன்'' என்று தோத்திரம் செய்து நிற்கும்போது, ஞானியார், "என் காலை விடும்'' என்று எழுந்திருந்து, தமது திருக்கையை நாமதேவர் சிறசின்மேல் வைத்து, காதில் உபதேச மொழியாகிய ஞானமிர்தத்தைப் புகட்டினவுடனே, ஸ்ரீ லக்ஷ்மீநாதனாகிய பகவான் அவரது இதயகமலத்தில் எழுந்தருளினார். அப்போது நாமதேவர், கரைகடந்த ஆநந்த சாகரத்தில் மூழ்கிப் பரவசராய், குருமூர்த்தியை வணங்கித் தெளிவடைந்திருந்தார். பிறகு ஒருநாள், பண்டரிபுரத்திற் போய் பாண்டுரங்கனுக்கெதிரே, தொண்டரோடு கூடி ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தநம் செய்துகொண்டிருக்கும்போது, பாண்டுரங்கன் எழுந்தருளி இவரைத் தழுவிக்கொண்டு, எதிரே யிருக்கிற வைஷ்ணவர்களை நோக்கி, "இனி இந்த நாமதேவரை, சுடாத பாண்டமென்று சொல்லுவீர்களா'' என்று வினவ, ஹரிநாம சங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்த தாசரெல்லாரும் "இனி அப்படிச் சொல்லுதல் தகாத காரியம்'' என்று சொல்லி, ஆசிரயிப்பவர் எல்லாருக்கும் பேரின்ப வாழ்வையருள்செய்கிற பகவானுடைய திருவடியைத் தொழுது வாழ்ந்திருந்தார்கள்'' என்று சொல்லி, மேலும் பரிசாபாகவதர் வைபவத்தைச் சொல்லுகிறேன் கேளென்று பார்வதி தேவியாருக்குச் சிவபெருமான் சொல்லத்தொடங்கினார்.

கோராதய்பார் சரித்திரம் முற்றிற்று.

பரிசாபாகவதர் சரித்திரம்.

பண்டரிபுரத்தில், பத்மாலயையாகிய பெரியபிராட்டியினிடத்தில் மிகவும் அன்புசெய்வோராகிய பரிசாபாகவதர் என்பவர் ஒருவரிருந்தார். அவர் ஒருநாள் கோயிலுக்குப்போய்ப் பிராட்டியை வணங்கி நிற்கும்போது, இவரது அன்புக்குத் திருவுள மகிழ்ச்சி யடைந்த ருக்மிணிதேவியார் எதிரே வந்து, க்ருபா த்ருஷ்டியால் நோக்கி, "அப்பா குழந்தாய்! உனக் கென்னவேண்டும்?'' என்று கேட்க, பாகவதர், பிராட்டியைநோக்கி, "தாயே! நான் குடும்பதுக்கங்கள் ஒன்று

மில்லாமல், எப்போதும் உன்னையே மனமொழி மெய்களால் வழிபட்டிருத்தலாகிய நெறியை எனக்கு அருள் செய்யவேண்டும்" என்று பிரார்த்திக்க, பிராட்டியார் தக்ஷணமே ஒரு ஸ்பரிச வேதிக் கல்லை இவர் கையிற் கொடுத்து, "இந்தக் கல்லை எந்த லோகத்தில் தடவினாலும் இவைகள் பொன்னாகும்; அந்தப் பொன்னைக்கொண்டு உன் குடும்பதுக்கம் தோன்றாமல் இல்வாழ்க்கையை நடத்திவரலாம்; இந்தக் கல்லை அதிக ஜாக்கிரதையாய்க் காப்பாற்றிக்கொள்" என்று நியமிக்க, அப்படியே அந்தக் கல்லைப் பெற்றுக்கொண்டு வந்த பாகவதர் தமது மனைவியாரிடத்தில் கொடுத்து, அதின் வரலாறு முழுதும் சொல்ல, அந்த மனைவியும், பரிசக்கல்லினால் இரும்பு முதலானவைகளைப் பொன்னாக்கி, அதைக்கொண்டு தமது இல்வாழ்க்கையை இனிதாய் நடத்திவந்தார். இப்படி இந்தச் செய்தி ஒருவர்க்கும் தெரியாமல் இருவரும் மனமகிழ்ச்சியோடும் கூடிச் சுகமாய் வாழ்ந்திருக்குங் காலத்தில், ஒருநாள் இவர் மனைவியாராகிய கமலஜா என்பவள் சந்திரபாகா நதியில் போய் நீர்முகந்துகொண்டு மீண்டுவரும்போது, நாமதேவர் மனைவியாராகிய ராசாயி என்பவள் எதிர்ப்பட்டு, "ஓ கமலஜா! நானும் நீர்முகந்து வருமளவும் இங்கே நிற்கக்கடவை" என்று இன்சொற் சொல்லி நிறுத்திவிட்டுப் போய் நீர் முகந்துவந்தாள்; அப்படி விரைந்துவந்த ராசாயியை, கமலஜா அன்போடு நோக்கி, "என் அன்புக்குரிய சகியே! உன் வாழ்க்கை வளத்தைச் சொல்லுவாயானால் கேட்டு மகிழ்வேன்" என்றாள். அதுகேட்ட ராசாயி, "தனது சிறு வாழ்க்கையைச் சொல்ல நாணிநிற்க, கமலஜா அறிந்துகொண்டு, மனங்கலந்த ஸ்நேஹரிடத்தில் சொல்வதற்கு நாணவேண்டியதில்லை, உனக்குள்ள வுண்மையை எனக்கு மறைக்காமல் சொல்லலாம், ஆதலால்சொல்" என்றுகேட்க, ராசாயிசொல்லுகிறாள், எப்படியென்றால்: "என் கணவரானவர், நாணத்தையும் மானத்தையும் விட்டு, குடும்பத்தைக் காப்பாற்றவேண்டுமென்கிற நினைவு சிறிதுமில்லாமல், வறுமையால் உண்டான துன்பத்தையும் நோக்காமல், ஸ்ரீ பாண்டுரங்க பகவானுடைய திருவடி ஸ்மரணமாகிய கடலி லழுந்தி, அந்நவஸ்திரங்களையும் விரும்பாதவராய், ஹரிபஜனை செய்வதிலேயே விருப்பங்கொண்டு திரிகிறார். அவரது நடக்கையை என்னென்றுசொல்வேன்" என்றுசொல்லக்கேட்ட கமலஜாவானவள், ராசாயி முகத்தை நோக்கி, இரக்கத்தோடு சொல்லுகிறாள்: "உன் கணவனுடைய பசிக்கு, அந்தப் பகவான் க்ருபைசெய்து, வறுமை தீரும்படி பொன் கொடுக்கவில்லையோ" என்று கேட்க, அவள் "இல்லை",

என்று சொல்ல, கமலஜா, "அப்படிப்பட்ட கடவுளைப் பஜனைசெய்து என்ன பிரயோஜநம்? என் கணவர், தாயான ரகுமாயியை வணங்கி வாழ்த்த, அதற்காக அந்த ருக்மணித்தாயார், ஒரு ஸ்பரிசவேதிக் கல்லைத்தந்து எங்களுடைய மிடியைத்தீர்த்தருளினள். காயாத மரத்துக்கு நீர் வார்த்து என்னபயன் அடையலாம்" என்று சொல்ல, ராசாயி, கமலஜாவை நோக்கி, "உமக்கு ருக்மிணீ தேவியார் தந்த கல்லை நான் பார்க்கவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, "அப்படியே உனக்குக் காட்டுகிறேன், எங்கள் வீட்டுக்கு வா" என்று அழைத்துக்கொண்டுபோய், அந்தக் கல்லைக்காட்டி, "இதைக் கொண்டுபோய் உன் வீட்டிலுள்ள இரும்புகளிலெல்லாம் பரிசித்துப் பொன்னாக்கிக் கொண்டு, இந்தக்கல்லைக் கொண்டுவந்து ஒருவருக்குந் தெரியாமல் என்னிடத்தில் கொடுத்துவிடு" என்று சொல்லித் தந்து அனுப்ப, ராசாயி அதனை வாங்கிவந்து, தமது வீட்டில் தேடி இரும்புத்துண்டுகள் கிடையாமையால், தாம் தொழில் செய்கிற ஊசி, கத்தரி, இவற்றில் பரிசித்துப் பொன்னாக்கி, அதை விற்றுப் பெற்ற பொருளைக் கொடுத்து, அரிசி முதலியவற்றைத் தருவித்துச் சமையல் செய்து கொண்டிருக்கும்போது, நாமதேவர் வந்து, தமது தேவியார் செய்யுஞ் சமையல் முதலியவற்றைக் கண்டு, "எப்போதுமில்லாத ஆடம்பரம் செய்கின்றாயே, இதற்குக் காரணம் யாது?" என்று வினவ, ராசாயியார் "உண்மையைச் சொன்னால் இவர் கோபிப்பார்" என்று நினைத்து, அஞ்சி, கணவரை நோக்கி, "உண்மையாக இந்தக் காரியத்தை விசாரித்தறிந்து கொள்வதனால் உமக்கு என்ன ப்ரயோஜநம்! நாள்தோறும் இந்தப்படியே நீர் அமுதுசெய்து, ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தநம் செய்துகொண்டிரும்" என்று சொல்லக்கேட்ட நாமதேவர் அதற்கு மனமகிழாமல், "உள்ளபடி சொன்னாலல்லது நான் போஜநம் செய்யமாட்டேன்" என்று சொல்ல, தேவியார் இவருடைய பிடிவாதத்துக்கஞ்சி, உள்ளபடி சொன்னாள். அப்போது நாமதேவர் "அந்தக் கல்லை நான் பார்க்கவேண்டும், தடுக்காமல் காட்டுவாயாக" என்றார். தேவியார் அவர் சொல்லைத் தடுக்க அஞ்சி, அவர் காணும்படி காட்ட, அதை நாமதேவர் தமது கையில் வாங்கிப் பார்த்து, அதைச் சந்திரபாகாநதி ப்ரவாஹத்திலே எறிந்துவிட்டு, அந்த நதிக்கரைமேல் நின்று ஸ்ரீ ஹரிநாமசங்கீர்த்தநம் செய்தார். அதைக் கண்ட கமலஜாவானவர், ராசாயியை நோக்கி, "நீ கேட்டதற்குத் தடை சொல்லாமல் நான் கொடுத்த கல்லை இப்படி நதிநீரில் எறியும்படி உன் கணவன் கையிற் கொடுத்தது சரிதானோ" என்று

கோபித்துக்கொள்ள, அவரை யழைத்துவந்து தம் கணவரைக் காட்ட, பரிசாபாகவதரும் வந்து கேட்டு, "இந்தக் காரியத்தை எப்படிச் செய்தீர்?" என்றுசொல்லி வருத்தப்படுத்தி, ராசாயியையும் கடிந்துகொண்டார்கள். இப்படியிருக்க,கமலஜாவை வழியிலே எதிர்ப்பட்டவர்களுடைய முகத்தை நோக்கி, நான் கொடுத்த ஒருபொருளை என்கையிற் கொடுக்காமல் நதிப்பெருக்கில் எறிந்துவிடுவது நன்மைதானோ" என்று கேட்க, அவர்களிற் சிலர், "ஸ்ரீ ஹரிபக்தருக்குப் பொன்னும் கல்லும் சமானமேயாம்" என்றார்கள். சிலர் "எப்படியிருந்தாலும் இது நீதியல்ல" என்றார்கள். "ஒருவர் பொருளை வாங்கி வந்து நதியிலெறிந்துவிடுவதுதானோ தருமநீதி" என்று சிலர்பேசிக்கொண்டார்கள். இவ்வாறு பலவகையாய்ப் பேசிக்கொள்ள, பரிசாபாகவதர் நாமதேவரை நோக்கி, "எங்கள் பாக்கியமாயிருந்த கல்லை நீரிலெறிந்துவிடுவது தருமமோ" என்று கேட்டதுமன்றி, "உம்மை இவ்வுலகத்தார் யாவரும் விரக்தர் என்கிறார்களே; விரக்தரானவர்களெல்லாம் இப்படிப்பட்ட அநியாயம் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றதோ" என்று இப்படி பலவாறு நிர்ப்பந்திக்க, நாமதேவர், பாகவதர் முகத்தைப் பார்த்து, "பிராட்டியார்க்கு அன்பராயிருப்பவரே! உமதுமனம் அந்தக்கல்லை விரும்புமானல், இதோ இந்தமடுவில் அநேகங்கற்கள் கிடக்கின்றன, முழுகி யெடுத்துக்கொள்ளும்" என்றுசொல்லக் கேட்டவர்களெல்லாரும், "ஆற்றின்மடுவிலே கிடக்கிற கற்களெல்லாம் பரிசக்கற்களோ" என்று சொல்லிச் சிரித்தார்கள். அதைக் கண்ட நாமதேவர், ஆற்றுநீரில் முழுகி, அங்குக்கிடைத்த கற்களையெல்லாம் கைநிறைய வாரியெடுத்து வந்து, "உம்முடைய சிறந்த பரிசக்கல்லைச் சோதித்து எடுத்துக்கொள்ளுங்கள்" என்றார். அப்போது பரிசாபாகவதர் அந்தக்கற்களைச் சோதித்து எல்லாம் பரிசக்கற்களா யிருக்கக்கண்டு, பாகவதர் முதலிய யாவரும் அதிசயித்து, நாமதேவரை வாழ்த்தி வணங்கினார்கள். பிராட்டிக்கு அன்பராகிய பரிசாபாகவதர், ஹரிதாசராகிய நாமதேவரைத் துதித்து வணங்கிச்சொல்லுகிறார்: "ஸ்ரீ ஹரிபக்தியிற்சிறந்த நாமதேவரே! உமது மஹிமையை நான் அறியவல்லேனல்லேன், பெரிய பிராட்டியாரைப் போற்றி ஒரு பரிசக்கல்லைப்பெற்றேன், அந்தக்கல்லைப்பெற்ற பெருமையால் உமது க்ருபைக்குப் பாத்ரனல்லாமற் போனேன்; ஆனாலும், இப்போது என் அபராதங்களையெல்லாம் மன்னித்து எனக்கு ஞானோபதேசம் செய்தருளவேண்டும்",

என்று ப்ரார்த்திக்க, நாமதேவர் அவர் ப்ரார்த்தனைக்கிரங்கி, அவர் கையிலிருந்த கற்களை நதியிலெறிந்துவிட்டு, அவர் சிரசின்மீது கையை வைத்து ஞானோபதேசம் செய்தருள, பரிசாபாகவதரும் அவ்வுபதேசத்தைப் பெற்று, நாமதேவருடைய அடியார்களில் ஒருவராய்ச் சிறந்துவிளங்கினர் என்று சிவபெருமான் பார்வதிதேவியார்க்குச் சொல்லி, மேலே ஜகமித்திரர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

பரிசாபாகவதர் சரித்திரம் முற்றிற்று.

பதினொன்றாவது

ஜகமித்திரர் சரித்திரம்.

பாளியென்னும் ஊரில், வேதியர் குலத்தில் ஜகமித்திரர் என்றொருவர் அவதரித்தார். அவர் வைஷ்ணவராகி, யாசித்துத் தானியங்களைச் சேகரித்து, அதைக்கொண்டு நாள்தோறும் குடும்பரக்ஷணஞ் செய்து வருங்காலத்தில், பொருளில் விருப்பமில்லாதவராய், ஸ்ரீஹரி நாம சங்கீர்த்தநம் செய்தலையே பரம புருஷார்த்தமாய்க்கொண்டு ஒழுகும்நாளிலே, அந்தவூரிலுள்ளவர்கள் இவருடைய மஹிமையைத் தெரிந்துகொண்டு, "இவர் இந்த மானுடஜாதியிற் சேர்ந்தவரல்லர்; எந்தத்தேவர் இந்த அவதாரம் செய்தனரோ" என்று புகழ, சிலர் "இவர் சாது சர்ஜநரோ, அப்படியானல் இவரது சாமர்த்தியத்தையும், சாந்தகுணத்தையும் யாம் காண்போம்" என்று வாதுசெய்ய வந்து, தாம் கற்றவற்றைச் சொல்லி, இவரை வருத்தி மானபங்கம் செய்தும், அதைச்சற்றும் மதிக்காதவராய், ஞான வைராக்கியங்களால் விளங்குகின்றவராயிருப்பதை, அவிவேகிகளாகிய சிலர் கண்டு பொறாமை யுள்ளவர்களாய், இவருடைய மனம் நிலை கலங்குதற்குரிய காரியங்களைச் செய்ய நினைத்து, ஒருநாள் இவர் தமது திருமாளிகையில் மனைவி மக்கள் முதலானரோடு கண்ணுறங்கும்போது அந்தத் திருமாளிகையில் தீமூட்டிவிட்டார்கள். அந்தத் தீயானது விடுமுழுதும் எரிக்க, படுத்துக் கண்ணுறங்கின தாசர் கண்விழித்துப் பார்த்து, அந்தத் தீயை யவிப்பதற்கு ஒரு உபாயமுந் தோன்றாமல் பண்டரிநாதனைத் தோத்திரஞ்செய்தார். இப்படித் தோத்திரம் செய்கிற ஜகமித்திருடைய துன்பத்தைத் தணிக்கும்பொருட்டு, பகவானனவர், திருவாழியை யேந்திவந்து உறங்குகிறவர்களைத் தீவருத்தா

மல் முன்னே சக்கரத்தால் தடுத்துக் காத்தருளினர். அன்று இராக் காலத்தில் தீயானது கொழுந்துவிட்டெரிவதனுல் அந்த வெளிச்சத் தை ஊராரெல்லாருங்கண்டு எழுந்து அவ்விடத்திற்கு வந்தார்கள். வந்து ஜகமித்திரர் குடும்பமுழுதும் நெருப்புக்கு இரையாயிற்றே யென்று. ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு துக்கித்திருக்க சூரியோதயமாகி, தீயும் தணிந்து, வீட்டுக்குள்ளே தூங்கிக்கொண் டிருந்த குடும்பமும் விழித்து, திருப்பாற்கடலில் அறிதுயிலமர்ந்த ஸ்ரீ ஹரியின் திருநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருக்க, ஊரி லுள்ளவர் யாவரும் வந்து, இந்தக்குடும்பமுழுதும் தீயிலகப்பட்டும் வெந்துபோகாம லிருப்பதைக்கண்டு, "இப்படியிவர்கள் இந்தப்பெரு நெருப்பில் வேகாதிருப்பதை நோக்குமிடத்தில், அன்று அரக்கு மாளிகையில் தீப்பட்டபோது பாண்டவர் இறவாமல் காத்தருளின ஸ்ரீ கண்ணபிரானே இன்று இவர்களைக் காத்தருளினர்" என்று துதி த்து, வணங்கி, பிறகு எல்லாருங்கூடி, "இவருடைய பெருமைக்கு என்ன எல்லைகுறிக்கலாம். இவர் குடும்பத்தை நாம் காப்பாற்றுவதே நமக்கு நன்மையாகும்" என்று நினைத்தவனுகிய வைத்தியநாதனிடத் தில் பலரும் வந்துசேர்ந்து, "இவரது குடும்பப்பாதுகாப்பின்பொ ருட்டுச் சிறிது நிலந்தருவோம்" என்று சொல்லி யாவரும் ஒருங்கு கூடி, தாசர் திருமாளிகையை யடைந்து, இந்தச்செய்தியைச் சொல் லக்கேட்ட தாசர், "இந்த உலகங்களெல்லாவற்றையும் தன்குடும்ப மாகப்பெற்றவனுகிய பகவான் ஒருவனிருக்கும்போது எனக்கு ஒரு குறையுமில்லை" என்று சொல்லி, "யாதொரு பந்தமில்லாத என்னைப் பந்தத்தில் அகப்படுத்தும்பொருட்டு, நீங்கள் சொல்லுகின்றீர்கள்" என்று சொல்ல, அவர்களெல்லாரும் "நல்லது நல்லது" என்று, பலா த்கரித்து, அவர்பேரால் ஒருவூரை யெழுதிக்கொடுத்தார்கள். தாங் களே அந்த நிலத்தினில் பயிர்செய்து கொடுக்கவும் இசைந்தார்கள்; அப்படியே சிலகாலங் கழிந்தபிறகு, அரசனுல் ஒரு துருக்கன் அவ் விடத்துக்கு வந்து அதிகாரியாய் நியமிக்கப்பட்டான். அப்படி நிய மிக்கப்பட்டவன் வந்து எல்லாவற்றையும் விசாரித்து, "வயித்திய நாதனுடைய சொந்தநிலமானது, ஊரிலுள்ள ஜகமித்திரருக்கு எவ் வாறு சொந்தமாயிற்று?" என்று, அரசனுக்கிசையும்படி சொல்ல, அவனும் முன்னே தந்தவரையெல்லாம் தடுக்க, அவர்களெல்லாரும் "முற்காலத்தில் நாங்கள் ஜகமித்திரர் என்னும் தபோதனர்க்குக்கொடு த்த தர்மநிலத்தைத் தடுத்து, அரசனுக்கு உரியதாக்குதல் பொருத்த

மல்ல" என்று சொல்ல, அவ்வரசன் அடங்காமல் உலோபகுணத்தையே மேற்கொண்டிருந்தான். பின்னும் அந்த ஜகமித்திரர் பெருமையைக்கேட்டு வந்து அவர் வீட்டைச் சோதிக்கத்தொடங்கி, அவரை நோக்க, "நீர் ஜகமித்திரரானால், இவ்வுலகத்தில் உமக்குப் பகையானவர் ஒருவருமில்லையே? அப்படி இவ்வுலகத்தார் பகையில்லையானால் என்மகளுக்கு மணம்நேரிட்டது; அதற்கேற்க, பரிசுத்தமான தேவபூஜை செய்யவேண்டும்; அதற்கு ஒரு புலிவேண்டும்; அதனை நீர் சேகரித்தருளுவீராக" என்று ப்ரார்த்திக்க, "அப்படியேயாகட்டும்" என்று தாசருமெழுந்து, காட்டுக்குப்போய், ஒரு இடத்திலிருந்துகொண்டு, பண்டரிநாதனை நினைத்து அவரது திருநாமங்கள் பலவற்றையும் உச்சரித்து, "பகவானே! நீர் இன்று புலியுருவங்கொண்டு எழுந்தருளவேண்டும்" என்று வேண்டிக்கொள்ள, அப்படியே பண்டரிநாதரும் புலியுருவாயெழுந்தருளி, "தாசரே! உமக்கு என்ன தீமைநேரிட்டது சொல்லுவீரானால், அந்தத் தீமை செய்தவனைக் கொன்று புசித்துவிடுவேன்?" என்று சொல்ல, ஜகமித்திரர், "நல்ல புலியுருவாய்வருகிற என் தலைவனே! உன்னையல்லாமல் எனக்கு வேறொரு ஆதாரவுண்டோ" என்று இவ்வாறு பலவிதமாகத் தோத்திரம்பண்ணி, "ஓ பத்மநாபா! எம்மூரில் ஒரு அதிகாரி, தன் மகளுடைய விவாஹத்துக்கு அநுகூலமாக, தேவதாபூஜைக்கு ஒரு புலி வேண்டியதாயிருக்கின்றது; தவறாமல் அதைக் கொண்டுவாரும் என்றெனக்கு நியமித்தான். ஆதலால் இந்தக் காட்டில் வந்திருந்துகொண்டு தேவரீரை யழைத்தேன். நீர் அன்போடு வரவேண்டும்" என்று சொல்லிப் புலியுருவான அந்தக் கண்ணபிரானது கழுத்தில் தமது உத்தரியத்தை முறுக்கிக்கட்டி இழுத்துக்கொண்டு தாம் இருக்கும் ஊர்க்குள் பிரவேசித்தார். இவர் புலியைக் கைக்கொண்டு வருவதைக்கண்ட யாவரும் எதிரே நிற்கப்பயந்து ஓடி இவரை ஊர்க்குள் வரவொட்டாமல், அரண்மனை வாசற்கதவை அடைத்தார்கள். அப்போது ஜகமித்திரருக்குச் சிநேகராய் இருப்பவராகிய பலரும் உயர்ந்த மரங்களின் மேலேறிப் பார்த்து, "தாமரைக்கண்ணனாகிய பகவானுக்கு தாசராயுள்ளவரே! நீர் புலியைக்கொண்டு இங்குள்ளவரையெல்லாங் கொலைசெய்யவோ வருகிறீர்" என்று கேட்டார்கள். அதற்குத் தாசரானவர் அவர்களை நோக்கி, "நீங்கள் அஞ்சவேண்டாம்; இது புலியல்ல; பாண்டுரங்கப்பெருமானே இவ்வாறு புலி யுருக்கொண்டு எழுந்தருளினர்; இவ்வூர் அதிகாரி

யை மெய்ப்பிக்கவேண்டி இங்கு வந்தேன்'' என்று சொல்ல, அதைக் கேட்டவர்கள்போய், விஷம்போன்ற கொடுமையையுடைய துருக்கனுக்கு இந்தச் செய்தியைச் சொன்னார்கள். கேட்ட அந்தத் துருக்கன், நடுங்கித் தன் வீட்டுக் கதவை மூடிக்கொள்ள, புலியைக்கொண்டுவந்த தாசர், மதிற்கதவடைத்திருப்பதை நோக்கி மயங்கிநிற்க, புலி வடிவாய் வந்த பகவானானவர், தமது கையால் அந்தக் கதவை யறைந்து, வழியுண்டாக்கிக்கொடுக்க, அவ்வழியாகத் தாசர், உள்ளே நுழைந்து, அந்தத் துஷ்டன் வாழ்கின்ற வீட்டு வாசல் முன்னே நின்று நோக்கி, அந்த வீட்டுக் கதவும் மூடப்பட்டிருப்பதைப் பார்த்து, "இதென்ன விபரீதம்'' என்று ஆலோசித்து, "என் சிநேகனே! நீ முன்னே சொன்னபடிக்குப் புலியைக்கொண்டு வந்தேன்'' என்று சொல்லுமுன்னே, அப்புலியானது உறுமிக்கொண்டு வாலை நிலத்திலறைந்து ஆரவாரஞ்செய்ய, இந்தச் சத்தத்தைத் துருக்கன் கேட்டுப் பயந்து, பெண்டு பிள்ளைகளைத் தழுவிக்கொண்டு அழத் தொடங்கினான். அப்போது அவன் மனைவியானவள், அவனை நோக்கி, "என் பிராணநாதா! நீ மிகவும் வயதுசென்றவனாகையால் உன் மரணத்துக்குத் துக்கிப்பவர் இங்கே ஒருவருமில்லை, ஆதலால் நீ வெளிப்பட்டு அந்தப் புலிக்கு இரையாய் விடுவாயானால் நாங்களெல்லாரும் பிழைப்போம்'' என்று சொல்ல, அந்தப் புலிக்குப் பயந்து ஒளித்துக்கொண்ட துஷ்டனாகிய அந்தத் துருக்கன் அதற்கு உடன்படாமல் அழுதுகொண்டிருக்க, இவன் அழுகிற ஓசையை அவ்வூரிலுள்ளார் கேட்டு மனங்களித்து நகைக்கத் துருக்கன் மனங்கலங்கி, "தாசரே! என்னை இந்த ஆபத்தில்நின்றும் நீக்கி ரக்ஷித்தருளவேண்டும், நீர் ஜைமினிரர் என்பதை நான் அவிவேகத்தால் அறியாதவனாகி இப்படிப்பட்ட அபராதத்தைச் செய்தேன், க்ஷமித்தருளவேண்டும்''. என்று ஸ்தோத்திரம் பண்ணி, கைகுவித்து அஞ்சலி செய்துநிற்க, ஜைமினிரரானவர், அவன்மீது அருள்சுரந்து, ஒப்பற்றதாகிய அந்தப் புலியைக்கொண்டு ஊரைக்கடந்து சென்று காட்டிற் பிரவேசித்து ஒரு தனியிடத்தை யடைந்தவுடனே, ஸ்ரீ கண்ணபிரான் நான்கு திருத்தோள்களோடு திருவுருவங்கொண்டு பிரத்தியக்ஷமாக ஜைமினிரரானவர், அந்த பகவானுடைய பொன்னடியை வணங்குதலும், தேன் துளிக்கின்ற திருத்துழாய் மாலையை யணிந்த ஸ்ரீ கண்ணபிரான் இவரைத் தழுவிக்கொண்டு பரிபூரண கடாக்ஷம் செய்தருளினன்'' என்று சிவபெருமான் உமாதேவியாருக்குச் சொ

ல்லி, மேலே ஜோகாபரமாநந்தர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

ஜகமித்திரர் சரித்திரம் முற்றிற்று.

பன்னிரண்டாவது

ஜோகாபரமாநந்தர் சரித்திரம்.

சர்வாலங்காரங்களும் அமைந்த பாரசி என்னும் ஊரில் அவதரித்த ஜோகாபரமாநந்தர் என்கிற திருநாம முள்ளவர் ஒருவர் இருந்தார். அவர் பரமபாகவதரும், சிறிது நேரமும் சோர்வில்லாமல் ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநஞ் செய்பவரும், ராம நாமாம்ருத பாநம் செய்கின்ற திருநாவை யுடையவரும், குற்றமற்ற சற்குணங்களை யுடையவருமாய், யாசகஞ்செய்து தமது குடும்ப பரிபாலநம் செய்துகொண்டு, எந்நாளும் ஸ்ரீ ஹரியின் திருவடிகளுக்கு ஷோடசோபசாரங்களும் செய்து, முறைமையாய்ப் பூஜிக்கவேண்டிய நெறியோடு பூஜித்து அதன் பிறகு, எழுநூறு நமஸ்காரம் செய்து, ஸ்ரீ கண்ணபிரான் திருவாய்மலர்ந்தருளின ஸ்ரீ பகவத்கீதையின் ஒரு சுலோகத்தை பாராயணஞ்செய்து அதன் பின்பு வந்து அமுது செய்வார். இப்படி இவர் நாள்தோறும் செய்துவருவது வழக்கமாயிருந்தது. இப்படிச் செய்துவருவதில் ஏதாகிலும் பிசகு நேரிட்டால் அந்தத் தின முழுதும் உபவாசமா யிருந்துவிடுவார். இவரைப் பார்த்து அருகே குடியிருப்பவர் இரக்கமடைவார்கள். இப்படி யிருக்குங் காலத்தில், ஒருநாள் மழைபெய்து இவர் வாசல் முழுதும் சேறாகிக் குழம்பாயிருக்க, இவர் தமது வழக்கம்போலத் தாம் நமஸ்கரிக்கும் கொள்கையில் தவறாதவராய், சக்ரபாணியாகிய பகவானைத் தம் மனத்திலிருத்திக்கொண்டு நின்றனர். இவ்வாறு ஸ்ரீ ஹரிபாததாசராகிய ஜோகாபரமாநந்தர் செய்யும் செயல்களெல்லாவற்றையும் அக்குடியானவர் அறிந்த, ஸ்ரீ லக்ஷ்மீநாதனே இவர் என்று மதித்து, அவர்களுள் ஒருவன் விரைந்து கடைவீதிக்குப்போய், ஒரு பொன்னுடையை வாங்கி வந்து, தாசர்கண்ணால் நோக்கும்படிகாட்டி, "நீர் இந்தப் பொன்னுடையைக் கைக்கொள்வீராக" என்று பிரார்த்தித்தான். இந்தப் பகவத்தாசரானவர், அந்தப் பொன்னுடையை விரும்பாதவராகி, "இது அதிக விலையுள்ளது, வேறே பழையதாகிய துணியிருந்தால் எனக்குக் கொடும்" என்று சொல்ல, அவன் மிகவும் ஆச்சரிய

மும் இவர்மீது அன்புங்கொண்டவனாய், இவரது அரையில் அந்தப் பொன்னுடையை அழகாக உடுத்திவிட்டுப் போயினான். அப்பால் மேகவண்ணனாகிய பகவானது இரண்டு திருவடிகளையும் எக்காலத்தும் மறவாதவராகிய தாசரானவர், தாம் தடுத்தும் கேளாமல் தமது அரையில் பொன்னுடையை உடுத்திவிட்டுப் போனவனது நற்குணத்தை நினைந்து, அந்த ஆடையை மிகவும் ஜாக்கிரதையாகக் காப்பாற்றி அதில் சேறுபட்டால் பழுதாகுமென்று கீழே தொங்காமல் அரையில் உடுத்திக்கொண்டு, ஸ்ரீ கண்ணபிரானைத் தேகாபிமானத்தைவிட்டு முன்பு வணங்குவதுபோல வணங்காமல் ஆடைமேல் மிகுதியாகிய அபிமானம் வைத்து நமஸ்கரித்தலால் சூரியாஸ்தமனம் ஆகியும் எழுநூறு நமஸ்காரங்கள் முடியாமையால் மனத்தில் வருத்தமடைந்து, "பகவானைப் பூஜிக்குங்காலம் அதிகரித்ததற்குக் காரணம் இந்த ஆடையல்லவோ" என்று மனத்தில் ஆலோசித்து, இந்த ஆர்த்த ஹேதுவான அபராதம் நீங்குவதற்கு இந்தச் சரீரத்தை வாளினால் பிளப்போமா, அன்றித் தீயில் அமிழ்த்தி விடுவோமா" என்று பலவாறு நினைந்து அமுதுசெய்யாமல் தமது மனையைவிட்டு நீங்கி, மனத்துக்கிசைந்த வேறோரிடத்தில்போய்த் தங்கியிருக்கும்போது, அவ்வழியாக ஒரு உழவன் பெரிதாகிய ஒரு நுகத்தடியைக் கைக்கொண்டு இரண்டு காளைகளையும் ஓட்டிக்கொண்டு போனான். அப்படி நிலத்தை உழுதற்பொருட்டுக் காளைகளை ஓட்டிக்கொண்டு போகிற உழவனைத் தாசரானவர் பார்த்து, துன்பத்தோடு, "ஓ உழவனே! உன்னுடைய இரண்டு காளைகளையும் எனக்குக் கொடுத்து அவற்றிற்கு உரிய விலைப் பொருளாக இந்தப் பீதாம்பரத்தை நீ கைக்கொண்டு போ" என்றார். அதைக்கேட்டவுடனே அவ்வுழவன் மனமகிழ்ந்து, மாடுகளிரண்டையும் கொடுத்தான். அப்படிக்கொடுத்தவுடனே தாசரானவர் அவ்வுழவனை நோக்கி, "என் கால்களிரண்டையும் கயிற்றாற் கட்டி நுகத்தில் ஏர்க்காலுக்கு நிகராக அநேக கயிறுகளைச் சுற்றிக் கட்டி, மாடுகளை ஓட்டிக்கொண்டு போவாயாக" என்று சொன்னார். அதுகேட்ட உழவன் "இது செய்தற்கரிய செய்கையாயிருக்கிறதே" என்று அறியாதவனாதலால் இவர் தந்த பொன்னுடையைக்கைக்கொண்டு, இவர் சொன்னபடியே செய்ய, அவ்வெருதுகளிரண்டும் இழுத்துக்கொண்டு போகிற வழியில் உள்ள கல்லும் முள்ளும்பட்டு, உடம்பிலுள்ள சதை முழுதுந் தேய்ந்து நரம்பும் எலும்பும் வெளிப்பட்டுத் தோன்றச் சரீரமுழுதும் உதிரம் பெருகி வழிய, தாசரானவர் "இன்று நாம் செய்த பெரிய அபசாரம் தீரும்படி நேரிட்டது",

என்று, தமக்கு நேர்ந்த துன்பத்தை எள்ளளவும் மனத்திற்கொள்ளாமலும் ஸ்ரீ ஹரிநாம ஸ்மரணையை மறவாமலும் இருந்துகொண்டு மிருதியாய் நிலத்தில் தேய்க்கப்பட்டு உயிர் நீங்கும்படியான நிலையையடைந்தார். அப்போது கஜேந்திராழ்வானுடைய மிக்க துன்பத்தை நீக்கியருளின கருணைக் கடலாகிய ஸ்ரீ பகவான், விரைவாக ஓடிவந்து, எருதுகளை நிறுத்தி, கட்டுகளை யவிழ்த்துவிட்டு, தாசருடைய சரீரமுழுதும் தமது திருக்கரத்தால் தீண்டித்தடவுதலும், தாசரானவர் துன்பமெல்லாந் தீர்ந்து சரீரம் முன்போலத் தேஜோமயமாய்ப் பிரகாசிக்க நின்றார். அப்படி நின்றவரைப் பகவானனவர் கடாக்ஷித்து, "பேரறிவையுடைய தாசரே! உம்மிடத்தில் சிறிதும் குற்றம் இல்லாமலிருக்க உமது சரீத்தை இப்படி ஏன் வருத்தினீர், என்னடியார்கள் உண்பதே எனக்குக் கொடுக்கப்படுகிற நல்ல அவியுணவாகும், அவர்கள் பேசும் பேச்செல்லாம் எனது ஸ்தோத்திரங்களேயாகும், அவர்கள் செய்யும் கைத்தொழில்களெல்லாம் சிந்முத்திரையேயாகும், அவர்கள் நடப்பதெல்லாம் என்னை வலம் வருவதேயாகும், அவர்கள் படுத்துறங்குவதெல்லாம் என்னை அன்போடு வணங்குதலே யாகும், அவர்கள் களிப்படைவது எனது இன்ப வுருவமாகும், இப்படி அவர்கள் சம்மந்தமானவை யெல்லாவற்றையும் போக்கியமாகக்கொண்டு மகிழ்ந்திருப்பவனாதலால் அவ்வடியார்களுள் ஒருவராகிய உம்மை நான் நோக்கிநிற்க, நீர் ஏன் இப்படிச் செய்தீர்" என்று இவ்வாறு அன்புருவமாய் எதிரே நிற்கிற பாண்டுரங்கப் பெருமானது நிஜரூபத்தைத் தாசரானவர் கண்டு, அவரது திருவடியில் வீழ்ந்தும், பலவாறு ஸ்தோத்திரம் பண்ணியும், "ஒப்பற்ற கருணைக்கடலே! இன்று அடியேனுக்குக் கிருபைசெய்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தவுடனே, சார்ங்கபாணியான பகவான் அப்படியே அருள் செய்து, தமது திருக்கோயிலை யடைந்து, தாசர் செய்த செய்கையைத் தமது அன்பரெல்லாருக்கும் சொல்லக்கேட்டு நின்ற ஞானதேவர், பகவானை நோக்கி, "ஸ்வாமீ! உமது அடியார்கள் செய்கை எக்காலத்தும் யாவராலும் சொல்லுதற்கு எளிதாகுமோ" என்று புகழ்ந்துநின்றார் என்று சிவபெருமான் உமாதேவியாருக்குச் சொல்லி மேலே நரஹரிபக்தர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

ஜோகாபரமாநந்தர் சரித்திரம் முற்றிற்று.

பதின்மூன்றுவது

நரஹரிபக்தர் சரித்திரம்.

பரம்பொருளாகிய திருமால் நித்தியவாசம் பண்ணுகிற பண்டரிபுரத்தில் அவதரித்து, நரஹரி யென்னும் பெயர்பூண்ட பொற்கொல்லர் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானுகிய மல்லிகார்ஜுநனை அன்பின் மிகுதியால் என்றும் மறவாமல் பூஜைசெய்து ஒழுகுவார். இவர் குடக்கூத்தனுகிய ஸ்ரீ கண்ணபிரானது திருக்கோயிலுக்குச் சமீபமாயிருந்தாலும் அவ்வழியாக நடந்தாலும் சர்ப்பசயநனுகிய பகவானைக் கண்ணெடுத்துப் பாராமல் அடத்துடன் வாழ்ந்து வரும் நாளிலே மிகுந்த பொருளுடையவனுகிய ஒரு வணிகன், தேவர்களெல்லாருக்கும் ஒரு நிட்சேபம்போல விளங்குகின்றவனும் திருத்துழாய் மாலையை யணிந்தவனுமாகிய ஸ்ரீமந் நாராயணனது திருக்கோயிலில் வந்து தோத்திரஞ்செய்து, "லோகநாதனே! அடியேனுக்கு ஒரு சற்புத்திரனைக் கிருபை செய்தருளவேண்டும்" என்று சொல்லி, வணங்கித் தன்மனைக்குப் போயினன். போனபிறகு சிலநாள் கழிய ஸ்ரீ லக்ஷ்மீநாயகனுன பகவானது கிருபா விசேஷத்தால் ஒரு புதல்வன் தோன்றினன். அவனது சௌந்தரிய விசேஷத்தைக்கண்டு, அவ்வணிகன், திருமறுபார்பனுகிய ஸ்ரீ கண்ணபிரானது கிருபையை மிகவும் வியந்துகொண்டாடி, பெருங்களிப்போடு அந்தக் கண்ணபிரானுக்கு நவரத்தினங்களிழைத்த அரைஞாண் ஒன்று செய்து சாத்தவேண்டுமென்கிற ஆசையுடன் கோயிலைச்சேர்ந்து எம்பெருமானைத்தொழுது, தோத்திரஞ்செய்துநின்று, அங்குள்ள அர்ச்சகரைநோக்கி, "இவ்வூரில் நற்குணமுள்ளவனும் பொன்னரைஞாண் செய்யத்தகுந்தவனும் ஆகிய ஒரு பொற்கொல்லன் இருந்தால் அவன் இன்னுனென்றும், இன்ன இடத்திலிருக்கிறுனென்றும் எனக்குத் தெரிவிப்பீர்களானுல், அவனைக்கொண்டு நவரத்தினகசிதமாகிய ஒரு பொன்னரைஞாண் செய்து இந்தக் கண்ணபிரானுக்குச் சமர்ப்பிக்கிறேன்" என்று கேட்க, அவர்கள் இந்தக் கோயிலின் அருகே எல்லாரும் மெச்சத்தகுந்த சமர்த்தனுகிய ஒரு பொற்கொல்லன் இருக்கிறுன், நாம் விரும்பினபடியே செய்வதற்கு அவனைப் போல வேருெருவருமில்லை" என்று சொல்லக்கேட்ட வணிகன், அந்தக் கம்மியனைக் கண்டு, "லக்ஷ்மீநாதனுக்கு ரமணீயமான ரத்நகடிசூத்திரம் ஒன்று செய்து தரல்வேண்டும்" என்று சொல்லுதலும், அக்கம்மியன், "அந்தப் பகவானுடைய திருவரையின் அளவினை அறிந்துவந்து சொல்லும்" என்றுன். வணிகன் அப்படியே அள

வெடுத்துத் தா, கம்மியன் வணிகன் விரும்பினபடியே கண்டோர் அதிசயிக்கும்படியான விசித்திரமான வேலைப்பாடமைந்த நவரத்ந மயமான பொன்னரைஞாண் செய்துகொடுத்தான். வணிகன் அதனை வாங்கிக் கொண்டுவந்து, எம்பெருமானை அர்ச்சித்துத் தோத்திரம் பண்ணி வணங்கித் திருவரையில் சமர்ப்பிக்க அது எம்பெருமானது திருவரைக்குச் சிறிது பற்றாம லிருக்கக்கண்டு, கம்மியனிடத்திற்குக் கொண்டுபோய், அவன் மனமகிழும்படி இன்சொற் சொல்லிச் "சரிப் படுத்திக் கொடுக்கவேண்டும்" என்று வேண்ட, அவன் அப்படியே சரிப்படுத்தித் தந்தான். அதனைக் கொண்டுவந்து பெருமானுக்குச் சமர்ப்பிக்க, அது அதிக நீளமாயிருந்ததனால் மீண்டும் எடுத்துக்கொண்டு கம்மியனிடத்துக்குப் போய், இந்தச் செய்தியைச் சொல்ல, அவன் அதைச் சிறிது குறைத்துக் கொடுக்க, வாங்கிவந்து சமர்ப்பித்துப் பற்றாதிருப்பதைக் கண்டு, அழுதுகொண்டே மீண்டு, நீட்டினால் குறைவதும் குறைத்தால் நீளுவதுமாயிருக்கிற இந்த அதிசயத்தை நோக்கி, "நான் எவ்வளவோ பேரன்போடு மிகுதியாகிய பொருள் செலவுசெய்து சமர்த்தனாகிய கம்மியனைக்கொண்டு செய்வித்தும், இவ்வரைஞாண் ஸ்ரீ கண்ணபிரானுக்குச் சாத்தத் தகாததாய்ப்போவது என்ன காரணத்தினாலேயோ! பகவானுக்கு இதனிடத்தில் விருப்பமில்லையோ! அடியேனிடத்தில் ஏதேனும் அபராதம் நிகழ்ந்ததுண்டோ! அறிந்திலேன்" என்று மனம்வருந்தி மீளவும் வந்து கம்மியனைப் பிரார்த்தித்து, "நீயே அத் திருவரையின் அளவெடுத்துவந்து செய்வாயானால் சரியாக முடியும்" என்று சொல்ல, அந்தக் கம்மியன், "நீண்ட ஜடாபாரத்தையுடைய நிர்மலராகிய சிவபெருமான் சந்நிதிக்கேயன்றி சேஷசாயியாகிய ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியின் சந்நிதிக்கு நான் வரமாட்டேன்" என்று சொல்லினான். சொன்னவுடன், வணிகன் மிகுந்த துன்பத்தையடைந்து, கம்மியனை நோக்கி, "ஐயா! நீ தயைசெய்து என் ஆசையை நிறைவேற்ற வேண்டும், நிறைவேற்றினால் உனக்குப் பெரும் புண்ணியமுண்டு" என்று வாழ்த்தி "வா" என்றழைத்துக்கொண்டு கோயிலையடைந்தனன். அடைதலும், வந்த கம்மியன், தன் கண்கள் மறையும்படி வஸ்திரத்தால் கட்டிக்கொண்டு அளவுபார்க்கத் தொடங்க, முன்னிற்பவனாகிய வணிகன், அவனது கையைப் பிடித்துத் திருவரையைத் தீண்டுதலும், அங்கிருந்து பார்த்தவர்களாகிய அர்ச்சகர் முதலாயினோர், "எல்லாப் பொருள்களினும் சிறந்த பரஞ்சோதி சொரூபராகிய பகவானை உற்று நோக்குதற்கு ஆயிரங்கண்கள் வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். அப்படியிருக்க, இக்கம்மியன், தனது இரண்டு கண்களையும் மூடிக் கட்டிக்கொண்டு வந்தது யாது கார

ணமோ" என்று கோபித்து, கண்களில் நெருப்புப்பொறி சிதற நின்று, சாஸ்வதமாகிய பரமபதப்பிரதாநம் செய்கிற கற்பகத் தரு வென்று சொல்லும்படி எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ கண்ணபிரானது கட்டழகு இவன் கட்புலத்தால் தரிசிக்கத் தகாததே யாதலாலும் நாம் பலபல வார்த்தைகளைச் சொல்லி என்ன பிரயோசநம்" என்று கம்மியனை வைதுகொண் டிருந்தார்கள். அப்போது கம்மியன் வந்து நிர்மலராகிய பகவானுடைய திருமேனியைத் தீண்டுதலும், புலித்தோலும், யானைத்தோலும், நீண்ட சடையும், நெருப்புருவ மாகிய நெற்றிக்கண்ணும், மழுவும், துடியும், மானும் விளங்கித்தோ ன்ற, இவன் துணுக்கென்றஞ்சி, கண்களைத் திறந்துபார்த்து, தனக்கு எதிரே காணப்படுகிற திருத்துழாய் மாலையையும், திருவரையில் வைத்த திருக்கைகளையும், செங்கல்லின்மீது அமர்ந்து விளங்குகின்ற திருவடிகளையும், நீலமணிபோலும் திருநிறத்தையுடைய திருமா லின் உருவத்தையும் கண்டான். கண்டவுடனே முன்போலவே கண்களைமூடினன். அப்போது தீண்டின இவனது கைகளுக்கு அந்தச் சிவபெருமானது அவயவங்களாகவே காணப்பட, மறுபடியும் தன் கண்களைத் திறந்து, மரகதமலையை நிகர்த்த பசும்பொன்மயமான ஜோதி சொரூபனாகிய பகவானைக் கண்டு "இதென்ன அதிசயம். கண்களை மூடினல் சிவரூபமாயும், திறந்தால் விஷ்ணுரூபமாயும் காணப்படுகின்றதே" என்று மிகவும் மயக்கமடைந்து, எதிர்நிற்க அஞ்சி, தனது இரண்டு கண்களிலும் ஆநந்தக்கண்ணீர் ததும்ப நோக்கி, திருத்துழாய் மணங் கமழ்கின்ற திருவடிகளை வணங்கி. அநேகவிதமாய் மனவுருக்கத்தோடு தோத்திரஞ்செய்து, சிவபெரு மான் உன்னைவிட வேறானவனென்று நான் நினைத்திருந்த நினைப்பா னது பொய்யாகி, நீயே அவனாகவும் அவனே நீயாகவும் பிரத்தியக்ஷமாகக் காணப்பட்டதனல் என் மனத்தில் நிலைபெற்றிருந்த சந்தேகமுழுதும் இன்று நீங்கிவிட்டது; ஆதலால், அவனே நீ, நீயே அவன் என்பதற்குச் சந்தேகமில்லை. ஸ்ரீ மகாலக்ஷ்மியைத் திருமார் பிலேயுடைய பகவானே, சிவரூபம் என்னுள்ளே அடங்கச்செய் வாயானல் இந்தப் புவநங்க ளெல்லாவற்றையும் உனது திருநாபி கமலமானது தந்தது என்பதற்குச் சந்தேகமேயில்லை" என்றுசொல் லித் தாழ்ந்து வணங்கினன். அப்போது பகவானனவர் அவன் முக த்தை நோக்கி, "ஓ அன்பனே? சிவபெருமான் என்னைவிட வேறா னவனென்று நீ எண்ணவேண்டாம், உன்னல் தொழப்படுவோனா கிய சதாசிவமூர்த்தி என்னிடத்தில் காணப்படுவான், அவனை நீ கண்டு வணங்குவாயாக" என்றுசொல்ல, அப்படியே கம்மியன் உற் றுப்பார்த்துக் கண்ணபிரானது சிரத்தின்மீது சிவசின்னங்கள் விள

சக் கண்டு, பூமியின்மேல் விழுந்து வணங்கி, ஸ்ரீராப்தி நாதனுகிய அந்தப் பகவானுடைய திருவடியை அன்றுமுதல் விடாமல் ஆசிர யித்து, உலேயில் வைத்திருக்கப்பட்ட பொன்போல மனமுருகி, பக வத் விஷயத்தில் பற்றுள்ளவனாய் இருந்தான். அப்படி யிருந்தவனை நோக்கி, குற்றமற்ற ததியாராதநபரராகிய நாமதேவர், அந்தத் ததியரோடு நீயும்வந்து உண்ணக் கடவை" என்று நியமிக்க, அவன், கற்றையாகிய ஜடாபாரத்தையும் நெற்றிக் கண்ணேயுமுடைய சிவபெருமானேடும் வந்து அடியார்களோடு கூடியிருந்து அமுது செய்த பிறகு, சந்திரசேகரராகிய சிவபெருமான், பொற்கொல்லனை நோக்கி, "நீ பதுமநாபனுகிய பகவானுடைய தாசர்களோடு கூடி வாழ்வதே எனக்கு இஷ்டம்" என்று சொல்லக் கேட்ட அந்தக் கம்மியனும், சிவபெருமானை நோக்கி, "இன்றுதொட்டு உன் இஷ்டம்போலவே அடியேன் நடந்துகொள்வேன்" என்று சொல்லக் கேட்ட சிவபெருமானும், மற்ற அடியார்களும் "ஓ நரஹரிதாசரே? நீர் நீடூழியாய் வாழக்கடவீர்" என்றுசொல்லித் தத்தம் இடங்களுக் குப் போய்விட்டார்கள் என்று சிவபெருமான் ஸ்ரீ பார்வதிதேவியா ர்க்குச் சொல்லி, மேலே, ஜநாபாயி வைபவத்தைச் சொல்லத்தொடங் கினர்.

நரஹரிபக்தர் சரித்திரம் முற்றிற்று.

பதினன்காவது

ஜநபாயி சரித்திரம்.

முன்னெருகாலத்தில் உலகத்திலுள்ள எல்லாரும் நினைத்துப் புகழும்படியான பெருமை பொருந்திய ஸ்ரீபண்டரிபுரத்தில், கார்த் திகை மாசம் ஏகாதசி திதியில், யாத்திரைக்காரர் பலரும்வந்து சேர் ந்தார்கள். அதில் ஒரு கன்னிகையானவள், தன்னைப்பெற்ற தாய் தந்தையரோடு வந்து, ஸ்ரீ பண்டரிநாதனைச் சேவித்து, அப்பண்டரி யின் மகிமையைப் புகழ்ந்து உரைத்து மனமகிழ்ந்து, தந்தைதாயரை நோக்கி, "நான் இவ்விடத்தில் நிரந்தரவாசம் செய்ய விரும்பினேன், உங்களிடத்தில் விருப்பமில்லேன், ஆதலால், உங்களோடு வரமாட் டேன்" என்று சொன்னாள். அதை அந்தத் தாய்தந்தையர் கேட்டு, "இவளுக்கு இச்சச் சிறுவயதில் ஸ்ரீஹரிபக்தியுண்டானது எப்படி?" என்று அதிசயித்து, இந்தக் கன்னிகையைத் தனியே விட்டுப் போவதற்குச் சம்மதமில்லாமல், மனவருத்தத்தோடு, மீண்டும் இவ ளைப் பலவிதமான இனிய சொற்களைச் சொல்லி அழைத்தும், அத

ற்கு உடன்படாமல் ஸ்ரீ ஹரியின் சரணாரவிந்த மதுவைப்பருகி மிக வுங் களித்து நிச்சலமாய் இருப்பதை நன்குணர்ந்து, அந்தக் கன்னிகையைத் திருமகள் கேள்வனாகிய ஸ்ரீபண்டரிநாதன் சந்நிதியில்விட்டுத் தமது ஊரை யடைந்தார்கள். பின்பு ஒருநாள், நாமதேவர், திரிவிக்கிரமனாகிய அந்தப் பகவானைச் சேவிப்பதற்குச் சந்நிதியை யடைந்து அவ்விடத்தில் உலாவிக்கொண்டிருந்த இக்கன்னிகையைக் கண்டு, அவள்மீது மிகுந்த கருணையுடையராய், அவளை நோக்கி, "குழந்தாய்! தாய் தந்தையரை விட்டு நீ தனியாய் வந்திருக்கின்றனையே; நீ யார்? உன்பெயர் யாது? எனக்குத் தெரியச் சொல்லவேண்டும்" என்று கேட்க, அந்தக் கன்னிகை, நாமதேவரை நோக்கி, "என் பெயர் ஜனாபாயி, கருங்கடல் வண்ணனாகிய கண்ணபிரானே எனக்குத் தந்தை, அவன் தேவியாராகிய ருக்குமாயியே எனக்குத் தாய், இந்தத் தாய் தந்தையரையன்றி எனக்கு வேறொரு தாய் தந்தையர் இல்லை. ஆதலால், இவ்விடத்தில் இருக்கிறேன்" என்று சொல்லக்கேட்ட நாமதேவர் தமது இருதயத்தில் மிகவும் அன்புடையவராய் இந்தக் கன்னிகையை யழைத்துக்கொண்டு தமது திருமாளிகைக்குப்போய், குணாபியை நோக்கி, இச்சிறுமியின் வரலாறு முழுதும் அறிவித்து, 'இவள் ஸ்ரீ கண்ணபிரானுடைய தாசியாகிய ஒருகன்னி, இவள் இக்கலியுகத்தில் அவதரித்து, பண்டரிபுரத்தில் எழுந்தருளியிருக்கிற கருணாரூபியாகிய ஸ்ரீபகவானுடைய திருநாம ஸங்கீர்த்தனத்தால் மகிழ்கின்ற மனத்தை யுடையவள்" என்று சொல்லுதலும், அதைக்கேட்ட குணாபியானவள், இச்சிறுமியை மிகுந்த அன்போடு வளர்க்க, வளர்ந்து, பெரியவளாகியிருக்க, அபலார் "நீயார்" என்று இவளை நோக்கிக் கேட்குந்தோறும், "நான் இந்திர குமாரனாகிய அர்ச்சுனனது தேர்ப்பாகனாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய திருவடியை எந்நாளும் இடைவிடாமல் ஸ்மரித்துக் கொண்டிருக்கிற ஸ்ரீ நாமதேவருக்கு அடிமைக் குடியாகிய தாசி" என்று சொல்லுவாள். இப்படி நாமதேவர் திருமாளிகையில் பல ஊழியங்கள் செய்துகொண்டு, மேகவண்ணனாகிய பகவானை நாமதேவர் வாழ்த்துந்தோறும் கேட்டு மனமகிழ்ச்சி யடைந்துகொண்டிருப்பாள். இப்படி யிருக்கிற காலத்தில், ஒருநா ளிரவில், ஐந்து நாழிகைக்குமேல், மெய்யன்பராகிய நாமதேவர் முதலானவர்கள் நித்திரைசெய்ய, அப்போது காற்றுமழை யடித்து, அதனால் அநேகம் வீடுகள், மாடமாளிகைகள், யாவும் பலவகையாய்ச் சிதைந்து அழிந்தன. அப்பொழுது பகவானானவர் "நாமதேவர் திருமாளிகையும் அழிவு பெறுமாயின் இவன் மனைவி மக்களோடு துன்பப்படுவானே, இதை நாம் எப்படிப் பார்த்திருப்போம்" என்று விரை

ந்து எழுந்தருளி, தமது சக்ராயுதத்தால் அந்தக் காற்று மழையைத் தடுத்து, நாமதேவர் திருமாளிகை மாத்திரம் விழாதிருக்கும்படி செய்ததுமன்றி, காற்று மழையின் மிகுதியால் திருமாளிகையின் ஒவ்வொரு பக்கத்தின் சுவர் முதலானவை சரிந்திருக்கக்கண்டு மண் குழைத்து அந்தச்சுவர் முதலியவற்றை முன்போலத் திருத்திக்கொண்டிருக்கும்போது, நாமதேவர் விழித்து வெளியேவந்து, நிர்மலமாகிய பீதாம்பர ஹார கேயூர குண்டல மகுட கங்கண பாஹுவலயங்களோடு கூடி விளங்குகின்ற ஸ்ரீகண்ணபிரானுடைய திவ்ய சௌந்தர்ய விக்கிரகத்தைக்கண்டு வணங்கி, வாழ்த்தி, திருவடியைப் பற்றிக்கொண்டு "ஸ்வாமீ! இந்த இரவில் தேவரீர் இவ்விடத்திலெழுந்தருளிச் செய்யுங் காரியம் யாது?" என்று வினவ, பக்தபரிபாலகனாகிய பகவான், நாமதேவரை நோக்கி, அடிக்கின்ற காற்று மழையால் உன்வீடு அழிந்து விழாமல் செவ்வை செய்தேன், நீ உனது குடும்ப சம்ரக்ஷணத்தை விட்டு என்னையே சரணடைந்திருக்கிறாயாதலால் இப்படிப்பட்ட காலங்களில் உதவிசெய்வது என் கடமையாயிருக்கின்றது. இப்படி நான் செய்யாதபக்ஷத்தில், உன்னைப்பெற்ற தாயானவள் என்னை வைவாள். அந்தச் செய்தியை நீயும் அறிவாயல்லவா" என்று பகவான் சொல்லிக்கொண் டிருக்கும்போது, குணையியானவள் வந்து, பகவானது திவ்ய ரூபத்தைக் கண்டு, திருவடியை வணங்கி, ஸ்தோத்ரம் பண்ணின பிறகு, மூவரும் கூடி, வீட்டிற்குள்ளே பிரவேசித்துத் தங்கியிருக்கும்போது, ஜநாபாயி வந்து, மேகவண்ணனாகிய ஸ்ரீகண்ணபிரானுடைய திருவடியை வருடிப் பல உபசாரங்களையுஞ் செய்துகொண்டிருக்க, நாமதேவர், வந்து வணங்கி, 'ஓ ஸ்வாமீ! எம்மை யடிமைகொண்டவனே! எம்மோடு கூடியிருந்து அமுதுசெய்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்துச் சொல்ல, அதற்குப் பகவான் இசைந்து, கோவிந்தன், விட்டலன், நாரணன், மகாதேவன் என்பவர்களாகிய நான்கு பிள்ளைகளும் நாமதேவரும், தாயாகிய குணைபியாரும், அவர் தேவியாரும் கூடி, ஒரே கலத்தில் அமுது செய்யும்போது, ஜநாபாயி பார்த்து, மிகவும் மன வருத்த மடைந்து, 'பண்டரிநாதனே! என்னை மாத்திரம் விட்டு விட்டாயே, என்னை இப்படிக் கைவிடுதல் உனக்குத் தகுதியாமோ? என்னைப் பரதேசியாக எண்ணினையே" என்று பலவகையாய்ப் பிரலாபிக்கும்போது, நிர்மலனாகிய விட்டலப்பெருமான், நாமதேவரை நோக்கி, "நீ எனக்கு ஊட்டுகின்ற இவ்வமுது நன்றாயிருக்கவில்லை" என்று சொல்லுதலும், நாமதேவர், விட்டலப்பெருமானை நோக்கித் "தேவரீரை எப்பொழுதும் ஸ்மரித்துக்கொண்டிருக்கிற ஜநாபாயியும் கூட இருந்து உண்ணாமையால் இந்த அமுது உமக்கு ருசிக்க

வில்லை" என்றார். என்று சொல்லுதலும், அமுது செய்துகொண் டிருந்தபகவான், தமது கைகளை யுதறிக்கொண்டு எழுந்திருப்பதைக் கண்ட, ராஜாயி பண்டரிநாதனுடைய திருக்கைகளையும், திருவடிகளை யும் சுத்திசெய்த பிறகு ஸ்வாமியானவர் ஒரு சயனத்தின்மீது சய னித்துக்கொண்டிருந்தார். அதன்பிறகு குணாயியார், ஜநாயியை யழை த்து "இதை வாங்கிக்கொள" என்று தாங்கள் அமுது செய்த மீதி யாயிருந்த எச்சிலைக் கொடுக்க, அவள் "இது பிரம்மருத்திராதிகளுக் குங்கிடைத்தற்கரிய மஹாபிரசாதம்" என்று மனமகிழ்ச்சியோடுவேற் றுக்கொண்டு, அதனைத் தனது சிறு குடிலில் வைத்துவிட்டு, "கமலா சனையாகிய பெரிய பிராட்டியாருக்கு நாயகனே! உன்னை யாசிரயித்த எனது குடிசைக்கு எழுந்தருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, பக வான் துயிலுணர்ந்து எழுந்து நாமதேவரோடு வந்து, அந்த ஜநாயி யை நோக்கி, "பெண்ணே! உண்ணும்போது நீயில்லாமையால், நன் றாய் உண்ணவில்லை. இப்போது பசியெடுக்கின்றது, ஆகையால் எனக் குச் சிறிது அன்னமிடவேண்டும்" என்று சொல்ல, ஜநாயி "ஓ பக வானே! குணாயி எனக்குச் சிறிதுமீதி அன்னத்தைத்தந்தாள், அது உனக்கு ஏற்குமோ" என்று கேட்க, ஸ்ரீ கண்ணபிரான், "பெண் ணே! அந்த மிச்சிலானால் எனக்கு மிகவும் பிரியமா யுண்பேன், அதைத் தருவாயாக" என்று சொல்ல, ஜநாயி அப்படியே தருதலும் பகவான் வாங்கி, அவளோடு கூடியிருந்து உண்டு திருவுள்ள மகிழ்ந் தார். பிறகு திருக்கைகளையும் சுத்திசெய்துகொண்டு இருவரும் நித் திரைசெய்யும்போது குணாயியார் விழித்து வெளியே வந்து தன் புதல்வராகிய நாமதேவரை யழைத்து, "நீயும் நானும் நித்திரை செய்த பின்பு ஸ்ரீகண்ணபிரான் ஜநாயி இடத்திற்குப் போய் மிச்சி லன்னத்தை யுண்டு அங்கேயே சயனித்துக்கொண்டார்" என்றாள். அதைக்கேட்ட நாமதேவர், "தாயே! யாருடைய மனமானது பரி சுத்தமாயிருக்கிறதோ, அவ்விடத்தில் பகவான் எழுந்தருளுவதற்கு ஒரு காலநியதியில்லை, நினைத்தபோதே எழுந்தருளுதல் அவருக்கு இயற்கை, மிச்சி லுண்பதும் அவருக்கு இயற்கையே" என்று சொல் லக்கேட்டு, நித்திரைசெய்கிற பகவானனவர், ஒரு ஜாமநேரம் இரு க்க விடியற்காலத்தே யெழுந்து ஜநாயியை யெழுப்பி "உன் வரவை யான் விரும்பி யெதிர்பார்த்திருக்கிறேன்" என்று சொல்லவும், அவள் விழித்துக்கொள்ளாதிருக்க, எம்பெருமான் அவள் விழித்துக்கொள் ளும்படி அவளைத் தூக்கி யெடுத்து நன்றாக உட்காரச்செய்து, ஒப் பற்ற திருக்கரத்தால் அவளது கூந்தலைச் சிக்கறத் திருத்தி உட்கார வைத்துவிட்டுத், தமது முன்றானை முனையைச் சுற்றிச் சுற்றிச் சும் மாடாகத் தலைமீது அமைத்துத் தாமே ஒரு கூடையில் அரிசியைக்

கொண்டுவந்து, "நான் அரிசியை யரைத்து மாவாக்குகிறேன். நீ உனது அழகிய கையினால் யந்திரத்தின் முளையைத் தீண்டிக்கொண்டு மதுரமான பாடல்களைப் பாடிக்கொண்டிரு" என்று சொல்ல, ஜநாயி அப்படியே யந்திரத்தின் அச்சுமுளையைத் தீண்டிக்கொண்டும் மதுரமாகப் பாடிக்கொண்டு மிருந்தாள். அப்படி யிருக்கும்போது பகவான், அந்த மதுரமான பாடல்களைக்கேட்டுத் தலை யசைத்துக் கொண்டு, பரவசனாகி, அரிசி யரைக்கிற நிலையை யறிந்த குணாயியார், ஜநாயியிடத்தில் வந்து, "அரைப்பதற்கு உன்னிடத்தில் அரிசி வந்த விதம் எப்படிச் சொல்லக்கடவாய்" என்று வினவி, இவள் பேசாதிருப்பதைக் கண்டு கோபித்துப், பிரம்பைக் கையிற்கொண்டு, ஜநாயி வருந்தும்படி அடித்து, "இப்பொழுது நீ யாரோடு பேசியிருந்து வந்தாய் சொல்" என்று வற்புறுத்திநிற்க, அவளடித்த அடி லக்ஷ்மீநாதனுடைய திருமுடியில் பட்டவுடனே, பகவான், "நான் விடோபா, பேன்புடையவளாகிய இந்த ஜநாயியாரிடத்திற்கு அரிசி யரைக்கும் பொருட்டு வந்தேன், என்னை அடிக்க வேண்டாம்" என்றுசொல்ல, நாமதேவர் தமது தாய்முகம் நோக்கி, "இவர் திருத்துழாய்மாலையை யணிந்த ஸ்ரீ கண்ணபிரான் என்று நீ அறிந்திலை, ஆதலால் வருவாயாக" என்று அழைக்க, குணாயியாரும் மயங்கி, நாணமுடையவளாய், லோகநாதனாகிய பகவானை அடித்தேனே" என்று மனத்துயரத்தோடு தலை வளைத்துக்கொண்டு நின்று, "ஜநாயியானவள், ஸ்ரீமந் நாராயணனை ஸ்மரித்துத் தன் வசப்படுத்திக்கொண்டாள், எனக்கு இவ்விடத்தில் யாதொரு பெருமையுமில்லை" என்று மௌனமா யிருத்தலும், ஜநாயியானவள் எம்பெருமானிடத்தில் தான் செய்த மிக்க அன்பென்கிற அச்சாணியைத் தீண்டிக்கொண்டு, வைராக்கியமென்கிற திரிகையில், சஞ்சிதமென்கிற அரிசியைப்பெய்து அரைத்தாள். அப்படி அவ்யக்தமாகிய தத்வத்தில் வெளிப்படையாய் அரைத்த அந்த மாவை யெல்லாம் ஸ்ரீ லக்ஷ்மீநாதன் அன்போடு கூடையில் நிறைத்து வைத்து நித்திரை செய்ய, ஜநாயியார், விடியுமுன்னே துயிலுணர்ந்தெழுந்து, மாதவனையும் துயிலெழுப்பி, "இவ்விடம்விட்டு உன் கோயிலை யடையாமல் இருப்பாயானல் கலகம் உண்டாகும்" என்றாள். என்று சொல்லுதலும், நித்திரை செய்துகொண்டிருந்த ஸ்ரீ கண்ணபிரான், "பொழுதுவிடிந்து போயிற்றே" என்று அவசரமாய் எழுந்திருந்து, நித்திரை மயக்கத்தால் தனது பீதாம்பரத்தையும், பதக்கத்தையும் அவ்விடத்தில் போட்டுவிட்டு, ஜநாயியாருடைய துணியைத் தான் உடுத்து, கோயிலுள்ளே பிரவேசித்து எழுந்தருளியிருந்தார். பொழுதுவிடிந்த பிறகு, கோயிலில் அர்ச்சகர் வந்து கதவைத்திறந்து கந்தையைப்

போர்த்துக்கொண்டு செங்கல்மேல் நிற்கின்ற கருணைக்கடலாகிய ஸ்ரீ கண்ணபிரானைக் கண்டு, "எந்தையே! உனது பீதாம்பரத்தை எவர்க்குக் கொடுத்தாய்? இந்தக் கந்தைத்துனியை எங்கே தேடிப் பெற்றாய்? அதிக சௌந்தரிய விக்கிரகமாகிய உன் திருமேனிக்கு இந்தக் கந்தைத்துணி தகுவதோ" என்று சொல்லி, அதை நெகிழ்த்துப் பதக்கத்தையும் திருமார்பில் இருக்கக்காணாதவர்களாய் வெருண்டு அதிசயித்து, "கதவு மூடினபடியேயிருக்க இந்தக் காரியம் எப்படி நிகழ்ந்தது?" என்று சொல்லிக்கொண்டு, "கதவு மூடினபடியேயிருக்கவும் இந்தப் பண்டரிநாதன் போகக்கூடுமானதாலும் போவது யாரிடத்திற்கு" என்று சொல்லி, "இக்கந்தைத் துணி, நாமதேவர், தேடியமைத்துக்கொண்ட அடிமைக்காரியின் துணிபோலக் காணப்படுகின்றது, இதனுண்மையை அறிவோம்" என்று நாமதேவர் வீட்டுக்கு வந்து, அவ்விடத்தில் ஜனாயியைக் கண்டு, உன்னிடத்துக்கு ஸ்ரீ கண்ணபிரான் வந்ததனால், இந்தப் பொன்னுடை கிடைத்தது, ஆதலால், அவன் திருமார்பில் அணிந்திருந்த பதக்கமும் உன்னிடத்தில் இருக்கலாம், அதைக் கொடுப்பாயாக என்று கேட்டவுடனே, ஜனாயி "என்னிடத்தில் இல்லை" என்று சொல்லுதலும், அர்ச்சகர், "நீ அக்கண்ணனை இங்கே யாதுகாரணமாகத் தங்கும்படி செய்தாய்" என்றுசொல்லி, அவள் வஸ்திரத்தைச் சோதித்துப்பார்க்கும்போது, பதக்கம் அவளிடத்தில் இருக்கக்கண்டு, அவளை வெருட்டி வற்புறுத்தும்போது, ஊரிலுள்ளார் யாவருங் கூடி "நாமதேவர் வீடு முன்போலக் காணப்படவில்லை, நேற்று அடித்த பெருங் காற்றினால் பறந்துபோன நமது வீட்டின் கூரைகளெல்லாம் நம்மால் மூடப்படவில்லை, நமது வீடுகளோ புதுக்கப்படவில்லை, இப்படியிருக்க, பொழுதுவிடியுமுன்னே நேற்று நம்முடைய வீடுகள்போல நிலைகுலைந்த இவர் வீடு மாத்திரம் புதிதாய்ச் சமைக்கப்பட்டிருப்பது என்ன அதிசயம்! இந்த நாமதேவர்க்கு ஸ்ரீ கண்ணபிரானே இவ்வாறு அமையும்படி திருவருள் சுரந்திருக்கலாம்" என்று சொல்லுவதைக் கேட்டோர்களிற் சிலர், "அப்படியே ஸ்ரீ கண்ணபிரானே அருள் செய்ததனால் பெரிய திருமாளிகையையும் பெரிய திரவியத்தையும் அமைத்துக்கொடுக்க அசக்தனோ" என்று சொல்லுவார்கள்; வேறு சிலர், "செல்வம் அதிகமாகக் கொடுத்தால் செருக்கு மிகுந்து தன்னிடத்து அன்பு இல்லாதவராவார், ஆதலால் பகவான், தன் அன்பருக்குப் பெருஞ்செல்வத்தைக் கிருபை செய்யார்" என்று சொல்லுவார்கள், இப்படியே பேசிக்கொண்டிருக்க, முன்

னே சோதித்தவர்கள் "ஜநாயியானவள் மோசக்காரி" என்று கோபித்து, "இவள் சுவாமித்துரோகி யாதலால் இவளைக் கழுவி லேற்றுவோம்" என்று தீர்மானித்து, அவளை அழைத்துக்கொண்டு சந்திரபாகா நதியைச் சமீபித்தவுடனே, ஜநாயியானவள், "அமல னே! செங்கல்லின்மேல்நின்ற திருக்கோலமா யெழுந்தருளியிருக் கிற ஸ்ரீதரனே! இப்படி கடுங்கொலை புரிதற்கு அடியேன் என்ன குற்றஞ் செய்தேன்" என்று சொல்லி, கைகளைத் தலைமேல் கூப்பி நின்று புலம்ப, அநாதரக்ஷகனாகிய ஸ்ரீகண்ணபிரானது திருவருளால் கழுமரமானது நீராய்க் கரைந்துபோய்விட்டது. ஜநாயியாருடைய துன்பத்தை நீக்கி ரக்ஷிக்கும்பொருட்டு நிர்மலராகிய பகவான் விரைந்து ஓடிவந்தார். இதைக்கண்ட உலகத்தாரெல்லாரும் மனமகி ழ்ந்து ஒருமிக்கக் கூடிநின்று பகவானை ஸ்தோத்திரஞ்செய்ய, ஜநாயி யைப் பிடித்துச் சோதிக்கவந்த அர்ச்சகர்கள், அவளை நோக்கி, "தாயே! உன்பொருட்டு பகவான், இவ்விடத்தில் எழுந்தருளின ராதலால் நீயே தந்யை" என்று புகழ்ந்து அவளை நீக்கிப்போயினர். போனபின்பு, ஜநாயி தன் வீட்டிற்கு வந்த விமலனாகிய பகவானை முன்போல் பிரார்த்தித்து, அபங்கக் கவிகளை ஆரம்பித்துச்செய்து கொண்டிருக்கும் நாளில், திருத்துழாய் மாலையை யணிந்த திருத் தோள்களையுடைய ஸ்ரீ கண்ணபிரான், மைக்கூட்டையும் எழுது கோலையும், காயிதத்தையும் கைக்கொண்டு அவள் சொல்லுமவற் றையெல்லாம் எழுதும்பொருட்டுத் திருக்கோயிலில் வந்து எழுந் தருளியிருக்க, ஞானதேவரும் அவ்விடத்திற்கு வந்தார். அவரைக் கண்டவுடனே ஸ்ரீகண்ணபிரான் எழுதுவதற்குத் திருவுள்ளம் நாணி மைக்கூடு முதலியவற்றை மறைத்து இருந்தபோது, அவர் வணங்கி, "ஓ தேவகிநந்தனா! ஏகாந்தமாயிருந்து நீ எழுதினது யாது? சொல்லி யருளவேண்டும்" என்று கேட்க, ஸ்ரீ பண்டரிநாதன் கிருபை யோடு அவரை நோக்கி, "ஜநாயி சொன்ன அபங்கக் கவிகளை எழுதி னேன்" என்று சொல்லக்கேட்ட ஞானதேவர் சிரித்து, "அமல னே! இந்த ஜநாயியானவள் சொல்லுவதெல்லாம் உன் மகிமையே யன்றி வேறல்ல, அது பிறராலே விரும்பத்தக்கதன்றி உன் புகழை நீயே யெழுதிக்கொள்வது சிறந்த காரியமல்ல" என்று சொல்ல, ஸ்ரீலக்ஷ்மீநாதன் "ஜநாயி சொல்லுவது என் செவிக்கு மிக வும் இனிமையாய் இருக்கையால் அதைக்கேட்க விரும்பினேன்; அன்றியும், அதை யெழுதிக்கொள்ளவும் விருப்பங்கொண்டேன்" என்றருளிச்செய்தனர். அப்போது முன்போலவே எழுதத் தொ

டங்கின பகவானனவர் ஞானதேவரை நோக்கி, "அன்பனே, நான் எழுதுவதை மறைத்தேனென்பது பிரமதேவனுக்குந் தெரியாது, அப்படியிருக்க, உனக்கு எப்படித்தெரிந்தது" என்று கேட்க, ஞானதேவர் பெருமானை நோக்கி, "ஐயனே! உன் பெருமையானது உன் அடியார்களுக்கு மிகவும் எளிதேயாகும்" என்று சொன்னர். அதைக்கேட்ட விட்டலப்பெருமான் சிரித்துக்கொண்டிருக்க, ஞானதேவர், அப்பெருமானை நோக்கி, "பரிசுத்தனன பகவானே! நாமதேவரைக் காணும்பொருட்டு நீர் எழுந்தருளும்" என்று பிரார்த்திக்க, அப்படியே இறைவனும் ஞானதேவர் கையைப் பிடித்துக்கொண்டு நாமதேவர் இடத்திற்கு எழுந்தருளுதலும், அவர் எதிர்கொண்டு வந்து மார்போடு அணைத்து மனமகிழ்ந்தார். பிறகு வந்த இருவரையும் ஆசனத்தில் எழுந்தருளச் செய்ய, அப்போது அன்பர் எல்லோரும் வந்து சேர, அவர்கள் யாவரையும் பகவான் தழுவிக்கொண்டு உட்காரும்படிசெய்து, நாமதேவரை நோக்கித், "திருமாலடியார்களைச் சேவிக்கும்பொருட்டு ஜநாயியை இங்கே யழைத்துக்கொண்டு வாரும்" என்று சொல்ல, அந்தச்சொல்லை அடியார்கள் கேட்டுத் தாய்க்குச் சொல்ல, அவள் மருமகளுக்குச்சொல்ல, அவள் வீட்டின் புறத்தில் சாணம் மிதித்துக்கொண்டிருக்கிற ஜநாயிக்குச் சொல்ல, ஜநாயியானவர், கால்கைகள் சுத்திசெய்துகொண்டு விரைந்து வந்து அவ்விடத்தில் அமர்ந்திருந்த அன்பர் கூட்டத்தின் நடுவில் எழுந்தருளியிருந்த பகவானைத் தரிசித்து வாழ்த்தி வணங்கினர். அப்படிப் பணிந்து நின்றபோது, ஞானதேவர், சமதமாதிகளான ஆத்மகுண பூர்த்தியுள்ள நாமதேவரை நோக்கி, "இன்று உண்டான ஓரதிசயத்தைக் கேட்பீராக, அது என்னென்றால், ஜநாயி பாடுவதை எம்பெருமான் தானே எழுதிக்கொள்ளுகிறார், அதை நான் பிரத்தியக்ஷமாகக் கண்டுவந்தேன்" என்று சொல்ல, திருத்துழாய் மாலையை யணிந்த விட்டலப்பெருமான், "நான் எழுதுவதனல் உண்டான குறை யாது" என்றார். அன்றியும் "ஜநாயி சொல்வதெல்லாம் எனக்குப் பேரின்பத்தைத் தருதலால், அப்படி எழுதலானேன், அதைச் சொல்லுவோர்களும், கேட்போர்களும் ஆகிய அவர்களின்மீது முன்னே அன்புடையேனாகிப் பின்னே மோக்ஷலாபத்தையும் தருவேன்" என்று சொல்லக்கேட்டு அருகேயிருந்த தொண்டரெல்லாரும் தனித்தனியே நகைத்தார்கள். அப்போது ஞானதேவர், ஜநாயியை நோக்கி, "இந்த நாமதேவர் முற்காலத்தில் இரணியனுக்குப் புதல்வராய்ப் பிறந்து, பிறகு வாலிக்கு மகனாகி,

அதன் பின்னே உத்தவராக அவதரித்து, இப்போது பாண்டுரங்கப் பெருமானுக்குப் பெரிய அன்பராயினர். நீ இந்தப் பெருமானிடத்தில் மிக்கஅன்புடையவளாய் இருப்பதற்குக் காரணம் யாது? நீ ஆதியில் இன்னாள் என்று சொல்லக்கடவாய்" என்று வினவினர். அதுகேட்ட ஜநாயி ஞானதேவரை நோக்கி, "தசாவதாரஞ்செய்தவரான பகவான் தாம்கொண்ட அர்ச்சாவதாரத்திலும் சிறந்தவராகி யெழுந்தருளியிருத்தலால், நானும் அவரோடு கூடவே பிறந்து அவரை யடைந்தேன். இது தான் உண்மையான செய்தி" என்று சொல்லுதலும், ஞானதேவர், அதைக்கேட்டு மனமகிழ்ந்தார். அதன்பின்னே பாண்டுரங்கப் பெருமானுனவர் தமது மெய்யன்பருக்குச் சொல்லுகின்றார்: எப்படியென்றால்; "நீங்கள் யாவரும் பாடுகிற கவிகளை எழுதுவதற்குச் சமர்த்தரானவர்களை நான் வகுத்துச் சொல்லுகிறேன் கேளுங்கள். ஞானதேவர் சொல்லும் கவிகளைச் சச்சிதாநந்தரும், நிவர்த்தி என்பவர் பாடும் பாட்டினைச் சோபாநதேவரும், முக்தாபாயி கவிகளை ஞானதேவரும் எழுதும்படி விதித்து, பரமாநந்தர் பாடலை விசோபாகேசரரும், சாவந்தியாமேளர் கவிகளைச் சிவாகுரவரும், கூர்மதாசர் கவிகளைச் சுவேதரும், சோகாமேளர் பாட்டினை அநந்தபட்டரும் எழுதும்படி நியமித்து, நாமதேவருடைய சிறந்த கவிகளையும் ஜநாயியுடைய கவிகளையும் யானே எழுதுகிறேன்" என்றருளிச்செய்தார். அப்போது அங்குள்ளவர்களான அன்பரெல்லாரும் ஜநாயியைப் புகழ்ந்துநிற்க, மிக்க பெருங்களிப்பைக்கொண்ட நாமதேவர் அடியார்களைப் பூஜைசெய்து, பாண்டுரங்கப் பெருமானுக்கும் மங்களம்பாட, அந்தப் பெருமான் கோயிலுக் கெழுந்தருளி, ருக்மிணிபிராட்டியாருக்கு இங்கே நடந்த செய்தியெல்லாம் சவிஸ்தாரமாகச்சொல்லி மகிழ்ந்திருக்க, ஸ்ரீஹரிதாசர் எல்லாரும் தத்தம் இடங்களை யடைந்து, ஸ்ரீஹரிநாம சங்கீர்த்தநபரராய் வாழ்ந்திருந்தனர் என்று சிவபெருமான் ஸ்ரீபார்வதீதேவியாருக்குச் சொல்லி, மேலே மச்சேந்திரநாதர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

ஜநாபாயி சரித்திரம் முற்றிற்று.

பதினைந்தாவது

மச்சேந்திரநாதர் சரித்திரம்.

கைலாசபதியாகிய ஸ்ரீ சிவபெருமான், ஒருநாள், திருப்பாற்கடற்கரையில் தேவியாரோடு கூடி மகிழ்ச்சியோடு எழுந்தருளியிருக்

கிற ஸ்ரீராமபிரானது திவ்விய ரூபத்தைத் தனது இருதயத்தில் அமைத்து, அந்தப் பெருமானுடைய திருநாமங்களை உச்சரித்துக் கொண்டிருந்தார். அதை அறிந்த உமாதேவியார் தமது நாயகராகிய சந்திரசேகரரைப் பிரார்த்தித்து, "தேவரீரைப் பார்க்கிலும் மேலான தெய்வம் யாது?" என்று வினவுதலும், அந்தச் சிவபெருமான், விரைவாக, ஸ்ரீரகுநந்தனருடைய ஜகத்காரணத்வத்தைச் சொல்லத் தொடங்கினார். எப்படியென்றால், "பிரமதேவன் முதலாகச் சொல்லப்பட்ட தேவர்களோடு ஹரன் என்று சொல்லப்பட்டுள்ள நானும் உண்டாவதும் அவனாலே, நாங்கள் நிலைபெற்றிருப்பதும் அவனாலே, ஆதலால், அந்த ஸ்ரீ ஹரியின் திருநாமத்தை உச்சரிப்பேன், அவனது நீலமேக சாமள விக்கிரகத்தையும் என் மனத்தில் இருத்திக்கொள்வேன்" என்று சொல்லக்கேட்ட பார்வதிதேவியார், ஆலோசித்து, "அப்படிப்பட்ட மேலான தெய்வம் உமது மனத்தில் எழுந்தருளியிருக்க, இதுவரைக்கும் அந்த ரகசியம் எனக்குத் தெரியாமல் மறைத்து வைப்பது உமக்குத் தகுதியாமோ? அதனை இன்று எனக்கு அருள்செய்யவேண்டும்" என்று பிரார்த்திக்க, கைலாசபதியாகிய சிவபெருமான், தம்மைப் பணிந்து எதிரே நிற்கிற பார்வதிதேவியாருடைய சிரத்தின்மீது, தமது திருக்கையை யமைத்து, உபதேசம் செய்யும்போது, இந்த உபதேசத்தில் மனமில்லாமல் மறந்து நித்திரையை யடைய, மணிகளைக் கொழிக்கின்ற கடலிலுள்ள மீன்களுள் ஒரு மீன் குட்டியானது, சிவபெருமா னருள்செய்கிற உபதேசமொழியை உம் என்று செவிகொடுத்துக் கேட்டு, அந்தப் புண்ணியத்தால், புதுமையான நரரூபங்கொண்டு வந்தடைந்ததைப் பார்த்து, அதற்கு மச்சேந்திரன் என்கிற பெயர் சூட்டியருளி, சிவபெருமான் பார்வதிதேவியாரோடு தமது திருக்கைலாயத்துக்கு எழுந்தருளினார். அந்தக் குழந்தையானவர், சிவபெருமானது திருவருளால், வைராக்யகுணம் மேன்மேல் வளரப்பெற்று, ப்ரபஞ்சப்பற்றாகிய மயக்கம் நீங்கி, தமது திருநாவானது, ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தநம் செய்யாநிற்க, தாம் ஒருவராய்த் திரியத்தொடங்கினார். தாய் வயிற்றைவிட்டு நிலவுலகத்தில் அவதரிக்கும்போதே, "ஹம்ஸோஹம்" என்கிற மந்த்ரத்தை விடுகின்றிலர்; ஆதலாலே, முக்கால வர்த்தமானத்தையும் அறியத்தகுந்தவரானார். இப்படி யிருக்குங்காலத்தில், இவருக்குத் தீர்த்த யாத்திரையில் விருப்பம் அதிகரித்து, தாம்போகும் ஊர்தோறும் இரவில் மாத்திரம் உண்டு, ஆரண்யவாசமே தவமாகக் கொண்டு, பன்னிரண்டு வயதுநிரம்புமளவும் காலங்கழித்துக்கொண்டு

வரும்போது, ஒருநாள், ஓரூரில், ஒரு தநவணிகன் வாழ்கின்ற வீட்டுக் கெதிரேநின்று ஆலக்கென்றுசொல்ல, அந்த அருமையாகியவொலியைக் கேட்டு, அந்த வீட்டில் வாழ்கின்றவள், இரண்டு கையாலும் பிக்ஷை யேந்திக்கொண்டு எதிரேவந்தாள். வந்தவள், தனக்கெதிரே நிற்கிற மாதவரை நோக்கி, பலவகையான உபசாரங்களைச் செய்து, அஞ்சலி பண்ணி, "பழிக்கப்படாத உருவத்தை யுடையவரே: நீர் இவ்விடத் திற்கு வரும்படி, நான் எப்படிப்பட்ட தவத்தைச் செய்தேனோ" என்று சொல்லி, அன்பு மிகுதியால் மனமுருகினாள். அப்படி மன முருகி, "அன்பு மிகும்படி யெதிரே நிற்கிறீராதலால் அடியேனுக்கு ஒரு துன்பமில்லை, ஆனால் குழந்தை யில்லையென்கிற ஒரு துன்ப மாத்திரம் உண்டு, அத்துன்பம் நிவர்த்தியாக, ஒரு புதல்வன் உண் டாகும்படி க்ருபை செய்யவேண்டும்" என்று அக்ஷபாத்திரம் இட்டாள். அப்பொழுது அவள் சொன்ன அன்புமிகுந்த வார்த்தை யைக் கேட்டு, நிலைபெற்ற தவத்தை யுடையவராகிய மச்சேந்திர நாதர் அவள் முகத்தைப் பார்த்து, "உன்னிடத்தில் ஒரு புதல்வன் உண்டாவான், நீயிந்த வரத்தைப் பெற்றுக்கொள்" என்று விபூதி கொடுத்துச் சொல்லுகின்றார்: எப்படியென்றால், "நீ இதை உட் கொள்வாயானால், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அம்சத்தால் உன்னிடத் தில் ஒரு புதல்வன் உண்டாவான்" என்று சொல்லி, அவர் நீங்கின பின்பு, அந்த மாதானவள், அயல் வீட்டிற்குப்போய், அவ்விட்டுக் காரியைத் தன் வீட்டுக்கு அழைத்துவந்தாள். வருகின்ற அவளை நோக்கி, "மான்போன்ற மருண்ட பார்வையை யுடையவளே! ஒரு துறவியானவர் இங்கே வந்தார், அவருக்குப் பிக்ஷையிட்டு, ஒரு புதல்வன் உண்டாகும்படி தயைசெய்ய வேண்டுமென்று ப்ரார்த் தித்தேன், அவர் திருநீறு கொடுத்து, இதை உட்கொண்டால் புதல் வன் உண்டாவான்" என்று சொல்லிப்போனார்; அந்தத் திருநீற்றை நான் உட்கொள்ள விரும்புகிறேன், இந்த விஷயத்தில் உன் அபிப் பிராயமென்ன?" என்று கேட்க, அயல் வீட்டுக்காரி சொல்லு கிறாள்: "நீ திருநீற்றை யுட்கொள்ளவேண்டாம், இப்படிப் பரதேசி களால் திருநீறு கொடுக்கப்பெற்று, தம் நினைவு மாறி, அந்தப் பர தேசிகளின் வசப்பட்ட மாதர் அநேகருளர், இந்தச் செய்தியை நீயும் அறிந்திருக்கலாம்; உன் இஷ்டம்போலச் செய்வாய்" என்றாள். அதைக் கேட்டவள், அயல் வீட்டுக்காரி சொன்னபடியே திரு நீற்றை யுண்ணாமல் தீயில் இட்டு எரித்து, ஒரு மூன்று வருஷம் கழிய, மச்சேந்திரநாதர், அவ்விடத்திற்கு வந்து, எல்லா வீடுகளி

னும் பிக்ஷான்னத்தைப் பெற்று, இவள் வீட்டிலும் வந்து "பிக்ஷை யிடவேண்டும்" என்று எதிரே நின்றார். அப்படியே அவளும் பிக்ஷான்னம் ஏந்திவர, அவள் முகத்தை நோக்கி, பூர்வ நினைப்புண்டாகி, "பெண்ணே? உன் புதல்வன் எங்கே? அவனை எனக்குக் காட்டவேண்டும்" என்று சொல்ல, அவள் அஞ்சி, மறுமொழி சொல்லாமல் நின்றாள். அவளை மச்சேந்திரநாதர் நோக்கி, "உண்மையைச் சொல்" என்றார். அதற்கு அந்த மாது சொல்லுகிறாள்: "ஓ மாதவரே! நீர் கொடுத்த திருநீற்றை உட்கொள்ளவில்லை, அயல் வீட்டுக்காரியின் வார்த்தையைக் கேட்டு, அதைத் தீயிலிட்டேன், அடியேன்மீது கோபங்கொள்ள வேண்டாம், அடியேன் செய்தபிழை இதுவே" என்றாள். அதைக் கேட்ட துறவி சொல்லலுற்றார்: எப்படியென்றால், "நீ இந்தத் திருநீற்றையிட்ட சாம்பலை எங்கே கொட்டிவிட்டாய், அந்த இடத்தைக் காட்டு" என்று சொல்லியழைக்க, அவள் பன்னிரண்டு வருஷகாலமாகத் தான் சாம்பல் கொட்டுகிற இடத்தைக் காட்ட, மச்சேந்திரநாதர், அந்தச் சாம்பற் குழிக்கெதிரே நின்று, உரத்த சத்தத்துடன் ஆலக்கென்றார். அந்தச் சத்தத்தைக் கேட்டவுடனே, முன்னே யிவர்கொடுத்த திருநீறானது "ஏன் குரு ஸ்வாமீ?" என்று எதிரொலி கொடுத்தது. இதைக் கண்டு அவ்வூரிலுள்ள யாவரும் அதிசயித்தார்கள். அப்போது மச்சேந்திரநாதர், அந்த வணிகன் மனைவியை நோக்கி, இந்தச் சாம்பற் குப்பையை ஆள்விட்டு எடுப்பியும்" என்று சொல்ல, அப்படியே அவளும் ஆட்களைவிட்டு அந்தச் சாம்பற் குப்பையைக் கிளறியெடுப்பிக்கவே, அடியில் ஒரு குழந்தையானது திவ்ய சௌந்தர்யத்தோடிருக்கக் கண்டார்கள். அது பன்னிரண்டு வயதுள்ளதாய், சின்முத்திரை முதலான யோக சின்னங்களோடுங் கூடி, பாதம் பூமியில் படாதிருக்கக்கண்டு, மச்சேந்திரநாதர் அந்தச் சிறுவரை வணங்க, அந்தச் சிறுமுனிவரும் குழியிலிருந் தெழுந்துவந்து மச்சேந்திரநாதரை வணங்கினார். அப்போது மச்சேந்திரநாதர் அந்தச் சிறுமுனிவர் சாம்பலிற் பிறந்ததனாலே அவருக்குக் "கோரக்கர்"என்று பெயரிட்டார். அதன் பிறகு அந்தக் கோரக்கநாதரை மச்சேந்த்ரநாதர் அழைத்துக்கொண்டு போகும்போது, பார்த்த வணிகன், தன் மனைவியை நோக்கி, "நீ இந்த மச்சேந்த்ரநாதருடைய சொல்லைக் கடந்து, இப்படிச் செய்துகொண்டாயே, தௌர்ப்பாக்கிய முள்ளவளே" என்று வெறுத்துக்கொள்ள, இதைக்கண்ட மச்சேந்த்ரநாதர், வணிகனையும், அவன் மனைவியையும் நோக்கி, "நீங்கள மனம்வருந்த வேண்டியதில்லை, உங்களுக்குக் குழந்தை யுண்டாகும்" என்று ஆசிர்வதித்துப்போனார். போகும்போது, கோரக்கநாதர், மச்சேந்த்ரநாதரை

வணங்கி, "ஸ்வாமீ! என்சிரசின்மேல் தேவரீர் திருக்கையை வைத்து, தாரக மந்த்ரத்தை உபதேசித்தருளி, அடியேனை உஜ்ஜீவிக்கச் செய்ய வேண்டும்" என்று ப்ரார்த்திக்க, மச்சேந்த்ரநாதர், உடனே, மறுமொழி கொடாதிருந்து, பிறகு, "அப்பா! நீ குருகுலவாசம் செய்து வருவாயானால், அந்தச் சற்குருநாதர், உன் பரிபக்குவமறிந்து உபதேசித்தருளுவார், அப்படிப் பெறவேண்டிய முறைப்படியே பெற்றுக்கொள்ளக்கடவை" என்றருளினர். அதைக்கேட்ட கோரக்கநாதரும் "அப்படியே செய்கிறேன்" என்று, மச்சேந்த்ரநாதராகிய குருவின் திருவடியை வணங்கி, அவருக்கு வேண்டிய ஊழியங்கள் செய்துகொண்டு, தேசசஞ்சாரஞ் செய்கிற காலத்தில் ஒருநாள், ஒரு நகர்ப்புறத்திலே, மச்சேந்த்ரநாதர் இருந்துகொண்டு, "அப்பா, கோரக்கா? நீ போய்ப் பிக்ஷை பேற்றுக்கொண்டுவா" என்று நியமிக்க, அப்படியே கோரக்கரும் அந்த நகருக்குள்ளே பிரவேசித்து, வீடுகள்தோறும், பிக்ஷாந்நத்தை யாசித்துக்கொண்டு, பிராமண போஜனம் நடந்துகொண் டிருக்கிற ஒரு வீட்டுக் கெதிரேபோய் "ஆலக்கு" என்று சொல்லி நின்றார். அந்த வீட்டுக்கு உடையவளாகிய பார்ப்பினி அந்த ஆலக்கு என்னும் சொல்லைக் கேட்டவுடனே, வடை, போளி, அதிரசம் முதலிய சிறந்த வுணவுகளை, இவரது சோளிப்பை நிரம்பும்படி கொடுக்க, வாங்கிக் கொண்டுபோய், நகர்ப்புறத்திலிருக்கிற தமது சற்குருநாதருக் கெதிரேவைக்க, அவர் உண்டு, சேஷத்தைக் கோரக்கருக்குக்கொடுக்க இவரும் உண்டு, இருவரும் சந்தோஷமடைந்திருந்தார்கள். இப்படியிருக்கும்போது, மச்சேந்த்ரநாதர் கோரக்கநாதரைப் பார்த்து, "அப்பா, இந்தவடை மிகவும் இனிமையாயிருந்தது, ஆகையால், எனக்கு நாளையத்தினமும் போய்க் கொண்டுவந்து கொடுக்கவேண்டும்" என்றார். அப்படியே கோரக்கர்போய், அந்தப் பார்ப்பினியைக் கேட்க, அவள் "இன்றைக்கு வடையேது? கிடைக்கமாட்டாது, அரிசிவாங்கிக்கொண்டுபோ" என்றாள். கோரக்கர், "எங்கள் குருவுக்கு அந்த வடையே இஷ்டமாயிருக்கின்றது, ஆகையால் அதையே நீ தரல்வேண்டும்" என்றார். பார்ப்பினி, "அதையொழிய வேறெந்தப் பதார்த்தம் வேண்டுமாயினும் தருகிறேன்" என்றாள். இவரும் "நான் எதையும் விரும்பிலேன், வடை கொடுத்தாலன்றிப் போகமாட்டேன்" என்று சொல்ல, பார்ப்பினி "தவவேஷம் பூண்டு வருவோருக்கு இது தெரியாதா? இல்லாத வொருபொருள் எங்கேயிருந்து வரும்?" என்று கோபித்து, கோரக்கரை நோக்கி, "உன் கண்ணை உன் குருவானவர் கேட்டால்

தருவாயோ? அப்படி தருவது உண்மையானால் நானும் இப்போது வடை தரத்தகுந்தவளாவேன்" என்று சொல்ல, அது கேட்ட கோரக்கர், உடனே தமது கண்களிரண்டில் ஒரு கண்ணைப் பறித்து, "குருவுக்குக் கொடுப்பதை உனக்குக் கொடுக்கிறேன்" என்று கொடுக்க, அவள் பயந்து, இவர் கண்ணிலொழுகிற உதிரத்தைத் துடைத்துநின்றாள். அப்போது தயை, சாந்தி, வைராக்கியம் முதலிய சிறந்த குணங்களையுடைய கோரக்கர், அச்சத்தோடு தமக்கெதிரே நிற்கிற பார்ப்பினியை நோக்கி, "நீ அஞ்சவேண்டாம், வடையை மாத்திரம் செய்து கொடுத்தாயானால் கொண்டுபோய் எமது குருவுக்குத் தருவேன்" என்றார். அப்படியே அந்தப் பார்ப்பினி விரைவாகச் செய்து கொடுக்க, வாங்கிக்கொண்டுபோய், மச்சேந்த்ரநாதருக்கெதிரே வைத்து வணங்கிநின்றார். அப்போது மச்சேந்த்ரநாதர் இவரை நோக்கி, "உன் கண் போனவிதம் யாது" என்று கேட்க, இவரும் உண்மையைச் சொல்லக்கேட்டு, "இப்படிப்பட்ட தைரியகுணம் எனக்கில்லை, மற்றொரு கண்ணை எனக்குத் தா" என்று கேட்டார். அப்படியே கோரக்கர் மற்றொரு கண்ணையும் பறித்து எதிரே வைக்க, மச்சேந்த்ரநாதர் அதிசயித்து, தமது திருக்கையால் இவரைத் தடவி இருகண்ணும் தந்தருளி, ஆத்மஞானத்தை உபதேசித்த பிறகு, அமுதுசெய்து, மீதியைக் கோரக்கருக்குக் கொடுத்து, "உன்னைப் போன்ற சிடர்கள் இவ்வுலகத்தில் இல்லை" என்றார். அதன்பிறகு, கோரக்கர், சாம்பவர், அத்துவயர், பிரப்ாவர், கைநியர், நிவர்த்தர், ஞானதேவர், விசோபர், நாமதேவர், ஜநாயி இவர்கள் ஒருவர்க்கொருவர் உபதேசம் செய்யப்பெற்று, ஆத்மஞானமானது பூலோகத்தில் நிலைபெற்று விளங்கியது என்று சிவபெருமான் உமாதேவியாருக்குச் சொல்லி மேலே கோபிசந்தராஜனது வைபவத்தைச் சொல்லத் தொடங்கினார்.

மச்சேந்த்ரநாதர் சரித்திரம் முற்றிற்று.

பதினாறுவது

கோபிசந்த்ராஜன் சரித்திரம்.

உத்தரகண்டத்தில், கௌடபங்கால் என்னும் ராஜ்யத்தில், சித்திரகாஞ்சநபுரி என்னும் பட்டணத்துக்கு அரசனாகிய திரிலோகசந்தன் என்பவன், மிகவும் ப்ரதாபசாலியாய் அந்த நகரத்தை ஆண்டுவந்தான். அவன் அப்படி ஆண்டுவருங் காலத்தில், அவன் மனைவியா

கிய மைநாவதியின் கர்ப்பத்தில், அதிக ரூபலாவண்யங்களோடு கூடின புதல்வர் ஒருவர் பிறந்தார்; அவருக்குக் கோபிசந்தன் எனப் பெயரிட்டு அன்போடு வளர்க்க, வளர்ந்து பருவம் நிரம்பின காலத்தில், இவர் தந்தையாகிய திரிலோகசந்தன் தேஹவியோகமடைந்தான். அடைதலும் இந்தக் கோபிசந்தராஜனும் முடிசூட்டப்பெற்று அரசாட்சியை நடத்திவருங் காலத்தில், ஆயிரத்திருநூறு மனைவியரை விவாஹஞ்செய்தும், ஆயிரத்தறுநூறு நாடகக் கணிகையரையும் அமைத்துக்கொண்டு, அல்லும் பகலும் விஷயாநந்த சாகரத்தில் மூழ்கியிருக்குங் காலத்தில், இவர் தாயாராகிய மைநாவதியார், தமது நாயக வியோகத்தால் மிகுந்த வைராக்யத்தை யுடையவராய், ஒரு நாள் மேல்மாடத்திலேறி, நான்கு திசைகளையும் நோக்கும்போது, சகல சித்திகளையும் பெற்று, ஆசாபாசங்களைக் கனவிலும் நினைக்காத ஆத்மஞானியாயும், இடைவிடாத ஹரிநாம ஸங்கீர்த்தநபரராயும், பிக்ஷாந்நத்தால் தேஹயாத்ரையை நடத்துவோராயும், தயை, சாந்திமுதலாகிய ஆத்மகுண பூர்த்தியுள்ளவராயும் இருக்கிற ஜாலந்தரர் என்பவர், குளிர் காய்வதற்காகக், காட்டுக்குப்போய், உலர்ந்த விறகுகளைக் கட்டித் தலைமேல் வைத்துக்கொண்டு விரைந்து வருவதையும், அந்த விறகுக்கட்டானது அவர் தலைமேல் படாமல் ஒரு முழத்துக்கு மேலே அந்தரமாய் வருவதையும் நோக்கி, "இதுஎன்ன புதுமையாயிருக்கிறது" என்று திகைத்து, "இவர் மனிதர் அல்லர், தெய்வமே" என்று நினைத்து, "இவராலே என் பவரோகம் நீங்கும்" என்று மன வுறுதிகொண்டு, மாந வெட்கங்களை விட்டு, அவர் திருவடியை யடைந்து வணங்கி, உஜ்ஜீவிக்கலாம் என்னும் எண்ணத்துடனே, அவர்க்கு உபசாரஞ் செய்வதற்குரிய வஸ்துக்களை யெல்லாம் சேகரித்துக்கொண்டு அவரிருக்கும் மடத்துக்குப்போய், சதா காலமும் ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தநபரராய்ப்பரமாநந்தபரித ஹ்ருதயராயிருக்கிற அந்த ஜாலந்தரருக்கெதிரே நின்று, கைகூப்பி வணங்கி, "ஸ்வாமீ! அடியேனுக்கு ஞானோபதேசம் செய்து அடியேனை உஜ்ஜீவிக்கச் செய்ய வேண்டும்" என்று ப்ரார்த்திக்க, இதனைக் கேட்ட ஜாலந்தரர், அவளை நோக்கி "நான் எளியவன், எங்குந் திரிந்துகொண்டிருப்பவன், நீயோ அரசனுக்குத் தாயாயிருப்பவள், உனக்குத் தகுந்த ஆசாரியரிடத்தில் உபதேசம் பெற்றுக்கொள்வது நன்மையாகும்" என்று சொல்ல, மைநாவதியார், "ஸ்வாமீ! உம்மிலுஞ் சிறந்த ஆசாரியரை எங்கே தேடுவேன்? உம்மைச் சரணமடைந்த அடியேனை எப்படியாகிலும் கடைத்தேற்றவேண்டும்" என்று பல

முறை வணங்கிப் பிரார்த்திக்க, தபசியானவர், அவளுடைய சித்த சுத்தியை யறிந்துகொண்டு சந்தோஷித்து, அவளைச் சமீபத்தில் அழைத்து, அவள் தலைமேல் கையைவைத்து ஞானோபதேசம் செய்தருள, அவள் உபதேசம் பெற்றவுடனே தன் மமதை முழுதும் நீங்கிப் பகவானை மனோசாக்ஷாத்காரமாகக் கண்டு, குருமூர்த்தியைத் தொழுது பேரானந்தக் களிப்பை யடைந்து, விடைபெற்றுத் தமது அரண்மனைக்குப் போய், அவகாசம் நேரிட்ட காலங்களிலெல்லாம் சற்குருநாதரிடத்திற்கு வந்து வணங்கி, ஆத்மாநுபவத்தைப் பேசிக்கொண்டு, மனைக்குப் போய்க்கொண்டிருந்தார். இப்படி மைநாவதியார், ஆத்மாநுபவம் செய்துகொண்டு ஸ்ரீ ஹரிபக்தியிற் சிறந்து விளங்குகிற காலத்தில், இவர் புதல்வராகிய கோபிசந்தராஜர், ஒரு நாள் தம்மீது அன்பிற் சிறந்தவளாகிய மூத்தமனைவியிடத்திற்கு வந்தார்; வந்தபோது அவள், கணவனுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்து, சயநத்திற் பொருந்தியிருந்து, தாம்பூலங் கொடுத்து, "என் பிராணநாதரே! நான் ஒருவார்த்தை சொல்லுகிறேன், அதைக் கேட்டு அப்படியே எனக்குத் தயை செய்யவேண்டும்" என்று வேண்ட, அரசன் "அது என்ன சொல்" என்றுகேட்க, "உமது தாயார், யாரோ ஒரு பரதேசியின் மடத்துக்குப்போய் உபதேசம் பெற்றுக்கொண்டு வந்தார். அப்படி வந்த நாள்முதல் அடிக்கடி அவரிடத்துக்குப் போவதும் வருவதுமாயிருப்பதைக் குறித்து நமது குடிக்குப் பழியுண்டாயிருக்கிறது" என்று சொல்ல, அரசன் கேட்டுக் கோபங்கொண்டு, "நீ சொல்வதை நாளை உதயத்தில் அறிகிறேன்" என்று சொல்லி, மறுநாள் உதயத்தில், தன் சபைக்கு வந்த மந்திரியை நோக்கி, "நமது நகர்ப்புறத்தில் நெடுநாளாய் வாசம் பண்ணிக்கொண்டிருக்கிற, ஜாலந்தரர் என்னும் ஸந்யாசியை நான் சேவிக்க விரும்புகிறேன்; ஆகையால் அவரை இங்கே யழைத்துவாரும்" என்றுசொல்ல, மந்திரியும் அப்படியே அவரை யழைத்துவருதலும், அரசன் எதிர்கொண்டுபோய் அவரை வணங்கி யழைத்து ஆசநந் தந்து "இன்று நீர் எழுந்தருளினதனால் நான் புநிதன் ஆய்விட்டேன்" என்று இன்சொற் கூறி உபசரித்து, அன்றிரவிலும் அரசன் தன்னிடத்திலேயே தங்கியிருக்கும்படி ப்ரார்த்தித்து, அவரும் அப்படியே தங்கி நித்திரை செய்யும்போது, அரசன் சிலரை யேவி அவரைக் கிணற்றில் தள்ளிவிடும்படி செய்தான்; அவர்களும் அப்படியே செய்தார்கள். செய்தாலும், ஜாலந்தரர் அந்தக் கிணற்றில் அழுந்திப்போகாமல் நீரின்மேல் மிதந்துகொண்டு, ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநபராயிருந்

தார். இப்படியிருக்க, சூரியோதயமானவுடனே, அரசன் தாயாராகிய மைநாவதியார் தமது குருமூர்த்தியை அவர் மடத்திற்சென்று தேடிக் காணாமல்திகைத்து, நீரில்லாமல் மயங்குகிற மீனைப்போலவும், தாயில்லாமல் தவிக்கிற குழந்தையைப்போலவும் தத்தளித்துப் புலம்பி, "சற்குருநாதர் எங்கே போனாரோ" என்று மனம் வருந்தியிருக்கையில், ஜாலந்தரர் சிடர்களில் சிறந்த கானேபா என்பவர், பவரோகயை யறுத்தவராகிய எழுநூறு பேருடன் உலகமுழுதும் தேடிக்கொண்டிருக்க, அரசன் ஒருநாள் தன் அரண்மனை முற்றத்தில் அநேக மாதர் பரிமளம் பூசிச் சிகையை வாரி யலங்கரித்து உபசரிக்க உலாவிக் கொண்டிருந்தான். அப்போது மேல்வீட்டிலிருந்து கீழே நோக்கித் தன் புதல்வனைக் கண்ட மைநாவதியார், "இப்படிப்பட்ட பேரழகுள்ள நமது புதல்வன் கடைசியில் ஒருநாளில் யமன்கையிற் சிக்கி வருந்துவானல்லவா? வினைவசத்தால் நேரிடுகிற மரணத்தையும் யமபாதையையும் நீக்க நம்மால் முடியாதே, என்ன செய்வோம்" என்று கண்ணீர் சிந்தியழுதாள்; அந்தக் கண்ணீரானது அரசன்மேல் விழ, அரசன் இந்த நீரை, மேலேயிருந்து யாரோ தெளித்தார்களென்று நினைத்து மேலே நிமிர்ந்து பார்த்து, அழுதுகொண்டிருக்கிற தாயாரைப் பார்த்து, "நீர் அழுதற்குக் காரணம் யாது?" என்று கேட்க, அவள் உண்மையான செய்தியைச் சொல்ல, அவன் கேட்டு வருந்துகையில் தாயார், "அப்பா மைந்தனே! இவ்வுலகத்தில் காணப்படுவன யாவும் அழிந்துபோவனவேயன்றி இருப்பன ஒன்றுமில்லை; ஆகையால் நீ சற்குருவை யடைந்து அவரது அருள்பெற்று, உன் சரீரத்தைத் தெய்விகமாக்கிக்கொண்டால் நன்மையாம்" என்று சொல்ல, அரசன், "அப்படிப்பட்ட சற்குருநாதர் எங்கே கிடைப்பார்" என்று கேட்க, மைநாவதியார், அப்பா, "ஜாலந்தரர் என்பவர் ஒருவரிருந்தார், அவர் ஆசாரிய லக்ஷணங்கள் யாவும் அமையப்பெற்றவர், அவரைப் பன்னிரண்டு வருஷமாகக் கண்டிலேன்" என்று சொல்ல, அரசன் கேட்டு, ஒன்றும் சொல்லாமல் போய், ஸ்நாநம்செய்து போஜநஞ் செய்தபிறகு, அநுதாபத்தோடு தாயாரிடம் வந்து நடந்த செய்தியைச் சொல்லி வருந்தினன். இப்படியிருக்க, கானேபா எழுநூறு சிடரோடு பல இடங்களில் தேடியுங் காணாமல், பரதேசத்தை யடைந்தார். அங்கே, மச்சேந்திரரைத் தேடிவந்த கோரக்கர் கானேபாவைக் கண்டு, காடாலிங்கநம் செய்துகொண்டு, அங்கே தங்கியிருக்குங்காலத்தில், வந்த கோரக்கர், அவர்களை நோக்கி, "கோபிசந்தன், ஜாலந்தரரைக் கிணற்றிலே தள்ளிவிட்டான், இதனை யறியாமல் ஏன்

வருந்துகின்றீர்கள், வருந்தித் தேடினால் என்ன ப்ரயோஜநம்" என்றார். அதைக் கேட்ட கானேபா, குருவிருப்பிடம் தெரிந்துகொண்டு, கோரக்கரை நோக்கி, "கோரக்கரே! மலையாளத்தில் உம்மால் சந்நியாசம் பெற்ற குருக்களில் எத்தனைபேர் பெண்ணாசைகொண்டு குழந்தைகளைப் பெற்றுக்கொண்டு, அந்த மனைவி மக்களை நீங்காதிருக்கிறார்கள்" என்றும், "அதை யறியாமல் எம்மை யிகழ்ந்தீர்" என்றும் விளையாட்டாய்ப் பேசிக்கொண்டு, எழுந்திருந்து, இருவருமாகப் போய், காஞ்சநபுரிச்சோலையில் மைநாவதியாரைக் கண்டு இந்தச் செய்தியைச் சொல்லவேண்டுமென்றெண்ணிக் காத்திருந்து, பிறகு மைநாவதியார்க்குக் கானேபா, தாம் வருவதைத் தெரிவிக்கும்பொருட்டு முன்னே சிலரை யனுப்ப, அவர்களால் கானேபா வரவைக் கேட்ட மைநாவதியார் மகிழ்ந்தார். அப்போது கானேபா வந்து, மைநாவதியாரை நோக்கி, "நீர் மனம் வருந்தவேண்டாம், இன்னும் ஏழுநாளில் ஜாலந்தரரைக் காண்பீர்" என்று சொல்லக் கேட்ட மைநாவதியார், மனக் களிப்பு மிகுந்து, தமது புதல்வராகிய கோபிசந்த்ராஜரிடத்திற்குப் போய், அவரை நித்திரைவிட்டெழுந்திருக்கச்செய்து, தூக்க மயக்கத்தைத் தெளிவித்து, "இன்று நம்முடைய குருநாதருடைய சீடராகிய கானேபா என்பவர் வந்து சோலையிலிறங்கியிருக்கிறார், அவர் திருவடியைக் கண்டு சேவித்தால் நீ எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுவாய், அன்றியும் எல்லாப் பதங்களிலும் மேலான மோக்ஷபதத்தையும் அடைவாய்" என்று சொல்லுதலும், அரசன் "என் தாயானவள் நான் நன்மையை யடையச்சொன்ன வார்த்தையை நான் நெகிழவிடேன்" என்று தாயார் திருவடியை வணங்கித் தமது சபையைச் சேர்ந்து, மந்திரியையும் சதுரங்க சேனையையும் அழைத்துக்கொண்போய்க் கானேபாவைக் கண்டு, அன்போடு அவரது திருவடியைப் பணிந்து தோத்திரஞ் செய்துநிற்க, அவர் "நீர் யார்?" என்று கேட்க, "அடியேன் கோபிசந்த்ராஜன்" என்று சொல்ல, அவர் இவனை இன்னானென்றறிந்துகொண்டு, "அடா மூடா! கள்ளை அமுதென்றும், கழுதையைக் குதிரை யென்றும் சொல்லுவதுபோல உனக்கு இந்தப் பெயரிட்டவர் யாரோ அறிந்திலேன்! நீ பரமதுஷ்டன், அவிவேகியாகிய நீ மனையாள் வார்த்தையைக் கேட்டு, குருநாதரைக் கிணற்றில் தள்ளினாய், சிறிதளவுஞ் சிந்திக்காமல் இப்படிப்பட்ட மஹாபாதகம் செய்தாய், ஆதலால் உனக்கு ஆசந்த்ரதாரார்க்கமாகிப் கோரநரகப்ராப்தியுண்டு, இப்படியுஞ் செய்யலாமா" என்று கோபித்துச்சொல்ல, கோபி

சந்தராஜர் வெருவி, கால் கைகள் நடுக்கமடைந்து, "அடியேன் செய்த பெரும்பிழையை மனங்கொள்ளாமல் பொறுத்து அடியேனை ரக்ஷித்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, அந்தச் சமயத்தில் மைநாவதியார் எதிரே வந்து கானேபாவுக்கு ஆதேசு சொல்ல, அவர் மனமகிழ்தலும், தம் புதல்வராகிய கோபிசந்தராஜரைப் பிடித்து அந்தக் கானேபா கையில் கொடுத்து, "இவன் என் புதல்வனே, இவனுடைய பிழையைப் பொறுத்து ரக்ஷித்தருளவேண்டும்" என்று வணங்க, கானேபா அது கேட்டு மனமகிழ்ந்திருக்க, மைநாவதியார் அவரை நோக்கி, "ஸ்வாமீ! தேவரீர் எங்கள் நகரத்தில் வந்து எங்களுக்கு அபயம் தந்தருளவேண்டும்" என்றுவேண்ட, அந்தக் கானேபாமுதலான எல்லாரும் வருதலும், அவர்களைக் கோபிசந்தராஜர் எதிர்கொண்டு பணிந்து, அழைத்து வந்து, ஆசநம் தந்து, பாதபூஜை செய்து, அமுது செய்தருளப்பண்ணி, புஷ்ப சந்தன தாம்பூலங்களையும் கொடுத்த பிறகு, கானேபா, அரசனை நோக்கி, சற்குருநாதரை எந்தக் கிணற்றில் தள்ளினுப், உண்மையாய்ச் சொல்" என்று கேட்க, கிணற்றைச் சுட்டிக் காட்டி, "இந்தக் கிணற்றிலே வீழ்த்தினேன்" என்று பயந்து சொல்ல, கானேபா, அரசனை நோக்கி, "நீ கடைத்தேறும் வழியிருக்கின்றது அஞ்சவேண்டாம்; இரும்பினாலும், செம்பினாலும், வெள்ளியினாலும், பொன்னினாலும் உன்னைப்போன்ற உருவங்கள் தனித்தனியாய்ச் செய்விப்பாயாக" என்று நியமிக்க, அரசனும் அப்படியே செய்வித்து, கிணற்றருகே வந்து, குருநாதர் மேல் மூடியிருந்த இலத்தியை யெடுப்பிக்கவே, சற்குருநாதரானவர், பூர்ணசந்திரன்போல விளங்கினர். எல்லாரும் கண்டு கண்களித்து அதிசயித்தார்கள். அப்போது கானேபா, சற்குருநாதர் திருவடிகளை மனத்திலிருத்தி, "ஸ்வாமீ! இவ்வரசனுக்கு அடியேன் அபயங்கொடுத்திருக்கிறேனாதலால், தேவரீர் இவன் செய்த பிழையைக் குறித்துச் சபிப்பதாயிருந்தால், அந்தச் சாபம் இவனுருவம்போலச் செய்யப்பட்ட பிரதிமைகள்மேல் வ்யாபிக்கும்படி க்ருபைசெய்துரக்ஷிக்க வேண்டும்" என்று மனத்தில் சிந்தித்து, கோபிசந்தனை நோக்கி, இருப்பு முதலிய லோஹங்களால் செய்யப்பட்ட பிரதிமைகளை இந்தக் கிணற்றில் விட்டு, ஸ்வாமிக்கு ஆதேசு சொல்லக்கடவை" என்று சொல்ல, அரசன் அப்படியே செய்ய, கிணற்றுக்குள்ளே யிருக்கிற குருநாதர், "நீயார்" என்று அரசனைக்கேட்க, "அடியேன்கோபிசந்தன்" என்று அரசன் சொல்ல, "நீ சாம்பலாகக்கடவை" என்று குருநாதர் சபிக்க, அந்தச் சாபம் அரசனிடத்தில் அணுகாமல் பிரதிமைகள்

மேலே வியாபிக்கவே, அவை நீருயின; அப்போது கானேபா, அர சனை நோக்கி, "நீ கிணற்றருகேயிருந்து குருவுக்கு ஆதேசு சொல், பயம்வேண்டாம்" என்று சொல்ல, அரசன், "ஸ்வாமீ! இனிமேலும் என்ன விளையுமோ" என்று அஞ்சுகிறேன்; ஆகலால் "நீரே கதி" என்று ஆதேசு சொல்லக் கேணியிலிருந்து கேட்டோராகிய குருநா தர், "நீ யார்?" என்று கேட்க, "அடியேன் மைநாவதியார் மைந்தன்" என்றுசொல்ல, "நீ அமரமாகக்கடவை"என்று குருநாதர் வாழ்த்த, கேட்டவர்யாவரும் கைகொட்டி, ஆநந்தபரவசரானார்கள். பிறகு அந் தக்குருநாதரை வெளியேவரச்செய்து, மைநாவதியார் அவர்திருவடி யைப் பற்றிக்கொண்டு, கடல்போலக் கண்ணீர்பெருக அவர் பாதங் களைக் கழுவிப் பாதபூஜையும் செய்து முடிந்தபிறகு, கோபிசந்தரும் பாதபூஜை முதலானவைகளைச் செய்து வணங்கித் தன் மந்திரிகளைப் பார்த்து, "எனது அரசாட்சியை என் புதல்வனுக்குக் கொடுத்து விடுங்கள்"என்று சொல்லி, சற்குருநாதரை நோக்கி, "ஸ்வாமீ! அடி யேனுக்குத் தேவரீருடைய துறவற தர்மத்தைத் தந்தருளவேண் டும்" என்று பிரார்த்திக்க, குருநாதர், "ஓ கோபிசந்தனே! நான் உன க்கு அமரமாக ஆசீர்வதித்திருக்கிறேன், அதைப்பெற்று அரசாட் சியை நடத்திப் போகசுகத்தை அநுபவியாமல்விட்டு, வைராக்ய த்தையடைந்து வீணாக உடம்பை வருத்துவதனால் என்ன ப்ரயோ ஜநம்? உலகத்தில் வைராக்கியம் பெறுவதிலும் நஞ்சுண்ணலாம், ஆகாயத்தில் உலாவலாம், சப்த சமுத்திரங்களையும் நீந்தலாம், மற்று முள்ள அருமையான காரியங்களையுஞ்செய்யலாம், வைராக்யத்தைக் காப்பாற்றுதல் மிகவும் அருமை" என்று சொல்ல, கோபிசந்தன் சற்குருநாதருடைய திருவடியைத் தாழ்ந்துவணங்கி, "ஸ்வாமீ! இது வரைக்கும் அடியேன் அநுபவித்த விஷயாநந்தம் போதும், ஆகை யால் தேவரீர் கட்டளைக்கேற்கும்படி செய்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, குருநாதர் அரசன் விரும்பினபடியே துறவாசிரமத்தை அருள்செய்தார். செய்தவுடனே அரசன் ஸந்யாசிவேஷம்பூண்டு சோளிகையைத் தாங்கி, எல்லா வீடுகளிலும் பிச்சையேற்று வரும் போது, தம் வீட்டின் வாசற்படியில் வந்து நின்று சற்றும் மனவருத்தமில்லாமல், "ஆலக் தாயே" என்றவுடனே, அந்தச் சத் தத்தைக் கேட்ட மனைவியானவள் விரைவாய் வெளியே வந்து, தன் கணவரை நோக்கி "அந்தோ, என் ப்ராணநாதரே! நீர் இந்தக் காரியம் செய்தது தகுதியாமோ? என்னிடத்தில் ஏதோ குற்றங் கண்டு இப்படிச் செய்தீர்போலும்" என்று சொல்லி, நாயகர் இந்தக்

கோலங்கொண்டுவரப் பார்த்தால் இவ்வுலகத்தில் எந்த மாதர்களாயினும் பொறுப்பார்களா" என்று புலம்பியழுது ப்ரலாபிப்பதை அரசன் நோக்கி, அவளுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லித் தேற்றி, மற்றவருடைய துக்கத்தையும் நீக்கி, தன் தாயினிடத்துக்குப்போய்க் கும்பிட்டு நிற்க, அந்தத் தாயாகிய மைநாவதியார் புதல்வனை அன்போடு அணைத்து, உச்சிமோந்து ஆதரிக்க, அவரை நோக்கி, "தாயே! உன் கையால் பாற்சோறிடவேண்டும்" என்றார். அப்படியே யிட்டு, அமுது செய்யும்போது, மைந்தனை நோக்கி, "என் வயிற்றிற் பிறந்த நீ இப்படிப்பட்ட வைராக்யத்தை யடைந்து, என் குலமுழுதும் ஈடேறச் செய்தாய், இந்த ஆசிரமம் பூண்ட உன்னைப் பார்த்த என் மனத்துக்குண்டாயிருக்கிற பெருமகிழ்ச்சிக்கு ஒரு அளவுண்டோ, இல்லை" என்று வாழ்த்தி, "குழந்தாய்! நீ உன் விருப்பத்தின்படியே திவ்ய தேசயாத்திரை செய்துகொண்டு, பன்னிரண்டு வருஷத்துக்கொருதரம் இங்கு வந்து நான் தருகிற பாற்சோற்றை யுண்டு என் மனத்தை மகிழச்செய்து போ" என்று சொல்லவே, கோபீசந்தர், "அப்படியே செய்கிறேன்" என்று தாயினிடத்தில் விடைபெற்றுப் போய், புண்யதீர்த்த யாத்ரையும், புண்ய க்ஷேத்ர யாத்ரையும் செய்துகொண்டு பத்ராவதி நகரத்துக்குப்போய், அந்தப் பட்டணத்தில் சம்பாவதி என்னும் பெயரையுடைய தன் தங்கையிருப்பதை நினைத்து, அவள் வீட்டு வாசற்படியில் போய்நின்று "அலக்" என்று பிக்ஷை கேட்க, அவள் வீட்டு வேலைக்காரியோடி வந்து இவரைப்பார்த்து ஆச்சரியப்பட்டு, வீட்டுக்குள்ளே வந்து, "அம்மா! இங்கே பிக்ஷை யேற்க வந்தவரை நோக்கினால், கோபீசந்தர் என்று எனக்குத் தோன்றுகின்றது, நீயும் வந்து பார்த்து நிதானித்தறியவேண்டும்" என்று சொல்ல, உடனே விரைந்துவந்து இவரைப் பார்த்து, தன் தமையனென்றறிந்து, இடிவீழ்ந்த மரம்போல் நிலத்தில் விழுந்து, அழுது தேம்பிக் கதறி, "அண்ணரே! அரம்பையர்போன்ற பேரழகையுடைய அநேக மாதரையும், குபேரன் பட்டணமாகிய அளகைபோன்ற பட்டணத்தையும், இந்திரனுடைய அந்தப்புரம்போன்ற அந்தப்புரத்தையும், அவனிடத்திலுள்ள நவநிதிகள்போன்ற செல்வங்களையும் விட்டு, இந்தக் கோலமாய் வரக் காரணம் யாது?" என்று கேட்க, இவர், தங்கையை நோக்கி, "தங்காய், நான் சற்குரு கடாக்ஷம் பெற்ற பிறகு, என் மனமானது, ஸ்ரீ ஹரியின் திருவடி த்யானத்திலன்றி, வேறொன்றிலும் செல்லவில்லை, ஆதலால், வெளிப்பட்டு வந்துவிட்டேன், அதைக்குறித்து நீ துக்கிக்க

வேண்டாம்'' என்று சொல்லி, அவளிடத்தில் விடைபெற்றுத் தீர்த்த யாத்ரை செய்துகொண்டு, பன்னிரண்டு வருடங்கள் கழியவே, தம் தாயினிடத்திற்கு வந்து, அவரைச் சேவித்து, அவர் தந்த பாற்சோற்றை யமுதுசெய்து போயினர்.

அதன் பிறகு, மங்கையர்க் கரசியாகிய ப்ரேமளா என்பவள், அரசாட்சிசெய்கிற மலையாள தேசத்துக்கு மச்சேந்திரநாதர் ஒரு காலத்தில்போக, அம்மங்கையர்க் கரசியானவள், இவருடைய கட்டழகைக் கண்டு மயங்கினாள். அவள் அழகைக்கண்டு இவரும் மயங்கினார். இப்படி ஒருவரிடத்தில் ஒருவர் மோகங்கொண்டு, இருவருங்கூடி, விஷயபோக சாகரத்தில் மூழ்கி யழுந்திக் கிடக்குங்காலத்தில், இந்த ப்ரேமளா வயிற்றில் ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு மீநாதன் என்று பெயரிட்டு, மிகுதியாகிய அன்போடு வளர்த்துவருங் காலத்தில், ஒருநாள், ப்ரேமளாதேவியின் முகத்தைநோக்கி, "பெண்ணே, தீர்த்தயாத்திரை செய்யவந்து, உன்னுடைய மிக்க காமத்தீயிற் சிக்கி, உன்னைப் பிரியமாட்டாமல் பரிதபிக்கிற என்னை அழைத்துப்போவதற்குக் கோரக்கநாதன் வருவான், அவன் என் மாணாக்கன்'' என்று சொல்லக்கேட்டு, அவள் மனவருத்தத்தோடு மந்திரிகளைநோக்கி, "நம்முடைய நகரைச் சுற்றிலும் காவல்வீரரை அமைத்து, துறவிகள் யாவராயினும் வந்தால், நிர்த்தாக்ஷண்யமாய், அவர்களைச் சிரச்சேதம் செய்யும்படி கட்டளை பிறப்பியுங்கள்'' என்றாள். அவர்களும் அப்படியே நகரைச் சுற்றிலும் காவல்வீரரை யேற்படுத்தி இந்த ஏற்பாட்டையும் அவர்களுக்குச் சொல்லி வைத்தார்கள். இப்படியிருக்க, கோரக்கர், தமது குருவாகிய மச்சேந்திரநாதரைத் தேடிக்கொண்டுவந்து, இந்நகரத்தில் ப்ரவேசித்து, ஒருவீட்டுவாசற்படியில்நின்று "ஆலக்'' என்றுசொல்ல, அந்த வீட்டுக்காரி வெளியேவந்து, இவருடைய வயது அழகு முதலியவற்றைக் கண்டு, இரக்கங்கொண்டு, "நகரைச்சுற்றிலுங் காவல்வீரரிருக்கிறார்கள், அவர்கள் துறவியாகிய உம்மைப் பார்த்தால் கொலைசெய்வார்கள், இந்தவூரை யாள்கின்றவளாகிய ப்ரேமளாதேவியின் கட்டளை இப்படி யுண்டாயிருக்கின்றது, ஆகையால், நீர் இந்த நகரிலிருக்கவேண்டாம், தக்ஷணமே அவர்கள் கண்ணுக்குப் புலப்படாமல் வேறோரிடத்துக்குப் போய்விடும்'' என்றாள். அதைக் கேட்ட கோரக்கநாதர், அச்சமடைந்து, "நமது சற்குருநாதரை எப்படித் தேடிக்காண்பது'' என்று மனத்துயரத்தோடு, ஒரு மரநிழலில் உட்கார்ந்திருந்தார். அப்போது அந்த வழியாகச் சில வேஷதாரிகள்

வந்தார்கள். அவர்களை கோரக்கர் நோக்கி, "நீங்கள் துன்பத்தோடு இங்கே வந்ததற்குக் காரணம் யாது?" என்று கேட்க, அவர்கள் கோரக்கரை நோக்கி, "ஸ்வாமீ! இந்த நகரத்தை யாள்பவரிடத்திற்குப் போய் எங்கள் கூத்தாட்டின் விநோதங்களைக் காட்டி, ஏதாயினும் லாபமடையலாமென்று எண்ணிவந்தோம், வரும்போது வழியில், மிருதங்கக்காரன் நோயாளியாகிவிட்டான். இனி நாம் செய்வது என்னவென்று எண்ணித் துன்பமடைந்தோம்" என்று சொல்ல, கோரக்நாதர் அவர்களைப் பார்த்து, "நான் மிருதங்கம் நன்ருய் வாசிப்பேன், என்னை அழைத்துக்கொண்டு போங்கள்" என்று சொல்லினர். அதனைக் கேட்டு அந்த வேஷதாரிகள் மனமகிழ்ந்து இவரையும் அழைத்துக்கொண்டு நகரத்திலுள்ளேபோய், மச்சேந்திரநாதரும், ப்ரேமளாவும் சேர்ந்து ஒரே ஆசநத்தில் வீற்றிருக்கக் கண்டு, அவர்களுக்கெதிரே, விசித்திரமாய் நடநஞ் செய்ய, கோரக்கரும் அந்த நடநத்துக் கிணங்க மத்தளங் கொட்டினர். அப்போது, கோரக்கர், தாம் வந்ததைச் சற்குருநாதர் அறியும்படி, அந்த மத்தளவோசையால் தெரிவித்தார். உடனே மச்சேந்திரர் அறிந்துகொள்ளுவதற்கு முன்பே ப்ரேமளா அறிந்து, மனம் அஞ்சி, கையை நெரித்து, "கோரக்கர் வந்துவிட்டார்" என்று மச்சேந்திரநாதருக்குத் தெரிவிக்கத் தெரிந்துகொண்டு, ஆசனம் விட்டெழுந்து வந்து, சீடனை அணைத்து, இன்சொற்கள் பேசியிருக்கும்போது, ப்ரேமளாவானவள், வேஷதாரிகளுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்தனுப்பின பிறகு, தனது நாயகரைக் கோரக்கர் அழைத்துக்கொண்டுபோய் விடுவாரே யென்கிற ஏக்கத்தால், அந்நபாநாதிகளை வெறுத்து, அல்லும் பகலும் துக்கித்துக்கொண்டிருக்க, கோரக்கர், தகுதியான சமயம் பார்த்துக்கொண்டேயிருந்து, ஒருநாள், "ஸ்வாமீ, தேவரீர் அடியேனேடு எழுந்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, மச்சேந்திரநாதர், தமது ப்ரேமாதிசயத்தையுடைய நாயகியைப் பிரியமாட்டாதவராய், கோரக்கரை நோக்கி, "அப்பா, நீர்வளமுதலிய பல வளங்களும் அமைந்த இந்த நகரம்போல, உடலுயிர்களுக்கு இன்பஞ் செய்வதாகிய நல்ல நகரம் வேறொன்றில்லாமையாலும், பிறந்த புதல்வன் மிகவும் பிரியமுள்ளவன் ஆகையாலும், இவ்விடம்விட்டு வருவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கின்றது, நீ வாவென்று உன்னையழைப்பதும் குற்றமா யிருக்கின்றது, ஆதலால் நான் ஒன்றுஞ் சொல்லமாட்டேன்" என்று மனம் வருந்துகிற சற்குருநாதருடைய துன்பத்தைக் கோரக்கர் பார்த்து, "இதற்கு யாம் என்ன செய்

வோம்" என்று, நினைத்துச் சிலநாள் அங்கேயிருக்க, ஒருநாள் ராத்திரியில், மனைவியோடு சயனித்துக்கொண்டிருக்கிற மச்சேந்திருடைய குழந்தை, மென்மையாகிய சயநத்தின்மேல் ஜலமலங்களை விட, அதனையறிந்த மச்சேந்திரர், தமது மாணாக்கராகிய கோரக்கரையழைத்து, "இந்தக்குழந்தையை நீ கழுவிக்கொண்டு வா" என்று சொன்னவுடனே, எடுத்துக்கொண்டுபோய், உதயகாலத்தில் ஆற்றிற் கழுவிக் கல்லின்மேல் மோதி, உடம்புமுழுதும் சிதைந்து துண்டு துண்டாய்த் தெறிக்கும்படி துவைத்து வெயிலில் உலர்த்தினர். மச்சேந்திரர், கோரக்கரை நோக்கி, "எங்கே குழந்தை?" என்று வினவ, அவர் "நீரில்துவைத்து வெய்யிலில்உலரவைத்தேன்" என்றுசொன்னவுடனே, மச்சேந்திரர், இவன் குழந்தையைக் கொலைசெய்தானென்றறிந்து, நிலத்தின்மேல் வீழ்ந்தலறி, மூர்ச்சித்தார். அப்போது, அவர் மனைவியாகிய ப்ரேமளா, வயிற்றிலும், மார்பிலும், முகத்திலும், தலையிலும் அறைந்துகொண்டு, கோவென்றலறிப் புரண்டு விழுந்தாள். குருநாதராகிய மச்சேந்திரர் மயக்கந்தெளிந்து கோரக்கரைநோக்கி, "என் குழந்தையைக்கொன்றது உனக்கு அழகோ! அந்தக் குழந்தையாகிய மீநநாதனை, இந்தக்ஷணத்தில், நான் பார்க்கும்படி வரவழைக்காமற் போனாயானால், நீ நல்லமாணாக்க னல்லை" என்று சொல்லுதற்கு முன்னே, நூற்றெட்டு மீநநாதர்களை யுண்டுபண்ணிக் காட்ட, ப்ரேமளா, இதைக்கண்டு, மிகவும் ஆச்சரியப்பட்டு, "என் வயிற்றிற் பிறந்த புத்திரன் இன்னானென்று காட்டவேண்டும்" என்று வேண்ட, நூற்றேழு மீநநாதர்களை மறைத்து, மீதியாயிருந்த ஒரு மீநநாதனை, ப்ரேமளாவினிடத்திற்கொடுத்து, "இதுதான் உன் குழந்தை" என்று சொல்லி, பிறகு சற்குருநாதரை நோக்கி வணங்கி, "ஸ்வாமீ! இவ்விடத்தில் நெடுநாளாயிருந்தீர், இப்போதாயினும் என்னோடு வாரும்" என்றுசொல்ல, மச்சேந்திரர், "இவன்சொன்னபடியே, இவனோடு போகாதிருந்தால், இன்னம் என்னஅநர்த்தம்நேரிடுமோ" என்றெண்ணி, தமது நாயகியாகிய, ப்ரேமளாவின் முகத்தைநோக்கி, "பெண்ணே, என் மாணாக்கராகிய கோரக்கர் அழைக்கிறதினால் நான் போய்வருகிறேன்" என்று சொல்ல, ப்ரேமளாவானவள், "நமது நாயகர், போகத்தில் மிகவும் இச்சையுடையவர், ஆனாலும் இவரை நிறுத்தினால் இன்னம் என்ன விபரீதங்கள் உண்டாகுமோ" என்று, அவருக்கு வழிச்செலவுக்கு உதவவேண்டுமென்று ஒரு தங்கப்பாளத்தைக் கோரக்கருக்குத் தெரியாமல் சோளியில்வைத்துக் கண்ணீர் விட்டழுதாள். பிறகு, "உம்மை நான் இனிமேல் எப்போது காண்

பேன்" என்று சொல்லி அனுப்ப, சீடராகிய கோரக்கரோடு, நகரத்தைவிட்டு, ஒரு அரண்யத்தில் போகும்போது, ஒருவரும் நடவாமல் இருக்கிற இடத்தைப் பார்த்து, சீடரை நோக்கி, "இவ்வழியில் திருடர்பயம் உண்டோ" என்று கேட்க, சீடர், "ஸ்வாமீ! எல்லாவற்றையும் விட்டவுமக்குத் திருடர்பயமேன் உண்டாயிற்று" என்று கேட்க, இருவரும் அங்குள்ள ஒரு தடாகக்கரையிற் போய்ச்சேர்ந்தார்கள். அப்போது குருநாதர் தமது சோளியைச் சீடரிடத்திற் கொடுத்துவிட்டு, சௌசவிதி செய்யப்போனபோது, கோரக்கர் அந்தச் சோளியைப் பரிசோதித்துப் பார்த்து, அதனுள்ளே ஒரு தங்கப்பாளமிருக்கக்கண்டு, "இதனாலல்லவோ நமது குருநாதர்க்குஅச்சமுண்டாயிற்று" என்று ஆலோசித்து, அதை அந்தத்தடாகத்தில் எறிந்துவிட்டு, பாளத்தின் பளுவெவ்வளவோ அவ்வளவு பளுவுள்ள கற்களைச் சோளியில் நிறைத்துவைக்க, குருநாதர் தமது அநுஷ்டாநமுடித்து வந்து சோளியைத்தூக்கித் தோளில் மாட்டிக்கொண்டு, இருவருமாகக் கூடி வழிநடந்துபோய், எதிரே ஒரு வனத்தைக்கண்டு, சீடர் முகத்தை நோக்கி "இந்த வழியில் கள்ளர் பயமுண்டோ" என்று கேட்க, சீடர், "ஸ்வாமீ! திருடர்பயம் முன்பே நீங்கிவிட்டது" என்றார். குருநாதர் "இவன் இப்படிச்சொன்னதற்குக்காரணமென்ன?" என்று அதிசயத்தோடு ஆலோசித்து, தமது சோளிகையிற் கையிட்டுப்பார்த்துத் தங்கப்பாளத்தைக்காணாமல் கற்கள் நிறைந்திருப்பதைக்கண்டு, அவற்றை யெடுத்தெறிந்துவிட்டு, "கோரக்கா, என் பிரியநாயகியானவள், நமக்கு வழிச்செலவுக்குக் கொடுத்த தங்கப்பாளத்தை யெறிந்துவிட்டுச் சோளியில் கற்களை நிறைத்துவைத்தாய், நீ செய்தகாரியம் மிகவும் நன்றாயிருக்கின்றது, உலகத்தில், சீடர்கள் தமது ஆசாரியர்களுக்கு உடல், பொருள், ஆவி இம்மூன்றையுங் கொடுப்பார்கள்; அப்படியிருக்க நீ என் குழந்தை, பொன் எல்லாவற்றையும் நாசஞ்செய்தாய், ஆதலால், நீ எனக்கு நற்சீடனல்லை, நீ என்னைவிட்டுப் போ" என்று கடிந்துசொல்ல, சீடராகிய கோரக்கர், தாங்கள்போகும் வழியிலுள்ள மலையைப்பார்த்து, அதின்மேல் சிறுநீர்விட, அந்த மலைமுழுதும்பொன்னாய்விட்டது. அப்போதுகுருநாதரைப்பார்த்து, "தேவரீருக்கு வேண்டிய பொன்னை எடுத்துக்கொள்ளலாம்" என்று பொன்மலையைக் காட்ட, குருநாதர், "நான் மாயையால் அறிவழிந்தேன்" என்றுசொல்லி, மனந்தெளிந்து ஆராய்ந்து "கோரக்கா, தேவர்களுக்கு அமிர்தங்கொடுத்த திருமாலே நீ என்பதைத்தெரிந்துகொள்ளாமறபோனேன்" என்றுசொல்ல, கோரக்கரும் குருநாதரைநோக்கி,

"ஸ்வாமி! தேவரீர், சாக்ஷாத் சிவபெருமானேயல்லவோ இப்படி அவதரித்து அடியேன் மஹிமைபெற்று விளங்கும்பொருட்டு, ப்ரபஞ்ச மாயையில் கட்டுப்பட்டு உழலுவார்போல் நடிக்கிறீர்" என்று பல தோத்திரம் பண்ணிக்கொண்டாடி வணங்க, எல்லா உலகத்தாரும் வணங்கத்தகுந்தவராகிய சற்குருநாதர் நகைத்து, பொன்மலையை முன்போலக் கல்மலையாகச்செய்து, இருவரும் வந்து, புட்கரதீர்த்தத்தைக் கண்டார்கள். அவ்விடத்தில் கானேபாவுடனே ஜாலந்தரர் வந்து கண்டு, ஆலிங்கனஞ் செய்துகொண்ட பிறகு, இவர்களும் முகமன் வசனங்களைச்சொல்லி, ஆனந்தக்கடலில் ஆழ்ந்து ஸ்ரீபகவத் குணாநுபவஞ்செய்து சிலநாள் கழிந்தபிறகு, ஒருவரிடத்தில் ஒருவர் விடைபெற்றுக்கொண்டு தத்தம் இடங்களுக்குப் போய்விட்டார்கள். இப்படிப்பட்ட பெருஞ்சிறப்பமைந்த இவர்களைத் தியானிப்பவர்களும், இவர்களுடைய வைபவத்தைக் கேட்பவர்களும் எல்லாச்சித்திகளையும் பெற்று, மெய்ஞ்ஞானத்தையும் அடைந்து, நித்திய வாழ்வினராய் உயர்வற உயர்ந்த நிர்மலனாகிய பகவானுடைய ஸ்ரீ வைகுந்த பதவியையும் அடைவார்கள் என்று சிவபெருமான் உமாதேவியாருக்குச் சொல்லி, மேலே சாங்கதேவரது வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

கோபிசந்த்ராஜன் சரித்திரம் முற்றிற்று.

பதினேழாவது

சாங்கதேவர் சரித்திரம்.

ஒருநாள், ஞானதேவர், நிர்மலராகிய பகவத் சந்நிதி யடைந்து பகவானை வணங்கி, "ஸ்ரீ லக்ஷ்மீநாதனே, அடியேன் அளகாபுரிக்குப் போகிறேன், விடைகொடுத் தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்து விடைபெற்றுப் போனார். போனவர், சர்ப்பாபரணனாகிய சிவபெருமானென்று சொல்லத் தகுந்த சித்தேசுவரனிடத்தில் வர, திருவாழியை யுடையவராகிய திருமாலின் உருவத்தையே கொண்ட ஞானதேவர் எழுந்தருளினதை, சாங்கதேவர் அறிந்துகொள்ள, அதற்கு மேலே நடந்தசெய்தியைச் சொல்லுவோம்; எப்படியென்றால், பிரமதேவனுடைய ஒரு தினத்தின் முதற்சாமத்துக்குள்ளே பதினான்கு இந்திரர்கள் பிறந்து, மயக்கத்தோடு கூடிய கருமத்தின் வசப்பட்டவர்களாய், பயங்கரமாகிய சிறையில் முற்காலத்தில் அடைப்பட்டார்கள். அப்போது, நாரதமுனிவர் அவர்களுக் கெதிரே வர, அவர்கள்

அம்முனிவரை வந்தனை வழிபாடுகள் செய்து வணங்கித் தோத்திரம் பண்ணுதலும், முனிவரும் மனமகிழ்ச்சியோடு அவ்விடத்தில் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநஞ் செய்துகொண்டு எழுந்தருளி யிருக்க, மேலே சொல்லப்பட்ட பதினால்வரில் ஒருவராகிய சாங்கதேவர், நாரதமுனிவர் முகத்தைப் பார்த்து, "ஸ்வாமீ, இந்தச் சிறையினின்றும் நீங்கும்படி அடியேனுக்குக் கிருபை செய்யவேண்டும்" என்று வணங்க, நாரதமுனிவர் நோக்கி, "சாங்கதேவா, உன் எண்ணமானது விண்ணுலகத்தில் முடிவுபெறாது, மண்ணுலகத்தில், பண்டரிபுரத்தில், போய்ச்சேர்வாயானால் உன் தீவினைதீரும். அந்தப் பண்டரிபுரம் என்பது இவ்வுலகத்திலுள்ள ஒரு வைகுந்தமென்று சொல்லத்தகுந்தது. அவ்விடத்தில் ஸ்ரீகண்ணபிரானானவர், செங்கல்லின்மீது இடுப்பிற் கையை வைத்துக்கொண்டு, நின்ற திருக்கோலமாய்ப் புண்டலீகர்க்குச் சேவை சாதித்தருளின திவ்ய வேஷத்தைச் சாதுக்கள் அநேகர் வந்து தரிசித்து ஸ்ரீ ஹரிபஜனை செய்துகொண்டு தங்கியிருக்கிறதனாலே, நீ அந்த க்ஷேத்ரத்தை அடையவேண்டும்" என்று சொல்லக்கேட்டுச் சம்மதித்த சாங்கதேவர், "ஸ்வாமீ, துக்கரூபமாகிய இந்தச் சரீரத்தை விட்டு, அங்கே போகும்படியான உபாயமொன்றை அருள்செய்யவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, முனிவர் த்வாதசாக்ஷரி மந்த்ரத்தை உபதேசித்தருளினார். உபதேசம்பெற்ற சாங்கதேவர் தக்ஷணமே முன்னைய சரீரத்தைவிட்டு, கங்கைக் கரையில் உள்ள ஒரு விருத்த வேதியனிடத்தில் அவதரித்தார். அவதரித்தலும் அவரது சௌந்தரியாதிகளைக் கண்ட தாய்தந்தையர் அளவற்ற மகிழ்ச்சியோடும் அன்போடும் வளர்க்க வளர்ந்து, எட்டு வயது நிரம்பினவுடனே உபநயநம் செய்வித்தார்கள். பிறகு, அவர் எங்கே போகவேண்டுமென்று நினைத்தாலும் அவ்விடத்துக்குப் போகும்படியான கமந சக்தியையும், சொன்ன சொற்களெல்லாம் சொன்னவண்ணமாகவே பலிக்கும்படியான வல்லமையையும், சிறந்த அஷ்டமாசித்திகளையும், அறுபத்துநான்கு கலைஞானத் தேர்ச்சியையும், அஷ்டாங்கயோகப் பயிற்சியையும் பெற்று, ஆயுளை வளர்த்துக்கொண்டு வாழ்ந்திருந்தார். இப்படி ஆயிரத்து நானூறு வருடத்தளவும் இறவாமலும், முதுமையை யடையாமலும், பெரிதாகிய இந்த ப்ரபஞ்சத்தில் மிகுந்த ப்ரதாபசாலியாயிருந்தார். பிறகு கான தேசத்தில், ஒரு மடுவின் கரையில் உள்ள மடத்தில் வாசம் பண்ணுவோரா யிருந்தும், நாள்தோறும் கோதாவரி நதியில் வந்து மூழ்குவோரா யிருந்தார். இவர் ஆயிரத்துநானூறு சிடர்கள் சூழ்ந்து உப

சரிக்க, யோகப்பயிற்சியிற் சிறந்தவராகி, இவருக்கு நிகராவார் இவ்வுலகத்தில் ஒருவருமில்லை யென்னும்படி விளங்கினர். இப்படியிருக்க, ஒருநாள், "உன் ஆண்மையை அடக்குதற்குரிய தத்துவஞானியார் ஒருவர், அளகாபுரியில் வந்து தங்கியிருக்கிருர், அவரிடத்தில் போய் அவருடைய அருள் பெறுவாயாக" என்று ஒரு அசரீரி உண்டாயிற்று. அந்த அசரீரி வார்த்தையைக் கேட்ட சாங்கதேவர், இது மிகவும் ஆச்சரியமா யிருக்கிறதென்று நினைத்து, அந்த அசரீரியால் தெரிவிக்கப்பட்ட அவருக்கு, ஒரு கடிதத்தை முன்னே யெழுதித் தெரிந்துகொள்ளுவோமென்று நினைத்து, பிறகு எழுதாமலிருந்துவிட்டார். ஏனென்ருல், ஆசீர்வதித்து எழுதினுல் ஆசாரியருக்குத் தகாது, தேவரீர் என்று எழுதவேனென்ருல், நான் முதியவனுகையாலே அதுவும் தகாது என்று ஆலோசித்து, தம் சீடரில் ஒருவனை யழைத்து அவன் கையில் வெறுங் கடிதத்தைக் கொடுத்து "இதை அந்த ஞானதேவருக்குச் சேர்த்துவிடு" என்று அனுப்ப, அவன், நல்லதென்று கடிதத்தை வாங்கிக்கொண்டு ஆகாசமார்க்கமாகப் போய், பண்டரிபுரத்தில் சேர்ந்து, எப்பொழுதும் பண்டரிநாதனை ஸ்மரித்துக்கொண்டே யிருக்கிற ஞானதேவரைக் கண்டு கடிதத்தைக் கொடுக்குமுன்னே, ஞானதேவர், அந்தச் சீடனை நோக்கி, "அப்பா, இது சாங்கதேவர் கொடுத்த கடிதமல்லவா" என்று கேட்க, அவன் "ஆம்" என்று எதிரேவைத்தான். அந்தக் கடிதத்தை ஞானதேவர் உடைத்துப் பிரித்துப் பார்த்து, எழுதாமல் வெறுங் கடிதமாயிருக்கக்கண்டு, "நீர் வெறுங் கடிதம் அனுப்பினதை நோக்குமிடத்தில், ஆயிரத்து நானூறு வயதும் பயனில்லாமலே கழிந்து போயினவென்பதை அறிவித்தாற்போலக் காணப்படுகின்றது. இத்தனை வயதுகழிந்து, இன்னமும் உத்தமமாகிய ஞானநிலையையறிந்தாயில்லை" என்றும், "சுத்தசைதந்யஸ்வரூபமான பரம்பொருள் எங்கும் வ்யாபித்து விளங்கும், அதற்குப் பெருமை சிறுமைகளும், இளமை முதுமைகளும், மற்றுமுள்ள விகாரங்களும் இல்லை, அது மாயாகாரியமாகிய இந்தச் சரீரத்திலுள்ளது, அதை இனியாகிலும் அறிந்துகொள்வாயாக" என்றும் எழுதிக்கொடுத்தார். அதை வாங்கிக்கொண்ட சீடன் விரைந்து வந்து சாங்கதேவரிடத்தில் கொடுக்க, அவர் கடிதத்தைப் பிரித்துப் படித்துப்பார்த்து அதிலெழுதப்பட்டிருந்த செய்திகள் எல்லாவற்றையுமறிந்து "ஐயோ! நமது வாணுள் வீணுளாகக் கழிந்துபோயினவே, இந்தக் கடிதத்தை யெழுதி விடுத்த ஞானதேவரை இப்பொழுதே போய்த் தரிசிக்கவேண்டும்" என்று ஒரு

புலியின்மேல் ஏறிக்கொண்டு பாம்பு செலுத்த வந்தார். இவர் வருவதைச் சுவர்மீது உட்கார்ந்திருந்தவர் நோக்கி, சுவரைத் "தெருவிற் போகக்கடவை" என்றேவ, அந்தச்சுவரும் அப்படியே தெருவில் வரக்கண்ட சாங்கதேவர் விரைந்து கிட்டிவர, அவரையெதிர் கொள்ளும்பொருட்டு ஞானதேவர் வந்தார். உயிரில்லாததாகிய சுவர் மீதேறியிருந்தவரை, உயிருள்ளதாகிய புலிமீதேறி வந்தவர் கண்டு நாணி, புலியைவிட்டிறங்கி, அன்பு மிகுதியால் வணங்கி, "அடியேனுக்கு ஞானத்தை அருள்புரியவேண்டும்" என்று எதிரேநிற்க, இவர் "பண்டரிநாதனுக்கு அடிமையாகிய என்னை நீரே யாண்டருளவேண்டும்" என்று சொல்ல, ஆலநிழற் கீழே யெழுந்தருளியிருந்த தேசிகர் மூர்த்தியும் முந்தி வந்து, இருவரும் ஒரு மனமாகிக் கூடினபிறகு, ஞானதேவர் சாங்கரைவாழ்த்தி நல்லஞானோபதேசஞ்செய்தருளினர். செய்தருளின பிறகு, "இந்தஆலமரத்தினடியில் நின்றவர்கள் மோக்ஷத்தை யடைவார்கள்" என்று சொல்லி, சாங்கரை வீட்டிற்குப்போக விடைகொடுத்தனுப்ப, அவர் போனபோது, ஞானசிரியர் தங்கை நிருவாணமாய் மங்கள நீராடிக்கொண்டிருக்கக் கண்ட சாங்கதேவர் ஒளித்துக்கொண்டார். அதை யறிந்த முக்தாபாயி, "மெய்ஞ்ஞான ரூபமாகிய பரம்பொருளை யடைந்தும், சுத்தமாகிய நல்லறிவு உனக்கு உதிக்கவில்லையே" என்று சொல்ல, சாங்கர் கேட்டு, "உமது அறிவு இப்படி யிருக்குமென்று நானறிந்திலேன், அஜ்ஞானாந்தகாரம் நீங்கப் பெற்ற தாயே" என்று சொல்லிக்கொண்டுவந்து நமஸ்கரிக்க, ஞானசிரியர், சாங்கரை நன்ருக ஆசீர்வதித்தார். சாங்கதேவரும் அவர் சொன்னபடியே, குற்றமற்ற ஞானம் வளர்ந்தோங்க, நீங்குதற் கருமையாகிய தேஹாபிமானமும் நீங்கப்பெற்று, ஸ்ரீஹரிநாமஸ்மரணை செய்ய விரும்பினர். அன்றிரவில் ஞானதேவர் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்யத்தொடங்கி அந்தக் காலக்ஷேப கோஷ்டியில் "கொடிதாகிய இந்தக் கலியுகத்தில், எல்லார்க்கும் ஸ்ரீஹரிநாம ஸ்மரணையை யொழிய வேறொரு தவமில்லை யென்று ஸ்ரீ பாகவதத்தில் சுகப்ரஹ்ம ரிஷியானவர் சொல்லியிருக்கிருர். ஆகையால் ஸ்ரீஹரியின் திருநாமங்களை உச்சரிப்பவர்களுக்கு மோக்ஷசித்தியுண்டாகும். ஸ்ரீஹரிநாமத்தை உச்சரிப்பவருடைய ஸ்ரீ பாதரேணுவின் மஹிமையால் மூவுலகும் குற்றம் நீங்கி உஜ்ஜீவிக்கும். இந்த லக்ஷ்மீநாதனுடைய திருநாம மஹிமையை நாம் சொல்லி முடியுமோ" என்று சொல்லி, உதயகாலத்தில் விட்டலப்பெருமானுக்கு ஹாரதிசெய்து, வந்தவர்களுக்கெல்லாம் அவரவர்க ளிஷ்டப்பட்ட பிரசாதங்களையும் அருள்

செய்து, சாங்கதேவரை நோக்கி, "பண்டரிபுரத்தில்போய் மாதவனைத் தரிசியும்"என்றார்;கேட்ட சாங்கதேவர் "நன்று நன்று"என்று சொல்லிப்போய்த் தரிசித்தவர்களுடைய பாவங்களை யெல்லாம் நீக்கி அவர்களைப் பரிசுத்தர்களாகச் செய்கிற பண்டரிபுரத்தில் வாழும் வாழ்வு மிகவும் சிறந்ததென்று, நால்வருக்கும் வந்தனம்சொல்லி விடைபெற்று, தாளம், வீணை, மத்தளம் முதலான எல்லா வாத்யங்களும் முழங்க, ஸ்ரீஹரிநாமஸ்மரணை எல்லார்வாயிலும் நிறைந்திருக்க, பாகவதகோஷ்டியோடு கூடி, ஆநந்தாவேசராய், பண்டரிபுரத்தைக் குறித்துப்போய், கோபுரத்தைப் பார்த்தமாத்திரத்தில், நமஸ்கரித்து, ஒருவருக்கொருவர், "இதினும் சிறந்த நகரம் ஒன்றுமில்லை" என்று பேசிக்கொண்டார்கள். இந்தப்பிரகாரமாக, நகரிலேசென்று அங்குள்ள சாதுக்களைக்கண்டு சேவித்து, சரீரநடுக்கத்தோடு தழுவிக்கொண்டு, சந்த்ரபாகாநதியை யடைந்து அதில் நீராடி, புண்டலீகரைச் சேர்ந்து பூசித்து, நகரத்தை வலம் வந்து கைகுவித்துக்கொண்டே கோபுரவாசலில் விழுந்து கும்பிட்டு, கருட கம்பத்தடியில் வீழ்ந்து வணங்கி, பாண்டரங்கப்பெருமானைக்கண்டு வணங்கும்பொருட்டுக் கோயிலுக்குள்ளேபோய், பகவானைத் தழுவிக் கும்பிட்டு, தாயினும் மிகுந்த அன்புள்ளவராகிய பெருமானுடைய நிஜரூபத்தை நேரகக் கண்டு, வாயாரத் துதித்து, கண்ணீர் ததும்ப, வேதங்களாலும் அளவிடப்படாத பகவத்விஷயத்தில் பற்பல தோத்திரங்கள் செய்து பிறகு திருமகள், சத்தியபாமை, ஆஞ்சநேயர் என்னும் இவர்களுடைய கோயில்களிலும் போய்க் கண்டு சேவித்துத் தோத்திரஞ் செய்து, சபாமண்டப மடைந்து அநேக கீர்த்தனங்களைப் பாடி, சந்த்ரபாகா நதிக்கரையில், ஒரு புறத்தில், தபோசாலையொன் றேற்படுத்திக்கொண்டு, அதில் தவம்செய்துகொண்டிருந்தார். அப்படி யிருந்து பிறகு விட்டலப்பெருமானை நோக்கவேண்டுமென்கிற பேரன்பால் ஆஹார நித்திரைகளை யொழித்து, மூன்றுநாள் வரைக்கும் திருத்துழாய் மாலையை யணிந்த பண்டரிநாதனை மறவாமலிருக்க, இவரது திடவைராக்யத்தைப் பெருமான் அறிந்து, நடுராத்திரியில் தமது நிஜரூபத்தோடு எழுந்தருளுதலும், சாங்கதேவர் பேரன்போடு எழுந்து வணங்கி வாழ்த்திப் பற்பலதோத்திரங்களைச் செய்தார்; அப்படிச்செய்து நின்றவுடனே, ஸ்ரீகண்ணபிரான், சாங்கதேவர் கையைப் பிடித்துக்கொண்டு நதிக்குள்ளே போயினர். அப்போது அவ்விடத்தில் ஒரு மணிமயமான ஒரு மண்டபத்தையும், அதில்

அகிலகாரணனுகிய பகவான் ஸ்ரீபூமீ நீளாசமேதரா யெழுந்தருளி யிருப்பதையும், நித்யமுக்தர்கள் கோஷ்டியாய்ச் சூழ்ந்துநின்று வாழ்த்துவதையும் கண்டு, ஆநந்தபரித ஹ்ருதயராய், ஆடிப்பாடிப் பரவசங்கொண்டு, கண்களில் ஆநந்தபாஷ்பங்கள் சிந்தநிற்கிற சாங்க தேவரைப் பகவானுனவர் நோக்கி, "நான் இந்தச் செங்கலின்மே லிருந்துகொண்டு அவரவர் வேண்டிய வரங்களைக் கொடுத்து வருகி றேன். அன்றியும் தீர்த்தரூபமாகவும், க்ஷேத்ரரூபமாகவும் இருக்கி றேன். உன் நல்லொழுக்கத்தையும் பக்தியையும் கண்டுமகிழ்ந்தேன். உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்" என்று நியமிக்க, சாங்கதேவர், பகவானை நோக்கி, "ஸ்வாமீ! எக்காலத்திலும் உமது திருவடியைத் தியானித்துக்கொண்டிருக்கும்படி அடியேனுக்குக் கிரு பை செய்வதே எனக்குச் சிறந்த வரத்தைத் தேவரீர் கொடுப்பதா கும்; அதுவேயன்றி வேறு வரத்தை அடியேன் விரும்பவில்லை" என் ருர்; பகவானும் "அப்படியே யாகட்டும்" என்று அருளிச்செய்த வுடனே, கோயிலுக்குள்ளே போய்ப் பாண்டுரங்கனைத் தரிசித்து, அதன்பிறகு திருநாரணபுரம் வந்து சேர்ந்து அங்கு வாசம்பண் ணிக்கொண்டிருக்குங் காலத்தில் ஒருநாள், இவருடைய தியானத்தில் செங்கலின்மேல்விளங்குகின்ற ஸ்ரீபண்டரிநாதர் தோன்றினர். சாங்க தேவர், பகவானை நோக்கி, வணங்கி வாழ்த்தி நிற்க, பகவானும் இவரை நோக்கி, "நீ போய்க் கோதாவரி நதிக்கரை யடைந்து கேசவ மூர்த்திரூபமாய் விளங்குவதாகிய ஸ்ரீ சாளக்கிராமத்தை வைத்துப் பூசனைசெய்து வாழ்வாயாக" என்று, சாளக்கிராமத்தையும் கொடு த்து மறைந்துபோக, அதைப்பெற்றுக்கொண்ட சாங்கதேவர், கோ தாவரிக்கரையை யடைந்து அவ்விடத்திலுள்ள புண்ணிய தம்பம் என்கிற வூரில் எல்லாரும் வந்து சேரும்படியான மடமொன்றை யுண்டாக்கி, அதில் சாளக்கிராமப் பிரதிஷ்டை செய்து, பூஜித்துக் கொண்டு, தமது சிஷ்யர்களுடனே கூடி வாழ்ந்துகொண்டிருந்தார். அப் படிப் பகவத்தியாநபரராய் அவ்விடத்திலிருக்கும்போது, கல்யாண புரம் என்னும் ஊரில் வாழ்ந்திருந்த செல்வத்திற் சிறந்த ப்ராஹ் மணன் ஒருவன் இருந்தான்; அவன் பேர் சங்கரன்; அவன் தனது ஆயுள் முடிவுபெற்றமையால் மரணமடைந்தான்; விதவையாகிய அவன் மனைவி ருதுவானுள். அதனைக் கண்டு அந்த வேதியன் தாயா னவள் அழுது சோர்ந்து தங்களிடத்திலிருக்கிற தனத்தை யெல் லாம் தாநதர்மங்களில் செலவழித்து, புதல்வனுடைய எலும்பை

யெடுத்துக்கொண்டுபோய், கங்கா நதியில்விட நினைத்து, மருமக ளோடு கூடிக் காசியாத்திரை போகிறவள், சாங்கதேவர் வாசஞ்செய் கிற வூரில் வந்து தங்கினாள். வந்து தங்கினவள், சாங்கதேவருடைய மஹிமையைக் கேட்டு, அவரைச் சேவிக்கவேண்டுமென்று மனதில் நினைத்து, மருமகளும் தானுமாகச் சென்று, தான் முந்தி வணங்க, பிறகு மருமகளும் வணங்கிநின்றாள். அப்போது சாங்கதேவர் அவளை நோக்கி, "உனக்கு நற்புதல்வன் உண்டாவான்" என்று ஆசீர்வதித் தார்; அதைக்கேட்ட பெரிய சோனக்காள், "ஸ்வாமீ! விதவைக்குப் பிள்ளை யுண்டாவதும் உண்டோ? இவளை மணஞ்செய்துகொண்ட என் புதல்வன் இறந்துபோனான்; அவன் எலும்பைக் காசிக்ஷேத்திர த்திற் கொண்டுபோய்க் கங்காநதியில் விடவேண்டுமென்றெண்ணி நாங்களிருவரும் போகிறோம்; வழியில் தேவரீரைக் கண்டு சேவிக்க, குழந்தையுண்டாக ஆசீர்வதித்தருளினீர்; ஆனால் தேவரீருடைய ஆசீர்வாதம் பொய்த்துப்போகுமோ" என்று சொல்லி அழுதுகொ ண்டு நின்றாள். நின்றவளைச் சாங்கதேவர் கடாக்ஷித்து, என்சொல் பொய்க்காது, உன் மருமகளுக்கு நற்புதல்வனுண்டாவான், அவனால் உங்கள் குலமுழுதும் பிரகாசமடையும்" என்று சொல்லி, அவர்கள் கொண்டுவந்த எலும்பைத் தமக்கு எதிரே வைக்கச்சொல்லி, அதின் மீது தீர்த்தத்தை ப்ரோக்ஷித்து, அந்த எலும்பிற் பட்ட தீர்த்தத்தை, விதவையைப் பருகச்செய்தார். அந்தத் தீர்த்தமே அவள் வயிற்றில் கருவாயிருந்து பத்துமாத மானவுடனே குழந்தையைப் பெற்றாள். அந்தக் குழந்தைக்குப் பன்னிரண்டு நாள் கழிந்தவுடனே, சாங்க தேவர் பரிசுத்த ஸ்நாநம் செய்வித்து விட்டலன் என்று பெயரிட்டு ஆசீர்வதித்தருளினார். இதைக்கண்ட அந்த வூரார் இகழ்வாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்கக் குழந்தைக்கு ஐந்து வயது ஆனவுடனே, உபநயநம் செய்ய நிச்சயித்துப் பாண்டுரங்கன் சந்நிதிக்கு அழைத்துக்கொண்டுபோய்ச் சேவிக்கப் பண்ணின பிறகு, சுபமுகூர்த்தம் ஆராய்ந்து பார்த்து, வேதியரை யழைக்க அவர்கள் அந்தக் குழந்தையின் பூர்வோத்தரமறிந்து, "நாங்கள் வரமாட்டோ ம்" என்றார்கள். அவர்களைச் சாங்கதேவர் நோக்கி, "இந்தக் குழந்தை ஸ்ரீகண்ணபிரானுடைய திருவருளாலே பிறந்தவனாதலால் இதைக் குறித்து நீங்கள் சங்கிக்கலாகாது, அவசியம் நீங்கள் போய் உபநய னம் முடித்து வைக்கவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, அவ்வேதியர், சாங்கதேவரை நோக்கி, "இந்தக் குழந்தை அந்தக் கண்ணபிரானது

திருவருளால் பிறந்தது மெய்யானால், அந்தக் கண்ணபிரானும் இந்த உபநயனத்தைக் காணவருவாரோ" என்று கேட்க, சாங்க தேவர், வேதியரை நோக்கி, "பகவான் அவசியம் வருவார்" என்று சொல்லி, சந்த்ரபாகா நதிக்கரையில் போய், உணவு முதலியவற்றை யமைத்து வைத்துக்கொண்டு வேதியர்களை யழைக்க, அவர்கள் "கண்ணபிரான் வந்தாரோ" என்றார்கள். சாங்கதேவர், "ஆம், பகவான் வந்தார்" என்றார். இதைக்கேட்ட வேதியர்கள் இது உண்மைதானோ வென் றறியும் பொருட்டுக் கோயிலுக்குள்ளே போய்ப் பார்க்க, பகவான் இல்லாமையால் மிகவும் ஆச்சரிய மடைந்து, நதிக்கரையில் வந்து பார்த்து, அவ்விடத்தில் பகவான் வந்திருக்கக் கண்டார்கள். கண்டு பேரானந்தத்தை யடைந்து, சாங்கதேவரைப் புகழ்ந்து, உபநயன விவாஹத்தை முடித்து, போஜநம்செய்து போய்விட்டார்கள். சாங்கதேவர், பெரிய சோனக்காள், அவள் மருமகள், குழந்தை என்கிற மூவரோடு கோயிலுக்குப்போய்ப் பகவானைத் தரிசித்து விடைபெற்றுப்போய்த் தம்முடைய ஊரை யடைந்து, சுகமாய் வாழ்ந்திருக்குங் காலத்தில், ஊரிலுள்ளார் யாவரும் இவருடைய ப்ரபாவத்தைக் கேட்டு வந்து வணங்கினார்கள். பிறகு அந்தப் புதல்வனுக்கு மணமுடித்து "வருடந்தோறும் ஆடிமாசம், கார்த்திகை மாசம் இவ்விரண்டு மாசங்களிலும் பண்டரிபுரத்துக்குப் போய், குடக்கூத்தனாகிய ஸ்ரீ கண்ணபிரானைச் சேவித்து வா" என்று நியமித்து, தமது சிஷரோடு துவாரகைக்குப் போய்விட்டார்.

அப்படிப் போகும் வழியிலுள்ள தாரூரில் வாழ்கின்ற யாதவ பண்டிதர், இவர் வருகிறாரென்று கேள்விப்பட்டு எதிர்கொண்டுவந்து திருவடிபணிந்து, இவரது அருளைப்பெற்று, வைராக்யத்தையும் ஞானத்தையும் அடைந்து, ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தநஞ் செய்துகொண்டு இவருடன்போக முயன்றார். இப்படி இவர் போவதை யறிந்த இவர் மனைவியானவள், எழுமாச கர்ப்பவதியா யிருந்தும், கணவர் வரவேண்டாமென்று சொல்லியும், உறவினர்போகவேண்டாமென்று தடைசெய்தும், கணவரது பிரிவைச் சகியாதவளாய், அவர் முன்னேபோக, இவளும் பின்தொடர்ந்து அவரறியாமல் போய்க்கொண்டிருக்கையில், மாதங்கள் நிறைந்ததனால் நடக்கச் சக்தியற்றவளாய் அயர்ந்து, சந்திரபாகாநதிக்கரையில் உள்ள ப்ரஹ்மாரண்யத்தில் கர்ப்பவேதனை மிகுந்து உளைந்து, "ஐயோ, பேறுகாலத்தில் என் கணவர் அருகிலில்லாமல் சாங்கதேவரைப் பின்தொடர்ந்து போய்விட்

டாரே, இவ்விடத்தில் எனக்கு ஒரு உற்ற துணை யாவாரில்லையே, என் கணவருக்குக் குருவாகிய சாங்கதேவரே துணையாய்வந்து என் துயரை நீக்கவேண்டும்" என்று தோத்திரஞ் செய்து அழுதாள். அந்தக்ஷணத்தில், துவாரகையில் எழுந்தருளியிருக்கிற கண்ணபிரான் ஒரு பெண்ணுருக்கொண்டு இவளுக் கெதிரேவர, இவள் "அம்மா! நீயார், எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்க, பெண்ணுருக்கொண்டு வந்த சக்ரபாணியார், "தாயே! உன் கர்ப்பவேதனையைத் தீர்த்து வரும்படி சாங்கதேவர் என்னை யனுப்பினார், என் பேர் க்ருஷ்ணபாய்" என்று சொல்லி, அந்த அரண்யத்தில், ஒரு ஊரையுண்டாக்கி, அந்த வூரிலுள்ள ஒரு வீட்டுக்குள்ளே யழைத்துவந்து, உபசாரஞ் செய்து, எளிதாகக் குழந்தை பெறும்படி செய்து, தாய்க்கும் குழந்தைக்கும் ஒரு துன்பமுமில்லாமல் உபசாரஞ் செய்துகொண்டு ஒரு மாத வரைக்கும் இருந்தார். இப்படி யிருக்கையில், முன்னேபோன சாங்கதேவர் துவாரகையை யடைந்து, கோமதி நதியில் மூழ்கி, ஸ்ரீ கண்ணபிரானுடைய சந்நிதிக்குப் போய், கைகூப்பி நமஸ்கரித்து, பிறகு சாஷ்டாங்கமாக நிலத்தில் வீழ்ந்து வணங்கி, அந்தக் கண்ணபிரானே தமது மனத்தில் சாக்ஷாத்கரித்திருந்து அறிவிக்க, அவன் செய்கையை யறிந்துகொண்டு, "என் பொருட்டாகப் பகவானுக்குப் பிள்ளைபெறுவிக்குந் தொழில் வாய்த்ததே" என்று துக்கித்து, பிள்ளை பெறுவித்த வீட்டுக்கு விரைந்துபோய், அந்த வீட்டு வாசற் குப்பையை விளக்கிக்கொண்டிருந்த மாதவனாகிய மாதைக் கண்டார். கண்டவுடனே அவள் கும்பிட்டாள். அவளை மாதவனென் றறியாமல், வீட்டுக்குள்ளேபோய், மனைவியை நோக்கி, "உனக்கு இந்த ஆபத் காலத்தில்வந்து உதவிசெய்த மாது எங்கே!" என்று கேட்க, அவளும், "வெளியில் வாசல் பெருக்கிக்கொண் டிருக்கிறவள்தான்" என்றுசொல்ல, உடனே வெளியே வந்துபார்த்து அங்கே யிருந்தவளைக் காணாமல் திகைத்து நின்றார். அப்போது மனைவியானவள், குழந்தையைக் கொண்டுவந்து கணவருடைய திருவடியில்போட்டு வணங்கி நின்று, முன்னே நடந்த விருத்தாந்த முழுதும் சொல்லி, "நீர் அனுப்பின க்ருஷ்ணபாய்" வந்து எனக்குச் சகலவித வுபசாரங்களும் செய்தாள்" என்று சொல்ல, சாங்கதேவர் கேட்டு, ஸ்ரீ கண்ணபிரானே யெழுந்தருளி உனக்கு உதவிசெய்தார். உன் புண்ணியமே புண்ணியம்" என்று புகழ்ந்து, பிள்ளையையும் தாயையும் அழைத்துக்கொண்டு, வழிமுழுதும் கண்ணபிரானையே நினைத்துக்

கொண்டுவந்து, துவாரகையைச் சேர்ந்து, கோயிலிற்போய், ஜநார்த்தநனைச் சேவித்து, "அரவிந்தலோசநா, நிகதயாநிதீ, ஸ்ரீலக்ஷ்மீநாதா, உன் அகடிதகடநா சாமர்த்தியங்களை மதித்தறிய வல்லவர்யார்" என்று தோத்திரம் செய்து, யாதவபண்டிதரிடத்தில் தாயையும் பிள்ளையையும் ஒப்பித்து, "நீர் இவளிடத்தில் மிக்க அன்புடையவராய் வாழ்வீர்; ஹரிபஜனைசெய்துகொண்டு, உன் மனைவி மக்கள் முதலிய யாவரும் ஸ்ரீ ஹரிபக்தி யுள்ளவர்களாய்த் தொண்டுசெய்துகொண்டிருப்பார்கள்" என்று ஆசீர்வதித்து ஊருக்கு அனுப்பிவிட்டார்.

அதன்பிறகு சாங்கதேவர் நான்கு மாதகாலம் அங்கே தங்கி, ஸ்ரீ லக்ஷ்மீநாதனாகிய பகவானுடைய திருவடியை வணங்கி, சீடர்களுடனே அவ்விடத்திலிருந்து புறப்பட்டு, முன்னேயிருந்த இடத்திற்குவந்து வாழ்ந்திருந்தார். அப்படி யிருக்கும்போது, பேதரி நகரத்தை யாள்கின்ற துருக்க அரசனால் சிவாலயங்கள் விஷ்ணு ஆலயங்கள் வேதியர் முதலானவர்கள் படுந்துன்பத்தை விட்டலப்பெருமான் அறிந்து இரக்கங்கொண்டு, சாங்கதேவரை நோக்கி, "நீ பேதரி நகரத்துக்குப்போ" என்று சொல்லி விடைகொடுத்து அனுப்ப, அப்படியே சாங்கதேவரும் தமது சீடர்களோடு ஹரிநாமஸங்கீர்த்தநஞ் செய்துகொண்டு, பேதரி நகரத்துக்குப் போகும்போது, வழியில் ஜங்கமர் தலைவனாகியும், குருவாகியும் இருக்கிற மல்லிகார்ஜுநன், தன் குருவருளால் சில மந்திரங்களைக் கற்றிருப்பவன், இவன் ஒரு ஆசநம் பெற்று அதில் வீற்றிருப்பான், தன்னிடத்திற்கு வருவோரை அந்த ஆசநத்திலிருத்தி, அதில் அவர்கள் இருந்தபோது அந்த ஆசநத்தின் மகிமையால் அவர்கள் தலைகீழாய் விழுவதைப் பார்த்து நகைத்து அவமாநஞ் செய்வான். தன் சீடரோடு கூடிக்கொண்டு இப்படிச் செய்பவனாகிய அந்த மல்லிகார்ஜுநன் இந்தச்சாங்கதேவருடைய பெருமையை யறிந்து, மனம் பொறுக்காதவனாகி, தன்னிடத்தி லிருக்கிற நாய்க்கு இவர் பெயரை வைத்தான். அவனுடைய தீய செய்கைகளை இவர் அறிந்து அவனுடைய துராஹங்காரத்தை யடக்கவேண்டுமென்றெண்ணி, அவனது மடத்தில் நுழையவே, இதைக்கண்ட அந்த மல்லிகார்ஜுநன் எதிர்கொண்டுவந்து, இவரை ஆசநத்தி லிருக்கும்படி ப்ரார்த்தித்தான். அந்த ஆசநத்தின் செய்கையை இவர் அறிந்துகொண்டு அதை உற்றுப்பார்த்தவுடனே, அந்த ஆசநம் எரிந்து நீறாய்விட்டது. இந்த அற்புதத்தை அந்தக்

கொடியோன் கண்டு மதிமயங்கி, வாய்பேசாமல், அச்சத்தோடிரு ந்து, சற்றுநேரம் கழித்து, இந்தச் சாங்கதேவரை நோக்கி, "ஸ்வாமீ, இந்த ஆசநத்தால் மிகுந்த மகிமையையடைந்த நான் தேவரீருடைய பெருமையை அறியாமல் செய்த பிழையைப் பொறுத்தாண்டருள வேண்டும்" என்று திருவடியில் வீழ்ந்துவணங்கினன். அவனுடைய சீடர்கள், ஆசநம் எரிந்து நீறுனதையும், தமது குருவாகிய மல்லிகார் ஜுநன் வணங்குவதையும் பார்த்து, "இவர் யாரோ மஹாத்மாவா யிருக்கிறார், நம்முடைய குருவானவர் இவர் பெயரைத்தமது நாய்க்கு வைத்திருப்பதை இவர் அறிந்தால், என்ன அநர்த்தம் விளையுமோ" என்று அஞ்சி, அந்தநாயை ஒருசிறையில் அடைத்துவைத்துவிட்டு, ஐஞ்ஞூறு பேர்களும் அறுசுவையோடு கூடின அமுது ஆயத்தப்படு த்தி, உண்ணத் தொடங்கும்போது சாங்கதேவரைத் துதிக்காமல், தாம் பூண்டிருக்கிற லிங்கங்களை ஆராதிக்க நினைத்து, அவைகளைக் கட்டியிருந்ததுணிகளை அவிழ்த்துப்பார்த்து, எல்லாரிடத்திலும் லிங் கங்கள் இல்லாமலிருக்கக்கண்டு, சாங்கதேவரைத் துதிக்காமல் நாம் உண்ணத் தொடங்கினதனுல் இந்த ஆபத்து நேரிட்டதென்றறிந்து, அவரை வணங்கித் தோத்திரம்பண்ணி, "எங்கள் குற்றத்தைப் பொ றுத்து ரக்ஷிக்கவேண்டும், எம்மிடத்தில் முன்போலச் சிற்பரக் குறி யாகிய லிங்கங்கள் வரும்படி செய்யவேண்டும்" என்று ப்ரார்த்தித் தார்கள். அப்போது சாங்கதேவர் அவர்களை நோக்கி, "நீங்கள் உங் களையடுத்திருந்த நாயைப்பட்டினியாயிறக்கும்படி சிறையிலடைத்து வைத்துவிட்டு, உண்ணத் தொடங்கினீர்கள், அந்த நாய் தன் பசி பொறுக்கமாட்டாமல் உங்களுடைய லிங்கங்களை விழுங்கிவிட்டது" என்றூர். அதைக்கேட்ட ஜங்கமர், "நாய், லிங்கங்களை விழுங்குமோ, இது என்ன அதிசயமா யிருக்கின்றது, அப்படி அந்த நாய் விழுங் கினது உண்மையானுல், அதின் வாயிலிருந்து அந்த லிங்கங்கள் வெளிப்படும்படி செய்யவேண்டும்" என்று வணங்க, சாங்கதேவர் அந்த நாயை வெளியிலழைத்து, அதை நோக்கி, "நீ இரையாக விழுங்கின லிங்கங்களைக் கக்குவாயாக" என்று நியமிக்க, அப்படியே அது கக்கினதைக் கண்ட ஜங்கமர்கள் மிகவும் ஆச்சரியமும் அச்ச முங்கொண்டு, சாங்கதேவருடைய திருவடியில் வீழ்ந்து வணங்கி, "எம்முடைய தீக்குணங்களை யொழித்து உம்மைச் சரணமடையும் படி செய்தீர், உமது பெருமையைச் சொல்லவல்லவர் யாவர்? எங் களைக் கடைத்தேற்றும்பொருட்டு ஸ்ரீபகவானே இப்படி யெழுந்தரு

ளினதாகப் பாவிக்கிறோம்" என்று புகழ்ந்துரைக்க, சாங்கதேவர், அவர்களை நோக்கி, "நீங்கள் முன்போல இனி யாதொரு தீமையுஞ் செய்யாமல் ஸ்ரீ ஹரிபக்தி செய்து, அடியாரைப் பூஜித்துச் சுகமாய் வாழ்வீராக" என்று ஆசிர்வதித்து, பேதரி நகரத்தை யடைந்தார். அடைந்து நீராடி, ஸ்ரீ ஹரிபூஜையும் செய்து, ஒரு ஏகாந்தமான இடத்திலிருந்து ஸ்ரீ ஹரி நாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருக்குஞ் சமயத்தில், அந்தப் பேதரி நகரத்தை யாளுகின்ற துருக்க அரசனால் ஆதரிக்கப்படுவோனாகிய ஒரு வேதியன், ஸ்ரீ ஹரி பக்தியிற் சிறந்தவனாதலால், இவர் ஹரிநாமசங்கீர்த்தநம் செய்வதைக் கேட்டு மிகுந்த அன்போடு வந்து வணங்கி, "எங்களை யாட்கொள்ள எழுந்தருளின ஸ்வாமீ, இந்நகர்க் கரசனாகிய துருக்கன் பரமதுஷ்டன், வேதியர் முதலானவர்களுக்குத் துன்பத்தைச் செய்பவன், ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தநஞ் செய்பவர்களைக் கண்டால் அவர்களுக்கு மிகுதியாகிய துன்பத்தைச் செய்வான், இப்போது தேவரீர் எழுந்தருளினதை அறிந்தால் அவசியம் வந்து தீமை செய்வான், ஆனால் அவன் மனைவியானவள் பாம்புகடித் திறந்துபோனாள், ஆகையால் வரமாட்டான், ஆனாலும் தேவரீர் இங்கே தங்கியிருப்பது தகாது" என்று சொல்ல, சாங்கதேவர் அவ்வேதியனை நோக்கி, இரக்கத்தோடு, "ஓ வேதியரே, அவன் மனைவியை எழுப்பித்தருகிறேன், இந்தச் செய்தியை அரசனுக்குத் தெரிவிக்கக்கடவீர்" என்று சொன்னவுடனே, வேதியன் அரசனிடத்துக்கு விரைந்துபோய்ச் சொல்ல, அரசன், "அப்படி எழுப்புவது உண்மையானால் அவரை யிங்கே யழைத்துவாரும்" என்று சொல்ல, வேதியன்வந்து சாங்கதேவருக்கு அறிவிக்கவே, இவர் தமது சீடரோடு ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தநம் செய்துகொண்டு எழுந்தருளினார். இவர் எழுந்தருளுவதைக் கேட்ட அரசன் எதிர்கொண்டு வந்துவணங்கி அழைத்துப்போய், ஒரு ஆசநம் தந்து, தோத்திரம் பண்ணிநின்று, "ஸ்வாமீ, என் மனைவியானவள் பாம்புகடித் திறந்துபோனாள், அவளைப் பிழைப்பிக்கும்பொருட்டு மஹா சமர்த்தர்களாகிய விஷவைத்தியர் மாந்திரிகர் முதலானோர்களைக்கொண்டு செய்யவேண்டிய உபாயங்களெல்லாம் செய்தும், அவள் பிழைக்கவில்லை, அவள் மரணமடைந்து நாலு நாளானதனால், இன்று வயிற்றைக் கீறி மணப்பொடியை நிறைத்து வைத்தேன், நாளைக்கு மசிதில் கொண்டுபோய் வைக்க நினைக்கிறேன், இந்தச் சமயத்தில் தேவரீர் எழுந்தருளினீர், நீர் இவளைப் பிழைக்

கச் செய்தீரானால், உமக்கு நிகரானவர் இவ்வுலகத்தில் ஒருவருமில்லை'' என்றுசொல்ல, சாங்கதேவர், ஒரு துளசிதளத்தை யெடுத்து அரசன்கையிற் கொடுத்து, “இதை அந்தப் பிணத்தின்மேல்வை'' என்று நியமிக்க, அப்படியே அரசனும் செய்ய, உடனே அவள் பிழைத்தெழுந்தாள். எழுந்து மிகவும் ஆரவாரம் செய்தலைக்கண்ட அரசன், “இது என்ன, பிழைத்தெழுந்தும் இது ஒரு துன்பம் நேரிட்டிருக்கிறதே'' என்று வெளியே வந்து சாங்கதேவரிடத்திற் சொல்ல, அவர், “வேந்தனே! நீ அஞ்சவேண்டாம், போய் அவளுக்கு என்ன வேண்டுமென்று கேட்பாயானால், அவள் கருத்து வெளியாகும்'' என்று சொல்ல, அரசனும் அப்படியே போய்க்கேட்க, அவள், “ஓ ப்ராணநாதா! என்னைப் பிழைப்பித்தவரிடத்தில் நானும் நீயுமாகப்போய், அவரைச் சரணாகதி செய்துநின்று, இன்னும் அவர் நியமிக்கிற நியமநப்படியே நடக்கவேண்டும், இப்படிச் செய்யாவிட்டால் நான் பிழைக்கமாட்டேன்'' என்றுசொல்ல, அரசன், “அப்படியே செய்வோம்''என்று இருவரும்போய்ச் சாங்கதேவரைப் பணிந்து நின்றார்கள். அப்போது சாங்கதேவரானவர், அரசனை நோக்கி, “உன்னாலும் உன்னை யடுத்தோராலும், ஊரிலுள்ள பசுக்கள், வேதியர், சிவாலய விஷ்ணு ஆலயங்கள் என்பவைகளுக்கு ஒரு கெடுதியும் நேரிடாமல் நீதியோடிருந்து அரசு செலுத்துவது மல்லாமல், ஹரிதாசரை ஆராதித்துச் சுகஜீவியாய் வாழக்கடவாய்'' என்று ஆசீர்வதிக்க, அரசன் அந்தக் கட்டளையைச் சிரசாவஹித்துத் தன் மந்திரிக்குச் சொல்லி அப்படியே நடத்தும்படி கட்டளையிட்டான். சாங்கதேவரும் அந்தத் துருக்கவேந்தனைக் கர்வபங்கம் செய்து திருத்தியாட்கொண்ட பிறகு, தமது சீடரோடுகூடிப் பண்டரிபுரத்துக்கு வந்து, விட்டலப்பெருமானைச் சேவித்து, “ஓ பகவானே! அடியேன் சமாதியடைய விரும்பினேன், எந்த இடம் அதற்கிசைவானதோ, அதைத் தேவரீர் நியமிக்கவேண்டும்'' என்று விண்ணப்பஞ்செய்ய, பாண்டுரங்கப் பெருமானானவர், “சாங்கதேவா! நீ இப்போது தங்கியிருக்கிற புண்ணிய ஸ்தம்பத்தி னிடத்திலேயே சமாதியடையக்கடவாய்'' என்று அருளிச்செய்தார். “அன்றியும் ஆஷாட சுத்தத்தில் ஏகாதசிகள்தோறும் நான் வருகிறேன்'' என்று வரமும் விடையுங் கொடுத்துநிற்க, சாங்கதேவரும் எம்பெருமானையும் எம்பெருமாட்டியையும் முறையே வணங்கிப் புண்டலிகரையும் வணங்கி, ஆநந்தக் கண்ணீரோடு அந்தவூரை வலம்வந்து, புண்ணிய ஸ்தம்பத்தையடைந்து, மௌநநிலையை யுடையவராய்ச் சமாதியடையத்

தருந்த சுபமுகூர்த்தம் நோக்கியிருக்க, அப்போது இவர் புதல்வருள்ளே மூத்தவனாகிய கேசவனும், இளையவனாகிய விட்டலனும் வந்து வணங்கினார்கள். இவர் அவர்களுள் மூத்தவனுக்கு ஆறக்ஷர மந்த்ரத்தை யுபதேசித்து, "நான் சமாதியடைகிறேனாகையாலே, சம்பிரதாயம் தவறாமல் என்னை யாராதித்து, கார்த்திகை மாதந்தோறும் பண்டரிபுரத்துக்குப் போய்ப் பண்டரிநாதனை வணங்கி வருவாயாக" என்று நியமித்து, சீடருக்கும் மற்றுமுள்ள யாவருக்கும் வேண்டிய புத்திமதிகளைச் சொல்லி, சகவருடம் ஆயிரத் திருநூற் றிருபத்தேழாவதாகிய குரோதந வருடம் ஆனிமாதம் சுத்த சப்தமி ஞாயிற்றுக்கிழமை இந்தச் சுபதிநத்தில் சீடர்முதலிய எல்லாருங்கூடி ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருக்க, அரசடியில் பத்மாசநத்தில் எழுந்தருளியிருந்து, தம்மைத் தோத்திரம் செய்வோருக்கு முறைமையாய் ஆசீர்வாதம்செய்து, விட்டலப்பெருமானை வணங்கி நினைக்கவே, ஸ்ரீ கண்ணபிரான் எழுந்தருளி, எல்லாரும் காணும்படி இவரைத் தமது சொரூபத்தில் ஐக்கியம் செய்துகொண்டு, எல்லாரும் துதித்துக் கொண்டிருக்க மறைந்துபோனார். அதன்பிறகு சேவித்துநின்ற தொண்டர் எல்லாரும் ஜயஜய கோஷம்செய்து ஹரிநாமங்களைப் புகழ்ந்துரைத்து, சமாதி பூஜையை விதிப்படிசெய்து தங்கள் தங்கள் இருப்பிடம் சேர்ந்தார்கள். பிறகு பன்னிரண்டு வருடம் சென்றவுடனே சாங்கதேவர் தமது இளைய குமாரனுக்கெதிரேவந்து பெறுதற்கரிய வுபதேசத்தை அவனுக்குச் செய்து, விட்டலப் பெருமானுக்குள்ளே கலந்து ஐக்யமானார்.

சாங்கதேவர் சரித்திரம் முற்றிற்று.

பதினெட்டாவது

சோகாமேளர் சரித்திரம்.

பூலோக வைகுண்டமாகிய பண்டரிபுரத்தில், பஞ்சமகுலத்தில் அவதரித்து, சோகாமேளர் என்னும் பெயர்பூண்டு விளங்குவோராகிய ஒருவர் இருந்தார். அவர் நாள்தோறும் சந்த்ரபாகா நதியில் மூழ்குவதும், ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்வதும், அவ்வூரிலுள்ள பகவத்ஸந்நிதியிற்போய் வணங்கிப் பலமுறை தோத்திரஞ் செய்வதும் ஆகிய தொழில்களை முன்னே முடித்து, பிறகு தமது வ்யாபாரத்தில் ப்ரவேசிப்பவரா யிருந்தார். அப்படியிருக்க, ஒருநாள், ஞான

சஞ்சீவியாகிய விடோபாவுக் கெதிரேபோன அன்பராகிய இவரை யெதிர்ப்பட்டவர் சிலர், "கோயிலில் புகுதவும், மேகவண்ணனைக் கண்டு சேவிக்கவும் நீ தகுந்தவனல்லை, மாம்ஸத்தை விரும்புகிற நாய்போலப் பலமுறை கும்பிடுதலால் என்னபயன்" என்று கேட்க, இவர் அவர்களைப் பணிந்து சொல்லுகின்றார்: "கோயிலிற் பிரவேசிக்கவும் பகவானைத் தரிசிக்கவும் உரிமையில்லாத இழிகுலத்தை யுடையேனானாலும், சூரியன் நெடுந்தூரத்தி லிருந்தாலும் தாமரைமலரை மலர்விக்கும், சந்திரன் அந்தச் சூரியனைப் பார்க்கிலும் அதிக தூரத்தி லிருந்தாலும் சகோரப் பறவைக்கு இரைதரும். அதுபோல அடியேனுக்கும் பகவான் தமது திருவடியைத் தருவர். ஆதலால், தூரமாய் நின்று கும்பிடுவது என் குலத்துக் கியற்கையே; அதைக் குறித்து நீங்கள் ப்ரஸ்தாபஞ் செய்வதில் ப்ரயோஜநமில்லை. போய் வாருங்கள்" என்று சொல்லித் தமதிடத்தை யடைந்து, ஸ்ரீஹரிபாதத்யாநத்தை மறவாதிருந்தார். அன்றிரவில், பக்தபராதீநராகிய பகவானானவர் வந்து இவரை யன்போடு கோயிலுக்குள்ளே யழைத்துப் போய், இராமுழுதும் "உன்னை நாமதேவனுக்குச் சமானமாக நான் நினைத்திருக்கிறேன். இன்று பகலிலும் உண்ணும்போது உன்னை நினைத்தேன்" என்று இவ்வாறு பேசிக்கொண்டிருந்து, பொழுது விடியுஞ் சமயத்தில், பகவான் தந்தருளின ப்ரஸாதத்தை அமுது செய்யும்போது, அர்ச்சகர் வந்து கதவைத்திறந்து உள்ளேயிருந்த இவரைக்கண்டு, "இது என்ன புதுமையாயிருக்கிறது! கதவு மூடினது மூடினபடியேயிருந்து இப்போது எம்மால் திறக்கப்பட்டதே! இவன் எப்படி உள்ளே வந்தான்" என்று சந்தேஹித்து, இவர்க்கருகில் வந்து உற்றுப்பார்த்துப் பஞ்சமரென்று அறிந்து, "அடா புலையா! நீ எப்படி உள்ளே வந்தாய்" என்று அதட்டிக் கேட்க, "இவர் எனக்கொன்றுந் தெரியாது, பகவான் என்னை யுள்ளே கொண்டு வந்தார், நானென் செய்வேன்" என்று சொல்ல, அந்த அர்ச்சகர்கள் இவரை நோக்கி, "நீ இங்கிருக்க வேண்டாம், இவ்வூரை விட்டு எங்கேயாகிலும் போய்விடு, இருந்தாயானால் உனக்குத் தண்டனை கிடைக்கும்" என்றார்கள். அதைக்கேட்ட சோகாமேளர் போய்த் தம் மனைவியை யழைத்துக்கொண்டு, சந்த்ரபாகா நதிக்கரையில் ஒரு குடிசை யேற்படுத்திக்கொண்டு அதில் வாழ்ந்திருந்தார். இப்படி யிருக்குங்காலத்தில் ஒருநாள் நாமதேவர்போலப் பாண்டுரங்கப்பெருமானை இடைவிடாமல் மனத்திலிருத்திக்கொண்டு, வேப்பமர நிழலிலிருந்து உண்ணும்பொழுது, "ஸ்ரீ ருக்மிணீநாதனே, எனக்

கெதிரே வருகின்றிலே, என்மீது கோபமோ" என்று சொல்லுமுன்னே, பகவானுனவர் எழுந்தருளிச் சோகாமேளரோடு அமுதுண்ண, உடல் புளகித்து ஆநந்தக்கடலில் மூழ்கியிருந்தார். அப்போது, அர்ச்சகர்கள் அவ்விடத்தில் வந்து இச்செய்தியைக் கண்டார்கள். அந்தச் சமயத்தில் பரிமாறுகின்ற தமது மனைவியை நோக்கி "பகவானுக்கு இந்தத் தயிரைப் பரிமாறக் கடவை" என்று சொல்ல, அவளும் அப்படியே பரிமாறும்போது அது சிந்தி, பகவானுடைய திருவாடையின்மேல் தெறிக்கக்கண்டு, சோகாமேளர் தமது மனைவியை நோக்கி, "பகவானுடைய ஆடையின்மீது தயிர் தெறித்து அந்த ஆடை நனைவது நன்றோ" என்று கோபிக்கும்போது, மனைவியானவர், கணவனை நோக்கி, "பகவான்மீது எச்சமிட்ட காகத்தை நீர் என் செய்தீர்" என்று கேட்க, உடனே அந்த மரத்தின்மேலிருந்த காகத்தை ஓட்டினர். இப்படி யிருக்கும்போது, அர்ச்சகர்கள் அங்கே வந்து, "இப்படியுமுண்டோ? ஸ்ரீ கண்ணபிரான் காட்டில் வந்து உன்னோடிருந்து உண்பானோ? இது என்ன ஆச்சரியம்" என்று இவரைக் கன்னத்தின்மேல் அறைந்து, நீராடிக் கோயிலுக்குள்ளேபோய், பகவானது ஆடை முழுதும் தயிராயிருப்பதையும், கன்னம் வீங்கியிருப்பதையும், கண்கள் சிவந்திருப்பதையும் கண்டு அஞ்சி, ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு, வேப்பமரத்தின் நிழலில் கண்டதெல்லாம் இங்கே காணப்படுவதனல், மனம் நடுங்கி, "ஐயனே! ஸ்ரீலக்ஷ்மீநாதனே, புலையரும், நாங்களும் உனக்குச் சமானமென்பதை யாம் அறிந்திலேம், எங்கள் பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்து, பகவானைக் கோயிலில் விட்டு, தாசரிடத்தில் விரைந்து ஓடிவந்து, இவரைக்கண்டு, "நீர் பகவத்பக்தியிற் சிறந்தவர், ஆகையால் பகவானை உமது வசப்படுத்திக்கொண்டீர். பகவானிடத்துக்கு வாரும்" என்று அழைத்துக்கொண்டு போய்க் கோயிலில் விட, சோகாமேளர் பகவானைக்கண்டவுடனே, பகவானிடத்தில் முன்னே காணப்பட்ட குறிகளெல்லாம் மறைந்துபோயின. இந்த அற்புதமான செய்தியை எல்லாரும் அறிந்து, சோகாமேளரைப் புகழ்ந்து கொண்டாடினர்கள். அன்றுமுதல் சோகாமேளரும் பகவத் ஸந்நிதியில் முந்தியிருப்பவரானர் என்று சொல்லி மேலே பத்மநாபவேதியர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

சோகாமேளர் சரித்திரம் முற்றிற்று.

பத்தோன்பதாவது

கபீர்தாசர் சீடராகிய

பத்மநாபவேதியர் சரித்திரம்.

காசிக்ஷேத்ரத்தில் செல்வத்தாற் சிறந்த ஒரு வணிகனிருந்தான். அவன் தனது ஐந்து நன்மக்களோடும், அழகிற் சிறந்த மனைவியோடுங் கூடி, உற்ருர் முதலிய எல்லாரும் கொண்டாடும்படி வாழ்ந்திருந்தான். அப்படியிருக்குங்காலத்தில், அவனுக்குக் குஷ்டநோய் உண்டாகி, ரணமும் துர்க்கந்தமுமா யிருத்தலால், சமீபத்தில் வரத்தகுந்தவர்களும் வராதிருக்க, நெடுங்காலம் துன்பத்தை யநுபவித்துக்கொண்டிருந்தான். ஆனுல், இவன் நற்குண நற்செய்கைகளுள்ளவனுகையால், பல நல்லோர்கள்வந்து சொன்ன தானதர்மங்களைச் செய்தான். அதனுல் அந்த நோய் நீங்கவில்லை; வைத்தியர்கள் வந்து உயர்ந்த ஔஷதங்களைப் பிரயோகித்தும் ப்ரயோஜநப்படவில்லை. இப்படிப் பலவகையாகிய பரிஹாரங்களைச்செய்தும் பிணி மேன்மேலும் அதிகரித்ததனுல் துன்பம் பொறுக்கமாட்டாதவனுய், சில பெரியோரை யழைத்து, "ஐயரே! இந்தப் பிணியாலுண்டாகிற துயரத்தைச் சஹிக்க என்னுல் முடியவில்லை, என்னைக் கொண்டுபோய்க் கங்கையில் விட்டுவிடுங்கள்" என்று ப்ரார்த்திக்க, அவர்கள் இவனது துன்பத்தையும் மனத்துணிவையும் ஆலோசித்து, "இவன் விரும்பினபடியே நாம் செய்யாமற்போனுல் நமக்குப் பழியுண்டாகும்" என்று எண்ணி, இவனைக் கொண்டுபோய்க் கங்கைக் கரையில் வைத்து, நீரில் விட்டுவிட ஆயத்தப்படும்போது, ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநராகிய பத்மநாபவேதியர் நீராட அவ்விடத்திற்கு வந்து, இந்தக் கூட்டத்தைப் பார்த்து, சமீபத்தில் வந்து, "என்ன செய்தி" என்று விசாரித்தார். அவர்கள், இவ்வணிகனுடைய வரலாறு முழுதும் சொன்னுர்கள். அதைக்கேட்ட வேதியர், அவர்களை நோக்கி, "அநேக ஜந்மங்களுள்ளும் இந்த நரஜந்மம் சிறந்தது; இதைக்கொண்டு மோக்ஷலாபத்தை யடையலாம், அப்படி யிருக்க, அருமையான இந்த ஜந்மத்தை வீணுக்கி, நீரில் வீழ்ந்து இறந்தால் நரகம் சித்திக்கும், அப்படிச் செய்யவேண்டியதில்லை. நான், இந்தநோய் தீரும்படியான சிறந்த பரிஹாரமொன்றுண்டு, அதைச் சொல்லுகிறேன், அப்படிச் செய்தீர்களானுல், நோயும் தீரும், மோக்ஷலாபத்தையும் இவன் அடைவான்" என்று சொல்ல, அந்தக் கூட்டத்தாரெல்லாரும் "அந்

தப் பரிஹாரத்தைச் சொல்லவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, வேதியர், "நீலமேக வண்ணனாகிய பகவானது திருநாமமாகிய ராம என்னும் த்வயாக்ஷரமந்த்ரத்தை மூன்றுதரம் உச்சரித்தால், தக்ஷணமே நோய் தீரும், நீங்கள் விரைந்து இந்தப் பரிஹாரத்தைச் செய்யுங்கள்" என்றார். அப்படியே அவர்களெல்லாரும் மூன்றுதரஞ் சொல்லி, அவனைக்கொண்டும் சொல்லுவித்தார்கள். உடனே அந்தநோய் நீங்கின வணிகன் அதிக தேஜஸோடு விளங்கினான். பிறகு அவனும் அவனைக் கொண்டுவந்தவர்களும் பத்மநாபவேதியர் திருவடியில் வீழ்ந்து பணிந்து தோத்திரஞ் செய்து, காசிபட்டணத்துக்குப் போய் விட்டார்கள். அவர்களில் சிலர், கபீர்தாசர் திருமாளிகைக்கு வந்து அவரைப் பணிந்து, "தேவரீருடைய சிடராகிய பத்மநாபவேதியர் தபோமஹிமையிற் சிறந்தவர், ராம என்னும் இரண்டெழுத்தினால் மஹா வ்யாதியைத் தீர்த்தருளினார். பிணியாளனையே யன்றி இவ்வூரிலுள்ளார் எல்லாரையும் அந்த ராமநாம ஸங்கீர்த்தநபராக்கினார்" என்று சொல்ல, கபீர்தாசர் மிகவும் மனமகிழ்ந்து, "அந்த ராம என்னும் இரண்டெழுத்தின் பெருமையை ஒருவராலுஞ் சொல்ல முடியாது, அந்த இரண்டெழுத்தாகிய தாரகமந்த்ரத்தை உச்சரித்து, முற்காலத்தில் சிவபெருமான் நஞ்சுண்டதனா லுண்டாகிய துன்பம் நீங்கினார். ஆகையால் அதுபோலச் சிறந்த மந்த்ரம் வேறொன்றுமில்லை. அதை ஒருதரம் சொன்னால் எல்லாவினைகளும் ஒருமிக்க வொழியும். அப்படிப்பட்ட மந்த்ரத்தை மூன்றுதரம் சொன்னால் வணிகனுடைய நோய் நீங்காமலிருக்குமா? அந்தப் பத்மநாபவேதியன், இந்த ராமமந்த்ரத்தின் அருமை பெருமைகளை அறியமாட்டான்" என்று சொல்லுவதைப் பத்மநாபவேதியர் காதிற் கேட்டுக்கொண்டே வந்து தமது ஆசாரியராகிய கபீர்தாசருடைய திருவடிகளில் விழ்ந்து வணங்கி, எந்நேரமும் ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டு பேரானந்தத்தை யடைந்து வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே ரோகிதாசர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினார்.

பத்மநாபவேதியர் சரித்திரம் முற்றிற்று.

இருபதாவது

ரோகிதாசர் சரித்திரம்.

பூர்வகாலத்தில், ஓரூரில், சர்மகர்மஞ் செய்கிற சக்கிலியர்களுக்குள் உயர்ந்தவர் ஒருவர் இருந்தார். அவர் சமதமாதி ஆத்மகுணங்க

ளுள்ளவர்; வைஷ்ணவத்தில் அதிகவிருப்பமுள்ளவர்; பரோபகாரம் செய்வதே ஸ்வபாவமாகவுடையவர்; திருமாலுக்கு உயிர்போல்பவர்; எல்லா வுயிர்களின்மேலும் அருளுடையவர்; திருமாலடியாரைக்கண் டால் சாஷ்டாங்கதண்டம் சமர்ப்பிப்பவர்; திவ்யதேச யாத்திரை யாய்ச் செல்லுவோர்களைத் தமக்கிசைந்த வழியே உபசரிப்பவர்; தினந்தோறும் விடியற்காலத்திலெழுந்து முன்னே வயிற்றில் மூண் டெரிகிற உதராக்நியைத் தணித்து, பிறகு நீராடி, பகவதாராதநம் செய்பவர். கலியுகத்தில் வருத்துகின்ற பசிநோய் அதிகரித்தால் மனம் சலிக்கும், அதனால் மெய்யுணர்வு கெடும், ஆகையால் இவர் முந்திப் பசியைத் தணித்துக்கொண்டு, பிறகு பகவதாராதநம் செய் வது வழக்கம். இவரை அவ்வூரார் யாவரும் ரோகிதாசர் என்று அழைப்பார்கள். இவர் ஒருநாள், துருத்தியில் நீரை நிறைத்துக்கொ ண்டு, மடி, ஆசநம் முதலிய யாவும் தோலினால் அமைத்துக்கொண்டு, பரிசுத்தமாகிய ப்ருந்தாவநத்திற்குப் போய், நான்கு வேதங்களா லும் அறியப்படாத திருமாலின் திருவடியைத் தோத்திரஞ்செய்து கொண்டிருந்தார். அப்போது அவ்விடத்தில் ஒரு வேதியன் வர, அவனுக்குத் தம்மால் செய்யத் தகுந்த உபசாரங்களைச் செய்து, மிக வும் புகழ, அவன் இவரை நோக்கி, "சாளக்ராம பூஜை செய்தல் எல்லார்க்கும் மிகவுஞ் சிறந்தகாரியம், அப்படிப்பட்ட சாளக்ராமத் தைத் தோலின்மேல் வைத்துப் பூஜைசெய்வது நன்றோ? இப்படிச் செய்வது உனக்குத் தகுமோ? இந்தச் சாளக்ராமம் வேதியர் முதலா னோர்களால் பூஜிக்கப்படுவதல்லவா" என்று வினவ, இவர் அந்த வேதியனை நோக்கி, "எப்போதும் எல்லாப்பொருள்களுள்ளும் நிறைந் திருக்கிற பகவானைத் தியாநம் பண்ணுகிற மனம் இருப்பதற்கிட மாயிருப்பது தோலே, அந்த பகவானைத் தோத்திரம் பண்ணுகிற நாவும் தோலே, பரிசுத்தமான ஆத்மா தங்கியிருப்பதும் தோலாற் செய்யப்பட்டவையே" என்று சொல்லக்கேட்ட வேதியன், "முப்புரி நூலையணிந்த வேதியரேயன்றி மற்றவர்கள் பகவதாராதநம் செய் யத் தகுந்தவர்கள் ஆகமாட்டார்கள். ஆகையால் நீ இப்படிச் செய்ய வேண்டாம், உனக்குப் பாபம் சம்பவிக்கும்" என்றுசொல்ல, தாசர் வேதியனை நோக்கி, "என்னிடத்தில் உபவீதமிருப்பதை நீ யறிய மாட்டாய்" என்று சொல்லித் தமது நெஞ்சைப் பிளக்கவே, விளங்கு கின்ற உபவீதம் வெளிப்பட்டது. அதைக்கண்ட வேதியன், "இது என்ன ஆச்சரியம்" என்று தாசரை வணங்கி, "தாசரே, முப்புரி நூலால் என்ன ப்ரயோஜநம், பரிசுத்தமான மனத்தை யுடையவர்

கள் பகவதாராதநம் செய்யலாம், தடையில்லை" என்று சொல்லித் தன் வீட்டுக்குப் போய்விட்டான். போனபிறகு, பகவதநுக்ரஹத்தாலே தாசருடைய மார்பு பிளப்புண்ட இடந்தெரியாமல் மறைந்து இருபிளவும் ஒன்ருய்ச் சேர்ந்துபோயின. தாசரும் பகவத்தியாநநிரதராய் எழுந்தருளியிருந்தார் என்று சொல்லி, மேலே பிம்பாஜிபக்தர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

ரோகிதாசர் சரித்திரம் முற்றிற்று.

இருபத்தோன்ருவது

பிம்பாஜிபக்தர் சரித்திரம்.

முற்காலத்தில், உலகத்தாரெல்லோரும் கடேமண்டலியென்று சொல்லுகின்ற சிறந்த நகரத்துக்குத் திலகம்போல்பவனுகியும், பரிசுத்தனுகியும், மேலான எல்லையில்லாத தர்மங்களையும் நடத்துவோனுகியும், சாதுஜநங்களுக்குத் தாசனுகியும், சௌரியபராக்ரமங்களிற் சிறந்தவனுகியும், உதாரசீலனுகியும், தைரியசாலியாகியும், புத்ரகளத்ராதிகளாகிய செல்வத்தை யுடையவனுகியும், சக்தி யுபாசகனுகியும் இருந்த அரசனெருவன் பிம்பாஜி என்னும் பெயர் பெற்று விளங்கிக்கொண் டிருந்தான். அவன் நாள்தோறும் விடியு முன்னே எழுந்து, பெரியோரால் விதிக்கப்பட்டிருக்கிற நித்ய கர்மங்களை முடித்து, நீராடி, பேரிகைமுழங்க, காளி கோயிலுக்குப் போய், ஷோடசோபசாரங்களும் செய்து, பூஜை முதலியவற்றை நிறைவேற்றி, தான் நிவேதிக்கிற நைவேத்தியத்தைக் காளி உண்ணும்படி செய்து, தன் அரண்மனைக்கு வருவான். அப்படி அவன் ஒழுகும் நாளில், ஒருநாள், வைஷ்ணவர்கள் தீர்த்த யாத்ரை செய்வோர்களாய், அவ்வூருக்கு வந்தார்கள். இந்த அரசன் பூர்வ ஜந்மங்களில் யஜ்ஞாதிகள், ஏகாதசி விரதம், மாதுரு சேவை, பிதுருசேவை, தீர்த்தயாத்ரை, வாபீகூபதடாக ஆலய ப்ரதிஷ்டை, அந்நதாநம் முதலியவற்றைச் செய்திருந்தா னுகையால், இவனுடைய நகரத்தில், ஸ்ரீ வைஷ்ணவர்கள்வந்து சேரும்படி நேரிட்டது. அந்தச் செய்தியை அரசன் தன் சேவகர்களா லறிந்து, அவர்களுக்கெல்லாம் வேண்டியவற்றை யமைத்து, தான் நீராடிக் காளி கோயிலுக்குப் போய், பூஜை முதலியவற்றைச் செய்து தோத்திரம்பண்ணியிருக்க, காளி அவனுக்கு ப்ரத்யக்ஷமாகி, உள்ளன்போடு சொல்லுகிருள்: "உன் நகரத்துக்குவந்த சாதுக்களை உன் அரண்மனை

க்கு அழைத்துக் கொண்டுபோய், அவர்களுக்கு அமுது உண்பித்து வருவாயானால், உன் பூஜையை நான் ஏற்றுக்கொள்வேன்" என்று சொல்லி, மேலுஞ் சொல்லுகிறாள்: "ஸ்ரீ வைகுண்டநாதனுடைய திருமாலே இந்தச் சகலமான லோகங்களுக்கும், பிரமருத்திரேந்திராதி தேவர்களுக்கும், மற்றுமுள்ள முனிகணங்களுக்கும் தலைவனாயிருப்பவன் என்று வேதங்கள் முறையிடுகின்றன. அப்படிப்பட்ட பகவானுக்கு அன்பராகிய ஸ்ரீ வைஷ்ணவர்கள் உன் நகரத்துக்கு எழுந்தருளினதனால் உன்னைப்போலப் புண்யவான்கள் ஒருவருமில்லை" என்று சொல்ல, அரசன், காளியை நோக்கி, "தாயே, திருமால் உன்னைப்பார்க்கிலும் சிறந்த தெய்வமென்பதை நீ சொல்ல அறிந்து கொண்டேன். ஆனால் அந்தத் தெய்வத்தை நான் காணும்படி அருள் செய்யவேண்டும்" என்று பணிந்து கேட்க, காளி அரசனை நோக்கி, "ஒப்பற்ற அந்தக் கடவுளை நான் காட்ட வல்லேனோ, அவனடியாரைப் பூஜித்தால் அவர்களே காட்டுவார்கள்" என்று சொல்ல, அரசனும் அப்படியே அவர்களை வணங்கி யழைத்துப்போய்த் தன் அரண்மனையில் அமுது செய்வித்து, சந்தந புஷ்ப தாம்பூலாதிகளையுங் கொடுத்து, தோத்திரம்பண்ணிநின்று சொல்லுகிறான்: "ஸ்வாமிகளே! நீங்கள் ஸ்ரீ ராமபிரானை யறியும்படியான வழியை யெனக்கருள் செய்யவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, அவர்கள் அரசனை நோக்கி, "ராமாநந்த ஸ்வாமிகளிடத்தில்போய், அவரைச் சரணடைந்து, அவருடைய அருள் பெறுவையானால், ஸ்ரீ ராமபிரானைக் காணலாம்" என்றார்கள். அதைககேட்ட அரசன் மனமகிழ்ச்சியோடு வைராக்யத்தை மேற்கொண்டு, தனது அரசாட்சிக்குத் தன் மந்திரியை உரியவனாக்கி, உள்ள பொருள்களைப் பலவகையாய் வழங்கித் தானும் தன் மனைவியுமாக வெளிப்பட்டுவந்து, ராமாநந்த ஸ்வாமிகளுடைய திருவடியை வணங்கி, உடல், பொருள், ஆவி என்கின்ற மூன்றையும் அவருக்குத் தத்தஞ்செய்ய, அவரும் ராமதாரகமந்த்ரத்தை உபதேசித்தருளினார். உபதேசிக்கப்பெற்ற இவர்கள் குருவருளால் சிறப்படைந்து, சிரவணமநநாதிகளில் காலங்கழிப்பவர்களாய், ஹரிபஜநத்தில் விருப்பமுள்ளவரா யிருந்தார்கள். இப்படி யிருக்கையில் ஒருநாள் ஆசாரியர் திருவடியை வணங்கி, "துவாரகா நகரத்திற்குப்போய்க் கண்ணபிரானைத் தரிசிக்க விரும்பினோம்; விடைதரவேண்டும்" என்று கேட்க, அவரும் அப்படியே விடைகொடுக்க, விடைபெற்றுப் போய்த் துவாரகையை யடைந்து கண்ணபிரானைச் சேவித்து "முகுந்தா, அச்சுதா, அமலா, பக்தவத்ஸலா" என்று அநேகவித

மாக ஸ்தோத்ரங்கள் செய்து நின்றபோது, அந்தப் பகவானானவர், சங்கசக்ராதி திவ்யாயுதங்களோடும், கடக, கங்கண, கேயூர, குண்டல, நூபுராதிகளாகிய திவ்யாபரணங்களோடும், பீதாம்பரத்தோடும் இவர்களுக்கு ப்ரஸந்நமாய் எழுந்தருளி, அன்போடு தழுவிக்கொண்டு மகிழ்ச்சியடைந்திருக்க, இவர்களும் திருவடியை வணங்கி நின்றார்கள். பிறகு இவர்களுக்கு இன்சொற்களைச் சொல்லி, பகவான் மறைந்தருளினார். அதன் பின்னே அரசனும் அரசன் மனைவியும் அங்கே நான்குமாதகாலம் தங்கியிருந்து, ஸ்ரீ ஹரிபஜனையால் மனமகிழ்ந்து, ஒருநாள் பகவானிடத்தில் விடைபெற்றுக் காட்டுவழியே போகும்போது, ஒரு புலியானது இவர்களுக்கெதிரில் விரைந்து வந்தது. அந்தப் புலியை அரசன்மனைவி கண்டு பயந்து, அரசனைநோக்கி, "கோபத்தையுடைய புலியானது என்னைத் தின்ன வருகின்றது" என்று சொல்ல, அரசன், "பெண்ணே, அந்தப் புலியினுள்ளும் பகவான் அமர்ந்திருக்கிறார், நீயேன் அஞ்சுகின்றாய், வா" என்று அருகே யழைத்துக்கொண்டு, அவளைத் தின்னவந்த புலியின் முகக்குறியை யறிந்து, தன் கழுத்திலிருந்த துளசிமாலையைக் கழற்றிப் புலியின் கழுத்தில் போய்விழும்படியாக எறிய, அது அப்படியே போய்ப் புலியின் கழுத்தில் விழுதலும், புலியானது தன் கொடுந்தொழிலை முழுதும் மறந்து எதிரே நின்றது; நின்ற அந்தப் புலியின் தலைமீது தமது கையை அமைத்து, ஸ்ரீராமநாமத்தை யுபதேசித்து, "இன்று முதல் நீ கொலைத்தொழிலை யொழித்துவிடுவாயாக" என்றருளிச்செய்து, அவ்விடத்தைவிட்டு நீங்கினார். பிறகு புலியானது பேரருளையுடையதாகிக் கொலைத்தொழிலைச் செய்து மாம்ஸாதிகளை யுண்கிற தனது பூர்வாசாரத்தை யொழித்து, அந்தக் காட்டில் உதிர்ந்து கிடக்கிற சருகுகளை யுண்டு, ஸ்ரீ ஹரிநாமத்யாநம் செய்துகொண்டு எழுநாளிருந்து, அவ்வுடம்பைவிட்டு வேறு சிறந்த வுடம்பிற் போய்ப் பிரவேசித்தது என்று சொல்லி, மேலே நரசிம்மமேதாவின் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினார்.

பிம்பாஜிபக்தர் சரித்திரம் முற்றிற்று.

இருபத்திரண்டாவது

நரசிம்மமேதா சரித்திரம்.

அழகிற்சிறந்ததாகிய கடேமண்டலி யென்கிறவூரில் வாழ்கின்ற நாகரவேதியருக்குச் சிவபெருமானுடைய அமிசமாய் ஒரு புதல்வர்

அவதரித்தார். அவருக்கு நரசிம்மமேதா என்று பெயரிட்டு, அன் போடு தாய்தந்தைய ரிருவரும் ஜாக்ரதையாய் வளர்க்க வளர்ந்து, தக்க பருவத்தில் உபநயநம் செய்யப்பெற்று, பிறகு தாய்தந்தையர் இருவரும் சுவர்க்க லோகத்தை யடைய, தமது சிறிய தந்தையார் முதலானோருடைய ஆதரவிலிருந்து செழிப்பாய் வளர்ந்து வருகிற காலத்தில், அந்த வூரிலுள்ள சிறுவர்களோடு கூடி விளையாட்டில் விருப்பம் அதிகரித்ததனால், கல்வியில் மனம் பொருந்தாமல் விளை யாட்டிலேயே காலங்கழித்துக்கொண்டிருந்தார். ஒருநாள் நெடுநேரம் விளையாடினதனால் மிகுதியான தாகத்தினால் வருந்தித் தமது வீட்டு க்குவந்து, தமது தமையன் மனைவியைநோக்கி, "எனக்குவிரைவாய்த் தாகத்துக்குக் கொடுக்கவேண்டும்" என்று கேட்க, அவள் கோவங் கொண்டு, "இப்பொழுது என்னவேலைசெய்து இளைத்தாய்? நீ மூர்க்க னாகிச் சிறுவர்களோடு கூடிக்கொண்டு இரவும் பகலும் விளையாட்டி லேயே காலங் கழிக்கிறாயே; கல்வியிருந்தா லல்லவா உலகத்தில் பிழைக்கலாம்? சோற்றையுண்ணவும் விளையாடவும் கற்றுக்கொண் டாய்; இப்படித் திரிகிற உனக்கு மனைவி வந்துவிட்டால் அவளை எவ்விதமாய் அன்னவஸ்திரங்கள் கொடுத்துக் காப்பாற்றுவாய்" என்று சில கடுஞ்சொற்களைச் சொல்ல, இவர் கேட்டு, ஆலோசித்து, வீட்டை விட்டுக் காட்டுக்குப்போய் ஆலோசிக்கிறார்: எப்படியென்றால், "உல கத்தில் ஒருவன் பாலகனா யிருக்கும்போது, தந்தை தாயரை யிழப் பதும், யவ்வநகாலத்தில் மனைவியை இழப்பதும், முதுமைப்பருவத் தில் பிள்ளைகளை யிழப்பதும் ஆகிய இவையாவும் தீவினைப்பயனே யன்றி வேறல்ல; ஆதலால் என் தீவினை காரணமாக இளமையிலே என் தந்தை தாயரை யிழக்கும்படி நேரிட்டது" என்று ஏங்கியழுது கொண்டேபோய், அங்குள்ள ஒரு சிவாலயத்தைக் கண்டு, உள்ளே போய்ச் சிவபெருமானைத் தோத்திரம் செய்து, "ஏழைபங்காளா! க்ருபைசெய்து என்னை ஆண்டருள வேண்டும், எனக்கு உன்னை யன்றி வேறொரு துணையில்லை" என்று சொல்லி, ஆவிடைமேல் சயனித்துக்கொண்டிருந்தார். இப்படியே உணவில்லாமல் ஏழுநாள் வரை க்கும் சயனித்திருக்கக் கண்ட சிவபெருமானனவர், இவ்வுலகில், "என் அடியார் மனங்கனிந்து, புண்யதீர்த்தம், பஞ்சகவ்வியம், தேன், இளநீர் முதலியவைகளால் திருமஞ்சநம் செய்து, சந்தநபுஷ்ப தாம் பூலாதிகள கொடுத்து, ஆடையாபரணாதிகளால் அலங்கரித்து, என் னைப் பலவகையாய்த் தோத்திரஞ்செய்து தங்கள் அபீஷ்டங்களைப் பெறுவார்கள். அப்படியிருக்க, இவன் என்மேல் சயநித்துக்கொண்

டான். ஆனாலும், இவன் முற்பிறப்பில் புலியாயிருந்து, ராமநாம உபதேசத்தால் புலியுரு மாறினவ னாதலால் அந்தப் புண்ய விசேஷத்தையாகிலும் பார்க்கவேண்டுமே" என்று இவர்மீது அருள் மிகுந்து, தமது ஐந்துமுகம், பத்துக்கை, சர்ப்பாபரணம் முதலிய குறிகளோடு இவர்க்கெதிரே யெழுந்தருளி, தூக்கத்திலிருந்து எழுப்பி, "அக்காலத்தில் பிம்பாஜியால், நான் செய்யும் ராமநாம ஜபத்தை நீ பெற்றாய், ஆதலால் உனக்கெதிரே தோன்றினேன், உனக்கு வேண்டியதைக் கேட்டுக்கொள்வாயாக" என்றார். இதைக் கேட்ட நரசிங்கமேதா எழுந்து, சிவபெருமான் திருவடியில் வீழ்ந்து வணங்கித் தோத்திரம்செய்து, "ஐயனே, நான் குழந்தை யாகையால் சிறந்த பொருள் இன்னதென்று எனக்குத் தெரியாது, சிறந்தபொருள் எதுவோ அதனை நீயே யறிந்து அடியேனுக்கு அநுக்ரஹிக்கவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, சிவபெருமான் மகிழ்ந்து, தமக்கு விருப்பமுள்ள ஸ்ரீகண்ணபிரானது திருநாமத்தை உபதேசித்து, "உனக்குக் கண்ணனைக் காட்டுகிறேன்" என்று சொல்லி, வேண்டிய உணவுகளைக் கொடுத் துண்ணச்செய்து, "கண்ணபிரானானவர் யமுநாநதிக்கரையில், கோபிகைகளோடுகூடி நடநம் செய்வார், அவர் நடநம் செய்யும் போது நான் அந்த நடநத்துக்கேற்ற மத்தளம் கொட்டுவேன், அந்தக் கண்ணபிரானது சேவையே எனக்கு இஷ்டம்" என்றார். இவர் "அந்தச் செய்தி துவாபரயுகத்தில் நடந்ததல்லவா? இந்தக் கலியுகத்திலும் காணப்படுமோ" என்றுகேட்க, சிவபெருமானானவர், "அன்பர்களுடைய கண்ணுக்கு அந்த வைபவங்களெல்லாம் இந்தக் கலியுகத்திலும் காணப்படும்" என்றருளிச்செய்தார். பிறகு இவரைக் கோபிகைவேஷம்பூண்பித்து அன்போடு அழைத்துக்கொண்டு,யமுநாநதியையடைந்து, அந்தநதிக்கரையில்எழுந்தருளியிருக்கிற ஸ்ரீகண்ணபிரானைக் கண்டு வணங்கிநிற்க, ஸ்ரீ கண்ணபிரான் இவ்விருவரையும் தழுவிக்கொண்டார். பிறகு அநேககோபிகைகளின் இடையில் தங்கி, ஆபரணாலங்க்ருதராய், வேணுகானம் செய்துகொண்டுநிற்கிற கண்ணபிரானுடைய சௌந்தர்யத்தைக் கண்டு, சிலர் அதரத்தைச் சுவைக்க விரும்பவும், சிலர் தழுவுவதற்கு அபேக்ஷிக்கவும், சிலர் கையைப் பிடிக்கவிரும்பவும், சிலர் முத்தமிட விரும்பவும், இவ்வாறு பலவகையாய் விரும்பின கோபிகைகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கண்ணனுய் இடையிடையே அவரவர் விருப்பத்தின்படியே நின்று இன்பங் கொடுத்துக்கொண்டு, சிவபெருமானை நோக்கி, "நீ பெண்ணுருவாக்கிக் கொண்டுவந்தது யாரை" என்று கேட்க, சிவபெருமானான

வர் நகைத்து, நரசிங்கமேதாவுக்குக் கண்சாடை செய்ய, அவரும் விரைவாய் ஓடிவந்து கண்ணபிரானை வணங்க, சிவபெருமான் கண்ணனை நோக்கி, "முற்பிறப்பில் இவன் புலியாய்ப் பிறந்து முடிவில் பிம்பாஜியின் அருளுக் குரியவனாய், எல்லாப் பாவங்களிலிருந்து விடுபட்டு வேதியர் குலத்தில் பிறந்தான். இளமையிலேயே தாய்தந்தையர் மரணமடைந்ததனால் என்னிடத்தில் வந்தடைந்து ஏழுநாள் உபவாசமாயிருந்து வருந்துவதைக் கண்டு, நான் இவனுக்கு ப்ரத்யக்ஷமாகி, உனக்கென்ன வேண்டுமென்று கேட்டேன், நான் குழந்தையாகையால் எனக்கு ஒன்றுந்தெரியாது, சிறந்தபொருள் யாதோ அதனை நீயே தெரிந்து எனக்கு அநுக்ரஹிக்க வேண்டுமென்றான், எனக்கு உன்னையன்றி வேறொருவருமில்லை யாகையால் உன்னிடத்துக்கு அழைத்துக்கொண்டு வந்தேன், இவனுக்கு நீயே அநுக்ரஹிக்கவேண்டும், ஸ்ரீ கண்ணபிரானே" என்று ப்ரார்த்தித்து நிற்க, ஸ்ரீ கண்ணபிரான் மனமகிழ்ந்து, நரசிங்கமேதாவின் தலைமேற் கைவைத்து, உபதேசரூபமான அநுக்ரஹஞ்செய்து, "நீ யிந்த நதிக்கரையில் என்னைக் கோபிகைகளோடிருக்கக்கண்டாய், ஆகையால் இந்தவிளையாட்டைப் பிரபந்தமாகச் செய்து, உலகத்தாரை மகிழ்விக்கக்கடவாய், அப்படிச் செய்வாயானால், உன் கண்களுக்கு எப்பொழுதும் இப்படியே சேவைதருவேன், இதுதான் உனக்கு நான் கொடுக்கும்படியான சிறந்த வரம்" என்று சொல்லிச் சிவபெருமானுக்கும் விடைகொடுக்க, சிவபெருமானும் கண்ணபிரானை வணங்கி நரசிங்கமேதாவோடு, தான் அமர்ந்திருக்கிற கோயிலையடைந்து, நரசிங்கமேதாவுக்குச் சொல்லவேண்டியதைச் சொல்லியருள, நரசிங்கமேதாவும் பகவான் கட்டளையிட்டபடியே அமல லீலைகளைப் பாடலாகச் செய்து, ஞானச்சுடராகிய பகவானை மனக்கண்ணினால் கண்டு, ஆநந்தக்கூத்தாடிப்பாடி மகிழ்ந்திருந்தார். இப்படியிருக்க, இவர் வீட்டிலுள்ளவர்கள் இவரைக்காணாமல், பல இடங்களில் தேடியலைந்து, சிலரால் இந்தச் சிவாலயத்தி லிருப்பதை யறிந்து வந்து, இவர் பாடுகிற குஜராத்தி பாஷைப் பாடலையும் கேட்டுச் சந்தோஷித்து, அழைத்துப் போய் வீட்டிற் சேர்க்க, இவர் பகவத்தியானபராயிருப்பதை யறிந்த ஒரு வேதியன், தன் மகளை இவர்க்கு விவாகஞ்செய்துகொடுக்க, அந்தப்பெண்ணோடுகூடிச் சுகித்துவாழுங்காலத்தில்,ஒருமகளையும் மகனையும்பெற்று, ஊராரெல்லாரும் கொண்டாடும்படி ஸ்ரீகண்ணபிரானது அமலலீலைகளை மனக்கண்ணால் தினந்தோறுங் கண்டு சேவித்துப் பாடிக்கொண்டு, உஞ்ச வ்ருத்திசெய்து ஜீவநம் செய்து வருங்காலத்

தில், அந்த வூருக்கருகிலுள்ள சாமபுரத்தில், திரிபுராந்தகன் என்னும் பெயரையுடைய ஒரு வேதியன்பெற்ற கந்நிகைக்கு விவாஹத்துக்குரிய பருவம் நேரிட்டிருப்பதைப் புரோஹிதர்க்குச் சொல்ல, க்ருஷ்ணபட்டரானவர் மணமகனைத் தேடிக்கொண்டுபோய், அடுத்த வூரையடைந்து, நரசிங்கமேதாவென்கிற பரமபாகவதரைக்கண்டு, "சுவாமீ! எங்கள் எஜமானனுடைய பெண்ணைத் தேவரீருடைய புதல்வனுக்கு விவாஹஞ் செய்துகொடுக்கத் தீர்மானித் திருக்கிறோம்; தேவரீர் திருவுளத்தையறியவிரும்புகிறோம்" என்றுசொல்ல, நரசிங்கமேதாவானவர், "அப்படியே யாகலாம்" என்று சம்மதிவார்த்தை சொன்னவுடனே, கிருஷ்ணபட்டர் பொருத்தநிமித்தங்கள் முதலியவும் ஆராய்ந்து முகூர்த்தநாள் நிச்சயித்துக்கொண்டு மீண்டு வந்து, தான் போய்வந்த செய்தி யெல்லாம் திரிபுராந்தகருக்குச் சொன்னார். அந்தச் சொல்லைக் கேட்ட யாவரும் நகைத்து, "ஐயரே! நீர் நல்ல மணமகனைத் தேடினீர், நரசிங்கமேதா என்பவன் தரித்திரத்தால் பீடிக்கப்பட்டுக்கொண்டிருப்பவன், அவன்மகனுக்கா நமது பெண்ணைக்கொடுக்கஇசைந்துவந்தீர்! நன்றுநன்று" என்று சொல்ல, கேட்ட க்ருஷ்ணபட்டர் சொல்லுகிறார்: "மலையரையன், தன் பெண்ணை, எந்நாளும் சுடலையிலாடிக்கொண்டிருக்கிறவனுக்குக் கொடுத்ததைத் தடுத்தவர்யார்" என்றுசொல்லி, "மேலும் இந்த மணம் நிச்சயமானபின்பு, உமது குலத்து முன்னோர்கள்செய்தஏற்பாட்டின்படி, உங்கள் கைவிரல் மோதிரத்தைக் கொடுக்கத்தக்கதாகும்" என்ற மாத்திரத்தில், பெண்பெற்றவனாகிய திரிபுராந்தகன், பட்டரைநோக்கி "மணமகனானவன் எமது செல்வப் பெருக்கத்துக்குத் தகுதியாக ஐஞ்ஞூறு யானை, ஐயாயிரம் புரவி, ஆயிரம் தேர், ஸ்த்ரீ புருஷஸமூஹம், பொன், பூஷணம், ஆடை, பஞ்சவாத்யம் முதலாகிய ஆடம்பரத்தோடு வரவேண்டும், அப்படி யில்லாத பக்ஷத்தில் வேண்டியதில்லை" என்று பெண்கொடுக்க மனமில்லாதவனைப் பேசுகிற வார்த்தையைக்கேட்டு, வேதியர், "அப்படியே மணமகன் நாளைக்கு வரும்படிசெய்கிறேன்" என்றுசொல்லிவிட்டு, நரசிங்கமேதாவி னிடத்திற்குப் போய், "நாளைக்குப் பகல் மணமாகையால் மிகுதியான ஆடம்பரத்துடன் வரவேண்டும்" என்றுசொல்லி, மீண்டு வந்து திரிபுராந்தகனுக்குச் செய்தியைத் தெரிவித்தார். அதைக் கேட்ட திரிபுராந்தகன் சிரித்து, "நீ சொல்லுகிறவன் தரித்திரனென்பது ப்ரசித்தமாயிருக்க, அவனுக்கு நீ போய்ச் சொல்லிவந்தது புதுமையாயிருக்கிறது" என்றுசொல்லி, "அவர்கள் எந்தவிதமாய்வருவார்களோ பார்ப்போம், போய் அழைத்துவாரும்" என்று சொல்ல, பட்ட

ரானவர் மிகவும் கோபங்கொண்டு போனர். மறுநாள் உதயத்தில், நரசிங்கமேதாவானவர், எழுந்து, நித்திய கர்மங்களை முடித்து, ஸ்நாநம்செய்து, துவாதச நாமங்களும் தரித்து, துளசி மாலையைக் கழுத்திற் பூண்டு, வீரவைஷ்ணவர்களோடு கூடி, மனைவியும் மகனும் கூடவர, ஸ்ரீ ஹரிபஜனை செய்துகொண்டு விவாஹத்துக்குப் புறப்பட்டார்; அப்போது திருத்துவாரகையில் எழுந்தருளியிருக்கிற சக்ரபாணியாகிய பகவான் இவரது செய்தியை ஸ்ரீருக்மிணீ பிராட்டிக்குத் தெரிவித்து, "நீயே முன்னின்று இந்தவிவாஹத்தை முடிக்கவேண்டுமாகையால் நீ உன் கூட்டத்தோடுவரவேண்டும்" என்றுசொல்லி, உத்தவர், அக்ரூரர், சுகர், ப்ரஹ்லாதர், நாரதர், வால்மீகர், தும்புரர், புண்டலீகர், பராசரர், சௌநகர், விபீஷணர், விதுரர், ஆஞ்சநேயர், விடுமர், சுதாமர் என்பவர்களை நிகர்த்தவராகிய கோவலர், தமது கூட்டத்தோடு சேர்ந்துவரவும், நால்வகைச் சேனைகள் சூழ்ந்து வரவும், பலவகையான வாத்யவிசேஷங்கள் முழங்கவும் மணஞ்செய்யப் போகிற ஊருக்கு வந்தார்கள்; வந்தவர்கள் நகர்ப்புறத்தில் தங்கி, திரிபுராந்தகனுக்கு ஒற்றராலே செய்தியைத் தெரிவிக்க அவனும் "மனந்திகைத்து, கருடனுக்குமுன்னே கொசுகுபோல நமக்கெதிரே வாத்தகாத நிலையிலிருப்பவன், இவ்வளவு ஆடம்பரத்தோடு வந்தது ஆச்சர்யம்! மணமகன் வந்த சம்ப்ரமமோ சொல்ல முடியாதென்று ஒற்றர் சொல்லுகிறார்கள். இது என்ன புதுமை" என்று நாணமடைந்திருந்தான். க்ருஷ்ணபட்டர், இவைகள் யாவும் பகவானுடைய கருணைவிசேஷத்தாலே நிகழ்வதாகத் தோன்றுகிறது என்று தமக்குள்ளே மகிழ்ச்சியடைந்திருந்தார். பிறகு விசுவகர்மாவந்து விவாஹ மண்டபத்தை விநோதமா யலங்கரித்தான். அதில் ரம்பை மேநகை முதலான தெய்வ கணிகைகள் வந்து நடநம்செய்ய, தேவரும் முநிவரும் ஆகாயத்தில் நின்று வேடிக்கை பார்க்க, ருக்மிணீதேவியார் முதலான ஸ்திரீ ஜநங்கள விவாஹமண்டபத்தில் நிறைந்து சூழ்ந்திருக்க, ஸ்ரீ கண்ணபிரானேடு கோபாலரெல்லாரும் வந்து நெருங்கியிருக்க, இந்தச் சமயத்தில், பெண்ணைப் பெற்றவனுகிய திரிபுராந்தகன் தன் பெண்ணைச் சுற்றத்தாரோடு அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தான். அப்போது ஸ்ரீ கண்ணபிரான் எழுந்து அவனை உபசரிக்க, அவன் அதிசயித்துக் கண்ணனை நோக்கி, "உம்மை நான் இதுவரையில் கண்டதில்லை, நீர் யார்? உமது பேர் யாது? உம்மூர் யாது? சொல்லவேண்டும்" என்று கேட்க, ஸ்ரீகண்ணபிரான், "எமது ஊர் துவாரகை, எமது பேர் சாமளநம்பி, இந்த நரசிங்க

மேதா எனக்குச் சிநேகிதன்" என்று சொல்ல, அந்தக்ஷணத்திலே மாப்பிள்ளையானவன் கோதூளி லக்ந முஹூர்த்தத்தில், பெண்ணுக்கு மங்கலநாண் பூட்டினான். உடனே வேதியர் ஆசிர்வதித்தார்கள். யஜ்ஞமும்செய்து முடிந்தபிறகு, ஊர்கோலம் வந்து, பிறகு ஐந்து நாட்களும் செய்யவேண்டிய சடங்குகளெல்லாவற்றையும் முறையாய்ச் செய்து, இரவலர்க்கும் மறையோர்க்கும் தானம்செய்து முடிந்த பிறகு, பந்துபோஜநமுஞ்செய்து தீர்ந்தது; பிறகு பெண்ணைப் பெற்றவனாகிய த்ரிபுராந்தகன், கண்ணபிரானை நோக்கி, "என் பொருள் முழுதும் இவரது பொருளுக்கு உறையிடவும் பற்றாது" என்று சொல்ல, கண்ணபிரான் அவனை நோக்கி, "ஹரிதாசருக்கு உன் பெண்ணைக் கொடுத்ததனால் நீ மிகவும் பாக்யவான்" என்று புகழ்ந்து, பிறகு நரசிங்கமேதாவை மணமகனோடும் மணப்பெண்ணோடும் அழைத்துக்கொண்டு புறப்பட த்ரிபுராந்தகன் வழியனுப்பினான். கண்ணபிரான் நரசிங்கமேதா முதலானோரை அவர்களுடைய வூரில் கொண்டுபோய்ச் சேர்ந்து, நரசிங்கமேதாவை நோக்கி, "நீ நினைக்கும்போது நான்வருகிறேன்"என்றுசொல்லிவிட்டுத் துவாரகா நகரத்தை யடைந்தார். இப்படிப் பகவான் போனபிறகு, நரசிங்கமேதாவானவர் அந்தப் பகவானுடைய வைபவங்களெல்லாவற்றையும் நினைந்து, நாள்தோறும் ஹரிபஜனை செய்துகொண்டிருந்தார். இப்படி யிருக்குங் காலத்தில், துவாரகா யாத்திரை போவோர்களில் ஒருவராகிய கேசவபட்டர் என்பவர் அவ்வழியில் திருடர் பயமுண்டென்று கேள்விப்பட்டு, நாம் போகிற வழியில் இந்தப் பொருளைத் திருடர் பறித்துக்கொண்டுபோனால் நாம் என்செய்வோம்! அங்கே போய், யாரிடத்தில் கேட்கிறது ? ஆகையால் இங்கே நமது பொருளை வாங்கிக்கொண்டு அங்கே நமக்குச் சேரும்படி செய்வோர் யாராகிலும் கிடைத்தால் நன்மையாகும்" என்று ப்ரஸ்தாபிக்க, அவருடைய மாணாக்கர் ஒருவர் "சுவாமீ! இங்கே நரசிங்கமேதாஎன்பவர் இருக்கிறார். அவர் தேவரீருடைய விருப்பத்தின்படியே செய்வார்" என்று சொல்ல, கேசவபட்டர் நரசிங்கமேதாவினிடத்துக்குப்போய் "ஐயரே! உம்மிடத்தில் அறுநூறுவிராகன் கொடுக்கிறேன், அந்தத் தொகை நான் துவாரகைபோய்ச் சேர்ந்தவுடனே எனக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும்"என்று சொல்ல, அப்படியே வாங்கிக்கொண்டு, துவாரகையிலுள்ள சாமளநம்பிக்குச் சீட்டுக் கொடுக்க, வாங்கிக்கொண்டு கேசவபட்டர் போய்விட்டார். அவர் தந்த பொருளைக் கொண்டு ஹரிதாசராகிய நரசிங்கமேதாவானவர், தம்மிடத்திற் றுவரு

கிற வைஷ்ணவர் மனமகிழும்படி தானம்செய்து, ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்தார். இங்கே இவர் இப்படியிருக்க, துவாரகையை நோக்கிப்போகிற கேசவபட்டர், "நாம் பொருள் கொடுக்க வாங்கிக்கொண்டவர் என்ன செய்வாரோ" என்று ஆலோசித்துக்கொண்டே போய், வழியிலுள்ள கோமதிநதியில் முழுகிச் சென்று, துவாரகையை யடைந்து, ஸ்ரீ கண்ணபிரானது திருவடியை வணங்கிப் பலதோத்திரம்செய்து, அர்ச்சகர்களை நோக்கி, "ஸ்வாமீ! இவ்வூரில் சாமளநம்பியென்பவர் எங்கேயிருக்கிறார்?" என்றுகேட்க, அவர்கள் "இந்தப் பெயருள்ளவர் இவ்வூரில் இல்லை" என்றார்கள். கோயிலுக்கு வெளியேவந்து வேறு சிலரைக் கேட்க, அவர்களும் அப்படியே சொன்னார்கள். இதைக் கேட்ட கேசவபட்டர், "நாம் இனி யென்னசெய்வோம்" என்று துக்கித்துக்கொண் டிருக்கும்போது, இவரைக் கண்ட சிலர், "எதைக்குறித்து நீர் இப்படி துக்கிக்கிறீர்?" என்றுகேட்க, இவர் நடந்த செய்தியைச் சொன்னார். கேட்டவர்கள், "நரசிங்கமேதா என்பவன் பரமதரித்திரனல்லவா? அவனிடத்தில் கொடுத்தபொருள் இனி வரப்போகிறதோ? ஏன்துக்கிக்கிறீர்" என்று சொன்னார்கள். அதைக் கேட்ட கேசவபட்டர் மிகவும் துக்கசாகரத்தில் மூழ்கியிருந்தார். இப்படியிருக்கும்போது, சாமளநம்பியானவர், ஒரு தேர்மேல் ஏறிக்கொண்டு இவரிருக்குமிடத்தில் வந்திறங்கி, "நீர் யார்? என்ன காரியத்தைக்குறித்து இங்கே வந்தீர்?" என்று கேட்க, கேசவபட்டர், நடந்த சங்கதிகளையெல்லாம் சொல்லி, "நீர் எங்கிருந்துவந்தீர்?" என்று கேட்க, பகவானானவர், "சாமளநம்பியென்பவன் நான்தான். இனி உமது பொருள்முழுதும் நீர்பெற்றுக்கொள்ளலாம், சந்தேஹமில்லை, என் எஜமானன் கொடுத்த பொருளாதரவு எங்கே காட்டும்" என்று சொல்ல, பட்டர் சீட்டைக் காட்டினார், அந்தச் சீட்டை நம்பி பெற்று அருகிலிருந்த உத்தவர் முதலியோரை நோக்கி, "இது என் எஜமானன் அனுப்பினது" என்று சொல்லிக் கண்ணில் ஒற்றிக்கொண்டார். அதைக் கண்டவர்கள் "உம்முடைய மாயாவிசித்திரத்தைக் கணிக்கவல்லவர் யாவர்" எனக்கொண்டாடினார்கள். பிறகு கேசவபட்டருக்குச் சேரவேண்டிய தொகையாகிய அறுநூறு விராகனும் அவருக்குக் கொடுக்கப்பெற்றுக்கொண்டு, கண் இழந்தவன் மறுபடியும் கண்பெற்றதுபோல, மிகவும் மகிழ்ந்து, இது சர்வேசுவரனுடைய க்ருபையேயன்றி வேறல்லவென்று நினைத்துச் சொல்லத் தொடங்கினார்: "உன் எஜமானனைப் பார்த்தால் மிடியிற் சிறந்தவனாயிருக்கிறான், உன்னைப்பார்த்தால் ராஜகுமாரன்போலிருக்கிறாய், இது

புதுமையாயிருக்கிறதே" என்று சொல்லினர். இதைக்கேட்ட சாமள நம்பியானவர், கேசவபட்டரை நோக்கி, "என் எஜமானர் இந்தப்பொருளில் இச்சையில்லாதவரும், ஸ்ரீ ஹரிபக்தியுள்ளவரும் ஆகையால் அவர் ஆடை முதலியவற்றால் ஏழைபோலக் காணப்படுகிறார். தந்தையானவன் குழந்தையை அலங்கரித்து வைப்பதுபோல, என்னையலங்கரித்து இங்கே வைத்திருக்கிறார். அவருடைய தயையினாலே தான் இங்கே நான் சுகித்திருக்கிறேன்" என்று சொல்லி, தன்னோடு வந்தவர்களுடனேகூடிப்போய்விட்டார். போனபிறகு, கேசவபட்டர் தமக்குக் கிடைத்த பொருளை யெண்ணிப்பார்த்து, அது தொலையாதிருக்கக்கண்டு, அந்தப் பொருளைத் தானம்செய்து, பிறகு கோயிலையடைந்து, பகவானை வணங்கி, மகிழ்ச்சியோடு மீண்டுவந்து நரசிங்கமேதாவைக் கண்டு, அங்கே துவாரகையில் நடந்த செய்திமுழுதும் சொல்லி, "சாக்ஷாத் பகவானே உமது கடனைக் கொடுக்குபடி செய்தீர், உமக்குச் சமானமானவர்கள் இவ்வுலகத்தில் யாரிருக்கிறார்கள்" என்று புகழ்ந்துபோனார். பிறகு நரசிங்கமேதாவானவர் பகவத் கல்யாண குணங்களை நினைத்து ஆனந்தக் கண்ணீரொழுக நின்று தோத்திரம்பண்ணி, ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்தார்.

இப்படி யிருக்குங்காலத்தில், "இவர் மகள் மாமி வீட்டில் தெருண்டாள்" என்னுஞ்செய்தியை ஒருவன்வந்து இவர் மனைவியார்க்குச் சொல்ல, அவர் இவரிடத்தில் வந்து நமஸ்கரித்து நின்று, "ஸ்வாமீ, நமது பெண்ணுக்கு மேலான வரிசை யெடுக்கவேண்டும், நீர் வாயார உத்திரவு கொடுக்கவேண்டும்" என்று சொல்ல, நரசிங்கமேதாவானவர், "நாம் என்ன செய்ய வல்லோம்! ஸ்ரீ ராமநாமந்தான் நமக்கு எல்லா நன்மைகளையும் அருள்செய்யவேண்டும்" என்றார். என்று சொல்லி எழுந்து மகள் வீட்டுக்குப் போகவே, புதல்வியார் இவரை நோக்கி, நகைத்து, "என் தந்தையாரே, துளசிமாலையும், நாமமும், ஜபமாலையும் தரித்து, மகள் சோபந கல்யாணத்துக்கு வெறுங்கையோடே வந்தீர், வீரவைஷ்ணவரே, இது லோகமரியாதைக்கு அழகோ" என்று சொல்ல, நரசிங்கமேதாவானவர், புதல்வியாரை நோக்கி, "அம்மா, உனக்குச் செய்யவேண்டிய வரிசைக்குச் சிறந்த பொருள்களெல்லாவற்றையும் ஒரு எட்டிலெழுதித்தா" என்று சொல்ல, புதல்வியார் நகைத்து, ஒரு குடிலனைப் பார்த்துத் தமக்குவேண்டிய ஆடையாபரணாதிகளெல்லாவற்றையும் அவனிடத்தில் சொல்லி எழுதுவித்தபிறகு, நரசிங்கமேதாவானவர் அவனை நோக்கி, "உன்னுடைய இஷ்டத்தையும் எழுதித்தா" என்றுசொல்ல,

அந்தக்குடிலன் "மண்ணாங்கட்டி" என்றொரு பொருளையும் எழுதிக் கொடுக்க, வாங்கிக்கொண்டு, துவாரகையில் எழுந்தருளியிருக்கிற பகவானை நினைத்தார்; குடிலனும் இவரைநோக்கி, "இதில் எழுதின வஸ்துக்களோடன்றித் தனியே வரவேண்டாம்" என்று பலபேருக்கெதிரே சொல்லினான். உடனே பக்தவத்ஸலனான பகவான், ஒரு சுமையாளோடு வேதிய வடிவமாய் வந்து மணமகள் வீட்டு வாயிலுக்கெதிரே நின்றார்; அங்குள்ளார் அவரை நோக்கி, "நீ எந்தவூர்?" என்று கேட்க, வேதியவுருவங்கொண்ட பகவானானவர், "நான் நரசிங்கமேதாவுக்கு ஏவற்பணிவிடை செய்பவன். அவர் தமது மகளுக்கு வரிசைச்சாமான்களை ஒருபெட்டியில் வைத்துக்கொடுக்கக் கொண்டுவந்தேன், அதிலுள்ள பொருள்களின் சாபிதா இதோபாரும்" என்றுகொடுக்க, வாங்கினவர்கள் அதிலுள்ள பொருள்களெல்லாம் பெட்டியிலிருக்கக்கண்டு, ஒரு மண்ணாங்கட்டியும் இருப்பதைப்பார்த்து, "இது உன்தலையில் மோதிக்கொள்ளவா" என்று நகைக்க, கொண்டுவந்த சுமையாளானவன் நாணி நின்றான். பொருள்களைப் பெற்றுக்கொண்டவர்கள் நரசிங்கரைப் புகழ்ந்து, அவரிடத்தில் வந்து வணங்கி, "நீர் பகவானுடைய அருள்பெற்றவர், உமது பெருமையை யறியாமல் நாங்கள் இகழ்ந்தோம்" என்று சொல்லி, பெண்ணுக்குச் சோபந விவாஹம் நடத்தினார்கள். பிறகு நரசிங்கர், கண்ணபிரானோடு தம்மூர்க்குப் போகும்போது "பகவானே! என்பொருட்டு மிகவும் சிரமமெடுத்துக்கொண்டீர்" என்றுசொல்ல, பகவான் மகிழ்ந்து, உமது புதல்விக்கு வேண்டுவன யாவும் அமைத்தேன், உமது தோளுக்கும் ஒரு ஆபரணம் அணிகிறேன்" என்று, தமது கழுத்திலிருந்த துளசிமாலையைக் கழற்றி, நரசிங்கர் கழுத்தில் தரித்து, அவரிடத்தில் விடைபெற்றுப் போய்விட்டார். அன்றுமுதலாக அந்தத் துளசிமாலையே அவர்கழுத்தில் விளங்கிக்கொண்டிருக்கும். அதை யறிந்த மண்டுகேன் என்னும் ஓர் அரசன், மிகவும் ஊஹித்து, "இது மோஹந வித்தையாயிருக்கலாம்" என்றுநினைத்து, அதைச்சோதனை செய்யும்பொருட்டு, கோயிலுக்குள்ளே வந்து பகவானுடைய திருக்கழுத்திலிருக்கிற மாலையை, கவசத்தோடு சேர்த்து வரிந்துகட்டிவிட்டு, பஜனை செய்துகொண்டிருக்கிற நரசிங்கமேதாவை நோக்கி, "நீர் உலகிலுள்ள எல்லாரையும் மயக்குதற்குக் கற்றிருக்கிறீர், பகவானுடைய கழுத்திலிருக்கிற மாலையானது இன்று உமது தோளில் விழுவதை நான் அறிகிறேன், அப்படி விழாதபக்ஷத்தில், உம்மை மிகவும் வருத்துவேன்" என்றுசொல்ல, தாஸரானவர் ஸ்ரீ பகவானைத்

தோத்திரம்செய்தார். அப்படித் தோத்திரம்செய்தும் நாள்தோறும் இவர்கழுத்தில் வந்துவிழுகிற மாலை அன்று வந்து விழாமலிருந்தது. தாஸரானவர் மறுபடியும் அதிகமாய் ஸ்தோத்திரம் செய்தனர்; செய்தும், விழாமலேயிருந்தது. அப்போது பகவானை நோக்கி, "இன்று மாலையைப் பிரசாதித்தால் உமக்கு என்ன குறைவு நேரிடும்" என்றார்; அதைக் கேட்டவுடனே, அரசன் வரிந்து கட்டின கட்டானது அப்படியேயிருக்க, மாலை மாத்திரம் தாஸருடைய கழுத்தில் வந்து விழுந்து பிரகாசித்துக்கொண்டிருந்தது. இதைக்கண்ட அரசன், பகவானை நோக்கும்போது, அவர் கழுத்தில் தான் கவசத்தோடு சேர்த்துக்கட்டின கயிறுமாத்திர மிருக்கக்கண்டானேயன்றி மாலையைக் காணாமையால், ஆச்சரியமும் பயமும்கொண்டு, தாஸர் திருவடிகளிலே விழுந்து வணங்கி, இவர் தேவரேயன்றி நரரல்லர் என்று உட்கொண்டு, ஜயஜயவென்று புகழ்ந்து இன்சொற்கூறி, "உமது பெருமையையறியாமல்,என் துரஹங்காரத்தால் உம்மை மிகவும் வருத்தினேன், இந்த அபராதத்தை க்ஷமித்தருளவேண்டும்"என்று பிரார்த்திக்க, தாஸரானவர் அரசன் பிரார்த்தனைக்கு மனமிரங்கி அவனை ஆசிர்வதித்து அனுப்பிவிட்டு, தாம் ஸ்ரீ ஹரிசரண தியானபரராய்ச் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தார் என்று சொல்லி, மேலே இராம தாஸர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

நரசிம்மமேதா சரித்திரம் முற்றிற்று.

இருபத்துமூன்றாவது

இராமதாசர் சரித்திரம்.

மேலான சற்குணத்தை யுடையவரும், பக்தருக்குள்ளே திலகம்போல் விளங்குவோரும், ப்ராஹ்மண குலத்தில் சிறந்தவரும், ராமதாசர் என்னும் பெயரையுடையவரும் டாங்கூர் என்னும் ஊரில் வாழ்பவரும், தாம்போய் யாசித்துக்கொண்டு வருகிற பிச்சைச்சோற்றால் குடும்பத்தைப் பாதுகாப்பவரும், ராமநாமத்தை இடையறாமல் உச்சரிக்கிற நாவையுடையவரும் ஆகிய ஒருவர் இருந்தார். இவர் மாமரத்தைக் குடைந்து, அதில் துளசியைப் பயிர்செய்து வளர்த்து, ஏகாதசி தினந்தோறும் நியமமாய் அதை யெடுத்துக்கொண்டு, நூற்றைம்பது கோசு தூரத்திலிருக்கிற துவாரகைக்குப்போய், அங்கே யெழுந்தருளியிருக்குங் கண்ணபிரானுக்குச் சமர்ப்பித்து, தரிசனஞ் செய்து மீண்டுவருவார். இப்படி இருபத்தைந்து வருஷகாலம் நட

த்திவந்தார். இவர் போகும்போதும் வரும்போதும் வழியில் ஸ்ரீ ஹரி நாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டும், ஆநந்தக் கூத்தாடிக்கொண்டும் வருவார். சரீராபிமாநம் சிறிது மில்லாதவர்; கோமதி நதியில் மூழ்கி ஸ்ரீகண்ணபிரானது திருவடியில், தாம் கொண்டுபோகிற துளஸியை யர்ச்சித்து நின்று, "பகவானே, துக்கரூபமான பிறப்பிறப்புக்கள் இனியெனக் குண்டாகாமலிருக்கக் கருணை செய்யவேண்டும்" என்று பிரார்த்திப்பார்; மறுபடியும் தமது ஊருக்கு வருவார். இப்படிக் காலங்கழித்து வரும்நாளில், ஏதோ அசந்தர்ப்பத்தினால் ஒரு ஏகாதசி போகாமல் நிற்கும்படி நேரிட்டது; அதைக் குறித்து மிகவும் துக்கித்துத் துவாரகைக்குப் போய்க் கண்ணபிரானைச் சேவித்து, "பதிதபாவநனே, கருடவாஹநனே, பரமனே, ஹஸ்திரக்ஷகனே, எனக்கு மூப்பு வந்துவிட்டதனால் உன்னைத் தரிசித்து வரும் நியமத்தில் தவறினேன், மிகவும் அசக்தியுண்டாயிருப்பதனால் இனி உன்னைத் தரிசிக்க வரமாட்டேன், அப்படி அடியேன் வராவிட்டாலும் என்மீது உன் கிருபை மாத்திரம் குறையாதிருக்கும்படி க்ருபைசெய்யவேண்டும்" என்று பிரார்த்தித்துநின்றார். மேலும்,அழுத கண்ணீரோடும் "சுவாமீ, இனி உன்னை யெக்காலத்தில் காணப்போகிறேன், இதுதான் முடிவாகிய சேவை" என்று பகவானுடைய திருவடியைப் பிடித்துக்கொண்டார். அப்பொழுது பகவானனவர் இவரது துன்பத்தைக் கண்டு சஹிக்கமாட்டாமல் பதைபதைத்து, தமது நான்கு திருத்தோள்களும் பீதாம்பரமும் ப்ரகாசிக்கும்படி தாசருக்கெதிரே யெழுந்தருளி, இவரை மார்போடணைத்துத் தூக்கி "என்னிடத்தில் மிகுதியாகிய அன்புடையவனே, நெடுநாளாக என்னைச் சேவித்து வந்தாய், ஆகையால் உனக்கு நான் கடன்காரனானேன், இந்தக் கடனை எப்படித் தீர்ப்பேன்? நான் உன்னோடு வருகிறேன், கொண்டுபோ" என்று சொல்ல, ராமதாசர், "சுவாமீ, தேவரீரை அடியேன் எப்படிக் கொண்டுபோவேன்" என்று சொல்ல, ஸ்ரீ லக்ஷ்மீநாதன், "என் தேர்வரும், அதில் ஏற்றிக்கொண்டு இன்றிரவில் உன்னூரை யடைவாயாக" என்று சொல்லி, தேர்வரும்படி திருவுளத்தில் நினைத்தவுடனே, தேர்வந்து எதிரே நிற்கக் கண்ட தாசர் பகவானைத் தூக்கி யெடுத்து அந்தத் தேரிலேற்றிக்கொண்டு தமது ஊரையடைந்த பிறகு, "சுவாமீ தேவரீரை எங்கே யொளித்துவைப்பேன்! என் வீட்டில் நீரிருந்தால், அவ்விடத்தில் உன்னைக் காணாதவர்களாகிய அர்ச்சகர் முதலானோர்வந்து என்னை வருத்துவார்களே; தேவரீர் திருவுள் மெப்படியோ அறிந்திலேன்" என்று

சொல்லி, மனத்தளர்வோடு இங்கேயிருக்க, பொழுது விடிந்தபிறகு, துவாரகையில் அர்ச்சகர் கோயிலினுள்ளே பிரவேசித்துக் கண்ணனைக் காணாமல் திகைக்கும்போது, அவர்களில் ஒருவர், "நேற்று இராமதாசர் வந்திருந்தார்; அவர் தினந்தோறும் பூஜிக்கவேண்டுமென்றெண்ணித் தமது வீட்டுக்குக் கொண்டுபோனாரோ ஏதோ அறிந்திலோம்" என்றார். கேட்ட மற்றவரெல்லாரும் "அப்படியிருக்கலாம்" என்று, தாசரிருக்கிற டாங்கூருக்குப் போனார்கள். இவர்கள் வருவதை முன்னாகத் தெரிந்துகொண்ட தாசர் கண்ணபிரானோடு விண்ணப்பஞ்செய்ய, அவர் ஒன்றுஞ் சொல்லாமல் மௌனமாயிருக்கக் கண்டு, "நமக்கு அவசியம் தண்டனை கிடைக்கும்" என்று நிச்சயித்து, கண்ணபிரானை அங்குள்ள ஒரு கிணற்றில் கிடத்தி வைத்தார். வந்த அர்ச்சகர் இவர் வீடு முழுதும் தேடிக்காணாமல் கிணற்றிற் போட்டிருந்தாலும்இருக்கலாமென்று கிணற்றில் ஆராய்ந்து,கண்ணபிரானை மேலே யெடுத்துத் தேரிலேற்றிக்கொண்டு ஊருக்குப் போகும்போது தாசரானவர் "என்னை விட்டுப்போகிறீரோ" என்று துன்பத்தோடுஞ் சொல்ல, பகவானானவர், "தாசரே, நீர் துக்கிக்கவேண்டாம், புண்டலீகர் வீட்டில் நானிருப்பதுபோல உன் வீட்டிலு மிருப்பேன்" என்று சொல்ல, தாசர், "சுவாமீ, தேவரீரை அர்ச்சகர்கள் தேர்மீதேற்றிக்கொண்டு போகிறார்களே, அவர்களினின்றும் எப்படி விடுபட்டு வருவீர்" என்று கேட்க, பகவானானவர், "தாசரே, அர்ச்சகரிடத்தில் என் நிறையளவாகிய பொன்னைக் கொடுத்து என்னை வாங்கிக்கொள்வீராக" என்றார். தாசர், "ஸ்வாமீ, தேவரீருடைய நிறைக்கிடான பொன் அடியேனிடத்தி லில்லையே" என்றார். அதற்குப் பகவானானவர், தாசரை நோக்கி, "உன் மனைவியின் மூக்குத்தியை வைத்து நிறுத்தால் அது என் கனத்துக்குச் சரியாயிருக்கும்படி செய்கிறேன்" என்றார். அப்படியே அர்ச்சகர்களிடத்திற் போய்ச்சொல்லிப் பிரார்த்திக்க, அர்ச்சகர் நகைத்து, "இவன் பரம தரித்திரனாயிருந்தாலும் பேச்சுமாத்திரம் விசேஷமாயிருக்கிறது" என்று பேசிக்கொள்வதை அவ்வூரிலுள்ளார் அறிந்து, "இந்தத் தாசர் பொன் கொடுப்பதை நாம் பார்ப்போம்" என்று கூட்டங் கூடினார்கள். அவர்களைத் தாசரானவர் பார்த்து, "இந்த அர்ச்சகர்கள் பகவான் நிறையுள்ள பொன்னைக்கொண்டு, பகவானை அடியேனுக்குக் கொடுப்பதாகச் சம்மதித்தார்கள். இந்த விஷயத்தில் இவர்கள் தவறக்கூடாது, உங்களுக்கு எதிரே பொன்னை நிறுத்துத் தருகிறேன், இவர்கள் வாங்கிக்கொண்ட பிறகு கண்ணனைக்கொடாவிட்டால் நான்

இவர்களை விடமாட்டேன்" என்று சொல்லியிற்க, அவர்கள் அர்ச்சகரை நோக்கி, "உங்களுக்கு அவர் பொன் கொடுத்துவிட்டபிறகு, அர்ச்சா விக்ரஹமாகிய இந்தக் கண்ணனைக் கொடுக்க உங்களுக்குச் சம்மதியோ" என்று கேட்க, அர்ச்சகர்கள, "அப்படியே யாகட்டும், அது எங்களுக்குச் சம்மதிதான்" என்று சொல்லி, கண்ணனை ஒரு துலையிலேற்றி, மற்றொரு துலையில் "பொன்னைக் கொண்டுவந்து வையும்" என்று தாசரை நோக்கிச் சொல்ல, தாசர் வீட்டுக்குள்ளே போய் மூக்குத்தியைக் கைக்கொண்டு வெளியேவர, அங்கேயிருந்தவர்கள், "நீர் வீட்டுக்குள்ளே போய்க் கொண்டுவந்தது யாது" என்று கேட்க, தாசர் தம்கையிலிருந்த மூக்குத்தியைக் காட்டினார். அதுகண்டு அவர்கள் நகைத்து, "இது கண்ணன் விக்ரஹ நிறைக்குச் சரியாய் நிற்குமோ" என்று கேட்க, தாசரும், "சரியாப் நிற்கும்" என்றுசொல்லி, "பகவானே, உன் வார்த்தையை நம்பினேன், என்னை அவமானப்படுத்தவேண்டாம்" என்றுப்ரார்த்தித்து மூக்குத்தியைத் துலையிலிட்ட மாத்திரத்தில், இதினுடைய நிறைக்குக் கண்ணனுடைய நிறைகுறைந்து மூக்குத்தித்துலை தாழ்ந்திருக்க, கண்ணனிருக்குந் துலை மேலேயுபர்ந்து நிற்கிறதை, சூழ்ந்து நின்றவரெல்லாரும் பார்த்து, அதிசயித்து நின்றார்கள். தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். முன்னே பரிஹசித்து நகைத்த அர்ச்சகர்கள் யாவரும் ஆலோசித்து "ஸ்ரீ லக்ஷ்மீநாயகன் இவர்க்கு இப்படி க்ருபை செய்தால் நமது எண்ணங்கள் எப்படி நிறைவேறும்" என்று இவரைப் புகழ்ந்து கொண்டாடி, கண்ணபிரானையும் தாசர் வீட்டில் ஸ்தாபித்து, விடைப்பெற்றுப்போய், அவ்விடத்தில் வேறொரு விக்ரஹத்தைப் பிரதிஷ்டை செய்தார்கள். இன்றும் இந்தத் துவாரகா யாத்திரையாய் வருவோர், டாங்கூரில் எழுந்தருளியிருக்கிற கண்ணபிரானைக் கண்டு வணங்கிப்போவார்கள் என்று சொல்லி, மேலே பிரமசாரி வைபவத்தைச் சொல்லத் தொடங்கினார்.

இராமதாசர் சரித்திரம் முற்றிற்று.

இருபத்துநான்காவது

பிரமசாரி சரித்திரம்.

ஆதிசேஷனால் தாங்கப்பட்ட இந்தப் பெரிய நிலவுலகத்தில், பலவுளங்களும் நிறைந்திருக்கிற ஹரித்துவாரம் என்கிற ஒரு பட்டணமுண்டு. அதில் இந்த வுலகத்தாசை சிறிதுமில்லாத ஒரு வேதி

யர் கலியாணசுவாமி யென்னும் பெயர் பெற்று விளங்கிக்கொண்டிருந்தார். அவர் இரவும் பகலும் ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்தார். இப்படி யிருக்கையில் ஒருநாள் அவர்க்குத் தீர்த்தயாத்திரை செய்யவேண்டு மென்கிற விருப்பமுண்டாகிப் புறப்படும் போது, பரிசுத்தராகிய ஒரு பிரமசாரி அவரைத் தொடர்ந்தார். இவ்விருவருமாகப் புறப்பட்டு, சதாகாலமும் ஸ்ரீ ராமநாம பாராயணஞ் செய்துகொண்டு பற்பல தீர்த்தங்களில் மூழ்கி, ஸ்ரீ விஷ்ணு க்ஷேத்திரங்களெல்லாம் சேவித்துக்கொண்டு, ஆத்மாநந்தத்தை யடைந்து, திருமாலின் மங்களகுணாநுபவம் செய்துகொண்டு மதுராபுரிக்குப் போய், யமுநா நதியில் நீராடி, மதுராபுரியில் எழுந்தருளி யிருக்கிற ஸ்ரீ கண்ணபிரானைக் கண்டு சேவித்துப் பலவகையாய்த் தோத்திரம் செய்து மூன்றுநாள் அவ்விடத்தில் தங்கியிருந்தார்கள். அப்படி யிருக்கையில், கலியாண சுவாமிக்குத் தாபசுர முண்டாயிற்று. பிரமசாரி அவரைவிட்டு நீங்கிப்போகாமல் கூடவே யிருந்து, அவருக்கு மருந்து பத்தியம் முதலானவைகளில் குறைவில்லாமல் நடத்திவந்தார். அந்தத் தாபசுரம் ஆறுமாதம் வரையில் துன்பப்படுத்திக்கொண்டிருந்து, பிறகு நீங்கிற்று. கலியாண சுவாமியும் அந்த ஆபத்தில் நின்று நீங்கிச் சௌக்கியத்தை யடைந்தார். பிறகு கலியாண சுவாமியானவர் பிரமசாரியை நோக்கி "அப்பா, என் மகள் எட்டு வயதுள்ளவள் ஒருத்தியிருக்கிறாள். நாம் நமது ஊருக்குப் போனபிறகு அவளை நீ மணம்புரிந்து கொள்வாயாக, நீ இந்த ஆறுமாதகாலமாய் எனக்குச்செய்தவுபசாரங்களுக்குக் கைம்மாறுகான்செய்யத்தக்கது வேறொன்றுமில்லை" என்றார். அதைக் கேட்ட பிரமசாரியானவர் "சுவாமீ, தாய்தந்தையர், சுற்றத்தார், ஒருவருமில்லாத எனக்குமணம் யாதுக்கு? இதையல்லாமலும், துக்கரூபமாகிய இந்த வுலகவாழ்க்கையில் அடியேனுக்குச் சிறிதும் மனம் பொருந்தவில்லை" என்றார். அதைக் கேட்ட கலியாணசுவாமி, "அப்பா, இந்த வுலகவாழ்வு எல்லார்க்கும் துக்கத்தைத் தருவதேயானாலும், ஸ்ரீ ராமநாம பாராயணராகிய உனக்குத் துக்கம் அணுகாது; உனக்குத் துக்கமுண்டாகாமற் செய்வதற்குப்பகவானிருக்கிறார்" என்றுசொல்ல, பிரமசாரி, "சுவாமி, அப்படியே தேவரீர் சொன்ன சொல்லைத் தடுக்காமல் அடியேன் மனமிசைந்தாலும், தேவரீருடைய தேவியார் மறுத்தால் என்செய்வீர்?" என்றார். அதற்குக் கலியாணசுவாமி, "அப்பா, நீ யஞ்சவேண்டாம், அவர்கள் மறுக்கமாட்டார்கள், நீ என்னோடு கூடவா" என்றழைத்துக்கொண்டு, லோகரக்ஷகனாகிய பகவானுடைய சந்நிதிக்குப்

போய், பகவானுக்கெதிரே நின்று, "ஓ பகவானே, என் பெண்ணை இந்தப் பிரமசாரிக்குக் கொடுப்பேன், சொன்ன சொல் தவறமாட்டேன், இதற்குத் தேவரீரே சாக்ஷி" என்று சொல்லி, பிரமசாரி கையில் தத்தநீர் வார்த்து, பிறகு பகவானை வணங்கி, பிரமசாரியை யழைத்துக்கொண்டு ஹரித்துவாரத்துக்கு வந்து, அவனை ஒரு இடத்தில் இருத்தி, தாம் வீட்டில் பிரவேசித்தபோது, மனைவிமக்கள் இவருடனே முகங்கொடுத்துப் பேசாமலிருந்தார்கள். சற்றுநேரம் கழிந்த பிறகு புதல்வனானவன் கலியாணசுவாமியை நோக்கி, "நீர் இல்வாழ்க்கையை மறந்து, பொருளை தேடுதலையும் விட்டு யாத்திரை போய்விட்டீர்; நெடுநாள் கழித்து வந்தவர் இவனொருவனைக்கூட அழைத்துக்கொண்டு வந்தீர்; இது மிகவும் அழகாயிருக்கின்றது" என்று பலவகையாய் அவமதித்துப் பேச, இவர் மனம் வருந்தி மனைவியார் முகத்தை நோக்கிப் "பெண்ணே, நாங்கள் தீர்த்தயாத்திரை செய்துவரும்போது மதுரையில் எனக்குத் தாபசுரம் உண்டாகி ஆறுமாதகாலம் மிகவும் துன்பப்பட்டேன்; அந்த ஆறுமாதகாலமும் இவன் என்னைப் பிரியாமலிருந்து மருந்து, பத்தியம் முதலானவைகள் உதவி என்னைக் காப்பாற்றிச் சௌக்கியப்படுத்தினான். இவன் செய்த வுபகாரத்துக்கு நாம் என்ன கைம்மாறு செய்வதென்றெண்ணி, நமதுபெண்ணை இவனுக்கு மணஞ்செய்து கொடுப்பதே நலம் என்று, ஸ்ரீகண்ணபிரானுக்கெதிரே என்பெண்ணை மணஞ்செய்து கொடுக்கிறேனென்று தத்த நீரும் வார்த்துக்கொடுத்துவிட்டேன்; ஆகையால், இந்தக் காரியத்தை நீங்களெல்லாரும் மனமொத்திருந்து நடப்பிக்கவேண்டும்" என்றார். இப்படியிவர் சொன்ன சொல்லை மனைவியானவள் கேட்டு "யாத்திரைபோன நீர் அங்கே யிறந்திருந்தால் நன்மையாயிருக்கும், இவன் செய்த வுதவிக்காக நீர் செய்த ஏற்பாட்டை நாங்கள் அங்கீகரிக்கமாட்டோம். உலகத்தில் ஒருவர்க்கொருவர் உபகாரம் செய்வதும் பிரதியுபகாரம் செய்வதுமுண்டு, அந்நியனுக்குத் தமது குலகந்நிகையை மணஞ்செய்து கொடுப்பதுமுண்டோ" என்று கோபித்துச் சொல்ல, கலியாணசுவாமியானவர், மறுபடியும் "பெண்ணே, மதுராபுரியில் கண்ணபிரானுக்கெதிரே நான் சொன்ன சொல்லைப் பழுதாக்கக்கூடாது" என்று தாழ்வாய்ச் சொல்ல, மனைவியார் அதையும் செவிகொடுத்துக் கேளாமல், "நீர் வேறொரு விவாஹம்செய்துகொண்டு ஒரு மகளைப்பெற்று அவனுக்கு மணஞ்செய்து கொடும்" என்றாள். அதைக் கேட்ட கலியாண சுவாமி, மனைவியை நோக்கி, "என் பிராணநாயகி, ஸ்ரீஹரிபக்தி

யிற் சிறந்தவனுக்கு நமது பெண்ணைக்கொடுத்தால் மிகவும் புண்ணிய முண்டாகும், என் சொல்லைத் தடுக்கவேண்டாம்'' என்று சொன் னார். அதைக் கேட்டவுடனே முன்னிலும் அதிக கோபங்கொண்டு, “இன்னமும் அந்தச்சொல்லையே சொல்லுவீரானால், என் பெண்ணைக் கிணற்றில் தள்ளுவேன்'' என்றாள். அப்படியே மைந்தரும் சொன் னார்கள். இதைக்கேட்ட கலியாண சுவாமியானவர் என்னசெய்வார்! மிகவும் துக்கித்து மறுநாள், அந்தப் பிரமசாரியை யழைத்துக்கொ ண்டு, அந்த நாட்டுககு அரசனுயிருப்பவனிடத்திற்குப் போய், நட ந்த செய்தியெல்லாம் சவிஸ்தாரமாய்ச் சொல்ல, அரசன், பிரமசாரி யை நோக்கி, “இந்த வேதியர் உனக்குப் பெண்ணைக் கொடுக்கிறே னென்று தாரைநீர்வார்க்கும்போது சாக்ஷியாயிருந்தவர்யார்?'' என்று கேட்க, “சரசுவதிக்கு மாமனாகிய ஸ்ரீ கண்ணபிரானே சாக்ஷியாயிரு ந்தார்'' என்றான். “ஆனால், அந்தப் பகவானே இங்கே யெழுந்தருளி இச்செய்தி உண்மைதான்என்றுசொன்னால், இந்தவேதியர்பெண்ணை உனக்குக் கொடுக்கலாம்'' என்றான். அதைக்கேட்ட பிரமசாரி, அப் படியே பகவான் இங்கே யெழுந்தருளிச் சாக்ஷி சொல்லும்படி செய் கிறேன்'' என்று புறப்பட்டு மதுராபுரிக்குப்போய், கண்ணபிரானை வணங்கி, “ஐயனே, அந்த வேதியர் தமது பெண்ணை யெனக்குக் கொடுக்கிறேனென்று சொல்லி, என்கையில் நீர் வார்த்ததைத் தேவ ரீர் பார்த்திருந்தீராதலால், அரசனுக்கெதிரில் நீர் வந்து நின்று சாக்ஷி சொல்லும்படி நேரிட்டது, தேவரீர் வந்து சாக்ஷிசொல்லாமற்போ னால், பிரமசாரி சம்ஸாரி என்கிற இருதிறத்திலும் சேராதவனாய்ப் ப்ரஷ்டனாகி அலைவேன், உம்மையன்றி வேறொரு துணையில்லாத என்னைக் காத்தருளவேண்டும்'' என்று தோத்திரம் பண்ணிநிற்க, பகவான் திருவுளம் இரங்கி, “அன்பனே, உன் பின்னே வருகிற என்னைத் திரும்பிப்பாராமல் நீ முன்னேபோ, திரும்பிப் பார்த்தா யானால் உன்னோடு வரமாட்டேன், அவ்விடத்திலேயே நின்றுவிடு வேன்'' என்று சொல்லக்கேட்ட பிரமசாரி திரும்பிப்பாராமல் போ னார். அப்படிப் போகிறவராகிய பிரமசாரியானவர், ஸ்ரீ லக்ஷ்மீநாத ரானவர் தமக்குப்பின்னே வருகிறாரென்பதை அவர் திருவடிச்சிலம் போசையாலே அறிந்துகொண்டேபோய், ஹரித்வாரத்தைக்கிட்டி, இன்னம் ஊர் ஒன்றரைக்கோசு தூரத்திலிருக்கிற இடத்தில், பகவா னுடைய சிலம்போசை கேட்காமையால் திரும்பிப்பார்த்தார். திரும் பிப்பார்த்த அந்த இடத்திலேயே பகவான் நின்றுவிட்டார். நின்ற பகவானானவர், பிரமசாரியை நோக்கி, “நான் முன்சொன்னபடியே

நீ போகாமல் திரும்பிப்பார்த்தா யாகையால் இவ்விடத்தில் நின்று விட்டேன், அரசனிடத்துக்கு வரமாட்டேன், அரசனை இங்கே யழைத்துவா" என்றுசொல்ல, பிரமசாரியும் இந்தச் செய்தியை அரசனுக்குத் தெரிவிக்க, அரசன் ஆச்சரியம் அடைந்து, சிங்காதனம் விட்டிறங்கிப் பிரமசாரியை வணங்கி, தன் சதுரங்க சேனைகளோடும் புறப்பட்டு வந்து பகவானைவணங்கி, இன்பக்கடலில் மூழ்கி, "இதோ இங்கே யெழுந்தருளியிருக்கிற மூர்த்தி மதுராபுரியி லெழுந்தருளியிருந்த மூர்த்தியோ அன்றோ" என்று போய்த் தரிசித்துவந்தவர்களைக் கேட்க, அவர்களும் "மதுராபுரி மூர்த்தியே இவர், சந்தேஹமில்லை" என்றுசொல்ல அரசனும் வந்ததொண்டர்களோடு பகவானை வணங்கி ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தனம்செய்து மகிழ்ந்தான். பிறகு வேதியரைக்கொண்டு சுபமுகூர்த்த மமைத்து, ஐந்துகோசு எல்லையாக மணப்பந்தல் போடுவித்து, மணத்துக்கு வேண்டியபொருள்கள் யாவும் அமைத்து, பெருஞ்சிறப்புற்று விளங்காநின்ற கலியாண சுவாமியின் புதல்வியை அலங்கரித்து. பல மங்கல வாத்தியங்களும் முழங்க, பிரமசாரிக்கு மணமுடித்து, தம்பதிகளுக்கு ஆடையாபரணதிகளை விசேஷமாகக் கொடுத்தான். தேவர்களெல்லாரும், மதுராபுரியி லெழுந்தருளியிருக்கிற ஸ்ரீ கண்ணபிரானே இவ்விடத்திற்கெழுந்தருளிச் சாக்ஷி சொன்னாரென்று புகழ்ந்து புஷ்ப வர்ஷம் பொழிந்தார்கள். மதுராபுரியில் மற்றொரு மூர்த்தியை ப்ரதிஷ்டை செய்து, இவ்விடத்தில் நூதநமாக ஒரு ஆலயம் அமைத்து அரசனனவன் மனமகிழ்ந்திருந்தான். அன்றுமுதல், பகவான் உத்தர திசையில் ஹரித்வாரத்திலும், தக்ஷிணதிசையில் பண்டரிபுரத்திலும், மேற்குத்திசையில் துவாரகையிலும், கீழ்த்திசையில் ஜகந்நாதத்திலும் எல்லாத்திக்கி லுள்ளவர்களும் வந்து வணங்கித் துதித்து உஜ்ஜீவிக்கும்படி எழுந்தருளியிருக்கிறார் என்று சொல்லி, மேலே சூரதாசர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

பிரமசாரி சரித்திரம் முற்றிற்று.

இருபத்தைந்தாவது

சூரதாசர் சரித்திரம்.

ஸ்ரீதுவாரகாபுரியில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ கண்ணபிரானுடைய திருவுள்ள முகக்கும்படியான நல்லொழுக்கம பூண்ட அக்ரூரர்

ஒருநாள் ஸ்ரீ சத்தியபாமையார் வீட்டுக்குவர, சத்தியபாமையார், வந்த அக்ரூரர் இருக்கும்படி ஆசநம் கொடுத்து, அவர் முகத்தை நோக்கி, "ஸ்ரீகண்ணபிரான் என்னிடம் வருவதொழிந்தார்; நீர்போய், அவர் முன்போல என் வீட்டுக்குவந்து என்னை யாதரிக்கும்படி விண்ணப்பஞ்செய்து, என் மநோரதத்தை நிறைவேற்றவேண்டும்" என்று பிரார்த்திக்க, அக்ரூரர் மனமிரங்கி, அந்தோ, ஸ்ரீ கண்ணபிரான் இனி வாராதிருப்பாரானால் இந்தச் சத்தியபாமையாருடைய உயிர் நீங்குமென்றெண்ணி, "தாயே, நீர் இவ்விடத்தில் மனம்வருந்தாமல் இரும், ஸ்ரீகண்ணபிரானை நான் இந்தக்ஷணமே யழைத்துவருகிறேன்" என்று சொல்லி, அந்தக் கண்ணபிரானுடைய வேஷத்தைத் தாம் பூண்டு எதிரே நிற்கக்கண்டு சத்தியபாமையார், மனவருத்தம் நீங்கி மகிழ்ச்சியை யடைந்தபிறகு, அக்ரூரர் போய்க் கண்ணபிரானுக் கெதிரே நிற்க, அவரைக் கண்ணபிரான் நோக்கி, "நான் இவ்விடத்தில் நிலைபெற்றிருக்கும்போது நீ யென்னைப்போல வேஷங்கொண்டுவந்தாயாதலால், நீ கலியுகத்தில் அந்தகனாய்ப் பிறக்கக்கடவை" என்று சொல்லி, மேலே சத்தியபாமையை நோக்கி, கலியுகத்தில் நீ ஒரு தாசியாய்ப் பிறக்கக்கடவை" என்று கூறுதலும், அப்படியே குருட்டுத்தனத்தை யடைந்த அக்ரூரர், "ஸ்ரீ லக்ஷ்மீநாதனே, தேவரீருடைய திருவருள் இதுதானோ" என்று கைகுவித்து வணங்கி, "அடியேனைத் தேவரீர் அறியீரோ, சத்தியபாமையார் துயரத்தைத் தணிக்கும்பொருட்டு இந்த வேஷம் பூண்டேன், இதைக் கண்டு, தேவரீர் என்போல வேஷம் பூண்டு வந்தாயென்று கோபித்து, இந்தக்கொடிய சாபந்தந்தீர், அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று பல இன்சொற் சொல்லி வணங்குதலும், பகவானானவர் "ஓ அக்ரூரரே, நான் நீர்கொண்ட வேஷத்தின் காரணமாகிய உண்மையை அறிவேன், நான் கோபங்கொள்ளவில்லை, இந்தவுலகத்தார் நன்மையடையும்பொருட்டு உம்மை யிவ்வாறு சபித்தேன்" என்றார். அதைக்கேட்ட அக்ரூரர், "அப்படியானால், கலியுகத்தில் தாய்வயிற்றிற் பிறவாமையாகிய அயோநிஜத்வத்தை எனக்குக் கிருபை செய்வதுமல்லாமல், தேவரீர் இந்தத் திருக்கோலத்தோடு அடியேனுக்கெதிரே நிற்கவேண்டும்" என்று ப்ரார்த்தித்துவணங்கினர். அப்போது பகவானானவர் திருவுளமிரங்கி, "அக்ரூரரே, நீர் அஞ்சவேண்டியதில்லை, என்பிரிவாற்றாமல் வருந்துகின்ற சத்யபாமையானவள், கலியுகத்தில் ஒரு தாசியாகப் பிறப்பாள், நீயும் வருவாய், அக்காலத்தில் உங்களையென் வீட்டில் சேர்த்துக்கொள்வேன்" என்று சொல்ல, "அப்படியே நல்

லது" என்று, கண்ணொளியை யிழந்து மதுராபுரியை யடைந்த அக்ரூருடைய செய்கையைச் சொல்லுவோம். எப்படியென்றால்,

சூரதாசர் என்று பெயர்பெற்ற ஒருவர், ஸ்ரீ ஹரிநாம ஸ்மரணையே செய்துகொண்டிருக்கிற மேன்மையாகிய நிலையை யடைந்திருந்தார். இவர் மிகவும்தெளிவுள்ளவராய், நன்மையைத்தருகிற பிரபந்தங்கள் பலவற்றையும் திருமாலையே பாட்டுடைத்தலைவனு யமைத்துச் செய்து, ஸ்ரீ வைஷ்ணவகுலதிலகராய் விளங்கிக்கொண்டிருந்தார். இவர் ஒருநாள், புருஷோத்தமராகிய ஸ்ரீ கண்ணபிரானுடைய திருப்பணிசெய்யும்போது, இந்தப் பிறவிக்குக் காரணமாகிய சாபத்தைத் தந்தருளின கண்ணபிரானை நினைத்து அன்போடு எதிரேவர விரும்பி, பகவானுடைய சந்நிதியையடைந்து, வணங்கித் தோத்திரஞ்செய்து, இந்தப் பிறவிகிடைத்த வரலாற்றைச் சொல்லி, ஸ்ரீஹரிநாம ஸ்மரணை செய்துகொண்டிருக்குங் காலத்தில், பெரும்புகழையுடைய ஜயவந்நிகரத்துக்கரசனொருவனிருந்தான். அவனதுபெரிய சபையில் வந்து கூடுவோராய்ப் பாடுந்தொழிலில் மஹா சமர்த்தர்களாகிய ஐஞ்ஞூறு பேருண்டு; அவர்களுக்குள்ளே, மிகவும் ஸூக்ஷ்ம புத்தியுள்ளவரும், யாவரும் வியக்கும்படி பாடுவோரும் ஆகிய ஒருவருண்டு, அவரைத் தானசேன் என்பவன் நாடிவந்து, எதிரேநின்று, "நீர் பெருஞ் சிறப்படைந்திருக்கிறீர், உமக்குச் சமமானவர் இவ்வுலகத்தில் ஒருவருமில்லை" என்று புகழ்ந்து சொல்லுதலும், இவர் அவனை நோக்கி, "ஐயா, என்னிலும் சிறந்தவர்கள் இவ்வுலகத்தில் அநேகம்பேரிருக்கிறார்கள்; பெரியதென்று எல்லாராலும் சொல்லப்பட்ட கடலும் அகஸ்தியமுனிவருடைய அங்கையிலொடுங்கி நின்றது. லோக ஸ்ருஷ்டியாகிய மஹாப்ரபாவமுள்ள பிரமதேவனும் விசுவாமித்திர முனிவருக்கெதிரே நிற்கமாட்டாமல் தோற்று ஒளிகுறைந்தான், ஆஞ்சநேயருடைய அங்கையால் கருடனும் ஒளி மழுங்கினன், இப்படி உலகமெங்கும் ஒருவருக்கொருவர் உயர்வதும் தாழ்வதும் இயல்பாய்ப் பகவானால் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் என்னை யானே சிறந்தவனென்று எப்படி நினைப்பேன்" என்று சொல்ல, அரசன் இவரைநோக்கி, "அப்படிச் சிறந்துள்ளவர்களில் ஒருவரை இப்போது எனக்குத்தெரியும்படிகாட்டும்" என்றான். அப்போது இவர், "மதுராபுரியில், ஸ்வரவிசாரத்தில் சிறந்த சூரதாசர் என்னினும் மேலானவர்" என்றார். அதைக்கேட்ட அரசன், "அப்படியானால், அவர் எத்தனை ராகங்களில் சமர்த்தர்?" என்று கேட்க, இவர், "அரசனே, அவர் எல்லா ராகங்களிலும் வல்லவர்" என்றார்,

என்று சொல்லுதற்கு முன்பே, அரசன் ஆநந்தமடைந்து, சிவிகை அனுப்பி அவரை வரவழைத்து, அவரது திருவடியை வணங்கி, ஆசநம் தந்து இருக்கச்செய்து, பூசனைசெய்து, அன்பு பாராட்டிக்கொண்டிருக்க, பாடகரெல்லாரும் ராஜசபையில் வந்து சேர்ந்தார்கள். தானசேன் என்னும் அரசன், ஸ்ரீ ஹரிதாசராகிய இவரை, அன்போடு நமஸ்கரித்து, "தாசரே, உமது சிறந்த ஞானகீர்த்தநங்களை நாங்கள் யாவரும்கேட்க விரும்பியிருக்கிறோம், ஆகையால் நீர் அருள் செய்யவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, தாசரானவர் அரசன் முதலானோரைநோக்கி, "நான் பாடுவது ஸ்ரீஹரியின்விஷயமாகிய பாடல், அது உங்கள் செவிக்கேற்குமானால் பாடுகிறேன்" என்று சொல்லி, வீணையைக் கைக்கொண்டு ஸப்த ஸ்வரங்களும் பொருந்த அமைத்து, அங்குள்ளவரெல்லாரும் ஆநந்திக்கும்படி திருமாலின் விஷயமாகிய கீர்த்தநங்களைப் பாடினார். அவைகளைக் கேட்டவர் யாவரும் ஆநந்த சாகரத்தில் மூழ்கினார்கள். இப்படியே அரசனது முயற்சியால் ஒரு மாசம் வரைக்கும் நடந்து வருகையில், அரசன் தேவிமார் ஐஞ்ஞூறுபேரும் இவரது பெருஞ்சிறப்பைக் கேள்விப்பட்டு அரசனை நோக்கி, இவர் பாட்டில் தமக்குள்ள விருப்பத்தை யறிவித்துப் பிரார்த்திக்க, அரசன், இவர் கண்ணில்லாதவராகையால் நம்முடைய தேவியார் இவர்க்கெதிரே வரலாம் என்று ஆலோசித்து, அவரைச் சபைக்கு வருவித்துக் கேட்கச்செய்தான். அப்போது பூர்வத்தில் கண்ணபிரானது சாபத்தால் அந்த அரசன் வீட்டு வேலைக்காரியாய்ப் பிறந்திருந்த சத்தியபாமையை, இவர் கண்ணால் நோக்கி, "நான் பாடுங்கானத்தை யுட்கொண்டு மௌநமாயிருக்கிறாய்" என்று சொல்லவே, அரசன் மனைவிமார், "இவர்க்குக் கண்ணில்லையென்றல்லவா இங்கு வந்தோம்? இவர்க்குக் கண்ணிருக்கின்றதே" என்று நாணி, திரையிட்டுத் தம்மை மறைத்துக்கொண்டார்கள். பிறகு இவ்விருவரும் கலந்தபோது ஸ்ரீகண்ணபிரான் அங்கே யெழுந்தருளி, அக்ரூரரையும் சத்யபாமையையும் அவர்களுடைய பூர்வ ரூபத்தை யடையும்படி செய்து, தமது ஒளியுருவத்திற் சேர்த்து, தாமும் பரஞ்சோதியாய் விளங்கினார். அரசனோடு சேர்ந்தவர் எல்லாரும் இந்த அதிசயத்தைக் கண்டு, "இவர் மஹாப்ரபாவரான தேவர்" என்று புகழ்ந்துகொண்டாடினார்கள் என்று சொல்லி, மேலே சேனாபிகர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினார்.

சூரதாசர் சரித்திரம் முற்றிற்று.

இருபத்தாறுவது

சேனாநாபிகர் சரித்திரம்.

பலவகை வளங்களும் நிறைந்த ஓரூரில், துருக்கர் மிகுதியாய் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அந்தத் துருக்கருக்கு நாவிதரா யிருப்போர்களுடைய குலத்தில் ஒருவர் அவதரித்திருந்தார். அவர் பெயர் சேனாநாபிகர் என்று சொல்லுவார்கள். அவர் வீட்டில் நாள்தோறும் ஸ்ரீ கண்ணபிரானைப் பூஜைசெய்து வணங்கி வாழ்த்தி வருவார்கள். இந்தச் சேனாநாபிகர், அவ்வூரை யாளுகின்ற அரசனிடத்தில் வேலை செய்வோராயிருந்தார். ஆனால், அந்த வேலை, நாம் ஸ்ரீ ஹரிபூஜை செய்வதற்குத் தடையாயிருக்கிறதேயென்று அந்த வேலையையும் செய்வதற்கு மனமில்லாதவராயிருந்தார். அப்படியிருக்க, ஒருநாள் இவர் நீராடி ஸ்ரீ ஹரிபூஜை செய்துகொண்டிருக்குங்காலத்தில், அரசனுடைய பரிசாரகர்கள் வந்து "அரசன் அழைக்கிறான்" என்று அழைக்க, இவர் தமது மனைவியை யழைத்து, "பெண்ணே, நான் வீட்டிலில்லையென்று சொல்லியனுப்புவாயாக" என்று சொல்ல, அவளும் அப்படியே சொல்லியனுப்ப, அவர்கள் அரசனிடத்திற் போய், "அந்த நாவிதன் வீட்டிலிருந்துகொண்டே, இல்லையென்று சொல்லும்படி மனையாளை ஏவினான்" என்றுசொல்ல, அவன் கோபங்கொண்டு, தனக்கெதிரே நிற்கிற சிலவீரரை நோக்கி, "நீங்கள் இந்த க்ஷணமே போய் அவனைக்கட்டி யிழுத்துக்கொண்டு வாருங்கள்" என்று நியமிக்க, ஸ்ரீபக்தபராதீநனான பகவானானவர் இதற்கு மனம் பொறாதவராய், தாம் நாவிதவேஷம் பூண்டுவந்து அரசனுக்கெதிரே நிற்க, அரசன் கோபந்தணிந்து, "எனக்கு முகவேலை செய்" என்று சொல்ல அப்படியே செய்தார். இவர் செய்த முகவேலையால் மிகவும் சந்தோஷித்து, "நாவிதனே, இவ்வளவுகாலம் நீசெய்த வேலையைப் பார்க்கிலும் இன்று நீ செய்த வேலை மிகவும் நன்றாயிருக்கின்றது" என்று சந்தோஷித்து, "உன்கையால் எண்ணெயிடவேண்டும்" என்று, ரத்நமயமான பொற்கிண்ணத்தில் வார்த்து வைத்திருக்கிற எண்ணெயை யெதிரே வைத்து, அரசன் தன் ஆசநத்தின்மேலிருந்தான். "அப்படியேயாகட்டும்" என்று சேனாநாபிகர் உருவங்கொண்டு வந்த பகவானானவர், தலைக்கெண்ணெயிடும்போது, குண்டலம், கிரீடம், சதுர்ப்புஜம், பீதாம்பரம், நீலமேனி இவை யாவும் அப்பொற்கிண்ணத்தில் தோன்ற, அதை அரசன உற்று நோக்கி, மெய்மறந்து

விழுதலும், அந்தப்புரத்தில் உள்ளவரெல்லாரும் வந்து சூழ்ந்துகொண்டு, அரசனை நோக்கி, இரண்டு ஜாமமாகியும் ஸ்நாநத்துக்கு வாராமலிருக்கிறீரே" என்று கேட்கும் சப்தத்தைக்கேட்டு, அரசனெழுந்து குற்றமற்ற நாபிதரைப்புகழ்ந்து, "இங்கே நீயிருக்கக்கடவை" என்று ஒரு ஆசநத்தைக் கொடுத்தலும், அந்த ஆசநத்தில் நாபிதர், இருக்காததைக்கண்ட அரசன், "நீ இந்த ஆசனத்திலிருக்காமற்போனால், என் உயிர்நிற்காது" என்றுசொன்னான். அப்போது, நாபிதர், "ஓ அரசனே, நான் வீட்டுக்குப்போய் ஸ்நாநம் செய்து வருகிறேன்" என்று விடைகேட்க, அரசன் அப்படியே விடைகொடுத்தான். அபபோது நாபிகர் வீட்டுக்குப் போய், அடப்பத்தை மூலையிலே மாட்டிவிட்டு, ஸ்ரீ கண்ணபிரான் எழுந்தருளினபிறகு, அரசன் ஸ்நானம் செய்து வந்து சபையில் வீற்றிருந்து, ஏவலாளரை நோக்கி, "நமது நாவிதன், இப்பொழுது இங்கே வரவேண்டும், அவனை வரவழையுங்கள்" என்று சொல்ல, உடனே ஏவலாளர் போய், நாபிதரை நோக்கி, "அரசன், உன்னை வரச்சொன்னு"னென்று சொல்லுதலும், நாபிதரானவர் "அரசன் கட்டளைக்குட்பட்டு நடப்பது நமது கடமையாகும்" என்று, அடப்பத்தைத் தோளில் மாட்டிக்கொண்டு அரசன் கோபங்கொண்டிருக்கிறானே யென்று, நடுநடுங்கி, ஸ்ரீ ஹரிநாம ஸ்மரணையோடும் அரசனது சபைக்குவந்தார். இவரைக்கண்டவுடனே அரசன் எழுந்துநின்றான்; அதைக்கண்டவரெல்லாரும் கல்லென்று நகைத்தார்கள். அவர்கள் நகைத்ததை அரசன் மனத்திற் கொள்ளாமல், நாபிதர் முகத்தைநோக்கி, "இன்று உதயகாலத்தில் காட்டின உமது முகத்தை இப்பொழுதும் காட்ட விரும்புகிறேன், அருள்செய்யவேண்டும்" என்று ப்ரார்த்தித்து, இவரது பாதத்தைக் கையினால்பிடிக்க, இவர் திகைத்து, "ஐயோ, நமக்குப் பாவம் நேரிட்டதே" யென்று நிற்க, அரசன், வட்டிலிலுள்ள எண்ணெயில் இவருடைய திருவுருவமுழுதும் தோன்றக் கண்டவுடனே, எழுந்து நின்று, "ஸ்ரீ லக்ஷ்மீநாதனே, ஏழைபங்காளா, இழிந்தவனாகிய என்னிடத்தில் வந்து, இழிந்த தொழிலைச்செய்த கண்ணபிரானே" என்று சொல்லி இரங்கி, நாபிகருடைய சேவடியைப் பிடித்துக்கொண்டு வணங்கி, "இன்று உம்மால் ஸ்ரீ லக்ஷ்மீநாதனைத் தரிசித்தேன்" என்று சொல்லி, பிறகு ஸ்ரீ ஹரிநாமத்தை அன்போடும் உச்சரித்து நிற்க, நாபிதரும் அரசனைப் புகழ்ந்து, தமது அடப்பத்தைத் திறந்து பார்த்து, அதில் ஸ்ரீ கண்ணபிரானால் வைக்கப்பட்டிருந்த பொருளைக் கைக்கொண்டு, வேதியரெல்லார்க்கும் அவர்கள் விருப்பத்தின்படியே

தானஞ்செய்து, அரசனுக்கெதிரே நின்று பகவானைத் தோத்திரஞ் செய்ய, அரசனும் கருடவாஹநராகிய பகவானைப் பலவகையாய்த் தோத்திரம்பண்ணினன். அந்நாள் முதலாக அரசன், சகல ஜகத் காரணராகிய ஸ்ரீஹரியின் நாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டு இனி தாய் வாழ்ந்திருந்தான். சேநாநாபிகரும் அரசனிடத்தில் விடைபெற் றுக்கொண்டு தமது வீட்டுக்குவந்து பகவந்நாம ஸங்கீர்த்தநபரராய் வாழ்ந்திருந்தார் என்றுசொல்லி, மேலே சாத்விகராஜன் வைபவத் தைச் சொல்லத்தொடங்கினர்.

சேனாபிகர் சரித்திரம் முற்றிற்று.

இருபத்தேழாவது

சாத்வீகராஜன் சரித்திரம்,

சர்வாலங்காரங்களும் நிறைந்த ஜகந்நாதம் என்னும் நகரத்தை யாளுகின்ற சாத்வீகராஜன் என்பவர் ஸ்ரீ ஹரிபக்தியிற் சிறந்தவரும், ஹரிபூஜாதுரந்தரரும், த்ரிகாலத்திலும் ஹரிபூஜைசெய்து திருத் துழாய்த் தீர்த்தத்தை ஸ்வீகரிப்பவரும், அதிதி பூஜைசெய்து பிறகு தான் உண்ணுதலாகிய விரதம் பூண்டவரும், விஸ்தாரமாக அன்ன சத்திரமுதலான தர்ம கைங்கரியங்கள் செய்துகொண்டிருப்பவரும், சகல ஜீவராசிகளின்மீதும் கிருபையுள்ளவரும், பகைவருக்குச் சிங்கம் போன்றவருமாயிருந்தார். இவர் ஒருநாள், சொக்கட்டான் ஆடிக்கொண்டிருக்கிற சமயத்தில், அந்த நகரத்திலுள்ள ஸ்ரீ விஷ்ணு வாலய ப்ரஸாதத்தை அந்தக் கோயிலர்ச்சகர்கள் கொண்டுவந்து அரசருக்குக் கொடுக்க, இவர் வலக்கை ஆட்டத்திற் குபயோகமா யிருந்ததனல் இடக்கையை ஏந்தினர். அர்ச்சகர்கள், பகவத் ப்ரஸா தத்தை அரசர் இடக்கையால் வாங்கப்படாது, நாமும் கொடுக்கப் படாது, மஹாபாபமென்று கொடாமல் போய்விட்டார்கள். பிறகு அரசர், சொக்கட்டான் ஆடி முடிந்தவுடனே "வந்த அர்ச்சகர்கள் எங்கே" என்று எதிரேயிருந்தவர்களைக் கேட்டார். அவர்கள் "பெரு மாளுக்கு நிவேதித்த ப்ரஸாதத்தை இடதுகையில் கொடுப்பது பெ ரும்பாவமென்று சொல்லித் திரும்பிப் போய்விட்டார்கள்" என்று சொல்ல, அரசர், மிகவும் மனம் கலங்கி, "நாம் என்ன அபசாரம் செய்துவிட்டோம், இந்தஅபசாரத்தை எப்படித்தீர்த்துக்கொள்ளப் போகிறோம்" என்றும், "கள்ளை விரும்பிப் பாலை விலக்குகிற கிழ்

மக்களைப்போல, ஆட்டத்தில் மனம் வைத்து, ஹரி ப்ரஸாதத்தை அகற்றினேனே'' என்றும், "இப்படிப் பகவத் ப்ரஸாதத்தை யேற்றுக்கொள்ளாத இந்தக்கையை அறுத்தெறிவதே தகுதியான தண்டனை'' என்றும் ஆலோசித்து, மந்திரியை யழைத்து, அவன் முகத்தை நோக்கி, "நான் வாசஞ்செய்கிற இந்த மாளிகையின் சாளர வழியாக ஒரு பேயானது இராக்காலங்களில் வந்து என்னை அச்சுறுத்துகின்றது; அந்தப் பேயின் கையை நீ யறுக்கவேண்டும்'' என்று சொல்ல, "மந்திரியும் அப்படியே செய்கிறே''னென்று சொல்லிப் போய் அன்றிரவில் வந்து அந்தச் சாளரவாயிலையடைந்து, பேயின் வரவு பார்த்திருந்தான். அரசர், அந்த மந்திரிக்குப் பின்புறமாய் உருமாறிவந்து, சாளரவழியில் கையை நீட்டினர். அதைக்கண்டவுடனே மந்திரியானவன் அது பேயின் கையென்று நினைத்து அதைத் தன் வாளினால் வீசி அறுத்துத் துண்டாக்கி வீழ்த்தினன். கையறுபட்டவுடனே அரசர் துடிதுடித்துக் கீழே விழுந்து மூர்ச்சித்துக் கிடக்க, மந்திரியானவன் பதறி வந்து அரசரைக் கண்டு, மிகவும் துக்கித்துச் செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்து, மூர்ச்சை தெளிந்தவுடனே அரசர் மந்திரியை நோக்கி, "நீயேன் துக்கிக்கிறாய்? என் கை செய்த பிழையை நீக்கினாய், அதனாலே உனக்கு ஒரு தோஷமுமில்லை'' என்று மந்திரியைத் தேற்றி, விடியற்காலத்திலே, தமது வெட்டுப்பட்ட கையைச்சிவிகையின்மேல் ஏற்றி, "பகவானே! அடியேனுடைய கை செய்த அபராதத்தின் பொருட்டு அதை வெட்டிச் சிக்ஷை செய்தேன். இதைவிட வேறுவகையாகிய சிக்ஷையிருந்தால் நியமித்தருளவேண்டும்'' என்று சொல்லித் தோத்திரம் பண்ணி, அந்தச் சிவிகையைக் கொண்டுபோய்க் கோயிலில் இறக்கி, அங்குள்ள அர்ச்சகர் முதலானோர்க்கு அறுபட்ட கையைக் காட்ட, அவர்கள் யாவரும் மிகவும் துக்கித்து, "தெய்வச்செயல் இப்படியாய் முடிந்தது'' என்றும், "இவ்வரசர் ஸ்ரீஜகந்நாதப்பெருமான் திருவடியின் மீது தன் மனமுழுதும் பதியவைத்து, இந்தப்பிரபஞ்சத்தில் வெறுப்புள்ளவர், அன்றியும் சற்றும் தேஹாபிமாநமில்லாதவர்'' என்றும் மிகவும் மனங்குழைந்து, கொண்டுவரப்பட்ட கையின்மேல் ஜயஜய வென்னும் கோஷத்துடனே கந்தப்பொடியை யிறைத்தார்கள். கந்தப்பொடி பட்டமாத்ரத்தில் அந்தக் கையானது தவநரூபமாய்விட்டது. அதைக்கண்ட அர்ச்சகர் முதலானோர் ஆச்சரியமடைந்து, அந்தத் தவநத்தை ஸ்ரீஜகந்நாத ஸ்வாமியின் திருவடியில் சமர்ப்பித்து எடுத்து முந்தின நாள்போலவே ப்ரஸாதத்தோடு சேர்த்து அனுப்பி

னார்கள்; அப்படி அவர்களால் அனுப்பப்பட்ட ப்ரஸாதாதிகள் வரு வதைக் கண்ட அரசன் மிகு மகிழ்ச்சியோடு கையேந்த, இறைவ னது திருவருளால் அறுபட்ட கையும் வளர்ந்ததனால் இரண்டு கைக ளாலும் ஏற்றுக்கொண்டு, தவநத்தைக் கண்ணி லொற்றிக்கொண்டு, பிறகு சிரசில் சூடிக்கொண்டார். ப்ரஸாதத்தைப் பவரோகத்தை நீக்குதற்குரிய பரமௌஷதமாகமதித்து ஸ்வீகரித்துச்சுகமாய்வாழ்ந் திருந்தார் என்று சொல்லி, கருமாபாயி வைபவத்தைச் சொல்லத் தொடங்கினார்.

சாத்வீகராஜன் சரித்திரம் முற்றிற்று.

இருபத்தேட்டாவது

கருமாபாய் சரித்திரம்.

ஸ்ரீ ஜகந்நாதம் என்னும் திவ்யதேசத்தில் கருமாபாயி என்றொ ருவர் இருந்தார். இவர் ஒருகாலைக்கொருகாலை குணம் வேறுபடா மல் நிலைத்திருந்து பல தானதர்மங்களைச் செய்பவர், நல்லொழுக்கமுள் ளவர், பூததயையுள்ளவர், எல்லாச் சீவர்கள்மேலும் கருணையுள் ளவர். இப்படியிருக்க, திருவயிற்றில் கருத்தரித் திருக்குங்காலத்தில், இவர் கணவன் தேஹவியோக மடைந்தான். பிறகு ப்ரஸவிக்குங் காலத்தில் ப்ரஸவித்தார். ப்ரஸவித்தது ஆண்குழந்தை யாகையால், அவனை மிகவும் அன்போடு வளர்த்துவந்து, அவனுக்குப் பருவம் நிறைந்தவுடனே, மணமுடித்து வைக்க, அவனுக்கு ஒரு புதல்வ னுண்டாகித் தவழ்ந்து விளையாடுங்காலத்தில், தமது புதல்வன் இறந் தான். கருமாபாயியானவர் தமது புதல்வனிறந்ததைக் குறித்து மிகு தியாய்த் துக்கித்து, "ஓ பகவானே, என்மகன் இறந்துபோகச் சங் கற்பித்த நீர் அவன் குழந்தையாகிய இவனையாகிலும் தீர்க்காயுவாகக் கிருபை செய்யவேண்டு" மென்றும், "இவனாகிலும் எனக்குதவுவா" னென்றும் ப்ரார்த்தித்து, தமது பேரனைத் தமது மகனாகவே பாவி த்து வளர்த்து வந்தார். அவன் நன்றாய் வளர்ந்து வருங்காலத்தில் நோயணுகி யிறந்தான். அவனிறக்கவே, மகனுக்குத் துக்கித்ததைப் பார்க்கிலும் அதிகமாகத் துக்கித்து, மனநிலை கலங்கி, "ஸ்ரீலக்ஷ்மீநா தனே, என்னை இந்தத் துன்பக்கடலில் மூழ்கி வருந்தும்படி செய் வது தேவரீருடைய திருவருளுக்குத் தகுதியாமோ" என்று இப் படிப் பலவகையாய்த் தோத்திரித்துப் புலம்பும்போது, ஸ்ரீஜகந்நாத ஸ்வாமியைத் தரிசிக்க வந்த பாகவதருள் சிலர், இவர் வீட்டுக்கு

வந்து, இவர் துக்கிப்பதைக் கண்டு, "உன் துக்கத்துக்குக் காரணம் யாது" என்று கேட்க, இவரும் தமது துக்கத்துக்குக் காரணமான செய்தி முழுதும் சொல்லவே, வந்த பாகவதர்கள், இவரை நோக்கி, "அம்மா, இந்தச் சம்ஸார வாழ்க்கையில் ஒரு அணுவளவும் இன்ப மில்லை, இதிலிருந்துகொண்டு துக்கிப்பதனுல் என்ன பிரயோஜநம்! இதை விட்டு ஸ்ரீ கண்ணபிரானது திருவடியைப் பற்றினுல் உமக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும்" என்று சொல்ல, இவர் அப்படியே செய்யத் துணிந்து, "ஸ்ரீதரனுகிய பகவானுடைய திருவருளுக் குரியவராகிய ஓ பாகவதர்களே, பேதையாகிய அடியேன், ஒரே நிலைமையில் நிற்கும்படியான உபாயம் சொல்லியருளவேண்டும்" என்று வேண்ட, அந்தப் பாகவதர்கள் இந்தக் கருமாபாயியாரை நோக்கி, "இவ்வுலகத்திலுள்ள சாராசார வஸ்துக்களின் நிலைமையைச் சொல்லி, ஸ்ரீ ஹரிநாமத்தை உபதேசித்து, ஸ்ரீ கண்ணபிரானுடைய விக்ரஹத்தைக் கொடுத்து, மகன், பேரன் என்பவரிடத்தில் வைத்த அன்பை இந்தப் பகவத் விஷயத்தில் வைக்கக்கடவை" என்று நியமித்தார்கள். கர்மாபாயியாரும் "அப்படியேசெய்கிறேன்" என்று மன மகிழ்ச்சியோடும் அன்போடும் உபதேசம் பெற்றுக் கொண்டு, அந்தப் பாகவதர்களைப் பலவகையாய்த் துதித்து வணங்கி உபசரித்து, அவர்கள் போனபிறகு, அன்றுமுதலாக இடையருமல் பகவத்பாகவதாராதநங்களில் மனவிருப்ப முள்ளவராய் வாழ்ந்திருந்தார். இப்படி யிருக்கும்போது, கருமாபாயியார், அந்தப் பாகவதர்களால் கொடுக்கப்பட்ட கண்ணன் விக்ரஹத்தோடு பேசியும், விளையாடியும், அப்யஞ்சநஞ் செய்வித்தும், முன்றுனையால் ஈரந் துடைத்துத் தமதுதொடையில் படுக்கவைத்தும், ஔஷதம் புகட்டியும், பாலூட்டித் தொட்டிலில் கிடத்தி ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டே தாலாட்டியும், கண்மூடி யுறங்கி விழித்தபிறகு எடுத்து மார்போடணைத்து முத்தமிட்டும், இப்படி ப்ராக்ருத சிசுக்களை வளர்ப்பதுபோலவே, அகடிதகடநா ஸமர்த்தனுன ஸ்ரீகண்ணபிரானை வளர்த்துவந்தார். வளர்த்த பிறகு ஆடையாபரணுதிகளால் அலங்கரித்து, அந்நமுண்ணும் பருவம் வந்தவுடனே, அந்நப்ராஸநம் செய்து அந்நமுண்பித்து, வயிறு குழையாமல் அடிக்கடி பார்த்து, அந்நமூட்டி வருவதையும், "எல்லா லோகங்களையும் அமுது செய்தவனே, யான் உண்பிக்கும் இந்தப் பாலன்னத்தையும் அமுதுசெய்தருள்வாயாக" என்று உபசரித்து வருவதையும் கண்ணபிரான் கண்டு, திருவுளங் கனிந்து, இவர் விருப்பத்தின்படியே வயிறு நிறைய

வுண்டு, இவர் கண் களிகூரக்கண்டு மனமகிழும்படி செய்தார். இப்படிக் கருமாபாயியார், தாயைப்போல உபசரித்து வருவதனால், ஸ்ரீகண்ணபிரானானவர் நாள்தோறும் அமுதுசெய்து வளர்ந்துவரும் நாளில், ஒரு வேதியன் அந்தக் கருமாபாயியார் வீட்டுக்கு வந்தான். இவன் நந்தன் மனையை விட்டகுறை நிறையும்படி இந்தக் கருமாபாயியார் மனையையடைந்து பெருமகிழ்ச்சியோடு தங்கியிருப்பவராகிய கண்ணபிரானை அறியாதவனாய், அங்கே வாசம்பண்ணிக்கொண்டிருந்தான். அந்தநாளிரவு கழிந்து விடிந்தவுடனே, தாயாகிய கருமாபாயியார், கண்ணபிரானை யெழுப்பி, "ஐயனே, உன் பசியைத் தணிக்கும்பொருட்டு நான் வைத்த அமுதை விரைவாக உண்ணக்கடவை" என்று சொல்லக்கேட்ட வேதியன், கருமாபாயியாரை நோக்கி, "நீ யாரை அமுதுண்ணச் சொல்லுகிறாய்" என்று கேட்க, "மேகவண்ணனாகிய கண்ணபிரானை" என்று சொல்ல, வேதியன், "ஸ்நானம் செய்யாமலா கண்ணனுக்கு அமுதூட்டுவது? அப்படிச் செய்தல் தகாத காரியமாகும்" என்று சொல்ல, கருமாபாயியார், "நான் அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி, மறுநாள் விடியுமுன்னே யெழுந்திருந்து, நீராடி, புதுநீர் கொண்டுவந்து வீடு முழுதும் மெழுகிச் சமையல் செய்தார். இப்படி நாள்தோறும் நீராடிப் புதுநீர் கொண்டுவந்து வீடுமெழுகிப் பிறகு சமையல் செய்யத்தொடங்குவதனால், உண்ணுங் காலத்துக்கு மேற்பட்டுப்போக, கண்ணன் பசி பொறுக்காமல், கோயிற் பணிவிடை செய்துகொண்டிருப்பவனாகிய ஒருவன் கனவில் வந்து, "நான் அமுதுசெய்யுங் காலமறிந்து விரைவாக ஒருவன் சமையல் செய்து வந்தான்; அவனைவிட்டுக் கருமாபாயியார் தாமேநீராடிப் புதுநீர் கொண்டுவந்து வீடுமெழுகிச் சமையல்செய்யத் தொடங்குவதனால், உண்ணுதற்கு நெடுநேரமாகின்றது, எனக்கோ பசிபொறுக்கக்கூடவில்லை. ஆகையால் முன்னே சமையல் செய்தவனைக்கொண்டே இனிமேல் சமையல் செய்ய நியமிக்கும்படி கருமாபாயியாரிடத்தில் சொல்லக்கடவீர்" என்று சொல்ல, அந்தக் கோயில் அர்ச்சகன் உடனே விழித்து, பொழுது விடியுமுன்னே, யசோதாபிராட்டியார்போலக் கண்ணனை வளர்த்து வருகிற கருமாபாயியாரிடத்திற்குவந்து, "கருணைக் கடலாகிய பகவான் என் கனவில் வந்து, முன்னே தளிகை செய்தவனை விலக்கி, நீரே மிகவும் நேரஞ் செல்லத் தளிகை செய்வதாகவும், அதனால் தமக்குப் பசி பொறுக்கக்கூடவில்லை யென்றும் சொன்னார். ஆகையால் இனி இப்படிச் செய்வதை நிறுத்தி, முன்போலவே விரைவாய்த் தளிகை

செய்யும்படி யேற்பாடு செய்தால் நன்மையாயிருக்கும், புறச்சுத்தியால் சிறிதும் பயனில்லை, அகச்சுத்தியிருந்தால் அதுவே சிறந்தது" என்று சொல்லக்கேட்ட கருமாபாயியார் முன்போலவே விரைவாய்த் தளிகை செய்து சமர்ப்பிக்க, சர்வசக்தனாகிய பகவானானவர் இனிதாயமுது செய்துவந்தார். இதைக் கண்டவர்கள் யாவரும், "பரிசுத்தமாகிய யாகம் ஹோமம் யோகம் முதலியவற்றைச் செய்வோர்களிடத்திலும் அணுகாத பரம்பொருளாகிய கண்ணனைத் தாய்போல வளர்த்துவருகிற கர்மாபாயியாருடைய புண்ணியமே புண்ணியம்" என்று புகழ்ந்து கொண்டாடினார்கள். மேலும் அவர் திருவடியில் வீழ்ந்து வணங்கித் தோத்திரம் செய்தார்கள். அன்றுமுதல் ஸ்ரீ ஜகந்நாதத்தில் ஸ்ரீ கண்ணபிரானுக்குக் கிச்சடி செய்து சமர்ப்பிப்பது வழக்கமாயிருக்கிறது என்று சொல்லி, மேலே ஜயவந்தபக்தர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினார்.

கருமாபாயி சரித்திரம் முற்றிற்று.

இருபத்தோன்பதாவது

ஜயவந்தபக்தர் சரித்திரம்.

வடதேசத்தில் ஓரூரில் ஜயவந்தர் என்றொரு வணிகரிருந்தார். அவர்க்கு ஐந்து புதல்வருண்டு. இந்த ஜயவந்தர், ஸ்ரீ ராமோபாசகராகவும், ஹரிபக்தர்களைப் பூஜிப்பவராகவும் இருந்தார். அன்றியும், தம்மிடத்திற்கு வருகிற சாதுஜநங்களுக்கும் அதிதிகளுக்கும் தவறாமல் ஸ்வயம்பாகம் கொடுத்துவருவார். இப்படியிருக்குங் காலத்தில், புதல்வராகிய ஐவரும் வளர்ந்து பருவம் நிறைந்தபிறகு, இவர் இப்படிச் சாதுஜனங்களுக்கும் அதிதிகளுக்கும் ஸ்வயம்பாகம் கொடுத்து வீணாகப் பொருளைச் செலவிடுகிறார் என்று மனம் பொறுக்காதவர்களாய், இவரைப் பல வகையாய் நிந்தித்து, பரமதுஷ்டர்களாயும், துராசாரத்தை யுடையவர்களாகியும் பிரமகுலத்தில் உற்பவித்த ராவணனை நிகர்த்தவர்களானார்கள். பிறகு ஒருநாள் தந்தையின் தர்மமார்க்கத்துக்குத் தாம் சம்மதிக்காதவர்களாய், "இந்தக்கிழவனுக்குப் பித்தம் பிடித்தாற்போல் தோன்றுகின்றது. நமது குலத்தொழிலாகிய வியாபாரத்துக் குதவுகிற பொருளை யெல்லாம் இப்படிச் செலவு செய்கிறானே, இதற்கு என்ன செய்யலாம்" என்று ஆலோசித்துச் சிலபொருள்களைத் தந்தைக்குத் தெரியாமல் மறைத்து வைத்துவிட்டு, இவரை வருத்தப்படுத்த வேண்டுமென்று நினைத்து அரச

னிடத்தில் வந்து சொன்னார்கள். அரசன் இந்த ஜயவந்தரைக்கூவி, "உமது பொருளை யெல்லாம் இப்படி வீண்செலவு செய்தால், உமக்குப் பிறந்த பிள்ளைகள் ஐவரும் எப்படி ஜீவிப்பார்கள்? அவர்கள் வியாபார ஜீவநம் செய்வதற்கு ஆதரவாகக் கொஞ்சமும் வைக்காமல் பொருள் முழுமையும் இப்படிச் செலவு செய்தால் அவர்கள் என்ன செய்வார்கள்" என்று கேட்க, இந்த ஜயவந்தர் அரசனை நோக்கி, "தேவரீருக்குத் தெரியாததொன்றுமில்லை; பொருள், புத்திரர் முதலான எல்லாம் அழிந்துபோவனவே, தருமமொன்று மாத்திரமே நிலையா யிருப்பது, ஆகையால் நான் தர்மமார்க்கத்தில் பொருளைச் செலவு செய்கிறேனேயன்றித் தீயவழியில் செலவு செய்யவில்லை" என்று சொல்லக் கேட்ட அரசன், இவர்க்குப் பித்து முதிர்ந்தது, இவரை மிகுதியாக வருத்தப் படுத்துவதைப் பார்க்கிலும் கொலை செய்வதே உத்தமமென்று தீர்மானித்துக்கொண்டு, புதல்வரை யழைத்து, "இவரைக் கொலைசெய்யத் தீர்மானித்தேன், உங்கள் சம்மதம் என்ன?" என்று கேட்டான். அதற்குப் புதல்வர், "இவன் எங்களுக்குத் தந்தையல்ல, பகைவனுவான், இவனை ஒரு பையிற்போட்டுக் கட்டி நீரில் அமிழ்ந்துபோகும்படி செய்வதே நன்மை" என்றார்கள். அரசனும் அப்படியே செய்ய நினைத்து, இவரை யொரு பையிற் புகுத்திக் கயிற்றால் வாயை வரிந்து மிதவாதிருக்கும்படி பளுவான கல்லை அந்தப் பையோடு சேர்த்துக்கட்டி நீரில்விடச் சிலரை யேவினான். அவர்களும் ஆழ்ந்த நீரில் கொண்டுபோய் விட்டு வந்தார்கள். இவர் நீரில் அழுந்திப் போவதற்கு முன்பே பரமகாருணிகரான பகவானானவர் பூர்வகாலத்தில் திருப்பாற்கடல் கடையும்போது மந்தரகிரியானது நீரிலழுந்தாமல் மிதக்கும்படி ஆமை யுருவாகித் தாங்கினதுபோல, இவரையும் தாங்கிக்கொண்டு நிற்க, ஜயவந்தர் மேலே மிதந்துகொண்டிருப்பதை வேந்தன் பார்த்து, "சர்வாந்தர்யாமியாகிய பகவானே யிவர்க்கு உதவியாயிருக்கும்போது, எம்போல்வார் செய்யும் தீங்கு இவரை என்ன செய்யும்? இவரைக் கொல்ல எண்ணினது நமக்குத் தகாத செய்கை" என்று பயந்து, விரைந்து வந்து இவரைக் கரையேற்றிக் கட்டவிழ்த்துவிட்டு, மிகவும் உபசரித்துத் திருவடியில் வீழ்ந்து வணங்கி நிற்கக்கண்ட புதல்வரும் வந்து திருவடியில் வீழ்ந்து வணங்கினார்கள். பிறகு அரசனும் புதல்வரும் "நாங்கள் செய்த பிழையைப்பொறுத்து எங்களை ரக்ஷிக்கவேண்டும்" என்று தோத்திரம்பண்ணிநிற்க, ஜயவந்தர், அரசனையும் புதல்வரையும் வாழ்த்தினார். அரசன் அன்றுமுதல் இந்த ஜயவந்த பக்த

ருக்கு அடியவனுகித் தொண்டுசெய்து வாழ்ந்திருந்தான். புதல்வரும் தந்தையைப்பூஜித்து இனிதாய் வாழ்ந்திருந்தார்கள் என்றுசொல்லி, மேலே சுரதாசர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

ஜயவந்த பக்தர் சரித்திரம் முற்றிற்று.

முப்பதாவது

சூரதாசர் சரித்திரம்.

முற்காலத்தில் அத்திநபுரியை யாண்டுகொண்டிருந்த அகபர் அரசனை அடுத்து அவனுக்கிதமாய் நடந்துகொண்டு, அவனது தயையைச் சம்பாதித்து, மதுரா நகரத்துக்குத் தலைவராயிருந்த சுரதாசர் என்பவர் மதுரை, கோகுலம், பிருந்தாவநம் இவை யாவும் புண்ணிய ஸ்தலங்க ளாகையால், அந்த ஸ்தலங்களுக்கு வருகிற சாது ஸஜ்ஜநங்களுக்குத் தகுதியாகிய உபசாரங்கள் செய்து, சுவை மிகுந்த திவ்யாந்நங்களை வழங்கிவந்தார். இப்படித் தினந்தோறும் செய்து வருவதனல் தாம் நல்லவழியிற் சம்பாதித்த பொருள்களெல்லாம் செலவாய்விட, மேலே செலவு செய்வதற்குப் பொருளில்லாமல், இனி வருகிற சாதுஜநங்களின் ததீயாராதநத்துக்கு எந்தப்பொருளை உபயோகிப்போ மென்று வருந்தி, நம்மை நாடிவருகிறவர்களுக்குக் கொடாத பொருளினல் பயனென்ன? நமது அரசனுடையபொருளை உபயோகிப்போம், அரசன் அறிந்து தண்டித்தாலும் தண்டனையை ஏற்றுக்கொள்வோம் என்று தீர்மானித்துக்கொண்டு, தம்வசத்திலிருந்த ராஜதநத்தையெல்லாம் எடுத்து, அதைக்கொண்டு சாது ஸஜ்ஜநங்களை யுபசரித்தும், தர்மசாலைகளுக்கு உதவியும், தர்மசாலைகள் கட்டுவித்தும், தாம் வாசம்பண்ணுகிற மதுராபுரியில், திருத்துழாய் மாலையை யணிந்த திருமாலை, மதநமோஹநன் என்னும் பெயரால் ப்ரதிஷ்டை செய்தும், அந்த ப்ரதிஷ்டையின் விஷயமாக எண்பது லக்ஷத்துப் பதினுயிரம் வராகன் செலவு செய்தும், இன்னம் அநேக தர்ம கைங்கரியங்கள் செய்ய நினைத்துக்கொண்டும் இருந்தார். இப்படி இவர் செலவு செய்வதைக் கண்டவர்கள், அத்திநபுரிக்கு அரசனுகிய அகபரிடத்தில் வந்து, "வேந்தனே! சுரதாசர் என்பவர் உமது பொருள் முழுதும் வீண்செலவு செய்கிறார்" என்று சொன்னர்கள். அதைக்கேட்ட அரசன், தன் சேவகரை நோக்கி, "அங்கே நீங்கள் விரைந்துபோய்ப் பொக்கசத்தில் உள்ள பொருள்களோடு சுரதாசரையும் தக்ஷணமேகொண்டுவாருங்க"ளென்று நியமித்தான்; அன்றி

யும் தன் கைச்சீட்டாகிய திருமுகத்தையும் கொடுத்தனுப்பினன். சேவகர்கள் உடனே புறப்பட்டு விரைந்துபோய் மதுராபுரியை யடைந்து, பகவத் பக்தராகிய சூரதாசரைச் சேர்ந்து, அரசன் கொடுத்த திருமுகத்தைக் கொடுத்து, அந்தப்புரியில் நடந்த செய்தியையும் சொன்னார்கள். சூரதாசர் அந்தத் திருமுகத்தை வாசித்து, அதிலெழுதப்பட்டிருந்த சங்கதிகளெல்லாம் தெரிந்துகொண்டு, அஞ்சாமலிருந்து, "அரசன் என்மேல் வீணாகக் கோபங்கொண்டான், அரசன் கொடுத்த பொருள் முழுமைக்கும் ஈடான மாணிக்கங்கள் சேகரித்து வைத்திருக்கிறேன், அந்த மாணிக்கங்களை அரசன் கண்டால் என்மீது மிகவும் அன்புசெய்வான், நீங்கள் இந்த ரத்நமண்டபத்தில் இருங்கள்" என்று சொல்லிவிட்டுத் தமது வீட்டுக்குள்ளே போய், தகுதியாகிய ஒரு பெட்டியில் மாணிக்கத்துக்குப் பதிலாகப் பாறற் கல்லை நிறைத்து, "வேந்தனே! உன் பொருள்முழுதும் வந்த நல்லோர்களுக்கும், தர்மசாலைகளுக்கும், கோயிலுக்கும் உபயோகித்து உன் புகழை ப்ரகாசிக்கச் செய்தேனேயன்றி வேறே வீண்செலவு செய்திலேன், உன் பொருள் உன்னிடத்தில்வந்து சேரவில்லையென்று கோவங் கொள்ளவேண்டாம், நீ கோவிப்பாயென்றஞ்சியே இன்றிரவில் எங்கேயாகிலும்போய் மறைந்திருக்கலாமென் றெண்ணியிருக்கிறேன்" என்று ஒரு கடிதத்திலெழுதி அதையும் அந்தப் பெட்டியில்வைத்து மூடி, அரசனல் அனுப்பப்பட்டவர்களிடத்தில் கொடுத்து, "நான் வரலாமென் றெண்ணியிருக்கையில் நீங்கள் வந்துவிட்டீர்கள், மிகவும் நன்மையாயிற்று" என்று சொல்லி, அவர்களுக்குப் பொன், ஆபரணம், ஆடை முதலியவற்றை மிகுதியாகக் கொடுத்து, அவரோடு கூடியுறங்கி, நடுராத்திரியில் அவர்களறியாமல் எழுந்து போய் ஒரு காட்டை யடைந்து, ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்து கொண்டிருந்தார். இங்கே, சூரியோதய மானவுடனே சேவகர்கள் எழுந்து பார்த்து, சூரதாசரைக் காணாமல் "நாம்போய் நமது அரசனுக்கு என்ன சொல்வோம்" என்று பயந்து, அந்த வூரிலும் அடுத்த வூர்களிலும் தேடிக் காணாமையால் "அரசன் கோவிப்பானே, என் செய்வோம்" என்று கவலைகொண்டு, பெட்டியைத் தலைமீது சுமந்து வந்து அரசனுக் கெதிரேவைத்து நடந்த செய்தியைச் சொன்னார்கள். அரசன் தன் மந்திரியாகிய பிரபலனென்பவனைக்கொண்டு பெட்டியைத் திறக்கச்செய்து, அதில் பாறற்கற்கள் நிரப்பியிருப்பதைப் பார்த்து, முன்னேகோள்சொன்னவன்மேல்கோபங்கொண்டு அவனை நோக்கி, "தாஸர் வீண் செலவு செய்கிறாரென்று நீ சொன்னது

பொய்தானே! அவர் வீண்செலவு செய்யவில்லை, என் பொருளை நல்ல விஷயத்தில் உபயோகப்படுத்தி யிருக்கிறார். உண்மையை யெழுதி வைத்துவிட்டு மறைந்துபோகும்படி செய்தாயல்லவா? நீ வைஷ்ணவ த்ரோஹி" என்று மிகவுங் கோபித்துக் கடிந்து பேசி, கடிதத்தை நன்றாய்ப் பார்த்து, "இது சூரதாசர் கையெழுத்தே, சந்தேஹமில்லை" என்று துணிந்து, கண்ணீர் பெருகச்செய்து, நல்ல மந்திரியாகிய ஒருவனை நோக்கி, மூன்றுலகங்களிலுந் தேடிப் பார்த்தாலும் சூரதாசரைப்போல ஒருவரைக் காணக்கூடுமோ? என் மதத்தினால் அவர் அஞ்சும்படி கோபித்தெழுதினேன்" என்று மிகவும் மனம்வருந்தி, "அவர் எங்கே யிருந்தாலும் தேடி யழைத்துவந்து என் இரண்டு கண்ணும் களிக்கும்படி யெனக்கெதிரே விட்டாலன்றி நான் உயிர்தாங்கி யிருக்கமாட்டேன்" என்று சொல்ல, மந்திரியானவன், உடனே எங்கேயிருந்தாலும் தேடிக்கண்டு அழைத்துவரத் தகுந்த சமர்த்தர்களாகிய சில தூதர்களை யனுப்பினான். அப்படியே அவர்களும் பல இடங்களில் தேடிக்காணாமல், முடிவில் ஒரு பசுமையாகிய வனத்தில் ஹரிபஜனை செய்துகொண்டிருந்த சூரதாசரைக் கண்டார்கள்; கண்டு, "நீர்செய்த தர்மகைங்கர்யத்துக்காக அரசன் சந்தோஷித்து, உம்மைக் காண விரும்பி, எம்மை உம்மிடத்துக்கனுப்பினான்" என்று சொல்ல, சூரதாசர் தெளிந்து நினைக்கலுற்றார்; எல்லாவிடத்திலும் நிறைந்திருக்கின்ற எம்பெருமானுடைய செயல் இதுவென்று, சந்தேஹமில்லாத மனத்தை யுடையவராய்த் தூதரோடு வந்து, அத்திநபுரியை யடைந்து, அரசனைக்கண்டு, சலாம் செய்ய, அரசனும் இவரைக்கண்டு, ஆசநத்திலிருந்து இறங்கிவந்து இவரைத் தழுவிக்கொண்டு, அன்பு மிகுந்தவனாய், "உமக்குச் சமானமானவர் ஒருவருமில்லை, என்பொருளை நல்லவழியில் உபயோகித்து என்னைப் புனிதனாக்கிவிட்டீர், நீர்செய்த வுதவிக்குக் கைம்மாறாக யாது செய்வேன்? உமது பெருமையை யறியாத ஒரு உன்மத்தன் சொல்லைக்கேட்டு, உமது மனம் வருந்தச்செய்தேன், என் பிழையைப்பொறுத்து ரக்ஷிக்கவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, சூரதாசர் "உலகவாழ்க்கை துக்கரூபமா யிருக்கிறதென்று அதனை யொழித்திருந்த என்னை இன்னமும் அரசியலுக்கேற்க நடந்துகொள்ளும்படி நியமிக்கலாமோ" என்று சொல்லுகிற சூரதாசரை, அரசன் இனிதாய் நோக்கி, "நீர் மனம் வெறுத்து இந்த ப்ரபஞ்சவாழ்வை விட்டிருக்கிறீர் என்கிற உமது பெருமையை யறிந்திருக்கிறேனாயினும், உம்மைவிட நினைத்திலேன், முன்னே நீர் செய்துகொண்டிருந்தபடி

யே இன்னமுஞ் செய்யலாம், நீதிமார்க்கத்தால் நீர் அவ்விடத்தில் சம்பாதிக்கும்பொருள், ஸாது ஸஜ்ஜநங்களுக்கும் தர்மங்களுக்கும் போதாதானால் என்னிடத்துள்ள பொருளையும் எடுத்துச் செலவிடலாம், அடியேனையும் ஸ்ரீ லக்ஷ்மீநாதனுக்கு அடிமையாகச் செய்துகொள்ளவேண்டும்" என்று ப்ரார்த்திக்கக்கேட்ட தாசரானவர், அரசன் மனத்தையும், அவன் தம்மிடத்தில் வைத்திருக்கிற அன்பையும், அவன் சொல்லும் இனியசொற்களையும் குறித்து மிகவும் சந்தோஷித்து, இவனை ஸ்ரீ ஹரிபக்தனுகச் செய்துகொண்டால், நாம் செய்கிற ஸாது ஸஜ்ஜந சமாராதந முதலானவைகளுக்கு இவனால் பேருதவியைப் பெறலாம் என்று நிச்சயித்து, அரசனை நோக்கி, "ஸ்ரீ ஹரிதாசர்களுக்குத் தினந்தோறும் யான் செய்துவருகிற ததீயாராதந முதலானவை தடையில்லாமல் நடக்கும்படி தயைசெய்யவேண்டும்" என்று சொல்ல, அரசன் துருக்கனுயிருந்தாலும், இவரது ண்டுகோளுக்கு இரங்கித் "திரிகரண சுத்தியாய் அப்படியே செய்கிறேன்" என்றான். அதன்பிறகு அவன் இந்தச் சூரதாசர் மூலமாகக் கண்ணபிரானுக்கு அன்பனாகி, மனமகிழ்ச்சியோடு கொடுத்த திரவியத்தைக் கைக்கொண்டு, மதுராபுரிக்குப்போய், கருணைக்கடலாகிய மதநமோஹநப் பெருமானைத் தரிசித்திருந்தார். அன்றுமுதலாக ஹரிதாசருக்கும், அடுத்தவர்க்கும், மற்றெல்லாருக்கும் நல்ல போஜநம், ஆடை, ஆபரணம் முதலானவைகளை அவர்கள் விரும்பினபடியே நிர்ப்பயராய்க் கொடுத்து, பரமாத்மனுகிய ஸ்ரீ கண்ணபிரானைப் பஜனை செய்துகொண்டு, அவனது திருவுருவை யிடைவிடாமல் மனத்தில் அமைத்துக்கொண்டு வாழுங்காலத்தில், திருமாலடியார்க்குத் தொண்டுசெய்வதில் இவர்போலச் சிறந்தவர் ஒருவருமில்லையென்று எல்லாரும் அறிந்து கொண்டாட, ஒருநாள், இவர், ஸ்ரீ கண்ணபிரான் கோயிலுக்குச் சிவிகைமேலேறிப்போகும் வழியில் செருப்புக்காலோடு ஒரு பாகவதர் வந்து, தாசரைக் கண்டு, "நான் கோயிலுக்குப் போய்க் கண்ணபிரானைச் சேவித்து வருமளவும், இந்தச் செருப்பைக் காத்துக்கொண்டு இங்கேயிரும்" என்று சொல்ல, தாசரானவர் உடனே சிவிகைவிட்டிறங்கி, செருப்பை வாங்கித் தமதாடையால் மூடி மார்பில் அணைத்துக்கொண்டு நின்றார். அந்தப்பாகவதர் கோயிலுக்குப் போய்ச் சூரியாஸ்தமநம் வரைக்கும் வாராதிருந்தார். இவரும் மனஞ்சலிக்காமல் அந்த இடத்திலேயே நின்றார். பிறகு பாகவதர்வந்து இவரது ஸாதுசேவைக்கு மனமகிழ்ந்து செருப்பை வாங்கிக்கொண்டுபோய்விட்டார். இவரும் கோயிலுக்குப் போய் ஸ்ரீ கண்ணபிரானைச் சேவித்து மீண்டு மனைக்குவந்து இனிது

வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே ரசிகமுராரிபக்தர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

சூரதாசர் சரித்திரம் முற்றிற்று.

முப்பத்தோன்றுவது

ரசிகமுராரிபக்தர் சரித்திரம்,

உலகத்தா ரெல்லாரும் புகழ்தற்குரிய பெருஞ் சிறப்பமைந்த மதுராபுரிக்கருகில் சாயம் என்னும் ஊரில், ஸ்ரீ ஹரிபக்தியிற் சிறந்தவராகிய முராரிபக்தர் என்பவர் ஒருவர் இருந்தார். இவர் தினந்தோறும் காளிந்தி நதியில் மூழ்கி ஸ்ரீ ஹரிபூஜைசெய்து, ஸ்ரீ வைஷ்ணவராகிய பாகவதருடைய திருவடிகளை விளக்கி ஸ்ரீ பாததீர்த்தத்தை ஸ்வீகரித்த பிறகு, மிக்க சுவையமைந்த பதார்த்தங்களோடு கூடிய போஜநத்தை அவர்கள் அமுது செய்யப்பண்ணி அவர்களைத் திருமாலுருவாகவே பாவனைசெய்து அவரிடத்தில் மிக்க அன்பு பாராட்டிவந்தார். அவர்க்கு அநேகமான அடியார்களுண்டு; அவர்களும் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநத்தாலேயே காலங் கழிப்பவர்கள். இப்படியிருக்குங் காலத்தில், ஒருநாள், ஹரிதாசர் பலர் இவரிடத்துக்கு வந்தார்கள். அவர்களைக் கண்டவுடனே, அவர்கள் யாவருக்கும் ஆசநங்கொடுத்து இருக்கச்செய்து, தமது அடியார்களில் ஒருவரையழைத்து, "இந்தத் திருமாலடியாரைத் திருவடிவிளக்கி ஸ்ரீ பாததீர்த்தம் கொண்டுவாரும்" என்று நியமிக்க, அப்படியே அந்தச்சீடர் அவர்களைத் திருவடிவிளக்கி வரும்போது, அவர்களில் ஒரு வேதியனுக்கிருக்கிற பிணியைக்கண்டு, அருவருத்து, அந்த வேதியனையொழித்து மற்றவர்களுடைய திருவடிகளை விளக்கி ஸ்ரீ பாததீர்த்தத்தைக் கொண்டுவந்து, தமது குருவுக்கு எதிரேவைக்க, அதைக் குருவாகிய முராரிபக்தர் ஸ்வீகரித்து, "இதில் ருசியில்லையே, அப்படி ருசியில்லா திருத்தற்குக் காரணம் யாது" என்று அந்தச் சீடரைக் கேட்க, அவர் சொல்லுவதற்கு நாணி நிற்க, "பக்தரானவர் உண்மையைச் சொல்லும்" என்று கேட்க, சீடர், "ஐயனே, வந்தவர்களில் ஒரு வேதியன் அசுத்தமான சரீரத்தை யுடையவனாகவும், கால்கள் வெடித்துப் புண்ணாகிக் கசிந் தொழுகப்பெற்றவனாகவும் இருப்பதைப் பார்த்து அவனைத் தொடவும் என் மனம் இசையாமையால், அவ்வொருவனை யொழித்து மற்றவருடைய திரு

வடிகளை விளக்கி ஸ்ரீ பாத தீர்த்தம் கொண்டு வந்தேன்; இது தான் அடியேன் செய்த பிழை" என்றார். அதைக் கேட்ட முராரி பக்தரானவர், "அப்படியா" என்று சொல்லிவிட்டு, விரைந்து போய், அந்தப் பிணியாளனாகிய வேதியன் பாதங்களைப் புதுநீரால் கழுவி, அந்தத் தீர்த்தத்தைக் கங்காதீர்த்தத்திலும் சிறந்ததாகப் பாவித்து உட்கொண்டு "அதிக மாதுர்யமா யிருக்கிறது" என்று சொல்லிக் களிப்பதை, மற்ற வேதியர்கள் பார்த்து அதிசயித்து, "இவரது மனநிலையைக் கண்ணபிரானே யறியவல்லனன்றி, இவ்வுலகத்தில் வேறொருவரும் அறிய வல்லரல்லர்" என்று புகழ்ந்து, "இவர், பாகவதர்களுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தின் சுவையை யறியவல்ல ராதலால் இவர் பெயர் இன்றுமுதல் ரசிகமுராரி பக்தர் என்று சொல்வது தகுதியாயிருக்கும். இவர்க்கு ஸ்ரீகண்ண பிரான் க்ருபை செய்து இவரது மனோரதங்க ளெல்லாவற்றையும் முற்றுவிக்கக்கடவர்" என்று வாழ்த்திப் போனபிறகு, இந்த ரசிக முராரி பக்தர் துதிக்க அவ்விடத்துக்கு வந்த தயார்ணவயோகி, ஸ்ரீ ஹரிபூசை செய்துகொண்டிருக்கையில், ஒரு அரசன் வந்து அவர் திருவடியை வணங்கி, அவர் செய்யும் பூஜையை நோக்கி மகிழ்ந்து, அவர்க்கு நான்கு கிராமங்களைத் தந்து இந்தகிராமங்களின் வருமானத்தைக்கொண்டு, உமது ஹரிபூஜை முதலானவைகளைக் கிரமமாய் நடத்திவாரும்" என்று சொல்லிப்போன பிறகு, தயார்ணவ யோகியானவர், இது ஸ்ரீகண்ணபிரானது திருவருளே யென்று களித்து, நாள்தோறும் தாம் செய்யவேண்டிய ஹரிபூஜை முதலானவைகளைக் குறைவற நடத்தி வந்தார். இப்படி யிருக்கையில், அந்தச் சாயம் என்னும் ஊருக்கு ஓரதிகாரி நூதனமாய் வந்து குடிகளை வருத்துமியல்புள்ளவனா யிருந்தான். அவன் இவருடைய நான்கு கிராமங்களின் பொருள் வரவைத் தான் ங்கக்கொண்டு, "இந்தக்கிராமங்கள் இவர்க்குச் சும்மா கிடைத்ததனால் இவர்க்குக்கொடே"னென்று அநியாயஞ்செய்ய, அந்த வூராரெல்லாரும் கூடிவந்து, "அந்தக் கிராமங்கள் நான்கும் இந்தத் தயார்ணவ யோகிக்கு ஒரு அரசனால் கொடுக்கப்பட்டன, அவற்றின் வரவுப்பொருளை அவருக்கே கொடுப்பது தர்மமாகும்" என்று பலவிதமாகச் சொல்லியும், சிரித்துக்கொண்டே "இவர்க்கு யான் கொடுக்கவேமாட்டேன்" என்றான். இப்படி அதிகாரியானவன் சொல்லிவிட்டுப் போனபிறகு, தயார்ணவரானவர் தமது சிடராகிய முராரிபக்தருக்கு ஒரு திருமுகமெழுதி ஒரு ஆளிடத்தில் கொடுத்து அனுப்ப, அவன் கொண்டு வந்து, பக்தர் அமுது

செய்துகொண்டிருக்குங்காலத்தில் கொடுக்க, இடது கையினல் வாங்கித் தலைமீது வைத்துக்கொண்டு, பிறகு கண்களிலொற்றி, விரைந்தெழுந்து, உண்ட கை கழுவாமல் ஓடிக் குருவின் திருவடியை வணங்கிநிற்க, அவர் "இது என்ன அலங்கோலம்" என்று கேட்க, பக்தர், "ஸ்வாமீ, தேவரீருடைய திருமுகம் பார்த்தவுடனே கை கழுவாமலோடிவந்தேன்" என்று சொல்ல, தயார்ணவர் மகிழ்ந்து "உம்மைப்போலக் குருபக்தியிற் சிறந்தவர் ஒருவருமில்லை" என்று சொல்லிக்கொண்டேயிருந்து பக்தர் வாயையுங் கையையும் கழுவிவிட்டபிறகு, தமக்குநேரிட்ட சங்கடத்தைச் சொல்லி, "அதிகாரியினிடத்திற் போய், ஸத்கைங்கர்யத்தில் உபயோகப்படுவதாகிய நமது நிலத்தைக் மீட்டுக் கண்ணபிரான் திருநாமத்துக்கே நிலச்சீட்டு முதலிய ஏற்பாடுகள் செய்து வருவதற்குரியவர் நீரேயன்றி வேறொருவருமில்லை" என்று சொல்ல, "அப்படியே யாகட்டும்" என்று அந்த வூருக்கு வருதலும், அவ்வூராரெல்லாரும் வந்து இவரைச் சூழ்ந்துகொண்டு, "இங்கே தேவரீர் எழுந்தருளுவதற்குக் காரணம் யாது" என்று கேட்க, பக்தரானவர் தமது ஆசாரியருடைய குறையைச் சொல்ல, அவ்வூரார் எல்லாரும் மனம்நொந்து, "இவ்வூர்க்கு அதிகாரியா யிருப்பவன் துடுக்கன், மிகுந்த துர்மார்க்கன், ஸ்ரீ வைஷ்ணவத்ரோஹி, மிடுக்கன், காதகன், இரக்கமில்லாதவன், மிகுந்த கோபி, கடுஞ்சொல்லன், இப்படிப் பல துர்க்குணங்க ளுள்ளவனுக்குத் தேவரீர் போய்ச்சொல்லும் வார்த்தை செவிக்கேறுமா? ஏறாது, ஆகையால் அவனிடம் போகலாகாது" என்று சொல்லக்கேட்டு, பக்தரானவர், அவர்களை நோக்கி, "அவன் குணங்களைக் குறித்து யோசிக்க வேண்டியதில்லை, குருவாக்ய பரிபாலநம் செய்வதே எனக்குச் சிறந்த தர்மம்" என்று சொல்லிவிட்டு, அவனிடத்தை நாடிப் போகிறபோது வழியில் கண்டவர்கள் அதிகாரியிடத்தில் இவர்வருஞ் செய்தியைச் சொல்ல, அவன் ஒரு யானைப்பாகனை யழைத்து, "நீ யானையை யோட்டிக்கொண்டுபோய், என்னை நாடிவருகிற அந்த வைஷ்ணவன்மேற் செலுத்திக் காலினல் துவைப்பித்து உயிர் நீக்கி வருவாயானல், உனக்குவேண்டிய பொருள்களைக் கொடுப்பேன்" என்றான். அப்படியே அந்த யானைப்பாகன் யானையை யூர்ந்துவரும்போது கண்ட சிலர் ஓடி, சிஷ்யகோஷ்டியோடு கூடி ஸ்ரீ ஹரிபஜனை செய்துகொண்டு வருகிறவராகிய முராரிபக்தருக்கு இந்தச் செய்தியைச் சொல்ல, பக்தரும் கேட்டு, "குரு கார்யத்திற் பிரவேசித்து நாம் இறப்பதும் நன்மையையே தரும்" என்று சிறிதும் அஞ்சாத

வராய் விரைந்து யானைக்கெதிரேவர, சீடரெல்லாரும் பயந்து ஓடத் தலைப்பட்டார்கள். அதைக்கண்ட பக்தர், சீடர்களை யழைத்து, "நீங்கள் உடல் பொருள் ஆவி மூன்றையுங் கொடுத்து என்னிடத்தில் உபதேசம் பெற்றீர்கள், இப்போது தேஹாபிமாநிகளாய் இப்படியோடுவீர்களானால், உங்கள் கழுத்தி லணியப்பட்டிருக்கிற துளசிமணிமாலை நீங்கும்படி நேரிடும்" என்றார். இதைக்கேட்ட சீடர்கள், உயிர் பிழைத்தால் போதும் என்று துளசிமணிமாலைகளைக் கழற்றிக் குருவுக்கெதிரே வைத்துவிட்டு, "இந்த மாலைகள் எங்கள் கழுத்தில் இருந்தாலல்லவோ யாங்கள் உமது சீடரென்று சொல்லப்படுவோம்? உமக்கு நாங்கள் சீடரா யிருக்கவும் வேண்டாம், எங்களுயிர்களை இழக்கவும் வேண்டியதில்லை" என்று ஓடினார்கள். பிறகு, முராரிபக்தர் தனியராகி ஸ்ரீஹரியை உட்கொண்டுவர, ஓடினசீடரும் அவ்வூராரும் காணும்படி அந்த யானையானது வந்து இவருடைய திருவடியை வணங்கிநின்றது; இதைக்கண்ட யாவரும் அதிசயித்தார்கள். அப்போது பக்தரானவர் தமது கையிலிருந்த மாலைகளை யெல்லாம் ஒரே மாலையாய்ச்செய்து, யானையின் கழுத்திற்போட்டு, அதின்செவியில் ஸ்ரீஹரி நாமத்தை உபதேசித்து, "இனி உன் மதச்செருக்கு நீங்கி, நல்லோர்களுக் கிணங்க நடந்துகொள்வாயாக" என்று சொல்லி, பிறகு அந்த அதிகாரியினிடத்துக்குப் போகும்போது, இவரால் நடந்த அற்புதங்களை முன்னே யோடிச் சொல்லக் கேட்ட அந்த அதிகாரியானவன், பயந்து, எதிர்கொண்டு வந்து, "ஐயனே, உம்முடைய மஹிமையை யறியாமல் மூர்க்கனாகிய நான் செய்த அபராதத்தைப் பொறுத்தருள வேண்டும்" என்று ப்ரார்த்தித்து, மேலும் "ஸ்வாமீ, தேவரீருக்கு எது வேண்டுமானாலும் தருகிறேன், கேளும்" என்று சொல்லுதலும், பக்தரானவர், "எனக்கு ஆசாரியர் நிலத்தையும் என்னால் உபதேசிக்கப்பெற்ற யானையையும் கொடுத்து, யான் என்னிடம் சேரும்படி செய்யக்கடவை" என்று சொல்ல, அதிகாரியும் அப்படியே நிலச்சீட்டுமுதலியவும் யானையும் கொடுக்கப் பெற்றுக்கொண்ட பக்தரானவர் தமது குரு இருக்குமிடத்தை யடைந்து, அவர் திருவடியை வணங்கி, அதிகாரி யிடத்துக்குப் போனபோது நடந்த செய்தியையெல்லாம் சொல்லி, நிலப்பத்திரத்தையும் யானையையுங் கொடுத்தார். அந்த யானையானது அன்றுமுதல் ஸ்ரீ ஹரியின் திருநாம ஸங்கீர்த்தநங்களைக் காதாரக்கேட்டுக்கொண்டு அவரிடத்தில் வாழ்ந்திருந்தது. இது பகற்காலத்தில் காட்டுக்குப்போய் இலைகளையும், மடத்துக்கு வேண்டிய விறகு முதலியவற்றையும் வந்திக்கொண்டு

வந்து குளித்துவிட்டு, ஹரிதாசர் உண்ட சேஷத்தையுண்டு வாழ்ந் திருப்பதைக் கண்டவர் யாவருங் களித்து அதிசயிக்க, யானையானது தான் பெற்றபேற்றைக்குறித்து, "யான் முற்காலத்தில் என்னதவஞ் செய்திருந்தேனே, இப்படிப்பட்ட ஹரிதாசருடைய சேவையில் என்றும் இருப்பதும், இவர்க்கு ஊழியஞ்செய்வதும், இவர் உண்ட மிச்சிலை யுண்பதும், சதாகாலமும் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநத்தைக் காதுகுளிரக் கேட்பதும் ஆகிய இவை யாருக்குக் கிடைக்கும்" என்று மிகுதியாய்க் களித்திருந்தது. இப்படிப் பலநாள் கழிந்தபிறகு ரஸிகமுராரிபக்தர், தமது ஆசிரியரிடத்தில் விடைபெற்றுப் புண்ணிய தீர்த்தங்களில் நீராடும்பொருட்டு, அந்த யானையின்மீது தீர்த்த யாத் திரைக்கு வேண்டிய பொருள்களைச் சுமத்திக்கொண்டு, அடியார்க ளோடு கூடி, ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டு போனர். போகும் வழியில் திருடர்கள் வந்து துன்பஞ் செய்யக்கண்ட இந்த யானையானது அந்தத் திருடர்களை உற்று நோக்கி அவர்கள் வாயில் ஸ்ரீ ஹரிநாம ஸ்மரணை யில்லாமலும், அவர்கள் கழுத்தில் திருத் துழாய்மாலை யில்லாமலும் இருப்பதைக் கண்டு, இவர்களைக் குறித் துத் தாக்ஷிண்யஞ் செய்யவேண்டியதில்லை யென்று கோபங்கொ ண்டு அவர்களைக் குத்திக்கொன்றது. பிறகு, பக்தரானவர் அநேக புண்ய நதிகளில் ஸ்நாநம்செய்து குருக்ஷேத்ரத்துக்குப்போக நினைத் துப் போகும் வழியில், அருணவதி நகரத்தைக் கண்டு அவ்விடத் தில் தங்கியிருந்தார். மூன்றுநாள் அங்கே தங்கியிருக்கையில், சிலர் விரைந்துபோய் அந்நகரத்தை யாளுவோனுகிய துருக்கவேந்தனிட த்தில், இந்தப் பக்தர் அடியார்களோடும், உத்தம லக்ஷணங்களுள்ள யானையோடும் வந்து தங்கியிருப்பதைத் தெரிவித்தார்கள். அந்த அரசன் இந்த யானையின்மேல் விருப்பங்கொண்டு, வந்து செய்தி சொன்னவரை நோக்கி, "நீங்கள் போய் இந்த யானையை எங்கள் அரசன் விரும்பினதனுல் கொடுத்துவிடுங்கள் என்று சொல்லுங் கள், அவர்கள் கொடுக்காத பக்ஷத்தில், அவர்களைத் துன்பப்படுத்து ங்கள்" என்று சொன்னன். அந்தத் தூதர்கள் அப்படியே போய்ச் சொல்ல, பக்தருடைய அடியார்கள் அந்தத் தூதரை நோக்கி, "இந்த யானை வைஷ்ணவரிடத்திலன்றி மற்றவரிடத்திற் போகாது" என் ருர்கள். இவர்கள் சொன்ன சொல்லை உண்மையென்று நினையாமல் தூதர்கள் அதைப்பிடிக்க நெருங்கினர்கள். அப்போது வைஷ்ணவ சிங்கங்கள் ஒன்றும் காணப்படாமையால், கோபித்துச் சீறுதலும், கண்டு பயந்து அரசனிடத்திற்போய்ச் சொன்னர்கள். அரசன் ஒரு

யானைப்பாகனை யழைத்து, "நீ வைஷ்ணவ வேஷம் பூண்டு போய் அந்த யானையை வசப்படுத்திக் கொண்டுவந்து நமது யானைச் சாலையிற் கட்டவேண்டும்" என்று கட்டளையிட, அவனும் அப்படியே வைஷ்ணவ வேஷம் பூண்டு வந்து யானைக்கெதிரே நின்றான். அவன் பூண்டு வந்தது கபட வைஷ்ணவ வேஷம் என்றறிந்தும், அவனிடத்திலுள்ள வைஷ்ணவ சின்னங்களைப் பார்த்து அவனுக்கடங்கிநிற்க, அவன் அதைப் பிடித்துக்கொண்டுபோய் அரசனுக் கெதிரேவிட, அவன் யானைப் பந்தியிற் கட்டச்சொல்லி நியமித்தான்; பாகனும் அப்படியே செய்தான். பிறகு அந்த யானையானது சாது ஜனங்களுடைய சஹவாசம் நீங்கி இங்கே வந்திருக்கும்படி நேரிட்டதேயென்று அவர்களுடைய பிரிவுக்குச் சஹிக்காமல், ஊண் உறக்கங்கொள்ளாமலிருந்து எழுநாளில் ஸ்ரீ வைகுண்ட பதவியை யடைந்தது. இதைக் கேள்விப்பட்ட பக்தரானவர் இனி யிங்கே யிருக்கலாகாதென்று புறப்பட்டு ஹரிபஜனை செய்துகொண்டே போய்ப் பலபுண்ய தீர்த்தங்களாடி இனிதாய் வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே மீராபாயி வைபவத்தைச் சொல்லத் தொடங்கினார்.

ரசிகமுராரிபக்தர் சரித்திரம் முற்றிற்று.

முப்பத்திரண்டாவது

மீராபாய் சரித்திரம்.

இந்துஸ்தானதேசத்தில் பெரியவுதேயபுரம் என்று சொல்லப்பட்ட ஓர் ஊருண்டு. அந்தச் சிறந்த நகரத்திற்கு அரசனாயிருப்பவன் பேர் ராணுவா என்று சொல்லுவார்கள். அவன் விஷ்ணுபக்தியுள்ளவனும், அதிதிகளை ஆதரிப்பவனும், தன்னிடத்திற்கு வருகிற சாது ஜனங்களை எதிர்கொண்டழைத்துப் பூஜிப்பவனும், ஸ்ரீ கோபாலமூர்த்தியைத் தனது இதயத்தில் வைத்துச் சகலமான வுபசாரங்களும், தூபதீப நைவேத்தியங்களும்செய்து நிவேதித்த ப்ரஸாதத்தை உட்கொள்வோனுமாகி வாழ்ந்திருந்தான். இப்படி யிருக்கையில், அவனுக்கு ஒருமகள் அதிக ரூபலாவண்யத்தோடு பிறந்தாள். அவளுக்கு மீராபாயி என்று பெயரிட்டுத் தந்தைதாயாரிருவரும் அந்தப் புதல்வியை மிகவும் அன்போடு வளர்த்துவருங்காலத்தில், ஒருநாள் அந்தக் குழந்தையை ஸ்ரீ கண்ணபிரான் சந்நிதிக்கெடுத்துவந்து, அந்தக் கண்ணபிரானுடைய திவ்ய சௌந்தர்யத்தைச் சேவிக்கப் பண்

ஙிக்கொண்டு போனார்கள். அன்றுமுதலாகத் தினந்தோறும் அப்படியே செய்துவருகையில், அந்தப் பெண்ணானவள் கண்ணபிரானுடைய திவ்ய சௌந்தர்யத்தில் ஈடுபட்டு, கார்காலத்து மேகத்தைக் கண்டு களிக்கின்ற மயில்போலக் கண்ணனைக் காணுந்தோறும் களிக்கின்ற மனமுடையவளாயிருந்தாள். இப்படி யிருக்கும்போது அந்தப் பெண் பருவநிரம்பினவளானதைக் கண்ட தந்தையானவன், மனைவியை நோக்கி, "நமது பெண் பருவமடைந்திருப்பதை நீ கவனிக்காமலிருப்பது தகுதியல்ல, அவளுக்குத் தகுந்த மணவாளனைத் தேடவேண்டும்" என்று சொன்னான். அப்படிச் சொல்லிக்கொண்டிருப்பதைக் கேட்ட மீராபாயி, தந்தையிடத்தில் வந்து, "தந்தையே, நீங்கள் தினந்தோறும் போய்த் தரிசித்துவருகிற ஸ்ரீ கோபாலஸ்வாமியையன்றி வேறொரு மணவாளனை நான் விரும்பமாட்டேன், அவனுக்கே என்னைச் சமர்ப்பியுங்கள்" என்றாள். அதைக் கேட்ட தந்தையானவன், புதல்வியை நோக்கி, "உன் விருப்பத்தின்படியே யாங்கள் செய்யத் தடையில்லை, கோபாலமூர்த்தி அர்ச்சாரூபியாயெழுந்தருளி யிருக்கிறானாகையால் உன்னோடிணங்கமாட்டான், உனக்கிஷ்டமான ராஜகுமாரனுக்கு மணஞ் செய்துகொடுக்கிறோம்" என்று சொல்ல, மீராபாயி, தந்தையை நோக்கி, "அர்ச்சாரூபியாயிருக்கிற பகவானானவர் நாமதேவருடைய நிஜபக்தியின் வசப்பட்டவராய், அவர் வாவென்றால் வருவதும், போவென்றால் போவதும், உண் என்றால் உண்பதும் இப்படிச் சகலவிதங்களாலும் உபயோகப்பட்டுவருகிறாரல்லவா? அன்றியும், இந்தக் கலியுகத்தில் அர்ச்சாரூபமும் விபவரூபமாகும் என்பதையும் நீர்அறிந்திலீர்போலும்! என்னை யாதொரு தடைசொல்லாமல் அந்தக் கோபாலனுக்கே சமர்ப்பித்துவிடுங்கள்" என்று சொன்னாள். அதைக் கேட்ட தந்தையானவன், இவளுக்கு இந்தச் சிறுவயதில், ஹரிபஜனை, புராணசிரவணம், திவ்யஞானம் இவைகளில் விருப்பமுண்டாயிருக்கிறதைக் குறித்து அதிசயித்து, தன் திருவாராதநத்திலிருந்த கோபாலஸ்வாமி விக்ரஹத்தைக் கொடுத்து, இந்தக் கோபாலனை உன்னிஷ்டப்படியே ஆராதித்து உன் மனோரதத்தை நிறைவேற்றிக்கொள்வாயாக" என்று சொன்னான். அப்படியே மீராபாயியும் கோபால விக்ரஹத்தைப் பெற்றுத் தன் மனையில் வைத்துக்கொண்டு, தினந்தோறும் விடியற்காலத்தில் எழுந்து நீராடி நித்ய கர்மங்களை முடித்து, புண்ய தீர்த்தத்தைக் கொண்டு திருமஞ்சநம் பண்ணி, வஸ்த்ராபரணாதிகளால் அலங்கரித்து, சகலமான உபசாரங்களும் செய்து, பஜித்து, வீணையைக் கைக்

கொண்டு, பகவத் குணங்கள் பலவற்றையும் புகழ்ந்து பாடிச் சாதுக்களை வருவித்து, ப்ரஸாதத்தை நிவேதித்து, பிறகு உண்டு, புராண சிரவணம் செய்தும், ஆத்மஞான நூல்களை வாசித்தும், பகவத் குணநுபவ ப்ரபந்தங்களை யுண்டாக்கிக்கொண் டிருக்குங்காலத்தில், அவ்வூரிலுள்ள சில துஷ்டர்கள், "இந்த ராஜகுமாரியானவள் புருஷர்களுக்கெதிரே இப்படி ஆடுவதும் பாடுவதுமாயிருப்பது, இந்த அரசனுக்கு அவமானத்தை யுண்டாக்குமே, இதை அரசன் அறியவில்லையே" என்று போய் அரசனுக்கு அறிவிக்க, அவனுக்கு இந்தப் பெண்ணின்மீது கோபமுண்டாகி, மனைவியை நோக்கி, "இந்தப் பெண் இதுவரையில் சிறுவயதா யிருந்ததனால் வைஷ்ணவர்களோடு கூடியிருக்கச்செய்தேன், இப்பொழுது தகுதியான யௌவநபருவம் வந்திருப்பதனால் இவள் எவ்வளவு ஞானமுள்ளவளா யிருந்தாலும் புருஷர்களோடு இனிக் கூடியிருக்கலாகாது. ஊரார் இந்தச் செய்தியை யறிந்து என்னை யிகழ்ந்தார்கள். ஆகலால் உன் மகளுக்கு வேண்டிய புத்திசொல்லி, ஒரு மணவாளனை மணம் புணர்விப்பது நன்மை" என்று சொன்னான். மனைவியானவள் அரசனை நோக்கி, "ஓ பிராணநாதா, இவள் கண்ணனையன்றி வேறொருவனை மணஞ் செய்துகொள்ளமாட்டேன் என்கிறாளே, இதற் கென்செய்யலாம்" என்றாள். அதுகேட்ட அரசன், "அப்படியானால் இவளைக் கொல்லுவதே தகுதி, இல்லாவிடின் எனக்கு மிகுந்த அவமானம் உண்டாகும்" என்று சொல்லி, "விஷங்கலந்த அன்னத்தை உன் மகளுக்குக் கொடுத்து அவளைக் கொல்வாயாக" என்று சொல்ல, மனைவியும் அரசன் வார்த்தையைத் தடுக்க அஞ்சி, அப்படியே விஷங்கலந்த சோற்றைக் கொண்டுபோய் மகளுக்குக்கொடுத்து, "இது உன் தந்தையால் கொடுக்கப்பட்டது, இதை உண்பாயாக" என்றாள். அதைக்கேட்ட மீராபாயி அந்த அன்னத்தை வாங்கிக்கொண்டு, ஸ்ரீ கண்ணபிரானுக் கெதிரேநின்று, "ஓ பகவானே, நான் உன் பக்திசெய்து அது காரணமாக இறந்துபடுவேனானால் இனி உன்னை யார் வழிபடுவார்கள்? அடியேன் செய்யும் பூஜையில் உனக்கு விருப்பமுண்டானால், முற்காலத்தில் தந்தையாகிய இரணியன் ஏவின சர்ப்பங்களின் கொடிய விஷத்தால் ப்ரஹ்லாதாழ்வான் இறவாதிருக்கும்படி செய்தாற்போல, என்னையும் இறவாதிருக்கச் செய்வாயாக" என்று சொல்லி, அந்த விஷாந்நத்தை யுண்டாள். உடனே ஸ்ரீ கண்ணபிரான் பச்சை வடிவங்கொண்டான். விஷாந்நத்தை யுண்டும், மகள் சாவாதிருப்பதையும், கண்ணபிரான் பச்சை நிறங்கொண்டதையும், அரசன் தேவி அரசனுக்குச்

சொல்ல, அரசனும் "இது உண்மைதானோ" என்று வந்து பார்த்து, அப்படியே உண்மையாயிருக்கக் கண்டு அதிசயித்து, "ஓ பகவானே, உன்னை விஷமுண்ணச் செய்தேனே" என்று அநுதபித்து, சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பித்து, தன் மகளுடைய பக்திக்கு ஆச்சரியமடைந்து, அவளையும் வணங்கித் துதித்து, "உன் மஹிமையை யறியாமல் நான் செய்த பிழையைப் பொறுக்கவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, மீராபாயும் தந்தையை வணங்கி, "உன்னால் நான் கண்ணபிரானுடைய கருணைக் குரியவளானேன்" என்று சொல்லி நிற்க, அரசன் மீராபாயியை நோக்கி, "உன்னால் கண்ணபிரான் அடைந்த பச்சைநிறம் மாறும்படி நீயே செய்யவேண்டும்" என்று சொல்ல, மீராபாயியானவள், கண்ணபிரானை நோக்கி, "ஸ்வாமீ, முற்காலத்தில் பூதனையின் விஷப்பாலைக் குடித்த நீ, இன்றும் உன் பச்சைநிறத்தை மாற்றி, முன்போலவே நீலநிறங்கொண்டு அரசனுக்குச் சேவை சாதித்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்தலும், ஸ்ரீ கண்ணபிரானுனவர் இவளது ப்ரார்த்தனைக் கிரங்கி, கண்டத்தில் மாத்திரம் கொஞ்சம் பச்சைநிறமும், மற்றத் திருமேனி முழுதும் முன்போல நீலநிறமுங்கொண்டு, கண்டோ ரெல்லாரும் அதிசயிக்கும்படி எழுந்தருளியிருந்தார். ராணாவேந்தனுடைய புதல்வியின் பொருட்டுக் கண்ணபிரான் இந்த லீலையைச் செய்யக் கண்ட துர்ஜநர் ஸஜ்ஜநர் என்கிற இருதிறத்தாரும் அதிசயித்துத் துதிக்க, அக்காலத்தில விளங்கினாற்போலவே, இன்றும் விளங்கிக்கொண்டிருக்கிறார். சொல்லப்பட்ட கந்நிகையானவள், ஆத்மகோடிகளையெல்லாம் ஆண்டருளுகிற கண்ணபிரானது கருணாவிசேஷத்தால் ஆத்மஞானம் விளங்கப்பெற்று இனிதாய் வாழ்ந்திருந்தாள் என்று சொல்லி, மேலே தாசிகான்ஹோபாத்ரா வைபவத்தைச் சொல்லத்தொடங்கினார்.

மீராபாயி சரித்திரம் முற்றிற்று.

முப்பத்துமூன்றுவது

தாசிகான்ஹோபாத்ரா சரித்திரம்.

பண்டரிபுரத்துக்குத் தென்றிசையில் ஏழு கோசு தூரத்திலுள்ள, மங்களவேஷம் என்கிற வூரில் வாழ்பவளாகிய ஒரு தாசியானவள், சாமா என்னும் பெயர் பூண்டு விளங்கினாள். இவள் வயிற்றில் ஒரு புதல்வியார் அவதரித்து, கண்டவர் ஆச்சரியப்படத்தகுந்த

சௌந்தரியத்தோடுகூடி வளர்ந்துவருங் காலத்தில், அவளுக்கு, கான்ஹோபாத்ரா என்று பெயரிட்டு அன்போடு காப்பாற்றிவர, தெய்வப்பெண்களும் நாணமடையும்படியான ரூபலாவண்யங்கள் விருத்தியடைந்தனவென்றால், இவ்வுலகத்துப் பெண்கள் நாணுவார்களென்பதற்குச் சந்தேஹமுண்டா ? இவர் பரதசாஸ்திரம் முழுதும் கற்றுத்தெளிந்தார். இளமைப்பருவத்திலேயே இவர் பாடியாடும் விதமெல்லாம் கேட்டறிந்த தெய்வப் பெண்களாகிய அரம்பை முதலானோர்கள் பெச்சிக் கொண்டாடினார்கள். இப்படியிருக்கும்போது, மயிற்சாயலையுடைய அந்தக் கந்நிகை யௌவனப் பருவமடைய, தாயானவள், அந்தக் கந்நிகையாரை நோக்கி, "மகளே, நீ ஒரு அரசனிடத்திற் சேர்வாயானால், அவன் உன் ஆடல் பாடல்களை விரும்பி, உனக்கு வேண்டுமவற்றை யெல்லாம் கொடுப்பான், ஆதலால், நீ வா, அரசனிடத்துக்குப் போவோம்" என்று சொல்ல, கந்நிகையானவர் அதற்கு மனமிசையாமல், தாயை நோக்கி, "அம்மா, என்னுடைய அழகினுஞ் சிறந்த அழகுள்ள புருஷனை நான் விரும்புவேனேயன்றி மற்றொருவனையும் விரும்பமாட்டேன்" என்று சொல்லி வாழ்ந்திருக்குங் காலத்தில், சூரியன் தேர்ப்பாகனாகிய அருணனுக்குத் திருவிழாக்காலம் நேர்ந்தது; அப்போது அநேகம் ஹரிதாசர்கள் தாளம், ம்ருதங்கம், வீணை, தடாரி, கருடக்கொடி முதலியவற்றோடு நிர்மலராகிய ஸ்ரீ ஹரியின் திருநாமங்களைப் பாடிக்கொண்டு, ஸ்ரீ கண்ணபிரான் எழுந்தருளியிருக்கிற பண்டரிபுரத்துக்குப் போனார்கள். அந்த ஹரிதாசர்களை இந்தக் கான்ஹோபாத்ராவானவர் கண்டு, "ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநபரராகிய நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்க, அவர்கள் "ஸ்ரீ பாண்டுரங்கப் பெருமான் புண்டலீகர்க்கு அருள் செய்த க்ஷேத்ரமாகிய பண்டரிபுரத்துக்குப் போகிறோம்" என்று சொல்ல, கான்ஹோபாத்ராவானவர், அவர்களை நோக்கி, "நீங்கள் சொல்லுகிற அந்தப் பாண்டுரங்கனுடைய அழகின் பெருமையை யெனக்குச் சொல்லவேண்டும்" என்று வேண்ட, அந்த ஹரிதாசர்கள், அந்த பத்மநாபனுடைய அழகைச் சொல்வதற்கு வேதங்களுக்கும், வேதாதிகாரியான ப்ரஹ்மதேவனுக்கும் சாத்தியப்படாது" என்றார்கள். அதைக்கேட்ட கான்ஹோபாத்ராவானவர், அந்த ஹரிதாசர்களை நோக்கி, "ஐயரே, நீங்கள் கொண்டாடுகின்ற பாண்டுரங்கப்பெருமானாரை அடியேன் சரணமடைந்தால், அவர் அடியேனை விரும்புவாரோ" என்று கேட்க, தாசர்கள், "அந்தப் பாண்டுரங்கப்பெருமானானவர் மதுராபுரியில் ஸ்ரீ க்ருஷ்ணாவதாரஞ் செய்த

போது அவ்விடத்தில் கூனிக்கு அருள்செய்தார்; அன்றியும், ஹீந ராகிய சோகாமேளர் முதலானவர்களை க்ருபைசெய்து காத்தருளி னார். அப்படிப்பட்ட பாண்டுரங்கப் பெருமானானவர், உன்னைக் காத்தருள்வது அருமையல்ல" என்றார்கள். அப்படிச் சொல்லைக் கேட்ட கான்ஹோபாத்ராவானவர் ஞானத்தை யடைந்து, தாம் வாழ் கின்ற வீட்டிற்கு விரைவாகப் போய், தமது தாயை நோக்கி, "அடி யேன் பண்டரிபுரத்திற்குப் போய் மீண்டுவருவேன், நீர் இவ்விட த்திலிரும்" என்று சொல்லிவிட்டு, சாதுக்களோடுகூடி, வீணையைக் கைக்கொண்டு ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டும், ஆநந்த நர்த்தநம் செய்துகொண்டும்போய் ஸ்ரீ பண்டரிபுரம் சேர்ந்து, சந்நி திக்குள்ளே பிரவேசித்து, ஸ்ரீ பாண்டுரங்கப்பெருமானைத் தரிசநம் செய்து, துதித்து, தாமரைமலர்போன்ற திருவடிகளில் விழ்ந்து, தீர்க்கதண்டம் சமர்ப்பித்து, "ஹே முகுந்தா, கோவிந்தா, உன்னு டைய பிரபாவத்தைப் பெரியோர்கள் சொல்லக்கேட்டு, அடியே னது ஜாதித்தொழிலை விட்டு உன் திருவடியை நம்பிவந்து, உன்னை ஆசிரயித்தேன்; ஆதலால் அடியேனை அங்கீகாரஞ் செய்தருளவே ண்டும், நீ தயாநிதியல்லவா" என்று நிர்மலராகிய பகவானுடைய திருவடிமீது தனது தலையைத் தாழ்த்திக் கண்களில் ஆநந்தபாஷ்பம் துளிக்க நின்று, அநேகவிதமாய் ஸ்தோத்திரஞ்செய்து, அவ்விடத்தி லேயே தங்கியிருந்தார். அப்படியிருக்கிற காலத்தில் ஒருநாள், துரா சாரன் ஒருவன் அங்கேவந்து இவளது அழகைக்கண்டு ஆச்சரிய மடைந்து, இப்படிப்பட்ட கட்டழகியை இவ்வுலகத்திலும் மற்றெந்த வுலகத்திலும் காண்பது மிகவும் அருமையாகும்" என்று, உடனே புறப்பட்டுப் பேதரிநகரத்தையாளுகிற மிலேச்சராஜனிடத்திற்போ ய், "மஹாராஜனே, பண்டரிநாதன சந்நிதியில் ஒரு பெண் வந்திருக் கிறாள்; அவளது பேரழகை யென்னென் றெடுத்துச் சொல்வேன்? அவளுடைய சௌந்தரிய சாகரத்தில் விழ்ந்தவன் நீந்திக் கரையேறு தல் அருமையாம்" என்று சொன்னான். அதைக்கேட்ட அரசன், அதிசயித்து, சில தூதரை யழைத்து, "நீங்கள் போய் அந்தப்பெ ண்ணை இந்தக்ஷணமே கொண்டுவாருங்கள்" என்று அனுப்ப, அவர் களும் அப்படியே போய்ப் பண்டரிநாதன் சந்நிதியின் கருடஸ்தம் பத்தினருகே ஸ்ரீ பகவந்நாம ஸங்கீர்த்தநம் செய்துகொண் டிருப்பவ ராகிய கான்ஹோபாத்ரா என்பவரை நோக்கி, "உன்னை எங்கள் அர சன் அழைத்துவரச்சொன்னான், உடனேவா, வராவிட்டால், உன்னை வலிந்து பற்றிக்கொண்டுபோய் அவ்விடத்திற் சேர்ப்போம்" என்

ளூர்கள். அதைக்கேட்ட பாத்ராவானவர், "அப்படியே யாகட்டும், இதோ பகவானை வணங்கி வருகிறேன்" என்று சொல்லி, பகவத் ஸந்நிதியின் கர்ப்ப க்ருஹத்தினுள்ளே ப்ரவேசித்து, பகவானை வணங்கி, சிரசின்மேல் கைகளைக் கூப்பி அஞ்சலி செய்து, "புண்டரீகவரதனே, முற்காலத்தில் கஜேந்திராழ்வானது துன்பத்தை நீக்கியருளின கருணைக்கடலே, தேவரீருடைய திருவடித் தொண்டு செய்பவந்து அடுத்திருக்கின்ற அடியேனை அரசனிடத்துக்குப் போக விடுவீரானால், தேவரீரை ஆசிரயித்திருக்கிற சாதுக்கள் சிரிப்பார்களே! இதை நீர் அறியீரோ" என்று ஸ்தோத்திரஞ்செய்து நிற்பவரது இன்சொற்களைக் கேட்டு, கருணாசாகரமாகிய பகவானானவர், அவர் கண்ணுக்கெதிரே தோன்றி அவரது உயிரைத் தமது திருத்தொடையிற் சேர்த்துக்கொண்டார். அருகேயிருந்து இந்த அதிசயத்தைக் கண்ட சாதுக்களும் அர்ச்சகர்களும் வியந்து, மனமுருகி, ஜயஜயவென்று புகழ்ந்து கொண்டாடினார்கள். அன்றுமுதல் இன்றளவும் பாண்டுரங்கப்பெருமானது திருத்தொடையில் அந்தக் கான்ஹோபாத்ரா என்னுங் கந்நிகையார் சேர்ந்திருக்கும் குறியைச் சேவிப்போர்களெல்லாம் கண்டு களிக்கின்றார்கள். இப்படி அவருயிரைப் பகவானானவர் தமது திருத்தொடையில் சேர்த்துக்கொண்டவுடனே, அர்ச்சகர்கள் அவரது உடலைக் கொண்போய்த் தெற்கு வாசலின் ஒரு புறத்தில் புதைத்து நின்று துதித்தார்கள். உடனே அந்தப் புதைத்தவிடத்திலே ஒரு மரம் முளைத்துத் தழைத்து நின்றது. இப்படியிருக்க, வெளியே நின்ற தூதர்கள் உள்ளே ப்ரவேசித்து அர்ச்சகர்களை நோக்கி, "இங்கே வந்த பெண் எங்கே?" என்று கேட்க, அவர்கள், அவருயிரைப் பகவானானவர் தமது திருத்தொடையிற் சேர்த்துக்கொண்டார், அவருடலைக் காட்டலாமென்றாலும் புதைத்த அவ்விடத்தில் அவ்வுடலே ஒரு மரமாய் முளைத்துத் தழைத்திருக்கிறது" என்றார்கள். இந்தச் செய்தியைக் கேட்ட தூதர்கள், "இது என்ன ஆச்சரியமாயிருக்கின்றது! அந்தப்பெண்ணை நீங்கள் மறைத்து வைத்துக்கொண்டு பொய் சொல்லுகிறீர்கள், நீங்கள் எங்கள் அரசனிடத்துக்கு வாருங்கள்" என்று அழைத்துக் கொண்டுபோனார்கள். போன அர்ச்சகர்கள், கந்தபொடியையும் ப்ரஸாதத்தையுங் கொண்டுபோய் அரசனுக்குக் கொடுக்க, அவன் வாங்கி, "அதில் ஒரு மயிரிருக்கக்கண்டு, "இதென்ன" என்று அவர்களைக் கேட்க, அவர்கள் பயந்து "இது பகவானுடைய தலைமயிர்" என்று சொன்னார்கள். வேறொரு மயிரென்று சொன்னால், அரசன் தன்

டிப்பானென்று இவ்வாறு சொல்லக்கேட்ட அரசன், "உங்கள் சாமிக்கு மயிருண்டோ, உங்களைக் கொல்லுவதற்கு முன்பே உண்மையைச் சொல்லிவிடுங்கள்" என்றான். அப்போது, அர்ச்சகர்கள் அரசனை நோக்கி, "ஐயா, நீர் கோயிலுக்கு வந்து உண்மையை அறிந்து கொள்ளலாம்" என்றார்கள். அப்படியே அரசனும் அவர்களோடு விரைந்துபோய்க் கோயிலை யடைந்து நின்றவுடனே, அர்ச்சகர்கள் பகவத் ஸந்நிதிக்கெதிரே நின்று, "ஸ்வாமீ, தேவரீர் உரோமத்தோடு கூடிச் சேவை சாதிக்காவிட்டால் இன்று யாங்கள் மடிவதுநிச்சயம்" என்று சொல்லித் துதித்து நிற்க, அரசனும் சந்நிதியிற் போய்ப் பகவானை உற்றுப் பார்க்கும்போது, அவரது திருமுடியின் மேலே சுருண்டு தொங்குகிற மயிரையும், அவரது திருத்தொடையில் கான்ஹோபாத்ராவின் உயிரிருக்கிற அடையாளத்தையும் கண்டு பயந்து, பிறகு மனமகிழ்ந்து, பகவானைப் பலவகையாய்த் தோத்திரம்செய்து அர்ச்சகர்களை நோக்கி, "நீங்கள் சொன்னபடியே யிருக்கக்கண்டேன்" என்று அவர்களையும் வணங்கி, ஆநந்தக் கண்ணீ ரொழுக நின்று, இந்தப் பெண்ணானவள் பகவானுடைய திருத்தொடையில் இடம் பெற்றிருக்க என்ன தவஞ்செய்தாளோ" என்று வியந்து, பகவானுடைய திருவடியை ஆலிங்கனஞ்செய்து துதித்துக் கொண்டாடி, அந்தப் பெண்ணினுடலே மரமாக முளைத்துத் தழைத்திருப்பதையும் கண்டு, "அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்று, பாண்டுரங்கப்பெருமானைத் தோத்திரம் பண்ணித் தன் ஊரை அடைந்து வாழ்ந்திருந்தான். கான்ஹோபாத்ராவின் உடல் மரமாய் முளைத்துத் தழைத்திருந்ததென்றே னல்லவா? அந்த மரம் இன்றுவரைக்கும் அவ்விடத்தில் உள்ளது; அன்றியும் தேவர்கள் பலர், ஏதோ காரணத்தால் மரங்களாகவும் கற்களாகவும் அவ்விடத்தில் தோன்றியிருக்குந் தன்மையைச் சொல்லச் சேடனாலும் முடியாது என்று சொல்லி, மேலே தாமாஜிபண்டிதருடைய வைபவத்தைச் சொல்லத்தொடங்கினார்.

கான்ஹோபாத்ராவின் சரித்திரம் முற்றிற்று.

முப்பத்துநான்காவது

தாமாஜிபண்டிதர் சரித்திரம்.

பேதரிமா நகரத்தை யாளுகின்ற துருக்கவேந்தன், பலவளங்களும் நிறைந்திருக்கிற மங்களவேஷம் என்னும் நகரத்தைத் தன் அர

சாட்சிக் குட்படுத்திக்கொண்டு, அந்த நகரத்துக்கு, ஸ்ரீ ஹரிபஜனை யிற் சிறந்தவராய், ப்ரபஞ்ச விஷயத்தில் விரக்தராய் விளங்குவோ ராகிய தாமாஜிபண்டிதரை அதிகாரி யாக்கிவைக்க, அந்தத் தாமாஜி பண்டிதர், தமது குடும்பத்தோடு அவ்வூரிலிருந்து, தமது அதிகாரத் தை நீதியாய் நடத்திக்கொண்டும், தினந்தோறும் வருகிற தொண்ட ருக்கும் அதிதிகட்கும் பூஜை, அன்னதாந முதலாகிய வுபசாரங் களைச் செய்துகொண்டும், ஸ்ரீ ஹரிபஜனை செய்துகொண்டும் வெகு காலங் கழித்துக்கொண் டிருக்கும்போது, பஞ்சகாலம் நேரிட்டு, சீவராசிக ளெல்லாம் பசிபொறுக்காமல் மாண்டுபோவதே யன்றி, உண்ணச் சோறுகிடையாமல் மிதந்த துன்பத்தை யநுபவிக்குங் காலத்தில், ஒரு வேதியன் பண்டரிபுரத்திலிருந்து, இந்தத் தாமாஜி பண்டிதர் வீட்டுக்கு வந்தான். அவனைக் கண்டவுடனே, பண்டிதர் மிகவும் உபசரித்து, அந்த வேதியனை நோக்கி, "நீர் பசியால் மிகவும் அயர்ந்திருக்கிறீர், போய் நீராடிவாரும், போஜநம் செய்யலாம்" என்று சொன்னார். அப்படியே அவ்வேதியன் போய் நீராடி வருத லும், அவனைத் தமது பந்தியில் வைத்து, சிறந்தபோஜநம் படை த்து, புரோஹிதர் சங்கற்பஞ்சொல்ல, வேதியர் யாவரையும் நோக்கி, நீங்கள் போஜநம் செய்யுங்கள்" என்று பண்டிதர் சொல்லும்போது, பண்டரிபுரத்திலிருந்து வந்த வேதியன் கண்ணீர் பெருக்கிப் பரித பிப்பதைக் கண்ட மற்ற வேதியர்கள் திகைக்கக் கண்ட பண்டிதர் அவ்வேதியனைக் கிட்டி, "நீர் ஏன் அழுகிறீர்?" என்று கேட்க, அவன் என் மனைவி மக்கள் நாலுநாளாய்ப் பட்டினி யிருக்கிறார்கள். இங்கே நான் உண்ணப்போகுஞ் சமயத்தில் அவர்களை நினைத்துக்கொண்டு அழுகிறேன்" என்றான். அதைக் கேட்ட பண்டிதர் மிகவும் மன முருகி, "ஐயரே, நீர் போஜநம் செய்யும், உம்முடைய குடும்பத்து க்கு வேண்டிய அரிசிமுதலிய சாமக்கிரிகள் வேண்டுமட்டும் கொடுக் கிறேன்" என்று சொல்லி, அவ்வேதியனைப் போஜநஞ் செய்யும் படி செய்து, எல்லாரையும் மகிழ்வித்து, தக்ஷிணை தாம்பூலம் பெற்று எல்லாரும் ஆசீர்வதித்துப் போனபிறகு, பண்டரிபுரத்திலிருந்து வந்த வேதியருக்குத் தாம் சொன்னபடியே, பொதிகளில் தானிய த்தை நிரப்பி, அவைகளை அவ்வேதியன் வீட்டிற் சேர்த்து வரும் பொருட்டுச் சில வூழியரை யேவ, அவர்களும் அப்படியே கொண்டு போய்ப் பண்டரிபுரத்தையடையவே, அங்குள்ளவரெல்லாரும்வந்து வளைந்துகொண்டு, சூறையிட்டுத் தானியத்தைச் சுமந்து சென்றார் கள். அப்போது அவ்வேதியன் கூகூவென்றலறியழுதான். அதைக்

கண்ட அந்த வூராரெல்லாரும் ஒருமிக்கக் கூடிவந்து வேதியனை நோக்கி, "உனக்கு இந்தத்தானியத்தைக் கொடுத்தவர் யார்?" என்று கேட்க, வேதியன் "தாமாஜிபண்டிதர் கொடுத்தார்" என்று சொல்லி, "நான் செய்த பாபத்தாலே எனக்குக்கிடைத்த தானியங்களெல்லாம் கொள்ளைபோயினவே" என்று மனம் வருந்தி, மறுபடியும் தாமாஜி பண்டிதரிடத்துக்குப் போகும்போது, அந்த வூரிலுள்ள மற்ற வேதியரெல்லாரும் இவனைப்பின்தொடர்ந்துபோய்த் தாமாஜி பண்டிதருடைய வீட்டை வளைத்துக் கொண்டார்கள். அப்படி வந்து வளைத்துக்கொண்டவர்களைப் பண்டிதர் பார்த்து வணங்கின மாத்ரத்தில், வேதியரெல்லாரும் பண்டிதரை ஆசிர்வதித்து, "பண்டிதரே, நாங்கள் சிறுவிலைக் காலத்தால் உமது உதார குணத்தையும், சமாராதநச் செய்கையையும் கேள்விப்பட்டு, உம்மைவந்தடுத்தோம், ஆதலால் எங்களுடைய பசிநோயைத் தீர்த்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். அவர்கள் சொல்லுகிற தீந வசநங்களைப் பண்டிதர் கேட்டு மனமிரங்கி, "வேதியரே, நீங்கள் வருந்தவேண்டாம், உமது பசிநோயைப் பண்டரிநாதர் தீர்த்தருளுவார்" என்று சொல்லித் தமது வீட்டுக்குள்ளேபோய்த் தமது தர்மபத்நியை நோக்கி, "பண்டரிபுரத்திலிருந்து அநேக வேதியர் பசியால் வருந்தி வந்து நமது வீட்டைச் சூழ்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பண்டரிநாதர் உங்கள் பசித்துன்பத்தைத் தீர்த்தருளுவாரென்று சொல்லி வந்தேன், அவர்களெல்லாருக்கும் அந்நமிட்டு உபசரிக்காமற்போனால், அவர்களெல்லாரும் இறந்துபோவார்கள்; ஆதலால் அவர்களுக்குக் கொடுக்கலாமென்றாலோ, நமதிடத்தில் தானியங்கள் ஒன்றுமில்லை, இதற்கென்ன செய்வோம்" என்று கேட்க, கற்பிற் சிறந்த அவர் மனைவியார், கணவர் திருமுகத்தைநோக்கி, "ப்ராணநாதரே, எந்த விதத்தாலாயினும் வந்தடைந்தவர்களுடைய துன்பத்தைத் தீர்த்தனுப்புவதே நன்மை" என்று சொல்ல, பண்டிதர் மனைவியை நோக்கி, "நம்மிடத்தில் நம்முடைய பொருள் ஒன்றுமில்லையாயினும், அரசனுடைய பொருளிருக்கின்றது, அதை யெடுத்துக் கொடுக்கலாம், அதை யறிந்து அரசன் தண்டித்து என்னுயிரை வாங்கினாலும் இவர்களெல்லாம் உயிர்பிழைப்பார்களே அதுவே போதும், இவர்கள் பொருட்டு என் உயிரைவிடுதல் மிகவுஞ் சிறந்த காரியமென்று நினைக்கிறேன், நீ இங்கேயிரு, நான் போய் அவர்களைத் திருப்திசெய்தனுப்பிவிட்டு வருகிறேன்" என்று வெளியே வந்து அரசனது தானியக் களஞ்சியத்தைத்திறந்து வேதியரை யழைத்து, "உங்களுக்கு வேண்

டிய தானியங்களை யெடுத்துக்கொண்டு போகலாம்" என்று சொல்ல, அவர்களும் அப்படியே தமக்குவேண்டியமட்டும் கொள்ளைகொண்டு, பண்டிதரை வாழ்த்தி, ஒரு மாசகாலம் வரைக்கும் மிதமில்லாமற் தானியங்களைக் கொண்டுபோய்க் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய வறுமையும் நீங்கிற்று; பண்டிதரும் தினந்தோறும் ஸ்ரீ ஹரி பஜனை செய்துகொண்டு வாழ்ந்திருந்தார். இப்படி யிருக்கும்போது, அரசன் பொருள் முழுதும் கொள்ளை விட்டவராகிய பண்டிதருடைய செய்கைமுழுதும் இவரிடத்தில் வேலைக்காரனாயிருந்த ஒருவன் எழுதி அரசனுக்கறிவித்தான். அதை யறிந்த அரசன் மிகவும் கோபித்து, "என் பொருளை என் கட்டளை பெறாமல் இவன் எப்படிச் செலவிடலாம்? இவனைக் கொலைசெய்வதே தகுதி" என்று தீர்மானித்து, சில வீரரைத் தன் கைச்சீட்டோடு பண்டிதரிடத்துக்கனுப்ப, அவர்கள் பண்டிதரிடத்திற்கு விரைந்துவந்து, அரசன் கண்டித் தெழுதின சீட்டைக் காட்டி, "நீர் விரைந்து வந்து அரசனிடத்திற் சேரவேண்டும்" என்று கோபித்துச் சொல்லவே, பண்டிதரும் "அப்படியே அரசன் கட்டளைப்படியே நீங்கள் செய்வது உங்களுக்குத் தகுதியான காரியம்" என்று, அவர்களோடு விரைந்து போய்ப் பண்டரிபுரத்தை யடைந்து, வீரரை நோக்கி, "ஸ்வாமியை வணங்கி வருகிறேன்" என்று இன்சொற் சொல்லி, சந்த்ரபாகையில் நீராடிக் கோயிலையடைந்து, சந்நிதியிலுள்ள கருடஸ்தம்பத்தின் அருகே நின்று வணங்கி, செங்கல்மேல் நின்றதிருக்கோலமாயெழுந்தருளி யிருக்கிற பாண்டுரங்கப்பெருமானை அஞ்சலிசெய்து தோத்திரித்து, திருமேனியைத் தழுவிக்கொண்டு, "இன்று உன் சேவை முடிந்தது, அடியேன் பரிசுத்தனானேன்" என்று சொல்லி, பெருமானது திருவுருவ முழுதும் விருப்பத்தோடு நோக்கி, அன்பு மிகத் தமது மனத்தில் அமைத்துக்கொண்டு கண்களில் நீர் ததும்பத் திருவடி வணங்கி, "போய்வருகிறேன்" என்று விடைகொண்டு, சீதேவி பூதேவி முதலான தேவிமார்களுடைய சந்நிதிக்கெதிரே நின்று, பெரிய பிராட்டியாரைத் தொழுது தோத்திரித்து, பிறகு மற்றப் பிராட்டிமாரையும் வணங்கி, பிறகு கருடபகவானையும் வணங்கி, "உன் திருமேனி முழுதும் வேதரூபமாயிருக்கின்றது, உன்மீது எழுந்தருளுவோன் ஸ்ரீ க்ஷீராப்திநாதன், ஆதலால் உன் பெருமையைச் சொல்ல யாவரால் முடியும்? உன்னை யல்லது என் மனத்துக் கிசைந்த பொருள் வேறொன்று மில்லை" என்று வாழ்த்திப் புகழ்ந்து, அவ்விடம்விட்டு ஆஞ்சநேயர் ஸந்நிதிக்கு வந்து அவ

ரை வணங்கி, "உயிருக்குயிராய் நிறைந்திருக்கிற பகவானானவர், எல்லாருடைய வுயிர்களையும் தரவல்ல சமர்த்தன் என்றல்லவோ, உனக்கு சஞ்சீவியையும் சிரஞ்சீவியையும் கொடுத்தருளினார்" என்று தோத்திரம் பண்ணி, வெளிப்பட்டு, வீரரோடு போகலுற்றார்; இப்படி வீரரோடு கூடிப்போகிற பண்டிதரை அந்த நகர ஜனங்கள் கண்டு, மனம் வருந்தி, கண்களில் நீர் ஆறாய்ப் பெருக நின்று, "எங்களுடைய உயிர்களெல்லாம் அழியாமற் காப்பாற்றின இந்த மஹாத்மாவுக்கு இப்படியும்நேரிடலாமோ? இதைத்குறித்துப்பாண்டுரங்கபகவான் என்செய்யத் திருவுளங்கொண் டிருக்கிறாரோ, அறியோம்" என்று பற்பல வகையாய்ப் பேசிக்கொண்டு சூழ்ந்துவர, பண்டிதரும் ஸ்ரீ கண்ணபிரானைத் தமது திருவுளத் தமைத்துக் கொண்டு அரசனிடத்துக்கு வந்தார்.

இப்படி இவர் போய் அரசனை யணுகுமுன்னே, ஸ்ரீ பண்டரிநாதர் விரைந்து இவரது துன்பத்தை நீக்காமற்போனால், பக்தபரிபாலநன், நிரக்ஷகன் என்னும் பெயர்கள் எனக்குத் தகுமோ, தகாமற் போவதேயன்றி அப்பெயர்களுக்கும் தாழ்வுவரும் என்று திருவுளம்பற்றி, ஜீர்ணவஸ்திரம் தரித்து, தலையை மூடின கம்பளியின் கயிறுகள் கழுத்தில் தொங்கவும், கோவணம் தொங்கவும், ஒரு தடியானது கையில் விளங்கவும், பாதங்களில் செருப்பு விளங்கவும், பண்டிதர் எழுதிக்கொடுத்த பத்திரம் ஒருகையில் விளங்கவும், நீலநிறமாகிய திருமேனியோடு, வெட்டியானென்று கண்டோர் சொல்லும்படி வேஷம்பூண்டு புறப்பட்ட ஸ்ரீ பாண்டுரங்கப் பெருமானை, ஸ்ரீ பெரிய பிராட்டியார் கிட்டிநின்று, "அருளே திருவுருவாகப் பெற்ற பகவானே! இப்படி நாணம்விட்டு, நீ யிந்தக்கோலங் கொள்வதற்குக் காரணம்யாது" என்று வினவ, தேவராஜனாகிய பகவான் திருமகளை நோக்கி, "மேல்வினையத்தக்க காரியத்தை நீ சிறிதும் அறிந்திலை, நம்மூரிலுள்ளார் சிறுவிலைக் காலத்தால் வருந்தின வருத்தத்தை நீக்கிக் காப்பாற்றின உனது அன்பராகிய தாமாஜி பண்டிதரைக் கொலை செய்வதற்காக அரசன் ஏவின வீரர்கள் அழைத்துக் கொண்டு போகிறார்கள். அந்தப் பண்டிதர் தம்மை எமது வசத்தில் ஒப்புவித்து இருப்பவ ராகையால் அவருக்கு நேரிட்ட இந்த ஆபத்தை நீக்கும்பொருட்டு நான் இந்தவேஷம் பூண்டதனால் எனக்கு ஒரு தாழ்வும் நாணமும் இல்லை" என்றுசொல்லி ஒரு பெரிய பணப்பையைத் தமது தலைமீது வைத்துக் கொண்டுபோய், பேதரிமா நகரத்தை ஆளுகின்ற அரசனுடைய அரண்மனை வாயிலையடைந்து,

தமது வரவை அரசனுக்கு அறிவிக்கும்படி வாயில் காவலரோடு சொல்ல, அவர்களும் அப்படியே போய் அரசனுக்குத் தெரிவிக்க, அரசனும் உள்ளே வரும்படி கட்டளையிட, அழைக்க வந்தவரோடு கூடிச் சென்று அரசனுக்கு எதிரில் நின்று சலாம்செய்தார். அவரைக் கண்ட அரசன் "நீ யார்?" என்று கேட்டவுடனே, சர்ப்பசயனனாகிய ஸ்ரீ பாண்டுரங்கப்பெருமான் அரசனை நோக்கி, "நான் ஒரு வெட்டியான், என்பேர் விடோபாநாகன், என் கையில் உள்ளது தாமாஜி பண்டிதர் கொடுத்த பத்திரம்" என்று சொன்னார். உடனே அரசன் அந்தப் பத்திரத்தை வாங்கிப் பிரித்து அருகில் இருப்போரைக்கொண்டு வாசிப்பித்து, அதில் பண்டிதர் இப்போது நேரிட்ட பஞ்சகாலத்தில் தானியங் கிடைக்காமல் உயிர்கள் வருந்தி இறப்பதைக்கண்டு அவர்களின் துன்பத்தை நீக்கும்பொருட்டு நமது களஞ்சியத்தி லிருந்த தானியங்களை எல்லாம் அவர்களுக்கு விற்று, வந்தபணத்தை எல்லாம் ஒரு பெரிய பையில் நிறைத்துக்கட்டி என் வெட்டியான் வசமாக அனுப்பி யிருக்கிறேன், ஆதலால் அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டு ஒரு ரசீது எழுதி அனுப்பவேண்டும்" என்று எழுதியிருப்பதை அரசன் அறிந்து, "பணம்முழுதும் தருவாயாக" என்று கேட்க, வெட்டியான் வேஷம் பூண்டுவந்த பகவானனவர் அரசன் கேட்டபடியே பணப்பையை அவனுக்கு எதிரேவைத்து அவிழ்த்துக்கொட்டி "எண்ணிக்கொள்ளும்" என்றார். அப்போது அரசனைக் கிட்டிநின்றவர்கள் அந்தப் பணத்தை எண்ணி இலக்ஷத்து ஐம்பத்து நாலாயிர வராகன் என்று தொகைசெய்து, அதற்கு மேலும் உள்ள பணத்தை எண்ணி எண்ணிக் கைசலித்து, எண்ண முடியாமல் அதே பையிலேயே போட்டுக்கட்டி பொக்கிஷத்தில் கொண்டுபோய் பத்திரப்படுத்தினார்கள். ஆனால் இவர்கள் பகவானுடைய மாயா விசேஷத்தால் இவ்வளவு தொகையுள்ள பொருள் இந்த ஒரு பையில் அடங்குமோ என்று யோசிக்கவில்லை. இது இப்படியிருக்க அரசன் "கீழ்க்கணக்கனாகிய ஒருவன் எழுதின சொல்லை மதித்துத் தூதரை அனுப்பினேன், இப்படி நன்மையாக நீர் அனுப்புவதை அறிந்திலேன்" என்று இனியசொற்களை எழுதி அதற்குமேல் "எனக்குச்சேரவேண்டியபொருள் எல்லாம் சேர்ந்தன, ரசீதும் அனுப்பியிருக்கிறேன், பெற்றுக்கொள்வீராக" என்று எழுதிக் கொடுத்து பல்லக்கும் பலவகையான செல்வமும் பண்டிதருக்குக்கொடுக்கும்படி வெட்டியான் வசத்தில் ஒப்புவித்து வெட்டியானுக்கும் வேண்டும் பொருள்களைப் பரிசுகொடுத்து, "நீ மங்களவேஷம் என்

னும் ஊரை அடைவாயாக" என்று விடைகொடுத்து அனுப்ப, ஸமாநாதிகாரஹிதராகிய பகவானனவர் திருவுள்ள மகிழ்ச்சியோடு பண்டிதர் விட்டுக்குப்போய் அரசன்தந்த பொருள்களை எல்லாம் அவர்வீட்டில் வைத்து ரசிதையும் அவர் மனைவியார் கையில்கொடுத்து மறைந்தருளினர். அதன்பிறகு பண்டரிபுரத்தி லிருந்துவந்த பண்டிதர், கொலை வீரரோடுவர, அவரை யெதிர்கொண்டுபோய்த் தழுவிக்கொண்டு, "நீர் அனுப்ப, பெரும்பொருள் கொண்டுவந்த வெட்டியான் என்னிடத்தில் பொருள்கொடுத்து ரசிதும் பெற்றுவந்தான், அவன் வழியில் எதிர்ப்படவில்லையோ" என்று சொல்லி, "பண்டிதரே, எனக்குக் கொடுக்கவேண்டிய பொருளுக்காக நீர் எழுதின பத்திரத்தைப் பாரும்" என்றுகொடுக்க, பண்டிதர் அதை வாங்கிப் பார்த்து, "இந்தச்செய்தி முழுதும் ஸ்ரீ பண்டரிநாதனது பெருங்கருணையால் நிகழ்ந்ததாகத் தெரியவருகின்றது" என்று ஆலோசித்து, பகவானைக்குறித்து, "உலகமுண்ட பெருவாயனே! பொன்மகுடம் அணியத்தகுந்த உன்சிரசில் பழங்கந்தையைத் தரித்துப் பணப்பையைச் சுமந்தாய், ரத்நஹாரந்தரித்து விளங்குகிற திருக்கழுத்தில் கம்பளக்கயிறு விளங்கப் பூண்டாய், சங்க சக்ரங்கள் விளங்குகிற திருக்கரத்தில் தண்டத்தைத் தரித்தாய், பட்டுவஸ்திரமுடுத்து விளங்கும் திருவரையில் அழுக்குமிகுந்த கோவணத்தையுடுத்தாய், தேவர்கள் எல்லாரும் தாழ்ந்து வணங்குகின்ற திருவடியில் செருப்புத்தரித்தாய், என்பொருட்டாகப் பேசத்தகாத தாழ்ந்த வார்த்தைகளை அரசனிடத்திற் பேசினய், என்பொருட்டாகத் தலைகடுக்கப் பணப்பையைச் சுமந்தாய், திருப்பாற்கடலில் ஓ ராலிலையில் அறிதுயிலமர்ந்தவனே! புருஷோத்தமனே! பத்மநாபா! பக்தபரிபாலநா! பண்டரிபுரத்தில் நிலைபெற்ற கற்பகக்கனியே!" என்று இவ்வாறு பலவிதமாய்ப் புலம்பிக் கண்ணீர்பெருக்கி, திருத்துழாய் மாலையையணிந்த பகவானைக் கருத்திற்பதித்து மயங்கினின்றார். இவருடைய கருத்தைக் கண்டுகொண்ட அரசன் முதலாகிய எல்லாரும் ஆச்சரியமடைந்து, "பொன் கொண்டு வந்தவன் மாதவனேயென்று முன்னமே யாம் அறியாமற்போனேம்; அவ்வளவு தொகையை ஒருவன் யேற்குமோ? அவ்வளவு பெரும்பளுவை ஒரு தலைதான் சுமக்குமோ? இப்படி இவ்விடத்தில் நடந்த அற்புதங்கள் யாவும் பண்டிதர்செய்த தவப்பயனாலேயே நிகழ்ந்தனவாகவேண்டும்" என்று தெளிந்து, அவரை வணங்கித் தோத்திரஞ்செய்து நிற்க, பண்டிதரும், "என்பொருட்டாக பகவான் இப்படி செய்யத்தகாத காரியத்தைச்செய்தாரே" என்று பரிதபித்து

பிறகு வேந்தனைநோக்கி, "எனக்கு விடைகொடுக்கவேண்டும்" என்று கேட்க, அரசன் பண்டிதரை நோக்கி, "கேளும் பண்டிதரே! ஸ்ரீ லக்ஷ்மீநாதனாகிய பகவான் உமக்கு ஆளாகவந்தார். அந்த அவாங்மா நஸகோசரராகிய பகவானை நாங்களெல்லாரும் கண்டு கடைத்தேறச் செய்தீர்; ஆதலால், எம்முடைய பணிவிடைகளை யேற்றுக்கொண்டு இவ்விடத்திலே யெழுந்தருளியிருக்கலாம்" என்றுசொல்லிப் பிரார்த் திக்க, பண்டிதர் அவ்வரசனது வேண்டுகோளுக் குடன்படாமல் பண்டரிபுரத்துக்குப் போய், பகவானைக் கண்களிகூரக்கண்டு சேவி த்து, "தேவதேவனே! பாபியாகிய என்பொருட்டு ஓ ரரசன் சபைக் கெழுந்தருளி, அவனுக்கும் அவன் சபையிலுள்ள எல்லாருக்கும் சேவை தந்தருளினாய், அந்தசேவையை அடியேன் கண்டு களிக்கப் பெற்றிலேன்"என்று கண்ணீரால் திருவடிவிளக்கி,"மூன்றடி மண்ணை மஹாபலியினிடத்தில் யாசித்துக்கொண்ட வாமநமூர்த்தியே! உன்னை எப்பொழுதும் மறவாதிருக்கிற எனக்கெதிரே நீலமேக வண்ணனாகி ஏன் எழுந்தருளுகிறதில்லை" என்றுசொல்லித் தோத்திரஞ்செய்து கொண்டிருக்கிற பண்டிதருடைய உண்மைநிலையையறிந்த அவ்வர சன், பண்டரிபுரத்துக்கு வந்து இவரைக்கண்டு, "பரமாத்மனாகிய பண்டரிநாதனை இன்னம் ஒருதரம் எமது கண்களிக்கக் காணும்படி க்ருபைசெய்யவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, தீபமானது தூண்டு கோலால் மிகவும் சுடர்விட்டு விளங்குவதுபோல அரசன் ப்ரார்த் தனையால் தமக்கும் அந்தப் பண்டரிநாதன் அரசனுக்குப் பொன் கொண்டுவந்து கொடுத்த திருக்கோலத்தைச் சேவிக்கவேண்டுமென் கிற விருப்பம் மிகுதியாக வுண்டானதனால், அன்பு மிகுந்து, செந் தாமரை மலர்போலுங் கண்களையுடைய ஸ்ரீமந்நாராயணனைப் பல முறை வாழ்த்தி வணங்கவே, பக்தவத்ஸலராகிய பகவானுனவர் முன்னே அரசனிடத்துக்குப் பொருள் சுமந்துபோன திருவுரு வோடு எழுந்தருளி, பண்டிதருக்கும் அரசனுக்கும் காட்சி கொடுத் தருளினர். அந்தத் திருக்கோலத்தைப் பண்டிதர்கண்டு, "ஸ்ரீகண்ண பிரானே! உன் திருவருளின் தன்மை யிதுதானோ" என்று திருவடி யில் வீழ்ந்து வணங்குதலும், அந்தப் பகவான் அவரைத் தழுவிக் கொண்டு அன்பு பாராட்டித் தமது திருப்பதியாகிய பண்டரிபுரத் துக்கெழுந்தருளினர். பிறகு அரசன் பண்டிதரை வணங்கி அவரை ஞானசிரியராகக் கொண்டு அவரிடத்தில் மேன்மையாகிய பொருளை யடையும்படியான நற்புத்தி யில்லாமையால் தன் ஊர்க்குப் போய் விட்டான். அதன்பிறகு பகவத் தாஸராகிய பண்டிதர், தமது குடும்

பத்தையும் உடன்கொண்டு பண்டரிபுரத்துக்குப் போய், அவ்விடத்திலுள்ளாரெல்லாரும் இவரது வைபவத்தை யறிந்து துதிக்க, இடையருமல் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டு வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே ம்ருத்யுஞ்சய பக்தர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

நாமாஜிபண்டிதர் சரித்திரம் முற்றிற்று.

முப்பத்தைந்தாவது

மிருத்யுஞ்சயபக்தர் சரித்திரம்.

சாந்தபமணி யென்னும் பெயர்பெற்ற ஒரு துருக்கன் பேதரி நகரத்துக்கு அரசனுகி அரசாட்சி செய்து வருங்காலத்தில், ஒருநாள் தன் மனையாளோடு மாளிகையின்மேல் ஒப்பரிகையிற்போய்ப் பரிமள த்ரவ்ய மணிந்து சரசசல்லாபமாயிருந்து, வாழைக்கனியை யுரித்துச் சர்க்கரையில் தோய்த்துத் தானும் அருந்தித் தன் மனையாளுக்குங் கொடுத்து, அக்கனிகளின் தோலைச் சாளரவழியாகக் கீழேயெறிய, அங்கே ஒரு வறியவனிருந்து, அந்தத் தோலை யெடுத்து வாயிலிட்டு மென்று, இது மிகவும் சுவையாயிருக்கிறதென்று உண்பதை அரசன் மனைவியானவள் பார்த்து, அரசனுக்குக் காட்ட, அரசன் கோபங்கொண்டு, "இந்தக் காவலோடு கூடிய அரண்மனைக்குள்ளே இவன் எப்படி வந்தான்" என்று சில காவல்வீரரை யழைத்து, "இவனை யார் உள்ளே விட்டது?" என்று தண்டித்தலும், அவர்கள் அந்த வறியவனைக் கைசலிக்க அடித்தார்கள். அந்த அடிகளைப் பொறுத்துக்கொண்டு அவன் சிரிப்பதை அரசன் பார்த்து, ஆச்சரியப்பட்டு, அவனைத் தன்னிடத்திற்கு வரவழைத்து, அவனைநோக்கி, "நீ யிவ்விடத்தில் வந்ததற்காக உனனைப்பிடித்து நன்று யடிக்கும்படி காவல்வீரரை யேவினேன், அவர்களும் அப்படியே செய்தார்கள். அவர்கள் அடித்த அடிகளுக்காக நீ வருந்தாமல் சிரிக்கிருய், இது என்ன?" என்று கேட்க, அவ்வறியவன் அரசனை நோக்கிச் சொல்லுகிருன்: எப்படியென்றுல்,"உரித்தெறிந்த தோலின் சுவையை யநுபவித்த எனக்கு உண்டானபயன் இந்த அடிகளானுல், அந்தத்தோலினுள்ளே யிருந்த கனியின் சுவையை யநுபவித்த வுனக்குண்டாகும் பயன் யாதோவென்று சிரித்தேன், மேலும், உன் மனைக்கு வெளியே யிருந்த எனக்குக் கிடைத்த பயன் இதுவானுல், மனைக்குள்ளேயிருக்கிற வுனக்குக் கிடைக்கும் பயன் யாதோவென்றும்

சிரித்தேன்" என்று சொன்னான். இதைக் கேட்டவுடனே, அரசன் மிகுதியாகிய விரக்தியை யடைந்து, அரண்மனையைவிட்டு வெளியே வந்து அரசாட்சியையும், மனைவி மக்களையும் வெறுத்துக் காட்டுக்குப்போய், ஒரு பக்கத்திலிருந்துகொண்டு, "தெய்வத்தை பஜிக்கும் விதம் யாது ? ஜநந சாகரத்தைக்கடந்து மோக்ஷதீரத்தை யடையும் விதம் யாது? எனக்குக்கடைத்தேறும் வழியை யுபதேசிக்கிற ஆசிரியனையடையும் விதம் யாது?" என்று இப்படிப் பலவிதமாயெண்ணி, அந்தக்காட்டில் திரிந்துகொண்டிருக்குங் காலத்தில், பண்டரிபுரத்தில் ஆடிமாசத்து ஏகாதசியாகிய விசேஷதினத்தில் பண்டரிநாதரைச் சேவிக்கவேண்டுமென்று அநேகம் பாகவதர்கள் தாளம், ம்ருதங்கம் முதலாகிய வாத்ய விசேஷங்களோடு ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டு கருடக்கொடிபிடித்து அவ்வழியாய் வருவதை அரசன்கண்டு, அவர்களெதிரில் விழ்ந்துவணங்கி, எழுந்து நின்று, அவர்களிடத்தில் அன்பு மிகுந்தவனாய், இவர்கள் இவ்வழியாய் வந்ததனால் இது சுதிநமாகுமென்று மகிழ்ந்து அவர்களைத் தொடர்ந்து பண்டரிபுரத்தை யடைந்து, சந்த்ரபாகாநதியில் முழுகி, புண்டலீகரை வணங்கி, அந்த க்ஷேத்ரத்தை வலம் வந்து, ஸ்ரீ கோபாலஸ்வாமி எழுந்தருளியிருக்குங் கோயிலுக்கெதிரே நின்று, சாதுஜநங்கள் செய்கிற ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநத்தைச் சிரத்தையோடு கேட்டு, பந்தங்களைச் சேதித்தவர்களாகிய அடியார்களைப் பணிந்து, ஆநந்தக்கடலில் முழுகி, பெருமகிழ்ச்சியினால் சொல்லுகிறான் : எப்படியென்றால், "இவ்வுலகத்தில் அநேக தீர்த்தங்களையும், க்ஷேத்ரங்களையும், தெய்வங்களையும் கண்டேன், ஆயினும் இந்தப் பண்டரிபுரம்போல எங்குமில்லை, இந்தச் சந்த்ரபாகா நதியில் ஒருதரம் மூழ்கினவன் எல்லாப் பாபராசிகளையும் நீருக்குவான், எப்படிப்பட்ட துர்பபுத்தியுள்ளவனயினும் இந்த க்ஷேத்ரத்தை யடைந்து ஒருநாள் வாசம்பண்ணினால் அவன் புநிதனாய்விடுவான், இவ்வித நன்மை யமைந்த தீர்த்தக்ஷேத்ரங்களின் மஹிமைகளைச் சொல்ல வல்லவர் யாவர்" என்று சொல்லி, சரீரம் புளகம்கொண்டு, கருட ஸ்தம்பத்தினருகே வந்து தலை தாழ்த்தி வணங்கி, அவ்விடத்திற் கூடியிருந்த சாதுக்களை வணங்கித் தழுவிக்கொண்ட பிறகு, திவ்ய ரூபத்தோடு செங்கல்லின்மேலெழுந்தருளியிருக்கிற பரஞ்சுடராகிய ஸ்ரீ கண்ணபிரானைக் கண்களிகூரக் கண்டு தழுவி, இரண்டு திருவடியின் கீழே விழுந்து, வாமநா, பதிதபாவநா, புருஷோத்தமா, ஹே கோபாலா, ஹ்ருஷீகேசா, பரந்தாமா, பாண்டுரங்கா, கருணாகரா, உன் வைபவத்தைக் கேட்டு வந்து உன் திருவடியிற் சரண்புகுந்தேன், உன் திருவுருவம் என் மனத்தில் விளங்கித் தழைக்கச் செய்வோரைப் பெருமையால் அலைகிறேன், ஆகை

யால், போதகர் கிடைத்து என் மனோரதம் நிறைவேறும்படி கருணை செய்யவேண்டும், நீ இந்த வரத்தை எனக்கு அருள்செய்கிற வரைக்கும் உன் கோயில் வாயிலைவிட்டு நீங்கமாட்டேன்'' என்று ப்ரார்த்தித்து, நிலத்தில் விழுந்து, ஜலபாநம் முதலானவை யில்லாமல் கிடக்க, கருணைக் கடலாகிய பகவானானவர், மூன்றுநா ளிரவில் அவன் கனவில்வந்து, "கல்யாணபுரத்தில் வாழ்கின்ற ஸஹஜாநந்த சுவாமிகளிடத்திற் போய், உபதேசம் பெற்றுக்கொள்ளக் கடவை'' என்று சொல்லிப் போயினர். போனவுடனே, அரசன் கண் விழித்து அருகேயிருந்த புத்தகத்தை நோக்கி, ஜ்ஞாநவிவேகசிந்து என்பது இது தானேவென்று வியந்து, பாண்டுரங்கப்பெருமானாகிய தீநதயாளன், தன்கருணையால் என்னைப் பரிபாலநஞ் செய்தானென்றெண்ணி, அந்தப் புத்தகத்தை ஏகாந்த ஸ்தலத்தி லிருந்துகொண்டு படித்து மநநஞ் செய்கிற காலத்தில் தான் கண்ட கனவை நினைத்துக் கல்யாண புரத்துக்குப் போய்க் கண்ணபிரானது திருவடியை வணங்கி, விடைபெற்று, குருவினிடத்தை யடைந்துதேட, அவர் அங்கே யில்லாதிருக்கக் கண்டு, மீண்டு, பண்டரிபுரத்தில் தங்கி யிருக்கும் நாளில், கார்த்திகை யேகாதசி நேரிட, அந்தக் காலத்தில் குருவானவர் பண்டரிபுரம் வந்து சேர்ந்தார். அந்தக் குருநாதரை அரசன் கண்டு, தான் கண்ட கனவின் செய்தியைச் சொல்ல, குருநாதரும் மன மகிழ்ந்து, அரசனுக்கு உபதேசம் செய்து, ம்ருத்யுஞ்சயர் என்கிற பெயரையுஞ் சூட்டினர். அப்படி உபதேசமும் ம்ருத்யுஞ்சயர் என்கிற பெயரும் பெற்ற அரசன், நாரணபுரத்தில் வந்து, கேட்டதை மநநஞ்செய்துகொண்டிருந்து தெளிந்து சாக்ஷாத்கார மடைந்து, விஜ்ஞாந நிலையோடுகூடி விளங்குங் காலத்தில், அந்த வூரிலுள்ள பவராயர் என்னும் பெயரையுடைய ஒரு ஜங்கமர் வந்து இவரிடத்தில் உபதேசம் பெற்றார். இந்த ஜங்கமர்களிற் சிறந்த சமுச்சி யென்பவனொருவன், "தன்ஜாதியானாகிய பவராயன் ஒருதுருக்கனிடத்தில் உபதேசம் பெற்றான். இது என்ன புதுமை ! செருப்புப் புதியதென்றாலும் தலைமேலேற்றிக் கொள்ளலாமா ? இவனது நடத்தை கூடாததா யிருக்கின்றது'' என்றிகழ்வதைக் குறித்து, அந்தப் பவராயன் என்னும் ஜங்கமன் தனது ஆசிரியராகிய ம்ருத்யுஞ்சயரிடத்திற் சொல்ல, அவர், இந்தச் சீடனது மனம் திடப்படும்படி சொல்லுகிறார்: "அப்பா, மதபேதியானவன் சொல்லுவதை நீ மனத்திற் கொள்ளவேண்டாம்; நீ என் சொல் வழியில் நின்று, நாள்தோறும் ஸ்ரீ ராமபஜனை செய்துகொண்டிருக்கக் கடவாய்'' என்று நியமித்து

மேலும் சொல்லுகிறார்: "வெண்ணீறணிந்த ஜங்கமர்களுக் கரசனாயக் காசிபதி யென்னும் பெயருள்ளவன் ஒருவனிருந்தான். அவன் நாள்தோறும் பதினாயிரம் ஜங்கமரைக் கூடவைத் துண்பவனாயிருந்தான். அப்படி யிருக்கையில், ஒருநாள் ஜங்கமரெல்லாரும் வந்துண்ணும் பொருட்டு அன்னம், கறிவகைகள் யாவும் இலைகளில் பரிமாறின பிறகு, அந்தக் காசிபதி யென்னும் அரசன் அந்தப் பந்தியில் உட்கார்ந்திருக்கிற ஜங்கமரை நோக்கி, "நீங்கள் யாவரும் சதாகாலமும் ஸ்மரித்துக்கொண்டிருக்கிற தெய்வத்துக்குப் பூஜை செய்யுங்கள்" என்று சொல்ல, அவர்களெல்லாரும் தமது கழுத்திலணிந்திருந்த லிங்கமுடிகளையும் பெட்டிகளையும் அவிழ்த்தும் திறந்தும் பார்த்து, லிங்கங்கள் இல்லாதிருக்கக்கண்டு திகைத்தார்கள். அப்படித் திகைத்து அமுது செய்யாது வருந்துங் காலத்தில், அரசன் கண்டு, "என்ன செய்தி?" என்று வினவ, அவர்கள் லிங்கங்கள் காணப்படாத செய்தியைச் சொல்ல, அவன் "இது சாது தூஷணத்தால் நேர்ந்ததே யன்றி வேறொன்றினாலும் உண்டான தல்ல" என்றான். அப்போது சமுச்சி யென்னும் ஜங்கமன், "துலுக்கனிடத்தில் பவராயன் உபதேசம் பெற்றானென்று நான் சொன்னேன்" என்றான். அதைக் கேட்ட ஜங்கமரெல்லாரும், பவராயனுக்கு ஆசிரியராயிருக்கிற ம்ருத்யுஞ்சயரிடத்திற் போய், நடந்த செய்தியைச் சொல்லி வணங்கினார்கள். அந்தத் தேசிகோத்தமர், இந்த மடத்தில் "வேதாந்தம் சித்தாந்தம் என்னும் இரண்டு நாய்களுண்டு; அவையே இந்த லிங்கங்களை யெல்லாம் திருடிக்கொண்டு வந்து விழுங்கிவிட்டனவென்று நினைக்கிறேன்" என்று சொல்லி, அவற்றை யழைக்க, அவற்றில் ஒன்று வந்து எதிரே நிற்க, அதை நோக்கி, "நீ யுண்ட லிங்கங்களைக் கொடு" என்று நியமிக்க, அந்நாய், "ஐயாயிரம் லிங்கங்களைக் கக்கி நின்றது. மற்றொரு நாயை யழைத்து நியமிக்க அதுவும் அப்படியே ஐயாயிரம் லிங்கங்களைக் கக்கிநின்றது. அப்போது ஜங்கமரெல்லாரும், தத்தம் இலிங்கங்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ளமாட்டாமல் மயங்கித் தேசிகோத்தமரை ப்ரார்த்திக்க, அவர் தமது, ஜ்ஞானக்கண்ணினால் தெரிந்தெடுத்து அவரவர்களுக்கு அருள் செய்தார். அவைகளைப் பெற்றுக்கொண்ட ஜங்கம ரெல்லாரும், தேசிகோத்தமருடைய திருவடியை வாழ்த்தி வணங்கி, அவருக்கு ஞானசாகரர் என்றொரு சிறப்புத் திருநாமஞ் சூட்டின பிறகு, அரசனும் அவரை வணங்கி விடைபெற்றுத் தன் வீட்டுக்குப் போய், சிவலிங்கத்தைப் பூசித்து, அமுதுண்டு இனிது வாழ்ந்திருந்தான்" என்றுசொல்லி மேலே பாநுதாஸர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினார்.

மிருத்யுஞ்சயபக்தர் சரித்திரம் முற்றிற்று.

முப்பத்தாறுவது

பாநுதாசர் சரித்திரம்.

எல்லாராலும் புகழ்ப்பெற்ற பைடணபுரி யென்னும் பட்டணத்தில் வசிப்பவரும், திநந்தோறும் சூரியபூஜை செய்பவரும், வேதியரிற் பிறந்தவரும் ஆகிய ஸூஜ்ஞாநர் என்றொருவரிருந்தார். அவருக்கு ஒரு ஸுபுத்திரர் பிறந்து வளர்ந்து வருங்காலத்தில், அந்தந்தப் பருவங்களுக்கேற்க, அந்நப்ராசநம், சௌளம், உபநயநம், வேதாத்யயநம் முதலிய எல்லாவற்றையுங் கிரமமாக நடத்தி வந்தார். ஆனால் வேதாத்யயநம் மாத்திரம் தந்தையே செய்வித்து வருவதில், ஒருநாள் அந்தப் பாட விஷயத்தில் சிறிது கோவங்கொண்டார். புதல்வர் அந்தக் கோவத்துக் கஞ்சி, வீட்டைவிட்டு வெளிப்பட்டு, எங்கேபோய் ஒளித்துக்கொள்வோம் என்று ஊருக்கருகே யிருக்கிற ஒரு காட்டை யடைந்து, அவ்விடத்தில் மண்ணிற் புதைந்திருந்த சூரியநாராயணன் கோயிலைக் கண்டு, அதற்குள்ளே புகுந்து, சூரியநாராயணப்பெருமானை மிகுந்த அன்போடு வணங்குதலும், அந்தச் சூரியநாராயணன் ப்ரத்யக்ஷமாகி, "உன் அன்புக்கு மகிழ்ந்தேன், நீ முகுந்தனை த்யாநித்துக்கொண்டிரு" என்றுசொல்லி, பாலைத் தங்கவட்டிலிற் கொண்டுவந்து அந்தப் பாலகர்க்கு அருத்தி, "மைந்தனே! உனக்கு யாதேனும் இடையூறு நேர்ந்தால் அதை நானேவந்து நீக்குவேன்" என்று சொல்லி மறைந்தார். பிறகு அந்தச் சிறுவருடைய தாய்தந்தையர்கள் ஏழுநாள்வரைக்கும் ஊர்முழுதும்தேடிக்காணாமல் மனந்தளர்ந்திருந்தார்கள். அந்த ஏழாநாள் இந்தச் சிறுவர் கோயிலினுள்ளேயிருந்து வெளியே வரக்கண்ட ஒருவேதியன் போய்க்கிட்டி இவரை யழைக்க, இவர் விரைந்து போய்க் கோயிலினுள்ளே ப்ரவேசித்தார். அந்தவேதியன் உடனேபோய்த் தாய்தந்தையர்க்கு இந்தச் செய்தியைச் சொல்ல, அந்தத் தாய்தந்தையர் சிலரை அழைத்துக்கொண்டு விரைந்துபோய் அந்தக் கோயிலுக்கருகே இருள் நீங்கும்படி திவர்த்திகள் கொளுத்திக்கொண்டு, உள்ளே ப்ரவேசித்துப் பார்த்து, சிறுவர் சூரியநாராயணன் திருவடியில் தலைவைத்துப்படுத்திருப்பதைப் பார்த்து, ஆச்சரியப்பட்டு, புதல்வரை யெடுத்து மார்போடணைத்து, "பாலகனே! நீதனியேயிங்குவந்துதங்கியிருக்கக்காரணம் யாது? ஏழு நாளாய் உணவில்லாமல் எப்படியிருந்தாய்? உன்னையிங்கே காப்பாற்றினவர் யார்?" என்றுகேட்க, "சிறுவர் இங்கே ஒரு வேதியர் தினந்தோறு மதுரமான பாலைத் தங்கவட்டிலிற் கொண்டு

வந்து கொடுக்க, உண்டு பசியாறியிருந்தேன்''என்று சொல்லக்கேட்ட தாய்தந்தையர் முதலானோர் அதிசயித்து, ஆலோசித்து, "இந்தச் சிறுவனது நற்குணத்தைப் பார்த்து, சூரியநாராயணனே பால்கொண்டுவந்து கொடுத்துக் காப்பாற்றினான்''என்று நிச்சயித்து, இவருக்குப் பாநுதாசர் என்று பெயரிட்டு, அழைத்துக்கொண்டு தமது வீட்டுக்குவந்து சேர்ந்தார்கள். சேர்ந்த தாய்தந்தையர்கள் இச் சிறுவனைச் சூரியநாராயணனே நமக்குக் கிருபைசெய்தாரென்று அந்தச் சூரியநாராயணனைத் தோத்திரம் பண்ணிக்கொண்டிருக்க, தந்தையானவர் இந்த மைந்தனுக்கு வேதாத்யயநம் செய்விக்கத் தொடங்கினால், முன்போல் நேரிட்டால் என்ன செய்வோமென்றும், விதிப்படி யாகக்கடவதென்றும் நிச்சயித்துக்கொண்டு, அந்தச் சிறுவனுக்கு மணமுடித்து வைத்தார். பிறகு அந்தச் சிறுவர் ஸ்ரீபகவானுடைய ஸ்மரணையே மேலிட்டு, ப்ரபஞ்சப்பற்று முழுதுமற்றிருக்கக் கண்ட தந்தை தாயர்கள் ஸ்ரீ வநமாலாதரராகிய ஸ்ரீ கண்ணபிரானுடைய க்ஷேத்ரமாகிய பண்டரி நகரத்தை யடைந்தார்கள். பிறகு சிறுவராகிய பாநுதாசர் ஒரு தொழிலையுஞ் செய்யாதவராயும் வறுமையால் அங்கவஸ்திர மில்லாதவராகியும் நிர்மலனாகிய பகவானுடைய திருவடியை மறவாமல் ஸ்ரீஹரிபஜனை செய்துகொண் டிருந்தார். இவர் இப்படி யிருப்பதை இவருடைய பந்துக்கள் அறிந்து வந்து, இவரை நோக்கி, "ஐயா! நீர் யாதொரு தொழிலுஞ் செய்யாமல் இப்படி ஹரிபஜனை செய்துகொண்டேயிருந்தால் குடும்ப ஸம்ரக்ஷணம் எப்படி நடக்கும்? இதுவரையில் உமது தாய் தந்தையர் நடத்திவந்த குடும்ப ஸம்ரக்ஷணத்தை இனிமேல் நீ ரல்லவோ நடத்தவேண்டி யிருக்கிறது? ஏதோ ஒரு வர்த்தகம் செய்து குடும்ப ஸம்ரக்ஷணத்தைச் சுலபமாய் நடத்தலாமே, அதற்குப் பணமில்லையென்பீரானால், நாங்கள் நூறுவராகன் தருகிறோம், அந்தத் திரவியத்தைக்கொண்டு, வஸ்த்ரவ்யாபாரம் செய்து அந்தவ்யாபாரத்தால் வரும் லாபத்தை நீர் குடும்பச்செலவு செய்துகொண்டு சுகமாயிரும், முதற்பொருளை மாத்திரம் எங்களுக்கு வேண்டும்போது கொடுக்கலாம்'' என்றார்கள். அவர் சொல்வதற்கு இவர் கொஞ்சம் சம்மதித்தவுடனே, இவருக்காகத் தங்கள் கடைக்குச் சமீபத்தில் ஒரு கடையமைத்து, இவருக்கு அந்தவஸ்த்ரவ்யாபாரிகள் பேசுகிறபரிபாஷையையுங் கற்பித்து, நாலுபேர் விற்கும் விலையையும் அறிவித்து, "வர்த்தகஞ் செய்பவர் பொய்சொன்னால் அதிக லாபமுண்டாகும், மெய்சொன்னால் சொற்ப லாபமுண்டாகும்'' என்று இவ்வாறு பற்பல

வுபாயங்களையும் கற்பித்தார்கள். அதைக் கேட்ட பாநுதாசர் அவர்களை நோக்கி, "நீங்கள் சொன்னபடியே செய்கிறேன், ஆனால் என் தலை போனாலும் பொய் சொல்லமாட்டேன், பொய்சொல்ல நினைக்கவும்மாட்டேன், மெய் சொல்லிச் செய்யும் வர்த்தகத்தால் ஊதியம் மிகவும் அற்பமானாலும், என் குடும்ப ஸம்ரக்ஷணத்துக்கு அது போதும்" என்று சொல்லுதலும், அந்த வுறவினர் இவர் சொன்னதைக் கேட்டு நகைத்து, "இவனுக்குப் பிக்ஷை யேற்பதிலேயே த்ருஷ்டியாகையால் இவன் நமதுசொல்லைக்கேட்கமாட்டான், இவனுக்கு நாம் சொல்லுவதில் ப்ரயோஜநமில்லை" என்று சொல்லும்போது, அவர்களில் ஒருவன் மற்றவர்களை நோக்கி, "இவன் முன்பின் வர்த்தகஞ் செய்தவ னல்லாமையால் அப்படிப் பேசுகிறான். நம்மோடு கூடி வர்த்தகஞ் செய்வதில் சிலநாள் பழகுவானானால் பொய் சொல்லுதல் முதலான விஷயங்களில் நமக்குக் குருவாய்விடுவான்" என்று சொல்ல, கேட்ட மற்றவர்கள் "ஆம், ஆம், அது சரிதான்" என்று ஒத்துக்கொண்டு, இவரை அந்தவ்யாபாரத்தில் அமைத்துவைத்தார்கள். அன்றுமுதல் இவர் வர்த்தகஞ் செய்யத் தொடங்கினார். தொடங்கி, தம்மிடத்தில் ஆடைவாங்க வருவோர்களுக்கு "இந்த ஆடையை நாங்கள் வாங்கினது இந்தத் தொகைக்கு, அதற்குமேல் லாபம் இவ்வளவு கொடுக்கவேண்டும், இஷ்டமானால் வாங்கிக்கொள்ளலாம், இஷ்டமில்லாதபக்ஷத்தில் வேறு கடையில் வாங்கிக்கொள்ளலாம்" என்று சொல்லி, அதற்குச் சம்மதித்து வாங்குவோருக்கு மாத்திரம் விற்பனை செய்துகொண்டு ஸ்ரீராமநாம ஸ்மரணையை மறவாதிருந்தார். இப்படியிருக்க ஆடைவாங்க வருவோரெல்லாரும் இவர் பொய்சொல்ல மாட்டாரென் றறிந்து, இவர் சொல்லும் விலையைக் கொடுத்து வாங்கிக்கொண்டு போகும்வழக்க முண்டாய்விட்டது. ஊரிலுள்ளோர் எல்லாரும் இவரிடத்தில் வாங்குவதனால் மற்றக் கடைக்காரர்களுக்குக் கொஞ்சமும் வியாபாரம் நடவாமலிருந்தது. அதனால் அவர்கள் நஷ்டமடைந்து வருந்தவும், இவரது வியாபாரம் மாத்திரம் நாளுக்குநாள் அபிவிருத்தி யடையவும் சம்பவித்தன. இதைக்கண்டு மற்றக் கடைக்கார ரெல்லாரும் இவர் விஷயத்தில் பொறாமை கொண்டு, "நாமும் மெய் சொல்லுவோ மென்றாலும், முன்னே நாம் பொய்சொல்லி யிருப்பதை யறிந்த இவ்வூரார் யாவரும் அவரை நம்புவதுபோல நம்மை நம்பமாட்டார்கள், புலியானது சாந்தகுணத்தை யடைந்தாலும் கண்டவர்கள் இது மனிதரை வஞ்சித்துக் கொல்வதற்கே இந்தவுபாய மெடுத்தது என்பார்கள்;

ஜாரன் யாத்திரை செய்யப்போனால், இவன் பிரதாரகமநத்தின் பொருட்டே யாத்திரையை மேற்கொண்டான் என்பார்கள். ஆகலால் உண்மையைச் சொன்னாலும் நமக்கு ப்ரயோஜநமில்லை, இவனுக்கு உபகாரஞ்செய்த நமக்குத் துன்பமு மிவனுக்கு இன்பமும், நமக்கு நஷ்டமு மிவனுக்கு லாபமும் நேரிட்டதனால், இனி நாம் செய்யவேண்டிய வுபாயம் ஒன்றும் தோன்றவில்லை" என்று எதிரிலிருக்கிற கோயிலிலேபோய்த் தங்கிப்பார்த்துக்கொண்டிருக்க, இவர் கடையொன்றில் மாத்திரம் விசேஷமாய் வர்த்தகம் நடந்துவந்தது. இப்படி யிருக்குங்காலத்தில், ஒருநாள் அந்தவூரில் ஹரிதாசர்கள் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் விசேஷமாய்ச் செய்யப்போகிறார்களென்று கேள்விப்பட்டு, அதற்குப் போகவேண்டுமென்கிற விருப்பமுள்ளவராய், கோயிலில் கூட்டமாய்க் கூடியிருப்பவர்களை நோக்கி, "இன்று ஏகாதசி ஹரிதிநமாகையால் விசேஷமாய் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் நடக்கப் போகிறதாம், அந்தப் பாகவத கோஷ்டிக்குப் போய் அவர்கள்செய்யும் ஹரிநாமஸங்கீர்த்தநம் கேட்டுவருகிறேன், நான் வருமளவும் என் கடையைப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று ப்ரார்த்திக்க, அவர்கள், "போ! போ! பொருள் கொடுத்து உனக்குக் கடை வைத்துக்கொடுத்தது மல்லாமல் உன் கடையைக் காத்துக் கொண்டிருக்கவும் நாங்கள் ஆட்களோ! நீ உன் இஷ்டத்தின்படியே போ! உன் கடையிலுள்ள வஸ்திரங்கள் போனால் எங்களைக் கேட்க வேண்டியதில்லை" என்றார்கள். அதைக்கேட்ட பாநுதாசர், "துணிகள் போனாலென்ன? இருந்தாலென்ன" என்று சொல்லிவிட்டுப் பாண்டுரங்க பகவானுடைய திருவடியை நினைத்துத் தோத்திரஞ் செய்துகொண்டுபோனார். போனவர் அவ்விடத்தில் நடக்கிற ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநத்தினால் ஆநந்த பரவசராயிருக்கையில், இங்கேயிருந்த கடைக்காரர்கள் இவர் விஷயத்திலுள்ள பொறாமையால், தாசருடைய குதிரையை அவிழ்த்து ஓட்டிவிட்டு, இவர் கடையிலிருந்த புடவைகளெல்லாவற்றையும் ஒரு மடுவில்போட்டு அமிழ்த்திவிட்டு, மருந்தில்லாமல் பிணி நீங்கினாற்போல நமக்கு இந்தச்சமயம் வாய்த்ததென்று மேலும் ஆலோசித்து, பாநுதாசன் வந்து, தன்புடவை முதலானவைகளைக் காணாமல் நொந்துபோன பிறகு,மடுவிற்போட்ட புடவைகளையெல்லாம் நாம் சொந்தமாக்கிக் கொள்ளுவோமென்று எண்ணிக்கொண்டும், இவரைத் தூஷித்துக்கொண்டும் இருந்தார்கள். அந்தச்சமயத்தில் ஸ்ரீ பாண்டுரங்கப்பெருமானானவர், "என்னிடத்தில் அன்புமிகுந்த பாநுதாசனென்பவனுடைய குதிரையை இந்தக்

கடைக்காரர்கள் அவிழ்த்து ஓட்டிவிட்டதுமல்லாமல் அவன் கடைத் துணிகளையும் மடுவிற் போட்டுவிட்டார்களே; இது என்ன அநியாயம்'' என்று தாசர்பொருட்டு அநுதபித்து, விரைந்து வந்து, மேய்ந்துகொண்டிருந்த குதிரையைக் கண்டு, தமது பீதாம்பரத்தை முறுக்கி அதின் கழுத்தில் மாட்டி, இழுத்துக்கொண்டு வந்து, பாநுதாசர் வரும் வழியில் நின்று தாசர் வரவை எதிர்பார்த்திருந்தார். அப்படியிருக்கும்போது, கடைக்காரர்கள் செய்த பொல்லாங்கைத் திருவுளம்பற்றிச் சிறிது கோபங்கொண்டு, அவர்களுடைய குதிரைகள், பொருள், புடவை மூட்டைகள் ஆகிய எல்லாம் கொள்ளை போகும்படி சங்கற்பித்தவுடனே, திருடர்கள் வந்து அவர்களுடைய புடைவை முதலானவைகளைக் கொள்ளையடித்து, அவர்களையும் நன்றாய்ப் புடைத்துவிட்டுப் போனார்கள். அதின் பிறகு, கடைக்காரர்களெல்லாம் ஒருமிக்கக் கூடி, "நாம் பாநுதாசருக்குச் செய்த தீமை நமக்கு உடனே தீமையை யுண்டாக்கிவிட்டது''என்று பேசிக்கொண்டு சிலர் வருந்தினார்கள்; "நமக்கு இந்தத்தீங்கு நேரிடுவதற்கு முன்னே அறிகுறியாகத் துர்ப்புத்தி நேரிட்டது'' என்று சிலர் சொல்லித் துக்கித்தார்கள்; "ப்ரபஞ்சத்தில் பற்றில்லாதவனும், ஸ்ரீஹரிபக்தியிற்சிறந்தவனுயுமிராநின்ற பாநுதாசனுக்கு நாம் செய்த நஷ்டத்துக்கு எதிர் நஷ்டம் நமக்குண்டானது மன்றி, அதற்குமேல் திருடர் அடித்த அடியும் உதையும் பெற்றோமே, அது ஒரு லாபம்'' என்று சிலர்சொல்லி அயர்ந்தார்கள்; "திருடர் நம்மைப் புடைக்கும்போது நாம் விலாவறக் கத்தியும் இவ்வூரிலுள்ளார் ஒருவரும் ஏனென்று கேட்கவில்லையே, இது என்ன அநியாயம்'' என்று சிலர் மனம் நொந்தார்கள்; "அவர்களுக்குக் காதுகேளாதிருக்கும்படி இந்தப்பாண்டுரங்கன்செய்திருக்கலாம்''என்று சிலர்சொல்லிவாடினார்கள். இப்படியிங்கேயிருக்க ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தந காலக்ஷேபத்துக்குப் போன பாநுதாசர், அன்று ராத்திரி இருபத்தாறு நாழிகைவரைக்கும் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் கேட்டுக்கொண்டிருந்து, முடிவில் பகவானுக்குக் கர்ப்பூர ஹாரதி சமர்ப்பித்து, பகவத் பிரஸாதமும் பெற்று, ஹரிதாசரை வணங்கித் தமது வீட்டுக்கு வரும்வழியில், ஒருவேதியன் ஒரு குதிரையைக் கையிற் பிடித்துக்கொண்டு நிற்பதைக் கண்டு, சமீபத்திற் போய், அந்தக் குதிரையானது தம்மதென்றறிந்து நின்றவுடனே, அதைப் பிடித்துநின்ற வேதியன் மறைந்துபோக, இவர், குதிரையைத் தாம் பிடித்துக்கொண்டு, "இதைப் பிடித்துக்கொண்டுநின்ற வேதியன் யாரோ தெரியவில்லையே'' என்று ஆலோசித்துக்கொண்டு

வர, இவரைக் கண்ட துஷ்டர்களாகிய கடைக்காரர்கள் விரைந்து வந்து, இவரைச் சூழ்ந்துகொண்டு கதறியழுதார்கள். தாசர், அவர்களை நோக்கி, "நீங்கள் அழுதற்குக் காரணம் என்ன?" என்று கேட்க, அவர்கள், நடந்த செய்தியெல்லாம் மறைக்காமல் சொன்னார்கள். அதைக் கேட்ட தாசர் கருணாமூர்த்தியாதலால் தமது நஷ்டத்தைச் சிந்திக்காமல், அவர்கள் படுந்துன்பத்துக் கிரக்கமடைந்து, "குதிரையைப் பிடித்து நாம் வரும் வழியில் நின்றவன், ஸ்ரீ கண்ணபிரானே, அவன் என்பொருட்டு இந்த இழிதொழில் செய்தது தகுதியோ! அப்படி அந்தப் பகவான் செய்ய நான் இந்த வர்த்தகத்தொழில் செய்வது தகாது" என்று சொல்லி, மடுவில் அமிழ்ந்திருந்த தமது புடவை மூட்டைகளையெல்லாம் வாரிக்கொண்டு வரச்செய்து, அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து, பொருள்களையும் அப்படியே வழங்கி, குதிரையையும் அவர்களுக்கே கொடுத்து, தமது மனைக்குவந்து ஸ்ரீ ஹரிபஜனை செய்துகொண்டிருந்தார். சாதுக்கள் இவரைக் கண்டு இரங்கிக் கொடுக்கும் பொருளைக்கொண்டு குடும்பஸம்ரக்ஷணம் செய்துகொண்டு, ஆடி, கார்த்திகை இந்த இரண்டு மாசங்களின் ஏகாதசி திதியில் வீணை, தாளம், மத்தளம் முதலிய வாத்யங்களோடு பண்டரிபுரத்துக்குப் போய் ஸ்ரீ ஹரிபஜனைசெய்து ஆநந்தக் கூத்தாடுவார்; பாண்டுரங்கப்பெருமானைத் தரிசித்து, கண்களில் ஆநந்த பாஷ்பம் பெருகநின்று தோத்திரஞ்செய்துநிற்பார். இவரது நிலைமையை அவ்விடத்தில் வந்திருப்பவர்கள் கண்டு புகழ்ந்து கொண்டாடுவார்கள். இப்படியிருக்குங்காலத்தில், பண்டரிபுரத்தில் வாழ்கின்ற ஒரு வேதியன் அதிக திரவியம் சம்பாதிக்கவேண்டுமென்கிற எண்ணத்துடனே புறப்பட்டுப் பல தேசங்களிலும் சஞ்சரித்து, முடிவில் ஒரு நகரத்தை யடைந்தான். அந்த நகரத்தை வித்யாநகரம் என்று சொல்லுவார்கள். அந்த நகரத்துக்குள்ளே ப்ரவேசித்து, அதற்கு அரசனாயிருப்பவனது அரண்மனைவாசலில் போய்நின்று, அரசனுக்குத் தன் வரவை வாசற்காப்பாளரால் அறிவித்தான். அரசனும் இவ்வேதியனை உள்ளே வரும்படி கட்டளையிட்டு, வந்தவுடனே அன்போடு பூஜித்து, "எங்கேயிருந்து எதைக்குறித்து வந்தீர்?" என்று வினவ, வேதியன், "அரசனே! நான் பண்டரிபுரத்தில் வாழ்பவனாகிய ஒரு வேதியன், உன்னுடைய உதார குணத்தைக் குறித்து அதிகமாய்க் கேள்விப்பட்டு வந்தேன்" என்றான். அதைக் கேட்ட அரசன் வேதியனை நோக்கி, "நான் நீராடி, நான் வழிபடுகிற தெய்வமாகிய காளி கோயிலுக்குப் போகிறேன், நீரும் அங்கே

வாரும்" என்று சொல்லிவிட்டு, பூஜா திரவியங்களெல்லாம் சேகரித்தமைத்துக்கொண்டு காளி கோயிலுக்குப் போனான்; வேதியனும் கூடவே போனான். கோயிலில் நடத்தவேண்டிய பூஜா காரியங்கள் எல்லாம் நடத்தி முடிந்தபிறகு, அரசன் எல்லாருக்கும் ப்ரஸாதம் கொடுப்பித்துத் தானும் ஸ்வீகரித்து ஒரு ஆசநத்தில் வீற்றிருந்து, பண்டரிபுரத்திலிருந்து வந்த வேதியனை நோக்கி, "நான் ஆசிரயித்திருக்கிற இந்தக் காளியாகிய பெருந் தெய்வத்துக்கு நிகரான தெய்வத்தை வேறெங்கும் கண்டதில்லை, உம்முடைய ஊரிலுள்ள தெய்வத்துக்கு இப்படிப்பட்ட கோயிலும் பெருமையும் உண்டோ? ஏழை வேதியராகிய நீர் உமது அத்ருஷ்ட வசத்தால் இவ்விடம் வந்து இந்த மஹா ப்ரபாவமுள்ள தெய்வத்தை தரிசித்தீர். இன்னம் நன்றாகத் தரிசநம் செய்யும்" என்று சொல்ல, வேதியன், "ஓ மஹாராஜனே! நீ அந்தப் பண்டரிநாதனது திவ்ய சௌந்தரியத்தைச் சேவிக்காமையால் இப்படிச் சொன்னாய், அன்றியும், இந்தக் காளி கோயிலில் தரை வெள்ளித் தகட்டால் மூடப்பட்டிருக்கிறதென்றாய், எமது பண்டரிநாதன் கோயிலில் தரை பொற்றகட்டால் மூடி மணிகள் பதிக்கப்பட்டிருக்கின்றது,நீவந்து பார்க்கலாம்" என்று சொன்னான். அன்றியும்"அவ்விடத்திலுள்ள மரங்களெல்லாம் பஞ்ச தருக்களே, பரற்கற்களெல்லாம் சிந்தாமணிகளே, பசுக்களெல்லாம் காமதேநுக்களே, வநங்களெல்லாம் துளசி வநங்களே, சாது ஸஜ்ஜநங்களாகிய ஹரி தாசர்கள் கூடி எந்நேரமும் கருடக் கொடியைக் கையிற் பிடித்துத் தாளம் மிருதங்கம் முதலிய வாத்யங்களோடு ஹரிபஜனை செய்து கொண்டிருப்பார்கள். அங்கே, சந்த்ரபாகையென்றொரு நதியுண்டு. அதில் மூழ்குவோர்களுடைய பாபராசிகளெல்லாம் பஸ்மமாய்ப் பறந்து போகும். க்ஷீராப்திநாதனான பகவான், புண்டலிகருடைய ஜ்ஞாநபக்திகளைக் கண்டு, அவ்விடத்தில் ஒரு கல்லின்மேல், இடையிற் கையை வைத்துக்கொண்டு நின்று, தன் அடியார்க்கு வரும் துன்பங்களை யெல்லாம் நீக்கியருளி, அவர் விரும்பினவற்றைக் கிருபை செய்கிறார். அந்தத் திவ்யமங்கள விக்ரஹ சௌந்தரியத்தைத் திருமகளும் கண்டு நாணமடைகிறாள். அந்தப் பகவானது திருமுடியின் ப்ரகாசத்துக்குக் கோடிசூரிய ப்ரகாசமும் நிகராகமாட்டாது. அந்தக் கண்ணபிரானது தரிசநத்துக்கு வருகிற தேவர்கள் சமயம் பார்த்திருப்பார்கள். அவனுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளைப் புகழ்ந்து சொல்லத் தொடங்கின ஆதிசேஷன் நாக்கள் இருபிளவானதனால் நாணி நிற்கிறான். வேதங்களாலும் வேதாதிகாரி

யான ப்ரஹ்மாவாலும் அவன் மஹிமை சொல்லப்படாது, இப்படிப்பட்ட பாண்டுரங்கன்போல ஒருதெய்வத்தையும், பண்டரிபுரம் போல ஒரு நகரத்தையும், சந்த்ரபாகாநதிபோல ஒரு நதியையும் பதினாலுலகத்திலுந் தேடிக்காண்பது அருமையாகும். உன்னால் ஆராதிக்கப்படுகிற இந்தக் காளியும் அந்தப் பண்டரிநாதன் கோயிலில் பணிவிடை செய்கிறாள். அதைக் காணாமையால் நீ யிந்தக் காளியைப் புகழ்கின்றாய். நீ வந்து அந்த க்ஷேத்ர தீர்த்த மூர்த்திகளைத் தரிசித்தால் இப்படிப் பேசமாட்டாய்" என்றான். அதைக்கேட்ட அரசன் கோபங்கொண்டு, "ஓ வேதியனே! நீ யிப்படிப் பேசினதற்கு உன்னை உயிர்க்கொலை செய்யவேண்டும், உன்னைக் கொன்றால் ப்ரஹ்மஹத்தியென்கிற தோஷத்துக்கஞ்சினேன்" என்று சொல்லி, மேலும், "பண்டரிபுரம் பொன்மயமா யிருக்குமென்றும், காளி அவ்விடத்தில் தாசிவேலை செய்கிறாளென்றும் பொய் சொன்னாய்" என்று கோபிக்க, வேதியன், "அரசனே, நீ கோபிக்கவேண்டாம், அந்த க்ஷேத்ரத்தை வந்து பார்த்த பிறகு உன் இஷ்டம்போலப் பேசுவாயாக" என்றான். அதைக்கேட்ட அரசன், "வேதியனே! நீசொல்லியதெல்லாம் உண்மையானால் நான் பண்டரிபுரத்துக்கு வருகிறேன், பொய்யா யிருக்குமானால் உன்னைத் தண்டிக்காமல் விடமாட்டேன்" என்று சொல்லி, மந்திரியைப்பார்த்து, "நான் பண்டரிபுரத்துக்குப்போகவேண்டி யிருக்கிறது, நீ சேனைகளோடு முன்னே போ" என்று நியமிக்க, அப்படியே மந்திரி முன்னே பிரயாணப்பட, அரசன் பின்னே புறப்பட்டான். அப்போது வேதியனும் பண்டரிபுரத்தில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ கண்ணபிரானைக் குறித்து, "ஓ பாண்டுரங்கப் பெருமானே, இந்த அரசனுக்கு நான் சொன்னபடியே இவ்விடத்தில் காணப்படாவிட்டால் நான் கடுந்தண்டனைக்குள்ளாக வேண்டி வரும், உனது தீநதயாளத்வத்துக்கும் பங்கமுண்டாகும்" என்று சொல்லி, பண்டரிநாதனை மனத்திலிருத்தி பஜித்துக்கொண்டே வந்தார். அப்போது சர்வாந்தர்யாமியாகிய பகவானானவர், அரசன் சோதநார்த்தமாய் வருவதையும், தம்மை ஆசிரயித்த வேதியன் அவனிடத்தி லகப்பட்டு வருத்தத்தோடு வருவதையும் அறிந்து, ஸ்ரீ கமலவாஸிநியாகிய திருமகளைநோக்கி, "வித்தியா நகரத்தை யாளுகின்ற அரசன், நம்மூர் வேதியன் சொன்னது உண்மைதானோவென்று சோதிக்கும்பொருட்டு வருகிறான். ஆகையாலே, அவ்வேதியன் வார்த்தையை உண்மையாக்கவேண்டும், அப்படிச் செய்யாமற் போனால் எனக்கு நிலையாயிருக்கிற பக்தபாலகன் என்னும் பெயர்க்

ருப் பழுதுபோயிடும், வேதியனுக்கும் தண்டனை கிடைக்கும், புராண வசநங்களும் பொய்யாகும், நம்மை ஆசிரயித்திருக்கிற அன்பர்களும் நகைப்பார்கள்" என்று சொல்லுதலும், லோகமாதாவாகிய பெரிய பிராட்டியும் பகவானுடைய பாதாரவிந்தங்களை வணங்கி, "ஸ்வாமீ, மஹாபாக்யம், அப்படியே யாகட்டும்" என்று திருவுளத்தில் சங்கற்பித்தாள். உடனே முன்னேர் சொன்னபடியே பண்டரிபுரமானது பொன்மயமாய் விளங்கிற்று. அரசனாகிய ராமராஜன் அவ்வூர்க்கருகே வர வர, வேதியனுக்கு அச்சம் அதிகரித்துக்கொண்டே வர, அவரும் அந்த அச்சத்தை லக்ஷ்யம் பண்ணாமல், ஸ்ரீ ஹரிநாம ஸ்மரணை செய்துகொண்டே வந்தார். யானை யேறிவந்த ராமராஜன் ஊர்க்கருகே வர வர, பண்டரி நகரமானது வேதியன் சொன்னதைப் பார்க்கிலும் எண்மடங் கதிகமென்று சொல்லும்படி பொன்மயமாயும், ரத்நமயமாயும் நெடுந்தூரம் வரைக்கும் ஒளி வீசுவதைக்கண்டு, யானைமே லிருந்திறங்கி, தன்னை யழைத்துவந்த வேதியன் பாதத்தை வணங்கி, "முன்னே நீர் சொன்னது உண்மைதான்" என்று சொல்லி, "உமது மஹிமையைத் தெரிந்துகொள்ளாமல் கோபங்கொண்ட என் பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, வேதியனும், அரசனைநோக்கி "ஒ மஹாராஜரே! இந்த நகரம் உம்மைப்போன்ற விவேகிகளுக்கு மாத்திரம் புராணவசநங்களாற் சொல்லப்பட்டிருக்கிறபடியே பொன்மயமாய்க் காணப்படும், மற்றவர்க்கு இக்கலியுகத்தில் இப்படிக் காணப்படாது" என்று சொன்னார். அதின்பிறகு வேதியர், நாம் சொன்னபடியே பகவான் க்ருபை செய்தாரென்று மகிழ்ந்து, தாளம் மத்தளம் வீணைமுதலிய வாத்யங்களைக் கைக்கொண்டு, ஹரிதாசர்களோடு கூடி, ஹரிபஜனை செய்துகொண்டு வர, அரசனும் கூடவந்தான். எவ்விடத்திலும் பஞ்சதருச் சோலைகளாயிருப்பதையும், அந்தச் சோலைகளில் தங்கியிருக்கும் பறவைகளெல்லாம் பாண்டுரங்கப்பெருமானது திருநாமத்தையே சொல்லிக்கொண்டிருப்பதையும், மயில்கள் நடநம் செய்வதையும், சிந்தாமணிகளின் ஒளியைக்கண்டு அன்னப்பறவைகள் நெருப்பென்றஞ்சி வயல்களைநோக்கியோடுவதையும், காமதேநுக்கள் பசும்புல்லைக்கறித்து மேய்வதையும், இவைபோன்ற பல விசித்திரங்களையும் கண்டு அதிசயித்து, நகருக்குள்ளே ப்ரவேசித்தலும், அழகிய மாளிகைகள் பொன்னாற் செய்யப்பட்டும், ரத்நங்கள் இழைத்தும் இருப்பதனால் அரசன் கண் கூசும்படி ஒளி பரப்புவதையும், ஒருபக்கத்தில் வேதகோஷத்தையும் ஒருபக்கத்தில் விமலகீர்த்தந வோசையையும், ஒருபக்கத்தில் ஆடல்

பாடல்களையும், ஒருபக்கத்தில் கருடக்கொடிகள் நெருங்கியிருப்பதையும், சந்த்ரபாகா நதியில் தீர்த்தமாடுதற்கு வந்து நெருங்கியிருக்கிற தேவர் கூட்டத்தையும் கண்டு ஆச்சரியமடைந்து நின்றான். பிறகு, அந்த நெருக்கத்தில் நுழைந்து அரம்பைப்பெண்கள் ஆடல்பாடல் செய்துகொண்டிருக்கிற கருடஸ்தம்பத்தின் சமீபத்தில்வந்து வணங்கி, சந்நிதிக்குள்ளே போகும்போது, அஷ்டமாசித்திகளும் பெண்ணுருக்கொண்டு ஊழியஞ் செய்துகொண்டிருப்பதையும் கண்டு, இதென்ன புதுமையென்று காளியை நோக்கி, "என்னால் பூஜிக்கப்படுகிற நீயும் இங்கேவந்து ஊழியஞ்செய்கிறாயே! இதற்குக் காரணம் யாது?" என்றுகேட்க, காளி அரசனைநோக்கி, "என்றும் எனக்கு இங்கு வந்து பணிவிடை செய்வதே தொழிலாகும், இவ்விடத்தில் இந்தப் புண்டலீகருடைய ஆசிரமத்தில் கங்கை, யமுனை, சரசுவதிமுதலான புண்ய நதிகளும் பெண்ணுருவாய் வந்து ஊழியஞ்செய்து தங்களுடைய பாபங்களினின்றும் விடுபடுவார்கள்; இந்தக்ஷேத்ரத்தின்மஹிமையைச்சொல்ல என்னால் முடியாது" என்றாள். இதைக்கேட்ட அரசன் மகிழ்ந்து சந்நிதிக்குள்ளேபோய், தும்புருநாரதர் இசைபாடி நிற்கிற வாயிலில் காவலராயிருக்கிற ஜயவிஜயர்களைக் கண்டுவணங்கி, அதன்பிறகு பகவான் சந்நிதிக்குப் போய், அவரது திவ்ய மங்கள விக்ரஹ தேஜோராசியைக் காணவே கண்கள் கூசி மூடிக்கொள்ளுதலும், தன்னை அழைத்துவந்த வேதியன் கையைப் பிடித்துக்கொண்டு நின்று கண்களை மெல்லத்திறந்து பார்க்கப் பகவானனவர் தமது திருமேனியின் தேஜோ ராசியை மறைத்து, தமது முன்னைய திருவுருவங்கொண்டு சேவைசாதிக்க, அரசன் கண்களை நன்றாய்விழித்து ஸ்ரீ லக்ஷ்மீநாதனைக் கண்களிகூரச் சேவித்து ஸ்தோத்ரஞ்செய்து, திருவடிமீது விழ்ந்துவணங்கி ஆநந்தசாகரத்தில் மூழ்கி, உடல்புளகித்து, ஆநந்தக்கண்ணீரொழுக நின்று பகவானுடைய திருவுருவை ஆலிங்கநம்செய்து, துதித்து, தன்னருகேயிருக்கிற வேதியரை நோக்கி, "ஸ்வாமீ! அடியேனைப் புநிதனாகச் செய்தாண்டருளினீர், உமது க்ருபா விசேஷத்தால், சமாநாதிகரஹிதனாகிய பண்டரிநாதனைச் சேவித்து என்பவரோகத்தை நிவர்த்தித்துக்கொண்டேன், இப்படி நீர்செய்த நன்றிக்கு அடியேன் என்ன கைம்மாறுசெய்வேன்" என்று மிகவும் தோத்திரம்செய்து திருவடியில் வீழ்ந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து நின்று, "நீர் சொன்னதைப் பார்க்கிலும் இந்த க்ஷேத்ரமானது அநேககோடி பங்கு சிறந்திருக்கவும் கண்டுகளித்தேன்" என்று பலவாறு துதித்துநின்றான். அப்போது, அரசன்பொ

ருட்டுத் தேஜோமயமாய் விளங்கின பொருள்களெல்லாம் கலிகால த்துக்கேற்க முன்னிருந்தபடியே ஆய்விட்டன. அதையும் அரசன் கண்டு அதிசயித்து, இதுவும் இந்தப்பகவானுடைய லீலையேயாமெ ன்று நினைத்து, கற்பகமரமிருக்கக் கள்ளியை விரும்புவார்களோ? காமதேநுவிருக்க ஆட்டை விரும்புவார்களோ? சூரியன் வீட்டிலே யிருக்க விளக்கைத்தேடுவார்களோ? இவ்வுலகத்தில் ஒருவரும் அப்ப டிச் செய்யார். அதுபோல இந்தப் பண்டரிநாதனாகிய பெருந்தெய்வ மிருக்க, வேறான அற்பதெய்வங்களை நான் மனத்தினாலும் இனி ஸ்ம ரிக்கமாட்டேன் என்று மனவுறுதிகொண்டு "குன்றமேந்திக் குளிர் மழை காத்தவனே! திருத்துழாய்மாலையை யணிந்த ஸ்ரீதரனே! திரு மறு மணிமார்பனே!" என்று துதித்து, "ஸ்வாமீ! தேவரீரிடத்தில் அடி யேன் ஒருவரம் கேட்டுக்கொள்ளுகிறேன், அதனைக் கருணைசெய்ய வேண்டும், என்னென்றால், தேவரீர் இந்தத் திருக்கோலத்தோடு எனது பட்டணத்துக் கெழுந்தருளி, அவ்விடத்தில் நிலைபெற்றிரு ந்து என்னைப் புநிதனாகச் செய்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்த லும், ஸ்ரீ பண்டரிநாதன், "அரசனே ! உன் விருப்பப்படியே நான் வருகிறேன், வரும் வழியில் என்னைக் கீழே வைத்தாயானால், நான் உன் பட்டணத்துக்கு வரமாட்டேன், அங்கே தானே நிலைபெறு வேன், அவ்விடத்திலும் உன்னால் ஏதாகிலும் குற்றம் நேரிட்டால் உடனே இந்த க்ஷேத்ரத்துக்கு வந்துவிடுவேன்" என்று சொல்ல, அர சனும் "அப்படியே யாகட்டும்" என்று, பகவானைத் திருத்தேர்மேல் எழுந்தருளச்செய்து, ஆயுதபாணிகளாகிய வீரரைக் காவலராகச்சூழ் ந்துவரச்செய்து, கொண்டுபோய்த் தன் நகரத்தில் ப்ரதிஷ்டைசெ ய்து சகலவிதமான உபசாரங்களோடும் பூஜித்தான். இந்த அரசன் செய்யும் பூஜையை விரும்பி, பண்டரிநாதன் இங்கே சந்நிதி செய் திருக்க, ஆடி மாசத்து ஏகாதசிக்குப் பண்டரிபுரத்துக்குவந்த ஹரிதா சர்களும், மற்றவர்களும் பகவான் சந்நிதியில் இல்லாதிருக்கக் கண் டும், அரசன் கொண்டுபோனானென்று கேள்விப்பட்டும் மனந்தளர் ந்து, உயிர் நீங்கின வுடல்போலச் செயலற்றவராய்த் துன்பக்கட லில் மூழ்கி, கருடஸ்தம்பத்தினருகே வந்து சேர்ந்து, "இந்தத்தல த்தை நீங்கேன் என்று புண்டலிகர்க்குத் தந்தவரம் பொய்த்துப் போகும்படி யார் என்ன தீமைசெய்தார்களோ? வித்தியா நகரத்துக் குப்போய்ப் பகவானை இங்கே கொண்டுவரத் தகுந்தவர் யார்? பக வானுக்குப் புண்டலிகர்மேல் கோபமுண்டாயிற்றோ? சாது ஸஜ்ஜநங் கள்மேல் கோபமுண்டாயிற்றோ? பகவான் இந்த க்ஷேத்திரத்தை

விட்டு நீங்குவதற்குக் காரணம்யாதோ அறிகிலேம்" என்றும், "வித்தியா நகரத்துக்குப் போய்ச் சேவிக்க வேண்டுமென் றெண்ணினும்,அரசன் காவலுக்குட்பட்டிருக்கிறதனால்சேவிக்கவொண்ணாது" என்றும், இவ்வாறு பலவிதமாய்ப் பேசித் துக்கித்துக்கொண்டிருக்கும்போது, பாநுதாசரானவர் அவர்களை நோக்கி, "நீங்கள் மனம் வருந்த வேண்டியதில்லை, நான் வித்தியாநகரத்துக்குப் போய், ஸ்ரீ லக்ஷ்மீநாதனைக் கொண்டுவருகிறேன், அப்படிக் கொண்டுவருவதற்குச் சாத்தியப்படாத பக்ஷத்தில் அவ்விடத்தில் உயிரை விட்டுவிடுகிறேன்"என்றுசொல்லிப்புறப்பட்டுப்போய், வித்தியாநகரத்தையடைந்து, அங்கிருப்பவரை நோக்கி, "அரசன் பண்டரிநாதனைக்கொண்டு வந்து எங்கே வைத்திருக்கிறான்?" என்று கேட்க, அவர்கள்அரசனுடைய பயத்தினால் சொல்லாதிருந்தார்கள். தாசரானவர் அவர்களிற் சிலரை யேகாந்தமாக அழைத்து இனிய வசநங்கள் சொல்லி, ரஹஸ்யமாய்க் கேட்க, அவர்கள் "அரசன் தன் அரண்மனைக்குள்ளே வைத்துப் பூஜித்துக்கொண்டிருக்கிறான், அன்றியும் பூஜை முடிந்த பின்அங்கேஒருவரும்போகவொண்ணாமல் காவல்வைத்திருக்கிறான்" என்று சொல்லக்கேட்டு, மனமகிழ்ந்து, அன்றிரவில் எல்லாரும் நித்திரை செய்தபிறகு அரண்மனைக் குள்ளேபோக நினைத்துப் போகும்போது, பூட்டப்பட்டிருந்த கதவுகள் பூட்டவிழ்ந்து வழி கொடுக்கப்போய், பாண்டுரங்க னிடத்தையடைந்து, அந்தப் பெருமானைக் கண்டு வணங்கி, அன்போடு தழுவிக்கொண்டு அழுது, பல வகையாய்த் தோத்திரஞ்செய்து, "புண்டலீகர்க் கருள்செய்த ஸ்ரீ வைகுண்டநாதனே, பூர்வ அன்பர்களைவிட்டு நீங்கி இந்த அரசன் மனையில் எழுந்தருளி யிருப்பதற்குக் காரணம்யாதோ? அன்றி, எளியேமாகிய எங்கள் பூஜையைவிட்டுச் செல்வனாகிய அரசன் பூஜையை விரும்பி வந்தாயோ, இந்த அரசன் பூஜையில் விருப்பம் அதிகரித்துத்தானோ, திருமகள் முதலாகிய எம்மை யெல்லாம் நீங்கி இங்கே வந்து அமர்ந்திருக்கிறாய்? நாங்கள் செய்கிற உன் நாமசங்கீர்த்தநம் உன்காதைத் தொலைசெய்ததோ? இரவிலும் நாங்கள்செய்யும் பஜனை யாரவாரத்தால் கண்வளர்தற் கிசையாமல் இங்கே கண்வளர வந்தாயோ? அங்கே வருகிற அன்பரெல்லாரும் உன்னைத் தழுவுவதனால் திருமேனி வருந்தின வருத்தம் நீங்கி இளைப்பாறவோ இங்கே யெழுந்தருளினாய்?" என்று இப்படிப் பலவாறு புலம்பக் கேட்ட பண்டரிநாதன், தாசரை நோக்கி, "நான் இங்கே வருவதற்குக் காரணம் நீர் சொன்னவைகளில் ஒன்றுமல்ல, இந்த அரசன் அன்பினால்

என்னைக் கவர்ந்துவர, அந்த அன்பிற் கிசைந்து வந்தேன்" என்று சொல்லி, மேலும், "இவ்விடத்தில் என்னைத் தனியேவைத்து இவன் பூஜிப்பதில் எனக்குச் சிறிதும் சந்தோஷமில்லை, பண்டரிபுரத்துக்கு எப்பொழுது போவேனோ வென்கிற கவலை யதிகரித்து இந்தச் சிறையி லிருக்கிறேன், இங்கு வந்தநாள்முதல் என் உயிர் உங்கள்மே லிருக்க, நீங்கள் என்னை நினைத்து இங்குவரா திருந்தீர்கள், நீங்கள் அங்கே வந்து என்னைச் சேவித்துத் தழுவிக்கொள்வதற் கிடமில்லா மல் இங்கே வந்துவிட்டே னென்று என்மேல் வெறுப்புண்டானத னாலே வாராதொழிந்திர்க ளாகவேண்டும்" என்றுசொல்லிக் கண்ணீர் பெருக்குதலும், பாநுதாசரானவர் தாமும் கண்ணீர் பெருக்கி, பக வானைத் தழுவிக்கொண்டு, "என்பின்னேவாரும்" என்றழைக்க, பகவா னனவர், "அப்படியே நாளைக்கு நான் வருகிறேன்" என்றுசொல்லி, தமது திருக்கழுத்தி லிருந்த ரத்நஹாரத்தைக் கழற்றித் தாசர் கழு த்திற் சூட்டி, "உன்விடம்போய்ச் சேர்வாயாக" என்றனுப்பினர். தாசரும் "அப்படியே யாகட்டும்" என்று பகவானை வணங்கி, மனத் தினால் ஸ்மரித்துக்கொண்டே வெளியேவந்து தமதிடத்தை யடைந் தார். இவர் வெளியே வந்தவுடனே, கதவுகளெல்லாம் முன்போலவே மூடிப் பூட்டப்பட்டிருந்தன. பிறகு சூரியோதயமாகவே, அரசன் எழுந்து நீராடிவந்து பகவானைப் பூஜித்து, கற்பூரதீபஹாரத்தி செய் யும்போது, இறைவன் திருக்கழுத்திலிருந்த மணிமாலையைக் காணு மல், வாயிற்காப்பாளரைநோக்கி, "பகவானுடைய ரத்நஹாரத்தைத் திருடிக்கொண்டு போனவர் யார் சொல்லுங்கள்" என்று கோபி க்க, அவர்கள், "யாரெடுத்துக்கொண்டு போனர்களோ எங்களுக்குத் தெரியாது" என்றார்கள். அரசன் அவர்களை நோக்கி, "நீங்கள் உள் ளேவந்து திருடிக்கொண்டு போனவனைப் பார்க்காமல் என்னகாவல் செய்தீர்கள்? திருடிக்கொண்டு போனவன் எங்கே யிருந்தாலும் அவ னைத்தேடிக் கண்டுபிடித்துக்கொண்டுவாருங்கள்" என்று கட்டளையிட, அவர்களும் அப்படியே புறப்பட்டுத் தேடிவந்து கங்கா ஸ்நாநம் செய்து அதின் கரையிலிருக்கிற பாநுதாசர் கழுத்தில் மணிமாலை யிருக்கக்கண்டு, அவரை யடித்துப் பிடித்துக்கொண்டு வந்தார்கள். வரும்போது, சிலர், தாசரைப்பார்த்து, "இப்படிச் சாதுவேஷந் தரி ப்பது திருடுதற்கோ" என்பார்கள். சிலர், "பகவான் திருக்கழுத்தின் மாலையைத் திருடுகிறவன் வேறெந்தத்தீமையைச்செய்யமாட்டான்" என்பார்கள். இப்படி வழியிலுள்ளோர் பேசுகிற பலவகையான நிந் தனை வார்த்தைகளைக் கேட்டும் அவற்றைச் சற்றும் மனத்துட்

கொள்ளாமல், பகவந்நாம ஸ்மரணை செய்துகொண்டே காவல்வீரர் பின்னேபோய் அரசனிடத்தை யடைந்தார். அரசன் இவரிடத்தில் மணிமாலையைக் கண்டதனால் இவரைக் கழுவேற்றும்படி கட்டளையிட்டான். அரசன் சற்றும் ஆராயாமல் சொன்ன தீர்ப்பின்படி, காவல்வீரர் இவரைக் கழுவேற்றக் கொண்டுபோகையில், இவர் அவர்களை நோக்கி, "காவல்வீரரே! என் உயிர் நீங்கவேண்டிய காலம் நேர்ந்தமையால், நான் பகவானைச் சேவித்து வருகிறேன், நீங்கள் அரசனிடத்தில் உத்தரவுபெற்று வாருங்கள்" என்றுசொல்ல, அவர்களுக்குள்ளே சாதுவாயிருப்பவனொருவன், அரசனிடத்திற்குப் போய், தாசர்சொன்ன செய்தியை யறிவித்து விடைபெற்று, பகவத் ஸந்நிதிக்கு இவரை யழைத்துப் போய்விடுக்க, இவர் பகவானைக் கண்குளிரச் சேவித்து வணங்கி, "ஓ பண்டரிநாதனே! நான் ரஹஸ்யமாய் உன்னைப் பண்டரிபுரத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கலாமென்று எண்ணினேன் என்று அரசனைக்கொண்டு என்னைக் கழுவேற்றும்படி செய்தாய், இன்னமும் உன்னைக் கொண்டுபோக முயல்பவர்களையுங் கொன்று இங்கேயிருக்க, நினைத்துத்தானோ என் கழுத்தில் மணிமாலையையிட்டாய்? உன் தந்திரம் மிகவும் நன்றாயிருக்கின்றது, நீயெப்படிச் செய்தாலும் சரிதான், அது நிற்க, என்னைத் துக்கமயமாகிய பிறவிகள் எத்தனை யெடுக்கச் செய்தாலும், நான்மாத்திரம் உன்னிடத்தில் அன்பு செய்தலை விடேன்" என்றார். அதன்பிறகு சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பித்துக் காவலரோடு வெளியேவந்து கழுமரமிருக்கு மிடத்துக்குப் போகும்போது, அந்த வூராரெல்லாரும் இவரைக் கழுவேற்றுவதைப் பார்க்கவந்தார்கள். காவலரும் இவரைக் கழுமரத்தின் சமீபத்தில் நிறுத்தி ஏற்றுவதற்கு ப்ரயத்நம்செய்யும் சமயத்தில், இவர் பகவானைக் குறித்து, "ஓ ஜநார்த்தநா! என்னைக் கழுவிலேற்றினாலும், என் தலைமேல் இடிவிழச் செய்தாலும், இன்னம் எப்படிப்பட்ட துன்பங்கள் நேரிடச் செய்தாலும், உன்னை நான் மறக்கமாட்டேன்" என்று சொல்ல, தயாசாகரமாகிய பகவான் இவரது மனவுறுதியை யறிந்து இவர்க்குக் கருணைசெய்ய வேண்டுமென்று திருவுளங்கொண்டு, அந்தக் கழுமரத்தை நோக்க, அது பச்சென்று தளிர் அரும்பித் தழைத்துச் செழித்தது. இந்தச் செய்தியைக் காவலரோடி அரசனுக் கறிவித்தார்கள். அவன் தக்ஷணமே விரைந்துவந்து கழுமரம் செழித்திருப்பதைக் கண்டு அதிசயித்து, "இந்த ஹரிதாசரை நாம் ஆராயாமல்செய்த தண்டனையைப் பொறுக்காமல் ஸ்ரீகண்ணபிரானே இப்படிச் செய்தார்" என்று துணிந்து, தாச

ரை வணங்கி, "தேவரீர் விஷயத்தில் அடியேன் பெரும்பிழை செய்தேன், அந்த அபராதத்தைப் பொறுத்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்து அவரைத் தன் அரண்மனைக்குள்ளே யெழுந்தருளியிருக்கிற பண்டரிநாதன் சந்நிதிக்கு அழைத்துவந்தான். வருதலும், ஸ்ரீலக்ஷ்மீநாதனுகிய பண்டரிநாதனது திருவடியில் விழ்ந்து வணங்கினர். பகவானும் இவரைத் தழுவிக்கொண்டு, "ஓ பாநுதாசரே! என்னால் நீ மிகுந்த துன்பமடைந்தாய், இப்பொழுதே என்னைப் பண்டரிபுரத்துக்குக் கொண்டுபோ" என்ருர். அதைக்கேட்ட அரசன், ஆவலோடுவந்து பகவானைத் தொழுது "இங்கே அடியேனால் பூஜிக்கும் பூஜையை விரும்பாமல் பண்டரிபுரம்போகத் திருவுளங்கொண்டாய், இதுதானே உன்திருவருள்" என்று சொல்லிபழுதான். அவனைப் பகவான் கடாக்ஷித்து, "உன்னிடத்தில் ஏதாயினுங் குற்றம் நேரிட்டால் நான் இங்கேயிருக்கமாட்டேன் என்று முன்பே நான்சொல்லியிருந்ததை நீ நினைத்துப்பார். அந்த ஏற்பாட்டின்படியே இப்பொழுது ஹரிதாசனிடத்தில் ஆராயாது செய்த உன் குற்றத்தை வ்யாஜமாக்கிக்கொண்டு நான் பண்டரிபுரத்துக்குப் போகிறேன்? இதுவரைக்கும் என்னை யிவ்விடத்தில்வைத்து ஆராதநம் செய்ததனுலும், எனது நாமஸ்மரணம் செய்ததனுலும் ஒரு துன்பமுமில்லாமல் நீ சுகஜீவியாய் நீடுவாழ்வாயாக" என்று சொல்ல, பாநுதாசர், பகவானை நோக்கி, "ஸ்வாமி! உன்னை நான் எப்படிக் கொண்டுபோவேன்" என்று கேட்க, ஸ்வாமியும் "ஒரு சிறுசெப்புக் கொண்டுவாரும்" என்று சொல்லி வரவழைத்து, அதில் ப்ரவேசித்தடங்கி "இப்போதுசுலுவாய்க் கொண்டுபோகலாம்" என்று சொல்ல, தாசரானவர் உலகமுண்ட பெருவாயனுகிய இந்தப் பண்டரிநாதன் இந்தச் செப்புக்குள்ளே யடங்கினவிதம் யாதென்று ஆராயாமல், செப்பை யேந்திக் கொண்டு போகையில், பகவான் தாசரை நோக்கி, "பாநுதாசரே! உம்மால் முன்புபோல, பாகவதர் முகம் பார்க்கும்படியான பாக்யம் எனக் குண்டாயிற்று, இதுவே சுதினம், எனக்கு எப்பொழுது இன்பமுண்டாகு மென்று நினைத்திருந்தேன், பண்டரிபுரத்திலிருந்து இனி யொருக்ஷணகாலமும் பிரியமாட்டேன்" என்று சொல்லிக்கொண்டு வரும்வழியில், பத்மாளம் என்னும் ஊரையடுத்து வரும்போது, தாசரானவர் செப்பைக் கீழே வைத்துவிட்டு, நீராடிக்கொண்டிருந்தார். அப்போது அவர் நீராடிக்கொண்டிருந்த அந்த மடுவின் கரையில் செப்புக்குள்ளே தங்கியிருந்த பாண்டுரங்க பகவானுனவர், அந்தச்செப்பை உடைத்துக்கொண்டு தமது பூர்வரூபங்கொ

ண்டு நின்றார். தாசர் நீராடிவந்து, செப்புக்குள்ளே யிருந்த பகவானனவர் வெளிப்பட்டிருப்பதை நோக்கி, "ஸ்வாமீ, இந்தரூபங் கொண்டதற்குக் காரணம் என்ன?" என்று கேட்க, பகவானனவர், தாசரை நோக்கி, "நீர் பண்டரிபுரத்துக்குப் போய், அங்குள்ள சாதுக்களுக்கு இந்தச் செய்தியைத் தெரிவித்தால் அவர்கள் வந்து என்னைத் தேர்மேலேற்றிக்கொண்டு, வாத்யகோஷத்தோடு போவார்கள்" என்று பாண்டுரங்க பகவான்சொல்ல, பாநுதாசர் அப்படியே போய், பண்டரிபுரத்திலுள்ள சாதுக்களுக்குச் சொல்ல, அவர்கள், தக்ஷணமே பலவகை வாத்ய கோஷத்தோடும் ஸ்வர்ண ரத்நமயமான தேரோடும் வந்து பகவானைக் கண்டு தழுவிக்கொண்டு, பரமாநந்த பரிதஹ்ருதயராய், பகவானைத் தேர்மே லேற்றிக்கொண்டு, வாத்ய கோஷத்தோடும், ஹரிநாம ஸங்கீர்த்தநத்தோடும் பண்டரிபுரத்தையடைந்து, சந்த்ரபாகா நதியில் நீராட்டி, வேத முழக்கத்துடன் எல்லாச் சடங்குகளுஞ் செய்து, பகவானைத் தேரிலிருந்திறக்கிப் பல்லக்கில் ஏற்றிக் கொண்டுபோய்க் கோயிலில் ப்ரதிஷ்டை செய்து, திருமஞ்சநம் செய்து, ஆடையாபரணங்களால் அலங்கரித்து, சர்வோபசாரங்களும் செய்து பூஜித்து, ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்து, சாமகாநமுழங்க, மங்களாரதிசெய்து வணங்கி நின்றார்கள். அப்பொழுது அங்குவந்திருந்த நல்லோர்க ளெல்லாரும், இந்தப் பாநுதாசரா லல்லவோ பாண்டுரங்க பகவான் இங்கே யெழுந்தருளினதென்று அவரைக் கொண்டாடி, அவர் பக்தியைப் புகழ்ந்து, தாம் கொண்ட பெருமகிழ்ச்சிக்கு அறிகுறியாகச் சர்க்கரை வழங்கி, திவ்யப்ரஸாதவகை, பலகாரவகை முதலியவகைகளையும் ஸ்ரீகண்ணபிரானுக்குச் சமர்ப்பித்து, பாகவதகோஷ்டிக்கு விநியோகித்து, தாங்களும் ஸ்வீகரித்து, ஸ்ரீலக்ஷ்மீநாதனது திருவடியை வணங்கிநின்றார்கள். அந்தப் பண்டரிபுரத்திலுள்ளவர் யாவரும், பதினான்கு வருஷம் அரண்யவாசம் செய்துவந்த சக்ரவர்த்தித் திருமகனாகிய ஸ்ரீ ராமபிரானைக் கண்டு திருவயோத்யையிலுள்ளார் சந்தோஷித்தாற்போலப் பாண்டுரங்க பகவானைக் கண்டு சந்தோஷித்தார்கள் என்று சொல்லி, மேலே, ஏகநாதசுவாமிகளுடைய வைபவத்தைச் சொல்லத் தொடங்கினார்.

பாநுதாசர் சரித்திரம் முற்றிற்று.

முப்பத்தேழாவது

ஏகநாதசுவாமிகள் சரித்திரம்.

முற்கதையிற் சொன்ன பாநுதாசர் புதல்வர் சக்ரபாணியார், அவர் புதல்வர் ஞானப்ரகாச சூரியநாராயணர், அவர் மனைவியார் ருக்மிணி தேவியார், அவர் திருவயிற்றில் ஒரு புதல்வர் அவதரித்தார். அவர் சாக்ஷாத் ஜகத்குருவாய விளங்கத்தகுந்தவர். அவருக்குத் தாய் தந்தையர்கள், ஏகநாதர் என்று நாமகரணம் செய்து, அன்போடு வளர்த்து, தகுந்த பருவத்தில் உபநயநம், விவாஹம் முதலியவும் முடித்துவைத்து, மிகவும் மன மகிழ்ந்திருந்தார்கள். இப்படியிருக்குங்காலத்தில், பைடணபுரத்தில், ஞானக்கடலாயிருப்பவரும், தத்தாத்ரேயரை ப்ரஸந்நமாகப் பெற்றவரும், ஜநார்த்தநபண்டிதர் என்னும் பெயருள்ளவரும் ஆகிய ஒருவேதியரிருந்தார். அவரிடத்துக்கு இந்த ஏகநாதர்போய் அவரைவணங்கிநின்றார். அந்தப் பண்டிதர் இவரை நோக்கி "நீயார்?" என்றும், "இங்கேஎன்னநிமித்தமாய்வந்தாய்?" என்றும், "ஒளிக்காமல் உண்மையைச் சொல்" என்றும் கேட்க, இவர் பண்டிதரை நோக்கி, "ஸ்வாமீ, அடியேனுக்கு இந்தப் பிரபஞ்சவிஷயத்தில் சிறிதும் பற்றில்லையாகையால் பரமபுருஷார்த்தத்தை விரும்பித் தேவரீருடைய திருவடியை வந்து அடைந்தேன், அடியேனையாண்டருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்து நின்றார். அப்படி ப்ரார்த்தித்துநின்ற இந்த ஏககாதரை ஜநார்த்தந பண்டிதர் பார்த்து, இவன் வயது கொஞ்சமாயிருந்தாலும் ஞாநம் பெரிதாயிருக்கின்றது என்று ஆச்சரியப்பட்டு, இவருக்கு அபயம்தந்து "சுகமாக என்னிடத்தில் இருக்கக்கடவாய்" என்று நியமித்தருளினார். அவரது கட்டளையை இந்த ஏகநாதர் சிரஸாவஹித்து, பூர்வகாலத்தில் நாரதமுநிவருடைய அருளைப்பெறுவதற்கு, த்ருவர் முயன்றாற்போல இரவும் பகலும் இடைவிடாமல் அவர் ஏவின பணிவிடைகளைச் செய்துகொண்டும், உறங்கும்போது கால்வருடிக்கொண்டும், தாம்பூலம் மடித்துக் கொடுத்தும், அவர் உமிழும்போது படிகமேந்தியும், பூஜா த்ரவ்யங்கள் அமைத்தும், அவருண்டு சேஷித்த ப்ரஸாதத்தை யுண்டும், இன்னும் பலகுற்றேவல்களைச் செய்தும், குருகுலவாசம் செய்து உடற்குயிர்போலவும் கண்ணுக்கிமைபோலவும் அவரது உடற்காப்பில் நோக்கம் வைத்தும், அவர் சஞ்சரிக்கும் இடந்தோறும் ஊசியை நூல்தொடர்வதுபோலத் தொடர்ந்துசென்று, அதிகசிரத்தையோடு

காலங்கழித்தும் வரும்நாளில், இவருடைய நல்லொழுக்கம் முதலிய வைகளைக்கண்ட ஜனார்த்தநபண்டிதர் மிகவும் சந்தோஷித்து, "இவன் மநுஷ்யனல்லன், சிறந்த தேவனேயாம்" என்று இவர்மீது மிகவும் கருணைசெய்து, "ஏகநாதா! இங்கே வா" என்றழைத்து, "காலமெல்லாம் எனக்குப் பணிவிடை செய்துகொண்டேயிருந்தால், உன் தாய் தந்தையர்கள் மூப்பினாலும் வறுமையினாலும் மனந்தளர்ந்து துக்கிப்பார்கள். ஆகையால் அவர்களுக்கு அந்நவஸ்திரங்கள் கொடுத்துக் காப்பாற்றவேண்டும்" என்றுசொல்ல, அப்படியே, தாய் தந்தையரைக் காப்பாற்றுவதிலும், குருசேவை செய்வதிலும் சோர்வில்லா திருப்பதைக் கண்ட சற்குருநாதர், இவரைத் தமது மடத்தில் ஒரு கணக்குவேலை பார்க்கும்படி நியமிக்க, அப்படியே ஒவ்வொரு நாளும் வரவு செலவு கணக்குகள் முறையே பதிவுசெய்து ஆசிரியருக்குக் காட்டி அவரை மனமகிழ்வித்துக் கொண்டு வருங்காலத்தில், ஒரு நாள், கணக்கில் ஒரு காசு வித்தியாசமாயிருக்க, அதைக்கண்டு சரிப்படுத்த வேண்டுமென்று தீபம் வைத்துக்கொண்டு கணக்கை ஆராய்ந்துகொண்டிருந்தார். அன்றிரவில், வெளியே சயநித்துக்கொண்டிருந்த பண்டிதர், நடுராத்திரியில் விழித்து, தமக்குச் சமீபத்தில் சயநித்துக்கொள்பவராகிய ஏகநாதரைக் காணாமல் எழுந்து, இவர் தீபம் வைத்துக்கொண்டு கணக்காராயுமிடத்திற்போய், இவரறியாமல் இவர்க்குப் பின்புறத்தில் நின்று பார்த்திருந்தார். பிறகு இவர் கணக்குச் சரிப்பட்டவுடனே, சிரித்துக் கை கொட்டி மகிழ்ந்தார். அதைக் கண்ட ஜநார்த்தநபண்டிதர் இவர்க்கெதிரே வந்து நின்று, "எதைக் கண்டு நீ சிரித்தாய்?" என்று கேட்க, தலைநிமிர்ந்து குருநாதரைப் பார்த்து, எழுந்துவணங்கி, "கணக்கில் பிசகாயிருந்த ஒரு காசு சரிப்பட்டு வந்த சந்தோஷத்தால் சிரித்தேன்" என்றார். இதைக் கேட்ட ஆசாரியர் ஏகநாதர் முகத்தை நோக்கி, "ஒருகாசு விஷயத்தில் உன் சித்தம் லயித்ததுபோல ஸ்ரீ கண்ணபிரான் திருவடியிலே லயித்ததானால், நீ ஜந்ம சாகரத்தைக் கடக்கலாம்" என்று சொல்ல, இவர் குருநாதரை நோக்கி, "ஸ்வாமீ! இந்தக்கண்ணபிரான் திருநாமத்தைத்தேவரீர் திருவாக்கினால் கேட்டுக் கிருதார்த்தனானேன்" என்று ஸ்ரீ க்ருஷ்ண நமத்தில் பதிந்த மனத்தையுடையவராய், ப்ரபஞ்ச விவகாரங்களை மறந்து அந்தச் சற்குருநாதரிடத்தில் உண்மையாய்க் கணக்கை ஒப்பித்தார். அதைக்கண்டு, குருநாதர் இவன் மனநிலையுள்ளவனென்றும், இவனுக்குச் சொல்லுவது பயன்படுமென்றும் நிச்சயித்து இவர் காதில் தாரகமந்த்ரத்தை உபதேசித்தார். அன்றுமுதலாக ஏகநாதர்

அந்த மந்த்ரத்தை யநுசந்தித்துக்கொண்டும், குருசேவையும்செய்து கொண்டும் வருவாராயினர். அதைக் கண்ட ஜநார்த்தநபண்டிதர் இவனுக்கு நமதுகுருசேவை செய்விக்கவேண்டுமென்றெண்ணி, இவரை நோக்கி "ஏகநாதா! நீ என் குருசேவை செய்யச்செய்வேன், ஆனால் அவர் தமது உருமாறி வருவார், நான் பேசும் விதத்தினாலே நீ அவரைத் தெரிந்துகொண்டு பேதமில்லாமல் வணங்கு, அவர் சந்தோஷித்துக் கொடுப்பது எதுவாயிருந்தாலும், அதனை நீ கையாலேற்று அன்போடு உண்ணக்கடவாய்" என்று சொன்னார். அதைக் கேட்ட இவர், "பாக்யம்" என்றுசொல்லி வணங்கினார். பின்பு ஒருதினத்தில் குருநாதர் இவரை யழைத்துகொண்டு காட்டுக்குப் போனார். அவ்விடத்தில் தத்தாத்திரேயர் பட்டாணி யுருவங்கொண்டு குதிரைமேலேறிவந்தார். அதை ஜநார்த்தநர் கண்டு,தமது சிடராகிய ஏகநாதரை நோக்கி, "என் குருநாதர்வருகிறார், நீபார்" என்று சொல்ல, ஏகநாதர் பார்த்து, "குதிரைமேலேறிக் கையில் வாள்பிடித்துக்கொண்டு வருகிற ஒரு துருக்கனைத் தமதுகுருவென்று சொல்லுகிறார், இது என்ன புதுமை" என்று எண்ணிக்கொண்டே யிருக்கும்போது, அவரும் கிட்டி வந்துவிட்டார்; இவர் அவரைக்கண்டும்வணங்காமல்அவமதித்திருந்தார். பண்டிதர் மாத்திரம் வந்தவரைத் தாழ்ந்து வணங்கினார். வணங்கின ஜநார்த்தநரோடு அநசூயை புத்திரராகிய தத்தாத்திரேயர் மிலேச்ச பாஷையிற் சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்த பிறகு, தத்தாத்திரேயர், ஜநார்த்தநரை நோக்கி, "எனக்குப் பசியாயிருக்கிறது" என்றார். ஜநார்த்தநர், தக்ஷணமே தமது தபோ மஹிமையால் பாகம் செய்த அறுசுவையோடுகூடிய திவ்யாந்நத்தை, ரத்ந பாத்திரத்தில் சேர்த்து, குருசிஷ்யர்களாகிய இருவரும் உண்டார்கள். உண்ணும் போது, ஜநார்த்தநரைநோக்கி, "இந்தச்சிறுவனுக்கும் நம்மோடுண்ண விருப்பமுண்டானால் அழைக்கலாமே" என்று சொல்லக் கேட்டுக் கொண்டிருந்த ஏகநாதர், "இந்தத் துருக்கனோடு எப்படி யுண்பது" என்று விரைந்து விலகிப்போக, த்ரிமூர்த்தி ஸ்வரூபராகிய தத்தாத்ரேயர் உண்டு மறைந்துபோனார். மறைந்தபிறகு, ஏகநாதர் தமது குருவினிடத்தில் வந்து வணங்கி, "குருநாதரே, குதிரைமேலேறிவந்தவரைக் குருவென்றீர், சமீபத்தில் வந்தபிறகு பார்த்தால் அவர் துருக்கர்போலக் காணப்பட்டார்; அவரை வணங்கி அவரோடு உண்டீர், இது என்ன புதுமையாயிருக்கின்றது" என்றவுடனே, ஜநார்த்தநர், "ஏகநாதா! என் குருநாதர் உருவமாறி வருவாரென்று முன்பே சொல்லியிருந்தேன், அதை மறந்துவிட்டாய், அவர், அத்திரிப்

புதல்வர், அவரைத் தரிசிப்பது யாவருக்கும் துர்லபம்; அப்படி அருமையானவர் வர, அம்ருதத்தைக் கழுநீரென்று நினைப்பது போல அவரைச் சாமானியராக நினைத்தாய், பலவகையாகிய யோகாப்யாஸம் செய்யலாம், எல்லாப் பிராணிகளுடைய ஹ்ருதயத்தையும் அறியலாம், சப்த சமுத்ரங்களையும் க்ஷணப்பொழுதில் நீந்தலாம், த்ரிகால வர்த்தமானத்தையும் அறியலாம், த்ரிமூர்த்தி ஸ்வரூபராகிய தத்தாத்ரேயரைக் காண்பது மிகவும் அருமை. அப்படியிருக்க, அந்த மஹாத்மாவானவர் நமக்கு எளிதாய்க் காட்சி கொடுத்தும், நீ அவரை வணங்கி உஜ்ஜீவிக்காமல் அவமதித்திருந்தது உனக்குத் தகுதியாகுமோ? இனியாகிலும் அவர் வந்தால் அவரை வணங்கி அவர் அருள்செய்யப் பெற்றுக்கொள்" என்று சொல்ல, இவர் அதற்கிசைந்து, ஜநார்த்தநபண்டிதரோடு மடத்துக்குப் போய் வசிக்குங் காலத்தில், மற்றொரு நாள், பண்டிதர், "ஏகநாதா! நீ இன்றைக்கும் என்னோடு காட்டுக்கு வா, என் குருநாதர் எந்த ரூபங் கொண்டுவந்தாலும் நான் எச்சரிக்கிறேன், நீ கண்டுகொள்" என்று சொல்லி அழைத்துக்கொண்டு போனார். போன அந்தக் காட்டில், தத்தாத்ரேயர், பக்கிரிரூபங்கொண்டு, காமதேநுவோடு வந்துசேர்ந்தார். அவரைக் கண்ட ஜநார்த்தநர், எதிர்கொண்டு வணங்கலும், அவர் இவரைத் தழுவிக்கொண்டு, "உணவு கொடுக்கவேண்டும்" என்று கேட்க, இவர், அவர் கொண்டுவந்த காமதேநுவின் பாலைக் கறந்து, அதில் பாகஞ்செய்த உணவைக் கொடுக்க, அவர் இவரைக் கூடவைத்துக் கொண்டு உண்ணும்போது, "இந்தச் சிறுவனைச் சேர்த்துக்கொண்டு உண்போம், அவனை யழையும்" என்று சொல்ல, ஜநார்த்தநர் ஏகநாதரை நோக்கி, "நான் என் குருவென்று முன்னே சொன்னவர் இவர்தாம்" என்று குறிப்பாயறிவிக்க, ஏகநாதர் நெருங்கிவந்து நிற்க, தத்தாத்ரேயர், இவரை நோக்கி, "உண்ண வா" என்றழைத்தார். அப்போது இவர் அஞ்சி நின்று, "ஸ்வாமீ, தேவரீர் ஸ்ரீ ஹஸ்தத்தால் ப்ரஸாதம் தந்தருளுவீர்" என்று சொல்ல, அப்படியே தமது செவ்வாயிற் பரிசித்த வுணவைத் தமது திருக்கையாலேந்தித் தருதலும், ஏகநாதர் அன்போடு முன்றானையில் வாங்கிக்கொண்டார். பிறகு இருவருமுண்டு முடிந்தது. அப்போது தத்தாத்ரேயர், "இந்தச் சிறுவன் யார்?" என்று ஜநார்த்தநரைக் கேட்க, அவர் இந்த ஏகநாதரை அருகேயழைத்து, குருநாதர் திருவடியில் கிடத்தி, "இவன் என்னை ஆசிரயித்தவன்" என்று சொல்ல, தத்தாத்ரேயர் இவரைக் கடாக்ஷித்து, அருளோடு சொல்லுகிறார்: எப்படியென்றால், "வேத

சாஸ்திரங்களாகிய பாற்கடலைக் கடைந்தெடுத்த ஸாரம்ஸமான வெண்ணெயென்று சொல்லத்தகுந்த ஸ்ரீ பாகவதத்தின் அர்த்தம் ஆழமாயிருப்பதனால், அதை ப்ராக்ருத பாஷையில் தெளிவாய்ச் செய்யவும் ஸ்ரீ ராமாயணத்தையும் அப்படியே செய்யவும், ஸ்ரீ ஹரி கீர்த்தநங்கள் செய்யவும் இவன் சமர்த்தனாகக்கடவன்" என்று இவர் தலைமேல் கையை வைத்து ஆசிர்வதித்துப்போனார். அதைக் கண்ட ஜநார்த்தநர் ஏகநாதரை நோக்கி, "என் குருநாதர் கொடுத்த ப்ரஸாதத்தை யென்னசெய்தாய்?" என்று கேட்க, "நிலத்தின்மேலெறிந்து விட்டேன்" என்று சொல்ல, ஜநார்த்தநர் மனம் வருந்தி, தமது திருவாயிலிருந்த தம்பலத்தை உமிழ்ந்து கைக்கொண்டு ஏகநாதர் வாயிலிட்டு கைப்பற்றிக்கொண்டு மடத்துக்குப்போய், ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டு, இருவரும் மிகவும் ஒற்றுமையா யிருக்குங் காலத்தில், ஒருநாள் ஜநார்த்தநர், இனி இவனிடத்தில் நாம் வேலை வாங்குதல் தகாதென்று ஆலோசித்து, சீடரை நோக்கி, "இனி உன் ஊருக்குப்போய் இல்லறத்தில் அமர்ந்திருந்து, நீராடல் முதலிய நித்ய கர்மங்களை நடத்திக்கொண்டு, மெய்ஞ்ஞானத்தை யடைந்தாலும், நித்ய கர்மத்தையும் ஹரி பஜனையையும் விடாதிருப்பாயானால், ஸ்ரீ கண்ணபிரான் உனக்கு ப்ரத்யக்ஷமாய் வந்து க்ருபைசெய்வார்" என்று அன்போடு வாழ்த்தி அபயங்கொடுத்து அநுக்ரஹஞ்செய்து அனுப்ப, ஏகநாதர் தமது ஊரில்வந்து தமது மனையிற் ப்ரவேசித்துத் தாய் தந்தையரை வணங்க, அந்த முதுமைப் பருவமுள்ள தாய் தந்தையர் இவரை வாரி மார்போடணைத்து, உச்சிமோந்து பேரானந்த மடைந்திருந்தார்கள். பிறகு இவர் தமது ஆசாரியர் சொன்னபடியே, மாதா பிதாக்களுடைய சேவை, நித்ய கர்மாநுஷ்டாநம், சர்வ ப்ராணிகளிடத்திலும் அருளுடைமை முதலிய சற்குணங்களோடுகூடி, தமதகத்தி லெழுந்தருளியிருக்கிற பாண்டுரங்க பகவானைப் பூஜித்துத் தோத்திரம் செய்து வணங்கி, வலம்வந்து, துளசி தீர்த்தத்தை யெல்லார்க்குங் கொடுத்துத் தாமும் ஸ்வீகரித்து, பிறகு வேதியரோடிருந்து அமுதுசெய்து முடிந்தபிறகு, புராண காலக்ஷேபமும் ஹரிநாம ஸங்கீர்த்தநமும் செய்து, கண்ணுறங்குவாராயினர். இப்படி நடக்குங்காலத்தில், இவருடைய செய்கையை யறிந்தவரெல்லாரும், "இவர் அவதார புருஷரேயன்றிச் சாதாரண மனிதரல்லர்" என்று சொல்ல, சத்குருநாதருடைய திருவருளால் அநேக கவிகளையுஞ் செய்தார். அவற்றைக் கண்டு கேட்ட சாதுக்களெல்லாரும் மிகவும் புகழ்ந்து கொண்டாடினார்கள். இப்படியிருக்க,

ஒருநாள் ஸ்ரீராமபிரான் இவருடைய கனவில் வந்து, "வால்மீகி முனிவர் வடமொழியில் செய்த ஸ்ரீராமாயணம் விரிவாயும் பொருளறிதல் அருமையாயும் இருப்பதால், அதை உலகத்தார் எளிதி லறியும்படி ப்ராக்ருத பாஷையிற் செய்யக்கடவாய்" என்று நியமித்து மறைய, உடனே கண்விழித்தெழுந்து, வடமொழி இராமாயணத்தின் பொருள்முழுதும் ஆராய்ந்து மனத்தி லமைத்துக்கொண்டு, ப்ராக்ருத மொழியிற் செய்துவருங்காலத்தில், இவர் வீட்டிற்கு அயல் வீட்டுக்காரன், "வடமொழி இராமாயணமிருக்க, இவன் இப்படிச் செய்வதில் என்ன ப்ரயோஜநம்" என்று இகழ்ந்து வருவானாயினன். இப்படியிருக்க, இவர் செய்யும் ப்ராக்ருத ராமாயணத்தில் பகவானுனவர், மிகவும் விருப்பங்கொண்டு, பின்னும் ஒருநாள் இவரது கனவில் வந்து, இவரைத் துயிலெழுப்பி, "இராமாயணத்தைப் பாடி முடிக்கக்கடவாய்" என்றும், "உன் மதுரமொழிகளைக் கேட்க விருப்பமுடையேன்" என்றும் சொல்லி மைக்கூடும், எழுதுகோலும் அருகில் வைத்து மறைய, ஏகநாதர், அருகிலிருந்த எழுதுகருவிகளைக் கண்டு, இவற்றைக் கொண்டுவந்து இங்கே வைத்துப் போனவர் பகவானே யாகவேண்டுமென்று நிச்சயித்து, இராமாயணத்தை யெழுத முயலுங்காலத்தில், மஹேந்திரகிரியிலிருந்து ஸ்ரீ ஆஞ்சநேயர் கடலைத் தாண்டுகிற கதா சந்தர்ப்பத்தில், அவரது வேகத்தை மனத்திற்கொண்டு அவசரமாய்ப் பாய்ந்து, அயல் வீட்டின் முற்றத்தில் விழுந்தார். இவர் விழுந்த ஒலியைக் கேட்டு அயல் வீட்டுக்காரன் எழுந்து வந்து இவர் மூர்ச்சித்துக் கிடப்பதைக்கண்டு, இவர் கையிலிருந்த காகிதத்தைப் படித்து, அநுமான் கடலைத்தாண்டுதற்காகப் பாய்ந்த சந்தர்ப்பமிருக்கக்கண்டு, இவர் தம்மை அநுமானாகப் பாவித்துப் பாய்ந்தாரென்றறிந்து, இவரை நோக்கி, "நீர் இங்கே வந்து விழுந்ததற்குக் காரணம் யாது" என்றுகேட்க, இவர் மறுமொழி சொல்லாதிருக்க, அவனுக்கு இவர்மீது இரக்கமுண்டாகி, இவர் அவதார புருஷரென் றறிந்துகொண்டு, இவரை வீணாக நாம் இகழ்ந்தோமென்று பரிதபித்து இவரையெடுத்து மார்போடணைத்துக்கொண்டு வந்து இவர் வீட்டிற் சேர்த்தான். சற்று நேரத்தில் இவர் மூர்ச்சை தெளிந்திருந்தார். அதை யறிந்த அயல் வீட்டுக்காரன் வந்து இவரை வணங்கி, "அறிவில்லாதவனான என்னுடைய பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்துத் தன் வீட்டுக்குப் போய்விட்டான். பிறகு கொஞ்சகாலங் கழித்து, ஒருநாள் இவரிடத்தில் உபதேசம் பெறவேண்டுமென் றெண்ணி, இவர்

திருவாராதநஞ் செய்யுங்காலத்தில் வந்து, "தேவரீருடைய மஹிமையை யறியாமல் இகழ்ந்திருந்த குற்றத்தைப் பொறுத்து, எனக்கு உபதேசம் செய்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, இவர் சற்று நேரம் மௌநமாயிருந்து, அவனை நோக்கி, "உனக்குத் தகுந்த குருவையடைந்து உபதேசம் பெறக்கடவாய்" என்றார். அப்படிச்சொல்லியும் அவன் கேட்காமல் "உம்மிடத்திலல்லாமல் வேறொருவரிடத்தில் நான் உபதேசம் பெறமாட்டேன்" என்று பிடிவாதஞ் செய்வதைக்கண்ட தாசர், இவன் நல்லவனல்லவென்றுட்கொண்டு, "நாளைக்குச் சுதிநமாதலால், நீ நீராடி வா" என்றார். அவன் "அப்படியே யாகட்டும்"என்று போனபிறகு, தமது வீட்டிலுள்ளவர்களைப் பார்த்து, "நாளைக்கு ஸ்ரீ லக்ஷ்மீநாதனுக்குத் திருமஞ்சந தீர்த்தம் கொண்டுவரவேண்டியதில்லை. நான் சொன்னாலும் நீங்கள் கொஞ்சம் தாமதப்படுத்துங்கள்" என்று வற்புறுத்திச் சொல்லி, மறுநாள் காலையில் எழுந்திருந்து, நீராடி, திருவாராதநம் செய்கிறபோது, அயல் வீட்டுக்காரன் வந்து வீட்டிலுள்ளவர்களை நோக்கி, "இன்னமும் பகவானுக்குத் திருமஞ்சந தீர்த்தம் என் கொண்டுவராமலிருக்கின்றீர்கள்? கொண்டு வாருங்கள்" என்று சொல்ல, அவர்கள் கொண்டுவராமலிருந்து விட்டார்கள். பிறகு பகவத்தியாநத்திலிருந்த தாசர் கண்திறந்து, எதிரே நிற்பவனைப் பார்த்து, இவனது நற்குணத்தை யறிவோமென்று நினைத்து, "இங்கே புண்ணியதீர்த்தங் கொண்டுவருவோர் ஒருவருமில்லையோ" என்று கேட்க, வீட்டிலுள்ளவர்களும் அயல் வீட்டுக்காரனாகிய இவனும் சும்மா இருக்க, தாசர் தாமே ஒரு செப்புப் பாத்திரத்தை யெடுத்துக்கொண்டு போய் நீர் கொண்டுவந்து பூஜை செய்யத் தொடங்கும்போது, அவன் வந்து, "ஸ்வாமீ! அடியேனுக்கு உபதேசம் செய்தருளவேண்டும்" என்றான். அப்போது தாசரானவர் அவனைநோக்கி, "திருமஞ்சந தீர்த்தங் கொண்டுவருவோரில்லாமையால் நேரமாயிற்று, உபதேசத்துக்கென்று நிச்சயித்து வைத்த சுபமுஹூர்த்தமும் போய்விட்டது, இனி யென்னசெய்யலாம்" என்று சொல்ல, அவன் வீட்டுக்குப் போய்விட்டான். பிறகு ஏகநாதர் தமது பூஜையை நிறைவேற்றினர்.

இப்படி யிருக்குங்காலத்தில், ஜநார்த்தநபண்டிதர் இவரையழைத்து முகத்தை நோக்கிச் "சுலிபமலையென்று ஒன்றுண்டு, அதன் பக்கத்தில் சூரியதீர்த்தமென்று ஒரு தீர்த்தமுண்டு, அதனருகே மநோஹரமான மார்க்கண்டேயாசிரமமென்று ஒன்றுண்டு, அங்கே அநேகம் சாதுக்கள் வந்து திருமாலை வணங்கி மோக்ஷமடைகிறார்கள்.

அந்தப் புண்ய க்ஷேத்ரத்தை யடைந்து, அங்குள்ள ஸூர்யதீர்த்தத்தில் நீராடி பாண்டுரங்கனை த்யானித்துக்கொண்டிருப்பாயானால், அந்த விட்டலப் பெருமானுடைய சேவை உனக்கு எளிதாகக் கிடைக்கும், அப்படி அந்த விட்டலப்பெருமானுடைய சேவை கிடைத்த பிறகு என்னிடத்திற்கு வா" என்று சொன்னார். அப்படியே இந்த ஏகநாதர் சுலீபமலையை யடைந்து ஸூர்யதீர்த்தத்தில் மூழ்கிக் கிழக்கு முகமாயிருந்து, ஏகாக்ரசித்தராய்ப் பகவத்யாநம் செய்துகொண்டிருக்கும்போது, அந்தமலையிலுள்ள ஒரு பாம்பு வந்து இவரைச் சூழ்ந்துகொண்டு இவரது திருமேனி ஸ்பரிசத்தால் அதன் கொடுமை நீங்கி, இவருக்குத் தன்படம் விரித்துக் குடைபிடித்துக்கொண்டிருந்து, இவர் த்யாநம் விட்டெழுந்தவுடனே போய்விட்டது. அது முதலாகத் தினந்தோறும் அப்படியே செய்து வந்தது. இப்படியிருக்க, அந்த மலையின் அடிவாரத்தி லிருப்போனொருவன் அவ்விடத்தில் வந்து தவஞ்செய்வோரெல்லாருக்கும் தன்னாலியன்ற வுதவி செய்வோனாதலால் இந்த ஏகநாதருக்குத் திநந்தோறும் பால் கொண்டுவந்து கொடுத்துக்கொண்டிருக்க, இவர் வாங்கியுண்டு தாஹம் தணிந்திருப்பார். ஒருநாள் இவர் யோகநிஷ்டையி லிருக்கும்போது பால் கொண்டுவந்து இவர் எழுந்திருக்குமளவும் காத்துக்கொண்டிருந்தான். அப்போது, வழக்கம்போலப் பாம்பு வந்து தன்படத்தை விரித்துக் குடையாகப் பிடித்துக்கொண்டிருப்பதை அவன் கண்டு பயந்து, "ஐயோ, இந்தப்பரமசாதுவைத் தீண்டித் தீங்குசெய்யுமே" என்று அநுதபித்து, பகவானை ப்ரார்த்தித்து, "இந்தச் சாதுவுக்குத் தீங்கு நேரிடவொட்டாமல் காத்தருளவேண்டும்" என்று முறையிட்டலறினான். இந்தச் சத்தத்தைக்கேட்ட தாசர் அவனை நோக்கி, "நீ யேன் கூவினாய்?" என்றுகேட்க, அவன் பாம்பின் வரலாற்றைச்சொல்ல, தாசர், "இது ஒரு ஆச்சரியமோ! ஸ்ரீ ஹரிபாத த்யாநம் செய்வோரைக் கண்டால் யமனும் அஞ்சுவான்" என்று சொல்லி அவனை யனுப்பிவிட்டு, பகவானை ஸ்மரித்து, "ஓ பண்டரிநாதா, உன்னுடைய திருவருளுருவத்தைக் காணவேண்டு மென்கிற எண்ணங்கொண்டு இங்கே வந்து தங்கி யிருக்கிறேன்; என் எண்ணம் நிறைவேறும்படி க்ருபைசெய்யவேண்டும்" என்று பலவகையாய்த்தோத்திரம்பண்ணி, அனலிலிட்ட வெண்ணெய்போல மனமுருகிநிற்க, விட்டலப்பெருமானானவர், இவரது வேண்டுகோளுக் கிரங்கி, சகுண ரூபங்கொண்டு, பஞ்சாயுதம் பீதாம்பரம் முதலியவற்றோடும் இவருக்கெதிரே யெழுந்தருள, இவர் எழுந்து பகவானைத் திருவடிதொழுது நின்றார்.

அப்படி நின்றவரைப் பகவானனவர் எடுத்து மார்போடணைத்துத் தழுவி "உன் விருப்பத்தின்படியே உனக்கு ப்ரத்யக்ஷமானேன். இதுவுமன்றி, உன்னை எந்தக் காலத்திலும் ஒரு துன்பமுமுண்டாகா மல்காப்பாற்றுவேன்" என்றுசொல்லியதை, பால்கொண்டுவந்து அய லில் நிற்பவன் கண்டு, "தவயோகங்களில் ஒன்றுஞ் செய்யாமல் ஏக நாதருக்குப் பால்கொண்டுவந்து கொடுத்துக்கொண்டிருந்த புண்ணிய விசேஷத்தால், வேதங்களாலும் அளவிடப்படாத பகவானைக் கண்டு களிக்கலாயிற்றல்லவா" என்று, அன்போடு பகவானை வணங்கித் தோத்திரிக்க, பகவானும் அவனைக் கடாக்ஷித்து மறைந்துபோனார். பிறகு பால்கொண்டுவந்தவன், பாலை ஏகநாதருக்குக் கொடுத்துவிட் டுப் போய்விட்டான். பிறகு ஏகநாதர் பேரானந்தமடைந்து தமது ஆசிரியராகிய ஜநார்த்தந பண்டிதரிடத்திற் போய், அவருடைய திரு வடியை வணங்க, அவரும் இவரை மார்போடணைத்துத் தழுவினர். தழுவின பிறகு, "ஊருக்குப் போய்வாரும்" என்று விடைகொடுக்க, இவர் தமது ஊருக்குப் போய் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்து கொண்டிருக்குங்காலத்தில், பண்டரிபுரத்தில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ கண்ணபிரான் இவரிடத்திற்குப் போகவேண்டுமென்று திரு வுளங்கொண்டு, ஒரு வேதியனுருவங் கொண்டு வந்து, தேவகிரியி லுள்ளோரை நோக்கி, "ஒரு வேற்றூரிலிருந்து வேதியர் வந்தால் அவர்களுக்கு அந்நமிடத்தகுந்தவர்களாய் இவ்வூரில் யாரிருக்கிறார் கள்" என்றுகேட்க, அவர்கள் ஏகநாதரைச் சுட்டிக் காட்ட, அவரிட த்திற்குப்போய், "ஸ்வாமீ, ஏழையாயும் பரதேசியாயுமிருக்கிற நான், இவ்வூரில் ப்ரபலமான அந்நதாநஞ் செய்வதில் நீர் மிகவுஞ் சிறந்தவ ரென்று கேள்விப்பட்டு வந்தேன், எனக்கு அந்நவஸ்திரங் கொடுத் துக் காப்பாற்றினல், எப்பொழுதும் பணிவிடை செய்துகொண்டு இங்கே தானே யிருந்துவிடுவேன்" என்றார். அதுகேட்ட ஏகநாதர், "நீர் எங்கேயிருந்து வந்தீர்? உமதுபெயர் யாது?" என்று வினவ, அந்த வேதியர், "எனக்கு ஒரு வூரென்பதில்லை, என் பெயர் கண்டியா, என் மனதுக்கிசைந்தவர் யார் என்று தேடிவந்தேன்; தேடினவிடங்களில், ஹரிபக்தராகிய வும்மைப்போலப் பெருங் குணமுடையா ரொருவ ரையுங் கண்டிலேன்" என்றுசொல்லக்கேட்ட ஏகநாதர், பகவானுகிய வேதியரைநோக்கி, "உமக்கு இங்கே யிருக்கச் சம்மதமானல் இருக்க லாம்" என்றுசொல்ல, ஸ்ரீ கண்ணபிரான் அதற்கிசைந்து அவர் வீட்டு வேலைகளைச் செய்ய விருப்பங்கொண்டு அவர் வீட்டிற் பிரவேசித்து, தினந்தோறும் காலையிலெழுந்து கோமயம் கொண்டுவந்து குவித்தல்,

குப்பையை விளக்கி யகற்றுதல், மெழுகுதல், பாத்திர வகைகளைச் சுத்தி செய்தல், வஸ்திரங்கள் அலைவத்தல், காவடிநீர் கொண்டு வருதல், சந்தன மிழைத்தல், மலர்தொடுத்தல், விளக்கேற்றல், இவரது தேவியாரிடம் பணிவிடைகள் செய்தல், தயிர் கடைதல், வெண்ணெய் திரட்டியெடுத்தல், போஜன வகைகளை யன்போடுசெய்து நிறைத்தல், போஜன சாலையைச் சுத்தப்படுத்துதல், தாசரது தேவியரை இன்ன மென்ன வேலை செய்ய வேண்டுமென்று கேட்டல், பூஜை முடிந்த பிறகு வருகிற வேதியரோடு கூடியிருந்து தாசரு முண்ணும்படி அமுது பரிமாறுதல், உண்ட பிறகு வாய் பூசும் நீர் முதலியவை கொடுத்தல், சந்தன புஷ்ப தாம்பூலாதிகள் கொடுத்தான பின்பு, எச்சிலிலைகளைக் கொண்டுபோய் வீட்டுக்கு நெடுந்தூரத்திற் சேர்த்தல், உண்டவிடமெல்லாஞ் சுத்தி செய்தல், இந்த வேலைகளெல்லாம் முடிந்த பிறகு, தமது கால் கைகளைச் சுத்திசெய்துகொண்டு, தாமும் அமுது செய்து, பிறகு இரவில் நடக்கவேண்டிய புராண காலக்ஷேபம் ஸ்ரீஹரிபஜனை முதலியவைகளுக்கு வேண்டியவற்றையும் அமைத்து, இன்னமும் வேண்டுவனவாகிய குற்றேவல்களையும் செய்து, தாசர் கண்ணுறங்கின பிறகு தாமும் உண்டு உறங்க விரும்புவார். இந்த விதமாகத் தினந்தோறும் செய்து வருங்காலத்தில், தாசருடைய தாய்தந்தையர் பரமபதமடைந்தார்கள். அவர்களுக்குச் சரம கைங்கர்யங்க ளெல்லாங் குறைவற நடத்தி, ஒரு வருடம் கழிந்து, பிதிர்த்தினம் வர, தாசர், அவ்வூரிலுள்ள வேதியரிடத்திற் போய் "நாளை எமது வீட்டில் சிரார்த்த மாகையால், போஜனத்துக்கு வாருங்கள்" என்று சொல்லி விடு வந்து சேர்ந்திருந்தார். மறுநாள் விடியற் காலத்தில் எழுந்து நீராடி, நித்திய கர்மங்களை முடித்து, பூஜையையும் நிறைவேற்றி, மேலுப்பரிகையிலிருந்தார். அப்பொழுது வீதியில் ஒரு புலையனும், புலைச்சியும் வந்து குப்பை கூட்டும்போது, இவர் வீட்டில் வேதியர் பொருட்டுச் சமைக்கிற அன்னம், பதார்த்த வகைகள் இவற்றின் நறுமணத்தைப் புலைச்சி யறிந்து தன் கணவனுக்குச் சொல்ல, அவன், "பெண்ணே, அந்த அன்னாதிகள் வேதியர்க் கல்லது நமக்கெப்படி கிடைக்கும்? கிடைத்தாலும் உண்ணத்தகாது, வேதியருண்ட எச்சிலாயினுங் கிடைத்தால் நாம்செய்த புண்ணியம்" என்று சொல்லி, "அந்த எச்சிலும் சிரார்த்ததினத்திலல்லது மற்றை நாட்களில் கிடைப்பது அருமை, அந்த எச்சிலிலைகளையும் கண்ணுக்குத் தெரியாமல் நிலத்திற் குழிதோண்டி, அதிற் கவிழ்த்து மூடுவார்கள், நீயேன் வீணாசைப்படுகிறாய்" என்று சொல்லுவதை உப்பரி

கைமே லிருந்தவர் கேட்டார். கேட்டுக் கீழே யிறங்கி வந்து தமது மனைவிக்கு இந்தச் செய்தியைச் சொல்லி, "அவர்களுக்கு இப்போது சமைத்த அந்நத்தை யிட்டால் நலம்" என்று சொல்ல, தேவியாரும் அப்படியே செய்யலாம், ஆனால் அவ்விருவருக்கு இட்டு மிகுந்ததை வேதியர்க் கிடலாகா தாகையால் அவரது சுற்றத்தா ரெல்லாரையும் வரவழைத்து இப்பொழுது சமைத்ததை யெல்லாம் அவர்களுக்குக் கொடுத்து விட்டு, வீடு முதலானவற்றைச் சுத்தி செய்து, புதிதாகச் சமைத்து வேதியர்க்குப் படைக்கலாம்" என்று சொல்ல, "அது சரி யான காரியம்" என்று ஏகநாதர் அப்படியே நடத்திவிட்டார். உண்ட புலையர்கள் மிகுதியாய்க் களித்து வாழ்த்திப் போனார்கள். பிறகு வீடுவாசல் முழுதும் சுத்திசெய்து, முன்போலவே புதிய தீர்த்தம் கொண்டு வந்து சமையல் செய்வித்து அமைத்துவைத்துக்கொண்டு வேதியர்க்காக எதிர்பார்த்திருக்கையில், வேதியர் வந்து "இப்படி யெங்களை வரச்சொல்லி, எங்கள் பொருட்டுச் சித்தப்படுத்தின போஜநத்தைப் புலையர்க்கிடுவது நீதியோ ? அந்தப் புலையர்தாமோ உன் பிதிரர்" என்று பலவகையாய்க் கடிந்துபேச, ஏகநாதர் அவர்களை நோக்கி, "உங்களுக்கென்று சமைத்த போஜநவகைகளின் நறுமணத்தை வீதியிற் குப்பை விளக்குகிற புலையனும் புலைச்சியும் கந்தித்து இந்த போஜந வகைகள் நமக்கெப்படிக் கிடைக்குமென்று பேசிக் கொண்டார்கள். அதை நான் கேட்டு, இந்தப் புலையர் கந்தித்த இந்த போஜந வகைகளை வேதியர்க்குப் படைப்பது தருமமல்லவென்று அவர்களுக்கே உபயோகப்படுத்திவிட்டு, முன்போலவே வீடுவாசல்கள் சுத்திசெய்து, நூதநதீர்த்தங் கொண்டுவந்து சமையல்செய்து சித்தமா யிருக்கின்றது. இப்படி செய்ததிலும் குற்றமிருந்தால் க்ஷமித்துச் சிரார்த்த கர்மத்தை நிறைவேற்றி யருளவேண்டும்" என்று சொல்ல, வேதியர்கள் ஏகநாதர் முகத்தை நோக்கி, "யாகாமிர்தத்தை நாய்க்கிடுவதுபோலவும், திருத்துழாயை மசிதிற் கொண்டு போய் வைப்பதுபோலவும், எங்களுக்கு உபயோகிக்கத் தகுந்தவைகளைப் புலையருக்கு உபயோகித்தது மல்லாமல், சமாதாநமும் சொல்ல வந்தாய்; உன் வீட்டில் நாங்கள் உண்ணமாட்டோம்" என்று சொல்லிப் போய்விட்டார்கள். அதன் பிறகு ஏகநாதர், மனம் வருந்தி, தமது வீட்டில் வேலை செய்கிற கண்டியாவினிடத்திற்கு வந்து, "நீர் ஏன் விசனமடைந்தவர்போலிருக்கிறீர்?" என்று கேட்க, அந்தக் கண்டியா சொல்லுகிறார்: "பிதிர்த்திநத்தில் விசநமடைந்திருப்பது நன்மையல்ல, நீர் விரும்பினால் பிதிர்க்களெல்லாம் வரமாட்டார்களோ ?

வந்து சிரார்த்த தினமாகிய இன்று இங்கே சம்ப்ரமாகப் புசித்துப் போவார்கள்'' என்று சொல்ல, பேரறிவையுடையவராகிய ஏகநாதர் அறிந்து, "இந்தக் காரியம் முடியவேண்டும்'' என்று நினைத்தார்; நினைத்து, இது நல்லதென்று சொன்ன அவனை நோக்கி, "இவ்விடத்தில், நீ பிதிருக்கு உணவு கிடைக்கும்படி, இலைகளை விரித்து, அமுது பரிமாறக்கடவாய்"என்று சொல்லி, துன்பத்தையெல்லாம் நீக்கத்தகுந்த ஸ்ரீகண்ணபிரான் திருவுருவை மனத்திற்பதித்து, "தென்புலத்தாராகிய பிதிரர் இங்கே வந்து அமுது செய்து த்ருப்தியடையும்படி கருணை செய்யவேண்டும்'' என்று ப்ரார்த்திக்க, அப்படியே பிதிரரெல்லாரும் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கு அர்க்கிய பாத்தியாசமநங்களுந் தந்து, ஆசநங்கொடுத்து, ஜநார்த்தநரையும் ஆராதித்து; ஸ்ரீ கண்ணபிரானுக்கு அர்ப்பணமென்று சங்கற்பமுஞ் சொல்லி நீர் வார்த்தவுடனே, பிதிரரெல்லாரும் த்ருப்தியா யுண்டு களித்தார்கள். பிறகு அவர்களை நோக்கி, "மிகுதியாயிருக்கிற அமுதை என்ன செய்யலாம்?'' என்று கேட்க, "நீங்கள் உம்முடைய இஷ்டர்களோடு கூடி உண்ணக்கடவீர்கள்'' என்றுசொன்னார்கள். அதைக்கேட்ட வேதியர், உள்ளே வந்து பேசுகிறவர் யாரென்று நோக்க, பிதிரர்கள் மறைந்து போனார்கள். அதைக் கண்ட வேதியர்கள் வெளியே வந்து, "இவர் மனிதரல்லர், திருமாலே இப்படி அவதாரம் செய்ததுபோலிருக்கிறது, ஆதலால் இவர் விரும்பினதுபோல எந்தக்காரியமும் முடிகின்றது, நாமெல்லோரும் கர்மாபிமாநிகளா யிருப்பதனால் அவமாநத்தையடையும்படி அவரது பிதிரர் வந்து உண்டு போனார்கள், நமக்குக் கிடைக்கத் தகுந்த தக்ஷிணை முதலானவைகளையும் இழந்தோம், நாளையத்தினம் வந்து இவரை உறவாக்கிக்கொண்டாலல்லது நமது மானம் நிலைபெறாது''என்று பேசிக்கொண்டு போனார்கள். அவர்கள் போன பிறகு ஏகநாதர் தமது இஷ்டரோடு கூடியுண்டார். மறுநாளுதயத்தில் நேற்று வந்து அவமாநமடைந்து போன வேதியர்கள் ஒருமிக்கத் திரண்டு வந்து, கங்காதிரஞ் சேர்ந்து ஏகநாதரை யழைக்க, இவர் போய் வேதியர்களை வணங்கினார். வணங்கி "என்னை யழைத்த காரியமென்ன"என்று கேட்க, அவர்கள், "நேற்று நீ செய்த பிழைக்காகப் பிராயச்சித்தஞ் செய்துகொள்ள வேண்டும்''என்று சொல்ல, இவர், "விஷ்ணு பக்தனாகிய எனக்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டிய அவசியமில்லை'' என்றார். அதைக் கேட்ட வேதியர்கள் மறுபடியும் இவரை நோக்கி "நீர் சொல்லும் வார்த்தை உண்மையேயானாலும், எங்கள் வார்த்தையை மறுக்காமல் செய்து கொள்ளீரா

ஞல் தேஹ சுத்தியுண்டாகும்" என்று வற்புறுத்திப் பிராயச்சித்தம் செய்து கொள்ளுவதற்கு இவரை உடம்படச் செய்து, ஸ்நாநம் செய்வித்து, பிராயச்சித்தம் நடத்திக்கொண் டிருக்குங்காலத்தில், திரியம்பகத்திலிருந்து ஒரு வேதியன் வந்து, "இவ்வூரில் ஏகநாதரென்பவர் யார்?" என்று கேட்க, இங்கிருந்த வேதியர்கள் அவனை நோக்கி "நீயேன்கேட்கிறாய்?" என்றுவினவ, அவன் தன்வரலாற்றைச் சொல்லுகிறான்: எப்படியென்றால், "நான் திரியம்பகம் என்னும் ஊரிலிருப்பவன், எனக்குக் குஷ்டநோய் உண்டாகி அதனால் மிகவும் வருந்தி, திரியம்பகேசுவரனை வணங்கி, இந்தநோய் நீங்கும்படி க்ருபைசெய்ய வேண்டுமென்று ப்ரார்த்தித்துக் கண்ணுறங்கினேன், அந்தச் சிவபெருமான் என் கனவில் வந்து, "தேவகிரியில் ஏகநாதர் என்று ஒரு விஷ்ணுபக்த ரிருக்கிறார், அவர் தமது பிதிர்த்திநத்தில் அளவற்ற புலையருக்கு அந்நதாநஞ் செய்தார், அதனால் அவர்களுள் ஒருவனுக்கு அந்நமிட்ட புண்ணியத்தை உனக்குத் தருவாரானால் உனது நோய் நீங்கும்" என்று சொல்லி மறைந்தார். ஆகையால் அவரைக் கண்டு வணங்கி, எனது நோயை நீக்கிக்கொண்டு போகலாமென்கிற ஆவலோடு வந்தேன்" என்று சொன்னான். அதைக்கேட்ட வேதியர்கள் அதிசயித்து, "வேதியர் பொருட்டு அமைத்த உணவைப் புலையருக்கிட்டால் புண்ணியம் உண்டாகுமென்று எந்தச் சாஸ்திரத்திற் சொல்லுகிறதோ, அவன் சொன்னது வெறும் பொய்" என்று சொல்ல, அவர்களுள்ளே சிலர், "கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமோ ? பிதிரர் வந்து அமுதுசெய்து போனதை நாம் கண்ணாரக் கண்டோமே, இன்னமும் அவர் மஹிமைக்கு வேறு சாக்ஷி வேண்டுமோ, இவர்கள் ஏன்வீணாகப் பொறாமை கொள்ளுகிறார்கள்" என்று சொல்லி, வந்த வேதியனுக்கு, "ஏகநாதர் இவரே" என்று சுட்டிக் காட்டினார்கள். உடனே அந்த நோயாளியானவன் ஓடி வந்து இவரை வணங்கி, "ஸ்வாமீ, தேவரீர் பிதிர்த்திநத்தில் புலையருக்கு அந்நதாநஞ் செய்தீரல்லவா ? அவர்களுள் ஒரு புலையனுண்டதனால் உமக்குண்டான புண்ணியத்தை எனக்குத் தந்தால், எனது நோய் தீரும் என்று திரியம்பகேசுவரன் சொன்னதனால் தேவரீரை வந்தடைந்தேன், கருணை செய்யவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, ஏகநாதரும் "அப்படியே கொடுத்தேன்" என்று சொன்னவுடனே, வேதியன் குட்டநோய் நீங்கிப் பொன் மேனியனாய் நின்றான். இவனைக் கண்டவேதியர்கள், "நாமெல்லாம் கர்மாசாராபிமாநங்களை யுடையவர்களாயிருப்பதனால் பயன் யாதுமில்லை, இந்த ஏகநாதர் மெய்ஞ்ஞானி

யா யிருக்கையாலல்லவோ, அவருக்கு எந்தக்காரியமும் எளிதாய் முடிகிறது" என்று ஏகநாதரை வணங்கி, "நீர் ஸ்ரீ லக்ஷ்மீநாதரே யன்றி நரமனிதரல்லீர்" என்று புகழ்ந்து, "உமது பெருமையை இப்போது நாங்கள் நன்றாயறிந்துகொண்டோம், குளிர்ச்சியிற் சிறந்த பனிமலைக்குக் குளிர்ச்சியை யுண்டாக்கும்பொருட்டு விசிறிகொண்டு விசிறுதலும், இனிமையிற் சிறந்த அமிர்தத்துக்குச் சர்க்கரை, கற்கண்டு தேன் முதலியவற்ருல் இனிமையையுண்டாக்குதலும் ஆகியதொழில்கள் செய்பவர்போல், சுத்தசாத்விககுணமும் மெய்ஞ்ஞானமுமுள்ள உமக்கு நாங்கள் பிராயச்சித்தம் செய்து உம்மைப் புநிதராக்க வந்தோம், நீர் உமது பிதிரர்களையழைத்து அமுதுசெய்யச்செய்ததும், குஷ்டநோய் தீர்த்ததும் ஆகிய அற்புதச்செய்கைகளை உம்மிடத்திற் கண்டோம், உமது மஹிமையைப் புகழ்ந்து சொல்ல எங்களால் முடியாது" என்று தோத்திரித்து அழைத்துக்கொண்டுபோய் வீடு சேர்ந்து, இவர் கொடுத்த தக்ஷிணை முதலானவைகளைப் பெற்றுத் தமது இடங்களையடைந்து, "இந்த ஏகநாதர், ப்ராஹ்மண பக்தியிலும், ஹரி பக்தியிலுஞ் சிறந்தவர்" என்று மதித்துப் புகழ்ந்துகொண்டிருந்தார்கள். இப்படியிருக்க, துவாரகாபுரியில் வாழ்கின்ற ஒரு வேதியன், நீலமேகவண்ணனுகிய ஸ்ரீ கண்ணபிரானது சேவை கிடைக்காமல் அநுதபித்துத் தவஞ் செய்துவருங் காலத்தில், ராதை, ருக்குமணி என்னும் பிராட்டியாரிருவரும் அந்த வேதியன் மனத்தில் தோன்றி, நீ விரும்புகிற ஸ்ரீ கண்ணபிரானுனவர், வேதகிரியில் வைஷ்ணவ சிரோமணியாய் வாழ்கிற ஏகநாதர் வீட்டில், கண்டியா என்னும் பேர் பெற்றுப் பன்னிரண்டு வருஷ காலமாய் ஊழியஞ்செய்துகொண்டிருக்கிருர். நீ அங்கேபோய், எங்களை முழுதும் மறந்திருக்கிற அந்தக் கண்ணபிரானை அழைத்து வா" என்றுசொன்னவுடனே வேதியன் புறப்பட்டுப்போய், தேவகிரியில் ஏகநாதர் வீட்டில் புகுதலும், ஏகநாதர் இந்தவேதியனைவணங்கி, ஆசநந்தந்து, "எங்கிருந்து வந்தீர்? வந்தகாரியம் யாது?" என்று கேட்க, வேதியன், "நான் கண்டியாவைக் காணவந்தேன்" என்று சொல்ல, "கண்டியா நீர் மொள்ளப் போனுன், இன்னம் ஒரு க்ஷணநேரத்தில் வருவான்" என்று ஏகநாதர் சொன்னுர். அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே கண்டியாவும் நீர்க்காவடியைத் தோளிற் சுமந்துகொண்டு வந்தான்; வந்து தன்னைத் தேடிவந்திருப்பவனைப் பார்த்து நாணி, ஏகநாதர் வீட்டுக்குள்ளே போய், "பன்னிரண்டு வருஷகாலமாய் ஒரு துன்பமுமில்லாமல் இங்கே யிருந்தேன், இந்தக் கடன்காரன், எங்கே யிருந்தோ

இங்கு நானிருப்பதையறிந்து வந்துவிட்டான்'' என்று மனம் வருந்த, ஏகநாதர், வந்த வேதியனை யழைத்து, "கண்டியா இதோ வந்தான்'' என்றார். உடனே வேதியன் விரைவா யோடிவந்து கண்டியாவை வணங்க, அவன் பேசாமல், திருவாராதந அறைக்குள்ளே போய்க் காவடியையிறக்கி வைத்துவிட்டு மறைந்துபோனான். வந்த வேதியன் சற்றுநேரம் பார்த்து, "உள்ளே போனவன், ஏன் இன்னம் வெளியேவரவில்லை'' என்று உள்ளேபோய்ப்பார்த்துக்கண்டியாவைக் காணாமையால் திகைத்து, "பகவானானவர் அடியேனுக்கு அருள்செய்யாமற் போனாரே'' என்று துக்கித்து நிலத்தின்மேல் விழுந்து, கோவென்று அலறுவதைக்கேட்ட ஏகநாதர் வந்து, "ஏன் கதறுகிறீர்?'' என்றுகேட்க, வேதியன் தான் வந்த வரலாற்றைச் சொல்ல, ஏகநாதர் அந்தவேதியனைநோக்கி, "நீர்செய்த தவமே தவம், நமது பவரோகத்தை நீக்கத்தகுந்த பகவான் இவன் என்றறிந்து வணங்கினீர், நான் அந்தப் பகவானை யாரோ ஒரு வேலைக்காரனென்று நினைத்து, அவரிடத்தில் வேலை வாங்கினேனே, என்னைப்போல அவிவேகிகளுண்டோவென்று இரக்கமடைந்து, "ஓ பகவானே! பன்னிரண்டு வருஷ காலமாக அநேக ஊழியங்களை நீசெய்ய ஏற்றுக்கொண்டேன், வேலை செய்து உன் திருக்கரங்கள் காய்ப்பேறிப்போயின, உன் திருவடிகள் கன்றும்படி தோளின்மேல் நீர்க்காவடி சுமந்துவரப் பார்த்திருந்தேனே, சர்வலோக சரண்யனாகிய உன்னை யறிந்துகொள்ளாத வினையினேன்'' என்று பலவிதமாய்ப் பரிதபித்துப் புலம்புவதைக் கண்ட இவர் தேவியார், மிகவு மனங் கலங்கி யழுது சோர்ந்து, "கோவிந்தா! உன்னை யறிந்துகொள்ளாமல் உன்னிடத்தில் பணிவிடையை யேற்றுக்கொண்டோமே'' என்று புலம்பினார். இந்த இருவருடைய நிலைமையைக் கண்ட வேதியன் இவர்களிடத்தில் விடைபெற்றுப் போய்விட்டான். பிறகு ஏகநாதர், தமது தேவியாரோடுங் கூடிக் கண்ணபிரானையே இடைவிடாமல் நினைத்துக்கொண்டுவாழுங்காலத்தில், ஒருநாள இவர் கனவில் ஞானதேவர் தோன்றி, அளகாபுரிக்கு வந்து என் சமாதியைத் தரிசித்து, என்னை யடைந்திருக்கிற அஜாநு மரத்தின் வேரை ஒரு புறத்தில் ஒதுக்கி, சமாதியை நன்றாய் மூடிவா'' என்று சொல்லிப் போய்விட்டார். ஏகநாதரும் அப்படியே அளகாபுரிக்குப்போய், இந்த்ராயணி நதியில் மூழ்கி, சந்த்யாகால கர்மங்களை முடித்து, சித்தேசுவரனை வணங்கி, வஜ்ரசமாதியிற் படிந்திருக்கிற ஞானதேவரைக் கண்டு வணங்கி, அவரை யணுகி யிருக்கிற மரவேரையும் ஒதுக்கி, பிறகு சமாதிக்கதவை மூடிக் கல்லடுக்கிச் சாந்து

செய்த முன்போலவே செய்துவைத்தார். இப்படிச் செய்த பிறகு தாசரும், கூட இருப்பவரும் பசியோடு தங்கியிருக்க, பாண்டுரங்கப் பெருமான் இவர்களுடைய பசித் துன்பத்தை நீக்க நினைத்து, ஒரு வணிக னுருவங்கொண்டு, சமையலுக்குரிய பொருள்களாகிய அரிசி முதலிய எல்லாவற்றையும் கொண்டுவந்து கடைத்தெருவில் வைத்துக்கொண்டிருக்க, ஏகநாதர், இரண்டுவேதியரையனுப்பி அவ்வணிகனிடத்தில் தமக்கு வேண்டிய பொருள்கள் யாவையும் வாங்கிக் கொண்டு வரச்சொன்னார். அப்படியே அவர்கள் போய், வேண்டியவற்றை வாங்கிக்கொண்டு, "சற்றேயிரும், விலைப்பணம் கொண்டுவருவோம்" என்றார்கள். அதற்கு அவ்வணிகர், "அவசரம் வேண்டாம், இன்று முழுதும் இங்கே யிருப்பேன், நீங்கள் போய்ச் சமையல் செய்து புசித்த பிறகு, பணம் கொண்டுவரலாம், ஏகநாதரையும் நானறிவேன், அவரென்னை யறியார், அவர் இங்கே வந்திருக்கிற செய்தியைக்கேட்டுப் பலசரக்குகளை யெடுத்துக்கொண்டு வந்தேன்" என்று சொல்ல, வேதியரிருவரும இரண்டடி பெயர்த்து வைத்துத் திரும்பிப் பார்த்து, வணிகரைக் காணாமல் அதிசயித்து, ஏகநாதரிடத்தில் வந்து, இந்தச் செய்தியைச் சொல்ல, அவர், வணிகனாய் வந்தவர் பகவானே யென்றறிந்து, இவர் நம் பொருட்டு அநேகவிதமான துன்பங்களை யடைகிறாரே யென்று மனம் வருந்தி யிருக்க, வேதியர்கள், கொண்டுவந்தவற்றைச் சமையல் செய்தார்கள். பிறகு தாசரும் வேதியரும் உண்டு, அன்றிரவில் அங்கே தங்கி, ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்து, பொழுதுவிடிந்தவுடனே, சமாதியை வணங்கி, அங்கிருந்து புறப்பட்டு வந்து தம்மூரை யடைந்து, ஹரிபஜனை செய்துகொண்டு, எப்பொழுதும் தமது குருவையே நினைத்து இருந்ததனால், நீரோடு நீர் சேர்ந்தாற்போல, ஜநார்த்தனர், தாமாக வாழ்ந்திருந்தார். இப்படி யிருக்குங் காலத்தில், ஜநார்த்தனர், இவ்வுலகத்திலுள்ள மூடரை யெல்லாம் ஸ்ரீ ஹரி பக்தர்களாக்க வெண்ணி, ஏகநாதரை நோக்கி, "நீ தீர்த்தயாத்திரையாய்ப் புறப்பட்டுப்போய் அங்கங்குள்ள சமஸ்த ஜநங்களுக்கும் உபதேசம் செய்து, அவர்களை ஸ்ரீ ஹரிதாசர்களாகச் செய்யவேண்டும்" என்று நியமிக்க, அப்படியே ஏகநாதர் புறப்பட்டுத் தீர்த்த யாத்திரை செய்துகொண்டும், அங்கங்கே வந்து தம்மை ஆசிரயிப்பவர்களுக்கு உபதேசித்துக் கடைத்தேறப் பண்ணியும் வருகிற காலத்தில், ஒருநாள் கோதாவரி நதிக்கரையிலுள்ள பிரதிஷ்டாந நகரத்தையடைந்து, அங்கே தங்கியிருக்கையில், இவர் ஹரிபஜனை செய்வதும், கீர்த்தனைகள் நூதன

மாய்ச் செய்வதும் ஆகிய தொழிலையே இடைவிடாமல் மேற்கொண்டொழுகுதலால் இவர் அவதார புருஷரென்று கொண்டாடுவார்கள். இப்படியிருக்க, இவர் தனியே சஞ்சரிப்பதற்கு விட்டலப்பெருமான் பொறுக்காதவராய், இவரோடு கூடவிருந்து உதவியாய்ப்பாடினால் இவர்க்குக் கொஞ்சம் இளைப்பாற்றிக்கொள்ள அவகாசமிருக்கும் என்று, தாம் ஒரு சங்கீத பாடகராகிய வேதியவேஷங்கொண்டு தாளத்தைக் கைக்கொண்டு, ஏகநாதர் முதுகின் புறத்திலிருந்து, அவர் சொல்லுங் கவிகளை அவரோடு கூடிப் பாடுவோராயிருந்தார். இப்படியிருக்கையில், ஒருநாள் ஸ்ரீக்ருஷ்ணஜயந்தி வர, அந்த உத்ஸவத்தை விசேஷவைபவமாய் நடத்தவேண்டுமென்று எண்ணி, அவ்வூரிலுள்ள தநவான்களுக்கு அறிவிக்க, அவர்களும் உத்ஸவத்துக்கு வேண்டிய பொருள்கள் யாவுஞ் சேகரித்திருந்தார்கள். இந்தச் செய்தியைத் தமது ஆசாரியராகிய ஜநார்த்தநருக்கு ஒரு வேதியன் மூலமாயறிவிக்க, அவரும் மனமகிழ்ந்து, குடும்பத்தோடு வேண்டிய பொருள்களைக்கொண்டு புறப்பட்டு, ஏகநாதரிருக்கிற நகரத்தைச் சமீபித்து வரும்போது, தத்தாத்ரேயர் எதிர்ப்பட்டார். அவரை வணங்கிப் புகழ்ந்து நிற்க, இவரை, தத்தாத்ரேயர் மார்போடணைத்து, "ஓ ஜநார்த்தநரே, உமது சிடன் ஒப்பற்றவன், அவனது ஞானவொழுக்கங்களைக் குறித்துச் சந்தோஷித்து நானும் அவனது மடவாசலிலிருந்து அவன் பாடுங் கீர்த்தநங்களைக் கேட்டு ஆநந்திக்கிறேன்" என்று சொல்லி, ஏகநாதரிடத்துக்கு விரைந்துபோய், "உமது சற்குருநாதர் வந்தார்" என்று சொல்ல, அந்த ஏகநாதர் எழுந்து வந்து குருநாதர் திருவடியை வணங்கி, "இத்தனைதூரம் தேவரீர் எழுந்தருளும்படி அடியேன் என்ன தவஞ் செய்திருந்தேனோ" என்று தோத்திரஞ்செய்து ஆசநந் தந்திருத்தி, திருவடியை விளக்கி, ஸ்ரீபாத தீர்த்தங்கொண்டு, பிறகு, உத்ஸவகாரியத்தை விசேஷவைபமாய் நடத்தி, தாமும்ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்யும்போது, விட்டலப்பெருமான் கைத்தாளங்கொண்டு பின்னின்று உதவியாய்ப் பாடுவதைக் கண்டவரெல்லாரும், "இவர்க்கு இசைவான உதவி பாடகர் அமைந்தார்" என்று வியந்து கொண்டாடினார்கள். பிறகுபகவானுக்கு ஹாரதி சமர்ப்பித்து ப்ரஸாதம் விநியோகித்து இப்படியெட்டுநாள் வரைக்கும் பகல்முழுதும் வேதியரை யுண்பிப்பதும், இராமுழுதும் ஹரிபஜனைசெய்வதும் ஆகிய தொழிலைச்செய்து, ஒன்பதாவது நவமி நாளில், ஸ்ரீ பாகவதத்தில் சொல்லப்பட்ட ஸ்ரீ கண்ணபிரானுடைய லீலைக ளெல்லாவற்றையும் செய்து, தசமிநாளில் வாத்ய விசேஷங்

கள் யாவையும் முழங்கச்செய்து, ஊர்வலம்வந்து, ஸ்ரீகண்ணபிரானை மடத்திற் கெழுந்தருளச் செய்து, ஹாரதி சமர்ப்பித்து, எல்லாருக்கும் ப்ரஸாத விநியோகம் நடத்தினபிறகு, ஜனார்த்தனர் ஏகநாதரை நோக்கி, "உனக்குத் தகுதியான உதவியொன்று கிடைத்ததைக் குறித்துச் சந்தோஷிக்கிறேன்; ஆனால் அவர்க்கும் உனக்கும் பிரிவு நேரிடாமலிருக்கப் பாண்டுரங்கப் பெருமானை ப்ரார்த்திக்கிறேன்" என்றார். அப்போது, ஏகநாதர் தன் ஸஹபாடியை நோக்கி, "உமது ஊர் யாது? பேர் யாது?" என்று வினவ, ஸஹபாடியானவர் "எனக்கு ஊரென்றொன்றில்லை யானாலும் நல்லவரிருக்குமிடமே யெனக்கு ஊராகக்கொண்டு வாசம் பண்ணுவேன், என் பேர் விட்டலன், உம்மைப்போன்ற சாதுவை யெங்குங் கண்டிலேன், ஆகையால் உம்மை யடுத்திருக்கிறேன்" என்று சொன்னவுடனே, "ஏகநாதர், மட்டில்லாத பெரு மகிழ்ச்சியை யடைந்து, "அப்படியே உமது விருப்பம் போல என்னிடத்தில் எந்நாளும் இருக்கக்கடவீர்" என்று சொல்ல, நாலுநாள் தங்கியிருந்து, ஏகநாதரை இங்கேயிருக்கும்படி நியமித்து ஜனார்த்தனர் போய்விட்டார்.

அப்பால் ஏகநாதர், தினந்தோறும் ஹரிகீர்த்தனங்களை விரும்பிப் பாடி அன்போடு பகவானைத் தோத்திரம் பண்ணிக்கொண் டிருக்குங் காலத்தில், பண்டரிபுரத்திலுள்ள ஒரு வேதியன் விடோபாவாகிய பகவானது சகுணவுருவைக் காணவேண்டுமென்கிற எண்ணத்தோடு தினந்தோறும் சந்த்ரபாகா நதியில் நீராடி, ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்துவந்தான். அவனுடைய பக்திக்குப் பாண்டுரங்கப் பெருமான் மகிழ்ந்து அவன் கனவில் தோன்றி, "ஓ வேதியனே! நீ என் அருளுருவைத் தரிசிக்க விரும்புவாயானால், ப்ரதிஷ்டான நகரத்தை யடைந்து, ஏகநாதர் ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்யும்போது, ஸஹபாடியாய் அவருக்குப் பின்பு நிற்பேன், அங்கே வந்து என்னைக் காணக்கடவாய்" என்று சொன்னார். அவ்வேதியன் விழித்து, ஆச்சரியப்பட்டு, அந்த ப்ரதிஷ்டான நகரத்தை யடைந்து, ஏகநாதர் கதைசெய்யுங் காலம் சம்பவித்தவுடனே, அவ்விடத்திற் போய், ஏகநாதருக்குப் பின்னே நின்ற ஸஹபாடியைக் கண்டுவணங்க, அவ்வுருவம் நீங்கி, சங்கசக்ராதிகளைத் திருக்கரத்தில் உடையவனாகிய பகவான் எதிரேவந்து நின்றார். நின்ற பகவானை, ஏகநாதரும், அவர் கதா காலக்ஷேபத்துக்கு வந்த மற்றவர்களும் கண்டு, ஜயஜய வென்கிற பேரொலியோடு சாஷ்டாங்கமாக வணங்கித் தோத்திரம் பண்ணினார்கள்; உடனே பகவானும் மறைந்துபோனார். வந்த வேதி

யனும் மற்றவர்களும் ஏகநாதர் திருவடியை வணங்கி, "விடோபாவா னவர் பன்னிரண்டு வருஷகாலமாக உம்மிடத்துக்கு வந்து, சஹபாடி யாய்ப் பாடிக்கொண்டிருந்தாரென்றால், உமது மகிமையைச் சொல்ல வல்லவர் யாவர்" என்று புகழ்ந்துரைக்க, ஏகநாதரும் "ஆம்! ஆம்! பாண்டுரங்கப் பெருமானானவர் நம்மிடத்தில் வந்து அதிக வேலை செய்து திருமேனி வாடினார்" என்று அநுதபித்து, அதின் பிறகு தம்முரை யடைந்து வாழ்ந்திருக்குங் காலத்தில், ஒருநாள் உத்தவர் என்னும் பெயருள்ள ஒரு வேதியர், ஏகநாதரிடத்துக்குவந்து வணங்கி நிற்க, இவர் அவ்வேதியரைத் தழுவிக்கொண்டு, "வந்தகாரியம் யாது" என்றுகேட்க, அவர், ஏகநாதரைநோக்கி, "நீர் உமது வாக்கால் பாகவதஞ் சொல்லக் கேட்கவேண்டு மென்னும் விருப்பத்தால் உம்மிடத்துக்குவந்தேன்" என்றுசொல்ல, ஏகநாதரும் "அப்படியேயாகட்டும்" என்று, சுபதிநம் பார்த்து ஆரம்பித்து, திநந்தோறும் நியதமாய்ப் பாகவதத்தைப் படித்து, எல்லாருக்கும் விளங்கும்படி அர்த்தம் சொல்லிக்கொண்டு வருகிறகாலத்தில், ஒருநாள், பாண்டுரங்கப்பெருமான் ஒரு வேதியனாய் வந்து, ஏகநாதரைக் கும்பிட்டுநிற்க, இவர் அப்பெருமானைநோக்கி, "உமது ஊர் யாது? பேர் யாது?" என்றுவினவ, பெருமான், தாசரை நோக்கி "நான் ஒரூரில் நிலையாயிருக்கிறதில்லை, என்பேர்கேசவன், திருத்துழாய்மாலையையணிந்த ஸ்ரீலக்ஷ்மீநாதனது வைபவத்தை விஸ்தாரமாகச் சொல்லுகிற ஸ்ரீ பாகவத புராணத்தை வாசித்து அர்த்தம் சொல்லுகிறீரென்று கேள்விப்பட்டு, அதைக் கேட்க வேண்டுமென்று வந்தேன்" என்று சொல்ல, ஏகநாதர், "சரிதான்" என்று திநந்தோறும் பாகவத புராணபடநம் செய்துவந்தார். அப்படி யிருக்குங் காலத்தில், ஒருநா ளிரவில், இரண்டு சாமத்துக்கு மேலே, தேசாந்தர வேதியர் நாலுபேர்வந்து, ஏகநாதரைக்கண்டு, "எமது மிகுந்த பசியைத் தவிர்க்கவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, இவர் தமது தேவியாகிய கிரிஜாபாயியை நோக்கி, "இந்த வேதியர் பொருட்டு விரைவாகச் சமையலாகவேண்டும்" என்றுசொல்ல, தேவியார், வருத்தத்துடனே "சமைக்க விறகில்லை" என்று சொல்ல, தமது இடத்திலிருக்கிற உத்தவர் என்னும் வேதியரையழைத்து, இந்தவீட்டைப் பிரித்து இவளுக்கு வேண்டிய விறகு கொடுக்கக்கடவை" என்றார். "அவர் வீட்டைப் பிரிக்க நெடுநேரஞ் செல்லுமே" என்றார். பிறகு ஏகநாதர், விரைந்தெழுந்து தாம் தூங்குகிற கட்டிலைப் பிளந்து கொடுத்துச் "சமைக்கக் கடவாய்" என்றார். தேவியார் அந்த விறகைக்கொண்டு, கணவர் சொற்படியே சமையல்செய்து, வந்த

வேதியரை யுண்பித்து, தாம்பூல தக்ஷிணைகளையுங் கொடுத்து, திருப்தி செய்ய, அவர்கள் ஏகநாதரிடத்திற்கு வந்து வாழ்த்தி வணங்கி விடைபெற்றுப் போனார்கள். சிலநாள் கழிந்த பிறகு, இவர் மனையில் சிரார்த்தம் ஒன்று நேரிட்டது. அதற்கு அநேக மறையோர்கள் வந்து உண்ணும்படியான எற்பாடு செய்திருந்தார். அப்போது இவருடைய மனதைச் சோதிக்கும்பொருட்டுத் திரிமூர்த்திகளும் பக்கீர்கள்போல வேஷம் பூண்டு வந்து, "எமது மிகுந்த பசியைத் தீர்க்கவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, உடனே இவர் தமது மனைவியை யழைத்து அவர்களுக்கு விரைவாக அந்நமிடச்சொல்ல, அவரும் அப்படியேயிட்டு அவர்கள் பசியை நீக்கி, தாம்பூல தக்ஷிணைகளையுங் கொடுத்து உபசரிக்க, அவர்கள் மகிழ்ந்து, "இவர் ஜாதிபேதம் நோக்காத பெருந்தன்மையுள்ளவர்" என்று சொல்லித் தமது உருவங்களை ஏகநாதருக்குக் காட்ட, அவரும் அவர்களை வணங்கித் துதித்தார். துதிக்கும்போது, அவர்கள் பக்கீர்களாகி, யவந பாஷையில் தமக் கந்நமிட்டதைக் குறித்துப் புகழ்ந்து பேசிக்கொண்டு, தமது பவள வாய்ச் சிவப்பேறும்படி தாம்பூலந்தரித்து, அங்கிருக்குஞ் சமயத்தில் இவர் வீட்டில் உண்ணும்பொருட்டு வந்த வேதியர்கள் இவர்களைக் கண்டு, "இதென்ன அநியாயம், இன்று தாழ்ந்த ஜாதியாருக்கு அந்நமிட்டாய், நீ வேதியனாகமாட்டாய்" என்று கோபத்தோடு கூடின வன்சொற்களை வழங்கிப்போய், அந்தவூர் நாட்டாண்மைக்காரனிடத்தில் இந்தச்செய்தியைச் சொன்னார்கள். அந்த அதிகாரியானவன் ஏகநாதரையழைத்து, "சாதியிலிழிந்த பகீர்களுக்குச் சிரார்த்த தினத்தில் அந்நமிடலாமோ, இது தகுமோ" என்று கேட்க, இவர், "நான் என் செய்வேன், பசித்துவந்து கேட்டார்கள், அவர்கள பசி வருத்தத்தைப் பார்த்துச் சஹிக்க முடியாமையால் அந்நமிடும்படி நேரிட்டது" என்றுசொல்லி, வேதியரைநோக்கி, "என்பிழையைப் பொறுத்தருளி, வேறே சுசியாகச் சமையலாகிக்கொண்டிருக்கிற வுணவைச் சந்தோஷமா யுண்டருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, அவர்கள் இவரை நோக்கி, "உமது பிதிரர் வந்து உண்டால் யாமும்வந்து உண்போம்" என்றார்கள். "அப்படியே செய்கிறேன் வாருங்கள்" என்று அழைத்துக்கொண்டு தமது வீட்டில் ப்ரவேசித்து, இலைகளில் அந்நமுதலானவைகளைப் பரிமாறிப் பிதிரரை வேண்டுதலும், பிதிரர் வந்து த்ருப்தியா யுண்டார்கள். அதைக்கண்ட வேதியர்கள், அதிசயித்து, இந்த ஏகநாதரை "ஸ்ரீமந்நாராயணனே இப்படி அவதரித்தாரென்று புகழ்வதன்றி வேறு விதமாய்ப் புகழ்வது தகாது" என்று

அஞ்சி, தாமும் உண்டு தாம்பூல தக்ஷிணைகளைப் பெற்றுப் போய் விட்டார்கள். அன்றிரவில், ஸ்ரீ ஹரிபஜனை செய்து கர்ப்பூரஹாரதி சமர்ப்பித்து,வந்தவர்களுக்கெல்லாம் ப்ரஸாதம் கொடுத்தனுப்பினர். பிறகு, ஒருகாலத்தில், அவ்வூரில் வாழ்வோனாகிய க்ருஷ்ணதாசன் என்னும் ஒரு வேதியன் காளியை யாராதிப்பவனாயும், அவளுடைய வரப்ரஸாதத்தால் அநேக கவிகளைச் செய்பவனாயும் இருந்தான். அவன், ஸ்ரீவால்மீகிபகவான், ஸமஸ்க்ருதத்திற்செய்த ஸ்ரீராமாயணம்போல, ப்ராக்ருதத்திற் செய்து யுத்தகாண்டம் வரைக்கும் நிறைவேறினதைச் சில வேதியர் அறிந்து வியந்து, அந்தச் செய்தியை ஏகநாதருக்கு வந்து சொல்ல, இவரும், "அவன் ஸ்ரீஹரியின் ப்ரபாவத்தையே புகழ்ந்து சொல்லுவது மிகவும் நல்ல காரியந்தான்" என்று சொல்லி மனமகிழ்ந்திருக்க, ஒருநாள், நடுராத்ரியில், க்ருஷ்ணதாசன் கனவில்காளியானவள்வந்து, "நாளை உதயத்தில்உனக்கு மரணமுண்டாகும்" என்றுசொல்லிமறைய,உடனே க்ருஷ்ணதாசன் விழித்தெழுந்து, "நாம் ஆரம்பித்துச் செய்து வருகிற கிரந்தம் முடிவதற்கு முன்னே நமக்கு மரணம் நேரிடுவதற்குக் காரணம் யாதோ, அதைக் கண்டறிய வேண்டும், இந்த விஷயத்தில் ஏகநாதரிடத்திற் போய்க் கலந்து யோசிப்பதே நல்லகாரியம்" என்றுதீர்மானித்து, தான் செய்யும் கிரந்தத்தை யெடுத்துக்கொண்டுபோய், நித்ரித்துக்கொண்டிருக்கிற ஏகநாதரையெழுப்பி, நடந்தசெய்தியைச்சொல்லி, "இந்தக்கிரந்தத்தை நீரே முடித்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க,இவர் அந்த க்ருஷ்ணதாசன்கொண்டுவந்த கிரந்தத்தை வாங்கிப்பார்த்து, "கவிகள் மிகவும் நேர்த்தியாயிருக்கின்றன, முழுதும் ஒருவர் வாக்காகவேயிருந்தால் அழகாயிருக்கும். ஆகலால், நீரே பூர்த்தி செய்யக்கடவீர். இந்த க்ரந்தம் பூர்த்தியாகிற வரைக்கும், உமக்கு மரணபயம் வேண்டியதில்லை, போம்" என்று சொல்ல, அவன் மிகவும் மனமகிழ்ச்சியோடு இவர் திருவடியை வணங்கி விடைபெற்றுத் தன் வீட்டுக்கு வந்து, விடியுமுன்னே கிரந்த பூர்த்திசெய்து மகிழ்ந்திருந்தான்.

அப்பால், கருநாடக தேசத்தில், மிகுந்த தநவானாகிய ஒரு வணிகன், பண்டரிநாதனுக்கு அன்பனாகியும், மிகுந்த தருமாத்மாவாகியும் இருந்தான். அவன் விடோபாவுக்குச் சமானமான சுவர்ண விக்ரஹத்தைச் செய்து, பிரதிஷ்டை செய்யத்தகுந்த சுபமுஹூர்த்தமும் பார்த்து அமைத்திருந்தான். அக்காலத்தில், ஒருநாள் இரவில்; அந்தவணிகன் கனவில், விடோபாவானவர்எழுந்தருளி, "தேவகிரியிலிருக்கிற ஏகநாதரிடத்தில் போய், இந்த விக்ரஹங்களை அவரிடத்

தில் கொடுக்கக்கடவை, அப்படிச் செய்யாதபக்ஷத்தில் உனக்கு மிகுந்த துன்பங்கள் உண்டாகும்" என்று சொல்ல, வணிகன் விழித்தெழுந்து துன்பமடைந்திருந்து, விடிந்த பிறகு தனது கனவில் நிகழ்ந்த செய்தியை வேதியர்க்குச்சொல்ல, அவர்கள், "இந்தக்கனவின்படியே மூன்று தினமும் நிகழ்ந்ததானால் அந்த ஏகநாதரிடத்தில் சேர்த்துவிடக்கடவீர்" என்று சொன்னார்கள். அப்படியே மூன்று தினமுங் கனவு நிகழ்தலும், விக்ரஹத்தை யெடுத்துக்கொண்டு ஏகநாதரிடத்திற்குப் போய், செய்தியைச் சொல்லி யெதிரேவைத்து, மூன்று நாளுங்கண்ட கனவைச் சொல்ல, ஏகநாதர் மிகவும் சந்தோஷித்து, அந்த விக்ரஹத்தின் சௌந்தரியத்தை நோக்கி, அன்போடு அதனை மார்பிலணைத்துக்கொண்டு சொல்லுகிறார்: "ஓ பாண்டுரங்கப் பெருமானே! உன்பெருமையைப் புகழ்ந்துபேச வல்லவர் யாருளர்" என்று தோத்திரித்து, நல்ல முஹூர்த்த மாராய்ந்தமைத்துக்கொண்டு, அவ்வூரார்க்கு அறிவித்து, வரவழைத்து, அந்த விக்ரஹத்தை ஒருபக்கத்தில் ப்ரதிஷ்டைசெய்து, வெண்ணெயைக் கையிலேந்தி, "விட்டலப் பெருமானே! நீ இதனை யமுதுசெய்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்தவுடனே ஸ்ரீ கண்ணபிரானனவர் தமது செவ்வாய்திறந்து உண்ணக் கண்டவர் யாவரும்வியந்து, ஜயஜயவென்று தோத்திரம்பண்ணி ஏகநாதரையும் புகழ்ந்து நின்றார்கள். பிறகு எல்லாருங்கூடிப் பகவானை வலம்வந்து போற்ற, ப்ராஹ்மண சந்தர்ப்பணம் செய்து தக்ஷிணை தாம்பூலங்களைக்கொடுத்து அனுப்பினர். இவையாவும் வணிகன் கண்டு, விட்டலப்பெருமான் ஒருதரமாகிலும் தன்னூர்க்கெழுந்தருளி மஹோத்ஸவங் கண்டருள நினைத்து, தன் எண்ணத்தை ஏகநாதருக்கு அறிவிக்க, இவரும் அதற்கு இசைந்தவுடனே, வணிகன் தன் ஊருக்குப்போய் உத்ஸவத்துக்கு வேண்டியவைகளைச் சித்தப்படுத்திக்கொண்டு ஏகநாதருக்கு அறிவிக்க, உடனே இவர், கண்ணபிரானை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு, மங்களவாத்ய கோஷத்தோடு வணிகனிருக்கு மூருக்கு வந்தார். இவர் வரவை யெதிர்பார்த்திருந்த வணிகன் எதிர்கொண்டு வந்து சகல மரியாதைகளுஞ்செய்து அழைத்துப்போய், தான் நூதனமாகச் சித்தப்படுத்தி வைத்திருந்த ஸ்ரீ ருக்மிணி பிராட்டியார்க்கும் ஸ்ரீ கண்ணபிரானுக்கும் விசேஷ வைபவத்தோடு விவாஹமஹோத்ஸவம் நிறைவேற்றி, ப்ராஹ்மண சந்தர்ப்பணம்செய்து, ஒரு மாசத்தளவும் இடைவிடாமல் ஸ்ரீ ஹரி நாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்து, வணிகன், ஸ்ரீ கண்ணபிரானும் ஸ்ரீ ருக்மிணிபிராட்டியும் ஆகிய தம்பதிகளுக்குச் சீதந முதலிய

34

வைகளைக் கொடுக்கப் பெற்றுக்கொண்டு, அந்தத்தம்பதிகளைத் தேர் மேலேற்றிக்கொண்டு, தம்மூர்க்கு வந்து, அவர்களை அவ்விடத்தில் ப்ரதிஷ்டைசெய்து ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டு வாழ்ந்திருந்தார்.

ஏகநாதர் இப்படி வாழ்ந்திருக்கும் காலத்தில், ஒருநாள் உத்தவரை நோக்கி, "நான் பண்டரிபுரம் போய் விட்டலப்பெருமானைச் சேவித்து வரவேண்டும், நான்போய் வருகிற வரைக்கும், இவ்விடத்தில் நூதநமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்ட விட்டலப்பெருமானைப் பூசித்துக்கொண்டிரும்" என்று சொல்லிப் புறப்பட்டு ஹரிதாசர்களோடுங்கூடி ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டேபோய், சந்த்ரபாகாநதியில் நீராடும்போது, பாண்டுரங்க பகவானனவர், அர்ச்சகர்மேல் ஆவேசித்து, "எனக்கன்பரான ஏகநாதர் என்னைக் காண வேண்டுமென்று வந்து, சந்த்ரபாகாநதியில் நீராடுகிறார், அவரை நீங்கள் யாவரும் எதிர்கொண்டு, நான் புறப்பட்டால் என்னவிதமாய் மரியாதை செய்கிறீர்களோ அவ்விதமாகவே அவருக்கு மரியாதை செய்து அழைத்துவாருங்கள்" என்று, கோயிலிலுள்ள வேதியர்களுக்கு நியமிக்க, அவர்களும் அப்படியே போய் ஏகநாதரைச் சகல சம்ப்ரமத்தோடும் அழைத்துவந்து கோயிலிற் சேர்க்க, இவர் ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டே கருடஸ்தம்பத்தி னருகே வந்து நின்று பகவானைச் சாஷ்டாங்கமாக வணங்கித் தோத்திரஞ் செய்து தழுவிக்கொண்டு, பேராநந்தமடைந்து, நாலுநாள் வரைக்கும் தங்கி, பகவத்தரிசநம் செய்துகொண்டிருக்க, பகவானனவர் சதுர்த்தசி திதியில், அர்ச்சகமுகேந, ஏகநாதரைநோக்கி, "நீர் இன்று பாநுதாசர் சரித்திரத்தைக் கீர்த்தநரூபமாக விரைந்துசெய்து, அந்த கீர்த்தநங்களை என் சந்நிதியில் பாடக்கடவீர்" என்று நியமிக்கக்கேட்ட ஏகநாதர், "மஹாபாக்யம்" என்று, அன்று அஸ்தமநத்துக்குள்ளே அந்தப்பாநுதாசர் சரித்திர கீர்த்தநங்கள்செய்து, அன்றிரவில், பகவத் ஸந்நிதியில் பாடி, பகவானை மகிழ்வித்து, தீர்த்த ப்ரஸாதங்களும் லபித்துக்கொண்டு, தமது ஊருக்குப் போய்விட்டார்.

அதன்பிறகு, தமதூரில் நாள்தோறும், பகல்முழுவதும் ஸ்ரீபாகவதபுராண படநத்தையும், இரவில் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநத்தையும் இடைவிடாமல் நடத்திவந்தார். இப்படியிருக்குங்காலத்தில், ஒருநாள் விட்டலப்பெருமான் கேசவன் என்னும் பெயருள்ள ஒரு வேதிய ரூபங்கொண்டு, இவரிடத்துக்கு வந்து, "நான் இவ்விடத்தில் பன்னிரண்டு வருஷகாலமாய்த் தங்கியிருந்தேன், இனித் தீர்த்த

யாத்திரை செய்யப்போகிறேன்" எனக்கேட்டு, "எங்கேபோனாலும் மறுபடியும் நான் கண்டு சேவிக்கும்படி சேவை சாதித்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, "அப்படியே யாகட்டும்" என்று போய் விட்டார். பின்பு தினந்தோறும் இந்த ஏகநாதர் செய்யும் புராணபடனத்தையும், ஹரிநாமஸங்கீர்த்தநத்தையும் கேட்டுக்கொண்டு வெளியேயிருந்து, சத்பாவிகனும், புலையனுமாயிருக்கிற ராணு என்பவனும், அவன் மனைவியும் இவரைப் பின்தொடர்ந்து, இவர் போகும் வழி முழுதும் குப்பை போக்கிச் சுத்தப்படுத்தி, அழிவற்ற பரம்பொருளே இவரென்று மனத்திற்கொண்டு, நாள்தோறும் இவரைத் தரிசித்துவந்தார்கள். இப்படியிருக்குங் காலத்தில் ஒருநாள், அந்த ராணு என்னும் புலையன் மனைவியானவள் ராணுவை நோக்கி, "இந்த ஏகநாதர் சாக்ஷாத் பகவத் அவதாரமாதலால் ஒருநாள் இவரை நம் வீட்டில் அமுது செய்வித்தால் நாம் மோக்ஷபதத்தை யடையத் தகுந்தவர்களாவோம்" என்று சொல்ல, அவனும் "அப்படியே செய்யலாம்" என்று உடன்பட்டு, இவர் தனியாயிருக்கும்போது, வணங்கி, "ஸ்வாமீ! ஒருநாள் அடியேன் குடிசைக்கு எழுந்தருளி அமுது செய்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, "அப்படியே செய்கிறேன்" என்று இவர் ஒத்துக்கொள்ள, ராணுவென்பவன் தன் மனைவியிடத்தில் இந்தச்செய்தியைச் சொல்ல, அவள் மிகவும் சந்தோஷத்தோடு சமையல்செய்து சித்தப்படுத்தி வைத்துக்கொண்டு, "ஏகநாதரை யழைத்துக்கொண்டு வாரும்" என்று கணவனிடத்திற் சொல்ல, அவன் போய் இவரை வணங்கியழைக்க, அவன் பின்னே வந்துகொண்டிருக்கும்போது, பின்னே வருகிற வேதியர் மனம்பொறுக்காமல், இவரை நோக்கி, "நீர் புலையன் வீட்டில் உண்ணத்தகுமோ? இதைக்குறித்து உமக்குத் தண்டனை விதிக்கப்படும்" என்றார். அதைக் கேட்ட ஏகநாதர், வேதியரை நோக்கி, "காமாதிகளாகிய அரிஷட்வர்க்கத்தை வென்று ஸ்ரீ ஹரிபக்தியிற் சிறந்த இவனைப் பறையனென்று சொல்லத்தகாது, நேற்றிரவில் என்னைக் கண்டு கேட்டுக்கொண்டான், அதற்கு நானும் ஒத்துக்கொண்டேன், இந்தக் குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும்" என்றார். அதற்கு அவ்வேதியர் இசையாமல், "நீர் தண்டனை யேற்றுக்கொள்ளாதபக்ஷத்தில் உம்மைச்சாதியிலிருந்து நீக்கிவிடுவோம்" என்றுசொல்லி, இவரை யழைத்துக்கொண்டு போய், நதிக்கரையில் வைத்துப் பிராயச்சித்தம் செய்துகொண்டிருக்கக் கண்ட ராணுவென்பவன், மனம் வருந்திப்போய்த் தன் மனைவியோடு இந்தச் செய்தியைச் சொல்ல,

அவள், "இன்று ஏகநாதர் வந்து நமது வீட்டில் உண்ணுமற்போனால் உயிர்விடுவேன்" என்றாள். அதைக்கேட்ட ராணுவென்பவன், மனைவியைநோக்கி, "ஏகநாதர் கருணைக்கடலாகையால் நமது வேண்டுகோளை மறுக்கமாட்டார், அப்படி ஒருவேளை மறுத்தால் நாம் இருவரும் உயிரைவிடுவோம்" என்றுசொல்லி, ப்ராயச்சித்தம் செய்வித்துக்கொண்டு நதிக்கரையிலிருக்கிற ஏகநாதரிடத்திற்குப் போய், "தேவரீர் வரவேண்டும்" என்றழைக்க, அவரும் "வருகிறேன்" என்று சொல்ல, அவன் இவர் வருவாரென்னும் மனவுறுதியோடு வீடுசேர்ந்து இவர் வரவை யெதிர்பார்த்திருக்க, இதையறிந்த வேதியர், "நீர் முன்பு சொன்னதற்கு இப்பொழுது ப்ராயச்சித்தம் நடந்திருக்க, இன்னமும் அப்படியே சொல்லுகிறீரே" என்று இவரை இவர் வீட்டுக்கழைத்துக் கொண்டுபோய், இவரை யென்னசெய்தாலும் இவர் பொய் சொல்லமாட்டார், புலையன் வீட்டுக்குப் போவார் என்று துணிந்து, இவரை வீட்டில்வைத்துக் காவல்காத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது இந்த ஏகநாதர் தேவதார்ச்சனைசெய்து வேதியருக்கு அமுதூட்டி, தாமும் அமுது செய்து, பாகவதபுராண காலக்ஷேபத்தைத் தொடங்கும்போது, ராணுவானவன் வந்து அழைக்க, "நீ முன்னேபோ, நான் உன் பின்னே வருகிறேன்" என்று அவனுக்குத் திடஞ்சொல்லியனுப்பினார். அவன் போனபிறகு விட்டலப்பெருமானைத் தியானித்து, "பகவானே! அந்தப் புலையனுடைய மநோரதத்தைச் சீக்கிரத்தில் நிறைவேற்றவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, ஸ்ரீ லக்ஷ்மீநாதராகிய விட்டலப்பெருமானுனவர் ஏகநாதருடைய ரூபத்தைக்கொண்டு, புலையன் வீட்டுக்குப் போக, அவனும் அவன் மனைவியுமாக இவர்க்குச் சகலவிதமான உபசாரங்களையுஞ்செய்து அமுதூட்ட வுண்டனர். இங்கே காவல் காத்திருக்கும் வேதியர்கள், இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டுப் புலையன் வீட்டிற்போய்ப் பார்த்து, அங்கே ஏகநாதர் அமுதுசெய்துகொண்டிருப்பதையும், இங்கேவந்து பார்த்து, பாகவதபுராண காலக்ஷேபம் செய்துகொண்டிருப்பதையும் கண்டு, அதிசயித்து, அங்கே ஒரு ஏகநாதரும் இங்கே ஒரு ஏகநாதரும் காணப்படுகிறார்கள், ஸ்ரீ ஹரிபக்தர்களுடைய பெருமையை யறிய எமக்குச் சாத்தியப்படாது என்று வேதியரெல்லாரும் இவரை வணங்கித் தோத்திரஞ்செய்து போனார்கள்.

அதின் பிறகு, ஒருநாள் அவ்வூரில், தனக்குக் கிடைத்த ஸ்பரிசவேதிக்கல்லினுல், இரும்பு முதலானவைகளைப் பொன்னுக்கிக் குடு

ம்ப ஸம்ரக்ஷணஞ் செய்து வருகிற ஒரு வேதியன், தன் மனைவியும் புதல்வனும் இறந்துபோனதனால், இனி யிங்கேயிருப்பதனால் என்ன ப்ரயோஜநமென்று, காசியாத்திரை போகத் துணிந்து, இந்த ஸ்பரிச வேதிக்கல்லைக் களங்கமில்லாத நல்ல ஹ்ருதயத்தை யுடையவர்களிடத்தில் கொடுத்துவைத்துப் போகவேண்டுமென்றெண்ணி,யோசித்து, இந்த ஏகநாதர் நிர்மல ஹ்ருதயர், இவரிடத்தில் வைத்துப் போவோமென்று தீர்மானித்து இவரிடத்திற்கு வந்து, "நான் காசி யாத்திரை போய் வருமளவும் இந்தப் பரிசவேதிக்கல்லைப் பத்திரப் படுத்தி வைத்திருந்து, நான் வந்த பிறகு எனக்குத் தரவேண்டும்" என்று சொன்னான். அவனை இந்த ஏகநாதர் "இந்தக் கல்லின் பெருமையென்ன?" என்று கேட்க, அவன் "இரும்பு முதலானவைகளைப் பொன்னாக்குவது இதன் பெருமை" என்றான். "அப்படியானால் இருக்கட்டும், நீ யாத்திரை போய் வா" என்று சொல்லி, அந்தக் கல்லை, அவன் கண் காணும்படி நிருமாலியக் குப்பையிற் போய் விழும்படி எறிந்தார். அவன் இதைக் கண்டு, "அந்தக் கல் காணமற் போனால் நீர்தான் தரவேண்டும்" என்று சொல்லித் தீர்த்த யாத்திரைபோய்த் திரும்பி வந்து, ஏகநாதரைக் கண்டு வணங்கிக் கல்லைக் கேட்டான். இவர், "உன் கண் காண நான் குப்பையி லெறிந்தேனே, அது உனக்குத் தெரியுமல்லவா? அந்தக் குப்பையில் தேடிக் கண்டெடுத்துக்கொள்ளக் கடவாய்" என்றார். அப்படியே அவன் அந்தக் குப்பையில் தேடித் தன் கல்லைக்காணமல் மனம் வருந்தும்போது "நீர் போன பிறகு, நாள்தோறும் சேர்கிற நிருமாலியக் குப்பையை நதியிற் கொட்டிவிடுகிறோம், நதியில் போய்த் தேடினால் கிடைக்கும், போவோம் வாரும்" என்று அவ்வேதியனை யழைத்துக்கொண்டுபோய் நதியிற் குளித்து, ஒரு கைநிறைபக் கற்களை வாரிக்கொண்டு வந்து, "இவற்றுள்ளே உமது கல்லைத் தேடி யெடுத்துக்கொள்ளும்" என்றுசொல்ல, அவ்வேதியன் ஒவ்வொரு கல்லாக இரும்பில் பரிசித்துப் பொன்னானதைக்கண்டு, "எல்லாம் பரிசவேதிக் கற்களாகவே யிருக்கின்றன" என்று வியந்து, ஸ்ரீவிட்டலப்பெருமானே ஏகநாதராய் அவதரித்திருக்கிறாரென்று மனத்திற்கொண்டு, தனக்கு வேண்டிய ஒரு கல்லை யெடுத்துக்கொண்டு, இவரைப் புகழ்ந்து தன் வீட்டுக்குப் போய்விட்டான். இவர் மற்றக்கற்களை நதியிலெறிந்து விட்டு நீராடித் தமது மனையை யடைந்தார்.

அப்பால், ஒருநாளிரவில் நான்கு திருடர் வந்து மடத்திலிருந்த சில பொருள்களைத் திருடிக்கொண்டு போக வுத்தேசித்தவுடனே,

நால்வருக்கும் கண் தெரியாமல் போய்விட்டதனால், தடவிக்கொண்டே, ஏகநாதரிருக்கு மிடத்துக்கு வந்து, கண்பெற்று, ஏகநாதரைக் கண்டு வணங்கி நிற்க, இவர் அவர்களை நோக்கி, "நீங்கள் என்னகாரியமா யிங்கே வந்தீர்கள் ?" என்று கேட்க, அவர்கள், "ஸ்வாமீ! திருடும்பொருட்டு நாங்கள இங்கே வந்தோம், வந்து மடத்துப் பொருளைத் தொட்டவுடனே கண்தெரியாமற் போயிற்று, இப்போது தேவரீர் சந்நிதியைச் சேர்ந்தவுடனே கண் பெற்றோம், உம்மைப்போலப் புண்யாத்மாக்கள் இவ்வுலகத்தில் ஒருவருமில்லை, நாங்கள் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, ஸ்ரீ லக்ஷ்மீநாதராகிய பகவானுக்கு அன்பராகிய ஏகநாதரானவர், அவர்களைநோக்கி, "நீங்கள் அஞ்சவேண்டாம், நீங்கள் விரும்பும்பொருள் ஏதாயினும் இங்கே யிருக்குமானால் எடுத்துக்கொண்டு போகலாம்" என்றுசொல்ல, இவர்சொல்லும் வார்த்தையின் தன்மையைநோக்கி, "எங்களுக்கு இந்த நடுராத்திரியில் பசி மிகவும் உண்டாயிருக்கின்றது, ஆகையால் எங்கள் பசியை நீக்கி யருளவேண்டும்" என்றுவேண்ட, உடனே இவர் தமது தேவியாரைத் துயிலெழுப்பி, "இவர்களுக்கு அந்நமிடவேண்டும்" என்று நியமிக்க, அப்படியே நூதநமாகச் சமையல் செய்து அவர்களுக்கிட்டு, அவர்கள் பசியை நீக்குதலும், அவர்கள் இவரைப் புகழ்ந்து கொண்டாடிக்கொண்டு போய்விட்டார்கள்.

மற்றொருநாளிரவில் ஒரு பறையன் களவு செய்ததனால் சிறை செய்யப்பட்டு உணவில்லாமல் வருந்தி, வெளிப்பட்டு வரும்போது, பசியினால் வருந்தி நடக்கச் சக்தியில்லாதவனாய் இவர் மடத்துக்கெதிரே வந்து களைத்து விழக்கண்டு, இவர் இது என்னவென்று கிட்டி வந்து பார்த்து, மனிதனாயிருக்கக்கண்டு, "நீ ஏனெனிங்கு வந்தாய்?" என்று கேட்க, அவன் பசிக்களையால் வாய் திறவாமல், கையினால் பசி என்று குறித்துக் காட்டினான். இவர் அவன் குறிப்பை யறிந்துகொண்டு, இவன் குடல்முதல் தொண்டையளவும் உலர்ந்திருக்கும், இப்போது அந்நமுண்பித்தால் தொண்டையில் விக்கி யிறந்துபோவான் என்று, சர்க்கரை சேர்ந்த பாலை வட்டிலில் வார்த்து அவனைப் பருகுவித்தார். உடனே அவன் சோர்வு நீங்கி நல்லறிவு பெற்று, ஏகநாதரை நோக்கி, "நான் பறையன், களவு செய்த குற்றத்தால், ராஜ தண்டனைக் குட்பட்டு வருந்தி யிளைத்து உயிர் நீங்கத் தகுந்த சமயத்தில் இங்கு வந்துவிழுந்தேன், என் சோர்வை நீக்கிக் காப்பாற்றினீர், இன்னம் என் உடம்பு தேறுகிறவரைக்கும் காப்

பார்த்தினல் உமக்குப் பெரும் புண்ணியமுண்டாகும்" என்று ப்ரார்த்திக்க, "அப்படியே இங்கே யிரு" என்று சொன்னர். இதைக்கண்ட வேதியரெல்லாரும், இவர் பறையனுக்கு உபசாரம் செய்வதைக்குறித்துப் பொருதவர்களாய், இவரை நிந்தித்துப்போனர்கள். அந்தப் பறையன் நெடுநாள் இவரிடத்தில் தங்கியிருந்து, இவரது எச்சிலை யுண்டு, உடம்பைத் தேற்றிக்கொண்டு, விடைபெற்று யாத்திரையாய்ப் போய்விட்டான்.

மற்றொருநாள் இவர் நீராடிவரும் வழியிலுள்ள ஒரு அரசமரத்திலிருந்த ஒரு ப்ரஹ்மரக்ஷஸு, இவருக்கெதிரே வந்து நின்று வணங்கி, "நீர் செய்த அந்நதானத்தின்பலன் மலைபோலக் குவிந்திருக்கிறது, அதில் ஒரு பறையனுக்குச் செய்த அந்நதான பலத்தை யெனக்குத் தந்தால், நான் என் பூர்வரூபம் பெறுவேன்" என்று ப்ரார்த்திக்க, "அப்படியே தந்தேன்" என்றார். உடனே அந்த ப்ரஹ்மரக்ஷஸு தன் பூர்வரூபம் பெற்று ஏகநாதரை வணங்கிச் சென்றது. முன்னே யிவரை நிந்தித்துப் போன வேதியர்கள் இந்தச் செய்தியைக் கண்டு, அஞ்சிவந்து இவரைத் தோத்திரஞ் செய்து போனர்கள்.

அதின் பிறகு, வடமொழிப் பாகவதத்தை ப்ராக்ருதத்தில் உரையோடும், ஹஸ்தாமலகம் என்னும் நூலை அப்படியே உரையோடும், சுகாஷ்டகத்தை அப்படியே உரையோடும், இன்னம் அநேகமான அபங்கக் கவிகளும் கீர்த்தநங்களும் செய்து உலகத்தில் பரவச் செய்ய, இவரது ப்ரபாவத்தைக் கேட்ட அநேகமான அறிஞர்கள் மிகவும் சந்தோஷித்தார்கள். ஒரு வேதியன், இவர் செய்த பாகவத டீகாவைப் பெற்றுத் தினந்தோறும் பாராயணஞ் செய்பவனயிருந்து, பிறகு காசியாத்திரை போனன். அவ்விடத்தில் கங்கா ஸ்நாநஞ்செய்து மணிகர்ணிகா கட்டத்தில் உட்கார்ந்து பாராயணஞ் செய்துகொண்டிருக்க, அங்கே, மஹாவித்வானகிய ஒரு சந்நியாசியின் சீடரிருவர் நீராடவந்து இதைக்கேட்டு, "இது மிகவுஞ் சுவையுடைத்தாயிருக்கின்றது, இது யார் செய்தது?" என்று கேட்க, வேதியன், "தேவகிரியிலுள்ள ஏகநாதர் என்னும் மஹாத்மா செய்தது" என்று சொல்ல, அந்தச் சீடர்கள், "இது உலகில் பரவுமானல், வடமொழிப் பாகவதத்தை ஒருவருந் தேடமாட்டார்கள்" என்று தீர்மானித்துக் கொண்டு, தமது ஆசானகிய சந்நியாசியினிடத்திற்போய் இந்தச் செய்தியைச் சொல்ல, அவன் கோவங்கொண்டு, "அந்த க்ரந்தம் செய்தவனை யழைத்து வாருங்கள்" என்று ஒரு கடிதமெழுதி யனு

ப்ப, அந்த இரண்டு சீடரும் கொண்டுபோய்க் கொடுக்க, ஏகநாதர் படித்துப் பார்த்துக்கொண்டு, தமது சீடராகிய உத்தவரை யழைத்து, "நான் காசியாத்ரை செய்து வருமளவும், நீர் தேவதார்ச்சனை முதலியவும் நடப்பித்துக்கொண்டிருக்கக்கடவீர்" என்று சொல்லிப் புறப்பட்டுப்போய், கங்கையில் நீராடி, பகவதாராதநம் செய்து யோகநிஷ்டையில் எழுந்தருளியிருந்தார். கடிதங் காட்டி இவரை யழைத்துவந்த சீடர்கள் மடத்திற் போய்த் தமது ஆசானுக்கு இவரது வரவைத் தெரிவிக்க, அவன், "இவரை மடத்திற்கு அழைத்துக்கொண்டு வந்து வைத்திருங்கள்" என்றுசொல்லிவிட்டு, முந்நூறு சீடரோடு பிச்சைபெற்று வரப்போனான். சீடர் இருவரும் ஏகநாதரை யழைத்து வந்து மடத்தில் வைத்துக்கொண்டிருந்தார்கள். பிறகு சந்நியாசி வரும் வழியில் எதிரேபோய்ச் சொல்ல, அவன் சீடர் முகத்தை நோக்கி, "முன்னோர் க்ரந்தத்தின் மஹிமையைக் கெடுத்தவனை, ஒவ்வொருவரும் ஐயைந்து குத்தாய் ஓங்கிக் குத்துங்கள், நான் இதோ உங்கள் பின்னாலே வருகிறேன், நீங்கள் முன்னே போங்கள்" என்று சொல்ல, அப்படியே செய்வோமென்று போகிறவர்களில் சிலர், "நமது ஆசான் சொன்னபடியே செய்வோமானால் அவனுயிர் நீங்கும், அதனால் நமக்குக் கொலைப்பாவம் சம்பவிக்கும், ஆதலால் அவனுடைய தன்மையை யாராய்ந் தறிந்து, பிறகு செய்யத் தருந்ததைச் செய்வோம்" என்று ஏகநாதரிடத்துக்குப் போக, அவர் இவர்கள் கண்களுக்கு, சாக்ஷாத் விட்டலப்பகவானாகவே தோன்றக் கண்டு, திகைத்து, பயபக்தியோடு ஏகநாதரது திருவடியை வணங்கித் தோத்திரம்பண்ணி, ஸ்ரீ விட்டலப்பெருமானையும் பலவாறு புகழ்ந்து நின்றார்கள். இந்தச் செய்தியைச் சிலர் போய்ச் சந்நியாசிக்குச் சொல்ல, சந்நியாசி முன்னிலும் கோபம் அதிகரிக்கப்பெற்றவனாய், தனது ஆசநத்துக்குத் திரையிட்டு யறைக்கச்சொல்லி, ஒருவனையனுப்பி, மறைத்த பிறகு, அந்த ஆசநத்தில் தான்போயிருந்து, அதட்டி, "ஏகநாதா! உத்தமமான மறையோர் குலத்துதித்து, சந்நியாசமடைந்த நான், உன்கபட வித்தையைச் சோதித்துத் தண்டித்தோட்ட வந்தேன்" என்று சொல்ல, ஏகநாதர், "ஸ்வாமீ! அடியேன் சிறுபாலகன், அடியேனை யழைத்து முகங்காட்டாமல், திரைக்குள்ளேயிருந்து, கோபித்துப்பேசும்படி, யான்செய்த குற்றம் யாதாயினும் உளதானால் பொறுத்தருளவேண்டும், தேவரீருடைய திருமுகத்தைக் காணவிரும்புகிறேன்" என்று சொல்லக் கேட்ட சந்நியாசி, சாந்தகுணத்தையடைந்து, திரையை நீக்கிப்பார்

த்து, இந்த ஏகநாதர் ஸ்ரீ கண்ணபிரான் வடிவமாய்த் தோன்றக்கண்டான். கண்டு, மிகவும் பயந்து, ஆச்சரியமடைந்து, ஏகநாதரை வணங்கி, "ஸ்ரீ கண்ணபிரானே, அடியேனைத் தொண்டுகொள்ளவோ வந்தாய்" என்று துதித்துநிற்க, ஸ்ரீ கண்ணபிரான் உருவம் மாறி, முன்போல ஏகநாதராய் விளங்கக்கண்டு, "ஸ்ரீபரந்தாமனே இப்படிஉலகத்தார் ஈடேறும்பொருட்டு அவதரித்தார்" என்று நிச்சயித்து, அருகில் வந்து திருவடியைப் பிடித்துக்கொண்டு, "அவிவேகியாகிய அடியேனுடைய குற்றத்தை மன்னித்தருளவேண்டும்" என்று நிலத்தின்மேல் கிடக்க, ஏகநாதர் அந்தச் சந்நியாசியைத் தூக்கியெடுத்து, "ஆசிரமத்தால் உயர்ந்த நீர் என்னைப் பணியத்தகுமோ" என்று உபசார வார்த்தைகள் சொல்லி, "இரும்" என்று சொன்னர். அப்போது சந்நியாசியானவன் இவரைநோக்கி, "ஸ்வாமீ ! தேவரீர் திருவாக்கினுல் ஸ்ரீ பாகவதத்தைக் கேட்கவிரும்புகிறேன்" என்று ப்ரார்த்திக்க, அப்படியே ஏகநாதரும் ஸ்ரீ பாகவதத்தைப் படித்து வ்யாக்யாநம்செய்ய, சந்நியாசிகேட்டு ஆநந்தபரவசனுய், "தேவரீர் சிலநாள் இவ்விடத்தில் என்னேடுகூடி யிருக்கவேண்டும்" என்று வேண்ட, ஏகநாதரும் அவன் வேண்டுகோளுக்கிசைந்து அவ்விடத்திலிருக்கும்போது, இவரது ஸ்ரீ பாகவதத்தை அரங்கேற்ற வேண்டுமென்று சந்நியாசியானவன் ப்ரயத்நம் செய்யக்கண்ட அவனது சீடர்கள் அவனை நோக்கி, "ஸ்வாமீ! இந்த ஏகநாதன்செய்த பாகவதத்தைத் தேவரீர் அங்கீகரிக்கலாமா? உம்மையொத்தவர்களெல்லாம் இதைச் சிறப்பித்தீர்களானுல், வடமொழிப் பாகவதத்துக் கென்னமஹிமையுண்டு?" என்று கேட்க, சந்நியாசி அவர்களை நோக்கி, "நானும் உங்களைப் போலவே அதை அநாதரித்து, நீரி லெறியலாமென் றெண்ணியிருந்தேன். அவரைக் கண்டபோது, அவர் ஸ்ரீகண்ணபிரானது திருவுருவாகவே சேவை தந்தருளினுர். ஆகையால் சாக்ஷாத் பகவதம்ஸமே யென்று துணிந்து அவரை வணங்கினேன், நீங்களும் அவர் விஷயத்தில் அபசாரப்படவேண்டாம்" என்றுசொல்ல, அவர்கள் அவன் சொல்லையும் லக்ஷ்யம் பண்ணுமல் ஏகநாதரிடத்திலிருந்த புத்தகத்தை வலிந்தெடுத்துக் கொண்டுபோய் நதியிலெறிந்து விட்டார்கள். அப்போது அந்தப் புத்தகம் நீரில் விழ்வதற்குமுன்பே, கங்காதேவியானவள் தனது கங்கணக் கையை நீட்டி அன்போடு ஏற்றுக்கொண்டாள். எறிந்த வேதியர்கள் அதைக் கண்டு பயந்து, "நமது ஆசாரியர் சொன்னது மெய்யே, நாம் செய்தது பிழையேயாம்" என்று ஏகநாதரை யடைந்து அவர் திருவடியை

வணங்கி, "மூர்க்கராகிய எங்கள் பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்தார்கள். அப்பால் இவர்களிற் சிலர், ஆற்றில் நீந்திக்கொண்டுபோய் கங்காதேவியின் கையிலிருந்த புத்தகத்தைக் கைக்கொண்டு சந்நியாசியி னிடத்துக்குவந்து புத்தகத்தைக் கொடுத்து, "ஸ்வாமீ, தேவரீர் சொன்னசொல் வேதவாக்கியமே" என்று கொண்டாட, அவன், "நீங்கள் ஏகநாதருக்கு அடிமைப்படுங்கள்" என்று சொல்ல, அப்படியே அந்த வேதிய ரெல்லாரும் ஏகநாதர் திருவடியைவணங்கி, "எங்களை யீடேற்றவேண்டும்" என்றார்கள். அப்போது ஏகநாதர், சந்நியாசியையும் அவ்வேதியரையும் நோக்கி, "நீங்கள் எனக்குச் செய்யுஞ் சிறப்புக்களெல்லாவற்றையும் இந்தக் கிரந்தத்துக்குச் செய்யுங்கள்" என்று சொல்ல, அதற்கு அவர் யாவரும் மகிழ்ந்து, அந்தக் கிரந்தத்தை யானை முதுகிலேற்றி, பலவாத்யங்களும் கோஷிக்கவும், பக்தர்கள் ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டு சூழ்ந்துவரவும், சுகந்தபொடி, புஷ்பம் முதலிய பரிமள திரவியங்களை அன்பர்கள் தூவிக்கொண்டுவரவும், வழியிலிருப்பவர்கள் கர்ப்பூரஹாரதிமுதலிய வுபசாரங்களைச் செய்யவும், ஏழுநாள்வரையும் ஊர்க்கோலம்வந்து, எட்டாநாள் மடத்தைச் சேர்ந்து, ப்ராஹ்மண சந்தர்ப்பண முதலியவும்செய்து மகிழ்ந்திருந்தார்கள். அன்று இரவில், ஏகநாதர் ஸ்ரீ ஹரிநாமசங்கீர்த்தநம் செய்யக்கேட்டவர் எல்லாரும் ஆநந்தமடைந்து, ஹாரதிசெய்து, ப்ரஸாதம் லபித்துக்கொண்டு, நாலுநாளளவும் ஸ்ரீ பாகவதவிஷயமாக உத்ஸவம் நடத்தி, எல்லாரும் ஏகநாதர்செய்த ஸ்ரீபாகவதத்தையே படித்து ஆநந்திக்கலானார்கள்.

அதன்பிறகு, ஏகநாதர், சந்நியாசி முதலியோரிடத்தில் விடைபெற்றுத் தமதூருக்கு வரும்வழியில், தாசோபண்டிதர் என்னும் பெயருள்ள வேதியர், இளமைப் பருவத்திலேயே தத்தாத்ரேயரை கண்டுவணங்க நினைத்து, உறவினர் முதலியோரைவிட்டு ஒரு காட்டுக்குப்போய், சருகு முதலியவற்றைப் புசித்து, தேஹாபிமாநத்தை விட்டு, இருபது வருஷகாலம் வரைக்கும் அவரைத்யாநம் பண்ணிக்கொண்டிருக்க, அவர் இவர்மீது இரக்கங்கொண்டு தமது அருளுருவைக் காட்டியருளக் கண்டு, திவ்யசரீரம் பெற்று, அநேகமான கவிகளைச்செய்து ப்ரபலராயிருந்தார். அவர் ஏகநாதரது வைபவத்தை, முன்பே கேட்டறிந் திருப்பவராதலால் வந்து இவர் திருவடியை வணங்க, இவரும் அவர் திருவடியை வணக்கி, இருவரும் ஒருவர்க்கொருவர் தழுவிக்கொண்டார்கள். பிறகு அவ்வேதியர் இவரைத்

தமது பர்ணசாலைக்கு வரும்படி ப்ராத்தித்து, அழைத்துப்போய், சகல வுபசாரங்களும் செய்து அமுதருந்தச்செய்து, பிறகு ஸ்ரீபாகவதம் ஏகநாதர் திருவாக்கால்கேட்டு அன்றிரவில் ஹரிநாமஸங்கீர்த்தநமும் கேட்டு மகிழ்ந்தார். இப்படி ஒரு மாசகாலம் வரைக்கும் இவரை வைத்துப் பூஜித்துக்கொண்டிருக்க, இவர், க்ருஷ்ணஜயந்தி நெருங்கிவிட்டபடியால் ஊர்க்குப் போகவேண்டும், நீரும் அந்தச்சமயத்தில் அங்கு வரவேண்டும்" என்று சொல்லிப் போயினர்; போய் ஊரையடைந்திருக்க, தாசோபண்டிதரும் ஸ்ரீ ஜயந்திக்கு முன்பே வந்து சேர்ந்தார். சேர்ந்து, ஏகநாதர் மடத்து வாசற்படியருகே, தத்தாத்ரேயர், சூலத்தைக் கையிலேந்திக்கொண்டு நிற்கக்கண்டு, வியந்து வணங்கி, "ஐயனே, இங்கே யெழுந்தருளி யிருப்பதற்குக் காரணம் யாது" என்று கேட்க, அவர் இந்தப் பண்டிதரைத் தழுவிக்கொண்டு, "இந்த ஏகநாதர் பகவதம்ஸமாய் அவதரித்தவர், இவரது அன்புக்காக, இவர் மடத்து வாசற்படியிலிருந்து, இவரைச்சேவிக்க வருவோரை இவருக்குத்தெரிவித்துக்கொண்டிருப்பேன், இவருடைய தபோமஹிமையைச் சொல்ல வல்லவர் யாவர்? அநேக ஜந்மங்களில் செய்த தவப்பேற்றை யுடையவர்களுக்கேயன்றி, மற்றவர்களுக்கு இவர் தரிசநம் கிடைப்பது துர்லபம்" என்றுசொல்லி, பண்டிதரை வாசற்படியில் நிறுத்திவிட்டு, உள்ளே போய் ஏகநாதருக்கு அறிவிக்க, அவர் உடனே எழுந்து வந்து பண்டிதரைத் தழுவிக்கொள்ள, இவரும் ஏகநாதரைத் தழுவிக்கொண்டு அந்யோந்ய சம்பாஷணம் செய்தபிறகு பண்டிதரை உள்ளே அழைத்துக்கொண்டுபோய்ச் சகல உபசாரங்களோடும் அமுதுசெய்வித்து புராண காலக்ஷேபங் கேட்பித்து, அன்றிரவில் ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநஞ்செய்ய, பண்டிதர்கேட்டு மகிழ்ந்திருந்தார். இப்படி ஸ்ரீ ஜயந்தி உத்ஸவம் முடியுமளவும் அங்கிருந்து, பிறகு ஏகநாதரிடத்தில் விடைபெற்று, தமது ஊரையடைந்து யாவருக்கும் ஏகநாதருடைய வைபவத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார். ஏகநாதரும், தமது மடத்துக்குவருகிற சாதுக்களுக்கெல்லாம், அன்னம் வழங்கி, பகற்காலங்களில் ஸ்ரீ பாகவதபுராண காலக்ஷேபமும், இராக்காலங்களில் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநமும் செய்துகொண்டிருந்தார். இப்படியிருக்குங் காலத்தில், ஒருநாள் இவர் கோதாவரி நதிக்குப்போய் நீராடிவரும் வழியில், துர்மார்க்கனுகிய ஒரு துருக்கன் இவரை மதிக்காமல் எச்சிலை உமிழ்ந்தான். அது இவர்மேல்வந்து விழுந்ததைக் குறித்துக் கோபங்கொள்ளாமல், அவன் செய்த தீமையின்பொருட்டுப் பரலோ

கத்தில் தண்டிக்கப்படுவானே" என்று அவனது துர்க்கதிக்குத் தாம் மனம் வருந்தி, இவனை எப்படியாகிலும் பரிசுத்தனாக்கவேண்டுமென்று எண்ணி, மறுபடியும் போய் ஸ்நாநஞ்செய்து வந்து, தமது நித்திய கர்மாநுஷ்டாநங்களை முடித்தபிறகு, ஓர் ஆளிடத்தில் பிரசாதத்தைக் கொடுத்து அவனோடுகூடத் தாமும்போய் அந்தத்துருக்கன் வீட்டையடைந்து, "இந்தப்பிரசாதம் ஸ்ரீ பகவதர்ப்பணஞ் செய்யப்பட்டது, ஆதலால், இதனை உன் எல்லாப்பாபங்களும் நசிக்கும்பொருட்டு உட்கொள்வாயாக" என்று சொல்ல, அந்தத்துருக்கனுக்கு இவரது தரிசநமாத்திரத்தால் ஞாநோதயமானதனால், "இவர் பரிசுத்தாத்மா" என்று மனத்திற்கொண்டு, "இன்று உதயத்தில் இவர்மீது நாம் எச்சிலை உமிழ்ந்ததை மறந்து நம்பொருட்டு, அமுதேந்திக்கொண்டு வந்து கொடுத்து, நமக்கு ஹிதமான வார்த்தைகளுஞ் சொல்லுகின்றாரே, இவரைப்போல் பரமசாதுக்கள் மூவுலகங்களிலும் கிடைப்பது அருமை"என்று தீர்மானித்து, இவரது திருவடிகளில் விழுந்து வணங்கி, "அடியேன்செய்தபிழையைப் பொறுத்தருளல்வேண்டும்" என்று பிரார்த்திக்க, ஏகநாதரும் அவனை நோக்கி, "உன் குற்றத்துக்காக நீ யஞ்சவேண்டியதில்லை, இப்போது நான்கொடுத்த பகவத் பிரசாதத்தால், உன் பாபமுழுதும் நசித்துப்போயிற்று"என்று அபயங் கொடுத்துத் தமது மடத்தை யடைந்தார். அந்தத் துருக்கன் இந்தப் பகவத் பிரசாதத்தை உட்கொண்டு அதனால் மனம் தெளிவடையப் பெற்று ஸ்ரீ ஹரிபக்தனானான். பிறகு ஒருநாள் மத்தியான காலத்தில் இவர் கோதாவரி தீர்த்தமாடி வரும்போது, இவருக்கெதிரே மிகவும் சூடேறின மணலின்மேல் விளையாடவந்த ஒருகுழந்தை அகப்பட்டு, ஓடவுஞ் சக்தியில்லாமல் பதைத்து, வாய்விட்டு அழுது வருந்துவதைக் கண்டு, அந்தக் குழந்தையைக் கிட்டி, அதை எடுத்து அணைத்துத் தமது ஆடையால் வேர்வை துடைத்து, அந்தச்சிசுவை நோக்கி, "அப்பாகுழந்தாய், உன் வீடு எங்கே"என்றுகேட்க, அந்தச் சிறுவன், தன் வீடு இருக்குந் திசையைக் கையினால் காட்டினான். உடனே அந்தச்சிறுவனை எடுத்துக்கொண்டு, அவன் காட்டின திசையைக் குறித்துபோய் எதிரே தேடிக்கொண்டுவருகிற அந்தக் குழந்தையின் தாயைப்பார்த்து அவள் கையில் கொடுத்து அவள் புலைச்சி என்பதையறிந்து, மறுபடியும் நீராடிவந்து மடத்தைச் சேர்ந்தார்.

பின்பொரு காலத்தில், திரியம்பகம் என்னும் ஊர்க்கு அயலில் உள்ள ஒரு சிறு கிராமத்தி லிருப்பவனாகிய ஒருவேதியன், குஷ்டநோயால் மிகவும் வருந்தி, பலவிதமான பரிஹாரங்களாலும் அது

தீராதிருக்கக்கண்டு, "இதற்கு யாம் என் செய்வோம்! நமக்குச் சிவபெருமானேயன்றி வேறொரு துணையுமில்லை" என்று துணிந்து, பசிக்குக் கந்தமூலபலாதிகளை உண்டு, பன்னிரண்டு வருஷகாலங் கழித்து வந்தான். அப்படியிருக்கும் காலத்தில், ஒருநாள் சிவபெருமான் அவனது கனவில் வந்து, கோதாவரி நதிக்கரையில் உள்ள தேவகிரி என்னும் ஊரில், ஏகநாதர் என்னும் ஒரு ஹரிபக்தரிருக்கிறார். அவரிடத்தில் போய், அவர் மணலில் அகப்பட்டுப் பதைத்த ஒரு குழந்தையைக் காப்பாற்றின புண்ணியத்தைத் தாரப்பெறுவாயானால், உடனே உன் பிணிமுழுதும் நீங்கிப்போகும்" என்று சொல்லி மறைந்தார். உடனே வேதியன் நித்திரைவிட்டெழுந்து, தேவகிரியில், ஏகநாத ஸ்வாமிகளின் திருமாளிகைக்குப் போய், அவ்விடத்தில் அவரைக் காணாமல் தேடிக்கொண்டு கோதாவரி நதிக்கரையில் வந்துநின்று, அந்நதியில் நீராடுவோரைப் பார்த்து, "ஏகநாத ஸ்வாமிகள்என்பவர் யார்?" என்றுகேட்க, அவர்கள், இவரைச் சுட்டிக்காட்ட, வேதியன் சமீபித்து, ஏகநாதரது திருமுகத்தை நோக்கி, மனமுருகி, பலவகையாகத் தோத்திரஞ்செய்து வணங்கி, சிவபெருமான், தன் கனவில் வந்து சொன்னதையும், தான் படுகிற துன்பத்தையும், விண்ணப்பஞ்செய்ய, ஸ்வாமிகள் கிருபைகூர்ந்து, தாம், மணலிலகப்பட்டு வருந்தின குழந்தையைக் காப்பாற்றினதனால் உண்டான புண்ணியத்தை வேதியனுக்குத் தாரைவார்த்துக் கொடுக்க, உடனே அவன் பிணி நீங்கி, தேஹம் ஒளியோடு கூடிப் பிரகாசிக்கப்பெற்று, ஸ்வாமிகளை வாழ்த்தி வணங்கினான். இதைக்கண்ட வேதியரெல்லாரும், ஜயஜய கோஷஞ்செய்து, "இவருக்கு நிகராவாரொருவருமில்லை" என்று புகழ்ந்துகொண்டாடினார்கள். ஏகநாத ஸ்வாமிகளும் தமது மடத்தையடைந்து இனிதாக வாழ்ந்திருந்தார்.

அதன்பிறகு ஒருநாள், உத்தவர் என்னும் வேதியர் முதலானோர் வந்து ஏகநாதரை வணங்கி, "நீர் செய்த பாகவதத்தை யாங்கள் கேட்க விரும்புகிறோம்" என்று அன்போடு வேண்ட, அப்படியே ஏகநாதர் பாகவதஞ் சொல்லத்தொடங்கினார். அப்படித் தொடங்கின நாளில், கோதாவரி யென்னும் நதி, தன் பெண்ணுருவங்கொண்டு, காலக்ஷேபம் நடக்கும் இடத்தின் ஒரு பக்கத்தில் வந்திருந்து, தினந்தோறும் காலக்ஷேபங் கேட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்து, அங்கு வரும் பாகவதரெல்லாரும் "இந்தப்பெண்யாரோ, அறிகிலேம்" என்று காலக்ஷேப முடிவில் அவள் போகும்போது கூடவே தொடர்ந்து போய், அவள் கோதாவரியில் முழுகக்கண்டு, தங்கள் மனத்தில் அதி

சயித்து, "இந்தப் பெண்ணுருவங் கொண்டுவந்து புராண கால க்ஷேபங் கேட்டது கோதாவரி நதியே" என்று துணிந்துபோய், ஏக நாத ஸ்வாமிகளிடத்தில் இந்தச் செய்தியைச் சொல்ல, அவர் பாகவ தரை நோக்கி, "உங்கள் புண்ணியவசத்தால் கோதாவரியின் நிஜரூப த்தைக் கண்டீர்கள்" என்றுசொல்ல, அவர்கள், "எல்லாம் உமது பாக வத காலக்ஷேபத்தின் ப்ரபாவமே யல்லது வேறல்ல" என்று புகழ் ந்து, பாகவத பாராயணஞ் செய்துகொண்டிருக்குங் காலத்தில், ஏக நாதரது மடத்துக்கருகில் குடியிருப்பவனு யிருந்தும், ஸ்ரீ ஹரிநாம த்தை ஒரு காலத்திலாகிலும் சங்கீர்த்தநம் செய்யாதவனுயிருக்கிற ஒரு குடியானவனை ஏகநாதர் பார்த்து, "ஐயோ, இவன் கிடைத்தற் கரிய மாநுடதேகத்தைப் பெற்றும் அதை வீணுக்குகிருனே" என் றும், "நமது மடத்தருகி லிருந்தும் நம்மோடு கலவாமல் இப்படி வீணுய் நசித்துப்போகிருனே" என்றும் சிந்தித்து, அன்புமிகுந்து, அவனைத் திருத்தும்பொருட்டு, அவனை ஒருநாள் வழியிலே கண்டு, "குடியானவனே! உன் குடும்பத்தோடு நீ சுகமாயிருக்கிருயா" என்று வினவ, "அவன் எல்லாரும் சுகமாயிருக்கிருர்கள்" என்று தன் குடு ம்ப க்ஷேமலாபங்களைச் சொல்ல, கேட்ட ஏகநாதர், உன் குடும்ப வாழ்க்கையைக்கழிக்குங்காலத்தில், ஒரு கடிகைப்போதாயினும்சக்ர பாணியாகிய பகவான் கதையைச் சிரவணஞ் செய்யவேண்டும்" என்று வலிந்து சொல்லக்கேட்ட அவன், "எனக்கு ஒரு க்ஷணகால மாயினும் ஒழிவில்லை" என்று சொல்ல, இவர் அவனை நோக்கி, "நீ இதே வேலையா யிருக்காமற்போனுலும், வேலை செய்கிற காலத்தி லாகிலும் ஸ்ரீ ஹரியின் திருநாமத்தை மறவாமல் ஸ்மரித்துக்கொண் டிரு, அப்படி வேலைக்காலத்தில் ஒருவேளை இசையாமற்போனுலும் போகட்டும்" என்று சந்தோஷத்தோடு, ஒரு கடிதமெழுதி, அந்தக் கடிதத்தில் "ஒரு சுலோகத்தையாயினும் தெளிந்தறிவாயாக" என்று சொல்லித் தமது மடத்திற் சேர்ந்திருந்தார். அவன் அந்தச் சுலோ கத்தைப் படித்து அதின் அர்த்தசாரத்தை யறிந்து, அது மிகவும் இனிமையா யிருக்கக்கண்டு, மறுநாள் வந்து "மற்றொரு சுலோகம் எழுதித் தரவேண்டும்" என்று வேண்ட, அப்படியே யெழுதிக் கொடுத்தார். அதையும் படித்து அதின் சாரத்தை யறிந்துகொண்டு, மிகவும் ஞானவானுகி நாள்தோறும் பகலில் பாகவத காலக்ஷேபத் திலும், இரவில் ஹரிநாமஸங்கீர்த்தநத்திலும் விருப்பமுள்ளவனு யிருப்பதையறிந்த ஏகநாதர், ஸஹஸ்ரநாமத்தை யெழுதிக்கொடுத்து, "இதைத் தினந்தோறும் நீராடி, நியமமாய்ப் படநம் பண்ணக்கட

வாய்” என்று கொடுக்க, அவன் அப்படியே செய்து ஹரிதாசன் ஆனன்.

இதுநிற்க, ஏகநாத ஸ்வாமிகள் இவ்வாறு பகவத் தியானபராரா ய்க் காலங் கழிக்கையில், இவருக்கு ஒருமகள் பிறந்தாள். அவளுக்கு கோதூபாயியென்று பெயரிட்டார். அதின்பிறகு ஒருமகன் பிறந் தான், அவனுக்கு ஹரியென்று பெயரிட்டார். அதின்பிறகு ஒரு மகள் பிறந்தாள், அவளுக்குக் கங்காபாயியென்று பெயரிட்டார். இவர்களை அன்போடு வளர்த்துவந்து, பெண்களிருவருக்கும் பரு வம் வந்தவுடனே, அவர்கள் தகுதிக்கேற்ற மணவாளர்களைத் தேடி மணமுடித்துக் கொடுத்தார். பிறகு ஹரியென்னும் புதல்வர் சகல சாஸ்த்ர பண்டிதராய் ப்ரகாசிக்க, அவருக்கும் மணமுடித்து வைத்தார். அவருக்கு மூன்று மக்கள் பிறந்தார்கள். அவர்களில் இளையபிள்ளையாகிய ராகவனை இங்குவிட்டு, மற்ற இரண்டு பிள்ளை களையும், தேவியையும் அழைத்துக்கொண்டு காசிக்குப்போய் அவ் விடத்தில் வாசம் பண்ணிக்கொண்டிருந்தார். ராகவன் என்னும் இளையபிள்ளையானவர், பாட்டனருக்கு ஏவற்பணிவிடைகள் செய் துகொண்டும், இவர் செய்த கீர்த்தனங்களைப் பாடும்போது அதற் கிசையத் தாளங் கொட்டிக்கொண்டும் இவர்க்கு மிகவும் அநுகூலரா யிருந்தார். இந்தச் சிறுவாது செய்கையைக் கண்டோரெல்லாரும் “இவர் தமது பாட்டனராகிய ஏகநாத ஸ்வாமிகளுடைய பெயர் விள ங்கச்செய்தற்குத் தகுந்தவரே” என்று புகழ்ந்திருந்தார்கள். இப்படி யிருக்குங்காலத்தில் ஒருநாள், இளையவராகிய ராகவபண்டிதர், பாட் டனராகிய ஏகநாதர் திருவடியை வணங்கி, “அடியேனுக்கு ஞா னோபதேசம் செய்தருளவேண்டும்” என்று ப்ரார்த்திக்க இவருடைய பரிபக்குவத்துக்கு ஏகநாத ஸ்வாமிகள் சந்தோஷித்து, இவருக்கு ஞானோபதேசம் செய்தருளினர். அதற்குமேல் சிலநாள் கழிந்த பிறகு, ஏகநாதஸ்வாமி “நமக்கு மூப்பு வந்துவிட்டது, இனி நமது புதல்வர் நம்மிடத்தில் இல்லாதிருப்பது தகுதியல்ல” என்று ஆலோ சித்து, காசிக்ஷேத்ரத்துக்குப் போனர். இவர் வரவை யறிந்த ஹரி பண்டிதர் வந்து இவரது திருவடியை வணங்கி, தமது இருப்பிடத் துக்கு அழைத்துக்கொண்டுபோய்ச் சகலவிதமான வுபசாரங்களும் செய்து, அமுது செய்வித்து இவர் மனமகிழும்படி த்ருப்தி செய்ய, இவர் சிலநாள் அவ்விடத்தில் தங்கியிருந்து, ஒருநாள் புதல்வர் முகத் தைப் பார்த்து, “அப்பா, எனக்கு வார்த்திகப்பருவம் வந்துவிட்டத னல், இந்தச் சமயத்தில் நீ என்னைப் பிரியலாகாது, என்னிடத்தி

லேயே யிருக்கவேண்டும், ஆகலால் உன்புதல்வர் இருவரையும் இந்த க்ஷேத்திரத்தில் இருத்தி, நீ என்னுடன் வருவாயாக, எனக்கு உன்னையன்றி வேறு புதல்வர் இருக்கிறாரோ" என்றார். அதைக் கேட்ட புதல்வர், "என்னிடத்தில் பேரருளுள்ள தந்தையே! என் விருப்பத்தின்படியே நீர் செய்தால் அடியேன் உம்மோடு வருவேன்" என்றார். ஏகநாதர் "அது என்ன சொல்" என்று வினவ, புதல்வர் சொல்லுகிறார்: "நீர் பிறருடைய அந்நத்தைப் புசித்தலும், ப்ராக்ருத பாஷையிலுள்ள கிரந்தங்களை உமது வாயினுற் சொல்லுதலும் ஆகிய இச்செய்கைகளை விட்டுவிட்டால், அடியேன் உம்மோடு கூடியிருக்கத் தடையில்லை" என்றார். அதைக் கேட்ட ஏகநாதர் நகைத்து, "அப்படியே உன் இஷ்டம்போல நான் நடந்துகொள்ளுகிறேன்" என்று சொல்ல, உடனே புதல்வராகிய ஹரிபண்டிதர் இவரை யழைத்துக்கொண்டுபோய்த் தம்மூரை யடைந்து, ஆசநத்தில் இருத்தி, வடமொழியிலுள்ள ப்ரபந்த வகைகளை வினவ, அவர் வினவுக்குத் தக்க விடைசொல்லிக்கொண்டு வந்தார். நாள்தோறும் இவ்வாறே நடந்துகொண்டிருக்க, விவேகிகளெல்லாரும் இதைக்கண்டு, "இவர் தமதுகொள்கை மாறியிருப்பதற்குக் காரணம் யாது?" என்று ஆலோசித்துக்கொண்டிருந்தார்கள். இப்படி யிருக்குங் காலத்தில், அவ் வூரிலுள்ள ஒரு ஏழைப் பார்ப்பினியானவள், தன் நோய் நீங்கும்பொருட்டு, தன் குருவின் சொற்படியே, ஆயிரம் ப்ராஹ்மணருக்கு அந்நமிட்டாள். உடனே அந்த நோய் தீர்ந்துவிட்டது. சிலநாள் கழித்து மறுபடியும் அப்படியே செய்ய நினைத்துப் பொருளில்லாமையால் வருந்தி, சற்குருஸ்வாமிகளிடத்தில் வந்து வணங்கி, "ஸ்வாமீ, பொருளில்லாமையால் என் விரதத்துக்குப் பங்கம் நேரிட்டிருக்கின்றது" என்று விண்ணப்பஞ்செய்ய, சற்குருவானவர்கருணைகூர்ந்து, "பெண்ணே! வேதத்தில்சொல்லப்பட்டஉபாயமொன்றுண்டு, அது யாதென்றால், சொல்லுகிறேன் கேள்: ஒரு வேதபாடகன் நூறு பண்டிதர்க்குச் சமாநனாவான், ஒரு யாககர்த்தாவானவன் ஆயிரம் வேதபாடகனுக்குச் சமாநனாவான், ஒரு ஜிதேந்திரியன் ஆயிரம் யாககர்த்தாக்களுக்குச் சமாநனாவான், த்ரிவிக்ரமனாகிய ஸ்ரீ பகவானுடைய தாசனாயிருப்பவனொருவன் ஆயிரம் ஜிதேந்த்ரியாகளுக்குச் சமாநனாவான், அந்தத் தாசர்களிற் சிறந்தவராகிய ஏகநாதஸ்வாமிகளை யழைத்து அவரொருவருக்கு மாத்திரம் அந்நமிட்டால் உன் மநோரதங்கள் எல்லாம் நிறைவேறும்" என்று சொல்ல, அப்படியே அந்தப் பார்ப்பினி, ஏகநாதர் மடத்திற்கு வந்து

அவரை வணங்கி, தனது விரதத்தின் வரலாற்றைச் சொல்ல, இவர் அவளை நோக்கி, "என் புதல்வராகிய ஹரிபண்டிதரிடத்தில் உத்தரவு பெற்று வந்தால் நான் வருவேன்" என்றார். அப்படியே அவள் ஹரி பண்டிதரைவணங்கி உத்தரவுகேட்க, அவர் "என்தந்தையானவர் சில நாளாகப் பராந்நம் உண்பதில்லையென்று ப்ரதிஜ்ஞை செய்துகொண்டிருக்கிறார்" என்றார். பார்ப்பினி மறுபடியும் ஏகநாதரிடம் வந்து வணங்கி, "தேவரீருடைய புதல்வர் இசையவில்லை, நீரே யென் எண்ணத்தை முடித்தருளவேண்டும்" என்றாள். அதற்கு ஏகநாதர் மனமிரங்கி, தமது புதல்வர் முகத்தை நோக்கி, "அப்பா! இந்தப் பார்ப்பினியின் எண்ணத்தை முடித்தால் நலம்" என்றுசொல்ல, புதல்வர், "காசி க்ஷேத்ரத்தில் செய்த ப்ரதிஜ்ஞை வீணாயிற்றே" என்று வருந்தினார். அதைக்கண்ட ஏகநாதர், புதல்வரை நோக்கி, "நீயே போய் அவள் கொடுக்கிற அரிசிமுதலிய பொருள்களை யெல்லாம் வாங்கிக்கொண்டு அவ்விடத்திலேயே சமையல் செய்தால் அவள் கருத்தும் நிறைவேறும், நமது ப்ரதிஜ்ஞையும் கெடாது" என்று சொல்ல, புதல்வருக்கு இந்த ஏற்பாடு உசிதமாய்க் காணப்பட்டதனால் அப்படியே அவள் வீட்டுக்குப் போய், அவள் கொடுத்த பதார்த்தங்களைக்கொண்டு சமையல் செய்து சித்தப்படுத்தி வைத்துக்கொண்டு, "ஏகநாதரை யழைத்துவா" என்று பார்ப்பினியை யனுப்ப, அவள் போய் ஏகநாத ஸ்வாமிகளை யழைத்து வருகிறவழியில் ஸ்வாமிகளை நோக்கி, "அடியேன் உயர்ந்த பலகாரங்களெல்லாம் செய்வித்து வைத்திருக்கிறேன், என் கையினாலே நானேயிட, நீர் உண்டால் என் பிணி தீரும்" என்று சொல்ல, ஸ்வாமிகளும் அவளை நோக்கி, "பெண்ணே! நான் உண்ணுஞ்சமயத்தில் பலகாரங்களைப் போடக்கடவாய்" என்று சொன்னார். பிறகு வீடு சேர்ந்தவுடனே இவர்க்குச் சிறந்த ஆசநமிட்டு, சகலமான உபசாரங்களும் செய்து முடிந்த பிறகு, ஹரிபண்டிதர், தாமே எல்லாக் கறிவகைகளும் அந்நமும் தந்தைக்குப் பரிமாற, இவர் அமுது செய்திருக்குங் காலத்தில், பார்ப்பினி, பலகாரங்கள் பரிமாற, அவற்றை இவர் விரைந்துண்டார். அதைக்கண்ட புதல்வர் கோபித்து அவளைப் பார்க்க, "ஸ்வாமீ, நீர் தயைசெய்து க்ஷமித்தருளவேண்டும்" என்று வேண்ட, ஹரிபண்டிதர், பிதாவின் செய்கையைக் குறித்து அப்பால் விசாரித்துக்கொள்ளலாமென்று அடங்கியிருந்தார். ஸ்வாமிகளும் அமுதுசெய்து முடிந்தது. இவர் கை கால்கள் சுத்திசெய்துகொண்ட பிறகு, புதல்வர் இவர் உண்ட எச்சில் இலையை யெடுத்துப்போய் வெளியிலெறிந்து வந்து சுத்தி

செய்யப் போய் அவ்விடத்தில் முன்போல இலை யிருக்கக்கண்டு, அதையும் எடுத்தெறிந்து வந்து வேறோரிலை யிருக்கக்கண்டார். இப்படி யெடுத்தெறிந்து வருந்தோறும் இங்கே இலை யிருக்கக்கண்டு, பயந்து, நமது தந்தையாரைப் பகவதம்ஸமென் றறியாமற் போனேன், உலகமெல்லாம் இவரைப் புகழ்வதையும் யோசிக்காமற் போனேன் என்று தமதுகுற்றத்தைக்குறித்து அநுதபித்து, தந்தையாருடைய திருவடியை வணங்கி, "இதுவரைக்கும் கல்விச்செருக்கால் தேவரீரைமதியாமலிருந்த குற்றத்தை க்ஷமித்தருளவேண்டும்" என்று வேண்ட, ஸ்வாமிகள் கிருபைகூர்ந்து, "இந்த இலையை எடுத்தெறிந்தால் இனி வேறே இலை யிருக்காது" என்று சொல்ல, அப்படியே யெடுத்தெறிந்து, அவ்விடத்தில் வேறிலை யில்லாதிருக்கக்கண்டு அதிசயித்தார். பிறகு அந்தப் பார்ப்பினி, புஷ்பசந்த தாம்பூலாதிகளைக் கொடுக்கப் பெற்றுக்கொண்டு தமது மடத்துக்கு வரும்போது, ஹரிபண்டிதர், ஸ்வாமிகளை நோக்கி, "ஐயரே, நீர் முன்னே யெனக்குச் சொன்ன ப்ரதிஜ்ஞை வார்த்தையை விட்டு, தேவரீர் திருவுள்ளப்படியே முன்போல வர்த்திக்கலாம்"என்று ப்ரார்த்திக்க, அப்படியே ஸ்வாமியும் ப்ராக்ருத பாகவத காலக்ஷேபத்தைப் பகலிலும், ஹரிநாம ஸங்கீர்த்தநத்தை இரவிலும் நடத்திவர, ஹரிபண்டிதர் கேட்டு மகிழ்ந்திருந்தார்.

இப்படிச் சிலநாள் கழிந்தபிறகு, அவ்வூருக் கருகிலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு வேதியனிருந்தான். அவனுக்கு ஒரு ஊமைப் பிள்ளை பிறந்து ஒன்பதுவருஷம் வரைக்கும் வாய்பேசாமலிருப்பதைக்கண்ட தாயானவள் மிகவும் மன வருத்தத்தோடு அந்தச்சிறுவனை யெடுத்துக்கொண்டு ஏகநாத ஸ்வாமிகள் சந்நிதியையடைந்து காவ்ஜிஎன்னும் அந்தச்சிறுவனை அவர் திருவடியில் கிடத்தி, "இவனை வளர்ப்பதனால் எங்களுக்கு ஒரு ப்ரயோஜநமும் இல்லை. இவனை நீரே வளர்த்தால், உமக்குப் புண்ணியமும் புகழுமுண்டாகும்" என்று சொல்லி விட்டுவிட்டுப்போனாள். அப்படியே ஸ்வாமியும் அந்தச்சிறுவன்மீது அன்புசெய்ய, அவனும் நீராடல் முதலிய ஒழுக்கங்களிற் சிரத்தையுடையவனாய் மடத்துத் திருப்பணிவிடைகள் யாவும் செய்து முடித்து, சாயங்காலம் ஒருவேளை போஜநம் செய்துகொண்டிருந்தான். இப்படி யிருக்குங்காலத்தில், ஸ்ரீ ராமபிரான் ஏகநாத ஸ்வாமியின்ஏகாந்தத்தில் ப்ரத்யக்ஷமாகி, "நீ ஸ்ரீராமாயணத்தை ப்ராக்ருத பாஷையில் செய்து முடிக்கக்கடவாய்" என்றுசொல்லி மறைந்தார். அப்படியே ஸ்வாமிகள் செய்யத்தொடங்கி, யுத்தகாண்டத்தில்

நாற்பத்திரண்டத்தியாயம்வரைக்கும் செய்துமுடிந்தபிறகு, ஊமைப் பிள்ளையாகிய காவ்ஜி யென்பவரை நோக்கி, வேதியரெல்லாரையும் வருவித்து வைத்துக்கொண்டு, "எனக்குப் பரந்தாமத்தை அடைதற் குரியகாலம் நேரிட்டது, ஆகையால், நீ யுத்தகாண்டத்தின் குறையை முடிப்ப தல்லாமல், உத்தர காண்டத்தையும் செய்து முடிக்கக் கடவை" என்று நியமித்து, எழுதுகோலும் மைக்கூடும் கொடுத்தருளினர்; அன்றியும் தலைமீது கை யமைத்து அபயம் தந்தருளினர். அவன் தக்ஷணமே ஸ்ரீ ஹரிநாம ஸ்மரணைசெய்து, சுவாமிகளுக் கெதிரேயிருந்துகொண்டு, மேலே அத்தியாயஞ்செய்து படித்துக் காட்ட, அதைக் கேட்டவர் யாவரும் அதிசயித்து, "இந்த ஊமைச் சிறுவனும், ஸ்வாமிகள்போலவே பாடுகிறான், இது புதுமையாயிருக்கிறது" என்று சொல்லி மகிழ்ந்தார்கள். ஸ்வாமிகளும் தாம் பரந்தாமமடையப்போகிறேனென்று சொன்ன ப்ரஸ்தாபத்தைக் கேட்ட சாது ஜனங்களெல்லாரும் வந்துகூடினார்கள். ஸ்வாமிகளும் வழக்கம்போலவே ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்து, பகவானுக்குக் கர்ப்பூர ஹாரதி சமர்ப்பித்து, "ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநமே வேதசாரம், ஜீவகாருண்யமே சிறந்த தவம்" என்று எல்லார்க்கும் சொல்லி, கோதாவிரி நதிக்கரையில் அக்நிகாரியம் செய்துகொண்டிருக்கிற வேதியரை வணங்கி, நதி ஜலத்தில் இடையளவாகிய ஆழத்திலிறங்கி நின்று, ஸ்ரீ பகவானை ஹ்ருதயத்தி லிருத்தி வணங்கி, வாய் பகவந் நாமஸ்மரணை செய்துகொண்டே யிருக்கப் பரந்தாமத்தை யடைந்தார். உடனே சாதுஜநங்களெல்லாரும் கூடிப் பரிதபித்து, வேதத்திற் சொல்லப்பட்டபடியே, இவரது திருமேனியைக் கோதாவரி தீரத்தில், ஹரிபண்டிதரைக்கொண்டு தஹநம் செய்வித்து மேலும் செய்யவேண்டிய க்ரியைகளெல்லாம் செய்து முடித்துப்போய், மறுநாள் வந்து ஹஸ்திகளை யெடுக்க, அந்த ஹஸ்திகளின் அடியில் ஒரு அரசமரம் முளைத்திருப்பதைப்பார்த்து, ஸ்வாமிகளே அரசமரமாய் முளைத்தாரென்று ஆலோசித்து, அவ்விடத்தில் ஒரு கோயில் கட்டி, அதில் ஸ்வாமிகளின் திருப்பாதுகையைப் பிரதிஷ்டை செய்து, பூஜித்து, இரவும் பகலும் புராண காலக்ஷேபத்தையும் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநத்தையும் செய்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தார்கள் என்று சொல்லி, மேலே மாண்கோஜிபோதலே வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

ஏகநாதசுவாமிகள் சரித்திரம் முற்றிற்று.

முப்பத்தேட்டாவது

மாண்கோஜிபோதலே சரித்திரம்.

தாமணம் என்னும் பாலேகாட்டு நகரில், நான்காவது வருணத்தில் அவதரித்து, மாண்கோஜிபோதலே யென்னும் திருநாமம் பூண்டு, ஸ்ரீ ஹரிபக்தியிற் சிறந்து விளங்குவோர் ஒருவரிருந்தார். அவர் குடிப்பேர் ஜக்தாப் என்று சொல்லுவார்கள். அவர் தேவியார் திருநாமம் மமதாயி. இவர் திருவயிற்றில் ஏமாஜி யென்னும் புதல்வர் ஒருவர் அவதரித்தார். அவர்க்குத் தகுந்த பருவத்தில் மணமுடித்து வைத்தார்கள். அந்தப் பெண்ணின் பெயர் பாகீரதி யென்பார்கள். இந்த நால்வரும், உலகவாழ்வில் மிகவும் விரக்தர்களாய் இரவும் பகலும், பாண்டுரங்கப்பெருமானுடைய திருவடியை த்யாநிப்பவராயிருந்தார்கள். இவர்கள் தமது வீட்டுக்கு வேண்டியமட்டும் தநதாநியாதிகளைக் குவியல்களாகச் சேகரித்து வைத்திருப்பார்கள். இவர்களில் மாண்கோஜிபோதலே யென்பவர் ஏகாதசிகள்தோறும் ஸ்ரீ பண்டரிபுரத்துக்குத் தவறுமற் போய், ஸ்ரீ கண்ணபிரானைத் தரிசித்து, தோத்திரஞ்செய்து, கண்விழித்து, மறுநாளாகிய துவாதசியுதயத்தில், வேதியர்க்கு அந்நமிட்டு, பிறகு மறியவர்க்கும் அப்படியே செய்து, மறுநாள் பாலேகாட்டில் வந்து சேர்ந்து வாழ்ந்திருப்பார். இப்படி நெடுநாள் வரைக்கும் நடந்துவருங் காலத்தில், மேகம் காலமழை பெய்யாமையால் சிறுவிலைக் காலம் வந்து உயிர்களை வருத்த, பசிப்பிணியால் உயிர்கள் வருந்துவதை, போதலேயானவர் கண்டு, தமது தேவியாரை நோக்கி, "உலகத்துள்ள உயிர்களெல்லாம் பசிப்பிணியா லிறந்தொழிய, நாம் மாத்திரம் சுகமாயிருப்பது அழகோ! ஆதுலர்க்குச்சாலை, அறுசமயத்தார்க்குண்டி, ஓதுவார்க்குணவு, ஆவுக்குவாயுறை, சிறைச்சோறு, ஐயமிடல், தின்பண்டம் நல்கல், அறவைச்சோறிடுதல், மகப்பெறுவித்தல், குழந்தையை வளர்த்தல், குழந்தைக்குப் பாலூண்பித்தல், அறவைப் பிணஞ்சுடல், அறவைத்தூரியம், சுண்ணாம்பு, நோய்மருந்து, வண்ணான், நாவிதன், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகந்தரல், பிறர் துயர்காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடங்கட்டுவித்தல், சோலைவைத்தல், வாவிவெட்டுதல், ஆவுறிஞ்சு தறிநடுதல், விலங்கிற்குணவு, ஏறுவிடுத்தல், விலைதந்துயிர்மீட்டல், கந்யாதாநம் இந்த முப்பத்திரண்டு தர்மங்களுள்ளே நம்மா

லியன்றவளவு செய்வதல்லவா இல்லறவாழ்கைக்கு அழகு? அப்படிச் செய்பவர்களுடைய பாவங் குறைந்து மெய்ஞ்ஞானம் வளரும்; வளரவே, பிறவிநோய் நீங்கி, பாண்டுரங்க பகவானுடைய க்ருபைக்குப் பாத்திரராகலாம்" என்று சொல்லக்கேட்ட மனைவியார், "அப்படியே அந்நதானம் செய்ததேயன்றி, கோதானமும் செய்து, யாவரையும் மகிழ்வித்து, பகவத்யாநம் செய்துகொண் டிருக்குங்காலத்தில், மாண்கோஜிபோதலே யென்கிற இவர்க்கெதிரே ஸ்ரீ கண்ணபிரான் ப்ரத்யக்ஷமாகி நின்றார். கண்ட தாசரானவர், பாண்டுரங்க பகவானுடைய ஸ்ரீ பாதங்களை வணங்கினர்; பகவானும் இவர்க்குக் கிருபைசெய்து போய்விட்டார். பிறகு தொண்டரோடு கூடி, ஹரிதிநத்தில் பாண்டுரங்க பகவானைச் சேவிக்கும்பொருட்டுப் பண்டரிபுரத்துக்குப் போகும்போது, இவர் தேவியார் செலவுக்குப் பொருள் சிறிது மில்லையேயென்று மனம் வருந்தி, ஜீர்ண வஸ்திரத்தையுடுத்து, விறகொடித்து விற்றுக் கிடைக்கும் பொருளைக்கொண்டு நாளை த்வாதசியை நடத்துவோம் என்றெண்ணிக் கொண்டுபோகும் வழியில், விறகுகள் பொறுக்கிச் சுமையாகக் கட்டித் தலைமேற் சுமந்துகொண்டுபோய், பண்டரிபுரத்து வீதியில் விற்று, அதனல் கிடைத்த பொருளைக் கைக்கொண்டு, கணவரும் தாமுமாகப் பகவானை வணங்கி வாழ்த்தி, சந்த்ரபாகாநதியில் நீராடி, ஒரு வேதியனுக்கு ஒரு காசு கொடுத்துச் சங்கற்பஞ் செய்வித்து, திருத்துழாய் முதலியவை ஒரு காசுக்கு வாங்கிக்கொண்டு, சந்நிதிக்கு வந்து, விட்டலப்பெருமானைப் பூஜித்துத் தழுவிக்கொண்டு சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பித்து, அன்றிராமுழுதும் கண்விழித்து ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்து, விடியற்காலத்திலெழுந்து சந்த்ரபாகையில் நீராடின பிறகு, தாசரானவர், தமது தேவியாரை நோக்கி, "இன்று ததியாராதநத்துக்குப் பொருளில்லையே, என்ன செய்யலாம்" என்று கேட்க, தேவியார் "விறகு விற்ற பொருளில் செலவழிந்ததுபோக மிச்சமாயிருக்கிற பொருளைக்கொண்டு, அரைச்சேர் அரைத்த மா வாங்கித் துணியில் முடிந்து கணவர் கையிற் கொடுக்க, அதை அவர் கைக்கொண்டு, அறுசுவையோடு கூடிய வுணவை யுண்ணுகின்ற வேதியர்கள் இந்த அற்பமாகிய மாவை யுண்பார்களோ" என்று சிந்தித்துக்கொண்டிருக்கும்போது, இவரது கருத்தை யறிந்த பாண்டுரங்கபகவான் ஒரு விருத்தவேதிய வுருவங்கொண்டு, தலையில் பழைய குல்லாவும், கையில் தடியும், அரையில் கோவண வுடையுமாக இவர்க் கெதிரில் எழுந்தருளி, இவ

ரை நோக்கிச் சொல்லுகிறார்: "நீர் நெடுநாளாகக் கொடுக்கிற அந்நத்தை யுண்டு உம்மை யாசிர்வதித்துக்கொண்டு ஜீவித்திருக்கிறேன். இந்த வூரிலுள்ளவர்கள் செல்வருக்குக் கொடுப்பதன்றி, என்னைப் போன்ற எளியவர்களுக்கு அந்நமும் கொடுப்பதில்லை. ஆகையால் உம்மிடத்தில் எவ்வகையான உணவிருந்தாலும் ஏற்றுக்கொள்ளுகிறேன்" என்று சொல்ல, தாசரானவர், சந்தோஷித்து, "இந்த அற்பமாவை வாங்கி யுண்ணத்தகுந்தவர் இவ்வுலகில் யாருளர்? ஸ்ரீ லக்ஷ்மீநாதனே இந்தக் கிழமறையோன் வடிவங்கொண்டு வந்ததாகக்காணப்படுகின்றது" என்று நிர்மாநித்து, துணியில் முடிந்திருந்த மாவை நாணத்தோடு அவிழ்த்து வேதியர் கையில் கொடுத்துக் கை கூப்பிச் சொல்லுகிறார்: "இந்த மாவை யன்றி உமக்குக் கொடுப்பதற்கு என்னிடத்தில் வேறு பொருளில்லை, இந்த மாவை விருப்பத்தோடு அமுது செய்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, அந்த வேதியர் தாசரை நோக்கி, "நீர் மனம் வருந்தவேண்டியதில்லை, நீர் அன்போடு கொடுத்த இந்த மாவானது தேவாமிர்தத்திலும் சிறந்தது" என்று சொல்ல, தாசரானவர், "இந்த வெறு மாவை இவ்வேதியர் எப்படி யுண்பார்" என்று ஆலோசிக்கையில், மறையோர், இவரை நோக்கி, "இந்த மாவை அடை சுட்டு உண்ணுகிறேன்" என்றார். அதைக் கேட்ட தாசரானவர் மகிழ்ந்து, அடுப்பில் நெருப்பு மூட்டுதலும், வேதியர் சந்த்ரபாகையில் நீராடி, ஈர வஸ்திரத்தோடு வந்து, அந்த மாவைப் பிசைந்து அடைதட்டிக் கொண்டிருப்பதை யறிந்த ருக்மிணீ பிராட்டியார், இந்த வ்ருத்த வேதியர்க்குத் தகுதியான ஒரு கிழவியாகி, நடைதளர்ந்து, கையில் ஒரு தடி பிடித்துக்கொண்டு வந்து, இவர் பக்கத்தில் நின்று, இவர் அடை தட்டுவதைப் பார்த்து நகைத்து, "என்றும் என்னைவிட்டுப் பிரியாத நீர் இன்று பிரிந்துவந்து இந்த அடைதட்டுகிறீரே, இது என்ன புதுமை! இங்கே கொடும், நான் அடைசுட்டுக்கொடுக்கிறேன்" என்றுசொல்ல, அப்படியே கொடுத்துவிட்டு, அருகேயிருந்து பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது தாசரானவர், "இந்த மாவானது ஒருவர்க்கே பற்றாது, அப்படியிருக்க, இவ்விருவர் எப்படி யுண்பார்கள்" என்று ஆலோசித்துக்கொண்டிருக்க, அந்த வேதியக் கிழவி அடைசுட்டு வைக்க, அதைக்கண்ட வேதியர், "எம்மோடு நீரும் உண்ணவாரும்" என்று தாசரையழைக்க, இவர், "ஸ்வாமீ, நீங்களிருவரும் உண்டு மிச்சமான உச்சிட்டத்தைத் தருவீரானால் உண்பேன்" என்றுசொல்ல, வேதியரும் தமது தேவியாரோடு அமுதுசெய்யும்

போது, ஆகாசவீதியில் சித்தர், முநிவர், தேவர் எல்லாருந் திரண்டு நின்று வாழ்த்தி, "யோகம் முதலியவற்றைச் செய்வோர் அமுதுண்ணக்கடவீரென்று ப்ரார்த்தித்தால், சந்தோஷித்து அமுதுசெய்யாத பகவான், ஒரு அன்பர் வீட்டில், சிறிதும் உப்பில்லாத அடைசுட்டுத் தமது தேவியாராகிய ருக்மிணீ பிராட்டியாரோடு உண்டு அன்பரை மகிழ்விப்பதைப் பார்த்தீரோ" என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருக்க, ஈடும்எடுப்பும் இல்லாத பகவான், பிராட்டியாரோடு அமுதுசெய்த பிறகு, சேஷத்தைத் தாசர் கையிற்கொடுத்து மறைய, இவர் அந்தச் சேஷத்தைத் தமது தேவியாரோடருந்தின பிறகு, சந்நிதிக்கு வந்து, பகவான் உல்லாசமாய் நிற்பதைக் கண்டு வணங்கி, "எல்லாரும் பார்க்கும்படி வேதிய வுருவங்கொண்டு, ஸ்ரீ பெரிய பிராட்டியோ டெழுந்தருளி, அடியேன் தந்த வெறு மாவை அடைசுட்டு அமுதுசெய்துண்டு மகிழ்ந்து, சேஷத்தை யெனக்குக் கொடுத்துக் கோலாஹலம்செய்து போனையே! என் பாக்கியமே பாக்கியம்! இனி யெனக்கொரு குறையுமில்லை" என்று சொல்ல, பகவானனவர், "அநேக தநவான்கள் ததீயாராதநம் செய்யுங் காலத்தில் நானும் போவதுண்டு, என்னை அவர்கள் மதிக்கிறதில்லை, அதை நீ காணவேண்டுமானல் காட்டுகிறேன்" என்றுசொல்ல, தாசர் கேட்டு, "அப்படியே காணவிரும்பினேன்" என்று சொல்லியிருந்தார். அன்றைக்கு, ஒருசெல்வன், "ஆயிரம் ப்ராஹ்மணருக்கு இன்று அந்நதாநம் செய்கிறேன்" என்று சொல்ல, ப்ராஹ்மணர் திரண்டு வந்து அவன் வீட்டிற்கு வெளியேயிருக்க, பண்டரிநாதரும் ஒரு வ்ருத்தவேதியனகி இந்தத்தாசரையும் அழைத்துக்கொண்டு அவ்விடத்துக்குப் போனர். போய் அந்தச் செல்வன் ஆயிரம்பேரையும் எண்ணிக்கொண்டிருக்கும்போது, தாசரை வெளியிலிருத்தி, "இவ்விடத்தில் நடக்கிற காரியங்களையெல்லாம் பார்த்துக்கொண்டிரும்" என்று சொல்லிவிட்டுத் தாம் வீட்டுக்குள்ளேபோய், செல்வனைநோக்கி, "என்பசிக்கு அந்நமிடவேண்டும்" என்றார். அந்தத் தநவந்தன், "உனக்கு அந்நங்கிடையாது, நீ வெளியேபோ" என்றான். பகவானகிய வ்ருத்தவேதியர், "ஆயிரம்பேருக்கு அந்நம்போடுகிற இடத்தில் எனக்கு அந்நமில்லையென்று சொல்லுவது தகுமோ" என்றார். அது கேட்ட அந்தச் செல்வன், "ஆயிரம்பேரை யெண்ணிக்கொண்ட பிறகு நீ வந்தாய், இன்னம் உன்னைப்போல எத்தனைபேர் வருவார்கள்? அவர்களெல்லார்க்கும் கிடைக்குமா? ஆயிரம்பேருக்கு ஆகும்படியான அந்நம் சித்தமாயிருக்கிறது, அதிகமா யெங்கேயிருந்து

வரும்? நீ வெளியேபோ" என்றான். அப்படிச் சொல்லியும் இந்தக் கிழவேதியர் போகாமல், "நான் கிழவன், மிகவும் பசித்திருக்கிறேன்" என்று சொல்லி, ஒரு இலையில் உட்கார்ந்திருந்தார். இதைக்கண்ட அந்தத் தநவந்தன், தன் வேலைக்காரரை நோக்கி, "இந்த வேதியன் மிண்டுசெய்கிறான், இவனைத் தடியாலடித்து வெளியே தள்ளிவிடுங்கள்" என்றான். அதைக்கேட்ட வேலைக்காரர்கள் அப்படியே இவரை கால், கை, சிகை என்பவைகளோடு சேர்த்துப் பிடித்துத் தூக்கிக் கொண்டு வந்து வெளியேவிட்டார்கள். கிழவேதியர் மெல்ல எழுந்து உடல்வாடித் தள்ளாடிக்கொண்டு நடந்துபோய்விட்டார். அதின்பிறகு ஆயிரம் ப்ராஹ்மணருக்கும் இலைகளில் அந்நம், பலகாரவகை, பதார்த்தவகை முதலானவை பரிமாறி, "உண்ணுங்கள்" என்று தநிகன் சொல்ல, அவர்கள் உண்ணத்தொடங்கும்போது, ஒரு பெருங்காற்றுண்டாகி மண்ணை வாரிக்கொண்டு வந்து அந்நம் முதலானவைகளிற் கொட்டி எல்லாவற்றையும் கெடுத்துவிட்டது. இதைக்கண்ட வேதியர் எல்லாரும் எழுந்துபோய்விட்டார்கள். இவையெல்லாம்பார்த்துக் கொண்டிருந்த தாசரது முகத்தைப் பகவானானவர்நோக்கி, "இங்கே நடந்த செய்தியைப் பார்த்தீரல்லவா? உலகமுழுதும் ஆரவார நடத்தையையுடையதேயன்றி, ஏழைகளை ஆதரிப்பவரில்லை, நீயன்புள்ளவனாகையால், உன் அன்பின்பொருட்டு உமது மாவைவாங்கி அடைசுட்டு உண்டேன்" என்று சொன்னதைக்கேட்ட மாண்கோஜிபோதலேயானவர், "பகவானே, உமது மஹிமையைத் தெரிந்துகொள்ள வல்லவர் யார்" என்று கைகூப்பி வணங்கித் தோத்திரஞ்செய்து, விடைபெற்றுத் தாமனத்துக்குப் போகப்புறப்பட்டு, ஒருவனத்தில் போகும்போது, அதிக தாகமுண்டாகி, நீர் கிடைக்காமல் வருந்துவதையறிந்த ஸ்ரீ கண்ணபிரான், ஸ்ரீ ருக்மிணீ பிராட்டியாரோடு, இந்தத்தாசர் குலத்தார்போல வேஷம்பூண்டு, இவர் வரும்வழியில் ஒரு வீடுண்டாக்கிக்கொண்டு, இருவரும் தயிரையும் அடையையும் அமைத்து வைத்துக்கொண்டு, தாசர் தேவியாரோடு வருவதைக் கண்டு, "நீங்கள் பண்டரிபுரத்துக்குப்போய் மீண்டுவருகிற ஸ்ரீ ஹரி தாசர்களாதலால், எமது சிறு குடிலில் எழுந்தருளி, யாம் கொடுப்பதையுண்டு, எம்மைப் புனிதராக்கி, உமது ஊருக்கு எழுந்தருள வேண்டும்" என்று ப்ரார்த்திக்க, அந்தச்சொல்லைப் போதலேயானவர் கேட்டு, "இவ்விடத்தில் மநுஷ்ய சஞ்சாரமேயில்லை, இவர்கள் இவ்விடத்தில் எதிர்ப்பட்டது புதுமையாயிருக்கிறது" என்று, அவர்களைத் தொடர்ந்து அவர்கள் குடிலுக்குப்போய் அவர்கள் கொடுத்த

தையுண்டு, அயர்வு தீர்ந்து, தமதூருக்குப் போகப் புறப்பட்டுத் திரும்பிப் பார்க்கும்போது, அவர்களில்லாமல் மறைந்துபோனதனால், போதலேயானவர், நாம் தாஹத்தால் வருந்திவருகிறோமென்பதை யறிந்த பகவானே இப்படிவந்து நமது தாகத்துன்பத்தை யொழித்துப்போனாரென்று மனமகிழ்ந்து, தாமும் தமது தேவியாருமாகக் கூடி, அந்தவழி முழுதும் ஸ்ரீ பகவந்நாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டேபோய்த் தமது ஊராகிய தாமணத்தை யடைந்து இனிதாய் வாழ்ந்திருந்தார்.

இப்படி யிருக்குங்காலத்தில், ஒருநாள், இவர் தமது சோளக் கொல்லையைக் காத்துக்கொண் டிருக்கும்போது, பறவைக் கூட்டங்கள்வந்து சோளத்தைத் தின்ன, அவற்றை யோட்டாமல், அவற்றினுள்ளே பகவான் நிறைந்திருக்கிறா ரென்பதை யறிந்தவ ராகையால் அவைகளுண்டு பசியாறுவதே நன்மையாமென் றிருப்பவராயும், அவ்விடத்தில் வருவோர்களுக்குக் கதிர்களைத் தாமே பறித்துக் கொடுத்து அவர்களை மகிழ்வித்துக்கொண் டிருப்பவராயும், இடையறாமல் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண் டிருப்பவராயும் இருக்கும்போது, இவரது தேவியார் அந்தச் சோளக் கொல்லையைக் காவல் காக்கிற இவருக்கு உணவு கொண்டுபோய் இவரை யுண்பித்த பிறகு, பறவைகள் சோளத்தைத் தின்பதையும் இவர் அவற்றை யோட்டாமல் மனமகிழ்ந் திருப்பதையும் நோக்கி, கணவரைப் பார்த்து "ஐயரே! நீர் இங்கு விளைவதை யெல்லாம் பிறர்க்குக் கொடுத்துப் பாழாக்கினால் செங்கோல் செலுத்துகிற அரசனுக்கு எப்படி இறைப்பொருள் செலுத்துவீர்? நம்முடைய மனைவாழ்க்கை எப்படி நடக்கும்? இனி இங்கே யிருந்துகொண்டு இப்படி உமது கையினால் கொடுப்பீரானால் பாண்டுரங்கன்மே லாணையுண்டு" என்றுசொல்லி, தமது வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய், வீட்டில் அமைந்திருக்கும்போது நடந்ததைச் சொல்லுவோம்.

ஒருநாள், பண்டரிபுரத்துக்கு யாத்திரையாகப் போவோர் சிலர் அங்கேவர, இவர் அவர்களை நோக்கி, இவர்கள் ஸ்ரீஹரிதாசர்கள் என்று அன்பு மிகுந்து, அவர்களை வணங்கி வாழ்த்தி, "நீங்கள் இவ்விடத்துக்குவர அடியேன் என்னதவஞ் செய்திருந்தேனோ" என்று சொல்ல, அந்த வேதியர்களில் ஒருவர்வந்து இவரைக்கிட்டி நின்று, "நீர் விளைக்கும் சோளக்கதிர்களில் கொஞ்சம் கொடுத்தால் தின்று பசியாறுவேன்" என்றார். அதற்குப் போதலேயானவர் அந்த வேதியரை நோக்கி, "ஐயரே! என் மனைவி யாணையிட்டிருக்கிறாளா

தலால் என்கையால் கொடுக்கக்கூடாது, உமது கையால் வேண்டிய மட்டும் ஒடித்துக்கொள்ளும்” என்று சொன்னார்; அவர் அப்படியே செய்தார். அவரைக்கண்ட மற்ற வேதியரும் மற்றவரும் அவ்வாறே வந்துகேட்க இவரும் அப்படியே ஒடித்துக்கொள்ளும்படி உத்திரவு கொடுக்க, அவர்களும் அப்படியே ஒடித்துக் கொண்டுபோக, இப்படி யெல்லாரும் மனமகிழும்படி யிவர் உத்திரவு கொடுத்ததனால், சோளக் கொல்லையானது, முற்காலத்தில் வாநர வீரர்களால் மதுவநம் அழிந்தாற்போல அழிந்தது. வந்து கேட்பவர்களுக்கெல்லாம் இவர் உத்திரவு கொடுத்ததையும், அவர்கள் கதிரொன்றுமினு மில்லாமல் ஒடித்துப் பாழாக்கினதையும் கண்டோர் யாவரும் “இவருக்கு உணர்வழிந்துபோயிற்று” என்று பேசிக்கொண்டார்கள்; சிலர் “இவர் ப்ரபஞ்ச விஷயத்தில் விரக்தரானார்” என்றார்கள். இப்படிப் பலவாறாகப் பேசிக்கொள்ள, இவரும், மனைவி மகன் முதலானவர் கடிந்து பேசுவார்களென் றஞ்சி, வீட்டுக்கு வராமல் கொல்லையையடுத்திருக்க, அப்போது இவர் புதல்வர்வந்து சோளக் கதிர்களை யாராய்ந் தேடுக்கும்போது, அவரை நோக்கி, “அப்பா குழந்தாய், ஈக்கள் தாமுண்ணவேண்டு மென்கிற எண்ணத்தோடு சேர்த்துவைத்த தேனைப் பிறர் கைக்கொண்டு உண்பதுபோல, சத்விஷயத்தில் உபயோகிக்காத பொருளைப் பிறர் அபஹரிப்பார்கள். ஆகையால், நமது பொருள்கள் யாவும் ஸத்பாத்திரத்தில் உபயோகித்தால் ஸ்ரீ ஹரியாகிய பகவானுடைய க்ருபைக்குப் பாத்திரராகலாம், இதைத் தீர்க்கமாய் ஆலோசித்து, நீ விசனப்படாம லிருக்கக்கடவாய்” என்று சொல்லக்கேட்ட புதல்வர், சற்று நிதானித்து, இவர்சொன்ன சொற்களின் சாரத்தை யுட்கொண்டு, மனத்தெளிவடைந்தார். பிறகு பிதாவின் திருவடியில் விழ்ந்து வணங்கி, அவரை வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய், முன்புபோலவே அவரிடத்தில் அன்பு பாராட்டி, தாயார்க்கும் ஹிதவசநங்களைச் சொல்லி அவருடைய கோபத்தைத் தணிவித்தார். பிறகு மனைவியார், “பாண்டுரங்கன்மீது ஆணையிட்டிருந்தும் இவர் இப்படிச் செய்தாரே இனி வாய்தாக்காரருக்கு எழுவிராகன் கட்டவேண்டுமே, என்செய்வோம்” என்று மனம் வருந்தி யிருக்கும்போது, மறுநாள் வாய்தாக்காரரும் வந்து பணம் கேட்டார்கள். அப்போது, போதலேயானவர் வீட்டிலிருந்த மூன்று விராகனைக் கொடுத்து, “மற்ற நாலு விராகனும் நாளைக்குக் கொடுக்கிறேன்” என்றுசொல்ல, அவர்கள் போய்விட்டார்கள். போனபிறகு போதலேயானவர், அந்த வூரிலிருக்கிற நாகாயி யென்னும் பெயரு

ள்ள பார்ப்பினி யிடத்திற்குப்போய், "எனக்கு நாலுவிராகன் வேண்டும், கொடுத்தாயானால், வட்டியுடனே செலுத்துவேன்" என்றார். அவள் "நாளைக்குக் கொடுக்கிறேன்" என்றாள். அதைக்கேட்ட தாசரானவர் மனங்கலங்காம லிருந்தார். இவருடைய குணாதிசயங்களெல்லாம் அந்தப் பார்ப்பினியானவர் பிறரால் கேள்விப்பட்டு, இவர்க்குக்கொடுக்கும் பணம்மீண்டு நம்கைக்கு வராதென்று ஆலோசித்துக் கொடாமலிருப்பதே உத்தமமென்றிருந்தாள். மறுநாள் இவர் அவளிடத்துக்குப் போய்க் கேட்க, அவள், "ஒருவன் எனக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை இன்று கொடுக்கிறேனென்று சொல்லியிருந்தான், அவனை நம்பி உனக்கு நான் கொடுப்பதாகச் சொன்னேன், அவன் பொய்த்துப்போனான், நான் என்செய்வேன்" என்றாள். அதைக்கேட்ட தாசர் திரும்பி வந்துவிட்டார். வந்து, மனைவியாரிடத்தில், பணங்கிடைக்காத செய்தியைச் சொல்லிவிட்டு "மற்றொரு ஊருக்காகிலும் போய்ப் பணங்கொண்டு வருகிறேன்" என்று புறப்பட்டுப் பணம் கிடைக்கத் தகுந்த ஊருக்குப்போனார். இவர்போன பிறகு இவ்வூரிலுள்ளா ரெல்லாரும், "வாய்தாப்பணம் செலுத்த மாட்டாமல் பயந்து எங்கேயோ போய்விட்டான்" என்று பேசிக்கொண்டார்கள். இப்படியிருக்க, வாய்தாக்காரர் வந்து இவர் வீட்டு வாசற்கதவை மூடி, ராஜ சின்னமாகிய முத்திரையிட்டு, நீர், நெருப்பு முதலியவை உள்ளே ப்ரவேசிக்காமற்செய்து வருத்தினார்கள். இத்தச் செய்தியை யறிந்த பகவானாகிய ஸ்ரீகண்ணபிரான், வெட்டியான் வேடம்பூண்டு நாலுவிராகன் கைக்கொண்டு, வாய்தாக்கார ரிடத்தில் வந்து, "இது போதலே யனுப்பினது" என்று கொடுத்துவிட்டுப் போய்விட்டார். போதலேயானவர் தாம் போனவூரில் பணம் கிடைக்கப் பெற்று மறுநாள் வந்து, வாய்தாக்கார ரிடத்திற்குப் போய், "உமது பணம் இதோ, வாங்கிக் கொள்ளுங்கள்" என்று சொல்லுதலும், அவர்கள், "உமது பணத்தை உமது வெட்டியான் கொண்டு வந்து கொடுக்கப் பெற்றுக்கொண்டோம்" என்றார்கள். இவர் வீட்டில் வந்து "வெட்டியானிடத்தில் பணங்கொடுத்தது யார்?" என்றார். அவர்கள், "நாங்கள் கொடுக்கவில்லை" என்றார்கள். பிறகு அந்தவூர் வெட்டியானைக் கண்டுகேட்க, அவனும் "எனக்கு ஒன்றும் தெரியாது" என்றான். பிறகு தாசரானவர், வெட்டியா னுருவங்கொண்டுவந்து பொருள்கொடுத்துப் போனவர் பண்டரிநாதரேயென்று அறிந்து, "என்பொருட்டுப் பகவான் இப்படி வருவதற்கு, நான் எப்படிப்பட்ட தவத்தைச் செய்திருந்தேனோ" என்று சொ

ல்லி, பகவானுடைய க்ருபா விசேஷத்தைக் குறித்துப் புகழ்ந்து, ஸ்ரீபகவந் நாமஸங்கீர்த்தநம் செய்து, "என்பொருட்டு. நீ புலையன் வேடம்பூண்டு வந்தாயே, ஓ கருணைக்கடலே" என்று தோத்திரம் பண்ணிக்கொண்டிருக்கும்போது, ஸ்ரீபகவானனவர் இவருக்கு ப்ரத்ய க்ஷமானர். தாசரானவர் அந்தப் பகவானைத் தரிசித்து வணங்கி வாழ்த்துதலும், பகவானனவர் இவரைத் தழுவிக்கொண்டார். பிறகு தாசர், "பகவானே, உமக்கு இந்த நாலுவிராகன் எங்கே கிடைத் தது" என்று கேட்க, பகவானனவர், "உனக்குப் பொருள் கொடுப் பேனென்றுசொல்லித் தவறினவளுடைய பொருளைக் களவுசெய்து கொண்டு வந்தேன்" என்று சொல்ல, தாசர், கல்லென்று நகைத்து, "இப்படிச் செய்யலாமா? அந்த ஏழைப் பார்ப்பினியின் பொருளை என் களவு செய்தீர்? நான் கொண்டுவந்த பொருளை அவளுக்குக் கொடுத்து விடுகிறேன்" என்று சொல்ல, பண்டரிநாதர், "சாதுக் களுக்குக் கொடுக்காதவளுடைய பொருளை நீர் கொடுத்தால் நான் முழுவதும் அழித்துவிடுவேன்" என்று சொல்ல, தாசர், அதற்குத் தடைசொல்ல அஞ்சிச் சும்மா விருந்தார். இவர் அஞ்சித் தளர் வதைக்கண்ட பகவானனவர் இவர் கொல்லையிலுள்ள சோளத்தை நன்றாய் விளையும்படி செய்தார். அந்த விளைவைக்கண்ட அவ்வூரா ரெல்லாரும் இவரை மதித்தார்கள். மதித்ததேயன்றி "அழிந்து போன சோளக் கொல்லை இப்படி விளைந்தது என்ன புதுமை" என்றும், "இவர் பகவத்பக்தராகையால் இவர்க்கு எல்லாம் கைகூடி வரும்" என்றும் யாவரும் சொல்லி மகிழ்ந்தார்கள். போதலேயான வர் தமது களஞ்சியங்களில் நிறைந்திருக்கிற தாநியங்கள் முழுதும், கேட்டோ ரெல்லோர்க்கும் அவர்களிஷ்டப்படியே கொடுத்து மகிழ் வித்து, பின்னும் அந்தக்கொல்லையை ஸ்ரீ ஹரிநாமஸ்மரணை செய்து கொண்டே காவல் செய்திருந்தார். இப்படி யிருக்குங்காலத்தில், ராளேராசு என்னும் ஊரை யாள்வோரும், இவருக்கு அம்மானும் ஆகிய ஒருவரிருந்தார். அவர் தமது மனைவியோடும் ஸ்வர்க்கலோக த்தை யடைந்த பிறகு, அவர் புதல்வரிருவரும் துர்மார்க்கர்களாய், தமது குடும்பஸம்ரக்ஷணம் செய்யாமல் யதேச்சையாய்த் திரிந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் அப்படித் திரிவதனல், அவர்களு டைய ஊழியஞ்செய்கிறவரும், ஹாசி யென்னும் பெயருள்ளவரும் ஆகிய அம்மையார் அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றிவந்தார். அந் தக் குடும்பத்துக்கு ஒரு குறைவுமில்லாமல் காப்பாற்றி வருபவ ராகிய இந்த அம்மையார், ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநந்தை இரவும்பக

லும் இடைவிடாமற் செய்பவராயிருந்தார். இவர், சோளக்கொல்லை யைக் காவல் செய்துகொண்டிருக்கிற போதலேயானவர் செய்கிற ஸ்ரீ ஹரிபஜனையை நாள்தோறும்போய்க் கேட்டுவருவார். ஒருநாள் இவர் போதலேயின் முகத்தை நோக்கி, "ஐயரே! அடியேன் பராதீனையா யிருந்தாலும், ஸ்ரீ ஹரியின் திருவடியை யடையும்படி நீர் அடியேனைத் திருத்தியருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, போதலேயானவர், "பராதீனையா யிருக்கிற இவள் எந்தப்ரகாரம் ஸ்ரீ ஹரியின் திருவடிக் குரியவளாவாள்" என்று யோசித்து, அந்த அம்மையாரை நோக்கி, "நீ, தினந்தோறும் ஸ்ரீ பகவந்நாமஸ்மரணை செய்துகொண்டும், ஏகாதசி விரதத்தை அநுஷ்டித்துக்கொண்டும், என்னிடம் வந்து ஸ்ரீ ஹரிபஜனை செய்வதைக் கேட்டுக்கொண்டும் இருக்கவேண்டும்; இப்படி நீ செய்வதற்குத் தடைநேரிடாதிருக்கும்படி உன்னை யேவல்கொள்ளுகின்ற எஜமாநருடைய உத்திரவு பெற்றுக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்துவருவாயானல், நீ ஸ்ரீ லக்ஷ்மீநாதராகிய பகவானுடைய திருவடிக்கு உரியவளாவாய்" என்று சொன்னார். அதைக் கேட்ட அம்மையார், "அப்படியே செய்கிறேன்" என்று சொல்லித் தம் வீட்டுக்கு வந்து, இடைவிடாமல் ஸ்ரீ ஹரிநாமஸ்மரணை செய்துகொண்டும், வீட்டு வேலைகளைத் தடையில்லாமற் செய்துகொண்டும், ஏகாதசி விரதத்தை விடாமல் அநுஷ்டித்துக்கொண்டும், யஜமாநர் உத்திரவுபெற்றுப் போதலேயானவர் வாழ்கின்ற ஊருக்கு வந்து, ஏகாதசி ராத்திரிகளில் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநத்தைக் கேட்டுக்கொண்டும் இருந்தார். இப்படியிருக்குங்காலத்தில், ஒருநாள் மாயபுரத்திலிருந்து வருகிறவர்களில் ஒருவன் பாம்பு கடித்திறந்தான். அதைக் கண்டவர் யாவரும் ஒருமிக்கக்கூடி அவனைத் தூக்கிக்கொண்டுவந்து, போதலேயானவர் ஸ்ரீ ஹரிபஜனை செய்துகொண்டிருக்கிற இடத்தில் கிடத்தி, "இவர் செய்கிற ஸ்ரீ ஹரிபஜனையின் மஹிமையால் இவன் பிழைத்தாலும் பிழைக்கலாம்" என்று நம்பியிருந்தார்கள். போதலேயானவர் அவர்களை நோக்கி, "ஸ்ரீஹரிநாமம் அமுதினும் சிறந்தது, ஆதலால் நீங்களெல்லாம் கைகொட்டிக்கொண்டு, ஸ்ரீ ஹரிநாமத்தைச் சொல்லுங்கள்" என்றார். அப்படியே அவர்கள் கைகொட்டிக்கொண்டு ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்கிறகாலத்தில், "சவமாய்க்கிடக்கிற இவனும் நம்மோடு கூடிக் கைகொட்டாமலும் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்யாமலும் இருக்கிறானே" என்று பேசிக்கொண்டார்கள். அதைக் கேட்ட போதலேயானவர், அந்தப் பிணத்தை நோக்கி, "மனிதராகப் பிறந்

வரீருடைய ஊழியம் செய்துகொண்டு காலங்கழிப்பேன்" என்று வணங்கிப் பிரார்த்திக்க, அப்போது போதலேயானவர், "என்னிடத்தில் பொருளில்லையானாலும், ஸ்ரீபண்டரிநாதருடைய திருவடியைப் பற்றியிருக்கிற எனக்கு ஒருகுறையுமில்லை, என் கொல்லையைவிற்றாயினும் உன்னைக் கொள்வேன், நீ யஞ்சவேண்டியதில்லை, நீ உன்னூருக்குப்போ, நான் உன்பின்னே வருகிறேன்" என்று சொல்லக் கேட்ட ஹாசியானவர், மனமகிழ்ச்சியோடு வீட்டுக்குப் போனார். அதன்பிறகு ஸ்ரீஹரிதாசராகிய போதலேயானவர் தமதுமைத்துனரிருக்கும் ஊருக்குப் போய் அவர்களைக் கண்டு, "நீங்கள் ஹாசியை விற்கப்போகிறதாகக் கேள்விப்பட்டு அவரை நான் விலைகொடுத்து வாங்க வந்தேன்" என்றார். அவர்கள் அதைக் கேட்டவுடனே மிகவும் கோவங்கொண்டு, "அயலார்க்குச் சும்மாகொடுத்தாலுங் கொடுப்போம், நீர்விலைகொடுத்தாலும் உமக்குக் கொடுக்கமாட்டோம்" என்றார்கள். இதை வீட்டுக்குளளிருந்து கேட்ட ஹாசி, "இப்படியெல்லாம் நடப்பதற்குக் காரணம் என் ஊழ்வினையாம்" என்று மனம் வருந்துவதைத்தாசர் அறிந்து, "நீ வருந்தவேண்டியதில்லை" என்று சொல்லி, மேலும் பலபேருக்கெதிரேநின்று, "நான் விடோபாவை யனுப்பி உன்னை வாங்கும்படி செய்கிறேன்" என்று தமதூருக்குப் போனார். இவர் சொன்னதைக் கேட்டவர்கள் யாவரும் "இவர்க்கு ஸ்ரீபண்டரிநாதர் வசப்பட்டிருக்கையால் இவர்சொன்னபடியே நடக்கும்" என்று பேசிக்கொண்டார்கள். இப்படியிருக்க, இந்தத் தாசருடைய மைத்துனர் இருவரும், "இந்த ஹாசியைத் தாசர் விலைகொடுத்து வாங்குவதற்குமுன்பே நாம் பிறர்க்கு விற்றுப்போடுவோம்" என்று தீர்மானித்து, வாங்குவோரைத் தேடினார்கள். அப்போது ஒருவன் இருபத்தைந்துவிராகன் கொடுத்து வாங்குவதற்குச் சம்மதித்து வந்தான். அப்போது ஹாசியானவர் ஸ்ரீஹரியை த்யானித்து, "ஸ்வாமீ, என் குருநாதராகிய போதலேயானவர் சொன்னசொல் தவறாது என்று நான் இதுவரையில் உயிர்கொண்டிருந்தேன், அவர் இதுவரையில் வரவில்லை, உன் அடியவராகிய தாசரது சொல் பழுதாகாமற் காப்பது உனக்குக் கடமையாகும்" என்று சொல்லி, அநேகவிதமாகப் பகவானைத்தோத்திரம்செய்தார். செய்தவுடனே, ஸ்ரீபண்டரிநாதர் ஒருவேதிய வடிவங்கொண்டு வந்து, அங்குள்ளவர்களை நோக்கி, "இங்கே நடந்தசெய்தியென்ன" என்று விசாரித்துத் தெரிந்துகொண்டு, ஹாசியை நோக்கி, "உன் குருவானவர் உன்னை யழைத்துவரச்சொல்லி என்னை யனுப்பினார்" என்று சொல்ல, ஹாசியார்,

"என் குருநாதர் சொல் தவருர்" என்று சொல்லித் தம் மக்களோடு வருந்தியிருக்க,வந்தவேதியர் ஹாசியையும்அவர்மக்களையும் தம்மோடு கலப்பித்துக்கொண்டு மறைந்துவிட்டார். அப்போது அங்கிருந்த வர்களெல்லாம், "போதலேயென்கிற தமது தாசர் சொன்னசொல் தவருகாமல் ஸ்ரீபண்டரிநாதர்,ஹாசியென்பவரை அவர் புதல்வரோடு தமது திருவடியில் சேர்த்துக்கொண்டார். இது மிகவும் ஆச்சரியம்" என்று தாசரைப் புகழ்ந்து கொண்டாடினுர்கள். பிறகு, ஹாசியை வாங்கவந்து, மூஹதம் புதல்வரிடத்தில் பொருள்கொடுத்தவன் அவர்களை நோக்கி, "மூஹதம் புதல்வரே! நீர் முன்னதாக என்னிடத்தில் பொருளைப் பெற்றுக்கொண்டு, இப்போது உங்களுடைய அடிமைப் பெண்ணைக்கொடுக்காதிருக்கிறீர்கள், நீங்கள் என்னிடத்தில் வாங்கிக் கொண்ட பொருளைக் கொடுத்துவிடுங்கள்" என்று கேட்க, அவர்கள், "ஹாசியை அவள் மக்களோடு உனக்குக் கொடுத்துவிட்ட பிறகு, உனக்குப் பொருள் எப்படிவரும்? அவளை மாண்கோஜி அழைத்துக் கொண்டு போயிருக்கிருராகையால் அவரிடத்தில் பொருள் வாங்கிக் கொள்" என்ருர்கள். அதைக் கேட்டவுடனே, பொருள் கொடுத்த வன், "மாண்கோஜி அழைத்துப்போனதை நான் பார்க்கவில்லை, அவரைப் பொருள் கொடுக்கும்படி நான் எப்படிக் கேட்கலாம்" என்று பிணங்கினுன். இவ்விடத்தில் வழக்கு இப்படியிருக்க, முன் னே போன போதலேயானவர் தாம் தங்கியிருக்குமிடத்தி லிருந்து கொண்டே இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு, அன்போடு, "ஓ பாண்டுரங்கா, உன்னை அடியேன் ப்ரார்த்திப்பதற்கு முன்பே, அவ் விடத்திற்குப் போய் இந்த ப்ரகாரம் ஹாசியை யழைத்துக்கொண் டாயோ" என்று சொல்லி மனமகிழ்ந்தார். அந்தக்காலத்தில், அவ் வூருக்குச் சமீபத்திலிருக்கிற ஒரு புலையன் போதலேயானவர் இரு க்குமிடத்துக்கு நாள்தோறும் வந்து அடிவணங்கி, "எனக்கு உப தேசம் செய்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, அவர் இந்தப் புலையனை நோக்கி, "அப்பா, நான் ஒருவர்க்கும் உபதேசம் செய்வ தில்லை, நீ போய்த் தகுதியான பெரியோரை அடுத்து அவரிடத்தில் உபதேசம் பெற்றுக்கொள்" என்று சொல்லியும், அவன் இடை விடாமல் நிர்ப்பந்திக்க, இவர், அவனை நோக்கி, "நான் சொன்ன சொல்லைக் கேளாமல் நீ என்னை நிர்ப்பந்திக்கிறதினுல், நான் பண்டரி நாதருக்கு அறிவித்து அவர் விடை கொடுத்தால் நான் உனக்கு உபதேசிக்கிறேன்" என்று சொல்லி, ஸ்ரீ பாண்டுரங்கப்பெருமானை மனத்தினுல் தியானம்செய்தார். செய்தவுடனே ஸ்ரீபாண்டுரங்கபகவா

வானுனவர் அவர் மனத்தில் எழுந்தருளி, "நீ அந்தப் புலேயனுக்கு உபதேசம் செய்வதற்கு என்சம்மதியைப் பெறவிரும்பினுய், ஆனுல் அன்பு, நல்லறிவு, விரக்தி, குருபக்திமுதலான நற்குணங்களுடையவனுக்கு உபதேசிக்கவேண்டியதே, இவன் அப்படிப்பட்ட நற்குணங்களுடையவனல்ல, இவனிடத்தில் இரக்கமில்லாமை, பொய், களவு, கள்ளுண்டல், காமம், கொலே, ஆசிரியர் சொன்னசொல்லே மனத்திற் பதித்துவைக்காமல் பிறர்க்குச் சொல்லுதல் என்கிற துர்க்குணங்கள் யாவும் நிறைந்திருக்கின்றன. ஆகையால்இவனுக்குஉபதேசம் செய்யலாகாது, நீ இவனது இயற்கையை யறியவிரும்பினுல், அதற்கு ஒரு உபாயம் சொல்லுகிறேன்கேள்" என்று சொல்லுகிருர்: "நீர் உழுகிற எருதுகளில் ஒன்றை இந்தப் புலேயனேக்கொண்டு கொல்லுவித்துச் சமைத்து உமது உறவினரோடு கூடியுண்டு, 'பிறர்க்கு இந்தச் செய்தியைச் சொல்லவேண்டாம்' என்று இவனுக்கு வற்புறுத்திச் சொல்லிப்பாரும்" என்று சொல்ல, தாசரானவர் பகவானே நோக்கி, "உயிர்வதை செய்வது யாதுக்கு? உண்ணுததை உண்பது யாதுக்கு? அடியேனுக்கு இந்தக் காரியம் செய்வதில் சிறிதும் மனமில்லே" என்றுர். அதைக் கேட்ட பகவானுனவர், "ஓ தாசரே! என் சொல்லே ப்ரமாணமாகக்கொண்டு நீர் செய்வதனுல், கொலேப்பாவமும் புலாலுண்ணும் பலமும் உம்மையணுகமாட்டா. ஆதலால் நான் சொன்னபடியே நடக்கக்கடவீர்" என்று சொல்லி மறைந்துபோனுர். பிறகு மாண்கோஜி அந்தப் புலேயனே நோக்கி, "நீ என் சொற்படி நடந்தாயானுல் நீயே நல்ல மாணுக்கன் என்று மனமகிழ்ச்சியோடு உனக்கு உபதேசம் செய்வேன், அது யாதெனின், என் எருதுகளில் ஒன்றைக் கொன்று சமைக்கக் கொடுத்து, இந்தச் செய்தியைப் பிறருக்குச் சொல்லாதிருக்கக்கடவாய்" என்றுர். உடனே அந்தப் புலேயன் எருதைக் கொன்று தந்தான். அதைத் தாசரானவர் பகவான் சொற்படியே சமையல் செய்வித்துத் தமது உறவினரோடு கூடியிருந்து உண்டார். அப்போது இவரோடிருந் துண்டவர்கள், "கொலேசெய்யாத இவர் தகரைக்கொலேசெய்தது ஆச்சரியம்" என்று சொல்லிக்கொண்டு போய்விட்டார்கள். அவர்கள் போனபிறகு போதலேயானவர் புலேயனே நோக்கி, "நீ கொன்ற எருதின் எலும்பு, தோல், கொம்பு, குளம்பு முதலானவைகளேக் கொண்டுபோய் என் கொல்லேயில் புதைக்கக்கடவாய்" என்றுசொல்ல, புலேயனும் இராக்காலத்தில் அப்படியே புதைத்துவிட்டான். விடிந்தபிறகு, அந்தப் புலேயன், விருந்துண்டோர்களில் ஒருவர் வீட்டுக்குள்ளே நுழைந்து

ஒருபுறத்திலிருக்க, அந்த வீட்டுக்காரன் பார்த்து, "அடா புலையா! நீ வீட்டுக்குள்ளே வரலாமோ" என்று கேட்க, புலையன், அந்த வீட்டுக்காரனை நோக்கி, "நான் சண்டாளன், நீர் உயர்ந்த ஜாதியார்; ஆனாலும், உமக்கும் எனக்குமுள்ள பேதமென்னவோ அறிந்திலேன். நேற்று, போதலேயானவர் எருதைக்கொன்று சமையல் செய்வித்து உங்களுக்கெல்லாம் விருந்திடச் சாப்பிட்டீர்கள், இன்று என்னை யிகழ்வதற்குக் காரணம் யாதோ, சொல்லும்" என்றான். என்று சொன்னவுடனே, அந்த வீட்டிலிருந்தோ ரெல்லோரும் கூடி, "மாண்கோஜியானவர் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்ய மாட்டார்" என்றும், "இவன் சொல்லுவது பிசகு" என்றும், "தாசருடைய எருது, அது இருந்த இடத்தில் காணப்படவில்லை" என்றும்" பலவாருகப் பேசிக்கொண்டு, "தாசரிடத்துக்குப் போய் இதன் உண்மையை யறிவோம்" என்று தீர்மானித்துக் கொண்டு, புலையனை நோக்கி, "உன்சொல் உண்மையென்பதற்குச் சாக்ஷியுண்டோ" என்றுகேட்க, புலையன், "என்சொல் பொய்யாகாதபடி உங்களுக்கு உண்மையைக் காட்டுகிறேன்" என்றான். அதைக் கேட்ட எல்லோரும், "இந்தப் போதலே இந்தக் காரியம் செய்தது உண்மையாகுமானால், நாம் இவனைக் கொல்லுவோம், நமக்கு ராஜதண்டனை கிடைத்தாலும் கிடைக்கட்டும்" என்று நினைத்து, ஆயுதபாணிகளாய்ப் புறப்பட்டுப்போய்க் கண்மூடிக்கொண்டு பகவத்தியானத்திலிருக்கிற மாண்கோஜிக்கெதிரே நின்று, "உன்னைக்கொல்லவந்தோம், நீ கண்திறந்துபார்" என்றார்கள். அன்றியும் எருதைக் கொன்று விருந்துசெய்வது தகுதியாமோ? உனக்கு இந்தத் துராசாரம் எப்படி யுண்டாயிற்று?" என்று அதட்டிக் கேட்க, தாசரானவர் கண் திறவாமல், "ஓ பகவானே, உமது சொற்படி நான் செய்ததனாலுண்டான இந்த விபத்தை நீக்கியருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்துக்கொண்டிருக்க, வந்தவரெல்லோரும் இவரை நோக்கி, "எங்களை யெல்லாம் குலப்ரஷ்டராகச் செய்துவிட்டுப் பகவத்தியாநம் பண்ணுகிறீரே, இது அழகாயிருக்கிறது" என்று பழித்துப் பேசி, புலையனை நோக்கி, "நீ எருதைக் கொன்றதற்குத் தகுதியான அத்தாக்ஷி காட்டவேண்டும்" என்றார்கள். அதைக் கேட்ட புலையன் அவர்களெல்லாரையும் அழைத்துக்கொண்டுபோய், நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த தோல், எலும்பு, கொம்பு முதலியவற்றை வெளியிலெடுத்துவைத்தான். அப்படி அவன் எடுத்து வைத்தவைகளெல்லாம் ஆட்டின்தோல் முதலியவைகளா யிருக்கக்கண்டு, அவர்க

ளெல்லாரும், "புலையன் பொய் சொன்னதலால் இவனைக் கொல்லுவோம்" என்று நினைத்து, "போதலேயிடத்திலிருந்த எருது உளதோ இல்லையோ பார்ப்போம்" என்று போய், அவருடைய எருது கட்டுமிடத்திற் பார்த்து அது நிற்கக்கண்டு, "அடா புலையா! பகவத்தாசராகிய போதலேயின்மீது இப்படிப்பட்ட பழிமொழி சொன்னாயாதலால் உன்னைக் கொலைசெய்வோம்" என்று சொல்லுதலும், அந்தப்புலையன் மனம் கலங்கி, சரீரநடுக்கமடைந்து, மாண்கோஜியின் தலைவாயிலில் வந்து, ஓவென்றிரைந்து புலம்பி, "என்னை யிவர்கள் வதைக்காதிருக்கும்படி தயை செய்யவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, ஸ்ரீ ஹரிதாசராகிய மாண்கோஜியானவர் தமது உறவினரை நோக்கி, "பெரியோர்களாகிய நீங்கள் இவன் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்றார். அவர்களும் "நாங்கள் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று தாசரை ப்ரார்த்தித்து வணங்கிப் போய்விட்டார்கள். அதின்பிறகு பகவானானவர், தாசருடைய மனத்திற்றோன்றி, "புலையனது நிலையைப் பார்த்திரோ" என்றுசொல்ல, தாசரானவர், பகவானைநோக்கி, "தீநதயாளா, என்னையொருபொருளாகச்செய்து தேவரீர்செய்யும் புதுமைக்கு ஒரு எல்லையுண்டோ" என்று துதித்துநின்றார். இவர் செய்த தோத்திரத்துக்குப் பகவானானவர் திருவுளமிரங்கி நகைத்துக்கொண்டே போய்விட்டார். பிறகு தாசரும் தமது இனத்தாரோடுங்கூடி மனமகிழ்ச்சியோடு வாழ்ந்திருந்தார்.

இப்படியிருக்குங்காலத்தில், ஒருவருஷ முழுவதும் மழைபெய்யாமலிருந்து, பிறகு ஒரு மழை பெய்தது. அந்தச்சமயத்தில் தாசருடைய புதல்வர்கள் தமதுவீட்டிலிருந்த விதையைக்கொண்டுபோய் நல்லவிளைவாகு மென்றெண்ணித் தமது நிலத்தில் விதைத்தார்கள். அந்தமழை நாளுக்குநாள் அதிகமாகப் பெய்யத் தலைப்பட்டதனால் இவர்கள் விதைத்த விதையெல்லாம் அழுகிப்போயின. அதைக் கண்ட தாசரானவர் பிறரிடத்தில் கொஞ்சம் விதையைக் கடனாக வாங்கிச் சற்றே நிதானித்து விதைக்கலாமென்றெண்ணித் தமது வீட்டில் பத்திரப்படுத்திவைத்தார். அப்போது பண்டரிபுரத்தில் நடக்கப்போகிற உத்ஸவத்தைச் சேவிக்கவேண்டுமென்று பலவூர்களிலுமிருந்து புறப்பட்டுவந்த ஹரிதாசர்கள், இந்த வழியாய் வந்து, இந்தப் போதலேயானவர் வாழ்கின்ற வூரில் சேர்ந்து இவரைக் கண்டார்கள். இவர், அந்த ஹரிதாசர்களைக் கண்டு வணங்கி, "ஸ்வாமிகளே! நீங்கள் அடியேனை ஒருபொருளாக நினைத்து அடியேனிடத்

தைக்கு எழுந்தருளினீர்களே, இதற்கு அடியேன்செய்த தவம்யாதோ அறிகிலேன்" என்றார். அப்போது, வந்த ஹரிதாசர்களில் ஒருவர் இவரை நோக்கி, "இந்தச் சிறுவிலைக்காலத்தில் எங்களை ஆதரிக்க வேண்டும், உம்மைப்போலச் சர்வ ப்ராணிகளிடத்தில் அருளுள்ள வர்கள், இவ்வுலகத்தில் யாரிருக்கிறார்கள்" என்றார். அதைக் கேட்ட தாசரானவர், "இவர்களுக்கு அந்நமிட்டுபசரிக்கலாமென்றால், கடன் வாங்கி விதைக்கவேண்டுமென்று வைத்திருக்கிற விதையையன்றி வேறு தாநியம் நம்மிடத்திலில்லையே, என் செய்வோம்" என்று ஆலோசித்து, தமது புதல்வர்களைத் தனியிடத்தில் அழைத்து, "மக்களே! இந்த ஹரிதாசர்களுக்கு அந்நமிட்டால் பெரும் புண்ணிய முண்டாகும், இவர்கள் விஷயத்தில், நாம் விதைக்கவேண்டுமென்று கடன்வாங்கி வைத்திருக்கிற விதையைத்தான் உபயோகிக்க வேண் டியதாயிருக்கின்றது, உயிரில்லாத நிலத்தில் விதைவிதைத்து அதிக மாய் உழைத்தால், அந்த வுழைப்புக்குத் தகுந்த சிறுபயனை யடைய லாம், உயிருள்ள சரீரங்களில் விதைத்தால் உழைப்பில்லாமலே பெரும்பயனை யடையலாம், அதிலும், ஹரிதாசர்கள் வயிற்றில் விதைத்தால், இம்மையிற் பெரும்பயனையும், மறுமையில் மேலான கதியையும் அடையலாம். ஆதலால் நமது விதையை இந்த ஹரிதாச ருக்கு வழங்கும்படி நீங்கள் சம்மதிக்கவேண்டும்" என்றார். அதற் குப் புதல்வர் யாதொரு தடைசொல்லாமல் சம்மதித்தார்கள். உடனே தம்மிடத்திலிருந்த விதையையெடுத்து அந்த ஹரிதாசர் களுக்குக் கொடுக்க, அவர்கள் வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள். அதின்பிறகு இவர் தமது நிலத்தில் விதைக்கும்பொருட்டு மற்றொரு வனிடத்தில் விதையைக் கடன்கேட்டார். அவன் பேய்ப்பரங்கி விரையைக் கடனாகக் கொடுத்தான். அதை வாங்கிக்கொண்டு வந்து தமது நிலத்தில் விதைத்தார். இந்தச் செய்தியை அவ்வூரார் கேட்டு நகைத்தார்கள். அப்படி யிகழ்ந்து நகைத்ததேயன்றி, "இவர் தம் மிடத்திலிருந்த தாநியமுழுதும் வந்து கேட்டவர்களுக்கெல்லாம் கொடுத்துவிட்டு இப்போது பேய்ப்பரங்கிக்காயை விதைத்துப் பயிரிடுகிறார். இனி வருவோருக்கு அந்தப் பேய்ப்பரங்கிக்காயைக் கொடுப்பார்" என்று சொல்லிச் சிலநாள் கழித்து இவருடைய பயிரைப் பார்க்கலாமென்று இவரது விளைநிலத்திற்குப்போய்ப் பார்க்கும்போது, பேய்ப்பரங்கிக்காய்கள் அதிகமாய்க் காய்த்திருப் பதைப் பார்த்து, ஒருகாயைப் பறித்து உடைத்துப் பார்க்க, அந்தக் காயினுள்ளே முழுதும் கோதுமை நிறைந்திருப்பதைக் கண்டு

அதிசயித்து, "இப்படியிருப்பதற்குக் காரணம் ஸ்ரீ பண்டரிநாதருடைய திருவருளேயல்லது வேறில்லை" என்று மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். இந்தச் செய்தியையறிந்த ஒரு அதிகாரியானவன் இதை ஒரு கடிதத்தில் எழுதி, மண்டலீகனுகிய சக்ரவர்த்திக்கு அறிவித்தான். அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்த செய்தியை, மண்டலீகனுகிய துருக்கன் அறிந்து, ஆச்சரியப்பட்டு, "உடனே தாசரை இங்கேயழைத்து வாருங்கள்" என்று சில தூதரை யேவ, அவர்கள் அப்படியே யழைத்துவந்து ராஜசபையில்விட, அரசன் தாசரை நோக்கி, "நடந்தசெய்தி என்ன?" என்றுகேட்க, இவர் "நான் ஒன்றும் அறியேன், நடந்த செய்தியெல்லாம் ஸ்ரீபண்டரிநாதருடைய திருவருளே அறியும்" என்ருர். அதைக்கேட்ட அரசன் கோபித்து, "இவன் வஞ்சகன், இவனை இன்றைக்கு நமதுஜாதியில் சேர்த்துவிடுகிறேன்" என்று மனந்துணிந்து, பசுவினது இறைச்சியைச் சோற்றோடுகலந்து இவருக்கெதிரே வைத்து, இதனை யுண்ணக்கடவீர்" என்று சொன்னுன். அந்தச் சோற்றைத் தாசரானவர் உற்றுப்பார்க்கவே, அது பகவானுடைய திருவருளினுல் புஷ்பமும் திருத்துழாயுமாகக் காணப்பட்டது. இவர்க்குக் காணப்பட்டதுபோலவே அரசன் முதலானோர்க்கும் காணப்பட்டமையால், அரசன், "இவர் பரிசுத்தாத்மா" என்று அதிகபயமும் வியப்புங்கொண்டு இவரது திருவடியை வணங்கி, "தேவரீருக்கு வேண்டுவனவற்றைக் கொடுக்கிறேன், கேளும்" என்று சொல்ல, தாசர் "எனக்கு ஒன்றும் வேண்டியதில்லை" என்று சொல்லித் தமதிருப்பிடத்தை யடைந்து, மூடஜனங்களும் ஸ்ரீ ஹரிபக்தியைப் பெற்று உஜ்ஜீவிக்கும்படி இரவும் பகலும் ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே, பகிரம்பட்டர் வைபவத்தை சொல்லத்தொடங்கினுர்.

மான்கோஜிபோதலே சரித்திரம் முற்றிற்று.

முப்பத்தோன்பதாவது

பகிரம்பட்டர் சரித்திரம்.

யாவராலும் புகழப்பெற்ற பெருஞ் சிறப்பமைந்த பைடணபுரம் என்னும் நகரத்தில் வேத சாஸ்திரங்களில் மிகவும் வல்லவராகிய பகிரம்பட்டர் என்பவர் ஒருவரிருந்தார். இவர் அநேகம் வேதிய

ருக்குப் பல நூல்களையும் கற்பிக்க வல்லவராய், நாள்தோறும் தமது வீட்டில் அக்நிகார்யம் செய்பவராய், கங்காஸ்நாநம் செய்பவராய், ஜபாநுஷ்டாநமுதலியவற்றில் தவறுதவராய், தேவதார்ச்சனை, ப்ராஹ்மண சமாராதனை, புராண காலக்ஷேபம் இவைகளை நியதமாக நடத்தி வருவோராய் இருந்தார். இப்படி யிருக்குங்காலத்தில், ஒரு நாள் தாம் உண்ணும்போது, மனைவியை நோக்கி, "பதார்த்த வகைகளில் உப்பில்லாமல் சமைத்ததற்குக் காரணம் யாது?" என்று வினவ, மனைவியானவள் இவரை நோக்கி, "நீர் கிழத்தனமடைந்தும் இன்னமும் சுவையை விரும்புகிறீரோ" என்று சொல்ல, இவர் மனவருத்த மடைந்து, எழுந்து, மனைவியை வணங்கி, "தாயே! என் குற்றம் நீங்கும்படி நல்ல விடைசொன்னாய்," என்றுசொல்லி, "இனி நாம் இங்கேயிருப்பதில் பிரயோஜனமில்லை" என்றும், "நாம் ஈடேறும் வழியைத் தேடவேண்டும்" என்றும் ஆலோசித்து, வைராக்யத்தை யடைந்து, "காட்டிற்போயிருந்தால் நமது இனத்தார் வந்து அழைத்து வருவார்கள், அன்றி இந்தக் குலத்தைவிட்டு வேறொரு குலத்தில் புகுவோமென்றால் இந்த வேதியர் நம்மைச் சேர்க்கமாட்டார்கள், பரமஹம்ஸத்திற் சேர்வோமென்றால் உயர்ந்தோர் நகைப்பார்கள். ஆதலால் இழிகுலமாவதே நன்மை" என்று தீர்மானித்து, துருக்கருக்குக் குருவா யிருப்பவனாகிய ஒருவனிடத்திற் போய், "ஐயா, நான் உமது குலத்திற் பிரவேசித்தால் எனக்கு நன்மையுண்டாகுமா? குரான் என்னும் உங்கள் வேத புத்தகத்தில் சொல்லப்படுகிறது யாது?" என்று வினவ, அந்தத் துருக்கக் குருவானவன், இவரை நோக்கி, "நீர் எமது குலத்தில் பிரவேசித்தால் நன்மையுண்டு, அது இருக்கட்டும், நீர் உமது குலத்தைவிட்டு எமது குலத்திற் புகுவது பொருள் விருப்பத்தினாலேயோ" என்று கேட்க, இவர் அந்தக் குருவை நோக்கி, "ஏதோ ஒரு விஷயத்தால் மன வெறுப்புண்டாகி, உமது குலத்திற் புகச் சம்மதித்தேனேயன்றிப் பொருளை விரும்பினே னில்லை" என்றார். அதைக் கேட்ட துருக்கன் இவருடைய மனவுறுதியை யறிந்து, இவர்க்குச் சுன்னத்து என்னுஞ் சடங்குசெய்து, இவரை ப்ரஷ்டராகச் செய்துவிட்டான். பிறகு இந்தச் செய்தியை இவர் இனத்தாராகிய வேதியர் கேட்டு, "இவரைத் திருத்துவது எப்படி?" என்று மனந்தளர்ந்து இவரைக் கைவிட்டார்கள். அவர்களில் சிலர், "இவருடைய மனைவியால் இவர்க்கு இந்தக்கதி சம்பவித்தது" என்றும், "ஆனாலும் இவர்மனம் வருந்தும்படியான கடுஞ்சொற்களை மனைவியானவள் சொல்லலாகாது" என்றும், "அவள் அப்படிச் சொன்னாலும் இவர் வீட்டை விட்டுவந்து இப்படி ப்ரஷ்

டரானது அநியாயம்'' என்றும், "இவர்க்குப் பைத்நியம் பிடித்தது'' என்றும் பலவாறாகப் பேசிக்கொண்டதுமன்றி, "இவனைப் பார்த்தாலும் இவன் பேரைச் சொன்னாலும் நமக்குப் பாவமுண்டாகும்'' என்றும் சொல்லி நிந்தித்தார்கள். பிறகு பட்டரானவர், ஒருநாள் "நாம் குலம்விட்டுக் குலம் புகுந்தும் ஒருபிரயோஜநத்தையும் அடையவில்லையே'' என்று ஆலோசித்துக்கொண்டு, கங்கா நதிக்கரையையடைந்து, அவ்விடத்திலிருந்த வேதியரை வணங்கி, "நான் ஜாதிப் பிரஷ்டனானேன்'' என்று சொல்லிக் கண்ணீர்விட்டழுதார். இவரழுவதைக்கண்ட வேதியர், இவரை நோக்கி, "நீர் குலம்விட்டுக் குலம் புகுந்ததனால் உமக்குக் கிடைத்தலாபம் என்ன'' என்று கேட்டார்கள். அதற்கு இவர், "என் தீவினையால் இப்படியானேனே யன்றி, லாபம் ஒன்றுமில்லை'' என்றார். பிறகு அவ்வேதியர் மனமிரங்கி இவர்க்குப் பிராயச்சித்தம் செய்து தமது ஜாதியிற் சேர்த்துக்கொண்டார்கள். இந்தச் செய்தியைக் கேட்ட துருக்கர்வந்து வேதியரைக் கண்டு, "சுன்னத்து செய்து எங்கள் ஜாதியிற் சேர்த்துக்கொள்ளப்பட்ட இவனை நீங்கள் உங்கள் ஜாதியில் எப்படிச் சேர்த்துக் கொண்டீர்கள்?'' என்று கேட்க, அவ்வேதியர்கள் மறுமொழி சொல்லாம லிருந்தார்கள். பட்டர் துருக்கர்களை நோக்கி, "எனக்குக் காதில் தொளை யிருப்பதனால் நான் துருக்கனல்ல'' என்று சொல்லி, அவர்களை வைதலும், அவர்கள் இவரோடு வாது செய்யமாட்டாமல் போய்விட்டார்கள். பிறகு இவர் வேதியரை நோக்கி, "நீங்கள் பிராயச்சித்தஞ் செய்தும் எனது பூர்வரூப மடையப்பெற்றிலேனே'' என்று கேட்க, அவர்கள் மௌனமா யிருந்தார்கள். பிறகு இவர் "நான் வேதியனுமல்லன், மிலேச்சனுமல்லன்'' என்று மனஞ்சலித்து, அவ்வழி வருவோரை நோக்கி, "நான் என்ன ஜாதியானாகக் காணப்படுகிறேன்'' என்றுவினவ, அவர்கள் "நீர் வேதியராகக் காணப்படுகிறீர்'' என்று சொல்ல, இவர் "எனக்குச் சுன்னத்துச் சடங்கு செய்யப்பட் டிருக்கிறதே'' என்று சொல்ல, அவர்கள், "இவன் பித்தன்'' என்று பேசிக்கொண்டு போய்விட்டார்கள். அதின்பிறகு இவர் வடவாளம் என்னும் ஊரில்வந்து, நாகநாதர் என்கிற ஒரு தபசியைக்கண்டு வணங்கி, "நான் வேதியனோ, துருக்கனோ சொல்லும்'' என்று வினவ, அந்தத் தபசியானவர் இவர் தலைமீது தமது கைத்தடிகொண்டு மோதி மூர்ச்சித்து விழும்படிசெய்தார். "மூர்ச்சித்துக் கிடக்கிற இவரது ஐயத்தை நீக்கி, மேன்மையாகிய ஞானத்தையருள்செய்ய வேண்டும்'' என்றெண்ணி, தமதுசீடரை யழைத்து,

"இவனை உரலிற்போட்டு இடித்து உருத்தெரியாமற் சிதைத்து உண்டையாக்குங்கள்" என்று சொல்ல, அவர்களும் அப்படியே செய்து எதிரேவைக்க, நாகநாதர் அந்த உண்டையைக்கொண்டு ஒரு பாவை செய்து, விறகுகளை யடுக்கிச் சிதையுண்டாக்கி, அதின்மேல் பாவையைவைத்து மூடி, செந்தீயிட் டெரித்துக் கனிந்தபிறகு, அந்தப் பாவை ஒரு மனிதருபமாய் மவுநமாயிருந்தது, அதை நோக்கி, "நீ யார்?" என்று கேட்டார். அப்போது இவர் வேதியனென்றும் தருக்கனென்றும் சொல்ல நாணியிருக்க, குருவானவர், "உனக்குள்ளேயிருப்பவர் யார்?" என்றுகேட்க, அதற்கும் இவர் பேசாமலிருக்க, நாகநாதர் இவனைச் சிதையிலிட் டெரித்தும் இவனுக்குத் தெளிவுண்டாகவில்லையே யென்று, சிதையிலிருந்த இவரை யெழுப்பி, மெய்ஞ்ஞானத்தை உபதேசித்தார். பட்டரானவர் மெய்ஞ்ஞான வுபதேசம் பெற்றவுடனே நிஷ்டாபரராகி, ஆநந்தக்கடலில் அழுந்தி, குருநாதருடைய திருவடியை வணங்கித் தோத்திரஞ்செய்து, "முன்னொருகாலத்தில் நாமதேவர்: கற்சிலையை அமுதுண்ணும்படி செய்தார், ஞானதேவர்: எருமைக்கடாவை வேதமோதும்படி செய்தார், இப்படி இன்னம் அநேக அற்புதங்களைச் செய்வோர் உலகத்தில் பலருண்டு, சிதையிலிட்டு உருமாறும்படி யெரிக்கப்பட்ட வென்னை யிப்படிச்செய்த இந்த மஹாத்மாவைப்போல் ஒருவருமில்லை" என்று மிகவும் புகழ்ந்து கொண்டாடினர். பிறகு அந்த நாகநாதரிடத்தில் விடைபெற்று, அவரை வணங்கிப் புறப்பட்டுப் பண்டரிபுரத்தை யடைந்து, விட்டலப்பெருமானைத் தரிசித்து, கண்ணும் மனமுங் குளிரப்பெற்று, ஆநந்தபாஷ்பங்கள் கண்ணினின்றும் பெருகும்படிசெய்து தழுவிக்கொண்டு, பலவகையாய்த் தோத்திரஞ்செய்து, ஹரிதாசரோடுகூடிப் பலகவிகள் சொல்லி, பகவத் குணாநுபவத்தில் பொருந்தி இனிது வாழ்ந்திருந்தார் யென்றுசொல்லி, மேலே கணேசநாதர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

பகிரம்பட்டர் சரித்திரம் முற்றிற்று.

நாற்பதாவது

கணேசநாதர் சரித்திரம்.

சிறப்புப்பொருந்திய பாலேகாட் என்னும் நாட்டில் சாரசம், உச்சனி என்று சொல்லப்பட்ட ஊர்கள் இரண்டுண்டு; அந்த இரண்டூர்களிலும் சஞ்சரிப்பவரும், பேரறிவையுடையவரும், வைராக்கிய

குணமுள்ளவரும், கணேசநாதர் என்று பெயருள்ளவரும் ஆகிய ஒருவர் இருந்தார். இவர், கௌபீநந்தவிர மற்ற ஆடையை விரும்பாதவரும், ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தநம் செய்பவரும், பகற்காலமுழுதும் காட்டுக்குப்போய்த் தங்கியிருந்து, இராக்காலத்தில் ஊருக்குள்ளேவந்து,ஹரிநாம ஸ்மரணைசெய்துகொண்டு திரிந்து பிச்சையேற்று உண்பவரும், புகழ்ச்சி இகழ்ச்சி என்பவைகளை மனத்திற்கொள்ளாதவரும் ஆகியிருந்தார். இப்படி யிருக்குங்காலத்தில், உலகத்தை யாளுகின்ற சிவராஜன் என்னும் ஓரரசன், பண்டரிநாதனைச் சேவிக்கப் போகிறவன் இவரிருக்கும் ஊர்வழியாய் வந்து, இவரது பெருமையைக் கேள்விப்பட்டு இவரை வணங்கி இவரது ஞானநிலையையும், வரகவியையும், பேசும் வார்த்தையையும் குறித்து வியந்து ஆநந்தமடைந்து, "நம்முடைய புதியகட்டிலின்மேல் இவரையொருநாள் சயநிக்கச்செய்து, பிறகு நாம் அதிற்சயநித்தல் நன்மை" என்று ஆலோசித்து, இவரைநோக்கி, "ஸ்வாமீ, தேவரீர் அடியேன்வீட்டுக் கெழுந்தருளி ஒருநாள் தங்கியிருக்கவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, இவர் அவன் ப்ரார்த்தனைக்கு இரங்கி, அவனிஷ்டம்போலவே அவனுடனே போய் அரண்மனையை யடைந்து, அவன் செய்த வுபசாரங்களை யேற்று, அவன் விருப்பத்தின்படியே புஷ்பசயநம் அமைக்கப்பெற்ற புதிய கட்டிலின்மேல் சயநிக்கப்போகிறவர், முற்றத்தில் கிடக்கிற சில பரற்கற்களைத் தேடியெடுத்தார். அதைக்கண்ட அரசன் "இந்தக் கற்களைத் தேடி யெடுப்பது யாதுக்கு?" என்று கேட்க, இவர், "ஸ்ரீஹரிநாமத்தை யெண்ணுதற்கு" என்றார். அரசன் இவரைக் கட்டிலின்மே லேற்றிச் சுற்றிலுந் திரையிட்டுப் போய்விட்டான். இவர் அந்தக் கட்டிலின்மே லிருந்துகொண்டு, "இந்த நிலையை விட்டு நீங்குவது எப்போதோ" என்று மனம் வருந்தித் தாம் தேடியெடுத்த கற்களைச் சயநத்திற் பரப்பிக்கொண்டு அதின்மேற் படுத்துறங்கினர். அரசன், பொழுது விடிந்தபிறகு வந்து, இவரை நோக்கி, "நான் புஷ்பசயநம் அமைத்திருக்க, இந்தப் பரற்கற்களின்மேல் துயில்வதற்குக் காரணமென்ன?" என்று கேட்க, இவர் அரசனை நோக்கி, "மஹாராஜனே! மெத்தென்றிருக்கிற இடத்திற் படுத்தால் நித்திரை யதிகரிக்கும், நித்திரை அதிகரித்தால் மெய் மறக்கும்படி நேரிடும், மெய்மறந்து தூங்கினல், பகவத்ஸ்மரணை கெடும், ஆதலால் உன் விருப்பத்தின்படி கட்டிலின்மேல் படுத்தாலும், பகவானுடைய ஸ்மரணை தவறாதிருக்கும்பொருட்டு இந்தக் கற்களை விரித்துப் படுத்தேன்" என்றார். இவர் இப்படி சொல்லக்கேட்ட அரசன் மிகவும்

அநுதபித்து, இவரை வணங்கி இவரருள் பெற்று ஸ்ரீஹரிநாம ஸ்மரணையை ஒழியாதவனாயிருந்தான். பிறகு, கனோசநாதர், அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, முன்பு தாமிருந்த இடத்தை யடைந்து, ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு, தம்மை வந்து அடுத்தவர்களுக்கு ஸ்ரீராம தாரகமந்திரத்தை உபதேசித்தவுடனே, அவர்களெல்லாரும் ப்ரபஞ்ச வாசனையற்றவராய், ஜ்ஞாந நிலையையடைந்து ப்ரகாசித்தார்கள். இப்படி ஒருவருஷகாலம் கழியவே, இவருக்கு முந்நூற்றறுபது சிடர்கள் அமைந்தார்கள். அப்படி யமைந்த சிடர்களெல்லாரும் இவர்போலவே வைராக்ய சீலராயிருப்பதைப்பார்த்து, அவ்வூரிலுள்ளார் எல்லாரும் இவரது செய்கையை நோக்கிப் பேசிக்கொள்ளுகிறார்கள்: எப்படியென்றால், "இவர் திருவடியை ஆசிரயித்தோர் எல்லாரும் இவர்போலவே வைராக்யசீலராயினர்" என்று சொல்லுவோரும், "இவர் தம்மை யடுத்தவரை மயக்குகிறவர்" என்று சொல்லுவோரும், "ஸ்ரீபண்டரிநாதரே இந்த ரூபமாய் வந்திருக்கிறார்" என்று சொல்லுவோரும், "இவரது சேவை பிறவிப் பிணியை நீக்கும்" என்று சொல்லுவோருமாய், இப்படிப் பலவாறாகப் பேசிக்கொண்டு, ஒரு மாமரத்தின் நிழலிலிருக்கிற இவரைக் கண்டு, "ஓ ஹரிதாசரே! உம்மிடத்தில் வருவோரை யெல்லாம் சிடராக்கிக்கொண்டு, அவர்களுக்கு ஹிதோபதேசம் செய்து, இன்னம் ஊரிலுள்ளவரெல்லாரும் உம்மிடத்துக்கு வரும்படி செய்கிறீர். இப்படிச் செய்வதனால் அவர்களுடைய இல்லற வாழ்வுக்குக் கெடுதியுண்டாகின்றது. ஆதலால் இதுமுதல் மரங்களுக்கெல்லாம் ஞானோபதேசம் செய்துகொண்டிருப்பீரானால் உமது அருள் மிகவும் பிரகாசமடையும்" என்று சொன்னார்கள். அதற்கு இவர் "அப்படியே செய்கிறேன்" என்று சொல்லித் தமக்கருகேயிருக்கிற மாமரத்துக்குத் தாரக மந்த்ரத்தை உபதேசித்தார். அதைக் கண்டோரெல்லாரும் இவரை நோக்கி, "தாசரே! நீர் மனிதருக்கு உபதேசித்து அதனால் அவர் குணம் மாறுபடுவதைக் கண்டோம், இந்த மாமரம் குணம் மாறுபட்டதற்கு என்ன அத்தாக்ஷி" என்றார்கள். அதைக் கேட்ட தாசரானவர், அன்று தமக்குக்கிடைத்த ரொட்டியும் கீரையும் பகவதர்ப்பணம்செய்து, கையிலேந்திக்கொண்டு, அந்த மாமரத்துக்கெதிரே நின்று, "இன்று கிடைத்த பகவத்ப்ரஸாதமாகிய இதனை நீயுண்ணக்கடவாய்" என்று சொல்லுதலும், அந்த மரம் சற்று வெடித்தது, உடனே இவர் வெடித்த சந்தில் ப்ரஸாதத்தைச் செருகவே அது உள்ளே வாங்கிக்கொண்டு வெடித்தவாய் மூடிக்கொண்டது.

இந்த அதிசயத்தை அங்குள்ளாரெல்லாரும் கண்டு மகிழ்ந்து, இவரது திருவடிகளில் விழ்ந்து வணங்கித் தோத்திரம் செய்தார்கள். இப்படி அவர்கள் தோத்திரஞ்செய்து விடைபெற்றுப் போனபிறகு, இவர் முன்போலவே, காட்டில் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்து கொண்டிருந்தார். இருக்குங்காலத்தில் ஒருநாள், இவரது வைபவத்தைக்கேட்டு இவரிடத்துக்கு வந்த நான்கு வருணத்தாரையும் நோக்கி, "நான் ஹரிபஜனை செய்கிறேன், நீங்கள் கைத்தாளம் போடுங்கள்" என்று சொல்ல, அப்படியே எல்லாரும் கைத்தாளம்போட, வேதியர் மாத்திரம் இவரை நோக்கி, "நீ ஹீநன், நீ தாளம்போடென்று நியமித்தால் நாங்கள் போடமாட்டோம்" என்றார்கள். அதற்கு இவர் நீங்கள் போடாமற்போனால் சும்மா இருங்கள். இங்குள்ள கற்கள்போடும்" என்று சொல்லி, அங்கே கிடக்கிற கற்களை நோக்குதலும், அந்தக் கற்கள் ஒன்றோடொன்று தாக்கித் தாளம்போல ஒலித்தலைக்கண்ட அந்த வேதியர்கள் ஆச்சரியப்பட்டு, "உயிரில்லாத கற்கள் இவர் விஷயத்தில் இப்படி உபயோகப் படும்போது நாம் சும்மா இருப்பது நன்மையல்ல" என்று தாமும் தாளம்போடத் தொடங்கினார்கள். பிறகு இவரது மஹிமையைப் புகழ்ந்து கொண்டாடித் தாமும் இவரது கோஷ்டியோடு கூடி ஸ்ரீ ஹரிபஜனை செய்தார்கள். தாசரானவர் பஜனை முடிவுசெய்து பகவானுக்கு ஹாரதி சமர்ப்பித்து, அடியாரெல்லாருக்கும் ப்ரஸாதம் கொடுக்க, அவர்கள் பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள். பகவானாகிய விடோபாவும் இவருக்கெதிரே யெழுந்தருளி, "நீ இந்த ப்ரகாரமாகவே எந்நாளும் என்னைப் பஜித்துக்கொண்டிரு" என்று நியமிக்க, இவரும் அவ்வாறே ஸ்ரீஹரிபஜனை செய்துகொண்டும், தம்மை நாடி வந்தடுப்பவர்களுக்குத் தாரகமந்த்ரத்தை உபதேசித்துக்கொண்டும் இனிது வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே கேசவசுவாமி வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

கணேசநாதர் சரித்திரம் முற்றிற்று.

நாற்பத்தொன்றாவது

கேசவசுவாமி சரித்திரம்.

பிறவித்தளையைச் சேதிப்பதாகிய வைராக்ய கட்கத்தைத் தாங்கினவரும், இந்தப் பூலோகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலும் சஞ்சரிப்பவரும், கேசவசுவாமியென்னும் பெயர்பூண்டவரும் ஆகிய

பரமபக்த சிரோமணியானவர் ஒருவர் முற்காலத்தில் இருந்தார். அவர், ஒருநாள் விஜாபூருக்கு வந்து, பஞ்சாக்நி மத்தியிலிருந்து, ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்தார். அதைக்கேட்கும்பொருட்டு அவ்வூரிலுள்ள நான்கு வருணத்தாரும் வந்து கூடினார்கள். அப்படிவந்து கூடினவர்களில் சிலர் சாது ஸஜ்ஜநங்களாகவும், சிலர் வைதிகராகவும், சிலர் பண்டிதர்களாகவும் இருந்தார்கள். அப்போது கேசவசுவாமியானவர், தமது சிடர்களில் ஒருவராகிய ஒரு விருத்தவேதியரை யழைத்து, "இன்று ஏகாதசி விரததிநமாதலால் எல்லாருக்கும் திவ்யப்ரஸாதம் கொடுக்கவேண்டும், நீர் கடைக்குப்போய், சர்க்கரை சுக்கு முதலியவற்றை வாங்கிவாரும்" என்று நியமிக்க, அப்படியே அந்த விருத்தவேதியர்போய், கடைத்தெருவில் எல்லாக்கடைகளும் மூடியிருப்பதைக்கண்டு, இனி இந்த இராக்காலத்தில் எங்கேபோகலாமென்று, மூடப்பட்டிருக்கிற கடைகளில் ஒருகடையின் கதவைத்தட்ட, அதில் படுத்துறங்கிக்கொண்டிருந்த செட்டியானவன் எழுந்து, "என்னவேண்டும்" என்றுகேட்க, விருத்தவேதியர், "சுக்குமுதலான வஸ்துக்கள் வேண்டும்" என்று சொல்ல, விளக்கில்லாமல் இருளாயிருப்பதனால், அவன் கைநிதாநத்தின்மேல் சுக்குப்பையைவிட்டு, நாவிப்பையை யவிழ்த்து, அதுவும் சுக்குப் போலவே கைப்பரிசத்துக்குத் தோன்றினதனால் அதைச் சுக்கென்றெண்ணியேகொடுத்து, சர்க்கரை முதலான மற்றவைகளையும் கொடுத்தான். அவற்றை விருத்தவேதியர் கொண்டுபோய்க் கேசவசுவாமி மடத்தில் கொடுத்து ப்ரஸாதம் சித்தமாய்க் கொண்டிருக்கும் போது, இந்தச் செய்தியையறிந்த பகவானானவர், "இன்று ப்ரஸாதம் உண்போரெல்லாரும் மரணமடைவார்கள், அப்படி மரணமடைந்தால் ஸ்ரீஹரிபஜனைக்குப் போனவர்களெல்லாரும் இறந்தார்கள் என்று நம்மேல் பழியுண்டாகும், அன்றியும், உலகத்தார் யாவரும் ஹரிபஜனையானது அன்பரைக் கொலைசெய்வது என்றும் பழித்துரைப்பார்கள், மேலும், ஹரிபஜனை செய்வோரையும் உலகத்தார் மதித்துப் புகழவும் மாட்டார்கள். இதையன்றியும் நமது திருநாமமானது தாரகமென்று சொல்லப்படுவதும் பொய்யாய் முடியும்" என்று திருவுளம்பற்றி, அந்த விருத்தவேதியர் கொண்டுவந்த நாவியின் சத்தை க்ரஹித்துக்கொண்டு அதைச் சுவை, குணம் முதலானவற்றால் சுக்கையே நிகர்த்திருக்கும்படி செய்தருளினார். கேசவசுவாமியானவர் ஸ்ரீ ஹரிபஜனை செய்து முடிந்தவுடனே, பகவானுக்கு ஹாரதி சமர்ப்பித்து, அடியாருக்கெல்லாம் ப்ரஸாதம்

கொடுக்கப் பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள். இப்படியிருக்க, கடைக்காரச் செட்டியானவன் மறுநாட்காலையிலெழுந்து கடையைத் திறந்து சரக்குப்பைகளை வரிசையாய் அமைக்கும்போது, அவிழ்த்திருக்கிற நாவிப்பையைப் பார்த்து, "இந்த நாவியைச் சுக்கென்று கொடுத்தோமே, ப்ரஸாதத்தை உண்டவரெல்லாரும் இறந்திருப்பார்களே, பெரும்பாவத்துக்கு ஆளானோமே, என்னசெய்வோம்" என்று மனம்வருந்தி, கடையைவிட்டு இவ்வூர் வீதிகளில் வந்து நின்று நிதானித்து, எங்கும் அழுகுரல் இல்லாதிருப்பதையும், மயானத்திற்போய் ஒரு பிணமாயினும் வேகாதிருப்பதையும் அறிந்து, ஆலோசித்துக்கொண்டிருக்கும்போது, ராத்திரி கேசவசுவாமி பஜனைக்குப்போயிருந்த ஒரு பாகவதர் அவ்வழியாய் வந்தார். இந்தச் செட்டியானவன் அவரைநோக்கி, "சுவாமீ, தேவரீர் ராத்திரிபோயிருந்த கேசவசுவாமி பஜனையில் என்ன ப்ரஸாதங்கொடுக்கப்பட்டது? என்றுகேட்க, அந்தப் பாகவதர், "சுக்குமுதலிய திரவியங்கள் சேர்ந்த திவ்யமான சர்க்கரைப்பொங்கல்"என்றார். அதைக்கேட்ட செட்டியானவன், ஆச்சரியமடைந்து, ஸ்ரீபண்டரிநாதர் நாம் கொடுத்த நாவியைச் சுக்காக்கிவிட்டாற்போலிருக்கின்றதென்று தீர்மானித்து, மனந்தெளிந்து மகிழ்ந்து, தன் கடைக்குவந்து, பகவானுடைய திருவடியைத் தியானித்துக்கொண்டிருந்தான். கேசவசுவாமி, விடியற்காலத்திலெழுந்து ஸ்நாநாதி அநுஷ்டாநம்முடித்து, பகவதாராதநம், பஜனை முதலியவும் செய்து ஹாரதி சமர்ப்பிக்கும்போது, பகவானுடைய திருமேனி கறுத்திருக்கக்கண்டு, "இப்படியிருப்பதற்குக் காரணமென்ன" என்று ஆலோசித்துக்கொண்டிருக்கும்போது, செட்டியானவன்வந்து, இவர் திருவடியைவணங்கி, ராத்திரிநடந்த செய்தியைச்சொல்லி, "அடியேன் அபுத்தி பூர்வகமாகச்செய்த அபராதத்தைப் பொறுத்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, கேசவசுவாமியானவர், கண்களில் நீர்ததும்ப நின்று, "ஸ்ரீ பண்டரிநாதனே, உன் ப்ரஸாதத்தையுண்ட அன்பரை மரணமடையாமற் செய்து உமது விருதை விளக்கியருளினீர். நாவியின் சத்தையுண்டு திருமேனி கறுத்தீர், ப்ரஹ்லாதாழ்வானும், கைலாசபதியாகிய ருத்ரமூர்த்தியும் உமது திருநாமோச்சாரணத்தால் விஷமுண்டும் பிழைத்திருக்கிறார்கள். அன்றியும் அவர்கள் நிறம் மாறுபடவில்லை. அப்படியிருக்க, நாவியின் சத்தைச் சிறிது க்ரஹித்தமாத்திரத்தில் திருமேனி கறுத்திருப்பதை ஆலோசிக்குமிடத்தில் அமிர்தத்தை மரணநோய் அணுகினாற்போலவும், சூரியனை இருள் அணுகினாற்போலவும், குளிர்ந்த

சந்திரனுக்கு வேர்வையுண்டானாற்போலவும் இருக்கின்றது. அடியோங்களுடைய மனத்துன்பம் மாறும்படி தேவரீர் திருமேனியில் இப்போதிருக்கிற நிறம்மாறி, முன்னைய நிறங்கொண்டு எங்களுக்குத் தரிசநங்கொடுக்கவேண்டும்'' என்று ப்ரார்த்திக்க, பகவானும் இவர் மனவிருப்பத்தின்படியே தமது நிறம்மாறி முன்போலவே சேவை சாதித்தருளினர். கண்டோரெல்லாரும் வியந்துகொண்டாடினார்கள். செட்டியும் அடியார்களிலொருவனாயிருக்கக் கேசவசுவாமியானவர் ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தார் என்றுசொல்லி, மேலே கோமாயியம்மாள் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

கேசவசுவாமி சரித்திரம் முற்றிற்று.

நாற்பத்திரண்டாவது

கோமாயியம்மாள் சரித்திரம்.

முற்காலத்தில் ஓரூரில், ஜீர்ணவஸ்த்ரத்தை யுடுத்து, வீடுகள் தோறும் இரந்துண்பதே தொழிலாகக்கொண்ட, ஒரு பார்ப்பன விதவையாகிய கோமாயியம்மாள் என்பவர், ஒருநாள் ஸ்ரீபண்டரி யாத்ரையாகப் புறப்பட்டுச் சந்த்ரபாகா நதியையடைந்து, அன்று ஆடிமாசம் சுத்த தசமியாகையால், அடுத்தநாளாகிய ஏகாதசி ஹரிதிநத்தில் பண்டரிபுரம் போய்ச் சேரவேண்டுமென்கிற எண்ணத்துடன் நிற்கும்போது, அந்த நதியானது அதிக ப்ரவாஹத்தோடு கூடியிருப்பதையும், யாத்திரைக்காரர் ஓடமேறிப்போய் அக்கரைசேர்வதையும் பார்த்து, நம்மிடத்தில் ஓடக்காரனுக்குக் கொடுக்கக் காசில்லையே, என்செய்வோமென்று மனம்வருந்தி, ஓடக்காரனிடத்தில்வந்து, "அப்பா! நீ எத்தனையோபேரைக் காசுவாங்கிக்கொண்டு அக்கரை சேர்க்கிறாய், நான் ஏழையாகிய பார்ப்பனவிதவை, என்னிடத்தில் காசில்லை, என்னை அக்கரையிற் கொண்டுபோய்ச் சேர்ப்பாயானால் உனக்குப் பெரும் புண்ணியமுண்டு'' என்றுசொல்லி, ஓடத்தை நெருங்குதலும் அந்த ஓடக்காரன் இவரை நீரில் தள்ளிவிட்டு ஓடத்தை நடத்திக்கொண்டு; போய்விட்டான். இவர் ஆடை நனைந்து கரையிலேறிப் பெருங்குரலிட்டழுதார். அப்போது அங்கிருந்த மற்றொரு ஓடக்காரன், "அம்மே, காசுகொடுத்தாலல்லவோ அக்கரைசேரலாம்'' என்றுசொன்னான்? அதற்கு, அம்மையார், "அப்பா! என்னிடத்தில் காசில்லை, கொஞ்சம் மாவிருக்கிறது, அதைத் தருகிறேன், என்னை

அக்கரை சேர்த்துவிடு" என்றுசொல்ல, அவனும், "சீ, சீ, காசுகொடுக்காமற்போனால் ஓடத்தி லேற்றமாட்டோம்" என்று சொல்லி ஓடத்தை நடத்திக்கொண்டு போய்விட்டான். அதின்பிறகு கோமாயியார், என் செய்வார்! மிகவும் பரிதபித்து, "ஓ பண்டரிநாதா, அடியேன் நானெயத்திநம் எப்படி உன் சந்நிதியை யடைவேன்" என்று மிகவும் துக்கித்தார். அதைத் திருவுளம் பற்றின ஸ்ரீபண்டரிநாதர் ஒரு ஓடக்காரன்போல வந்து, "அம்மே! நீ யேன் துக்கிக்கிறாய்? இந்த ஓடத்தி லேறிக்கொள், உன்னை அக்கரை சேர்க்கிறேன்" என்று சொல்ல, அம்மையார், இவனும் காசுகேட்பானேயென்று நினைத்து, "என்னிடத்தில் காசில்லை, கொஞ்சம் மாவிருக்கின்றது கொடுக்கிறேன்" என்றார். இதைக்கேட்ட பண்டரிநாதராகிய ஓடக்காரர் "அம்மே, இங்கே வருவோராகிய ஏழைகளைக் காசு வாங்காமல் அக்கரை சேர்க்கும்பொருட்டே நான் இங்கே யிருக்கிறேன், எனக்கு நீ யொன்றுங் கொடுக்கவேண்டியதில்லை" என்றார். அப்போது அம்மையார், அந்த ஓடக்காரரை நோக்கி, "அப்பா, நான் முதுமையும் தூர்ப்பலமும் உள்ளவள், இந்த வஸ்திரம் ஒன்றல்லது வேறே வஸ்திரமில்லை, இது நனைந்தால்குளிரினால் வருந்துவேன், ஆகையால் என்னை அதிஜாக்ரதையாய்க் கொண்டுபோய் அக்கரை சேர்க்கவேண்டும்" என்றுசொல்ல, ஓடக்காரர், "அம்மே! உன் ஆடையேயன்றி உன்காலும் நீரில் படவொட்டாமல் கொண்டுபோகிறேன்" என்று இவரைத் தூக்கித் தோள்மேல் வைத்துக்கொண்டுபோய் அக்கரை சேர்த்தார். அப்போது, அம்மையார் ஓடக்காரர்காலிலும் நீர்படாமலிருப்பதைப் பார்த்து "அப்பா! நான் உன்தோளிலேறிக்கொண்டு வந்ததனால் என்காலில் நீர் படாமலிருப்பது ஸஹஜமே, நீ நீரிலிறங்கிவந்ததனால் உன்காலில் நீர் பட்டிருக்கவேண்டுமே, இதுஎன்னஆச்சரியம்" என்று சொல்ல, ஓடக்காரராகிய பகவானானவர், "அம்மே! நான் இங்கே தோணி செலுத்துவோனல்லன், பவக்கடல் கடத்தும் படகுக்காரன், ஆதலால் யார் வந்தாலும் என்னை யடைந்தவரைப் பவக்கடல் நீர் சிறிதும் படாமல் அவர்களை மோக்ஷதீரத்தில் சேர்ப்பேன்" என்றார். அம்மையார், பகவான் சொன்ன வார்த்தையைச் சிரத்தையோடு ஆராயாமல், மறுபடியும் மாவை வாங்கிக்கொள்ளும்படி சொல்ல, பகவானாகிய படகுக்காரர், "நான் கொடுப்பதேயன்றி ஒருவரிடத்தில் வாங்கும் வழக்கமில்லை, நாளைக்கு ஹரிதினமாகையால், அந்த மாவை அடைசுட்டுப் பண்டரிபுரத்தில் ஒரு ஏழைவேதியர் கையில் கொடுத்தால் உனக்குப் பெரும் புண்ணியமுண்டு" என்று சொல்லி

மறைந்துபோனார். மறைந்தபிறகு, அம்மையார், "நீலமணி வண்ண னாகிய பகவானைக் கோயிலிற்போய்ச் சேவித்துப் புறத்தே தூங்கி, விடியற்காலத்திற் போய், சந்த்ரபாகாநதியில் மூழ்கிவந்து, உபவாச மாயிருந்து பகவானை வணங்கி, அன்றிரவில், அடியார்கள் ஸ்ரீஹரி நாமஸங்கீர்த்தநம் செய்வதைக் கேட்டுக்கொண்டிருந்து, துவாதசி காலையில் சந்த்ரபாகையில் முழுகிக் கரையேறி, அன்று நான்குவேதி யர்க்கு அமுது செய்விக்கவேண்டுமென் றெண்ணினார். ஆயினும், உப்பு, பருப்பு, அரிசி முதலிய சாமக்ரியைகள் ஒன்று மில்லாமல் வெறும்மாவைக் கொடுத்தால் யார் வாங்குவார்களென்று கவலைகொ ண்டு, அங்கிருந்த சில வேதியரை நோக்கி, "ஐயன்மாரே! என்னிட த்திலுள்ள கொஞ்சம் மாவை உங்களில் யாராயினும் ஒருவர் கைக் கொள்ளுங்கள்" என்று ப்ரார்த்திக்க, அவர்களில் ஒருவரும் இவர் கொடுக்க எண்ணின மாவைக் கைக்கொள்ளாமல் போய்விட்டார்கள். அப்போது அம்மையார், பாண்டுரங்க பகவானைத் தோத்திரம் பண்ணி, "ஸ்வாமீ! இத்தினத்தில் வேதியர்க்கு அமுது செய்விக்கா மல் அடியேன் எப்படி உண்ணுவேன்" என்று மிகவும் வருந்துவதை யறிந்த பாண்டுரங்க பகவானனவர் ஒரு வேதிய வுருவங்கொண்டு வந்து, "அம்மே! நான் துர்ப்பலனாகிய கிழவேதியன், எனக்கு ஒரு கைமாவைக் கொடுத்தால் பெரும் புண்ணியமாகும்" என்று கேட்க, கோமாயியார் மிகவும் மனமகிழ்ந்து தம்மிடத்திலிருந்த மாவைக் கொடுக்க, வந்தவேதியர், "அம்மே! என்மிகுந்த பசிக்கு உண்ணும்படி விரைவாக இந்த மாவை அடைசுட்டுக் கொடுக்கவேண்டும்" என்றார். அப்படியே அம்மையார் அடைசுட்டுக் கொடுக்க, பகவானாகிய முது வேதியர் வாங்கி உண்டுகொண் டிருக்கும்போது, புஷ்பவாஸிநியா கிய பெரியபிராட்டியார் ஒருவிருத்த ஸுமங்கலையாய் வந்து, "என்னை விட்டு நீர்மாத்திரம் விருந்துண்ணுகிறீரோ" என்றார். அப்படிச் சொல்லும்போது, பகவானனவர் அம்மையாரை நோக்கி, "ஒருசுமங் கலை வந்தாள், ஆதலால் உமது துணியில் முடிந்திருக்கிற மாவையும் அடைசுட்டுத் தரவேண்டும்" என்று சொல்ல, அம்மையாரும் தமது துகிலில் மாவிருக்கக்கண்டு அதை அடைசுட்டுக் கொடுக்க, பகவா னனவர் வாங்கித் தாமும் பிராட்டியாருமாக அமுது செய்தார்கள்; செய்துமுடிந்தவுடனே மறைந்துபோனார்கள். அம்மையாரும் அதன் பிறகு அமுது செய்து தமதிடத்தை யடைந்து, ஸ்ரீஹரிநாமஸங்கீர் த்தநம் செய்துகொண்டிருந்தார் என்று சொல்லி, மேலே லதீப்ஷா பக்தர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினார்.

கோமாயியம்மாள் சரித்திரம் முற்றிற்று.

நாற்பத்துமூன்றுவது

லதீப்ஷா பக்தர் சரித்திரம்.

துருக்கரில், லதீப்ஷா என்கிற பெயருள்ளவர் ஒருவரிருந்தார். இவர் கீதை பாகவதம் முதலாகிய புராணங்கள், இவைகளைக் கேட்பவராயும், குற்றமற்ற வைஷ்ணவசிகாமணியாயும், அல்லும்பகலும் இடைவிடாமல் ஸ்ரீ ஹரிபஜனை செய்பவராயும் இருந்தார். மேலும், நாள்தோறும் நியமமாய் ஸ்ரீ ஹரிபூஜை செய்பவராயும் இருந்தார். இவர் இப்படி யிருப்பதை யறிந்த துஷ்டராகிய துருக்கர், தங்கள் அரசனிடத்திற்போய், "இவன் நம்முடைய மதஸ்தனுயிருந்தும் இப்படிச் செய்வதனுல், இவனைத் தண்டித்துப் பழையபடியே நம்முடைய ஜாதியிற் சேர்க்கவேண்டும்" என்றுர்கள். அரசன் அவர்களை நோக்கி, "நமது மதத்துக்கு விரோதியான இவன் வீட்டிற் புகுந்து, உள்ள பொருள்களை யெல்லாம் கொள்ளையிடுங்கள்" என்றுன். அவர்கள் அப்படியே போய், இவர் வீட்டில் ப்ரவேசித்து இவரைக் கண்டவுடனே, பரமசாந்த முடையவர்களாய், தங்களைத் தாங்களே யிகழ்ந்துகொண்டு, "ராஜசேவை கொடியது. இனி ராஜசேவையை விட்டு இவரிடத்தில் தங்கியிருந்து கீதாகாலக்ஷேபம் முதலானவைகளைக் கேட்டுக் கடைத்தேறுவோம்" என்று எண்ணி இங்கேயே நின்றுவிட்டார்கள். இந்தச் செய்தியைக் கேட்ட அரசன் தானே நேரில் வந்து இவரை வருத்தவேண்டுமென் றெண்ணி, வீட்டுக்குள்ளே நுழைந்து, அப்போது இவர் செய்துகொண்டிருந்த ஸ்ரீ பாகவத காலக்ஷேபத்தைக் கண்டு, "நாமும் சற்றுநேரம் நின்று கேட்போம்" என்று நின்றவன், சுவர்முழுதும் ஸ்ரீபகவானுடைய தசாவதாரமுதலிய சித்திரங்க ளெழுதப்பட் டிருப்பதைப் பார்த்து, ஆச்சரியப்பட்டு, அந்தச் சித்திரங்களுக்குள்ளே, ஸ்ரீ கண்ணபிரானுக்கு ராதையானவள் வெற்றிலைச்சுருள் மடித்துக் கொடுக்கிறதுபோல ஒரு ஓவியமிருப்பதை நோக்கி, "ராதை வெற்றிலைச்சுருள் மடித்துக் கையில் வைத்துக்கொண்டு நிற்க, அதை யேன் கண்ணபிரான் ஏற்றுக்கொள்ளாம லிருக்கிறுர் சொல்லும்?" என்று லதீப்ஷாவைக் கேட்க, இவர் ஸ்ரீ கண்ணபிரானை மனத்திறல் தியானித்து, "பரம காருணிகனுன ஓபகவானே! ராதாபிராட்டியார் ஏந்திநிற்கிற வெற்றிலைச் சுருளைத் தேவரீர் ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, ஓவியவுருவாயிருந்த ஸ்ரீகண்ணபிரான் திருப்பவளந்திறந்து வெற்றி

லைச்சுருளை வாங்கிக்கொண்டதைக்கண்ட அரசன், மிகவும் அதிசயித்து, ஓவியமாகிய கண்ணன் வாய்திறந்ததும், ஓவியமாயிருந்த ராதை தன்கையிலிருந்த வெற்றிலைச்சுருளை, அவர் வாயிலிட்டதும் மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றன'' என்று, இவரது மஹிமையைப் புகழ்ந்து கொண்டாடி, இவரது திருவடியை வணங்கிநின்று, "இப்படிப்பட்ட மஹாத்மாவாகிய உமது பெருமையை யறியாமல் உம்மை வருத்த வேண்டுமென்று நினைத்துவந்தேன், என் அபராதத்தை க்ஷமித்தருள வேண்டும்'' என்று ப்ரார்த்தித்து இவரிடத்தில் விடைபெற்றுத் தன் மனையடைந்தான். இவரும் சதாகாலமும் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டு இனிதாய் வாழ்ந்திருந்தார் என்றுசொல்லி, மேலே சந்தோபாபக்தர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

லதீப்ஷா பக்தர் சரித்திரம் முற்றிற்று.

நாற்பத்துநான்காவது

சந்தோபாபக்தர் சரித்திரம்.

முற்காலத்தில் ராஞ்சணம் என்னும் ஊரில், சந்தோபா என்னும் பெயருள்ளவர் ஒருவரிருந்தார். இவர் சதுரங்க சேனைகளோடுங் கூடிச் செல்வத்தால் குபேரனுக்குச் சமானமானவராயும், தம்மினத்தாருள் மேன்மை யுடையவராயும் வாழ்ந்திருந்தார். இப்படி யிருக்குங்காலத்தில், ஒருநாள், இவர் துக்காராம் ஸ்வாமியுடைய கதையைக்கேட்டு, இந்தக் குடும்பவாழ்வும் சரீரமும் பொய்யென்கிற மெய்ஞ்ஞானம் வாய்க்கப்பெற்று, வைராக்கிய சீலராய், இனிப் பிறவியை விரும்பாமல், இனி அரை நிமிஷமாயினும் வீண்காலங் கழிக்கலாகா தென்று ஆலோசித்துத் தம்மிடத்திலுள்ள பரிசாரகர்களுக்கெல்லாம் வேண்டியமட்டும் பொருள்முதலாயினவற்றைக் கொடுத்து, அவரவர்களுடைய ஊர்களுக்கு அனுப்பிவிட்டு, வேதியர்க்குத் தமது பொருள்முழுதும் தத்தம்செய்து, நான்குமுழ வஸ்திரத்தை அரையிலுடுத்து, ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டு வெளியேவந்து, பிமாநதிக்கரையின் ஒரு பக்கத்தில் விளங்குகின்ற ஒரு மலைமேலேறி, கூட்டிலிருந்து வெளிப்பட்ட கிளிபோலவும், தாமரைமலரினுள்ளே யகப்பட்டிருந்து வெளிப்பட்ட வண்டுபோலவும் மிகவுங் களிப்போடு ஸ்ரீஹரிபஜனை செய்துகொண்டிருக்க, இவருடைய தாயானவள் இவர் இப்படி வைராக்யத்தை யடைந்து மலைமேல் வசிப்பதைக் கேள்விப்பட்டு, இவரது மனைவியாரை அலங்கரி

த்துக் கொண்டுபோய்விட்டால், அவள்மீது விருப்பங்கொண்டாயி னும் வருவார் என்றெண்ணி, இவர் மனைவியாரை அலங்கரித்துப் பல்லக்கி லேற்றியனுப்ப, அவரும் அப்படியேபோய்க் கணவரைக் கண்டுவணங்கி, "அடியேனுக்கு உம்மையன்றி வேறே தெய்வமில்லை யாதலால் உம்மை வந்தடுத்தேன்" என்றாள். அதற்கு இவர், "பெண்ணே! நீ யென்சொற்படி செய்வதாயிருந்தால் என்னிடத்தில் இருக்கலாம், இல்லாதபக்ஷத்தில் நகரத்துக்குப் போகலாம்" என்று சொல்ல, மனைவியார் "நீர் சொல்லுகிற சொல்லின்படியே நடக்கி றேன்" என்று சொல்ல, இவர், மனைவியாரை நோக்கி, "ப்ராணநா யகி! நீ உன் ஆடையாபரணாதிக ளெல்லாவற்றையும் நீக்கி, நான்கு முழ வஸ்திரமுடுத்து என்னோடுகூடி யிங்கேயிருந்தால் இருக்கலாம்" என்றுசொல்ல, மனைவியாரும் சம்மதித்து, நான்குமுழ ஆடையுடுத் துக் கணவருக்கருகே யிருந்தார். இப்படியிருக்குங் காலத்தில், ஒரு நாள் சந்தோபாவுக்குப் பசி அதிகரித்து, மனைவியாரை நோக்கி, "பெண்ணே, எனக்கு அதிக பசியாயிருப்பதனால், நீ ஊருக்குள்ளே போய், நமது உறவினரும், ஸ்நேஹரும் ஆகிய அவர்கள் வீடுகள் தோறும்போய், ஒவ்வொரு வீட்டிலும் அரையடைக்கு அதிகமா யேற்காமல் பிக்ஷை யேற்றுவரக்கடவாய்" என்று நியமிக்க, மனைவி யாரும் இவரை வணங்கி, நான்குமுழ வஸ்திரமும் தாலியுமன்றி வேறொன்று மில்லாதவராய், ஊர்க்குட் சென்று, வீடுகள்தோறும் பிக்ஷையேற்று, முடிவில், தமது கணவருடைய தங்கை வீட்டுக்குப் போய்ப் பிக்ஷைகேட்க, அவள்வந்து இவரைப் பார்த்து, "உன் பெருஞ்செல்வத்தை யிழந்து இப்படிப் பிக்ஷையேற்றுச் சீவிக்க நேரிட்டதா! இதுவும் தெய்வச் செயல்" என்று பரிதபித்து, வீட்டுக் குள்ளேபோய், சர்க்கரையும் நெய்யும்சேர்ந்த இரண்டு அடைகள் கொண்டுவந்து கொடுத்தாள். அதைப்பார்த்த இவர் மனைவியார் "அரையடைக்கு அதிகமாய் வாங்கவேண்டாமென்று என் கணவர் கட்டளை" என்றுசொல்லியும் கேளாமல் இரண்டு முழு அடையைத் தந்துபோனாள். அப்படி அவள் கொடுத்த இரண்டடைகளையும் வாங்கிக்கொண்டு தமது கணவரிருக்கு மிடத்தை யடைந்து, "அமுது செய்யலாம்" என்று சொல்ல, தாசரானவர், பெண்ணே, "நான் சொல்லியிருந்தும், முழுவடை ஏன் வாங்கிவந்தாய்?" என்று கேட்க, மனைவியார், "ப்ராணநாதா! நான் எவ்வளவு சொன்னாலும் கேளா மல் உன் தங்கை கொடுத்ததைத் தடுக்காமல் வாங்கிவந்தேன்" என் றாள். அதைக் கேட்ட தாசரானவர் "இந்த முழு அடைகளைக்

கொடுத்துவந்தால் நான் உண்பேன்" என்று சொன்னார். அதுகேட்ட மனைவியார் கணவரது சொற்படியே விரைவாகப்போய் அடைகளைக் கொடுத்தவரிடத்தில் கொடுத்துவிட்டு மீண்டுவரும்போது மழைபெய்து வழிமுழுதும் கான்யாறுபெருகி யோடுவதைக்கண்டு, "இந்த ஆற்றைக் கடந்து போகும்விதம் யாது" என்றும், "நமது கணவர் பசித்திருப்பாரே" என்றும் துன்பமிகுந்து, பாண்டுரங்கப் பெருமானைத் தியானஞ்செய்தார். அப்போது ஸ்ரீ பாண்டுரங்க பகவானனவர் இவர்மீது இரக்கங்கொண்டு ஆறு கடத்துவோனுடைய ரூபங்கொண்டு அவ்விடத்தில்வந்து இவரை நோக்கி, "நீர் ஏன் வருந்துகிறீர்?" என்று கேட்க, இவர் "என் கணவர் அந்தக்கரையி லிருக்கிறார், நான் அவர்க்கு உணவு கொண்டுபோகும் வழியில் இந்த ஆறு தடைப்படுத்தினதால் மனம்வருந்தி நிற்கிறேன், இந்தச் சமயத்தில் என்னை உனது தங்கையாகப் பாவித்து அக்கரையில் சேர்ப்பாயானால் உனக்குப் பெரும் புண்ணிய முண்டாகும்" என்று சொல்ல, பகவானனவர், இவரது வேண்டுகோளின்படியே இவரைத் தமது திருத்தோளில் ஏற்றிக்கொண்டு நீந்தி விரையில் அக்கரையில் சேர்த்து அழைத்துக்கொண்டு இவர் கணவர் இருக்குமிடத்தளவும் சென்று "உன் பிராணநாதரைக் கண்டாயா" என்று சுட்டிக்காட்டி மறைந்து போனார். போனபின்பு இவர் தமது கணவரிடஞ் சென்று நிற்க, தாசரானவர், "பெண்ணே! இந்த மழையில் எவ்விதமாய் ஆற்றைக் கடந்துவந்தாய்?" என்றுகேட்க, இவர் நடந்தசெய்தியைச் சவிஸ்தாரமாய்ச் சொன்னார். அதைக்கேட்ட தாசரானவர், ஸ்ரீ பாண்டுரங்கப் பெருமான் உனக்குச் சேவை சாதித்தார்; அதுபோலவே எனக்கும் அவர் வந்து சேவை சாதிக்குமளவும் உண்ணாமலிருப்பேன்" என்று சொல்லி யிருந்தார். மறுநாள் ராஞ்சணத்தில் வாழ்கிற பரமபாகவதனாகிய ஒரு செட்டியின் கனவில் ஸ்ரீபாண்டுரங்கப்பெருமான் எழுந்தருளிச் "சந்தோபாபக்தர் பசித்திருக்கிறார், அவர் பசி தணியும்படி அறுசுவையோடு கூடிய அமுது உண்பித்தால் உனக்குப் புண்ணியமாகும்" என்று சொல்லி மறைந்தார். உடனே அந்தச் செட்டியானவன் விழித்து எழுந்து, பகவான் நியமித்தபடியே திவ்வியான்னம் சித்தம் செய்து எடுத்துக்கொண்டு சந்தோபாபக்தர் இருக்குமிடத்திற்குப் போய், "பகவானனவர், எனக்கு நியமித்த பிரகாரம் உமக்கு அமுது கொண்டுவந்தேன்; இதனை ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று பிரார்த்திக்க, தாசர் அவனை நோக்கி, "உனக்குப் பிரத்தியக்ஷமான பகவான் என்னெதிரே வாராமல் இருக்கிறார், ஆதலால் அவர்

எனக்குச் சேவை சாதிக்கு மளவும் உண்ணமாட்டேன்" என்றார். செட்டியானவன் இவரது மனவுறுதியை நோக்கி, இவரை நிர்ப்பந் திக்காமல் தன் ஊர்க்குப் போய்விட்டான். பிறகு இந்தச் சரீரம் அன்னமயமல்லவா என்பதனைச் சிறிதும் அறியாமல் இப்படிப் பசி யோடிருக்கிற இவரது உறுதிநிலைக்கு ஸ்ரீபாண்டுரங்கப் பெருமான் மகிழ்ந்து, சகுணரூபத்தோடு இவர்க்கெதிரே எழுந்தருளக் கண்டு மிகவும் ஆவலோடு வணங்கித் தோத்திரஞ் செய்ய, பகவான் இவர் க்கு அபயந் தந்து மறைந்தார். பிறகு இவர் அந்தப் பகவானுடைய மங்களகுணங்களை ஸ்மரித்துக்கொண்டும் அவனது திருநாமசங்கீர்த் தனஞ் செய்துகொண்டும் ராஞ்சணம் என்னும் ஊரில் நாள்தோறும் பிக்ஷையேற்று உண்டு மலையில் வாசம்பண்ணிக்கொண்டிருக்க, அந்த ஊரில் குடியிருப்பவனும் துஷ்டபுத்தியும் ஆகிய ஒரு வேதியன் குடும்ப வாழ்க்கையில் மிகுந்த இச்சையுள்ளவனாயிருந்தான். அவன் எப்பொழுதும் தன் மனைவியோடு சண்டை செய்வதும் அவள் எதிர்மொழி கொடுத்தால் "இந்தக் காட்டில் வாழ்கின்ற சந்தோபா பக்தர்போல இந்தக் குடும்ப வாழ்க்கையை விட்டு நீங்குவேன், அப் போது நீ என்ன செய்வாய்?" என்று பயமுறுத்துவதும் ஆகிய தொழிலை மேற்கொண்டிருந்தான். அவன் மனைவியானவள், "நாம் நம் கணவனோடு எதிர்த்துப் பேசுவோமானால், இவன் நம்மைக் கை விடுவான், அப்படி விட்டபக்ஷத்தில் நாம் என் செய்வோம்" என்று அவனோடு எதிர்த்துப் பேசாமல் அடங்கியிருந்தாள். இப்படியிருக் குங் காலத்தில் ஒருநாள் சந்தோபாபக்தரானவர், அவள் வீட்டின் தலைவாசலில் வந்து நின்று பிக்ஷை கேட்க, அவள் பிக்ஷைகொண்டு வந்து, இவர் பாத்திரத்திற் பெய்து நின்று, "ஐயரே, என் கணவர் தினந்தோறும் என்னோடு சண்டை செய்கிறார், நான் எதிர்த்துப் பேசினால் உம்மைச் சுட்டி உம்மைப்போல நான் துறவு பூண்பேன்" என்று சொல்லுகிறார். இதற்கு யான் என் செய்வேன்" என்று சொல்லிப் புலம்ப, இவர் அவளை நோக்கி, "அம்மா! நீ அஞ்சாதே, இனி உன் கணவன் உன்னோடு சண்டை செய்யும்போது நீ எதிர்த் துப்பேசு, அதற்கு அவன் 'நான் துறப்பேன்' என்று சொன்னால், 'உடனே நீ துறந்துபோ' என்று கடுமையாய்ப் பேசு, அப்போது அவன் துறந்து என்னிடம் வருவான், அப்போது அவனுக்கு நான் உபதேசித்து மறுபடியும் உன்னிடத்தில் வந்து இல்வாழ்க்கையில் அமர்ந்து, ஆண்டி கையிலகப்பட்ட குரங்குபோல உனக்கு அடங்கி நடக்கும்படி செய்கிறேன்" என்று சொல்ல, அவள் இவரது திரு

வடியை வணங்கி மகிழ்ந்திருந்தாள். இவரும் தமது ஆசிரமத்தை யடைந்தார். பிறகு அந்த வேதியன், வீட்டிற்கு வந்து "எனக்குப் பசி மேலிட்டிருக்கிறது, நீயேன் இன்னம் சமையல் செய்யவில்லை, உன்னை நான் விட்டு நீங்குவேன்" என்று சொல்ல, உடனே இவளும் "அந்தப்படியே செய்யலாமே, உன்னையார் தடைசெய்தார்கள்? அப்படி இஷ்டமிருந்தால் விரைந்துபோம்" என்றாள். மனைவியானவள் இப்படி சொல்லக்கேட்ட வேதியன், "ஆகா! மோசம் வந்தது, இனி யிங்கிருப்போமானால் நமது பெருமைக்குக் குறைவு நேரிடும்" என்று உடனே ஒரு செம்பைக் கையிலெடுத்துக்கொண்டு சந்தோஷபக்தர் இருக்கும் இடத்தை யடைந்து, "தாசரே! உம்மைப்போல் நானும் குடும்பத்தை விட்டுவந்து உம்மைச் சரணடைந்தேன், எனக்கு நன்மையைத் தருகின்ற உபதேசம் செய்யவேண்டும்" என்று பிரார்த்திக்க, தாசர் வேதியனை நோக்கி, "உன்னைப்போல் இப்படிப்பட்ட வைராக்கிய சீலர்களை எங்குங் கண்டதில்லை, உமக்கு உபதேசஞ் செய்வதற்கு யாதொரு தடையுமில்லை" என்று சொல்லி, "செம்பும் ஆடையும் கொண்டு சென்றால் திருடர் பறித்துக்கொள்வார்கள்; ஆகையால் அவைகளை நீக்கிக் கோவண மொன்றைமாத்திர முடுத்துச் சுரைக் குடுக்கையைத் தூக்கிக்கொண்டுபோய், நீர் கொண்டு வா" என்று நியமிக்க, வேதியனும் அவ்வாறே கோவணமும் சுரைக் குடுக்கையுமாகப் போனான்; அவன் போன பிறகு, இவர் அவனது ஆடையைப் பல துண்டுகளாகக் கிழித்தெறிந்துவிட்டுச் செம்பையும் ஓர் பள்ளத்தில் போய் விழும்படி வீசி யெறிந்தார். நீர் கொண்டு வரப்போன வேதியன், நீர் மொண்டு கொண்டுவந்து தாசரிடஞ் சேர்ந்தான். அப்பொழுது தாசரானவர் தாமும் தமது மனைவியுமாக வேப்பங்காய்களை உணவாக உண்டுகொண்டிருக்க, வேதியன் "எனக்குப் பசியாயிருக்கின்றது" என்று சொல்ல, இவர் தாம் உண்டுகொண்டிருந்த வேப்பங்காய்களை அள்ளி "உண்" என்று கொடுக்க, வேதியன் "இந்தக் கசப்பான வேப்பங்காய்களை எப்படி உண்பது?" என்று சொல்ல, சந்தோஷபக்தர், "வேதியரே! துறவடைந்திருக்கிற நமக்குச் சுவைவிருப்பம் கூடாது, பசிக்கு எது கிடைத்தாலும் புசிப்பதே துறவுக்கு அழகு, இதனை அறிந்துகொள்வாயாக" என்று சொல்ல, அந்தணன், "ஐயோ, நான் என் மனைவியைவிட்டு என்ன லாபத்தை யடையும்பொருட்டு இவ்விடத்திற்கு வந்தேன்? பசிக்கு உலர்ந்த அடையாயினும் அவ்விடத்தில் கிடைக்கும், இவ்விடத்தில் அதுவும் கிடைக்காமல் வேப்பங்காய் கிடைத்ததே" என்று கண்ணீர்விட்

டழுதான். இதைக்கண்ட தாசர் "ஏன் அழுகிறாய் ?" என்று வினவ, வேதியன் தன் குடும்பத்தில் நடந்த விருத்தாந்தமெல்லாஞ் சொல்லி, "உம்மை நான் நம்பி வந்ததற்கு, உண்ண வேப்பங்காய் கிடைத்தது, பசித்தீயோ எரிக்கிறது, குளிரோ நடுக்குகின்றது, ஆடையோ பறந்துவிட்டது, இவ்விதமான துன்பம் அநுபவிக்கக் காரணமாக நான் எப்படிப்பட்ட பாவத்தைச் செய்திருந்தேனோ ? மனைவியை நான் தோறும் வருத்தின பாபம் இப்படி நான் வருந்தச்செய்தது, நான் அறிவீனத்தால் மனைவியைத் துறந்து வந்ததே மோசம், இந்தக் கோவண வேஷத்தோடு மறுபடியும் வீட்டிற்கு எப்படி நாணமில்லாமற் போவேன் ? அப்படி நாணத்தை விட்டு நான் போனாலும், என் மனைவி, "துறந்து சென்ற நீ மறுபடியும் இல்வாழ்க்கைக்குவரலாமோ என்று கடிந்து பேசுவாள், இதற்கு நான் என்ன செய்வேன்" என்று புலம்பி அழுதான். இந்த வேதியனது நிலையைக்கண்ட சந்தோபா பக்தரானவர், அவனை நோக்கி, "நீ முன்போல் நாள்தோறும் உன் மனைவியோடு சண்டை செய்யாமலும், அடிக்கடி துறந்துபோவேனென்று சொல்லாமலும் உன் மூர்க்கக்குணங்களைவிட்டுச் சாந்தகுணத்தையடைந்து இருப்பாயானால் உன் மனைவியோடு உன்னைக்கொண்டுபோய்ச்சேர்த்து அவளுக்குவேண்டிய சமாதானம்சொல்லி வருவேன்" என்றார். அதைக்கேட்ட வேதியன், "ஸ்வாமீ, அப்படிச் செய்தால் நான் முன்போலச் சண்டைசெய்தல் முதலாகிய தீச்செய்கைகளை விட்டு அவளோடு ஒற்றுமையாய் வாழ்ந்திருப்பேன்" என்று உறுதிமொழி சொல்லக்கேட்ட தாசரானவர், பொழுது போனபின்பு அவனை வீட்டுக்கழைத்துக்கொண்டுபோய் அவன் மனைவியையழைத்து, "உன் கணவனுக்கு உபதேசஞ்செய்து அழைத்துவந்தேன், இனி நீ அவனை உன் வசப்படுத்திக்கொண்டு மனமகிழ்ச்சியோடு வாழ்ந்திருக்கக்கடவை, அவன் கோவணத்தோடு வருவான், அவனை இகழாமல் அவனுக்கு நல்ல ஆடையைக் கொடு" என்று சொல்லிவிட்டு, வேதியனை நோக்கி, "நீ இனி மனந்தளரவேண்டாம், உன் மனையாளுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொன்னேன், நீ உன் வீட்டிற்குப்போ" என்று நியமித்தார். அப்பொழுது வேதியன், தாசரை நோக்கி, "ஸ்வாமீ, உமது சொல்லைத் தள்ளமாட்டேன்" என்று வணங்கித் தனது வீட்டில் பிரவேசித்தான். இவனைக் கண்டவுடனே மனைவியானவள் உயர்ந்த வஸ்திரங் கொடுத்து இனிய சுவையமைந்த அன்னமும் படைத்தாள். வேதியனும் அதுமுதல் கலகமில்லாமல் மனைவியோடு ஒற்றுமையாய் வாழ்ந்துகொண்டிருந்தான். இப்

படி. வேதியனைத் திருத்தி இல்லறத்தில் இன்பத்தோடு வாழும்படி அமைத்துவைத்த சந்தோபாபக்தரானவர், ஆடிமாசம் ஏகாதசிக்கு பண்டரியாத்திரை செய்ய விரும்பி வீணை, மிருதங்கம், தாளம், கருடக்கொடி இவை முதலானவைகளோடு ஸ்ரீஹரிநாம சங்கீர்த்தனம் செய்துகொண்டும், ஆனந்தக் கூத்தாடிக்கொண்டும் இரண்டாயிரம் ஹரிதாசர்களோடுகூடி ஏகாதசிக்கு முன்னாளாகிய தசமிதினத்தில் நரசிங்கபுரத்தின் அருகே போனார். அப்போது ஹரிதாசர்கள் எல்லாரும் அங்குள்ள நதிப்பெருக்கைக் கண்டு, "பண்டரிபுரத்திற்குப் போய் ஸ்ரீருக்மிணிநாயகனாகிய பகவானை ஹரிதினமாகிய நாளைக்கு எப்படித் தரிசனஞ் செய்யப்போகிறோம்? இந்த நதிப்பெருக்கைக் கடப்பதற்குரிய ஒரு ஓடம் நேரிட்டால் நன்றாயிருக்கும்" என்று வருந்தும்போது, பக்தரானவர் அவர்களை நோக்கி, "நீங்கள் மனம் வருந்தவேண்டாம், என்னோடு வாருங்கள், பகவானானவர் நம்மைக் காப்பாற்றினாலும் சரி, கைவிட்டாலும் சரி" என்று மனமகிழ்ச்சியோடு நதியிலிறங்கி முன்னே போகக்கண்டு, ஹரிதாசர்களெல்லாரும் இவரைப் பின்தொடர்ந்தார்கள். அப்போது ஸ்ரீ லக்ஷ்மீநாதனான பகவான் கூர்மரூபமாகி நீரினுள்ளே யிருந்து தாங்க, நீரானது கணைக்காலளவா யிருந்ததனால் தாசர்முதலிய எல்லாரும் சுலபமாய் நடந்து அக்கரை யடைந்து பண்டரிபுரம் சேர்ந்து சந்திரபாகாநதியில் நீராடிப் புண்டலீகரைத் திருவடி பணிந்து கோயிலுக்குள்ளேபோய் ஸ்ரீபாண்டுரங்கப் பெருமானைச் சேவித்து அன்போடு பணிந்து தழுவிக்கொண்டு அவனது திருநாமங்கள் பலவற்றையும் சொல்லித் தோத்திரஞ் செய்து, "பகவானே! உலகத்திலுள்ள அன்பர்களுக்கெல்லாம் அன்பனாகி அவர்கள் விரும்பினவற்றைக் கிருபை செய்கிறாய், உன் புகழ் சேடனுக்கும் சொல்ல முடியாதென்றால் என் சொல்லுக்கு அடங்குமோ? இன்று கூர்மரூபமாகி எங்களெல்லாரையும் காத்தருளின கருணாசாகரமாகிய உன் திருவடியை விட்டு நீங்காமல் இருக்கும்படி எனக்குக் கிருபை செய்யவேண்டும்" என்று பிரார்த்திக்க, பாண்டுரங்கப்பெருமானும் அருள்சுரந்து, "உன் விருப்பத்தின்படியே என்னைவிட்டு நீங்காமல் இவ்விடத்திலேயே வாழ்ந்திருக்கக்கடவாய்" என்று நியமிக்க, சந்தோபாபக்தரும், தமது குடும்பத்தோடு கூடி, அந்தப் பண்டரிபுரத்தில் தங்கி, ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தனம் செய்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே நீளோபா பக்தர் வைபத்தைச் சொல்லத் தொடங்கினார்.

சந்தோபா பக்தர் சரித்திரம் முற்றிற்று.

நாற்பத்தைந்தாவது

நீளோபாபக்தர் சரித்திரம்.

பலவளங்களும் நிறைந்த பிம்பளநேரி என்னும் ஊரில் வாழ்பவரும், யான் எனது என்கிற அஹங்கார மமகாரங்கள் இல்லாதவரும், எப்பொழுதும் ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தநஞ்செய்ய விரும்புவோரும், ஸ்ரீஹரிதாசர் சரித்திரங்களை எடுத்து எப்பொழுதும் புகழ்ந்துரைப்பவரும், குடும்பத்தைத் தம்மதென்று மனத்திற் கொள்ளாதவரும், யாசகவிருத்தியினாலேயே திருமாலடியார்க்கும் வறியவர்க்கும் பக்தியோடு உதவிசெய்து தமது குடும்பத்தையும் மகிழ்விப்பவரும் ஆகிய நீளோபா என்பவர் ஒருவர் இருந்தார். இவருடைய கன்னிகைக்கு மணப்பருவம் வாய்த்ததைக் கண்ட இவரது மனைவியார் இவரை நோக்கி, "நமது உறவினர் யாவரும் செல்வப்பெருக்கோடுகூடி வாழ்கின்றார்கள், நாமோ ஏழைகளாயிருக்கிறோம், அவர்களுக்கும் நமக்கும் எப்படிப் பொருத்தமாகும்?" என்று சொல்ல, தாசரானவர், "பெண்ணே! ஸ்ரீ கஜேந்திரவரதர் இருக்கிறார், அவர் நம்மைக் காத்தருளுவார், நீ அஞ்சவேண்டாம்" என்று சமாதானஞ் சொல்லி வாழ்ந்திருக்கும் நாளில், விவாகத்தினத்துக்கு முன்னாளில் ஸ்ரீபண்டரிநாதன் ஒரு கிழவேதியனாகித் தன் கையிலுள்ள ஜீர்ணவஸ்திரத்தில், சமையலுக்கேற்ற சில பதார்த்தங்களை முடிந்துகொண்டு தாசருக்கெதிரேவந்து நின்று, "நான் துர்ப்பலன், எளியவன், சமையலுக்குரிய சில பதார்த்தங்களைக் கொண்டுவந்தேன், அவைகளைச் சமைக்கச் சக்தியில்லேன், ஆதலால் அவைகளைச் சமைத்துக் கொடுத்தால் பசிதீர வுண்பேன்" என்றான். அதுகேட்ட தாசர் வேதியனைப் பணிந்து, "நீர் ஒரு பதார்த்தமும் கொடுக்கவேண்டியதில்லை, ஸ்ரீ பண்டரிநாதனுக்கு நிவேதிக்கும் பிரசாதத்தைக் கொடுக்கிறேன், வாரும்" என்று சொல்ல, வேதியன் பண்டரிநாதனுக்கு நிவேதித்து நீர் கொடுக்கும் பிரசாதம் கொஞ்சம், அதை யுண்டு என் பசி தணியாது" என்று சொல்ல, தாசரானவர் தமது மனைவியாரை நோக்கி, "இந்த வேதியருக்குச் சிறந்த திவ்வியான்னங்களைச் சமைத்து அன்போடு உண்பிக்கவேண்டும்" என்று நியமிக்க, மனைவியாரும் "அப்படியே யாகட்டும்" என்று சொல்ல, வந்த வேதியர் அவரை நோக்கி, "நான் கொண்டுவந்த இந்தப் பாகம் என் பொருள், இதனை உமது பெண்மணத்துக்குச் சேகரிக்கப்பட்ட பொருள்களோடு சேர்த்துவைத்தால் மனமொத்து நீர் இடும் அமுதை நான் இனிதாக

உண்பேன்" என்றார். அப்பொழுது தாசருடைய மனைவியார், "நாம் இந்த வேதியர் கொண்டுவந்த வஸ்துக்களை வாங்கிக்கொள்ளாவிடில் இவர் அமுது செய்யமாட்டார், தீமை நேரிடும்" என்று யோசித்து, அவர் கொடுத்த வஸ்துக்களை ஏற்றுக்கொண்டு, விவாக விஷயமாய்ச் சேகரித்த வஸ்துக்களின் நடுவே வைத்தார். அதைக்கண்டு இடைவிடாமல் ஹரிநாமசங்கீர்த்தநம் செய்பவராகிய தாசரானவர், இவர் விஷயத்தில் மிகவும் அன்பு பாராட்டினர். அப்போது வேதியன் தாசரை நோக்கி, "பகவானுக்கு நிவேதித்த ப்ரஸாதத்தை முன்னே கொடுத்தால், உண்டு, கொஞ்சம் பசிதணிந்திருப்பேன், அப்பால் சமையலாகிற வுணவுகளை வயிறாற வுண்பேன்" என்றான். அப்படியே தாசரும் பகவத் பிரசாதத்தைக் கொடுக்க, விரும்பி உண்டார். பிறகு தாசரானவர் தமது மனைவியாரை நோக்கி, "நீ சீக்கிரமாய், சமையல் செய்யவேண்டும்" என்று நியமிக்க, அவ்வாறே அவர் மனைவியாரும் விரைவில் சமைத்துப் பரிமாற, வேதியர் வயிறாறவுண்டார், பிறகு தாசரும் உண்டார். அன்றிரவில் வேதிய வுருவங் கொண்டுவந்த பகவானனவர் தாசர் முகத்தை நோக்கி, "உங்கள் பெண்ணின் விவாகம் நாளைக்கு நேர்ந்திருத்தலால், நான் அந்த விவாக காரியங்களெல்லாவற்றிற்கும் முன்னின்று, முடிவளவும் உதவிசெய்து, மணப்பந்தலிலேயே உண்ணுதற்கு என் மனம் விரும்புகின்றது" என்று சொல்ல, மெய்யன்பராகிய "நீளோபாபக்தரும் அப்படியே செய்யலாம்" என்று வணங்க, அவ்விரவும் நீங்கிற்று, பொழுதும் விடிந்தது. விடிந்தவுடனே வேதியர் விரைவாய் எழுந்து மனைமுழுதும் விளக்கி, மெழுகி, காவடிகொண்டுபோய் நீர் மொண்டுகொண்டுவந்து, வீட்டில் செய்யவேண்டிய வேலைகளை யெல்லாம் செய்துகொண்டிருந்தார். அப்போது மாப்பிள்ளையும் உறவினராகிய ஐஞ்ஞூறுபேரும் கொண்டுவந்து வைத்த பண்டங்களில் வேண்டுமவற்றை எடுத்துக்கொண்டு சமையல் செய்து, பலகார வகைகளோடு, வந்தவரெல்லாரும் வயிறாற வுண்ணும்படி பரிமாறி, உண்ட பிறகு எச்சில் இலைகளையும் தானே எடுத்து எறிந்து, எச்சிலிடம் பூசி, கைகால்கள் சுத்திசெய்துகொண்டு, சந்தன புஷ்ப தாம்பூலாதிகளும் கொடுத்து, மற்றுமுள்ள குற்றேவல்களும் செய்தார். தாசர் இந்த வேதியர் செய்த பணிவிடைகள் எல்லாம் கண்டு மனமகிழ்ந்து, "உமது பெயர் என்ன?" என்று கேட்க, "என் பெயர் விட்டலன்" என்று சொல்லி, "உமது பெண் விவாகத்தில் வயிறாற உண்டு என் இளைப்புத் தீர்ந்தேன்" என்று சொல்லக்கேட்ட தாசர், மிகவும் அன்போடு, இந்த வேதி

யருக்கு ஒரு வஸ்திரம் கொடுக்கவேண்டும் என்று நினைத்திருந்தார். நாலுநாள் கழிந்து, ஐந்தாநாள், வந்தவரெல்லாரும் போய்விட்ட பிறகு, சிறந்த வஸ்திரமொன்றை வருவித்து, விடோபாவுக்குக் கொடுக்கும்பொருட்டு அவரை யழைக்க, மணவேலை முழுதும் நிறைவேற்றின வேதியர் காணப்படாதமையால், தாசரானவர் ஆலோசித்து, இங்கு வந்து நமது பெண்ணின் மணவேலை முற்றும் சிரத்தையோடு நிறைவேற்றினவர் ஸ்ரீகண்ணபிரானே யென்று தீர்மானித்துப் "பகவானே, இப்படி வந்து நமது வீட்டு வேலைகள் செய்ததனால் நான் அபராதியானேனே" என்று இரங்கி, தளர்ச்சியோடு நித்திரை செய்யும்போது, அவரது கனவில் ஸ்ரீபண்டரிநாதன் எழுந்தருளி, இடையில் கையை வைத்துக்கொண்டு நின்று, உனது அன்புக்கு மகிழ்ந்தேன், இந்த உண்மையை உலகத்தாரெல்லாரும் அறியும்படி நான் இவ்விடத்தில் எப்போதும் நிற்பேன்" என்று சொல்லித் தமது திருக்கரத்தை இவரது சிரசில் வைத்தருளினர். உடனே தாசர் எழுந்து நோக்குதலும், பகவானுனவர் கனவிற் கண்ட நிலைபோலவே எதிரே நிற்கக்கண்டு, வணங்கி வாழ்த்தி ஹரிநாமசங்கீர்த்தநம் செய்து அவர் திருவடியைப் பூஜித்திருந்தார். அவ்விடத்தில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ விட்டலமூர்த்தியை விரும்பி வருஷந்தோறும் பங்குனிமாசம் கிருஷ்ணபக்ஷம் துவிதியை தினத்தில் மஹோற்சவம் நடத்தப்பட்டு வருகின்றது என்று சொல்லி, மேலே உத்தவசித்கனர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

நீளோபாபக்தர் சரித்திரம் முற்றிற்று.

நாற்பத்தாறுவது

உத்தவசித்கனர் சரித்திரம்.

தாரூர் என்னும் நகரத்தில் தத்துவப்பொருளை முற்று முணர்ந்தவரும் விரக்தியோடு கூடிய மனத்தை யுடையவரும் அனேக நூல்கள் செய்து முடித்தவரும் ஆகிய உத்தவசித்கனர் என்பவர் ஒருவர் முற்காலத்தில் இருந்தார். இவர் சித்திரை சுத்தப் பிரதமை தினத்தில் புறப்பட்டுப் பேதரி நகரத்தில் வந்து ஸ்ரீஹரிநாமசங்கீர்த்தனம் செய்ய, அவ்வூரிலுள்ள பக்தர் முதலான எல்லாரும் கேட்டு மகிழ்ந்து ஆனந்த பரவசராய் இவரை வணங்கி "ஸ்ரீராமநவமிவரைக்கும் இவ்விடத்தில் எழுந்தருளி யிருக்கவேண்டும்" என்று பிரார்த்திக்க, அவர்கள் பிரார்த்தனையை மறுக்கமாட்டாமல் சம்மதித்து அவ்விடத்தில் தங்கியிருந்தார். ஸ்ரீராமநவமி உற்சவம் நெருங்குத

னும் எவ்விடத்திலும் அலங்காரம் செய்து ஸ்ரீராமபிரானை எழுந்தருளப்பண்ணி ஸ்ரீராமசங்கீர்த்தநத்தை அன்போடு செய்து உற்சவ தினங்களிலும் நாள்தோறும் ததியாராதநம் நடத்தி உற்சவம் சாத்துசெய்யுந் தினத்தில் அனேக வாத்தியங்கள் முழங்கச் செய்து கருடக்கொடியேந்தி ஹரிநாமசங்கீர்த்தநம் செய்துகொண்டு ஊர்வலம் வந்தார்கள். வரும்போது வழியில் உள்ள ஒரு மசிதில் இருந்த பல துலுக்கர் இவர்கள் வருகிற ஆடம்பரத்தைக் கண்டு இவர்களை வருத்தவேண்டுமென்றெண்ணி ஹரிதாசராகிய வேதியர்மேல் சாணியுண்டைகளை எறிந்து கருடக்கொடியை ஒடித்து வீணை முதலிய வாத்தியங்களையும் அழித்தார்கள். அப்போது தாசரெல்லாரும் நடுங்கி ஓடி உத்தவஸிம்ஹனர் இடத்திற் சென்று நடந்த செய்தியெல்லாம் சொல்ல, அவர் ஸ்ரீராமபிரான் சந்நிதியை யடைந்து கேசவாதி திருநாமங்களால் ஸ்தோத்திரஞ் செய்து "ஸ்ரீஹரிதாசர்கள் உன் திருநாமசங்கீர்த்தனம் செய்வதில் உனக்கு விருப்பமில்லையோ? துருக்கர் செய்யும் இடையூற்றைக் கண்டும் தேவரீர் சும்மா இருந்தால் அவர்கள் விஷ்ணு பக்தர்களை மிகவும் வருத்துவார்களே, அந்தப் பக்தர்கள் வருந்த நேரிடுமானால் உனக்கு பக்தபரிபாலனன் என்னும் திருநாமம் எப்படி நிலைத்திருக்கும்" என்று வருத்தத்தோடு சொல்லக்கேட்ட துருக்கர்கள் அவ்விடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த ஸ்ரீராமபிரானை ஒரு மாடத்தில்சேர்த்து அலங்கார முழுதும் கலைத்துக் கவிழ்த்திருந்தார்கள். இந்தச் செய்தியை ஆஞ்சநேயர் அறிந்து இப்படிப்பட்ட துஷ்டர்களைச் சிக்ஷிக்கவேண்டுமென்றெண்ணி அவர்களிருந்த மசிதை இடிந்து விழும்படி மோதுவேனென்று வரும்போது ஞானவானாகிய ஒரு பகிரானவர், இவர் செய்யப்போகுங் காரியத்தை யறிந்து இவரை வணங்கி எதிரே நின்று, "ஓ மஹாநுபாவா, அடியேன் இருக்குமிடம் மாத்திரம் அழியாமல் இருக்கும்படி கிருபைசெய்து மற்றதை உமது இஷ்டம்போல நாசஞ் செய்யலாம்" என்று பிரார்த்திக்க, இவன் பிரார்த்திப்பதைக் கண்ட அந்தத் துருக்கர்கள் "இந்தப் பகிருக்குப் பித்தம் பிடித்தது" என்று அவமதித்துப் பேச, பகிரானவர், அவர்களை நோக்கி, "ஏன் துள்ளுகிறீர்கள்? இன்னும் சற்றுநேரத்தில் நீங்களும் உங்கள் மசிதும் படுகிறபாட்டை நீங்களே பார்க்கப்போகிறீர்கள்" என்று சொல்ல, துருக்கர்கள் "எங்கள் மசிதை அழிப்பதற்கு இவன் சமர்த்தனுவானு? இவன் அப்பனும் சமர்த்தனுகமாட்டான்" என்று இகழ்ந்து சொல்லிக்கொண் டிருக்கும்போது ஆஞ்சநேயர் கோவத்தோடு

வந்து ஒரு கையினால் மசீதை மோதினர். இவர் கைபடுமுன்னே அந்த மசீதானது மேருமலை இடிந்து விழுந்தாற்போல இடிந்து விழுந்தது; அதிலிருந்த ஐஞ்ஞூறு துருக்கர்களும் மடிந்தார்கள். இந்தச் செய்தியைஅயலிலிருந்து பார்த்த வேறு சில துருக்கர்கள், தம் அரசனிடத்தில் ஓடிச்சொல்ல, அவன் மிகவும் கோபங்கொண்டான். உடனே அவனுக்கு வயிற்றில் பொறுக்கக்கூடாத நோய் உண்டாயிற்று. அந்த நோயைப் பொறுக்காதவனாகிப் பூமியின்மேல் விழ்ந்து புரண்டு உத்தவசித்கனர் இடத்தில் வந்து, அன்போடு பணிந்து தோத்திரஞ்செய்து, "ஸ்வாமீ! உங்களைத் துன்பப்படுத்தினவர்களெல்லாரும் மடிந்துபோனார்கள். இப்போது ஆஞ்சநேயரைப் பிரார்த்தித்து என்மீது அவர்க்குக் கிருபையுண்டாகும்படி செய்ய வேண்டும்." என்று வேண்ட, அப்படியே அவரும் ஆஞ்சநேயரைப் பிரார்த்தித்து இவன் வயிற்றிலுண்டான நோயை நீங்கச்செய்தார். அரசனும் தன் அரண்மனையை யடைந்தான். ஹரிதாசராகிய உத்தவசித்கனர் தாளம், மிருதங்கம் முதலியவை முழங்க, ஹரிநாமஸங்கீர்த்தனம் செய்து அந்த ஊரை வலம்வந்து பேரானந்தத்தோடு இனிது வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே நாபாசிபக்தர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

உத்தவசித்கனர் சரித்திரம் முற்றிற்று.

நாற்பத்தேழாவது

நாபாசிபக்தர் சரித்திரம்.

காசிக்ஷேத்திரத்தில் ஜ்ஞான வைராக்கியங்களில் மிகுந்தவராகிய ஆனந்தஸ்வாமியென்று சொல்லப்பட்டவர் ஒருவரிருந்தார். அவர் சிஷ்டர் அநந்தாநந்த ஸ்வாமி, அவர் சீஷர் போகாரிதாசர், அவர் சிஷ்டர்கள் அக்கிரஜீ, கிலஜீ என்பவர்கள். இவ்விருவரில் மூத்தவரான அக்கிரஜீ நாள்தோறும் விஷ்ணுபக்தி செய்பவராய் அவரது கல்யாண குணங்களை யெடுத்துப் பேசுவோராய் வைராக்கிய சீலராய்ச், சாந்தி, தயைமுதலிய குணகணங்களுக்கு இருப்பிடமானவராய் இருந்தார். இவர் பிரபோதனி, பத்மஹஸ்தி முதலானோர்க்கு ஸ்ரீ ஹரி பக்தியை போதித்தார். சிரவணம் முதலிய நவவித பக்திகளில் ஒவ்வொன்றை ஒவ்வொருவர்க்குக் கொடுத்து அவர்களை ஈடேற்றினவராயிருக்கு மிவர்க்கு ஸ்ரீ லக்ஷ்மீநாதனாகிய பகவானானவர், தமது சகுணரூபத்தோடு இவர் நினைத்தபோதெல்லாம் சேவை சாதித்

தருளுவர். இப்படி யிருக்குங் காலத்தில், அந்தத் தேசத்தில் மழை யில்லாமல் சிறுமையுண்டாகி மிகுந்த துன்பத்தால் உயிர்கள் வருந் தும்போது அவ்வூரிலுள்ள ஒரு குணவதியானவள் தன் குழந் தைக்குச் சோறு கிடைக்காமல், மிகு துயரங்கொண்டு அங்கிரு ந்த ஒரு நதிக்கரையில் குழந்தையை வைத்துவிட்டு நதியில் விழு ந்து இறந்தாள். தனித்திருந்த அந்தக் குழந்தையானது தாயைக் காணுமையாலும் பசி வருத்தத்தாலும் கோவென்று அலறி யழும் போது அங்கே நீராடவந்த அக்கிரஜிதாசர், அந்தக் குழந்தையைக் கண்டு மிகவும் இரக்கமுற்று, அதனருகே போய் "ஏனழுகிறாய்?" என்று கேட்க, அக்குழந்தை "நான் என் தாயைச் சோறு கேட் டேன், அவள் என்னைவிட்டு எங்கேயோ போய்விட்டாள்" என்று சொல்லக்கேட்ட அக்கிரஜி மிகவும் கருணையுடையவராய் நீராடி மீண்டு அந்தக் குழந்தையை அழைத்து, "பயப்படாதே" என்று அபயம் கொடுத்ததனுல், இந்தக் குழந்தைக்கு அன்றுமுதல் நாபாஜி யென்னும் பெயர் உண்டாயிற்று. அப்படி அந்தக் குழந்தைக்கு நாபாஜி என்னும் பெயர்சூட்டி தமது மடத்துக்கு அழைத்துப் போனர். அவ்விடத்தில் இந்த நாபாஜி யென்பவர் அந்த மடத்தில் வந்து அமுதுசெய்கிற பெரியோர்களுடைய எச்சிலுண்டு வளர்வா ராயினர். அக்கிரஜி தினந்தோறும் செய்கிற தேவதார்ச்சனை முத லியவற்றைப் பார்த்தலாலும், மடத்தின் புறத்திலிருந்து வருகிற பெரியோர்களை யெல்லாம் திருவடி வணங்குதலாலும், மடத்தில் நடக்கும் ஸ்ரீபாகவத காலக்ஷேபம் முதலியவற்றைக் கேட்பதினு லும் இவரது சஞ்சித கர்மங்களெல்லாம் நசித்து மெய்ஞ்ஞான முண்டாகி உலகத்திலுள்ள எல்லாருடைய ஹ்ருதயத்தையும் அறி யத்தக்க விவேகியாய், த்ரிகால வர்த்தமானங்களையும் அறிய வல்லவ ராய், மவுனநிலையை யுடையவரா யிருக்குங் காலத்தில், ஒருநாள் அக்கிரஜி கங்கையில் நீராடி ஸ்ரீ ஹரிபூஜைசெய்து ஹாரதி சமர்ப் பித்துப் பகவத் சரணாரவிந்தங்களைத் தாழ்ந்து வணங்கி, நாபாஜியை உள்ளே யழைத்து, "ஒருவரையும் உள்ளே விடாமல் இருக்கக்கட வாய்" என்று நியமித்து, கதவடைத்து மேலே யொருகம்பளம் போர்த்து மாசன பூஜையிற் பொருந்தி ஏகாக்ரசித்தராயிருந்து, ஸ்ரீ ஹரியானவர், வராதிருக்க, இவர் மனம் வருந்தித் தியானித்துத் தியானித்து அயர்ந்திருந்தார். இதனை வெளியிலிருந்த நாபாஜி அறி ந்து, "ஸ்வாமீ! சமுத்திரத்தில் ஒரு வணிகனுடைய மரக்கலம் முழு கிப்போகாநின்றது; அதை அந்தக் கப்பலுக்கு யஜமானனுகிய

வணிகன் கண்டு ஸ்ரீத்வாரகா நிலயனாகிய பகவானை நினைத்து "என் கப்பல் முழுகாமல் கிருபை செய்வாயானால் உன் பரமபக்தனாகிய அக்கிரஜிக்கு இந்தக் கப்பலிலுள்ள பொன்னில் ஐந்திலொருபாகம் கொடுப்பேன், தவறமாட்டேன்" என்று பிரார்த்தித்தான். அந்த வணிகனது கப்பலை முழுகிப்போகாமற் செய்யும் பொருட்டாகவும் உமக்கு லாபமுண்டாகும் பொருட்டாகவும் பகவானானவர் அங்கே போயிருக்கிறார். ஆதலால் நீர் சற்றுநேரம் பகவானை நினையாதிருக்கவேண்டும்" என்று சொல்ல, அவ்வாறே அக்கிரஜியும் பகவானை நினையாதிருந்தார். சற்றுநேரம் பொறுத்து நாபாஜி, அக்கிரஜியை யழைத்து, "ஸ்ரீ கண்ணபிரான் கலங்காத்து மீண்டுவந்தான், இனி நீர், அவனைக் குறித்துத் தியானிக்கலாம்" என்றார். இதைக் கேட்டவுடன் அக்கிரஜியும் கண்ணபிரானைத் தியானிக்க, அவரும் பிரத்தியக்ஷமானார். அப்படிப் பிரத்தியக்ஷமான பகவானுடைய பீதாம்பரம் நனைந்திருக்கக்கண்டு வணங்கித் தோத்திரஞ்செய்து "ஸ்ரீ சக்ரபாணியாகிய பகவானே! இந்நேரம் எங்கே போயிருந்தாய்" என்று வினவ, பகவானானவர் கடலில் முழுகும் வணிகன் கப்பலை முழுகாமற் காத்து வந்தேன், அவ் வணிகன் அந்தக் கப்பலிலுள்ள பொருளில் ஐந்திலொருபாகம் உனக்கு அனுப்புவான், அதை வாங்கி மடத்துக்கு உபயோகிக்கக்கடவாய், உனக்கு மடத்தின் செலவு அதிகமாயிருக்கின்றது" என்று சொல்லி இவர் செய்யும் மானசபூஜை முடிந்தவுடனே மறைந்துபோனார். பிறகு அக்கிரஜியானவர், கதவைத் திறந்து நாபாஜியை உள்ளே யழைத்து, "பிரமதேவனுக்கும் தெரிந்துகொள்ள வொண்ணாத செய்தியை நீ எப்படித் தெரிந்துகொண்டாய்" என்று கேட்க, நாபாஜியானவர், நகை முகத்தோடு நின்று, "ஸ்வாமீ! தினந்தோறும் சாதுக்கள் பிரசாதத்தை உண்டதனாலும் தேவரீர் கிருபாவிசேஷத்தாலும் ஸ்ரீ கண்ணபிரானது செயலை அறிந்தேன்" என்று சொல்ல, அக்கிரஜி கருணைகூர்ந்து நாபாஜி முகத்தை நோக்கி, "ஸ்ரீ ஹரியின் கல்யாண குணங்களைப் புகழ்வதிலும் அவரடியார்களைப் புகழ்ந்தால், அந்தச் சக்ரபாணிக்கு மிகவும் திருவுள்ளம் உவக்கலாகின்றது, இந்த ரகசியார்த்தம் உலகத்தார்க்குத் தெரியாது, நான் உனக்கு இதனை விளங்கச் சொன்னேன், தெரிந்துகொள்வாயாக" என்று சொல்ல, நாபாஜி அக்கிரஜியின் திருவடியை வணங்கிப் புகழ்ந்து ஆசாரியர் நியமப்படி பக்த சரித்திரத்தை குவாலியர் பாஷையிலும் ப்ராக்ருதபாஷையிலும் வழங்கும்படி தினந்தோறும் பிரபந்தரூபமாக எழுதிக்கொண்

டிருந்தார். இவர் இப்படி எழுதுவதை அந்தத் தேசத்திலுள்ளோர் கேள்விப்பட்டு இவரை வணங்கி இவரிடத்தில் பக்தசரித்திரத்தை சிரவணஞ்செய்தும் மநநஞ்செய்தும் புகழ்ந்தும் இருக்கலானார்கள் என்று சொல்லி, மேலே நானக்தாசர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

நாபாஜிபக்தர் சரித்திரம் முற்றிற்று.

நாற்பத்தெட்டாவது

நானக்தாசர் சரித்திரம்.

பஞ்சாப் தேசத்தில் பேரறிவையுடையவரும், வைராக்ய சீலரும், நாள்தோறும் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்வோருமாகிய நானகர் என்னும் பெயருள்ள ஒருவரிருந்தார். இவர் மிகுந்த தநவந்தராகையால், அந்தத் தநமுழுதும் நல்வழியில் செலவுசெய்து, ஸ்ரீ கருடத்வஜனுகிய பகவத்பஜனையை இடைவிடாமல் செய்யவுத்தேசித்து ஒருவிஷ்ணுஆலயங்கட்டினர். ஆனல்அது துருக்கதேசமாகையால்அந்தத் துருக்கர் யாவரும் இந்த ஆலயத்தைக் கண்டு பொறாமைகொண்டு தூஷித்துக்கொண்டிருப்பதை நானக்அறிந்து, "இவர்கள் துஷ்டர்கள், இவர்கள் தங்கள் அரசனுக்குச் சொல்லி ஆலயத்தை இடிக்கவுஞ் செய்வார்கள், அப்படி அவர்களால் இடிக்கப்படுவதற்குமுன்பு நாமே யிடித்துத் தள்ளுவது நன்மையாகும்" என்று ஆலோசித்து, தாம் கட்டுவித்த ஆலயத்தைத் தாமே யிடித்துத் தள்ளினர். இப்படி யிடித்துத் தள்ளின பிறகு துருக்கருக்குச் சந்தோஷமுண்டாகும்படி ஒருமசிதுகட்டுவிக்க, இந்துக்களெல்லாம் இதைக்கண்டு இகழ்ந்து பேசுவதைக் கேட்டவுடனே, அந்த மசிதையும் இடித்துத் தள்ளிவிட்டு கொல்லைகளை உண்டாக்கினர். இப்படிப்பலவகையாலும் இவர்பொருளை யெல்லாம் நாசம் செய்வதைக் கண்டவரெல்லாரும், மறைவா யிகழ்ந்து பேசினதுமல்லாமல் நேரே யிவரைக் கண்டு "நீர் இப்படிச் செய்வதற்குக் காரணம் யாது?" என்று கேட்க, இவர் "சிலர் சங்கரனையும், சிலர் ப்ரஹ்மாவையும், சிலர் விஷ்ணுவையும், சிலர் சூரியனையும், இன்னம் பல தேவர்களையும் உத்தேசித்து வணங்குகிறார்கள். அவைகள் யாவும் நல்ல மதங்களே யென்று சம்மதித்து இப்படிச் செய்தேன்" என்று சொல்லினர். இவர் சொன்னதைக் கேட்டவர்கள் நகைத்து, "இவரைப் பகிரென்றாகிலும், பைராகி யென்றாகிலும் சொல்லுதற் கிடமில்லை. இவர் சுத்த ஸாத்விகமூர்த்தியா யிருக்கிறார்"

ளூர்" என்று, எல்லாரும் தமது அரசனிடத்துக்குப் போய், "நமது குலத்திற் பிறந்த ஒருவன், இப்படித் திரிவதைக் குறித்து விசாரிக்க வேண்டும்" என்று சொல்ல, அரசனும் ஒரு ஏவலாளனை யிவரிடத்துக்கு அனுப்பி, "குலாசாரத்தினின்றும் வழுவலாகாது" என்று வற்புறுத்தும்படி செய்தான். அப்படியே அந்த ஏவலாள் இவரிடத்துக்குப்போய், "உம்மை நமது குலாசாரத்துக்கேற்க நடக்கும்படி அரசன் உமக்குச் சொல்ல என்னை யனுப்பினன்" என்று சொல்ல, தாசர் அவனை நோக்கி, "மண்ணொன்றே கலங்கள் பலவாறுற்போலவும், பொன்னொன்றே ஆபரணங்கள் பலவாறுற்போலவும், முதற்காரணராகிய திருமாலொருவரே பலமதங்களுக்கேற்பப் பலதெய்வங்களாய் விளங்குகிறூர் என்கிற வுண்மையை யறிந்து நான் அவரைப் பரம்பொருளா யெண்ணி அவரை யிடைவிடாமல் பஜித்துக் கொண்டிருக்கிறேன்" என்று ஒரு பாட்டை யெழுதி அந்த ஏவலாளன் கையிற்கொடுக்க, அவன் கொண்டுபோய் அரசனிடத்தில் கொடுத்தான். அரசன் அந்தப் பாட்டைப் படித்துப்பார்த்து மிகவும் சந்தோஷித்து இவரது மெய்ந்நிலையைச் சோதித்தறிய வேண்டுமென்றெண்ணி, வெளிக்கு மிகவும் கோபங்கொண்டவன்போலத் தோன்றி, "இந்த நாட்டுக்கு அரசனுயிருக்கிற என் வார்த்தையைஇகழ்ந்தான், ஆகையால் அந்த நானகனைக் கைப்பிடியாய்க் கொண்டுவாருங்கள்" என்று நியமிக்கவே, ஐஞ்னூறு பட்டாணித் துருக்கர் ஒருங்கு கூடிப் புறப்பட்டு ஆயுதபாணிகளாய்த் தாசரிருக்கு மிடத்துக்கு வந்து வீட்டுக்குள்ளே நுழைய வுத்தேசிக்கையில், நானகர் அறிந்து ஸ்ரீபாண்டுரங்கப்பெருமானை நினைத்தார். உடனே பகவான் நியமனத்தால் பதினுயிரம் போர் வீரர்கள் அவ்விடத்தில் வந்து துருக்கர் ஐஞ்னூறு பேரும் மனம் கலங்கி யோடும்படி அடித்தார்கள். அவர்கள் ஓடிப்போய் அரசனிடத்திற் சொல்ல, அரசன் "அஷ்டசித்திகளும் பெற்றிருப்பவராகிய தாசரை இந்த மூடர்கள் சொன்ன சொல்லைக்கேட்டு வருத்தினேன்" என்று அநுதபித்து, உடனே வந்து நானக்தாசரை வணங்கி, "ஸ்வாமீ! பரமசாதுவாயிருக்கிற தேவரீரை அடியேன் அறிவின்மையால் துன்பப்படுத்தினேன், ஆயினும் அந்த அபராதத்தை க்ஷமித்து அடியேனைக் காத்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்து இவரிடத்தில் விடைபெற்றுச் சென்றுன். இந்தச் செய்தியை ஊராரெல்லாரும் அறிந்துவந்து பலவகைப் பொருள்களையும் சமர்ப்பித்து இவரிடத்தில் உபதேசம் பெற்றுக் கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது. இவர் இவ்வழியாய் வருகிற பொ

ருள் முழுதும் தம்மிடத்துக்கு வருகிற சாது ஜநங்களுக்கு அந்நதாநம் செய்யும் விஷயத்தில் உபயோகித்து வந்தார். இவர் மடத்தில் சேர்ந்திருக்கிற இவர் சிடர் பலருள்ளும் ரூத்திரா, மர்தனு என்னும் இரண்டு சிடர்கள் இவரிடத்தில் மிகவும் அன்பு பாராட்டித் தமது உடல் பொருள் ஆவி இம்மூன்றையும் சமர்ப்பணஞ்செய்து, ப்ரபஞ்சப்பற்று முழுதும் விட்டவராய், இவரை, வழிபடுதலே பரமப்ரயோஜநமாகிய மோக்ஷத்துக்கேதுவென்று கடைப்பிடித்து, இவரது கருணைக்குப் பாத்திரராகி, குருகுலவாசம் செய்துகொண்டிருந்தார்கள். இப்படி யிருக்குங்காலத்தில், ஒருநாள் நானகர் ரூத்திராவை மடத்தில் வைத்து, மர்தனுவை யழைத்துக்கொண்டு ஸ்ரீ ஹரிநாம ஸ்மரணையோடு வெளிப்பட்டார். வெளிப்பட்டவர், மக்காவிலுள்ள துருக்கர் அவ்விடத்திலுள்ள க்ருஷ்ண விக்ரஹத்தைப் பேர்த்துக் குப்புறக்கிடத்தி அதின்மேல் மாட்டெலும்புகளைக் குவித்துவைத்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு, அந்தக் கண்ணபிரானைச் சேவிக்கவேண்டுமென்று விரும்பி, மக்காவுக்குப் பிரயாணப்பட்டுப் போகும்வழியில் ஒரு கான்யாறுனது மிகவும் பெருகிக் குறுக்கே ஓடுவதைக் கண்டு, "அலக்நிரஞ்சநம்" என்று ஒருதரம் சொல்லி நீர்மேல் நடந்துபோனர். கூடவந்த சிடர், நீரிலிறங்க அஞ்சிக் கரைமேல் நின்றுவிட்டார். அப்படி நின்றவர் குருநாதரை அஞ்சலித்து, "ஸ்வாமீ! உம்மோடுகூட நீரிலிறங்க அஞ்சி நின்றுவிட்டேன், அடியேன் உம்மைவந்து சேரும்படியான ஒரு உபாயம் சொல்லியருளவேண்டும்" என்றார். அப்போது நானகர் தமது சிடரை நோக்கி "நீ குருத்தியாநம் செய்துகொண்டு நீரில் இறங்கினல் ஒரு தீமையுமில்லாமல் என்னோடு வரலாம்" என்றார். அதைக் கேட்ட சிடர் குருத்தியாநம் செய்து நீரிலிறங்க, நீரானது இவரது இடுப்பளவாயிருந்தது. ஆற்றின் நடுவே நீரானது கணைக்காலளவாயிருக்க நின்ற குருநாதரைப் பார்த்து, இவரும், நாம் நமது குருநாதர்போல அலக்நிரஞ்சநம் என்று சொல்லாமையாலல்லவோ நமக்கு இடையளவாயிருக்கின்றது, நாமும் அலக்நிரஞ்சநமென்று சொல்லுவோமானல் நமக்கும் கணைக்காலளவாகவேயிருக்கும் என்றுநினைத்து "அலக்நிரஞ்சநம்" என்று சொன்னர்; சொன்னவுடனே, நீரானது இவர்க்குக் கழுத்தளவாய்விட்டது. அப்போது இவர் அஞ்சி, குருநாதராகிய நானகரை நோக்கி அஞ்சலித்து, "ஸ்வாமீ! ஆற்றில் அமிழ்ந்துபோகின்றேன்" என்று கூவினர். நானகர் திரும்பிப்பார்த்து "நீ குருத்தியாநத்தைவிட்டுவிட்டாய்" என்று சொல்ல, மறுபடியும் இவர் குருத்

தியானம் செய்தவுடனே, நீரானது முன்போல இடுப்பளவாயிருக்க, குருநாதரோடு கூடவேபோய்க் கரையேறினர். அப்போது நானகர் இவரை நோக்கிச் "சீடரானவர்கள் தமது குருநாதர்கள் சொல்லும் வழியில் நடந்தால் நன்மை யுண்டாகும், அப்படி நடவாமற்போனல் தீமையுண்டாகும்" என்று சொன்னர். அதைக்கேட்ட மர்தானவா னவர் "அப்படியே இனிமேல் சற்குரு தியானத்தை மறவேன்" என்று சொல்லி நானகருடைய திருவடியை வணங்கினின்றார். பிறகு குருவும் சீடரும் ஆகிய இருவரும் மக்காவுக் கருகேபோய்ச் சேர்ந்த வுடனே, அந்த மக்காவி லுள்ளவர்கள் மாட்டிறைச்சியும் சோறும் விற்கும் வழக்கத்தையும், இந்துக்கள் வந்தால் அவர்களைத் தமது ஊரில் பிரவேசிக்காமற் செய்வதையும், தப்பிவந்தால் கொலைசெய் வதுமாகிய வழக்கத்தையும் நானகர் அறிந்து, அந்த மக்காவி லிருப் பவர்களுடைய கண்ணுக்குத் தோன்றாமல் தம் சீடரும் தாமுமாக ஊருக்குள்ளேபோய், ஸ்ரீகண்ணபிரானுடைய கோயிலிற் பிரவேசித் தார்கள். அப்போது அங்குள்ள முஜாவர் இவர்களைப் பார்த்து, "நீங்கள் யார்? இவ்விடத்துக்கு எப்படி வந்தீர்கள்?" என்று கேட்க, நானகர் அந்த முஜாவரை நோக்கி, "உத்பத்தி லயங்களுக்குக் காரண மாகி, சிற்பரஞ்சோதியாகி, திரிகுணாதீதமாகி, சர்வவியாபகமாகி, நிராமயமாகி, தற்பரமாகி நிற்பது எந்தப் பொருளோ, அந்தப் பொருளே நான், உலகத்திலுள்ள அடியார்களைக் காத்தருளும்பொ ருட்டு இந்தரூபங் கொண்டுவந்தேன்" என்று சொன்னர் அதைக் கேட்ட முஜாவர், "நீர் சொல்லுவது உண்மை யென்பதை யறியும் படி பரீக்ஷிக்க வேண்டியதா யிருக்கின்றது" என்றார். அதற்கு நான கர் முஜாவரை நோக்கி, "உமது இஷ்டம்போலப் பரீக்ஷிக்கலாம்" என்றார். முஜாவர் பழமையாயிருந்த இந்துக்களுடைய விக்ரஹத்தை இவ்வூரார் மண்ணிற் புதைத்திருக்கிறார்கள். அந்த விக்ரஹம் முன் போலவந்து கோயிலில் நிற்கும்படி செய்வீரானல் உமதுசொல்லை நம்பலாம்" என்றார். அதைக்கேட்ட நானகர் பக்தபராதீனராகிய ஸ்ரீ கண்ணபிரானைத் தியானித்து, "ஸ்வாமீ! அடியேன் சொன்னசொல் வீணாகாமல் இந்தத் துருக்கர் பார்க்கும்படி தேவரீர்வந்து கோயிலில் முன்போலவே நின்று சேவை சாதிக்கவேண்டும்" என்று பிரார்த் திக்க, த்ரிவிக்ரமராகிய பகவானனவர் இவருடைய ப்ரார்த்தனைக் குத் திருவுளங்கனிந்து, இவர் விரும்பினபடியே தமது திருவாழி திருச்சங்கங்களோடு எழுந்தருளினர்; எழுந்தருளின பகவானை நான கர் பலவகையாய்த் தோத்திரம்பண்ணி வணங்கி நிற்கக்கண்ட முஜா

வர் அஞ்சி, நானகருடைய திருவடியில் விழ்ந்து வணங்கித் தோத்திரப்பண்ணி, "நீர் உண்மையானதெய்வமே" என்பதற்குச் சந்தேஹமில்லையென்று மிகவும் புகழ்ந்து கொண்டாடினார். பிறகு அங்கிருந்து புறப்பட்டு மலைச்சாரல்களெல்லாம் கடந்து ஒரு நதியினருகே வந்தார். அவ்விடத்தில் ஒரு அரசன் தன் சேனைகளோடும் வந்தவன் அந்த நதிப்பெருக்கைக் கண்டு அஞ்சி, அதைக்கடந்து போகமாட்டாமல், அந்த நதிக்கரையில் நின்றான். அவன் இந்த நானகரைக் கண்டமாத்திரத்தில், இவரது திருவடியை வணங்கி, "ஸ்வாமீ! இந்த நதியைக்கடந்து போகும்படியான ஒரு உபாயம் சொல்லவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, இவர் காயிதத்தால் ஒரு தோணிசெய்து அதை அரசன் கையிற்கொடுத்து, "இந்தத் தோணியின்மேல் நீ உன் பரிவாரத்தோடும் ஏறிக்கொண்டு நிர்ப்பயமாய் ஆற்றைக் கடக்கலாம்" என்றுசொல்லித் தாம் தமது சிடரோடும் விரைவாக நதியைக் கடந்துவந்து வீற்றிருந்தார். அரசன் இவர்தந்த தோணியின்மேல் தன் பரிவாரத்தோடும் ஏற, அது புஷ்பகவிமாநம்போலஇடங்கொடுத்துவந்தது, நதிக்கரையிற்சென்று அரசன் தனக்கு முன்னேவந்து நதிக்கரையில் வீற்றிருக்கிற நானகரை அடிவணங்கி, "ஸ்வாமீ! தேவரீர் ஸாக்ஷாத் பகவதம்ஸமென்பதற்குச் சந்தேஹமில்லை, அடியேனுக்கு ஸ்ரீமந் நாராயணனைக் காணவேண்டுமென்கிற விருப்பம் அதிகரித்திருக்கின்றது; ஆகையால், அடியேனுக்குப் பகவானுடையசேவை கிடைக்கும்படி செய்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்தான். அதற்கு நானகர் "அரசனே! அந்தப் பகவத்ஸேவையானது சற்குருவின் உபதேச முகத்தால் கிடைக்குமேயன்றி வேறுவகையால் கிடைக்கமாட்டாது" என்றார். அரசனும் நல்லது என்று வணங்கித் தன் ஊருக்குப் போய்விட்டான். பிறகு, நானகர் தமது சிடரோடும் புநாநகரத்துக்குப் போனார். போய் அந்தப் புநாநகரத்தில் பெருந்தவத்தையுடைய கோரக்கர் எழுந்தருளக் கண்டு, வணங்குதலும், கோரக்கர் இந்த நானகரை நோக்கி, "நானகரே! உமது மஹிமை இந்த வுலகமெல்லாம் பரவி விளங்குகின்றது, இப்பொழுது ஹரித்வாரத்தில் நான்கு லட்சம்பேர் ஹரிதாசர்கள்வந்து கூடியிருக்கிறார்கள், அவர்களெல்லாருக்கும் அமுதளித்தால் நன்மையாகும்" என்றுசொல்ல, நானகர், அவரை நோக்கி, "ஸ்வாமி, நீர் சொன்னபடியே செய்கிறேன், நீர் முன்னேபோய் அமுதுசெய்ப வரவேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லிவையும்" என்றுசொல்ல, அப்படியே, கோரக்கர் அவர்களு

க்குச் சொல்லப் புறப்பட்டு ஹரித்வாரத்துக்குப் போய்க்கொண்டிருக்கும்போது, இந்த நானகர் அவருக்குமுன்னே ஹரித்வாரத்தை யடைந்து, அங்கிருந்த நான்கு லக்ஷம் ஹரிதாசர்களுக்கும் அமுதளித்து, அவர்கள் உண்டுமகிழ்ந்து நானகரைப் புகழ்ந்தபிறகு, ஆகாச மார்க்கமாய்ப்போன கோரக்கர்போய், அந்த ஹரிதாசர்களை நோக்கி, "இன்று நானகர் உங்களுக்கெல்லாம் அமுதளிப்பதாக உங்களுக்குச் சொல்லச் சொன்னார்" என்று சொல்லுதலும், அவர்கள் கோரக்கரை நோக்கி, "நானகர் இங்குவந்து எங்களுக்கெல்லாம் அமுதளித்து எங்களை மகிழ்வித்து இப்போதுதான் போனார்" என்றார்கள். அதுகேட்ட கோரக்கர், மிகவும்வியந்து, நானகரைப் புகழ்ந்துகொண்டிருக்கும்போது, நானகரும்வந்து கோரக்கரை வணங்கிநின்றார். அப்போது கோரக்கர் நானகரைத் தழுவிக்கொண்டு, "நான் ஆகாச மார்க்கமாய் வந்துகொண்டிருக்க, "நீர் ஸூக்ஷ்மரூபங்கொண்டு எனக்கு முன்னே வந்து, ஹரிதாசர்களுக்கெல்லாம் அமுதளித்து, அவர்களை மகிழ்வித்தீர்; உம்மைப்போலப் பகவத்பக்தர் இவ்வுலகில் ஒருவருமில்லை" என்று சொல்லி, மனமகிழ்ந்து ஆகாசமார்க்கமாய்ப் போய்விட்டார். நானகரும் தமது மடத்தை யடைந்து, சிஷ்யவர்க்கங்களோடுகூடி, ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே பிரேமாபாயி வைபவத்தைச் சொல்லத் தொடங்கினார்.

நானக்தாசர் சரித்திரம் முற்றிற்று.

நாற்பத்தோன்பதாவது

பிரேமாபாயி சரித்திரம்.

மஹா ப்ரபாவமுள்ள காசிக்ஷேத்ரத்தில் பிரேமாபாயி என்றொரு அமங்கலியார் இருந்தார். இவர் சாதுக்களிடத்தில் அன்பு மிக்கவரும், ஸ்ரீ பாகவதபுராண சிரவணத்தில் விருப்பமுள்ளவரும், ஸ்ரீ ஹரிநாமஸ்மரணையை மறவாதவரும், எல்லாச் சீவர்கள்மேலும் அருளுடையவரும் ஆகியிருந்தார். இவர் நாள்தோறும் கங்கையில் நீராடிவந்து, தம்மிடத்திலுள்ள ஸ்ரீக்ருஷ்ண விக்ரஹத்தை அர்ச்சித்தேத்தி வழிபட்டு, ஆநந்தபாஷ்பம் துளிக்கின்ற கண்களையுடையவராய்ப் பரவசப்பட்டிருப்பார். இப்படியிருக்கிற இவர் வீட்டிற்கு ஒருநாள் சில சாதுஸஜ்ஜநங்கள் வந்தார்கள். அவர்களை வணங்கி, ஆநந்தத்து, "இவர்களுக்கு அமுதளிக்கும் வேளையிற் பிரவேசித்தால்

இன்று ஸ்ரீபாகவத சிரவண மில்லாமற் போகின்றது, இவர்களைப் பசித்திருக்கவிட்டுக் காலக்ஷேபத்துக்குப் போனால், பாகவதர்களுக்கு அமுதளிக்காத அபராதம் நேரிடுகின்றது, இதற்கு என்ன செய்வோம்'' என்று ஆலோசித்து, தமது பத்து வயதுள்ள மகனை நோக்கி, "நீ இன்றுபோய்ப் பாகவதம்கேட்டுவந்து, நடந்த கதையை எனக்குச் சொல்லக்கடவை'' என்று அனுப்பிவிட்டு, ஸ்ரீ ஹரிநாமங்கள் பலவற்றையுஞ் சொல்லிக்கொண்டே நீராடிவந்து, சமையல் செய்து ஸாதுக்களைப் பாத பூஜைசெய்து, அவர்களுடைய ஸ்ரீ பாத தீர்த்தத்தைஸ்வீகரித்து, பிறகு மிகுந்த உபசாரத்தோடு அமுது செய்வித்து, கால் கைகள் சுத்திசெய்ய நீர் தந்து, புஷ்ப சந்தந தாம்பூலங்கள் கொடுத்து, அதன் பிறகு ஸ்ரீபாகவத காலக்ஷேபத்துக்குப் போய்வந்த தமது புதல்வனோடிருந்துண்டு, மகனை நோக்கி, "அப்பா! நீ கேட்டுவந்த ஸ்ரீபாகவதகதையை எனக்குச் சொல்'' என்று கேட்க, அவனும் தான் அன்று கேட்டு வந்த உலூகலபந்தந சரித்திரத்தைச் சொல்லக் கேட்டு, அந்தச் சரித்திரத்தின் முடிவில், ஸ்ரீ கண்ணபிரான், தாயாகிய யசோதைப்பிராட்டி உரலோடு சேர்த்துக்கட்ட அந்தக்கட்டை யவிழ்த்துக்கொள்ளமாட்டாமல் கண்களில் நீர் பெருக்கி, அழுதுகொண்டிருந்தான் என்பதைக் குறித்து, மிகவும் மனம் வருந்தி "நான்போய் அந்தக்கட்டை அவிழ்த்துவிட்டு வருகிறேன்'' என்று சொல்லிப் புறப்பட்டுக் கோகுலத்துக்குப் போகும்போது, வழியில் ப்ராணனை விட்டுப் பரந்தாமத்தை யடைந்தார். இந்தச் செய்தியை வந்திருந்த சாதுக்கள் கேள்விப்பட்டு ஆச்சரியமடைந்து, "இவர் அந்தக்கண்ணன் விஷயத்தில் தாயினும் மிகுந்த அன்புள்ளவராய்ப் போய் உயிர் நீக்கினாரல்லவா'' என்று வியந்தார்கள். அந்தச் சமயத்தில் தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். பிறகு புதல்வன் இவருக்குச் செய்யவேண்டிய கர்மங்களையெல்லாங் கிரமமாகச் செய்து, தானும் விஷ்ணுபக்தியுடையவனாய், ஹரிதாசன் என்னும் பெயர் பெற்று ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டு இனிதுவாழ்ந்திருந்தான் என்றுசொல்லி, மேலே கிளாபாயி வைபத்தைச் சொல்லத் தொடங்கினர்.

பிரேமாபாயி சரித்திரம் முற்றிற்று.

ஐம்பதாவது

சிளாபாய் சரித்திரம்.

முற்காலத்தில் ஒரு அரசனுக்கு ஒரு புதல்வியார் பிறந்தார்; அவருக்குச் சிளாபாயியென்று பெயரிட்டு, கல்வி கற்கும் வயது வந்தவுடனே ஒரு உபாத்தியாயரிடத்தில் விட்டுக் கல்வி கற்பிக்கும்படி சொல்ல, அந்த வுபாத்தியாயரும் அப்படியே கல்வி கற்பித்துவரும் நாளில், அரசனாகிய தமது தந்தை சாளக்ராம பூஜை செய்வதைக் கண்ட இவர், உபாத்தியாயரை நோக்கி, "ஐயரே! எனக்குச் சாளக்ராம பூஜை செய்யவேண்டுமென்கிற விருப்பம் அதிகரித்திருக்கின்றது, ஆகையால் தினந்தோறும் பூஜைசெய்வதற்கு ஒரு சாளக்ராமம் சம்பாதித்துக் கொடுக்கவேண்டும்" என்றார். உபாத்தியாயர் இவர்க்கு இந்தச் சிறு வயதில் இந்தப்புத்தி யுண்டானதைக்குறித்து ஆச்சரியமடைந்து, ஒரு கருநிறங்கொண்ட உருள் கல்லை இவர் கையிற் கொடுத்து, "இதைப் பூஜித்துவா" என்று சொல்ல, அதை மிகவும் அன்போடு வாங்கிவந்து தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, தினந்தோறும் உதயத்தி லெழுந்து நீராடிவந்து, தமது தந்தைபோலத் தாமும் சாளக்ராம பூஜையை மந்திரமில்லாமற் செய்துவந்தார். இவருடைய மனவுறுதியை ஸ்ரீ பகவானானவர் அறிந்து, அந்தக்கல்லிலே ஸாந்நித்யஞ் செய்திருந்து, இவர் செய்கிற நைவேத்யங்களை அன்புடனே யேற்றுக்கொண்டார். இவர் தினந்தோறும் சாளக்ராம பூஜை செய்கிறதைக் கண்ட தாய்தந்தையர்கள், "இது ஒரு விளையாட்டு" என்றிருந்தார்கள். இப்படியிருக்குங்காலத்தில், இவர்க்குத் தகுதியான பருவம் வந்ததைக்கண்டு, இவரைத் தமது குலத்தானாகிய ஒரு ராஜகுமாரனுக்கு மணமுடித்துக் கொடுத்தார்கள். அவன் இவரையழைத்துக்கொண்டு தன் ஊருக்குப் போகும் வழியில் இவர் தமது பூஜைப் பெட்டியிலிருக்கிற சாளக்ராமத்தை யெடுத்துவைத்துப் பூஜை செய்யக்கண்ட இவரது கணவன், "இது என்ன" என்று கேட்க, இது "என் குலவொழுக்கம்" என்று சொல்ல, அவன் "இவள் இவ்வயதில் பூஜைசெய்யத்தகுந்தவளோ" என்று இவர்க்குத் தெரியாமல் அந்தப் பூஜை பெட்டியை யெடுத்து நதியி லெறிந்துவிட்டான். மறுநாள் உதயத்தில் இவர் எழுந்து நீராடி வந்து, பூஜைப் பெட்டியை வைத்த இடத்திற் காணாமையால் மிகவும் துக்கித்து, "ஓ பகவானே! நான் உன் ஸ்வரூபமான சாளக்ராமத்தைப் பூஜை செய்யாமல் உண்ணேன்" என்று சொல்லிப் புலம்பும்போது,

மாமனும் மாமியும்வந்து எவ்வளவு சமாதாநம் செய்தாலும் கேளாமல் நாலுநாளளவும் உபவாசமாயிருந்தார். ஐந்தாநாள் விடியற்காலத்தில் ஸ்ரீ கண்ணபிரான் இவர் மனநிலைமை யறிந்து, இவர்க்குக் கல்வி கற்பிக்கிற உபாத்தியாயர்போல இவருடைய கனவில்வந்து, பூஜைப் பெட்டியைக் கையிற் கொடுத்துவிட்டுப் போக, இவர் விழித்துப் பார்த்துத் தமது பூஜைப்பெட்டி யிருக்கக்கண்டு, போய் நீராடிவந்து பூஜை செய்துகொண்டிருப்பதை இவர் கணவன் கண்டு, "நான் பூஜைப் பெட்டியை நீரி லெறிந்துவிட்டேன், அதை யாரெடுத்து வந்து இவர்க்குக் கொடுத்தார்கள்" என்று ஆச்சரியப்பட்டு, "இவர் மனநிலைமையைக் கண்டு, ஸ்ரீகண்ணபிரான் கொண்டுவந்து கொடுத்திருக்கலாம்" என்று துணிந்து, அவனும் விஷ்ணுபக்தியிற் சிறந்த ஹரிதாசனுகிச் சினாபாயியாரோடு கூடிவாழ்ந்திருந்தானென்று சொல்லி, மேலே சமர்த்தராமதாசசுவாமிகள் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

சினாபாயி சரித்திரம் முற்றிற்று.

ஐம்பத்தோராவது

சமர்த்தராமதாச சுவாமிகள் சரித்திரம்.

மஹாமஹிமையுள்ள கங்காநதிக்கு அஞ்சுகோசு தூரத்தில் சாம்புஎன்னும் ஊரில், கருணிகர்குலத்தில் அவதரித்தவரும் இல்லறவாழ்க்கையில் அமைந்திருப்பவரும், பரமார்த்தத்தைச் சாதிக்கும் படியான துணிவுள்ளவரும், சதாகாலமும் சாதுசேவை செய்பவரும், சதுர்வேத பாரங்கதரான ப்ராஹ்மணகுல திலகரும் ஆகிய சூரியாஜி பண்டிதர் என்பவர் ஒருவரிருந்தார். இவர் தமது தர்மபத்நியும், பதிவ்ரதாசிரோமணியும் ஆகிய ரேணுபாயி என்பவரோடுகூடி, அந்நோந்யமாய் இனிது வாழ்ந்திருக்குங் காலத்தில், இவ்விருவரும் சூரியோதயத்துக்கு முன்னே யெழுந்திருந்து, நீராடி, சூரியபகவானைக்குறித்து, ஷோடசோபசாரங்களும்செய்து, ஆதித்யஹ்ருதய பாராயணம் செய்து, மனவொருமைப்பாட்டோடிருந்து, சூரியபகவானுடைய திருநாமங்களை ஆயிரம் உருப்போட்டு வருவார். இந்தப்ரகாரம் பன்னிரண்டுவருடம் நியமமாய்ச் சூரியநாராயணபூஜையை நடத்திவரும் போது, சூரியநாராயணர் இவர்களுடைய பக்திக்குமகிழ்ந்து, இவர்க்கு ப்ரத்யக்ஷமானர். ஆனவுடனே, பண்டிதர் அன்போடு வணங்கி, கை குவித்து அஞ்சலி செய்து, தோத்திரம்செய்து நின்றார். அப்போது

சூரியபகவான் பண்டிதரை நோக்கி, "உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக் கொள்ளக்கடவாய்" என்றார். அப்போது பண்டிதர் "ஸ்வாமி! தேவரீருடைய தரிசனத்தினால் க்ருதார்த்தனானேன். என் மனைவியானவள் புத்திரப்பேரில்லாமல் மனம் வருந்துகிறாள், அவள் வயிற்றில் புதல்வருண்டாகும்படி க்ருபை செய்யவேண்டும்" என்று ப்ரார்த்திக்கும் சமயத்தில், ரேணுபாயியும் வந்து வணங்கினாள். அப்போது சூரியநாராயணர் இவர்களை நோக்கி, "உங்களுக்கு இரண்டு புத்திரர்கள் பிறப்பார்கள், அவ்விருவரில் மூத்தவன் எனது அம்சமாயிருப்பான், இளையவன் மாருதியின் அம்சமாயிருப்பான், அன்றியும் மூத்தவன் இல்லற தர்மத்தை மேற்கொண்டு வழுவாமல் நடத்திவருவான், இளையவன் வைராக்கியசீலனாய், பரம்பொருளையடைய முயற்சி செய்துகொண்டிருப்பான்; இவனை மேலான ஞானவானென்று யாவரும் புகழ்வார்கள்" என்று சொல்லிப் போய்விட்டார். இவரும் முன்போலவே பூஜையைநடத்திவந்து, ஏழுநாள் ரதசப்தமி யுத்சவமும் செய்து, ஆதித்ய வாரத்தில் வேதியர்க்கு அமுதளித்து மகிழ்வித்தார் முன்னே சூரியபகவான் கொடுத்தருளின வரபலத்தால் ரேணுபாயி வயிற்றில் கருத்தரித்து, பத்து மாதங்கள் நிரம்பினவுடனே நல்லநாளில் சுபமுகூர்த்தத்தில் ஒரு புதல்வனை யீன்றாள். தந்தையானவர் அந்தக்குழந்தைக்கு ஜாதகர்மங்கள் யாவுங் கிரமமாய் நடத்தி, கங்காதரர் என்று நாமகரணமுஞ் செய்து அன்போடு வளர்த்து, ஏழுவருடம் நிறைந்தவுடனே, உபநயனம் செய்வித்து, பிறகு கல்வி கற்பித்து, தகுதியான வயதுண்டான பிறகு மணமுடித்து வைத்தார். அதின்பிறகு, ரேணுபாயியார் உத்தமதினத்தில் மற்றொரு புதல்வனைப் பெற்று, அந்தப் புதல்வனுக்கு நாரணன் என்று பெயரிட்டார். இந்த இளைய குழந்தைக்கு ஜநநகாலத்திலேயே கொஞ்சம் வாலிருந்ததைக் கண்ட தந்தைதாயர்கள், "சூரியநாராயணர்சொன்னபடியே இவன் மாருதி அம்சம் என்பதற்கு அடையாளமாகக் கொஞ்சம் வாலும் இருக்கிறது" என்று பேசிக்கொண்டு, இந்தச்செய்தியை வெளிப்படுத்தாமல் குழந்தையை அன்போடு பாதுகாத்து வந்தார்கள். இந்தச் சிறுவனானவன் சற்றுநேரமாயினும் வீட்டில் தங்கியிருக்காமல் வெளியே போய்த்திரிந்து வருவதைக்கண்ட தாயானவர், 'அப்பா குழந்தாய்! நீ அடிக்கடி வெளியேபோனால், பூச்சாண்டி உன்னைப் பிடித்துக்கொண்டு போவான்" என்று பயமுறுத்தினர். அதைக் கேட்ட சிறுவன், "பூச்சாண்டி யென்னிடத்தில் வந்தால் அவனை ஒரே அறையால் கொன்றுவிடுவேன்" என்றுசொல்ல, தாயானவர்

நகைத்து மார்போடணைத்து முத்தமிட்டுக்கொண்டார். இப்படி அடிக்கடி வெளியேபோவதும், வருவதும், தாயார் அச்சுறுத்தினல் அவர் மனமகிழும்படியான மழலைச்சொற்களால் மகிழ்விப்பதுமாய் ஐந்துவயது நிரம்புமளவும் வளர்ந்து, கல்வி கற்கத்தொடங்கி ஒரு வருடகாலத்தில் சகல கலைகளையும் கற்று வல்லவரானர். அதின் பிறகு எழாம்வயது நிரம்பினவுடனே உபநயனம் செய்துவைத்தார்கள். இளையபுதல்வர் இப்படியிருக்க, மூத்தபுதல்வர் மிகவும் விவேகியாய் இல்லறத்தை நடத்திக்கொண்டு வந்ததுமல்லாமல் நித்யகர்மம், வேதாத்யயநம், ஹரிபூஜை, ஹரிநாமசங்கீர்த்தநம் முதலியவற்றையும் குறைவற நடத்திவந்தார்; இதுவுமல்லாமல், தந்தை தாயாருடைய ஏவற் பணிவிடைகளும் சிரத்தையோடு செய்துவந்தார். இப்படியிருக்குங்காலத்தில், ஒருநாள், அரசமரத்தினடியிலிருந்து ஸ்ரீராமநாமத்தை ஜபித்துக்கொண் டிருக்கும்போது, ஸ்ரீராமபிரானனவர் சர்வாபரண பூஷிதராய், ஸ்ரீஜாநகீ ஸமேதராய், கோதண்டபாணியாய், இளையபெருமாளும் அநுமானும் தொடர்ந்துவர, இவர்க்கெதிரே யெழுந்தருளினர்; எழுந்தருளுதலும், இந்தக் கங்காதரர் கண்டுகளித்து, அன்போடு வணங்கித் தோத்திரம்செய்து, உடல் பூரித்து, ஆநந்தபாஷ்பத்தைக் கண்கள்பொழிய நின்றூர்; அப்படி நின்றவரை ஸ்ரீராமபிரான், குளிரக் கடாக்ஷித்து, மாருதியை நோக்கி, "இவன் என்னை இடையறுமல் ஸ்மரித்துக்கொண் டிருந்ததனல், இவனுக்கு ராமிராமதாசன் என்று பெயர்கொடுத்தேன்" என்று சொல்லி அபபந்தந்து போய்விட்டார். அதின்பிறகு இவர்வந்து வீடு சேர்ந்தவுடனே, தந்தையானவர், "அப்பா! இந்நேரம் என்ன செய்தாய்?" என்றுகேட்க, இவர் நடந்த செய்தியெல்லாம் சொல்ல, தந்தையானவர் இவரை மார்போடணைத்துக் கொண்டார். பிறகு தந்தையார் மனமகிழும்படி, "பக்திரஸம்" என்னும் கிரந்தத்தைச் செய்துமுடித்து, அப்போது நேரிட்ட ஸ்ரீராமநவமி யுத்ஸவத்தையும் அதிக வைபவமாய் நடத்தி, ஒன்பது நாளும் ப்ராஹ்மண போஜநம் நடத்தி, பத்தாம் நாள் ஊர்வலம்வந்து உத்ஸவத்தைச் சாத்துசெய்து வீடுவந்துசேர்ந்து, பகவத்தியாநபரரா யிருந்தார்; இவர் இப்படியிருக்க, இவர்க்கிளையவராகிய நாரணர், மரங்களின்மேலேறித் தொங்குதல்முதலிய செய்கைகளை மேற்கொண்டும் பற்பல விளையாடலைச் செய்துகொண்டும் இருந்தார். இப்படி யிருப்பதைத் தாயார் அறிந்து, "மைந்தனே! நீ யிப்படித்திரிவது நன்றல்ல, தன தான்யங்களை மூயன்று சம்பாதித்தா லல்லவோ உனக்கு மணமுடி

த்துவைக்கலாம்'' என்று சொல்லக்கேட்ட இவர், மறுநாள் சூரி யோதயத்துக்கு முன்னேயெழுந்து, ஊருக்கருகே யிருக்கிற நெற் களத்திற்குப்போய், அவ்விடத்தில் நெருங்கியிருக்கிற நெற்பொதி களிலொன்றைத் தூக்கிக்கொண்டு, வாயுவேகமாயோடிவந்து, தமது வீட்டுத் திண்ணைமேல்வைத்து, தாயாரை யழைத்து, "எனக்குக் கட்டளையிட்ட காரியத்தைச் செய்துவிட்டேன்'' என்றார். இப்படி இவர் தாயாரிடத்தில்வந்து சொல்வதற்குமுன்பே, குடியானவன் ஓடிவந்து, இவருடைய தாயை நோக்கி, "உன் புதல்வன் என்னு டைய நெற்பொதியைத் தன் வலிமையால் தானொருவனே யெடுத் துக்கொண்டு வந்தான், பலசாலிகளான இருவர் தூக்கக்கூடாத நெற் பொதியை இவன் ஒருவனே தூக்கிக்கொண்டு வந்தான், இவன் ஒரு அவதாரபுருஷனு யிருக்கலாம்'' என்றான். இப்படிச்சொன்ன குடி யானவனை நாராயணசாமியானவன் நோக்கி, "ஏன் சலசலவென்று இரைச்சலிடுகிறாய், இந்த நெற்போர் உன்னதானல் எடுத்துக்கொ ண்டுபோ'' என்றார். அதைக்கேட்ட குடியானவன் சந்தோஷமாய்ச் சிலரோடு விரைந்துவந்து அந்த நெற்பொதியை யெடுக்க, அதின் கீழே மற்றொருபொதி யிருக்கக்கண்டு அதை யெடுத்தான், அதின் கீழே மற்றொருபொதி யிருக்கப்பார்த்தான், அதை யெடுத்தபிறகு, அதின் கீழே மற்றொருபொதி யிருக்கக்கண்டு, இனியெடுக்க நமக்கு ஸாத்யப்படாது என்று மனம்தளர்ந்து, "இவர் அவதார புருஷரும், பகவத் பக்தருமா யிருப்பதனல் இப்படிப்பட்ட காரியங்கள் இவ ரால் நடக்கின்றன'' என்று அதிசயித்து, இவரது திருவடியை வண ங்கிப் போய்விட்டான். பிறகு இந்த நாரணரும் தாம் தூக்கிக்கொண்டு வந்த நெற்பொதியைத் தமது வீட்டுக்குள்ளே சேர்த்தார். அந்தச் சமயத்தில் பண்டிதர்வர, அவர் மனைவியார், தமது புதல்வர் அவதார புருஷர் என்றுகூறி இப்போது நடந்த செய்தியெல்லாம் தெரிவிக்க, தந்தையார் மனமகிழ்ந்து, இந்தப் புதல்வருக்கு மணஞ்செய்ய ப்ரய த்னம்செய்தார். செய்து, தகுந்த கந்நிகை கிடைத்தவுடனே, மணத் துக்கு வேண்டிய பொருள்களெல்லாம் சேகரித்து, மங்கள வாத்தி யங்கள் முழங்க, சுபமுஹூர்த்தத்தில் மணமுடித்து, உறவினரோ டிருந்துண்டும் மணத்துக்குரிய மற்றச்சடங்குகளையும் செய்துமுடித் தும் களித்திருந்தார். இப்படி யிருக்குங்காலத்தில் இந்த மணமானது நமது பவபந்தத்துக்குக் காரணமென்று அறிந்து, இந்த நாரணர், மரங்கள் நெருங்கியிருக்கிற காட்டிற்போய் மறைந்தார். இவர் போ னது கண்டவர் யாவரும் பின்தொடர்ந்துபோய்க் காணுதவராய்த்

துக்கித்துச் சோர்வடைந் திருந்தார்கள். தாய் தந்தையரும் மிகவும் வருந்தி உயிர் நீங்கும்படியான நிலையிலிருப்பதைக் கண்ட உறவினர்வந்து இவர்களுக்குப் பலதைரிய வார்த்தைகள் சொல்லித்தேற்றி, "இச்சிறுவன், நைஷ்டிக ப்ரஹ்மசாரியாகிய மாருதியின் அம்ஸமென்றறிந்திருந்தும் நீங்கள் மணஞ்செய்தது உங்கள் குற்றமேயன்றி அவன் குற்றமல்ல, அவன் வந்தவழியை நோக்கிப்போனான், அவனைக்குறித்து நீங்கள் துக்கிக்க வேண்டியதில்லை, அவன் இந்த லோகத்தை யிடேற்றவந்தவன், அவன் இன்னங் கொஞ்சநாளில் வருவான்" என்றுசொல்ல, தாய் தந்தையர் ஒருவாறு மனக்கவலை நீங்கி, அவன் மழலைச்சொல் முதலானவைகளை நினைத்துப் பலவகையாய்ப் பேசிக்கொண் டிருந்தார்கள். இவர்கள் இப்படியிருக்க, இவர் ஒரு வலையிலகப்பட்ட மான் அந்த வலையைத் தப்பி ஓடி மறைவதுபோலத் தம்முள்ளக்களிப்போடு ஊரைவிட்டு விரைந்துபோய்க் காட்டில் புலி கரடி முதலான துஷ்டமிருகங்கள் பிறவுயிர்களைக் கொலை செய்வதைக் கண்டும் அஞ்சாமல் போகும்போது பசிதாஹங்களாலுண்டாகும் துன்பத்தைப் பொறுத்து வயிராக்கிய சிலராய் மனவுருக்கத்தோடு பகவானை நினைந்து பகவானனவர் எனக்கு எப்பொழுது அருள்செய்வாரோ என்று சிந்தித்துப் பிறகு மாருதியைத் தியாநஞ்செய்து தோத்திரித்தும் அவர் தனக்கெதிரேவந்து அருள் செய்யாததைக்கண்டு, "நான் சுகமாயிருந்து தியாநிப்பதனாலல்லவோ மாருதியானவர், எனக்குப் பிரத்தியக்ஷமாகவில்லை" என்று அந்தக் காட்டிலுள்ள கொடிகளை அறுத்துவந்து காலிற்கோத்து அதை ஒரு மரத்தின் கிளையில் கட்டித் தலைகீழாகத் தொங்கிக்கொண்டு "கடல் நீர் குளப்படி நீர்போலாகக் கடந்து, ஸ்ரீஜாநகியாரைக்கண்டு இலங்கையை நெருப்புக்கிரையாக்கிச் சிரஞ்சிவிகளில் ஒருவராகிச் சஞ்சீவி பர்வதத்தைக் கொண்டுவந்து இறந்தவர்களைக் காப்பாற்றி, இன்னும் அநேகமான உபகாரங்களைச் செய்த அஞ்சனைச் செல்வரே! ஸ்ரீராமபிரான் உம்மை இவ்வுலகத்தில் சிரஞ்ஜீவியாய் வைத்தது அடியார்களைக் காக்கும்பொருட்டல்லவோ" என்று பலவாறு புகழ்ந்து, "நீர் விரைவாக எனக்கெதிரே எழுந்தருளாதபக்ஷத்தில் நான் உயிரைவிடுவேன்" என்றுசொல்ல, ஸ்ரீ ஆஞ்சநேயர், இவர்க்கெதிரே தோன்றி இவர் காலிற் கட்டியிருக்குங் கட்டை யவிழ்த்து மார்போடு அணைத்துக்கொள்ள, இவர், அவரது அடியை வணங்கி அவர் புகழையமைத்து அபங்கக் கவிகளைச்சொல்ல, ஸ்ரீ ஆஞ்சநேயர் மனமகிழ்ந்து, இவரைநோக்கி, "நீ எனது அம்ஸமாக இவ்வுலகத்தில் பிறந்திருக்கிறாய்

ஆதலால் உனக்கு ஸ்ரீராமபிரானுடைய திருவருளுண்டாகும்படி செய்கிறேன், வா" என்று அழைத்துக்கொண்டு பஞ்சவடியை அடைந்தார். அப்போது சூரியன் அஸ்தமித்ததனல் அவ்விடத்திலுள்ள ராமகுண்டம் என்னும் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து மூழ்கி நியமங்களை முடித்துக்கொண்டு அன்று ஸ்ரீ ராமநவமி யாதலால் சக்ரவர்த்தித் திருமகனர் கோயிலில் அனேக சாதுஜனங்கள் வந்து சேர்ந்து, தாளம் ம்ருதங்கம் முதலிய வாத்திய விசேஷங்கள் முழங்கப் பாடியாடுவதை அங்கொரு புறத்திலிருந்து நோக்கிக்கொண்டிருந்து, அவர்களெல்லாரும் உற்சவத்தை நிறைவேற்றிச் சென்றபிறகு மாருதியானவர், இந்த நாரணரை அழைத்துக்கொண்டு கோயிலுக்குள்ளே பிரவேசித்து ஸ்ரீராமபிரானை வணங்கி வாழ்த்தி, அஞ்சலித்து நிற்க, பகவானனவர் இவரை நோக்கி, "நீ சேதுரக்ஷணத்தைவிட்டு இங்கு வந்தகாரியம் என்ன?" என்று கேட்க, ஆஞ்சநேயர், "பகவானே! இவன் என் அம்ஸமாகப் பிறந்தவனாதலால் இவனை உமது திருவடிக்கு ஆளாக்க அழைத்து வந்தேன்" என்று சொல்லினர். இப்படி இவர் சொல்லும்போது, கூட இருந்த நாரணர், குருவருள் பெறுதவராகையால் எதிரே எழுந்தருளியிருக்கிற ஸ்ரீராமபிரானைச் சேவிக்கப் பெறுமல் மனம் வருந்தும்போது ஆஞ்சநேயர், பெருமான் திருவடியில் வீழ்ந்து வணங்கி, "ஓ கருணைக்கடலே! இந்தச் சிறுவனைக் கிருபைசெய்து காத்தருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, பகவானனவர், "இந்தச் சிறுவனுடைய சிரசின்மேல் கையைவைத்து உபதேசித்து இந்தச் சிறுவனுக்கு மதிநலம் மேன்மேலும் உண்டாகக் கடவது" என்று ஆசிர்வதித்து ராமதாஸனென்று பேர்சூட்டி ஆஞ்சநேயரை நோக்கி, "இந்தச் சிறுவன் எனது ஸம்ப்ரதாயத்தை நன்ருகப் பிரகாசிக்கச் செய்து உலகத்திலுள்ள சேதநரைத் திருத்துவான்" என்று திருவாய்மலர்ந்தருள, வாயுபுத்திரரான ஆஞ்சநேயர், பகவானை வணங்கி விடைபெற்றுச் சிறுவனேடுபோய்க் கங்காநதியில் நீராடிப் பகவத்தியானஞ் செய்துகொண்டு நாசிகம் என்னும் திருப்பதிக்குக் கீழ்த்திசையில் உள்ள டாங்களி என்னும் ஊருக்குப் போகும்போது இந்தச் சிறுவராகிய ராமதாஸர் தேம்பித்தேம்பி அழத்தொடங்கினர். இதைக்கண்ட ஆஞ்சநேயர், இவரை நோக்கி "நீ ஏன் அழுகிருய்?" என்று கேட்க, இவர் "நான் ஸ்ரீராமபிரானைப் பிரிந்ததனல் எனக்குச் சகிக்கக்கூடாத துக்கம் உண்டாயிருக்கின்றது" என்று சொல்லி, என்னை அந்த ஸ்ரீராமபிரான் சந்நிதியில் கொண்டுபோய்ச் சேர்த்தால் உயிர் தரித்திருப்பேன்" என்று சொல்ல, மாருதியான

வர், இவரது வேண்டுகோளுக்கிரங்கி மீண்டும் பஞ்சவடியை யடைந்து ஸ்ரீ ஜாநகிரமணராகிய பகவானது திருவடியைத் தொழுதுநிற்க, ஸ்ரீராமபிரான் இவ்விருவரையும் நோக்கி, "போய் மீண்டு வந்த காரியம் என்ன" என்று கேட்க, ராமதாஸரானவர் பெருமாளை நோக்கி, "ஸ்வாமீ! உன் பிரிவைச் சகிக்கமாட்டாமல் மீண்டு வந்தேன், எப்பொழுதும் தேவரீருடைய திவ்யமங்களவிக்ரஹத்தைச் சேவித்துக்கொண்டே யிருக்கும்படி அடியேனுக்குக் கிருபை செய்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்து ஒரு அஷ்டகத்தால் தோத்திரஞ் செய்ய ஸ்ரீவநமாலிகாதரராகிய பெருமாளானவர், திருவுள்ளமகிழ்ந்து ராமதாசரை நோக்கி "விரைவில் உன் எண்ணம் நிறைவேறும், நீ மனம் வருந்தாமல் சந்தோஷமாய் இந்த மாருதியோடு போ" என்று சொல்லி மாருதியை நோக்கி, "இந்த ராமதாஸன் எப்பொழுது என்னை நினைத்தாலும் நீயே முன்னின்று இவனது கருத்தை முடிக்க வேண்டும்" என்று நியமித்தருளினர். பிறகு இவ்விருவரும் ஸ்ரீராமபிரானை அடிவணங்கி விடைபெற்று டாங்களி என்னும் ஊருக்குப் போய் ஸ்ரீராமசரித்திரத்தை மாருதியானவர், பகல் முழுதும் விஸ்தரித்துப் பிரசங்கிக்கவும் ராமதாஸர் அன்றிரவில் ராமநாம சங்கீர்த்தநம் செய்யவும் அங்குள்ளா ரெல்லாரும் கேட்டு இவ்விருவரையும் பூஜித்துக் கொண்டாடினார்கள். இப்படியிருக்க ஒருநாள் மாருதியானவர் தாஸரை நோக்கி, "நான் உன்னைத் தொடர்ந்து அநேகநாளாய் உன்னோடு கூடிவாழ்கிறேன், நான் சேதுரக்ஷணார்த்தமாகப் போகவேண்டும்" என்றுசொல்ல, தாஸரானவர் மாருதியை வணங்கி, 'உம்மைப் பிரிந்து ஒரு க்ஷணகாலமாயினும் நான் உயிர் தரித்திருக்க மாட்டேன், அன்று பஞ்சவடியில் ஸ்ரீராமபிரான் என்னை உம்மிடத்தி லல்லவோ ஒப்புவித்தது, அப்படியிருக்க நீர் என்னைவிட்டுப்போவது நன்றோ" என்றுசொல்ல, ஆஞ்சநேயர் தாஸரை நோக்கி, "நீ என்னைக் குறித்துத் துக்கிக்கவேண்டாம், ஸ்ரீவிபீஷணாழ்வான்பொருட்டுப் பெருமாள் கட்டளையின்படி திருவணையைக் காத்திருக்கவேண்டும், ஆகையால் நான் போகிறேன், நீ நினைத்தபோதெல்லாம் உன்னிடத்துக்கு வருவேன், அன்றியும் நீ உன்னை யாசிரயித்தவர்களுக் கெல்லாம் அநுக்கிரகஞ் செய்யும்பொருட்டுத் தென்றிசையை நோக்கி வருவாய்" என்றுசொல்லி, ஆசீர்வதித்துத் தம்மிடத்துக்குப் போய் விட்டார். பிறகு ராமதாஸர் அன்றுமுதல் தினந்தோறும் சூரியோதயத்தில் நீராடி ஸ்ரீ ஹரிபூஜைசெய்து அதன் பிறகு உஞ்சவிருத்தி செய்து வேதியரோடு இருந்து அமுதுசெய்து இடைவிடாமல் ஸ்ரீ

ஹரிபஜனை செய்துகொண்டிருந்தார். அப்போது அந்த நாசிகம் என்னும் ஊரிலுள்ளவரும் பிறவூர்களிலிருந்து அவ்வூர்க்கு வந்தவர்களும் இவர் செய்யும் ஹரிபஜனையைக்கேட்டுத் தாங்களும் ஹரிபஜனை செய்வதில் சிரத்தையுடையவர்களானார்கள். அவர்களுள்ளே உத்தவர் என்னும் ஒரு வேதியர் இவரது திருவடியை ஆசிரயிக்க, அவர் மனநிலையை அறிந்து அவருக்கு அநுக்கிரகஞ்செய்தார். அவ்வேதியர், பிரபஞ்சப்பற்று முழுதும்விட்டு இவருடைய சேவையே பரமப் பிரயோஜனமென்று துணிந்து இடைவிடாமல் இவரை ஆசிரயித்துக்கொண்டும், ஸ்ரீராமபஜனை செய்துகொண்டும் இருந்தார். இப்படி இருக்குங்காலத்தில் ஒருநாள் ராமதாஸர் ஆஞ்சநேயரது திருவுருவைப் பிரதிஷ்டை செய்யவேண்டுமென்று எண்ணின எண்ணத்தை அவரறிந்து, இவருக்குப் பிரத்தியக்ஷமாகி, "நீ என்உருவை இவ்விடத்தில் பிரதிஷ்டைசெய்ய எண்ணங்கொண்டாயாதலால் நீ அமைத்த இந்த விக்ரஹத்தையே ஸ்தாபிக்கக்கடவை" என்று சொல்லி, ஸ்தாபிக்கச் செய்து அதில் தாம் பிரவேசித்து விளங்கிக்கொண்டிருந்தார். ராமதாஸர் அநேக வேதியர்களை வருவித்து வேதவிதிப்படி அந்த ஆஞ்சநேய விக்ரகத்தை ஸ்தாபித்து, திருமஞ்சனம் முதலிய ஷோடசோபசாரமும்செய்து, ப்ராஹ்மண ஸமாராதனமும் விஸ்தாரமாகச் செய்து அன்றிரவில் ஆஞ்சநேய சரித்திரத்தையும் ஸ்ரீராம சரித்திரத்தையும் கீர்த்தநத்தி லமைத்துப் பாடிக்கொண்டிருந்துசூரியோதய காலத்தில் ஹாரதி ஸமர்ப்பித்துவந்தார். இவ்விதமாக இவர் தினந்தோறும் நடத்திவருவதை யாவரும் அறிந்துவந்து ஸ்ரீஆஞ்சநேயரைச் சேவித்துப் போகும்படியான வழக்கம் ஏற்பட்டு நடந்து வந்தது. இப்படி நடந்துவரும் நாளில் தாஸரானவர் உத்தவரையழைப்பித்து, "இன்றுமுதல் நீர் உதயகாலத்தில் நீராடி ஆஞ்சநேய பூஜைசெய்து அதற்குமேல் ஊரில் பிரவேசித்து உஞ்சவிருத்தி செய்து, அதிதிகளுக்கும் இட்டு நீயும் உண்டு ஸ்ரீ ஹரிபஜனை செய்துகொண்டு உன்னை யாசிரயித்தவர்களுக்கு உபதேசித்து, இவ்வாறு காலங்கழித்து வரக்கடவை" என்று நியமிக்க, உத்தவர் தாஸரை யடிவணங்கி, "ஸ்வாமி! நீரே என் ஹ்ருதயத்தில் தங்கியிருந்து எல்லாக்காரியங்களையும் நடத்தவேண்டுமே யன்றி நான் சுவயமாய் நடத்தமுடியாது" என்று சொல்ல, தாஸர், "அப்படியேயாகட்டும்" என்று ஆசீர்வதித்தார். பிறகு தாஸரானவர், நடுராத்திரியில் எழுந்து தென்திசையிலுள்ள காட்டுக்குப்போய்விட்டார். இவர்போய்ச் சற்றுநேரங் கழிந்தபிறகு உத்தவர் நித்திரைவிட்டெழுந்து தமது ஆசிரியரைக்காணு

மல்வருந்தி மனந்தெளிந்து, ஆசிரியர் நியமித்தபடியே நாள்தோறும் நடத்திவந்தார். காட்டிற்குப்போன ராமதாஸர், அவ்விடத்தில் உதிர்ந்த சருகையும் பழங்களையும் உண்டு நித்திரை செய்யும்போது அவ்விடத்திலுள்ள துஷ்ட மிருகங்கள் யாவும் இவரது ஹரிபஜனையின் பெருமையினால் சாந்தகுணத்தையடைந்து, அவைகளும் ஹரிபஜனை செய்துகொண்டிருக்கச் செய்து, அக்காட்டை விட்டு நீங்கிப் பல திவ்யதேசங்களுக்கும் போய், அவ்விடங்களில் உள்ளவர்களை ஹரிபஜனையால் திருத்தி, ஜாரட் என்னும் ஓர் ஊரையடைந்து அங்குள்ள ஆஞ்சநேய சந்நிதிக்குப் போய் அவரைச் சேவித்து விடைபெற்று மாவுலி நகரத்துக்கு வந்து, கிருஷ்ணாநதியில் மூழ்கி நேம நிஷ்டைகள் செய்து முடிந்தபிறகு ஆஞ்சநேயரை நினைத்தமாத்திரத்தில் அவர் இவருக்குப் பிரத்தியக்ஷமாயினார். அவரைத் தாஸர் தரிசித்து "அடியேனுக்கு ஸ்ரீராமசேவையில் விருப்பம் உண்டாயிருக்கின்றது" என்று சொல்ல, அவர் தாஸரை நோக்கி, "நீ பதின்மூன்று அக்ஷரங்களாகிய மூலமந்திரத்தை ஏகாந்த ஸ்தலத்திலிருந்துகொண்டு மூன்றரைக்கோடி உரு ஜபித்தாயானால், ஸ்ரீராமபிரான் உனக்கு ப்ரத்தியக்ஷமாவார் என்று சொல்லி மறைந்தார். மறைந்தபிறகு தாஸரானவர் ஸ்ரீராமபிரானை மனத்தினால் தியானித்து மந்திரஜபம் செய்துகொண்டிருந்தனர். இவ்வாறு ஊணுறக்கமில்லாமல் கடுந்தவம் செய்துகொண்டிருக்கும் நாளில், இந்தத் தவத்தின் மகிமையை அறிந்த இந்திரன் அஞ்சி, தன் குருவாகிய பிரகஸ்பதியை நோக்கி, "பூலோகத்தில்இத்தன்மையான கடுந்தவத்தைச்செய்துகொண்டிருப்பவன் யார்?" என்று வினவ, குருவானவர் இந்திரனை நோக்கி, "ஆஞ்சநேயர் உலகத்தை உத்தரிக்கும்பொருட்டு இப்படி அவதரித்து ஸ்ரீராமபிரானை மனத்தில் இருத்தி அருந்தவம் செய்கின்றார்" என்று சொல்லக் கேட்ட இந்திரனானவன், "இவர் செய்யும் அருந்தவம் முடிவுபெற்றால் நமக்கு என்ன தீங்கு நேரிடுமோ" என்று அஞ்சி, அந்தத் தவத்தை யழிக்கும்பொருட்டு மோகினியை யழைத்து, "ஓ பெண்ணே! நீ எல்லா உலகங்களையும் மயக்கவல்ல சக்தியுள்ளவளாதலால், இன்று பூலோகத்துக்குப் போய் ஸ்ரீராமத்தியானம் செய்துகொண்டிருப்பவனாகிய ராமதாஸனை மதிமயக்கி உன்னைத் தழுவும்படி அவனுக்குப் பித்து ஏற்றவேண்டும்" என்று ஏவி, அதன்பிறகு மன்மதனை யழைத்து அவனுக்கும் அப்படியே இவரது தவத்தை அழிக்கவேண்டிய முயற்சிசெய்யும்படி கட்டளையிட்டான். அப்படியே மன்மதன் அவ்வனமுழுதும் புஷ்பங்கள் மலர்ந்து நறுமணம்

வீசவும், தடாகங்களில் நீர் நிறைந்து அலை யெறியவும், மந்தமாருத மாகிய தேரிலேறி, குயில்களாகிற திருச்சின்னம் ஊதவும், பூர்ணசந்திரனுகிய குடை கவித்து விளங்கவும், வண்டொழுங்காகிய நாணோசை மிகவும், கமுகம்பாளைகளாகிய கவரிகள் வீசவும், அன்றிற்பறவைகள் ஒருபக்கத்தில் சப்திக்கவும், அசோகமரங்கள் மலர்களாகிய கை விளக்கேந்தவும், சண்பகம் முதலிய மலர்களின் மணம் மிகக் கமழவும், சோலையானது இருள்போல நெருங்கியிருக்கவும், தாழை மடல்கள் வாள்போல அசைந்து விளங்கவும், மாதராகிய சேனை சூழ்ந்து வரவும், கிளிகளாகிய புரவிகள் நெருங்கி வரவும், கரும்பாகிய வில்லை வளைத்து, வண்டு நாண்பூட்டி, தாமரைமலர் முதலிய பஞ்சபாணங்களைத் தொடுத்து, ராமதாஸரது மார்பின்மீது தாக்கும்படி பிரயோகித்தான். அந்தச்சமயத்தில் மோகினியானவள் வீணை வாசித்துக் கொண்டு தன் மேனியொளி யெங்கும் பிரகாசிக்க, அதிக ரூபலாவண்யத்தோடு வந்து, மின்கொடிபோலும் இடைதுவளவும், ஸ்தனதடங்கள் ஆடவர் மனங்களைச் சூறையிட்டு உலாவவும், முகமானது பூர்ணசந்திரன்போல விளங்கவும் மெல்லமெல்லக் கலாபமயில்போல அசைந்து நடந்து, பிரமன்முதலிய தேவர்களும் மயங்கும்படி தேவகானம்செய்தாள். அந்தத் தேவகானத்தைக் கேட்ட தாஸரானவர், தம்முள்ளே நகைத்துக்கொண்டு தமது மனம் சற்றும் அசையாதிருக்கும்படி யோகநிலையையடைந்து முன்போலவே இருந்தார். இப்படி இவர் இருந்த கலங்காநிலையைப் பிரமாதிதேவர்கள் கண்டு, இவரது மனவுறுதியையும் தபோமகிமையையும் புகழ்ந்து பூமழை பொழிந்து ஆசிர்வதித்துப் போனுர்கள். பிறகு இவரது தவத்தை அழிக்க இந்திரனுல் ஏவப்பட்டு வந்த மோகினியும் மன்மதனும் மனவருத்தத்தோடு மீண்டுபோய் இந்திரனுக்கெதிரே தலைவளைத்து நின்றுர்கள். அதைக்கண்ட இந்திரனும் இவர்கள் போனகாரியத்தில் வெற்றியடையவில்லை யென்பதை அறிந்து தானும் நாணமடைந்திருந்தான். அப்படியிருக்க, இவ்விடத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த ராமதாஸர், வாயுபுத்திரராகிய ஆஞ்சநேயரைத் தியானிக்க, அவர் இவருக்கெதிரே எழுந்தருளினர். தாஸர் அவரது திருவடியை வணங்கி, இங்கே இந்திரனுல்நிகழ்ந்த செய்திமுழுதும் சொல்லுதலும், மாருதியானவர் மனமகிழ்ந்து, "நீ இவ்வுலகுக்கு அச்சாணியா யிருக்கிறுய், உனக்கு ஸ்ரீராமபிரானது அநுக்கிரகம் மேன்மேலும் உண்டாகக்கடவது" என்று ஆசிர்வதித்த பிறகு, நல்ல கனிகளை இருவருமாக உண்டு, மாருதியானவர் தம்மிடத்துக்குப் போய்விட்டார். பின்பு தாஸரும் முன்போலவே தவஞ்செய்துகொண்டிருந்தார்.

இப்படிப் பன்னிரண்டு வருஷகாலம் கழிய, மந்திரஜபத்தொடங் பூர்ண மாதலும், ரகுகுலதிலகரான ஸ்ரீராமபிரான் இவரது தவத்து க்குத் திருவுள்ள முவந்து, ஸர்வாபரண பூஷிதராயும் வனமாலாதர ராயும்பஞ்சாயுதங்களோடுங்கூடினவராய் இவர்க்கெதிரே பிரத்தியக்ஷ மாகி நின்றார். அப்படி நிற்கிற சக்ரவர்த்தித் திருமகனுரைத் தாஸர் தரிசித்து வணங்கி நிற்றலும், இவரைப் பகவானுனவர் மார்போடு அணைத்து இவரது சரீரமுழுதும் தமது திருக்கைகளால் தடவினுர். அப்போது தாஸர், தமது இருவிழிகளிலும் ஆநந்தபாஷ்பம் ஒழுக நின்று ஒரு அபங்கக் கவியினுல் ஸ்தோத்திரஞ் செய்தார். அந்தத் தோத்திரத்தைக்கேட்ட ஸ்ரீ ஜாநகிநாதர் மிகுதியாகச் சந்தோஷி த்து, "நீ அபேக்ஷித்ததைக் கேட்டுக்கொள்ளக்கடவை" என்று நியமிக்க, தாஸர், "ஸ்வாமீ! ரகுநந்தனு; தேவரீரை என் மனத்தில் எப்பொழுதும் விளங்கும்படி இருத்தி உனது திருநாமமாகிய தாரக மந்திரத்தை இடையருமல் ஜபித்துக்கொண்டிருக்கிற ருத்திரமூர்த்தி போல மிகவும் தியானித்து அபங்கக் கவிகளால் உன்னைத் தோத்தி ரஞ் செய்யும்படி உனது திருவருள் தரவேண்டும் என்பதேயன்றி வேறு பொருள்களை என்மனம் விரும்பவில்லை" என்று சொல்ல, ஜக நிசனுகிய சக்ரவர்த்தித் திருமகனுர் இவருக்கு அபயந்தந்து எல்லா வற்றையும் அறியவல்ல தனது திவ்யஜ்ஞாநத்தையும் கொடுத்தருள, தாஸர், "அடியேன்செய்த தவமேதவம்"என்று சொல்லித் திருவடி யை வணங்க, பீதாம்பரதரனுன ஸ்ரீ பகவானுனவர், அந்தர்த்தான மடைந்தனர். அதன்பிறகு தாஸரானவர்; தினந்தோறும் அவ்வன த்தி லிருந்துகொண்டு; கிருஷ்ணு நதியில் நீராடி, பகவதாராதநஞ் செய்து, தாம் தவஞ்செய்யும் காட்டிற்கு அருகே யிருக்கிற ஒரு நகரத்திற்குப்போய், பதினெரு வீடுகளில் ஐயமேற்கும்போது, ஜய ரகுவீரஸமர்த்த என்று சொல்லி, ஐயமெடுத்து, கிடைத்ததைப் பெற்று, அதிதிகளுக்கீந்து மீதியை யெடுத்துப்போய் அடைசுட்டு ஸ்ரீராமபிரானுக்கு நிவேதித்து, அவர் அமுதுசெய்தபிறகு சேஷத் தைத் தாமுமுண்டு தவஞ் செய்துகொண்டு வரும்போது, அவகா சம் நேரிட்ட காலங்களிலெல்லாம் ஸ்ரீ ராமசரித்திரத்தைக் கவிகளா கச்செய்து அக்கவிகளை எட்டிலெழுதி அவ்வேடுகளை நதியில் விட்டு விடுவார். இப்படி நாள்தோறும் செய்துவருங் காலத்தில் சாதார் என்னும் ஊரில் வாழ்கிற சிவாஜி என்னும் அரசன்; வேட்டையாடும் பொருட்டு அவ்விடத்திற்கு வந்தான், வந்தவன் மூன்று ஜாமம் வரைக்கும் அலைந்து பசி மிகுந்தவனுய் "ஒரு பக்ஷியாயினும், ஒரு

விலங்காயினும் நமக்கு இன்று கிடைக்கவில்லையே" என்று மிகுந்த களையோடு வரும்போது, தாஸர் இருப்பதைப் பார்த்து இவர் சமீபத்தில் வந்துவணங்க எண்ணங்கொண்டான். ஆனால் இவரை மிருகாதிகள் சூழ்ந்துகொண்டிருப்பதை நோக்கித் திகைத்து நின்று, அந்த நின்ற இடத்திலிருந்தே கைகூப்பி அஞ்சலித்து, "இப்படிப்பட்ட மெய்த்தவத்தையுடைய மஹாபுருஷரைத் தரிசிக்கும்படிநேரிட்ட இந்தத் தினமே நல்லதினம், இவரைத் தரிசிப்பதற்குப் பூர்வகாலத்தில் எப்படிப்பட்ட அருந்தவம் செய்திருந்தேனோ" என்று இவரிடத்து அன்பு மிகுந்தவனாய்ச் சூரியோதய மாகிறவரைக்கும் அவ்விடத்தில் நின்று, இவரருளை யான் பெறுதல் எக்காலமோ என்று மனத்தில் எண்ணி, அங்கு நின்றே இவர் திருவடியை வணங்கித் தன் நகரத்துக்குப்போய் உண்ணாமல், "இவரருள் பெறுவது எப்படி" என்று ஆலோசித்துக்கொண்டு இராத்திரி முழுதும் கண்ணுறங்காமல் இருந்து, விடியற்காலத்திலெழுந்து நித்திய கருமங்களை முடித்துச் சில சேனைகளை யழைத்துக்கொண்டு முன்போலவே தாஸர் இருக்குமிடத்தில்வந்து நமஸ்கரித்து ஒரு ஜாமநேரம் நின்று, "இவர் நமக்குக் கிருபை செய்யும்படி பகவானெனவர் அநுக்கிரகிப்பது எந்தக்காலமோ" என்று சிந்தித்துக்கொண் டிருக்கும்பொழுது, ஒருவன் இவர் எழுதின ஏட்டைக் கைக்கொண்டுவந்து அதிலுள்ள கவியைப் படிக்கக் கேட்ட அரசன், மிகவும் சந்தோஷித்து "நதியில் அடித்துக்கொண்டு வருகிற ஏடுகள் பலவற்றையும் எடுத்துக்கொண்டு வாருங்கள்" என்று தன் ஊழியர்களிடத்தில் சொல்ல, அவர்களும் அப்படியே ஏடுகளையெல்லாம் எடுத்துக்கொண்டுவந்து அரசனுக்கெதிரே வைக்க, அவற்றை யெல்லாம் ஒரு புத்தகத்திலெழுதுவித்து, நன்றாய்ப் படித்து, அக்கவிகளின் பொருளை யறிந்து ஆச்சரியப்பட்டு, கவிகளின் முடிவில் அமைந்திருக்கும் பெயரை ஆராய்ந்து, இப்பெயருள்ளவர், புலி காடிகளோடு கூடியிருப்பவராகிய இந்தத்தாசரே ஆகுமென்று நிச்சயித்து, இவருடைய அருள் பெறுவதே இவ்வுலகத்தில் அரும் பொருளென்று மனந் துணிந்து, ராஜரிகத்தில் விருப்பமில்லாதவனாய் நாள்தோறும் இவரிடத்தில் வந்து வணங்கிக்கொண்டிருந்தான்.

இப்படி அரசன் நாள்தோறும் செய்வதை இவனுடைய மந்திரிமார்களாகிய எண்மரும் நோக்கி, "ஐயனே! பிராக்ருத பாஷையில் செய்யப்பட்டிருக்கிற கவிகளில் உன் மதிமயங்கி எந்தச் சாதியிலும் கலவாத ஒருவரிடத்திற்கு நீர் போவது உமக்குத் தாழ்வல்லவோ?

பரம்பொருளை அடைதற்கேதுவான உபதேசம் பெறவேண்டுவீரானால், தேவபாஷைதெரிந்தவராயும், வேதியகுலத்தினராயும், மடாதிபதிகளாயும் இருக்கிற அநேகர் இவ்விடத்தில் இருக்கிறார்கள், அவர்களிடத்தில் நீர் உபதேசம் பெற்றுக்கொள்வதே நன்மை, ஆதலால் இவரிடத்திற்கு அடிக்கடி போவதும் வருவதுமாகிய வழக்கத்தை நீர் விட்டுவிடவேண்டும்'' என்று அநேகவிதமாகச் சொல்ல, அரசன் அவர்கள் சொல்லுஞ் சொற்களைச் சிறிதும் செவிகொடுத்துக் கேட்காமல் தினந்தோறும் தாஸரிடத்துக்குப் போய்க்கொண்டேயிருந்தான். ஒருநாள் மாருதியானவர் எழுந்தருள, தாஸர் அவரை வணங்கித் துதித்துக்கொண்டிருக்கும்போது, அரசன் அவ்விடத்திற்குப்போய், மாருதியின் திருமேனி ஒளிமிகுதியால் கண்கள் கூசி மூடிக்கொண்டு சற்று விலகியிருந்து, அவர் போனபிறகு கண்விழித்துப் பார்த்துத் தான் கடைத்தேற விரும்பிக் கைகுவித்து, தாஸரை அஞ்சலித்து நின்றான். இப்படிப் பலநாளும் அரசன் வந்து வணங்குவதைத் தாஸரானவர் அறிந்து இரக்கங்கொண்டு தம்மருகில் வரும்படி கட்டளையிடுதலும், அரசன் சமீபத்தில்வந்து இவரை வணங்கித் தோத்திரஞ் செய்து "நான் இந்தப் பவசாகரத்தைக் கடந்து உஜ்ஜீவிக்கும்படி பரமார்த்தத்தை அடியேனுக்கு உபதேசித்தருளவேண்டும்'' என்று ப்ரார்த்திக்க, தாஸரானவர், அவனை நோக்கி, "அரசனே! நீ உலகத்தையெல்லாம் ஆளும்படியான பெருமையை யுடையவன், நான் ஒரு பேய் வடிவமாய் இந்தக் காட்டில் தங்கியிருப்பவன், என்னிடத்தில் நீ உபதேசம் பெற்றுக்கொண்டால் உலகமுழுதும் நகைக்குமல்லவா? அல்லவென்று என்னிடத்திலேயே உபதேசம் பெறுவையாயின், ஓரொருகாலத்தில் நான் உன்னிடத்திற்கு வரும்படி நேரிடும், அப்படிவர நேரிட்டபோது மஹாசபையின் நடுவில் அதிபதியாய் வீற்றிருக்கிற நீ அந்தச் சபையாருக்கெதிரே என்னை வணங்குவையோ? வணங்க வெட்கப்படுவையானால் பரமார்த்தம் உனக்குச் சித்திக்கமாட்டாது, ஆதலால் உனக்குத் தகுதியான ஆசாரியரைச் சரணடைந்து அவரிடத்தில் உபதேசம் பெற்றுக்கொண்டு அரசாளுதல் எல்லார்க்கும் சம்மதமான காரியம், அப்படிச் செய்வதைவிட்டு, கோவணம் அன்றிப் பிறிதொரு பொருளுமில்லாமல் பூமியே மெத்தையாயும், ஆகாசமே வஸ்திரமாயும், சோலையே பந்தலாகவும், மிருகங்களும் பக்ஷிகளுமே உறவினராகவும் கொண்டு இந்தக் காட்டில் வாழ்கிற என்னை நீ ஆசிரயிக்கத்தகாது'' என்று சொல்லக் கேட்டு, இவரிடத்தில் முன்னினும் அன்பு மிகுந்தவனாகிய அரசன், "ஓ சற்

குருநாதரே! அடியேன் திரிகரண சுத்தியாய் உம்மை வந்தடைந்தேன், அதை நீர் அறிந்திலீரோ? எப்படியாயினும் என்னை ஆண்டருளவேண்டும்" என்று துதித்துநின்றான். அப்பொழுது தாஸர், "இவன் மிகவும் பரிசுத்தகுணத்தையுடையவன்" என்று மனங்கனிந்து, "இன்று குருவாரமாக நேரிட்டது மிகவும் நன்மையாம்" என்று அரசனை நோக்கி, "நீ நீராடிவா" என்று நியமித்தார். அப்படியே அரசனும் போய் நீராடி ஒற்றை ஆடையோடு வெளியே வந்து உடம்பின் ஈரம் துடைத்துக்கொள்ள வேறு வஸ்திரம் இல்லாமையால், உடுத்திருந்த ஆடையையே இரு துணிவாக்கி, ஒன்றை அரையில் உடுத்து மற்றொன்றினால் ஈரந் துடைத்துக்கொண்டு, கோபிசந்தனத்தைக் கொண்டு துவாதச நாமமும் இட்டு, நித்திய கருமங்களையும் முடித்து, காய்கனி மலர்கள் என்பவற்றைக் கிடைத்தமட்டுங் கைக்கொண்டு ஆசாரியரைப் பூஜிப்பதற்குத் தொன்னையில் நீர் முகந்துகொண்டு தாஸரிடத்திற்கு வந்து வணங்கி அஞ்சலித்து நின்றான். அவனை ஆசாரியர் நோக்கி, "பதினொருதரம் நமஸ்காரம் செய்யக்கடவாய்" என்று நியமிக்க, அரசனும் அப்படியே தொழுதுநின்று, "உய்ந்தேன், உய்ந்தேன்" என்று சொல்லி, உடல் பொருள் ஆவிகளாகிய மூன்றையும் ஆசாரியருக்குச் சமர்ப்பித்துப் பூஜித்து நின்றான். அப்படி நின்றவனைத் தாஸரானவர் தம்மருகிலிருத்தி, அவன் தலைமேல் தமது திருக்கரம் அமைத்து உபதேசஞ் செய்தருளினார். அதின் பிறகு, "அரசனே! இன்றுமுதல் உயிர்க்கொலை செய்வதை விட்டு மனத்தில் எல்லாச் சீவர்களின்மேலும் இரக்கம் வைத்து ஹரிபூஜை செய்கிற ஹரிதாஸர்களுடைய நேசம் வைக்கக்கடவாய், இப்படிச் செய்தால் பெருமையை யடைவாய், ஏகாதசியாகிய ஹரிதினத்தில் நித்திரையை ஒழித்து அன்றிரவில் ஆஞ்சநேயரைத் தரிசனஞ் செய்துகொண்டு இருக்கக்கடவாய்" என்று நியமிக்கக்கேட்ட அரசனானவன், "உமது கட்டளையின்படியே நடப்பேன்" என்று சொல்லி, அவருடைய திருவடியை விளக்கி ஸ்ரீபாததீர்த்தத்தை உட்கொண்டு, துளசிமாலிகையை அவர் கழுத்தில் சூட்டி ஷோடசோபாரங்களும் செய்து, தான் கொண்டுவந்த கனிகளைத் தாஸருக்கெதிரே வைத்தான். அவர் அவன் மனக்கருத்தை அறிந்து அக்கனிகளை அமுது செய்தார், அமுது செய்து சேஷித்திருந்த கனிகளை அரசன் உண்டான். பிறகு தாசர் அரசனை நோக்கி, "இனி நீ போய் உன்னுடைய அரசாக்ஷியைச் செய்துகொண் டிருக்கலாம்" என்று சொல்ல, அரசன், "ஸ்வாமி! என் உடல் பொருள் ஆவி மூன்றனையும் உமக்குத்

தத்தஞ் செய்தபிறகு அரசாளுதல் எனக்குத் தகாது" என்று சொல்லி, "தேவரீர் அரசு செய்துகொண்டு இரும், அடியேன் உமக்கு ஏவற் பணிவிடை செய்துகொண் டிருக்கிறேன்" என்று சொல்ல, தாஸரானவர், "அரசனே! முற்காலத்தில் ஜநகன், அம்பரீஷன் என்பவர் முதலானோர் ஞானவான்களாயிருந்தும் பகவதநுக்கிரகத்தால் அரசாண்டார்கள், அவர்களைப்போல நீயும் அரசாளுவதினால் உனக்கு நேரிடும் குறைவு யாது? நீ சொன்னபடியே உனது நகரம் முதலாகிய பொருள்களெல்லாம் என்னதேயாயினும் நான் நியமிக்கிறபடியே செய்வது உனக்குச் சொரூபமாகும், ஆதலால் நான் சொன்னபடி நீபோய் என் அரசாட்சியைச் செய்துகொண் டிருக்கக்கடவாய்" என்று ஏவினார். ஆசாரியர் இப்படிச் சொல்லுதலும் அவரது திருவடியைச் சிறிதும் பிரிய விருப்பமில்லாதவனாயிருந்தாலும் அவர் நியமநத்தை அதிக்கிரமிக்கக் கூடாதென்று அவர் திருவடியை வணங்கி, நகரத்திற்குப் போய், அன்று இரவில் கண்ணுறங்கி, அருணோதய காலத்தில் விழித்து, பத்திரபுஷ்ப சந்தனாதிகளையும் ஆடையாபரண வகைகளையுங்கொண்டு வாத்திய விசேஷ முழக்கத்தோடும் சேனாசமூகத்தோடும் நதிக்குச் சென்று நீராடி, உண்ணத்தகுந்த பதார்த்தங்க ளெல்லாவற்றையும் சேகரித்துக்கொண்டு, ஆசாரியரிடத்திற்குப்போய் வணங்கித் தான் கொண்டுபோன ஆடையாபரணாதிக ளெல்லாவற்றையும் எதிரே வைத்துநிற்க, ஆசாரியர், "அரசனே! நீ இவையாவும் எனக்குச் சமர்ப்பிப்பதில் சிறிதும் எனக்கு விருப்பமில்லை, இனி உன் நகரத்திற்குப் போ" என்று சொல்ல, அரசன், "குருமூர்த்தியே! நாள்தோறும் உம்மைச் சேவிக்காமல் அமுதுண்ணமாட்டேன், இந்த விரதத்தை முடிப்பதற்குத் தேவரீர் கிருபை செய்யவேண்டும்" என்று சொல்லி, தினந்தோறும் இப்படியே செய்து வந்தான். இப்படி இவன் செய்வது தாஸருக்குச் சம்மதியில்லாமையால் ஆடையாபரணாதிகளையெல்லாம் தமது இடத்தில் வைத்துவிட்டுத் தனியேவெகுதூரம்போய், அவ்விடத்தில் ஒருமலைமேல் ஏறி, ஸ்ரீராமத்தியாநம் செய்துகொண்டுதங்கியிருந்தார். பிறகு அரசன் தினந்தோறும் வரும் வழக்கம்போல வந்து, இவரை ஆசிரமத்தில் காணாதவனாய் ஆடையாபரணங்கள்மாத்திரம் இருக்கக்கண்டுமிகவும் மனம் வருந்தி, மூன்றுநாள் வரைக்கும் அந்தக் காடுமுழுதும் தேடியும் அவ்விடத்திலும் காணாதவனாய், இருகண்களும்நீர்பொழியக் "குருசேவை என்றைக்குக் கிடைக்குமோ, அவர் சேவை கிடைக்குமளவும் அமுதுண்ணேன்" என்று நிச்சயித்து இருப்பதைத் தாஸர் அறிந்து,

அரசனுக்கெதிரே எழுந்தருள, அரசன் அவரைக்கண்டு வணங்கித் திருவடியில் விழுந்து புலம்ப, ஆசாரியர் மனமகிழ்ந்து அவனைத் தமது மார்போடணைத்துக் கண்ணீர் துடைத்தருளினர். அப்போது அரசன் இவர்து திருவடியைப் பூஜித்து, "நான் தினந்தோறும் உம்மைச் சேவிக்கும்படி கிருபை செய்யவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, தாஸரானவர், "அரசனே! ஏட்டில் எழுதப்பட்டிருக்கும் கவியின் பொருளை அறிந்துகொள்வதே என்து நித்திய சேவை என்று அமைந்திருக்கக்கடவாய், அப்படியல்லாமல் நேரே என்னைச் சேவிக்க விரும்பினையானல் நீ நினைக்கும்போது அவ்விடத்தில் வந்து உனக்குக் காட்சி கொடுப்பேன்" என்று சொல்லுதலும், அரசன் நமஸ்கரித்து நகரத்தை யடைந்தான். இவர் தனியே போய்விட்டார்; போய் அந்தக்காட்டைக் கடந்து, மாவுலி என்னும் ஊரை யடுத்திருக்கிற அரண்யத்தை யடைந்து, அவ்விடத்திலுள்ள கிருஷ்ணா நதிக்கரையில் ஒரு மரத்தின்மீதேறி, அவ்வூரிலுள்ள சிறுவர்களோடுகூடி விளையாடி, அயலிலுள்ள வேறொரு மரத்தின்மேல் தாவியேறி, பலதரம் நிலத்தில் குதித்து, வானரம் விளையாடுவதுபோலப் பலசேஷ்டைகளையும் செய்து, அச்சிறுவர் தம்மீது எறியும் கற்களைத் தம்மேல் ஏற்று, புலி கரடி முதலியவற்றை அவர்கள்மேல் ஏவி, இப்படி அநேகவிதமான விளையாடலைச் செய்துகொண்டிருக்கும்போது அவ்வூரிலுள்ளார் "இவர் முற்பிறப்பில் வானரமாய் இருந்திருக்கலாம்" என்று அதிசயித்துப் பேசிக்கொண்டார்கள். இவர் காலையில் ஐயமேற்க வரும்போது கண்டவர்கள் இச்சிறுவன் இருபத்தைந்து வயதுள்ளவனும் மிகுந்த அழகுள்ளவனும் இருக்கிறன், இந்தச் சிறுவயதில் இவனுக்குப் பித்தம் பிடித்ததே, இவன் ஜன்மம் பயனற்ற ஜன்மமாயிற்றே" என்று பல நிந்தை வார்த்தைகளையும் பேசினர்கள். இப்படியிருக்க; இவர் அந்த நகரத்தில் பதினொரு வீட்டில் கிடைத்த அமுதை ஏற்று உண்டு திரிகின்ற காலத்தில், ஒருநாள் மூன்று அடை சுட்டார். அச்சமயத்தில் அரசனனவன் இவரைத் தேடி வந்து சமீபித்து நோக்கி, திருவடியில் விழுந்து வணங்கி, மனமகிழ்ந்திருக்க, தாஸரானவர்; தாம் சுட்ட மூன்றடைகளில் ஒன்றைப் பகவானுக்குச் சமர்ப்பித்து, ஒன்றைத்தாமுண்டு, ஒன்றை அரசனுக்குக்கொடுக்க, அவன் கையிலேற்றுநின்று அவ்விடத்திலேயே உண்டு, அளவற்ற ஆநந்தங்கொண்டு, ஆசாரியரிடத்தில் விடைபெற்றுப் போய்விட்டான். இதைக் கண்டவர்யாவரும் "அரசன் இந்தப் பித்தனிடத்தில் அநுக்ரஹம் பெற்றனே, இவன் ஒரு பைத்தியக்கா

ரன்'' என்று இகழ்ந்தார்கள். பிறகு இவர் ஸ்ரீராமஸ்மரணை செய்துகொண்டே சிறுவரோடு விளையாடிக்கொண்டிருக்கையில், ஒரு சிறுவன் எறிந்த கல் இவருடைய நெற்றியிற் பட்டவுடனே, இவர் மூர்ச்சித்து நிலத்தின்மேல் விழுந்து உயிர் நீங்கினவர்போ லிருக்கக்கண்ட சிறுவர்கள், "இந்தச் செய்தியை அரசனறிந்தால் நம்மை யெல்லாம் உயிர் வாங்குவான்'' என்று அஞ்சி, ஒருவரு மறியாமல் ஆற்றுமணலில் ஒரு குழிதோண்டி அந்தக் குழியில் இவரைப் போட்டு மூடிவிட்டார்கள். அப்படி அவர்கள் மூடிவிட்டுப் போனபிறகு அரசன் சற்குருநாதரைத் தேடிவந்து இவரை யிருப்பிடத்திற் காணாமையால் அவ்வழியில் எதிர்ப்பட்டவர்களை வினவ, அவர்கள், "அரசனே! விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள் யாரோ ஒரு யதியை ஆற்றுமணலிற் புதைத்துப் போனார்கள்'' என்று சொல்ல, அரசன், "எங்கே'' என்று கேட்க, "மாவுலிநகரத்தில்'' என்றார்கள். அரசன் விரைந்து மாவுலிநகரத்துக்குப் போகிறபோது, அவ்வூரார் அரசன் வருவதை முன்னே சிலராலறிந்து, ஏழுநாளாய்த் தன் ஆசாரியனைத் தேடிக் காணாமல் மனவருத்தத்தோடு வருகிற அரசன் இந்தச் செய்தியை யறிந்தால் நமக்கெல்லாம் கொடுமையான தண்டனை நேரிடும், ஆகையால் அந்த ஸந்யாஸியின் பிரேதத்தைச் சுட்டுப் பொடியாக்கி நீரில் கலக்கிவிட்டு வருவோம்'' என்றெண்ணி, புதைத்த இடத்திற்போய் மணலைத் தோண்டினவுடனே, இவர் தூங்கியெழுந்தவர்போ லெழுந்து உரத்த சத்தமாய்க் கனைக்க, வந்தவர்களெல்லாரும் "இறந்து ஏழுநாளாகியும் இவன் உயிரோடிருக்கிறான், இவன் ஒரு அவதார புருஷனாயிருக்கலாம்'' என்று பயந்தோடிவிட்டார்கள். ஊரார் வந்து இவரைக் கண்டு ஓடிப்போன சங்கதியைச் சிலர் விரைந்து வந்து அரசனுக்குச் சொல்ல, அரசன் தாயைக் காணாமல் திகைத்த குழந்தை அந்தத் தாயைக் கண்டால் எவ்வளவு சந்தோஷ மடையுமோ, அவ்வளவு சந்தோஷ மடைந்துவந்து, குருநாதரைக் கண்டு, திருவடியை வணங்கிநிற்க, குருநாதரும் அரசனையெடுத்து மார்போடணைத்துத் தழுவிக்கொண்டார். அரசனும் சிறுவர்கள் செய்த செய்கையைக் கேள்விப்பட்டு, சற்குருநாதருடைய தபோமஹிமையை நினைத்து மிகவும் ஆச்சரியமடைந்து, அவரது கட்டளையின்படி, சமையல்செய்து, தேசிகரை யுண்பித்து, மீதியைத் தானுண்டு, அடிவணங்கி, "ஸ்வாமீ! தேவரீருடைய நகரத்துக்கு எழுந்தருளவேண்டும்'' என்று பிரார்த்திக்க, குருநாதர் அரசனை நோக்கி, "ஏழுநாளாக என்னைத் தேடி வருந்தினாய், நீ

ஊருக்குப்போ, நீ நினைக்கும்போது நான் நகரத்துக்கு வருகிறேன்" என்று சொல்ல, அரசன் விடைகொண்டு நகரத்துக்குப் போனவுடனே, தாசரும் வனத்துக்குப் போய்விட்டார். வனத்தில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும்போது, தத்து என்னும் பெயரையுடைய ஒரு அம்பட்டன் இவரிடத்தில் வந்து வணங்கிநின்று, "அடியேனுக்கு உபதேசம் செய்து, என் பிறவித் துன்பத்தை யொழித்தருள வேண்டும்" என்று ப்ரார்த்திக்க, அவனுடைய மனநிலையை யறிந்த குருநாதரானவர் அவனுக்குத் தீக்ஷை செய்து, இடைவிடாமல் ஸ்ரீ ஹரிநாம ஸ்மரணை செய்யும்படி நியமித்து, அப்படியே அவனும் செய்துகொண்டு இவரை விட்டுப் பிரியாமலிருக்குங் காலத்தில், ஒரு நாள் அவனை யழைத்துக்கொண்டு, சாதார் நகருக்குப் போகும் போது, வழியில், நகரம் ஒருகோசு தூரமா யிருக்குமிடத்தில் நீராடி ஸ்ரீ ஹரிபூஜை செய்துகொண்டிருக்கும்போது, தத்து என்பவனாகிய சீடன், பசி பொறுக்காதவனாய் அங்குள்ள ஒரு சோளக் கொல்லையிற் போய், கதிர்களை யொடித்துச் சுட்டுக்கொண்டிருப்பதைக் கொல்லைக்குடையவன் கண்டு விரைந்துவந்து தன் கையிலிருந்த கோலால் தத்துவை நன்றாய் அடித்ததுமன்றி, அவனை யிப்படிச் செய்ய ஏவினவன் இவனென்று நினைத்து, தாசரையும் கைசலிக்க அடித்துப்போய்விட்டான். தாசர்நகைத்துக்கொண்டிருந்தார். தத்து குருநாதரைக்குறித்து மனம் வருந்தினான். அவன் வருந்துவதைக் கண்ட தாசர், அவனை நோக்கி, "ஸ்ரீ ஹரிதாசருக்கு இன்பமும் துன்பமும் சமானமாகும், கதிர்களை யொடிக்கும்போதிருந்த சந்தோஷம், பயிர்க்காரன் அடிக்கும்போதும் நமக்கிருக்கவேண்டும், அப்படி யிருப்பதைவிட்டு நீ துக்கிப்பது தகுதியல்ல" என்றார். அதைக் கேட்ட சீடன், "ஸ்வாமீ! அவன் கதிரொடித்த என்னை யடித்தது நியாயமே, தேவரீரை யேனடித்தான்? அது அநியாயந்தானே, அதற்காக நான் மனம் வருந்தினேன்" என்றான். தாசரானவர், "இந்தச் செய்தியை ஒருவருக்குந் தெரிவிக்கவேண்டாம்" என்று நியமித்தார். இப்படி யிருக்கும்போது, அரசன் அனுப்பின தூதர் சிலர் வந்து தாசரிருப்பிடத்தில் தேடிக் காணாமல் அலையும்போது, இவர் இவ்விடத்திலிருப்பதாகக் கண்டோர் சொல்லக் கேட்டுப் போய், அரசனிடத்திற் சொல்ல, அரசன், நகரத்தை அலங்கரிக்கும்படி கட்டளையிட்டு, சேனைகளோடு புறப்பட்டு வந்து, குருநாதரைக் கண்டு வணங்கிப் பல்லக்கின்மே லேற்றிக்கொண்டு நகரத்துக்குள்ளே பிரவேசித்து ஊர் வலம் வந்து, அரண்மனையை யடைந்து,

குருநாதருக்குச் செய்யவேண்டிய உபசாரங்களெல்லாம் செய்து, அமுது செய்தருளப் பண்ணி, புஷ்ப சந்தந தாம்பூலாதிகள் கொடுத்து மகிழ்வித்த பிறகு, இவரோடு வந்த தத்து என்னும் சிடனைத் தனியே யழைத்து, "தேசிகருடைய முதுகு தடித்திருப்பதற்குக் காரணம் யாது?" என்று கேட்க, அவன், தேசிகர் சொல்லவேண்டாமென்று சொன்னதனால், அரசன் கேள்விக்கு விடை சொல்லாமல் மௌனமாயிருந்தான். அரசன் அவனை நோக்கி, "நீ உண்மையைச் சொல்லாமற்போனால் நான் உயிர்விடுவேன்" என்றான். இது கேட்ட தத்து உண்மையைச் சொல்லுதலும், அரசன் அந்தச் சோளக்கொல்லைக்காரனை வரவழைத்துச் சிறைசெய்வித்தான். இந்தச்செய்தியைத் தாசர் அறிந்து, அவனை வரவழைக்கும்படி அரசனுக்குச் சொல்ல, அரசன் அவனைச் சிறைச்சாலையிலிருந்து அழைப்பித்தான். அப்போது குருநாதர், அரசன் போர்த்திருந்த சாலுவையை அவனுக்குக் கொடுப்பித்து, அவனை நோக்கி, "நீ போய் உன் கொல்லையைப் பாதுகாத்துக்கொண்டு சந்தோஷமா யிருக்கக்கடவாய்" என்றனுப்பி விட்டார். இதைக்கண்ட சபையா ரெல்லாரும் தாசரது பெருங்குணத்தை வியந்து கொண்டாடினார்கள்! பிறகு தாசரானவர் மூன்று நாள்வரைக்கும் அரசன் விருப்பப்படியிருந்து, மூன்றுநாள் ராத்திரியில், தத்து என்னுஞ் சிடனோடு வனத்துக்குப் போனார். விடியற்காலத்தில் அரசன் எழுந்து ஆசிரியரைக் காணாமல் தேடிக்கொண்டு போய், வனத்தி லிருக்கக்கண்டு அடிவணங்கி நிற்க, தாசர் அவனை நோக்கி, "நான் திரியம்பகத்துக்குப்போய்வர நிச்சயித்திருக்கிறேன்" என்று சொல்லுதலும், அரசன், "அடியேனும் வருகிறேன்" என்றான். அதற்குத் தாசர் சம்மதிக்காமல் "அவ்விடத்தில் துருக்கருடைய கலகம் மிகுதியாயிருக்கின்றது, ஆகையால் நீ என்னோடுவரத் தகாது, நீ அரசாட்சியை நடத்திக்கொண்டு சுகமாயிரு, நான் போய் விரைவில் மீண்டு வருகிறேன், நான் வருமளவும், நீ ஆஞ்சநேயரையும் ஸ்ரீராமபிரானையும் பூஜித்துக்கொண்டிரு" என்றுசொல்லி, "நான் போகும்வழியில் அநேக ஸாதுஸஜ்ஜநங்க ளிருப்பார்கள், அவர்களுக்கெல்லாம் அவ்வவ்விடங்களில் அமுது செய்விக்கவும், புண்ய க்ஷேத்ர தீர்த்த யாத்திரை செய்யவும் கொஞ்சம் பொருள் தரவேண்டும்" என்றுகேட்க, அரசன் அவர் விருப்பத்தின்படியே யானைகளின்மீதும், ஒட்டகங்களின்மீதும், குதிரைகளின்மீதும் அளவற்ற திரவியத்தையும் ஆடையாபரணாதிகளையும் சுமப்பித்துக் காவலாளரையும்கூட அமைத்தனுப்பிவிட்டு, ஆசிரியர் நியமித்தபடியே மாருதி

பூஜை முதலானவைகளைக் குறைவற நடத்திவந்தான். இங்கே யிப்படியிருக்க, ஸ்தலயாத்திரையாய்ப் புறப்பட்ட தாசர், அங்கங்குள்ள ஸாது ஸஜ்ஜநங்களை அமுது செய்வித்தும் ஆடையாபரணாதிகள் தந்தும் மகிழ்வித்துக்கொண்டே போனாலும், தாம் பிக்ஷையே புசித்துப்போய்த் திரியம்பகம் என்னும் ஊரையடைந்து, தான தர்மங்களைச் செய்துகொண்டு அவ்விடத்தில் தங்கியிருந்தார். அப்போது அவ்வூரிலுள்ள வேதியர்வந்து இவரை நோக்கி, "நீர் வபநம் செய்துகொள்ளும்" என்றார்கள். அதற்கு இவர் ஒன்றுஞ் சொல்லாமல் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்தார். அப்படியிருக்கும்போது ஒருநாள், தத்துவோடு விளையாட நினைத்து, அவன் ஒருகுறிவைக்க,அதைத் தப்பாமல் படும்படி கல்லெறிந்தார். அதைக் கண்ட யாவரும் வியந்தார்கள்! மற்றொருநாள் ஒரு பறவையின் மேல் ஒரு கல்லைவீச, அந்தக்கல் அந்தப் பறவையின்மேல் தப்பாமற் பட்டதனால் அது இறந்து வீழ்ந்தது. அதைக் கண்ட வேதியர், "இவர்க்குச் சிறிதாயினும் ஜீவகாருண்ய மில்லையே, இவரை மஹா புருஷரென்று நாம் எப்படி நம்புவது" என்று பேசிக்கொள்வதையறிந்த தாசர், இறந்துகிடக்கிற பறவையைக் கைக்கொண்டு வேதியரிடத்துக்கு வந்து, "ஐயரே! நான் ஜீவகாருண்யம் சிறிதுமில்லாமல் இதைக் கொன்றேன், நீங்கள் ஜீவகாருண்ய முதலான நற்குணங்கள் மிகுதியாக வுடையவர்களாகையால், இந்தப்பறவையின்மீது அருள் செய்து, உமது புண்ணியத்திற் சிறிது பகிர்ந்து கொடுப்பீர்களானால், இது பிழைக்கும், உங்களுக்குப் புண்ணிய முண்டாகும், என் பாவமும் தொலையும்" என்றார். அதைக் கேட்ட வேதியர், "இறந்ததைப் பிழைப்பிக்க யாராலாகும்? ராமனாலுமாகாது, நாங்கள் புண்ணியவான்களேயானாலும் இதைப் பிழைப்பிக்கச் சக்தியுடையோமல்லோம்" என்றார்கள். அதைக் கேட்ட தாசர் சிரித்து, "ராமனாலும் ஆகாதென்றீர்களே, அந்த ஸ்ரீ ராமநாமமே எல்லாம் செய்ய வல்லதாகும்போது அவர் செய்ய வல்லராகமாட்டாரோ! இதோ, ராமநாமத்தின் மகிமையைப் பாருங்கள்" என்று, ராமநாமஸ்மரணை செய்துகொண்டே தமது கையிலிருந்த உயிர் நீங்கின பறவையை மேலே யெறிய, அது உயிர்பெற்றுப் பறந்துபோயிற்று. அதைக் கண்ட வேதியர் அதிசயித்து, "இவர் மஹாத்மா, இவரை ராமதாசர் என்று சொல்லத் தடையில்லை" என்று இவரது திருவடியை வணங்கித் தோத்திரம் செய்தார்கள். பிறகு ஒருமாசகாலம் அங்கே தங்கியிருந்து, புறப்பட்டுப் பஞ்சவடியைச் சேர்ந்து, அவ்விடத்தில் ஸ்ரீ

ராமபிரானைக் கண்டு வணங்கி, ப்ராஹ்மண ஸமாராதநம் முதலானவை நடத்தி, அன்றிரவில் ஸ்ரீ ராமநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருக்கும்போது, ஸ்ரீராமமூர்த்தியானவர் ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் எழுந்தருளித் தாசருக்கு மாத்திரம் காட்சி கொடுத்து, இவரை மார்போடணைத்துத் தழுவிக்கொண்டு, இனிய வசநங்கள் பேசி மறைந்துபோய்விட்டார். பிறகு தாசரானவர், "ஜபதபங்கள் முதலான யாவும் ஸ்ரீராமநாமஸங்கீர்த்தநத்தா லுண்டாகிற பயனை யுண்டாக்கமாட்டா" என்று, ஸ்ரீராமநாமத்தின் மஹிமையை அநேகவிதமாய் அங்குள்ளவர்க ளெல்லார்க்கும் எடுத்துச் சொல்லி அவர்களை ஸ்ரீராமபக்தர்களாகச் செய்து, விடியற்காலத்தில் பகவானுக்கு ஹாரதி சமர்ப்பித்து, யாவர்க்கும் ப்ரஸாதவிநியோகம் செய்வித்து, சக்ரவர்த்தித் திருமகனுர்க்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, பல்லாண்டு பாடி, விடைபெற்று, டாங்களிக்குப் போய், அவ்வூராரும் உத்தவரும் வணங்கப்பெற்று, பிறகு தாம் அவ்வூரில் மாப்பிச்சை யேற்றுவந்து அடை சுட்டு, அதைப் பகவதர்ப்பணம் செய்து, வேதியர்க் கருத்தி, மீதியைத் தாம் புசித்து, அன்றிரவில் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்து, இப்படி மூன்றுநாள் அங்கே தங்கித் தம்மை வந்தடைந்தவர்களுக்கெல்லாம் உபதேசம் செய்து, பிறகு புறப்பட்டுத் தாய் தந்தையர் இருக்கிற ஊரையடைய வுத்தேசித்து, கங்கைக் கரைவழியாய் வந்து ஜாம்பூர்க்கருகே யிறங்கினர். இந்தச் செய்தியை அவ்வூரார் அறிந்து "நமது அரசனுகிய சிவாஜிக்கு ஆசாரியரா யிருப்பவர் எழுந்தருளினுல் அவரை நாம் போய்த் தரிசநம் செய்யாம லிருக்கக்கூடாது" என்று புறப்பட்டு ஸ்ரீபாதகாணிக்கை முதலானவைகள் கொண்டுவந்து வைத்து வணங்கித் தூரத்தில் நின்றூர்கள். நின்றவர்களுள் ஒரு வேதியன் இவர்க்குச் சமீபத்தில் வந்து, "நீர் அரசனுக்குக் குருவானும் சூரியாஜி பண்டிதருக்குப் புதல்வரல்லீரோ! உமது பெயர் நாரணரல்லவோ" என்று கேட்க, தாசர் நகைத்திருந்தார். மேலும் அந்த வேதியன் இவரை நோக்கி, "இப்பொழுது நீர் எங்கே யிருக்கிறீர்?" என்று கேட்க, "பஞ்சவடியி லிருக்கிறேன்" என்றூர். பிறகு அந்த வேதியன் "உமது தாய் தந்தையரை வரச்செய்கிறேன்" என்று சொல்ல, இவர் "என் தாய் தந்தையர் என்னிடத்திற்கு வருவது நன்மையல்ல, நான் அவர்களிடத்திற்கே போகிறேன்" என்றெழுந்து கால் நடையாய்ப் போகும்போது அவ்வூர்க்கு அதிகாரியா யிருப்பவன் விரைந்துபோய்த் தந்தைக்குத் தெரிவித்தான். அப்படித் தெரிந்தவுட

னே தாய்தந்தையர் மிகுந்த களிப்படைந்திருக்க, இவரும் சேனைக ளோடுவந்து இருமுதுகுரவரையும் வணங்கி, தமயனாரையும் வணங் கினார். அவர்களும் இவரது வணக்கத்தை யேற்றுக்கொண்டு சொ ல்லவேண்டிய முகமன் வசனங்களைச் சொன்னார்கள். அன்றியும் "இத்தனைநாள் எங்களை மறந்து எப்படி யிருந்தாய்" என்றும், "இந்த வேஷத்தை நாங்கள் காணும்படியான பாக்கியம் செய்திருந்தோம்" என்றும், பற்பல தைந்ய வார்த்தைகளைச் சொல்லக்கேட்ட தாச ரானவர், அவர்களுடைய துக்கத்தை நீக்கும்பொருட்டு அநேகமான அபங்கக் கவிகளைச் சொன்னார். அப்போது அம்மூவரும் "இவன் நமது குலமுழுதும் ஈடேறப் பிறந்தவன்" என்று அதிசயித்துப் புகழ்ந்தார்கள். அதின்பிறகு இவர் பிக்ஷையேற்கப்போனார். இதைக் கண்டவர் யாவரும், "இவர் அரசனுக்குக் குருவாயிருந்தும் பிக்ஷை யேற்குந் தொழிலை விடவில்லையே; இவர் மிகவும் வைராக்யசீலர்" என்று கொண்டாடினார்கள். பிறகு இவர் பிக்ஷையேற்று வீட்டுக்கு வந்தவுடனே இவருடைய தந்தையார் வேதியர்க்கு அமுதளித்து அதின்பிறகு இரண்டு புதல்வரோடு கூடியிருந்து உண்டு மகிழ்ந்திருக் கும்போது, தாசரானவர் சாத்தாருக்குப்போக ப்ரயத்நித்ததையறி ந்த தாய் தந்தையரும் தமையனும் "உமது சீடனாகிய அரசனைப் பார்க்க நாங்களும் வருகின்றோம்" என்றார்கள். அதற்குத் தாசர் சம் மதித்து, தந்தையையும் தமையனையும் யானைமேலும் தாயைச் சிவி கைமேலும் ஏற்றிக்கொண்டு சாத்தார்க்கு அருகே வரும்போது, சிலர் ஓடிவந்து அரசனுக்குச் சொல்ல, அவன் தன் சேனையோடு புற ப்பட்டுவந்து எதிர்கொண்டு வணங்கி யழைத்துப்போய், அவர்க்குத் தகுந்த ஆசநங்கள் கொடுத்துபசரித்தபிறகு, வேதியர்க்கு அமுதளி த்து, பிறகு தாசர் முதலான நால்வருக்கும் அமுதளித்து, அவருண்ட மிச்சிலைத் தானுண்டு, தாசருடைய தமையனாரை இராக்கதை நடத் தும்படி செய்தான். அப்படியே அவர்செய்த காலக்ஷேபத்தைக் கேட்டவர் யாவரும் மகிழ்ந்திருந்தார்கள். பிறகு பகவானுக்கு ஹாரதி சமர்ப்பித்து யாவருக்கும் ப்ரஸாத விநியோகம்செய்து எல் லாரும் போனபிறகு தாய் தந்தையரையும் தமையனையும் முன்பே யுறங்கச் செய்து, பிறகு தாசருக்கு உபசாரம் செய்து உறங்கச்செய் தான். இப்படி ஒரு மாதம் கழிய, தாசரானவர் அரசனை நோக்கி, "என் தாய் தந்தை, தமையன்மாரை ஊருக்கனுப்பக்கடவாய்" என் றார். அரசனும் அவர் கட்டளைப்படியே அவர்களுக்கு வேண்டிய ஆடையாபரணாதிகளெல்லாம் கொடுத்து, ஊருக்கனுப்பிவிட்டான்.

தாசர் முன்போலவே ஆடையாபரணாதிகளை நீக்கிவிட்டு, தத்துவை யழைத்துக்கொண்டு காட்டுக்குப் போய்விட்டார்.

அப்பால் மாவுலியென்னும் ஊரிலிருப்பவனும் சிறிதும் படிப்பில்லாதவனும் போஜநப்ரியனும் ஆகிய ஒரு வேதியன், "அரசனுக்குக் குருவாயிருக்கிற தாசரை யடைவோமானால் அரசனால் நமக்கு நல்ல போஜநங் கிடைக்கும், அதிக திரவியமும் சம்பாதிக்கலாம்" என்று ஆலோசித்து, தாசரிருக்கு மிடந்தேடிவந்து, இவரைச் சூழ்ந்திருக்கிற புலி கரடிகளைக் கண்டு நெருங்க அஞ்சி, தூரத்திலிருந்து வணங்கினான். தாசர் அந்த வேதியனை நோக்கி, "நீ யஞ்சவேண்டாம்" என்று சமீபத்தில் வருவித்து, "உமக்கு வேண்டியதென்ன?" என்று கேட்க, "உம்முடைய அருள் பெற வந்தேன்" என்றான். தாசர் "என் அருள் பெற்றால் உனக்கென்ன பயனுண்டு?" என்றார். அதற்கவன், "உமதருளுக் குரியவனானால் எனக்கு வஸ்திராபரணங்களும் நல்ல வுணவும் கிடைக்கும்" என்றான். இதைக் கேட்ட தாசர் சிரித்து "இவன் உபதேசம்பெறத் தகுந்தவனல்லன்" என்று நினைத்துப் "போ" என்று சொன்னவுடனே, அவன் "உபதேசம் செய்யாமற்போனால் நான் உயிர்விடுவேன்" என்றான். அதைக் கேட்ட தாசர் "இவன் முழுமூடன், இவன் அப்படிச் செய்தாலும் செய்வான்" என்று அவனுக்கு ஹிதோபதேசம் செய்து, "நீ இன்று முதல் தினந்தோறும் ஸாதுசேவை, ஜீவகாருண்யம், தேவதார்ச்சனை முதலானவைகளும் ஹரிநாமஸங்கீர்த்தநமும் செய்துகொண்டிரும்" என்று நியமிக்க, அந்த வேதியனும் "அப்படியே செய்கிறேன்" என்று சொல்ல, பிறகு தாசரானவர் தமது வழக்கப்படியே பிக்ஷை யேற்றுவந்து தாமுமுண்டு, தத்துவுக்குங் கொடுத்து மகிழ்ந்து, ராமநாமஸ்மரணை செய்துகொண்டிருந்தார். அப்போது அரசன் அவ்விடத்திற்கு வந்து, தான் கொண்டுவந்த வுணவுகளைத் தாசர்க்குச் சமர்ப்பிக்க, அவருண்டு மீதியை அங்கேயிருக்கிற வாநரங்களுக்குக் கொடுத்து, தாமுண்டு மீதியாயிருந்த அப்பத்தை அரசனுக்குக் கொடுக்க, அவன் வாங்கியுண்டு ஊருக்குப் போய்விட்டான். இதை யறிந்த பார்ப்பான், "அரசனாயிருப்பவன் உப்பில்லாத எச்சிலப்பத்தை யுண்டானானால், இவரருளால் நமக்கென்ன பயனுண்டாகும்" என்று மனம் வருந்தி, மூன்றுநாள் ஊணுறக்க மில்லாதவனாய், "இனி நமது, உயிர் நீங்கும் காலமுழுதும் பிக்ஷை யேற்றுண்ணவும் நம்மாலாகாது" என்று யோசித்து, தாசரிடத்திற்போய், "நான் அவனூருக்குப் போகிறேன்" என்று விடை கேட்க, தாசரும் "நான்

சொன்னபடியே நடந்துகொள்'' என்று சொல்லி விடைகொடுக்கப் போய்விட்டான். போய் எங்கே நல்ல வுணவு கிடைக்குமென்று விசாரிக்க, ஒருவன் இவனை நோக்கி, "ஓ ப்ராஹ்மணா! இவ்வூர்க்குத் தலைவனா யிருப்பவன் நாள்தோறும் ப்ராஹ்மணருக்கும் ஒரு மஹா புருஷருக்கும் அமுதளிக்கிறான், அங்கே போனால் உனக்கு நல்ல வுணவு கிடைக்கும்'' என்று சொல்ல, அப்படியே அவனிடத்திற் குப் போய் ப்ராஹ்மணபந்தியிலிருந்து வயிறார வுண்டு, "இந்த மஹாபுருஷரிடத்தில் உபதேசம் பெற்றால் நமக்கு நல்ல போஜநம் கிடைக்கும்'' என்று அந்த மஹா புருஷரை வணங்கினான். அவர் "நீ யார்?'' என்று கேட்க, தன் வரலாறு முழுதும் சொல்ல, அந்த மஹாபுருஷர் இவனை நோக்கி, "ஓ ப்ராஹ்மணா! ஒருவரிடத்தில் உப தேசம் பெற்றபிறகு மற்றொருவரிடத்தில் பெறுவது தகாத காரி யம்'' என்று சொல்ல, வேதியன் "நல்ல காரியம் செய்தீர், அவரிடத் தில் உபதேசம் பெற்றது பட்டினியிருந்து சாவதற்கேயன்றி வே றல்ல'' என்று சொல்லி, "நீரே உபதேசம் செய்யவேண்டும்''என்று நிர்ப்பந்திக்க, அவர் இவனை விலக்க நினைத்து, "நீ உனக் குபதேசித் தவரிடத்திலே அந்த வுபதேசத்தைக் கொடுத்துவிட்டு வா'' என்றார். அப்படியே இவன் ராமதாசரிருக்கும் வனத்திற் போய் அவரைக் கண்டு, "நான் ஒரு பெரிய குருவினிடத்தில் உபதேசம் பெற்றேன், உமது உபதேசத்தை நீரே வாங்கிக்கொண்டு எனக்கு விடை கொ டும்'' என்றான். தாசர் அதிசயித்து, "உன்னைப்போற் சீடர்கள் இந்த வுலகத்தில் எங்குங் கிடைக்கமாட்டார்கள், வாயில் நீர் வார்த்துக் கொப்பளித்து உமிழ்ந்துவிடு'' என்றார். அப்படியே அவன் செய் தான். இவன் உமிழ்தலும் அந்த வுமிழ்நீர் ஒரு பாறைமீது விழுந்து, தாசர் உபதேசித்த பதின்மூன்று அக்ஷரங்களும் அந்தப் பாறையின் மீது தோன்றி விளங்கின. அதை இப்பொழுதுங் காணலாம். பிறகு வேதியனைத் தாசரானவர் நோக்கி, "இனி உமது இஷ்டப்படியே போகலாம்'' என்றார். உடனே வேதியன், அன்னமிட்ட வேதியனிடத் துக்குப் போய், தாசரிடத்தில் நடந்த சங்கதியைச் சொல்ல, "அந் தப் பெரியவர், ராமதாசர் சொன்ன மந்திரத்தை இழந்துவிட்டாய், அந்த மந்திரத்தைப் பார்க்கிலும் என்னிடத்தில் வேறு மந்திர மில்லை, குரு உபதேசத்தைக் கொப்பளித்து உமிழ்ந்துவிட்ட நீச னே! என்னருகே யிராதே, போ'' என்று கடிந்து சொன்னார். பார்ப் பான் மிகவும் பயந்து அவ்விடத்தில் நிற்காமல் நீங்கிப்போய்விட் டான். ராமதாசர் தமது வழக்கம் விடாமல் காட்டிற்குப் போய்ச்

சஞ்சரிக்கும் காலத்தில், அவ்வழியாகப் பண்டரிபுரத்துக்கு யாத்திரை போவோர் வந்து இவ்விடத்தி லிறங்கி, அன்றிரவில், துக்காராம் சுவாமிகள் செய்த அபங்கக் கவிகளைத் தாளம் மிருதங்கம் முதலான வாத்ய விசேஷங்களோ டமைத்துப்பாடிப் பண்டரிபுரத்தின் மஹிமையெல்லாம் விளங்கச் செய்தார்கள். அவர்களைத் தாசர் நோக்கி, "ஐயரே! நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்க, அவர்கள், "நாங்கள் பண்டரிபுரத்துக்குப் போகிறோம்" என்று சொன்னதுமன்றி, இவரிருக்கும் இருப்பைக் கண்டு, "இவர் மஹா யோகி" என்று நிச்சயித்து, இவரது திருவடியைத் தொழுது, "எம்மோடு வாரும்" என்றார்கள். அது கேட்ட தாசர், "பண்டரிபுரத்தில் எந்தத் தெய்வ மிருக்கிறது? அவரால் எந்தெந்த அடியார்கள் என்ன பேறு பெற்றார்கள்?" என்றார். அவர்கள், "பண்டரிபுரத்தில் ஸ்ரீ கண்ணபிரான் எழுந்தருளியிருக்கிறார், அவர் புண்டலீகர் முதலானவர்களுக்குக் காட்சி கொடுத்துப் பெரும் பேறளித்தருளினர், எம்மோடுவந்து அந்தப் பெருமானைச் சேவிக்கக்கடவீர்" என்று வேண்ட, தாசரானவர், "என் குலதெய்வமாகிய ஸ்ரீராமபிரானிடத்திலேயன்றி மற்றொரு தெய்வத்தினிடத்தில் என் மனம் பொருந்தவில்லையே, நான் என்ன செய்வேன்" என்றார். அவர்கள் "சரியே" என்று போய்விட்ட பிறகு, இன்னும் வேறு சில ஹரிதாசர்கள் அழைக்க அவர்களுக்கும் அப்படியே சொல்ல, அவர்கள், "இவர், கற்புள்ள மாதர் தமது கணவரையன்றி வேறொருவரைக் கண் கொண்டு பார்ப்பதுஞ் செய்யமாட்டார்களல்லவா? அதுபோலத் தமது குலதெய்வமாகிய ஸ்ரீராமபிரானையன்றி வேறு தெய்வங்களை ஸ்மரிக்கிறதில்லை யென்கிற விரதம் பூண்டிருக்கிறார்" என்று பேசிக் கொண்டு போய்விட்டார்கள். இப்படியிருக்க, ஸ்ரீ பகவானானவர் இவரது மனவுறுதியை யறிந்து, தாமே ஒரு வேதியரூபங்கொண்டு இவர் வாசஞ் செய்கிற காட்டில் வந்து, ஸ்நாநம் செய்து அடை சுட்டு ஸ்ரீராமஸமர்ப்பணஞ் செய்து பிறகு உண்டுகொண்டிருக்கிற ராமதாசரிடத்தில் வந்து சேர்தலும், வேதியரைக் கண்ட தாசர் அவரை அடிவணங்கி, "இந்த ப்ரசாதத்தை நீர் உண்பீரானால், ஸ்ரீஜாநகீ ரமணருக்கு உவப்புண்டாகும்" என்றார். அது கேட்ட வேதியர், நான் பட்டினியா யிருந்துவந்த சமயத்தில் எனக்கு இப்படிப்பட்ட அப்பத்தைக் கொடுத்தீரே, உம்மைப்போலப் புண்ணியவான்கள் யாரிருக்கிறார்கள்? நீர் பரமபாகவதரா யிருக்கிறீர், நீர் செய்த வுபகாரத்துக்கு நான் என்ன கைம்மாறு செய்யக்கடவேன்" என்று புகழ்ந்

திருந்தார். அப்போது தாசர் அவ்வேதியரை நோக்கி, "உமது பெயர் யாது? நீர் எவ்விடத்திலிருப்பது? நீர் இங்கு வந்த காரணமென்ன?" என்று கேட்க, வேதியர், "என் பெயர் விட்டலபடவே, நான் இருப்பது பண்டரிபுரம், பண்டரி யாத்ரைக்காரரை யெதிர்கொண்டழைத்துக்கொண்டு போவது எனக்கு வழக்கம், இப்போது ஆடிமாதம் நெருங்கியிருப்பதனுல், ஆடி யேகாதசி உத்ஸவத்துக்கு விசேஷமாய் வருகிற ஹரிதாசரை யெதிர்கொண் டழைத்துப்போக வந்தேன்" என்று சொல்லி, "நீரும் வந்தால் பண்டரிநாதனைச் சேவித்துவரலாம்" என்ருர். அதற்குத் தாசர், "நான் ஸ்ரீராமபிரானை யன்றி வேறு தெய்வத்தை ஸ்மரிக்கமாட்டேன்" என்ருர். அது கேட்ட வேதியர், "உமக்கு ஸ்ரீராமஸேவையும் கிடைக்கும்" என்ருர். "அப்படி ஸ்ரீராமபிரான் அங்கே யெழுந்தருளிச் சேவை சாதிக்கிறதா யிருந்தால் நான் வருகிறேன்" என்ருர். வேதியன் "அப்படியே உமக்கு ராமசேவை கிடைப்பதற்குத் தடையில்லை" என்று சொல்லுதலும், தாசரானவர் மனமகிழ்ச்சியோடு, சீடனுகிய தத்துவையும் அழைத்துக்கொண்டு வேதியரைப் பின்தொடர்ந்துபோக, அவர் "இன்னமும் வருகிற ஹரிதாசரை யழைத்து வருகிறேன், நீங்கள் போய்க்கொண்டே யிருங்கள்" என்று யாத்திரைக்காரரை இவர்க்கு வழித்துணையாய்ச் சேர்த்துவிட்டுப் போய்விட்டார். தாசரானவர் பண்டரிபுரத்தருகே வந்தவுடனே, பண்டரிநாதனது கோயிற் சிகரத்தைக் கண்டு மிகவும் ஆநந்தம்கொண்டு, பகவானைத் தோத்திரம் செய்துகொண்டு போகும்போது, பலவாத்திய விசேஷங்களோடும் பாடியாடி ஆநந்த பரவசராய் மெய்மறந்து நிற்பதும், பண்டரிநாதனை அன்பரெல்லாரும் தழுவிக்கொள்வதும் ஆகிய அற்புதமான செய்கைகளை யெல்லாம் கண்டு மிகவும் வியந்து சொல்லுவாராயினர்: "இப்படிப்பட்ட கோயில் இதற்கு முன்னே நான் எங்கும் கண்டதில்லை" என்று மனமகிழ்ந்து, கருடஸ்தம்பத்தி னருகேவந்து நின்று பகவானைவணங்கி, அவ்விடத்தில் சந்நிதிசெய்திருக்கிற ஆஞ்சநேயரையும் வணங்கி, "ஸ்ரீராமபிரான் எங்கே யிருக்கிருர்?" என்று கேட்க, அவர், "துவாபரயுகத்தின் அந்தத்தில் இங்கே சந்நிதிசெய்து எழுந்தருளி யிருக்கிற இந்தக் கண்ணபிரானே ஸ்ரீராமபிரான், வேற்றுமையில்லை, அன்றுமுதல் இன்றளவும் இந்தக் கண்ணபிரானையே ஸ்ரீராமபிரானுகப் பாவித்து நான் அபேதமாய் வணங்கிவருகிறேன், அந்த ஸ்ரீராமபிரானே கண்ணன் என்னும் பெயர்பூண்டு எழுந்தருளியிருக்கிருர், நீ அவரை வணங்கக்கடவாய்" என்று அழைத்துக்

கொண்டுபோய் விட்டலப்பெருமானுக் கெதிரேவிட, தாசரானவர் அந்த விட்டலப்பெருமானை வணங்கி, "ஸ்வாமீ, உனது ராமரூபத்தை நான் கண்டு மகிழும்படி சேவை சாதித்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, பகவானும் அப்படியே ஸ்ரீஜாநகி பிராட்டியாரோடும் இளையபெருமாளோடும் எழுந்தருளிச் சேவைசாதித்துத் தாசரைத் தழுவிக்கொண்டார். அப்போது தாசரானவர், பஞ்சவடியிற் கண்டு வணங்கினாற்போலக் கண்டு வணங்கி நின்றார். பிறகு அங்கு வந்திருந்த ஹரிதாசர்கள் இவரை நோக்கி, "ஸ்ரீராமபிரானைக் கண்ணபிரானாகச் செய்தருள வேண்டும்" என்று ப்ரார்த்திக்க, தாசர், "பகவானே, தேவரீர் முன்போலவே கண்ணபிரானாகச் சேவை சாதித்தருளவேண்டும்" என்று வேண்டுதலும், பகவானனவர் ராமரூபம் நீங்கி, கண்ணபிரானாகச் சேவைதந்தருளினார். இதைக்கண்டவரெல்லாரும் தாசரைப் புகழ்ந்து இவர் கையைப் பிடித்துக்கொண்டு ஊர் வலம்வந்து கருடஸ்தம்பத் தருகேவந்து, ஹாரதி சமர்ப்பித்து, சந்த்ரபாகா நதியையடைந்து, அவ்விடத்தில் மணற்குன்றின்மேலிருந்து, நாமதேவர்பாடுகிற ஹரிநாம ஸங்கீர்த்தனங்களை இரவில் முதல் மூன்றுஜாமம் வரைக்கும் கேட்டுக்கொண்டிருந்து, பகவானுக்கு ஹாரதி சமர்ப்பித்து, பகவதர்ப்பணமான ப்ரஸாதம் லபித்துக்கொண்டபிறகு, அடியாரெல்லாரும் தாசரைநோக்கி, "இன்றிராக்காலக்ஷேபம் நீர் செய்யவேண்டும்" என்றுவேண்ட, இவர், "நான் சிறுவயதுமுதல் ராமநாமஸ்மரணை செய்துகொண்டு வனத்திற் சஞ்சரித்துக் கொண்டிருந்தேன், என்னைக் கதை செய்யச் சொன்னால், ராகதாளங்களோடு ஹரிநாம ஸங்கீர்த்தநங்களை அமைத்துப் பாடவல்லேனோ" என்றார். அதற்கு அவர்கள், "தேவரீர் பாண்டுரங்க பகவானை ஸ்ரீராமபிரானாகச் செய்யவும் மறுபடியும் அந்த ராமபிரானைப் பாண்டுரங்கனாகச் செய்யவும் வல்லீர், ஆகலால் கீர்த்தநங்களை ராகதாளங்களோடு அமைத்துப்பாடாமற்போனாலும், வசநரூபமாகக் காலக்ஷேபம் செய்தாலும் நாங்களெல்லோரும் கேட்டு உஜ்ஜீவிப்போம்" என்றார்கள். அவர்கள் விருப்பத்தின்படியே அன்றிராமுழுதும் ஸ்ரீராம வைபவத்தைக்குறித்து விஸ்தாரமாக உபந்யாஸம்செய்து, ஸ்ரீராமநாமமே முத்திக்கேதுவானதென்று வற்புறுத்தி, ஹாரதி சமர்ப்பித்து, மறுநாள் பௌர்ணமியாகையால் பாண்டுரங்கப்பெருமானைத் திருத்தேரில் எழுந்தருளச்செய்து, பலவாத்யங்கள் கோஷிக்க, கோபாலகாலா என்னும் உத்சவம் செய்யும்பொருட்டுக்கோபுரத்தையடைந்து ஸ்ரீகண்ணபிரான் முற்காலத்தில்செய்தபந்தாட்டம்,தும்பிபாடல்,

கோலாட்டம், கோணங்கியாட்டம், கொம்மி முதலிய விளையாட்டின் வகைகளெல்லாவற்றையும் செய்து, நெற்பொரியோடு வெண்ணெயையும், பகவானுக்கு நிவேதித்து, நிம்பராஜர் அருளின பிரசாதத்தைத் தேவர்கள் மனிதரூபமாய் வந்து வாங்குவதையும், சிந்தினதை எடுத்து உட்கொள்வதையும் கண்டு, யாவரும் அன்போடு வாங்கியுண்ட பிறகு, ஆடல், பாடல் முதலிய சம்ப்ரமத்தோடு பாண்டுரங்க பகவானைக் கொண்டுவந்து கோயிலில் எழுந்தருளச்செய்தார். அர்ச்சகர்கள் கோயிற் கதவை மூடி அவரவர்கள் இடங்களுக்குப் போய்விட்டார்கள். அதின்பிறகு தாசரானவர் கோயிற்கதவினருகே நின்றார். உடனே மூடப்பட்டிருந்த கதவு தானே திறந்துகொள்ளவே தாசர் உள்ளே பிரவேசித்து, பகவானுடைய திருவடியை வணங்கித் தோத்திரம் செய்து, "சிவாஜியரசன் என்னை நாள்தோறும் காணாமல் வருந்துவான், எனக்கு விடை கொடுத்தருளவேண்டும்" என்றார். பகவான் தாசரை நோக்கி, "நீ மறுபடியும் வனத்தைவிட்டு எப்போது என்னிடத்துக்கு வருவாய்"? என்று கேட்க, தாசரானவர் "தேவரீர் என்னிடத்தில் க்ருபை செய்கிற காலத்தில் வருவேன்" என்றார். மேலும் "பகவானே, என்னை ஒரு க்ஷணகாலமும் நீ பிரிந்திருக்கலாகாது" என்று வேண்ட, "அப்படியே யாகட்டும்" என்று பகவான் க்ருபைசெய்து விடை கொடுக்கப் பெற்றுக்கொண்ட தாசர் நரசிங்கபுரத்தை யடைந்து, பிக்ஷையேற்று வந்த மாவைப் பிசைந்து அடைதட்டிச் சுட்டு, பகவதர்ப்பணம் செய்து உண்ணும்பொழுது, விட்டலபகவான் ஒரு வேதிய வுருவங்கொண்டு வந்து, "எனக்கு அதிக பசி யுண்டாயிருக்கிறது" என்று சொல்ல, தாசர்! "ஐயரே நான் சுட்டது உப்பில்லாத அடை, இது உமக்கு ஆகுமோ" என்றார். அதற்கு வேதியர் "நான் தவிட்டைத் தின்பவன், அதிலும் இது மேலானதல்லவா" என்று வாங்கி யுண்டு, "இன்று இங்குள்ள பகவத் ஸந்நிதியில் நீர் கதை செய்ய வேண்டும்" என்று சொல்ல, தாசர் "அப்படியே யாகட்டும்" என்று அன்றிராமுழுதும் கதா காலக்ஷேபம் செய்து, ஹாரதிசெய்து, ப்ரசாதம்பெற்று, மாவுலிக்குப் போய், அதற்கருகே யிருக்கிற வனத்தை யடைந்தார். இவர் வந்த செய்தியையறிந்த அரசன் மிகுந்த ஆவலோடு விரைந்துவந்து அடிபணிந்துநின்றான். தாசர் அவனை நோக்கி, "நான் பண்டரிபுரத்துக்குப் போய்க் கண்ணபிரானாகிய பாண்டுரங்கனைச் சேவித்து வந்தேன், என்னைக் காணாமையால் நீ உண்ணாமல் பட்டினியிருந்தாய், விரைந்துபோய் உண்டு பசியாறி பகவந்நாமஸ்மரணை செய்துகொண்

டிரு" என்று விடைகொடுக்க, அரசன் விடைபெற்றுப்போய் அன்ன முண்டு இனிது வாழ்ந்திருந்தான். இப்படி யிருக்கும்போது டில்லி பாஷா என்பவன் தன் சேனைகளோடு புறப்பட்டுத் தென்றிசை நோக்கி வரும் வழியில், க்ருஷ்ணா நதிக்கரையி லிறங்கினான். அப் பொழுது அவன் படைத்தலைவனாகிய ஒருவன் மாவுலிவனத்திற்கு வந்து ஒரு லக்ஷ்யம் வைத்து அம்பெய்தான். அதைக் கண்ட தாசர், "நீ இவ்விடத்தில் அம்பெய்தலில் ப்ரயோஜநமில்லை, எய்த அம் பைப் பின்தொடர்ந்து பிடிப்பது சாமர்த்தியம்" என்றார். அவன் "இது யாராலுமுடியாத காரியம், இதோ நான் எய்கிறேன், எய்கிற அம்பை நீர் தொடர்ந்து பிடித்தீரானால் நீரே சமர்த்தர்" என்றான். தாசர் அவனை அப்படியே எய்யச் சொல்லி, எய்த அம்பைப் பின் தொடர்ந்து பிடித்துக்கொண்டார். இதைக் கண்ட அந்தப் படைத் தலைவன் அதிசயித்து இவரது திருவடியில் வீழ்ந்து வணங்கி, "நீர் அவதாரபுருஷர்" என்று மிகவும் புகழ்ந்தான். தாசரானவர் அவன் கையிலிலேயும் அம்பையும் வாங்கி ஒரு அம்பெய்து எதிரேயிருந்த ஒரு மரம் அநேக துவாரங்களாகும்படி செய்தார். இதைக்கண்ட அப்படைத்தலைவன் "இவர்க்கெதிரே நம்மரசனும் சேனைகளும் வந் தால் இவர் விடுகிற ஒரு அம்புக்கே இரையாய் விடுவார்கள்" என்று அஞ்சி நடுங்கிப் பலவாறு புகழ்ந்துபோய் அரசனுக்கு இந்தச்செய்தி யைத் தெரிவித்து அவனையும் சேனைகளையும் அழைத்துக்கொண்டு போய்த் தன் ஊரையடைந்தான். அதின் பிறகு தாசரானவர் அவ் விடம்விட்டுச் சம்பளகட் என்னும் ஊருக்குப்போய் அன்றிராத்திரி ராமகதா காலக்ஷேபம்செய்து, அங்குள்ளாரெல்லாரையும் ஆநந்திக் கச்செய்தார். அன்றியும் உபதேசம்பெற வுத்தேசித்து வந்தவர்க்கு உபதேசித்து அவ்விடம்விட்டுப்புறப்பட்டு ஸஹபூருக்குப்போய்,அவ் விடத்திலும் கதைசெய்து அங்குள்ளாரை மகிழ்வித்து, தேசபாண்டி யின் புதல்வியாகிய அக்காபாயிக்கு உபதேசம்செய்து, அவளை ராம நாம ஸங்கீர்த்தநபரையாக்கி, அவளுடைய அன்புக்கிரங்கி, சிலநாள் தங்கியிருந்து, பிறகு சுராபுரம் என்னும் ஊருக்குப் போனார். அவ் விடத்தில் இவருடைய சீடர்களெல்லாரும் வந்துசேர்ந்தார்கள்.

இப்படியிருக்க, அவ்வூரிலுள்ள ஒரு கருணிகன் மக்களாகிய தத்தோபா அம்பாஜி என்கிற இருவரில் இளையவன் சித்தப்பிரமை கொண்டான். அவன் தாய்தந்தையர் அதற்கு என்ன பரிஹாரஞ்செய் தும் நீங்காமையால் விசனமடைந்திருந்தவர்கள், இவரது ப்ரபாவத் தைக்கேட்டு, சித்தப்ரமைக்கொண்ட சிறுவனையழைத்துவந்து இவர்

திருவடியிற்கிடத்திச் செய்தி முழுதுஞ்சொல்ல, தாசர் கராணைகூர்ந்து, ஆறு அபங்கக்கவிகளால் அந்தச் சித்தப்பிரமையை நீக்கியருளினார். அப்போது அந்தச்சிறுவனாகிய அம்பாஜி இவர் திருவடியைவணங்கித் தோத்திரம்பண்ணி, "ஸ்வாமி! உம்மைவிட்டு நீங்கமாட்டேன்" என்றான். தாய்தந்தையர் அவனுக்குத் தாசரிடத்திலிருக்கிற அன்பின் மிகுதியைக் கண்டு, "இவ்விடத்தில் தாசருக்குப் பணிவிடைசெய்து கொண்டிரு" என்று தாசரிடத்தில் ஒப்புவித்துப்போக, அம்பாஜியும் தாசருக்குத்திருவுள்ளமுகக்கும்படியாய் ஏவற்பணிவிடைகள்செய்து கொண்டிருந்தான். இப்படி குருகுலவாசஞ்செய்வதனால் அம்பாஜியும் மஹாமேதாவியாயும், வைராக்ய சீலனாயும், கதாகாலக்ஷேபாதிகள் செய்யவல்லவனாயும் விளங்கினான். இவனது அபிவிர்த்தியைக் கண்ட தாசரும் அதிகமாகச் சந்தோஷித்திருந்தார். இப்படியிருக்குங்காலத்தில் வேதியர் கோசாயிகள் தபசிகள் முதலானவர் அநேகர் வந்து தாசரை வணங்கினார்கள். அந்தக் கோஷ்டியில் அக்காபாயியும் வந்திருக்கக்கண்டு, தாசரானவர் அவளை நோக்கி "இந்தக் காட்டிலும், மலையிலும், கல்லிலும், முள்ளிலும், நான் போகிற இடங்களுக்கெல்லாம் நீ வருவது சரியல்ல, நீ உன் ஊருக்குப் போ" என்றார். அப்போது அக்காபாயி தாசரை நோக்கி "உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தஞ்செய்து உம்மைச் சரணடைந்தேன். ஆகையால் நீர் எவ்விடத்திற்குப்போனாலும் நானும் தொடர்ந்துவருவேன், உம்மை விட்டுப் பிரிந்திருக்கமாட்டேன்" என்றாள். தாசர் அதற்கொன்றும் சொல்லாமல் சும்மா இருந்து, பிறகு புறப்பட்டு, சீடர்கள் சூழ்ந்துவரப்போய் ஒரு மலையையடைந்தார், அடைதலும், இவர் சீடரிற் சிலர் பிக்ஷையேற்றுவரப் போனார்கள். சிலர் மாத்திரம்கூட இருந்தார்கள். அந்தக்காட்டில் ஆழமிகுதியாயுள்ள ஒரு துரவைக்கண்டு அதின்கரையில் பலவகையான மரங்களிருப்பதனால் அவற்றின் சருகுகள் உதிர்ந்து அந்தத் துரவுநீரில் விழுந்திருப்பதையும் கண்டார். கண்டவர் சீடர்களை நோக்கி, "இந்த இலைச் சருகுகளை யெடுத்துவிட்டால் நீர் நன்றாயிருக்கும்" என்று தாசர் சொல்ல, "அதின் கரையிலிருந்த மரக்கிளையை வெட்டினால் மேலேறி வெட்டுகிற நாமே விழ்ந்திறப்போம், சருகுகளை வாரியெடுப்போமென்றாலும் துரவு ஆழமாய் இருப்பதினால் ஏதாகிலும் அபாயம் நேரிடும்" என்று அஞ்சி, ஆசாரியர் சொன்னபடி செய்யாமல் தாமதித்திருந்தார்கள். ஊருக்குள்ளேபோய் ஐயமேற்று வந்தவர்களில் அம்பாஜி யென்பவன் தாசரை நோக்கி, "ஸ்வாமீ! சருகுகளெல்லாம்

எடுக்க நெடுநேரஞ் செல்லும், ஆகையால் நீர் நீராடுவீர்" என்று சொல்ல, தாசர், "நீண்ட இக்கிளையை வெட்டின பிறகுதான் நான் நீராடுவேன்" என்று சொல்ல, அம்பாஜி ஒரு கோடரியைக் கைக் கொண்டு, "ஸ்வாமீ! வெட்டுகிற கிளை தேவரீர்மேல் விழாமல் சற்று விலகியிருக்கவேண்டும்" என்றான். அதற்குத் தாசர் "நீ அந்தக் கிளையை நானிருக்கிற பக்கத்தைவிட்டு வேறு பக்கத்தில் வளைத்து வெட்டு" என்று நியமிக்க, அம்பாஜி "அப்படியே செய்கிறேன்" என்று போய் மரத்தை அடியோடு பேர்க்க, மரமும் இவனும் தூவில் விழுவதைக்கண்ட மற்றச் சீடர்கள் பயந்து, "ஆ! ஆ!" என்றலற, தாசர் நீராடிவந்து அக்காபாயியை நோக்கி, "எனக்கு அமுது படைக்கக்கடவாய்" என்று கேட்க, அக்காபாயி, "ஸ்வாமி அம்பாஜி கிணற்றில் அமிழ்ந்துவிட்டானென்பதைச் சிறிதும் தேவரீர் திருவுளங் கொள்ளாதிருப்பதற்குக் காரணம் யாது" என்றுகேட்க, தாசர் "அவனைக்குறித்து நீயேன் துயரப்படுகிறாய், அவனைப்பற்றி உனக்காகவேண்டியதென்ன" என்றார். அது கேட்ட அக்காபாயி மறுவார்த்தை பேசாமல் அமுதுபடைக்க, எல்லோரோடு மிருந் துண்டு முடிந்தபிறகு, சிவாஜிபரசன் வந்து திருவடியை வணங்கி, அக்காபாயி முகத்தை நோக்கி, முகம் வாடியிருப்பதைக் கண்டு, "இங்கே நடந்தசெய்தி யென்ன சொல்?" என்று கேட்க, அவள் நடந்த செய்தியைச் சொல்லக்கேட்ட அரசன் ஆசாரியரைக் கேட்க அஞ்சி ஊருக்குப் போய்விட்டான். இந்தச் செய்தியை அயலூரார் அறிந்துவந்து, "இந்தத் தீமை செய்தவரை அரசனே ஒன்றுஞ் செய்யாமற் போனபோது நாம் என்னசெய்வது" என்று பதைத்து, தூவிலிறங்கிச் சோதித்துக் காணாமையால், "ஐயோ! அம்பாஜியைப் பிசாசம் உண்டுவிட்டதோ, முதலை முதலிய ஜலசரங்கள் விழுங்கிவிட்டனவோ என்று பேசிக்கொண்டு போய்விட்டார்கள். பிறகு தாசர் தமது சீடரோடும் வேறொரு சோலைக்குப் போய் ஆறுநாள் கழித்து அம்பாஜிபிருக்கும் தூவினருகே வர, ஐயமேற்று வந்த சீடர்கள் அன்னம் சமைத்து இலைகளில் பரிமாறிக் கொண்டிருக்குங்காலத்தில், அரசனாகிய சிவாஜியும் வந்து திருவடி தொழுதான். தொழுதவனைத் தாசர் நோக்கி, "இன்று நீயும் எங்கள் பந்தியில் விருந்துண்ணக்கடவாய்" என்று நியமிக்க, அவனும் அப்படியே பந்தியில் உட்கார்ந்த பிறகு, தூவிலழுந்தின அம்பாஜியைத் தாசர் பேரருளோடு அழைக்க, அம்பாஜி "ஏன்" என்றான். அவனைக் "கலியாணம் அமைந்ததோ" என்று கேட்க, அவனும் தேவரீ

ருடைய க்ருபாவிசேஷத்தால் அமைந்துளேன்" என்றான். "அப்படியானல் எழுந்து எம்மிடத்துக்கு வா" என்றார். உடனே அம்பாஜி தூரவை விட்டுவந்து தாசருடைய திருவடியை வணங்கினன். எல்லாரும் அதிசயித்து, கலியாணமாவென்று குருநாதர் கேட்டபடியே கலியாணமா யமைந்திருந்ததனல் இவர்க்குக் கலியாணகோசாமியென்னும் பெயர் தகுதியாகுமென்று அம்பாஜியை அந்தப் பெயரிட்டழைத்தார்கள். அந்தச் சமயத்தில் சிவாஜியரசன் தன் குருநாதரைத் தேடிக்கொண்டு அவ்விடத்துக்கு வந்து, முன்போலவே குருநாதரைப் பூசித்து, மாங்கனி நிவேதநம் செய்தான். அந்தக் கனிகளை அன்பர் எல்லாருக்கும் கொடுத்துத் தாமும் அமுது செய்து முடிந்த பிறகு, தாசரெல்லாரையும், நோக்கி, "ஓ தாசர்களே! நான் இவ்விடத்தில் அரசாட்சிசெய்ய எண்ணினேன், ஆதலால், இருந்து அரசு செய்வதற்காக ஒரு ஆசநம் அமைக்கவேண்டும்" என்று சொல்ல, தாசர்களெல்லாரும் மண்ணினல் ஒரு ஆசநம் அமைத்து, அதின் மேல் குருநாதரை எழுந்தருளச் செய்தார்கள். பிறகு அஷ்ட மந்திரிகள் சூழவும், சதுரங்க சேனைகளும் தத்தமக்குரிய நிலைகளிலமைந்திருக்கவும், மாருதியுருவ மெழுதப்பெற்ற கொடியைக் கட்டினார்கள். அரசன் சகலவிதமான அலங்காரங்களும் செய்வித்த பிறகு, குருநாதருக்கு முன்னே அக்காபாயியைக் கீர்த்தநம் பாடச்செய்து, அதின் பிறகு வேணுபாயியைக் கதைசெய்யச்செய்து, அதின்பிறகு எல்லாருங்கலந்து மனமொத்து ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்தார்கள். அந்த ஹரிநாம ஸங்கீர்த்தநத்தால் அரசன் ஆநந்த பரவசனய் இரண்டு தினம் வரைக்கும் ஒன்றையும் அறியாமலிருந்தான். அரசன் இப்படி யிருப்பதைத் தாசர் அறிந்து, "இவன் இப்படி யிருப்பானனல், நாம் ராஜரிகம் செய்வதெப்படி" என்று, ஆலோசித்து, தாசபோதக்கிரந்தம் என்றொரு நூலைச் செய்யத் தொடங்க, அதைக் கல்யாண கோசாமி எழுதிக்கொண்டு வந்தார். அந்தக் கிரந்தம் இரண்டு நாளில் முடிவுபெற்றது. அதில், ராஜநீதி ஏழுசதகங்களில் சொல்லப்பட் டிருப்பதனல், அதை அரசனுக்குக் கொடுத்து, அதில் சொல்லப்பட்ட ராஜநீதிகளை நன்றாய்க் கவனிக்கும்படி நியமித்தார். அப்படியே அரசனும் அந்த ராஜநீதியைப் பாராயணஞ் செய்துகொண்டிருந்தான். அந்தப் பாராயணத்தால் அவன்மனந் தெளிவடைந்தது, தாசரும் ஹரிநாமஸங்கீர்த்தநமும் அரசாட்சியும் செய்துகொண்டிருந்தார். இத்தப்பிரகாரம் அரசனகி, பன்னிரண்டு வருஷகாலம் ப்ராஹ்மணபோஜனம் முதலான ஸத்கிரியைகளோடு அர

சாட்சியையும் நடத்திவருங் காலத்தில், ஒருநாள் அரசனைப் பார்த்து, "நீ உன் ஊருக்குப்போ" என்று கட்டளையிட்டு, குருகீதை முதலியவைகளையும் போதித்தனுப்ப, அரசன் விடைபெற்று ஊருக்குப் போய்விட்டான். போனபிறகு, தன் குருநாதர் கொடுத்த எல்லாவற்றையும் தினந்தோறும் பாராயணஞ் செய்துவருவதை, அவ்விடத்திலுள்ள, காகா எனகிற வடமொழிப் புலவன், இவன் செய்கிற பாராயணத்துக்கு அநேக விரோதங்கள் செய்துகொண்டும், தாசர் செய்த நூல்களையும் தாசரையும் நிந்தித்துக்கொண்டும் இருந்தான். இப்படியிருக்கும்போது தாசர் அரசனிடத்துக்குவந்து ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண் டிருப்பதைப் பண்டிதன்கேட்டுப் பரமாநந்தமடைந்து இவரை நோக்க, இவர் மாருதிபோல அவன் கண்ணுக்குத் தோன்றினர். அப்போது பண்டிதன் அதிசயித்து, தாசரை வணங்கிப் பலவகையாய்த் தோத்திரம்பண்ண, தாசர் மனமகிழ்ந்து அந்தக் காகா பண்டிதனைத் தழுவிக்கொண்டு, ஸ்ரீலக்ஷ்மீநாதராகிய பகவானுக்கு ஹாரதி சமர்ப்பித்து, வந்திருந்தவர் யாவருக்கும் ப்ரஸாத விநியோகம்செய்து, அரசனை ஆசீர்வதித்து வேறொரு காட்டுக்குப் போய்விட்டார்.

அப்பால், ராமதாசரானவர், தம்மிடத்தில் அன்புள்ள சீடர்களோடும்கூடி, ராமநாமத்தை ஸ்மரித்துக்கொண்டு சாம்பள்கட் என்னும் ஊரையடைந்து, அதற் கருகிலிருக்கிற ஒரு மலையின்மீதேறி, அவ்விடத்தில் தாம் வாசம்பண்ணத் தகுந்த மடமொன்றையேற்படுத்தினர், அது இப்பொழுதும் இருக்கின்றது. அங்கிருந்து புறப்பட்டு, ஸஹாபூர் என்னும் ஊரையடைந்து, அங்குள்ள ஆஞ்சநேயரை வழிபட்டு,பகற்காலத்தில் ராமபஜனைசெய்துகொண்டும், இராக்காலங்களில் தாசபோதம் என்கிற கிரந்தத்தைக் கல்யாணகோசாமி படிக்க, அர்த்தம் சொல்லிக்கொண்டும் இருக்கையில், ஒரு வேதியன் வந்து தாசரைவணங்கி, "ஸ்வாமீ, அடியேன் குடும்ப பாரத்தால் மிகவும் வருந்தினேன், இந்தக் குடும்பத் துன்பம் நீங்கும்படியான உபாயம் அருள்செய்யவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, தாசரானவர் அதற்கு மறுமொழி சொல்லாமற்போய் ஒரு தடாகத்தினருகேயிருந்து, அவ்வேதியனை நோக்கி, "நீ வைராக்யசீலனாய், குருவாக்யப்படியே நடப்பாயானால் உன் துன்பம் நீங்கும்" என்றார். அதைக்கேட்ட வேதியன், "ஸ்வாமீ, தேவரீர் நியமிக்கிறபடியே நடக்கிறேன்" என்றான். அப்போது தாசரானவர் அவனை நோக்கி, "நீ இந்த மரத்தின் மேலேறித் தடாகத்துக்கு நேரேயிருக்கிற கிளையில்வா" என்றார்.

அப்படியே அவன் வந்தபிறகு, "அந்தக் கிளையைக் கைகளால் பிடித்துக்கொண்டு கால்களைக் கீழே தொங்கவிடுவாயாக" என்று நியமித்தார். அப்படியே அவன் செய்தபிறகு, "இப்போது மரக்கிளை உன்னைப் பிடித்துக்கொண்டிருக்கின்றதா, நீ மரக்கிளையைப் பிடித்துக்கொண்டிருக்கிறாயா" என்று கேட்டார். அதற்கு அவன் "நான்தான் கிளையைப் பிடித்துக்கொண்டிருக்கிறேன்" என்றார். அதைக் கேட்ட தாசரானவர், அவனை நோக்கி, "இப்படியே குடும்பத்தை நீயே பற்றியிருக்கிறாயே யன்றிக் குடும்பம் உன்னைப் பற்றியிருக்கவில்லை, நீ உன் துன்பத்தை நீக்கிக்கொள்ள விரும்புவாயானால், உன் கைகளை விட்டுவிடக்கடவாய்" என்றார். அப்படியே அவன் விட்டவுடனே குளத்தில் விழுந்து அழுந்தினான், அழுந்தினவன் அந்தநீரில் கண் திறந்து, அங்கே ஒரு ஊரும் அதில் ஒரு மடமும் இருக்கக் கண்டு அதிசயித்துநின்றான். அன்றியும், அந்த மடத்தில் தாசபோத காலக்ஷேபம் நடப்பதையும், அந்தக் காலக்ஷேபத்துக்கு வந்திருப்பவர்களையும் தாசருடைய சிடர் பலரையும் காமதேநு, கற்பகவிருக்ஷங்களையும், வாழை, மா, பலா என்னும் கனிவகைகளையும், மடத்துக்குள்ளே ஒரு பொன்னாசநத்தின்மேல் வீற்றிருக்கிற ராமதாசரையும் கண்டு, மிகவும் ஆச்சரியமடைந்து, தாசருடைய திருவடிகளை வணங்கினான். வணங்கினவுடனே, தாசருக்குக் கருணையுண்டாகி அவனுக்கு அநுக்ரஹம் செய்தருளினார். உடனே அந்த வேதிடன் பரமாநந்தக் கடலில் மூழ்கினான். அப்போது, தடாகக்கரையிலிருந்த தாசர், அவனை நோக்கி, "ஓ வேதியனே, கரைக்குவா" என்று சொன்ன சத்தத்தைக் கேட்ட வேதியன் மனமகிழ்ந்து, கரையேறி வந்து, தாசருடைய திருவடியைத் தொழுது நின்றான். அவனைத் தாசரானவர் நோக்கி, "ஓ வேதியனே, நீ இந்தத் தடாகத்தில் மூழ்கியிருந்தபோது கண்ட அதிசயத்தைச் சொல்" என்று கேட்க, அவன், தான் கண்ட அதிசயத்தை யாவரும் அறியும்படி சொல்லி, தாசரை நோக்கி, "ஸ்வாமீ, தேவரீருடைய மஹிமையைச் சொல்ல வல்லவர் யாவர்" என்று தோத்திரம்பண்ணினான். அதின் பிறகு, தாசரானவர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, சாம்பள்கட் என்னும் ஊரை யடுத்த ஒரு மலைமீதேறி, அவ்விடத்தில் ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தம் செய்துகொண்டிருந்தார். இவர் இங்கே வந்திருப்பதை அரசன் கேள்விப்பட்டு வந்து, தான் ஏறிவந்த குதிரையை மலையடிவாரத்தில்விட்டு, மலைமேலேறி, தாசரைக்கண்டு வணங்கின பிறகு, தனக்குண்டாயிருக்கிற தாகத்தைக் கைச்சாடையால் அறிவித்தான். அதைக்கண்ட அக்கா

பாயியார், அரசனை நோக்கி, "இங்கே நீர் கிடைக்காது, கொண்டு வரும்படி யனுப்பலாமென்றால், சீடர்கள் பிக்ஷைக்குப் போயிருக்கிறார்கள்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, சீடர்களும் வந்து சேர்ந்தார்கள். அவர்களை நோக்கி "நீர்கொண்டு வரவேண்டும், அரசனுக்குத் தாகம் அதிகரித்திருக்கின்றது" என்று அக்காபாயியார் சொன்னார். அதற்கு அந்தச் சீடர்கள், "இந்த மலையின்மீது நீர் கிடைப்பது அருமை, கீழே போய்க் கொண்டுவரவேண்டும்" என்றார்கள். அதைக் கேட்ட தாசரானவர், "இவர்கள் கீழே யிறங்கிப்போய் நீர் கொண்டு வருமளவும் இவன் தாகம் பொறுக்க மாட்டான்" என்றறிந்து, ஒரு கோலைக்கொண்டு நிலத்தில் ஊன்றினார். ஊன்றின இடத்திலிருந்து நீர் பெருகினதைக் கண்ட அரசனும், சீடர் முதலான யாவரும் அந்த நீரைக் குடித்து, "இப்படிப்பட்ட இனிய சுவையுள்ள நீரை நாங்கள் எங்குங் கண்டதில்லை" என்று தாசரைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். அந்த நீர்ப்பெருக்கு அன்றுமுதல் இன்றளவும் யாவருக்கும், ஸ்நாநபானபாகாதிகளுக்கு உபயோகப்பட்டுக்கொண்டு வருகின்றது. அந்த நீரைக் குடித்துத் தாகம் தணிந்த பிறகு அரசன் தன் ஊருக்குப் போய் விட்டான். அப்பால், தாசரானவர் சிலநாள் அங்கே தங்கியிருந்து, அதின் பிறகு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு வேறொரு ஆரணியத்துக்குப் போனார். அப்போது மழைக்காலமா யிருந்ததனால் எல்லாரும் மழையில் நனைந்து குளிரினால் வருந்தினார்கள். அந்தச் சமயத்தில் தாசரானவர் அக்காபாயியார் முகத்தை நோக்கி, "எனக்குப் பசியாயிருக்கின்றது, எனக்கு உணவு கொடுக்கவேண்டும்" என்று கேட்க, அக்காபாயியார், ஈர விறகுகொண்டு அடுப்பு மூட்டி நெருப்புண்டாக்கி, அது நனையாமல், அடுப்பின்மேல் தமது ஆடையால் மறைத்து, கொஞ்ச நேரத்துக்குள்ளே பாயசஞ் செய்துவைத்துக் கொண்டு, "ஸ்வாமீ, பாயசம் செய்து சித்தமாயிருக்கின்றது, எழுந்து அமுது செய்யலாம்" என்று சொல்லக்கேட்ட தாசரானவர், "இப்பொழுது எனக்குப் பசியில்லை" என்று சொல்லி, மறுநாள் அங்கிருந்து புறப்பட்டுப்போய் வேறொரு ஆரணியத்தை யடைந்து, "எனக்குப் பசியாயிருக்கின்றது" என்றார்; அதைக்கேட்ட அக்காபாயியார் முன்போலவே மழையால் வருந்திப் பூரிசெய்து வைத்துக்கொண்டு, "அமுதுசெய்ய வாரும்" என்றழைக்க, தாசரும் "இப்பொழுது எனக்குப் பசியில்லை" என்றார். இப்படி இரண்டுநாள் சொல்லி, அவள் மனம் வெறுக்கும்படி செய்யவும், அவள் மனம் வெறுக்காம

லும் தாசரைப் பிரியாமலும் இருந்துகொண்டு, மிகவும் அன்போடு தாசருடைய ஊழியம் செய்துகொண்டு, தாமும் தாசரைப்போலவே அங்கபானங்களை நீக்கி யிருந்தார். பிறகு தாசரானவர் வேறொரு காட்டுக்குப்போய், கல்யாண கோசாமியை நோக்கி, "நீ ஒரு வில்லைச் செய்து மிகு விரைவில் என் கையிற் கொடுக்கவேண்டும்" என்றார். கோசாமியும் குருநாதர் சொற்படியே மூங்கிலைக்கொண்டு ஒருவில்லைச் செய்து கொடுத்தார். தாசர் அந்த வில்லைக் கைக்கொண்டு கானகமுழுதும் வேட்டையாடுவதைக் கண்ட மடாதிபதிகளாகிய குருக்கள் அரசனிடத்துக்கு வந்து, "ஓ ராஜகுமாரனே! நாங்கள் நெடுங்காலமாய் அநேகருக்கு உபதேசித்து வருவதை அறிந்திருந்தும், எங்களை அவமதித்து, காட்டில் திரிகிற ஒரு பேயனைக் குருவென்று மதித்து, நீயும் அவனோடு காட்டில் அலைகிறாய், இது என்ன விபரீதம்" என்று அரசனைச் சற்றே கடிந்து பேச, அரசன் அவர்களுக்கு மறுமொழி கொடாமல் மௌனமாயிருந்தான். பிறகு அந்த மடாதிபதிகள் தமது சீடரை நோக்கி, "நீங்கள் காட்டுக்குப்போய், ராமதாசனுடைய நடக்கையைத் தெரிந்துகொண்டு வாருங்கள்" என்று சொல்ல, சீடர்களும் அப்படியே தாசரைத் தேடிக்கொண்டுவந்து நெருங்கும்போது தாசரானவர் அந்தக் காட்டிலுள்ள பறவைகளையெல்லாம் கொன்று ராசிராசியாய்க் குவித்துக்கொண்டிருந்தார், அதைக் கண்ட அந்தச் சீடர்கள் போய்த் தமது குருக்களுக்குத் தாசருடைய செய்தியைச் சொன்னார்கள். அது கேட்டு மடாதிபதிகள் அரசனை யழைத்துக்கொண்டு தாசிருக்குமிடத்துக்கு வந்தார்கள். அப்போது தாசரானவர் தமது சீடர்களை நோக்கி, "நான் வேட்டையாடிக் கொன்ற பறவைகளெல்லாவற்றையும் நீங்கள் ஒரு மரத்தினருகில் கொண்டுவந்து சேருங்கள்" என்று கட்டளையிட, சீடர்களும் அப்படியே செய்தார்கள். அதைக் கண்ட மடாதிபதிகள் அரசனை நோக்கி, "ஓ அரசனே, பகவத்பக்தனாகவும் துறவியாகவும் இருக்கிறவன் சிறிதாயினும் ஜீவகாருண்யமில்லாமல் இப்படி உயிர்களை வதைப்பது தகுதியாமோ, இவனை நீ குருவென்று ஆசிரயித்திருப்பது உன் பெருமைக்குத் தகாது" என்று சொல்லி, அரசனோடு தாசரிடத்துக்கு விரைந்து வந்து, "தாசரே, யாவருக்கும் ஜீவகாருண்யம் முதலான மேலான தர்மங்களைப் போதிக்கிற நீரே இப்படி செய்வீரானால் உம்மை யார் மதிப்பார்கள்" என்று அவமதித்துப் பேசினார்கள். அப்பொழுது ராமதாசரானவர் அந்த மடாதிபதிகளை நோக்கி, "நன்மையும் தீமையும் நம்மாலே உண்டாவனவல்ல, ஸ்ரீராமபிரானாலேயே

உண்டாகின்றன" என்று சொன்னார். சொல்லுதலும், மடாதிபதிகள் தாசரை நோக்கி, "நீ கையில் ஒரு வில்லைத் தரித்துக்கொண்டு குவிக்கும் பாவச்செய்கை முழுதும் ஸ்ரீராமபிரானால் நிகழ்வதென்று சொல்லுதல் உனக்குத் தகாது" என்று சொல்ல, தாசரானவர் அவர்கள் சொல்லுக்கிணங்க, "ஓ ஸ்வாமிகளே! நான் அறியாமையால் இந்தப் பாவங்களைச் செய்தேன், ஆதலால், ஜ்ஞாநிகளான நீங்கள், இந்த உயிர்களெல்லாம் பிழைத்தெழும்படி செய்தருளவேண்டும், அப்படிச் செய்தால் அவை பிழைப்பதேயன்றி, என் பாவமும் நீங்கும்" என்றார். அதைக் கேட்ட வேதியர்கள் தாசரை நோக்கி, "அடா பாதகா, நீ கொடுமையாகிய காரியத்தைச் செய்துவிட்டு, இப்பொழுது அந்த வுயிர்களைப் பிழைப்பிக்கச் சொல்லுகிறாய், இந்தக் காரியம் சாக்ஷாத் பகவானாலானாலும் முடியுமா, எங்களைப் பரிஹஸிக்கிறாய், இது உனக்குத் தகாது" என்று சொன்னவுடனே, தாசரானவர் விரைந்து, அரசனை நோக்கி, "விறகு கொண்டுவா" என்றார். அரசனும் அப்படியே கொண்டுவர, அந்த விறகைக் கொளுத்தி, அந்த நெருப்பில் பறவைகளை யெல்லாம் போட்டவுடனே, அவை யாவும், உயிர்பெற்றெழுந்து, ஒன்றின்பின்னொன்றாக ஆகாயத்தில் பறந்து போயின. இந்த அற்புதத்தைக்கண்ட அரசனுக்கெதிரே யிருந்தவர்கள் எல்லாரும் நாணமடைந்து, தலை வளைத்து, நின்று, தாசரை நோக்கி, "ஸ்வாமீ, தேவரீருடைய மகிமையைத் தெரிந்துகொள்ளாமல் அவிவேகிகளாகிய நாங்கள் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று தோத்திரித்து வணங்கி, விடைபெற்றுத் தங்கள் தங்கள் இடங்களுக்குப் போய்விட்டார்கள். அரசனும் விடைபெற்றுத் தன்னூருக்குப் போய்விட்டான். தாசருடைய மஹிமையைப் பார்த்திருந்த சிடரெல்லாரும் ஆநந்தக்கடலில் மூழ்கினார்கள்.

அதின்பிறகு, புண்ணிய க்ஷேத்ரமென்று யாவரும் சொல்லிப் புகழும்படியான கோலாபூரில் வாழ்பவனாகிய ஒரு வேதியன், தாஸரிடத்துக்கு வந்து வணங்கி, "ஸ்வாமி, நான் வாழ்கின்றவூரில் சக்தியுபாசனைமிகுந்து, எவராகிலும் ராமநாமத்தை யுச்சரித்தால், "மரணகாலத்தில் சொல்ல வேண்டியதைப் பிழைத்திருக்குங் காலத்தில் ஏன் சொல்லுகிறீர்கள்?" என்று அவர்களைத் தண்டித்து வருத்துகிறார்கள், இதற்கு என்ன வுபாயம் செய்யலாம்" என்று வினவக் கேட்ட ராமதாஸர், சிரித்து, அவ்வூருக்குப்போய், அவ்விடத்தில் ஹரிபஜனை செய்து, அங்குள்ளார் எல்லாரும் ராமநாம ஸங்கீர்த்தநத்தையே செய்யும்படியாய் அவர்களைத் திருத்தி, அங்குநின்றும் புறப்பட்டு,

கர்ஹாட் என்கிற தேசத்துக்குப் போய் அவ்விடத்தில் தங்கி, தினந்தோறும் ராமநாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்தார். அதைக் கேட்ட அநேகர் பரிசுத்தமான மனமுள்ளவர்களாய், இவரைச் சரணடைய, அவர்களுக்கெல்லாம் உபதேசம் செய்து வருகிறகாலத்தில் அவ்வூரிலுள்ள பாண்டியாத்தான் பெற்ற புதல்வியாயும், விதவையாயுமிருந்த வேணுபாயி என்பவள் தாஸரிடத்தில் வந்து, இவர் செய்யும் ஹரிநாம ஸங்கீர்த்தனங்களைக் கேட்டு, அன்பு மிகுந்து, தாசரை வணங்கி, வாழ்த்தி, திரிகரணசுத்தியாய், "ஸ்வாமி, அடியேன் மீது கருணை சுரந்து அனுக்ரகிக்க வேண்டும்" என்று ப்ரார்த்திக்க, அவளுடைய நல்ல எண்ணத்தை யறிந்த தாசர், "அப்படியே செய்கிறேன், நீ போய் ப்ராஹ்மண போஜனம் சேகரித்து வைத்துக் கொண்டு ப்ராஹ்மணரை வரவழைக்கக்கடவாய்" என்று நியமித்தார். அவளும் அப்படியே செய்ய, வேதியர்கள் வந்து உண்டு மனமகிழ்ந்தபிறகு அவளுக்கு அநுக்ரஹித்து, ஆஞ்சநேயரை மனத்தில் நினைத்தார். உடனே ஆஞ்சநேயர் ப்ரத்யக்ஷமாகியிற்க, அவருக்கு அன்னம், கறிவகைகள் யாவும் கொண்டுவந்து பரிமாறும்போது, அவருடைய சௌந்தரியத்தைக் கண்டு மூர்ச்சித்து விழுந்தாள். விழுந்தவுடனே, அவளைத் தாசர் தமது திருக்கரத்தா லேந்தி, "நீ எதைக் கண்டு அஞ்சினாய், சொல்" என்று கேட்க, அவள், "ஸ்வாமி, யாரோ ஒரு மஹாபுருஷர், மிகவும் ஒளியுருவாகி வால், சோவணம், யஜ்ஞோபவிதம் இவைகளோடு வரக் கண்டு, கண்கூசி அஞ்சி, உப்பரிகையின்மேலிருந்து விழுந்தேன்" என்று சொல்ல, தாஸரானவர், அவளை நோக்கி "என் சீடர்களில் ஒருவராயினும் ஆஞ்சநேயரைத் தரிசிக்கவில்லை, அவரைத் தரிசிக்கப்பெற்ற உன் பாக்கியமே பாக்கியம்" என்று சொல்லிக்கொண்டு "வந்த வுணவுகளை யெல்லாம் மாருதியானவர் அமுது செய்யும்படி பரிமாறக்கடவாய்" என்று நியமித்து, அப்படியே அவள்செய்ய, மாருதியானவர் அமுது செய்து மறைந்த பிறகு, மிச்சத்தையுண்டு, முன்னே உண்டு வயிறு நிறைந்திருக்கிற வேதியருக்கெல்லாம் புஷ்பசந்தன தாம்பூலாதிகளைக் கொடுப்பித்து, மூன்றுநாள் அங்கே தங்கியிருந்து, ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டே, தம்மிடத்தில் அநுக்ரஹம்பெற்ற வேணுபாயிக்குத் தெரியாமல் காட்டுக்குப் போய்விட்டார். இவர் சீடரோடு காட்டுக்குப் போனதையறிந்த வேணுபாய், தாசருடைய பிரிவுக்கிரங்கி, தாசரிடத்துக்குப் போவோர்களைப் பின்தொடர்ந்து போனாள். போய்த் தாசரைக் கண்டு வணங்கி, "ஐயரே, அடியேன் உமது சந்நிதியை

விடாம லிருந்துகொண்டு தேவரீருடைய ஊழியம் செய்துகொண்டிருக்கிறேன்" என்றாள். அதைக்கேட்ட தாஸரானவர், அந்தச் சிறுமியை நோக்கி, "நீயோ சிறுபெண், ஆகையால் நான் திரியுங்காடு மலை முதலியஇடங்களுக்கு நீவரலாகாது, உன்மீது எனக்குள்ள அருளால் சொல்லுவதை உறுதியாய் நம்பி அந்தப்படி நடக்கக்கடவாய், என்னென்றால், நீ போய் உன் வீட்டி லிருந்துகொண்டு, நாள்தோறும் ஸ்ரீராமனுடைய திருவடியைச் சிந்தித்துக்கொண்டும், அவரது திருநாமத்தை உச்சரித்துக்கொண்டும், இருந்தாயானால் உனக்கு நற்கதியுண்டாகும்" என்று சொல்லி யனுப்ப, வேணுபாயி அப்படியே போய்விட்டாள். போய், தாஸர் சொன்னபடியே ஸ்ரீ ராமநாமத்தை இடைவிடாமல் உச்சரித்துக்கொண்டிருந்து, சிலகாலங் கழிந்தபிறகு, தாசர் சஹாபூருக்கு வந்த செய்தியைக் கேள்விப்பட்டு வந்து, அவர் செய்த கதையைக் கேட்டுத் தன்னூருக்குப் போய் வாழ்ந்திருக்கும் போது, இவளுடைய கணவனுக்குத் தந்தையானவன், இவள் தந்தையைநோக்கி, "உன் மகளுடைய செய்கைகள் நன்றாயிருக்கவில்லை" என்று சொல்ல, அவன் தன் மகளை யழைத்து "நீ ஊரூராய்த் திரிவது உனக்குத் தகுதியாகுமோ" என்று கோவத்தோடு கேட்டான். தாயும் அப்படியே கோபத்தோடு வன்சொற்களை வழங்கினாள். தந்தைதாயார் இருவரும் இப்படி பேசினதைக் கேட்ட வேணுபாயியானவள் "என் நாயகன் இறந்ததினாலல்லவோ, நற்கதியை விரும்பிச் சற்குருநாதரைத் தேடலானேன், இதனால் உங்களுக்கு என்ன பழியுண்டாகும்? அன்றியும், எனக்கு நித்யமான மாதா பிதாக்களாவோர் ஸ்ரீஜாநகிபிராட்டியும், ஸ்ரீராமபிரானுமே யன்றி, நீங்கள் எனக்குத் தாய் தந்தையர் ஆகமாட்டீர்கள்" என்று சொல்லக் கேட்ட தாய் தந்தையர், "இவள் நமக்கு அடங்காமற் பேசுகிறாளாகையால் இவளைக் கொல்லுவதே தகுதியாகும்" என்று தீர்மானித்து, இவளுக்கு நஞ்சு கலந்த சோற்றைக் கொடுத்தார்கள். வேணுபாயி, அந்தச் சோற்றில் நஞ்சு கலந்திருப்பதை யறியாதவளாகையால், வாங்கி யுண்டாள். உண்டு சற்று நேரத்துக்குள்ளே, இவளுக்கு மயக்கமுண்டாயிற்று; உண்டாதலும் சற்று நிதானித்துத் தெளிவோடிருந்துகொண்டு, தன் குருநாதராகிய தாசரை த்யானித்து, "ஸ்வாமீ! எனக்கு இப்போது நேரிட்டிருக்கிற அபாயத்தைத் தேவரீரே நீக்கி என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே உயிரைவிட்டாள். இதை யறிந்த தாசரானவர், இவள் இறந்துகிடக்கிற இடத்திற்கு வந்து, இவளை அருட்கண்ணால் நோக்குதலும், வேணுபாயி உயிர்பெற்

றெழுந்து, சற்குருநாதரை நோக்கி, "ஸ்வாமீ! எனக்கு நஞ்சசலந்த சோற்றை யுண்பித்த தாய் தந்தையர், அடியேன் தேவரீருக்குப் பணிவிடை செய்வதற்கு மனம் பொறுக்கமாட்டார்கள்" என்று சொல்லி, சாம்பள்காட் என்கிற நகரத்தை யடைந்தாள். பிறகு ராமதாசரானவர், முசளருத்திரர், ராமாஜி, தேவதாசஜசவந்தர், திவாகரர் என்பவர் முதலான கோசாயிகளுக்கு இனிய வசனங்களைச் சொல்லி, அவர்களைத் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு அனுப்பி விட்டுத் தாம் அளகாவத நகரத்துக்கு வந்து, சீடரோடு இந்திராயணிநதியில் நீராடி, ஞானதேவர் சமாதியைத் தொழுது தோத்திரம் பண்ணி, மூன்றிராத்திரி அங்கேயிருந்து ஹரிநாம ஸங்கீர்த்தனம்செய்து புறப்பட்டுக் கங்காதீரத்தை யடைந்து, ஏகநாத ஸ்வாமிகளுடைய திருவடிநிலையை யமைத்து, அரசமரத்தின் கீழிருந்து, தொழுது வாழ்த்தி, அவ்விடத்திலும் மூன்றிராத்திரி ஸ்ரீராம சரித்ரத்தை யருளிச்செய்ய, அந்த ஏகநாத ஸ்வாமிகள் இவர்க்குப் பிரத்தியக்ஷமாகி, சந்தோஷத்தோடு தழுவிக்கொண்டு, விடை கொடுத்தனுப்ப, அங்கிருந்து புறப்பட்டு அவரங்காபாத் என்னும் நகரத்தை யடைந்தார். அடைதலும், அங்கே, ராமிராமதாசு என்னும் மஹாத்மாவானவர் தமது சீடர்களோடும் எழுந்தருள, அவரைக் கண்டு வணங்கிப் புறப்பட்டுப் போகும்போது, சிவூரில், வாழ்கின்ற புண்யவதியாகிய பயிஞ்பாயி யென்பவள் இவர் செய்யுங் கதையைக் கேட்டு, ப்ரபஞ்சத்தில் வெறுப்புடையவளாய், வைராக்ய ஞானங்களை யடைந்து, தாசருடைய திருவடியை வணங்கி, இவரைத் தன்னூருக்கு அழைத்துக்கொண்டுபோய், ஷோடசோபசாரமும் செய்து, "அடியேனுக்கு உபதேசித் தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, தாசர் அவளுடைய சித்தசுத்தியைத் தெரிந்துகொண்டு, அவளுக்கு உபதேசித்து, அவள் வீட்டில் ஒன்பது நாளிருந்து, அங்குநின்றும் புறப்பட்டு, டாங்களி நகரையடைந்து, அவ்விடத்தில் ஆஞ்சநேயர் கோயிலைச் சேர்ந்து வணங்கிப் பூஜித்து, பஞ்சவடிக்குப் போய், ஸ்ரீராமகுண்டத்தில் முழுகி, ஸ்ரீராமபிரானைத் தொழுது வாழ்த்தி, அநேக கீர்த்தனங்கள் பாடி, இராக்கால மூன்றுசாமங் கழித்து, நான்காஞ் சாமத்தில் விடியற்காலமாகும்போது பகவானுக்கு ஹாரதி சமர்ப்பித்து, யாவருக்கும் ப்ரஸாத விநியோகஞ் செய்தார். இப்படி மூன்றுநாள் அவ்விடத்தி லிருந்து, பிறகு புறப்பட்டுத் தம்மைத் தேடிக்கொண்டிருக்கிற சிவாஜி ராஜனுடைய உத்தியாநத்தில் அநேக வாத்ய முழக்கத்தோ

டும் அநுமக்கொடியோடும் வந்து சேர்ந்தார். இவர் வந்துசேர்ந்ததைச் சிவாஜிராஜன் அறிந்து, சதுரங்க சேனைகளும் புடைசூழ்ந்துவரக் கால்நடையாய் வந்து குருநாதரைக் கண்டு வணங்கிப் பூஜித்து, தன்பட்டத்து யானைமேல் பொன்னாசநமிட்டு, அதன்மீது தாசரை யேற்றி, பல வாத்யகோஷத்தோடு, தானும் மந்திரிகள் எண்மரும் கவரிவீசிக்கொண்டு, நகரை வலம் வந்து, அரண்மனையையடைந்து, உயர்ந்த பொற்றவிசில் தாசரை யெழுந்தருளுவித்து, ஷோடசோபசாரங்களும் செய்து அமுது செய்வித்த பிறகு, வேதியருக்கூட்டித் தானும் உண்டான். அன்றிரா முழுதும் தாசரைக் கொண்டு ஹரிநாம ஸங்கீர்த்தநம் நடத்தி, உதயகாலத்தில் பகவானுக்கு ஹாரதி சமர்ப்பித்து, வந்தவரெல்லாருக்கும் ப்ரஸாத விநியோகம் நடப்பித்து முடிந்தபிறகு தாசரானவர் அங்கிருந்து புறப்பட்டுத் தம் சீடரோடு வனத்தை யடைந்து சிலநாள் கழித்து, சாம்பள்கோர் என்கிற வூரில் பிரவேசித்து, அவ்விடத்தில் ஸ்ரீராம மூர்த்தியைப் பிரதிஷ்டைசெய்ய நினைத்து, வாயுகுமாரராகிய ஸ்ரீ ஆஞ்சநேயரைத் தியானித்தார். அவ்வாயுபுத்ரர் உடனே பரத்யக்ஷமாகி நின்று, அவ்விடத்துக்கு ஏழு கோசு தூரத்திலிருக்கிற ஒரு சிற்றூரில் அமர்ந்திருக்கிற ஸ்ரீராமமூர்த்தியைக் கொண்டுவந்து இவ்விடத்தில் ஸ்தாபிக்கக்கடவாய்'' என்று சொல்லி மறைந்தார். உடனே தாசரானவர் அந்த விக்ரஹத்தைக் கவர்ந்து கொண்டுவரவேண்டுமென்றெண்ணி, இராக்காலத்திற் போய், ஸ்ரீராமர், ஜாநகிபிராட்டி, லக்ஷ்மணர், அநுமான் என்கிற நால்வருடைய விக்ரஹங்களையும் கவர்ந்து கொண்டுவந்தார். அந்த வூரிலுள்ளார் விடியற் காலத்தில் சேவிக்கவந்து, கோயிலில் விக்ரஹங்கள் இல்லாதிருப்பதைக் கண்டு, "யார் கொண்டுபோனார்களோ?'' என்று சிந்தித்து, பலவிடங்களிலும் தேடிக் காணமல் ராமதாசர் இருப்பிடத்துக்கு வந்து, இவரிடத்தில் தாம் தேடும் விக்ரஹங்கள் யாவையுங்கண்டு, இவரை நோக்கி, "அரசனுக்குக் குருவாயிருக்கிற நீர் இப்படிக் களவுசெய்தல் உமது பெருமைக்குத் தகுதியாகுமோ'' என்றார்கள். அதற்குத் தாசர் மறுமொழி சொல்லாமல் மௌநமாயிருந்தார். வந்தவர்கள், "இவர் நாம் கேட்ட கேள்விக்கு மறுமொழி சொல்லாம லிருந்ததால் நமது விக்ரஹங்களை நாமே யெடுத்துக்கொண்டு போவோம்'' என்றெண்ணிக் கிட்டி வந்து, விக்ரஹங்களைப் பலருங் கூடி யெடுத்து, அவைகள் சற்றும் அசையாதிருப்பதைக் கண்டு, "பகவானுக்கு இவ்விடத்தே யெழுந்தருளத் திருவுள்ளம்'' என்று தீர்மானித்து, பயந்து, தாசரை

நோக்கி, "ஸ்வாமீ, தேவரீருடைய மஹிமையை யறியாமல் நாங்கள் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று வணங்கித் துதித்துப் போய்விட்டார்கள். பிறகு தாஸரானவர், பகவானைப் பிரதிஷ்டைசெய்ய நினைத்து, அவ்வூராரால் அமைக்கப்பட்ட கோயிலில், சுபமுஹூர்த்தத்தில் அந்த விக்ரஹங்களைத் தனித்தனியே பிரதிஷ்டை செய்து, மேலும் விக்ரஹ ப்ரதிஷ்ட்டா காலத்தில் செய்யவேண்டிய க்ரியைகள் எல்லாம்செய்து, ப்ராஹ்மண சந்தர்ப்பணம் நடத்தி முடித்தபிறகு, ஸ்ரீராமபிரானைக் கண்குளிரச்சேவித்து நிற்கும்போது, பகவானனவர் ஸ்ரீஜாநகிபிராட்டியாரோடும் வந்து தாசரைத் தழுவிக்கொண்டார். அன்றிரவில் தாசரானவர் திருக்கோவிலின் மண்டபத்தில் தாளம் ம்ருதங்கம் முதலிய வாத்ய விசேஷங்களோடு ஸ்ரீராமநாம ஸங்கீர்த்தனம் செய்து, விடியற்காலத்தில் பகவானுக்கு மங்களாரதி சமர்ப்பித்து ப்ரஸாதவிநியோகமும் நடத்தி, நாலுநாள் வரைக்கும் அங்கே தங்கியிருந்து, உத்ஸவத்தை நிறைவேற்றி, பிறகு க்ருஷ்ணாநதியை யடைந்து, அந்த நதிக்கரையிலுள்ள ஒருவனத்தில் வாசம்பண்ணிக்கொண் டிருக்குங்காலத்தில், ஒருநாள் டாங்களியில் முன்னே ப்ரதிஷ்டைசெய்த அநுமாரை யன்றிப் பதினொரு இடங்களில் ப்ரதிஷ்டை செய்யவேண்டுமென்கிற எண்ணம் இவர்க்கு உண்டாயிற்று. அந்தப் பதினொரு இடங்களின் பெயர் யாவையெனின்: சாம்பளகாட், சிங்கணபுரம், மசூர், சஹாபூர், மமாடி சாதாரா, பத்தி, சுசிராளே, ஜராடா, டேம்பி, நவகாமலே, ஊர்ணபாகு என்பவைகளே. இந்த இடங்களிலெல்லாம் தமது திருக்கையால் ஆஞ்சநேய விக்ரஹங்களைப் பிரதிஷ்டைசெய்து, வேதோக்தமான க்ரியைகள் உபசாரங்கள் யாவும் செய்து வணங்கித் தோத்திரித்து, இந்தப் பதினொரு இடங்களில் ஏதாகிலும் ஒரு இடத்தில் எழுந்தருளியிருக்கிற மாருதியைப் பதினறு தினம் வரைக்கும் கிரமமாய்ப் பூஜித்தவர்கள் தங்கள் தங்கள் பக்திக்குத் தகுந்த பலன்களை யடையக்கடவார்கள் என்று மங்களாசாஸநம் பண்ணி, இந்த இடத்திற் இன்னார், இந்த இடத்தில் இன்னார், இருந்து கோயிற்பணிவிடைகளை நடத்திவரவேண்டும் என்று தம் சிடர்களிற் சிலரை நியமித்து வைத்துவிட்டு, அங்குநின்றும் புறப்பட்டு, கனவிலும் ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்யாத முழுமூடர்கள் வாழ்கிற ஊர்களிற்போய், ஹரிநாமஸங்கீர்த்தநம்செய்து, அங்குள்ளவர்களெல்லோரும் ஹரிபக்தர்களாகும்படிசெய்து, பிறகு தம்சிடரோடு சாம்பளகாட் என்னும் ஊருக்குவந்து, அங்கே முன்பு பிரதிஷ்டைசெய்த

ஸ்ரீராமமூர்த்தியைக் கண்டு சேவித்து, அப்போது சமீபித்திருந்த ஸ்ரீராமநவமி யுத்ஸவத்தை நடத்தத் தொடங்கும்போது, சிவாஜி ராஜனும் வந்துசேர்ந்தான். அவனைக்கொண்டு ஒன்பதுநாள் உத்ஸவமும் சிறப்பாய் நடத்தி, பத்தாம் நாளிலே விசேஷமான அலங்காரம் செய்து உத்ஸவத்தைப் பூர்த்தி செய்து, ப்ராஹ்மணபோஜநம் நடத்தி, அரசனுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டு, தம் சிடரோடும் எழுந்தருளியிருக்கும்போது, ஸ்ரீஹநுமந்தஜயந்தி சமீபித்தது; அந்த வுத்ஸவத்தை நடத்தத் திருவுளங்கொண்ட தாசர், முன்னே தாம் ஆஞ்சநேயரைப் பிரதிஷ்டைசெய்த பதினொரு இடங்களிலும் அலங்கரித்து, ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு ராமதாசர் விழுக்காடாகப் பதினொரு ராமதாசர்களாயிருந்து உத்ஸவ கைங்கர்யத்தை நிறைவேற்றினபிறகு, பலஇடங்களுக்குப் போய், அங்கங்கே யிருப்பவர்கள் முழுமூடரா்யிருந்தாலும் அவர்களையெல்லாம் திருத்தி, ஸ்ரீராம பக்தியிற் சிறந்தவர்களாக்கி, "ஸ்ரீராம பக்தருக்கு முக்யமாய் ஆஞ்சநேயர் அருளிருக்கவேண்டும்" என்றும் "அவருடைய அருள் பெறாவிடின் எந்தக் காரியமும் முடியாது" என்றும், யாவருக்கும் போதித்து, அவர்களுடைய மனங்களை நிலைபெறச்செய்து, பிறகு பகவானுக்கு ஹாரதி சமர்ப்பித்து அடியார்களுக்கு ப்ரஸாத விநியோகம் செய்து; அங்குநின்றும் புறப்பட்டுக் கோலாபூரை யடைந்து; அங்கும் ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தநம்செய்து; சந்திரகிரியை யடைந்து; அந்த மலைமேலேறி மூன்றுமாச காலம் வரைக்கும் ஸ்ரீஹரிகதா காலக்ஷேபம் செய்துகொண்டிருந்து; அவ்விடம் விட்டுப்போய்; சேதுபந்தநஞ்செய்த நளன் என்னும் வாநரவீரன் வாசம்பண்ணுகிற இடத்தையும் கண்டு, அவ்விடத்தில் கோல்ஹாசுரனை வதைத்த திருமகளையுங் கண்டு, வணங்கித் தோத்திரம்பண்ணி, பகுளம் என்னும் தேவாலயத்தையும் தரிசித்துத் துதித்து; ரங்காளம், பத்மாளம் என்னும் பொய்கைகளைக் கண்டு, அவற்றில் நீராடி; அங்குநின்றும் புறப்பட்டு உத்தரதிசையிற்போய், பஞ்சகங்கையில் நீராடி; மார்க்கண்ட பர்வதம் முதலான மலைகளையும்; இமாசலம் ரத்நாகரம் முதலான பெரிய பர்வதங்களையும் கண்டு, அவற்றுக்குத் தென்றிசையிலுள்ள ஸ்தலங்களையெல்லாம் தரிசித்து வணங்கி, தமது சிடர் பலரோடும் அரணியத்தை யடைந்து, அவர்கள் பணிவிடை செய்துகொண்டிருக்கவும், அக்காபாயி சமையல் செய்துகொண்டிருக்கவும் தங்கியிருக்குங்காலத்தில் மாவுலிங்கரிலிருந்த சிடராகிய உத்தவகோசாமி யென்பவர், தாளம் மிருதங்கம் முதலிய வாத்யவிசேஷங்க

ளோடு ஸ்ரீஹரிநாமசங்கீர்த்தநம் செய்துகொண்டிருப்பதைக் கேள்விப்பட்ட அவுரங்காபாதுக் கரசனானவன் வந்து, உத்தவகோசாமி செய்யும் ஹரிபஜநத்தைக் கேட்டு மனமகிழ்ந்தான். ஆனாலும் "ஸ்ரீராமமூர்த்தியன்றி வேறு உண்மையான தெய்வமில்லை" என்று எல்லாரும் கேட்க இவர் வற்புறுத்திச் சொன்னதைப் பொறுக்காதவனாய், தன் குலஸ்தர்களாகிய பட்டாணிகளை நோக்கி, "இந்தக் கோசாமியைக் கட்டிக்கொண்டு வாருங்கள்" என்று போய்விட்டான். அந்தப் பட்டாணிகளும் அரசன் கட்டளைப்படியே கோசாமியைக் கட்டின கட்டோடு கொண்டுபோய் அரசனுக்கெதிரே விட, அரசன் காஜியை வரவழைத்து, "இவனுக்குச் சுன்னத்துச் செய்யும்" என்று நியமித்தான். அதைக்கேட்ட கோசாமியானவர் மனங்கலங்கி "நாம் சுன்னத்துச் செய்யப்படுவோமானால் நமது குலாசார தர்மத்துக்குக் குறைவு நேரிடுமே" என்று சிந்தித்து, தமது சத்குருநாதராகிய ராமதாசரை மனத்தில் தியானித்தார்; உடனே ராமதாசரானவர் விரைந்தெழுந்தார். அதைக்கண்ட அக்காபாயி "நீர் இவ்வளவு விரைவாயெழுந்ததற்குக் காரணம் யாது?" என்று வினவ, தாசரானவர் அவளை நோக்கி, "உத்தவகோசாமியைத் துருக்கர் வருத்துகிறார்கள், ஆகையால் அங்கேபோய் அவனுடைய ஆபத்தை நீக்கவேண்டி எழுந்தேன்" என்று சொல்லி, அவளுக்குத் தெரியாமல் தாம் மாருதி ரூபங்கொண்டு உலகமுழுதும் நடுங்கும்படி ஆரவாரித்துக்கொண்டு போய், அந்தத் துருக்க வேந்தனை ஓர் திருக்கரத்தால் அறைய, அவன் உயிர் நீங்காமல் மூர்ச்சித்து விழுந்தான். சற்றுநேரத்தில் மூர்ச்சை நீங்கித் தெளிந்தெழுந்து, "ஸ்வாமீ! தேவரீருடைய மஹிமையை யறியாமல் மஹாபாபியாகிய அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று வணங்கிப் பிரார்த்தித்தான். அதற்குத் தாசர் மனமிரங்கி, தமது சத்குரு ரூபங்கொண்டுநின்று, அரசனை நோக்கி, "நீ இனிமேல் ஸ்ரீஹரிதாசரையும், வேதியரையும், பசுக்களையும் வருத்தாமலிருக்கக்கடவாய், ஆலயங்களையும் அழிக்காதிருக்கக்கடவாய்" என்று அவனுக்கு ஹிதமான சொற்களைச் சொல்லி, உத்தவகோசாமியை யழைத்துக்கொண்டு சாம்பளகோர் என்னும் ஊரை யடைந்து, அங்கே திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கிற ஸ்ரீராமபிரானைத் தரிசித்து வணங்கித் தோத்திரித்து, அங்குள்ள சிடரை நோக்கி, "நீங்கள் உலகமுழுதும் போய் அங்கங்குள்ள மூடர்களையெல்லாம் திருத்தி, ஹரிபக்தர்களாகச் செய்யுங்கள்" என்று நியமித்தார்.

அப்படியே அந்தச் சிடர்கள் பல இடங்களிலும் சென்று, அவ்வவ்விடங்களிலுள்ள பலருக்கும் உபதேசித்து, அவ்வவ்விடங்களில் அநேக மடங்களையும் ஏற்படுத்தி, அவர்களெல்லாரும் தாசர் வழியை அநுசரிக்கும்படி செய்தார்கள்.

அக்காலத்தில், பாகா நகரத்தில் கேசவசாமி என்பவர் ஒருவரிருந்தார். அவர் சாந்தசீலரும், பிரபஞ்சத்தில் வைராக்யமுடையவரும், ஞானம் அன்புமுதலிய ஆத்மகுணபூர்த்தி யுள்ளவருமா யிருந்தார். அவர் இந்தத் தாசரது மகிமையை அநேகரால் கேள்விப்பட்டு இவரிடத்தில் பயபக்திகளை யுடையவராய், "நான் இப்படிப்பட்ட மஹாத்மாவைப்போய்த் தரிசிக்க வேண்டுமென்றால் என்னுடைய துர்ப்பலமானது தடுக்கின்றதே" என்று மனந்தளர்ந்து, "உலகத்திலுள்ள சேதனரை உய்விக்கும் பொருட்டு அவதரித்தருளின சற்குருநாதருடைய சேவை செய்தற்குத் தகுந்த தவப்பயன் இல்லாத நான் யாது செய்வேன்" என்று பலவிதமாக ஆலோசித்து, ஒரு சிடனைப் பார்த்து, "சாம்பளகோரில் வாழ்கின்ற சற்குருவினிடத்தில் நீபோய் இதைக் கொடுத்து வருவாய்" என்று ஒரு விண்ணப்பம் எழுதி அவன் கையில் கொடுத்து வழிச்செலவுக்காக அரைப்படி அரிசியையும் தந்து அனுப்ப, அவன் வாங்கிக்கொண்டு தாசரிருக்கும் நகரத்திற்குப் போய், அவர் நீராடி நித்திய நியமங்களை நிறைவேற்றி ஸ்ரீராமபிரானது சந்நிதியில் இருக்கும்போது அந்த விண்ணப்பத்தை அவருக்கு எதிரேவைத்து நமஸ்கரித்து நின்றான். நின்றவனைத் தாசரானவர் நோக்கி, "நீ யார்? இதைக் கொடுத்தனுப்பினவர் யார்!" என்று வினவ, எதிரே நின்றவனாகிய அந்தச் சிடன், "ஸ்வாமீ! இதைக்கொடுத்தவர் கேசவசாமி என்பவர், நான் அவரது சிடன், தேவரீருக்கு நமஸ்காரம் சொல்லச்சொன்னார்" என்று சொல்ல, ஸ்ரீராமபிரானுடைய திருவடியின்கண் மிக்க அன்பை யுடையவராகிய தாசரானவர் மிகவும் நன்றென்று அந்த விண்ணப்ப ஓலையில் எழுதியிருந்த செய்தியைப் படித்துப் பார்த்து மகிழ்ந்து, அவனை மூன்றுநாள் அவ்விடத்தில் இருக்கச்சொல்லி, அரசனுக்குத் தெரிவித்து அவனால் இந்தச் சிடனுக்கு மனமகிழ்ச்சி யுண்டாகும்படி வஸ்திராபரணங்களைக் கொடுப்பித்து, கேசவசாமி எழுதினதற்குப் பிரதியாகத் தாமும் ஒன்றையெழுதி அவனிடத்தில் தந்து, ஒருவேளைக்கு வேண்டிய உணவுகொடுத்து அனுப்பினார். அந்தச்சிடன் அவரிடத்தில் விடைபெற்றுத் தனது ஆசாரியராகிய கேசவசாமி இடத்திற்குப் போய் தாசரிடத்தில் நடந்த செய்தியாவும் சொன்னான். அதைக்கேட்ட

கேசவசாமியானவர் மிகவும் மனமகிழ்ந்திருந்தார். அப்போது அவ
ரது அருள்பெற்று ஞானவானாயிருந்த கிருஷ்ணாஜி நேசர் என்னும்
நாவிதர் நாள்தோறும் ஜபமேற்றுண்டு, போதம் என்னும் கிரந்த
த்தை இடைவிடாமல் அத்தியயநம் செய்துகொண்டு மஹா யோகி
யாய் இருப்பதை அறிந்த ஜயராமன் என்னும் ஒரு வேதியன்வந்து,
"உம்மினும் சிறந்த ஞானவான்கள் எவ்விடத்திலும் இல்லையென்
பதை யான் அறிந்து உம்மைச் சரணமடைந்தேன், அடியேனுக்கு
உபதேசம் செய்தருளவேண்டும்" என்று வணங்கிப் பிரார்த்திக்க,
நாவிதர் இவருடைய பிரார்த்தனைக்கு இசையாமல் "நான் இழிகுலத்
தினேன், நீர் வேதியர், அப்படியிருக்க நீர் என்னை வணங்கவுந்தகாது,
நானும் உமக்கு உபதேசித்தலுந் தகாது, ஆதலால் என் ஆசாரியரிட
த்தில்வந்து அவரை வணங்கி அவரிடத்தில் உபதேசம் பெற்றுக்
கொள்வீராக" என்று அன்போடு சொல்ல, அந்த வேதியன் நாவி
தரை நோக்கி, "நான் உம்மைப்பார்க்கிலும் உம்முடைய ஆசாரியர்
மஹா ஞானவானென்று மதிக்கவில்லை, அன்றியும் என்மனம் வேறொ
ருவரிடத்தில் பொருந்தவுமில்லை, ஆதலால் நீரே எனக்கு உபதேசித்
தருளவேண்டும்" என்று சொல்லுதலும், நாவிதர் அதற்கு மன
மிசையாதவராய், "இனி என் செய்வோம்" என்று ஆலோசித்து,
ராமதாசரிடத்திற்கு அழைத்துக் கொண்டுபோய், அவர் திருவடி
யை வணங்கி, வேதியனுடைய மனக்கருத்தை அறிவிக்க, அந்த
தாசரானவர் வேதியனை நோக்கி, "ஓ வேதியரே! நீர் யோசிப்பது
பஹாஜநவிரோதமான காரியம், நீர் ஞானோபதேசம் பெறவேண்டு
மென்கிற எண்ணமுடையவரானால் வேதியரிடத்தில் பெற்றுக்கொ
ள்வதேயன்றி, தாழ்ந்த குலத்தினனாகிய நாவிதனிடத்தில் பெறு
வது அழகல்ல" என்று சில நீதிமொழிகளைக் கூறித் தடுத்தும் கேட்
காமல் அன்போடு தோத்திரஞ்செய்து திருவடியைப் பிடித்துக்கொ
ண்டு, "நீரே உபதேசித்தருளவேண்டும்" என்றான். அப்போது
அவனது மனவுறுதியைக் குருநாதர் அறிந்து, நாவிதரை நோக்கி,
"இவனுக்கு உபதேசம் செய்யக்கடவீர்" என்று நியமித்தார். அதைக்
கேட்ட நாவிதர் வேதியனை யழைத்துக்கொண்டு தமது வீட்டிற்குப்
போய்ச் சாஸ்திர விதிப்படியே ஸ்ரீ ராமபிரானது திருவடிகளைப்
பூஜித்து வேதியனுக்கு உபதேசஞ்செய்தார். வேதியனும் குருசேவை
செய்துகொண்டும் உபதேசிக்கப்பட்டதை மநநஞ் செய்துகொண்
டும் இருக்குங்காலத்தில், நாவிதர் பரகதியை யடைந்தார். உடனே
ஜயராமன் என்னும் அவ்வேதியன் நாவிதருக்குச் செய்யவேண்டிய

ராம கைங்கரியங்கள் யாவுஞ் செய்து, அவ்விடத்தில் ஒரு நந்தன வனம் ஏற்படுத்தி, அதில் ஆசாரியருடைய பாதுகையை அமைத்து, அதை அன்போடு பூசித்துக்கொண்டிருந்து ஒருவருஷம் கழிந்த வுடனே திதிசெய்ய நினைத்துத் தமது ஆசாரியரிடத்திற்போய் வணங்கி, "என் குருவுக்குத் திதி சமீபித்திருக்கின்றது, ஆதலால் அதனைச்செய்ய அடியேனுக்கு விடை கொடுக்கவேண்டும்" என்று கேட்க, அவர், ஐயாமனை நோக்கி, "நீ செய்வதைக் கண்டால் வேதியர் வந்து சிரார்த்தபோஜநத்தை உண்ணமாட்டார்கள், ஆனாலும் ஸ்ரீ ராமபிரானது திருவருளால் எல்லாம் நிறைவேறும், நீர்போய் உமது விருப்பத்தின்படியே நடத்தக்கடவீர்" என்று நியமிக்க, அப்படியே வேதியன்போய்த் திதிக்கு வேண்டியவற்றைச் சேகரித்து வைத்துக் கொண்டு, அமுது செய்யும்பொருட்டு வேதியரை யழைக்க, அப்படியே வேதியர்வந்து நிறைந்திருக்கும்போது வேதியன், மடைத் தொழில் முடித்துத் தன் ஆசாரியராகிய நாவிதருடைய சமாதியைப் பூஜை செய்துகொண்டிருந்ததை வந்த வேதியரெல்லாரும் பார்த்து, "இவன் நாவிதனிடத்தில் உபதேசம்பெற்று, அவன் இறந்தவுடனே அவனைப் பூஜிக்கிறானே; இவன் வேதியன்தானா? இவன் அழைக்க வந்த நாமெல்லாரும் இவனிடத்தில் உண்ணுவோமானால் நாம் எல்லாரும் இழிகுலத்தாராவோம், ஆதலால் இவன் வீட்டில் உண்பது நமக்குத் தகாதகாரியம்" என்று ஆலோசித்து எழுந்து போய்விட்டார்கள்; இதைக்கண்ட வேதியன், துக்கித்துத் தனது ஆசாரியனை நினைத்த மாத்திரத்தில் ஆசாரியர் எழுந்தருளினார். இவரைக்கண்ட வேதியர்களெல்லாரும் "இந்த வேதியன் செய்வது சரியான காரியமா? நீரே சொல்லும்" என்று இவரை வணங்கி, "இவனிடத்தில் ஒரு அற்புதம் விளங்கினால் அதைக் கண்டு நாங்கள் இவன் வீட்டில் உண்போம்" என்றார்கள். அதைக் கேட்ட குருநாதர் வேதியர்களை நோக்கி, "நீங்கள் இங்கே யிருங்கள்" என்று சொல்லி, வீட்டிற்குள்ளே போய், ஐயாமனோடு வெளியே வந்தார். அப்போது ஐயாமனது தோளின் மீது ஸ்ரீ ராமபிரானும் குருநாதரிடத்தில் ஸ்ரீஆஞ்சநேயரும் விளங்குவதை வேதியர்கள் கண்ணாரக்கண்டு ஆச்சரியப்பட்டு, ஸ்ரீராமபிரானையும் ஆஞ்சநேயரையும் வணங்கி, சிரார்த்தம் முடிந்தவுடனே உண்டு மகிழ்ந்து, புஷ்ப சந்தன தாம்பூலதக்ஷிணைகளைப் பெற்றுப்போயினர்.

அதின் பிறகு ராமதாசரானவர், அநேக சீடரோடு கூடி ஒரு வனத்திற் சென்று நாள்தோறும் ஸ்ரீராமநாம ஸங்கீர்த்தநஞ் செய்து கொண்டிருக்குங்காலத்தில், பங்குனி மாசத்தில் அபரபக்ஷத்தில்

சதுர்த்தசி திதியோடு கூடின ஆதிவாரம் விடியற்காலத்தில் நீராடி வந்து; மறுபடியும் ஒருதரம் நீராடி வந்தார். அதைக் கண்ட அக்கா பாயி என்பவர் தாசரை நோக்கி, "நீர் நித்தியப்படி நீராடி வந்தபிறகு மற்றொருதரம் போய் நீராடி வந்ததற்குக் காரணம் யாது?" என்று கேட்க, தாசர், "என் தமையனார் இன்று ஸ்ரீராமபிரானது திருவடியை யடைந்தார். அந்தக் குறித்து வேதவிதி தவறாமல் நீராடி வந்தேன், இந்தப்பிரகாரம் பத்துநாளும் செய்வேன்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது; சிவாஜி அரசன் வந்து இவரை அடிபணிந்து நிற்க, அவனை நோக்கி, "என் தமையனார் பரமபதமடைந்தாராதலால் பத்துநாள் வரைக்கும் எனக்குச் சூதகம் காக்கவேண்டியிருக்கிறது, இந்தக்ஷணமே சாம்பள்கோர் என்னும் நகரத்தில் ஸ்ரீராமநவமி உற்சவம் செய்யக்கடவீர், உற்சவ முடிவில் நான் அவ்விடத்திற்கு வருகிறேன்" என்று விடைகொடுத்தனுப்ப, அரசனும் அப்படியே போய் உற்சவத்தை நிறைவேற்றினான். உற்சவ முடிவுநாளில் ராமதாசரும் அவ்விடத்திற்கு எழுந்தருளினார்; இவரைக்கண்ட சாதுஜனங்களெல்லாம் இவரை வணங்க, அவர்களையெல்லாம் குளிரக்கடாக்ஷித்து விடைகொடுத்து அனுப்பி, தாம் அவ்விடத்தில் வீற்றிருந்தார். அப்போது அரசன், தன் மனத்தில் ஒன்றை நினைத்துக்கொண்டு, பாளிகட் என்கிற மலையில் தன் ஆசாரியருக்கென்று நினைத்து ஒருமடம் கட்டி; அதில்தாசர் வந்திருக்கும்படி பிரார்த்தித்தான். அதற்குத் தாசரானவர், "அரசனே! வனத்தில் சஞ்சரிக்கவேண்டும் என்னும் விருப்பமுள்ள என்னை நகரத்தைச் சார்ந்த மடத்திலிருக்கும்படி செய்தல் உனக்குத் தகுதியாமோ" என்று கேட்க, அரசன் வணங்கி, "எப்படியாகிலும் என் கோரிக்கையைத் தேவரீர் முடித்தருளவேண்டும்" என்று தோத்திரஞ் செய்தான். அதற்குத் தாசர் மனமிசைந்தவுடனே; அவரை அழைத்துக்கொண்டுபோய், சிம்ஹாசனத்தில் எழுந்தருளப்பண்ணி; சோடசோபாரங்களுஞ் செய்து, லக்ஷபிராமண போஜனமுஞ் செய்வித்து; ராத்திரியானவுடனே, தாசர் நித்திரை செய்யக் கால் வருடிக்கொண்டிருந்தான். அப்போது தாசர் விழித்தெழுந்து; அரசனை நோக்கி, "அரசனே! துக்காராம் ஸ்வாமிகள், அநேகஞ் சீடர்களோடு எழுந்தருளுகிறார்; அவரை எதிர்கொண்டு அழைத்துவா" என்று நியமிக்க; அரசன், "நான் முன்பே தூதுவர்களை அனுப்பியிருக்கிறேன்" என்று சொல்லி, தாசரோடு கூடவேயிருந்தனன். பிறகு துக்காராம் ஸ்வாமிகளும் வந்து தாசரைக் கண்டு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யக்கண்ட தாசரும் அவரை மார்போடு

தழுவிக்கொண்டனர். இந்தப்பிரகாரமே வந்த சாதுக்களை யெல்லாம் தழுவிக்கொண்டு இருந்த காலத்தில், மண்டபத்தில் வேதியர்க்கு போஜநம் அளித்தபிறகு, ராத்திரியானவுடனே, அருந்தவத்தை யுடைய அறிஞர், வேந்தனை நோக்கி, "நீ முந்தி ஹரிகீர்த்தநம் செய்" என்றுசொல்ல, அரசன் "நாம் எண்ணின எண்ணம் நிறைவேறிற்று" என்று தனது குருநாதரையும் மற்ற சாதுக்களையும் அன்போடு பணிந்து, காலில் சதங்கை கட்டிக்கொண்டு, மிருதங்கம் முதலிய வாத்தியங்கள் முழங்க விஸ்தாரமாக ஸ்ரீஹரிநாமசங்கீர்த்தநம் செய்தான். அதைக்கண்ட குருநாதர் ஆநந்த பரவசராய், அரசனை ஓரிடத்தில் இருக்கும்படி நியமித்து, வேணுபாயியை அழைத்து, ஸ்ரீ ஹரி கதா காலக்ஷேபம் செய்யும்படி நியமித்து, அவர் அப்படியே செய்து யாவரையும் அவசமாக்கின பிறகு, விடியற்காலத்தில் ஹாரதி சமர்ப்பித்து, யாவர்க்கும் பிரசாத விநியோகஞ் செய்து, மறுநாள் இரவில அந்த மண்டபத்தில் அக்காபாயியைப் பாடச்சொல்லி, அவர் பாடி யாவரையும் ஆநந்த சாகரத்தில் மூழ்கச்செய்த பிறகு, பகிணு பாயியை அப்படியே பாடச்சொல்லி, அதின் பிறகு மனவுறுதியுள்ள வாமநகோசாமியைப் பாடச் சொல்லி, விடியற்கால மானவுடனே ஹாரதி சமர்ப்பித்து, மறுநாள் நிம்பராஜரையும் ரங்கசாமிகோசாமி யையும் பாடும்படி நியமித்து, அதின்பிறகு ஜயராம கோசாமியை யும், அவர்க்குப் பிறகு கல்யாண் கோசாமியையும், அவர்க்குப்பிறகு மேமநாபா கோசாமியையும் சிவராம கோசாமியையும் பாடச் செய்து, அவர்க்குப் பிறகு அடியவரெல்லாரையும் பாடச்செய்து, அதற்குப் பிறகு துக்காராம் ஸ்வாமியை நோக்கி, "தேவரீர் ஹரி கதை செய்யவேண்டும்" என்று பிரார்த்திக்க, அவர், சமர்த்த ராமதாச ஸ்வாமியைப் பணிந்து, ஸ்ரீஹரிநாம சங்கீர்த்தநம் செய்ய, தாசர் முதலானோர் பரவசப்பட்டுச் சூரியோதயமாகும் வரைக்கும் மெய்ம்மறந்து ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டேயிருந்தார் கள். அப்போது பகவான், அவ்விடத்தே யெழுந்தருளினர். அப்படி யெழுந்தருளின பகவானனவர், துக்காராமஸ்வாமிகளைத் தழுவிக்கொண்டு, "மிகவும் ரஸமாயிருக்கிற உனது கீர்த்தநத்தைக்கேட்டுப் பொழுது விடிவதையும் அறியாதிருந்துவிட்டேன்" என்றுசொல்ல, துக்காராமஸ்வாமியும் பகவானுக்கு ஹாரதி சமர்ப்பித்தார். உடனே பகவானனவர் மறைந்துபோயினர். இதைக் கண்ட அடியாரெல்லாரும் ஆநந்தசாகரத்தில் மூழ்கினர்கள். துக்காராமஸ்வாமிகளும் பகவானை வணங்கி மங்கள ஹாரதி சமர்ப்பித்து, தாசரை அடிபணிந்து தழுவி

நிற்க, தாசரும் அவரிடத்து உறுதியாகிய அன்பு பாராட்டிப் பிறகு யாவர்க்கும் பிரசாத விநியோகஞ் செய்து மறுநாள் ராத்திரியில் ராமதாஸர் ஸ்ரீஹரிகதாகாலக்ஷேபம் செய்துநின்று, தேவர்களெல்லாம் பரவசமடையும்படி ஸ்ரீலக்ஷ்மீநாதனுக்கு ஹாரதி சமர்ப்பித்துப் பிரசாதம் பகிர்ந்து, நாள்தோறும் ஸ்ரீராமநாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்தார். அப்படியிருக்க, அரசனானவன், வந்த சாதுக்களுக்கெல்லாம் பாதபூசை செய்து, அவர்கள் மகிழும்படி ஆடையாபரணங்களைக் கொடுத்து, இது சாது சற்சனங்கள் தழுவுதற்கு இடமாயிருந்ததனால் இதற்கு இன்றுமுதல் சற்சனகட் என்று பெயரிட்டான். பிறகு சாதுக்களெல்லாம் விடைபெற்றுத் தத்தம் இடங்களைச் சேர்ந்தார்கள். அதின் பிறகு துக்காராமஸ்வாமிகளும் அரசன் தருவதற் கெண்ணியிருக்கிற வரிசைகளை யறிந்து, "இவன் நம்மிடத்திலுள்ள அன்பினால் கொடுக்க எண்ணின பொருள்களை ஏற்றுக்கொள்ளுதல் நமக்குத் தகாத காரியம்" என்று, அரசனோடு சொல்லாமல் தேகுவை அடைந்தார். அரசன் துக்காராமஸ்வாமியைத் தேடிக் காணாதவனாய்த் தனது சற்குருநாதருடைய திருவடியைப் பணிந்து, "ஸ்வாமீ! வஸ்திராபரணாதிகளை மிகுதியாகக் கொடுக்க எண்ணியிருந்தேன்; அப்படியிருக்க, துக்காராமஸ்வாமிகள் அடியேனோடு சொல்லாமலே போய்விட்டார்" என்று சொல்ல, ராமதாசர், அரசனை நோக்கி, "சகல சித்திகளையும் அடைதற்கரிய மோக்ஷத்தையும் விரும்பாமல், ஸ்ரீபாண்டுரங்கப் பெருமானுடைய பிரபாவத்தையே புகழ்ந்துகொண்டிருக்க விரும்பினவராகிய துக்காராம ஸ்வாமிகள், நீ தருவதாகிய பொருளை ஏற்றுக்கொள்ளுவாரோ? ஏற்றுக்கொள்ளார்; ஆதலால் அவர் உன்னோடு சொல்லாமல் போய்விட்டார்; நீ அதைக் குறித்து விசனப்படவேண்டியதில்லை" என்று சொல்ல, அரசன், அவரது பெருமையை நினைத்து அவரது திருவடியை வணங்கித் தன் ஊர்க்குப் போயினன். தாசரும் வனத்திற்போய்ச் சற்சனகட் என்னும் மலைக்குப் போவதும் அதைவிட்டு வனத்திற் போவதுமாய்த் தமது விருப்பத்தின்படியே சஞ்சரித்துக்கொண்டிருக்கும் நாளில், அந்த சற்சனகட்டின் உச்சியில் வாசம்பண்ணுகிறவளாகிய ஒரு காளி யென்னும் தேவதை நடுராத்திரியில் தாசருக்கு எதிரில் வந்து நின்றாள். இவர் அந்தக் காளியைக் கண்டு, "தாயே, நீயார்? நீ இருப்பது எங்கே?" என்று கேட்க, அந்தக் காளியானவள், "நான் மாயை என்பவள், நானிருப்பது இந்த மலையில், நீர் எத்தனை தரம் இவ்விடத்திற்கு வந்தும் என் முகத்தைத்

திரும்பியும் பார்த்திரில்லை; ஆனால் என்மீது நீர் சொல்லும் கீர்த்தநத்தைக் கேட்க விரும்புகிறேன்'' என்று சொல்ல, தாசரானவர், காளியை நோக்கி, "தாயே, உன் கழுத்திலணிந்திருக்கிற முத்துமாலையில் நான்கு முத்துக்களை யெடுத்து எனக்குக் காது நிறையக் கடுக்கன் செய்துபோட்டால் நான் உன்மீது கவிபாடுகிறேன்'' என்றுசொல்ல, மாயையானவள் "அப்படியே நாளையத்தினம் செய்துபோடுகிறேன்'' என்று சொல்லி மறைந்தாள். அதைக்கேட்ட தாசரானவர், மறுநாள் இரவில் அந்த மாயையின் கோயிலை யடைந்து கும்பிட்டு நின்றார். இவரைக் கண்டவுடனே, இவர் கேட்டபடியே காதுநிறையக் கடுக்க னிட்டாள். அதை யணிந்துகொண்டு, அந்தக் காளிக்கு எதிரே நின்று அவள் மனங் களிக்கும்படி அற்புதமான கவிகளைச் சொல்லி விடை பெற்றுத் தம்மடத்தை யடைந்தார். இப்படியிருக்க, மறுநாள் காலையில் கோயிலுக்குள்ளே வந்த அர்ச்சகர்கள் காளியின் மார்பில் அணிந்திருந்த முத்துமாலையில் நான்கு முத்துக்கள் குறைந்திருப்பதைப் பார்த்து, பயந்துபோய், அரசனிடத்திற் சொல்ல, அரசன் அவர்களிடத்தில் சந்தேகப்பட்டு அவர்களைச் சிறைச்சாலையி லடைத்து வைத்திருந்தான். அன்றிரவில் காளியானவள் அரசன் கனவில் வந்து, "நான் நான்கு முத்துக்களை யெடுத்துக் கடுக்கன் செய்து ராமதாசருக்கு இட்டு அவரிடத்தில் கவி கேட்டேன்; நீ அர்ச்சகர்கள் திருடிக் கொண்டார்களென்றெண்ணி அவர்களை வருத்தவேண்டாம்'' என்று சொல்லிவிட்டுப் போயினள். அரசனானவன் விழித்து, சற்சன மலையில் வாசம் பண்ணுகிற தாசரிடத்திற்கு வந்து இவரைக் கண்டு வணங்கி, இவர் காதில் கடுக்கன் தரித்திருப்பதைப் பார்த்து மனமகிழ்ந்து தான் கண்ட கனவை அங்குள்ள சாதுக்களுக் கெல்லாஞ் சொல்லி விடைபெற்றுத் தன் நகரத்திற்குப் போய்விட்டான்.

அதின்பிறகு ஒருநாள் இவர், அடியார்களில் ஒருவனாகிய வணிகன், சௌதாகிரி என்னும் வர்த்தகப் பெயர் பூண்டு கப்பல் வியாபாரம் செய்யும்பொருட்டு அநேக தீவுகளில் போய், வர்த்தகம் செய்துகொண்டு மீண்டுவரும்போது, பெருங் காற்றால் இவன் ஏறிவருங் கப்பலானது சின்னபின்னப்பட்டு நீரில் அழுந்துகிற சமயத்தில், அவன் மனம் வருந்தி, செய்யவேண்டிய முயற்சியெல்லாம் செய்து பயனடையாமல் செயலற்றவனாய் ராமதாசரைத் தோத்திரஞ் செய்து, தியானித்துப் "பொன்னினால் நிறைக்கப்பட்டிருக்கிற இந்தக் கப்பலானது நீரிலழுந்தாமல் கரை சேரும்படி அனுக்கிரகஞ் செய்தால் அந்தப் பொன்னில் நான்கிலொருபாகம் தேவரீருக்குச்

சமர்ப்பிக்கிறேன்'' என்றான். இவன் இப்படிப் பிரார்த்தித்ததை யறிந்த ராமதாசர், அந்தக் கப்பல் நீரிலழுந்தாமல் கரைசேரப்பண்ணி ஈரவஸ்திரத்தோடு நிற்க, அவ்வணிகன் இவரைக் கண்டு திருவடியில் வீழ்ந்து வணங்கி, "நான் நினைத்த மாத்திரத்தில் எழுந்தருளி என்னை ரக்ஷித்த சற்குருநாதரே'' என்று புகழ்ந்து வணங்கிநின்றான்; தாசர் மறைந்துவிட்டார்; கப்பற்காரன் ஆச்சரியப்பட்டான். ஒரு க்ஷண காலத்தில் ஆடை நனைந்து நீரொழுகவும் அன்பரெல்லாரும் வியப் படையவும் விளங்குகிற தாசரை வாமனசாமி என்னும் அடியார் நோக்கி, "ஒப்பற்ற பெருந்தவத்தை யுடையவரே! உமது ஆடையில் இப்படி நீரொழுகக் காரணம் யாது? ஒரு க்ஷணகாலத்திற்கு முன்பு இப்படி யில்லையே'' என்று கேட்க, தாசரானவர், கேட்ட அன்பரை நோக்கி, "ஓ அன்பரே! நற்குணமுள்ள ஒரு வணிகன் தன் கப்பல் அழுந்திப் போகுங்காலத்தில் என்னை நினைத்துத் தோத்திரம்பண்ணி னான்; அதற்காக நான் மனமிரங்கிக் கடல்நீரில் மூழ்கிக் கப்பலழுந் தாமல் மிதக்கும்படி செய்து, கொண்டுவந்து கரைசேர்த்தேன்; அத னால் என் ஆடை நனைந்திருக்கின்றது'' என்று சொல்லக்கேட்ட சாது க்களெல்லாரும், "இவர் ஒரு நிமிஷத்தில் போய்ச்செய்து வந்த காரி யத்தை யாம் அறிந்திலேமல்லவா'' என்று ஆச்சரியப்பட்டார்கள். மறுநாள் அந்த வர்த்தகன் அளவற்ற பொன்னைக் கொண்டுவந்து தாசரை வணங்கி, "ஸ்வாமீ! என் கப்பலானது நீரிலழுந்தாமல் காப் பாற்றினீர்; அதைக்கண்டு உம்மை வணங்கி எழுந்து பார்க்கும்போது, நீர் மறைந்துவிட்டீர்; ஆனாலும் இப்பொழுது வேண்டிய பொன் கொண்டுவந்திருக்கிறேன். இதனை அங்கீகரிக்கவேண்டும்'' என்று வணங்கிநின்றான். இதனை அடியாரெல்லாரும் பார்த்து, "இவரது மகி மைக்கு ஒரு எல்லையுண்டோ'' என்று புகழ்ந்து கொண்டாடிக்கொண் டிருக்கையில், ராமதாசர் வணிகன் சமர்ப்பித்த பொன்னைச் சற்பாத் திரத்திலே மனப்பூர்த்தியாய்ச் செலவுசெய்து வணிகனை நோக்கி, "நீ இன்னம்வேண்டிய பொருள்களையெல்லாம் அடையப்பெறுவாய்'' என்று ஆசீர்வதித்து விடைகொடுக்கப் பெற்றுப் போய்விட்டான்.

அதின் பிறகு சிலநாள் கழிந்தவுடனே, ஔரங்கபாக்ஷாவின் பெருஞ்சேனையானது சற்சனகட் என்னும் மலையைத் தம் வசப் படுத்திக்கொள்ள எண்ணி, பல உபாயங்கள் செய்தும், கிடைக்கப் பெறாமையால், வெடிகுண்டு முதலியவற்றை வெடிப்பித்து, அருகி லிருக்கும் மலைகளெல்லாம் பொடிபடச் செய்தகாலத்தில், அந்த அனர்த்தத்தைத் தாசரானவர் கண்டு, ஸ்ரீ ஆஞ்சநேயரை நினைத்து

வுடன், அநேக வானரங்கள் தோன்றி, இந்தச் சேனைகளைச் சின்ன பின்னப்படத் தகர்த்து அழிக்க, அதைக் கண்ட சேனைத்தலைவன் தன் அரசனாகிய ஔரங்கபாதுஷாவுக்கு இந்த வானரங்கள் செய்யும் அநர்த்தத்தையும் ஒரு ஹிந்து சந்நியாசி அந்த மலையில் வாசம்பண்ணுகிற செய்தியையும் எழுதி யனுப்பினான். அரசனானவன் அச் செய்தியை யறிந்து, "அந்தத் தபோமகிமையுள்ள ஹிந்து சந்நியாசியை வணங்கி மீண்டு வாருங்கள்" என்று அறிவித்தான். அப்படியே சேனைத்தலைவன் ராமதாசர் திருவடியில் விழுந்துவணங்கித் தோத்திரஞ்செய்து, "ஸ்வாமீ! அடியோங்களை ரக்ஷித்தருளவேண்டும்" என்று தாழ்வு சொல்லி விடைபெற்று ஊருக்குப் போய்விட்டான். சிவாஜி அரசன் இந்தச் செய்தியை அறிந்து, ஆனந்தபரவசனாய் வந்து ராமதாசரது மகிமையை வியந்து வாழ்த்தித் திருவடியைப் பிடித்துக்கொண்டிருக்க, அவனைத் தாசரானவர்நோக்கி ஏகாந்தமான இடத்திற்கு அழைத்துக்கொண்டுபோய், "ஓ அரசனே! நீ ஸ்ரீராமபிரானுடைய பாதாரவிந்தங்களைச் சேரவேண்டிய காலம் சமீபித்ததனால் நீ விவகாரங்களெல்லாவற்றையும் ஒழித்து, திடசித்தனாய், மனத்தில் ராமரூபத்தைத் தரித்து பதின்மூன்றெழுத்தைக்கொண்ட மந்திரத்தை ஜபித்துக்கொண்டிருப்பாயாக" என்று நியமித்தார். நியமித்தலும், அரசன் பரமானந்தத்தை யடைந்து, "உடல்பொருளாவி மூன்றனையும் முன்பே தேவரீருக்குத் தத்தஞ் செய்தேன், இன்னும் உமது கட்டளையின்படி பரதந்திரனாய் நடக்கப்போகிறேன்" என்று சொல்லி வணங்கி விடைபெற்று ஊருக்கு விரைந்துவந்து, அநேகமான தான தர்மங்களைச் செய்து, குருநாதரால் நியமிக்கப்பட்ட நாளில், உலகமுழுதும் சம்பாதி என்னும் தன் புதல்வனுக்குக் கொடுத்து, ஸ்ரீலக்ஷ்மீநாதராகிய ஸ்ரீராமபிரானது திருமேனியைத் தியானித்துக்கொண்டிருந்து அவரது திருவடியை யடைந்து வாழ்ந்திருந்தார்.

அதின்பிறகு அரசனான சம்பாதி, தன்தந்தைக்குச் சரமக்கிரியைகளை யெல்லாம் செய்து முடித்து, சற்குருநாதருடைய திருவடிச் சேவை செய்துகொண்டு இருக்குங்காலத்தில், தன் தந்தையை நினைத்து மனம் வருந்துவதை தாசரானவர் அறிந்து, லோகஸ்பாவத்தை யெல்லாம் எடுத்துச் சொல்லி அவன் மனத்தைத் தெளிவித்துத் தத்துவ ஞானத்தை உபதேசித்தருளினார். அந்த உபதேசத்தைப் பெற்று மனத் தெளிவடைந்த சம்பாதி, தன் தந்தையாகிய சிவாஜிபோல மனமயக்க மொழிந்து தன்னூரில் நிலைபெற்று வாழ்ந்

திருந்தான். பிறகு தாசரானவர் ஒருநாள் சிடரெல்லாரையும் ஒருமிக்க அழைத்து, “இப்பொழுது வரப்போகிற அபரபக்ஷத்தில் நவமிதிதியில் மத்யாநகாலத்தில் நான் ஸ்ரீமந் நாராயண சரணாரவிந்தத்தையடையப்போகிறேன், அடைந்தவுடனே என் தமையனுர்க்குப் பேரனுன கங்காதரனை என் பட்டத்துக் குரியவனுக்கி, என் சம்பிரதாயத்தை விளங்கச் செய்துக்கொண்டிருங்கள்” என்று நியமித்தார். அதைக் கேட்ட சிடர்கள் விரைந்துபோய், தாசர் தமையனுர் வீட்டிலுள்ளவர்களுக்கு இந்தச் செய்தியைத் தெரிவிக்க, அவர்களெல்லாரும் திரண்டு வந்து, சாம்பள் கோரிலிருக்கிற தாசரைக்கண்டு வணங்கின மாத்திரத்தில், தாசரானவர் அவர்களை நோக்கி, “நீங்கள் யாவரும் இடைவிடாமல் ஸ்ரீஹரிநாமஸ்மரணை செய்துகொண்டும், உஞ்சவ்ருத்தியால் தேஹபரிபாலநம் செய்துகொண்டும், சரீரமுள்ளளவும் ஸ்ரீக்ருஷ்ணமூர்த்தியை த்யாநித்துக்கொண்டும், பூஜை முதலியவற்றைத் தவறுமல் நடத்திக்கொண்டும், ஸ்ரீராமநவமி யுத்ஸவமும், ஹநுமந்தஜயந்தி யுத்ஸவமும் விசேஷ வைபவத்தோடு நடத்திக்கொண்டும், ஸ்ரீஹரிதாசர்கள் வந்தால் அவர்களை அன்போடு அந்நபாநாதிகளால் உபசரித்துக்கொண்டும், எல்லா வுயிர்களிடத்தும் அருள் செய்துகொண்டும், வைராக்யசீலரா யிருங்கள்; இப்படி யிருப்பீர்களுல், நீங்கள் ஸ்ரீராமபிரானது திருவடிக்கு ஆளாவீர்கள்; அன்றியும், ஸ்ரீபகவத்ப்ரபாவத்தை யார் சொன்னுலும் அன்போடு கேட்டு மகிழ்தல், தாசபோத கிரந்த பாராயணஞ்செய்தல், ஜாதிநீதி தவருதிருத்தல் என்னும் இந்தச் செய்கைகளிலும் வழுவாதிருங்கள்” என்ருர். இவர் சொன்னதை யெல்லாருங் கேட்டு “அப்படியே யாகட்டும்” என்று வணங்கி நின்ருர்கள். அந்தச் சமயத்தில் கருநாடக தேசத்தில் வாழ்கிறவராகிய ஒரு ஸாதுவானவர்: ஸ்ரீராமபிரான், ஸ்ரீஜாநகிபிராட்டி, ஸ்ரீலக்ஷ்மணப்பெருமாள், ஸ்ரீ ஆஞ்சநேயர் இந்த நால்வருடைய விக்ரஹங்களை யெடுத்துக்கொண்டு வந்தார். அவரைத் தாசர் பார்த்து, அவரிடத்தில் மிகவும் அன்பு பூண்டு, விக்ரஹங்களைக் காட்டச் சொல்லி, நோக்கிச் சந்தோஷித்து, அருகிலிருப்பவராகிய கல்யாண கோசாமியை நோக்கி, “இந்த விக்ரஹங்களைப் பெட்டியில் வைத்துப் பத்திரப்படுத்துங்கள், இவை பிற்காலத்தில் பயன்படும்” என்று நியமித்து, மேலும் சொல்லுகிருர்: “நான் பரந்தாமத்தை யடைந்த பிறகு என் சரீரத்தைச் சமாதி செய்யாமல் தஹநஞ்செய்து, அந்த இடத்தில் இந்த நான்கு விக்ரஹங்களையும் ப்ரதிஷ்டை செய்துவையுங்கள்” என்றும் நியமித்தார். பிறகு தாம் முன்னே

சொன்ன நாள் நேரிட்டவுடனே, சூரியோதயத்தில் நீராடி, பத்மா சநத்தி லெழுந்தருளி ஸ்ரீ ராமபிரானை த்யாநித்து, "ஓ ஸ்ரீராமபிரானே! இன்று எனக்கெதிரே யெழுந்தருளி உன் திருவடியை நான் அடையும்படி க்ருபை செய்யவேண்டும்" என்று ப்ரார்த்தித்தலும், ஸ்ரீராமபிரான் இவருக்குப் பிரத்யக்ஷமானார். அப்படி ப்ரத்யக்ஷமான பகவானுடைய சகுணவடிவாகிய திருமேனியின் திவ்யசௌந்தர்யத்தைக் கண்களிகூரக் கண்டநுபவித்து அவருடைய திருவடியில் ஐக்யமாய்விட்டார். இதைக் கண்ட தேவர்கள் முனிவர்கள் ஸாதுக்கள் எல்லாரும் மலர்மழை பொழிந்து, ஜயஜயகோஷம் செய்தார்கள். பிறகு தாசருடைய திருமேனியைப் பலபேருங்கூடித் தாங்கிக்கொண்டுபோய் ஒரு இடத்தில் வைக்க, ஸாதுக்களெல்லாரும் சேர்ந்து, இவருடைய ஆத்மகுணங்களைப் புகழ்ந்து, சந்தநக்கட்டை முதலான பரிமள காஷ்டங்களால் சிதைசெய்து, அதின்மேல் இவர் திருமேனியைக் கிடத்தி, விதிப்படியே நெருப்பு மூட்டி இரண்டுநாள் கழித்து மூன்றும்நாள் உதயத்தில் அங்கத்தைச் சுத்திசெய்யும்பொருட்டுச் சாம்பலைக் கையால் அள்ளும்போது, அந்தச்சாம்பலில் இவருடைய பாதுகையும், பதின்மூன் றக்ஷரங்களையுடைய திருமந்திரமும் எழுதப்பட்டிருந்தது கண்டு ஆச்சரியப்பட்டு நின்றார்கள். அப்போது கலியாண கோசாமியானவர் பாதுகையைக்கொண்டு நின்று மனந்தளரும்போது, அவருடைய மனத்தளர்ச்சி நீங்கும்பொருட்டு அந்தச் சாம்பலிலிருந்து ஒரு தொனியுண்டாயிற்று. அது எப்படியென்றால், "என் சரீரமாத்திரம் இல்லாமற் போய்விட்டது, நான் இந்த வுலகமுள்ளளவும் இருப்பேன், நீங்கள் துக்கிக்க வேண்டியதில்லை, நீங்கள் ஸ்ரீராமநாம ஸ்மரணையை மறவாமலும் தாசபோத க்ரந்தத்தைப் படநஞ்செய்துகொண்டும் இருப்பீர்களானால் உயர்ந்த பதத்தை யடையலாம்" என்று ஒரு கவிசொல்லும் தொனியுண்டாயிற்று. அதுகேட்ட கலியாணகோசாமி முதலானவர்கள் வியந்து கொண்டாடினார்கள். அதின் பிறகு இந்தத் தாசருக்குப் பேரனாகிய கங்காதரர் ஜாம்பு நகரத்திலிருந்து க்ருஷ்ணாநதியை யணுகுதலும், கலியாணகோசாமி முதலானவர்கள் அவரைக் கண்டு தழுவி, அவரை யழைத்துக்கொண்டு மலைமேலேறி, தாசிருந்த ஆசநத்தைக் காட்ட, கங்காதரர் கண்டு கைகுவித்து வணங்கி, தாசர் திருமேனியை தஹநஞ்செய்த இடத்தில் பாதுகையைப் பிரதிஷ்டை செய்து, ஒரு கோயில் ஏற்படுத்தி, அதில் ஸ்ரீராமபிரான் முதலானோருடைய விக்ரஹங்களை யெழுந்தருளுவித்து, பகல் முழுதும் ப்ராஹ்மணாராதந

முதலியவற்றால் காலங்கழித்து இரவில் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநஞ் செய்து இப்படி ஐந்துநாள் உத்ஸவம் கொண்டாடி, கங்காதரருக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்தார்கள். அவரும் ஞானவைராக்ய சீல ராய் அந்தப் பட்டணத்திலிருந்துகொண்டு ஸ்ரீராமநவமி, அநுமந்த ஐயந்திமுதலான உத்ஸவங்களைத் தவருமல் நடத்திக்கொண்டு இனிது வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே மண்டலீகராஜன் வைபவ த்தைச் சொல்லத் தொடங்கினுர்.

சமர்த்தராமதாசசுவாமிகள் சரித்திரம் முற்றிற்று.

ஐம்பத்திரண்டாவது

மண்டலீகராஜன் சரித்திரம்.

இந்துஸ்தாநம் என்னும் தேசத்தில் மண்டலீகன் என்னும் பெயருள்ள ஒரு அரசர் இருந்தார். அவர் தேவியார் பெண்மைக் குணங்களிற் சிறந்து விளங்குகின்றவர். இவர் பெயர் சுலக்ஷணி யென்று சொல்லுவார்கள். இவர் ஹரிபக்தியிற் சிறந்தவராயும் ஏகா தசி விரதத்தை வழுவாது நடத்துவோராயு மிருந்தார். இவர் கணவ ராகிய மண்டலீகர் விரதாநுஷ்டாநம் முதலானவைகள் இல்லாதவ ராயினும் மனத்தில் மாத்திரம் ஹரிநாமத்தைப் பதித்து வைத்திருந் தார். இவரது மனநிலையைத் தேவியார் அறியாமையால் அரசனை நோக்கி, “ப்ராணநாதரே! நீர் விஷ்ணுபூஜை செய்யவேண்டும்” என் ருள். அதுகேட்ட அரசன், “ஓ பெண்ணே! நான் ராஜரிகம் நடத்து வதினுல் மனநிலையில்லாதவனுயிருக்கிறேன். நான் ஹரிபூஜை செய்ய முடியாது” என்ருர். அதைக் கேட்ட தேவியார் மனவருத்தத்தோ டிருக்குங் காலத்தில், ஒருநாள் அரசர் நித்திரைக் காலத்தில் “ராமா” என்று உச்சரிக்கக்கேட்ட தேவியார் விடியற்காலத்திலெழுந்து நீராடி வந்து நித்திய கர்மாநுஷ்டாநங்களை முடித்து, ஸ்ரீஹரிபூஜை, ப்ராஹ் மண ஸமாராதனம், ஹரிநாம ஸங்கீர்த்தனம், உத்ஸவம் முதலியவற் றைச் செய்யத் தொடங்கினுர். இதைக் கண்ட அரசர், “இன்று நீர் இப்படி செய்வதற்குக் காரணம் யாது?” என்று தேவியாரைக் கேட்க, தேவியார் நாயகரை நோக்கி, “உமது வாயால் ஒருதரமாயினும் ராம நாமோச்சாரணம் செய்ய நான் ஒருகாலத்திலும் கண்டதில்லை; அப் படியிருக்க நேற்றிரவில் நித்திரைக் காலத்தில் ராமநாமோச்சாரணத் தை உமது வாயாற் கேட்டு மனக்களிப்படைந்து அந்தப் பெருங் களிப்பினுல் இந்த உத்ஸவாதிகளை நடத்தினேன்” என்ருர். அதைக்

கேட்ட அரசர், "ஒருவரு மறியாதிருக்க என் மனத்திற் பொதிந்து வைத்திருந்த ஸ்ரீராமபிரானனவர், அந்த மனமாகிய இடத்தைவிட்டு வாய் வழியாய் வெளிப்பட்டாரோ" என்று சொல்லி, அந்த ஸ்ரீராம பிரானுடைய திருவடிக்குத் தமது உயிரைச் சமர்ப்பித்தார். அதைக் கண்ட தேவியாரும் உடலை விட்டு நீங்கித் தமது நாயகரைத் தொடர்ந்துபோனர். இவ்விருவருடைய அந்யோந்ய நிலைமையைக் கண்டீரோ வென்று யாவரும் வியந்து கொண்டாடினர்கள் என்று சொல்லி மேலே பிளாபாயி வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

மலூடலிகாராஜன் சரித்திரம் முற்றிற்று.

ஐம்பத்துமூன்றாவது

பிளாபாயி சரித்திரம்.

ஓரூரில், ஒரு பிரதாநியின் புத்ரியாகிய பிளாபாயி என்பவர் ஒருவரிருந்தார். இவர் அதி பாலியத்திலிருந்து ஸ்ரீ ஹரிபூஜை செய்து கொண்டு வருவார். இவர்க்குத் தகுதியான பருவம் வாய்த்தபிறகு இவர் கணவர் இறந்துபோனதனால் இவர் தமது தந்தையாரிடத்தை யடைந்து, தமது வழக்கம்போல ஹரிபூஜை செய்துகொண்டிருக்கும் காலத்தில், அந்தத் தந்தையும் இறந்துபோனன். பிறகு இவர் தமது ஸஹோதரர்களிடத்தி லிருக்க நேர்ந்தது. அப்போது அந்தச் ஸஹோதரர்கள் இருவரும் ஒருவர்க்கொருவர் மாறுபட்டு, உள்ள பொருள்களை யெல்லாம் பாகித்துக்கொள்ள எண்ணிப் பிரித்துக் கொள்ளும்போது, இளைய ஸஹோதரன் பாகத்தில் பிளாபாயியாருடைய பூஜைப் பெட்டி அகப்பட்டது. இந்தப் பிளாபாயியார் ஸ்ரீ பகவானைப் பூஜைசெய்யாமல் உண்ணமாட்டாராகையால், இளையவனிடத்துக்குப் பூஜைப் பெட்டியைக் குறித்து ஆளனுப்பினர். அவனும் அந்தப் பெட்டியைத் தேடிப்பார்த்துக் காணாமையால், "என்னிடத்தில் இல்லை" என்றான். அதைக் கேட்ட பிளாபாயியார் ஐந்துநாள் வரைக்கும் உண்ணாதிருந்தார். இவருடைய மனநிலையை யறிந்த ஸ்ரீ பகவானனவர் பாயியாருடைய கனவில் ஒரு ப்ராஹ்மண ரூபங்கொண்டுவந்து பூஜைப் பெட்டியைத் தந்து மறைந்துபோனர். இவர் விழித்தெழுந்து, விடியற்காலத்தில் நீராடிவந்து, பகவதாராதனம்செய்து, பிறகு அமுதுசெய்தார். இதையறிந்த இளையவன், தன் தமையனிடத்திலும் தமக்கையிடத்திலும் வந்து வணங்கி, "நான்செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று ப்ரார்

த்தித்து, தமையனோடு கூடி விரோதமில்லாமல் வாழ்ந்திருந்தான். பிளாபாயியாரும் ஸ்ரீ ஹரிபூஜையைத் தவறாமல் செய்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தார் என்றுசொல்லி, மேலே ராமாபாயி வைபவத்தைச் சொல்லத்தொடங்கினார்.

பிளாபாயி சரித்திரம் முற்றிற்று.

ஐம்பத்துநான்காவது

ராமாபாயி சரித்திரம்.

காசியில் சந்தராஜன் என்று ஒரு அரசனிருந்தான்; அவன் ஸாது பூஜையிற் சிறந்தவன்; அவனுக்கு ராமாபாயி என்றொரு பெண் பிறக்க, அப்புதல்வியார்க்குப் பருவம் வருமளவும் அன்போடு வளர்த்துப் பிறகு ஒரு வாலிபனுக்கு அந்தப்புதல்வியாரை மணஞ்செய்து கொடுத்தான். அந்த மணமகன் ஸ்ரீ ஹரிபக்தி இன்னதென்றறியாதவனாகவும், கனவிலும் ஸ்ரீ ஹரிநாமஸ்மரணை இல்லாதவனாகவும், காமுகனாகவும் இருந்ததனால், ராமாபாயியார் மிகவும் மனம்வருந்தி, நமது வினைப்பயன் இப்படிச்சம்பவித்ததென்று தீர்மானித்துக்கொண்டு, கணவனுக்கு அநுகூலமாக நடந்துவரும் நாளில், அவர் வயிற்றில் ஒரு சற்புத்திரன் பிறந்தான். அந்தப்புத்திரனை அன்போடு வளர்த்து வரும்நாளில் ராமாபாயியார் தம் கணவனுக்கு ஸ்ரீ ஹரிபக்தியுண்டாவது எக்காலமோவென்று சிந்தித்துக்கொண்டிருக்கையில், ஒருநாள், கணவனைநோக்கி, "உத்தமர்களாகிய ஸ்ரீ வைஷ்ணவர்கள் வந்தால் அவர்களை அலக்ஷ்யம் பண்ணாமலும், உயிர்க்கொலை செய்யாமலும் இருந்தால் மேலான நற்கதி வாய்க்கும், அவற்றைச் செய்தால் மீளாநரகம் சித்திக்கும்" என்றார். இந்த வார்த்தையைக் கேட்ட அந்தத் துர்மார்க்கன், ராமாபாயியார் வார்த்தையைத் திரஸ்கரித்து, ஹரிதிநமாகிய ஏகாதசியில் ஒரு ஆட்டைக் கொண்டுவந்து கொலைசெய்யப்போனான். அதைக்கண்ட ராமாபாயியார் "இன்று இப்படிப்பட்ட காரியத்தைச்செய்வது நன்மையல்ல" என்றுசொல்ல, அவன் அந்தச் சொல்லைக்கேளாமல் ஆட்டைக்கொன்றான். அதற்கு ராமாபாயியார் மிகவும் துக்கித்து, "இதற்கென்ன செய்யலாம்" என்று ஆலோசித்து, தமது புதல்வனுக்கு நஞ்சைப் பாலோடு கலந்தூட்டித் தொட்டிலில் வளர்த்தினார். சற்றுநேரத்தில் நஞ்சின்கொடுமையால் புதல்வன் இறந்துபோனான். புதல்வன் இறந்ததை அந்தத் துராசாரன் முதலானோர் அறிந்து, கோவென்றலறி யழுதார்கள்.

அப்போது ராமாபாயியார் சற்றும் மனந்தளராமல், ஸ்ரீ ஹரிநாம ஸ்மரணை செய்துகொண்டிருந்தார். இப்படி இவர் இருப்பதைக் கண்டோரெல்லாரும் அவரைநோக்கி, "புதல்வன் இறந்ததைக்குறித்து நாங்களெல்லாரும் வருந்தி அழும்போது, பத்துமாசம் சுமந்து பெற்று அன்போடு வளர்த்த உன்மனம் சற்றும் கலங்காமலிருப்பது ஆச்சரியம்" என்று அழுதுகொண்டே சொல்ல, ராமாபாயியார் அவர்களைநோக்கி, "அழியும்பொருள் என்றைக்கானாலும் அழிந்தேதீரும்; அதைக்குறித்து அழுதால் என்னபயன்" என்றார். அதைக் கேட்ட கணவனானவன் இவரைநோக்கி, "அப்படியானாலும் இந்தச் சிறுவயதிற் சாவது தகுதியோ" என்றான். அதற்கு ராமாபாயியார், "தகுதியல்லவாயினும் பகவானுடைய கட்டளையைக் கடக்கமுடியாது, ஆனால் ஸ்ரீஹரிதாசர்கள் இப்பொழுது நமது வீட்டுக்கு எழுந்தருளுவார்களானால் நமது துன்பம் தீரும்" என்றார். அதைக்கேட்ட கணவன் "அவர் நம்மிடத்துக்கு வருவதெப்படி?" என்று கேட்க, பாயியார் சொல்லுகிறார்; "ஹரிதாசரைக் கண்டு வணங்கி அழைத்து வந்து அவர்களை அன்போடு உபசரித்து அவர்கள் திருவடிகளை விளக்கி, அந்த ஸ்ரீபாத தீர்த்தத்தை நமது புதல்வன் வாயிற்பெய்தால் இவன் பிழைப்பான்" என்று சொல்ல, அப்படியே அவன் போய் அங்குள்ள கோயிலி லிருக்கிற திருமாலடியாரை யழைத்துவந்து பூஜித்துத் தோத்திரம்செய்து அவர்களுடைய ஸ்ரீ பாததீர்த்தத்தைக் குழந்தையின் வாயிற்பெய்தவுடனே குழந்தையானவன் தூங்கி விழித்தெழுந்தாற்போல எழுந்திருக்கக்கண்டு வியந்து, "எமது துன்பம் நீங்கினது" என்றுசொல்லி, அந்த ஹரிதாசரிடத்தில் பக்தியுள்ளவனாகித் தீச்செய்கைகளை விட்டொழிந்து சாதுவாகி, நாள்தோறும் ஹரிபஜனை செய்துகொண்டும், ஹரிபூஜை செய்துகொண்டும், ஹரிகதைகளைக் கேட்டுக்கொண்டும் ஹரிதாசனாய் வாழ்ந்திருந்தான் என்று சொல்லி, மேலே ராமராஜர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

ராமாபாயி சரித்திரம் முற்றிற்று.

ஐம்பத்தைந்தாவது

ராமராஜர் சரித்திரம்.

ஓரூரில், பரமசாத்விகராயும், ராமோபாசகராயும். அல்லும் பகலும் ஸ்ரீராம சரித்திரத்தைக் கேட்டுக்கொண்டிருப்பவராயும்,

ராமராஜர் என்னும் பெயருள்ளவராயும் ஒரு அரசர் இருந்தார். அந்த அரசருடைய அரண்மனையில் ஒரு புராணிகர் ஸ்ரீ ராமாயணம் படித்துக்கொண்டு வரும்போது, ஸ்ரீராமமூர்த்திக்கு ஒரு துன்பம் நேரிடுகிற சந்தர்ப்பத்தில் அரசர் துன்பப்படுவதைக்கண்டு ஸ்ரீராம ஜயம் என்று சொல்லிக்கொண்டே வருவார். இப்படியிருக்குங் காலத்தில் அந்தப் புராணிகர் ஒருநாள் ஏதோவொரு பிணியினால் புராண படனத்துக்கு வரக்கூடாமலிருந்ததனால் தமது புதல்வனை அரண்மனைக்கு அனுப்பி "ஸ்ரீராமஜயத்தை மாத்திரஞ் சொல்லிவா" என்று நியமித்தனுப்ப, அந்தப் புதல்வன் தந்தை சொன்னபடியே செய்யாமல் தான் அரண்மனைக்குப்போய், "பஞ்சவடியில் இளையபெருமாளும், ஜாநகிபிராட்டியும் ஸ்ரீராமபிரானும் வாசஞ்செய்யுங் காலத்தில், மாரீசன் என்பவன் ஒரு மானுருவங்கொண்டு, ஸ்ரீ ஜாநகி பிராட்டிக் கெதிரேவர, பிராட்டியார், அந்த அழகான மாயமானைக் கண்டு ஆச்சரியப்பட்டு, 'இதைப் பிடித்துத் தரவேண்டும்' என்று ஸ்ரீராமபிரானுக்குச் சொல்ல, அவரும் அப்படியே அதைத்தொடர்ந்து பிடிக்கப்போய், அது அகப்படாமையால், இதுமாயமானென்றறிந்து அதன்மீது ஒரு பாணத்தை விட்டார். அந்தப் பாணம்பட்டு அது கீழே விழும்போது, 'லக்ஷ்மணா' என்று கதறிக்கொண்டு விழுந்தது. அந்தச் சத்தத்தைப் பிராட்டியார் கேட்டு, இளையபெருமாளாகிய லக்ஷ்மணரை நோக்கி, 'உமது தமையனாருக்கு ஏதோ அபாயம் நேர்ந்தாற்போலிருக்கின்றது. ஆதலால் நீர்போய்ப் பார்த்து வாரும்' என்று சொல்ல, இளையபெருமாளானவர், 'என் தமையனுக்கு ஒரு அபாயமும் நேரிடாது' என்று எவ்வளவு வற்புறுத்திச் சொல்லியும் பிராட்டி கேளாமையால், மாரீசன் விழுந்த இடத்தைத் தேடிக்கொண்டு இளையபெருமாள் போய்விட்டார். அந்தச் சமயத்தில் பிராட்டி தனியேயிருப்பதை யறிந்த ராவணன் வந்து பல இனிய சொற்களைச் சொல்லியும் பிராட்டி தன் கருத்துக் கிணங்காமையால், அவரை (பர்ணசாலையோடு) (நிலத்தைத்தோண்டி) எடுத்துத் தன் தேர்மேலேற்றிக்கொண்டு போய்விட்டான்" என்ற சந்தர்ப்பத்தைப் படித்தான். அதைக் கேட்ட ராமராஜர் மனம் பதைத்து, "அந்த ராவணனைத் தொடர்ந்துபோய்ப் பிடிக்கும்பொருட்டு நமது சதுரங்கசேனைகளையும் ஆயத்தப்படுத்தவேண்டும்" என்று மந்திரிக்கு நியமிக்க, அவனும் அப்படியே சித்தப்படுத்திக்கொண்டு புறப்பட, ராமராஜர் அந்தச் சேனைகளோடு தென்கடலளவும்போய், சேனைகளையும் மந்திரியையும் கரையில் நிறுத்திவிட்டுத் தான்

மாத்திரம் தனியே கடலிலிறங்கிப் போவதை யறிந்த ஸ்ரீராமபிரானு னவர் ஸ்ரீசிதாபிராட்டியாரோடும் அரசருக்கெதிரே எழுந்தருளி, அரசரைநோக்கி, "இவளை வஞ்சித்துக் கொண்டுபோனவனைக் கொன்று மீட்டுவந்தேன், நீபோகவேண்டாம்" என்று சொல்ல, அரசர், கோவம் தணிந்து ஸ்ரீராமபிரானுடனே கரைசேர்ந்து, ஸ்ரீராமமூர்த்தியின் திருவடியை வணங்கித் தோத்திரம் செய்து விடைபெற்றுத் தமது ஊருக்குப் போய்விட்டார். போய், முன்போலவே ஸ்ரீராம சரித்திரத்தைச் சிரவணம் செய்துகொண்டிருக்கும் நாளில், நரஹரி தாசர் என்பவர் ஒருவர் இந்த அரசர்போலவே ஹரிபக்தியிற் சிறந்தவரா யிருந்தார். அவர் திருமாலின் அவதாரங்கள் ஒவ்வொன்றையும் வேடம் பூண்கிற காலத்தில், சீடர்கள் இந்த வேடத்துக்கேற்க வுருவங்கொண்டு சூழ்ந்திருக்கவும், பல வாத்யங்களும் முழங்கவும் நடநம் செய்பவராயிருந்தார். இவர் ஒருநாள் நரசிங்கவேடம் பூண்டார். அந்த வேடத்துக்கேற்க ஒருசீடன் இரணியனாகவும் ஒரு சீடன் ப்ரஹ்லாதன்போலவும் வேடம் பூண்டார்கள். அந்தச் சமயத்தில் இரணியன் தன் மகனாகிய ப்ரஹ்லாதனோடு வாது செய்ய விட்டுத் தாசர் தூணுக்குள்ளே மறைந்திருந்தார். அப்போது ப்ரஹ்லாதன் "பகவான் எங்கும் நிறைந்திருப்பார்" என்று சொல்ல, இரணியன் "இந்தத் தூணிலிருப்பானு" என்று வினவி, "இருப்பார்" என்று ப்ரஹ்லாதர் சொன்னவுடனே, இரணியன் அந்தத் தூணைத் தாக்க, தாசர் அந்தத் தூணிலிருந்து நரசிங்கமாக வெளிப்பட்டுவந்து இரணியன் வயிற்றைக் கிழித்துக் குடலைப் பிடுங்கிக் கழுத்தில் மாலையாக அணிந்துகொள்ள அந்த இரணிய வேடங்கொண்ட சீடன் உண்மையாகவே இறந்தான். இதை எல்லாருங் கண்டு "அய்யோ" என்றலற, இறந்தவனுக்கு உறவினரா யிருப்பவர் இந்தச் செய்தியை அரசனிடத்திற் சொல்ல, அரசர் அவர்களை நோக்கி, "அந்தச் சவத்தைத் தஹநம்பண்ணின பிறகு வாருங்கள்" என்று கட்டளையிட, அவர்கள் அப்படியே அந்தச் சவத்தை மயாநத்திற் கொண்டுபோய்த் தஹனஞ் செய்தார்கள். பிறகு நரஹரிதாசரை அரசர் அழைத்து, "நீர் தசரதராகவும், உமது சீடர்கள் ராமனாகவும் கைகேசியாகவும் வேடங் கொள்ளுங்கள்" என்றார். அப்படியே அவர்கள் வேடம்பூண்டு நடிக்கும்போது, கைகேசி ஸ்ரீராமனுக்கு முடிசூட்டுவதைத் தடுத்துக் காட்டுக்கனுப்ப, அதைக்கண்ட தசரத வேடம் பூண்ட தாசர், புத்ரனாகிய ஸ்ரீராமனது பிரிவைச் சகிக்காமல், "ராமா, உன்னைப்பிரிந்து நான் உயிர் வாழமாட்டேன்" என்று வரு

ந்தி மூர்ச்சித்து உயிரைவிட்டார். இதைக் கண்டோ ரெல்லாரும் "தாசர் மெய்யாகவே யிறந்தார்" என்று சோகித்து அழுதுகொண்டு, "உண்மையாகிய தசரதர், ராமருக்காக இறந்ததைச் சப்த ப்ரமாணமாய்க் கேட்டோம், வேடம் பூண்ட தசரதர் இறந்ததை இங்கே ப்ரத்தியக்ஷ ப்ரமாணமாய்க் கண்டோம்" என்று பேசிக்கொண்டிருந்தார்கள். ராமராஜரும் ஹரிநாமசங்கீர்த்தனம் செய்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தார் என்றுசொல்லி, மேலே ஓகருசாவ்கார் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

ராமராஜர் சரித்திரம் முற்றிற்று.

ஐம்பத்தாறுவது

ஓகருசாவ்கார் சரித்திரம்.

உத்தர தேசத்தில் ஓர் ஊரில், ஓகருசாவ்கார் என்றொரு வணிகரிருந்தார். அவர், ஞானம் அன்பு முதலிய ஆத்மகுணங்கள் நிறைந்த உத்தமர். அவர் மனைவியார் கற்பிற் சிறந்தவராயும், வருகிற சாது ஜனங்களை மிகவும் அன்போடு பூஜிப்பவராயும், எல்லா வுயிர்களின் மேலும் மிகுந்த அருளுள்ளவராயும் இருந்தார். அவ் விருவரும் ஸ்ரீஹரிநாம ஸ்மரணை செய்துகொண்டும், நாள்தோறும் பத்து ஏழைகளுக்கு அன்னம் பகிர்ந்துண்டும், பாவமில்லாத நல்வழியால் திரவியத்தைச் சம்பாதித்துக்கொண்டும் இருந்தார்கள். இப்படி இவர்கள் இருக்குங் காலத்தில் ஒருநாள், பகவானானவர் அவர்களைப் பரிசோதிக்க வேண்டுமென்று திருவுளங்கொண்டு, ஒரு சாதுரூபங் கொண்டு வந்து, ஓகரு மனைவியாளை நோக்கி, "உன் நாயகர் எங்கே?" என்று கேட்டார். அதைக்கேட்ட மனைவியார், "என் நாயகர் சந்தைக்குப் போயிருக்கிறார், விரைவாக வருவார், நீர் இரும்" என்று ஆசநம் கொடுத்து உபசரிக்க, பகவானானவர், "எனக்குப் பசிமிகுந்திருக்கின்றது, நீங்கள் வருகிற சாதுக்களுக்கு அன்னமளித்து உபசரிக்கிறவர்களென்று எங்கும் பிரசித்தமா யிருப்பதனால் வந்தேன்" என்றார். அதைக்கேட்ட சாவ்கார் மனைவியார், விரைந்து கடைக்குப் போய்க் கையில் காசில்லாமையால் தமது நத்தை யீடாகவைத்து, அரிசி பருப்பு முதலியவற்றை வாங்கிக்கொண்டு வந்து சமையல்செய்து அன்னமிடுதலும், அதை யுண்பவராகிய பகவானானவர், "நான் வெகுநாளாய் அன்னமில்லாமல் பசியால் வருந்தினேன்; அம்மே, இன்று நீயிட்ட அன்னத்தால் என்பசி முழுதும் நீங்கிவிட்

டது" என்று சொல்லி, வயிறாரவுண்டு கால் கை சுத்திசெய்து கொண்டபிறகு, வீட்டுக்குள்ளே புகுந்து, அடுக்குப் பானைகளெல்லாவற்றையும் தமது திருக்கரத்தால் தீண்டி, "தாயே! இன்றுமுதல் இந்த அடுக்குப்பானைகளில் உனக்கு வேண்டும் பொருள்களெல்லாம் குறையாமல் நிறைந்திருக்கும்" என்றும், "இதுபோலவே எப்போதும் சாதுக்களை உபசரிக்கக்கடவாய்" என்றும் சொல்லிவிட்டு மறைந்து போய்விட்டார். மறுநாள் சாவ்கார் வந்தவுடனே இங்கே நேற்று நடந்த செய்தியெல்லாம் மனைவியார் சொல்லக் கேட்டு மன மகிழ்ந்திருந்தார். மற்றொருநாள் அநேக சாதுக்கள் வரக்கண்டு, "இத்தனைபேருக்கு அன்னமிட வேண்டுமானால் அதிகமான பொருள் வேண்டுமே, ஆனாலும் முன்னே ஒரு சாதுவானவர் சொல்லிப் போனதைப் பரிசோதிப்போம்" என்று போய் அடுக்குப் பானையொன்றைத் திறந்து பார்த்து, அதில் மொஹரா, வராகன் என்பவைகள் நிறைந்திருப்பதை நோக்கி, தமக்கு வேணமட்டும் எடுத்துக் கொண்டு போய், எல்லாப் பொருள்களும் பெற்றுச் சமைத்து, வந்த சாதுக்களெல்லாருக்கும் அமுதுண்பித்து, மகிழ்வித்து அனுப்பினபிறகு, வணிகர் தமது மனைவியார் முகத்தை நோக்கி, "நானில்லாத சமயத்தில் இங்கு வந்தவர் யாரோ ஒரு சாது என்று நினைக்க வேண்டாம், அவர் சாக்ஷாத் பகவானேயன்றி வேறல்ல, உனக்கெதிரே வந்து உன்னைப் புநிதையாக்கின பகவான், எனக்கெதிரே ஏன் எழுந்தருளவில்லை" யென்று சொல்லி பரிதபித்து, "ஓ பகவானே, பக்தபாலனே, உம்மைக்கண்டு களிக்கவேண்டுமென்று என் கண்கள் மிகவும் விரைகின்றன, காட்சி தந்தருளவேண்டும்" என்று தோத்திரம் செய்தார். அந்த ஒகரு செய்த தோத்திரத்துக்குப் பகவானானவர் சங்கசக்ர சதுர்ப்புஜ பீதாம்பர கிரீட நூபுராதிகள் விளங்கும்படி இவருக்குப் பிரத்யக்ஷமானார்; ஆதலும், ஒகருவானவர் பகவானுக்கு ஷோடசோபசாரங்களுஞ் செய்து, திருவடி வணங்கித் தோத்திரம் பண்ணினார்; பகவானும் இவர்க்கு அபயம் தந்து மறைந்தார். சாவ்கார், தம்மை நாடிவருகிற சாதுக்களுக் கெல்லாம் அமுதளித்து மகிழ்வித்து, தமது மனைவியாரோடும் ஸ்ரீராமமூர்த்தியை ஸ்மரித்துக்கொண் டினிது வாழ்ந்திருந்தா ரென்று சொல்லி, மேலே ஹரி அநந்தவைஷ்ணவர் வைபவத்தை சொல்லத்தொடங்கினார்.

ஒகருசாவ்கார் சரித்திரம் முற்றிற்று.

ஐம்பத்தேழாவது

ஹரி அநந்தவைஷ்ணவர் சரித்திரம்.

ஒரூரில் ஹரி அநந்த வைஷ்ணவர் என்றொருவர் இருந்தார். அவர், யதிராஜர் ஏற்படுத்தின ராமாநுஜ சித்தாந்தத்தை அநுஸரித்து நடப்பவராயும், ஸ்ரீஹரிபூஜா துரந்தரராயும், எல்லாவுயிர்களின் மேலும் பேரருளுள்ளவராயும், ஸர்வஜ்ஞராயும், ததீயாராதநத்தில் மிகவும் விருப்பமுள்ளவராயும் ப்ரபத்தி நிஷ்டையுள்ளவராயும் இருந்தார். இப்படியிருக்கிற காலத்தில் அநேகம் அன்பர்கள் இவரைவந்தடுத்தார்கள். அவர்களில் ஒருவன் இவரிடத்தில் மிகவும் பக்தியுள்ளவனாய், இவரது சேவை செய்வதே பரம ப்ரயோஜநமென்றெண்ணி, நாள்தோறும் அவ்வூரில் யாசித்து ஒரு படிமாவைச் சேகரித்துக் கொண்டுவந்து இவர்க்கெதிரேவைத்து வணங்குவான். இவர் அந்தமாவைத் தம்மை நாடிவருகிற சாதுக்களுக்கு உபயோகித்து வருவார். இப்படி நெடுநாள் கழிய, ஒருநாள், சிறந்த ஞானவானாகிய ராமாநந்தர் என்பவர் அநேகம் சீடர்களோடு அந்த வூருக்குவந்து ஒரு இடத்தில் தங்கியிருந்தார். ஹரியநந்தருடைய சீடர், நாள்தோறும் மாவையாசித்து வருவதுபோல அன்றைக்கும் யாசிக்கப்போய் வீடுகள்தோறும் யாசித்து வரும்போது, ராமாநந்தர் இருக்குமிடத்தைக் கண்டு அவரைக் காதலோடு வணங்கினான். அந்த ராமாநந்தர் இவரைப்பார்த்து, "இவன் சற்குருசேவை செய்வதில் மிகவிருப்புள்ளவன்" என்றறிந்து, "ஐயோ, இவன் நாளை உதயகாலத்தில் இறந்து போகும்படியான அற்பாயுசு உள்ளவனா யிருக்கிறானே" என்று விசநப்பட, அவரை மறுபடியும் வணங்கி அந்தச் செய்தியை நன்றாயறிந்துகொண்டு, தன் ஆசிரியராகிய ஹரியநந்தரிடத்திற்போய் இந்தச் செய்தியைச்சொல்லி "எந்நாளும் உமதுசேவை செய்துகொண்டிருக்க வேண்டுமென்று விரும்பியிருந்தேன், அந்த எண்ணத்துக்கு மாறாக நாளை உதயத்தில் இறந்துபோகப் போகிறேனே, நான் எப்படிப்பட்ட நிர்ப்பாக்கியன்" என்று சொல்லி யழுதான். அதைக் கண்ட ஹரியநந்தர், அந்தச் சீடனை நோக்கி, "நீ அழவேண்டாம், பகவானுடைய அநுக்ரஹத்தால் உனக்கு ஒரு குறையும் நேரிடாது, நாளை நீ யிறக்கமாட்டாய், தைரியமாயும் சந்தோஷமாயும் இரு" என்று சொல்லி, மறுநாள் விடியற்காலத்தில் எழுந்து நீராடி, சீடர் அருகே யிருக்கும்படி அவருக்கு நியமித்து ஸ்ரீலக்ஷ்மீநாதராகிய பகவானைத் தமது மனத்தில் நிறுத்தித் தியானித்துக்கொண்டிருந்

தார். அப்போது பகவானுனவர் தமது திவ்யாயுதங்களாகிய சங்க சக்ராதிகளோடும், கிரீட நூபுராதி அலங்காரத்தோடும், பீதாம் பரத்தோடும் இவருக்குப் பிரத்தியக்ஷமானுர். அப்படி யெழுந்தரு ளின பகவானை இவர் கண்டு சேவித்து, அவரது திவ்ய விக்ரஹ சௌந்தர்யத்தில் ஈடுபட்டு மனமழுந்தி யிருக்கையில், சீடனது உயி ரைக் கவர்வதற்கு யமன்வந்து, பகவானும் ஹரியநந்த பக்தரும் மனங்களித்திருப்பதையும், பகவானுடைய சக்ராயுதம் மேலே சுழ ன்றுகொண் டிருப்பதையும் கண்டு, நெடுநேரம் சமயம் பார்த்திருந் தான். அப்படி இருந்தும் சமயம் வாய்க்காமையாலும், சீடனது ஆயுளெல்லை அதிக்ரமித்ததாலும் தனது ஆணையைச் செலுத்துவதற் கிடமில்லாமல் திரும்பிப் போய்விட்டான். ஹரியநந்தர் நெடுநேரம் யோக நிஷ்டையில் அமைந்திருந்தார். அப்போது உயிர்பிழைத்து இந்தச் சீடர், அவருக்கருகே போய், "ஸ்வாமீ, என் மரணகாலம் கடந்து நான்கு ஜாமமாய்விட்டது" என்று சொல்ல, ஹரியநந்தர் விழித்துச் சீடனை நோக்குதலும், சீடன் அவருடைய திருவடியை வணங்கினுன். பிறகு மறுநாள் காலையிலெழுந்து வழக்கம்போல மாவை யாசிக்கும்பொருட்டுப் போனுன். அப்போது ராமாநந்தர் இவனைப்பார்த்து, 'நீ யெப்படி உயிர்பிழைத்தாய்?" என்று வினவ, இவன் தனது ஆசாரியருடைய க்ருபா விசேஷத்தால் பிழைத்த செய்தியைச் சொல்லுதலும், ராமாநந்தர் மிகவும் அதிசயித்து வந்து ஹரியநந்தரை வணங்கினுர்; இவரும் அவரை வணங்கினுர். பிறகு இருவரும் ஒருவரை யொருவர் தழுவிக்கொண்ட பிறகு, ராமாநந்தர் ஹரியநந்தரைப் பார்த்து "உம்முடைய பக்திக்கு ஒரு அளவில்லை, உமது சீடனுயிரை நீங்காமற் காத்தருளினீர், உமக்குச் சமானமானவர் ஒருவரு மில்லை" என்று தோத்திரம் பண்ணினுர். அப்போது ஹரியநந்தர், ராமாநந்தரை நோக்கி, "ராமாநந்தரே! ஸ்ரீ சக்ரபாணியாகிய பகவானது அருளினுல் எப்படிப்பட்ட அஸா த்யமான காரியமும் ஸாத்யமாகும், நம்மால் என்னகாரியம் முடியும்" என்று சொல்ல, ராமாநந்தர் நன்றென்று விடைபெற்றுப்போய்த் தம்மிடத்தை யடைந்தார். ஹரியநந்தரும் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டு சீடரோடும் இனிதுவாழ்ந்திருந்தார் என்றுசொல்லி, மேலே ராமசந்த்ரபட்டர் வைபத்தைச்சொல்லத் தொடங்கினுர்.

ஹரி அநந்தவைஷ்ணவர் சரித்திரம் முற்றிற்று.

ஐம்பத்தேட்டாவது

ராமசந்த்ரபட்டர் சரித்திரம்.

வேதசாஸ்திர நிபுணராயும், விரக்தராயும், மண் பொன் என்பவைகளையும், கல்மணி என்பவைகளையும் அபேதமாய்ப் பார்ப்பவராயும், அக்நிஹோத்ரம் செய்பவராயும், ஸ்ரீ ஹரிபஜனையில் வழுவாதவராயும், தாசரிபி நதிக்கரையில் அமலநேர் என்னும் ஊரில் வாழ்பவராயும், ராமசந்த்ரபட்டர் என்னும் பெயருள்ளவராயும் ஒருவரிருந்தார். இவர் அந்த வூருக்கரசனுயிருப்பவனுக்குக் குருவாயிருந்தும், தாம் பிக்ஷையேற்றுண்பதே விரதமாகப் பூண்டிருந்தார். இப்படி யிருக்குங் காலத்தில் ஒருநாள் அரசன் மனைவி "இவருக்கு ஏதாயினும் கொடுத்துதவி செய்யவேண்டும்" என்று நினைத்து, இவர் தேவியாரை அழைப்பித்து, உயர்ந்த ரத்நாபரணங்களைக் கொடுத்து அனுப்ப, தேவியார் வீட்டுக்கு வருதலும், பட்டரானவர், தமதுதேவியார் அரசன் மனைவியிடத்தில் வாங்கிக்கொண்டுவந்த ரத்நாபரணங்களைப் பார்த்து, "இந்த உபாதியை நீயேன் சுமந்துவந்தாய்? இவற்றில் நமக்கு ஆசையிருந்தால், ஸ்ரீ பகவானுனவர் நம்மை யணுகமாட்டார்" என்று சொல்ல, தேவியார் "இவர் சொல்லுவது உண்மையேயாம்" என்று அவைகளைத் தமது வீட்டிலிருக்கிற ஹோமகுண்டத்தில் போட்டுப் புதைத்துவிட்டு, உபாதி நீங்கியிருந்தார்; இதைக் கண்ட பட்டரும் மகிழ்ந்திருந்தார். இந்தச் செய்தியை அரசன் அறிந்து பட்டரிடத்துக்கு வந்து வணங்கி, "உமக்குக் கொடுத்த ஆபரணங்களை யெல்லாம் கொடுத்துவிடும்" என்றான். இவர் மனம் வருந்தி, ஸ்ரீஹரியை த்யானித்தலும், அந்த ஆபரணங்களெல்லாம் ஹோமகுண்டத்திலிருந்து வெளிப்பட்டன. அவை முன்னிருந்ததைப் பார்க்கிலும் அதிகமாய் ப்ரகாசிக்கக் கண்டு அரசன் வியந்துநிற்க, பட்டர் அவனை நோக்கி, "உன் ஆபரணங்களை யெல்லாம் நீ கொண்டுபோகலாம்" என்று சொல்ல, அரசன் "நான் கொடுத்ததை மறுபடியும் வாங்கமாட்டேன்" என்றான். பிறகு பட்டர் அங்குள்ள இரவலரை யழைத்து அவர்களுக்கு அந்த ஆபரணங்களைக் கொடுத்து மகிழ்வித்து, அரசனுக்கு விடைகொடுத்தனுப்பி, ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே சுஹக்ஷாபக்தர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

ராமசந்திரபட்டர் சரித்திரம் முற்றிற்று.

ஐம்பத்தோன்பதாவது

சுஹக்ஷாபக்தர் சரித்திரம்.

ஆம்தாபாத் என்னும் ஊரில், சுஹக்ஷா என்னும் பெயருள்ளவர் ஒருவர் இருந்தார். அவர் ஆண்பெண் என்னும் இரண்டுமல்லாத அலியாயிருந்தார். ஆயினும் ஸ்ரீஹரிபாதத்யாநத்தில் பதிந்த மனமுள்ளவராயிருந்தார். இவர் தம்மை வந்தடுத்த மற்றப் பேடிகளோடு கூடி வெளிப்பட்டால், மனம் கண்ட பொருள்களின்மேல் செல்லுமென்று வீட்டைவிட்டு வெளியே வரும் வழக்கமில்லை, பெண்கள் போல ஆடையுடுப்பார், பொன்முதலியவற்றில் சற்றும் ஆசையில்லாதவர், ஸ்ரீகண்ணபிரானது திருவடியையே த்யாநித்துக்கொண்டு ஏகாக்ர சித்தராயிருப்பார். இவரது ஹ்ருதயத்தின் நிலையையறிந்த ஸ்ரீகண்ணபிரானுனவர் தமது சகுணரூபத்தை நாள்தோறும் அவருக்குத் தரிசநங் கொடுத்துக்கொண்டிருந்தார். இப்படி யிருக்குங்காலத்தில், அந்த வூரில் மழைபெய்யாமலிருந்ததனுல் அந்நபாநாதிகள் கிடைக்காமல் உயிர்கள் மிகவும் வருந்துவதைக்கண்ட அரசன், மழையைப் பெய்விக்க விரும்பித் தவஞ்செய்யத் தொடங்கினுன். அந்நபாநங்களை வெறுத்து ஏழுநாள் இப்படித் தவஞ்செய்கையில், ஒருநாளிரவில் அவன் கனவில், பகவான் ஒரு ப்ராஹ்மணவேஷம் பூண்டுவந்து, "நீ சுஹக்ஷா பக்தரைக்கண்டு வணங்கித் தோத்திரஞ்செய்தால், அவர் கருணையால் மழைபெய்யும்" என்றும், "அப்படிச் செய்யாதபக்ஷத்தில் அணுவளவாயினும் மழைபெய்யாது" என்றும் சொல்லி மறைந்தவுடனே, அரசன் விழித்தெழுந்து, தன் சபையிலுள்ளவர்களுக்குத் தான் கண்ட கனுவின் செய்தியைச் சொல்ல, அந்தச் சபையாரும் அரசனை நோக்கி, "யாராயிருந்தாலும், பகவத் பக்தர்களாயிருந்தால் அவர்களே சிறந்தவர்கள். அவர்களை வணங்குவதனுல் நமக்கு ஒரு குறையுமில்லை, லோக க்ஷேமத்தின்பொருட்டு அவரை வணங்கலாம்" என்றார்கள். அதைக்கேட்ட அரசன் பக்தரை வணங்கச் சம்மதித்துப் போய்வணங்கி, தான் கண்ட கனுவைச் சொல்ல, பக்தரானவர், "ஆணும் பெண்ணுமல்லாத விகாரரூபமாய்ப் பிறந்து அலியாயிருக்கிற என்னை, சிறந்த வேந்தன் வந்து வணங்கும்படி செய்தாயே, ஓ கண்ணபிரானே! இது உனக்குத் திருவுளம்போலும், இந்தப் பெருமையை எனக்கு ஏன் கொடுத்தாய்" என்று இப்படிச் சொல்லிக்கொண்டும், ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டும் முற்றத்தில் நின்று, மழைபெய்யவேண்டுமென்று சிந்தித்தார். நெடுநேரம் அப்படிநின்று சிந்தித்தும்

மழை பெய்யவில்லை. அப்போது பக்தரானவர் மனவருத்தத்தோடு கண்களை மூடிக்கொண்டு ஒரு ஏகாந்தஸ்தானத்திலிருந்து, "ஓ பகவானே, அரசன் கனவில் வேதிய வடிவாய்ப் போய், என்னை வணங்கும் படி அரசனுக்கு நியமித்து, அவன் அப்படியே என்னை வந்து வணங்கி ப்ரார்த்திக்க, நான் ப்ரார்த்தனைக்கிரங்கி உன்னை த்யாநித்தேன், இந்தச் சமயத்தில் நீ இப்படிச் செய்வது உனக்கு நீதியாகுமா" என்று பலவாறு வேண்டியும் மழை பெய்யாமலேயிருந்தது. அதைக் கண்ட பக்தர் மிகவும்கோபங்கொண்டு, "இன்றுமுதலாகஸ்ரீலக்ஷ்மீநாதனை நான் நினைக்கவேமாட்டேன்" என்று சொல்லித் தன் மூக்கிலணிந்த நத்தைக் கழற்றி யெறிந்து, கையிலணிந்திருந்த வளையலை உடைக்கப் போகும் போது, லோகரக்ஷகனாகிய பகவானது கருணையால் மேலிடத்திலிருந்து மழைபெய்யத் தொடங்கிப் பதினான்கு நாள்வரைக்கும் விடாமல் பெருமழைபெய்தது. இந்த அதிசயத்தைக் கண்ட யாவரும் வியந்து பக்தரைக் கொண்டாடினார்கள். அரசனும் வந்து வணங்கி, "ஸ்வாமீ, அடியேன் தருவதை ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, பக்தரானவர் "எனக்கு ஒன்றும்வேண்டுவதில்லை, இனி இந்தப் பொய் யுடம்பை நீக்கநினைத்தேன், ஆதலால் எனக்குச் சமாதி கட்டித்தர வேண்டும்" என்றார்; அப்படியே வேந்தனும் பக்தருக்கு ஒரு சமாதி கட்டித்தர, பக்தரும் ஸ்ரீ ஹரியை த்யாநித்தார். பகவானனவர் தக்ஷணமே யெழுந்தருளி, இவருக்கு அபயந் தந்ததை யாவரும் அறிந்து வந்து, புஷ்பம் அபீர்ப்பொடி முதலியவற்றை இவர்மீதிறைத்து, ஸ்ரீ ஹரிபஜனைசெய்து ஆநந்தக் கூத்தாடினார்கள். பக்தர் அவர்களை நோக்கி, "என்னுடைய தீக்ஷைபெறுவோர் பிறவிக்கடலைக் கடப்பார்கள்" என்று சொல்ல, அதை ஒருவரும் கவனிக்காம லிருந்தார்கள். ஒரு அநாதன்மாத்திரம் வந்து வணங்கிநின்றான்; அவனுக்கு உபதேசித்து, தமது நத்தை அவன் மூக்கில் குத்தி, கைவளையலையும் அவன் கையில் அணிவித்து ஆசீர்வதித்து, சமாதிக் குழியிலிறங்கினர். இவரது தீக்ஷைபெற்ற சீடன், நத்து வளையல் ஆடை என்பவற்றைக் கொண்டணிந்து, ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்தார் என்று சொல்லி, மேலே பன்ஹாஜிரசபுத்திரர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

சுஹக்ஷாபக்தர் சரித்திரம் முற்றிற்று.

அறுபதாவது

பன்ஹாஜீரசபுத்திரர் சரித்திரம்.

குஜராத்தி தேசத்தில், டோகாபூர் என்னும் ஊருக்கு அரசனுயிருந்த குமான்சிங்கு என்பவர்க்கு மிகவும் சிநேகராயிருந்த பன்ஹாஜி ரசபுத்திரர் என்பவர், ஸ்ரீஹரியை மனத்துட்கொண்டு ஹரி நாம சங்கீர்த்தநத்தை இடைவிடாமற் செய்துகொண்டிருந்தார். இப்படியிருக்கும் நாளில் தீபாவளி நேரிட்டது. அப்போது அரசன் அந்தத் தீபாவளியின் இரவில் தீபோத்ஸவம் செய்தான். அந்த நடுராத்ரியில் பன்ஹாஜியானவர் விரைந்தெழுந்து, தமது மேற்போர்வையைக் கசக்கினர். அதைக் கண்ட அரசன் பன்ஹாஜியை நோக்கி, "நீர் ஆடையைக் கசக்கவேண்டியதற்குக் காரணமென்ன?" என்று கேட்க, இவர் அரசனை நோக்கி, "துவாரகையில், ஸ்ரீகண்ணபிரானுக்குத் தீபோத்ஸவம் நடக்கின்றது; அந்த உத்ஸவத்தில் அர்ச்சகர், அந்தக் கண்ணபிரானுக்கு ஆடையாபரணலங்காரஞ் செய்து, ஹாரதி சமர்ப்பிக்கும்போது, ஒப்பற்றவராகிய அந்தக் கண்ணபிரானுடைய அங்கியில் நெருப்புப் பற்றிக்கொண்டது, அதை அவிக்கும்பொருட்டு ஆடையைக் கசக்கினேன்" என்றார். இதைக் கேட்ட அரசன் மிகவும் ஆச்சரியமடைந்து பன்ஹாஜியை நோக்கி "இப்போது அந்தக்கண்ணபிரான் எந்தவிதமான ஆடையைத்தரித்திருக்கிறார் சொல்லும்" என்று கேட்க, "பச்சையுடுப்பு" என்று பன்ஹாஜி சொன்னர். அதைக்கேட்ட அரசன், ராவடாவூர்க்கு அரசனுயிருக்கிற தன் சட்டகனைக்கொண்டு இந்தச் செய்தியின் உண்மையைத் தெரிந்துகொள்ளலா மென்றெண்ணி, "துவாரகையில் என்ன ஆச்சரியம்?" என்று அவனுக்கு ஒரு கடிதமெழுதியனுப்பினன்; அவன் "துவாரகையில் ஸ்ரீகண்ணபிரானுக்குத் தீபாவளி பண்டிகைக் காலத்தில் தீபோத்ஸவம் நடக்கும்போது பகவானுடைய பச்சை அங்கியில் நெருப்புப் பற்றிக்கொண்டது. அந்த நெருப்பைப் பன்ஹாஜி கசக்கி அவித்தார்" என்று எழுதியனுப்பினர். அந்தக் கடிதத்தைக் கண்ட குமான்சிங்கு மிகவும் வியந்து, பன்ஹாஜியை நோக்கி, "நீர் இங்கேயிருந்துகொண்டே, துவாரகையில் நடந்த செய்தியை அறியவல்லரா யிருக்கிறீர், நீரே திருமாலுக்கு மெய்யன்பர், உமது பெருமையை என்னல் அளவிட்டுச் சொல்லவொண்ணுததா யிருக்கின்றது" என்று தோத்திரம் பண்ணி, அவருக்கு இரண்டு கிராமங்களைக் கொடுத்து, இந்த இரண்டு கிராம வருமானத்தைக் கொண்டு தேஹ யாத்திரையைச் சுகமாய் நடத்திக்கொண்டும், நாள்

தோறும் அடியேனுக்குச் சேவை சாதித்துக்கொண்டு மிருக்கவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, பன்ஹாஜியானவர் அரசனை நோக்கி, அப்படியே யாகட்டும், நீ எப்பொழுதும் ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்து கொண்டிரு" என்று நியமித்தார்; அப்படியே அரசனும் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநபரனுய் வாழ்ந்திருந்தான். பன்ஹாஜியும் ஸ்ரீ துவாரகையில் எழுந்தருளி இனிது வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே ஜயமல்லராஜர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

பன்ஹாஜிராசபுத்திரர் சரித்திரம் முற்றிற்று.

அறுபத்தோருவது

ஜயமல்லராஜர் சரித்திரம்.

மேடம் என்னும் ஊருக்கு அரசரா யிருந்த **ஜயமல்லராஜர்** என்பவர் ஸ்ரீ ஹரிபக்தி யுடையவராய், நாள்தோறும் ஸ்ரீ ஹரி பூஜையை நியதமாய் நடத்தி வருவோராய்ப் பூஜை முடிவில் ஒரு ஜாமநேரம் வரைக்கும் பகவத் தியாநத்தில் நிச்சலமா யிருப்பவராய், அந்தச் சமயத்தில் அவ்விடத்துக்கு ஒருவரும் வரக்கூடாதென்கிற கட்டளை பிறப்பித்தவரா யிருந்தார். அப்படி யிருக்குங் காலத்தில், இவர் தம்பியானவன் இவர் ஆளுகின்ற ராஜ்யத்தில் தான் சமபாகம் பெற விரும்பி, அவ்வூரை விட்டு, அயலிலிருந்துகொண்டு, சேனைகளைச் சேகரித்துக்கொண்டு இவர் பூஜை செய்துகொண்டிருக்கிற காலத்தில் வந்து கோட்டை முழுமையும் வளைந்துகொண்டான். இதைக் கண்ட இவருடைய மந்திரியானவன், தானும் சேனைகளோடு புறப்பட்டுப்போய் அவனோடு யுத்தஞ்செய்தான். அப்போது, வந்த படைகள் அதிக பலமுள்ளவைகளா யிருப்பதனால் அந்தச் செய்தியை மந்திரியானவன் தன் அரசனுடைய தாயினிடத்திற் சொல்ல, "இந்தச் செய்தியை அரசனுக்குச் சொல்" என்று சொல்ல, மந்திரி "இப்போது அவர் பூஜையிலிருக்கிறரே, நான் எப்படிபோய்ச்சொல்லுவேன்?" என்று சொல்ல, தாயானவர் "இந்தச் சமயத்தில் நாம் பூஜையைக் குறித்துத் தாமதிக்கலாகாது" என்று போய்த் தன் புதல்வராகிய அரசருக்குத் தெரிவிக்க, அவர் தாயை நோக்கி ஒரு மறுமொழியுஞ் சொல்லாமல் தாமே சாமளன் என்று சொல்லியிருந்தார். அப்போது கருணாநிதியாகிய பகவானானவர் தாம் ஒரு போர்வீரன்போல வேஷம் பூண்டு, சர்வாயுதங்களையும் தரித்து, கையில் வாளேந்தி, ஒருகுதிரை மேலேறிக் கோட்டை வாசற்கதவைத் திறந்துகொண்டு வெளியே

வந்து, கோட்டையை வளைத்திருந்த சேனையிற் பாய்ந்து, அந்தச் சேனை முழுவதையும் அதம் செய்தார். அப்போது அந்தச்சேனையில் பகவானுல் மடிந்தவர்கள் ஒழிய, மற்றவர்கள் முறிந்தோடுவதை, அந்தக் கோட்டை மதிலின்மேலிருந்து பார்த்த நகர ஜநங்கள் ஆச்சரியமடைந்து, "இவன் யாரோ தெரியவில்லை, பலபேரையும் இவன் ஒருவனே அதம் செய்தான்" என்று புகழ்ந்துகொண்டிருக்க, பகவானுகிய போர்வீரர், ஜயமல்லராஜனுடைய தம்பியை நன்றாகக் கட்டிக்கொண்டு வந்து மந்திரியினிடத்தில் சேர்த்துவிட்டு மறைந்துபோனுர்; மந்திரியும் அவனைச் சிறைபடுத்தி வைத்தான். பிறகு ஜயமல்லராஜர் தாம் செய்யும் பூஜையை முடித்து வெளியே வந்து மந்திரியை நோக்குதலும், மந்திரியானவன் அரசன் பூஜைசெய்யத் தொடங்கினது முதல், தம்பியைச் சிறைப்படுத்தின அளவுக்கும் நடந்தவற்றையெல்லாம் அரசனுக்குச் சொன்னுன். அதைக் கேட்ட அரசன் இது சாமளன் செய்த செய்கையென்றறிந்து ஸ்ரீவநமாலாதராரகிய பகவானுனவர் என்பொருட்டு இவ்வளவு சிரம மெடுத்துக்கொண்டாரே யென்று மிகவும் பரிதபித்து, "ஓ சாமளரூபனே! தம்பிக்குச் சேவை தந்தருளினதுபோல எனக்கு ஏன் சேவை தாராமற்போனுய், அடியேன் உன் திருவடிக்கு என்ன பிழைசெய்தேன்" என்று புலம்ப, க்ருபாசாகரமாகிய பகவானுனவர் திருவுளமிரங்கி அரசருக்கு ப்ரத்தியக்ஷமாகி அபயந்தந்து மறைந்தார். பிறகு அரசர் தமது தம்பியை வரவழைத்துக் கட்டவிழ்த்துவிட்டார். உடனே அந்தத் தம்பியானவன் இவரை வணங்கிநின்று, "தேவரீருடைய மஹிமையை யறியாமல் அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, அரசர் தம்பியை நோக்கி, "தம்பீ, ஸ்ரீ ருக்மிணீநாதர் உனக்கு ப்ரத்யக்ஷமானுர், ஆதலால் இவ்வுலகத்தில் உனக்கு நிகரானவர் ஒருவருமில்லை, உன்பாக்கியமே பாக்கியம்" என்றுமார்போடணைத்துக்கொண்டு மனவொருமைப்பாட்டுடனே தம்பியோடு வாழ்ந்திருந்தார். இப்படி வாழுங்காலத்தில், ஒரு தச்சனைக்கொண்டு, ஒரு கோயில்கட்டுவித்து, அதில் ஸ்ரீபகவானைப் பிரதிஷ்டைசெய்து, கோயில் மதில்வாசல்வழியாய் ஒருவரும் போக்குவரவுகள் செய்யாதிருக்கும்படி சுற்றிலும் மதில்வளைத்து, தாம் மாத்திரம் நூலேணியின் வழியாய் கோயிலுக்குள்ளே போய், பகவானைப் பூஜித்து வணங்கி வாழ்த்தி, கோயிலின் ஒருபக்கத்தில் மௌநமாயிருந்துகொண்டு, "ஓ பகவானே! தேவரீர் என் மனத்துக்குத் தோன்றுவதுபோல என் கண்ணுக்குத் தோன்றியருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, பகவானும் இவர் விரு

ப்பத்தின்படியே இவருக்கு ப்ரத்யக்ஷமானர். அப்படி ப்ரத்யக்ஷமான பகவானை அரசர் கண்களிகூரக் கண்டு, திருவடியைப்பற்றி, உடல் புளகிக்க, கண்ணீர் ததும்ப, ஆநந்தபரிதராய், ரத்நாசநத்திலேற்றி, ஷோடசோபசாரங்களுஞ் செய்து, சயநத்தில் கண் வளரச்செய்து, ஸ்ரீ பாதங்களை வருடி, "உலகத்தில் என்போலப் பாக்கியவான்கள் யார்" என்று மனமகிழ்ந்து, நூலேணியின் வழியாய் வெளியேவந்து தாம் அரண்மனைக்குப் போனர். இப்படி நெடுநாள் நடந்துகொண்டிருக்குங்காலத்தில், ஒருநாள் இவர் சந்நிதிக்குள்ளே போனவுடனே நூலேணியை யெடுத்துவிடும் வழக்கம்போல எடுக்காமல் மறந்து சந்நிதிக்குள்ளே போய்ப் பகவானை வணங்கிக்கொண்டிருக்குஞ் சமயத்தில், அரசன் மனைவியார் அந்த நூலேணி வழியாய்க் கோயிலுக்குள்ளேபோய், பகவானுடைய திருவடியை வருடிக்கொண்டிருக்கிற கணவனைக் கண்டு, தாமும் பகவானை வணங்கித் தோத்திரஞ்செய்தார். பகவான் அவர்செய்த தோத்திரத்துக்குத் திருவுளமிரங்கிக் கடாக்ஷிக்க, அரசன்கண்டு, "நீ யெப்படி வந்தாய்?"என்று மனைவியைக்கேட்க, "நூலேணியானது இன்று உம்மால்எடுக்கப்படாமலிருப்பதனுல்நான் அதன்வழியே வந்து பகவானைச் சேவிக்கும்படியான பாக்கியம் பெற்றேன்"என்றுசொல்லி வணங்கினுள். இப்படி அரசராகிய ஜயமல்லராஜரும் அவர் தேவியாரும் மனவொற்றுமை யுடையவராய், நாள்தோறும் பகவதாராதநமும் பகவந்நாமஸங்கீர்த்தநமும் செய்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தார்கள் என்று சொல்லி, மேலே ஸ்ரீதரபண்டிதர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

ஜயமல்லராஜர் சரித்திரம் முற்றிற்று.

அறுபத்திரண்டாவது

ஸ்ரீ தரபண்டிதர் சரித்திரம்.

முற்காலத்தில் பல வளங்களும் நிறைந்த ஒரூரில் ஸ்ரீதரபண்டிதர் என்பவர் ஒருவரிருந்தார். அவர் எல்லாரிடத்திலும் விசுவாசமுள்ளவராகவும், இடைவிடாமல் எப்பொழுதும் ஸ்ரீ ஹரிபஜனைசெய்பவராகவும் இருந்தார். இவருடைய மனைவியாரோ, கற்பிற் சிறந்தவராயிருந்தார். இந்தப்பண்டிதர் யாராயினும் விகற்பமாய்ப்பேசினும் அது உண்மையென்றே நம்புவார். இவர் ஒருநாள் யாத்திரைசெய்யத் துணிந்து, தமது தேவியாரைக் குதிரைமேலேற்றிக்கொண்டு ஒரு காட்டின்வழியே போகும்போது சில திருடர்கள் தொடர்ந்ததைக்

கண்டு, தேவியார் பண்டிதரை நோக்கி, "சூரியாஸ்தமனகாலத்தில் நாம் காட்டில் பிரவேசித்தோம், ஏதாகிலும் தீமை நேரிடுமென்று அஞ்சுகிறேன், ஆதலால் திரும்பிப்போவோம்" என்று சொல்லுதலும், இதைக் கேட்ட திருடர்கள் "நீங்கள் அஞ்சவேண்டியதில்லை, நாங்கள் உங்களுக்கு வழித்துணையாய் வருகிறோம்" என்றார்கள். அதைக் கேட்ட பண்டிதர் அந்தத்திருடரை நோக்கி, "உங்கள் சொல்லில் எங்களுக்கு நம்பிக்கை யுண்டாகவில்லை, எங்களுடைய மனதுக்கு நம்பிக்கை யுண்டாகும்படியாக ப்ரமாணஞ்செய்தால் நாங்கள் உங்களை வழித்துணையாய் நம்பி உங்களைத் தொடர்ந்துவருவோம்" என்று சொல்ல, திருடர் "உம்மிடத்திலும் எம்மிடத்திலும் வேற்றுமையில்லாமல் ஒருதன்மையாய் வாழ்கின்ற ஒப்பற்ற சாக்ஷிபூதராகிய ஸ்ரீராமபிரானறிய எங்களிடத்தில் ஒரு கெடுதியில்லை, வாருங்கள்" என்று சொல்லுதலும், பண்டிதரும் தேவியாரும் மனந்தெளிந்து, அந்தத் திருடரைப் பின்றொடர்ந்து நடந்தார்கள். இப்படி பாரமார்த்திகமான வார்த்தைகளைப் பேசிக்கொண்டு வந்த திருடர், கொஞ்சதூரம் இவர்கள் வழி நடந்த பிறகு, பண்டிதருடைய தலையை யறுத்துக் கீழே தள்ளி, அவருடைய ஆடையாபரணங்களை யெல்லாம் கைக்கொண்டனர். குதிரை மேலேறி முன்னே போகிற தேவியார் திரும்பிப்பார்த்து மிகவும் மனம் வருந்தி நிற்க, கொலைசெய்த திருடர்கள், "உன்கணவரை நாங்கள் கொலைசெய்தோம், அதைக்குறித்து நீ பார்ப்பதினாலும், துக்கப்படுவதினாலும் பிரயோஜநமில்லை" என்று அதட்டிச் சொல்லக் கேட்ட தேவியார், அந்தத் திருடர்களை நோக்கி, "நீங்கள் சாக்ஷியென்று சொன்ன அந்த ஸ்ரீராமபிரானும் இந்தத் தொழிலை நீங்கள் செய்யும் போது திருவுள மிசைந்திருந்தாரோ" என்று சொல்லி முடிப்பதற்கு முன்பே ஸ்ரீராமபிரானானவர் ஒரு நீண்ட வில்லைக் கையிலேந்திக் கொண்டு வந்து அந்தத் திருடர்களை ஒரு நிமிஷகாலத்தில் கொன்றார்; கொன்று ஸ்ரீதரபண்டிதரிடத்தில் வந்து தமது கருணைக் கண்ணால் நோக்குதலும், பண்டிதர் உயிர்பெற்றெழுந்து, தமது தேவியாரை நோக்கி, "சாக்ஷியா யேற்பட்டிருந்தவர் நம்மைக் காப்பாற்றும் பொருட்டு அன்போடு எழுந்தருளினர், பார்த்தாயோ" என்றுசொல்லி, பத்தினியும் தாமுமாக ஸ்ரீராமமூர்த்தியை வணங்க, ஸ்ரீராமமூர்த்தியானவர், இவ்விருவருக்கும் அபயங்கொடுத்து இவர்கள் அவ்வனத்தைக் கடக்குமளவும் வழித்துணையாய்வந்து பிறகு மறைந்து போனர். இவர்களும் நிர்ப்பயமாய்த் தீர்த்த யாத்திரை செய்து மகிழ்ந்திருந்தார்கள் என்று சொல்லி, மேலே ஹரிபாளதாசர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

ஸ்ரீதரபண்டிதர் சரித்திரம் முற்றிற்று.

அறுபத்துமூன்றாவது

ஹரிபாளதாசர் சரித்திரம்.

முற்காலத்தில், ஒரு சிறந்த நகரத்தில், ஹரிபாளர் என்பவர் ஒருவரிருந்தார். இவர் சாது ஸஜ்ஜநங்களைப் பூஜித்து, அவர்களுக்கு அந்நம் வஸ்திரம் முதலானவைகளைக் குறைவறக் கொடுத்து மகிழ்வித்துக் கொண்டும், ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டும் இருந்தார். இப்படி இவர் அந்நதாநம் முதலானவைகளை விசேஷமாகச் செய்வதனால் இவரிடத்தி லிருந்த பொருள் முழுதும் செலவாய் விட்டது. அப்படி யிருந்தும், ஸ்ரீ ஹரிதாசர்கள் இவரது பெருங்கீர்த்தியைக் கேட்டு இவரிடத்துக்கு வருகிற வழக்கம் நீங்கா திருந்ததனால், அவர்களுக்கு உதவிசெய்து மகிழ்விக்க வேண்டுமென்கிற எண்ணமுள்ளவராகி, திருடியாகிலும் அவர்களை ஆதரிக்கவேண்டி, தாம் திருடர்வேடம்கொண்டு வழிநடப்போரை மறித்துப் பயமுறுத்தி, அவர்கள் பொருள்களையெல்லாம் கொள்ளையடித்துக் கொண்டுவந்து சாதுக்களுக்கு உதவிசெய்துகொண்டிருந்தார். இப்படி யிருக்குங்காலத்தில் ஒருநாள், இவர் தம் கையில் ஒரு காசு மில்லாதிருந்ததைக் கண்டு, “இன்றைக்கு வருஞ்சாதுக்களை உபசரிப்பதற்கு ஒரு காசாகிலும் இல்லையே, என்ன செய்வோம்” என்று மனம் வருந்தி, வில்லையும் அம்பையும் கைக்கொண்டு ஒரு காட்டிற்போய், “இவ்வழியாய் எவர் வருவாரோ” என்று நெடுநேரம் எதிர்பார்த்திருந்தும் ஒருவரும் அவ்வழியாய் வரக் காணாமையால் துக்கசாகரத்தில் மூழ்கியிருந்தார். அப்போது ஸ்ரீ லக்ஷ்மீநாதராகிய பகவானானவர் ஒரு வணிகன்போல வேஷம் பூண்டு, ஆடையாபரணாதிகளால் மிகுதியாய் அலங்கரிக்கப்பெற்ற தமது தேவியாரை ஒரு வண்டியி லேற்றிக்கொண்டு அவ்வழியாய் வந்தார். இவர் அவர்களைக் கண்டவுடனே அதிக சந்தோஷத்தோடு அவர்களுக்கெதிரே போய் அம்பு, வில் இவைகளைக் காட்டி, “உங்களுடைய ஆபரணாதிகளை யெல்லாம் கொடுத்துவிடுங்கள், இல்லாத பக்ஷத்தில் உங்களைக் கொல்லுவேன்” என்றார். அதைக் கேட்ட வணிகர், “ஐயா! எங்களைக் கொல்லவேண்டாம், எங்களுடைய ஆபரணங்கள் முழுதும் தருகிறோம்” என்று சொல்லி, ஆபரணங்க ளெல்லாவற்றையும் கழற்றிக்கொடுக்க, தாசரானவர் வாங்கிக்கொண்டு தம் வீட்டுக்கு வந்து, சாதுக்களுக்கு அந்நமிட்டு உபசரித்து மகிழ்ந்திருந்தார். இவர் இப்படியிருக்க, கமலவாசினியாகிய திருமகள் பகவானை நோக்கி, “உமது தாசன் நம்

முடைய ஆபரணங்களை யெல்லாம் பறித்துக்கொண்டுபோனானே, அவன்தான் உமக்கு ப்ரியமானவனும், யோக்யனும்போலக் காணப் படுகின்றது" என்று சொல்ல, பகவானனவர் நகைத்து, "அவன் நம்மைக் கொல்லாமல் விட்டுப்போன வுபகாரத்தைச் சற்றாகிலும் யோசிக்காமல் பேசுகிறாய், அவன் என் பேர் சொல்லாத தீயோரை வருத்தி அவர்களுடைய பொருளைப் பறித்து என் பேர் சொல்லுகிற சாதுக்களுக்கு உபகரிக்கிறானென்பதையும் நினைத்தாயில்லை" என்றுசொல்ல, பிராட்டியார், "அப்படியானால் அவன் கருத்தை யறிவோம்" என்றார். அதற்குப் பகவானும் சம்மதித்து, இருவரும் சாதுக்களுடைய வேஷங் கொண்டு தாசருடைய வீட்டுக்கு வந்து, சீதாராம் என்று சொல்ல, வீட்டுக்குள்ளே யிருந்த தாசர் விரைந்து ஓடிவந்து இவர்களை யழைத்துப்போய், ஆசநம் கொடுத்து, உபசாரத்தோடு அமுது படைத்து புஷ்பம் சந்தந தாம்பூலங்களையும் கொடுத்து, "நீங்கள் என்னை நாடிவர நான் என்ன தவஞ் செய்திருந்தேனோ" என்று புகழ்ந்து, "உங்களுக்கு எந்தப்பொருள் வேண்டுமோ அதைத்தருகிறேன் கேளுங்கள்" என்றார். அதைக் கேட்ட பகவானனவர், தாசரை நோக்கி, "ஓ சாதுபூஜா துரந்தரரே, நான் ஒரு வணிகன், இவள் என் மனைவி, நாங்களிருவரும் ஒருகாட்டில் போகும்போது அவ்விடத்தில் ஒரு திருடன் வந்து எங்களை அதட்டிப் பயமுறுத்தி, எங்களுடைய பொருள்களெல்லாவற்றையும் பறித்துக்கொண்டு போனான். அதனால் நாங்கள் இந்த வேஷம் பூண்டு வரும்படி நேரிட்டது" என்று சொன்னார். அதைக்கேட்ட தாசர், "உங்களுடைய பொருளைக்கொண்டுபோன திருடன் எங்கேயிருந்தாலும் அவனைக் கைப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு வருகிறேன்" என்று சொல்ல, பகவானனவர், தாம் முன் பூண்டிருந்த வணிகவேஷத்தைக்காட்டினார். அந்தவேஷத்தைக்கண்ட தாசரானவர், "ஐயோ, இவர்களுடைய பொருள்களைப் பறித்தவன் நான்தானே" என்று மனமஞ்சி நாணமடைந்து, அநுதாபப்பட்டு, "ஸ்ரீ வைகுண்டநாதனே இந்த வேஷங்கொண்டு இந்த நிலத்தின்மேல், வேதாந்தத்தில் விளங்குகிற தமது திருவடி தோயும்படி யெழுந்தருளினார்" என்று தெளிந்து, "தேவர் முநிவர் முதலியோரும் காண்பதற்கருமையான திருக்கோலத்தைக் காணப்பெற்றேன், ஆதலால் என் பாக்கியமே பாக்கியம் என்று, தமது கண்களில் ஆநந்த பாஷ்பமொழுக நின்று, "ஸ்வாமீ, தேவரீருடைய பொருளை அபஹரித்தவன் நானே, இந்தப் பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, பகவானும் இவரைக் கருணையோடு நோக்கி, தமது நிஜரூபத்

தையுங் காட்டி, தழுவிக்கொண்டு, "இன்றுமுதல் இந்தச் சோகக்ருத்யத்தை விட்டுவிடுவாயாக, உனக்கு அஷ்டமாசித்திகளும் கைகூடும், அவற்றைக்கொண்டு சாது பூஜையைக் குறைவற நடத்திக்கொண்டு சுகமா யிருக்கக்கடவை" என்று நியமித்துப் போய்விட்டார். பிறகு தாசரும் அப்படியே சாதுபூஜை முதலான கைங்கர்யங்களைச் செய்து கொண்டு இனிது வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே ஜம்பு தாசர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

ஹரிபாளதாசர் சரித்திரம் முற்றிற்று.

அறுபத்துநான்காவது

ஜம்புதாசர் சரித்திரம்.

முற்காலத்தில் ஒருரில் ஜம்புதாசர் என்கிற ஒரு குடியானவர் இருந்தார். அவர் ஸ்ரீ ஹரியின் திருவடியை இடையறுமல் தியானித்துக்கொண்டும், சாதுக்களைப் பூஜித்துக்கொண்டும் இருப்பதே தமக்குத் தொழிலாகக் கொண்டவர். இவர் பயிர்த்தொழில் செய்து அதனு லுண்டாகும் ப்ரயோஜநத்தைக்கொண்டு, தம் உறவினரையும், சாதுக்களையும் ஆதரித்து வருவார். இப்படி இவர் வாழுங்காலத்தில், ஒருநாளிரவில் இவருடைய உழுமாடுக ளிரண்டையும் திருடர் கொண்டு போனுர்கள். அதைப் பகவானுனவர் அறிந்து, "நம்மிடத்தில் அன்பு செய்பவனுகிய ஜம்புதாசன் எருதுக ளில்லாமல் வருந்துவானே" என்று திருவுள மிரங்கி, அப்பொழுதே இரண்டெருதுகளைப் படைத்து, தாசருடைய மாட்டுத் தொழுவத்திற் கட்டிப்போய்விட்டார். தாசரானவர், தமது வழக்கம்போல விடியற்காலத்தி லெழுந்து, தொழுவத்திலிருந்த எருதுகளைக் கொண்டுபோய்த் தமது கொல்லையை யுழுதுகொண் டிருக்கும்போது, நேற்றிரவில் எருதுகளைக் களவு செய்த கள்வர் கண்டு, "இது என்ன ஆச்சரியம்" என்று தம் வீட்டிற் போய்த் தாங்கள் களவுசெய்த மாடுக ளிருக்கக்கண்டு, "நல்லது இன்றும்போய் இவர் உழுகிற இந்த மாடுகளையும் கொண்டுபோவோம்" என்றெண்ணியிருந்து, அன்றிரவில் போய், இவர் தொழுவத்தி லிருந்த மாடுகளைக் கொண்டுபோய்விட்டார்கள். அன்றும் பகவானுனவர் நேற்றுச் செய்ததுபோலவே செய்தார். தாசரும் வழக்கம் போலவே எருதுகளைக் கொண்டுபோய் உழுதுகொண்டிருந்தார். சோரர்கள் கண்டு வியந்து அன்றிரவிலும் அப்படியே செய்ய, பகவானும் அப்படியே செய்து கொண்டு வர, இப்படி பலநாள் கழிந்த

பிறகு, அந்தத் திருடருக்கு இந்தத் தாசரிடத்தில் அன்பும் அச்சமும் உண்டாகி, இவரிடத்துக்கு வந்து, "உமது பெருமையை யறியாமல் உமது எருதுகளைத் தினந்தோறும் நாங்கள் திருடிக்கொண்டு போக, பகவான் படைத்து உமது தொழுவத்திற் கட்டிக்கொண்டேயிருந்தார். நீர் பகவானை ஆசிரயித்திருப்பவராதலால் உமக்கு யாதொரு குறையும் நேரிடாது. உமக்குத் தீங்கு செய்த எங்களுடைய பிழையைப் பொருத்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்து வணங்க, தாசரும் அவர்கள் ப்ரார்த்தனைக் கிரங்கி, பகவானைத் தோத்திரஞ் செய்து, "அடியேன் பொருட்டுத் தினந்தோறும் இப்படிப்பட்ட காரியம் செய்து வந்தீரே, இந்த விஷயத்தில் அடியேன் அபராதியானேன்" என்று மிகவும் அநுதபித்து நிற்க, பகவானுனவர் இவர் அநுதபிப்பதற் கிரங்கி இவருக் கெதிரே யெழுந்தருளி, இவரைத் தழுவிக்கொண்டு, இவர் வணக்கத்தை யேற்று அபயம் தந்துபோய் விட்டார். பிறகு தாசரானவர் அந்தத் திருடர்களுக்கு அருள் செய்தனுப்பிவிட்டு, ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே தனுசாடர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

ஜம்புதாசர் சரித்திரம் முற்றிற்று.

அறுபத்தைந்தாவது

தனுசாடர் சரித்திரம்.

பூர்வகாலத்தில், ஓரூரில், தனுசாடர் என்னும் பெயருள்ள குடியானவர் ஒருவரிருந்தார். அவர்க்கு ஏழுவயது நிறைந்த காலத்தில், ஹரிதாசர்களிடத்தில் அன்புடையவராய் அவர்களைப் பூஜிப்பதில் மிகவும் ஊக்கமுள்ளவரா யிருந்தார். இப்படி யிருக்குங்காலத்தில், சில ஹரிதாசர்கள் இவரிடத்தில் வந்து நீராடி, சாளக்கிராம பூஜை செய்வதைப் பார்த்து, அவர்களை வணங்கி, "நானும் இப்படிப் பூஜை செய்யும்படி க்ருபை செய்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, அந்த ஹரிதாசர்கள், "இவனோ சிறுவனுயிருக்கிறுன், இவன் சாளக்கிராம பூஜைசெய்யும் பருவமுள்ளவனல்ல" என்று, இவர் வயதுக்கேற்க, ஒரு சிறு கருங்கல்லை இவரிடத்தில் கொடுத்தார்கள். அதை இவர் மிகுந்த அன்போடு இருகையாலும் ஏற்று, நாள்தோறும் தாம் மாடு மேய்க்கப்போகிற வனத்தில் ஒருபக்கத்திலவைத்து, நீராடி மலர்களைக்கொண்டர்ச்சித்து, தாம் உண்ணும் கட்டமுதை

நிவேதித்து, "ஸ்ரீ கண்ணபிரானே, இதை அன்போடு அமுதுசெய்யக் கடவீர்" என்று ப்ரார்த்திக்க, பகவானுனவர் இவருடைய பக்திக்குத் திருவுளமுவந்து அமுதுசெய்தருளினர். சேஷத்தை இவரும் உண்டார். இப்படி நடந்துகொண்டிருக்கும்போது ஒருநாள் இவர் வயலில் விதை விதைக்கப்போகையில், சில ஹரிதாசர்கள் வந்துகூடி இவரைநோக்கி, "நீர் நாள்தோறும் ஹரிதாசர்களை உபசரித்து அந்நமிடுகிறீரென்று கேள்விப்பட்டு வந்தோம், எமது பசியைத்தணிக்க வேண்டும்" என்று சொல்லக்கேட்ட இந்தத்தாசர், "இவர்களுக்கு எவ்விதமாய்ப் பசியைத் தணிக்கலாம், இந்த விதையல்லாமல் வேறொன்றும் நம்மிடத்தில் இல்லையே" என்று மனதில் நினைத்து, அந்த விதையை அரிசியாக்கிச் சமைத்து அந்த ஹரிதாசரை யழைத்து உபசரித்துப் படைக்க, அவர்களும் உண்டு பசிதணிந்து, இவரைநோக்கி, "நீர் எமது பசியைத் தணித்தீராதலால், உமக்கு மேன்மேலும் ஸ்ரீ லக்ஷ்மீநாதருடைய அருள் உண்டாகக்கடவது" என்று ஆசீர்வதித்துப்போனார்கள். அவர்கள் போனபிறகு, அவ்வூரிலுள்ளவரெல்லாரும் "இல்லறத்தை நடத்தியல்லவோ பாரமார்த்திகமானவற்றைச் செய்யவேண்டும், இவர் விதைமுழுதும் ஹரிதாசருக்கு உபயோகித்துவிட்டாரே, இனி இவர் பயிரிடுவது எப்படி?" என்று இகழ்ந்து பேசிக்கொண்டார்கள். அவர்கள் இப்படிபேசிக்கொள்வதைக்கேட்ட தாசரானவர், "விதையை நிலத்தில் இடுவதைப்பார்க்கிலும் உயிர்களின் வயிற்றிலிடுவது புண்ணியம், அதிலும் ஹரிதாசர் வயிற்றிலிடுவது சிறந்த புண்ணியம்" என்று துணிந்து, ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டும், முன்பு தாம் செய்துகொண்டிருந்த பூஜையையும் விடாமல் செய்துகொண்டும் இருந்தார். இதையறிந்த ஸ்ரீ பகவானுனவர் இவரது விளைவு நிலத்தில் விதைவிதைத்து முளைத்து செழிக்கச்செய்தார். இவரையிகழ்ந்த யாவரும் இவர் பயிர் செழித்திருக்கக்கண்டு, "இவர் ஹரிபக்தராதலால் இவர்க்கு அந்தப்பகவானே உதவிசெய்ததாகத் தோன்றுகின்றது" என்று பேசிக்கொண்டார்கள். இவரும் அந்தப்பயிரைநோக்கி, "இது இறைவனது திருவருளேயன்றி வேறல்ல" என்று மனத்திற்கொண்டு பகவானைத் தோத்திரம்பண்ணி, விளைந்திருந்த கோதுமையைக் கொண்டுவந்து, ஹரிதாசர் விஷயத்தில் உபயோகப்படுத்தி, பகவானை யிடைவிடாமல் ஸ்மரித்துக்கொண்டு இனிது வாழ்ந்திருந்தார் என்றுசொல்லி, மேலே சுகாநந்தர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

தனுசாடர் சரித்திரம் முற்றிற்று.

அறுபத்தாறாவது

சுகாநந்தர் சரித்திரம்.

முன்னாளில், ஓரூரில் சுகாநந்தர் என்றொருவ ரிருந்தார். இவர், திருமாலடியாராகவும், சாதுக்களைக்கண்டால் அன்போடு உபசரித்து அமுதளிப்பவராகவும் இருந்தார். இவர் மனைவியாராகிய சுரசுரீ என்பவர் பதிவிரதா சிரோமணியாயும், சாதுபக்தியிற் சிறந்தவராயும், அவர்களுக்கு வேண்டுமவற்றையெல்லாம் கொடுத்து உபசரிப்பவராயும் இருந்தார். இந்த இருவரும் மனவொற்றுமை யுள்ளவராய் இல்லறத்தை நடத்திவருங்காலத்தில், சில துஷ்டர்கள் இவரைச் சோதிக்க விரும்பி, கடையில் இலட்டுகவர்க்கத்தை வாங்கிக்கொண்டுவந்து "இது பகவத் ப்ரஸாதம், இதனை உண்ணக்கடவீர்" என்று இவர் கையிற்கொடுக்க, இவர் களங்கமில்லாமல் வாங்கி யன்போடுண்டார்; அப்போது அந்தத் துஷ்டர்கள் இவரை நோக்கி, "கடையில் வாங்கி வந்ததை உண்டீரே, நீர் வேதியராவீரோ" என்று பரிஹஸித்து நகைத்தார்கள்! அன்றியும் "நீர் பிராயச்சித்தம் செய்துகொள்ளாத பக்ஷத்தில் உம்மை ஜாதியார் நீக்கிவிடுவார்கள்" என்று சொன்னார்கள். இதைக்கேட்ட சுகாநந்தர் தாம் ஒரு நாழிகைநேரம்மென்று விழுங்கின இலட்டுக வகையையெல்லாம் பழையபடியே செய்து வாயிலிருந்தெடுத்துக் கொடுக்க, அந்தத் துஷ்டர்கள் பயந்து, இவர் திருவடியை வணங்கி, "உமக்குப் பகவத்ஸஹாய மிருப்பதனால் உமக்கு எல்லாக்காரியமும் கைகூடுகின்றது; அடியேங்கள் செய்தபிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்து விடைபெற்றுப் போய்விட்டார்கள். அப்பால் சிலநாள் கழிந்தபிறகு, சுகாநந்தர் தமது மனைவியாராகிய சுரசுரீ யென்பவரை நோக்கி, "நம்மிடத்திற்கு வருகிற சாதுக்களைச் சகல வுபசாரங்களோடு அமுதளித்து மகிழ்வித்துக் கொண்டிருக்கக்கடவாய்" என்று சொல்லிவிட்டு யாத்திரை போனார். அந்தச்சமயத்தில் ஒருவன் சாதுவேஷம் பூண்டுவந்தான்; அவனைக்கண்ட சுரசுரீயானவர் மிகவும் அன்போடு பூஜித்துக்கொண்டிருக்கும்போது, இவரது சௌந்தரியத்தினால் மதிமயங்கி, "பெண்ணே, உனது ரூபசௌந்தர்ய சாகரத்தில் மூழ்கிவிட்டேன், என்னைக் கரையேற்றி, போகதானங் கொடுக்கவேண்டும்" என்றான். அதற்குச் சுரசுரீயார் சற்றும் மனங்கலங்காமல், "சுவாமீ! அப்படியே யாகட்டும், முன்னே அமுதுசெய்தருளும்" என்று ப்ரார்த்தித்து அமுது பரிமாற, அவன் இனிதாக வுண்டான்; உண்டபிறகு, அவன் "இன்று

நமது எண்ணம் பலித்தது" என்று பொழுதுபோகிற வரைக்கும் அவ்விடத்திலேயே காத்திருந்தான். சுரசுரியென்பவரும் அஸ்தமித்து ஒருஜாமநேரம் கழிந்தபிறகு, புஷ்பசயநம் அமைத்து அதின் மேல் தாமிருந்துகொண்டு, அந்தச் சாதுவேஷம் பூண்டுவந்த துஷ்டனைப் பள்ளியறைக்குள்ளே வரவழைக்க, அவனும் மிகவும் ஆவலோடு பள்ளியறைக்குள்ளே புகுந்து, சயநத்தின்மேல் ஒரு புலியிருப்பதாகத் தன் கண்ணுக்குத் தோன்றினதனால் மிகவும் நடுநடுங்கி, வெளியே புறப்பட்டு ஓடி, "பொன்னாரமென்று நினைத்தெடுத்தது பாம்பாய் முடிந்த கதைபோலவும், அமுதமென்று நினைத்தருந்தினது நஞ்சாய் முடிந்த கதைபோலவும், ஒரு பெண்ணென்று நாம் நினைத்தது புலியாய் முடிந்ததே" என்று ஏங்குகின்றான். அப்போது சயநத்தின்மேலிருந்த புலியானது இவனை உறுமிப்பார்க்க, இவன் மிகவும் அஞ்சி, "தாயே! நான் செய்த அபராதத்தை க்ஷமித்தருள வேண்டும்" என்று வணங்கி, தூரமாகப்போய் ஓரிடத்தில் நித்திரை செய்தான். மறுநாள் உதயத்தில் சுரசுரியார் சாணந்தெளிக்க வெளியேவர, இவன் தூரத்தேயிருந்து பார்த்துக் கிட்டிவந்து வணங்கித் தோத்திரஞ்செய்து நிற்க, சுரசுரியார் மனமிரங்கி, அவனைக் கருணை செய்து தமது ஊழியக்காரனாக வைத்துக்கொள்ள, அவனும் அவர் மனதுக்கிணங்க ஊழியஞ்செய்துகொண்டு நான்கு மாசகாலமிருந்தான். பிறகு யாத்திரைபோயிருந்த சுகாநந்தர் வந்துசேர்ந்தார். சேர்ந்தவுடனே ஊழியக்காரன் இவரைக் கண்டு வணங்கித் தான் செய்த அபராதத்தை விண்ணப்பம்பண்ணக்கேட்ட சுகாநந்தர், அவனுக்கு அபயங் கொடுத்து, அநுக்ரஹம் செய்து, அவனை ஹரிதாசனாக்கி, தாமும் ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே மாதவதாசர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

சுகாநந்தர் சரித்திரம் முற்றிற்று.

அறுபத்தேழாவது

மாதவதாசர் சரித்திரம்.

. முன்னாளில் வேதசாஸ்திர நிபுணராகவும், இல்வாழ்க்கையிலிருந்தும் பிரபஞ்சப் பற்றில்லாத நிர்மல சித்தராகவும், மாதவதாசர் என்னும் பெயருள்ளவராகவும் ஒருவரிருந்தார். இவர், தமது மனைவியார் பரமபத மடைந்தவுடனே "நமக்கு ஸம்ஸாரபந்தம்

அற்றது" என்று தமது வீட்டிலிருந்த தநதாநிய சம்பத்துக்க ளெல்லாவற்றையும் வேதியர்க்குத் தத்தஞ் செய்துவிட்டு ஸ்ரீஜகந் நாத யாத்திரைபோனர். போய், சமுத்திரத்தில் ஸ்நாநம்செய்து, அங்கெழுந்தருளியிருக்கிற ஸ்ரீஜகந்நாதனைக் கண்டு, வணங்கித் தோத் திரம்பண்ணி, "ஸ்வாமீ! அடியேனுக்குத் துக்கரூபமாயிருந்த சம்ஸார பந்தம் நீங்கிவிட்டது. அடியேனுக்குத் தாய்தந்தை குரு தெய்வம் உறவினர் ஆகிய எல்லாம் தேவரீரேயென்று நம்பியிருக்கிறேன், அடியேனை ரக்ஷித்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்து நின்றார். இவரது நிலையை அர்ச்சகன்கண்டு, "ஏன் வெறுங்கையோடு வந்து விழுந்து விழுந்து கும்பிடுகிறாய், வெளியேபோ" என்று இவரைப் பிடித்துத் தள்ளிவிட்டான். இவர் மனங்கலங்கி ஒரு தனியிடத்தி லிருந்துகொண்டு, "பகவானே! உனது சகுணரூபத்தைக் காண விரும்பினேன் சேவை சாதித்தருளவேண்டும்" என்று மூன்றுநாள் அந்நபாநங்களை வெறுத்து ஏகாக்ரசித்தராயிருந்தார்; அப்போது பகவானுக்கு இவர்மீது கருணையுண்டாகித் தமது தேவியாராகிய ருக்மிணீ பிராட்டியாரை நோக்கி, "இன்று நீ சகுணரூபங்கொண்டு மாதவதாசனுக் கெதிரேபோய், அவனுக்கு நல்லவுணவு கொடுக்க வேண்டும்" என்று நியமிக்க, அப்படியே ருக்மிணீ பிராட்டியாரும் தேவாமிர்தத்துக்குச் சமாநமான திவ்யாந்நத்தை ஒரு பொற்கிண் ணத்தி லேந்திக்கொண்டுவந்து, பகவத்தியாநத்திலிருந்த தாசரை யெழுப்பி, அமுதைக்கொடுக்க, தாசர், பிராட்டியாருடைய வடிவழ கைக்கண்டு, அதிசயித்து, "தாயே! நீர் யார்?" என்று கேட்க, பிரா ட்டியார் தாசரை நோக்கி, "நீ யாரைத் தியாநித்துக்கொண்டிருக் கிறாயோ, அந்தப் பகவானுடைய திருமார்பி லமர்ந்திருக்கிறவள் நான். என் பேர் ருக்மிணீயென்று சொல்லுவார்கள், நீ பசித்திருக் கிறாயென்று உனக்கு உணவு தரும்பொருட்டு என்னை யனுப்பினர். இன்னும் சில நாளுக்குள்ளே அவருடைய சகுணரூபத்தை உனக் குச் சேவை சாதித்தருளுவார். நீ இந்த வுணவை விரைவில் உண் ணக்கடவாய்" என்று சொல்ல, தாசர் மிகவும் அன்போடு அந்த வுணவை வாங்கியுண்டார். உண்டபிறகு பிராட்டியாரே கைகால் பூச வும் நீர் தந்தார். பிறகு தாம் உணவுகொண்டுவந்த பொற்றட்டை யும் ரத்நமயமான அகப்பையையும் அங்கேயே வைத்துவிட்டுப் போய்க் கோயிலை யடைந்தார். தாசர் அவைகளைச் சுத்தம்செய்து தம்மிடத்தில் வைத்துக்கொண்டு நித்திரை செய்தார். மறுநாள் சூரியோதய காலத்தில் கோயிற் பரிசாரகர்களாகிய அர்ச்சகர் முதலா

னோர் வந்து கதவைத் திறந்து ஹாரதி செய்யும்போது, சொர்ணத் தட்டு இல்லாதிருப்பதைக் கண்டு, "யாரோ வந்து களவு செய்தாற் போல் தோன்றுகின்றதே" என்று ஆலோசித்துக்கொண்டு வெளி யில் வந்து, உறங்குவோராகிய தாசரிடத்தில் இருக்கக்கண்டு இவன் யாரோ, நாலுநாளாக, கொக்குப்போலக் கண்மூடித் தியாநித்துக் கொண்டிருந்தான். இவன் அப்படிப் பொய் தியாநம் செய்திருந்தது இதைத் திருடுதற்கேயாம்" என்று தீர்மானித்து, இவரைக் கட்டிக் கொண்டு போய் ஒரு அறைபி லடைத்துவைத்தார்கள்.

அன்றிரவில் ஸ்ரீ ஜகந்நாத ஸ்வாமியானவர் அர்ச்சகருடைய கனவில் வந்து, "அந்தத் தாசன் என்னைக்குறித்து மூன்றுநாள் உப வாசமா யிருந்ததனால், ருக்மணியை நோக்கி, 'அவனது பசியைத் தணித்து வா' என்று சொல்லி யனுப்பினேன்; அவள் உணவேந்திக் கொண்டுபோன பொற்றட்டை அவ்விடத்தில் வைத்து மறந்து வந் தாள். இப்படியிருக்க, அவனையேன் வீணாக வருத்துகிறீர்கள்" என்று சொல்லி மறைந்தார். உடனே அர்ச்சகர் கண்விழித்தெழுந்து, "ஹரிதாஸரை வீணாய் வருத்தினோம்" என்று அநுதபித்து, தாச ரைக் கட்டவிழ்த்து விட்டு, திருவடியை வணங்கி, "அறியாமற் செய்த எமது பிழையைப் பொருத்தருள்க" என்று ப்ரார்த்தித்து, பகவத் ஸந்நிதியிற் கொண்டுவந்து பகவானை ஆலிங்கநஞ் செய்வித் தார்கள். அதின்பிறகு பகவத் பிரஸாதமுங் கொடுத்து உபசரித்தார் கள். தாசரும் உண்டு மகிழ்ந்தார். இப்படி நாள்தோறும் செய்து வருங் காலத்தில், ஒருநாளிரவில் அர்ச்சகர்கள் கோயில் வேலைகள் யாவும் முடிந்தவுடனே கோயில் வாசற்கதவை மூடிவிட்டுப் போன பிறகு, வெளியிலிருந்த தாசர் ஸ்ரீஹரிபாதத் தியாநத்தோடு நித்திரை செய்யும்போது, இவரது உடம்பு குளிரினால் நடுங்கக்கண்ட பகவா னானவர், தமது மேற்போர்வையைக் கொண்டுவந்து இவர் மேல் போர்த்துவிட்டுப் போனார். பிறகு அருணோதயத்தில் அர்ச்சகர் வந்து கதவைத் திறந்து பகவானது மேற்போர்வை யில்லாதிருக்கக் கண்டு மனங்கலங்கி, வெளியே விரைந்து வந்து, அந்தப் போர்வை யானது தாசர்மீதிருக்கப் பார்த்து, "ஸ்ரீ கண்ணபிரான் இந்த தாசர் மீது மிகுந்த கருணை வைத்திருக்கிறார்" என்று இவரை வணங்கித் துதித்துப் போய்விட்டார்கள். பிறகு அந்த வூருக்கு அரசனாயிருப் பவன் இவர் பெருமையைக் கேள்விப்பட்டு, இவரிடம் வந்து நமஸ் கரித்துத் தோத்திரஞ் செய்தான். அதைக்கண்ட தாசர், "இவ்வளவு பெருமை நமக்கு வேண்டாம்" என்று அவ்விடம்விட்டுப் புறப்

பட்டு வடமதுரைக்குப் போய், ஸ்ரீகண்ணபிரானைச் சேவித்துநின்
றார். அப்போது அங்குள்ளார், "இவர் கர்ப்பகிரகத்தில் பகவானுக்
கருகே வரத்தகுமோ" என்று இவரைப் பிடித்து வெளியே தள்ளி
விட்டார்கள். பிறகு தாசர் அங்கே ஒரு தனிமையான இடத்தில்
பகவானைத் தியானித்துக்கொண் டிருக்கும்போது, ஒருகனவான்,
போஜனத்துக்குரிய பொருள்க ளெல்லாங் கொண்டுவந்து இவரிடத்
தில் கொடுத்துச் "சமைத்துண்ணக்கடவீர்" என்று ப்ரார்த்தித்தான்.
தாசர் அப்படியே பாகஞ்செய்து வைத்துக்கொண்டு பகவானை
ப்ரார்த்தித்தார். உடனே பகவானனவர் இவர்க்கு ப்ரத்யக்ஷமாகி
நின்றார். நிற்கவே தாசரானவர் வணங்கக்கண்ட பகவானனவர்
இவரை யெடுத்து மார்போடணைத்துத் தழுவிக்கொண்டு, "நீ யென்
ப்ராண ஸ்நேஹன், உன் பெருமையை யறியாத அர்ச்சகர்கள் உன்
னைப்பிடித்து வெளியே தள்ளிவிட்டார்கள், அதனால் உன்னைத்
தேடிவந்தேன்" என்று கண்ணீர்விட்டார். அதைக் கண்ட தாசரும்
கண்ணீர்விட்டார். பிறகு பகவானும் தாசரும் அமுதுசெய்து முடி
ந்தபிறகு பகவானனவர் கோயிலையடைந்திருந்தார். பிறகு கோயிலில்
நாள்தோறும் பூஜிப்பவர்கள் வந்து நிவேதநஞ்செய்து எதிரே நிற்
கக்கண்ட பகவானனவர், அவர்களை நோக்கி, "நான் இப்போதுதான்
மாதவதாசரோடுகூடி யுண்டுவந்தேன், நீர் கொண்டுவந்த நிவேத
னம் வேண்டாம்; எனக்குப் பசியில்லை, என் அன்பராகிய மாதவ
தாசரை வெளியில் விட்டபோது அவர் கோபங்கொண்டு ஓரிடத்தி
லிருக்கிறார். அவரைச் சமாதாநஞ்செய்து அழைத்துவந்தால் தான்
நான் உண்பேன், இல்லாவிடில் உண்ணமாட்டேன்" என்று அசரீரி
யாய்ச் சொல்ல, அர்ச்சகர்கள் அப்படியேபோய் மாதவதாசரைச்
சமாதாநஞ்செய்து அழைத்து வந்தார்கள். வந்தவர் அந்த வடமது
ரையில் நான்குமாசகாலம் ஹரிபஜனை செய்துகொண்டிருந்து பிறகு
கோகுல ப்ருந்தாவனத்துக்குப் போய், பகவானைச் சேவித்து அங்
கிருந்து புறப்பட்டு ஸ்ரீஜகந்நாதத்துக்குப் போய், ஸ்ரீகண்ணபிரானைச்
சேவித்துக்கொண்டு சிலநாள் அங்கே தங்கியிருந்தார். இருக்கும்
போது இவர்க்கு அதிசார நோயுண்டானதனால் மிகவும் அசக்தராய்
நடக்கவும் வலியில்லாமல் மெல்ல நடந்து போய்க் கடற்கரையை
யடைந்து; அடிக்கடி யெழுந்து போய்ச் சௌசம் செய்யக்கூடாத
இவரது நிலைமையை ஸ்ரீகண்ணபிரான் கண்டு, சகுணரூபங் கொண்டு
வந்து, கலசத்தில் நீர் மொண்டு கொண்டுவந்து கொடுப்பதையும்,
வஸ்திரம் தோய்த்து உலரவைத்துக் கொடுப்பதையும், மற்றுமுள்ள

வேலைகள் செய்வதையும். தாசர் பார்த்து, "ஓ பகவானே, தேவரீர் அடியேனை யொருபொருளா யெண்ணி வந்து அடியேனுக்கு ஊழியம் செய்யத் தகுமோ, இந்த நோயைத் தீர்க்க உமக்குச் சக்தியில்லையோ" என்று சொல்ல, பகவானுனவர், "தாசரே, இந்த உடம்பெடுத்ததனல் ப்ராரப்த கர்மபலத்தை அநுபவித்தே தொலைக்க வேண்டும், இந்தக் குடல்நோயைத் தீர்க்கும் வல்லமை யெனக்கில்லாமற்போகவில்லை, அப்படி யென்னுல் இந்த நோய் தீருமானுல், இந்தப் பிராரப்த கர்மபலத்தை யநுபவிக்கும்பொருட்டு இனிமேலும் ஜந்மம் எடுக்கவேண்டிவரும், இன்னும் நாலுநாளில் இந்த நோய் நீங்கி ஆரோக்கியத்தை யடைவீர் ஆதலால் இந்த நான்குநாள் மாத்திரம் பொறுத்துக்கொண்டிரும்" என்று சொல்ல, அப்படியே தாசர், நோயைச் சஹித்திருந்தார். நோயும் நான்குநாளில் தீர்ந்தது. தாசரும் ஆரோக்கியமடைந்து சிலநாள் கழிந்த பிறகு, தர்க்க சாஸ்திரத்தில் மிகவும் சமர்த்தனுன வொருவன் தாசரிடத்துக்கு வந்து, "நீர் மஹா வேதாந்தி யாகையால், உம்மோடு வாதுசெய்ய வேண்டுமென்றெண்ணிவந்தேன்" என்று சொல்ல, தாசர், "அப்படியே யாகட்டும், இந்தச் சமயம் நான் கொல்லைக்குப் போய்வருமளவும் இங்கேயிரும்" என்று சொல்லிக் கடற்கருகேபோய் நின்று, "ஓ பகவானே, வாதுசெய்யுங் காலத்தில் அந்தத் தர்க்க சாஸ்திரிக்கு அவமானம் நேரிட்டால் அதனுல் எனக்கு உண்டாகும் ப்ரயோஜநம் யாது? இதற்கு என்செய்வேன்?" என்றும், "இந்தக் கவலையை நீயே தீர்க்க வேண்டும்" என்றும் ப்ரார்த்திக்க, பகவானுனவர் தாசரூபங் கொண்டுபோய்த் தர்க்கஞ்செய்து, வந்த தார்க்கிகனைவென்று மறைந்து போனுர். பிறகு, தாசர் அவனிடத்திற்கு வரக்கண்டு, "நான் இவ்வுலகத்தில் எப்படிப்பட்ட மஹாபண்டிதரையும் வென்றுவந்தேன். அப்படிப்பட்ட என்னை ஒரு வார்த்தையால் வென்றுவிட்டீரே" என்று புகழ்ந்து சொல்ல, தாசர், "நான் உம்மை வெல்லவில்லை, உம்மை வாதுசெய்து வென்றவர், உலகமுண்ட பெருவாயராகிய ஸ்ரீ கண்ணபிரானே" என்றுர். பிறகு பண்டிதன் தாசருடைய திருவடியில் வீழ்ந்து வணங்கி, "அடியேனுக்கு அநுக்கிரகம் செய்தருள வேண்டும்" என்று ப்ரார்த்திக்க, தாசரும் அவன் விருப்பினபடியே அநுக்கிரகஞ்செய்து அவனை ஹரிபக்தனுக்கி, தாமும் ஹரிபஜனை செய்துகொண்டு அவனேடு கூடி இனிது வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே ஹரிவியாசர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினுர்.

மாதவதாசர் சரித்திரம் முற்றிற்று.

அறுபத்தெட்டாவது

ஹரிவியாசர் சரித்திரம்.

வடமதுரையில் வாழ்பவரும், பகவத் பக்தியிற் சிறந்தவரும், சதுர்வேத பாரகரும், அன்பு அருள் முதலிய ஆத்மகுண பூர்த்தி யுள்ளவரும் ஆகிய ஹரிவியாசர் என்பவர் ஒருவரிருந்தார். இவர் தமது சிடர்களோடும் ஸ்ரீ ஜகந்நாத யாத்திரை போகும்போது, ஒரு மநோஹரமான பூஞ்சோலையைக் கண்டு அதிலிறங்கினர். அங் குள்ள ஒரு காளிகோயிலில் ஒருவன் ஒரு ஆட்டைக் கொண்டுவந்து பலியிட்டான். அதைக் கண்ட ஹரிவியாசர் "இப்படி உயிர்க்கொலை செய்யத்தகுந்த இடத்தில் நாமிருக்கத் தகாது" என்று தமது சீட ரோடும் புறப்பட்டு, மிகுந்த துக்கத்துடனே, "இந்தத் தேசத்தார் மிகவும் நிர்மையுள்ளவர்கள், இந்தச் சோலையில் நாம் இறங்கினதும் பாவம்" என்று சொல்லிக்கொண்டு பசியோடு போகும்போது, காளியானவள் மனம்வருந்தி, "ஸ்ரீ ஹரிபக்தரானவர் இவ்விடம் விட்டு நீங்கிப் பசியோடு போகிறாரே, அந்தப்பாவம் என்னைச்சே ருமே" என்று விரைந்தோடி அவருக் கெதிரேபோய் வணங்கி, அவரைப் போகவொட்டாமல் நிறுத்தி, "ஸ்வாமீ, தேவரீர் என்னி டத்தில்வந்து பசியோடு போவீரானல் எனது தெய்வத்தன்மை நீங்கும்; ஆதலால் கோயிலில்வந்து அமுதுசெய்து போகவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, தாசர் அந்தக் காளியை நோக்கி, "நீ கொலை செய்வதை விடுவாயானல், உன்னிடத்துக்கு வருவேன்" என்றார். அதுகேட்ட காளியானவள் "அப்படியே யாகட்டும்" என்று உறுதி மொழி சொல்லியழைக்க, தாசரும் சம்மதித்துவந்தார்; வந்தவுடனே காளியானவள் தன் கோயிலைச் சுத்தஞ்செய்ய ஏற்பாடுசெய்து, சமையல் செய்வித்துத் தாசருக்கு ஊட்டி மகிழ்வித்தாள். தாசரும் கண்டு மகிழ்ந்திருந்தார். அன்றிரவில் காளியானவள் அவ்வூர்க்கு அரசனு யிருப்பவனுடைய கனவிற்போய், "இனி இவ்வூரார் என் கோயிலில் ஆடு முதலியவற்றைப் பலியிடாதபடி கட்டளையிட்டு உயிர்வதையைப் பரிசுத்தமாய் நீக்கவேண்டும், அப்படி நீ செய்யாத பக்ஷத்தில் உனக்கும் இவ்வூராருக்கும் அதிக துன்பத்தை யுண்டாக் குவேன்" என்றாள். அரசன் உடனே விழித்து, தான்கண்ட கன வின் செய்தியை மந்திரிக்குத் தெரிவித்து, அவன் மூலமாக அந்த ஊராருக்கெல்லாம் "கொலைப்பாவத்தைச் செய்தவர்கள் தண்டிக்கப்

படுவார்கள்" என்கிற ஏற்பாட்டையும் தெரிவித்தபிறகு, காளிகோயிலுக்குப் போய், அங்கே தங்கியிருக்கிற தாசரை வணங்கி, "அடியேனுக்கு அநுக்ரஹம் செய்தருளவேண்டும் என்று ப்ரார்த்திக்க, தாசரும் அப்படியே அநுக்ரஹம்செய்து, "இனிமேல் உன்னூரில் ஜீவவதை நடக்கக்கூடாது" என்று வற்புறுத்தி, ஹரிபஜனை செய்யும்படி நியமித்தருளினார். அப்படியே அரசனும் ஒத்துக்கொண்டு தாசரைத் தன்னூருக் கழைத்துக்கொண்டுபோய் மிகவும் அன்புடனே பூஜித்துக்கொண்டிருக்க, அவ்விடத்தில் தாசர் ஆறுமாத காலம் வரைக்கும் தங்கியிருந்தார். அப்போது அரசன் அவ்வூரில் பஜனை மடம் ஒன்று கட்டுவித்து, யோகீஸ்வரர் முதலானோர்வந்து தங்கும்படிசெய்து அவ்வவர்களுடைய சீடரும் தங்கும்படி செய்தான். பிறகு தாசர் ஸ்ரீ ஜகந்நாத க்ஷேத்திரத்துக்குப் போய்ப் பெருமானை வணங்க, பகவான் இவரைத் தழுவிக்கொண்டு அபயம் கொடுத்து மறைந்தருளினர். உடனே ஹரிவியாசர் புறப்பட்டு வடமதுரைக்குப் போய், ஸ்ரீ கண்ணபிரானைப் பஜித்துக்கொண்டு இனிது வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே திரிபுரதாசர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

ஹரிவியாசர் சரித்திரம் முற்றிற்று.

அறுபத்தோன்பதாவது

திரிபுரதாசர் சரித்திரம்.

மதுராநகரத்துக்கு வேந்தனாயிருப்பவனுக்கு ஒரு மதிமந்திரியிருந்தார். அவர்பேர் திரிபுரதாசர் என்று சொல்லுவார்கள். அவர் அந்த மந்திரித்தொழிலை வெகுநீதியாய் நடத்திவந்து, சிலநாள் கழிந்தவுடனே அவருக்குப் பிரபஞ்சத்தில் வெறுப்புண்டாகி, தமக்குள்ள தநதாநியாதிகளெல்லாவற்றையும் ஊரார் கொள்ளைகொள்ளும்படி விட்டுத் தமது தேவியாரோடு ஸ்ரீ பிருந்தாவநத்துக்குப் போய் அங்கே யெழுந்தருளியிருக்கிற ஸ்ரீ கண்ணபிரானைக் கண்டு வணங்கி, அந்த க்ஷேத்ரத்திலேயே யிருந்தால் நலமென்றெண்ணிச் சிலகாலம் அங்கேயிருந்தார். அப்படியிருக்குங்காலத்தில் ஒருநாள் தமது தேவியாரைநோக்கி, பெண்ணே, "ஸ்ரீ கண்ணபிரானுக்கு ஒரு திருப்பரிவட்டம் சமர்ப்பிக்க எண்ணினேன்" என்றார். அதுகேட்ட தேவியார், "நம்மிடத்தில் அற்பமும் பொருளில்லையே; அயலார் கொடுக்கும் தண்டுல தாநியாதிகளைக்கொண்டு ஜீவிக்கிறோமே; இப்

படியிருக்கிற நமக்கு இந்த எண்ணம் ஏன்? பகவானுக்கு என்ன குறை? நீர் இந்த எண்ணங்கொண்டது தகுதியல்ல" என்றார். அது கேட்ட தாசர், "பெண்ணே! பகவானுக்கு ஒரு குறையுமில்லையாயினும் என் மனத்துக்கிசைந்தபடி, என் சக்திக்கேற்ற வுபசாரஞ்செய்தே தீரவேண்டும்" என்றுசொல்லி, தமது வீட்டிலிருந்த மசிக்கூட்டையெடுத்துக் கொண்டுபோய் விற்று ஒரு ரூபாய்பெற்று, அந்தத் தொகைக்கு ஒரு வஸ்திரத்தை வாங்கிக்கொண்டு கோயிலிற்போய், "இந்தவஸ்திரத்தைப் பகவானுக்குச்சாத்தக்கடவீர்" என்றுசொல்லி அர்ச்சகன் கையிற்கொடுக்க, அர்ச்சகன் அதைவாங்கி "இந்தவஸ்திரத்தைப் பகவானுக்குச் சமர்ப்பிக்கச்சொல்லி யென்கையிற் கொடுத்தாயே; உனக்குச்சிறிதும் நாணமில்லையோ! சிறந்த பீதாம்பரதாரிக்கு இது தகுமோ" என்றுசொல்ல, தாசர் அந்த அர்ச்சகனைநோக்கி "நீரே பகவானுக்குத் தெரிவித்து இதை அங்கீகரிக்கும்படி செய்யவேண்டும்" என்று ப்ராத்தித்துப் போய்விட்டார். அந்த அர்ச்சகன் அந்த வஸ்திரத்தைக் கீழேவிரித்து அதின்மீது படுத்துறங்கினன். அப்போது பகவானனவர் அந்த அர்ச்சகன் முதலானோர்க்குத் தமது அன்பர் பெருமையைத் தெரிவிக்கும் பொருட்டு, தமது திருமேனி குளிரினல் நடுங்கும்படி செய்தார். அந்த நடுக்கத்தைத் தீர்க்கும்பொருட்டுப் பலவகையான வஸ்திரங்களைப் போர்த்தும் நடுக்கம் நீங்கவில்லை. தீச்சட்டி வைத்தார்கள்; அதினாலும் குளிர்நீங்கவில்லை. இவர்கள் இப்படி குளிரைநீக்க முயன்றுகொண்டிருக்கும்போது, பகவானனவர், அந்த அர்ச்சகன் கனவிலே யெழுந்தருளி, "என் அன்பன் கொடுத்த வஸ்திரத்தை என்மேல் போர்த்தக்கடவாய்" என்று நியமிக்க, அவனெழுந்து, கனவின்செய்தியைச் சொல்லக்கேட்டவர் யாவரும்வியந்து "அப்படியே செய்வோம்" என்று அர்ச்சகன் விரித்துப் படுத்திருந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, பகவானுக்குச் சமர்ப்பித்தவுடனே குளிர்நீங்கின கண்ணபிரான் முன்போலப் பிரகாசித்து நின்றார். இந்தச் செய்தியைக் கண்டவர் யாவரும், "இந்த வஸ்திரத்தைச் சமர்ப்பித்தவரே பகவானுக்கு மெய்யன்பர்" என்று வியந்து கொண்டாடினதுமன்றி, தாசரிடத்திற்கு வந்து அவரை வணங்கி, நடந்த செய்தியையுஞ் சொல்லக்கேட்ட தாசரும் கோயிலுக்குள்ளேபோய், பகவானே, "அடியேன் சமர்ப்பித்த வஸ்திரத்தைப் பீதாம்பரத்தினும் சிறந்ததாகத் திருவுளம்பற்றினீரே; உமது பெருங்கருணையை யென்னென்று சொல்லிப் புகழப்போகிறேன்" என்று ஆநந்தக்கண்ணீர் பெருகவிழுந்து வணங்கினர். பது

வானவர் இவருக்கு ப்ரத்யக்ஷமாகி அபயம் தந்து மறைந்தார். தாசரும் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டு அவ்விடத்தில் வாழ்ந்திருந்தார் என்றுசொல்லி மேலே, லாடுபாவா வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

திரிபுரதாசர் சரித்திரம் முற்றிற்று.

எழுபதாவது

லாடுபாவா சரித்திரம்.

பலவளங்களும் நிறைந்த ஜோத்பூர் என்னும் ஊரில் லாடுபாவா என்றொருவர் இருந்தார். இவர் ஹரிபக்தியிற் சிறந்தவராகவும், எல்லாவுயிர்களையும் தம்முயிர்போலப் பாவிப்பவராகவும், ப்ரபஞ்சத்தில் விரக்தராகவும் இருந்தார். இவர் தீர்த்தயாத்திரைசெய்ய விரும்பிப் புறப்பட்டு, வழியிலுள்ள அநேகமான க்ஷேத்ரங்களையும் கண்டு சேவித்தும், பல ஹரிதாசரைக்கண்டு வணங்கியும் மனமகிழ்ந்து, காவூர் என்னும் தேசத்தையடைந்து, அங்குள்ளார் யாவரும் சற்றும் இரக்கமில்லாதவராகவும், சத்தியை யாராதிப்பவராகவும், அந்தச்சத்திக்கு நரபலிமுதலியவற்றைச் செய்பவராகவும் இருப்பதை யறியாமல் அவ்வூரில் பிரவேசித்தார். அவ்வூரார் அன்றைக்கு நரபலிக்கு ஆள் அகப்படாமல் தேடிக்கொண்டிருந்தா ராகையால் இவரைக் கண்டவுடனே பிடித்துக் கட்டிக்கொண்டுபோய்க் காளிகோயிலில் தேவிக்கெதிரே நிறுத்தி, மூன்றுபேர் அசையாமற் பிடித்துக்கொண்டு நிற்க, ஒருவன் வாளேந்திவந்து இவரை வெட்டக்கிட்டினன். அப்போது இவர் ஸ்ரீ கண்ணபிரானை த்யானித்து, "இந்தச்சமயத்தில் நீ காப்பாற்றினாலுஞ்சரி, கைவிட்டாலுஞ்சரி" என்றுசொல்லி, திடசித்தத்துடனே நின்றார். அப்போது, காளியானவள் கோர ரூபங்கொண்டு கோயிலைவிட்டு வெளியே வந்து, இவரைப் பிடித்துக்கொண்டும், வெட்ட வுத்தேசித்தும் நின்ற நால்வரையும் கொன்று, சாந்த ரூபங்கொண்டு லாடுபாவாவின் திருவடியை வணங்கி "ஹரிதாசராகிய வுமக்கு என்னால் நேரிட்ட அபராதத்தை க்ஷமித்தருளவேண்டும்" என்றும், "உமக்குவேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்ளும்" என்றும் ப்ரார்த்திக்க, தாசரானவர் காளியைநோக்கி, "எனக்கு யாதொன்றும் வேண்டியதில்லை, நீ யிதுவரையில் கொலைக்கு இசைந்திருந்ததையும் இவ்வூரார் கொலைசெய்து வந்ததையும், ஒழிவீர்களானால் போதும்; இதுவுமன்றி, இங்குள்ளவர் யாவரும் ஹரிதாசராய்

ஹரிபஜனை செய்யும்படி அவர்களை நீ திருத்தவேண்டும்" என்று சொல்ல, "சக்தியும் நன்று! நன்று!! அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி, அந்த ஊரரசன் கனவிற்போய், "இன்றுமுதல் உன் ஊராரெல்லாரும் கொலைத்தொழிலைவிட்டு, என்கோயிலில் வந்து தங்கியிருக்கிற ஹரிதாசரை வணங்கி, அவர்க்கு அடியாராவதல்லாமல், என்கோயிலில் முன்போல நரபலி முதலானவற்றைச் செய்தால் உன்னையும் உன் ஊரிலுள்ளாரையும் நாசஞ்செய்வேன்" என்றுசொல்லி மறைந்தாள். உடனே அரசன் விழித்தெழுந்து, தன் ஊரார் யாவரும் உயிர்வதை செய்யாதிருக்கவேண்டும்" என்றும், "காளி கோயிலில் வந்திருக்கிற ஹரிதாசரை வணங்கி அவருடைய அநுக்ரஹம் பெறவேண்டும்" என்றும், பறையறைவித்துத் தானுங் காளி கோயிலுக்குப்போய் அங்கே மாண்டு கிடக்கிற நால்வரையுங் கண்டு, அதிசயித்து, மிகுந்த அச்சத்தோடு தாசரை வணங்கி, அவர் அநுக்ரஹிக்கப் பெற்றான். அப்பால் ஊராரும் அப்படியே வந்து வணங்கி அவருடைய அநுக்ரஹம்பெற்று, ஹரிபஜனை செய்யத் தலைப்பட்டவர்களாய் ஏகாதசி விரதத்தையும் அநுஷ்டிப்பவரானார்கள்; பிறகு லாடுபாவாவானவர் பகவானை ஸ்மரித்து "ஸ்வாமீ, உமது சகுணரூபத்தைக் காட்டியருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, அப்படியே பகவானும் ப்ரத்யக்ஷமாகி அபயம் தந்து மறைந்தார். தாசரும் பல தீர்த்த க்ஷேத்ர யாத்திரைசெய்து வந்து ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே திரிலோசநதாசர் வைபவத்தைச் சொல்லத்தொடங்கினார்.

லாடுபாவா சரித்திரம் முற்றிற்று.

எழுபத்தோராவது

திரிலோசநதாசர் சரித்திரம்.

பூர்வகாலத்தில் ஒரு ஊரில் திரிலோசநர் என்னும் பெயருள்ள ஒரு கம்மாளரிருந்தார். அவர், குடும்பத்திலிருந்தும் மிகவும் விரக்தராயும், ஆபரணங்கள் செய்யும்பொருட்டு ஊரார் கொடுக்கிற பொன் வெள்ளிகளில் சிறிதும் அபஹரிக்க விரும்பாதவராயும் இருந்தார். இப்படி யிருக்குங் காலத்தில், அவ்வூர்க்கு அரசன் வீட்டில் ஒரு மணம் நேரிட்டது. அப்போது அரசன் இவரையழைத்து "நவரத்நங்களால் ஒரு ஜேகிர் என்னும் ஆபரணம் செய்துகொடுக்கவேண்டும்" என்று சொல்லி, பொன்னும் ரத்நங்களும் கொடுத்தான். கொடு

த்து "இந்த ஆபரணத்தை மூன்று நாளைக்குள்ளாகச் செய்து கொடுக்கவேண்டும்" என்று சொல்ல, இவர் அந்தப் பொன்னையும் ரத்நங்களையும் வாங்கிக்கொண்டு வந்து தமது வீட்டில் பத்திரப்படுத்திவைத்து வெளியே வந்தார். அப்போது சில ஹரிதாசர்கள் திரண்டு வந்தார்கள். அவர்களைக் கண்டவுடனே, வணங்கி, வீட்டிற்கு அழைத்துவந்து ஆசநம்கொடுத்து நல்ல வுணவளித்து உபசரித்தார். அவர்களும் உண்டு மகிழ்ந்திருந்தார்கள். இப்படி யிரண்டுநாள் அவர்களிருந்து போய்விட்டார்கள். இந்தப் பாகவத கைங்கர்யத்திலேயே மனம் வைத்திருந்ததனால் அரசன் வேலையை மறந்துவிட்டார். மூன்றாம்நாள் அரசன் சிலரை யேவினான். அவர்களைக் கண்டவுடனே இவர் மிகவும் பயந்து அரசனிடத்துக்குப் போக, அரசன் "ஆபரணத்தை நாளைக்காலையில் கொடுக்காதபக்ஷத்தில் தண்டனை செய்வேன்" என்றான். இவரும் "நாளைக்காலையில் கொடுக்கத் தவறமாட்டேன்" என்று சொல்லி, வீட்டுக்கு வந்து, "இந்த நகையைச் செய்ய நாலு நாள் செல்லுமே, நாளைக்குக் கொடுக்காமற்போனால் அரசன் தண்டிப்பானே, என்செய்வோம்" என்று, ஒரு காட்டில்போய் ஒரு இடத்திலிருந்து, ஸ்ரீலக்ஷ்மீநாதனாகிய பகவானை த்யாநித்துக்கொண்டிருந்தார். அப்போது பகவானானவர் தமது பக்தருடைய வார்த்தை பழுதுபடாம லிருக்கவேண்டி, தாசருடைய வடிவுகொண்டு அவர் வீட்டுக்குள்ளே போய்ப் பொன்னையும் ரத்நங்களையும் எடுத்துத் தக்ஷணமே அரசன் சொன்ன ஆப்ரணம்செய்து எடுத்துக்கொண்டு அரசனிடத்துக்குப் போய்ச் சலாம்செய்து ஆபரணத்தைக் கொடுத்தார். அந்த ஆபரணத்தைக் கண்ட அரசன் மிகவும் சந்தோஷித்து, "இது மிகவும் நேர்த்தியா யிருக்கிறது" என்று அளவற்ற பொருள்களை வெகுமானங் கொடுத்தான். அவைகளை வாங்கிக்கொண்டு வந்து தாசர் மனைவியார் கையிற் கொடுத்து "இன்று சாது ஜனங்களுக்கு நல்ல வுணவுகளைச் செய்யவேண்டும்" என்று சொல்ல, அவரும் அப்படியே செய்ய, அதை வந்த சாதுக்களுக்கெல்லாம் உபசரித்து உண்பித்து, அவர்கள் த்ருப்தியடைந்து போனபிறகு, தாமும் உண்டு, தமது முன்றானையில் கொஞ்சம் உணவை யெடுத்து முடிந்துகொண்டு, காட்டில் வாழ்பவராகிய தமது அன்பரிடத்துக்கு, மற்றொரு தாசர் வடிவுகொண்டு சென்றார். சென்று தாசரைக் கண்டு, "இந்தக் காட்டில் வழி தெரியவில்லை. நீர் வழி காட்டவேண்டும்" என்று கேட்க, தாசர் "இவர் யாரோ ஒரு பக்தர்" என்று நினைத்து வணங்கி, "இந்தக் காட்டில் கானாறுகளை யெல்லாம் கடந்து, இவ்வளவு

தூரம் என் வந்தீர்?" என்று கேட்க, பகவானனவர் "இந்தக் காட்டை யடுத்த நகரத்திலுள்ள தட்டானை அரசன் அழைத்துப் பொன்னை யும் மணிகளையுங் கொடுத்து ஆபரணஞ் செய்யச்சொல்லிக் கட்டளை யிட, அந்தத் தட்டான் அந்த ஆபரணத்துக்காகக் கொடுத்த பொரு ளைக்கொண்டு இன்று அளவற்ற சாதுஜநங்களுக்கு நல்ல வுணவளித் தான். அவ்விடத்தில் வந்துண்டவர்களில் நானும் ஒருவன், வயிறார வுண்ட சோற்று மயக்கத்தால் வழிதப்பி வந்துவிட்டேன், அந்த வுண்டியில் இன்னம் ஒருவேளைக் காகும்படியா யெடுத்துக்கொண்டு வந்தேன், உன் முகவாட்டத்தை நோக்குமிடத்தில் நீயும் பசியினல் வருந்தியிருக்கிறதாகத் தோன்றுகின்றது, ஆதலால் இந்தவுணவை நீ யுண்டு பசி தணிவாயாக" என்று சொல்ல, தாசரும் அப்படியே சம்மதித்து உண்டுகொண்டே, "நாம் இங்கேயிருக்க, நம்முடைய பெயரைக்கொண்டு அரசனுக்குநகைசெய்து கொடுத்தவர் யார்" என்று யோசித்து வியந்து, உண்டு முடிந்தபிறகு, வந்த பகவானைத் தாசரான வர் அழைத்துக்கொண்டு தமது வீட்டுக்குப் போய், புறந்திண்ணை யில் தாசவேஷங் கொண்டுவந்த பகவானை இருத்தி, தாம் வீட்டுக் குள்ளே பிரவேசித்து, தேவியாரை நோக்கி, "இங்கே இன்று நடந்த செய்தியென்ன?" என்று கேட்க, தேவியார் தாசரை நோக்கி, "உமக் குச் சித்தப்பிரமையோ! அரசனுக்கு ஜேகீர் செய்துகொடுத்ததற்கு அவன் பரிசாகக் கொடுத்த திரவியத்தைக் கொண்டுவந்து, சாதுஜநங் களுக்கு நல்லுணவளித்து நீரும் உண்டு, கொஞ்சம் உணவை வஸ்திர த்தில் முடிந்துகொண்டு போனீர், அதை முழுதும் மறந்து வந்து என்னை யிப்படிக்கேட்பது ஆச்சரியமாயிருக்கின்றது" என்றுசொல்ல, "தாசர் காட்டிலிருந்த நம்மிடத்திற்கு வந்து ஒரு சாது சொன்னபடி யே இங்கே நடந்திருக்கின்றது, அவரைப் பார்ப்போம்" என்று புறந் திண்ணையில் வந்துபார்த்து அவரைக் காணாமையால், "பகவானே யிப் படிவந்து இந்த அற்புதத்தை நடத்திப்போனர்" என்று அறிந்து, "ஸர்வலோக சரண்யராகிய பகவானனவர் என்பொருட்டு இவ்வளவு சிரம மெடுத்துக்கொண்டாரே" என்று அநுதபித்து, "இந்த அபராத த்தை நான் எப்படி தீர்த்துக்கொள்வேன்" என்று மனம் புழுங்கி, பகவானைத் தோத்திரஞ் செய்ய, உடனே பகவானனவர் இவர்க்கு ப்ர த்யக்ஷமாகி அநுக்ரஹித்துச் சென்றார். இந்தச் செய்தியை யறிந்த அடியா ரெல்லாரும் தாசரை வணங்கி வாழ்த்திப் போனர்கள். இவ ரும் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டும் வருடந்தோறும் இப்படியே ததியாராதநோத்ஸவம் செய்துகொண்டும் இனிது வாழ்

ந்திருந்தார் என்றுசொல்லி, மேலே சஜ்ஜநகசாருகர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

திரிபுலாசநதாசர் சரித்திரம் முற்றிற்று.

எழுபத்திரண்டாவது

சஜ்ஜநகசாருகர் சரித்திரம்.

முற்காலத்தில் ஒரூரில் சஜ்ஜநகசாருகர் என்றொருவ ரிருந்தார். இவர் சாருகராய் ஜந்மித்தும் தம் குலத்துக்கேற்ற கொலைத்தொழிலை விட்டு, மாமிசத்தை விலைக்குக்கொண்டு விற்று அதனால் கிடைக்கும் லாபத்தைக்கொண்டு தமது இல்வாழ்க்கையைக் குறைவற நடத்துவோராகவும், பிரபஞ்சத்தில் பற்றில்லாதவராகவும், சாது ஜநங்களைப் பூஜிப்பவராகவும், இடைவிடாமல் ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருப்பவராகவும் இருந்தார். இவர் இப்படித் தமது கற்புடைய மனைவியாரோடுகூடி இல்லறத்தை வழுவாமல் நடத்திவருங் காலத்தில், ஸ்ரீகோபால சுவாமியின் வடிவாகிய சாளக்ராமமே இவர் மாமிசம் நிறுக்கும் கல்லாயிருப்பதை யறிந்த ஒரு வேதியன் இவரிடத்தில் வந்து, "வேதியர் பூஜிப்பதற்குரிய சாளக்கிராமத்தை நீ பூஜித்தலும், அதை மாமிசம் நிறுக்கும் கல்லாக உபயோகப்படுத்துதலும் உனக்கு நன்மையல்ல, அதை என்னிடத்தில் கொடுத்துவிடு" என்று கேட்க, இவர் ஒன்றும் தடை சொல்லாமல் கொடுத்துவிட்டார். அந்த வேதியன் அதைக் கொண்டுபோய்த் தன் வீட்டில் ப்ரதிஷ்டைசெய்து, ப்ராஹ்மண போஜநம் முதலானவைகளுஞ் செய்வித்து, ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்து மகிழ்ந்திருந்தான். அன்றிரவில் ஸ்ரீ கண்ணபிரான் எழுந்தருளி, "சஜ்ஜனகசாருகர் வீட்டில் சுகமாய் வாழ்ந்திருந்த என்னைக் கொண்டுவந்து வைத்திருக்கிறாய், ஒரு க்ஷணகாலமாயினும் இங்கேயிருக்க எனக்கு மனமில்லை, என்னை அவன் வீட்டில் கொண்டுபோய் விட்டுவிடு, இல்லாத பக்ஷத்தில் உன்னை உன் குலத்தோடு நாசஞ்செய்வேன்" என்று சொல்ல, வேதியன் விழித்தெழுந்து மிகவும் பயந்து, விடியற்காலத்தில் சாளக்ராமத்தைக் கொண்டுபோய்த் தாசரிடத்தில் கொடுத்து தான் கண்ட கனவையுஞ் சொல்லி, நான் ஜாதியபிமாநத்தால்செய்த அபராதத்தைப் பொறுத்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்தான். சாளக்ராமம் போனநாள்முதல் தீர்த்தத்தையும் உட்கொள்ளாம லிருந்த தாசரானவர் அதை மிகவும் ஆவலோடு வாங்கிப் பூஜித்துத் தீர்த்தம் ஸ்வீகரித்து, பிறகு கற்புடைய

மனைவியாரும் தாமுமாக அமுதுசெய்து வாழ்ந்திருந்தார். இப்படி நெடுங்காலஞ்செல்ல, ஒரு நாள் இவருக்கு ஸ்ரீஜகந்நாதனைச் சேவிக்க வேண்டுமென்கிற எண்ணமுண்டாகி, அந்த ஜகந்நாத யாத்திரை போகிறவர்களைத் தொடர்ந்துபோய், வழியில் ஒரூரில் ஒரு நாளிர வில் தங்கும்படி நேரிட்டது. இவர் தங்கின இடத்திலிருந்த ஒரு வ்யபிசாரியானவள் இவருடைய அழகுக்கு ஆசைப்பட்டுவந்து இவ ரைவணங்கி, "சமையலுக்குவேண்டிய பொருள்களெல்லாம் கொண்டு வந்து கொடுத்து, ஸ்வாமீ! பாகம் செய்துண்டு இங்கேயே தங்கி நாளை யுதயத்தில் போகலாம்" என்று ப்ரார்த்திக்க, இவர் அவள் கரு த்தை யறியாதவராய், அவள் செய்யு முபசாரத்துக்கு மனமகிழ்ந்து சமையல் செய்துண்டு நித்திரை செய்தார். அவள் நடுராத்திரியிலெழு ந்து இவரிடத்துக்குவந்து, இவரை யெழுப்பித் தன் கருத்தைத் தெரி வித்தாள். இவர் மஹா வைராக்யசாலியாகையால், அதற் குடன் படாமல், அவளை நோக்கி, "பெண்ணே! உன்கணவன் அதோ தூங்கு கிறான், அவனைக் கலந்து மகிழக்கடவாய்" என்றார். அவள் ஒரு வாள் கொண்டுபோய்த் தன் கணவனுடைய தலையை யறுத்துக் கொண்டு வந்து காட்டி, "என் கணவனிறந்தானே! இனியாயினும் என்னைப் புணரவேண்டும்" என்றாள். தாசரானவர் இவள் மஹாபாபியென்று அவ்விடம்விட்டு வெளிப்பட்டார். அவள் இவரை நோக்கி, "என் மன த்தை மகிழ்விக்காமற் போகிறாயாதலால் இதோ உன்னைக் கொல்லு விக்கிறேன், பார்" என்று உரத்த சத்தத்தோடு அலறியழுதாள்; அந் தச் சத்தத்தைக் கேட்ட அயலாரெல்லாரும் திரண்டுவந்து "என்ன செய்தி?" என்று விசாரிக்கையில், அவள் "இந்த மனிதன் இங்கே வந்து நான்தந்த பொருள்களைச் சமையல்செய்து உண்டு நித்திரை செய்து, நடுராத்திரியில் என் கணவனைக் கொலைசெய்துவிட்டுப் போ கிறான்" என்றாள். அவர்கள் இவரைக் கட்டிக்கொண்டுபோய் அர சனுக்கெதிரில் விட்டார்கள். அவளும் வந்து அலறியழுதாள். அரசன் ஒருவாளை அவள் கையினால் தீண்டுவித்து, தாசருடைய இரண்டு கைகளையும் அறுத்துவிட்டான். தாசர் கைகளை யிழந்து மிகவும் மனம் வருந்தி ஜகந்நாதயாத்திரை செல்வோருடன்கூடி அவ்வூர்க்கருகே பக வந்நாமஸ்மரணை செய்துகொண்டிருந்தார். அப்போது ஸ்ரீ ஜகந்நாதப் பெருமான் இவரது நிலையை யறிந்து, அர்ச்சகர் கனவிற்போய், "என் அன்பனாகிய சாருகசஜ்ஜநன் நமது ஊர்ப்புறத்தில் வந்திறங்கியிருக் கிறான்; அவனை நீங்கள் போய்வணங்கிப் பல்லக்கி லேற்றிக்கொண்டு வாருங்கள்" என்று நியமிக்க, அர்ச்சகர் விழித்தெழுந்து பல்லக்

குடன் போய் இவரைக் கண்டு தமக்கு பகவான் கட்டளையிட்டதைச் சொல்லி, "இந்தப் பல்லக்கி லேறியருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, இவர் அதிசயித்துப் பல்லக்கிலேற வுத்தேசித்தலும், கண்டோர் யாவரும் "கொலைசெய்த குற்றத்தின்பொருட்டுக் கையறுப் புண்டவன் பல்லக்கி லேறும்படி வாய்த்ததே, இது இறைவனது கருணைவிசேஷம்" என்று ஆச்சரியமடைந்தார்கள். சிலர் "இவருடைய மனநிலையை யறிந்தல்லவோ ஸ்ரீ பகவான் சொல்ல, அர்ச்சகர் பல்லக்குக் கொண்டுவந்தது? இதை யறியாமல் இவரை வீணாயிகழ்ந்து என் பாவத்தைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும்" என்று பேசிக்கொண்டார்கள். அர்ச்சகர்கள் தாசரைப் பிரார்த்தித்து, "தாமதம் பண்ணாமல் பல்லக்கில் ஏறும்" என்று ப்ரார்த்தித்தார்கள், அப்போது தாசரானவர் கண்களில் நீர் பெருக நின்று, "ஒரு அபராதத்தையும் செய்யாமலிருக்கும்போது, பகவானனவர் என் கைகளை அரசன் சேதிக்கும்படி ஏன் செய்தார்?" என்று "ஓ தீநதயாளா! பக்தவத்ஸலா! ஆபத்ரக்ஷகா! இந்த ஆபத்காலத்தில் காப்பாற்றுமற் போவீரானல் உமக்குப் பதிதபாவநன் என்னும் விருது கூடாது" என்று பலவாறுகப் புலம்பித் தோத்திரம்பண்ண, பகவானனவர் இவருடைய விஷயத்தில் மனமிரங்கி, இவர்க்கு ப்ரத்யக்ஷமானர். அந்தப் பகவானைக் கண்ட மாத்திரத்தில் இவருக்கு இரண்டு கைகளும் வளர்ந்து முன்போலாயின. அதைக்கண்ட சஜ்ஜநகர் மகிழ்ந்து, பகவானுடைய திருவடியில் வீழ்ந்து வணங்கினர். வணங்கின தாசரை பகவானனவர் தமது திருக்கரத்தால் எடுத்து மார்போடணைத்துக்கொண்டார். அப்போது இவர் பகவானை நோக்கி, "நான் ஒருவருக்கும் ஒரு தீமை செய்யாதிருக்க, என் கை யறுப்புண்ணச் செய்தாயே! இதுதானே உன் கருணைக் குணம்" என்று கேட்க, ஸ்ரீஜகந்நாதப்பெருமான் இவரை நோக்கி "நீ பூர்வகாலத்தில் ஒரு வேதியன்; ஒருநாள் கங்கா நதியில் மூழ்கி, அதின் கரையிலிருந்து என்னை மனத்திலிருத்தித் தியானம் பண்ணிக் கொண்டிருக்கும்போது, ஒரு கொலைஞன் வதைக்கும் பொருட்டுக் கட்டிவைத்த பசுவானது அறுத்துக்கொண்டுவர, அதை அவன் தேடிக்கொண்டு அந்த வழியாய் வந்து உன்னைக் கேட்டான்; அப்போது அந்தப் பசு 'இப்படி போயிற்று' என்று வாயாற் சொல்லாமற் போனலும் கையால் சுட்டிக்காட்டினய், அப்படியே அவன் போய் அந்தப் பசுவைக் கண்டுபிடித்துக் கொண்டுவந்து கொலை செய்தான், கொலை செய்யப்பட்ட அந்தப் பசுவானது ஒரு பெண்ணாய்ப்பிறந்தது, அதற்குச் சாருகன் கணவனானன், அவ்விருவரும் புணர்கின்ற வீட்டுக்

குள்ளே நீ போனய், உன்னைக்கண்ட மாத்திரத்தில் அந்தப் பெண்ணு னவள் உன்மீது மோஹங்கொண்டு தன் கணவன் தலையை யறுத்தது மன்றி உன் கைகளையும் அரசனைக்கொண்டு அறுப்பித்தாள். முற்பிறப் பில் என்னைத் தியாகிக்கும் காலத்தில் கசாருகனைக் கண்ட பாவத்தால் இப்பொழுது கசாருகனைப் பிறந்தாய், ஆனலும் உன் தபோமஹி மையால் உனக்குக் காட்சி கொடுத்தேன்" என்று சொல்லி மறைந் தார். அப்போது அங்கே யிருந்தவர்களெல்லாம், "இவருடைய அறு பட்ட கைகள் வளர்ந்ததைக் கண்டு மிகவும் ஆச்சரிய மடைந்து இவர் க்குப் பகவானுடைய க்ருபா விசேஷத்தால் கைகள் முன்போல வளர் ந்தன" என்று இவரைப் புகழ்ந்து கொண்டாடினர்கள். பிறகு இவர் சமுத்திரத்தில் நீராடி ஸ்ரீ ஜகந்நாதப் பெருமானைச் சேவித்து வண ங்கி, அந்த க்ஷேத்ரத்தில் நான்குமாசகாலம் வரைக்கும் ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்தார். பிறகு அவ்விடம் விட்டுப் புற ப்பட்டுத் தமது ஊருக்கு வந்து, நாள்தோறும் சாதுசேவையும் ஹரி நாமஸங்கீர்த்தநமும் செய்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தார்என்று சொல்லி, மேலே அங்கதபூபதி வைபவத்தைச் சொல்லத் தொடங் கினர்.

சஜ்ஜநகசாருகர் சரித்திரம் முற்றிற்று.

எழுபத்துமூன்றுவது

அங்கதபூபதி சரித்திரம்.

முன்னளில் ஒருநகரில், ராயசிங்க், அங்கதபூபதி என்னும் பெயர் கள் அமைந்த இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். இவர்களில் மூத் தவர் ராயசிங்க், இளையவர் அங்கதபூபதி. இவர்கள் அவ்வூர்க்கு அர சர்களா யிருந்தார்கள். இவர்களில் இளையவராகிய அங்கதபூபதியின் மனைவியார் மிகவும் ஹரிபக்தியிற் சிறந்தவரும், சாதுபூஜை செய்பவ ரும், ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்பவருமாயிருந்தார். இவருக்கு அநு க்ரஹம் செய்த குருவானவர் ஒருநாள் வரக்கண்டு, அவரைப் பூஜித்து வணங்கி விட்டுக்கழைத்து உபசரிக்க யத்நம் செய்வதை இவர் கணவ ராகிய அங்கதபூபதி கண்டு, "குலஸ்த்ரீகளுக்குத் தமது நாயகரன்றி வேறு தெய்வம் குரு என்போர் உண்டென்று யார் சொன்னர்கள்?" என்று கோபித்து, "நீ இப்படிச் செய்வது தகுதியல்ல" என்று வற் புறுத்திச் சொன்னர். இதைக் கேட்ட மனைவியார் மறுமொழி சொல் லாமல், அன்னபானங்களை வெறுத்து மூன்றுநாள் வரைக்கும் பட்டினி

யாயிருந்தார். அப்போது ஸ்ரீலக்ஷ்மீநாதரானவர் அங்கதபூபதியின் கனவில் வந்து எதிரேநிற்க இவர் அன்போடு வணங்கினர். பகவானனவர் இவரை நோக்கி, "நீ உன் மனைவியின்மீது கோவங்கொண்டு, 'நீ வணங்கி வழிபடுகிற தெய்வத்தைக் காட்டு' என்று சொல்லி, வற்புறுத்தினபாதலால் நான் உனக்கெதிரே தோன்றினேன்; கண்டுகொள்" என்று சொல்லி மறைந்தார். உடனே அங்கதபூபதியானவர் கண்விழித்து, மனைவியாரிடத்துக்கு வந்து, "பகவானனவர் உன் பக்திக்கு மனமகிழ்ந்து எனக்குச் சேவை சாதித்தார். உன்னைக் கடுஞ்சொற்களால் வற்புறுத்தின எனது அபராதத்தைப் பொறுத்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்தார். பிறகு மனைவியார்க்கு அநுக்ரஹித்த ஆசாரியரை யழைப்பித்து அவரிடத்தில் தாமும் அநுக்ரஹம் பெற்று, மனைவியாரும் தாமுமாக ஹரிசேவை குருசேவைகளைக் கொண்டிருந்தார்கள். இப்படி யிருக்குங்காலத்தில், இவர்க்கு மூத்தவராகிய ராயசிங்க் என்பவர், இவரைப் பகைவர்மேற் படையெடுத்துப் போய் வென்று வரும்படி யேவ, இவரும் அப்படியே போய்ப் பகைவரை வென்று, அநேகமான தநதாந்யாதிகளையும் ரத்நங்களையும் கொண்டுவந்து, ஸ்ரீ விஷ்ணுபக்தர்களுக்குத் தாநம் பண்ணி, மிகுதியான பொருள்களைத் தம்மனைக்குக் கொண்டுவந்து, அதில் ஒரு ஒளி மிகுந்த வயிரத்தைக் கண்டு, அதை ஸ்ரீஜகந்நாதப் பெருமானுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென் றெண்ணி யிருந்தார். அங்கிருந்தவர்கள் மூத்தவராகிய ராயசிங்கிடத்தில் இந்தச் செய்தியைச் சொல்ல, அவர் "அந்த வயிரத்தை எனக்குத் தரவேண்டும்" என்று சொல்லியனுப்ப, இவர், "அதை ஸ்ரீஜகந்நாதப் பெருமானுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்று எண்ணி வைத்திருக்கிறேன், ஆகையால் அதைத் தரமாட்டேன், வேறு எந்தப் பொருளைக் கேட்டாலும் தருவேன்" என்றார். அதுகேட்ட ராயசிங்க் மிகவும் கோவங்கொண்டு, தமது தங்கையை யழைத்து, "அங்கதனுக்கு விஷங்கலந்த அந்நமிட்டுக் கொல்லக்கடவாய்" என்றுநியமிக்க, அவளும் "இவன் சொன்னபடி செய்யாவிடின், நம்மைக் கொல்லுவான்" என்று பயந்து, விஷங்கலந்த அந்நத்தை அங்கதபூபதிக்குப் படைக்க, இவர் தமது வழக்கப்படியே அந்த அந்நம் முதலானவற்றைப் பகவதர்ப்பணம் பண்ணி உண்ணும்போது, இவரது மனநிலையை யறியும்பொருட்டு, "நீ பகவதர்ப்பணம் பண்ணின இந்த அந்நம் நஞ்சு கலந்தது, இதனை நீ உண்ணவேண்டாம்" என்று சொல்ல, இவர் "பகவ தர்ப்பணமானதை உண்ணாம லிருக்க மாட்டேன்" என்று சொல்லி விருப்பத்தோடு உண்டபிறகு, மனைவியா

ரிடத்துக்கு வந்து நடந்த செய்தியைச் சொல்லி, "இனி யிங்கே யிருக்கத் தகாது" என்று மனைவியாரும் தாமும் புறப்பட்டு ஸ்ரீஜகந் நாதத்துக்குப் பிரயாணப்பட்டுப் போகும்போது, இவை யாவையும் சிலர் போய் ராயசிங்குக்குச் சொல்ல, அவன் இவர் போகிற வழியில் இவரைத் தடுத்து வயிரத்தைப் பறித்துக்கொண்டுவரும்படி தன் மந்திரியை யனுப்பினான். அந்த மந்திரி, தன் சேனைகளோடு கூடி வந்து இவர் போகும் வழியிலுள்ள ஒரு ஆற்றங்கரையில் வளைத்துக் கொண்டான். இதைக் கண்ட அங்கதபூபதியானவர் "இவன் வயிரத் தைப் பறித்துக்கொண்டுபோக வந்தான்" என்றறிந்து, அந்த வயிரத் தைத் தமது கையில் வைத்துக்கொண்டு அந்த மந்திரிக்குக் காட்டி, "இது ஸ்ரீஜகந்நாதப் பெருமானுக்கு அர்ப்பணம்" என்று சொல்லி, அந்த யாற்றி லெறிந்துவிட்டார். அப்போது மந்திரியானவன் சிலரை யேவினான். அவர்கள் யாற்றிலிறங்கித் தேடுவதைக் கண்ட இவர், "நீங்கள் ஏன் ப்ரயாசப்படுகிறீர்கள்? அது உங்கள் கைக்கு அகப் படாது, அது ஸ்ரீஜகந்நாதப்பெருமானது திருமார்பில் ஆபரணமாய் அமர்ந்திருக்கிறது, நீங்கள் பார்க்க விரும்பினால் என்னோடு வாருங் கள், காட்டுகிறேன்" என்றார். அதைக் கேட்ட மந்திரி முதலானோர் "அப்படியே காட்டும்" என்று இவரோடு தொடர்ந்துபோய் ஸ்ரீஜகந் நாதத்தை யடைந்து கோயிலுக்குள்ளே போய், "பகவானுடைய திரு மார்பின் பதக்கத்தி லமைந்திருப்பதைக்கண்டு, "ஆற்றிலெறியப்பட்ட வயிரக்கல் இந்தப் பகவானுடைய மார்பின் பதக்கத்தில் வந்து அமைந் திருப்பது எப்படி?" என்று அங்குள்ள அர்ச்சகர்களை வினவ, அவர் கள் மந்திரியை நோக்கி, "ஐயா! இரண்டு தினத்துக்கு முன்னே இந்தப் பெருமான் எங்கள் கனவி லெழுந்தருளி, 'என் அன்பனாகிய அங்கதபூபதி, ஒரு வயிரக்கல்லை யென்பொருட்டு ஆற்றிலெறிந்தான், அது இங்கே வந்திருக்கும், அதை யெடுத்து என் பதக்கத்தில் சேரு ங்கள்' என்று நியமித்தார்; நாங்கள் எழுந்து பார்த்தபோது அது சந் நிதியில் காணப்பட்டது, அதைப் பகவான் நியமித்தபடியே பதக்கத் தில் அமைத்தோம்" என்று சொன்னார்கள். அப்போது மந்திரி முத லானோர், அதை உற்றுப்பார்த்து, "இது ஆற்றிலெறியப்பட்ட கல்லே என்றறிந்து, "இதென்னஅற்புதம்" என்றுஒருவர்க்கொருவர் பேசிக் கொண்டு, இங்கே நடந்த செய்திகள் யாவையும் ஒரு கடிதத்தில் எழுதி ஒருதூதன் கையிற்கொடுத்து ராயசிங்குக்கு அனுப்பினார்கள். அந்தத் தூதன் விரைந்து போய்க் கொடுத்த கடிதத்தை ராயசிங்க் படித்துப்பார்த்து, "ஐயோ, பகவத்பக்தனாகிய என்தம்பியை வீணாய்

வருத்தினேனே" என்று அநுதபித்து, ஒரு கடிதத்தில், "தம்பி! நீ ஸ்ரீஜகந்நாதப் பெருமானுக்கு மிகுந்த அன்புள்ளவனென்று அறியாமல் நான் செய்த அபராதத்தைப் பொறுத்து, இந்த க்ஷணமே வந்து எனக்குத் தரிசநம் கொடுக்கவேண்டும்" என்றெழுதித் தூதன் கையிற்கொடுத்தான். அதைத் தூதன் கொண்டுவந்துகொடுக்கப் படித்துப் பார்த்த அங்கதபூபதியானவர், "ஸ்ரீஜகந்நாதப் பெருமானனவர் என் தமையனுக்கு நற்புத்தியைத் தந்தருளினர்" என்று மனமகிழ்ந்து ஸ்ரீ ஜகந்நாதப் பெருமானை வணங்கி, விடைபெற்றுத் தமது ஊரை யடைந்து தமையனைக் கண்டார். தமையனும் இவரை அன்போடு தழுவிக்கொண்டான். பிறகு ராயசிங், ஹரிபஜனையில் மிகவும் விருப்பமுள்ளவனு யிருந்தான். இவரும் தமது மனைவியாரோடு கூடி ஹரிபஜனை செய்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே குணவதிபாயி வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

அங்கதபூபதி சரித்திரம் முற்றிற்று.

எழுபத்துநான்காவது

குணவதிபாயி சரித்திரம்.

பூர்வகாலத்தில் ஒரு நகரத்துக்கு அரசனுகிய மாதவசிங் என்றொருவனிருந்தான்; இவன் மனைவியாராகிய குணவதிபாயியார் என்றொருவ ரிருந்தார்; இவர் வயிற்றில் இரண்டு புதல்வர் பிறந்தார்கள். அந்தப் புதல்வ ரிருவரையும் அன்போடு வளர்த்துவருங் காலத்தில், இந்தக் குணவதியாருடைய தாதியர் பலருள்ளே ஒரு தாதியானவள் எப்பொழுதும் ஸ்ரீ ஹரிநாமத்தை வாயினுள்ளே ஜபித்துக்கொண்டே யிருக்கையில் அவள் உதடு துடிப்பதைக் கண்டு, அவளை நோக்கி, "எப்பொழுதும் உன் உதடு அசைந்துகொண்டே யிருக்கப் பார்க்கின்றேன், அதற்குக் காரணம் யாது?" என்று குணவதியார் கேட்க, தாதியானவள் குணவதியாரை நோக்கி, "அம்மா, இந்தக் கரும சரீரத்தோடு கூடிவாழ்கிற வாழ்வை யொழித்து மோக்ஷபதத்தை யடைய விரும்பி எப்பொழுதும் மோக்ஷப்ரதமான ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநஞ் செய்துகொண்டிருக்கிறேன்" என்று சொன்னாள். அப்படிச் சொல்லக்கேட்ட குணவதியார் அந்தத் தாதியை நோக்கி, "அப்படியானல் எனக்கும் அந்த ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்யவேண்டிய கிரமத்தை அநுக்ரஹம்செய்யவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, அவளும் இவருடைய மனநிலையையறிந்து, நீராட்டி, இருக்கவேண்டிய முறையி

விருக்கச்செய்து, ஸ்ரீகண்ணபிரானது உருவமொன்றைக் கொடுத்து, அதைப் பூஜிக்கும் வழியையும் விவரமாய்ப் போதித்து, ஸ்ரீ ஹரிநாமத்தையும் உபதேசித்தாள். அந்த வுபதேசம் பெற்றநாள்முதல் குணவதியார் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டும், ஸ்ரீகிருஷ்ண விக்ரஹத்தை பூஜித்துக்கொண்டும், தம்மை நாடிவருகிற சாதுக்களாகிய ஹரிதாசர்களை உபசரித்து அமுதளித்தல் முதலியவற்ருல் மகிழ்வித்துக்கொண்டும் இருந்தார். இப்படி நாளுக்குநாள் ஸ்ரீ ஹரிபக்தி வ்ருத்தி யடைந்து வருதலால் இவர்க்குப் பிரபஞ்ச விவகாரங்களில் சிறிதும் பற்றில்லாம லிருப்பதை அரசனறிந்து, இவளுக்கு யாதோ வெறியனுகினதென்று எண்ணி, அதை யொழிக்கப் பலவகையாய் முயற்சி செய்து பயன்படாமையால், குணவதியாரை நோக்கி, "நீ பிரபஞ்ச விவகாரத்தை முழுதும் மறந்திருக்கிருயே, இதற்குக் காரணம் யாது?" என்று கேட்க, இவர் அரசனுகிய தம் கணவனை நோக்கி, "ஸ்ரீவநமாலாதாரர்கிய பகவானை இடைவிடாமல் எப்பொழுதும் தியாநித்துக் கொண்டிருக்கிறேன், அந்தப் பகவானுனவர் எனக்குப் பிரத்தியக்ஷமாகாமலிருக்கிருர், ஆகையால் இப்படிப் பிரபஞ்ச விவகாரங்களை மறந்து அந்தப் பகவத் விஷயத்திலேயே மனம் பதிந்தவளா யிருக்கிறேன்" என்று அழுதுகொண்டே சொன்னுர். இப்படிக் குணவதியார் சொல்லக்கேட்ட அரசன் மிகவுங் கோவங்கொண்டு, கண்சிவந்து நோக்குதலும், குணவதியார் கணவன் முகத்தை நோக்க அஞ்சிக் கண்களை மூடிக்கொண்டார். அப்பொழுது ஸ்ரீ கண்ணபிரானுனவர் இவரது பயத்தை நீக்கும்பொருட்டு இவர்க்குக் காட்சி தந்தருளினுர். குணவதியாரும் அந்தப் பகவானுடைய திருவுருவத்தைத் தரிசித்துத் திருவடியில் வீழ்ந்து வணங்கினவுடனே பகவானுனவர் இவர் சிரசின்மீது கை வைத்து "நீ மனந் தளரவேண்டாம், உனக்கு யாதொரு துன்பமுமில்லை, உன் பக்ஷத்தில் நானிருக்கிறேன்" என்று சொல்லி மறைந்து போனுர். அதின்பிறகு குணவதியார் மனமகிழ்ந்து, சற்றும் அஞ்சாமல் கணவன் முகத்தை நோக்கி யெதிரே நின்ருர். பகவானுனவர் குணவதியாருக்குக் காட்சி கொடுத்து மறைந்துபோன செய்தியை யறியாத அரசன், இவரை நோக்கி, "நீ இப்படியே யிருந்தால் உன்னைத் தண்டிப்பேன்" என்று அதட்டிச் சொல்லிவிட்டு, வெளியில்வந்து, வாயிற்காவலரை நோக்கி, "இவள் யாரோ வொருதுறவியின் மொழிவழியி லிருக்கிருள், ஆகையால், உள்ளே யாரையும் விடவேண்டாம்" என்று கட்டளையிட்டு, தன் பரிவாரங்களோடுகூடி, மந்திரியை நோக்கி, "நீ யிங்கே ராஜரீகத்தைப் பார்த்துக்கொண்டிரு, நான் வேட்டை

யாடப் போகிறேன்" என்று சொல்லி, வனத்துக்குப் போய்விட்டான். இங்கே குணவதியார் ஸ்ரீ கண்ணபிரானை ஆராதித்துக்கொண்டும் அவனது திருநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டும் அடியார்களைப் பூஜித்துக்கொண்டும் இருப்பதைக் கண்ட மந்திரியானவன், இந்தச்செய்தியை யெழுத்து மூலமாய் அரசனுக்குத் தெரிவித்தான். அரசன் உடனே கொலைசெய்வோர் நால்வரை யழைத்து, "நீங்கள் விரைந்து நகரத்துக்குப் போய், என் மனைவியைக் கொலைசெய்து வாருங்கள்" என்று ஏவ, அவர்களும் அப்படியே போய்க் குணவதியாரைக் கொலைசெய்ய வுத்தேசிக்கும்போது, இவர் ஸ்ரீ ஹரிபூஜை செய்துகொண்டிருந்ததைக் கண்டு சற்று நிதானித்தார்கள். இதையறிந்த ஸ்ரீ கண்ணபிரானனவர் ஒரு புலியுருவங்கொண்டு வந்து இவர் பூஜை செய்கிற விக்ரஹத்திலிருந்து வெளிப்பட்டுநிற்க, இவர், "நீ யிவ்வுருவங்கொண்டு வந்ததற்குக் காரணம் யாது?" என்று கேட்க, அதற்குப் புலியுருவங்கொண்டுவந்த பகவானனவர் மறுமொழி சொல்லாமல், கொலையாளர் நால்வரையுங் கொன்று மறைந்துபோனார். அருகே யிருந்தவர்கள் இந்தப் புலிக்குரலைக்கேட்டு வந்துபார்த்துக் கொலையாளர் இறந்துகிடப்பதைக்கண்டும் புலிக்குரலுக்கஞ்சியும் அழுதுகொண்டுநிற்க, குணவதியார் தமது பூஜையை நிறைவேற்றி, அடியாரைப் பூஜிக்கும்பொருட்டு வெளியே வந்து கொலையாளர் இறந்துகிடப்பதைப் பார்த்து, "ஓ பகவானே! இவர்களைக் கொல்லத்தானோ தேவரீர் புலியுருவங்கொண்டுவந்தீர்" என்று சொல்லிநிற்கும்போது, சாதுக்களும் மற்றவர்களும் இந்தக் கொலையாளர் மாண்டு கிடப்பதை நோக்கியும் இவர்களைக் கொல்லவந்த புலியைக் குறித்தும் அதிசயித்து, "இந்த அதிசயங்களெல்லாம் ஸ்ரீ கண்ணபிரானுடைய திருவருளாலேயே நிகழ்ந்தன" என்று, குணவதியாருடைய பக்தியைக்குறித்துப் புகழ்ந்துகொண்டாடினார்கள். இந்தச் செய்திகள் யாவும் மந்திரியானவன் அரசனுக்கு எழுதியனுப்பினான். அரசன் உடனே "குணவதியாருடைய மஹிமையை யறியாமல் அபராதம் செய்தேன், இனி அவர் இஷ்டம்போல ஹரிபூஜை முதலியவற்றைச் செய்துகொண்டிருக்கட்டும், அவர்க்கு வேண்டிய பொருள்களைத் தடையில்லாமல் அமைத்துத் தருக" என்று மந்திரிக்கு எழுதி யனுப்பினான். அதின் பிறகு அரசனும் தன் சேனைகளோடும் நகரத்துக்கு மீண்டு வரும் வழியிலுள்ள ஒரு நதியில் வெள்ளம் பெருகி யோடுவதைக் கண்டு, அந்த நதியைக் கடப்பதற்கு ஒரு ஓடம் அமைத்து அதிலேறிச் செலுத்திக்கொண்டு வரும்போது, அது நட்டாற்றில் ஒரு பெருஞ்சுழியில்

அகப்பட்டப் பம்பாம்போலச் சுழன்று நீரில் அழுந்தும்படியான நிலை யைக் கண்ட அரசனும் சேனைகளும் அஞ்சிக் கரைசேர்வதற்குத் தகு ந்த வுபாயமொன்றும் தோன்றமல் மனங் கலங்கும்போது, அரசன் தன் மனைவியாகிய குணவதியாரை நினைத்தான்; நினைத்தவுடனே நீர்ச் சுழியி லகப்பட்டுச் சுழன்றுகொண்டிருந்த ஓடம் அந்தச் சுழியிலிரு ந்து விலகிப்போய்க் கரையை யடைந்தது; அரசனும் சேனைகளும் சந் தோஷத்தோடு நகரத்தை யடைந்தார்கள். அப்போது அரசன் தன் அரண்மனையைச சேர்ந்து மனைவிமக்களைக் கண்டு பெருங்களிப்படை ந்து, குணவதியாரைத்தழுவிக்கொண்டு, "நீ ஹரிபக்தியிற் சிறந்தவள் என்பதையும் உன் மஹிமையையும் சற்றும் அறியாமல் உனக்குத் தீமைசெய்யத் துணிந்தேன்; உனக்கு ஸ்ரீ பகவானுனவர் கைவசமா யிருப்பதை இப்பொழுது அறிந்துகொண்டேன்; ஆற்றில் அழுந்திப் போகிற சமயத்தில் உன்னை நினைத்ததனால் நாங்கள் யாவரும் கரை யேறிச் சுகமாய் வந்துசேர்ந்தோம், உன் பெருமையைச் சொல்லவல்ல வர் யார்? நான் செய்த அபராதத்தை மன்னிக்கவேண்டும்" என்று ப்ரார்த்தித்து, அன்றுமுதல் தானும் ஸ்ரீ ஹரிபக்தியிற் சிறந்தவனுய்க் குணவதியாாகிய தன் பத்தினியாரோடும் மக்களோடுங்கூடி இனிது வாழ்ந்துகொண்டிருந்தான் என்று சொல்லி, மேலே குபாராபாயி வை பவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

குணவதிபாயி சரித்திரம் முற்றிற்று.

எழுபத்தைந்தாவது

குபாராபாயி சரித்திரம்.

பூர்வகாலத்தில் சரவாகநன் என்னும் பெயருள்ள ஒரு அரச னிருந்தான்; அவன் சபையில் இனிவருங் காரியத்தை முன்னே யறி ந்து சொல்லவல்லவராகிய புரோஹிதர் ஒருவரிருந்தார்; அவருக்கு ஒரு புதல்வியுண்டாக, அந்தப் புதல்விக்குக் குபராபாயியென்று பெய ரிட்டு அன்போடு வளர்த்துவருங்காலத்தில், குபாராபாயியார் தமது இளமைப்பருவ முதற்கொண்டு, ஸ்ரீ ஹரிபக்தியிற் சிறந்தவராய், ஹரி நாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்தார். இவர்க்கு யவ்வநபருவம் வந்தது. இந்தச் செய்தியை, இளமைப்பருவத்திலேயே இவரை மணஞ் செய்துகொண்ட மாப்பிள்ளை வீட்டார் அறிந்து, இவரை அழைத்துக்கொண்டுபோக வந்தார்கள். அழைத்துக்கொண்டு போக வந்த சங்கதியை இவர் அறிந்து, மனவருத்தத்தோடு ஆலோசிக்கிறர்:

எப்படியென்றால், "நமது சுற்றத்தார் என்னை யழைத்துக்கொண்டு போய் என்கணவனிடத்தில் சேர்த்தால் எனக்குக் கிடைக்கும் லாபம் விஷயாநுபவம், அந்த விஷயாநுபவத்தால் மக்கட்பேறு உண்டாகும், அதனால் உண்டாகிற துன்பங்களுக்கு ஒரு எல்லையில்லை, அந்தத் துன்ப மிகுதியால் நமக்கிருக்கிற ஹரிபக்தியும் குறையும், அப்படிக் குறைவதனால் மேலே நற்கதியும் லபிக்காமற் போகும்; இதற்கென்ன செய்யலாம்" என்று பலவாறு நினைந்து வருந்தி யிருக்கும்போது, "வீட்டைவிட்டு வெளிப்படுவதே நன்மை" என்று ஒரு முடிவான எண்ண முண்டாயிற்று. அப்படியே இவர் நடுராத்திரியி லெழுந்து யாருக்குந் தெரியாமல் வெளியே வந்து, ஸ்ரீ ஹரி தியானஞ்செய்து கொண்டே நகர்வாயிற் கதவினருகே நின்று, கதவு மூடப்பட்டிருப்ப தைக்கண்டு, ஸ்ரீபகவானை நினைக்க, அவர் ஒரு பெண்ணுருக்கொண்டு வந்து கதவைத் திறந்தவுடனே, இவர் வெளியே வந்து, மனமகிழ்ச்சி யோடு, தம்மீதிருந்த ஆபரணங்களெல்லாவற்றையுங் கழற்றி மடியில் வைத்துக்கொண்டு ப்ருந்தாவனத்துக்குப்போய், யமுநாநதியில் சிர காட் என்னும் துறையில் நீராடி, அங்கேயிருந்த சாதுக்களுக்குத் தமது ஆபரணங்களைக் கொடுத்துவிட்டு, கோயிலினுள்ளே பிரவேசி த்து, ஸ்ரீகண்ணபிரானைக் கண்டு, அஞ்சலி செய்து, "ஓ பகவானே! தேவரீர் இன்று அடியேனை இந்த ஜன்மபந்தத்தினின்றும் நீக்கி ரக்ஷி க்கவேண்டும்" என்று சொல்லிச் சாஷ்டாங்கமாக வணங்கினர். பிறகு ஒரு ஏகாந்த ஸ்தலத்திலிருந்துகொண்டு, "பகவானே! உனது திவ்ய விக்ரஹத்தைக் காணவிரும்பினேன், சேவை சாதித்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, பகவானனவர் இவர் மனநிலையைக் கண்டு, இவ ரது தியானத்தி லெழுந்தருளிச் சேவைதந்தருளி, "நீ வருந்தவேண் டாம், ராதாகுண்டத்தை யடைந்து சுகமாக வாழ்ந்துகொண்டிரு" என்று சொல்லி மறைந்தார். உடனே இவரும் ராதாகுண்டத்தை யடைந்து, அங்குள்ள ஸ்ரீகண்ணபிரான் நாள்தோறும் உணவுகொண்டு வந்து கொடுக்க, உண்டு மகிழ்ந்தார். இப்படியிருக்க, தந்தையானவர் இவரை வீட்டிற்காணமல் பல இடங்களிலும் தேடிக்கொண்டேவந்து ராதாகுண்டத்திற் கண்டு, "குழந்தாய்! நீ யிங்கே தனியே வந்திருப் பதற்குக் காரணமென்ன? உன் கணவனுக்கு என்ன சொல்லுவேன்? பருவம் வந்த பிறகு நீ யிப்படி தனியே யிருப்பது எங்களுக்கெல்லாம் குறைவல்லவா? நமது குலத்துக்கு தகாதகாரியம் செய்தாயே" என்று இப்படிச்சொல்லுகிற தந்தையாரைக் குபாராபாயியார் நோக்கி, "உம க்கு அறுபது வயதாகியும் நீர் இன்னும் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம்

செய்து பிறவிக்கடலைக்கடக்க முயற்சிசெய்யாமல் இல்லறவாழ்வில் உழன்றுகொண் டிருக்கிறீரே, ஸ்ரீ ஹரிபக்திசெய்து ஈடேற நினைத்திருக்கிற என்னையும் கெடுக்க முயல்கின்றீரே, இது உமக்குத் தகுதியல்ல, என்னைவிட்டு, நீர் ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்து ஈடேறக்கடவீர்" என்று சொன்னார். இப்படிக் குபாராபாயியார் சொல்வதைக் கேட்ட தந்தையார் மனமகிழ்ந்து, "என் தாயே! அப்படியே செய்கிறேன், நீ யிந்தக் காட்டைவிட்டு நமது வீட்டிலிருந்து ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருக்கலாம், வா" என்றழைக்க, ஸ்ரீ கண்ணபிரானும் இவரை நோக்கி, "உன் தந்தையின் விருப்பப்படி வீட்டிலிருந்துகொண்டு இடைவிடாமல் என்னை ஸ்மரித்துக்கொண்டிருப்பாயாக" என்று நியமிக்க, இவரும் தந்தையாரோடு சென்று மனையை யடைந்து, ஹரிபூஜை சாதுபூஜை முதலானவற்றைப் பகற்காலத்திலும், ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநத்தை இராக்காலத்திலும் செய்துகொண்டிருக்குங் காலத்தில், இவர் செய்யும் ஹரிபஜனையை யெல்லாரும் வந்து கேட்டு ஆநந்த பாவசராய் மகிழ்கின்றார்கள் என்பதை அந்தவூரரசன் கேட்டுப் புரோஹிதரை வரவழைத்து, "உமது புதல்வி செய்யும், ஹரிபஜனை மிகவும் செவிக்கின்பமா யிருப்பதாகக் கேள்விப்பட்டேன், ஆகையால் நானும் ஒருநாள் வந்து அந்தப் பஜனையைக் கேட்டு ஆநந்திக்க விரும்பினேன்" என்று சொல்லி, ஒருநாள் இராக்காலத்தில் புரோகிதர் வீட்டுக்குப்போய், குபாராபாயியார் செய்யும் பஜனையைக் கேட்டு ஆநந்தித்தது மன்றி, இவர் கட்டழகைக்கண்டு மோஹித்து மெய்மறந்து நிற்க, இவனுக்கு ஒரு கனவுண்டாயிற்று; அதில் ஒருநதிபெருகி யோடுவதாகவும், அந்தநதியின் அக்கரையில் குபாராபாயியார் இருந்துகொண்டு; "பாபீ! நீ இக்கரைவந்து சேரக்கடவாய்" என்று அழைப்பதாகவும் கண்டு அஞ்சி, இந்தக் கனவின் ப்ரயோஜநமும் அர்த்தமும் என்னவென்று ஆலோசித்து, "இப்போது நாம் கனவிற் பார்த்த நதி பிறவிக்கடல், குபாராபாயி முக்திகாந்தை, அவள் நிற்கும் அக்கரையே முக்தி, நாம் பிறவிக்கடலின் இக்கரையிலிருக்கிறோம், நம்மை இந்தப் பிறவிக்கடலைக் கடந்து அக்கரையாகிய முக்தியை யடைந்து சுகிக்கும்பொருட்டு அழைக்கிறாள்" என்று தீர்மானித்து நிற்குமளவில், அரசனுக்கு மெய்ஞ்ஞாநம் உண்டாகி, குபராபாயியாரைத் தான் விரும்பினதைப்பற்றி அநுதபித்து, பயபக்திகளோடு திருவடி வணங்கி, "உம்மிடத்தில் நான் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்ததுமன்றி, "உபதேசித்து என்னை யீடேற்றவேண்டும்" என்று தோத்திரம் செய்து, குபா

பாயியாரால் உபதேசிக்கப்பெற்று, தன் அரண்மனையை யடைந்து, நாள்தோறும் ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்து, ஹரிபக்தனுய் வாழ்ந்திருந்தான் என்று சொல்லி, மேலே கிரிதரலால் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

துபாராபாயி சரித்திரம் முற்றிற்று.

எழுபத்தாறுவது

கிரிதரலால் சரித்திரம்.

க்ஷேத்ரங்க ளெல்லாவற்றிலும் மிகவும் சிறந்ததாகிய ப்ருந்தா வநம் என்னும் திவ்யக்ஷேத்திரத்தில், **கிரிதரலால்** என்னும் பெய ருள்ள ஒருவர் முற்காலத்தி லிருந்தார். இவர் பரமபக்த சிரோமணி யாயும், மெய்ஞ்ஞானம், நல்லொழுக்கம் முதலிய உத்தம குணங்க ளுள்ளவராயும், ஸ்ரீ ஹரிபக்தராயும், பூததயை யுள்ளவராயும் இருந் தார். இவர் நாள்தோறும் சாதுபூஜை செய்வதில் மிகவும் விருப்ப முள்ளவர். காலில் சிறு சதங்கை கட்டிநின்று, கையில் தம்புரு பிடி த்து, சங்கீதசாஸ்திரத்தின் விதிப்படி நடித்துக்கொண்டு ஹரிபஜனை செய்வது வழக்கம்; ஒருநாள் இவர் ஸ்ரீ கண்ணபிரானது திருக்கோயி லில் பிரவேசித்துப் பஜனை செய்யத் தொடங்கும்போது, அங்கே வந்து கூடின சாதுக்களெல்லாரும் முற்காலத்தில் ஸ்ரீ கண்ணபிரான் செய்தருளின ராஸக்ரீடையைக் கீர்த்தநத்தி லமைத்துப் பாடும்படி ப்ரார்த்திக்க, "இவர் அப்படியே யாகட்டும்" என்று சொல்லி, அதற் குத் தகுந்த ஆடை வீட்டிலிருக்கின்றது, போய் எடுத்துவரலாமென் ருல் நேரஞ்செல்லுமே" என்று ஸ்ரீ கண்ணபிரானுக் கெதிரேநிற்க, ஒரு பீதாம்பரம் ஆகாயத்திலிருந்து இவர் கைக்கு நேரே வர, இவர் அதை யேற்றுக்கொண்டார். இதைக் கண்ட சாதுக்களெல்லாரும் இவரது பக்தியையும் கண்ணபிரானுடைய பெருங்கருணையையும் குறித்துக் கொண்டாடினர்கள். பிறகு இவர் அந்தப் பீதாம்பரத்தை யுடுத்து, சாதுக்கள் நியமித்தபடியே ராஸக்ரீடைக் கீர்த்தநத்தைப் பாட, கேட்டவர் யாவரும் ஆநந்தசாகரத்தில் மூழ்கினர்கள். மற் றொருநாள் ஒரு பைராகியானவர் துவாதச நாமங்களையும் தரித்து, அவ்வூர்ப் புறத்திலிருந்து வரக்கண்டு, அந்தப் பைராகியின் திருவடி விளக்கி, ஸ்ரீ பாததீர்த்தம்கொண்டு, மனமகிழ்ந்திருந்தார். இதைக் கண்ட யாவரும் கோவங்கொண்டு, "இவன் பிணம்பட்ட நீரையுண் டான், இவன் வேதியனல்லன், இவன் இனி வேதமோதத்தகுந்தவனு

மல்லன்" என்று நிந்தித்துப் பேசினதைக் கிரிதார் கேட்டு, "இவர் இவ்வுலகத்துக்கு நன்மைசெய்ய வந்தவர், இறப்பும் பிறப்பு மில்லாதவர், இவரை நீங்கள் நிந்திக்கத்தகாது" என்றார். அதைக் கேட்டவர்கள், "நீர் பேசுகிற வார்த்தைகளால் ப்ரயோஜநம் ஒன்றுமில்லை, இந்தப் பிணத்தைப் பிழைப்பித்தால் உம்முடைய ஞானத்தை நம்பலாம், இல்லாதபக்ஷத்தில் உம்மை ஜாதியிலிருந்து நீக்கிவிடுவோம்" என்றார்கள். அதைக் கேட்ட கிரிதார் ஸ்ரீ கண்ணபிரானைத் தியாநித்துக்கொண்டே, அவர்கள் கொண்டுவந்த பிணத்தை நோக்க, அந்தப் பிணமாயிருந்தவன் உயிர்பெற்றெழுந்தான். எழுந்தவன் எதிரேயிருக்கிற கிரிதாரை வணங்கிக் கண்ணபிரானைத் தியாநித்துக்கொண்டே தன் ஊருக்குப் போய்விட்டான். வந்திருந்த சாதுக்களெல்லாரும் தாசரைப் புகழ்ந்துகொண்டாடி வணங்கி, "ஸ்வாமீ! தேவரீருடைய பெருமையைப் புகழவல்லார் யாவர்? ஒருவருமில்லை" என்று தோத்திரம் செய்து தத்தம் இடங்களுக்குப் போய்விட்டார்கள். கிரிதார் தமது வழக்கம்போல ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே பலக்புகார் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

கிரிதாலால் சரித்திரம் முற்றிற்று.

எழுபத்தேழாவது

பலக்புகார் சரித்திரம்.

பூர்வகாலத்தில் பலக்புகார் என்னும் பெயருள்ள துருக்க அரசன் ஒருவனிருந்தான்; இவன் பதினெட்டு லக்ஷம் குதிரைகளுள்ளவன்; ஆயிரத்தறுநூறு என்னுந் தொகையையுடையவரும் அரம்பைப் பெண்கள்போன்ற கட்டழகுடையவரும் ஆகிய மனைவியரையுடையவன்; தன்குடைநிழலில் வாழும் உயிர்களுக்கு ஒரு துன்பமுண்டாகாதபடி காத்தருளுவோன்; இப்படிப்பட்ட உயர்குணங்களெல்லாவற்றையும் உடையவனானாலும் மாதர்மேல் அதிக மோஹமுள்ளவனாயிருந்தான். இப்படி யிருக்குங்காலத்தில், ஒருநாள் தன் எட்டு மந்திரிகளையும் அழைப்பித்து, அவர்களை நோக்கி, "எனக்கு நற்கதி யடையும் விருப்ப முண்டாயிருக்கின்றது, அதற்கு உபாயம் யாதோ அதனை நீங்கள் ஆராய்ந்து சொல்லவேண்டும்" என்று சொல்ல, அவர்கள் ஆலோசித்து, "ஓ மஹாப்ரபுவே! காசிக்ஷேத்ரத்தில், கபீர்தாச ரிருக்கிறார், அவர் திருவடியை ஆசிரயித்தால் நற்கதி யடை

யலாம்'' என்று சொல்லி, கபீர்தாசருடைய மஹிமையையும் சொன்ஞர்கள். அதைக்கேட்ட அரசன் மனமகிழ்ந்து, ஒருநாள் காசிநகரத்துக்கு வந்து, கபீர்தாசருடைய மனைக்குள்ளே பிரவேசித்து, தாசரை அடிவணங்கி நின்று, அடியேனைக் கடைத்தேற்றவேண்டும்'' என்று ப்ரார்த்திக்க, தாசரானவர் அரசனுடைய ப்ரார்த்தனைக் கிரங்கி அவனுக்கு ஸ்ரீராமதாரக மந்த்ரத்தை உபதேசித்து அதை அநுஷ்டிக்கும் விதத்தையுஞ் சொல்லி விடைகொடுக்க, அவனும் வணங்கி விடைபெற்றுத் தன் ஊருக்குப் போய், தாசர் சொன்னபடி ஸ்ரீராமநாமத்தை அநுஷ்டிக்காமல் சிலநாள் கழித்தான். பிறகு ஒருநாள், இவன் படுத்து நித்திரைசெய்கிற கட்டிலை அலங்கரித்த தாசியானவள், அந்தக் கட்டிலின் படிமேல் உட்கார்ந்து, கட்டிலின்மேல் தலை சாய்த்து நித்திரை செய்தாள். அப்படி அவள் படுத்து நித்திரை செய்யும் போது, அரசன் வந்து பார்த்து மிகவுங் கோவங்கொண்டு, சேவகரைக்கொண்டு நான்கு சவுக்குகள் துணிக்கைகளாய்த் தெறிக்குமளவும் மாறிமாறி யடிக்கச்செய்தான். இந்த அடிகளால் தன் உடம்பு முழுதும் ரத்தம் பெருகியோடக் கண்டும் அந்தத் தாதியானவள் துன்பப்படாமல் நகைத்துக்கொண்டிருந்தாள். இதைக் கண்ட அரசன் அதிசயித்து, அவளை நோக்கி, "நீயேன் நகைத்தாய்?'' என்று கேட்க, அவள் அவனை நோக்கி, "ஓ மஹாப்ரபுவே! உனது புஷ்பசயநத்தினருகே சற்று நேரம் மெய்மறந்து நித்திரை செய்த எனக்கு இந்தத் தண்டனை யுண்டானபோது, அந்தப் புஷ்பசயநத்தின் மேல் எப்பொழுதும் படுத்து நித்திரை செய்கிற உமக்கு எப்படிப்பட்ட தண்டனை கிடைக்குமோ வென்பதைக் குறித்து நகைத்தேன்'' என்று அச்சமில்லாமல் மறுமொழி சொன்னாள். அவள் இந்த ப்ரகாரம் சொல்லக்கேட்ட அரசன், உடனே ஞானவானாகி, தனது சிறந்த சம்பத்தையெல்லாம் வெறுத்துத் தனியனாகி நகரத்தைவிட்டு நீங்கும்போது, தன்னைப் பின்தொடர்ந்தவர்களை நோக்கி, "நான் இந்தப் பிரபஞ்ச வாழ்க்கையைப் பொய்யென்றறிந்து துறந்துபோகிறேன், நீங்கள் என்னைத் தொடர்ந்து வருவதில் உங்களுக்கு ஒரு பிரயோஜநமுமில்லை'' என்று சொல்லி நிறுத்திவிட்டு, ஸ்ரீராமநாமத்தை யுச்சரித்துக்கொண்டே ஒரு அரணியத்தை யடைந்தான்; அவ்விடத்தில் நான்குநாள்வரைக்கும் தங்கியிருக்க, ஸ்ரீபகவானானவர் தமது திவ்யாயுதங்களாகிய சங்கசக்ராதிகளோடும் இவ்வரசனுக்கு ப்ரத்யக்ஷமாகி, அபயந்தந்து மறைந்துபோனர். பிறகு சாதுக்களோடுகூடி, பசிதாகங்களைப் பொறுத்து, ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநம்

களையும் குணுநுபவத்தையும் கேட்டுக்கொண்டிருந்தான். இப்படியிருக்கும்போது அவ்விடத்தில் ஒரு பக்கிரானவர் வாழ்ந்துகொண்டிருப்பதை யறிந்து அவரிடத்தை யடைந்தான்; அந்தப் பக்கிரானவர் நெடுநாளாய்ப் பகவத்தியாநம் பண்ணிக்கொண்டிருப்பதனுல் அவருடைய பக்திக்கு ஸ்ரீ பகவானுனவர் திருவுளங் கனிந்து, அவர் பசி தணிந்திருக்கும்பொருட்டு நாள்தோறும் இரண்டு அப்பங்களும் கீரையும் அருள்செய்வது வழக்கம். ஆகையால் அன்றும் அப்படியே இரண்டு அப்பங்களும் கீரையும் பகவானுல் அருள்செய்யப்பெற்ற அந்தப் பக்கிரானவர் அவற்றை உண்ணப்போகிற சமயத்தில் இந்த அரசன் வரக்கண்டு, "நீயார், நீ யெத்தனை நாளாக இந்த வேஷங்கொண்டிருக்கிருய்?" என்று கேட்க, நான் க்ஷீராப்திநாதனுகிய பகவானை நம்பி இந்த வேஷம்பூண்டு எட்டுநாளாயிற்று" என்றுன். இதைக்கேட்ட பக்கிரானவர், "நீ நல்லவன்" என்று சொல்லிவிட்டு, "இவனை நாம் நம்மிடத்தில் சேர்ப்போமானுல் நமது இரண்டு அப்பத்தில் இவனுக்கு ஒரு அப்பம் கொடுக்கவேண்டி வரும்" என்று மனத்தில் ஆலோசித்து, அரசனை நோக்கி, "நீ நூதனமான பக்கிராதலால் இங்கிருக்கவொண்ணுது, வெளியேபோ" என்று சொல்ல, அரசனும் அப்படியே வெளியே வந்து தங்கியிருந்தான். அப்போது ஸ்ரீலக்ஷ்மீநாதராகிய பகவானுனவர் பெரியபிராட்டியாரை நோக்கி, "என் அடியானெருவன் எட்டுநாளாகப் பசிதாகங்களைப் பொறுத்து என்னையே தியாநித்துக்கொண்டிருக்கிருன், அவனுக்கு நல்ல உணவு கொண்டுபோய்க் கொடுத்துவா" என்று நியமிக்க, அப்படியே பிராட்டியாரும் ஒரு பொற்கலத்தில் சிறந்த வுணவை யேந்திக்கொண்டு போய் அரசனுகிய பலக்புகாரை நோக்கி, "இந்த வுணவை யுண்ணக்கடவாய்" என்று சொல்ல, அரசன் அந்தப் பிராட்டியாரை உற்று நோக்கி, "இவர் லோகமாதாவாகிய திருமகளே" என்று துணிந்து அவரை வணங்கி, அவர் அளித்த அமுதைப்பெற்று உண்டு பசியாறி மகிழ்ந்திருந்தார். இதைக் கண்ட பக்கிரானவர் மனம் பொறுக்காமல் "பகவானுனவர் எட்டுநாளாகத் துறந்திருப்பவனுக்குப் பொற்கலத்தில் சிறந்த இனிதாகிய அமுதத்தைக் கொண்டுவந்து உண்பித்தார், நான் நெடுநாளாகத் துறவியாய்த் தம்மைப் பஜித்துக்கொண்டிருக்கிறேன், எனக்குத் தினந்தோறும் இரண்டு மாவடையும் கீரையும் கொடுக்கிருர், இப்படி வஞ்சனை செய்வது இந்தப் பகவானுக்குத் தகுமோ? இனி இவர் கொடுக்கிற அப்பங்களை நான் உண்ணமாட்டேன்" என்று சொல்லி, மனவருத்தத்தோடு நித்திரை செய்யும்

போது, அந்தப் பக்கிருடைய கனவில் பகவானனவர் ஒரு பக்கிர் வேஷம் பூண்டுவந்து, எதிரே நின்று, "இவன் அரசனயிருந்து சகல சம்பத்தோடும் வாழ்ந்திருந்தவன், இவன் அப்படிப்பட்ட பெருஞ் செல்வத்தை யெல்லாம் வெறுத்து என்னிடத்தில் அன்புசெய்து தியாகித்து வைராக்யசீலனு யிருக்கிறுன், நீ சாதாரண மனிதன், ஆனல் நீயும் என்னை நம்பிப் பஜித்துக்கொண்டிருக்கிறுய், நீங்க ளிரு வரும் என்னிடத்தில் பக்தி செய்வதில் சமானமானவர்களா யிருந் தாலும், உங்களுடைய பூர்வாசிரம நிலைகளுக்குத் தகுந்தபடியே உங்க ளிருவருக்கும் உணவளிப்பது எனக்குக் கடமையாதலால் இப் படிச் செய்தேன், இதைக் குறித்து நீ யென்னை வெறுத்துக்கொள் ளத்தகாது" என்று சொல்லி மறைந்தார். உடனே பக்கிரானவர் விழித்தெழுந்துவந்து, பலக்புகார் திருவடியில் வீழ்ந்து வணங்கிப் பலவகையாய்த் தோத்திரம் செய்தார். பிறகு பலக்புகார் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போகும்போது, ஒரு பெரிய நகரத்தைக் கண்டு, அதனுள்ளே பிரவேசித்து, அங்கிருந்த ஒருமடத்தில் அநே கம் பக்கிர்கள் இருக்கப் பார்த்து, அவர்களைக் கிட்டும்போது, அவர் கள் இவரைப் பார்த்து, "இவன் உண்மையான பக்கிரா யிருந்தால் இவன் கையில் ஜபமாலை முதலிய சின்னங்க ளிருக்கவேண்டுமல்லவா? அவைக ளில்லாமையால் இவனை நாம் சேர்க்கக்கூடாது" என்று ஆலோசித்து, "உள்ளே வரவேண்டாம்" என்று தடுக்க, இவரும் வெளியேவந்து தங்கியிருந்தார். அப்போது, கருணைக்கடலாகிய பக வானனவர் ஒரு சிறந்த பக்கீர்வேஷம் கொண்டுவந்து, மடத்திலிரு ந்த பக்கிர்களை நோக்கி, "பலக்புகார்போலத் திரிகரண சுத்தியுள்ளவர் களும், வைராக்ய சீலர்களும், நிஷ்டை ஜீவகாருணிய முதலானவை யுள்ளவர்களும் த்ரிலோகத்திலு மிருக்கமாட்டார்கள். ஆகையால் அந்தப் பலக்புகாருடைய மனத்தில் ஜபமாலை முதலானவைகள் அமைந்திருக்கின்றன" என்று சொல்லி விலகினர். அதைக்கேட்ட பக்கிர்களெல்லாரும்அதிசயித்து, வெளியில்வந்து பலக்புகாரைப் பார் த்து, "ஒன்றான கடவுளே இந்தவேஷம்பூண்டு வந்திருக்கிறார்" என்று இவரிடத்தில் பக்தியுள்ளவர்களாய், மடத்துக்குள்ளே அழைத்து வந்து, பலவகையாய்த் தோத்திரம்செய்து வணங்கினர்கள். பலக் புகாரானவர் அன்றுமுதலாகத் தாம் நினைத்தபோதெல்லாம் பகவா னனவர் எழுந்தருளிச் சேவை சாதிக்கப்பெற்று, அந்தமடத்தில் இனிது வாழ்ந்திருந்தார் என்றுசொல்லி, மேலே ஷேக்பரீத் தாசர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

பலக்புகார் சரித்திரம் மூற்றிற்று.

எழுபத்தெட்டாவது

ஷேக்பரீத்தாசர் சரித்திரம்.

முற்காலத்தில் ஒரூரில் கணவனை யிழந்த ஒரு மாதுசிரோமணியின் வயிற்றில் ஒரு நற்புதல்வர் அவதரித்தார்; அவருக்கு ஷேக்பரீத் என்று பெயரிட்டு அன்போடு வளர்த்து வருங்காலத்தில், இவருக்கு பருவம் நிரம்பி அறிவுக்கிளர்ச்சி யுண்டாயிற்று. இப்படியிருக்கையில், இவர் ஒருநாள் தமது தாயை நோக்கி, "அம்மா! எனக்குப் பகவானைக் கண்டு சேவிக்கவேண்டுமென்கிற விருப்பம் உண்டாயிருக்கின்றது; ஆகையால் அவரைக் காட்டவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, இதைக் கேட்ட தாயானவள் இவரை நோக்கி, "அப்பா குழந்தாய்! ஜகதீசனாகிய பகவானை யெளிதாகக் காணவொண்ணாது, அநேகம் பெரியோர்கள் அவரைத் தரிசிக்க விரும்பிக் காமக்ரோதாதிகளாகிய உட்பகைவரை வென்றும், காடுகளிற்போய்க் கடுந்தவம் புரிந்தும், வைராக்யசாலிகளாய்ப் பாலைவனத்திற் பயின்று திரிந்தும், ஸாங்க்யதாரக அமநஸ்கங்கள் என்றும் மந்த்ரலய ஹடங்கள் என்றும் அநேக வேறுபாடுகளோடு கூடின யோகங்களைச் செய்தும், ஆத்மவிசாரணை செய்தும், ப்ரபஞ்ச வாழ்வையும் அந்நபாநாதிகளையும் வெறுத்தும், ஹரிதிநமாகிய ஏகாதசி விரதம் முதலானவற்றை நியமமாய் அநுஷ்டித்தும், பலவகையான யாகங்களைச் செய்தும், பலவகையான தான தர்மங்களைச் செய்தும், எல்லா வுயிர்களையும் தம்முயிர்போலப் பாவித்தும், ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநஞ் செய்தும், இன்னும் அநேகமான வழிகளில் முயன்றும் கடவுளைக் கண்டு உஜ்ஜீவிக்கிறார்கள்; ஆகையால் அந்த மார்க்கங்களில் உனக்கநுகூலமான மார்க்கமொன்றை அவலம்பித்து நீ அந்தக்கடவுளைக் காணக்கடவாய்" என்றாள். இப்படி தம் தாயார் சொல்லக் கேட்ட ஷேக்பரீத் தாசரானவர் உடனே வைராக்யசீலராய், உணவு முதலியவற்றை வெறுத்து, தாயை நோக்கி, "அம்மா! நான் அரணியத்துக்குப் போய்க் கடவுளைக் காண்பேன், நீ எனக்கு ஒரு அடை சுட்டுக்கொடுக்க வேண்டும்" என்றார்; அது கேட்ட தாயார் இவரை நோக்கி, "அப்பா குழந்தாய்! அந்நபாநாதிகளை வெறுத்த வுனக்கு அடை யாதுக்கு?" என்று சொல்ல, "இவர் என் மனச்சலநம் அற்றொழியுமளவும் என் கையில் ஒரு அடை யிருக்கவேண்டும்" என்றார். அப்படியே அந்தத் தாயாரும் ஒரு அடை சுட்டுக்கொடுக்க, அதை வாங்கி, ஒரு வஸ்திர

த்தில் முடிந்து, அந்த வஸ்திரத்தைத் தமது வயிற்றிற் சேர்த்துக் கட்டிக்கொண்டு வனத்திற் போய், ஒரு மலைமேலேறி, பகவத்தியா நம் செய்துகொண்டிருந்தார். பிறகு தமது தியாநத்துக்கு இரங்கிப் பகவானனவர் காட்சி கொடுக்கவில்லையே யென்னும் துக்கத்தோ டிருக்கும்போது இவருக்குப் பசி அதிகரித்தது. அந்தப் பசிக்குத் தாம் வைத்திருக்கிற அடையை யுண்ணாமல், அங்குள்ள தழைகளைப் பறித்துண்டு பசிதணிந்திருந்தார். இப்படி யிருக்கும்போது, அங்கே ஒரு செட்டியானவன் எருதுகளின்மேல் சர்க்கரைப் பொதிகளை யேற்றிக் கொண்டுவர, அவனைத் தாசரானவர் நோக்கி, "இவ்வெரு துகளின்மே லிருக்கிற பொதிகளில் என்ன சரக்கு அடங்கி யிருக்கி றது?" என்று கேட்டார். அதற்கு அந்தச் செட்டியானவன் ஏளன மாக "இவை மண்பொதிகள்" என்று மறுமொழி சொல்லிவிட்டு எருதுகளை யோட்டிக்கொண்டுபோய் ஊரை யடைந்து, பொதிகளை யவிழ்த்துப்பார்த்து எல்லாம்மண்ணாயிருக்கக்கண்டுபயந்து, "ஐயோ! அந்தப்பகிர் கேட்டதற்கு உண்மையைச்சொல்லாமல் மண்ணென்று ஏளனமாகச் சொன்னோமே, அந்தப் பாவத்தால் இப்படி நேரிட் டது, அந்தப் பகிர் மிகவும் பகவத்பக்தி யுள்ளவராகவும், மஹாநுக வும் காணப்படுகின்றது. ஆகையால் அவரிடத்துக்குப் போய் நமது குறையை நீக்கிக்கொள்ள வேண்டும்" என்றெண்ணி, அந்தப் பொதி களை முன்போலவே எருதுகளின்மே லேற்றிக்கொண்டு தாச ரிருக் கும் இடத்துக்குவர, தாசரானவர் அவனை நோக்கி, முன்போலவே இந்தப் பொதிகளில் "என்ன சரக்கு அடங்கி யிருக்கிறது?" என்று கேட்டார். அதற்கு அவன் "சர்க்கரைப் பொதிகள்" என்று மறு மொழி சொல்லிவிட்டு, அங்கேதானே அந்தப் பொதிகளை அவிழ்த் துப்பார்த்து, முழுதும் சர்க்கரையா யிருக்கக்கண்டு, "இவர் மஹா த்மா" என்று அதிசயித்து, ஒரு பொற்றட்டில் சர்க்கரையை யேந் திக்கொண்டுவந்து தாசருக்கெதிரே வைத்து, "அடியேன் செய்த பிழையைப் பொருத்தருள வேண்டும்" என்று ப்ரார்த்தித்து வண ங்கினன். தாசரானவர், "ஒ பகவானே! இந்தச் சர்க்கரைச் சுவை யைக்காட்டி என்மனத்தை மயங்கச் செய்கிறாயோ" என்று, அதைப் பெற்றுக்கொள்ளாமல், அவ்விடத்தைவிட்டு ஓடிப்போனார். பிறகு செட்டியானவன் தன் ஊரை யடைந்தான். தாசரும் முன்போலவே வந்து முன்னிருந்த இடத்திலேயே பன்னிரண்டு வருஷம் வரைக் கும் உணவில்லாமல் பகவானைத் தியாநம்பண்ணிக்கொண்டிருந்தார். அப்படியிருந்தும் ஸ்ரீகண்ணபிரானனவர் இவர்க்குப் பிரத்தியக்ஷமாக

வில்லை. பிறகு இவர் பகவானைக் காணாமையா லுண்டான மனவரு த்தத்தோடு மீண்டுவந்து தமது நகரத்தையடைந்து, தாயைக்கண்டு வணங்கி, நடந்த செய்தியைச் சொன்னார். அதைக்கேட்ட தாயான வள், இவரை அருகிலழைத்து, "இப்படியல்லவா மரத்திலைகளை யுருவினாய்" என்று சொல்லி இவருடைய சடையைப்பற்றியிழுத்துத் தலையைக் குலுக்கினாள். அப்போது தாசரானவர், "தாயே, தலை நோகிறது, விட்டுவிடு" என்றார். அதைக்கேட்ட தாயானவள், இவ ரைநோக்கி, "அப்பா, உன் சடையைப்பற்றி யிழுத்தால் உனக்கு இவ்வளவு சிரமமா யிருக்கின்றதே, அந்த மரத்திலைகளை யுருவின போது அந்த மரத்துக்கு எவ்வளவு துன்ப முண்டாயிருக்கும், அதை நீ சற்றும் யோசித்தா யில்லையே" என்றும், "இந்த ஹேது வினாலேயே உனக்குப் பகவானானவர் பன்னிரண்டு வருஷகாலமாகச் சேவை சாதிக்கவில்லை" என்றும் சொல்ல, தாசரானவர், "நமது தாய் சொன்னது உண்மைதான்" என்று மனத்தில் ஆலோசித்து, தமது அரையிற் கட்டிவைத்திருந்த அடையை அவிழ்த்துத் தாயின் கையிற் கொடுத்து வணங்கினார்; வணங்குதலும் தாயானவள் ஆசிர் வதித்து விடைகொடுக்கப் பெற்று, மறுபடியும் முன்போலவே காட் டிற்போய், தழைகளைப் பறிக்காமல், மரங்களின் கீழே உதிர்ந்து கிடக்கிற சருகுகளைத் தின்று சிலகாலம் தங்கிப் பகவத்தியாநம் செய்துகொண்டிருந்தார். அப்படிச் செய்தும் பகவானானவர் இவர்க் குச் சேவை சாதிக்காமையால், இவர் சில கொடிகளைக் கொண்டு தமது காலைக் கட்டி, அந்தக் கால்களை மரத்தின் கிளையில் மாட்டிக் கொண்டு, தலைகீழாகத் தொங்கிக்கொண்டும் பகவத்தியாநம் செய்து கொண்டும் இருந்தார். இப்படி அநேகநாள் கழிந்தும், பகவா னுடைய தரிசநம் இவர்க்குக் கிடைக்கவில்லை. அந்நபாநாதிக ளில்லா மையால் இவருடைய சரீரம் வற்றி அசைவறத் தொங்கிக்கொண் டிருந்ததைக் கண்ட பறவைகளெல்லாம், இது உயிர் நீங்கின உடம் பென்று நினைத்து, உடம்பு முழுதும் கொத்தக்கண்ட தாசர், அந் தப் பறவைகள் கொத்துவதனால் தமக்குண்டாகிற துன்பத்தைப் பாராட்டாமல் சஹித்துக்கொண்டு, அந்தப் பறவைகளை நோக்கி, "நான் பகவானைக் காணவேண்டு மென்கிற பேரவாவுடையேனாத லால், காண்பதற்குக் கருவியாயிருக்கிற கண்களை மாத்திரம் விட்டு, என் சரீரம் முழுதும் கொத்தித் தின்று நீங்கள் பசியாறுங்கள்" என்று சொன்னார். அப்படிச் சொல்லியும் பறவைகள் கேளாமல், தம் பசிமிகுதியால், கண்களையும் கொத்தத் தொடங்கின. அப்போது

தாசரானவர், "ஓ கருணைக்கடலே! ஸ்ரீ கஜேந்திரவாதனே! உன்னைக் காணவேண்டுமென்கிற பேரவா வுடையேனுடைய கண்களும் போய்விட்டால் இனி உன்னை யெப்படிக் கண்டு களிகூர்வேன்! தாயினுஞ் சிறந்த தயாளுவே" என்று தோத்திரம் செய்தார்; செய்தலும், பகவானனவர் திருவுளமிரங்கித் திருமுடி விளங்கவும், குண்டலங்கள் பிரகாசிக்கவும், பஞ்சாயுதங்கள் ஜொலிக்கவும், நான்கு திருத்தோள்களும், அவற்றிலணிந்த திருத்துழாய் மாலையும், பொன்னுடையும் விளங்க இவருக்கு ப்ரத்யக்ஷமாகி, தமது திருக்கரங்களால் இவரது காற்கட்டை யவிழ்த்து, உடம்பு முழுதும் தடவினவுடனே, இவர் திவ்ய சரீரியாய் விளங்கினர். பிறகு பகவானுடைய ஸ்ரீபாத கமலங்களை வணங்க, பகவானும் இவரைத் தழுவிக்கொண்டார். பிறகு தாசரை நோக்கி, "நீ என்னைக்காண விரும்பி இருபத்து நான்கு வருஷம் கடுந்தவம் புரிந்து வருந்தினய், இனி நீ உன் ஊருக்குப்போய் என்னைத் தியானித்துக்கொண்டு சுகமாக வாழ்ந்திரு" என்று இவருடைய சிரசின்மேல் கையை வைத்தார். பிறகு தாசர் வாழ்த்திக்கொண்டிருக்க மறைந்துபோனர். போனபிறகு தாசரும், பகவான் தமக்குச் சேவை சாதித்த திருவுருவத்தை மனத்திலமைத்துக்கொண்டு, தமது ஊருக்குப்போய்த் தமது தாயைக் கண்டு, "தாயே! உன் அநுக்ரஹத்தால் மேகவண்ணனகிய பகவானைக்கண்டு, என் துன்பமுழுதும் நீங்கப் பெற்றேன்" என்றார். அதைக்கேட்ட தாயும் மிகவும் மனமகிழ்ந்திருந்தாள். பிறகு தாசரும் அன்றுமுதல் பகவந்நாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டும், தம்மை வந்தடுத்தோரையும் ஹரிபக்தராகச் செய்துகொண்டும் இனிது வாழ்ந்திருந்தார் என்று சொல்லி, மேலே சக்குபாயி வைபவத்தைச் சொல்லத்தொடங்கினர்.

ஷேக்பரீத்தாசர் சரித்திரம் முற்றிற்று.

எழுபத்தோன்பதாவது

சக்குபாயி சரித்திரம்.

ஸ்ரீ க்ருஷ்ணாநதிக்கரையில், காவீரம் என்னும் நகரத்தில், ஒரு வேதியனிருந்தான். இவன் தன் மனைவி மக்களோடு கூடிவாழும் நாளில், மகனுக்குப் பருவம் வாய்க்கக் கண்டு அவனுக்குச் சக்குபாயி என்னும் பெயருள்ள ஒரு பெண்ணை மணம் புணர்வித்தான்; அந்தச் சக்குபாயி என்னும் பெண்ணணங்கானவர் நன்மை தீமைகளை நாடா

மல், எப்பொழுதும் ஸ்ரீ விட்டலப்பெருமானை மனத்திலிருத்தித் தியானித்துக்கொண்டு, மாமிமாமனர் செய்யும் கொடுமைகளை மனத்திற்கொள்ளாமல் அவர்களிட்ட வேலைகளைக் குறைவறச் செய்துகொண்டு அன்பு, அடக்கம், அருள், பொறுமை முதலாகிய நற்குணங்களுடன் கணவனோடுகூடி வாழ்ந்துகொண் டிருக்குங்காலத்தில், ஒருநாள் அயலார் சிலர் வந்து, அந்த வேதியனை நோக்கி, "அறியாத பெண்ணாகிய உன் மருமகளை இப்படி வருத்துவது நன்மையல்ல" என்று சொல்ல, வேதியனும் அவன் மனைவியும், முன்னினும் அதிகமாகச் சக்குபாயியை வருத்தினர்கள், அதைக் கண்ட சக்குபாயியானவர் விட்டலப்பெருமானைக் குறித்து, "ஓ பகவானே, அடியேன் முன் செய்த தீவினையால் இப்படிப்பட்ட மாமிமாமனர் வசத்தில் அகப்பட்டு வருந்துகிறேன்; இவ்வளவு துன்பத்தி லகப்படாத பக்ஷத்தில், இந்த இல்வாழ்க்கையையே சுகரூபமாய் நினைத்து, உன்னை மறந்துவிடுவே னென்றுதானோ, இவ்வளவு துன்பப்படவைத்தாய்" என்று பலவாறு தோத்திரம் செய்துகொண்டிருந்தார். இப்படி யிருக்கும்போது ஒருநாள் அயல் வீட்டுக்காரியாகிய ஒருத்தி இவரிடத்துக்கு வந்து, "அம்மா! உனக்குத் தாய்தந்தையர் இல்லையா? உன் ஊர் எது? நீ வந்து வெகுநாளாயிற்றே; தாய்தந்தையர் இருந்தால் அவர்களைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசையுண்டாகாதா?" என்று கேட்க, இவர் அவர்களை நோக்கி, "என்னூர் பண்டரிபுரம், ரகுமாயியும் விடோபாவும் எனக்கு மாதாபிதாக்கள்" என்று சொல்லிவிட்டு மௌநமாயிருந்தார். பிறகு சிலநாள் கழித்து, பண்டரி யாத்திரை போவோர் சிலர் க்ருஷ்ணாநதிக்கரையில் வந்திறங்கி ஸ்நாநம் செய்துகொண்டிருக்கும்போது, இந்தச் சக்குபாயியும், அண்டைவீட்டுக்காரியும் நீர் முகந்துவரப் போனர்கள். அந்தச்சமயத்தில் யாத்திரைக்கார் மிகவும் இனிமையான ஸ்ரீ ஹரிகீர்த்தனைகளைப் பாடினர்கள். அந்தக் கீர்த்தனைகளைக் கேட்ட சக்குபாயியார், மிகவும் மன முருகி அண்டைவீட்டுக்காரியை நோக்கி, "நீ வீட்டுக்குப் போ நான் இவர்களைப் பின் தொடர்ந்துபோய்ப் பண்டரிபுரத்தைச் சேர்கிறேன்" என்று சொல்லி, அவளை யனுப்பிவிட்டு, யாத்திரைக்கார் இருக்குமிடத்தில் போய் அமர்ந்திருந்தார். அண்டைவீட்டுக்காரி போய், இந்தச் செய்தியை, இவருடைய மாமி மாமனருக்குத் தெரிவித்தாள். அந்தச் செய்தியைக் கேட்ட சக்குபாயி கணவனானவன் மிகுந்த கோவங்கொண்டு, ஆற்றங்கரைக்கு வந்து, அங்கிருந்த சக்குபாயியைக் கூந்தலைப் பிடித்திழுத்து அடித்து வீட்டுக்கழைத்துவந்தான்; வந்து,

தாய் தந்தையருக்குத் தெரிவித்தான்; அவர்களும் கைசலிக்க அடித்து, ஒரு தூணிற்கட்டி, உணவு முதலியவற்றையும் கொடாதிருந்தார்கள். அப்போது சக்குபாயியார், விட்டலப்பெருமானை மனத்தில் தியானித்து, "பகவானே! உன் உத்ஸவத்தைத் தரிசிக்கப்பெருமல் நான் மனம் வருந்துவது அழகோ! அடியேன்மீது க்ருபை செய்யலாகாதோ" என்று தோத்திரம் பண்ணினர். இவரது தோத்திரத்துக்கு விட்டலப்பெருமான் திருவுளமிரங்கி, ருகுமாயியை நோக்கி, "காவீரம் என்னும் ஊரிலுள்ள சக்குபாயியென்பவள் என்னையேயிடைவிடாமல் நினைத்துக்கொண்டும் பஜித்துக்கொண்டும் இருப்பவள்; அவளை அவள் கணவன், மாமி, மாமன் முதலானோர் மிகவும் வருத்தியும் வைதும் அடித்தும் ஹிம்ஸை செய்தது மல்லாமல், தூணிற் கட்டிவைத்து அந்நபாநாதிகளும் கொடாமலிருக்கிறார்கள்; ஆகையால், அங்கே போய் அவளது கட்டவிழ்த்து மீட்டுவரவேண்டும், நான் போகிறேன்" என்று சொல்லி, நடுராத்திரியில் சக்குபாயி போலவே உருவம் கொண்டுவந்து சக்குபாயிக் கெதிரேநிற்க, சக்குபாயியார், "நீ யார்?" என்று கேட்க, பகவானனவர், "நான் பண்டரிபுரத்துக்குப் போகிறவள், மிகவும் பகவத்பக்தியுள்ளவளாகிய உன்னையும் அழைத்துக்கொண்டு போகவந்தேன்" என்றார். அதைக் கேட்ட சக்குபாயியார் பகவானை நோக்கி, "நீ என்னை அழைத்துக்கொண்டு போனால், என் கணவன் முதலானோர் பின்தொடர்ந்து கடிந தண்டனை செய்வார்கள். ஆகையால் நான் உன்னோடு வரத்தகாது" என்று சொல்ல, பகவானனவர், "நீ சொல்லுவதுசரிதான்" என்று சக்குபாயியாரைக் கட்டவிழ்த்துவிட்டு, அவரிருந்த இடத்தில் அவருக்குப் பதிலாகத் தாம் கட்டுண்டு நின்று, சக்குபாயியை நோக்கி, "நீ பண்டரிபுரத்துக்குப் போகிறவர்களோடு சேர்ந்து போகலாம்" என்றார். அதைக் கேட்ட சக்குபாயியார் மிகு மகிழ்ச்சியோடு போய்விட்டார். அப்படியிவர் போனபிறகு இங்கே கட்டுண்டிருக்கிற பகவானாகிய பொய்ச் சக்குபாயியை மாமன் முதலானோர் பதினைந்துநாள் வரைக்கும் மிகவும் ஹிம்ஸை செய்துகொண்டிருக்கும்போது, கணவனனவன் மனமிரங்கி, "ஐயோ! இவளை யிப்படி வருத்தினால் இவள் இறந்துபோகவுங் கூடும், அப்படி யிறந்துபோனால் இவளைப்போல நன் மனைவி நமக்கு எங்கே கிடைப்பாள்" என்று அன்போடு இவள் கட்டவிழ்த்துவிட்டு, "நீபோய் நீராடிச் சமையல் செய்யக்கடவாய்" என்றனுப்ப, சக்குபாயி ரூபங்கொண்ட பகவானனவர், உடனேபோய் நீராடிவந்து சமையல் செய்தழைக்க கணவன், மாமி, மாமன் என்னு மூவரும் வந்துண்டு முடிந்தபிறகு, வீட்டுவேலைக ளெல்லாம் செய்து,

57

இரவில் கணவனோடு சயநித்துக்கொண்டிருந்தார். இப்படி யிவ்விடத்தில் நடந்துகொண்டிருக்க, பண்டரிபுரத்துக்குப்போன சக்குபாயியார், சந்திரபாகையில் மூழ்கி, விட்டலப்பெருமானைப் பஜித்துக்கொண்டேபோய்க் கோயிலுக்குள்ளே பிரவேசித்து, விடோபாவின் திருக்கோல முழுதும் கண்குளிர நோக்கி, சந்நிதிக் கெதிரே நின்று வணங்கி, திருமேனியைத் தழுவிக்கொண்டு திருவடியைப் பற்றியிருந்து, "அச்சுதா, முகுந்தா, பரமோதாரனே, பச்சைமுகில்வண்ணனே" என்று பலவகையாய்த் தோத்திரம்செய்து, பிரதக்ஷிணம் செய்து, ஆநந்தத்தோடு வெளியே வந்து கருடஸ்தம்பத்தை வணங்கி பக்தர்கள் பாடுகிற கீர்த்தநங்களைக்கேட்டு, அன்றிரவில் ஒருபக்கத்தில் நித்திரை செய்துகொண்டிருந்து, மறுநாள், நகரை வலம்வந்து எல்லா விபவங்களையும் நோக்கி, விட்டலன் சந்நிதிக்கெதிரே வந்து வணங்கி, பகவானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளில் அழுந்தி, "ஓ பகவானே, அடியேனை உன் திருவடியில் சேர்த்துக்கொள்ளவேண்டும்" என்று ப்ரார்த்திக்கும் சமயத்தில், இவரது உயிரானது உடம்பை விட்டு நீங்கி, பகவானாகிய விடோபாவின் திருவடியில் ஐக்யமாய் விட்டது. உடம்பு சந்நிதிக்கெதிரே விழுந்தது. அப்போது, அங்கிருந்த ஒருவேதியன், இந்த உடம்பைக் கண்டு, இன்னாரென் றறிந்து, சில வேதியர்களோடு ஆலோசித்து, சந்திரபாகா நதிக்கரையில் கொண்டுபோய், அங்கிருக்கிற மயாநத்தில் நெருப்பு மூட்டி யெரித்து நீறாக்கினபிறகு, எல்லாரும் நீராடி, தத்தம் வீடுகளை யடைந்தார்கள். அப்போது ரகுமாயியார், "சக்குபாயியார்க்குப் பதிலாக, என் ப்ராணநாதராகிய பகவானனவர் அவள்போல வுருவங்கொண்டு, குடும்பினியாய் வீட்டுவேலைகள் யாவும் செய்துகொண்டிருக்கிறாரே, இதற்கு என்செய்வது" என்று நெருப்பினால் சுட்டெரித்து நீறாக்கப்பட்ட சக்குபாயியாருடைய எலும்புகளைக் க்ருபா த்ருஷ்டியால் நோக்குதலும், சக்குபாயியார் பூர்வரூபத்தோடு எழுந்து நின்றார். அவரை நோக்கி "உத்ஸவம் முடிந்துவிட்டது, இனி நீ உன் ஊருக்குப்போ" என்று ரகுமாயியார் நியமித்தார். அதைக்கேட்ட சக்குபாயியார், "அப்படியே யாகட்டும்" என்று புறப்பட்டுத் தமது ஊராகிய காவீரபுரத்தில் பிரவேசிக்கும்போது, இவர்போல வுருவங்கொண்டிருக்கிற விட்டலப்பெருமானனவர், நீர்க்குடங்கொண்டு எதிரே வந்து, இவரைக்கண்டு, "உத்ஸவம் முழுதும் நன்றாய்ச் சேவித்து வந்தீரா?" என்றுகேட்க, இவரும் "ஆம், நன்றாய்ச் சேவித்தேன், இப்படியே வருஷந்தோறும் வந்து உதவி செய்யவேண்டும்" என்று பிரார்த்திக்க, பெருமாளும் "அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி, இவர் கையிற் குடத்

தைத் தந்து மறைந்தருளினர். இவரும் நீர் மொண்டுகொண்டு வீட்டில் வந்து புகுஞ்சமயத்தில், பண்டரிபுரத்தில் இவரைச் சுட்டெரித்த, கிவளத்துப் பார்ப்பான் வந்து இவரைக் கண்டு, "இறந்துபோனவள் இங்கே வந்திருக்கிருளே, இது என்ன அதிசயம்" என்று மனத்திலெண்ணிக்கொண்டு, மாமன் மாமிகளை நோக்கி, இவள் பண்டரிபுரத்துக்கு வந்து உத்ஸவம் சேவித்து இறந்துபோக, நான் கண்டு, உங்களுடைய மருமகளென்றறிந்து தகனஞ்செய்துவிட்டு, அந்தச் செய்தியை உங்களுக்குத் தெரிவிக்க வந்தேன், இங்கே இவள் வந்திருப்பதைக்குறித்து யோசித்தால், மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது" என்ருன். இதைக் கேட்ட மாமன் மாமியார், இவரைத் தூணிற்கட்டி, "அடீ உன்னை நாங்கள் வைது அடித்து, பெரிய கம்பத்திற் கட்டியிருந்தோமே, அப்படியிருக்க, நீ பண்டரிபுரத்துக்கு எப்படிப்போனுய்? அங்கே யிறந்து நீருனவள் இங்கே யெப்படி உயிர்பெற்று வந்தாய்? இங்கே வீட்டுவேலைகளையும் குறைவில்லாமற் செய்துவந்தாயே, இதுவெல்லாம் ஒரு மாயா விசித்திரமாய்க் காணப்படுகின்றது, உண்மையைச் சொல்" என்று வற்புறுத்திக் கேட்க, இவர் அந்த மாமியாரை நோக்கி, "மாமீ! நீங்கள் என்னைத் தூணிற் கட்டின அன்றிரவிலேயே, யாரோ ஒருத்தி வந்து, கட்டவிழ்த்துவிட்டு, 'நீ போய்ப் பண்டரிநாதனுடைய உத்ஸவத்தைச் சேவித்து வருமளவும் நான் இவ்விடத்திலிருப்பேன்' என்று சொல்ல, நான் போனேன்; இன்று இங்கு வரும்போது நீர்க்குடத்தை என் கையிற் கொடுத்துஅவள்மறைந்துபோனுன், நான் அந்தக் குடத்தில் நீர் முகந்துவந்தேன்; இது தான் நடந்த செய்தி" என்று சொல்லக்கேட்ட மாமி மாமன் முதலானோரெல்லாரும், வியந்து, இவள்போல வந்திருந்தது விட்டலப் பெருமானேயென்று இவரது மஹிமையைப் புகழ்ந்து, இவருடைய மஹிமையை யறியாமல் இவரை மிகவும் வருத்திஞேமே யென்று அநுதபித்து, இவர் கணவன் முதலானவர்களும் ஹரிபக்தர்களாகி, வருஷந்தோறும் பண்டரிநாதனுடைய உத்ஸவத்தைத் தவருமற் சேவித்துக்கொண்டு இனிது வாழ்ந்திருந்தார்கள் என்று சொல்லி, மேலே குபாகும்பார் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

சக்குபாயி சரித்திரம் முற்றிற்று.

எண்பதாவது

குபாகும்பார் சரித்திரம்.

மார்வாட தேசத்தில், சிதடம் என்னும் ஊரில், குபாகும்பார் என்றொரு குயவர் இருந்தார். இவர்: பொறுமை, சாந்தி, தயை, வைராக்யம் முதலானவைகள் அமையப்பெற்றவர்; அன்றியும் ஸ்ரீ ஹரி பஜனையில் மிகு விருப்புள்ளவர். இவர் தமது மனைவியோடும் கூடி வாழுங் காலத்தில், தினந்தோறும் ஒவ்வொரு பாண்டம் செய்து முப்பது நாளானவுடனே முப்பது பாண்டத்தையும் சூளைபோட்டெடுத்து வைத்துக்கொண்டு, நாளொன்றுக்கு ஒவ்வொரு பாண்டத்தை விற்று, அதனால்வரும் பணத்தில் ஸ்ரீ விஷ்ணுபக்தர்க்கு வேண்டியவற்றைக் கொடுத்துத் தாமும் புசித்து, சுகதுக்கங்களைச் சமமாயெண்ணி, ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருப்பார். இப்படியிருக்குங் காலத்தில், அவ்வூர்க்கு அரசனானவன், "இவர் சூளைபோட்டு ஜீவநம் செய்வதற்காகப் பத்துப் பாண்டம் மாதந்தோறும் வரி கொடுக்கவேண்டும்" என்று கட்டளை பிறப்பித்தான். அப்படியே சூளை பிரித்தவுடனே பத்துப்பாண்டம் கொடுத்துவிட்டார். பிறகு பத்துப் பாண்டம் குறையுமே, இந்தமாதம் பத்துநாள் செலவுக் கில்லையே யென்று இவர் கவலை கொள்ளாதபடி விட்டலப்பெருமானனவர் பத்துப் பாண்டம் இவர்சூளையில் அதிகமா யிருக்கும்படி சங்கற்பித்தார். தாசரானவர் சூளை பிரித்து எண்ணிப் பார்க்கும்போது முப்பது பாண்டமும் சரியா யிருக்கக் கண்டு, அதிசயித்து, "விட்டலப்பெருமானே இப்படிச் செய்தார்" என்று அறிந்து, "எனக்காகப் பகவான் இவ்வளவு பிரயாசை யெடுத்துக்கொண்டாரே" என்று அநுதபித்துக் கண்ணீர் பெருக்கிக்கொண் டிருந்தார். அப்போது விட்டலப்பெருமானனவர் இருநூறு சாது ஜநங்களில் தாமும் ஒருவராகக் கலந்துகொண்டுவந்து, "இவ்வூரில் யாராவது அன்னதானம் செய்வாருண்டோ" என்று விசாரிக்கையில், பணக்காரரெல்லாரும் சிறிதும் இரக்கமில்லாமல், குபாகும்பாரைச் சுட்டிச்சொன்னார்கள். அதைக்கேட்ட விடோபாவானவர் சாதுக்களோடுகூடி, குபாகும்பார் வீட்டு வாயிற்படியிற்போய் நின்று, "சீதாராம்" என்றுகூவ, வீட்டினுள்ளே யிருந்த குபாகும்பார் இந்தச் சத்தத்தைக்கேட்டு வெளியேவந்து சாதுக்களை நோக்கி வணங்கி, "வாருங்கள் வாருங்கள், நீங்களெல்லாரும் என்னை நாடிவர நான் என்னதவம் செய்திருந்தேனோ" என்று சொல்லி, "நீங்கள்வந்த காரியத்தைச் சொல்லவேண்டும்" என்று பிரார்த்

திக்க, சாதுக்களெல்லாரும் இவரை நோக்கி, "எங்களுடைய பசியைத் தீர்க்கவேண்டும்" என்றார்கள். அதைக்கேட்ட குபாகும்பார், "அப்ப டியே யாகட்டும்" என்று அவர்களை யிருக்கச்சொல்லி, வெளியே வந்து "இத்தனை பேருக்கும் உணவளிப்பது எப்படி என்றெண்ணி, ஒரு வணிகனிடத்திற்போய், "என் வீட்டில் சில சாதுக்கள் வந்திரு க்கிறார்கள், அவர்களுக்கெல்லாம் அமுது படைக்கவேண்டும், அத ற்குவேண்டிய பொருள்களெல்லாம் கொடுத்தீரானால், விலை கொடுக் கிறேன்" என்று சொல்ல, வணிகன் இவரை நோக்கி, "நீர் ஏழை, நீர் எப்படிக் கொடுப்பீர்? அது இருக்கட்டும், நான் ஒரு கிணறெடுக்க வேண்டும், அந்தக்கிணறு தோண்டிக் கொடுத்தால்போதும்" என் றான். அதுகேட்ட தாசர் "அப்படியே செய்கிறேன்" என்று உறுதி சொல்லி, வேண்டிய சரக்குகளெல்லாம் பெற்றுக் கொண்டுபோய்ச் சாதுக்களுக்குக் கொடுக்க, அவர்கள் கைக்கொண்டு, இவரை நோக்கி, "உமக்கு மிகவும் ஐசுவரிய முண்டாகக்கடவது" என்றும், "ஸ்ரீவைஷ் ணவ சேவையும் லபிக்கும்" என்லும் வாழ்த்திப் போய்விட்டார்கள். மறுநாள் இவர் தாமும் தமது தேவியாருமாகக் கட்டப்பாரை, மண் வெட்டி, கூடை இவைகளை யெடுத்துக்கொண்டு, வணிகனிடத்துக் குப் போய், அவன் காட்டின இடத்தில் கிணறு கல்லத்தொடங்கி, மண்ணைத்தோண்டியெடுக்கும்போது நீரும் காணப்பட்டது, அதைக் கண்டு வணிகனும் இவர்களும் களிப்படைந் திருக்கையில், இவர் நிற்குமிடத்தில் நிலமானது குடவறையாய் அடியற்று இடிந்து வீழ் ந்தது. இவரும் அந்த இடி கிணற்றில் வீழ்ந்தழுந்தினர். இதைக் கண்ட இவரது தேவியார், கரைமேலிருந்து ஓலமிட்டலறும்போது, எல்லாரும் அவ்விடத்தில் வந்துகூடி, இவர் கிணற்றில் அழுந்தியிரு ப்பதையும், மேலே மணலால் மூடப்பட்டுக் கிணறு தூர்ந்திருப்ப தையும் கண்டு, "இவரை யெடுப்பதற்குச் சாத்தியப்படவில்லையே" என்றுவருந்தி, "அவரவர்களுடைய விதிப்படி யெல்லாக் காரியங்க ளும் நடக்கின்றன" என்று தேறி, இவரது தேவியாரை நோக்கி, "அம்மா! நீ துக்கிக்கவேண்டாம், எல்லாம் தெய்வச்செயலேயன்றி வேறல்ல, நம்மால் செய்யக்கூடிய காரியம் ஒன்றுமில்லை" என்று தேற்றி வீட்டுக் கனுப்பினார்கள். பிறகு, கூட்டமாய்க் கூடினவரெல் லாரும், "ஸ்ரீஹரிதாசருக்கு இப்படிப்பட்டகதி நேரிடலாமோ" என் றும், "மட்கலம் வனையும் குயவன் கிணறுவெட்ட வரலாமோ" என் றும், "யாராயிருந்தாலும் அவரவர்செய்த வினைப்பயனை அநுபவி த்தே தீரவேண்டும்" என்றும், "எப்படிப்பட்ட துன்பங்கள் நேரி ட்டாலும் அவைகளைத் தீர்த்தருள வல்லவன் விடோபாவேயன்றி

வேறொருவனு லாகாது" என்றும் இப்படிப் பலவாறுகப் பேசிக்கொண்டு தத்தம் இருப்பிடங்களுக்குப் போய்விட்டார்கள். ஒரு வருஷகாலம் கழிந்தபிறகு, அந்தக் கிணற்று வழியாய் வருவோர் அவ்விடத்தி லிறங்கிச் சமையல்செய்து உண்டு இராக்காலத்தில் அங்கே தானே படுத்து உறங்கும் வழக்கம் ஏற்பட்டது. அப்படிப் படுத்துறங்குவோர், நிலத்துக்குள்ளே தாளம், மிருதங்கம், வீணை முதலிய வாத்யங்கள் முழங்கப் பஜனைசெய்யும் தொனியைக்கேட்டு அதிசயித்து அரசனுக்கு அறிவித்தார்கள். இந்தச் செய்தியைக் கேட்ட அரசன், உடனே அவ்விடத்திற்கு வந்து, அவர்கள் சொன்னபடியே நிலத்தின்கீழ்ப் பஜனைசெய்யும் ஒலியைக்கேட்டு அதிசயித்து, அந்தக் கிணற்று மணலைத் தோண்டி யெடுக்கும்படி ஏவலாளரை யேவினுன். அவர்களும் அப்படியே மணலையெல்லாம்தோண்டி யெடுத்தபிறகு, உள்ளே பஞ்சாயுதங்களோடும், சதுர்ப்புஜங்களோடும், ரத்நகிரீட குண்டல கேயூராதிகளோடும் ஸ்ரீ விட்டலப் பெருமானுனவர் எழுந்தருளியிருக்கவும், அந்தப் பகவானுக்கெதிரே குபாகும்பார் நின்று ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்யவும்கண்டு, அந்த விட்டல விக்ரகத்தையும் குபாகும்பாரையும் மேலெடுத்து, மிகவும் அன்போடு வணங்கி, "இவர் மனிதர் அல்லர்" என்று மிகவும் புகழ்ந்து கொண்டாடி, அங்கே ஒருமடம் ஏற்படுத்தி, அதில் விட்டல விக்ரஹத்தைப் பிரதிஷ்டைசெய்து, அரசனேடு அவ்வூரா ரெல்லாரும் குபாகும்பாருக்குச் சீடர்களாகி, அளவற்ற திரவியத்தை அந்த மடத்துக் குரிமையாக்கினர்கள். பகற்கால முழுதும் விஷ்ணு பக்தர்களுக்கும் அதிதிகளுக்கும் போஜந மிடுதலாலும் இராக்கால முழுதும் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தநத்தாலும் கழித்துக்கொண்டும், வருஷந்தோறும் ஆடிமாதம் கார்த்திகைமாதம் இவ்விரண்டு மாதத்து ஏகாதசிகளில் பண்டரிபுரத்துக்குப் போய் ஸ்ரீகண்ணபிரானைத் தரிசித்துக்கொண்டும் இனிது வாழ்ந்திருந்தார்கள் என்றுசொல்லி, மேலே கமலாகரர் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

குபாதய்பார் சரித்திரம் முற்றிற்று.

எண்பத்தோருவது

கமலாகரர் சரித்திரம்.

ஸ்ரீ பண்டரிபுரத்தில், கமலாகரர் என்றொருவர் இருந்தார்; அவர்க்குச் சுமதி யென்கிற பெயருள்ள மனைவியும், பதுமாகரர் என்கிற

பெயருள்ள ஒரு ஐந்து வயது புதல்வனும் இருந்தார்கள். இவர் நாள் தோறும் நதிக்குச் சென்று நீராடி, நித்ய கர்மங்களை முடித்து, அந்த வூரிலுள்ள வீடுகள்தோறும் போய்ப் பிக்ஷையெடுத்துக்கொண்டு தம் வீட்டுக்குவந்து, சமையல் செய்வித்து, திருமாலடியாரை முன்னே யுண்பித்து, பிறகு தாமும் தமது மனைவிமக்களோடிருந்துண்டு வாழ்ந்திருந்தார். இப்படி யிருக்குங்காலத்தில், புதல்வனோடும் புறப்பட்டுப் பிக்ஷைக்குப் போகும்போது, ஒரு இடத்தில் ஸ்ரீஹரிநாம ஸங்கீர்த்தன வொலி கேட்டது; அதைத் தேடிவருகையில், நிவர்த்தியும், ஞானதேவரும், சோபானதேவரும், முக்தாபாயியாரும், நாமதேவரும், கோராகும்பாரும், சாங்கதேவரும், கபீர்தாசர் முதலான சாதுக்களும் கூடி, ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டு ஒரு பக்கத்திலிருப்பதைக்கண்டு, தாமும் தமது புதல்வனுமாகப் போய், அந்தச் சாது கோஷ்டிக்கெதிரே விழுந்து வணங்கித் துதித்து நின்று, "ஸ்வாமிகளே ! நான் செய்த தவப்பயனால் உங்களைக் காணப்பெற்றேன், நீங்களெல்லாரும் அடியேன் வீட்டுக்கு வந்து அடியோங்களை ஈடேற்றவேண்டும்'' என்று ப்ரார்த்தித்தார். அப்போது அந்தச் சாதுக்களெல்லாரும் இவரை நோக்கி, "தாசரே! நீர் அடியாரிடத்தில் பக்தியுள்ளவர் என்பதற்குச் சந்தேஹமில்லை; ஆனால், லௌகிக விஷயத்தில் மிகவும் எளியவர், நாங்கள் சிலருமல்ல, பலராயிருக்கிறோம், இத்தனை பேரையும் நீர் திருப்தி யடைவிப்பது வருத்தம் ஆகையால், நீர் பேசுகிற இந்த வுபசார வார்த்தைகளே எங்களை மிகவும் மனங்களிக்கச்செய்தன; இதுவே போதும்" என்றார்கள். அதைக் கேட்ட கமலாகரர், சாதுக்களை நோக்கி, "ஸ்வாமிகளே ! ஸ்ரீபாண்டுரங்கப்பகவானும் ரகுமாயியும் அடியேனுக்குத் தந்தை தாயராயமைந்திருக்கிறார்கள். ஆதலால் அடியேனுக்கு ஒரு குறைவுமில்லை, அடியேனிடத்தை உமது இடமாகப் பாவித்து சந்தோஷத்தோடு எழுந்தருளி, அடியேன் செய்யும் பூஜையை அங்கிகரித்தருளவேண்டும்'' என்று பிரார்த்திக்க, சாதுக்கள் இவருடைய பிரார்த்தனையை மறுக்கமாட்டாமல், "ஓ கமலாகரரே ! உமதிஷ்டம்போலவே யாகட்டும், நாங்கள் நீராடி வருகிறோம், நீர் முன்னே போகலாம்" என்று சொல்ல, இவர் மிகவும் மனக்களிப்போடு விரைந்துபோய்த் தமதிடத்தை யடைந்து, மனைவியாராகிய சுமதியை நோக்கி, "பெண்ணே ! இன்றைக்கு விசேஷமான பாகவதகோஷ்டிகள் நம்மிடத்துக்கு வருவார்கள்; அவர்களுக்கெல்லாம் நல்ல வுணவுகளை யமைத்து வைக்கவேண்டும்" என்று சொல்ல, தேவியாரும் "அப்படியே யாகட்டும்",

என்று சொல்ல, தாசர் அந்தச் சாதுக்களை யழைத்து வரப்போனர். வருவதற்கு முன்பே, சுமதிதேவியார், அயல் வீட்டில் தமக்கு வேண்டும் பொருள்களெல்லாம் கடனாக வாங்கி வந்து பாகஞ்செய்து, முடிவில் பாயசஞ் செய்துகொண்டிருக்கும்போது, விறகு பற்றாமற் போக, வேறொரு உதவியில்லாமையால், புதல்வனை யழைத்து, நமது புழைக்கடையிலிருக்கிற எருமுட்டைகளிற் சிலவற்றை யெடுத்துவா" என்றேவ, அவன் போய் எடுக்கும்போது, அந்த எருமுட்டைக் குவியலினுள்ளே பதுங்கியிருந்த ஒரு பாம்பானது சீறி யெழுந்து இச்சிறுவனைக் கடித்தலும், சிறுவன் பெருங்குரலிட் டலறினன்; இந்தச் சத்தத்தைக் கேட்ட சுமதிதேவியார் விரைந்தோடி, மைந்தனைக் கண்டு, விசாரித்துச் செய்தியை அவனாலே கேள்விப்பட்டு, மிகவும் மனங்கலங்கி நிற்கும்போது, மைந்தனும் விஷவேகத்தால் கிறுகிறுத்து விழுந்திறந்தான். அதைக்கண்ட சுமதிதேவியார் பூர்வ காலத்தில் மைந்தனாகிய லோஹிதனை யிழந்துவருந்தின சந்திரமதியைப் பார்க்கிலும் அதிக துக்கமுள்ளவளாணுலும், ஹரிதாசர்களுடைய பூஜைக்கு விரோதமுண்டாகாமல், குழந்தையை யெடுத்துக் கொண்டுவந்து தொட்டிலில் வளர்த்திவிட்டு நீராடி பாயசவேலையையும் முடித்து, சாதுக்களுடைய வரவை யெதிர்பார்த்திருந்தார். இப்படியிருக்கும்போது, கமலாகாரும் சாதுக்களை அழைத்து வந்து அவருடைய திருவடியை விளக்க, பிறகு சுமதி தேவியாரும் விளக்கினர். அதின் பிறகு சாதுக்களெல்லாருக்கும் ஆசநம் தந்து, அவர்கள் உட்கார்ந்த பிறகு இலைபோட்டு, கறிவகைகள் பரிமாறி, அமுது படைத்து, அதின்மேல் பருப்புப்பெய்து, நறுநெய்வார்த்து, "சாதுக்களே! அமுது செய்யுங்கள்" என்று பிரார்த்திக்க, அவர்களுள்ளே நாமதேவர், ஸ்ரீகண்ணபிரானைத் தியாநித்தார். அவர் தியாநிப்பதற்கு முன்னே யெழுந்தருளுகிற ஸ்ரீகண்ணபிரான் அன்றைந்து எழுந்தருளவில்லை; அப்போது நாமதேவர் கண்ணபிரான் எழுந்தருளாமைக்குக் காரணமாகிய தடையேதோ இருக்கின்றதென்றறிந்து, கமலாகாரை நோக்கி, "உங்கள் புதல்வனை எங்களோடிருந் துண்ணுதற்கு அழையுங்கள்" என்று சொல்ல, சுமதிதேவியார், அவன் இப்பொழுதுதான் உண்டு தொட்டிலில் உறங்குகிறுன்" என்றார்; அதற்கு நாமதேவர் உமது புதல்வனை விட்டு நாங்கள் உண்ணமாட்டோம்; அவனை யெழுப்பிக்கொண்டு வாருங்கள்" என்று சொல்ல, சுமதிதேவியார், இந்த நாமதேவரை நோக்கி, "ஸ்வாமீ! அவனை யெழுப்பினாலும் எழுந்திருக்காமல், மஹாநித்திரை செய்கிறுன்; நீங்

கள் அமுது செய்யுங்கள்" என்றார். அதுகேட்ட நாமதேவர், வீணை யோடெழுந்திருந்து நின்று, ஸ்ரீ விட்டலப்பெருமானுடைய திருவடியை நினைத்து, "எமக்குக் காட்சிக்கொடுத்தருளவேண்டும்" என்று கையில் தாளத்தை யேந்தி, திருநாமஸங்கீர்த்தநம் செய்து, "ப்ரஹ்லாதவரதா! நீ யெழுந்தருளாவிட்டால் நாங்கள் உண்ணமாட்டோம்" என்று சொல்ல, பகவானனவர் எழுந்தருளி அருளோடு இவரைத் தழுவிக்கொண்டு, "உன் கருத்தென்ன?" என்று கேட்க, நாமதேவர், "ஓ பகவானே! இந்தச் சுமதிதேவியாருடைய புதல்வன் உறக்க மொழிந்தெழுந்து எம்மோடிருந்துண்ணும்படி அருள்செய்யவேண்டும்" என்று திருவடியை வணங்கினர். அப்போது அந்தப் பகவத் க்ருபாவிசேஷத்தால் தொட்டிலிலிருந்த பாலகன் விழித்து, தெளிவோடு தாயை யழைத்து, தாஹத்துக்கு விரைவாக நீர் கொண்டுவா" என்றான். அந்தக் குரலைக்கேட்ட சுமதிதேவியார் விரைந்து போய், மைந்தனை யெடுத்து மார்போ டணைத்து உச்சிமோந்து, முத்தமிட்டு, ஹரிதாசர் சந்நிதியிற் கொண்டுவந்து, நாமதேவர் திருவடிமேற் கிடத்தி, "நீங்கள் எழுந்தருளினதனல் எங்களுடைய துன்பம் நீங்கிவிட்டது" என்று சொல்ல, சாதுக்களெல்லாரும் "உமது புதல்வனுக்கு நேர்ந்தது என்ன?" என்று கேட்க, சுமதிதேவியார், உண்மையைச் சொல்லிவிட்டார். அதைக்கேட்ட சாதுக்கள், "இது மிகவும் அற்புதம்" என்று, நாமதேவரை நோக்கி, "நீர் ஸாக்ஷாத் பகவதம்ஸமே யென்பதற்கு ஐயமில்லை" என்று புகழ்ந்தார்கள். பிறகு புதல்வனோடிருந்து அமுது செய்து சந்தந புஷ்ப தாம்பூலாதிகளைப் பெற்று, கமலாகரரையும் தேவியாரையும் புதல்வனையும் ஆசீர்வதித்த பிறகு, மூவரும் நாமதேவரிடத்தில் உபதேசம் பெற்று, ஹரி நாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டு, இல்லறம் வழுவாமல் நடத்தி, இனிது வாழ்ந்திருந்தார்கள் என்று சொல்லி, மேலே துக்காராம் சுவாமிகள் வைபவத்தைச் சொல்லத் தொடங்கினர்.

கமலாகரர் சரித்திரம் முற்றிற்று.

எண்பத்திரண்டாவது

துக்காராம்சுவாமிகள் சரித்திரம்.

தேகு என்னும் ஊரில் வாழ்வோரும், மராடகுலத்தில் அவதரித்தவரும், சாது சேவையில் விருப்பமுடையவரும், இடைவிடாமல் ஹரிநாமஸ்மரணை செய்பவரும், விசுவம்பரர் என்னும் பெய

ருள்ளவரும் ஆகிய ஒருவரிருந்தார். இவர் தினந்தோறும் அஸ்தமித்த வுடனே தாளம் வீணை மத்தளம் முதலிய வாத்ய விசேஷங்களோடு, ஹரிபக்தர்களாகிய அநேகருக்குமுன்னே, பகவத் வைபவத்தை விஸ்தாரமாகப் பிரஸங்கித்துக்கொண்டிருப்பார். இப்படியிருக்கையில் ஒருநாள், இவர் தாயார் இவரை நோக்கி, "அப்பா குழந்தாய்! உன் குலத்து முன்னோர்களெல்லாம் வருஷந்தோறும் பாண்டுரங்கனது புராதந ஸ்தலமாகிய பண்டரிபுரத்துக்குப் போவது வழக்கம்; ஆகையால், நீயும் அவ்வாறு செய்தல் நன்மை" என்று சொல்ல, உடனே இவர் ஆவலோடெழுந்து, பண்டரி யாத்திரை போவோரைப் பின்தொடர்ந்து போய்ப் பண்டரிபுரத்தை யடைந்து, சந்த்ரபாகாநதியில் நீராடி, புண்டலீகரைக் கண்டு, அடி வணங்கி, அந்த நகரத்தை வலம் வந்து, கோயிலுள்ளே சாதுக்கள் பாடுகிற கீர்த்தநங்களைக் கேட்டு, ஆநந்தமடைந்து, நிர்மலராகிய பாண்டுரங்க பகவானைக் கண்டு, கண்களிகூர்ந்து, பிறகு ஷோடசோபசாரங்களும்செய்து, ஆலிங்கநம்செய்துகொண்டு, பலவகையாய்த் தோத்திரம்செய்து வணங்கி, ஐந்துநாள் அவ்விடத்தில் தங்கியிருந்து, ஹரிநாம ஸங்கீர்த்தநம் கேட்டு, அங்குள்ள சாதுக்களையும் ஸ்ரீ கண்ணபிரானையும் திருவடி தொழுது விடைபெற்றுத் தாயினிடத்துக்குப் போய் வணங்கி, பண்டரிபுரத்தின் பெருமையெல்லாம் சொல்லி, "அந்தப் பகவானுடைய திருவடியின்மேல் என் மனஞ் சொல்லாநின்றது, அந்தத் திருவடியை இனி யெக்காலத்தில் கண்டு களிப்பேனோ" என்று கண்ணீர் பெருக்கி நின்றார். தாயாருமிவரைக் குறித்து மன மகிழ்ந்து, "நம் புதல்வனுக்கு நம் முன்னோர் செய்கை யமைந்ததே பெரும் புண்ணியம்" என்று நினைந்திருந்தார். பிறகு ஒருநாள், விசுவம்பார் பண்டரிபுரத்துக்குப் போய், சந்த்ரபாகையில் நீராடி, நியமமாகச் சென்று விட்டலமூர்த்தியைச் சேவித்து வாழ்த்தி, தசமியொருபொழு தருந்தி, மறுநாள் ஏகாதசியில் உணவில்லாமல் உபவாசமிருந்து, இராமுழுதும் ஹரிகதா சிரவணஞ் செய்து, அதற்கடுத்த மறுநாள் துவாதசி யுதயகாலத்தில் பாரணை செய்து, மூன்றுநாள் அங்கே தங்கியிருந்து, நாலாநாள் ஸ்ரீ கண்ணபிரானைத் தொழுது விடைபெறுஞ் சமயத்தில், கண்ணீர் பெருக்கி நின்று, "பகவானே! நீரைவிட்டுப் பிரிகிற மீனைப்போல் உம்மைவிட்டுப் பிரிகிறேன், இனி யெக்காலம் உம்மைக் காணப் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே, பகவானவர் இவர்க்கெதிரே யெழுந்தருளி, "உன் பக்திக்கு மெச்சினேன்; நான் சர்வ வியாபக னாகையால், நீ உன் ஊரிலிருந்து நினைத்தாலும் அவ்விடத்துக்கு வருவேன்" என்று

சொல்ல, விசுவம்பார், "ஓ கருணைக்கடலே! உன் சகுண ரூபத்தை என்றும் காண நான் விரும்புகிறேன், இதையன்றி நான் வேறொன்றையும் விரும்பிலேன்" என்று சொல்ல, விட்டலப்பெருமானனவர் இவர் சிரமீது கை வைத்து, தமது பரிசுத்தமான திருநாமத்தை இவர் செவியில் உபதேசித்து, "நீ நினைக்கும்போதெல்லாம் உனக்குக் காட்சி கொடுப்பேன், அஞ்சவேண்டாம்" என்று விடைகொடுத்து ஊருக்கனுப்ப, இவர் அப்படியே ஊருக்கு வந்து, கார்த்திகை மாதமுதல் எட்டுமாதமும் பண்டரிநாதனைச் சேவித்து வந்தார்; அன்றியும் பதினறு ஏகாதசி விரதம் நியமமாய் அநுஷ்டித்துவந்தார்; ஒன்பதா மாசத்தில் பூர்வ பக்ஷத்து அஷ்டமி திதியில் பகவானனவர் இவரது கனவில் வந்து, "நீ யெட்டுமாதந் தொடர்ச்சியாய் என்னூருக்குவந்து நியமமாய் என்னைச் சேவித்தாய் ஆகையால் உன்னூருக்கு வந்தேன்" என்று சொல்லி, ஒரு மாமரச் சோலையில் அமர்ந்திருந்தார். உடனே இவர் கண்விழித்து, அவ்வூரிலுள்ள வைணவர்க்கெல்லாம் இந்தச் செய்தியைத் தெரிவித்து, "நாம் போய், மாஞ்சோலையிலெழுந்தருளி யிருக்கிற கண்ணபிரானை, இவ்வூருக்குக் கொண்டு வருவோம்" என்று சொல்லி, அவர்களை யழைத்துக்கொண்டுபோய், மாஞ்சோலையில் தேடிக் காணமல் நிற்கையில், அவ்விடத்தில் திருத்துழாய் மணமும் அபீர்மணமும் வீசக்கண்டு, "நாம் கண்ட கனுப் பொய்த்துப் போகவில்லை; கண்ணபிரான் இவ்விடத்தி லிருக்கிறர், இந்த மண்ணைத் தோண்டியாகிலும் அவரைக் காண்போம்" என்று சொல்லிக்கொண் டிருக்கும்போது, ஆகாசவாணி இவரன்பைக் குறித்து மகிழ்ந்து, "விசுவம்பரரே! விட்டலப்பெருமான்வந்தது மெய்யே, அவர் இவ்விடத்தி லிருக்கிறர், நீங்கள் நிலத்தைத் தோண்டினல் காணலாம், இனிமேல் உங்கள் வமிசத்தில் வைணவ குலதிலகனுய் ஒருவனுண்டாவான், அவனல் உலக முழுதும் ஸ்ரீ ஹரிபக்தி மேன்மேலும் ஓங்கி வளரும்" என்று சொல்ல, கேட்டவர் யாவரும் ஆச்சரியப்பட்டுக் கைகொட்டி, ஹரி நாமங்களை யுச்சரித்துக்கொண்டே நிலத்தைத் தோண்ட, திருத்துழாயும், அபீர்ப்பொடியும் காணப்பட்டன. அவற்றை விலக்கவே, ஸ்ரீ ருக்மிணீ பிராட்டியாரோடும் கண்ணபிரான் எழுந்தருளி யிருப்பதைக் கண்டு, களிப்படைந்து, அந்த ருக்மிணீசமேதனன பகவானை யெடுத்துக்கொண்டு போய், இந்திராயணி நதிக்கரையில் பிரதிஷ்டை செய்து, பிரதிஷ்டா காலத்தில் நடத்தவேண்டிய க்ரியைகளெல்லாவற்றையும் வேதோக்தமாய் நடத்தி, சந்நிதிக் கெதிரேநின்று பெருமானைத் தோத்திரம் செய்து, "ஒரு துரும்புக்கும் சமானனல்லாத என்னை யொருபொருளாக்கி

யெழுந்தருளினதைக் குறித்து நான் என்னென்று புகழப்போகி றேன்" என்றார். அப்போது விட்டலப்பெருமான் எழுந்தருளி, "உன க்கு வேண்டு மவற்றைச் சொல்" என்று நியமிக்க, விசுவம்பரர், "ஸ்வாமீ! அடியேன் உன்னிடத்தில் நீங்காத அன்புடையவனாகவும், என் சந்ததியாரும் அப்படியே யாகவும் அருள் புரியவேண்டும்" என்று கேட்க, அப்படியே பகவானும் வரங்கொடுத்தார். விசுவம் பரர், "ஸ்வாமீ! இவ்விடத்தில் தேவரீர் என்நாளும் வீற்றிருக்க வேண் டும்" என்று வணங்கி விடைபெற்றுப் போய்த் தமதிடத்தை யடை ந்தார். சிலநாள் கழிந்த பிறகு, ஒருநாள் ஸ்ரீவைகுண்டத்தி லிரு ந்து ஒரு திவ்ய விமாநத்தோடு விஷ்ணு தூதர்கள் இவர்க்கெதிரே வந்து, "ஓ பகவத் பக்தரே! வைகுண்டத்துக்கு வாரும்" என்றார்கள். இவர் பண்டரிநாதனை நோக்கி, "அடியேனுக்கு இரண்டு புதல்வரும் மனைவியும் உண்டு; அவர்கள்மீது உனக்குக் கிருபையிருக்கவேண்டும்" என்றுசொல்லி, விமாநத்தின் மேலேறி வைகுண்டத்துக்குப் போய் விட்டார். பிறகு ஹரி, முகுந்தன் என்னும் இரண்டு புதல்வர்களும் மனைவியும் இவருடைய சரம கைங்கர்யங்களெல்லாம் நிறைவேற்றி, ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநபரராய் வாழுங்காலத்தில், இவருடைய பக்திக்கு ஸ்ரீ பாண்டுரங்கப் பகவானவர் மகிழ்ந்து, கனவில் எழுந்தருளி, "உமக்கு வேண்டிய தென்னை? சொல்லும்" என்று நியமிக்க, "அடியேன் உன் பொன்னடியையன்றி வேறொன்றை யும் விரும்பேன்" என்றார். பகவானும், அவரைத் தழுவி மறைந்த பிறகு கனவுதெளிந்து மிகவும் மகிழ்ந்து ஹரிபஜனை செய்துகொண் டிருந்தார். இப்படி யிருக்கையில், புதல்வ ரிருவரும் தாயாரை வணங்கி, "தாயே! வீட்டிலுள்ள பொருள்கள் உமக்கு இருக்கட்டும், நாங்கள் அரசனிடத்திற் போய்ச் சேவகம்செய்து பொருள் தேட விரும்பினோம், விடை கொடுக்கவேண்டும்" என்றார்கள். அதற்குத் தாயார் பலவிதமாகச் சொல்லித் தடுத்தும் கேளாமையால் விடை கொடுத்தார். உடனே இருவரும் அரசனிடம் போய்ப் போர்ச் சேவகரா யமர்ந்து தாயையும் அழைத்தார்கள். தாயார், பாண்டுரங் கனைப் பிரிந்துபோவது எப்படி யென்று நினைத்துக் கண்ணீர் பெருக் கிக்கொண்டு, கோயிலிற்போய், வணங்கித் தோத்திரஞ்செய்து, "பக வானே! உன்னை இனி யெக்காலங் காணப்போகிறேன்? என் புதல்வ ரால் உன்னைப் பிரிய நேரிட்டது" என்று சொல்லி விடைபெற்று, மருகிமா ரிருவரையும் அழைத்துக்கொண்டு, புதல்வரிடத்துக்குப் போனார். போய், இடைவிடாமல் விடோபாவின் திருவடியை ஸ்மரித் துக்கொண்டிருக்கச் சிலநாட்கள் கழிந்தன. பிறகு ஒருநாள் பகவா

ஞனவர் இவர் கனவில் வந்து, "நீர் உமது புதல்வரிடத்திலுள்ள அன்பினால் என்னைப் பிரிந்தீரல்லவா? உங்கள்பொருட்டாயல்லவோ நான் உம்மூருக்கு வந்தது? ஆகையால் நீர் உமது புதல்வரைவிட்டு, உடனே என்னிடத்துக்கு வந்துசேரக்கடவீர்" என்று சொல்லிப் போய்விட்டார். இவர் உடனே யெழுந்து, மக்களைப் பார்த்து, "உங்கள் தந்தை விரும்பினபடியே, ஸ்ரீ கண்ணபிரான் நமது ஊரில் வந்து நிலைபெற்றிருக்கிறார்; இன்று என் கனவில் வந்து ஊருக்கு வரும்படியாய் நியமித்துப்போனார்; ஆகையால் நான் போகவேண்டும்" என்று சொல்ல, புதல்வர்கள் நகைத்து, "கனவும் உண்மையாகுமோ! நீ போகவேண்டாம்" என்று தடுத்தார்கள். நாலுநாள் கழிந்தபிறகு, புதல்வர் தாயாரை நோக்கி, "விடோபா! உமக்குச் சொன்னது உண்மைதானே" என்று நகைத்து இகழ்ந்தார்கள். அதற்கு அமாபாயியார், பொறுக்காமல் "பகவான் சொன்னதைக் குறித்து நீங்கள் இகழலாகாது" என்று சொல்லவும், அவர்கள் கேட்காமல் தாயைக் கடிந்துகொண்டார்கள். அப்போது பகவானனவர் அவர்கள்மேல் கோபங்கொண்டு, அமாபாயியாரது கனவில் வந்து "நான் உமது கனவில் முன் ஒருதரம் வந்து சொல்லியும் உமது மக்களிடத்திலுள்ள வாஞ்சையால் என்னிடத்துக்கு வாராமற்போனீரல்லவா? நாளைக்கு இரண்டு சாமத்துக்குமேல், உமது மக்களிருவரும் இறந்துபோவார்கள், அதின்பிறகு யாரிடத்தில் அன்பு பாராட்டப்போகிறீர்" என்று சொல்ல, அமாபாயியார் பதறியழுது, "ஐயனே! என் மக்கள் மரணமடைந்தால், எனக்குச் செய்ய வேண்டிய கடன்களை யார் செய்வார்கள்?" என்று சொல்ல, ஸ்ரீகண்ணபிரானனவர், அவரை நோக்கி, "நீர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை, உமக்குச் செய் கடன்களை நானே செய்கிறேன்" என்று சொல்லி மறையுமுன்னே யெழுந்து, மக்களை நோக்கி, "என் சொல்லைக் கேட்காமலும் என்னைப் போகவொட்டாமலும் தடுத்தீர்கள்; ஆகையால், பாண்டுரங்கர் கோவங்கொண்டு, 'இன்று இரண்டு சாமத்துக்குமேல் நீங்களிருவரும் மரணமடைவீர்கள்' என்று என் கனவில் வந்து சொல்லிப்போனார்" என்று சொல்லவே, மக்களிருவரும் நகைத்து, "இவருக்கு முதுமைப்பருவ மாகையால் பித்தம் அதிகரித்து வாய்க்கு வந்தபடி பிதற்றுகிறார்" என்று நினைத்து, தாயை நோக்கி, "தாயே! இன்று நாங்கள் இறப்பது மெய்யே, உன் கையால் அன்னமிடக்கடவாய்" என்றார்கள். அப்படியேஇவர் அழுதுகொண்டே அன்னமிட்டார். மக்களிருவரும் உண்ட பிறகு, தாம்பூலங் கொடுக்குஞ் சமயத்தில் அரசனிடத்திலிருந்து சிலதூதர்கள்வந்து, "பகையரசர் சேனைகளோடு வந்து நம்மூரைச் சூழ்ந்துகொண்டார்கள், ஆகையால் அவர்களோடு

போர்செய்ய உங்களைப் போகும்படி சொல்லச் சொல்லி அரசன் எங்களை யேவினன்" என்று சொன்னார்கள். அதைக் கேட்ட இருவரும், "நல்லது" என்று போர்க்கோலங்கொண்டு சதுரங்க சேனைகளோடும் போய்ப் பகைவரோடு யுத்தஞ்செய்து, அந்தப் பகைவர்களால் அடிக்கப்பட்டு விழுந்து, "நாம் நமது தாய் வார்த்தையைக் கேளாமல் இகழ்ந்ததனாலே இப்படிநேரிட்டது" என்று, பகவானைநினைத்து, "ஓ கஜேந்த்ரவரதா, ஓ தயாநிதி! எங்களை இப்பொழுது நீயே காத்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, பகவானனவர் திருவுள மிரங்கி, இவர்களுக்கெதிரே தோன்றி, இவர்களைத் தழுவிக்கொண்டு, "நீங்கள் ஒளிவிசும்பாகிய பரமபதத்துக்குச் செல்லுங்கள்" என்று விடைகொடுக்க, அப்படியே இருவரும் பரமபதமடைந்தார்கள். இந்தச் செய்தியைத் தாயாகிய அமாபாயியார் அறிந்து துக்கசாகரத்தி லமுந்தினர். முகுந்தன் மனைவியானவள், கணவன் பிரிவுக் காற்றுதவளாய் ஸஹகமநம் செய்தாள் (உடன்கட்டை யேறினள்). பகவானனவர் அவளுக்கும் காட்சி கொடுத்துப் பரந்தாமத்திற் சேர்த்தார். அந்தச் சமயத்தில் ஹரியின் மனைவி கர்ப்பமாயிருந்ததனல் அமாபாயியார், அவளை யழைத்துக்கொண்டு, ஸ்ரீகண்ணபிரான் கோயிலுக்குப் போய், பகவானை நோக்கி, திருவடியைப் பிடித்துக்கொண்டு, "குடும்பநாசம் பண்ணுகின்ற குடிலனே! கொஞ்சமாகிலும் இரக்கமில்லாமல் என் மக்களை மரணமடைவித்தாயே! பக்தவமிசத்தைபெல்லாம் அழித்தற்பொருட்டே விருது பூண்டிருக்கிற கேசவா! யான் என் செய்வேன்! இந்த மூப்புக்காலத்தில் என்னை யாதரிப்பவர் யார்?" என்று பலவாறு புலம்பித் துன்பக்கடலி லமுந்தி வீட்டுக்கு வந்து, மருகியைத் தாய்வீட்டுக்கு அனுப்பிவிட்டுக் கண்ணபிரான் திருவடியை மறவாமல் ஸ்மரித்துக்கொண்டிருந்தார். இவரது துன்பத்தைப் பாண்டுரங்க பகவானனவர் பார்த்துத் திருவுளமிரங்கி, தமது சகுணரூபங்கொண்டு இவர்க்கெதிரே தோன்றி, "ஏன் துக்கிக்கிறீர்? எந்தக்காலத்தில் எதை யநுபவிக்கவேண்டுமோ அந்தக்காலத்தில் அதை யநுபவித்தேதீரவேண்டும், இப்பொழுது உமக்கு என்ன பொருள் வேண்டுமென்றாலும் கேளும் தருகிறேன்" என்று சொல்ல, அமாபாயியார், "ஓ பகவானே! உன்னையன்றி வேறொரு பொருளும் எனக்கு வேண்டியதில்லை, ஆனல் நீர் அன்று சொன்னதை மறந்தீரோ" என்றார். அதைக் கேட்ட பகவானனவர், இவரை நோக்கி, "இனி உமக்கு நான் பேரன், திருமகள் உன்மருகி, நாங்களிருவரும் உமது பணிவிடையைச் செய்துகொண்டிருப்போம், நீர் அஞ்சவேண்டியதில்லை" என்றார். அதைக் கேட்ட அமாபாயியார், "நல்லது" என்று வணங்க, அதுமுதல் பகவான் பேர

ஞகவும் பிராட்டி மருகியாயும் பணிவிடைசெய்துகொண்டிருந்தார்கள். இப்படி யிருக்குங் காலத்தில் அமாபாயியாருக்கு மரணசமயம் வாய்த்தது; அப்போது அவரைப் பகவானுனவர் தமது திருத்தொடையின் மேல் படுக்கவைத்து, உயிர் நீங்கினவுடனே அந்த வுயிரைப் பரமபத மடையச்செய்து, சரம கைங்கர்யங்க ளெல்லாவற்றையும் முடித்து, தாய்வீட்டுக்குப் போயிருந்த மருகிக்கு இந்தச் செய்தியைத் தெரிவித்தலும், அந்த மருகி, தானும் தன் குழந்தையுமாக வந்து, மிகவும் துக்கித்து, "என் அருமையாகிய மாமிக்குச் சமீபத்திலிருந்து உதவி செய்யாமற்போனேனே" என்றழும்போது, சுற்றத்தா ரெல்லாரும், அவளை நோக்கி, "நீயும் உன் பிள்ளையும் இருந்துதானே எல்லாக்காரியங்களும் நிறைவேற்றினீர்கள்" என்று சொல்ல, ஹரியின் மனைவி யானவள் அதிசயித்திருந்தாள். அவள் பிள்ளையாகிய விடோபா இது பகவானுடைய திருவிளையாடலென்று தீர்மானித்து, கோயிலுக்குப் போய், கண்ணபிரானை நோக்கி, "உன்னை யாசிரயித்திருக்கவொட்டாமல் என் தந்தையரைக் கொன்ருயே! இது வுனக்குத் தகுதியோ! உன் அருகிலும் இருக்கலாகாது" என்று சொல்லி, தன் கையிலிருந்த ஆயுதத்தால் மார்பைப் பிளந்துகொண்டு இறக்க வுத்தேசிக்கக்கண்டு, ஸ்ரீ கண்ணபிரானுனவர் ஓடிவந்து அவன் கையைப் பிடித்துக்கொண்டு, "வீணுய் என் உயிரை நீக்கிக்கொள்ளுகிருய்? என்மீது கோவம் கொள்வது தகுதியல்ல" என்று கண்ணீர் துடைத்து, "வருவது வந்தேதீரும்" என்று சொல்லித் தேற்ற, அவன் மனந் தெளிந்து, பகவானை வணங்கி, "அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, கண்ணபிரானும் அவனுக்கு நவவித பக்திகளையும் உபதேசம் செய்தருளினர். அவன் உபதேசம் பெற்று, தாயும் தானுமாகப் பாண்டரங்கனைப் பூசித்துவருங் காலத்தில், அவனுக்குப் பதாஜியென்று ஒரு புதல்வன் உண்டானன். இவனும் ஹரிபக்தியிற் சிறந்தவனுயிருந்தான். இவனுக்குக் கான்ஹாயாசங்கரன் என்ருெரு புதல்வன் பிறந்தான். இவனுக்குப் போளோபா வென்ருெரு புதல்வன் பிறந்தான். இவன் இருபத்துநான்கு வருஷகாலம் பாண்டுரங்கபகவானை நியமமாய்ப் பூஜித்துக்கொண்டிருந்தான். அன்றியும், இவன் தன்னுயிர்போலவே எல்லா வுயிர்களையும் நினைப்பவனும், சாதுபூஜை செய்பவனும், ஸத்யத்தை யுடையவனும், சாந்தசீலனும் ஆகியிருந்தான். இப்படி யிருக்குங்காலத்தில் ஒருநாள் உருத்திரன், திருமால், பிரமன் என்னும் மூவரும் இவன் கனவில் தோன்றி, "உன் விருப்பத்தைச் சொல்" என்று கேட்க, "எனக்கு நன்மகன்

வேண்டும்" என்றான். அப்படியே மூவரும் வரந்தந்து போனார்கள். உடனே தன் மனைவியாகிய **கனகாயி**யை யெழுப்பி, பகவான் சொன்ன செய்தியைச் சொல்லி மகிழ்ந்து வாழ்ந்திருக்குங்காலத்தில், சில நாள் கழிந்த பிறகு, கனகாயியார் வயிற்றில், ருத்திரமூர்த்தி வரத்தால் **சாம்**பஜியென்றொரு புதல்வன் பிறந்தான். அதின்பிறகு, கண்ணபிரானனவர் நாமதேவரை யழைத்து, "நீ, முன்னே இவ்வுலகத்தில் தோன்றினகாலத்தில், என்பேரில் நூறுகோடி கிரந்தம் செய்வேன்" என்று சொல்லி, பிரதிஞ்ஞை செய்தாய், அதில் ஐந்துகோடி ஐம்பத்தொருலக்ஷம் கிரந்தம் குறைவாயிருக்கின்றதல்லவா? அதைப் பூர்த்திசெய்யவும், சிவகோடிகளை நல்லொழுக்கத்தில் நடத்தவும் போளோபாவுக்கு நீ யொரு புதல்வனாக அவதரிக்கக்கடவாய்" என்று நியமிக்க, "நாமதேவரும்அப்படியேசெய்கிறேன்"என்று வணங்கிப்போய் கனகாயி வயிற்றில் அவதரித்தார். இந்தக் குழந்தையைத் தாய் தந்தையாகிய கனகாயியும் போளோபாவும் எடுத்துக்கொண்டு சந்நிதிக்குப்போய், பாண்டுரங்கன் திருவடியில் கிடத்தி, வாழ்த்தி வணங்கி நிற்க, பக்தவத்ஸலராகிய பகவானனவர் ஸ்ரீ ருக்மிணீ பிராட்டியாரை நோக்கி, "இந்தச் சிறுவனை உன் கையால் தீண்டியெடுத்து, பெற்ற தாயாகிய கனகாயிகையில் கொடுக்கக்கடவாய்" என்று நியமிக்க, அப்படியே பிராட்டியாரும் கனகாயி கையில் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்தார். தாய் தந்தையரும் பகவானை வணங்கி, குழந்தையை கொண்டுபோய்த் தொட்டிலிற் போட்டு "என்ன பெயரிடலாம்"என்று யோசிக்கும்போது, ஸ்ரீ ருக்மிணீபிராட்டியார் எழுந்தருளி, "**துக்காராம்**" என்று பெயரிட்டு, நாமகரணச் சடங்குமுழுதும் நிறைவேற்றிப் போனார். அதற்குமேல் சிலநாள் கழிந்தபிறகு, கனகாயி வயிற்றில் பிரமதேவனது வரத்தால் "**கான்ஹயா**" என்று ஒரு புதல்வன் பிறந்தான். இந்த மூன்று சிறுவரையும் தாய்தந்தையர் அன்போடு வளர்த்துக்கொண்டும், ஸ்ரீ ஹரிபஜனை செய்துகொண்டும் மகிழ்ந்திருந்தார்கள். இந்த மூவரும் வளர்ந்து பருவமடைந்தவுடனே, விவாஹம் முடித்துவைக்க அவர்கள் சுகித்திருக்குங்காலத்தில், போளோபாவுக்கு மிகவும் முதுமைப்பருவம் நேரிட்டதனால், மூத்தபிள்ளையாகிய சாம்பஜியை யழைத்து, "இனி நீ குடும்பவாழ்க்கையை நடத்தக்கடவாய்" என்றான். அதற்கு அவன் சம்மதிக்காமல், தந்தையை வணங்கி, "ஐயனே! எனக்கு இவ்வுலக வாழ்க்கையில் சிறிதும் விருப்பமில்லை, தீர்த்தயாத்திரையில் விருப்பமுள்ளேன், ஆனாலும் உமது வார்த்தையைக் கடந்து போகமாட்டேன், உமது திருவருள் யாதோ" என்று சொல்

லக்கேட்ட தந்தையானவர், "இவன் சிவன் வரத்தால் தோன்றினவ ஞகையால் இவனுக்கு இப்படிப்பட்ட வைராக்கிய முண்டாயிற்று" என்றெண்ணி, பிறகு துக்காராமரையழைத்துத் தன்கருத்தையறிவிக்க இவர் அதற்கிசைந்தார். அப்போது துக்காராமருடைய மனைவிக்கு காசரோகமுண்டாகி வருத்துவதைக் கண்ட போளோபா புனவிலிருக்கும் அப்பாஜியின் புதல்வியாகிய ஜிஜாயியை யழைப்பித்து இவருக்கு மணமுடித்து வைக்க, துக்காராமர் மனைவியோடு கூடி இல்லறம் வழுவாமல் நடத்திவருங் காலத்தில், இவரது இல்வாழ்க்கையைத் தாய் தந்தையரும் உறவினரும் கண்டு களித்தார்கள். இப்படி சிலநாள் கழியவே, தாய் தந்தையர் ஸ்ரீ விஷ்ணுலோகத்தை யடைந்தார்கள். அவர்கள் விஷயத்தில் சிறிது மனம்வருந்தி, பிறகு தெளிந்து ஹரி பஜனையை மறவாமல் இல்வாழ்க்கையும் நடத்திவந்தார். சிலநாள் கழிந்தபிறகு மூத்தபிள்ளையாகிய சாம்பஜியின் மனைவியும் பரமபதமடைந்தாள். உடனே சாம்பஜி தீர்த்தயாத்திரை செல்ல விரும்பிப்போய், முத்தியைத் தருகிற சப்தபுரிகளையும், த்வாதசஜோதி லிங்கங்களையும், புஷ்காம் முதலான தீர்த்தங்களையும் கண்டு, ஒரு அரணியத்தை யடைந்து, காமாதிகளை வென்று, சாதுக்களோடு கூடி, ஆத்ம விசாரம் செய்து உண்மைநிலையில் நிற்க, இல்வாழ்க்கையில் அமர்ந்திருக்கிற துக்காராமர், "ஓ பண்டரிநாதா! தாய் தந்தையர் இருக்குமளவும் ஒரு கவலையு மில்லாதிருந்தேன், அவர்கள் சம்பாதித்துவைத்த திரவியமும் செலவாகி விட்டதனல் இனிக் குடும்ப ஸம்ரக்ஷணமும் நிறைவேறுவது அருமையா யிருக்கின்றது, என்ன க்ருஷி செய்தாலும் பலிக்காமல் அந்த வஸ்திரங்களுக்கே தரித்திரமா யிருக்கின்றது, என்செய்வேன்" என்று, ஒரு கடைவைத்து வர்த்தகம் செய்தார்; அதிலும் நஷ்டம் நேரிட்டது. பொதியெருது வியாபாரம் செய்தார்; அதிலும் நஷ்டம் நேரிட்டது. இப்படி யெந்தத் தொழிலிலும் நஷ்டமே நேரிட்டதனல், வாவா வறுமை மிகுந்தது. இவர் பகவந்நாமஸ்மரணை செய்து கொண்டிருந்தார். இப்படி யிருக்கையில் கடன் கொடுத்தவர்கள்வந்து சூழ்ந்து இவரை வருத்த, இவர் மிகவும் மனங்கலங்கி ஒன்றும் தோன்ருமல் சும்மாவிருந்தார். அந்தச் சமயத்தில் இவருக்கு ஸ்நேஹரா யிருப்பவர்கள் வந்து, கடன்காரருக்கெல்லாம் சமாதானம் சொல்லி, இவருக்கும் கொஞ்சம் முதற்பொருள் கொடுத்து, இவரை நோக்கி, "இவ்வுலகத்தில் யார் இடைவிடாமல் பகவந்நாமஸ்மரணை செய்கிருர்களோ, அவர்களெல்லாரும் வறியராயிருக்கக் காண்கிறேம், ஆதலால் நீ ஹரிபக்தியை விட்டுவிடக்கடவாய், விடாதிருந்தாயானல் இன்னம் வறுமையால் வருந்தும்படி நேரிடும்" என்று பலவகையான புத்திக

ளைச் சொல்லிப் போனார்கள். இவர் மனைவியாரும் வேண்டிய புத்தி சொல்லவும் கேட்காமல் அல்லும் பகலும் ஹரிபஜனையையே மேற்கொண்டிருந்தார். இவர் வீட்டிலிருந்த பொதியெருதுகள் நான்கில் மூன்று இறந்துபோக, மிச்சமாயிருந்த ஒரு எருதைக்கொண்டு வியாபாரம் நடத்திவரும்போது, ஒருநாள் சில வியாபாரிகளோடு கூடி வேறூர் ஊருக்குப்போகுங்கால், அந்த வியாபாரிகள் யாவரும் கடுகி நடந்து முன்னே போய்விட, இவர் மாத்திரம் தனியாகிப் பொதியெருதை யோட்டிக்கொண்டு காட்டின் வழியாய்ப் போகும்போது பொழுதுபோயிற்று; அதனோடு மழைக்கா லிருட்டும் மிகுந்தது. அப்படிப்பட்ட சமயத்தில் எருதின்மேலிருந்த பொதி நழுவிக் கீழே விழுந்தது. அதைத் தாம் தனியாய்த் தூக்கி யெருதின்மேல் போடுவதற்குச் சக்தியில்லாமல் நின்று, "குடும்ப வாழ்க்கைக்கு உடன்பட்டல்லவா இவ்வளவு துன்பங்கள் அநுபவிக்க வேண்டியிருக்கிறது" என்று சொல்லி, பிறகு பாண்டுரங்கனைத் தியானித்து, "ஓ பகவானே! இந்தச்சமயத்தில் என்னைக் காத்தருளவேண்டும்" என்று கண்கலங்கி யழுதார். இதைக் கண்ணபிரானானவர் அறிந்து, ஒரு வழிப்போக்கனாய் வந்து இவரைக் கூடி, "இந்த இருளில் நிற்கிற நீயார்?" என்று கேட்க, இவர், "நான் செட்டி, நான் நெடுந்தூரம் போகவேண்டும், மாட்டின்மேலிருந்த பொதி நழுவிவிழுந்தது, அதைத்தூக்க உதவியில்லாமல் திகைக்கும்போது நீர் வந்தீர்" என்று சொன்னார். சொன்னவுடனே வழிப்போக்கன்போல வந்த பகவானானவர், பொதியைத் தூக்கி எருதின்மேல் ஏற்றி, "இருட்டில் உனக்கு வழி தெரியாது, என் பின்னேவா" என்றழைத்துக்கொண்டு இந்திராயணி நதிக்கருகே போய், அதில் நீர்பெருகி வருவதைக்கண்டு, முந்திச் சக்ராயுதத்தை விட்டு, நீரானது முழங்காலளவாக வரச்செய்து, அதன்மேல் அழைத்துக்கொண்டுபோய் வீட்டில் பிரவேசிக்கச்செய்து மறைந்தார். சிலநாள் சென்றபிறகு மூன்றுமாடுகள் சேகரித்து, அவற்றின்மேல் மிளகாய்ப் பொதிகளை யேற்றிக்கொண்டு, கொங்கண தேசத்துக்குப் போய் அவ்விடத்தில் ஒரு கடைவைத்தார். இவர் கடை வைத்ததைக் கண்ட அவ்வூரரெல்லாரும், "ஒரு மணங்கு என்ன விலை?" என்றுகேட்க, இவர் பாண்டுரங்க பகவானை ஸ்மரித்துக்கொண்டே, "வேண்டியமட்டும் எடுத்துக்கொண்டு உங்களுக்கு இஷ்டமான விலையைக் கொடுங்கள்" என்றார். அப்படியே சிலர் இஷ்டமான விலை கொடுத்தார்கள். அதுவுமில்லாமல் சிலர் சும்மா எடுத்துக்கொண்டும் போனார்கள். இப்படியிருக்கும்போது ஒரு துஷ்டன் வந்து, "ஒருபொதி மிளகாய் வேண்டும்",

என்று கேட்க, இவர் "அப்படியே எடுத்துக்கொண்டுபோ" என்றார். அவன் அந்தப் பொதியை யெடுத்துக்கொண்டு விரைந்து போகும்போது அவனை இவர் அழைத்து, "மிளகாயை யெடுத்துக்கொண்டு கோணியை மாத்திரம் கொடுத்துவிடு" என்றார். அதற்கு அவன் "நான் இனி யொருக்கால் வரும்போது கொண்டுவருகிறேன்" என்று சொல்லிப் போய்விட்டான். இப்படி மிளகாய் முழுதும் செலவான பிறகு, போய் நீராடி அமுதருந்தி ஹரிநாமஸ்மரணை செய்துகொண்டிருந்தார். அப்போது ஸ்ரீ கண்ணபிரானானவர், "இவன் கொண்டுவந்த மிளகாய் முழுதும் அவ்வூரார் விலைகொடாமல் கொண்டுபோனார்களே, இவன் அங்கேபோய்க் கடன்காரர்களுக்கு முதற்பொருளை யெப்படி செலுத்துவான்? இவன் குடும்பத்தோடு எப்படி ஜீவிப்பான்" என்று ஆலோசித்துத் திருவுள மிரங்கி, மானிடவேடங் கொண்டுவந்து, மிளகாய் வாங்கினவர்க ளிடங்களிற் போய், "நீங்கள் வாங்கின மிளகாயின் விலைப்பொருளை என் இன்னம் தாராம லிருக்கிறீர்கள்?" என்று கேட்க, அவர்கள் "நீ யார்?" என்று கேட்க, பகவானானவர், "நான் பணம் தண்டுவதற்காக வந்தேன்" என்றார். அவர்கள் இவரைநோக்கி, "நீ உண்மையாய் அந்தச் செட்டியின் குமஸ்தாவானால், அவன் தூக்கிக் கொடுத்தானா, விலைமதித்துக் கொடுத்தானா, சொல்" என்றார்கள். அதற்குப் பகவானானவர் "எங்கள் எஜமானாகிய செட்டியார் தூக்கிக் கொடுப்பதனாலேயே அவருக்குத் **துக்காராம்** எனப் பெயர் வழங்குகின்றது" என்றார். அவர்கள், "உங்கள் செட்டி தூக்கிக் கொடுத்த நிறையைச் சொல்?" என்று கேட்க, அவரவர்கள் எடுத்துக்கொண்ட மிளகாய் நிறையை இவர் சரியாய்ச் சொல்லவே, அவர்க ளெல்லாரும் ஆச்சரியப்பட்டு, விலைகொடுத்துவிட்டார்கள். பொதியைக் கொண்டு போனவன் மாத்திரம், இவர் கேட்டவுடனே, "நீபோ, உன்னிடத்தில் தரமாட்டேன், உன் எஜமானனிடத்தில் தருவேன்" என்றான். அது கேட்ட இவர், "நான் பணம்வாங்காமல் போகமாட்டேன், போவேனானால் யஜமானர் கோபித்துக்கொள்ளுவார்" என்றார். அதற்கும் அவன் வழிக்கு வாராமல், சண்டித்தனம் செய்து "நான் உன்னிடத்தில் கொடுக்கவேமாட்டேன்" என்றான். அதுகேட்ட பகவானானவர், "நீ கொடாதபக்ஷத்தில் உன் வீட்டிலேயே நான் உயிர்விடுகிறேன்பார்" என்று சொல்லிநிற்க, அவன் "இதேது அநர்த்தமாய் முடிந்தது" என்று, "உன் பொதியையாயினும் கொண்டுபோ" என்றான். அதற்கு இவர், "உலகத்தில் கொண்ட சரக்கைத் திருப்பிவிடுகிறவர்களும் உண்டோ? அப்படிச் செய்வது உனக்குத் தகாது" என்று சொல்ல, அவனுக்குக்

கோவமுண்டாகி, "நீ எப்படிப் பணம் வாங்கப்போகிறுயோ பார்ப்போம்" என்றுன். உடனே இவர் அங்கேகிடந்த ஒரு தாம்புக்கயிற்றை அவன் வீட்டு உத்திரத்திற் கட்டித் தம் கழுத்தில் அந்தக் கயிற்றைச் சுருக்கிட்டுக்கொள்ள, அவன் மிகவும் ஆரவாரம் செய்தான். அந்த ஆரவாரத்தை அண்டை அயலிலுள்ளோர் யாவரும் கேட்டு வந்துகூடி, பணம் தாரதபக்ஷத்தில் இவன் இறப்பான், அதனுல் பழியுண்டாகும்" என்று சொல்லி அவன் பணம் கொடுக்கும்படி செய்து இவர் கழுத்திலிட்ட சுருக்கையும் அவிழ்த்துவிட்டார்கள். அதன் பிறகு, பகவானுனவர், தாம் தண்டினபணத்தை யெண்ணித் தொகை போட்டு, எடுத்துக்கொண்டு துக்காராம் செட்டியாரிடத்துக்குப்போய் பணத்தைக் கொடுத்தார். செட்டியார், "நீ யார்? இந்தப்பணம் ஏது?" என்றுகேட்க, பகவானுனவர், "நான் இவ்வூர் விசாரணைக்காரன், உன் மிளகாயை இவ்வூரிலுள்ளோர் பணங்கொடாமல் கொண்டுபோன செய்தியைக் கேள்விப்பட்டு, நான் செய்யவேண்டிய காரியமாகிய விசாரணையைச்செய்து அவர்களிடத்தில் அந்த மிளகாய்க் கிரயமாகிய பணமுழுதும் தண்டல் செய்துகொண்டு வந்தேன்" என்றுர். செட்டியாரும், "அப்படியா, நல்ல காரியம் செய்தாய்" என்றுசொல்லி, இவர் கையில் ஒரு பணத்தைக்கொடுத்து நெய் வாங்கிவரும்பொருட்டு அனுப்பினுர். இவர்போய் ஒரு செம்புநிறைய நெய்கொண்டுவந்தார். அதைப் பார்த்த செட்டியார், "மிகவும் மலிவாய் வாங்கிவந்தாய்" என்று சந்தோஷித்து இந்த நெய்ச்சோற்றை உண்டுபோ" என்று சொல்ல இவரும் உண்ணச் சம்மதித்தார். அந்தச் சமயத்தில் சதாசிவமூர்த்தியானவர் ஒரு அதிதி வேடங்கொண்டு வந்து, "எனக்கு இவ்வளவு அந்நம் தரவேண்டும்" என்றுர். "அப்படியே நல்லது" என்று அவரையும் சேர்த்துக்கொண்டு மூவரும் உண்டபிறகு, ஸ்ரீ கண்ணபிரானும் சதாசிவமூர்த்தியும் போய்விட்டார்கள். பிறகு இவர் தனித்திருக்கும்போது, அவ்வூரார் சிலர் வந்து, "யாரோ ஒருவன் உமது தண்டற்காரனென்று சொல்லிக்கொண்டு வந்து, ஊர் முழுதும் மிளகாய்ப் பணம் தண்டல் செய்தபிறகு, பொதிமிளகாய் கொண்டுபோனவனிடத்தில் போய்ப் பணம்கேட்க, அவன் கொடேனென்று சண்டித்தனம் செய்ய, உன் குமஸ்தா ஆனவன், கழுத்தில் கயிறு சுருக்கிட்டுக்கொண்டு இறக்கப்போக, நாங்கள் யாவரும் விரைந்துவந்து அவன்பணம் கொடுக்கும்படி செய்து, இவனையும் உயிர் பிழைப்பித்தோம், உன் வர்த்தகத்தால் இவ்வளவு அநர்த்தம் நேரிட்டது" என்றுர்கள். அந்த ஊரார் சொல்லுவதையும், பணம் வந்து சேர்ந்ததையும் இவர் ஆராய்

ந்து, இது விடோபாவின் லீலை” என்று தெரிந்துகொண்டு “ஸ்ரீ கண்ணபிரானனவர் என்பொருட்டு இவ்வளவு ப்ரயாசையெடுத்துக்கொண்டாரே” என்று மனம் வருந்தி, பகவந்நாமஸ்மரணை செய்துகொண்டிருந்தார். இவரது பகவத்பக்தியைக்கண்டு எல்லாரும் புகழ்ந்தார்கள். பிறகு இவர் தமது ஊருக்கு வரும்போது, வழியில், ஒரு மோசக்காரன், பித்தளைக் காப்புக்குப் பொன் முலாம் பூசிக்கொண்டுவந்து, இவருக்குக் காட்டி, “இதை விற்கிறேன், வாங்க விருப்பமுண்டா?” என்று கேட்டான். இவர் அந்தக் காப்பை வாங்கிப்பார்த்து, மதிப்பிட்டு, “இதை வாங்கிக்கொள்ள விருப்பமுண்டு, ஆனால் இப்போது பணம் கையிலில்லை” என்றார். அதுகேட்ட அந்த மோசக்காரன், “இப்பொழுதே பண முழுதும் கொடுக்கவேண்டியதில்லை, தற்காலம் எவ்வளவு பணம் கையிலுண்டோ அவ்வளவும் கொடுத்துவிட்டு, மிச்சத்தை வீட்டிற்போய்ச் சேர்ந்த பிறகு நான் அவ்விடம் வந்து பெற்றுக்கொள்கிறேன்” என்றான். அதற்கு இவர் சம்மதித்து, கையிலிருந்த பண முழுதும்கொண்டு, அந்தக் காப்பை யெடுத்துக்கொண்டுபோய் வீடு சேர்ந்தார். சேர்ந்தபிறகு, அந்தக் காப்பைக் கடன்காரனுக்குக் காட்டி, “இதனை விற்றுவரும் பணத்தில் உன் கடன்பொரு ளெடுத்துக்கொண்டு, மீதியை எனக்குக்கொடுப்பாயாக” என்றார். அவன் அந்தக் காப்பை வாங்கிக்கொண்டு போய், எல்லாருக்கும் இந்தச் செய்தியைச் சொல்ல, இவர் மனைவியார், தலையில் அறைந்துகொண்டு, “இது என்ன விபரீதம்! உன்னைப் பண்டரிநாதன் என் சிருஷ்டித்தான், இப்படிப் பிறந்து உழல்வதைப் பார்க்கிலும் இறப்பதே நன்மை” என்று பல வன்சொற்களை வழங்கிக் கணவனைக் கடிந்துபேசுவதைக் கண்ட கடன்காரன், ஒன்றும் பேசாமல் போய் விட்டான். பிறகு ஜிஜாயியார், குடும்ப ஸம்ரக்ஷணத்தின்பொருட்டு ஒரு வணிகனிடம் போய், “வாக்கு நாணயத்தின்மேல், எனக்குக் கொஞ்சம் பொருள் தரவேண்டும்” என்றார். அந்த வணிகன், “இவர் சகோதரர் பணக்காரர் என்கிற மதிப்பினால் கொடுக்கிறேன், எவ்வளவுவேண்டும்” என்றான்; “இருநூறு பொன் வேண்டும்” என்று சொல்லி வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்து, கணவனை நோக்கி, “நீ இனியாகிலும் மோசம் போகாமல் வர்த்தகம் செய்” என்று, தாம் கடன் வாங்கிக் கொண்டுவந்த இருநூறு பொன்னையும் கொடுத்தார். இவர் அந்தப் பொருளைக்கொண்டு உப்பு வாங்கிப் பொதி யெருதுகளின்மே லேற்றிக்கொண்டு, பாலேகாட்டுக்குப் போய் விற்று, அந்தப் பணத்தைக்கொண்டு வெல்லம் வாங்கி விற்று, அதனால்

கிடைத்த பொருளெல்லாம் கொண்டு, வர்த்தகர்களோடு கூடி வரும் போது, வழியில், ஒரு குடும்பியானவன், தன் கழுத்தில் சங்கிலி யோடுகூடிய கலப்பையை மாட்டி யிழுத்துக்கொண்டு இந்த வர்த் தகர்களுக்கெதிரே வந்து, "நான் ஒரு அந்தணன், அரசிறை கொடுக் கச் சக்தியில்லாமையால் இப்படி வந்து இரக்கிறேன்" என்றான். அவனை அந்த வர்த்தகரெல்லாரும் வெறுத்துக்கொண்டார்கள். பிறகு இவரிடத்தில் வந்து, தன் செய்தியைச் சொல்லி, "எனக்கு வேண்டி யது இருநூற்றைம்பது பொன், இதைத் தந்தீரானால் என் குடும்ப மும் வாழும், நானும் இந்தத் தண்டத்திலிருந்து நீங்குவேன்" என்றான். அதைக்கேட்ட துக்காராமர், அவன்கேட்ட இருநூற்றைம்பது பொன் னும் கொடுத்தார். இதைக் கண்ட மற்ற வர்த்தகர்கள் இவரைக் கடுத் துப் பேசி, "இப்படிச் செய்தாயே, கடன் வாங்கிக்கொடுத்த உன் மனைவிக்கு என்ன சொல்வாய்?" என்று இவரைப் பிரிந்து, முன்னே விரைந்து போய்விட்டார்கள். பிறகு அந்த வேதியனை நோக்கி, "அர சிறை செலுத்தி, தண்டமும் தீர்ந்து, உன் குடும்ப ஸம்ரக்ஷணமும் செய்துகொள்" என்று அவனுக்கு வேண்டிய பொருள்களைக் கொடு க்க, அந்த வேதியன், இவரை நோக்கி, "உம்மைப்போன்ற ஹரிபக் தர்கள் இவ்வுலகத்திலில்லை, ஆகையால் உன்னை ஸ்ரீ ஜகந்நாதன் காக் கக்கடவன்" என்று ஆசீர்வதித்துப் போய்விட்டான். பிறகு இவர், "ஒரு வேதியனுடைய ஆபத்துத் தீர்வதற்கு நமது பொருள் உதவி யாயிற்றே" என்று மனமகிழ்ந்து, "வீட்டிற்குப் போய் மனைவிக்கு என்ன சொல்லலாம்" என்று ஆலோசித்துக்கொண் டிருக்கும்போது, ஸ்ரீ பக்தவத்ஸலராகிய பகவானானவர், இவருடைய நிலைமையை யறி ந்து, "இவன் வீட்டிற்குப் போனால் வர்த்தகர்களால் கேள்விப்பட்ட இவன் மனைவி மிகவும் கடிந்து பேசுவாளே, இவன் என்ன செய்வான்" என்று மனங் கனிந்து, துக்காராமரைப்போல உருவம் கொண்டு முன்னேபோய், அந்தக் கடன்காரனுக்கு இருநூறு பொன்னும் வட்டி யும் கொடுத்து, வேறே ஐந்துபொன் கொடுத்து, "இதை ஜிஜாயி யிடத்தில் கொடுத்துவிடு" என்று சொல்ல, அந்தக் கடன்காரன் இவ ரைநோக்கி, "நீரே கொண்டுபோய்க்கொடும்" என்றான். அதற்கு இவர், "நான்போய் வெகுநாளானபடியால், நீயே கொடுத்துவிடு" என்று சொல்லிப் போய்விட்டார். அந்த வணிகன், ஐந்து பொன்னைக் கொண்டு போய், ஜிஜாயி கையில்கொடுத்து, செய்தியைச் சொன்னான். ஜிஜாயி அந்த ஐந்துபொன்னை வாங்கிக்கொண்டு, "அவர் எங்கே?" என்று கேட்டாள். அப்போது, அந்த வணிகன், "உன் கணவன் எங்கேயா,

கிலும் ஹரிநாமஸ்மரணை செய்துகொண்டு திரிவான், அவனைக் கோபிக்கவேண்டாம்" என்று சொல்லிப் போய்விட்டான். துக்காராமரும் மறுநாள் வீடுவந்து சேர்ந்து ஹரிபஜனை செய்துகொண்டிருந்தார். அதன்பிறகு, இவரோடு கூடவந்த வர்த்தகர்கள் வந்து ஜிஜாயியிடத்தில் இவருடைய செய்தியையெல்லாம் சொல்ல, அவர், கடன்காரனுக்குப் பொன் செலுத்தினது முதலானவைகளை ஆலோசித்து, "இதுவும் ஸ்ரீ கண்ணபிரான் செய்த லீலையே யாகும்" என்று மதித்து, தன் கணவனோடு பிணங்காம லிருந்தாள். இப்படிச் சிலநாள் கழிந்த பிறகு, அவ்வூரில் பஞ்சகாலம் நேரிட்டது. அதனால் இவருடைய எருதுகள் தீனியில்லாமல் இறந்துபோனதனால் வ்யாபாரம் செய்ய உதவியில்லாமலும், கடன் கொடுப்பா ரில்லாமலும், வறுமையால் மிகவும் வருந்திப் பசிக்குக் கீரை முதலானவற்றை அவித்துண்டும் பசி தொலையாமல் வருந்துகிற காலத்தில், இவர் மூத்த மனைவியும் பிணியால் இறந்தாள். அப்போது எல்லாரும் வந்து இவரை நோக்கி, "ஹரிபஜனை செய்வோர் தரித்திராவாரென்னும் உண்மையை முன்பே நாங்கள் உனக்குச் சொன்னோம்; அதைக் கேளாமையால் இந்தத் துன்பத்துக்கு ஆளானீர்; இனியாகிலும் அதை விடுவீரானால் சுகப்படுவீர்" என்றார்கள். அதைக் கேட்ட இவர், அவர்களை நோக்கி, "பாண்டுரங்கனைப் பஜிக்காதவர்கள், தீமையை யடையாமலும் சாவாமலும் இருக்கிறார்களோ? இப்படி நீங்கள் சொல்லத்தகாது" என்று சொல்லி, பகவந்நாமஸ்மரணை செய்துகொண்டே சிலநாள் கழித்தார். பிறகு இவர் மூத்த குமாரனாகிய சந்தோபா என்பவனும் பாகதியை யடைந்தான். அவனிடத்தில் மிகவும் அன்புள்ளவராதலால் இவர் சற்று மனம் வருந்தி, "இந்த ப்ரபஞ்ச வாழ்க்கையானது இத்தன்மையதே" என்று மனந் தெளிந்து, "இந்த இல்லறத்திலிருந்து ஈடேறினவர் யார்? ஒருவருமில்லை; ஆகையால் இதைவிட்டு நீங்குவதே நன்மை" என்று இல்வாழ்க்கையை வெறுத்து, ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டே போய், போபநாத் என்னும் மலையின்மேலேறிக் கண்களை மூடிக்கொண்டு ஏழுநாள் வரைக்கும் பகவத் தியாநத்திலிருந்தார். அப்படி யிருக்கும்போது, பகவானனவர், ஒரு பாம்பினுருவங் கொண்டுவந்து, துக்காராமரை வளைந்து கோவமாகச் சீறுவதை யறிந்தும், சிறிதும் மனங் கலங்காமல் கண்மூடிக்கொண்டு ஸ்ரீ ஹரிநாமஸ்மரணை செய்துகொண்டிருந்தார். அப்போது, "திருமாலே ஒரு பாம்பின் உருவங் கொண்டு உன்னை வளைந்துகொண்டிருக்கிறார்" என்று அசரீரி துக்காராமரை நோக்கிச் சொல்லக்கேட்ட இவர்

"அப்படித் திருமாலே பாம்புருவாய் வந்தது உண்மையானல், அந்த வுருவைவிட்டுப் பாண்டுரங்க மூர்த்தியாய்ச் சேவை சாதித்தால் நான் கண்களைத்திறந்து பார்ப்பேன்" என்று சொல்லி, ஸ்ரீ ஹரியைத் தியாநித்துக்கொண்டிருந்தார். பிறகு இவரது மனவுறுதியை யறிந்த பாண்டுரங்க பகவானனவர் தமது நிஜஸ்வரூபத்தோடு இவருக்குப் பிரத்தியக்ஷமாகி, "என்னைக் காணவிரும்பின துக்காராமா, என்னைச் சேவிக்கலாம்" என்று சொல்ல, இவர் பகவானுடைய தேஜோராசியாகிய திவ்யமங்கள விக்ரஹத்தைக் கண்டு பேரானந்த மடைந்து, அந்தத் திவ்ய ரூபத்திற் கலந்திருந்தார். இப்படியிருக்க, ஊரிலிருந்த இவரது சகோதராகிய கான்ஹயா என்பவர், தமையரைக் காணமல், இவர் வெளிப்பட்ட நாள்முதலாக ஜலபாநமும் செய்யாமல், ஸ்ரீராமபிரானது பிரிவினல் பரதாழ்வான் வருந்தித் தேடிவந்தாற்போலத் தேடிவந்து, காடு மலைகளெல்லாங் கடந்து, இவரிருக்கும் மலைமேலேறி, அவ்விடத்தில் பகவானையும் தமையனையும் கண்டு, மெய் மறந்து, செயலற்றவராய், ஸ்ரீ ஹரிசேவை கிடைத்ததென்று சொல்லிக்கொண்டே, வீழ்ந்து சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பித்தார். அப்போது ஸ்ரீ சக்ரபாணியாகிய பகவானனவர் துக்காராமரைத் தழுவி யெடுத்துத் தம் பக்கத்தில் இருத்திக்கொண்டு, "உனக்கு வேண்டியதைச் சொல்" என்று கேட்க, இவர், "தாயை மறவாத குழந்தையைப்போல உன்னை மறவாதிருக்க வரந்தர வேண்டும்" என்றார். அதற்குப் பகவானனவர் "அப்படியே தந்தேன், நீங்கள் உங்களுடைய ஊரை யடைந்து, என்னைப் பஜித்துக்கொண்டிருங்கள்" என்று நியமித்து, மறைந்தார். அங்குப் பகவானது திருவடிச் சுவட்டை இப்பொழுதும் காணலாம். பிறகு இவர் தமது தம்பியாரோடும் மலையைவிட்டிறங்கி, ஊரையடைந்து, ஊருக்கருகே யிருக்கிற இந்திராயணி நதிக்கரையி லிருந்து, பொழுதுபட்டு விடிந்தவுடனே, அந்த நதியில் நீராடி, நியமங்களை முடித்து, எட்டாநாள் பாரணையும் செய்தார். பிறகு தம்பியாரை நோக்கி, "நமது தந்தைக்கு அநேகர் பணங்கொடுக்க வேண்டி யிருக்கின்றது, அவர்கள் எழுதிக் கொடுத்த கடன்சீட்டுகளை யெல்லாம் எடுத்துக்கொண்டுவா" என்று அனுப்பி, அப்படியே அவர் வீட்டுக்குப் போய் எடுத்துக்கொண்டு வந்தபின்பு, கடன் வாங்கினவர்கள் இனிக் கொடுக்கப்போகிறார்களா? இவற்றை உன் கையிற் கொடுத்தால் நீ போய் அவர்களைக் கேட்டு நிர்ப்பந்தம் செய்வாய், அது வேண்டியதில்லை, இவற்றை இந்த நதியில் விட்டுவிடுகிறேன்" என்றார். அதைக்கேட்ட தம்பியார், "நீரோ விரக்தர், உமக்கு நிமித்தமில்லை,

நான் குடும்பி, நான் எப்படி ஜீவநம் செய்வேன்?" என்று சொல்லக் கேட்ட இவர், அவற்றை இரண்டு பங்காக்கி, ஒரு பங்கைத் தம்பியார் கையிற் கொடுத்து, தமக்குரிய ஒரு பங்கை நதியில் விட்டுத் தம்பியாரை நோக்கி, "ஒருவரையும் வருத்தவேண்டாம்" என்று சொல்லி அனுப்பிவிட்டு, பகவத் ஸந்நிதியிற் போய்ப் பாண்டரங்கப் பகவானைச் சேவித்தார். பிறகு, காட்டுக்குப் போய்க் கிடைத்த காய்கனிகளை யுண்டு, தமது ஊருக்கு மூன்று கோசு தூரத்திலுள்ள பாண்டார மலைமேலேறி, ஹரிநாமஸ்மரணை செய்து, விட்டலபகவானை மனத்தில் இருத்திக்கொண்டு அங்கே யொருபக்கத்திலிருந்து, அஸ்தமித்த பிறகு இராமுழுதும் பகவந்நாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்து, விடிந்தவுடனே இந்திராயணியில் நீராடிப் பூஜையை முடித்து, மலைமேலேறி, ஒருபக்கத்தில் தங்கி ஸ்ரீ ஹரிபஜனை செய்துகொண்டிருந்தார். இப்படி யிருக்கையில் ஒருநாள் இவரிருக்கு மிடத்துக்குச் சமீபத்தில் உள்ள ஒரு சோளக்கொல்லைக்காரன் வந்து இவரை நோக்கி, "நீ சும்மா ஒருவேலையு மில்லாம லிருக்கிறாயே, என் சோளக்கொல்லையைக் காத்துக்கொண் டிருந்தாயானால், முடிவில் உனக்கு அரை மணங்கு சோளம் கொடுக்கிறேன்" என்றான். அதற்கு இவர் மனமிசைந்துபோய் அவனது சோளக் கொல்லையைக் காவல் செய்வாராயினார். எப்படியென்றால், சோளத்தைத் தின்னவருகிற பறவைகளைப் பார்த்து, "இவற்றுக்குள்ளே பரமாத்மாவாகிய பகவான் நிறைந்திருக்கிறார், ஆகையால் இவற்றை யோட்டுவது மிகுந்த பாவம்" என்று நினைத்து, அவைகள் வயிறு நிறையத் தின்னுமளவும் பார்த்திருந்து, பிறகு, "ஓ பறவைகளே! இனி நீங்கள் போய் நீர் பருகுங்கள்" என்று சொல்லிவிட்டு, ஹரிபஜனை செய்துகொண்டிருந்தார். இதுதான் இவர் காவல் காக்கும் விதம். இப்படி யிருக்கையில், வீட்டிலிருக்கிற ஜிஜாயி, தன் கணவரைக் காணாமல் வருந்தி, தன் மகளைப் பார்த்து, "எனக்கு மிகுந்த பசியாயிருக்கின்றது, நான் அவருக்கிடாமல் அந்ந முண்ண மாட்டேன், ஆகையால் நீ விரைந்து போய்த் தேடி அவரை யழைத்துவா" என்று சொல்ல, காசிபாயி என்கிற மூத்தமகள் போய்ப் பல விடங்களிலும் தேடிக்காணாமல், முடிவில் சோளக் கொல்லையைக் காவல் காத்திருப்பவரைக் கண்டு, "என் தாயார் நீர் வருமளவும் உண்ணேனென்று பசியோடிருக்கிறார், வாரும்" என்றழைக்க, இவர் மகளை நோக்கி, "அம்மா! கொல்லைக்காரன், சூரியன் அஸ்தமிக்கிறவரைக்கும் கொல்லையைவிட்டு நீங்கவேண்டாம்" என்று எனக்குக் கட்டளையிட்டிருக்கிறான், ஆகையால் உன் தாயாரை உண்ணச்சொல்" என்றார்.

அவள் போய்ச் சொல்லியும், ஜிஜாயிக்கு அப்படிச் செய்ய மனமில்லாமையால், கணவனுக்கு அனுப்பி, அவர் உண்ட செய்தியைத் தெரிந்துகொண்டபிறகு தான் உண்ணலானர். இப்படி ஒருமாசகாலம் வரைக்கும் நடந்துவருகையில், ஒருநாள் கொல்லைக்காரன் வந்து பார்த்து, ஒரு கதிரிலாயினும் சோள மில்லாதிருப்பதைக் கண்டு, மிகவும் கோவங்கொண்டு இவரை நோக்கினன். அந்தச்சமயத்தில் இவர் பரண் மேலிருந்து விட்டலப்பெருமானைப்பஜித்துக்கொண்டிருந்தார். அதைக் கண்ட கொல்லைக்காரன், "உன்னைக் காவல் வைத்ததனல் என்கொல்லை பாழாகி, என்குடி முழுகிப்போயிற்று" என்று மிகவும் வைது, இவரை இழுத்துக்கொண்டுபோய் அந்த ஊருக்குத் தலைவனுய் இருப்பவனுக் கெதிரில் நிறுத்தி, அவன் பார்க்கும்படி வயிற்றில் அடித்துக்கொண்டு உண்மையான செய்தியைச் சொன்னுன். அப்போது அந்த அதிகாரியானவன் இவரை நோக்கி, "உண்மையைச் சொல்" என்று கேட்க, இவரும் ஒளிக்காமல் தாம் காவல்காத்த விதத்தைச் சொன்னர். இவர் சொன்னதைக் கேட்டவர் யாவரும் கல்லென்று நகைத்தார்கள். அதின் பிறகு அதிகாரியானவன் கொல்லைக்காரனை நோக்கி, "உன் கொல்லையில் எவ்வளவு விளையும்?" என்று கேட்க, கொல்லைக்காரன் "நாற்பது மணங்கு விளையும்" என்றுன். அதைக் கேட்ட அதிகாரியானவன் துக்காராமரை நோக்கி, "நீ பெரிய நஷ்டமுண்டாக்கினுய், உனக்கு அந்த நஷ்டத்தைக் கொடுக்கச் சக்தியில்லை, ஆகையால் ஒரு ஆதாவுச் சீட்டு எழுதி அவனுக்குத்தா" என்றுன். இவரும் அப்படியே யெழுதிக்கொடுத்தார். பிறகு அதிகாரியானவன் அந்தக் கொல்லையைப் பார்க்கப்போய், அளவற்ற விளைச்சல் விளைந்திருப்பதைக்கண்டு,ஆச்சரியப்பட்டுநின்றுன். கொல்லைக்காரன், "இந்த விளைச்சல் முழுதும் எனக்குத் தந்தால், சீட்டைக் கொடுத்து விடுகிறேன்" என்றுன். அப்போது அதிகாரியானவன், "இந்தத் துக்காராமர் பகவத்பக்தராதலால், பகவானே இப்படிப்பட்ட விளைவுண்டாகச் செய்தார்" என்று ஆலோசித்து, கொல்லைக்காரனை நோக்கி, "இதையெல்லாம் அறுத்துச் சேர்த்து உனக்குச் சேரவேண்டிய பலனை நீ யெடுத்துக்கொள்" என்றுன். அப்படியே கொல்லைக்காரன் செய்து முந்நூற்று நாற்பதுமணங்கு சோளம் இருக்கக்கண்டு, அதிகாரிக்குத் தெரிவித்தான்; அதிகாரி, அவனுக்குரிய நாற்பது மணங்கு சோளத்தைக் கொடுத்துவிட்டு, மீதியைத் துக்காராமருக்குக் கொடுத்து, "நீர் பகவத்தாசராகையால் பகவான் உமக்கு அருள்செய்தார்" என்றுசொல்ல, இவர் "நான் சிறிதும் அபேக்ஷிக்காம லிருக்கும்போது இப்படி

விளைந்தது, இதையெல்லாம்நான்கொண்டுபோனல் எப்படிமுடியுமோ, எனக்கு வேண்டாம்" என்றார். அதைக்கேட்ட அதிகாரி அந்தச்சோள மெல்லாம் மகதாஜிபண்டிதர் வீட்டில் பொதுக்கட்டி வைத்தான். துக்காராமர் வழக்கம்போலவே ஹரிபஜனை செய்துகொண்டு மகிழ்ந்திருந்தார். பிறகு ஒருநாள் இவர் விடோபாவைச் சேவிக்கப் போனபோது, கோயில் பழுதாயிருப்பதைக் கண்டு அதைத் திருத்தமுயன்று, மண்ணைக் குழைத்துப் பழுதாயிருக்கிற இடங்களில் தடவி, மனம்வருந்தி யிருக்கும்போது, விடோபாவானவர் இவரது மனவருத்தத்தைக் கண்டு, தாம் மனம் வருந்தி, மகதாஜி பண்டிதருடைய கனவிற்போய், "துக்காராமருடைய தானியம் உம்மிடத்தி லிருக்கின்றதே, அதை விற்றுப் பொருளாக்கி, அந்தப் பொருள்களைக்கொண்டு என் கோயிலைப் பழுதுபார்க்க வேண்டும்" என்று நியமித்தார். பண்டிதர் உடனே கண்விழித்து, கனவின் செய்தியை அவ்வூராருக்குச் சொல்லிக் கோயிலுக்குப் போய், துக்காராமர் வேலை செய்வதைக்கண்டு, "நாம் கனாக் கண்டதற்கு இதுவே அத்தாக்ஷி" என்றறிந்து, சுண்ணச்சாந்து முதலியவற்றைக்கொண்டு வேலைசெய்து பழுதுதிருத்தி, இன்னம் கொஞ்சம் வேலைக்குப் பொருள் பற்றாதிருக்கக் கண்டு துக்காராமர் வருந்த, விடோபாவானவர், மறுபடியும் பண்டிதர் கனவிற் போய், கொல்லைக்காரன் துக்காராமருக்குக் கொடுக்கவேண்டிய அரைமணங்குச் சோளத்தைக் கொடாமற் கொண்டுபோயிருக்கிறான்; அதை வாங்கிவந்து மற்ற மீதிவேலையும் நிறைவேற்றக்கடவீர்" என்று சொல்ல, அப்படியே பண்டிதர் கொல்லைக்காரனிடத்தில் வாங்கினது மல்லாமல் ஊரார்க்கெல்லாம் வரி முதலியவை யேற்படுத்தி பணம் தண்டிக் கோயில் வேலையைத் திருத்தமாக்கி முடித்தார். பிறகு துக்காராமர், கோயிற் சபாமண்டபத்தில் நின்று ஹரிகீர்த்தனம் பாடி, நடனம் செய்து, நாமதேவர் ஞானதேவர் முதலான மேலோர்கள் செய்த கிரந்தங்களெல்லாவற்றையும் சேகரித்துக்கொண்டு, பாண்டார மலைமேலேறி யிருந்து, அவற்றை இடைவிடாமல் மநநம் செய்துகொண்டிருந்தார். இவர் மனைவியார் தினந்தோறும் ரொட்டியும் சுரைக்குடுவைநீரும் கொண்டுபோய்க் கொடுத்துண்பித்துப் பிறகு வீட்டுக்கு வந்து தாம் உண்பது வழக்கமாகக்கொண்டிருந்தார். இப்படி யிருக்குங்காலத்தில், ஒருநாள் இவர், "விசுவம்பரர் தெய்வமாகக் கொண்டுவந்து இவ்வூரில் ஸ்தாபித்து நம்முடைய குலநாசம் செய்தார், அந்தக் கருங்குறளனைத் தெய்வமாகக் கொண்டு நமது கணவரும் அவனையே ஸ்மரித்துக்கொண்டு பித்தம் பிடித்துத் திரிகிறார்; ஆகையால் என்

உடைமைகளெல்லாம் தோற்றேன், நானும் என் மக்களும் உணவில்லாமல் சாகிறோம், இப்படிச்செய்த இவனையும் தெய்வமென்று எப்படி மதிக்கலாம்! இனி இவனைக் கண்ணாலும் நோக்கலாகாது; நமது கணவரோ வென்றால், பகலெல்லாம் காட்டிலும் மலையிலும் தங்கி இரவில் கோயிலுக்குவந்து ஹரிகீர்த்தநம் பாடிக்கொண்டிருந்து உதயத்தில் காட்டுக்குப் போய்விடுகிறார். தினந்தோறும் அவருக்கு உணவு கொண்டுபோய் மலைமேலேறிக் கொடுக்கவேண்டியிருக்கின்றது; கால்களும் அயர்ந்துபோயின, இனி மலைமேறவும் சக்தியில்லை, என்செய்வேன்" என்று இவ்வாறு புலம்பிக்கொண்டே, அப்பமும் நீரும் கொண்டு போகும்போது, காலில் பாம்பின் பல்லைப்போலக் கூர்மையாகிய ஒரு முள்ளானது தைத்தது; அதனால் வருந்தி விழவே, குடுவை கவிழ்ந்து கொட்டுண்டு போயிற்று. இவர் மயங்கிச் சிறிது நேரத்தில் தெளிவடைந்து காலைநோக்கி, மிகுதியாய் உதிரம் பெருகக் கண்டு, அந்த முள்ளைப் பற்றியிழுக்க, அது வாராமையால் "இதுவும் கருங்குறளன் செயல்" என்று ஆலோசித்து, "இவ்வாறு இவன் செய்வதற்கு, நான் இவனுக்கு என்ன தீமை செய்தேன்?" என்று சொல்லி வருந்தும்போது, ஸ்ரீகண்ணபிரான் மனமிரங்கி இவருக் கெதிரே எழுந்தருளக்கண்டு, அவரை நோக்காமல் மற்றொரு திக்கை நோக்க, கண்ணபிரான் அந்தத் திக்கில் எழுந்தருள, இவர் அந்தத் திக்கை விட்டு மற்றொரு திக்கை நோக்க, அங்கும் வந்துநிற்கவே, இவர் இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு, பலவகையாய் நிந்திக்க, பகவானவர், "அம்மா! என்மீது இவ்வளவு கோவமேன்" என்று ஹிதவசநங்களைச் சொல்லிச் சமாதாநப்படுத்தி, இவர் காலைப்பற்றித் தமது திருத்தொடைமேல் வைத்துக்கொண்டு, சிறிதும் வருத்தமில்லாமல் முள்ளை வாங்கி, க்ருபாநோக்கம் செய்ய, ஜிஜாயியார் துன்பம் நீங்கி, பகவானை நேரே நோக்கி, "என் கணவர் உன்னை மனத்திற்கொண்டிருத்தலால், இன்னம் உணவில்லாமலிருக்கிறார், நான் அவரிடம் போகிறேன்" என்று சொல்லிப்போக, பகவானும் பின்தொடர்ந்து செல்ல, துக்காராமர் இவ்விருவரையும் கண்டு, "இவர்கள் சேர்த்தி நீரும் நெருப்பும் சேர்ந்தாற்போலவும் அமுதும் நஞ்சும் சேர்ந்தாற்போலவும் இருக்கிறது" என்றுஅதிசயித்துநிற்க, இருவரும் சமீபித்தார்கள். அப்போது பகவானை வணங்கினர். பகவானும் இவரைத் தழுவிக்கொண்டார். பிறகு தாசர் தமது மனைவியை நோக்கி, "விட்டலனுக்கு உணவளிக்கவேண்டும்" என்றார். இவர், "ஒரு அப்பத்தை இருவருக்கு எப்படிப் பகிர்வேன்?" என்று நாணமடைந்து, "நமது கணவர் உண்டி-

யில் மண்போட இவன் வந்தான்'' என்று, அப்பத்தை யெதிரேவைக்க, பகவானானவர் உண்டு, அந்தக்கலத்தில் சிறந்தவுணவும் கறிவகைகளும் வைத்து, ஆடையால் மூடிவைத்தார். இவர் அந்த ஆடை யேதென்று திறந்து பார்த்து, அந்தக் கலத்திலிருந்த வுணவுகளைக் கண்டு, "இது இந்தக் கருங்குறளன் செயல்'' என்றறிந்து, அதை இருவருக்கும் படைத்து உண்டபிறகு, கைகால் சுத்திசெய்ய நீர் தேடும்போது, இவ்விடத்தில் கையினால் தோண்டினால் நீர்வரும்'' என்று பகவான்சொல்ல, அப்படியே தோண்ட, நீர் பெருகிவந்தது; அந்த நீரைக்கொண்டு இருவரும் சுத்திசெய்து கொண்டபிறகு, ஜிஜாயியாரும் உண்டு, "வெறுங்கலத்தில் போஜன பதார்த்தங்கள் நிறைந்திருந்ததும், வெறுந்தரையில் நீர் சுரந்ததும் இந்தக்கருங்குறளன்செயலேயாம். இவன் மந்திரசக்தியுள்ளவனாகத் தோன்றுகின்றது. இப்படிப்பட்ட சக்தியிருக்கையாலல்லவோ நமது கணவருக்குப் பித்தேற்றினன்'' என்று வியந்திருந்தார் அப்போது பகவானானவர், துக்காராமரை நோக்கி, "நீ இந்த மலைமேலிருந்தால், ஜிஜாயி வந்துபோவது மிகவும் வருத்தம், ஆகையால் நீ இன்று தொட்டு இந்த மலைமேலிருக்கவேண்டாம்'' என்று நியமிக்க, "அப்படியே யாகட்டும்'' என்று இவர் வணங்க, இவரைத்தழுவிக்கொண்டபிறகு, கோயிலுக்கு எழுந்தருளினர். பிறகு தாசரும் ஜிஜாயியாரோடு தமது ஊருக்கு வந்து ஹரிபஜனை செய்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தார். இப்படியிருக்குங்காலத்தில், இவர் செய்யும் ஹரிநாமஸங்கீர்த்தநத்தைக்கேட்க வருவோர்கள் விடுகிற செருப்பையெடுத்து பத்திரப்படுத்தி, அவர்கள் போகும்போது எடுத்து எதிரேவைத்து வணங்குதல் முதலாகிய உத்தம குணங்களை யுடையவராய், ஒருநாள் தமது வீட்டுத்திண்ணையி லுட்கார்ந்து, ஹரிநாமஸ்மரணை செய்துகொண்டிருந்தார். அப்போது ஜிஜாயியார் தமது ஆடையைக்களைந்து வீட்டின் சுவர்மேல் வைத்துவிட்டு நீராடிக்கொண்டிருக்க, ஒரு ஏழைப் பார்ப்பினி இவரிடத்தில் வந்து, "ஐயா! உடுக்க வஸ்திரமில்லாமல் மிகவும் வருத்தப்படுகிறேன், ஒரு வஸ்திரம் கொடுத்தால் உமக்குப் புண்ணியமுண்டு'' என்றாள். அவளைநோக்கி, "அதோ சுவரின்மேல் வைத்திருக்கிற வஸ்திரத்தை யெடுத்துக்கொண்டு போ'' என்று கண்சாடை செய்ய, அவளும் அப்படியே யெடுத்துக்கொண்டு, "உமக்கு ருக்மிணிநாதர் க்ருபைசெய்வார்'' என்று சொல்ல, இவர், "ஓ பார்ப்பினீ! கூவாமற் போகக்கடவை'' என்று சொல்லி அனுப்பிவிட்டு, நதிக்குப்போய் நீராடி, அந்த நதிக்கரையில் ஹரிநாமஸ்மரணை செய்துகொண்டிருந்தார். ஜிஜாயியார் நீராடி வஸ்திரத்தைப் பார்த்துக் காணு

மையால் நிகைத்து, "இருந்த ஒரு வஸ்திரத்தையும் யாரோ கொண்டுபோனுர்களே, என்செய்வேன்" என்று இரைச்சலிடும்போது அயல்வீட்டுக்காரன் இவர்க்குக் கேட்கும்படி, "யாரோ ஒரு பார்ப்பினி வந்து தெருவில் நின்று, 'எனக்கு உடுக்க ஆடையில்லே' என்று சொன்னதைக் கேட்டேன்" என்ருன். அதைக்கேட்ட ஜிஜாயியார் "அந்தச் சமயத்தில் பைத்தியங்கொண்ட என் கணவர் திண்ணையில் இருந்தார், அவர் ஒருவேளை அவளுக்குக் கொடுத்திருக்கலாம்" என்று நிச்சயித்து வருந்தும்போது, இவர் சம்பந்தி வீட்டார் மணச்செய்தி சொல்லவந்து கதவைத்தட்டி, "ஜிஜாயி!" என்று அழைக்க, இவர்கேட்டு மிகவும் மனம்வருந்தித் தத்தளிக்கும்போது, ஸ்ரீ ருக்மிணிபிராட்டியார் தமது ஆடையொன்றை இவர் தலேமேலெறிய, அதைப்பெற்றுடுத்து, வியந்து, "இதுமானிடர் உடுத்தும் ஆடையல்ல" என்றும், "இதுசெய்தவன் பகவானே" என்றும் நிச்சயித்து, அந்த ஆடையை யுடுத்துக்கொண்டு, கதவைத் திறந்தார். வந்தவர்கள் இந்த ஆடையின் ஒளியைக் கண்டு வியந்து, கலியாணசங்கதியைச் சொல்லிவிட்டுப் போனுர்கள். பிறகு துக்காராமர், "நாம் வீட்டுக்குப் போனல் ஜிஜாயி கோவிப்பாள்" என்று நினேத்துக் காட்டுக்குப்போய், ராத்திரி முழுதும் கழித்து, உதயத்தில் கோயிலுக்கு வந்து பகவானேக் கை கூப்பி வணங்கி, வெண்கற்களேத் தாளமாகக்கொண்டு ஹரிபஜனே செய்தார். இவர் குரலேக்கேட்ட ஜிஜாயியார், உடனே தம்மகள் கையில் அப்பமும் கீரையும் தந்தனுப்ப, தாசர் வாங்கியுண்டு, ஹரிபஜனே செய்திருந்தார். இருக்கையில் உறக்கம் மிகுந்ததனுல், கண் கசக்கிக் கொண்டும், குடுமியில் கயிறு கட்டித் தூணில் தொடுத்தும் விடியுமளவும் தூங்காமல் ஹரிநாமஸ்மரணே செய்திருந்தார். இன்னமும் இவர் செய்யும் வேலேகள் எவையென்ருல், யாத்திரைக்காரருக்குக் கால் பிடித்தல், ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்வோருக்கு வேர்த்தால் கையில் விசிறிகொண்டு விசிறுதல், அவர் இட்ட வேலேகளேச் செய்தல், வெயிற் காலத்தில் வழிநடப்பவர்க்குத் தாகம் தணித்தல், அவ்வூரார் எதைச் செய்பச் சொன்னுலும் அதைச் செய்து அவரை மகிழ்வித்தல் என்பவைகளே. இப்படி யிருக்கும்போது ஒருநாள், ஒரு கிழவேதியன் கையிலுள்ள தடியை யூன்றிக்கொண்டு வருத்தத்தோடு வீதிவழியாய் வரக்கண்டு, மனம் பொறுக்காமல் அவனுக்கெதிரேபோய் நின்று, "ஐயரே! நீர் நடக்கமாட்டாமல் வருந்துகிறீர், என் முதுகில் ஏறிக்கொள்ளும், நீர் விரும்புமிடத்தில் கொண்டுபோய் விடுகிறேன்" என்ருர். அவன் "நான் விளக்கு நெய் வாங்கப்போகிறேன்" என்று சொ

ல்ல, அதைக் கேட்டு, "நீர் வீட்டுக்குப் போம்" என்று, பணமும் பாத்திரமும் தாம் வாங்கிக்கொண்டு அவனை யனுப்பிவிட்டு, கடைக்குப்போய் விளக்குநெய் வாங்கிக்கொண்டுபோய் அவன் வீட்டிற் கொடுத்தார். சிலநாள் கழிந்தபிறகு, அந்தக் கிழவேதியன், நான் வாங்குகிற விளக்குநெய் எட்டுநாளைக்கு வருவது வழக்கம். அப்படியிருக்க, இந்தத் துக்காராமர் வாங்கிவந்து கொடுத்தது அநேக நாள்களுக்கு ஆயிற்று" என்று வியந்து ஊரார்க்கெல்லாம் அறிவித்தான். இதைக் கேட்ட மற்றொருவன் இவரைக்கொண்டு வாங்கி அநுபவமாய் எல்லாருக்கும் தெரிவிக்க, ஊரரெல்லாரும் இவரைக்கொண்டே வாங்க விரும்பிப் பணமும் பாத்திரமும் கொண்டுவந்து கொடுக்க, இவர் எடுத்துக்கொண்டு போய், வணிகனுக் கெதிரேவைக்க, அவன், "எந்தப் பணத்துக்கு எந்தப் பாத்திரத்தில் வார்க்கிறது?" என்று கேட்டான். இவர் "அதெல்லாம் உனக்கேன்? பணத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு, உன் இஷ்டம்போல வார்க்கக்கடவாய்" என்றார். அவன் சிரித்து, எல்லாப் பாத்திரங்களிலும் தன்னிஷ்டம்போல வார்த்து வைத்தான், அவற்றையெல்லாம் இவர் ஒரு கயிற்றாற் சுருக்கிட்டு, ஒரு கோலிற்கட்டித் தோளின்மேல் வைத்துக்கொண்டு வரும்போது, அவரவர் கொடுத்த பணத்துக்குத் தகுந்ததாக அவரவர் பாத்திரத்தில் விளக்குநெய் யிருக்கும்படி ஸ்ரீ கண்ணபிரானவர் க்ருபை செய்ய, இவர் கொண்டுபோய்க் காட்டுதலும்,அவரவர், தத்தம் பாத்திரங்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டார்கள்.தாசர்,கோயிலுக்குவந்து ஹரிபஜனை செய்துகொண்டிருந்தார். இப்படி, ஊரரெல்லாரும் தம் கணவரிடத்தில் ஊழியம் கொள்வதை ஜிஜாயியார் அறிந்து ஊராரை வைதார். அதைக்கேட்ட சில பெண்கள், ஜிஜாயியாரை நோக்கி, "உன் கணவன் செய்யச் சம்மதித்ததனாலேயல்லவா ஊரார் வேலையிடுகிறார்கள் ? அதற்காக நீ வைவது தகாது" என்றார்கள். பிறகு ஒருநாள் ஜிஜாயியார், துக்காராமருடைய முகத்தைப் பார்த்து, "உமது பிதாவுக்கு இன்றைக்குச் சிராத்தமாதலால் அதற்கு வேண்டிய பொருள்களைச் சேகரிக்கவேண்டும்" என்றார். அதுகேட்ட தாசர், "நான் காட்டிற் போய்க் கீரை பறித்துவந்து கொடுக்கிறேன், அதை வேகவைத்துப் பிதிர்களுக்குத் திருப்தி செய்யக்கடவாய்" என்று சொல்லிப்போய், ஒரு கோதுமைக் கொல்லைக்காரனிடத்தில் கூலியாளாய் அமர்ந்து வேலைசெய்துகொண்டிருந்தார். இவர் வரக்காணாமையால் ஜிஜாயியார் வைதுகொண்டிருந்தார். "இந்தச் சமயத்தில் நாம் உதவவேண்டும்" என்று பாண்டுரங்கர் துக்காராமர்போல வேடங்கொண்டு, சிராத்

தத்துக்கு வேண்டிய பொருள்களெல்லாம் ஒரு மூட்டையாய்க் கட்டித் தலைமேல் வைத்துக்கொண்டு வந்து, ஜிஜாயியாரிடத்தில் கொடுத்து, விரைவாய்ச் சமையல் செய்யக்கடவாய்" என்று சொல்லி, தெருவிற் போய், "இன்று என் வீட்டில் திதியாகையால், நீங்கள் அமுதுசெய்ய வாருங்கள்" என்று வேதியரை அழைக்க, அவர்கள் அதிசயித்து, "இன்றுதான் துக்காராமருக்குக் குடும்பவிஷயத்தில் மனம் திரும்பிற்று" என்று மகிழ்ந்து வந்தார்கள். வந்தவர்களுக்கு ஆசநங் கொடுத்து உபசரித்து இருத்தி, வேதவிதிப்படி சிராத்தத்தை முடித்துப் பிறகு போஜநாதிகளும் நடத்தி, எல்லாரையும் அனுப்பின பிறகு, "அங்கங்கே வாங்கிவந்த பாத்திரங்களைத் துலக்கி அவரவர்களிடத்தில் சேர்த்து வருகிறேன்" என்று சொல்லிப்போய்ச் சேர்த்துவிட்டு வீட்டுக்கு வாராமல் அப்படியே மறைந்துபோனார். பிறகு கூலிக்குப்போன துக்காராமர் நாலரிகை கோதுமையைக் கூலியாகப்பெற்று உடம்பெல்லாம் தூளிபடிந்து வந்து, மனைவி கையிற் கொடுத்து, "இந்தக் கோதுமையைக்கொண்டு, திதியை நிறைவேற்றக்கடவாய்" என்றார். அப்போது ஜிஜாயியார் இவரை நோக்கி, "உமது பித்ரு சிராத்தத்தை முடித்து, வந்தவர்களுக்கெல்லாம் அந்நமிட்டுப்போன நீர், மறுபடியும் இப்படிச் சொல்லுதலுக்கு உமது பைத்தியமே காரணமென்று நினைக்கிறேன்" என்றாள். அதைக்கேட்ட துக்காராமர் கண்ணீர் பெருக்கி, "விட்டலப்பெருமானே! நீர் வந்து என் பித்ரு சிராத்தத்தை முடிக்க நான் என்ன தவம் செய்திருந்தேனோ" என்று மனமுருகி, உடனிருந் துண்ணமற் போனதற்காக மிகவும் மனம் வருந்தினார். வருந்தினதேயன்றி, நீர் வந்து என்னுடன் உண்டாலன்றி உண்ணமாட்டேன்" என்று பிடிவாதஞ் செய்ய, பகவானனவர் இவர்க்குப் பிரத்தியக்ஷமாகிப் பகவானும், தாசரும், ஜிஜாயி முதலானோரும் கூடியிருந்துண்டபிறகு, பகவானனவர் தமது கோயிலுக் கெழுந்தருளினார். பிறகு ஒருநாள் இரவில் தாசருக்கெதிரே யெழுந்தருளி, தாசரை நோக்கி, "நீ முன்னே நாமதேவனாப் பிறந்த காலத்தில், என் விஷயமாகச் சதகோடிகிரந்தம் செய்வதாக ப்ரதிஜ்ஞைசெய்து, 'எழுதவுதவியில்லை' என்றபோது நான் உதவியாயிருந்து எழுதினேனல்லவா? அதில் ஐந்துகோடியே ஐம்பத்தொரு லக்ஷம் கிரந்தம் குறைவாயிருக்கின்றதாகையால் அதை யின்று தொடங்கி முடிக்கக்கடவாய்" என்று நியமிக்க, இவர் "மஹா பாக்கியம்" என்று வணங்கி நின்றார். வணங்கி நின்ற இவரைப் பகவானனவர் தழுவிக்கொண்டு மறைந்துபோனார். பிறகு துக்காராமர், முன்னாளில் வேதவியாஸர் செய்த பாகவதத்

தில், தசமஸ்கந்தத்தில், ஸ்ரீ கண்ணபிரானுடைய பாலக்ரீடைகளைப் பிராக்ருத பாஷையிற் பாடுவதாக வுத்தேசித்துக் கவிகள் செய்தும், இடைவிடாமல் ஹரிநாம ஸ்மரணைசெய்தும், ஏகாதசியாகிய ஹரிதிந விரதத்தை நியமமாய் அனுஷ்டித்தும் தம் புகழ் விளங்க அமர்ந்திருக்குங் காலத்தில், சிஞ்சுவடி மம்மாஜிபாவா என்பவன், அவ்விடத்தில் வந்து மடங்கட்டித் தனது குடும்பத்தோடும் மாணுக்கரோடும் வாழ்ந்திருந்தான். அவன் இவரது வைபவத்தைக் கேட்டு, மனம்பொறுமல், "இவன் நமக்கெதிரே பாடங்கேட்ட ஒரு சூத்திரன், நான் வேதியனையும் அளவற்ற கல்வி கற்றவனையும் இருந்தும் என்னையொருவரும் மதிப்பதில்லை. இவனை ஒருநாள் அவமானப்படுத்தவேண்டும்" என்று சமயம் பார்த்திருந்தான். இருந்தவன் ஒரு ஏகாதசிதினத்தின் இரவில், இவர் சாதுக்களோடுகூடி ஹரிபஜனை செய்து, கநகவிமாநத்தை வலம் வரும் வழியில் முட்களை யிறைத்து வைத்தான். அவற்றில் ஒரு முள் இவர் காலில் தைத்தவுடனே அதை வாங்கி யெறிந்து, மற்ற முட்களையும் எடுத்தெறிந்தார். இதைக்கண்ட மம்பாஜி ஒரு முள்ளந் தடியைக் கொண்டு தாசரை யடித்தான். அந்தத் தடி முறிய மற்றொரு தடியைக்கொண்டும், அது முறிய மற்றொரு தடியைக்கொண்டும் கை சலிக்க அடித்துவிட்டு, மடத்துக்குப் போனன். பிறகு தாசரானவர் முள்தைத்த வருத்தத்தையும் மம்பாஜி யடித்ததனு லுண்டான வருத்தத்தையும் நோக்காமல், ஹரிநாம ஸ்மரணை செய்துகொண்டு விட்டலனைக் கண்டு வணங்கி, மூன்று அபங்கக் கவிகளைச்சொல்ல, பகவானுனவர் கண்ணீர் பெருக்கி நின்றார். இதை யறிந்த ஜிஜாயியார் வந்து, தம் கணவருடம்பில் தைத்திருந்த முட்களை யெல்லாம் வருத்தமில்லாமல் வாங்கிச் சாதுக்களோடு நிற்க, பகவானுடைய அருட்கண் பார்வையால் தாசர் வருத்தம் நீங்கி, ஹரிகீர்த்தநம் செய்தார். அப்போது பாகவதர் யாருங் கூடினார்கள். அந்தக் கூட்டத்தில் மம்பாஜி யில்லாததையறிந்த தாசர் அவனிருக்கும் மடத்தை யடைந்து, "என்னை அடித்ததனுல் கை வருந்துகின்றதோ, உடம்பு நோகின்றதோ" என்று உபசார மொழிகளைச் சொல்லி, உடம்பைப் பிடிக்க, அவன் மிகவும் நாணமடைந்திருந்தான். மறுபடியும் இவர் அவனை நோக்கி, "அடியேன்மீது கோவஞ் செய்தல் தகுதியல்ல" என்று சொல்ல, அவனும் "கீர்த்தநம் செய்ய வாரும்" என்று கூட இருந்தான்; இவரும் கீர்த்தநம் செய்யத் தொடங்கினர். அதில் குற்றம் எங்குண்டோவென்று ஆராய்ந்துகொண்டிருந்தான். தாசரும் விடியுமளவும் கீர்த்தநம் செய்துகொண்டிருந்தார். இப்படி யிருக்க, வீட்டில் ஜிஜாயியார்

உறங்கும்போது இரண்டு கள்ளர்வந்து, அப்பாஜிகுளவே, ஜிஜாயிக்கு வாங்கிக்கொடுத்த எருமையை அவிழ்த்து ஓட்டிக்கொண்டு, மேற்கு முகமாகப் போகும்போது, ஸ்ரீ கண்ணபிரானனவர் “துக்காராமர் கீர்த்தனம் பாடிக்கொண்டிருக்கிறுர், ஜிஜாயி உறங்குகிறுர், நாம் சும் மாவிருந்தோமானுல், ஜிஜாயியானவள் விடிந்தவுடனே எருமையைக் காணுமல் துக்காராமரைக் கடிந்துபேசி வருத்துவாள்” என்று, அந்த நடுராத்திரியில் கையில் ஒரு பெரிய தடியை யேந்திக்கொண்டு கோர ரூபத்தோடும், அந்தக் கள்ளர் போகும் வழியில் எதிர்ந்து, அடிக்க வருகிறவன்போலத் தோன்றுதலும், திருடர்கண்டு பயந்து, “நம்மை யடிக்க ஏதோ ஒரு பூதம் வருகின்றது” என்று அந்த வழியைவிட்டு விலகிப்போக, அங்கும் வர, அஷ்டதிக்குகளிலோடி அங்கங்கும் வரப் பார்த்து, “இது பூதமோ, பிசாசமோ, பிரமராக்ஷஸோ, நாம் பகவத் தாசருடைய மாட்டைக் கொண்டுபோவதைக் கண்டு மனம் பொறுக் காமல் ஸ்ரீ கண்ணபிரானே நம்முயிரை வாங்கும்பொருட்டு இந்தப் பூதத்தை யனுப்பினுரோ” என்று, திரும்பிவந்து எருமையைத் துக் காராமர் வீட்டுத் தோழத்தில் கட்டிவிட்டுத் தம்மூர்க்குப் போகும் போது, முன்போலவே வந்து எதிரே நிற்கக் கண்டு, “இது நாம் எங்கே போனுலும் விடாது; தாசரிடத்துக்குப் போய் விண்ணப்பம் பண்ணிக்கொண்டாலன்றி நமது துன்பம் தீராது” என்று தீர்மானி த்துக்கொண்டு கோயிலுக்கு வந்து, தாசருடைய திருவடியை வண ங்கி, இதுவரைக்கும் நடந்த செய்தியைச் சொல்லிச் சரணடைந்தார் கள். அப்போது தாசர் பகவானைத் தியானித்தார். உடனே பகவான் எழுந்தருளாமையால் அவர்கள் சொல்லுவது உண்மையென் றறிந்து, “ஓ பாண்டுரங்கா! அடியேன்மீது என்னகோவம்? அடியேன் நினைக்கு முன்னே யெழுந்தருளுகிற நீர் இன்றைக்கு எங்கே போயிருக்கிறீர்? சூரியன் உதிக்குங் காலமாயிற்றே” என்று மிகவும் ப்ரார்த்தித்து வணங்க, பாண்டுரங்கர், கைத்தடியோடு எதிர்ந்ததைக் கண்டதாசர், சோரரை நோக்கி, “இப்பொழுது அந்த எருமைமேல் விருப்பமுண் டானுல் கொண்டுபோகலாம்” என்றுர்; அந்தச் சோரர்கள், “எங்களு க்கு உயிர் தந்ததே போதும், எருமை வேண்டாம்” என்று சொல் லிப் போய்விட்டார்கள். சோரர்வந்து தாசரிடத்தில் சொல்லிக்கொண் டதுமுதல் நடந்த செய்தியெல்லாம் அங்கேயிருந்து பார்த்தவரெல் லாரும் அதிசயித்து, தாசரைப் புகழ்ந்து கொண்டாடினுர்கள்.

இந்த அற்புதங்களை யெல்லாம் கண்ட மம்பாஜி, அஞ்சி, தன் செருக்கிழந்து அதிசயித்து நின்றுன். பிறகு தாசரும் பகவானுக்கு

ஹாரதி சமர்ப்பித்தார். பொழுது விடிந்தபிறகு இந்திராயணி நதியில் நீராடி, ஸ்ரீ ஹரிபூஜைசெய்து பஜனைசெய்துகொண்டிருந்தார். கோயிலில் நடந்த செய்தியைச் சிலர்போய் ஜிஜாயியார்க்கு அறிவிக்க, அவரும் மிகவும் மனமகிழ்ந்து எருமையானது கட்டாமல் நிற்பதையும் கண்டு வியந்து, கணவன்மீது மிகுதியான அன்புபூண்டு, கீரையும் அப்பமும் ஒரு கிண்ணத்தில் பாலும் அமைத்துவைத்து, இவர் வீட்டுக்கு வந்தவுடனே எதிரே வைத்து உபசரித்தார்; இவர் அந்த அப்ப முதலியவற்றைக்கண்டு, "என்றுமில்லாத வுபசாரங்கள் இன்று இவள் செய்கிறாளே, இது என்ன" என்று அதிசயித்து, ஜிஜாயியாரை நோக்கி, "தினந்தோறும் திரிகரணசுத்தியாய் ஒரு கிண்ணத்தில் பால் தருவையானால், நான் விட்டலப்பெருமானுக்குச் சமர்ப்பிப்பேன்" என்றார். அப்படிச் சொன்னவுடனே ஜிஜாயியார் ஒரு செம்பு நிறையப் பால் வார்த்துக் கொடுத்தார். இவர் அதைக் கொண்டுபோய்ப் பகவானுக்குச் சமர்ப்பித்தபிறகு தாமும் உண்டார். இப்படிச் சிலநாள் கழிய, ஜிஜாயியார், ஒருநாள், "இதென்ன விபரீதம்! வீட்டில் பால் தயிர் சிறிதுமில்லாதபடி தினந்தோறும் ஒரு செம்புப் பால் கொண்டு போய் விட்டலனுக்குக் கொடுப்பது முறைமையோ" என்று ஆலோசித்து, நாள்தோறும் தாசரோடுகூடப்போகிற மகளாகிய பாகீரதியை நோக்கி, "நீ உன் தந்தையோடு போகிறாயே, அவர் அந்தப் பாலைக் கொண்டுபோய் விட்டலனுக்கு ஊட்டுவது உண்மைதானோ?" என்று கேட்க,பாகீரதி, "உண்மைதான், தினந்தோறும் விட்டலன் குடித்துக் கொஞ்சம் பாலை என் தந்தைக்கும் கொடுக்கிறான்" என்றாள். அது கேட்ட ஜிஜாயியார், "அப்படியானால், நான் கொண்டுபோய்க் கொடுக்கிறேன்" என்று, ஒரு செம்பு நிறையப் பால்வார்த்துத் தூக்கிக் கொண்டு போனார். இதை யறிந்த பகவானானவர், "இந்த ஜிஜாயி நம்மிடத்தில் சிறிதாயினும் அன்பில்லாதவள், இவள் கொடுக்கும் பாலையும் உண்பது தகுதியோ? தகுதியல்ல என்று மறுத்தால், தன் கணவனைக் கோவித்து, 'பொய் சொன்னாய்' என்று கடிவாளே! இதற்கென்ன செய்யலாம்" என்று ஆலோசித்துக்கொண் டிருக்கும்போது, ஜிஜாயியார் வந்து, தாம் கொண்டுவந்த மிகவும் சூடாயிருக்கிற பாலைக் குடிப்பித்தார். அந்தச் சூடு பொறுக்காமல் விட்டலப்பெருமானுடைய இதழ் கொப்புளங்கொண்டு, அந்த வருத்தத்தினால் தலையை யசைத்தார். அன்றியும் கழுத்தும் ஒரு பக்கம் கோணலாய்விட்டது. இதைக் கண்ட ஜிஜாயியார் "கல்லுருவாகிய இதற்கும் உயிரிருக்கிறதே" என்று அதிசயித்து, பகவானது திருமுகத்தை நோக்கி, உதட்டில் கொப்

புள மிருக்கக் கண்டு, "இது மிகவும் அதிசயமாயிருக்கிறது" என்று வியந்து வீட்டுக்குப் போனபிறகு, பகவானுனவர் தாசரது மனத்தில் எழுந்தருளி, "உன் அன்புக்கிரங்கி, உலகவியற்கையை மறந்து, நீ குடிப்பிக்கிற பாலைக்குடித்து வருகிறேன்; இதைக் குறித்து உன் மனைவி யென்னை வைவதும் உன்னைக் கோவிப்பது மன்றி, இன்று அதிக வெப்பமாயிருக்கிற பாலைக்கொண்டுவந்து குடிப்பித்து என் உதட்டில் கொப்புள முண்டாகவும் என் கழுத்தில் கோணலுண்டாக வும் செய்து போனாள்; எனக்கு இவ்வளவு துன்பம் உன்னால் உண்டா யிற்று" என்று சொல்ல, தாசர் மிகவும் மனம் கலங்கி, மனைவியை நோக்கி, "பகவானுக்குச் சூடான பாலை யூட்டி வருத்த முண்டாக்கி னாய்; "இது உனக்குத் தகுதியல்ல" என்றார். அதைக் கேட்ட ஜிஜாயி யார், கணவரை நோக்கி, "நன்று சொன்னீர்? நீர் நாள்தோறும் கோயிலில் ஹரிகிர்த்தநம் செய்யும்போது, 'ப்ருந்தாவநத்தில், பன் னிரண்டு யோசனைப் பரப்பாகிய நெருப்பை யுண்டான்' என்று அந்த விட்டலனது பெருமையைச் சொன்னீர்; அப்படிப்பட்டவனுக்கு 'இந் தப் பாற்சூடு பொறுக்காமல் உதடு கொப்புளங்கொண்டது' என்று சொல்லுவது மிகவும் ஆச்சரியம்! இது உண்மையானால் நீர் சொன்ன ப்ருந்தாவநத்தின் செய்தி பொய்யாய் முடியும்" என்றாள். இதைக் கேட்ட தாசர் ஒன்றும் பேசாமல், விரைந்துபோய் ஸ்ரீ கண்ணபிரா னைக் கண்டு, உதடு கொப்புளங்கொண் டிருப்பதை நோக்கி, மிகவும் மனம் வருந்திக் கண்ணீர் பெருக்கிப் புலம்பி நிற்க, பகவானுனவர் அந்தக் கொப்புளத்தை மறைத்துப் பழையபடியே சேவை சாதித் தருளக் கண்ட தாசர் மனமகிழ்ந்து, பகவானைத் தோத்திரஞ்செய்து தமது வீட்டுக்குப் போய்விட்டார். கழுத்துக் கோணல் மாத்திரம் இப்பொழுதும் உண்டு. அதுநிற்க, ஒருநாள் தாசர் காட்டுக்குப்போ ய்த் தங்கியிருந்தார்; அவ்விடத்தில் கொசுகு அதிகமாய்வந்து இவரை மொய்த்துக் கடித்து உதிரத்தை யுறிஞ்சத் தொடங்க, இவர் அதற்கு மனம் வருந்தாமல், "இந்தச் சரீரமெடுத்தது பிறவுயிர்களுக்கு ஹிதம் செய்தற்பொருட்டல்லவா? ஆகையால் அந்தப்ராணிகள் பசிதீர உதி ரம் குடிப்பதே நமக்குப் பெரிய புண்ணியம்" என்று சஹித்துக்கொ ண்டும், பகவானை ஸ்மரித்துக்கொண்டும் இருந்தார். இப்படி யிருக்கும் போது, பகவானுனவர் இராவழிச்செல்வோன்போல அவ்வழியாய் வந்து, ஒரு ஈச்சந் தோகையைக் கைக்கொண்டு, இவரை நெருங்கி, இவரை மொய்த்துக்கொண்டிருக்கிற கொசுகை விடியுமளவும் ஓட் டிக்கொண்டிருந்தார். விடிந்தபிறகு, தாசரானவர் தேகுவுக்கு வந்து,

நீராடிப் பூஜை முடித்து, ஹரிபஜனை செய்துகொண்டிருந்து, அஸ்தமித்தவுடனே திருக்கோயிலுக்குப் போய்ப் பகவானைக் கண்டு வணங்கி, இராமுழுதும் பஜனை செய்துகொண்டிருந்து, விடியற்காலத்தில் ஹாரதி சமர்ப்பித்துத் துதித்தார். இப்படி நாள்தோறும் நடந்து வருங்காலத்தில், இவர்க்கு மூத்தவனாகிய மாதேவனுக்குக் கல்லடைப்புக் கண்டு மிகவும் வருந்துவதைக் கண்ட தாயாராகிய ஜிஜாயியார் அதற்குப் பலவகையாகிய பரிஹாரங்கள் செய்தும் தீராதிருக்க, "ஐயோ! இந்த மகன் இவ்வளவு வருந்துவதைச் சற்றும் நோக்காமல் பஜனைசெய்துகொண்டு திரிகிறாரே" என்று கணவரை வெறுத்துக்கொண்டு, அண்டைவீட்டுக்காரியோடு சொல்லிப் புலம்ப, அவள் இவரை நோக்கி, "அம்மா! நீயேன் துக்கிக்கிறாய்? உன் கணவர் என்றைக்கு விட்டலனைப் பஜிக்கத்தொடங்கினாரோ அன்றைக்கே உனக்கு எல்லாத் துன்பங்களும் நேரிட்டன. இனி வருந்துவதனால் பயனில்லை" என்று தேற்றினாள். அயல்வீட்டுக்காரி இவ்வளவு சொல்லவே, கள்ளுண்டு வெறிகொண்ட குரங்கைத் தேள் கொட்டினாற்போலத் துள்ளித் துடித்துக் கடுங்கோவங்கொண்டு, "இந்த விட்டலன் என்னும் வஞ்சகன், என் கணவரைக் கைவசப்படுத்திக் கொண்டதுமன்றி, என் குடும்பத்தையும் நாசமாக்கினானே" என்று பலவாறாகப் பகவானை நிந்தித்துக்கொண்டிருந்தார். இப்படி யிருக்கும்போது, மகனுக்கு நோய் வரவர அதிகரித்து, இனிப் பிழைக்கமாட்டானென்று, கண்டோர் சொல்லும்படியான திசையுண்டாக, ஜிஜாயியார் அந்த மகனைத்தூக்கிக்கொண்டு, கண்ணபிரான் கோயிலுக்குப்போய் "அவன் மேலெறிந்து உயிர் விடச்செய்கிறேன்" என்று புறப்பட்டார். அதையறிந்த கண்ணபிரான், ஸ்ரீ ருக்மிணீபிராட்டியை நோக்கி, "ஜிஜாயியானவள், தன் மகனை யென்மேலெறிந்து கொல்லவேண்டு மென்றெண்ணி வருகிறாள், அவள் அப்படிச்செய்து அந்தப்பிள்ளை யிறந்தால், என்மேல் பழிசுமக்குமே, இதற்கென் செய்யலாம்" என்று கேட்க, பிராட்டி நகைத்து, "சர்வஜ்ஞரும், சர்வசக்தருமாகிய தேவரீர், என்னைக்கேட்பது மிகவும் நன்றாயிருக்கின்றது! இது, சூரியன் இருளை நீக்குவதற்கு வேறொரு உதவி தேடுவதுபோலிருக்கிறது! நீர் கருணை செய்தால் அவன் பிழைக்கமாட்டானா" என்று சொல்லிக்கொண்டேயிருக்கும்போது, ஜிஜாயியாரும் வந்து, மகனைக் கண்ணபிரான்மேல் எறியும்பொருட்டு நெருங்கிவந்தார். அப்போது "அங்கே எறியாதே, நில்நில்" என்று ஒரு அசரீரி யுண்டாயிற்று. அதைக் கேட்ட ஜிஜாயியார், "இங்கே யிந்தக் கல்லையன்றி வேறொன்றையும் கண்டிலோம்,

இந்நச்சத்தம் எங்கேயிருந்து உண்டாயிற்று?" என்று சுற்றிலும் பார்க்கும்போது, பிராட்டியார் "உன் மகனுக்கு நல்லகாலம் வாய்த்தது, அஞ்சவேண்டாம், போ" என்று சொல்லவே, மகனை நோக்கினர். மகனும் நோய் நீங்கப்பெற்று, "எனக்குப் பசியாயிருக்கிறது" என்ருன். அப்போது ஜிஜாயியானவர், கல்லும் பிள்ளையும் பேசினதைக்கண்டு மனமகிழ்ந்து, "இந்த விட்டலன் தன்மேற் பழிசுமத்துவேனென்றஞ்சியல்லவோ இவனைப் பிழைப்பித்தான்? நான் இவ்வளவு செய்யாமற்போனல் இவன் வழிக்கு வருவானு? இவன் மாயையில் வல்லவன்" என்று சொல்லி, தன் மகனைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்கு வந்து, நல்லுணவை யூட்டி மகிழ்ந்திருந்தார். இந்தச் செய்தியையறிந்த தாசர், "பகவானுக்கு இவ்வளவு துன்பத்தை யுண்டாக்கினளே" என்று மனைவியை வெறுத்துக்கொண்டு, அஸ்தமித்தவுடனே கோயிலுக்குப் போய்ப் பகவானைச் சேவித்துக் கீர்த்தநம் பாடிக்கொண்டிருக்க, சங்காஜிமவாளா என்பவர் ஒருவர், எவ்வளவு சாயித்தியம் செய்தாலும் எழுதவல்லவரோடும், உதவி பாடகரோடும், சாங்கணம் என்னும் ஊரில் வாழ்பவராகிய சந்தாஜியென்னும் வணிகரோடும், மற்றும் சில வேதியரோடும் வந்து இவரைக்கண்டு, ஒருவர்க்கொருவர் நட்புக்கொண்டு, கேட்பவரெல்லாரும் ஆநந்தசாகரத்தில் மூழ்கும்படி ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்தார். பகவானும் இவர் செய்யும் பஜனையைக் கேட்டு, ஆநந்தமடைந்து, சாமங்கள்தோறும் இவரைத் தழுவிக்கொண்டார். விடியற்காலத்தில் ஹாரதி சமர்ப்பித்து எல்லாரும் தத்தம் இடங்களுக்குப் போய்விட்டார்கள்.

அப்பால், பகவானனவர், ஸ்ரீ ருக்மிணீபிராட்டியை நோக்கி, "என் அன்பராகிய துக்காராமருக்கு அருள் செய்யவேண்டியிருக்கின்றது" என்றுசொல்ல, பிராட்டியார், பகவானைநோக்கி, "ஆதியில் விபீஷணுழ்வான், அநுமான் என்பவர்கள், உனது ஹிதோபதேசத்தால், உலகம் யாவும் அழியுங்காலத்திலும் அழியாத நிலையை யடைந்தார்கள், அப்படியே இந்தத் துக்காராமனும் உன் அருளுக்கு உரியவனுனல் உபதேசித்தருளலாம்" என்ருர். அதுகேட்ட ஸ்ரீ கண்ணபிரானும், மாகசுத்த தசமி வியாழக்கிழமையில், நித்திரை செய்துகொண்டிருக்கிற துக்காராமர் கனவில், ஒரு வேதிய வுருவங்கொண்டுவந்தார். அவரைக் கண்டவுடனே திருத்துழாய் மாலையைக் கையிலேந்தி எதிரே வந்த துக்காராமர் அந்த வேதியரைப் பார்த்து, வணங்கி, கையிலிருந்த திருத்துழாய் மாலையை அந்த வேதியர் கழுத்திலணிந்து, சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பித்துத் தோத்திரம் செய்

தார். அப்போது அந்த வேதியர் மனமகிழ்ந்து, தாசருடைய சிரசின்மேல் கைவைத்து, செவியில் தமது திருநாமத்தை உபதேசித்தருளினர். உபதேசித்தருளின பிறகு, இந்த மந்திரத்தை, இவ்வுலகத்தில் உமது மனத்துக் கிசைந்தவர்களுக்கு உபதேசித்து, குருபாம்பரை தவறாமல் வரும்படி செய்யக்கடவீர்" என்று நியமிக்க, தாசரும் "அப்படியே யாகட்டும், தேவரீர் என் மனைக்கு எழுந்தருளி என்னைப் புநிதனாக்கவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, வேதியர், "உன் விருப்பத்தின்படியே நான் வருகிறேன், எனக்குக் காற்சேர் நெய் கொடுத்தால், சமையல் செய்துண்டு மகிழ்வேன்" என்றார். அதைக் கேட்ட தாசர், "அப்படியே தருகிறேன், வாரும்" என்று சொல்லி அழைத்துப்போய் வீடுசேர்ந்து, மனைவியை நோக்கி, "ஒரு வேதியர் நமது வீட்டுக்கு எழுந்தருளினர், அவருக்குச் சமையல் செய்துண்பதற்கு வேண்டிய பதார்த்தங்களெல்லாம் கொடுப்பதோடு, காற்சேர் நெய்யும் கொடுக்கவேண்டும்"என்றார். அதைக்கேட்ட ஜிஜாயியார், மிகவும் கோவித்து, "இந்த வேதியன் எங்கேயிருந்து வந்தான், வறுமையால் வருந்துகிற நான் இவனுக்கு வேண்டிய வுணவைச் சேகரிப்பதோடு காற்சேர் நெய்யை எப்படிச் சம்பாதித்துக் கொடுப்பேன்? சமையல் செய்வதற்குரிய பித்தளைப் பாத்திரங்களெல்லாம் ஒட்டையாயிருக்கின்றன, எதையாகிலும் விற்றுச் சரிப்படுத்தலாமென்றால் மட்கலங்களேயன்றி நம்மிடத்தில் வேறொரு பொருளுமில்லையே, இப்படியிருக்கையில், வருவோருக்கெல்லாம் எப்படி யுணவளிப்பேன்? என் மக்களும் நானுமே வயிறு வளர்ப்பது துர்லபமாயிருக்க, என்னிடத்தில் வந்து இப்படி நிர்ப்பந்திப்பது வேதியர் முதலானோர்க்குத் தகுதியோ" என்று இப்படிப் பலவகையாய்ச் சொல்லி அதட்டினாள். இதைக் கண்ட அந்தவேதியன், "இவ்விடத்தில் நமக்குப் பிக்ஷைகிடைக்காது" என்று தீர்மானித்துக்கொண்டு போய்விட்டான். உடனே துக்காராமர் விழித்துக்கொண்டு, "உத்தமகுருநாதர் நமக்கு ப்ரத்யக்ஷமாகி, நமது பிறவிக்கடலைக் கடத்தினர். அப்படிப்பட்டவருக்குக் காற்சேர் நெய்யைஅவர் விரும்பினபடியே கொடுக்கப்பெற்றிலேன். தமதுபெயர் **கேசவசைதந்யர்** என்று சொல்லி, எனக்கு உபதேசமும் செய்தருளினர்" என்னும் பொருளமைந்த மூன்று கவிகளைச் சொன்னார். பிறகு பகவத் குணாநுபவமாகிய பேரின்பத்தை யடைந்து, தம்மை வந்து அடுத்தவர்களுக்கெல்லாம் உபதேசித்து வந்தார். பிறகு தமது மனைவியாராகிய ஜிஜாயியார் "கனவிலும் நல்லவார்த்தைகளைப் பேசுவதில்லை" என்பதைக் குறித்து மிகவும் மனம் வருந்தி, "இவளைவிட்டு நீங்கின

லல்லது நமக்கு நன்மை கிடைப்பதருமை, அன்றியும் பகவத்பக்தர்களுக்கு அபராதியுமாவேன்" என்று ஆலோசித்து, குடும்பத்தை விட்டு நீங்கி, ஒரு அரணியத்தை யடைந்து, பகற்கால முழுதும் ஹரிபஜனை செய்துகொண்டிருந்து, அஸ்தமித்த பிறகு பகவத்ஸந்நிதியை யடைந்து, நான்கு சாமமும் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநம்செய்து, சூரியோதயத்தில், நதியில் நீராடி அரணியத்தையடைந்தார். இப்படி நாள்தோறும் செய்துகொண்டும், யாவராயினும் உணவளித்தால் அதிற் சிறிது உண்டுகொண்டும், வீட்டிற்கு வாராமலே இரண்டு மாசகாலம் கழித்தார். இப்படி யிருக்கையில், ஜிஜாயியார் அயலா ளொருத்தியை நோக்கி, "என் கணவர் இரண்டு மாசகாலமாய் வீட்டுக்கு வாராமல் அரணியவாசம் செய்துகொண்டிருக்கிறார். நான் செய்த பாவத்தின் பயன் இது" என்று சொல்லிப் புலம்பினாள். பிறகு ஒருநாள் இந்திராயணி நதியில் நீர் கொண்டுவரப்போய், அந்த நதியில் நீராடிக்கொண்டிருந்த தன் கணவரை நோக்கி, அவரைக் கிட்டி வந்து, "நீர் இரண்டு மாசகாலமாய் வீட்டுக்கு வாராமல் நீர்மாத்திரம் வயிறு வளர்த்துக்கொண்டு சுகமாயிருந்தால், நானும் என் மக்களும் எப்படி ஜீவிப்போம்? வீட்டுக்கு வந்து எங்களுக்கு ஒரு ஏற்பாடு செய்துவிட்டுப் போம்" என்று சொல்லி மடியைப் பிடித்துக்கொண்டார். அப்போது தாசரானவர் மனைவியாரை நோக்கி, "எல்லாச் சீவர்களுக்கும் நித்யமான தாய் தந்தையராகிய பிராட்டியையும் பெருமானையும் இடைவிடாமல் பஜித்துக்கொண்டிருப்பாயானால் உனக்கும் உன் மக்களுக்கும் ஒரு குறையுமிருக்காது" என்றார். அதைக் கேட்ட ஜிஜாயியார் "அப்படியே செய்கிறேன், நீர் வீட்டுக்கு வாரும்" என்றழைக்க, தாசர், "நான் சொன்னபடியே நீ நடப்பதாக நீ ஒரு பிரதிஜ்ஞை செய்வாயானால் உன் விருப்பத்தின்படியே வருவேன்" என்றார். அப்படியே ஜிஜாயியாரும் ப்ரதிஜ்ஞை செய்துகொடுத்துக் கணவரை வீட்டுக் கழைத்துக்கொண்டு போனார். தாசரும் ஹரிபஜனை செய்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தார். இப்படி யிருக்குங் காலத்தில் ஒருநாள், ப்ருந்தாவனத்திலிருந்து அநேக சாது ஜநங்கள் இவர் செய்யும் ஸ்ரீ ஹரிநாம ஸங்கீர்த்தநத்தைக் கேட்க வந்தார்கள். அவர்களைக் கண்ட ஜிஜாயியார் மிகவும் கோவங்கொண்டு சீறுதலும், தாசர், ஜிஜாயியாரை நோக்கி, "நான் செய்யும் பஜனையைக் கேட்க வருவோர்களை நீ வெறுத்துக் கொள்வதினால் உனக்கென்ன லாபம்? அவர்கள் வருவதினால் உனக்கென்ன நஷ்டம்" என்று ஹிதவசநங்கள் சொல்ல, ஜிஜாயியாரும் கோவந்தணிந்து அடங்கி யிருந்தார். இந்தச் செய்தியை யறிந்த சாதுக்க

ளெல்லாரும் அஞ்சி இவரிடத்துக்கு வராதிருந்தார்கள். அவர்கள் வாரா மைக்குக் காரணம் தமது மனைவியாரென்றறிந்த தாசரானவர், ஜிஜாயி யாரைநோக்கி, "பெண்ணே! இனி நாள்தோறும் நான் செய்யும் பஜனை யைச் சிரத்தையோடு கேட்கக்கடவை" என்றார். அதைக் கேட்ட ஜிஜாயியார், "இவர் சொற்படி நாம் கேட்காமற்போனால், நாம் இவரை யழைக்கும்போது செய்த ப்ரதிஜ்ஞை தவறும்" என்று நினைத்து, தாசருக் கருகேவர, தாசர் ஜிஜாயியாரை நோக்கி, "பெண்ணே! இந் தச் சரீரம் அநித்ய மாகையால், நமது வாணாள் வீணாளாகாமல், நம் மிடத்திலுள்ள பொருள்க ளெல்லாவற்றையும் அஸ்திரமானவை யென்று அவற்றில் விருப்பமற்று, மக்கள்மேலும் அப்படியே நிராசை யுள்ளவளாய், பாண்டுரங்க பகவானே தாய், தந்தை, குரு, தெய்வம் என்று, அவன் திருவடியை இடைவிடாமல் ஸ்மரித்துக்கொண்டு வரு வையானால், இம்மையில் புகழும், மறுமையில் மோக்ஷபதமும் அடை யலாம், இனி ஊணுடைகளைக் குறித்து வருந்தவேண்டாம், இன்று ஏகாதசி, நாளை துவாதசி யாதலால் சூரியோதயத்தில் நீராடி வீட்டு க்குவந்து, உள்ள பொருள்க ளெல்லாவற்றையும் திருமாலடியார்களு க்குக் கொடுத்து, நமது விட்டலப்பெருமானை இடைவிடாமல் தியா நித்துக்கொண் டிருக்கக்கடவாய்" என்னும் பொருளமைந்த பதினொரு கவிகளை யருளிச்செய்தார். அந்தக் கவிகளுக்குப் **பூர்ணபோதம்** என் னும் பெயர் வழங்குகின்றது. அதைக் கேட்ட ஜிஜாயியார் முதலான வர் யாவரும் மிகவும் விரக்தி யடைந்தார்கள். ஜிஜாயியார்க்குத் திவ்ய ஜ்ஞானம் உதயமானதனால், சூரியோதயத்தில் இந்திராயணி நதியில் நீராடி, வீட்டுக்கு வந்து, வேதியரை வரவழைத்து, மனப்பூர்த்தியாய் அவர்களுக்குத் தமதுபொருள்முழுதும்கொடுத்து, நனைத்துக்கொண்டு வந்த ஒரு பழைய வஸ்திரத்தை வெயிலில் உலர்த்தினர். அந்தச் சமயத்தில் திருமகள் ஒரு புலைச்சி யுருவம்கொண்டு, தாசரிடத்தில் வந்து, "ஒரு வஸ்திரம் கொடுப்பீரானால் உமக்குப் பெரும் புண்ணி யம் உண்டாகும்" என்று சொல்ல, தாசர், உலர்ந்துகொண்டிருக்கிற வஸ்திரத்தை யெடுத்துக் கொடுத்து, "இதை நான் கொடுத்ததாகப் பிறர் அறியும்படி சொல்லாதே, விரைவாய்ப் போய்விடு" என்றார். இந் தச் செய்தியை அருகே பார்த்திருந்த மக்கள்போய் ஜிஜாயியாரிடத் தில் சொல்ல, ஜிஜாயியார் கோவங்கொண்டு, "என் கணவரென்று அன்போடு வீட்டுக் கழைத்துவந்து அவர் சொன்ன கவிகளின் கரு த்தை யறிந்து ஒரு கரியனாகிய பாவியின் பாதத்தை நினைத்தேன், நினைத்தவளவில் வீட்டிலிருந்த பொருள்முழுதும் தொலைபட்டது,

'அந்தக் கரும்பாவியை நினைத்தால் உடனே வறுமை யுண்டாகும்' என்று ஊரெல்லாரும் சொன்னசொல் உண்மையாயிற்று, ஆதலால் எந்தப் பாதங்களை நினைத்தவுடன் எனக்கு இப்படிப்பட்ட அநர்த்தம் நேரிட்டதோ, அந்தப் பாதங்களை இந்தக் கல்லினால் முறிக்கிறேன்'' என்று ஒரு கருங்கல்லைக் கைக்கொண்டு கோயிலுக்குப் போய், விட்டலப் பெருமானுக் கெதிரே நிற்க, பகவானனவர் தமது அருமைத் திருமேனி நடுங்க, பிராட்டியை நோக்கி, ''ஜிஜாயி என் காலை முறிக்கக் கருங்கல்லைக் கைக்கொண்டு நிற்கிறாள். இதற்கு நான் என் செய்வேன்?'' என்று சொல்ல, பிராட்டி, ஜிஜாயியை நோக்கி, ''நீ இப்படிக் கடுஞ்சினம் கொண்டு என் பிராணநாதரைக் காலை முறிக்க வந்ததற்குக் காரணமென்ன?'' என்றுகேட்க, ஜிஜாயியார், பிராட்டியை நோக்கி, ''நேற்றிரவில் என் கணவர் தந்திரமாய்ப் போதித்ததை நம்பி, இவன் பாதத்தைச் சற்று நினைத்தேன், பொழுது விடியுமுன்னே வீட்டிலிருந்த பொருள்முழுதும் தொலைந்து இந்தத் துன்பத்துக்கு ஆளானேன், ஆதலால் இவன் பாதங்களை முறிக்கத் துணிந்துவந்தேன்'' என்று சொல்லுதலும், பிராட்டியார், ஜிஜாயியாரை நோக்கி, ''நீ உன் சிறு வாழ்க்கையை நினைத்து வருந்தவேண்டாம்'' என்று சொல்லி, நூறுபொன் விராகனும், பொற்கச்சும், பொற்சரிகையாடையும் கொடுக்க, பெற்றுக்கொண்ட ஜிஜாயியார் மனக்களிப்போடு அந்த ஆடையையுடுத்து வெளியேவந்தார். இவரைக் கண்ட தாசர் நகைத்து, ''இந்தச் சரிகைச் சேலையேது? உன் கையிலுள்ளது யாது சொல்'' என்று கேட்க, ஜிஜாயியார் உண்மையைச் சொன்னார். தாசர் ''நன்று'' என்று சொல்லிக் கையிலிருக்கிற பொருளில் சில பொருளைமாத்திரம் மனைவியாரிடத்தில் கொடுத்து மற்றதைச் சாதுக்களுக்குக் கொடுத்துவிட்டார். பிறகு ஜிஜாயியார், கணவர் கொடுத்த சில பொருளைக் கொண்டு வீட்டுக்கு வந்து சுகமாய் வாழ்ந்திருந்தார். பிறகு, தாசர் புனவென்னும் ஊருக்குப் போய், அங்குள்ள ஒரு செட்டி வீட்டில் ஹரிபஜனை செய்துகொண்டிருந்தார். இப்படி இவர் இருப்பதைச் சிவாஜிராஜன் அறிந்து, இவர் செய்யும் ஹரிநாம ஸங்கீர்த்தநத்தைக்கேட்க விரும்பி, அந்தப் புனவிலுள்ளார் தனக்குப் பகைவராதலால் வேற்றுருக்கொண்டுபோய், தாசரைக் கண்டு வணங்கி, ஒரு பொற்றட்டு நிறையப் பொன் மொஹராக்களைக் கொட்டி, தாசருக் கெதிரே வைத்துத் தோத்திரம் பண்ணினான். அதைக் கண்ட தாசரானவர் ''ஸ்ரீ லக்ஷ்மீ நாதராகிய பகவானை யன்றி வேறொரு பொருளையும் நான் விரும்பிலேன், நீ யென்னை மகிழ்விக்க விரும்புவையானால், திருத்துழாய்

மாலையைக் கழுத்திலணிந்து, பகவந்நாமஸ்மரணை செய்துகொண்டும், ஏகாதசி விரதத்தை யனுஷ்டித்துக்கொண்டும், திருமாலடியவன் என்கிற பெயர் பூண்டும் இருக்கக்கடவாய்" என்றார். அதைக் கேட்ட அரசனும் "அப்படியே யாகட்டும்" என்று ஒருபக்கத்திலிருந்து ஹரிநாமஸங்கீர்த்தநத்தைக் கேட்டுக்கொண்டிருந்தான். இப்படி யிச்சிவராஜன் உருமாறிவந்து ஹரிநாமஸங்கீர்த்தநத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிற செய்தியைக் காவலாளரால் அவ்வூர்க் கரசன் அறிந்து, இரண்டாயிரம் வீரராகிய படாணிமாரோடும் உருவிய வாளோடும் வந்து, தாசரிருக்கும் செட்டி வீட்டை வளைந்துகொண்டு, தாசரை நோக்கி, "இந்தக் கோஷ்டியில் சிவாஜி இன்னானென்று எங்களுக்குக் காட்டவேண்டும்" என்றான். அப்போது தாசர் இந்தச் செய்தியைச் சிவாஜிக்குக் குறிப்பாகத் தெரிவிக்க, சிவாஜி, "நாம் வெளிப்படுவதற்கு மார்க்கமெது" என்று ஆலோசித்துக்கொண் டிருக்கும்போது தாசர், பகவானைக்குறித்து, "ஓ பக்தவத்ஸலா, என்னிடத்தில் அன்பிருந்தவனாய், இங்குவந்த சிவாஜிராஜன் இறப்பானானால் நானும் உயிர் விடுவேன்" என்று சொல்லி, முன்போலவே ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்தார். இப்படியிருக்க, வந்த துலுக்க வீரர், "இந்த வீட்டில் உள்ளவர்களைக் கொன்றாலல்லது அரசனைக் காட்டமாட்டார்கள்" என்று ஆரவாரித்தார்கள். அப்போது பகவானானவர், ராஜவேஷங்கொண்டு வெளியே வந்து, "சிவாஜி நான்தான், இதோ என்னூருக்குப்போகிறேன்" என்றுசொல்லி, ஒருகுதிரைமேலேறி விரைவாகச் செல்லக்கண்ட பட்டாணி வீரரெல்லாரும் தொடர்ந்துபோய், இவரைப் பிடிக்கமாட்டாமல் அயர்ந்து நின்றார்கள். இவர்கள் அயர்ந்து நிற்கக்கண்ட பகவானானவர், இவர்களை இம்மட்டில் விடக்கூடாதென்று தமது குரல் காட்டினார். குரல் கேட்டவுடனே அயர்ந்து நின்றவர்கள் மறுபடியும் தொடர்ந்தோடி, இருட்டில் வழி தெரியாமல் முட்களிலும் கற்களிலும் முட்புதல்களிலும் மிதித்தும், மோதியும் சரீரமுழுதுங் காயப்பட்டு மிகவும் வருந்தி அஞ்சிநிற்க, பகவானானவர் அவர்களை அவ்விடத்தில் விட்டு, தாசரிடத்துக்குவந்து, பகைவர் யாவருந் தொலைந்தார்கள், நீ பஜனை செய்" என்று சொல்லி, தாமும் நடனம் செய்துகொண்டிருந்தார். தாசர் சிவாஜியை நோக்கி, "உன் துன்பம் நீங்கிவிட்டது" என்று சொல்லி, சூரியோதயத்தில் பகவானுக்கு ஹாரதி சமர்ப்பித்து, சிவாஜியை ஊருக்குப் போகும்படி நியமித்தார். அரசனும் அப்படியே விடைபெற்றுப் புறப்பட்டான். இவனைக் கண்ட யாவரும் இவனை நோக்கி, "நேற்றிரவில் துலுக்க வீர

ருக்கெதிரே குதிரை யேறிப்போன நீர், மறுபடியும் ஹரிநாம ஸங்கீர்த்தநம் கேட்க எப்படி வந்தீர் ? அந்தத் துலுக்கர் போன வழியாது?" என்று கேட்க, அரசன் அவர்களை நோக்கி, "எனக்கொன்றும் தெரியாது; நடந்ததெல்லாம் பகவான் செயலே" என்று சொல்லிவிட்டுத் தன்னூரை யடைந்து சுகமாய் வாழ்ந்திருந்தான். துலுக்கவீரர், விடியுமளவும் காட்டில் வருந்தியிருந்து, விடிந்தபிறகு தம் அரசனிடத்திற் போய் நடந்த செய்தியைச் சொன்னார்கள். இப்படியிருக்க, ஊரை யடைந்த சிவாஜிராஜன் தாசருடைய பெருமையை நினைத்துக்கொண்டாடி, "தாசருக்குப் பொருள் கொடுத்தால் ஏற்றுக்கொள்ளமாட்டார்" என்று, ஒரு பெரிய எருது சுமக்கும்படியான நெற்பொதியைக்கொண்டுவந்து தாசர் வீட்டிலிறக்கி, தாசரை வணங்கி, "தேவரீர் பொன் முதலிய பொருள்களை விரும்பாமற்போனாலும், உணவுக்குரிய இந்தத் தாநியத்தையாகிலும் அங்கீகரிக்க வேண்டும்" என்று சொல்லிப் போய்விட்டான். தாசரும் தமது தேவியாரை யழைத்து, "இந்த நெற்பொதியை சிவாஜிராஜன் கொண்டுவந்து கொடுத்துப்போனான்; இதை யவிழ்த்து, இதிலுள்ள தாநியத்தில் இன்றைக்கு மாத்திரம் நமக்கு வேண்டியதை யெடுத்துக்கொண்டு, மற்றத் தாநியத்தை யாசகர்களுக்குக் கொடுத்துவிடு, நாளைக்கு வேண்டுமென்று எடுத்து வைக்கவேண்டாம்" என்றார். இப்படி யிவர் சொல்லக்கேட்ட ஜியாயியார் கோவங்கொண்டு, கை தலைபுடைத்துச் சொல்லுகிறார்: "நீர் உழைத்துச் சம்பாதிக்கவில்லையே, அரசன் கொண்டுவந்து கொடுத்ததை நானும் என் மக்களும் உண்டு சுகித்திருக்க உமக்கு மனம் பொறுக்கவில்லையே, இதென்ன அநியாயம்" என்று, தாநியமுழுதும் எடுத்து வீட்டில் நிறைத்து வைத்தார். மற்றொருநாள் இந்தத் துக்காராமர் ஹரிகதை செய்வதை ஒரு வளையல் விற்போன் வந்து கேட்டு ஆநந்தமடைந்து, அதுமுதல் தினந்தோறும் அப்படியே வந்து கேட்டுக்கொண்டு போகிறவனாயிருந்தான். ஒருநாள் அவன் மகன் நோயால் வருந்தி யிறக்குந் திசையா யிருப்பதையும் யோசிக்காமல் ஹரிகதை கேட்கப் புறப்பட்டான். அப்போது அவன் மனைவி எவ்வளவு சொல்லித் தடுத்தும் கேளாமல் போய், தாசர் செய்யும் ஹரிகதை கேட்டுக்கொண்டிருந்தான். வீட்டில் பிள்ளை யிறந்துபோனான். அவனைத் தாயானவள் எடுத்துக்கொண்டு தாசர் ஹரிகதை செய்யுமிடத்துக்கு வந்து கீழே விழுந்து, தாசரை நோக்கி, "இந்தக் கதையை எம் முன்னோர் ஒருவரும் கேட்கும் வழக்கமில்லை, என் கணவன் நூதநமாய் இந்தக் கதையைக் கேட்க வந்ததனால் என் மகனிறந்தான், இவன் இறப்பதற்குக் காரண

மாயிருந்தவர் நீர் தான்" என்று தாசர்மீது பழி சுமத்தினுள். அப்போது அங்கிருந்தவரெல்லாரும் அவளை நோக்கி, "உன்னுஞ் சோற்றில் மண்விழுந்ததுபோல் ஹரிகதைகேட்குஞ் சமயத்தில் பிணத்தைக் கொண்டுவந்தாய், இது உனக்குத் தகாது" என்றும், "இறந்த பிள்ளையை நீ கொண்டுவந்ததனுல் ப்ரயோஜனம் யாது? தாசர் இறந்த பிள்ளையைப் பிழைப்பிக்கும்படியான மருந்து வைத்திருக்கிருரோ? போபோ, பைத்தியக்காரி" என்றும் சொன்னுர்கள். அப்பொது தாசரானவர், அவர்களை நோக்கி, "ஸ்ரீராமநாமாம்ருதத்துக்கு மற்ற அமுது ஒப்பாகுமோ! ஆகாது! நீங்கள் ஹரிநாமத்தின் ஏற்றத்தை யறிய விரும்பினுல், ஹரிநாமத்தை நீங்களெல்லாரும் ஓதுங்கள்! இறந்த இந்தச்சிறுவன் பிழைப்பான்" என்ருர். இதைக்கேட்ட எல்லாரும் அப்படியே ஓதுதலும், இந்த சிறுவன் பிழைத்தெழுந்தான். இதைக் கண்டவரெல்லாரும் அதிசயித்தார்கள். சிறுவனைப்பெற்ற தாயானவள் தாசரை வணங்கி, தன் மகனை யெடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போய் விட்டாள். இப்படிப்பட்ட இவரது இணையில்லாத பக்திக்கு மேகவண்ணராகிய பகவானுனவர் மிகவும் மனமகிழ்ந்து, அன்றுமுதல் துக்காராமரோடு கூடியிருந்து அமுதுசெய்து வருவாராயினர். இப்படி யிருக்குங் காலத்தில், சிஞ்சுவடி யென்னும் ஊரிலுள்ள வேதியர் யாவரும், தாசருடைய பெருமையைக் கேட்டு, "நாமெல்லாரும் விநாயக வுபாசனையை நியமமாய்ச் செய்தும், விநாயகர் வெளியாகவில்லையே, இதற்குக் காரணம் யார் என்று வினுவினுல்,பகவான் தம்மோடு கூடியிருந்து அமுதுசெய்யும்படியான பெரும்பாக்யம் பெற்றவராகிய தாசர் சொல்லக் கூடும்" என்று இவரை யழைத்து வரும்படி, அந்த வேதியர்க்குத் தலைவராகிய **சிந்தாமணி** யென்பவர் ஒரு ஆளனுப்ப, அந்த ஆள்வந்து சொல்லுதலும் தாசர் புறப்பட்டு, சிஞ்சுவடிக்குப் போகும்போது, வழியில், வந்த ஆளானவன் வேதியர் செய்தி முழுதுஞ்சொல்ல, தாசர் "நல்லது" என்று அவ்வூரை யடைந்து, வேதியர் தலைவன் வீட்டுக்குப் போனுர். அந்தச் சமயத்தில் அந்த வேதியன் விநாயக பூசையிலிருந்தான். ஆனுல் அவன் மனமானது அவனது நந்தவனம் அசுத்தமாயிருப்பதைக்கண்டு "அதைச் சுத்தப்படுத்தக்கடவாய்" என்று வேலைக்காரனைக் கோவித்துக்கொள்ள, அதைத் தடுத்துத் திருப்பிப் பழையபடியே விநாயகர்மீது நிறுத்திப் பூசையைமுடித்து வெளியே வந்து, தாசரைக் கண்டு, "எப்பொழுது வந்தீர்?" என்று வினவ, தாசரும் அவனை நோக்கி, "நீர் விநாயகபூஜை செய்யும்போது, உமது மனம் நந்தவனத்துக்குப் போனபோது வந்தேன்" என்ருர். அதைக்

கேட்ட வேதியன் வியந்து, "இவரை உலகமுழுதும் மெச்சுவது தகுதியேயாம்" என்று மதித்து, "இவரோடு பகவான் கூடியிருந்து உண்பதைமாத்திரம் தெரிந்துகொள்ளவேண்டும்" என்றெண்ணி, வேதியர் பந்திக்கருகே இவருக்கு ஓரிலைக்கலம் பாப்ப, அதைக்கண்ட தாசர், "என்னோடு பகவானும் வந்து உண்பார், அவருக்கும் ஓரிலை பாப்பும்" என்றார். அப்படியே வேதியரும் பாப்பினார்கள். பிறகு அந்த வேதியர்கள் இவரை நோக்கி, "நீ ஜாதி, ஆசார முதலியவற்றால் இழிந்தவன், அப்படியிருக்க, பகவான் எப்படி உன்னோடு கூடியிருந்துண்பார்" என்று கடிந்து கேட்க, இவர் அவர்களை நோக்கி, "ஓ அந்தணரே! பகவானனவர் நமது ஜாதியாசார முதலியவற்றில் அகப்படமாட்டார், சித்த சுத்தியோடு கூடின பக்திவலையில் அகப்படுவார்" என்று சொல்ல, அவர்களும் இன்னம் சற்று நேரத்தில் அறிவோம்" என்று, இலைகளில் அன்னம், பதார்த்தவகைகள் முதலிய வெல்லாவற்றையும் படைத்துப் பார்த்திருந்தார்கள். அப்போது பகவானுக்கு அமுதுபடைத்த இலையிலுள்ளவைகள் வரவரக் குறைவதைக் கண்டு அதிசயித்து, "இந்த இழிந்த சாதியானோடு பகவானனவர் கூடியிருந் துண்ணும்போது, உயர்ந்த ஜாதியாராகிய நம்மோடு விநாயகர் என் கூடியிருந் துண்ணலாகாது" என்று, தமது குலச் செருக்கோடு நின்று விநாயகரைத் தோத்திரஞ் செய்து, அவர் வாராமையைக்கண்டு நாணி, தாசரை வணங்கி, "நீர் திருமாலை யழைத்தது போல விநாயகரையும் அழைக்கவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, இவர் "அப்படியே யாகட்டும்" என்று சற்றுநேரம் சும்மா இருந்தார். அப்போது வேதியர் இவரை நோக்கி, "வரவழைக்காமல் ஏன் சும்மா இருக்கிறீர்?" என்றார்கள். அதற்குத் தாசர், "விநாயகர் இப்பொழுது விக்ரஹத்திலில்லை, ஒரு பக்தனது துன்பத்தைத் தீர்க்கும்பொருட்டுக் கடலை யடைந்திருக்கிறார், சற்றுநேரம் பொறுங்கள்" என்று சொல்லி, விநாயகமூர்த்தி, தமது விக்ரஹத்தில் ப்ரவேசித்தவுடனே தோத்திரஞ்செய்ய, உடனே விநாயகர் வந்து அமுதுண்பதை அவ்வேதியருக்கு அறிவிக்க, அவர்களும் அவருக்கிட்ட இலையில் உணவு, முதலியவை குறைந்து வருவதைக் கண்டு, விநாயகர் ஆலயத்திற் போய், விக்ரஹத்தின் ஆடை நனைந்திருப்பதைக் கண்டு, அதிசயித்து, வெளியே வந்து, தாசரை நோக்கி, "இந்த ரஹசியத்தை நீர் எப்படியறிந்தீர்?" என்று கேட்க, தாசர், அவர்களை நோக்கி, எல்லாம் பகவத் கடாக்ஷத்தால் நடக்கின்றன" என்று சொன்னார். அவர்களும் "உமது பக்தியின் பெருமையைச் சொல்ல ஒருவராலும் முடியாது" என்று

புகழ்ந்து கொண்டாடினர்கள். தாசர் அன்றிரவில் ஹரிகதை செய்து, சூரியோதயத்தில் விடைகேட்க, அவ்வூரிலுள்ள மறையோரெல்லாரும் "இன்னமொருதரம் இவ்விடத்துக்கு எழுந்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்தார்கள். தாசரும் "அப்படியே யாகட்டும்" என்று புறப்பட்டு வரும் வழியில், ஒரு கருப்பந் தோட்டக்காரன், இவரைக் கண்டு வணங்கி "ஸ்வாமீ! தேவரீர் அடியேன் குடிசைக்கெழுந்தருளி, அடியேனையும் அந்தக் குடிசையையும் பரிசுத்த மாக்கவேண்டும்" என்று ப்ரார்த்தித்தான்; அவன் ப்ரார்த்தனைக்கு இவர் இசைந்து போனர். போதலும் அவன் தன்னுலியன்றவளவு உபசரித்துக் கருப்பஞ் சாற்றைப் பருகும்படி யெதிரே வைத்தான்; ஸ்ரீஹரிநாமாம்ருதத்தை இடைவிடாமல் பருகிக்கொண் டிருப்பவராகிய இவர் நாவுக்கு மற்றென்றும் இனிதா யிராதாயினும், அவனது அன்புக் கிரங்கி, அந்தக் கருப்பஞ் சாற்றைப் பருகி மகிழ்ந்தார். பிறகு அந்தத் தோட்டக்காரன் ஒருகட்டுக்கரும்பைக் கொண்டுவந்து எதிரேவைத்து, "இதைக் கொண்டுபோய், மக்களுக்குக் கொடும்" என்று ப்ரார்த்தித்தான். அதைத் தாசர் தோளின்மீது சுமந்துகொண்டு வந்து ஊரில் பிரவேசித்தலும், ஊரிலுள்ள சிறுவர் யாவரும் இவரை வந்து சூழ்ந்துகொள்ள, அவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு கரும்பாகக் கொடுத்து, மிச்சமாயிருந்த ஒரு கரும்பை மாத்திரம் வீட்டுக்குக் கொண்டுவந்தார். இவர் ஒரு கட்டுக் கரும்பைக் கொண்டுவந்ததும், ஊரிலுள்ள சிறுவர்களுக்குக் கொடுத்ததும் ஆகிய இந்தச் செய்தியாவும் கேட்டறிந்திருந்த ஜிஜாயியார், தம் கணவரை நோக்கி, "ஒரு சுமைக்கரும்பில் இந்த ஒன்றைத் தானே கொண்டு வந்தீர்" என்று கோவித்து, இவர் கையிலிருந்த கரும்பைப் பறித்து, இவர் முதுகின்மீது ஓங்கியடித்தலும், அந்தக் கரும்பு முறிபட்டு இரண்டு சிறு துணிக்கைகள் பூமியில் விழுந்தன. ஒரு துணிக்கை ஜிஜாயியார் கையிலிருந்தது, இதைக்கண்டும் சிறிதும் கோவம் கொள்ளாதவராகிய தாசர், தேவியார் முகத்தை நோக்கி, "உன் கையிலிருக்கிற துணிக்கை உன்னது, கீழேவிழுந்த துணிக்கைகளிரண்டில் ஒன்று என்னது, ஒன்று நம்மக்களது" என்றார். அதைக் கேட்ட ஜிஜாயியார், "லோக விவகாரங்கள் யாவையுமொழித்து இவ்வளவு சாந்தசீலரா யிருப்பது மிகவும் அருமை, இப்படிப்பட்ட பரம பாகவதராகிய நமது கணவரை யேன் வீணுய் நிந்தித்தும் அடித்தும் வருத்தினேம்! இதனல் நமக்கு என்னதீமை விளையுமோ" என்றஞ்சி இவர் திருவடியை வணங்கி, "என் பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்தார். பிறகு தினந்தோறும் கணவருடைய

பணிவிடையில் மிகவும் சிரத்தையுடையவராயிருக்குங்காலத்தில், இவர் புதல்வியாகிய, காசீ, பாகீரதி, கங்கா என்னும் பெயர்களை யுடைய மூவரும் புஷ்பவதிக ளானார்கள். அப்போது ஜிஜாயியார், கணவரை நோக்கி, "நமது புதல்வியர் மூவரும் பருவமடைந்துவிட்டார்களே, இனி அவர்களுக்குக் கலியாணம் முடிப்பதற்கு யோசிக்காத லிருக்கலாமா" என்று சொல்ல, தாசர் உடனே புறப்பட்டுப்போய், தமது ஸுஜாதியிற் பிறந்த மணவாளர் மூவரைத் தேடிக்கண்டு அழைத்து வந்து மண முடித்து வைக்க, அவர்கள் சுகமாக வாழ்ந்திருந்தார்கள். இப்படியிருக்க,

பீடபாகணம் என்னும் ஊரில் ஒரு வேதியன், ஸ்ரீபண்டரிபுரத்திலுள்ள பகவத் ஸந்நிதியை யடைந்து, "ஓ பகவானே, அடியேனுக்கு இம்மை மறுமையின் பயன்களை அநுக்கிரகிக்கவேண்டும்" என்று அடஞ்செய்து, அந்நபாநாதிகள் இல்லாமல் பத்துத்தின மிருந்தான். பத்துநாள் கழிதலும், விடோபாவானவர் அவன் கனவில் வந்து, "அளிந்தி யென்னும் ஊரில் ஞானதேவரிருக்கிறார், அவரிடத்திற்போய் உன் முறையைச் சொல்லிக்கொள்வாயானால், அவர் உனக்கு இஹபரசுகங்க ளுண்டாவதற்குரிய தந்திரம் சொல்லுவார்" என்று சொல்ல, அப்படியே அந்த வேதியன் அளிந்தி யென்னும் ஊருக்குப்போய்ப் பன்னிரண்டு நாள் வரைக்கும் ஞானதேவர் சமாதிக்கெதிரே அந்நபாநாதிகளை வெறுத்திருந்தான். அப்போது ஞானதேவர் இவர் கனவில் வந்து, "வேதியனே! தேகுவென்னும் ஊருக்குப் போய் அங்குள்ள துக்காராமரை யடைந்து வணங்கி, உன் குறையைச் சொன்னால் அவர் உன் எண்ணத்தை முடித்தருளுவார்" என்றார். வேதியன் விழித்து, "சூத்திரனிடத்திற் சொன்னால் நமது எண்ணம் நிறைவேறுமா? இப்படி ஞானதேவர் சொன்னதற்குக் காரணம் யாது?" என்று ஆலோசித்துக்கொண்டு தேகுவுக்குப் போய், தாசரைக்கண்டு வணங்கிச் செய்தியைச் சொல்ல, தாசர், "இது என்ன புதுமை! எருமைக்கடாவை வேதமோதச் செய்தவரும், சுவரை நடக்கச் செய்தவரும் ஆகிய இவராலாகாத காரியமுண்டா" என்று பதினொரு அபங்கக் கவிகளைப்பாடி, அக்கவிகளுக்கு உத்தம ஞானம் என்று பேரிட்டு, அதனோடு ஒரு தேங்காயையுந் தந்து, "இந்தத் தேங்காயை உடைத்துத் தின்று, இந்த அபங்கக் கவிகள் பதினொன்றையும் அர்த்தத்தோடு அநுஸந்திப்பாயானால், உன் இஷ்டசித்தி பெறலாம்" என்றார். அந்த வேதியன் அந்தக் கவிகளை அலக்ஷியம்செய்து அங்கேதானே யெறிந்துவிட்டுப்போய் ஞானதேவரிடத்

தில் செய்தியைத் தெரிவித்தான். அவர் இவனது விதியை நினைத்து, இங்கு நடந்தசெய்தியைப் பதின்மூன்று அபங்கக் கவிகளாகச்செய்து, ஞானதேவர் சமாதிக்கு அறிவிக்கச் செலுத்தினர். அதைக் கொண்டு போய் ஞானதேவர் சமாதிக்கருகே வாசிக்காமல் அங்குள்ளவர்களால் வெருட்டப்பெற்று மீண்டுவந்து துக்காராமரை யடைந்தான். இப்படி யிருக்க, சிவாஜிராஜனிடத்தில் புராணம் வாசிப்பவனுக்கு ஏவல் செய்வோனொருவன் உளன், அவன்பேர் **கோடோபா**, அவன் ஞான ஹீநனாகிய சுத்த மூர்க்கன், அவன் துக்காராமரைக் கண்டு அடிவண ங்க, இவர் அவன்மீது அன்பு மிகுந்தவராய், தாமெழுதிய உத்தம ஞானத்தைத் தேங்காயோடு அவனுக்குக் கொடுத்தார். அவன் அதைப் பக்தியோடு வாங்கி, தேங்காயை யுடைத்துத் தின்று, கவிகளையும் பாடம்பண்ணினவுடனே, அவனுக்கு ஜ்ஞாந பக்திகள் வாய்த்தன. இப்படி யிருக்கும்போது, மூன்னே ஆம்தாபாத் என்னும் ஊரில் ஒரு வணிகன் தன் எண்ணம் நிறைவேறினால் ஞானதேவருக்கு லக்ஷம் பொன் கொடுப்பதாகக் கருதியிருந்தான். அப்படியே அவன் கருத்து நிறைவேறிற்று. அவன் அந்த லக்ஷம் பொன்னையும் கொண்டுவந்து ஞானதேவரிடத்தில் குவிக்க, ஒருவன் ஆவேசங்கொண்டு, "இந்தப் பொன் முழுதும் துக்காராமரிடத்திற் சேர்க்கக்கடவாய்" என்று சொல்ல, அந்த வணிகன், துக்காராமருகேவந்து நடந்தசெய்தி முழு துஞ்சொல்லி, பொருள் முழுதுங்கொடுத்து வணங்கிப் போய்விட் டான். தாசர் அந்தப்பொருளைக் கோடோபாவுக்குக் கொடுக்க, அவன் வேதியனுக்குக் கொடுத்துவிட்டுத் தன்னூருக்குப் போய்விட்டான். இந்தச்செய்தி முழுதும் சிவாஜிராஜன் கேட்டு, அறிவில்லாத மூட னுக்கு இப்படிப்பட்ட நன்மையைத் தந்த துக்காராமரை இன்ன மொருதரம் கண்டு வணங்க விரும்பியிருந்தான். அப்போது லோகம் என்னும் ஊரிலுள்ள வேதியரெல்லாரும் தாசரை யழைத்துக்கொண்டு போய், ஒருமாசகாலம் ஹரிபஜனை செய்திருக்கப் பிரார்த்திக்க, இவ ரும் அதற்கிசைந்து அப்படியே பஜனைசெய்திருந்தார். அந்தச்சமயத் தில், அவ்வூரிலுள்ள ஒரு கிழப்பார்ப்பினி வறுமையும் முதுமையு முடையவளாயிருப்பவள், இவரிடத்தில் வந்து, "நான் விரும்புகிற நாளில் என் வீட்டுக்கு வந்து, அமுதுசெய்து ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்யவேண்டும்" என்று ப்ரார்த்தித்து, இவர் இசைந்தவுடனே போய், ததீயாராதநத்துக்கு வேண்டிய பொருள்களெல்லாம் சேகரி த்து வைத்துக்கொண்டு, தாசரை யழைக்கத் தகுந்த நாள் பார்த்தாள். அன்று அவள் வீட்டுச் சுவர் அதிக மழையால் நனைந்து சாய்ந்திருப்

பதைப் பார்த்து, துக்காராமரிடம் வந்து, கண்ணீர் பெருக அழுது நின்று, "ஸ்வாமீ! தேவரீருக்கு அமுது அளிக்கவேண்டுமென்று, அதற்கு வேண்டிய பொருள்களெல்லாம் சேகரித்தேன், மழைபெய்து வீட்டுச்சுவர் சாய்ந்திருக்கின்றது, இதற்கென்செய்வேன்" என்றாள். அதைக்கேட்ட துக்காராமர், அந்தப் பார்ப்பினியை நோக்கி, "நீ அழ வேண்டாம், நான் ஹரிபஜனைசெய்து வெளிப்படுமளவும் அந்தச்சுவர் விழாது, நீ அஞ்சாமல் எல்லாம் சித்தம் செய்யலாம்" என்றார். அப்படியே அவளும்போய், பத்துநாள் கழித்து, ஒருநாள் உணவு முதலிய எல்லாம் சித்தப்படுத்தி வைத்துக்கொண்டு, துக்காராமரையழைக்க, இவரும்போய் வேதியரோடும் உண்டு, கீர்த்தநம்செய்து முடிந்த பிறகு, பார்ப்பினியைநோக்கி, "அம்மே! நீ சமையல்செய்த பொருள்களெல்லாவற்றையும் கொண்டு வெளியே வா" என்று நியமித்தார். அப்படியே அவள் செய்தவுடனே, சாய்ந்திருந்த சுவர் இடிந்துவிழுந்தது. அதைக்கண்ட துக்காராமர் அவ்வூர்த் தலைவனை நோக்கி, "இந்த ஏழைப்பார்ப்பினி கைம்மையும் முதுமையுங்கொண்டவள், இவள் வீட்டை நன்றாய்க் கட்டிக்கொடுக்கவேண்டும்" என்று நியமிக்க, அவனும் அப்படியே வீடுகட்டிக்கொடுத்து, க்ருஹப்ரவேசம் செய்யுந்தினத்திரவில், துக்காராமரைக்கொண்டு ஹரிகதா காலக்ஷேபமும் நடத்துவித்தான். பிறகு தாசரானவர், அவ்வூராரிடத்தில் விடைபெற்றுத் தம்மூரையடைந்து ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டு இருந்தார்.

இப்படி யிருக்குங்காலத்தில், வாகோளியென்னும் ஊரில் வாழ்பவனும், ஆறு சாஸ்திரங்களில் வல்லவனும், ராஜஸம்மாநம் பெற்றவனும்ஆகிய **ராமேச்சுரபட்டன்** என்பவன், பரமசாதுவாகிய துக்காராமருடைய ப்ரபாவத்தைக் கேள்விப்பட்டு, இவரிடத்தில் த்வேஷமுள்ளவனாய், இவரை யவமாநம்செய்ய வெண்ணி, அரசனிடத்திற்போய், துக்காராமன் என்றொரு சூத்திரன் தேகுவில் தோன்றி, வேத சாரங்களையெல்லாம் வெளிப்படையாய் எல்லாருக்குஞ் சொல்லி, அநேகமான ஹரிகீர்த்தநங்கள் பாடி, வேதியரையும் மோஹிக்கச் செய்து, வேதியர் முதலானோர் யாவரும் தன்னை வணங்கும்படி செய்து, தர்ம மார்க்கங்கள் பலவற்றையும் நீக்கி, திருமாலின் திருநாமமே சிறந்ததென்று சொல்லி, எல்லாரும் ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்யும்படி செய்தான். ஆகையால், நான்கு வர்ணத்தாரும் தங்கள் தங்களுக்குரிய கர்மங்களை விட்டொழிந்தார்கள். நீ அரசனாதலால் இப்படிப்பட்ட செய்தியை விசாரிக்காம லிருப்பது உன் அரசாட்சிக்

குரிய தர்மமல்ல" என்று, அரசன் மனம் கலங்கும்படி சொன்னன். அதைக் கேட்டவுடனே, அரசன் கோவங்கொண்டு, அவ்வூர் அதிகாரிக்கு, "நீ இந்தக்ஷணமே துக்காராமனே நம்மூர்விட்டு நீங்கும்படி செய்யக்கடவை" என்று ஒரு நிருபம் எழுதியனுப்பினன். அவ்வதிகாரி, பயந்து, அந்த நிருபத்தைத் துக்காராமரிடத்திற் கொண்டுபோய்க் காட்ட, துக்காராமர் அந்தநிருபத்தைப் படித்துப்பார்த்து, கோயிலிற்போய், விட்டலப்பெருமான்மீது ஒரு அபங்கக் கவிசொல்லி வாழ்த்தி, பட்டனைக் காணும்பொருட்டு வாகோளிக்குப் போனர். இவர் போனசமயத்தில் பட்டன் பூசைசெய்துகொண்டிருந்தான். இவர் அவனுக் கெதிரேபோய் நின்று கீர்த்தநம் பாடினர். அவன் இவர் முகத்தை நோக்கி மிகு கோவங்கொண்டு, "சூத்திரனுகிய நீ ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்கிருய், அந்தக் கீர்த்தநங்களில் வேதார்த்தங்கள் அநேகமா யடங்கியிருக்கின்றன, இப்படி நீ செய்வது தகாதகாரியம், உன் கீர்த்தநத்தைக் கேட்பவர்களுக்கு நரகமே யுண்டாகும், ஆதலால் இனி நீ கவி பாடவேண்டாம், இதற்கு முன்னே பாடின கவிகளை நதியில் விட்டுவிடு, போ" என்றான். துக்காராமர் அவன் சொன்னதைக் கேட்டு, உடனே தமது ஊருக்குப்போய், அவ்விடத்தில் ப்ரதிஷ்ட்டை செய்யப்பட்டிருக்கிற விட்டலனைக்கண்டு, கண்ணீர் பெருக்கி நின்று, தேவரீருடைய நியமநத்தால் அடியேன் செய்த கவிகளை யெல்லாம் நதியில் விடும்படி நேரிட்டது" என்று விண்ணப்பம் பண்ணி, தாம் செய்த கவிப் புஸ்தகத்தை இந்திராயணி நதியில் விட்டுவந்து, பாண்டுரங்க பகவானைப் பணிந்து நின்றார். இந்தச் செய்தியையறிந்த நல்லோரெல்லாரும், "பரமதுஷ்டனுகிய பட்டனல், அற்புதமான துக்காராமருடைய கவிப் புஸ்தகம் நதியில்விட நேரிட்டதே" என்று துன்பமடைந் திருந்தார்கள். துஷ்டர்கள், இந்தத் துக்காராமன் சூத்திரன், இவன் வேதார்த்தங்களைத் தன் கவியிலமைத்துப் பாடலாமோ, பட்டர் நல்லவேலே செய்தார், இவனது செருக்கை யழித்துவிட்டார்" என்று பேசிக்கொண்டு மனமகிழ்ந் திருந்தார்கள். அன்று கோயிலிற்போய், பகவானை வணங்கிப்போன தாசர், சந்நிதிக் கெதிரே நின்று, பகவானை நோக்கி, "நான் கவிசொன்னது என்னிஷ்டத்தினலேயோ,தேவரீருடைய நியமநத்தாலன்றோ? பட்டர் முதலானோர் என்னை யிகழ்வது நீதியோ" என்று அழுதுகொண்டே சொல்லி, கோயிற் புறத்திலுள்ள ஒரு நந்தவநத்தில் வந்து, அங்குள்ள ஒரு பாறையின்மேல், ஸ்ரீ ஹரிநாம ஸ்மரணையுடனே எழுந்தருளியிருந்தார். ஆனல் இவர் ஊணுறக்கங்களை யொழித்திருப்பதை யறி

ந்த சாதுக்கள் பலரும்வந்து இவரை உபசரித்தும் இவர் மனமிசையப் பெற்றாரில்லை. இந்தப்பிரகாரமான துன்பத்தை இவர்க்கு உண்டாக்கின பட்டனது நற்செய்கைகளெல்லாம் நீங்கிவிட்டன. பிறகு ஒரு நாள் புனவினுள்ள சிவபெருமானைக் கண்டு வணங்கவேண்டுமென்றெண்ணிப் பரிஜநங்களோடு புறப்பட்டுப்போன பட்டன், அன்று துவாதசி யாதலால், அங்குள்ள வனகடசித்தர் பூந்தோட்டத்திற் போய், அதிலுள்ள தடாகத்தில் மூழ்கும்போது, அந்தச் சித்தர் கண்டு, "இவன் யார்? இவன் என்ன மந்திரத்தையோ வாயினாற்சொல்லி, நான் நிமாஜு செய்யுங் குளத்தில் மூழ்கி, குளத்தைக் கெடுத்தான்" என்று கோபித்து, ஒரு சாபமிட்டார். அந்தச் சாபத்தியால் பட்டனுடைய சரீரமுழுதும் எரிக்கப்பட்டபோது, பட்டன் சஹிக்கமாட்டாமல், குளக்கரையி லிருப்பவரை நோக்கி, "இந்தக் குளத்து நீர் என்னை யிப்படி சுடுவதற்குக் காரணமென்ன?" என்று கேட்க, அவர்கள் பட்டனை நோக்கி, "இந்தக் குளம் இந்தப் பக்கிரினால் உண்டானது, இவர் நிமாஜு செய்வதும் இதில்தான், இதில் நீ முழுகினதைப் பொறுக்காமல், அவர் சபித்ததை நாங்கள் காதாரக் கேட்டோம், ஆதலால் அந்தப் பகீரை வணங்கினால் சாபம் நீங்கும்" என்று சொன்னார்கள். இதைக்கேட்ட பட்டன், "நான் சிறந்த வேதியன், ஆதலால் இவனை வணங்கமாட்டேன்" என்று அந்தத் தடாகக் கரையில்வந்து நனைந்த ஆடையைப் போர்த்தும் நெருப்புச் சூடு தணியாமல் வருந்துவதைக் கண்ட பரிஜநங்கள் நீரை முகந்து அவன் தலைமேல்வார்த்தும் அழல் வெப்பம் தணியாமையால், வேதியன் மிகவும் வருந்தித் தன்னைச் சேர்ந்தோரை நோக்கி, "நான் பிழைப்பது அருமை, நான் பிறந்த நாள்முதல் நான்செய்த தவமும் தர்மமும் அழிந்து பயன்கொடாதனவாக, இந்தத் துன்பம்வந்து வாய்த்தது" என்று சொல்லிப் புலம்பிக்கொண்டே ஊருக்கு வந்தான். இவன் வருவதைக் கண்டவரெல்லாரும் "ஒரு துலுக்கனிட்ட சாபத்தை வேதியன் தன் தவவலியால் நீக்கிக்கொள்ள மாட்டாமல் வருந்துகிறானே, இதற்குக் காரணம் யாதென்றால், பரம பாகவதராகிய துக்காராமரை நிந்தித்து அவர்செய்த கவிகளையும் அழித்ததே யாகும்" என்று பேசிக்கொண்டார்கள். இப்படி யிருக்கையில், பட்டன் ஞானதேவரிடத்துக்குவந்து வணங்கி, தன் சரீர தாபத்தைத் தீர்க்கும்படி ப்ரார்த்தித்து ஒரு புறத்திலிருந்தான். பிறகு துக்காராமர் பதின்மூன்று நாள்வரைக்கும் அந்நபாநாதிகளில்லாமல் பகவந்நாமஸ்மரணை செய்துகொண் டிருந்ததனால் பகவானானவர் இவருக்குப் பிரத்தியக்ஷமாகி "நீ என் குணங்களைப்

புகழ்ந்துபாடின நிர்த்தோஷங்களான கவிப் புஸ்தகங்களில் ஒன்று யினும் அழியாமல் வைத்திருக்கிறேன், அதைக் குறித்து நீ கவலைப் படவேண்டாம்" என்று இந்த வசநங்களைச்சொல்லி மறைந்தார். அப் படி மறைந்தவர் அவ்வூரிலுள்ள சாதுத் தலைவருடைய கனவில் அழ கான வுருவத்தோடு போய், "என் அன்பனாகிய துக்காராமன் யாற் றில்விட்ட புஸ்தகங்க ளெல்லாம் நீரில் மிதந்துகொண்டிருக்கும், நாளை உதயத்தில் அவற்றை யெடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொ ல்லிக் கோயிலுக் கெழுந்தருளினர். கனவு கண்டவரெல்லாரும் விழித் தெழுந்து, காலையில் நதிக்குப்போய், மிதந்துகொண்டிருந்த புஸ் தகங்களை யெடுத்துக்கொண்டு வந்து, படுத்திருந்த துக்காராமரை க்கண்டு வணங்கி, "ஸ்வாமீ! த்ரிவிக்ரமனாகிய பகவானனவர் உமது அன்புக்கு எளியவரானர், அவரது கருணையால் உமது புத்தகங்களெ ல்லாம் ஆற்றில் மிதந்துவரக்கண்டு எடுத்து வந்தோம், இவற்றைப் பா ரும்" என்று சொல்ல, துக்காராமர் கண்விழித்துப் புத்தகங்களைப் பார் த்து, "ஓ பகவானே! ஆற்றில் விட்ட புத்தகங்களை அழியாமற் காத் ததும், பதின்மூன்று நாளளவும் அந்நபாநாதிகளை வெறுத்திருந்த என்னுயிர் நீங்காமற் காத்ததும் ஆகிய இந்த ப்ரயாசையைத் தேவரீர் எடுத்துக்கொண்ட விஷயத்தில் அடியேன் அபராதியானேன், என் அபராதத்தை க்ஷமித்தருளவேண்டும்" என்று ஏழு அபங்கக்கவி களால் தோத்திரம்செய்து, பகவத்தியாநத்தோடிருந்தார். இவர் இப் படியிருக்க, ராமேச்சுரபட்டன் நோய் பொறுக்கமாட்டாமல், "இக்கலி யுகத்தில் உலகத்தை யுத்தரிக்க எழுந்தருளவேண்டும்" என்று, ஞான தேவரை ப்ரார்த்திக்க, ஞானதேவர் வேதியன் கனவில் வந்து, "நீ செருக்கினல் திருமாலடியார்க்குத் துன்பஞ்செய்தாயாதலால் உனக்கு இந்தத் தீமைவிளைந்தது, இனியாகிலும்போய், துக்காராமரைச் சரண டையக்கடவாய்; அடைவாயானல், இந்தத் துன்பக்கடலைமாத்திரமே யல்ல, பிறவிக்கடலையும் கடப்பாய்; பகவத் தாசரிடத்தில் ஒருவன் குற்றம்செய்தால், அதனல் வருந்துன்பம் அந்தத்தாசராலே யன்றி மற்றையரால் நீங்காது; ஆதலால் நீ துக்காராமரிடத்துக்குப் போ" என்றார். வேதியன் உடனே விழித்தெழுந்து, ஞானதேவர் சொன்ன படிசெய்ய விரும்பினவனாயினும், துக்காராமரிடத்துக்கு நேரேபோக பயந்து, தன் கனவில் ஞானதேவர் சொன்னதையும், தனக்குள்ள சரீர வெப்பத்தை நீக்கவேண்டும் என்பதையும் ஒரு கடிதத்திலெழுதி ஒற்றரிடத்தில் கொடுத்தனுப்பினன். அதைத் துக்காராமர் பார்த்து, "பட்டனுக்கு இந்த நோயுண்டாகலாமோ" என்று மனம் வருந்தி,

"சித்தசுத்தியுண்டானல் பகையும் நட்பாகும், புலி பாம்பு முதலிய துஷ்ட ஜெந்துக்களும் துன்பஞ்செய்யமாட்டா, நஞ்சும் அமிர்தமாகும், துன்பமும் இன்பமாகும், நெருப்பும் குளிர்ந்திருக்கும்" என்னும் பொருளமைந்த ஒரு அபங்கக்கவி யெழுதிப் பட்டனுக்கனுப்பினார். அதைக்கண்ட பட்டனுக்கு, உடனே சரீர தாபம் நீங்கிவிட்டது. அதனால் பட்டன் ஆரோக்கியம் அடைந்து மனமகிழ்ச்சியோடு, துக்காராமரைக் காணவருவதை யிவர் அறிந்து, "வேதியனை நாம் எதிர் கொள்வது நன்று" என்று எதிரேபோனார். இவரைக் கண்ட பட்டன் வீழ்ந்து அடி வணங்கினன். வணங்கி, "என் பிழையைப் பொறுத்தருளவேண்டும்"என்று ப்ரார்த்தித்தான். துக்காராமர் இவன் ப்ரார்த்தனைக் கிரங்கி, "ஐயோ, அடியேன் தாழ்ந்த சாதியான், நீர் உயர் குலத்தீர், நீர் என் அடியைப் பணிதல் தகுதியோ" என்றார். அதற்குப் பட்டன் துக்காராமரை நோக்கி, "நீர் எனக்கெழுதி யனுப்பின கவியினல் அடியேன் புநிதனுனேன், ஆதலால் உமது அடியை வணங்குதல் எனக்குத் தகுதியேயாம்" என்றுசொல்லி இவரது அடியைப் பிடித்துக்கொண்டான். தாசர் அவனுடைய மனநிலையை யறிந்து, அவனை யழைத்துக்கொண்டு தமது ஊரை யடைந்தார். அவ்வூரிலுள்ளார் எல்லாரும், இவர் கவிப் புஸ்தகங்கள் நீரில் நனைந்து அழுந்தாம லிருந்ததையும், பட்டனுக்குச் சாபம் நீங்கினதையும் நினைத்து இவரைப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

பிறகு, முன்சொல்லப்பட்ட அனகடசித்தர் இந்தச் செய்தியெல்லாமறிந்து, "நான் பட்டனுக்கிட்ட சாபத்தைப்போக்கின மஹா புருஷரை நாம் காணவேண்டும்" என்றெண்ணி,புனவைவிட்டு, வரும் வழியில், சிஞ்சுவடி யென்னும் ஊரையடைந்து, அவ்வூர்க்குத் தலைவனான சிந்தாமணி யென்பவனது வீட்டின் முற்றத்தில் நின்று, தம் கையிலுள்ள பாத்திரம் நிறையப் பிக்ஷையிடவேண்டுமென்றார். அதைக் கேட்டவுடனே அந்தச் சிந்தாமணியென்பவனுடைய காரியக்காரன்வந்து இவர் பாத்திரத்தில் போஜந சாமக்ரிகளைப்போட, அந்தப் பாத்திரம் நிறையாதது கண்டு இன்னம் சிலவற்றைக் கொண்டு வந்து போட்டான். அப்போதும் அது நிறையா திருக்கக்கண்டு தன் தலைவ னிடத்திற்போய் இந்தச் செய்தியைச் சொல்ல, அந்தத் தலைவன், அவனை நோக்கி, "அதிதிகளுக்கு அவர்கள் விருப்பத்தின் படியே யிடுவதே பிக்ஷையாதலால், இன்னமும் ஐயம்பெய்" என்று நியமித்தான். அதைக்கேட்ட காரியக்காரன், வீட்டிலுள்ள தாநியங்களெல்லாவற்றையும் பெய்தான். பெய்தும் பாத்திரம் நிறையவில்லை.

அவன் மறுபடியும் தலைவனுக்குச் சொல்ல, தலைவன், "கணபதி யுபாஸநத்தால் பாத்திரம் நிறையும்படி செய்தான். பிறகு சித்தர் அங்கிருந்து புறப்பட்டுத் தேகுவென்னும் ஊரை யடைந்து, தாசர் வீட்டின் முற்றத்தில் நின்று, "எனது பாத்திரத்தில் பிக்ஷை போடவேண்டும்" என்று கேட்க, ஜிஜாயியார் கேட்டு, கோவித்து, "இவன் எங்கிருந்து வந்தான்? இவனுக்கு என்னசெய்வேன்" என்று கடுஞ்சொற்சொல்ல, இதைக் கேட்டுக்கொண்டிருந்த சிறுவியாகிய கங்கா என்பவள், வீட்டினுள்ளேபோய், பானையிலிருந்த மாவில் ஒரு பிடி யெடுத்துக்கொண்டுவரக் கண்ட ஜிஜாயியார், அவள் கையைப்பற்றித் திருகி மாவை வாங்க, இச்சிறுவி யிறுகப் பிடித்திருந்ததனால் ஜிஜாயியார் பறித்துக் கொண்டதுபோக மிச்சமாய்க் கையிலிருந்த கொஞ்சம் மாவைக் கொண்டுவந்து சித்தர் பாத்திரத்திற் போட்டாள்; உடனே பாத்திரம் நிறைந்தது. இதைக்கண்ட சித்தர் அதிசயித்துக் கங்காவை நோக்கி, "நீர் துக்காராமரோ" என்றார். அதைக் கேட்ட, கங்கா "நீர் என்ன பயித்தியக்காரரோ, நான் பெண்ணாயிருக்க, என்னைத் துக்காராமர் என்கிறீர், ஆனால் துக்காராமர் என் தந்தையார்தான், அவர் தினந்தோறும் உதயத்தில் நீராடி ஹரிபஜனை செய்துகொண்டு கோயிலிலிருக்கிறார்" என்று சொல்ல, அனகடசித்தர் கோயிலுக்குப்போய்த் துக்காராமரை நோக்க அவர் பெரிதாகிய ஞானாகாரமான தேஜோராசியாய் விளங்கக்கண்டு அடி வணங்குதலும், துக்காராமர் இந்தச் சித்தரை யுபசரித்து "இரும்" என்றுசொல்ல, சித்தரும் அப்படியே இரண்டுநாளளவும் கீர்த்தநம்கேட்டு ஆநந்த பரவசராய், விடைபெற்றுத் தமது ஊரை யடைந்தார்.

அதின்பிறகு, துக்காராமர் செய்யும் ஹரிநாமஸங்கீர்த்தநம் கேட்டு ஆநந்தித்து, இவரைப் புணர்ந்தநுபவிக்க வேண்டுமென் றெண்ணினவளாய் ஒரு மாதானவள் சமயம் பார்த்துவரும் நாளில், தாசர் பகவத்தியாநஞ் செய்துகொண்டு ஒரு ஏகாந்த ஸ்தலத்திலிருக்கும் போது அந்த மாதானவள் வந்து, "ஸ்வாமீ! உம்மைப்புணர்ந்து இன்புற வெண்ணிச் சமயம் பார்த்திருந்தேன், என் எண்ணத்தை நிறைவேற்றவேண்டும்" என்றாள். அதைக் கேட்ட தாசரானவர், "அம்மா! நீ யென் தாய்க்குச் சமாநம், நான் இந்த்ரிய நிக்ரஹம் செய்தவன். வேண்டுமானால் ஒரு பரீக்ஷை காட்டுகிறேன், ஒரு வைக்கோல் கொண்டுவா" என்றார். அப்படியே அவள் கொண்டுவர, அதைத்தமது சரீரத்தின்மேல் வைக்கச்சொன்னார்; அப்படியே அவள் வைக்க, அது பற்றி யெரிந்துபோகக்கண்டு அஞ்சி யொதுங்கிப்போய்விட்டாள். இவரும் பழையபடியே ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்தார்.

இப்படி யிருக்குங்காலத்தில், இவர் ஹரிகதை செய்வதை லோகம் என்னும் ஊரிலுள்ளார் கேட்டுவந்து, "ஸ்வாமீ! எம்மூருக்குளழுந்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, இவரும் இசைந்து, புறப்பட்டு அவர்களூருக்கருகே போகும்போது, அவ்வூரார் அறிந்து எதிர்கொண்டு வந்து இவரை யழைத்துப்போய் உபசரித்து அமுதுசெய்வித்து நாள்தோறும் ஒவ்வொருவீட்டில் ஹரிகதை செய்யும்படி ப்ரார்த்திக்க, இவரும் அப்படியே செய்துவந்தார். வரும்நாளில், வளையல் விற்பவனாகிய சிவாஜீ யென்பவன் மாத்திரம் இவர் செய்யுங் கதைக்கு வாமல் நிந்தித்துக்கொண்டு திரிவதை யிவரறிந்து, "அவன் வாராமைக்குக் காரணமென்ன?" என்று கதைக்கு வருவோரைக் கேட்க, அவர்கள், "ஸ்வாமீ! அவனை நாங்கள் அழைத்தாலும் வரமாட்டேன்" என்று சொல்லுகிறான்" என்றார்கள். இப்படி யிருக்குங்காலத்தில், ஒரு வேதியன் கடனால் மிகவும் வருந்தி, ஞானதேவரிடத்துக்கு வந்து தோத்திரம்பண்ணித் தன் குறையைச்சொல்லி ப்ரார்த்திக்க, ஞானதேவர் அவன்கனவில் எழுந்தருளி "ஓ அந்தணனே! நீ துக்காராமரிடத்திற் போய் உன் குறையைச் சொல்லிக்கொள்வாயானால், அவர் உன் கடன் தீரும் வகையை யருள்செய்வார்" என்றார். அந்த வேதியன் துக்காராமரிடம்வந்து தன் குறையைச் சொல்லிக்கொள்ள, இவர் அவ்வூருக்கதிகாரியை யழைத்து, "இந்த வேதியர் கடன் மிகுதியால் வருந்துகின்றார், உமது ஊரிலுள்ளார்க்கு வரிபோட்டு, வளையற்காரனையும் விடாமல் பணம் தண்டல்செய்து இவர் கடன் தீரும்படியாய்ச் செய்தால் புண்ணியமுண்டு" என்று சொல்ல, அதிகாரியும் அப்படியே சம்மதித்து, எல்லார்க்கும் வரிபோட்டு வாங்கி வரும்போது வளையற்காரன் இரண்டு காசு கொடுத்தான். அதிகாரியானவன் தாசரிடத்துக்கு வந்து "எல்லாரும் கொடுத்த பணம் இது, வளையற்காரன் கொடுத்த இரண்டு காசு இவை" என்றுசொன்னான். தாசர் அந்த வளையற்காரன் கொடுத்த இரண்டு காசையும் ஒரு சிறு கல்லாற் கீறி, அவற்றைப் பொன்னாக்கி, வேதியன் கையிற்கொடுத்துக் "கடன் தீர்த்துக்கொள்" என்றார். இந்தச் செய்தியை வளையற்காரன் கேள்விப்பட்டு, "இவரிடத்திலிருக்கிற அந்தப் பரிசக்கல்லை எப்படியாயினும் வாங்குவேன்" என்று இவரை வந்து அடுத்துப் பணிவிடை செய்துகொண்டிருந்தான். இப்படியிருக்குங்காலத்தில், இவன் ஈயம் வாங்கிவரும்படி பொதி யெருதுக்காரரையனுப்ப, அவர் போய்க் கொண்டுவந்த பொதிகளை யவிழ்த்து எல்லாம் வெள்ளியாயிருக்கக் கண்டு, "இந்த வெள்ளியைக் கொடுத்தவனிடத்தில் கொடுத்து ஈயத்தையே வாங்கி வாருங்

கள்" என்முன். அவர்கள் கொண்டுபோய்க் கொடுத்தவனிடத்தில் கொடுக்க, அவன், "நான் கொடுத்தது ஈயமேயன்றி வெள்ளியல்ல" என்று திருப்பிவிட்டான். அவர்கள் மறுபடியும் வளையற்காரனிடத்தில் வந்து சொன்னுர்கள். அவன் அதிசயித்து, தாசரிடத்தில் சொல்ல, தாசர் அவனைநோக்கி, "இது பகவானுடைய க்ருபாவிசேஷத்தாலானது, இதை நீ யெடுத்துக்கொண்டுபோய், பகவத்தாசர்கள் கையிற் கொடுத்து அவர் வேண்டிய கருமங்களும் செய்து, உன்பாவத்தை நீக்கி, இஹபாசுகங்களை யடையக்கடவாய்" என்ருர். அவனும் அப்படியே பொருள் முழுதும் பகவத் பாகவதர் விஷயத்தில் செலவு செய்து, வைராக்யசீலனுய், அன்பருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தான். இதை அவன் மனைவி யறிந்து, "நமது கணவனுக்கு இந்தப் பித்தேற்றினவனைக் கொலைசெய்வதே தகுதி" என்று, ஆலோசித்து, ஒரு கொப்பரை நிறைய நீர்வார்த்துக் கொதிக்க வைத்து, அதைப் பரண்மேலேற்றி, தாசரை வணங்கி யழைத்துக்கொண்டு வந்து உபசரித்துப் பரண்கீழே யிருத்தி, கொப்பரைநீரை அவர்மேல் விழும்படி கவிழ்த்தலும், அவர் திருமேனி முழுதும் கொப்புளங்கொள்ள, தாசர் மனஞ் சலிக்காமல் பகவானைக் குறித்து ஒரு கவி சொன்னுர்; உடனே கொப்புளம் ஆறி, ஆரோக்யமடைந்தார். பிறகு அவள் வீட்டு அவரைப் பந்தலின்மேல் விழும்படி தமது கழுத்திலிருந்த மாலையை வீசி யெறிந்துவிட்டுத் தம்மிடத்தை யடைந்திருந்தார். இப்படியிருக்க, பகவானுனவர், அவளுடைய தீச்செய்கைக்குச் சகிக்காதவராகி, அவளுக்குச் சுரமுண்டாக்கினுர். அதனுல் அவள் மிகவும் வருந்தித் துன்பமடைந்திருந்தாள். அப்போது சிவாஜி யென்பவன் வந்து, "இவளுக்குச் சுரநோயுண்டானதற்குக் காரணம் யாது?" என்று ஆலோசித்து, அவரைப்பந்தலில் மாலை தொங்குவதைக் கண்டு, "இது நமது குருநாதராகிய துக்காராமருடைய கழுத்திலிருந்த மாலை, இவள் அவரை யழைத்து வந்து என்ன தீமை செய்தாளோ" என்று வருந்த, கூடவந்த ராமேச்சுரபட்டன் "இங்கே சேறுயிருப்பதற்குக் காரணம் யாது?" என்று ஆலோசித்து, இவள் வெப்பமான நீரை அவர் திருமேனியின்மேல் வார்த்ததனுல் உண்டான சேறு இது. இந்தச் செய்கையாலே இவளுக்கு உடல் வெதுப்பமுண்டாயிற்று" என்று அந்தச் சேற்றை அவளுடம்பிற் பூசுதலும் அவள் சுரநோய் நீங்கிச் சுகத்தை யடைந்தாள். பிறகு துக்காராமர் செய்யுங் கதையை நாள்தோறும் கேட்டு அவரிடத்தில் அன்பு மிகுந்து பல பணிவிடைகள் செய்துகொண்டிருந்தாள்.

இப்படி யிவர் இருப்பதைச் சிவாஜிராஜன் அறிந்து, லோகம் என்னும் ஊருக்குவந்து, ஊராரெல்லாரும் அன்பராயிருப்பதைக்கண்டு ஆநந்தமடைந்து, துக்காராமரை யடைந்து, வணங்கி, அவர் கழுத்தில் மாலை யணிந்து ஸ்தோத்திரம்பண்ண, தாசரும் அவனை யிருக்க நியமித்து, அவனிருந்து ஹரிகீர்த்தநம் கேட்டுக்கொண் டிருக்கும்போது, துக்காராமர், பகவானை நோக்கி, "தேவரீரே அடியேனுக்குத் தாய் தந்தை முதலிய எல்லாம்" என்று சொல்லி, பிறகு அரசன் முதலானோரை நோக்கி, "நீங்கள் குடும்பவாழ்வை மெய்யென்று நம்பாமல் எந்நாளும் ஹரிபஜனை செய்வீர்களானால், பிறவிக்கடலைக் கடக்கலாம்" என்று விரக்திமார்க்கத்தைச் சொல்லுதலும், அரசன்கேட்டு விரக்தனாகி, மங்களாரதி செய்யுமளவுமிருந்து, துக்காராமரை வணங்கி ராஜ ரிகத்தில் விருப்பத்தைவிட்டு, ஒருவனத்திற்போய், ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்து, அஸ்தமித்த பிறகு, துக்காராமர் கதை செய்யுமிடத்துக்குவந்து, கீர்த்தநம் கேட்டு மகிழ்ந்து, மந்திரிகளை நோக்கி, "என்னிடத்துக்கு நீங்கள் வரவேண்டாம்" என்றுசொல்லி யிருக்கும்நாளில், இந்தச் செய்தியெல்லாம் மந்திரிமார்கள் ஆலோசித்து, ஒரு கடிதத்திலெழுதி தாசருடைய மனைவிக்குத் தெரிவித்தார்கள். அவர் அக்கடிதத்தைப் பார்த்து மிகவும் அநுதபித்து, "இதுவரைக்கும் ஒவ்வொரு குடியாய்க் கெடுத்துவந்தார்; இப்பொழுது ஒவ்வொரு அரசாட்சியைக் கெடுக்கத்தொடங்கிச் சிவாஜியைக்கெடுத்தார். இதனால் பெரும் பழியுண்டாகும்" என்று, மந்திரிகள் அனுப்பின பல்லக்கிலேறிப்போய்த் தமது கணவராகிய தாசரைக்கண்டு வணங்கி, "சுவாமீ! ஒரு தாய்க்கு ஒரே பிள்ளையாகிய சிவாஜிராஜனை நிலைகுலைத்தீர், அவனுக்கு அரசாட்சி செய்தற்குரிய ஒரு பிள்ளையுமில்லை, ஆதலால் அவன் முன்போலவே அரசாட்சி செய்யும்படி அவனுக்குப் புத்தி மதி சொல்லியருளவேண்டும்" என்றார். அதைக்கேட்ட தாசர், தமது மனைவியைநோக்கி, "இன்றிரவிலும் சிவாஜி என் கதைகேட்க வருவான், அவனுக்கு ஹிதவசநங்களைச் சொல்லி, அவன் அரசாளும்படி செய்கிறேன்" என்று சொல்லி, அன்றிராக்கதை கேட்கவந்த சிவாஜிராஜனுக்கு, உலகவாழ்க்கையில் பற்றற்றிருந்த மனம் திரும்பும்படி, "உலகவாழ்க்கையிலிருந்தாலும் ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருப்பவர்களைப் பிறவித் துன்பங்களொன்றும் அணுகமாட்டா" என்றும், "அவரவர்களுடைய வர்ணாசிரம தர்மங்களை ஒவ்வொருவரும் செய்தே தீரவேண்டும்" என்றும் விசேஷமாய் உபந்யாஸம் செய்தார். அதைக்கேட்ட சிவாஜிராஜன், மங்களாரதி வரைக்கும் இரு

ந்து ஆநந்தமடைந்து தாசரைவணங்கி, உலகத்தை யாண்டுகொண்டும் ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டும் இருப்பதே நமக்கு உசிதமான கர்மம் என்றறிந்துகொண்டான். இவன் கருத்தை இவன் தாயானவள் அறிந்து, தாசருடைய பாதங்களை வணங்கி, "நீர் செய்த உதவிக்கு ஒருதவியுமுண்டோ" என்று தோத்திரம்பண்ணித் தன் மகனுகிய சிவாஜிராஜனை யழைத்துக்கொண்டு தன்னூருக்குப் போய்விட்டாள்.

அதின் பிறகு, நாவஜீ யென்னும் பெயருள்ள ஒரு குடியானவன் இவர் செய்யுங் கதையைக் கேட்கவந்து, இவர் நெடுநேரமாய்க் கதை செய்து இளைப்படைவதைக்கண்டு, இவரை நோக்கி, "ஸ்வாமி! தேவரீர் சற்றுநேரம் இளைப்பாறும், அதுவரைக்கும் அடியேன் நடனஞ் செய்துகொண்டிருக்கிறேன்" என்றுன். அதற்கு இவர் சம்மதிக்க, அவன் நடித்துக்கொண்டிருந்தான். இவர் இளைப்பாறி வந்து நடனத்தை நிறுத்தி, தாம்செய்யும் கதையை நடத்திக்கொண்டிருந்து, "அந்தக்குடியானவன் முகத்தை நோக்குந்தோறும் நமது சிரமபரிகாரி" என்று சொல்லுவாரானுர்.

இப்படி நான்குமாச காலம் அவ்வூரிலிருந்து, பிறகு தேகு என்னும் ஊருக்கு வந்து, ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்தார். இப்படி யிருக்குங்காலத்தில், சிஞ்சுவடி யென்னும் ஊரில் வாழ்பவனுகிய சிந்தாமணி யென்னும் வேதியன், தலயாத்திரையாய்ப் புறப்பட்டு வரும் வழியில் தேகுவுக்கு வர, தாசர் அவன் வருதலையறிந்து எதிர்கொண்டு போக, இவரை வேதியனும், வேதியனை யிவரும் தழுவிக்கொண்டு சந்தோஷித்த பிறகு வேதியன் தாசர் முகத்தை நோக்கி, "ஒரு வேதியனுக்கு உணவளிக்கக்கடவீர்" என்றுன். தாசர் அதற்கிசைந்து வீட்டுக்குள்ளே போகும்போது இன்னம் சிலவேதியர் வந்தார்கள். அவர்களைத் தாசர் பார்த்தவுடனே, பகவானைக்குறித்து, "ஓ பக்தபரிபாலநா! ஒருவருக்குரிய உணவுப்பொருள்களிருக்கின்றன. இத்தனை பேருக்கு என்னசெய்வேன்! தேவரீர் கருணை செய்யவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, பகவானுனவர், ஒருவர்க்குப் போதுமான போஜந பதார்த்தங்களே அத்தனை பேருக்கும் ஆகும்படி பெருகச்செய்தார். அதைக்கண்ட தாசர் அவர்களெல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்துத் திருப்தியடைவித்தார். இதைக் கண்ட சிந்தாமணி முதலானோர் அதிசயித்து, தாசரைப்புகழ்ந்து, அன்றிராக்கதை கேட்டு ஆநந்தித்துச் சூரியோதயத்தில் புறப்பட்டுத் தலயாத்திரை போய்விட்டார்கள். அதின் பிறகு ஒருவேதியன் ஞானதேவர் சமாதி

யருகே வந்து நின்று, "சுவாமீ! அடியேனுக்குக் கொஞ்சம் பொன் கொடுக்கவேண்டும்" என்று ப்ரார்த்தித்தான். அவன் இப்படி ப்ரார்த்தித்து அவ்விடத்தில் படுத்து நித்திரை செய்யும்போது அவன் கனவில் ஞானதேவர் தோன்றி, "உன் கருத்தைத் துக்காராமருக்குத் தெரிவிக்கக்கடவாய்" என்றார். அவன் விழித்தெழுந்து, துக்காராமரிடத்துக்குப்போய்த் தான் கண்ட கனவைச் சொன்னான். அதைக் கேட்ட தாசர் மனம் வருந்தி, "பாண்டுரங்கா! அடிக்கடி யிப்படிப் பட்ட துன்ப முண்டாக்கினால், துர்ப்பலனும் தீநனுமாகிய அடியேன் என் செய்வேன்" என்று சொல்லி, வேதியனை நோக்கி, "நீ, சிவாஜி யென்னும் வளையற்காரனிடத்திற் போய், உன் கருத்தைச் சொல்லி, அவன் கொடுப்பதைப் பெற்றுக்கொள்" என்றார். வேதியன் அப்படியே, லோகம் என்னும் ஊரிலிருக்கிற வளையற்காரனிடத்திற்குப்போய்த் தன் கருத்தைச் சொல்ல, அவன் நான்கு இருப்புப் பாளத்தைத் தந்து"போ"என்றான். வேதியன், "நான் ஞானதேவரையடுத்து என் கருத்தைச் சொன்னதற்கு, இவ்வாறாகிய லாபம் கிடைத்தது"என்று, நான்கையும் ஒருமிக்கச் சுமக்கமாட்டாமல் சுமந்துவந்து, வழியிலுள்ள, கோண்ஹோமலையில்,மூன்றுபாளத்தைப்போட்டுவிட்டு, ஒரு பாளத்தை மாத்திரம் சுமந்துகொண்டு துக்காராமரிடத்தில்வந்து எதிரே நிற்க, "தாசர், என்ன கிடைத்தது?" என்று கேட்க, "இதுதான் கிடைத்தது"என்றுகாட்டினான். அந்தப்பாளத்தை தாசர் கடாக்ஷித்த மாத்திரத்தில் அது பொன்னாயிற்று; அதைக் கண்ட வேதியன் அதிசயித்து நிற்க, தாசர் அவனை நோக்கி, "உனக்கு ஞானதேவருடைய அருள் சுரந்தது" என்றும், "உன் குடும்பத்திற்போய்ச் சுகித்திருக்கக் கடவாய்"என்றும் சொல்ல, வேதியன் அப்படியே அந்தப் பொற்பாளத்தை யெடுத்துக்கொண்டு, தான் வழியில் கோண்ஹோமலையில் வைத்து வந்த மூன்று பாளங்களைப் போய்ப் பார்த்து, அவை யில்லாதிருக்கக் கண்டு, "நமக்கு இதுதான் ப்ராப்தம்" என்றெண்ணித் தன்னூரை யடைந்து, வறுமை நீங்கினவனாய், குடும்பத்தோடு கூடிச் சுகமாய் வாழ்ந்திருந்தான்.

அதின்பிறகு முளா, பீவா என்னும் நதிக ளிரண்டுஞ் சங்கமமாகிற இடத்தில், தேகுவென்னும் ஊரிலுள்ளாரெல்லாரும் போய் மூழ்கும்படியான விசேஷகாலம் நேரிட்டது. அதற்கு எல்லாரும் போவதைப் பார்த்து, தாசரும் போனார். போகும் வழியில், ஒரு ஆட்டுக்கிடைக்குக் காவலாயிருந்த ஒரு துஷ்ட நாயானது யாரைக்கண்டாலும் விரைந்து வந்து அவர்களுடைய கழுத்தைக் கடித்து, ரத்தபாநம்

செய்வதாயும், ஒருவருக்கும் அடங்காததாயும் இருந்தது; அது இவ ரைக் கண்டு கடிக்க வோடிவர, இவர் அதைப்பார்த்து, "ஓ நாயே! நான் உன்மேல் மாத்திரமல்லாமல் எல்லா வுயிர்களின்மேலும் வெறுப் புடையே னல்லேன்; அப்படியிருக்க, உனக்கு என்மேல் வெறுப் புண்டானதற்குக் காரணம் யாது" என்றார். இதைக்கேட்ட நாயானது சாந்தத்தை யடைந்து நின்றது. பிறகு தாசரானவர் அவ்விடம் விட்டு நதி சங்கமத்தில் மூழ்கி, பாண்டுரங்கனைத் துதித்துக்கொண்டிருந் தார். இடையர் "இந்த நாய் இப்படி சாந்தமடைந்திருப்பதனால் இனி நமது கிடைக்குதவாது" என்றார்கள். பகவந்நாம ஸ்மரணை செய்து கொண்டிருந்த தாசர் மத்தியானகாலமானவுடனே, ராஞ்சனம் என் னும் ஊரில் ஒரு வேதியன் வீட்டிற்குப் போனார்; இவரைக் கண்ட வேதியன், இவர் பகவத்தாசர் என்றறிந்து இவர்க்கு அமுதளித்து, தன் பிள்ளையைச் சுட்டிக்காட்டி, "இவன் எட்டுவயதாகியும் பேசாமல் ஊமையாயிருக்கிறான், உபநயநம் செய்து வேதமோதுவிக்காம லிருக் கிறோம்" என்று விசநத்துடன் சொல்ல, தாசர் அந்தப் பிள்ளையைக் கருணையோடு நோக்கி, அருகேயழைத்து, "விட்டலன் பேர்சொல்லக் கடவாய்" என்றார். உடனே அந்தச் சிறுவன் "விட்டல விட்டல" என்று சொல்ல, சூழ்ந்திருந்த தாய் தந்தையர் முதலானோர் வியந்து, "இந்த ஹரிதாசரது கருணையால் நமது சிறுவன் பேசத் தொடங்கி னானே" என்று இவரைப்புகழ்ந்து, தமது வீட்டில் வைத்துக்கொண்டு, சிறுவனுக்கு உபநயந விவாஹம் செய்தார்கள். பிறகு தாசரானவர் மீண்டு வரும் வழியில் ஆட்டிடையன் கண்டு, "இந்த நாய், எங்கள் கிடைக் குதவாமற் போயிற்று, இதை நீரே கொண்டுபோம்" என் றான். தாசரும் அந்த நாயை அழைத்துக்கொண்டு தம்மூரை யடைந் தார். ஏகாதசி நாட்களில் அந்த நாயானது ஹரிநாம ஸங்கீர்த்தநம் கேட்டு உண்ணாதிருக்கக்கண்டு யாவரும் "இது ஒருபுண்ணியஜந்மம்" என்று சொல்லி மகிழ்ந்திருந்தார்கள். இப்படி யிருக்கையில், ஒரு நாள் எலவடலூர் மால்ஜீ, அங்குவந்து, தாசருடைய முகத்தை நோக்கி, "நான் நித்திய நியமஞ் செய்யும்படி எனக்கு அநுக்ரஹம் செய்யவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, தாசர் அவனது மனநிலையை யறிந்து, ஸ்ரீபகவத்கீதையைத் திநந்தோறும் பாராயணஞ் செய்யக் கடவாய்" என்று நியமிக்க, அவனும் அப்படியே தன்னூருக்குப் போய்ப் பகவத்கீதையை நியமமாகத்திநந்தோறும் பராயணஞ்செய்து வருகையில், அதைக்குறித்துப் பாண்டுரங்க பகவானும் திருவுளமுவந் திருந்தார். அப்போது, கேடம் என்னும் ஊரிலுள்ள ஒரு ஜோதி

ஷன் மால்ஜீயிடத்துக்கு வந்து, "நீ இதைப் பாராயணம் பண்ணுவத னல் உனக்கு நாகம் சித்திக்கும்" என்று சொல்லிப் போய்த் தன் னூரை யடைந்திருந்தான். இவன் சொல்லைக் கேட்ட மால்ஜீயான வர் பகவத்கீதா பாராயணத்தை விட்டுவிட்டார். இப்படியிருக்க, பாண்டுரங்க பகவானனவர், ஜோதிஷன் கனவில் தோன்றி, "மால்ஜீ செய்யும் பாராயணத்தால் மகிழ்ந்திருந்தேன், அவனைப் பாராயணஞ் செய்யவொட்டாமல் பயமுறுத்தினய், அவனை முன்போலப் பாராய ணஞ் செய்யும்படி பண்ணுமற் போனல், உனக்கு அநேகமான ஆபத் துக்கள் நேரிடும்" என்று சொல்ல, ஜோதிஷன் உதயத்தி லெழுந்து போய் மால்ஜீயைக்கண்டு, "நீ முன்போலவே கீதாபாராயணஞ் செய்ய லாம் என்று என் கனவில் பாண்டுரங்க பகவானனவர் தோன்றி நிய மித்தார்; ஆதலால் நீ பாராயணஞ் செய்யக்கடவாய்" என்றான். அப் படியே மால்ஜீ பாராயணஞ் செய்துகொண்டிருந்தார். இப்படி யிருக் குங்காலத்தில், துக்காராமர் ஸ்ரீ கண்ணபிரானுடைய பாலலீலைகளை யடக்கிச் செய்த அபங்கக்கவிகளை, ராமேசுவரபட்டன் திருத்தி, வேறு வகையாய் வாசிக்கத் தொடங்கினன். இவ்விஷயத்தைப்பற்றி பாண்டுரங்கர், பட்டன் கனவில் வந்து, "துக்காராமன் சரியாப்ச் செய்த கவிகளை நீ திருத்திக் கெடுத்துவிட்டாய், அப்படி நீ செய்தது எனக்குச் சம்மதமல்ல" என்று சொல்ல, பட்டன் மிகவும் வியந்து, இந்தச் செய்தியைத் துக்காராமருக்குத் தெரிவித்து அவரிடத்தில் மிகுதியான அன்பு செய்திருந்தான். இப்படி சிலநாள் கழிந்த பின்பு தாசரானவர், **கங்காஜிமவாளே** யென்னும் வேதியரோடு, **சந்தாஜி** யென்னும் வாணிபரும் தொடர்ந்துவர, அவர்களை யழைத்துக் கொண்டு தீர்த்த யாத்திரை போகும் வழியில், கோதளேசுவரம் என்னும் மலை, சிங்கணபூர் என்னும் ஊர், இவற்றை யடுத்த ஓரூரில், சரோவரம் என்னும் தடாகத்தில் மூழ்கி, கூடவந்தவர் களை நோக்கி, "நால்வர்க் குதவும்படியாகப் போஜனம் அமைக்க வேண்டும்" என்ருர். அப்படியே அவர்களும் சித்தப்படுத்தினர்கள். அப்போது அந்த மலையிலுள்ள **ஹரோபவன்** என்னும் சம்புவான வன் திகம்பரனய் வந்து, தாசரை நோக்கி, "நெடுநாளாய் உம்மைக் காணவேண்டுமென்று விரும்பி யெதிர்பார்த்திருந்தேன். அன்றியும் உபவாசமா யிருக்கிறேன், என் எண்ணம் நிறைவேறுங் காலம் நேரிட்டதனல் நீர் வந்தீர், என் பசி தீரும்படியாய், உணவளிக்கக் கடவீர்" என்று பலிபாத்திரத்தைக் கையிலேந்தி யெதிரேநிற்க, தாச ரும் அவரை உபசரித்து ஆசநத்திலிருத்தி வணங்கி, கங்காஜிமவாளே

யை நோக்கி, "இங்கு நாம் வந்திருப்பதை யறிந்துவந்த அதிதிக்கு அமுதளித்த பிறகு நாம் அமுது செய்வோம்" என்று சொல்ல, கங்காஜியும் ஒருகலத்தில் அமுதுபடைக்க, சம்புவானவர் இவர்கள் நால்வருக்கென்று சித்தப்படுத்தின உணவு முழுது முண்டு, தாசரிடத்தில் விடைபெற்றுப் போய்விட்டார். பிறகு கங்காஜி, தாசரை நோக்கி, "நீ சொன்னதே சரி, நாம் முன்னே யுண்டிருந்தால் வந்த அதிதிக்குப் பசி தணியாது" என்று பாத்திரங்களை மூடிவைத்து ஊருக்குள்ளே போய், சமையலுக்கு வேண்டும் பொருள்களைச் சேகரித்துக் கொண்டுவந்து, பாத்திரங்களைத் திறந்து பார்த்து, அவைகளில் போஜநம், பதார்த்தங்கள் எல்லாம் நிறைந்திருக்கக்கண்டு வியந்து, "சிவபெருமானே அதிதியாய் வந்தார்" என்றும், "பகவத்தாசருடைய ஆசிரயத்தால் நமக்குச் சிவரூபதரிசநம் கிடைத்தது" என்றும் பெருங் களிப்படைந்து, அந்த வுணவை மூவரு முண்டு, பல தீர்த்தயாத்திரை செய்து, தேகுவென்னும் ஊரையடைந்து, பகவந்நாம ஸங்கிர்த்தநம் செய்துகொண்டிருந்தார்.

இப்படி யிருக்குங் காலத்தில், ஒருநாள் இவர் கதை செய்யும் போது, பகவந்நாம மாஹாத்மியத்தைச் சொல்லத் தொடங்கி, "யாராயினும் நடந்துகொண்டே பகவந்நாம ஸ்மரணை செய்தால், அவர்கள் ஒரு அடிபெயர்ப்புக்கு ஒரு யாகபலத்தை யடைவார்கள்" என்று விசேஷமா யெடுத்து உபந்யாஸம் செய்தார். இதைக் கேட்டவர் யாவரும் இவர் சொன்னபடியே நடக்கும்போதும் ஹரிநாமத்தை யுச்சரித்து, கையில் ஒரு கயிற்றை வைத்துக்கொண்டு, ஒவ்வொரு அடிபெயர்க்குந்தோறும் ஒவ்வொரு முடிபோடும் வழக்கம் ஏற்பட்டிருந்தது. இப்படி யிருக்குங் காலத்தில் ப்ரஹ்மராக்ஷஸினால் பற்றப் பட்ட ஒருவன் ஹரிஹரேசுவரத்தை யடைந்து, தன் பீடை தொலையும்பொருட்டு அங்குள்ள ஹரிஹரேசுவரரை நாள்தோறும் நியமமாய்ச் சேவித்துவந்தான். ஒருநாள், ப்ரஹ்மராக்ஷஸு அவனுக்கெதிரே வந்து நின்று, "நீ ஒரு யாகபலத்தை யெனக்குக் கொடுத்தால் உன்னை விட்டு நீங்கி முத்தியை யடைவேன்" என்று சொல்ல, அவன் இதுவரையில் நான் யாகம் செய்யவில்லை, இனிமேலும் செய்யவசியில்லேன், ஆதலால் என்னால் இயலாது" என்றான். அதைக் கேட்ட ப்ரஹ்மராக்ஷஸு, பல இடங்களிலும் திரிந்து, முடிவில், லோகமென்னும் ஊரையடைந்து அங்குள்ளாரைக் கேட்க, அவர்களில் ஒருவன், "நான் கொடுக்கிறேன்" என்று சொல்லித் தன் கயிற்று முடிகளில் ஒன்றை யறுத்து, அதின்மேல் நீர்வார்த்து, அந்த நீரை வேதியன் சிரத்தின்

மேல் தெளித்தவுடனே, பிரமராக்ஷஸு அவனை விட்டு நீங்கி முத்தி யடைந்தது. இதைக் கண்டவரெல்லாரும் ஹரிநாம மஹிமையைப் போதித்த துக்காராமரை மிகவும் புகழ்ந்தார்கள்.

பிறகு ஆடி, கார்த்திகை என்னும் இரண்டு மாசங்களின் ஏகா தசி நாட்களில் நியமமாய்ப் பண்டரி யாத்திரை செய்பவராகிய துக்கா ராமருக்குக் குளிர் சுரம் கண்டு, அதனால் யாத்திரைக்கு விரோதம் நேரிட்டதனால், இவர் மிகவும் மனம்வருந்தி, "பாண்டுரங்க பகவானை இப்படிப்பட்ட புண்யகாலத்தில் சேவிக்கப் பெற்றிலோமே" என்று பரிதபித்திருந்தார். அந்தச் சமயத்தில் ஆயிரத்துநானூறு சாதுக்கள் கருடக்கொடி யேந்திவரக் கண்டு, அவர்களுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களெல்லாம்செய்து, "ஓ பாண்டுரங்கா! எல்லாரும்வந்து உன் னைக்கண் டாநந்திக்க, அடியே னொருவன் மாத்திரம் இங்கிருக்கவோ சங்கற்பித்தாய், என்னை ஆரோக்யமாயிருக்கும்படி செய்தால் இவர்க ளோடு கூடிவந்து, உன் சந்நிதியில் ஆடல் பாடல்களைச் செய்யுமாட் டேனோ" என்னும் பொருளை இருபத்துநான்கு கவிகளில் அமைத் துப் பாடி, ஒரு கடிதத்திலெழுதி, விட்டலனுக்குக் கொடுக்கும்படி சாதுக்களிடத்தில் கொடுத்து "என் குறையைப் பகவானிடத்தில் விண்ணப்பம் செய்யுங்கள்" என்றார். அந்தச் சாதுக்கள் அப்படியே பண்டரிபுரமடைந்து புண்டலீகரை வணங்கி, விட்டலனைக் கண்களி கூரக் கண்டு சேவித்துத் தோத்தாம் செய்து, பிறகு துக்காராமர் கொ டுத்த விண்ணப்பப் பத்திரிகையைக் கொடுக்க, பகவானனவர் அதைப் பார்த்தும் சாதுக்கள் சொல்லக் கேட்டும் துக்காராமரைக் குறித்து மிகவும் திருவுளம் வருந்தி, பிராட்டியை நோக்கி, "என் அன்பனாகிய துக்காராமன் வருவதற்கு அசக்தனாய் எழுதி யனுப்பின கவிகளைக் கண்டு என் மனம் மிகவும் வருந்துகின்றது! நாம் போய் அவனை விசா ரித்து வரவேண்டும்" என்றார். அதற்குப் பிராட்டி, "ஓ பகவானே! உம்மைச் சேவிக்கும்பொருட்டு, அநேகம் சாதுக்கள் வருகிற காலத் தில், நீர் சந்நிதியில் இல்லாமலிருப்பது நன்றல்ல, உம்மைக் காணாமல் வருவோரெல்லாரும் வருந்துவார்கள்" என்று சொல்ல, விட்டலப் பெருமானனவர் கருடனை நோக்கி, "நீ போய், துக்காராமனை உன் முதுகின்மே லேற்றிக்கொண்டுவா" என்று சொல்லி, "உடனே இந் தக் கருடன்மே லேறிவா" என்று துக்காராமருக்கு ஒரு கடிதமும் எழுதித் தந்து அனுப்ப, கருடனும் அப்படியே துக்காராமரிடம் போய்க் கடிதத்தை கொடுத்து நிற்க, அந்தக் கடிதத்தை நோக்கின துக்காராமர் கருடனை நோக்கி, "பகவானுக்கு வாஹநமாகிய உன்மீது

நானேறீ வருவதற்கு என் மனம் இசையவில்லை, ஆதலால் பகவானு க்கு என்மீது கருணையிருப்பது உண்மையானால், உன்மேலேறிவந்து எனக்குச் சேவை சாதிக்கவேண்டும், இந்தச் செய்தியைப் போய்ப் பகவானுக்குச் சொல்லவேண்டும்'' என்று பலதரம் வணங்க, கருடன் உடனே போய், இங்கே நடந்த செய்தியைப் பகவானுக்கு விண்ணப் பம் பண்ண, பிராட்டியை நோக்கி, ''இதற்கு நாம் என்செய்வோம்'' என்ன, பிராட்டி அப்படியானால், ''உத்ஸவம் முடிந்தபிறகு, அப் படியே போவோம்'' என்று சொல்ல, பகவானும் அமர்ந்திருந்தார். நான்கு திநமான பின்பு உத்ஸவ முடிந்தது. வந்த சாதுக்களெல்லா ரும் அவரவர்களுடைய ஊருக்குப் போய்விட்டார்கள். அவர்களில் சிலர் துக்காராமரிடத்திற்கு வர, இவர் அவர்களை வணங்கி, ''பகவா னும் பிராட்டியும் சுகமோ'' என்று வினவி, ''ஆம்'' என்று அவர்கள் சொல்ல, மகிழ்ந்து, பண்டரிபுரத்தை நோக்கி ஒரேநிலையாய் நின்று, பகவந்நாம ஸ்மாணை செய்துகொண்டிருந்தார். இப்படியிருக்க, பகவா னனவர், பிராட்டியாரோடு கருடவாஹநத்திலேறி இவருக்கு ப்ரத் யக்ஷமானார். துக்காராமரும் ஸ்ரீ லக்ஷ்மீநாதரை வணங்கித் தமது வீட்டுக்கழைத்துப்போய்ப் பலவகையாய்த் தோத்திரம்செய்ய, பகவா னனவர் திருவுள முவந்து, ''எமக்குப் பசி அதிகரித்திருக்கின்றது'' என்றார். உடனே தாசர் ''விரைவில் சமையலாகட்டும்'' என்று நிய மிக்க, அதைக்கேட்டிருந்த மகள், அப்பமும் கீரையும் அப்படியே சித்தப்படுத்தினவுடனே முற்காலத்தில் தேவர்களெல்லாருக்கும் அமிர்தம் பகிர்ந்த பகவானுக்குச் சமர்ப்பிக்க, பக்தவத்ஸலர் மிகவும் மனமகிழ்வோடு அமுதுசெய்து, பண்டரிபுரத்துக்கு எழுந்தருளினார்.

பிறகு, ஒரு வேதியன், **விவேகசிந்து** என்னும் கிரந்தத்தைப் படித்துப் பொருளறிந்து, துக்காராமரிடத்துக்கு வந்து, ''ஸ்ரீமுகுந்த ராஜனால் செய்யப்பட்ட விவேகசிந்து என்னும் கிரந்தத்தைப் படிக்கி றேன், நீர் பிரியத்தோடு கேட்கக்கடவீர்'' என்றான். அதைக் கேட்ட துக்காராமர் ''அப்படியேயாகட்டும், கண்முதலிய பொறிகள் விஷயங் களின்மேற் செல்லுமானால், நீர் படிக்கிற கிரந்தார்த்தத்தை மனம் பற்றாது, ஆதலால் கம்பளம் போர்த்துக்கொண்டு கேட்கிறேன்'' என்று ஒரு கம்பளத்தால் கேசாதிபாதமாக மறைத்துக்கொண்டார். பிறகு வேதியன் ஒரு ஜாமநேரம் படித்துக்கொண்டிருந்து அயர்ந்து கம்பளத்தை நீக்கிப்பார்த்து, இவர் இருகண்களையும் இருசெவியையும் மூடிக்கொண்டு ஸ்ரீமந்நாராயண த்யாநபராா யிருந்ததைக் கண்டு, ''ஐயோ! நெடுந்தூரத்திலிருந்து வந்து ஒரு ஜாமநேரம் படித்து

அயர்ந்தேன்" என்று வருந்தக்கண்ட தாசர் அவனை நோக்கி, "ஸ்ரீ கண்ணபிரானுடைய சகுணரூபத்தில் அழுந்தின மனம் வேறொன்றிலும் செல்லாது, நீர் என் எனக்காகப் பிரயாசை யெடுத்துக்கொள்ளுகிறீர்? தயைசெய்து ஊருக்குப் போய்விடும்" என்றார். அதைக்கேட்ட வேதியன் இவரை வணங்கி, "ஸ்வாமீ! அடியேன் செய்த பிழையைப் பொறுத்து, ஸ்ரீ ஹரிசரணஸமாகமம் அடியேனுக்கு உண்டாகும்படி அநுக்ரஹிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தான். அவன் பிரார்த்தனைக் கிரங்கின தாசர் அவனை அருகே யழைத்து, அவன் சிரமீது கையமைத்து, ஸ்ரீ லக்ஷ்மீநாதருடைய திருநாம மந்திரத்தை உபதேசித்து, "நீ உன்னூருக்குப் போய் ஹரிநாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருக்கக்கடவாய்" என்று விடைதந்தனுப்பிவிட்டுத் தாம் தமது மனையை யடைந்து பகவந்நாம ஸ்மரணை செய்துகொண்டிருந்தார்.

அதின் பிறகு, ஒருநாள், லோகம் என்னும் ஊரிலுள்ளார் இவர் செய்யுங் கதையைக் கேட்க விரும்பி, இவரைக் கோஷ்டியோடும் வரவழைத்து அமுதளித்து, அன்றிரவில் இவர் செய்யும் ஹரிகதா காலக்ஷேபத்தைக் கேட்டு மகிழ்ந்தார். மறுநாள் உதயத்தில் அவ்வூரார் ஒருவரும் மூழ்காத உவர்ப் பொய்கையில் இவர் ஸ்நாநம் செய்து ஸ்ரீ ஹரிபூஜை செய்தார். இவருடைய திருமேனி ஸ்பரிசத்தால் அந்தத் தடாக நீர் உவர் நீங்கி மதுரச்சுவையை யடைந்தது; அதைக் கண்ட எல்லாரும் வியந்து இவரது பெருமையைக் கொண்டாடினார்கள். பிறகு ஒருநாள் இரவில் இவர் கதை செய்யும்போது இரண்டு துறவிகள் வந்து, "இவர் ஸ்ரீமந்நாராயணனே உயர்ந்ததெய்வம், இவனுக்கு நிகரான தெய்வம் வேறொன்றுமில்லை" என்று விசேஷமாயெடுத்துச் சொல்லுவதைக் கேட்டுக் கோவங்கொண்டு, அவ்வூராளியினிடத்துக்குப் போய், "தாதுகோடு என்னும் பெயரையுடைய ஓ அரசனே! இந்தத் துக்காராமன் வேதியர் முதலான எல்லாரையும் மயக்கி, கர்மஜ்ஞாநங்களைத் திரஸ்கரித்து, பக்தியே பெரிதென்றும், அந்தப் பக்தியை எல்லாரும் ஸ்ரீ ஹரியினிடத்திலேயே செய்யவேண்டுமென்றும் சொல்லி, எல்லாரும் வந்து தன்னை வணங்கும்படி செய்துகொண்டிருக்கிறான்; அவனை யழைத்துத் தண்டிக்கவேண்டும், அப்படி செய்யாத பக்ஷத்தில் நாங்கள் உயிரை விடுவோம்" என்று தம் கையிலிருந்த தண்ட கமண்டலங்களை நிலத்தின்மே லெறிந்து நின்றார்கள். அதைக்கண்ட அரசன் அந்தத் துறவிகளை நோக்கி, "நல்லது ஆகட்டும், சற்றுநேரம் பொறுத்திருங்கள், அந்தத் துக்காராமனை யிங்கே

வரவழைக்கிறேன், அவரோடு நீங்கள் வாது செய்யுங்கள், உங்களில் தோற்பவர்களை நான் தண்டிப்பேன்" என்று சொல்லி, அவர்களும் சம்மதித்தவுடனே, துக்காராமருக்கு ஒரு பத்திரமெழுதி விடுத்தான். அதைக் கண்ட துக்காராமர் தமது சாது கோஷ்டியோடு புறப்பட்டுப் பூனாவின் அருகே யிருக்கிற ஒரு சோலையை யடைந்து நீராடி, ஸ்ரீ ஹரி பூஜையை நிறைவேற்றி, ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்தார். அதையறிந்த அவ்வூரார் யாவரும் அளவற்றபொருளைக் கொண்டு வந்து ஸ்ரீபாதகாணிக்கையாகச் சமர்ப்பித்து, இவர் கீர்த்தநத்தைக் கேட்டு மகிழ்ந்தார்கள். இந்தச் செய்தியைத் தாதுகோடு என்னும் அரசனறிந்து, இவரை எதிர்கொள்ள வேண்டுமென்றெண்ணி வரும் வழியில், அந்தத் துறவிகளிருவரும் எதிர்ப்பட்டு, "ஓ அரசனே! அந்தத் துக்காராமனுடைய நடக்கைகளை நாங்கள் முன்பே தெரிவித்திருக்க, அதை மறந்து அவனை யெதிர்கொள்ளப்போகிறீரே! இதுவென்ன விபரீதம்" என்றார்கள். அதைக் கேட்ட அரசன், "உலகத்தாரெல்லாரும் அவரை வணங்குவதுபோல நானும்வணங்கப்போகிறேன்,அதைக் குறித்து உங்களுக்கு வருத்தம் வேண்டாம், நீங்களும் அவரும் செய்கிற வாதத்தில் யார் தோற்றாலும் அப்படித் தோற்பவர்களைப் பக்ஷபாதமில்லாமல் தண்டிப்பேன்" என்று சொல்லி, தாசரிடத்துக்குப் போய் வணங்கி, அவர்செய்யுங் கதையைக் கேட்டுக்கொண்டிருந்தான். அப்படியிருக்கும்போது, ஒரு ஜடாமுனி, சுந்தாதிகம்பானைப் வந்து, தாசரை வணங்கி, "உம்மைக் காணவேண்டுமென்று நெடுநாளாய் ஆவலோடு எதிர்பார்த்திருந்தேன், என் எண்ணம் இன்று நிறைவேறிற்று" என்று சொல்லித் தழுவிக்கொண்டு, மகிழ்ந்திருந்தான். அப்போது வேந்தனனவன் தாசரை வணங்கி, "எமது ஊருக்கு எழுந்தருளி என்னைப் புநிதனக்கவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, இவரும் அப்படியே சம்மதித்து அரசனோடு கூடப்போய், அவனால் கொடுக்கப்பட்ட ஆசநத்திலிருந்தார். வேந்தனும் துறவினராகிய இருவரையும் நோக்கி, "துக்காராமர் செய்யுங் கதையைக் கேட்டு, அதில் ஆக்ஷேபிக்கத் தகுந்த இடத்தில் ஆக்ஷேபித்து வாதித்து அவரைவென்றீர்களானால் அவரைத் தண்டிக்கிறேன், நீங்கள் தோற்றால் உங்களைத் தண்டிக்கிறேன்" என்றான். "அப்படியே யாகட்டும்" என்று இருவரும் துக்காராமர் செய்யுங்கதையில் ஆக்ஷேபத்துக்குச் சமயம் பார்த்திருந்து ஆக்ஷேபம் தோன்றாமல் அன்பு தோன்றினமையால் துக்காராமருடைய திருவடிகளை வணங்கினின்றார்கள். அரசன் அவர்களை நோக்கி, "அவரை வெல்லவந்த நீங்கள் அவரை வழிபடுதல் அதிசயமா யிருக்

கின்றது! நீங்கள் பொய்வேஷக்காரரென்றுகின்றது! இனி உங்களைத் தண்டிக்காமல் விடமாட்டேன்" என்றான். துறவிகளிருவரும், "ஓ அரசனே! துக்காராமர் ஸ்ரீ சங்க சக்ராதிகளோடு ஸ்ரீமந் நாராயணன் போலவே யெங்கள் கண்ணுக்குத் தோன்றுகின்றதனால் அவரை வணங்கினோம்" என்றார்கள். அதைக் கேட்ட அரசன், "இவர்கள் ஹரி பஜனைக்காகாதவர்களாகையால், இவர்களைச் சிறைப்படுத்திச் சிக்ஷை செய்யவேண்டும்" என்று கோவித்துக்கொள்ளுவதைக் கண்ட துக்காராமர் அரசனுக்கு ஹித வசநங்களைச் சொல்லிக் கோவத்தைத் தணித்து, பகவானுக்கு மங்களாரதி செய்து யாவருக்கும் ப்ரஸாத விநியோகம்செய்து முடிந்தபிறகு, இவரது அருள்பெற்றவனுகிய கோடோபா வென்பவன், பிராடா என்னும் ஊரையடைந்து அவ்வூரில் புராணம் படிப்பதற்காக வந்து கூடியிருந்த மஹா பண்டிதர்கள் ஒரு சுலோகத்துக்கு அர்த்தம் சொல்ல, அது பிசகாயிருக்கக்கண்ட கோடோபா அதைத் திருத்திச் சரியான அர்த்தத்தைச் சொல்ல, அந்தப்பண்டிதர் யாவரும் வியந்து, கோடோபாவை நோக்கி, "உனக்கு இப்படிப்பட்ட அர்த்த விசேஷத்தை யெடுத்துச் சொல்லுகிற சாமர்த்தியம் எப்படி யுண்டாயிற்று?" என்று கேட்டார்கள். அதைக் கேட்ட கோடோபா, "எனக்குத் துக்காராமர் அருளினால் இந்த வல்லமை யுண்டாயிற்று" என்றான். பண்டிதர் முதலானவர்கள், பகவத்தாசராகிய துக்காராமருடைய அருளுக்குப் பாத்திரானால், எவர்களுக்கும் எல்லா நன்மையும் உண்டாகும்" என்று பேசிக்கொண்டார்கள். இந்தக் கோடோபா, துக்காராமரது அநுக்ரஹத்தால் அடைந்த ஜ்ஞாநத்தை, சிஞ்சுவடியென்னும் ஊரிலுள்ள வேதியர்கள் கேள்விப்பட்டு, இவனை யழைத்து வரும்படி ஒருவனை யனுப்பினார்கள். அனுப்பப்பட்டவன் வந்து இவர்செய்யும் ஹரிபஜனையில் ஆநந்தபரவசனாய் இவ்விடத்திலேயே இருந்துவிட்டான். இவருடைய பஜனையைக்கேட்டு, யாவரும் மெய்ம் மறந்து நிற்கையில், அவர்களில் ஒருவராகிய ஷேக்கு மஹம்மது என்னும் சக்கிலியர் எழுந்துபோய்ச் சற்றுநேரம் பொறுத்துவந்தார். அங்கிருந்தவர் யாவரும் அவரை நோக்கி, "நீர் சடுதியில் எழுந்துபோய்ச் செய்துவந்த காரியம் என்ன?" என்று கேட்டார்கள். அதற்கு அவர் "தேகுவென்னும் ஊரில் ஹரிகதா காலக்ஷேபம் நடக்கும்போது, பகவானது விதாநம் தீப்பற்றி யெரிவதையறிந்து, அதை யவித்துவரப் போனேன்" என்றார். அதைக் கேட்டவர் யாவரும், அப்படி பற்றிக் கொண்டபோது அங்கே ஒருவரும் இல்லையோ?" என்றார். மறுபடியும் அவர்கள் "பகவானுகிலும் அவிக்கலாகாதோ" என்றார்கள். அத

ற்கு அவர் "பகவானும் தாசாது மனத்தில் எழுந்தருளியிருந்தமை யால் அவரும் அறியவில்லை" என்றார். அதைக் கேட்டவர்கள், "இந்தச் செய்தியின் உண்மையை யறிவோம்" என்று, தேகுவுக்கு ஒரு ஆளை யனுப்பி மெய்யென்பதைத் தெரிந்துகொண்டு, ஷேக் மஹம்மது தாச ருடைய ஞானத்தைக்குறித்துப் புகழ்ந்து கொண்டாடினார்கள். முன் னே சிஞ்சுவடியிலிருந்து வந்தவன் தாசர் செய்யுங் காலக்ஷேபத்தைக் கேட்டு ஆநந்தித்து இவ்விடத்திலேயே யிருந்துவிட்டான். அவனை யனுப்பினவர்கள், "போனவன் ஏன் வரவில்லை யென்பதை யறிந்து வா" என்று மற்றொருவனை யனுப்பினார்கள். அவனும் அப்படியே யாய்விட்டான். பிறகு, அனுப்பினவர்கள் "இது என்ன ஆச்சரியம்" என்றும், "தாசரை நாமெல்லாரும் போய்க்கண்டுவருவோம்" என்றும் ஆலோசித்துப் புறப்பட்டுவருவதை தாசர் அறிந்து, எதிர்கொண்டுவா, வந்தவரெல்லாரும் தாசரைவணங்கி, "உம்மைக் காணவேண்டுமென்று வந்த எங்களுக்கெதிரே வந்து தரிசநம் கொடுத்தீர்" என்றார்கள். தாச ரும் அவர்களைத் தழுவிக்கொண்ட பிறகு, அவர்கள் தாசரை நோக்கி, "இந்தக் கலிகாலத்தில் இப்படிப்பட்ட அற்புதமான செயல்கள் உம் மிடத்தில் காணப்படுகின்றனவாதலால், என்ன ஆதாரத்தைக்கொ ண்டு நீர் இந்த அருமையான செயல்களைச் செய்கிறீர்?" என்றார்கள். அதைக்கேட்ட தாசர், "இவர்களுக்கு ஒரு சோதனை காட்டவேண் டும்" என்றெண்ணி, தமது தொடையைக் கீறி, "ஓ வேதியரே பாரு ங்கள்" என்றார். அவர்கள், அந்தக் கீறின இடத்தில் பஞ்சு நிறைந் திருக்கக் கண்டு "இது என்ன?" என்று வினவ, தாசர், "பிருகு என் னும் பிராமணன் காலுதைப்பட்ட பகவானுடைய ஸ்ரீவத்ஸலாஞ்சநம் இது" என்றார். அப்போது அவர்களெல்லாரும் வியந்து, "ஜகதீசனே இந்த ரூபமாய் வந்திருக்கிறார்" என்று, தாசரைப் பலவாறு புகழ்ந்து, தமதூருக் கழைத்துக்கொண்டுபோய், இவர் செய்யும் ஹரிகதா கால க்ஷேபத்தைக் கேட்டு ஆநந்தித்துக்கொண் டிருந்தார்கள். இப்படி யிரு க்குங் காலத்தில், ஒரு குடியானவன் ஒருநாள் ஒரு குதிரைமேலேறி உறங்கிக்கொண்டே போவதை, பண்டரிபுரத்தி லிருந்து வருகிற ஒரு பாகவதர் கண்டு, "இப்படித் தூங்கிக்கொண்டு போகிறதற்குக் கார ணம் என்ன?" என்று கேட்க, குடியானவன், "ஸ்வாமீ! தேகுவென் னும் ஊரில் துக்காராமர் என்கிற பரமபாகவதர் ஹரிகதா காலக்ஷே பம் செய்கிறார், அந்தக் காலக்ஷேபத்தை ஒருமாதகாலமாகத் தினந் தோறும் இரவில் கண்விழித்திருந்து கேட்டேன், அதனால், அதிக நித்திரை வந்து என்னை மயக்குகின்றது" என்றான். அதைக் கேட்ட

பாகவதர், "அப்படிப்பட்ட பரமபாகவதர் வாழ்கின்ற வூரில் நாம் போய் யாசித்தால், யார் நம்மை மதித்துச் சந்மாநிக்கப்போகிறார்கள்? அவருக்கு எதிரே நாம் போவது சூரியனுக் கெதிரே மின்மினி போவதுபோலாகும்" என்று அவ்வூருக்குள்ளே பிரவேசிக்காமல், ஊருக்குப் புறமாகப் போனார். இப்படி இவர் போவதைத் துக்காராமர் அறிந்து, விரைந்துபோய் அவரைக் கண்டு தழுவிக்கொண்டார். பிறகு அந்தப் பாகவதர் துக்காராமரை நோக்கி, "ஸ்வாமீ! வையாசி மாதத்தில் என் மகனுக்குக் கலியாணம் செய்ய வெண்ணியிருக்கிறேன், அதற்குப் பொருளுதவிவேண்டும், அந்தச் சுபகாரியத்தைத் தேவரீர் நிறைவேற்றி யருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, தாசரும் "அப்படியே யாகட்டும்" என்று அவரை யழைத்துவந்து, ஒரு விடுதி யமைத்து, நாள்தோறும் ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண் டிருக்கும்படி நியமித்தார். அப்படியே அவர் ஒரு மாசகால மிருந்து, பிறகு, "என்னூர்க்குப்போக விடைதரவேண்டும்" என்று கேட்க, துக்காராமர் அவ்வூராரைநோக்கி, "இந்தச் சாதுவுக்கு நீங்களெல்லாரும் கொஞ்சம் பொருளுதவி செய்தால், அவர் பிள்ளைக்கு மணமுடித்துவிடுவார், உங்களுக்குப் புண்ணியமுண்டு" என்று சொல்ல, அப்படியே அவர்களும் தங்கள் தங்களுக்கு இசைந்த பொருளைக் கொடுத்தார்கள். அவர்கள் கொடுத்த தொகையை நோக்கின பாகவதர், "இந்தப் பொருள் பற்றாது" என்றார். அப்போது துக்காராமர், வேதியரை நோக்கி, "உம்முராருக்குள்ளே பொருள் கொடாதவர்கள் யார்?" என்று கேட்க, அவர், "ஸ்வாமீ! எல்லாரும் கொடுத்தார்கள், ஒரு பட்டு நூற்காரன் மாத்திரம் கொடுக்கவில்லை" என்றார். அதுகேட்ட துக்காராமர், "நீர் போய் நான் சொன்னதாகச் சொல்லிக் கேளும்" என்றார். அப்படியே அவர் போய்க் கேட்க, அவன் மிகவுங் கோவித்து, "நீர் வேலையில்லாமல் திரிகிறீர், போம்" என்றான். அதைக்கேட்ட அவன் மனைவியானவள், தன் கணவனை நோக்கி, "பரம பாகவதராகிய துக்காராமரால் அனுப்பப்பட்ட வேதியரைக் கடிந்து பேசுதல் தகுதியல்ல" என்று சொல்லி, தாகச்செம்பு ஒன்றை யெடுத்துக்கொடுத் தனுப்பினாள். அதை அவர் துக்காராமருக் கெதிரே கொண்டுவந்து வைத்தார். அதைத் துக்காராமர் கையாலெடுத்து, "பட்டு நூற்காரன் பொற்செம்பு கொடுத்தான்" என்றார். அதைக் கேட்ட வேதியர், "பித்தளைச் செம்பு" என்றார். தாசர், நெருப்புக் கொண்டுவரச் செய்து, அந்தச் செம்பை அதிலிட்டுக் காய்ச்சி யெடுத்து அந்தணர்கையிற் கொடுத்தார். அது பொன்னாயிருக்கக் கண்டு அவ்வேதியர் முதலான எல்லா

ரும் வியந்து கொண்டாடினார்கள்! துக்காராமரும் அதை ஹரிதாசர் கையிற் கொடுக்க, அவர் வந்தநத்தோடு ஏற்றுக்கொண்டு தமதூருக்குப் போய்விட்டார். தாசரும் அவ்வூராரிடத்தில் விடைபெற்று, லோகம் என்னும் ஊருக்குப்போய் ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்து கொண்டிருந்தார்.

இப்படியிருக்குங் காலத்தில், இவர்க்குப் பின்னின்று பாடுவோராகிய கோடோபா வென்பவர், தாசரை வணங்கி, "ஸ்வாமீ! எனக்கு தீர்த்தயாத்திரைமே லிச்சையுண்டா யிருக்கின்றது, கொஞ்சம் செலவுக்குக் கிருபைசெய்யவேண்டும்" என்று கேட்க, தாசர் தமது பீடத்தின்கீழே யிருந்த ஒரு வராகனை யெடுத்துக்கொடுத்தார். கோடோபா, "இது பற்றாது" என்று சொல்ல, தாசர் அவரை நோக்கி, "ஒவ்வொருநாளும் சாதுக்கள் முதலானவர்களுக்கு அமுதளித்து நீயுமுண்டு ஒருகாசு மாத்திரம் முன்றானையில் முடிந்து வைத்துக்கொண்டு உனக்கு வேண்டியபோதெல்லாம் அந்த முடியை யவிழ்த்துப்பார்த்தால் அந்த ஒருவராகன் அப்படியேயிருக்கும், அதைமாற்றிச் செலவு செய்து ஒருகாசு முடிந்துகொள்ளக்கடவாய், இப்படியே தினந்தோறும் செய்து, தீர்த்தயாத்திரை செய்து வந்தபிறகு, நான் கொடுத்த வராகனை என்னிடத்தில் கொடுத்துவிடும்" என்றார். "அப்படியே செய்கிறேன்" என்று, கோடோபா, தன் வீட்டுக்குப் போய், அந்த வராகனை மாற்றிச் செலவு செய்து, சாதுக்களுக்கு அந்நம் இட்டுத்தாமும் உண்டு, ஒரு காசைத் துணியில் முடிந்து வைத்துப் பிறகு அவிழ்த்துப் பார்த்து, வராகனிருக்கக் கண்டு, அதிசயித்துத் துக்காராமரிடத்தில் வந்து, "தேவரீர் சொன்னது உண்மையே" என்று புகழ்ந்தார். அப்போது தாசர், மூன்று அபங்கக் கவிகள் பாடிக் கோடோபாவின் கையிற் கொடுத்து, இந்த மூன்றில் ஒன்றைக் காசி விசுவநாதருக்கும், ஒன்றைக் கங்காதேவிக்கும், ஒன்றைத் திருமாலுக்கும் சமர்ப்பித்து வாரும்" என்று நியமிக்க, கோடோபாவும் அப்படியே புறப்பட்டு, முன்னே காசிக்குப்போய்க் கங்கையில் நீராடி, "துக்காராமர் உனக்கு இந்தக் கவியைத் தரும்படி நியமித்தார்" என்று சொல்லுதலும், கங்காதேவியின் கையானது வெளிப்பட்டு, அந்தக் கவி யெழுதப்பட்டிருந்த பத்திரத்தை யேற்று நீரிலமுழ்ந்திவிட்டது. பிறகு விசுவநாதர்க்கு எதிரே நின்று கவிபாடுதலும் பெருமான் மகிழ்ந்து தலையசைத்தார். பிறகு கயைக்குப் போய்த் திருமாலுக்கு ஒரு கவியைத் சமர்ப்பித்து மற்றத் தீர்த்தயாத்திரை முழுதுஞ் செய்து மீண்டு வரும்போது, "இந்த வராகனை நாம் வைத்துக்கொள்வோம்" என் றெண்

ணிக்கொண்டே வந்து, துக்காராமரை வணங்கினின்றார். தாசர் அவரை நோக்கி, "நாம் கொடுத்த வாகன் எங்கே?" என்று கேட்க, கோடோபா, "அது கைதப்பிப் போயிற்று" என்றார். தாசர் நகைத்து, அப் படியானால், போகட்டும்" என்று சொல்லிச் சும்மா இருந்துவிட்டார். பிறகு கோடோபா, வீட்டுக்கு வந்து முன்றானையிலிருந்த முடியை யவிழ்த்துப் பார்த்து வாகனைக் காணாமல், "நான் சொன்ன பொய் எனக்கே பலித்தது" என்றும், "குருத்ரோஹம் செய்த பாவம் உண் டானதே யன்றி, குடும்ப ஸம்ரக்ஷணத்துக்கும் பங்கம் வந்ததே" என் றும் மனம் வருந்தினார்.

பிறகு ஒருநாள், துக்காராமர் காலக்ஷேபஞ் செய்யுஞ்சமயத்தில், இவர் மனம் பகவானுடைய திருவுருவத்தில் பதிந்திருந்ததனாலும், கதை கேட்போரெல்லாரும் மெய்மறந்திருந்ததனாலும், விளக்கைத் தூண்டுவோரில்லாமல் ஒளி மழுங்கி இருள் பரவிற்று. அப்போது தாசரது திருமேனியொளியானது இருளை நீக்கி விளங்கிற்று. விடியற் காலத்தில் பகவானுக்கு ஹாரதி சமர்ப்பித்த பிறகு, அந்த ஒளியா னது இவர் திருமேனியில் வந்தடங்கினதை யாவரும் கண்டு, "இவர் திருமேனி முழுதும் ஒளியுருவே" என்று வியந்தார்கள்.

பிறகு துக்காராமர் தமதூருக்கு வந்து, பகவானை வணங்கி, "ஸ்வாமீ! அடியேனிடத்தில் சில மஹிமைகள் விளங்கச்செய்து, எல் லாரும் அன்போடு உண்பிக்கும் உணவையுண்டு, உறக்கம் முதலிய வற்றால் மயங்காநின்ற அடியேன், உன் ஸ்ரீபாதஸ்மரணையை மறக்க நேரிடும் என்று அஞ்சுகிறேன், ஆதலால் என் வினையை வேரறுத்து உன் திருவடியை யடையும்படி க்ருபை செய்யவேண்டும்" என்றார். அப்போது விட்டலபகவான் நகைத்து, "நீ விரையவேண்டாம், உன் விருப்பத்தின்படியே செய்கிறேன்" என்றார். அதின் பின்பு தாசர் ஞானதேவர் இருக்குமிடத்துக்குப்போய், அவரைத்தாழ்ந்து வணங்கி, தோத்திரம்செய்து, ஓரிடத்திலிருக்கலாமென்று வரும்போது, வழியி லிருந்த பறவைகளெல்லாம் இவரைக்கண்டு வெருண்டோட, இவர் அவ்விடத்தில் நின்று, "நான் இவைகளுக்கு ஒரு தீமையுஞ் செய்யா தவனாயிருக்க, இவைகள் என்னைக்கண்டு ஓடுவதைப் பார்த்தால் என் னிடத்தில் நல்ல எண்ணமில்லை யென்பது விளங்குகின்றது; ஆதலால், எனக்கு நல்ல எண்ணமும், இவை யென்னைக்கண்டு அஞ்சாமையும் உண்டாகிற வரைக்கும் இங்கே நிற்பேன்" என்று, பாண்டுரங்கனை ஸ்மரித்துக்கொண்டு நான்கு நாழிகை நேரம் அசைவற நின்றார். நிற் றலும், விடோபாவானவர் மனங்கனிந்து, இவரிடத்தில் எல்லா வுயிர்

களும் அபேதமாயிருக்கும்படி திருவுளம்பற்றினர். உடனே, முன்பு இவரைக்கண்டு வெருண்டோடின பறவைகளோடாமல் நிர்ப்பயமாயிருப்பதை யறிந்த தாசர், "இப்போதுதான் எனக்குச் சமபுத்தியுண்டாகும்படி பகவான் க்ருபைசெய்தார்" என்று மகிழ்ந்து, ஞானதேவர் சந்நிதியையடைந்து தோத்திரம் செய்துகொண்டிருந்தார். இப்படியிருக்குங்காலத்தில், இவர்க்குப்பின்னே நின்றுபாடவும், தாளம் போடவும், வீணை வாசிக்கவும், மிருதங்கம் வாசிக்கவும் விரும்பி, நான்கு பேர்வந்து இவரைக் கண்டு, இவர் உடம்பு முழுதும் பறவைகள் நிறைந்திருப்பதைக்கண்டு, வியந்து, இவர்க்குப் பின்னிருந்து பாடுதல் முதலியவற்றைச் செய்துகொண்டிருந்தார்கள்; பிறகு தாசர் மங்களாரதி சமர்ப்பித்து, ஞானதேவரை வணங்கி விடைபெற்றுத் தெருவுக்குப்போய், ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்தார். இப்படியிருக்கும்போது, இவரது வைபவங்களெல்லாம் பலாலும் கேள்விப்பட்ட சிஞ்சுவடி யென்னும் ஊரிலுள்ளார் இவரைத் தமதூருக்கு வரவழைக்க நினைத்து, ஒரு ஆளை யிவரிடத்துக் கனுப்பினர்கள். அவன் இவரிடத்துக்கு வந்து இவர்செய்யும் காலக்ஷேபத்தி லீடுபட்டு இவ்விடத்திலேயே தங்கியிருந்துவிட்டான். அனுப்பின அந்தணர்கள் மூன்றுநாள் வரைக்கும் இவன் வராமையைப்பற்றித் தாமே புறப்பட்டுத் தெருவினெல்லையை யடைந்தார்கள். இவர்கள் வரவையறிந்த தாசர், "நாம் எதிர்கொண்டுபோய், வேதியரைத் தரிசிக்கவேண்டும்" என்றெண்ணி, வேதியர் வரும் வழியில்போய் நிற்க, அவர்கள் வந்து இவருடம்பு முழுதும் பறவைகளால் நிறைந்திருப்பதைக் கண்டு, "இது அதிசயம்" என்று சொல்லிக்கொண்டு சமீபத்தில் வருதலும், இவர் அவர்களை வணங்கினர். அவர்களும் இவரை வணங்கித் தழுவிக்கொண்டார்கள். பிறகு இவரைத் தமது ஊருக்கு அழைத்துக்கொண்டு போய் உபசரித்து மூன்றுநாள் இவரைக்கொண்டு ஹரிகதை செய்வித்து ஆநந்தித் திருந்தார்கள். பிறகு தாசரானவர் விடை பெற்றுத் தமதூரை யடைந்து, விட்டலப் பெருமானை வணங்கி "ஓ பகவானே! கலி மாஹாத்ம்யத்தால் உலகத்தில் பாவமும் பொய்யும் அதிகரித்தன. ஆதலால் அடியேனை இந்த லீலாவிபூதியில் வைக்காமல் நித்திய விபூதியாகிய பரமபதத்தில் எழுந்தருளி யிருக்கிற உன் திருவடியை யடையும்படி கருணை செய்யவேண்டும்" என்று ப்ரார்த்தித்து வணங்கினர். அப்போது விட்டலப் பெருமான், "துக்காராமா! நீ அவசரப்படவேண்டாம், நானே சோமவாரம் காலையில் உன் அபீஷ்டத்தை நிறைவேற்றுகிறேன்" என்று சொல்ல, பிராட்டியார், பகவானை நோக்கி, "ஸ்வாமீ! இந்திராயணி நதிக்கரையில் உனது பரமபதத்துக்கு நிகராக ஒரு வீடமைத்து, அவ்விடத்தில் உன் அடியாரெல்லாரையும் வரவழைத்து, அவர்களோடு இந்தத் துக்காராமருக்கும் இனிய வுணவை யுண்பித்து, பிறகு இவனை உன்பதத்தில் சேர்க்கவேண்டும், இது என் விருப்பம்" என்றார். அதைக் கேட்ட பகவானும் "அப்படியே யாகட்டும்" என்று, விசுவகர்மனை யழைத்து,

"இந்த இந்திராயணி நதிக்கரையில், பரமபதத்துக்கு நிகராக ஒரு வீட்டை யமைக்கக்கடவாய்" என்று நியமிக்க, அவனும் அப்படியே யமைத்துத்தர, உடனே நித்யர், முக்தர், வித்தியாதரர், நாரதர், சநகர், சுகர், உத்தவர், அம்பரீடர், ப்ரஹ்லாதர், அக்ரூரர் முதலானவர் யாவரும் வந்து அவ்விடத்தில் சேர்ந்தார்கள். அப்போது விட்டலன், துக்காராமர், மற்றும் வந்தவர்கள் ஆகிய எல்லாருக்கும் பெரிய பிராட்டியார் தமது திருக்கரத்தால் உணவு பரிமாறினர். இதைக்கண்ட தேவராஜன் முதலானவர் புஷ்பமாரி பொழிந்தார்கள். அன்றியும் "இந்தத் துக்காராமர்போலப் பரமபாகவதர் எங்குங் கண்டதில்லை" என்று புகழ்ந்தார்கள். விட்டலன் முதலானோர் உண்டு முடிந்த பிறகு, துக்காராமரை ஹரிகதா காலக்ஷேபம் செய்யச்சொல்லி யாவரும் கேட்டு மகிழ்ந்தார்கள். அன்றுமுதலாக (அதாவது, பால்குநசுத்த ஏகாதசி முதலாக) ப்பௌர்ணமி வரைக்கும் நாள்தோறும் இப்படியே ஐந்து நாளும் நடத்தி முடிந்தபின்பு, அடுத்த பிரதமையில், மாலைக்காலத்தில், விட்டலப்பெருமானவர் அன்போடு துக்காராமரை நோக்கி, "ஓ துக்காராமா! நீ இன்றிராமுழுதும் ஸங்கீர்த்தநம் செய்துகொண்டிருந்து, சூரியோதயத்தில், இந்தச் சரீரத்தோடும் வைகுந்தத்தை யடையக்கடவாய்" என்று சொல்லித் தழுவிக்கொண்டார். துக்காராமரும் விட்டலப்பெருமானை வணங்கி, இராமுழுதும் கீர்த்தநம் பாடிக்கொண்டிருந்து, சூரியோதயத்தில் பகவானுக்கு மங்களாரதி சமர்ப்பித்து நிற்கையில் பெருமானவர் இவரை நோக்கி, "நீ இந்த வுலகத்தில் தோன்றி அநேகம் ஆத்மாக்களைத் திருத்தி என்னடியார்களாக்கினதுமன்றி, என்னையே யிடையறுமல் பஜித்துக்கொண்டிருந்தாய், உன் புண்ணிய விசேஷத்தால் விமாநம் வந்திருக்கின்றது, அதில் ஏறி வைகுந்தத்தை யடையக்கடவாய்" என்று நியமிக்க, துக்காராமர் பகவானை வணங்கி, அறிவிலியாகிய தமது மனையாளுக்குத் தாம் முன்னே சொல்லியிருந்தபடியே தம்மோடு வைகுந்த மடையும்படி ஒரு ஆளிடத்தில் சொல்லி யனுப்பினர். அதைக் கேட்ட ஜிஜாயியார், "நான் ஐந்துமாதம் கர்ப்பவதியாயிருக்கிறேன்; அன்றியும் கறவை யெருமையையும் பிள்ளைகளையும் விட்டு எப்படி வருவேன்? இந்தச் சமயம் நான் வரமாட்டேன்" என்று வந்த ஆளிடத்தில் சொல்லியனுப்ப, அவன் போய்த் தாசரிடத்தில் சொன்னான். அதைக்கேட்ட தாசர் தமது மனைவியாருடைய விதியை நினைந்து, சற்று மனம் வருந்தி, பிறகு தெளிவடைந்து, தம்மைச் சூழ்ந்திருந்த அடியாரெல்லோரையும் நோக்கி, "நீங்கள் உங்களுடைய குடும்பங்களி லிருந்துகொண்டே, எப்பொழுதும் விட்டலப்பெருமானைப் பஜித்துக்கொண்டிருப்பீர்களானால், இந்தக் கலிதோஷம் உங்களைத் தொடர்ந்து வருத்தாது, இம்மையில் நல்ல சுகபோகங்களை யனுபவித்து, மறுமையில் நித்தியமாகிய வைகுந்த பதவியையும் அடைவீர்கள்" என்று சொல்லி, அங்கிருந்த பெரியோரெல்லாருக்கும் வந்தநம்செய்து, மற்ற ஜநங்களுக்கு மங்களாசாஸம்செய்து, எல்லாரிடத்திலும் விடைபெற்று வெளியே

வந்தார். அப்போது அங்கே யிருந்தவரெல்லாரும் கண்ணீர் பெருக்கி, "இவரைப் பிரிந்து நாம் வாழ்ந்திருப்பதைப் பார்க்கிலும் இறப்பதே நன்மை" என்றும், "இல்வாழ்க்கையை விட்டு நீங்கிக் காட்டிற் சஞ்சரிப்போம்" என்றும், "இவர் செய்யும் ஹரிகதையை இனி யெக்காலத்தில் கேட்கப்போகிறோம்" என்றும், "இவரை இனி யெப்போது தரிசிக்கப்போகிறோம்" என்றும் பலவாறு பேசிக்கொண்டார்கள். அதின் பிறகு துக்காராமர் இந்திராயணி நதிக்கரையில் போய் நின்று, இருபத்தேழு கவிகளைச் சொல்ல, ஆகாசவீதியில் ஒளியுருவாகிய ஒரு விமானம் காணப்பட்டது. அதனோடு நித்திய முக்தர்களும் பிரமாதி தேவர்களும் மலர்மாரி பொழிந்து ஜய ஜயகோஷம் செய்துகொண்டு வருவதைக் கண்ட துக்காராமர், சகவருஷம் ஆயிரத் தைந்நூற் றெழுபத்தொன்றாவதாகிய விரோதி வருஷம், பங்குனி மாசம், பகுள த்விதியை, சோமவாரம் காலை, நான்கு நாழிகைப் பொழுதில் அந்த விமானத்தின்மேலேறி வைகுந்த லோகத்தை நோக்கிச் செல்வாராயினர். இந்தச் செய்தியை யறிந்த ஜிஜாயியார், வயிற்றி லறைந்துகொண்டு, தன் மக்களோடும் இந்திராயணி நதிக்கரையை யடைந்து, ஆகாயத்தில் விமானத்தின்மேல் தமது கணவர் ஏறிப்போவதைக் கண்டு, "இவர் பைத்தியங்கொண்டவர் என்று நினைத்திருந்தேன், அறிவிலிகள் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டு நான் கெட்டேன், உண்மையாகவே வைகுந்த பதவியை யடைந்தார், இவர் நிலைமையை முன்பே அறிந்திருப்பேனானால் இவரோடு கூடவே போவேன், இனி யென் செய்வேன்" என்று கதறியழுதாள். இந்தப் பிரகாரமாகச் சூரியன் அஸ்தமிக்கிற வரைக்கும் புலம்பி யழுதுகொண்டிருந்து, பிறகு வீட்டுக்குப் போய்விட்டாள். மற்றவரெல்லாரும் அவரவர் வீடுகளை யடைந்தார்கள். அதின் பிறகு, தாசருடைய தம்பியாராகிய கான்ஹையா முதலியோரும், கூடவிருந்து பாடுவோராகிய பதினான்குபேரும், "இவரை யின்னம் ஒரு தரம் காணவேண்டும்" என்றும், "அப்படிக் காணப்பெறாவிடின் இறப்போம்" என்றும் பேசிக்கொண்டு, மூன்று நாள் அங்கே தங்கியிருந்தார்கள். அப்போது தம்பியார் தமது தமையராகிய துக்காராமரை நினைத்து, ஓவி யென்னும் கவியினால் துதிக்கும் போது, ஆகாயவீதியில் விமானத்தின்மே லேறிச் செல்லாநின்ற தாசரானவர் தமது திருமேனியின்மீதிருந்த சட்டையையும், கையிலிருந்த தாளத்தையும் பூமியின்மேல் வீழ்த்தினர். அவற்றைக் கண்டவர் யாவரும் வியந்து "நமக்கு வேண்டியவற்றைக் கிருபைசெய்தார்" என்று பட்டாது அநுமதியைக்கொண்டு, இவர்க்குச் செய்யவேண்டிய உற்சவாதிகளைக் குறைவற முடித்து மகிழ்ந்திருந்தார்கள். அதின் பிறகு ஐந்துமாதம் கழிதலும் ஜிஜாயியார் ஒரு சற்புத்திரனைப் பெற்று, அவனுக்கு நாரணன் என்று பெயரிட்டு வளர்க்க, அவன் வளர்ந்து பருவம் வாய்த்தவுடனே, தன் தந்தையார்போலவே தானும் ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்யத் தலைப்பட்டான். இப்படியிருக்க, தம்பியாராகிய கான்ஹையாவின் கனவில் துக்காராமர் வந்து உபதேசித்துப்போனர்.

இதற்கு முன்பு, செந்தூர்வாடி யென்னும் ஊரில் லிங்கதாரியாகிய, கவர்சேட் என்பவன், ஆசாபாசங்களை நீக்கினவனுய்த் துக்காராமரைச் சேவித்துக்கொண்டிருக்கும் காலத்தில், இவரை நோக்கி "என் அந்த்யகாலத்தில் உம்மைத் தரிசிக்க விரும்பினேன், எனக்கு இந்த வரம் தந்தருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, இவரும் அப்படியே வரம் தந்திருந்தார். அந்தக் கவர்சேட் என்பவனுக்கு இப்பொழுது அந்த்ய காலம் நேரிட்டதனால், அவன் துக்காராமரிடத்துக்கு ஆளனுப்பினன். அவன் வந்து பார்த்துத் துக்காராமர் இல்லாமையால் அவர் தம்பி யாரை யழைக்க, தம்பியாரும், பட்டரும், துக்காராமர் புதல்வனும் முதலானவர்கள், கவர்சேட் என்பவனது வீட்டுக்கு வந்தார்கள். அப்போது துக்காராமரும் தாம் தந்த வரம் பிழைக்காமல் வந்து சேர்ந்தார். இவரைக் கண்டு வணங்கின கவர்சேட்டுக்கு அநுக்ரஹித்து, தம்பி முதலான மூவருக்கும் மங்களாசாஸநம் செய்து நீங்கின பிறகு, மூவரும் தேகுவை யடைந்து ஹரிநாம ஸங்கீர்த்தநம் செய்துகொண்டு இனிது வாழ்ந்திருந்தார்கள். அதின்பிறகு பகிணு, கங்காதரர், நீளோபாகோசாமி என்பவர்களுடைய கனவில் துக்காராம் சுவாமிகள் எழுந்தருளி அநுக்ரஹம் செய்தருளினர். இன்னமும் இவ்வுலகத்தில் தம்மை நாடித் துதிப்பவர்களுக்குக் கனவில் தோன்றி அநுக்ரஹித்து வருகின்றூர்.

துக்காராம் சுவாமிகள் சரித்திரம் முற்றிற்று.

ஸ்ரீ பக்தலீலாம்ருத வசநம்

முற்றிற்று.
